THE

NEW TESTAMENT

OF OUR

LORD AND SAVIOUR JESUS CHRIST.

IN TAMIL.

VITH CONTENTS OF THE CHAPTERS AND CHRONOLOGY, FROM THE ENGLISH,

AND REFERENCES.

உலக இரட்சகராகிய

இயேசுக்கிறிஸ்துநாதர்

அருளிச்செய்த

புதிய ஏற்பாடு.

இதின் மூலவாக்கியம்

இரேனியுஸையரால்

கிரேக்கபாஷையிலிருந்து

தமிழிலேதிருப்பப்பட்டும்,

சென்னபட்டணத்திலுள்ள

தியவேதசங்கத்தாரால் பரிசோதித்து

ஏற்படுத்தப்பட்டுமிருக்கிறது.

கி-பி-௲அ௱சகூ௵லே

சென்னபட்டணத்தில் அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

MADRAS:

RINTED AT THE AMERICAN MISSION PRESS, FOR THE MADRAS
AUXILIARY BIBLE SOCIETY.

1846.

மத்தேயு என்பவர் எழுதின சுவிசேஷம்.

MATTHEW.

க அதிகாரம்.

)றிஸ்துப்பிறந்ததென்று சொல்லப்பட்
வழக்கமான வருஷத்தொகைக்குமுன்,
வருஷம்.

) ஆபிரகாமுதல் யோசேப்புவரைக்கு
ாள கிறிஸ்துவினுடைய வம்சவரிசை
் அட்டவணை. (யஅ) கன்னிமரியாள்
ாசேப்புக்கு நேமிக்கப்பட்டபோது, அ
பரிசுத்த ஆவியினால் உற்பவித்து அவ
த்திற் பிறந்தது. (யகூ) தேவதூதன்
சேப்பினுடைய துகாதயோசனைகளை
கி, கிறிஸ்துவின் திருநாமங்களுக்கு
த்தமுரைத்தது:]

ஆபிரகாமின் சந்ததியாகிய தாவீதின்
சந்ததியாயிருக்கிற இயேசுக்கிறிஸ்
றுடைய வம்சவரிசையின் அட்டவணை
;
ஆபிரகாம் ஈசாக்கைப்பெற்றான்.
கு யாக்கோபைப்பெற்றான். யாக்
யூதாமுதலான குமாரர்களைப்பெற்
* ஆக். க: கூஉ.
யூதா தாமாரென்பவளைச்சேர்ந்து பா
சயும், சாராவையும் பெற்றான். பா
ஈரோமைப்பெற்றான்.
ீராம் ஆராமைப்பெற்றான். ஆ
மின்தாபைப்பெற்றான். அமின்தா
சானைப்பெற்றான்.
சோன் சலுமோனைப்பெற்றான். ச
ன் இராகாப்பென்பவளைச்சேர்ந்து
வாசைப்பெற்றான். போவோசு உ
தன்டவளைச்சேர்ந்து ஓபேத்தைப்
ன். ஓபேத்து ஏசேயைப்பெற்றான்.
இராசனாகிய தாவீதைப்பெற்
சனாகிய தாவீது ஊரியாவுக்கு
ந்தவளைச்சேர்ந்து சொலொ
ற்றான்.
லொமோன் உரோபோவாமைப்.
. உரோபோவாம் அபியாவைப்
அபியா அசாவைப்பெற்றான்.
யாசபாத்தைப்பெற்றான். யோ
யாராமைப்பெற்றான். யோராம்
பெற்றான்.
யோத்தாமைப்பெற்றான்.

யோத்தாம் ஆகாசைப்பெற்றான். ஆகாசு
எசேக்கியாவைப்பெற்றான்.

ய. எசேக்கியா மனாசேயைப்பெற்றான். ம
னாசே அமோனைப்பெற்றான். . அமோன்
யோசியாவைபெற்றான்.

யக. (யூதர்கள்) பாபிலோன்தேசத்துக்குச்
சிறைப்பட்டுப்போகுங் காலத்திலேயோசி
யா எகோனியாமுதலான குமாரர்களைப்
பெற்றான்.

யஉ. அவர்கள் பாபிலோன் தேசத்திற்குச்
சிறையாகக்கொண்டுபோகப்பட்டபின்பு, எ
கோனியா சாலாத்தியேலைப்பெற்றான். சா
லாத்தியேல் சொரோபாபேலைப்பெற்றான்.

யங. சொரோபாபேல் அபியூதைப்பெற்
றான். அபியூது எலியாக்கீமைப்பெற்றான்.
எலியாக்கீம் அசோரைப்பெற்றான்.

யச. அசோர் சாதோக்கைப்பெற்றான். சா
தோக்கு ஆகீமைப்பெற்றான். ஆகீம் எலி
யூதைப்பெற்றான்.

யரு. எலியூது எலேயாசாரைப்பெற்றான்.
எலேயாசார் மத்தானைப்பெற்றான். மத்
தான் யாக்கோபைப்பெற்றான்.

யசு. யாக்கோபு மரியாளுடைய புருஷனா
கிய யோசேப்பைப்பெற்றான். அந்தமரி
யாளிடத்திலே கிறிஸ்து என்னப்பட்டிருக்
கிற இயேசுபிறந்தார்.

யஎ. இவ்வண்ணமாய் உண்டானதலைமுறை
களெல்லாம் ஆபிரகாமுதல் தாவீதுவரைக்
கும் பதினாலுதலைமுறைகளும், தாவீதுமு
தற் பாபிலோன்தேசத்துக்கு யூதர்கள் சி
றைப்பட்டுப்போன காலம்வரைக்கும் பதி
னாலுதலைமுறைகளும், பாபிலோன்தேசத்
துக்குக்கொண்டுபோனகாலமுதற் கிறிஸ்
துவரைக்கும் பதினாலு தலைமுறைகளுமே
யாம்.

யஅ. இந்த இயேசுக்கிறிஸ்துவினுடைய
உற்பத்தியின் விவரமாவது; * அவருடைய
தாயாகிய மரியாள்யோசேப்புக்கு (மனைவி
யாக) நியமிக்கப்பட்டபின்பு, அவர்கள் கூ
டிவாழ்கிறதற்குமுன்னமே அவள் பரிசுத்த
ஆவியினாலே கருப்பவதியானாள். * லூக்.
க: உகூ. ௩அ: உ. க: உக.

யகூ. அவளுடைய புருஷனாகிய யோசேப்
பு நீதிமானாகையால், அவளை அவதூறு

பண்ண மனதில்லாமல் இரகசியமாய் அவ
ளை யொழித்துவிடும்படியாய்ச்சிந்தித்தான்.
௨௰. அவன் அப்படி நினைத்திருக்கையிற்
பராபரனுடைய தூதன் சொப்பனத்திலே
அவனுக்குக்காணப்பட்டு, தாவீதின் சந்த
தியாகிய யோசேப்பே! நீ உன் மனைவி
யாகிய மரியாளைச்சேர்த்துக்கொள்ள ஐயப்
படவேண்டாம். என்னத்தினாலென்றால், அ
வளிடத்தில் உண்டாயிருக்கிறது பரிசுத்த
ஆவியினாலுண்டானது.
௨௧. அவள் ஒருகுமாரனைப்பெறுவாள். *
அவர் நம்முடைய சனங்களின் பாவங்களை
நீக்கி, அவர்களை இரட்சிப்பாராகையால்
அவருக்கு இயேசுவென்று பேரிடுவாயாக
வென்றான். * லூக். ௧: ௩௧.
௨௨. தீர்க்கதரிசியைக்கொண்டு கர்த்தர்
சொன்னது நிறைவேறும்படிக்கு அவை
யெல்லாம் நடந்தன.
௨௩. அவர் சொல்லுவித்த தென்னவென்
றால, இதோ, * ஒருகன்னி கருப்பவதியா
கி ஒரு குமாரனைப்பெறுவாள். அவருக்கு
இம்மானுவேலென்று பேரிடுவார்களென்ப
தே. இம்மானுவேல், * என்பதற்குப்ப
ராபரன் நம்முடனே யிருக்கிறாரென்று
அருத்தமாம். * ஏசா. ௭: ௰௪. ௮: ௰.
௨௪. யோசேப்பு நித்திரைதெளிந்தெழுந்
தபொழுது, தனக்குக்கர்த்தருடைய தூதன்
கட்டளையிட்டபடி தன் மனைவியைச்சேர்த்
துக்கொண்டு,
௨௫. அவள் முதற்பேறான குமாரனைப்பெ
றும்வரைக்கும் அவளை யறியாதிருந்து (அந்
தக்குமாரன் பிறந்தபின்பு) அவருக்கு இயே
சு என்று பேரிட்டான.

௨ அதிகாரம்.

[(௧) கிழக்கிலிருந்த சாஸ்திரிகள் நட்சத்
திரத்தினால் கிறிஸ்துவினிடத்திற்கு வழிந
டத்தப்பட்டது. (௰௧) அவரைப்பணிந்து
காணிக்கைகளைச்செலுத்தினது. (௰௪) இ
யேசுவையும், அவருடைய தாயையுங் கூட்
டிக்கொண்டு யோசேப்பு எகிப்துக்கோ
டிப்போனது. (௰௬) ஏரோதே குழந்தை
களைக்கொலைசெய்து, (௰௯) பின்பு தான்
மரணமடைந்தது. (௨௩) கலிலேயாவிலுள்
ள நாசரேத்துக்குக்கிறிஸ்து மறுபடியுங்
கொண்டுவரப்பட்டது.]

ஏரோதென்னும் இராசனுடைய கா
லத்திலே யூதேயா தேசத்திலுள்ள
பெத்லேகேமூரில் இயேசுவானவர் பிறந்த
பின்பு கிழக்குத்திசையிலிருந்து சாஸ்திரி
கள் எருசலேம் நகரத்துக்குவந்து,
௨. (இக்காலத்தில்) பிறந்திருக்கிற யூத
ருடைய இராசாவைக்குறித்துத்தோன்றிய
அவரைப்பணிந்துகொள்ளவந்தோம். அவ
ரெங்கே யென்றார்கள்.
௩. ஏரோது இராசா அதைக்கேட்டபொ
ழுது அவனும், அவனுடனேகூட எருச
லேம் நகரத்தாரனைவருங் கலங்கினார்கள்.
௪. அல்லாமலும் அவன் சனங்களிற் பிர
தானமான ஆசாரியர் வேதபாரகரெல்லா
ருங் கூடிவரச்செய்து, கிறிஸ்து எங்கே
பிறப்பாரென்று அவர்களிடத்தில் விசாரித்
தான்.
௫. அவர்கள் அவனைநோக்கி, யூதாவின்
ஊராகிய பெத்லேகேமிலே அவர் பிறப்
பார். என்னத்தினாலென்றால், யூதேயா
தேசத்திலுள்ள பெத்லேகேமூரே! என்
னுடைய சனங்களாகிய இஸ்ரவேலரை
ஆளும் பிரபு உன்னிடத்திலே தோன்றுவா
ராகையால் யூதாவிலுள்ள பிரபுக்களில் நீ
சிறியதல்லவென்று,
௬. தீர்க்கதரிசியினாலே, * எழுதப்பட்டி
ருக்கின்றதென்றார்கள். * மீகா. ௫: ௨.
௭. அப்பொழுது ஏரோது அந்தச்சாஸ்
திரிகளை இரகசியமாய் அழைத்து, அந்த
நட்சத்திரங் காணப்பட்ட காலத்தைக்கு
றித்து அவர்களிடத்திலே விசாரித்துக்
கொண்டு,
௮. நீங்கள் போய் அந்தப்பிள்ளையைக்கு
றித்து நன்றாய் ஆராய்ந்துபாருங்கள். மே
லும், நீங்கள் அதைக்கண்டபின்பு நானும்
போய் அதைப்பணிந்துகொள்ளும்படிக்கு
எனக்கறிவியுங்களென்றுசொல்லி அவர்க
ளை, பெத்லேகேமூருக்கு அனுப்பிவிட்
டான்.
௯. இராசாசொன்னதை அவர்கள் கேட்
டுப்போனார்கள். போகையிற் கிழக்கிலே
யவர்கள் கண்டநட்சத்திரம் அந்தப்பிள்ளை
யிருக்கிறஸ்தலத்துக்குமேலேவந்து நிற்கும்
வரைக்கும் அவர்களுக்குமுன்பாக நடந்
தது.
௰. அவர்கள் அந்த நட்சத்திரத்தைக்கண்டு
மிகுந்த ஆனந்தசந்தோஷத்தையடைந்து,
௰௧. பின்பு அந்த வீட்டிற்பிரவேசித்துப்
பிள்ளையையும், அதினுடைய தாயாகிய ம
ரியாளையுங்கண்டு வணக்கமாய்விழுந்து அ
தைப்பணிந்துகொண்டு தங்கள் பொக்
சப்பெட்டிகளைத்திறந்து பொன்னையும்,
பவருக்கத்தையும், வெள்ளைப்போளத்தை
யும் அதற்குக்காணிக்கையாகவைத்தார்க
௰௨. பின்பு ஏரோதினிடத்துக்குத்திரு
போகாதிருங்களென்று அவர்கள் சொ
னத்திலே தேவ உத்தரவுபெற்று வே
ழியாய்த்தங்கள் தேசத்திற்குப்புறப்பட
போனார்கள்.
௰௩. அவர்கள் புறப்பட்டுப்போனபி
கர்த்தருடைய தூதன் சொப்பனத்தி

தப்பிள்ளையை, கொலைசெய்யத்தேடுவான். ஆகையால், நீயெழுந்து பிள்ளையையும், அதினுடைய தாயையுங் கூட்டிக்கொண்டு எகிப்துதேசத்திற்கு ஓடிப்போய் நான் உனக்குச்சொல்லும்வரைக்கும் அவ்விடத்திலிருவென்றான்.

௰௪. உடனே அவன் எழுந்து இராத்திரியிலே பிள்ளையையும், அதினுடைய தாயையுங் கூட்டிக்கொண்டு, எகிப்துக்குப்புறப்பட்டுப்போய்,

௰௫. ஏரோது மரணமடைந்தகாலம்வரைக்கும் அவ்விடத்திலிருந்தான். எகிப்திலிருந்து என்னுடைய குமாரனைவரவழைத்தேனென்று தீர்க்கதரிசியைக்கொண்டு, * கர்த்தர் திருவுளம்பற்றினது நிறைவேறும்படிக்கு அது நடந்தது. * ஓசெ. ௰௧: ௧.

௰௬. அப்போது ஏரோது தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப்பட்டதைக்கண்டு, மிகுந்தகோபமடைந்து, அந்தச்சாஸ்திரிகளிடத்திலே தான் கேட்டாராய்ந்த காலத்தின்படி பெத்லேகேமூரிலும், அதினுடைய எல்லைகள்யாவிலும், இரண்டுவயதுமுதற்கொண்டு, அதற்குத்தாழ்ந்திருந்த வயதுள்ள ஆண்பிள்ளைகளெல்லாரையுங் கொலைசெய்ய ஆள்களையனுப்பினான்.

௰௭. அப்போது எரேமியா தீர்க்கதரிசியினாற்சொல்லப்பட்டது * நிறைவேறிற்று. அவன் சொன்னதென்னவென்றால், * எரே. ௩௧: ௰௫.

௰௮. இராமாவூரிலே புலம்பலும், அழுகையும், மிகுந்ததுக்கிப்புமுள்ள கூக்குரல்கேட்கப்பட்டது. இராகேல் தன் பிள்ளைகளைக் குறித்து அழுதுகொண்டு, * அந்தப்பிள்ளைகளில்லாதபடியால், ஆறுதல் அடையாதிருக்கிறாளென்பதே. * ௧ மோ. ௩௫: ௰௯.

௰௯. ஏரோது இறந்தபின்பு, சொப்பனத்திலே. கர்த்தருடைய தூதன் எகிப்திலே யோசேப்புக்குக்காணப்பட்டு,

௨௰. பிள்ளையினுடைய பிராணனைவாங்கத்தேடினவர்கள் இறந்துபோனார்கள். ஆகையால், நீ எழுந்து பிள்ளையையும், அதினுடைய தாயையுங் கூட்டிக்கொண்டு இஸ்ரவேல் தேசத்துக்குப்போவென்றான்.

௨௧. அந்தப்படியே அவன் எழுந்திருந்து பிள்ளையையும், அதினுடைய தாயையுங் கூட்டிக்கொண்டு, இஸ்ரவேல் தேசத்திற்கு உ[illegible]ப்பட்டபொழுது,

௨௨. அருகேலாவு என்பவன் தன் தகப்பனாகிய ஏரோதினுடைய பட்டத்துக்கு [illegible], யூதேயாவை ஆளுகிறானென்றுகேள்விப்பட்டு அங்கேபோகப்பயந்தான். அப்பொழுது சொப்பனத்திலே அவன் தேவசன்னரவுபெற்று, கலிலேயா நாட்டிலுள்ள திசைகளைநோக்கிப்புறப்பட்டுச் சென்று,

௨௩. நாசரேயனென்று அழைக்கப்படுவாரென்கிறதாய், தீர்க்கதரிசியாற் சொல்லப்பட்டது * நிறைவேறும்படிக்கு, நாசரேத்தூரிலே வந்து வாசம்பண்ணினான். * ஏசா. ௰௧: ௧. சகரி. ௬: ௰௨.

௩ அதிகாரம்.

[(௧) யோவான் பிரசங்கித்தது. அவருடைய ஊழியம், நடக்கை, ஞானஸ்நானம். (௭) அவர் பரிசேயர்களைக்கடிந்துகொண்டது. (௰௩) கிறிஸ்துவுக்கு யோர்தானில் ஞானஸ்நானங் கொடுத்தது.]

அக்காலத்திலே * யோவான்ஸ்நானன்வந்து, * மாற். ௧: ௨—௮. லூக். ௩: ௧—௰௮. யோவா. ௧: ௬, ௭.

௨. பரலோக இராசரீகஞ் சமீபமாயிருக்கின்றதாகையால், மனந்திரும்புங்களென்று * யூதேயாவின் வனாந்தரத்திலே பிரசங்கம்பண்ணினான். * ௪: ௰௭.

௩. அவன் யாவனெனில், கர்த்தருக்காக மார்க்கத்தைநன்றாகச்செய்யுங்களென்றும், அவருடைய பாதைகளைச்செவ்வைப்பண்ணுங்களென்றும், வனாந்தரத்திலே ஒருவன் சத்தமிடுவானென்று * ஏசாயாவென்னுந் தீர்க்கதரிசியினாற் சொல்லப்பட்டவனே. * ஏசா. ௪௰: ௩.

௪. அல்லாமலும் அந்தயோவான் ஒட்டகமயிர் உடையைத்தரித்து, தன்னுடைய அரையில் வார்க்கச்சையைக்கட்டிக்கொண்டிருந்தான். வெட்டுக்கிளிகளுங் காட்டுத்தேனும் அவனுக்கு ஆகாரமாயிருந்தன.

௫. அக்காலத்திலே எருசலேம் நகரத்தாரும், யூதேயாதேசத்தாரனைவரும், யோர்தான்நதிக்கடுத்த சுற்றுப்புறத்தார்யாவரும் அவனிடத்திற்குப்புறப்பட்டுப்போய்,

௬. தங்கள் பாவங்களை யறிக்கையிட்டு யோர்தான் நதியில் அவனாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்.

௭. அப்படியிருக்கையில், பரிசேயர் சதுசேயர் என்பவர்களிலும் அநேகர் தன்னாலே ஞானஸ்நானம்பெறும்படிக்கு வருகிறதை அவன்கண்டு. அவர்களைநோக்கி, விரியன் பாம்புகளின் குட்டிகளே! இனிவருங் கோபத்துக்கு நீங்கள் தப்பித்துக்கொள்ளும்படியாய் உங்களுக்கு வகைகாட்டினவன் எவன்?

௮. மனந்திரும்புதலுக்குத்தக்க கனிகளைக் கொடுங்கள்.

௯. ஆபிரகாம் எங்களுடைய பிதாவென்று சொல்ல, உங்களுடைய உள்ளத்திலே நினைத்துக்கொள்ளாதிருங்கள். ஆபிரகாமுக்குப்பராபரன் இந்தக்கற்களிற் பிள்ளைகளையுண்டுபண்ண வல்லவராயிருக்கிறாரென்று உங்களுக்குச்சொல்லுகிறேன்.

௰. இப்பொழுதே கோடரிமரங்களுடைய
வேரருகே வைத்திருக்கின்றது. ஆகையால்,
நல்லகனிகளைக்கொடாத மரங்களெல்லாம்
வெட்டப்பட்டு அக்கினியிலேபோடப்படும்.

௰௧. நீங்கள் மனந்திரும்பும்படிக்கு நான்
சலத்தினலே யுங்களுக்கு ஞானஸ்நானங்
கொடுக்கிறேன். * எனக்குப்பின்வருகிறவர்
என்னிலும் அதிகவல்லமையுடையவர்.—
அவருடைய பாத இரட்சைகளைச்சுமக்கிற
தற்கு நான் பாத்திரவானல்ல. அவரே பரி
சுத்த ஆவியினலும், அக்கினியினலுமுங்க
ளுக்கு ஞானஸ்நானங்கொடுப்பார். * மாற்.
௧: எ—அ. லூக். ௩: ௰௬ யோவா. ௧: ௨௬.
அப். ௨: ௩, ௪.

௰௨. அவருடைய கையில் தூற்றுக்கூடை
யிருக்கின்றது. அவர் தமது களம் முழுவ
தையும் விளக்கி, தம்முடைய கோதுமை
யைக்களஞ்சியத்திற் சேர்ப்பார். பதரை
அவியாத அக்கினியினுற் சுட்டுப்போடுவா
ரென்றான்.

௰௩. அப்பொழுது இயேசுவானவர் யோ
வானலே ஞானஸ்நானம்பெறுவதற்கு, *
கலிலேயா நாட்டைவிட்டு யோர்தான் அரு
கே அவனிடத்திற்குப்போனர். * மாற். ௧:
௯—௰௧. லூக். ௩: ௨௧, ௨௨.

௰௪. யோவான் அவருக்குத்தடைபண்ணி,
உம்மாலே நான் ஞானஸ்நானம்பெறவேண்
டுவதாயிருக்க, நீர் என்னிடத்துக்கு வரலா
மாவென்றான்.

௰௫. அதற்கு இயேசுவானவர் அவனைநோ
க்கி, இவ்விதமாய்ச்சகல நீதியையும் நிறை
வேற்றுகிறது நமக்கேற்றதாயிருக்கின்றது.
ஆகையால், இப்பொழுது சம்மதிப்பாயாக
வென்றார். அப்பொழுது அவன் சம்மதித்
தான்.

௰௬. இயேசுவானவர் ஞானஸ்நானம்பெற்
றுச்சலத்தைவிட்டேறிவந்தவுடனேஇதோ,
வானம் அவருக்குத்திறக்கப்பட்டது. அல்
லாமலும், பராபரனுடைய * ஆவி புறு
வைப்போலிறங்கி, அவர்மேல் வருகிறதைக்
கண்டான். * ஏசா. ௰௧: ௨. யோவா. ௧:
௩௨—௩௪.

௰௭. மேலும் * இவர் எனக்கன்பாயிருக்
கிற என்னுடைய குமாரன் இவரிற்பிரியமா
யிருக்கிறேனென்று வானத்திலிருந்து சத்த
முண்டாயிற்று. * ௰எ: ௫. ஏசா. ௪௨: ௧.

௪ அதிகாரம்.

[(௧) கிறிஸ்து உபவாசித்துச்சோதிக்கப்
பட்டது. (௰௧) தேவதூதர்கள் அவருக்குப்
பணிவிடைசெய்தது. (௰௩) அவர் கப்பர்
நாகூமிலே வாசம்பண்ணி, (௰எ) பிரசங்
கிக்கத்துவக்கி, (௰அ) பேதுருவையும், அந்
திரேயாவையும், (௨௧) யாக்கோபையும்,
யோவானையும் அழைத்து, (௨௩) எல்லா
வியாதிஸ்தர்களையுங் குணமாக்கினது.]

அப்பொழுது இயேசுவானவர் பசா
சானவனலேசோதிக்கப்படுவதற்கு
ஆவியினலே வனாந்தரத்திற் கொண்டுபோ
கப்பட்டார்.

௨. * (அங்கே) அவர் நாற்பதுநாள் இ
வும், பகலும், உபவாசம்பண்ணின பின்
அவருக்குப்பசியுண்டாயிற்று. * மாற்.
௰௨, ௰௩. லூக். ௪: ௧—௰௩.

௩. அப்பொழுது அந்தச்சோதிக்கிறவ
அவரிடத்திற்குவந்து, நீ பராபரனுடை
குமாரனனல், இந்தக்கற்கள் அப்பங்கள
கும்படி கட்டளையிடுவென்றான்.

௪. அதற்கவர் மாறுத்தரஞ் சொன்னது
மனிதனனவன் அப்பத்தினலே மாத்திரமல
ல, பராபரனுடைய வாய்மலர்ந்தருளி
செய்கிற எந்தவாக்கினலும் பிழைப்ப
னென்றெழுதியிருக்கின்றதென்றார்.

௫. * அப்பொழுது பசாசானவன் அ
ரைப்பரிசுத்த நகரத்திற்குக்கொண்டுபோ
அவரைத்தேவாலயத்தின்மேல் உப்பரிகை
யில்நிறுத்தி, * ௫மோ. அ: ௩. லூக். ௪: ௯

௬. உன்னைக்குறித்து, தம்முடைய தூத
களுக்குக்கட்டளையிடுவாரென்றும், உன்
டையபாதங்கல்விடறுதபடிக்கு, அவர்க
உன்னைக்கைகளிலேந்திக்கொண்டுபோவா
களென்றும், * எழுதியிருக்கின்றதா
யால், நீ பராபரனுடைய குமாரனுகில்
ழக்குதியென்றான். * சங்கீ. ௯௧: ௰௧, ௰௨

எ. அதற்கு இயேசுவானவர் சொன்
அதுவுமல்லாமல், உன்னுடைய தேவனு
பராபரனைப்பரீட்சை பாராதிருப்பா
வென்றும் * எழுதியிருக்கின்றதென்றார்
* ௫மோ. ௬: ௰௬.

அ. மறுபடியும் பசாசானவன் அவரை
வும் உயர்ந்தமலையின் மேற்கொண்டுபோ
உலகத்திலுள்ள இராச்சியங்களெல்ல
றையும், அவைகளின் மகிமையையு
ருக்குக்காண்பித்து,

௯. நீ விழுந்து என்னைத்தொழுது
டால் இவைகளெல்லாவற்றையும் உ
தருவேனென்று சொன்னன்.

௰. அப்பொழுது இயேசுவானவர்
நோக்கி, உன்னுடைய தேவனுகிய
பரனைத்தொழுதுகொண்டு, * அவ
வருக்கே ஆராதனைசெய்வாயாகவெ
ழுதியிருக்கின்றதாகையால், சாத்தா
அப்புறம் போவென்றார். * ௬: ௰௩.

௰௧. அப்பொழுது பசாசானவன் அ
விட்டுப்போனன். உடனே தேவதூத
சேர்ந்துவந்து, அவருக்கூழியஞ் செய்
கள்.

௰௨. பின்பு * யோவான் காவலில்வை

பட்டானென்று இயேசுவானவர் கேள்விப்பட்டு, † கலிலேயாநாட்டுக்குப்புறப்பட்டுப் போய், * மாற். ௧: ௰௪—௨௰. † லூக். ௪: ௰௪.

௰௩. நாசரேத்தூரைவிட்டு, செபுலோன் நவுதலியென்னும் நாடுகளின் எல்லைகளிற் கடற்கரையருகேயிருக்கின்ற கப்பர்நாகூம் பட்டினத்தில்வந்து வாசம்பண்ணினார்.

௰௪. அதினாலேகடற்கரையருகிலும்,யோர்தான் நதியோரத்திலுமுள்ள அஞ்ஞானிகள் அடங்கியிருக்கிற கலிலேயா தேசமாகிய செபுலோன் தேசத்தாரும் நவுதலிதேசத்தாருமாகிய இருளிலிருக்கின்ற சனங்கள் மிகுந்த ஒளியைக்கண்டார்கள்.

௰௫. மரண நிழலுள்ள திசையிலிருக்கிறவர்களுக்கு ஒளிதோன்றிற்றென்று,

௰௬. * ஏசாயா தீர்க்கதரிசியினாற் சொல்லப்பட்டது நிறைவேறிற்று. * ஏசா. ௯: ௧, ௨.

௰௭. அக்காலத்திலே இயேசுவானவர் பரலோக இராச்சியஞ் சமீபித்ததாகையால், * மனந்திரும்புங்களென்று பிரசங்கிக்கத் தொடங்கினார். * மத்தே. ௩: ௨.

௰௮. ஒரு காலத்திலே * இயேசுவானவர் கலிலேயா நாட்டின் கடலருகே நடந்து போகையில், மீன்பிடிக்கிறவர்களாகிய பேதுரு என்னப்பட்ட சீமோனும், அவனுடைய சகோதரன் அந்திரேயாவுமாகிய இருவருங் கடலிலே வலைபோட்டுக்கொண்டிருக்கிறபொழுது அவர்களைக்கண்டு. * மாற். ௧: ௰௬—௨௰.

௰௯. என் பின்னேவாருங்கள். உங்களை மனிதரைப்பிடிக்கிறவர்களாக்குவேனென்று அவர்களுடனே சொன்னார்.

௨௰. உடனே அவர்கள் வலைகளைவிட்டு அவரைப்பின்பற்றினார்கள்.

௨௰௧. அவர் அவ்விடம்விட்டு, அப்புறம்போகையிற் செபெதேயுவினுடைய மகன் யாக்கோபும், அவனுடைய சகோதரன் யோவானுமாகிய இருவருந் தங்கள் தகப்பன் செபெதேயுவுடனே படவிலிருந்து, தங்கள் வலைகளைத்தைத்துக்கொண்டிருக்கிறபொழுது அவர்களைக்கண்டு அவர்களையும் அழைத்தார்.

௨௰௨. உடனே அவர்கள் படவையும், தங்கள் தகப்பனையும்விட்டு, அவரைப்பின்பற்றினார்கள்.

௨௰௩. பின்பு, இயேசுவானவர் கலிலேயாநாடெங்குஞ் சுற்றிநடந்து, அவர்களுடைய செப ஆலயங்களிற் சனங்களுக்கு உபதேசஞ்செய்து, பரலோக இராச்சியத்தைக் குறித்து, சுவிசேஷத்தைப்பிரசங்கித்துச் சனங்களுக்குண்டாயிருந்த சகலவிதமான வியாதிகளையும், சகலவிதமான நோய்களையும் (நீக்கி, அவர்களைக்) குணமாக்கினார்.

௨௰௪. அவருடைய கீர்த்தி சீரியாத்தேசத்திலெங்கும் பிரபலமாயிற்று. பின்பு பலபல வியாதிகளையும், வேதனைகளையும் அடைந்த பிணியாளிகள் யாவரையும், பசாசுபிடித்தவர்களையும், சந்திரரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவரிடத்திற்குக்கொண்டு வந்தார்கள். அவர்களைக்குணமாக்கினார்.

௨௰௫. கலிலேயாவிலும், தெக்கப்போலியிலும், எருசலேமிலும், யூதேயாவிலும், யோர்தான் நதிக்கப்புறத்திலுமிருந்து, மிகுந்த சனங்கள் வந்து அவர் பின்சென்றார்கள்.

௫ அதிகாரம்.

[(௧) கிறிஸ்துப்பர்வதத்தின்மேல் தம்முடைய பிரசங்கத்தைத்தொடங்கினது. (௩) பாக்கியவான்கள் இன்னாரென்பது. (௰௩) பூமியின் உப்பு, (௰௪) லோகத்தின் வெளிச்சம், மலையின்மேற் பட்டணம். (௰௫) விளக்கு என்பவைகளைக்குறித்தது. (௰௭) தாம் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற வந்தாரென்றும், (௨௧) கொலை, (௨௭) விபசாரம், (௩௩) பொய்யாணை யின்னதென்றும் அறிவித்து, (௩௮) அநியாயத்தைச்சகிக்கவும், (௪௪) சத்துருக்களைச்சிநேகிக்கவும், (௪௮) பூரண சற்குணராயிருக்கப்பிரயாசப்படவும் உபதேசித்தது.]

அவர் அந்தச்சனங்களைக்கண்டு, மலையின்மேலேறி, உளுக்காந்தபொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள்.

௨. * அப்பொழுது அவர் தமது திருவாயைத்திறந்து, அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னதாவது; * லூக். ௬: ௨௰, ௨௰௬.

௩. * ஆவியில் எளிமையுள்ளவர்கள் பரலோக இராச்சியத்தை யடைவார்கள். ஆகையால், அவர்கள் பாக்கியவான்கள். * ஏசா. ௫௭: ௰௫.

௪. * துயரப்படுகிறவர்கள் ஆறுதலடைவார்கள். ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள். * ஏசாயா. ௬௧: ௧, ௩.

௫. சாந்தகுணமுள்ளவர்கள் * பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள். ஆகையால், அவர்கள் பாக்கியவான்கள். * சங். ௩௭: ௰௧.

௬. நீதியின்மேற் * பசிதாகமுள்ளவர்கள் திருத்தியடைவார்கள். ஆகையால், அவர்கள பாக்கியவான்கள். * ௫௫: ௧.

௭. * இரக்கமுள்ளவர்கள் இரக்கத்தை யடைவார்கள். ஆகையால், அவர்கள் பாக்கியவான்கள். * வாக். ௰௬: ௰௭. ௨௪: ௨௧. யாக். ௨: ௰௩.

௮. * சுத்தமான இருதயமுள்ளவர்கள் † பராபரனைத்தரிசிப்பார்கள். ஆகையால்,

அவர்கள் பாக்கியவான்கள். * ௧ யோவா. ௩: ௨, ௩. † சங். ௨௪: ௩, ௪. ௫௧: ௰௨.

௯. சமாதானத்தை நடப்பிக்கிறவர்கள் பராபரனுடைய புத்திரரென்னப்படுவார்கள். ஆகையால், அவர்கள் பாக்கியவான்கள்.

௰. * நீதியினிமித்தந் துன்பப்படுகிறவர்கள் பரலோக இராச்சியத்தை யடைவார்கள். ஆகையால், அவர்கள் பாக்கியவான்கள். * ௧ பேது. ௩: ௰௪. ௨ உரோ. ௩: ௰௨.

௰௧. * என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித்தீமையான மொழிகளையுங்கள்மேற் பொய்யாய்ச்சொன்னார்களானால், நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள். * ௧ பேது. ௪: ௰௪.

௰௨. பரலோகத்திலே உங்களுக்கு மிகுந்த பலன் கிடைப்பதினாலே நீங்கள் சந்தோஷப்பட்டு, மிகவுங் * களிகூருங்கள். உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்கள். * அப். ௫: ௪௧.

௰௩. நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள். உப்பானது, * சாரமற்றதேயானால், எதினாற் சாரமாக்கப்படும். அது வெளியே கொட்டப்படுவதற்கும், மனிதராலே மிதிக்கப்படுவதற்குமேயன்றி, வேறொன்றுக்குமாகாது. * மாற். ௯: ௫௰. லூக். ௰௪: ௩௪.

௰௪. நீங்கள் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறீர்கள். மலையின்மேலிருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது.

௰௫. மேலும், * விளக்கைக்கொளுத்தி மரக்காலால் மூடிவையாமல், ஒரு தண்டின்மேலே வைப்பார்கள். அப்பொழுது அது வீட்டிலிருக்கிற யாவருக்கும் பிரகாசங் கொடுக்கும். * மாற். ௪: ௨௧.

௰௬. அப்படியே * மனிதரானவர்கள் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு, பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவின் மகிமை விளங்கப்பண்ணத்தக்கதாக உங்கள் ஒளி அவர்கள் முன்பாகப்பிரகாசிக்கக்கடவது. * ௧ பேது. ௨: ௰௨.

௰௭. வேதப்பிரமாணத்தையாகிலும், தீர்க்கதரிசனங்களையாகிலுந் தள்ளிவிடுகிறதற்கு நான் வந்ததாக நினையாதிருங்கள். அவைகளைத்தள்ளிவிடுகிறதற்கல்ல, நிறைவேற்றுகிறதற்குவந்தேன்.

௰௮. * வானமும், பூமியும் ஒழிந்துபோனாலும், வேதமுழுவதும் நிறைவேறுவதன்றி, அதிலொரு சிறியவெழுத்தாகிலும், ஒரெழுத்தினுடைய உறுப்பாகிலும் ஒழிந்துபோவதில்லையென்று மெய்யாய் உங்களுக்குச்சொல்லுகிறேன். லூக். ௰௬: ௰௭.

௰௯. ஆகையால், இந்தக்கற்பனைகளில் மிகவுஞ் சிறிய கற்பனையையாகிலுந் தள்ளி, அவ்வண்ணமாய் மனிதருக்கு உபதேசிக்கிறவனெவனோ அவன் பரலோக இராச்சியத்திலே மிகவுஞ் சிறியவனென்றெண்ணப்படுவான். அவைகளின்படிசெய்து, உபதேசிக்கிறவனே பரலோக இராச்சியத்திலே பெரியவனென்றெண்ணப்படுவான்.

௨௰. ஆதலால், * வேதபாரகர்களும் பரிசேயர்களுமானவர்களுடைய நீதியிலும், உங்கள நீதி அதிகப்பட்டிராவிட்டாற் பரலோக இராச்சியத்திற்குட் பிரவேசிக்கமாட்டீர்களென்று உங்களுக்குச்சொல்லுகிறேன். * மத்தே. ௨௩: ௨௫—௨௮.

௨௧. கொலைசெய்யாதிருப்பாயாக வென்பதும், கொலைசெய்தவன் நியாயத்தீர்ப்புக்கேதுவாயிருப்பானென்பதும் பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

௨௨. அல்லாமலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது; சகோதரனை வீணாய்க் கோபித்துக்கொள்பவனெவனோ அவன் நியாயத்தீர்ப்புக்கேதுவாயிருப்பான். சகோதரனை வீணனென்கிறவனெவனோ அவன் பெரிய சங்கத்தீர்ப்புக்கேதுவாயிருப்பான். அவனை மதிகேடனென்கிறவனெவனோ அவன் * எரி நரகத்துக்கேதுவாயிருப்பான். * ௧ யோவா. ௩: ௰௫.

௨௩. ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச்செலுத்தவந்து, உன்மேற் சகோதரனுக்கு விதனமுண்டென்று அங்கே நினைவுகொள்வாயாகில்,

௨௪. அந்தப்பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய் முன்பு சகோதரனுடனே யொப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச்செலுத்துவாயாக.

௨௫. உனக்கெதிராளியானவன் உன்னை நியாயாதிபதிக்கொப்புவியாமலும், அந்த நியாயாதிபதி உன்னை ஊழியக்காரனுக்கொப்புவியாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலுமிருக்கும்படிக்கு, சீக்கிரமாய் உன்னெதிராளியுடனே வழியிலிருக்கும்பொழுதே * அவனுடனே நல்மனம் பொருந்துவாயாக. * லூக். ௰௨: ௫௮, ௫௯.

௨௬. (பொருந்தாவிட்டால்) நீ ஒரு காசுங் குறைவின்றி, முழுமையுஞ் செலுத்துகிறவரைக்கும் அவ்விடத்தைவிட்டு, திரும்பி வரமாட்டாயென்று மெய்யாய் உனக்குச் சொல்லுகிறேன்.

௨௭. விபசாரம் பண்ணாதிருப்பாயாக வென்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

௨௮. அல்லாமலும், நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது; ஒரு ஸ்திரீயை * இச்சிப்போடே பார்க்கிறவனெவனோ அவன் தன்னிருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று. * யோபு ௩௧: ௧.

௨௯. ஆகையால், * உன் வலதுகண் உன்னைக்கெடுக்கிறதற்கு ஏதுவானால், அதைப் பிடுங்கி யெறிந்துபோடு. உன் சரீரமுழுமையும் நரகத்திலே தள்ளப்படாதபடிக்கு, உன் அவயவங்களிலொன்று கெட்டுப்போகிறதே உனக்கு நன்மையாய் இருக்குமே. * மத்தே. ௰௮: ௮, ௯. மாற். ௯: ௪௫, ௪௮. கலாத். ௫: ௨௪.

௩௰. அன்றியும், உன் வலதுகை உன்னைக் கெடுக்கிறதற்கேதுவானால், அதைத்தறித் தெறிந்துபோடு. உன் சரீரமுழுமையும் நரகத்திலே தள்ளப்படாதபடிக்கு, உன் அவயவங்களிலொன்று கெட்டுப்போகிறதே உனக்கு நன்மையாயிருக்குமே.

௩௧. அல்லாமலும்; * யாவனானாலுந் தன் மனைவியைத்தள்ளிவிட்டால், தள்ளுதற்சீட்டை யவளுக்குக்கொடுக்கக்கடவனென்று சொல்லப்பட்டது. * ௫ மோ. ௨௪: ௧.

௩௨. அப்படியிருந்தும், * எவனாகிலுந்தன் மனைவி வேசித்தனமில்லாமலிருக்கையில், அவளைத்தள்ளிவிட்டால் அவன் அவளை விபசாரஞ் செய்யப்பண்ணுகிறவனாயிருப்பானென்றும், எவனானாலுந் தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணினால், விபசாரஞ் செய்கிறவனாயிருப்பானென்றும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். * மத்தே. ௰௯: ௯.

௩௩. அன்றியும் * பொய்யாணையிடாதிருப்பாயாகவென்பதும், உன் ஆணைகளைக் கர்த்தருக்குச் செலுத்துவாயாகவென்பதும் பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். * ௩ மோ. ௰௯: ௰௨. ௪ மோ. ௩௰: ௩.

௩௪. அல்லாமலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது; எவ்விதத்திலுஞ் சத்தியம்பண்ணக்கூடாது. வானந் * தேவாசனமாயிருக்கிறபடியால் அதின்மேற் சத்தியம்பண்ணலாகாது. பூமி பராபரனுடைய பாதப்படியாயிருக்கிறபடியால், அதின் மேற் சத்தியம்பண்ணலாகாது. * ஏசா. ௬௬: ௧.

௩௫ எருசலேம் பெரிய இராசனுடைய நகரமாயிருக்கிறபடியால், அதின்மேற் சத்தியம்பண்ணலாகாது.

௩௬. உன் சிரசின் ஒரே மயிரையும், நீ வெண்மையும், கறுப்புமாக்கத்திராணியில்லாதபடியால், அதின்மேற் சத்தியம்பண்ணலாகாது.

௩௭. * உள்ளதை யுள்ளதென்றும், இல்லதை யில்லதென்றுஞ் சொல்லக்கடவீர்கள். இவைகளுக்குமேற்பட்டது தீமையினாலுண்டாயிருக்கின்றது. * யாக்கோ. ௫: ௰௨.

௩௮. கண்ணுக்குப்பதிலாகக்கண்ணையும், பல்லுக்குப்பதிலாகப்பல்லையும் (வாங்கவேண்டுமென்று) * சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். * ௨ மோ. ௨௧: ௨௪. ௩ மோ. ௨௪: ௨௰.

௩௯. நான் உங்களுக்குச்சொல்லுகிறதாவது; * பொல்லாதவனோடே எதிர்த்துநிற்கக்கூடாது. † ஒருவன் உன்னுடைய வலதுகன்னத்தில் அடித்தால் மறுகன்னத்தையும் அவனுக்குத்திருப்பிக்காட்டு. * வாக். ௨௰: ௨௨. † லூக். ௬: ௨௯.

௪௰. உன்னுடனே * வழக்காடி உன்னுடைய மேலங்கியை யெடுத்துக்கொள்ள வேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் வஸ்திரத்தையும்விட்டுவிடு. * ௧ கொரி. ௬: ௭.

௪௧. ஒருவன் உன்னை யொரு காதவழிவரும்படியாகப்பலவந்தம்பண்ணினால், அவனோடே யிருகாதவழிமட்டும் நடந்துபோ.

௪௨. * உன்னை வேண்டிக்கொள்ளுகிறவனுக்குக்கொடு. உன்னிடத்திற் கடன்வாங்க
5 விரும்புகிறவனுக்கு முகங்கோணாதிருப்பாயாக. * லூக். ௬: ௩௰.

௪௩. * நீ பிறனில் அன்புவைத்து, † உன் சத்துருவைப்பகைக்கக்கடவாயென்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். * ௩ மோ. ௰௯: ௰௮. † ௫ மோ. ௭: ௨. ௨௩: ௬.

௪௪. நான் உங்களுக்குச்சொல்லுகிறது; பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதா பொல்லாதவர்கள்மேலும், நல்லவர்கள்மேலுந் தமது சூரியனை உதிக்கவும் நீதியுள்ளவர்கள்மேலும், அநீதியுள்ளவர்கள்மேலும், மழையைப்பெய்யவும்பண்ணுகிறார்.

௪௫. அப்படியே நீங்கள் அவருக்குப்புத்திரராயிருக்கும்படிக்கு, உங்கள் * சத்துருக்களில் அன்புகூர்ந்து, உங்களைச்சபிக்கிறவர்களை ஆசீர்வதித்து, உங்களைப்பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்து, உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத்துன்பப்படுத்துகிறவர்களுக்காகவுஞ் செபம்பண்ணுங்கள். * லூக். ௬: ௨௭, ௩௫. † லூக். ௨௩: ௨௪.

௪௬. அல்லாமலும், உங்களில் அன்புகூருகிறவர்கள்மேலேமாத்திரம் அன்பாயிருப்பீர்களானால் உங்களுக்கு என்னபலன்வரும். ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்களல்லவோ?

௪௭. உங்கள் சகோதரரைமாத்திரம் வாழ்த்திக்கொள்வீர்களானால், அது பெரியசெய்கையாகுமா! அஞ்ஞானிகளும் அப்படிச் செய்கிறார்களல்லவோ! .

௪௮. ஆகையாற் பரமண்டலங்களிலிருக்கிற * உங்கள் பிதா பூரணசற்குணராயிருக்கிறதுபோல நீங்களும் பூரணசற்குணராயிருக்கக்கடவீர்கள். * கொலோ. ௩: ௰௨, ௰௪.

௬ அதிகாரம்.

[(௧) அப்பானுக்கிறிஸ்துப்பர்வதத்தில் பிரசங்கம்பண்ணி, தருமத்தையும், (௫) செப

த்தையும், (௰௪) நம்முடைய சகோதரர்களை மன்னிப்பதையும், (௰௬) உபவாசத்தையும், (௰௯) நம்முடைய பொக்கிசத்தைக்கூட்டி வைக்கவேண்டிய இடத்தையும், (௨௪) பராபரனுக்கும், லோகப்பொருளுக்கும், ஊழியஞ்செய்வதையுங்குறித்துச்சொல்லி, (௨௫) உலககாரியங்களுக்காக, கவலையுள்ளவர்களாயிராமல், (௩௩) பராபரனுடைய இராச்சியத்தைத்தேடும்படிக்கு உபதேசித்தது.]

நீங்கள் மனிதர்களாலே காணப்படும் பொருட்டாய் உங்கள் தருமத்தை அவர்களுக்கு முன்பாகச்செய்யாதபடிக்கு, எச்சரிக்கையாயிருங்கள். செய்தாற் பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவினிடத்திலே பலன்பெறுநிருப்பீர்கள்.

௨. ஆகையால், நீ தருமஞ்செய்கிறபொழுது மனிதர்களாற் புகழப்படுவதற்குச்செப ஆலயங்களிலும், வீதிகளிலுஞ்செய்கிற வஞ்சகரைப்போல நீ உனக்குமுன்பாகத் தாரை யூதப்பண்ணக்கூடாது. அவர்கள் தங்கள் பலனை யடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவேஉங்களுக்குச்சொல்லுகிறேன்.

௩. நீ தருமஞ்செய்கிறபொழுது, உன் தருமம் அந்தரங்கமாயிருக்கும்படிக்கு, உன் வலதுகை செய்கிறதை உன்னிடதுகை யறியாதிருக்கக்கடவது.

௪. அப்பொழுது அந்தரங்கமாயிருக்கிறதை நோக்குகிற உன் பிதாத்தாமே * வெளியரங்கமாய் உனக்குப்பலனளிப்பார். * லூக். ௰௪: ௰௪.

௫. அன்றியும் நீ செபம்பண்ணுகிறபொழுது வஞ்சகரைப்போலிருக்கக்கூடாது. அவர்கள் மனிதர்களாற் காணப்படும்படிக்குச்செப ஆலயங்களிலேயும், வீதிகளின் சந்திகளிலேயும் நின்றுகொண்டு செபம்பண்ண விரும்புகிறார்கள். அவர்கள் தங்கள் பலனை யடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே யுங்களுக்குச்சொல்லுகிறேன்.

௬. நீ செபம்பண்ணுகிறபொழுது உன் வீட்டின் அறைக்குட்பிரவேசித்து, அதின் கதவைப்பூட்டினபின்பு, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவைநோக்கிச்செபம்பண்ணு. அப்பொழுது அந்தரங்கமாயிருக்கிறதை நோக்குகிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப்பலனளிப்பார்.

௭. அல்லாமலுஞ் செபம்பண்ணுகிறபொழுது நீங்கள் * அஞ்ஞானிகளைப்போல வீணாய் வசனிக்கக்கூடாது. அவர்கள் தாங்கள் அதிகமாய் வசனித்தாற் கேட்கப்படுவோமென்று நினைக்கிறார்கள். * ௧ இரா. ௰௮: ௨௬, ௨௯.

௮. அவர்களுக்கொப்பாய்ச்செய்யாதிருங்கள். நீங்கள் உங்கள் பிதாவைநோக்கி, வேண்டிக்கொள்ளுமுன்னமே அவர் உங்களுக்கு வேண்டுவதின்னதென்று அறிந்திருக்கிறாரே.

௯. ஆகையால், நீங்கள் செபம்பண்ண * வேண்டுவதெப்படியெனில்; பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே! உம்முடைய நாமம் பரிசுத்தமாய் வணங்கப்படுவதாக, * லூக். ௰௧: ௨, ௪.

௰. உம்முடைய இராச்சியம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக,

௰௧. இன்றைக்கு எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை எங்களுக்குத்தாரும்,

௰௨. எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிப்பதுபோலத்தேவரீரெங்கள் கடன்களை மன்னித்தருளும்.

௰௩. நாங்கள் சோதனையிற் பிரவேசியாதபடிசெய்து தீமையினின்று, எங்களை இரட்சித்துக்கொள்ளும். இராச்சியமும், வல்லமையும், மகிமையும் உமக்கே யென்றென்றைக்குமுண்டாயிருக்கின்றன. ஆமென் என்பதேயாம்.

௰௪. மனிதர்கள் (உங்களுக்குச்செய்த) தப்பிதங்களை மன்னிப்பீர்களானால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்.

௰௫. மனிதர்கள் (உங்களுக்குச்) செய்ததப்பிதங்களை * மன்னியாதிருப்பீர்களாகில், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார். * மத். ௰௮: ௨௮, ௩௫.

௰௬. மேலும் நீங்கள் உபவாசம்பண்ணும்பொழுது வஞ்சகரைப்போல முகம் வாடலாயிருக்கக்கூடாது. அவர்கள் உபவாசம் பண்ணுகிறது மனிதர்களாற் காணப்படும் பொருட்டாய்த்தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள். அவர்கள் தங்கள் பலனை யடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன்.

௰௭. நீ உபவாசிக்கும்பொழுது, அந்த உபவாசம் மனிதர்களுக்குக்காணப்படாமல், அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படிக்கு, உன் சிரசைத்தயிலத் தாற்பூசி உன் முகத்தைக்கழுவக்கடவாய்.

௰௮. அப்பொழுது அந்தரங்கமாயிருக்கிறதைநோக்குகிற உன் பிதா வெளியரங்கமாயுனக்குப்பலன் அளிப்பார்.

௰௯. பூமியிலே நீங்கள் உங்களுக்காகப் பொக்கிசங்களைக்கூட்டி வையாதிருங்கள். அவ்விடத்திலே *பூச்சியும், துருவும், அவைகளைக்கெடுக்கும். திருடருங் கன்னமிட்டுத் திருடுவார்கள். * யாக். ௫: ௧, ௩.

௨௰. * பரலோகத்திலே உங்களுக்காகப் பொக்கிசங்களைக்கூட்டி வையுங்கள். அவ்விடத்திலே பூச்சியாவது, துருவாவது, அவைகளைக்கெடுக்கிறதுமில்லை; அங்கே திரு

டார் கன்னமிட்டுந்திருடுகிறதுமில்லை. * லூக். ௰௨: ௩௩, ௧ தீமோ. ௬: ௰௭, ௰௯.

௨௧. உங்கள் பொக்கிசமெங்கேயோ அங்கே உங்கள் இருதயமுமிருக்குமே.

௨௨. கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கின்றது. ஆகையால், உன் கண் சொஸ்தமாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் வெளிச்சம் அடைந்திருக்கும்.

௨௩. உன் கண் வியாதியாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருள் அடைந்திருக்கும். அப்படியிருக்க, உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால் இருளே மிகவும் மிகுதியாயிருக்குமல்லவோ!

௨௪. * ஒருவன் இரண்டெசமான்களுக்கு ஊழியஞ் செய்யமாட்டான். என்னத்தினாலெனில், ஒருவனை அவன் பகைத்து, மற்றவனைச்சிநேகிப்பான். அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை யசட்டைபண்ணுவான். நீங்கள் பராபரனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்யமாட்டீர்கள். * லூக். ௰௬: ௰௩.

௨௫. ஆகையால், உங்கள் சீவனுக்காக * என்னத்தைப்போசனஞ் செய்வோம். என்னத்தைப்பானம் பண்ணுவோமென்றும், உங்கள் சரீரத்துக்காக என்னத்தையுடுப்போமென்றுங் கவலைப்படாதிருங்களென்று நான் உங்களுக்குச்சொல்லுகிறேன். ஆகாரத்திற்குச்சீவனும், உடைக்குச்சரீரமும் அதிகமாயிருக்கிறதல்லவோ? * லூக். ௰௨: ௨௨, ௩௧. எபி. ௰௩: ௫. சங் ௩௪: ௰௫, ௰௬.

௨௬. ஆகாசத்துப்பறவைகளை நோக்கிப் பாருங்கள். அவைகள் விதைக்கிறதும், அறுக்கிறதும், களஞ்சியங்களிற் கூட்டிவைக்கிறதுமில்லை. அவைகளுக்கும் உங்கள் பரமபிதா உணவைக்கொடுக்கிறார். அவைகளிலும் நீங்கள் மேன்மையுள்ளவர்களல்லவா?

௨௭. அல்லாமலும், உங்களிலொருவன் கவலைப்படுகிறதினாலே தன் சரீர அளவுக்கு ஒரே முழத்தையுங் கூட்டுவானா? (மாட்டானே.)

௨௮. பின்னும் உடைகளுக்காக நீங்கள் கவலைப்படுகிறதென்ன? வெளியிலேலிலீயென்னும் புஷ்பங்கள் வளருகிறவகையையுற்றுப் பாருங்கள். அவைகள் வருந்துகிறதுமில்லை, நூற்கிறதுமில்லை.

௨௯. அப்படியிருந்தும் மிகுந்த மகிமையுடைய சாலோமோனும் அவைகளிலொன்றைப்போலாகிலும், (அழகாய்) உடுக்கவில்லையென்று உங்களுக்குச்சொல்லுகிறேன்.

௩௰. அப்படியிருக்க, அற்பவிசுவாசிகளே! ஒருநாள் வளருகிறதுமாய், மறுநாள் அடுப்பிற் போடப்படுகிறதுமாயிருக்கிற புல்லுக்கு, பராபரன் இவ்விதமாய் உடுத்துவிக்கிறதால் மிகவும் அதிகமாய் உங்களுக்கு உடுத்துவிப்பாரல்லவோ?

௩௧. ஆகையால், என்னத்தைப்போசனஞ் செய்வோமென்றும், என்னத்தைப்பானம் பண்ணுவோமென்றும்; என்னத்தையுடுப்போமென்றும் நீங்கள் கவலைப்படாதிருங்கள். அப்படிப்பட்டவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் தேடுவார்கள்.

௩௨. உங்கள் பரமபிதா இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகளென்று அறிந்திருக்கிறாரே.

௩௩. முதலாவது பராபரனுடைய இராச்சியத்தையும், அவருடைய நீதியையுந் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக்கொடுக்கப்படும்.

௩௪. ஆகையால், நாளைக்காகக்கவலைப்படாதிருங்கள். நாளைக்காக நாளைக்குத்தானே கவலைகளுண்டாகும். ஒவ்வொருநாளைக்கு அதினதினுடைய வருத்தம்போதுமே.

௭ அதிகாரம்.

[(௧) கிறிஸ்து மற்றவர்களைக்குற்றமாய் நிருணயிப்பதைக்கண்டித்து, (௬) பரிசுத்தமானவைகளை நாய்களுக்குப்போடக்கூடாதென்றுசொல்லி, (௭) செபம்பண்ணவும், (௰௩) இடுக்கமானவாசல் வழியாய்ப்பிரவேசிக்கவும், (௰௫) கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருக்கவும், (௨௧) வார்த்தையைக்கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல. அதின்படி செய்கிறவர்களாய் இருக்கவும், (௨௪) அப்படிச்செய்வதுகல்மலையின்மேல் வீடுகட்டுவதுபோலென்றும், (௨௬) (அப்படிச்செய்யாமலிருப்பது) மணலின்மேல் வீடுகட்டுவதுபோலென்றும் உபதேசித்துப் பர்வதத்தின்மேலே பண்ணின பிரசங்கத்தை முடித்தது.]

நீங்கள் (மற்றவர்களை) எண்ணுவதெப்படியோ. அப்படி நீங்களும் எண்ணப்படுவீர்கள்.

௨. அல்லாமலும், நீங்கள் அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளப்பார்கள்.

௩. ஆகையால், நீங்கள் (நியாயமின்றி, ஒருவரையும்) குற்றவாளிகளென்றெண்ணாதிருங்கள். எண்ணினால் உங்களையும் அப்படியே எண்ணுவார்கள். மேலும் நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தைப்பாராமற் சகோதரனுடைய கண்ணிலிருக்கிற சிராயைப்பார்க்கிறதென்ன?

௪. உத்திரமே உன்கண்ணிலிருக்கையில் நீ சகோதரனைநோக்கி, உன்கண்ணிலிருக்கிற சிராயை நான் எடுத்துப்போடுகிறேன் இடங்கொடு என்று நீ சொல்வதென்ன?

௫. வஞ்சகனே! முதலாவது உன்கண்ணிலிருக்கிற உத்திரத்தையெடுத்துப்போடு. பின்பு சகோதரனுடைய கண்ணிலிருக்கிற சிராயையெடுத்துப்போட நன்றாய்ப்பார்ப்பாய்.

௬. * பரிசுத்தமானதை நீங்கள் † நாய்களுக்குக்கொடுக்கக்கூடாது. அல்லாமலும் உங்கள் முத்துக்களைப்பன்றிகளுக்குப்போடக்கூடாது. அப்படிச்செய்தால் அவைகள் அந்தமுத்துக்களைத்தங்கள் கால்களால் மிதித்துப்பின்பு திரும்பிக்கொண்டு உங்களைப்பீறும். * ௧ கொரி. ௰: ௨௧. † ௨ பேது. ௨: ௨௨.

௭. வேண்டிக்கொள்ளுகிற எவனும் * வாங்கிக்கொள்ளுகிறான். தேடுகிறவன் கண்டடைகிறான். * எரே. ௨௯: ௰௨, ௰௪.

௮. தட்டுகிறவனுக்குத்திறக்கப்படும். ஆகையால், வேண்டிக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்களுக்குக்கொடுக்கப்படும். தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள். தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத்திறக்கப்படும்.

௯. உங்களிலெந்த மனிதனுனாலுந் தன்னிடத்தில் அப்பங்கேட்டுக்கொள்ளுகிற தன் மகனுக்குக்கல்லைக்கொடுப்பானோ?

௰. மீனையவன் கேட்டுக்கொண்டால் அவனுக்குப்பாம்பைக்கொடுப்பானோ?

௰௧. ஆதலாற் பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைச் செய்யும்படியறிந்திருக்க, பரமண்டலங்களிலிருக்கிற உங்கள்பிதாத்தம்மைவேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு மிகவும், அதிகமாய் * நன்மைகளைக்கொடாமலிருப்பாரா! * லூக். ௰௧: ௯, ௰௩.

௰௨. அன்றியும் மனிதர்கள் உங்களுக்குச் செய்யும்படி நீங்கள் விரும்புகிறவைகளெவைகளோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச்செய்யுங்கள். இதுவே * நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களுமாம். * உரோ. ௰௩: ௰.

௰௩. கேட்டுக்குக்கொண்டுபோகிற வாசல் விரிவாயும, வழிவிசாலமாயுமிருக்கின்றன. அதின் வழியாய்ப்பிரவேசிக்கிறவர்கள் அநேகர். * லூக். ௰௩: ௨௪.

௰௪. சீவனுக்குக்கொண்டு போகிறவாசல் மிகவும் இடுக்கமாயும், வழி * நெருக்கமாயுமிருக்கின்றன. சிலர்மாத்திரமதைக்கண்டடைகிறார்கள். ஆதலால், நீங்கள் * இடுக்கமான வாசல்வழியாய்ப்பிரவேசியுங்கள். * அப். ௰௪: ௨௨.

௰௫. மேலும் * ஆட்டைப்போல உருவும், பீறுகிற ஓநாய்களைப்போல † மனதுமுடையிவர்களாய் உங்களிடத்திற்கு வருகிற ‡ கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு, நீங்கள் இடங்கொடாமல் எச்சரிக்கையாய் இருங்கள். * உரோ. ௰௬: ௰௮. † ௨ கொரி. ௰௧: ௰௩, ௰௫. ‡ ௨ பேது. ௨: ௧.

௰௬. அவர்களுடைய கனிகளினாலே அவர்களை யறிவீர்கள். முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா?

௰௭. அப்படியே நல்லமரங்களெல்லாம் நல்லகனிகளைக்கொடுக்கும். கெட்டமரம் பொல்லாதகனிகளைக்கொடுக்கும்.

௰௮. நல்லமரம் பொல்லாதகனிகளையும், கெட்டமரம் நல்லகனிகளையுங் கொடுக்கமாட்டாது.

௰௯. * நல்லகனிகளைக்கொடாத மரங்களெல்லாம் வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்படும். * மத். ௩: ௰.

௨௰. ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை யறிவீர்கள்.

௨௧. என்னைக் * கர்த்தாவே! கர்த்தாவே! யென்றுசொல்லுகிற எவனும் பரலோக இராச்சியத்திற் பிரவேசிப்பதில்லை. பரமண்டலங்களிலேயிருக்கிற என்பிதாவினுடைய * சித்தத்தின்படிசெய்கிறவனே அதிற்பிரவேசிப்பான். * லூக். ௬: ௪௬. யாக். ௧: ௨௨. உரோ. ௨: ௰௩.

௨௨. அந்நாளிலே அநேகர் என்னைநோக்கி, ஆ, கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே நாங்கள் தீர்க்கதரிசனமுரைத்தோமல்லவோ! உமது நாமத்தினாலே பசாசுகளைத்துரத்தினோம் அல்லவோ? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச்செய்தோமல்லவோ என்பார்கள்.

௨௩. அப்பொழுது நான் அவர்களைநோக்கி, நான் ஒருக்காலுமுங்களை யறியவில்லை. அக்கிரமக்காரரே! நீங்கள் * என்னைவிட்டுப்போங்களென்று அவர்களுக்கு அறிவிப்பேன். * மத். ௨௫: ௪௧.

௨௪. ஆகையால், * நான் சொல்லியவசனங்களைக்கேட்டு, அவைகளின்படிசெய்கிறவனெவனோ, அவனைத்தன் வீட்டைக்கன்மலையின்மேற்கட்டின புத்தியுள்ள மனிதனுக்கொப்பிடுவேன். * லூக். ௬: ௪௭, ௪௯.

௨௫. அந்தவீடு கன்மலையின்மேல் அஸ்திபாரம்போட்டிருந்தபடியால், பெருமழை சொரிந்தும், பெருவெள்ளம்வந்தும், காற்றுக்கள் அடித்து அந்தவீட்டின்மேலே மோதியும் அதுவிழவில்லை.

௨௬. நான் சொல்லிய வசனங்களைக்கேட்டும் அவைகளின்படி செய்யாதிருக்கிறவனெவனோ, அவன் தன்வீட்டை மணலின் மேற்கட்டின புத்தியீனனுக்கொப்பாயிருப்பான்.

௨௭. பெருமழை சொரிந்து, பெருவெள்ளம்வந்து, காற்றுக்களும் அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியபொழுது, அதுவிழுந்து முழுவதும் இடிந்துபோயிற்றென்றார்.

௨௮. பின்பு நடந்ததென்னவெனில், இயேசுவானவர் இந்த வசனங்களைச்சொல்லிமு

டித்தபொழுது, அவர் வேதபாரகரைப் போலல்ல,

௨௯. அதிகாரமுடையவரைப்போலப்போதித்தபடியினாலே சனங்கள் அவருடைய உபதேசத்தைக்குறித்துப்பிரமித்தார்கள்.

அ அதிகாரம்.

[(௧) கிறிஸ்துக்குஷ்டரோகியைச்சுத்தமாக்கி, (௫) சேர்வைக்காரனுடைய வேலைக்காரனையும், (௰௪) பேதுருவினுடைய மாமியையும், (௰௬) மற்றநேகம் பிணியாளிகளையுங் குணமாக்கி, (௰௮) தம்மைப்பின் செல்லவேண்டிய விதத்தைக்காண்பித்து, (௨௬) கடலிலேகொந்தளிப்பை அமர்த்தி, (௨௮) பசாசு பிடித்த இரண்டுபேர்களிலிருந்து பசாசுகளைத்துரத்தி, (௩௧) அவைகள் பன்றிகளுக்குள்போக உத்தாரங் கொடுத்தது.]

அவர் மலையிலிருந்திறங்கி வந்தபொழுது, திரளான சனங்கள் அவரைப் பின்றொடர்ந்தார்கள்.

௨. அப்பொழுது, * ஒரு குஷ்டரோகி வந்து, அவருக்குமுன்பாக வணங்கி ஆண்டவரே! உமக்குச்சித்தமானால் என்னைச்சுத்தமாக்க உம்மாலாகுமென்றான். மாற். ௧: ௪௰, ௪௫.

௩. இயேசுவானவர் தமது கையை நீட்டி, அவனைத்தொட்டு எனக்குச்சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் நீங்க அவன் சுத்தமானான். * ௩ மோ. ௰௪: ௨. ழ

௪. அல்லாமலும் இயேசுவானவர் அவனை நோக்கி, நீ இதை ஒருவனுக்குஞ் சொல்லாமலிருக்க நினை. அவர்களுக்குச்சாட்சியாகும்படிக்கு, நீ * போய் ஆசாரியனுக்கு உன்னைக்காண்பித்து, மோசே கட்டளையிட்டகாணிக்கையைச்செலுத்து என்றார்.

௫. * இயேசுவானவர் கப்பர்நாகூம் பட்டினத்திற் பிரவேசித்தபின்பு நூறுபேருக்குச் சேர்வைக்காரனொருவன் அவரிடத்தில்வந்து அவரைநோக்கி, * லூக். ௭: ௧, ௰.

௬. ஆண்டவரே! என்வேலைக்காரன் திமிர்வாதமுள்ளவனாய் வீட்டிலேகிடந்து மிகவும் உபாதிப்படுகிறானென்று வேண்டிக்கொண்டான்.

௭. அவனுடனே இயேசுவானவர் நான்வந்து அவனைக்குணமாக்குவேனென்றார்.

௮. அதற்கு அந்தச்சேர்வைக்காரன்சொன்னது, ஆண்டவரே! நீரென் வீட்டுக்குட்பிரவேசிப்பதற்கு நான் பாத்திரனல்ல.

௯. அல்லாமலும் நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குட்பட்டிருக்கிற சேவகரிலொருவனைப்போவென்னப் போகிறான். மற்றொருவனை வாவென்னவருகிறான். எனக்கு அடிமையானவனை இதைச் செய்யென்னச்செய்கிறான். ஆகையால் நீர் ஒருவார்த்தைமாத்திரஞ்சொன்னால் என்வேலைக்காரன் சொஸ்தமடைவானென்றான்.

௰. இயேசுவானவர் அதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு, தமக்குப்பின்செல்லுகிறவர்களை நோக்கி, இஸ்ரவேலருக்குள்ளும் நானிப்படிப்பட்ட விசுவாசத்தைக்காணவில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன்.

௰௧. பின்னும் நான் உங்களுக்குச்சொல்லுகிறதாவது; அநேகம்பேர், * கிழக்கிலும், மேற்கிலுமிருந்துவந்து, பரலோக இராச்சியத்திலே ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுடனேகூடப்பந்தியிலிருப்பார்கள். * ஏசா. ௪௯: ௰௨.

௰௨. * இராச்சியத்தின் பிள்ளைகள் காரிருளிலே புறம்பாகத்தள்ளப்படுவார்கள். அங்கே அழுகையும், பற்கடிப்புமுண்டாயிருக்குமென்று சொன்னபின்பு, * மத். ௨௪: ௫௧.

௰௩. அவர் அந்தத்தலைவனைநோக்கி, நீ போகலாம் உன் விசுவாசத்தின்படி உனக்காகக்கடவதென்றார். அந்நாழிகையிலே அவனுடைய வேலைக்காரன் சொஸ்தமடைந்தான்.

௰௪. * இயேசுவானவர் பேதுருவின் வீட்டிலேவந்து, அவனுடையமாமி சுரமாய்க் கிடக்கிறதைக்கண்டு, * மாற். ௧: ௨௯, ௩௪.

௰௫. அவள்கையைத்தொட்டார். உடனே சுரம் அவளைவிட்டு நீங்கிற்று. அவள் எழுந்திருந்து அவர்களுக்கூழியஞ் செய்தாள்.

௰௬. அஸ்தமனமானபொழுது, பசாசுபிடித்திருந்த அநேகரை அவரிடத்துக்குக் கொண்டுவந்தார்கள். அவர் நமது பெலஈனங்களையேற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச்சுமந்தாரென்று தீர்க்கதரிசியாகிய * ஏசாயாசொன்னது நிறைவேறும்படிக்கு, * ஏசா. ௫௩: ௪, ௫.

௰௭. அவர் அந்த ஆவிகளை ஒருவார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையுங் குணமாக்கினார்.

௰௮. பின்பு, * இயேசுவானவர் அநேக சனங்கள் தம்மைச்சூழ்ந்திருக்கக்கண்டு, அக்கரைக்குப்போகக்கட்டளையிட்டார். * லூக். ௯: ௫௭, ௬௰.

௰௯. அப்பொழுது வேதபாரகனொருவன் வந்து அவரைநோக்கி, போதகரே, நீரெங்கேபோனாலும் உம்மைப்பின்பற்றுவேனென்றான்.

௨௰. அவனுடனே இயேசுவானவர் சொன்னது; நரிகளுக்குக்குழிகளும், ஆகாசத்துப்பறவைகளுக்குக்கூடுகளுமுண்டு. * மனிதனுடைய குமாரனோ தலைசாய்க்கிறதற்கு இடமில்லாதவனாய் இருக்கிறானென்றார். * ௨ கொரி. ௮: ௯. சகரி. ௯: ௯.

௨௧. பின்னும் அவருடைய சீஷர்களிலொருவன் அவரைநோக்கி, ஆண்டவரே முன்பு நான்போய் என்தகப்பனை அடக்கம்பண்ணுவதற்கு உத்தரவுதாருமென்றான்.

௨௨. அவனுடனே இயேசுவானவர் சொன்னது, * மரித்தோர் தங்களிடத்தில் மரித்தவர்களை அடக்கம்பண்ணட்டும். நீ என்னைப்பின்பற்றிவா என்றார். * எபே. ௨: ௧. ௧ தீமோ. ௫: ௬. அறி. ௩: ௧.

௨௩. பின்பு * அவர் படவில் ஏறுகிறபொழுது சீஷர்கள் அவர் பின்சென்று ஏறினார்கள். * மாற். ௪: ௩௫, ௪௧. லூக். ௮: ௨௨, ௨௫.

௨௪. அப்பொழுது படவு அலைகளினாலே மூடப்படத்தக்கதாய்க்கடலிலே பெருங்காற்றுண்டாயிற்று. அவரோ நித்திரைபண்ணினார்.

௨௫. அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து, அவரை * யெழுப்பி ஆண்டவரே, எங்களை இரட்சிக்கவேண்டும். கெட்டுப்போகிறோமேயென்றார்கள். * சங். ௫௫: ௨௩ ௪௪: ௨௪

௨௬. அவர்களை அவர்நோக்கி, ஆ, அற்பவிசுவாசிகளே, ஏன் பயப்படுகிறீர்களென்றுசொல்லி, எழுந்து காற்றுக்களையும், கடலையும் அதட்டினார். உடனே மிகுந்த அமைதலுண்டாயிற்று.

௨௭. அவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டுக் காற்றுக்களும், கடலும் இவருக்குக்கீழ்ப்படியத்தக்கதாக இவர் எப்படிப்பட்டவரோவென்று சொன்னார்கள்.

௨௮. பின்பு, * அவர் அக்கரையிலே கெர்கேசேனர் தேசத்திலே சேர்ந்தார். அவ்வழியாய் மற்றொருவரும் நடவாமலிருக்கத்தக்கதாக மிகுந்த துஷ்டராய்ப்பசாசுபிடித்த மனிதர்கள் இரண்டுபேர் பிரேதக்கல்லறைகளிலிருந்து புறப்பட்டு அவருக்கு எதிராகவந்து. * மாற். ௫: ௧, ௨௰: லூக். ௮: ௨௬, ௩௯.

௨௯. ஆ, இயேசுவே, பராபரனுடையகுமாரனே, எங்களுக்கும், உமக்குமென்ன? * காலம்வருமுன்னமே எங்களை வேதனைப்படுத்தும்படிக்கு இங்கே வந்தீரோவென்றுகூப்பிட்டார்கள். * ௨ பேது. ௨: ௪.

௩௰. அல்லாமலும், அவர்களுக்குச்சற்றேதூரமாய் அநேகம் பன்றிகள் கூட்டமாய் மேய்ந்துகொண்டிருந்தன.

௩௧. அப்பொழுது பசாசுகள் நீர் எங்களைத்துரத்துவீரானால், நாங்கள் அந்தப் பன்றிக்கூட்டத்திற் பிரவேசிக்கும்படிக்கு உத்தரவுகொடுமென்று, அவரை வேண்டிக்கொண்டார்கள்.

௩௨. போங்களென்று; அவர்களுக்குச் சொன்னார். உடனே அவர்கள் புறப்பட்டுப் பன்றிக்கூட்டத்திற் பிரவேசித்தார்கள். அப்பொழுது பன்றிகளெல்லாம் உயர்ந்தமேட்டிலிருந்து கடலிற்பாய்ந்து சலத்திலே மாண்டுபோயின.

௩௩. அவைகளை மேய்த்தவர்களோ ஓடிப் பட்டினத்திற்சென்று, எல்லாவற்றையும் பசாசுபிடித்திருந்தவர்களுடைய சங்கதியையும் அறிவித்தார்கள்.

௩௪. அப்பொழுது பட்டினத்தாரெல்லாரும் இயேசுவுக்கு எதிராகப்புறப்பட்டு, அவரைக்கண்டு, தங்கள் எல்லைகளைவிட்டுப் போகும்படிக்கு, அவரை வேண்டிக்கொண்டார்கள்.

௯ அதிகாரம்.

[(௨) கிறிஸ்து, திமிர்வாதக்காரனொருவனைச்சொஸ்தமாக்கி, (௯) ஆயத்துறையிலிருந்த மத்தேயுவை யழைத்து, (௰) ஆயக்காரரோடும், பாவிகளோடும்புசித்து, (௰௪) தம்முடைய சீஷர்கள் உபவாசம்பண்ணாததைக்குறித்து நியாயஞ்சொல்லி, (௨௰) பெரும்பாடுள்ள ஒருஸ்திரீயை ஆரோக்கியமாக்கி, (௨௫) யாவீருடைய மகளை மரணத்தினின்றெழுப்பி, (௨௭) இரண்டுகுருடருக்குப்பார்வைகொடுத்து, (௨௮) பசாசுபிடித்த ஒரு ஊமையனைக்குணமாக்கி, ௩௬) கும்புகள்மேல் மனதுருகினது.]

அப்பொழுது, * அவர் படவிலேறி இக்கரைப்பட்டு, தமது பட்டினத்தில் வந்தார். * மாற். ௨: ௧, ௰௨. லூக். ௫: ௰௭, ௨௬.

௨. அங்கேபடுக்கையின்மேற்கிடந்த திமிர்வாதக்காரனை யவரிடத்துக்குக்கொண்டுவந்தார்கள். இயேசுவானவர் அவர்களுடைய விசுவாசத்தைக்கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி, மகனே, திடமாயிரு. உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டனவென்றார்.

௩. அங்கேயிருந்த வேதபாரகரிற் சிலர் இவன் தேவதூஷணஞ்சொல்லுகிறானென்று எண்ணிக்கொண்டார்கள்.

௪. இயேசுவானவர் அவர்களுடைய நினைவுகளையறிந்து, நீங்கள் உங்களிருதயங்களிற் பொல்லாங்கானவைகளை நினைக்கிறதென்ன?

௫. உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டனவென்று சொல்லுகிறதோ, எழுந்திருந்து நடவென்று சொல்லுகிறதோ,

௬. எது எளிது? மனிதனுடையகுமாரன் பூமியிற் பாவங்களை மன்னிக்கிறதற்கு அதிகாரமுடையவனென்பதை, நீங்கள் அறியும்படிக்கு அவர் திமிர்வாதக்காரனைநோக்கி, நீயெழுந்திருந்து, * உன்படுக்கையையெடுத்துக்கொண்டு உன்வீட்டுக்குப்போவென்றார். * யோவா. ௫: ௮.

௭. உடனே அவனெழுந்து தன் வீட்டுக்குப்போனான்.

௮. அதைக்கண்ட சனங்கள் ஆச்சரியப்

பட்டு, மனிதருக்கு இப்படிப்பட்ட அதி
காரத்தைக்கொடுத்த பராபரனைப்புகழ்ந்
தார்கள்.
௯. இயேசுவானவர் அவ்விடம்விட்டுப்புறப்
பட்டுப்போகையில், * ஆயத்துறையிலு
ட்க்காந்திருந்த ஒரு மனிதனைக்கண்டார்.
அவனுக்கு மத்தேயுவென்றுபேர். அவனை
அவர் நோக்கி, என்னைப்பின்பற்றிவாவென்
றார். அவனெழுந்திருந்து அவர் பின்சென்
றான். * மாற். ௨: ௰௪, ௨௨. லூக். ௫:
௨௭, ௩௰.
௰. பின்பு அவர் வீட்டிலேபோசனபந்தியி
ருக்கையில், அநேகம் ஆயக்காரரும், பாவி
களும்வந்து இயேசுவுடனேயும், அவருடை
ய சீஷர்களுடனேயுங்கூடப்பந்தியிருந்தார்
கள்.
௰௧. பரிசேயர் அதைக்கண்டு அவருடை
ய சீஷர்களைநோக்கி, என்னத்தினாலே உங்
கள் போதகர் ஆயக்காரரோடும், பாவிக
ளோடும்போசனம்பண்ணுகிறாரென்றார்கள்.
௰௨. இயேசுவானவர் அதைக்கேட்டு அவர்
களைநோக்கி, சொஸ்தமுள்ளவர்களுக்கு வ
யித்தியன்வேண்டுவதில்லை. வியாதியுள்ளவர்
களுக்கே அவன்வேண்டும்.
௰௩. மேலும், * பலியிலும் இரக்கத்தை
விரும்புகிறேனென்கிற, (வாக்கியத்தின்கருத்
தை) நீங்கள்போய்ப்படித்துக்கொள்ளுங்
கள். அந்தப்படி நான் நீதிமான்களையல்
ல, † பாவிகளையே மனந்திருப்புதற்கு அ
ழைக்க வந்தேனென்றார். * ஓசெ. ௬: ௬.
மிகா. ௬: ௭, ௮. † ௧ தீமோ. ௧: ௰௫.
௰௪. அந்நேரத்திலே யோவானுடைய சீ
ஷர்கள் அவரிடத்தில் வந்து, நாங்களும் பரி
சேயரும் அநேகந்தரம் உபவாசம்பண்ணி
யிருக்கிறோம். உம்முடைய சீஷர்களோ உப
வாசம் பண்ணாமலிருக்கிறார்கள். அதேன்
என்றார்கள்.
௰௫. இயேசுவானவர் அவர்களுக்குச்
சொன்னது; கலியாணத்துக்கு வந்த மனி
தர்கள் * மணவாளன் தங்களோடிருக்கை
யில் துயரப்படுவார்களா? மணவாளன் அ
வர்களை விட்டு, நீங்கப்படுங்காலம்வரும்.
அப்பொழுது அவர்கள் உபவாசம்பண்ணு
வார்கள். * யோவா. ௩: ௨௯.
௰௬. ஒருவனுங் கோடித்துண்டைப்பழை
ய வஸ்திரத்தின்மேற் போட்டிணைக்கமாட்
டான். இணைத்தால், அதிலிணைத்த துண்டு
அவ்வஸ்திரத்திலெடுபட்டுப்போக அதிக
பொத்தலுண்டாகும்.
௰௭. மேலுந் திராட்சப்பழங்களின் புதிய
இரசத்தைப்பழைய துருத்திகளில் வார்க்
கமாட்டார்கள். வார்த்தால், துருத்திகள்
கிழிந்துபோகும். இரசமுஞ் சிந்திப்போ
கும். துருத்திகளுங் கெட்டுப்போகும். பு
திய இரசத்தைப்புதிய துருத்திகளில் வார்த்
து வைத்தால், அப்பொழுது இரண்டும் பத்
திரப்பட்டிருக்குமென்றார்.
௰௮. அவரிவைகளை அவர்களோடே பேசு
கையில், * தலைவனொருவன்வந்து வணக்க
மாய் விழுந்து, அவரைநோக்கி, இந்நேரத்
திலே என் மகள் இறந்துபோனாள். அவள்
உயிர் அடையும்படிக்கு நீர் வந்து, அவள்
மேல் உமது கையைவையும். அப்பொழு
து, பிழைப்பாளென்றான். * மாற். ௫:
௨௨, ௪௩. லூக். ௮: ௪௧, ௫௬.
௰௯. இயேசுவானவர் எழுந்திருந்து தம்மு
டைய சீஷர்களோடேகூட அவன் பின்னே
போனார்.
௨௰. அவர் போகையிற் பன்னிரண்டுவரு
ஷமாய், பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீவந்து,
௨௧. இவருடைய * வஸ்திரத்தைத்தொட்
டமாத்திரமே சொஸ்தம் அடையலாமென்
று தன் உள்ளத்திலே எண்ணி, அவருக்குப்
பின்னாலேபோய், அவருடைய வஸ்திரத்
தின் ஓரத்தைத்தொட்டாள். * மத்தே.
௰௪: ௩௬.
௨௨. அப்பொழுது, இயேசுவானவர் தி
ரும்பி அவளைநோக்கி, மகளே! திடமாயிரு.
உன் விசுவாசத்தினாலே உனக்குச்சுகமுண்
டாயிற்றென்றார். அந்நேரமே அந்த ஸ்தி
ரீ சொஸ்தமடைந்தாள்.
௨௩. பிற்பு இயேசுவானவர் அத்தலைவனு
டைய வீட்டிற்சேர்ந்து தாரை யூதுகிறவர்
களையும், இரைகிற சனங்களையுங்கண்டு,
௨௪. அவர்களைநோக்கி, வெளியே போங்
கள். இந்தப்பெண் இறந்துபோகவில்லை.
* நித்திரைபண்ணுகிறாளென்றார். அவர்கள்
அவரைநோக்கி நகைத்தார்கள். * யோவா.
௰௧: ௰௧.
௨௫. சனங்கள் வெளியே துரத்தப்பட்ட
பின்பு, அவர் உள்ளே பிரவேசித்து, அந்தப்
பெண்ணின் கையைப்பிடித்தார். உடனே
அவள் எழுந்திருந்தாள்.
௨௬. அந்தச்செய்கையினாலே அவருடை
ய கீர்த்தி, அத்தேசத்திலெங்கும் பிரபலமா
யிற்று
௨௭. இயேசுவானவர் அவ்விடம்விட்டுப்
போகையில், குருடரிருவர் அவர்பின்னே
சென்று, ஆ, தாவீதின் குமாரனே! எங்க
ளுக்கிரங்குமென்று கூப்பிட்டார்கள்.
௨௮. அவர் வீட்டிலேவந்தபின்பு, அந்தக்
குருடர் அவரிடத்திற்கு வந்தார்கள். இயே
சுவானவர் அவர்களைநோக்கி, இப்படிச்செய்
ய எனக்கு வல்லமையுண்டென்று விசுவா
சிக்கிறீர்களோவென்றார். ஆண்டவரே! வி
சுவாசிக்கிறோமென்றார்கள்.
௨௯. அப்பொழுது, அவர் அவர்களுடை
ய கண்களைத்தொட்டு, * உங்கள் விசுவாசத்
தின்படி உங்களுக்கு ஆகக்கடவதென்றார்.
* மத்தே. ௮: ௰௩.

௩௰. உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டன. பின்பு இயேசுவானவர் அவர்களை நோக்கி, நீங்களிதை ஒருவனுக்கும் அறிவிக்கவேண்டாமென்று கட்டளையிட்டார்.

௩௧. அவர்களோ புறப்பட்டு, அந்தேசத்திலெங்கும் அவருடைய கீர்த்தியைப்பிரசித்தம்பண்ணினார்கள்.

௩௨. அவர்கள் புறப்பட்டுப்போகையில், பசாசு பிடித்திருந்த ஊமையனை அவரிடத்துக்குக்கொண்டுவந்தார்கள்.

௩௩. பசாசு துரத்தப்பட்டபின்பு ஊமையன் பேசினான். சனங்கள் ஆச்சரியப்பட்டு, இப்படியாக இஸ்ரவேலருக்குள்ளே ஒருக்காலுங் காணப்பட்டதில்லையென்றார்கள்.

௩௪. பரிசேயர் இவன் * பசாசுகளுடைய தலைவனாலே பசாசுகளைத் துரத்துகிறானென்றார்கள். * மத்தே. ௰௨: ௨௪.

௩௫. பின்பு இயேசுவானவர் சகல பட்டணங்களையும், கிராமங்களையுஞ் சுற்றி நடந்து செப ஆலயங்களிலே போதகம்பண்ணி, இராச்சியத்தைக்குறித்து, சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, சனங்களுக்குண்டான எந்தவியாதியையும், எந்த நோயையும் நீக்கி, அவர்களைக்குணமாக்கினார்.

௩௬. அப்பொழுது, அவர் மிகுந்த சனங்களைப்பார்த்து, * மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல அவர்கள்சோர்ந்துபோய்ச்சிதறப்பட்டவர்களாயிருந்தபடியால்; அவர்களைக்குறித்து மிகவுமனதுருகி, தம்முடைய சீஷர்களைநோக்கி, † அறுப்பு மிகுதியாகவே யிருக்கின்றது. வேலையாள்கள் சிலர் மாத்திரமிருக்கிறார்கள். * சகரி. ௰: ௨. மாற். ௬: ௩௪. † லூக். ௰: ௩. யோவா. ௪: ௩௫.

௩௭. ஆதலால், அறுப்புக்கு எசமான் தமது அறுப்புக்கு வேலையாள்களை அனுப்ப வேண்டுமென்று, அவரை வேண்டிக்கொள்ளுங்களென்றார்.

௰ அதிகாரம்.

[(௧) கிறிஸ்துதம்முடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கும், அற்புதங்களைச் செய்யத்தக்க வல்லமையை யளித்து, (௫) அவர்களுக்கு அதிகாரங்கொடுத்து, அவர்களைப் படிப்பித்து, (௰௬) அவர்களுக்கு வரப்போகிற துன்பங்களுக்கடுத்த ஆறுதலைச்சொல்லி, (௪௰) அவர்களை யேற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு, ஆசீர்வாதத்தை வாக்குத்தத்தம்பண்ணி, அவர்களை அனுப்பினது.]

அப்பொழுது, * அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையுந் தம்மிடத்தில் அழைத்து அசுத்தமான ஆவிகளைத்துரத்தவும், சகலவிதமான வியாதிகளையும், நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். * மாற். ௬: ௭ ௰௩: ௰. லூக். ௯: ௧, ௫.

௨. அந்தப்பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் * நாமங்களென்னவெனில்; முந்தினவனாகிய பேதுருவென்னப்பட்ட சீமோன், அவனுடைய சகோதரனாகிய அந்திரேயா, செபெதேயுவின் குமாரன் யாக்கோபு, அவனுடைய சகோதரன் யோவான், * அப். ௧: ௰௩.

௩. பிலிப்பு, பர்த்தொலோமேயு, தோமா, ஆயக்காரனான மத்தேயு, அல்பேயின் குமாரன் யாக்கோபு, ததேயுவென்னும் மறுநாமமுள்ள இலெபேயு,

௪ கானானியனாகிய சீமோன், இயேசுவைக்காட்டிக்கொடுத்தவனான யூதாஸ்காரியோத்து என்னப்பட்டவர்களே

௫. இயேசுவானவர் அந்தப்பன்னிருவரையும் அனுப்ப அவர்களுக்குக்கட்டளையிட்டுச்சொன்னதாவது; * நீங்கள் புறத்தேசத்தாரிடத்துக்குப்போகாமலும், * அப். ௰௩: ௪௬.

௬. * சாமாரியருடைய பட்டினங்களிற் பிரவேசியாமலுங் காணாமற்போன ஆடுகளாயிருக்கிற, † இஸ்ரவேல்குடும்பத்தாரிடத்துக்குப்புறப்பட்டுப்போய், * உ இரா. ௰௭: ௨௪. † மத். ௰௫: ௨௪.

௭. * பரலோக இராச்சியஞ் சமீபமாய் வந்ததென்றுகூறி, * மத். ௩: ௨. மத். ௪: ௰௭.

௮. வியாதிப்பட்டவர்களைக்குணமாக்கி, குஷ்டரோகிகளைச்சுத்தம்பண்ணி, மரித்தோரை யெழுப்பி, பசாசுகளைத்துரத்துங்கள் நீங்கள், * இலவசமாய்ப்பெற்றுக்கொண்டீர்கள். இலவசமாய்க்கொடுங்கள். * அப். ௮: ௰௮, ௨௰. ௧ பேது ௫: ௨.

௯. நீங்கள் கச்சைகளில், * பொன்னையாவது, வெள்ளியையாவது, செம்பையாவது, வழிக்காகப்பையையாவது, இரண்டங்கிகளையாவது, பாத இரட்சைகளையாவது, தடியையாவது உங்களுக்காகத்தேடிவைக்க வேண்டாம். * லூக். ௨௨: ௩௫, ௩௬.

௰. * வேலைசெய்கிறவன் தனக்குவேண்டிய ஆகாரத்தைப்பெறும்படிக்குப்பாத்திரவானாயிருக்கிறானே. * லூக். ௰: ௭. ௧ தீ. ௫: ௰௭, ௰௮.

௰௧. அல்லாமலும் எந்தப்பட்டினத்திலும், கிராமத்திலும் நீங்கள் பிரவேசிக்கும்பொழுது, அதிலே யிருக்கிற பாத்திரவான் இன்னானென்று விசாரித்துக்கொண்டு, நீங்கள் புறப்படுமளவும் அவனிடத்திலிருங்கள்.

௰௨. அந்த வீட்டுக்குட்பிரவேசிக்கிறபொழுது, நீங்கள் அதிலிருக்கிறவர்களை வாழ்த்திக்கொள்ளுங்கள்.

௰௩. அந்தக்குடும்பத்தார் பாத்திரவான்களாயிருந்தால், நீங்கள்அவர்களுக்குச்சொன்

ன சமாதானம் அவர்களைச்சேரக்கடவது.
பாத்திரவான்களல்லாதிருந்தால், அந்த
வாழ்த்துதல் உங்களிடமாய்த்திரும்பக்கட
வது.

௰௪. எங்கேயாகிலும் அவர்கள் உங்களை
அங்கிகரித்துக்கொள்ளாமலும், உங்கள்வச
னங்களுக்குச்செவிகொடாமலும்இருந்தால்,
நீங்கள் அந்தவீட்டையாவது, பட்டினத்
தையாவது விட்டுப்புறப்படுகையில், உங்
கள் கால்களிலுள்ள தூளை உதறிப்போ
டுங்கள்.

௰௫. * நியாத்தீர்ப்பு நாளிலே சோதோங்
கொமொரு தேசத்தைப்பார்க்கிலும், அந்
தப்பட்டினத்துக்கு அதிகதண்டனையிடைக்
குமென்று மெய்யாகவே உங்களுக்குச்
சொல்லுகிறேன். * மத். ௰௧: ௨௨, ௨௪.

௰௬. பாருங்கள் * ஆடுகளை ஓநாய்களுக்
குள்ளே (அனுப்புகிறதுபோல) உங்களை
அனுப்புகிறேன். ஆகையால், நீங்கள் பாம்
புகளைப்போல விவேகமுள்ளவர்களாயும்,
புறுக்களைப்போலக்கபடம் இல்லாதவர்களா
யுமிருக்கவேண்டும். * ௧ சாமு. ௨௪: ௰௨.
உரோ. ௰௬: ௰௬.

௰௭. அப்படியே நீங்கள் மனிதர்களிடத்
திற் சாவதானமாயிருங்கள். என்னத்தினா
லெனில் உங்களைப்பெரியசங்கத்தாருக்கு *
ஒப்புக்கொடுத்து, தங்கள் ஆலயங்களிலே
உங்களை வாரினால் அடிப்பார்கள். * மத்.
௨௪: ௯.

௰௮. என்னிமித்தம் நீங்கள் துரைகளிடத்
துக்கும், இராசாக்களிடத்துக்குங்கொண்
டுபோகப்பட்டு, அவர்களுக்கும், புறத்தே
சத்தாருக்கும் முன்பாகச்சாட்சிகளாயிருப்
பீர்கள்.

௰௯. அவர்கள் உங்களை ஒப்புக்கொடுக்
கும்பொழுது, நீங்கள் பேசவேண்டுவது
அந்நேரத்திலே உங்களுக்கு அருளிச்செய்
யப்படும். ஆகையால், * எப்படி எதைப்
பேசுவோமென்று கவலைப்படாதிருங்கள்.
*மாற். ௰௩: ௰௧.

௨௰. பேசுகிறவர்கள் நீங்களல்ல, * உங்
கள் பிதாவின் ஆவியானவர் உங்களிலிருந்
துபேசுகிறவர். * ௨ மோ. ௪: ௰௧, ௰௨.

௨௧. அல்லாமலும், சகோதரன் தன் ச
கோதரனையும், தகப்பன் தன் பிள்ளையை
யும் மரணத்துக்கொப்புக்கொடுப்பார்கள்.
தாய் தகப்பன்மாரைப்பிள்ளைகள் விரோதித்
து, அவர்கள் மரணம் அடையும்படிக்குச்
செய்விப்பார்கள்.

௨௨. என்னுடைய நாமத்தினிமித்தம் நீங்
கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்.
ஆகிலும், * முடிவுபரியந்தம் நிலைத்திருக்கி
றவனே இரட்சிக்கப்படுவான். * அபி. ௨:௰.

௨௩. அல்லாமலும், மனிதனுடைய குமா
ரன் வரும்வரைக்கும் நீங்கள் இஸ்ரவேலரு
டைய பட்டினங்களையெல்லாங் கடந்து
போய் வரமாட்டீர்களென்று மெய்யாகவே
உங்களுக்குச்சொல்லுகிறேன். ஆதலால்,
ஒரு பட்டினத்திலே உங்களைத்துன்பப்படுத்
தினால் மறுபட்டினத்துக்கோடிப்போங்கள்.

௨௪. சீஷனானவன் போதகனிலும், அடி
மைப்பட்டவன் தன் எசமானிலும் மேற்பட்
டவர்களல்ல.

௨௫. சீஷன் தன் போதகனைப்போலவும்,
அடிமைப்பட்டவன் தன் எசமானைப்போ
லவுமிருக்கிறது அவர்களுக்குப்போதுமே.
* வீட்டெசமானைப்பெயேல்செபூலென்று
அவர்கள் சொல்வார்களானால், அவருடைய
வீட்டாரை அதிகமாய் அப்படிச்சொல்
வார்களல்லவா? ஆதலால், அவர்களுக்குப்
பயப்படாதிருப்பீர்களாக. * மத். ௯: ௩௪.

௨௬. வெளியாக்கப்படாத மறைபொரு
ளில்லை, அறியப்படாத இரகசியமுமில்லை.

௨௭. நான் உங்களுக்கு இருளிலேசொல்
லுகிறதை நீங்கள் வெளிச்சத்திற்சொல்லுங்
கள். நீங்கள் இரகசியமாய்க்கேட்கிறதை
மேடைகளிலிருந்து பிரசித்தஞ்செய்யுங்கள்.

௨௮. அல்லாமலும் ஆத்துமாவைக்கொலை
செய்யத்திராணியில்லாமற் சரீரத்தைமாத்
திரங் கொலைசெய்கிறவர்களுக்கு, நீங்கள்
பயப்படவேண்டாம். ஆத்துமாவையும்,
சரீரத்தையும் நரகத்திலே கெடுக்கவல்லவ
ருக்குப்பயப்படுங்கள்.

௨௯. ஒரு காசுக்கு இரண்டு அடைக்க
லான் குருவிகளை விற்கிறார்களல்லவோ? ஆகி
லும், உங்கள் பிதாவின் உத்தரவில்லாமல்
அவைகளில் ஒன்றுந் தரையிலே விழாது.

௩௰. அல்லாமலும், உங்கள் தலையின் மயி
ரெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றது.

௩௧. ஆதலாற் பயப்படாதிருங்கள். அநே
கம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கி
லும் நீங்கள் மேன்மையாயிருக்கிறீர்கள்.

௩௨. அப்படியிருக்க, * மனிதர்களுக்கு
முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவ
னெவனோ, அவனை நானும் பரமண்டலங்
களிலிருக்கிற என் பிதாமுன்பாக அறிக்கை
பண்ணுவேன். * அபி. ௩: ௫.

௩௩. மனிதர்முன்பாக * என்னை மறுதலிக்
கிறவனெவனோ, அவனை நானும் பரமண்ட
லங்களிலிருக்கிற என் பிதாவுக்கு முன்பாக
மறுதலிப்பேன். * மாற். ௮: ௩௮. ௨
திமோ. ௨: ௰௨.

௩௪. பூமியின்மேற் * சமாதானத்தை வ
ரப்பண்ண வந்தேனென்றெண்ணிக்கொள்
ளாதிருங்கள். சமாதானத்தையல்ல சண்
டையை வரப்பண்ண வந்தேன். * லூக்.
௰௨: ௪௯, ௫௩.

௩௫. எப்படியெனில், குமாரன் தன் தகப்
பனையும், மகள் தன் தாயையும், மருமகள்

தன் * மாமியையும்விட்டுப்பிரிந்துபோகப் பண்ணவந்தேன் * மிகா. ௭: ௬.

௩௬. அப்படி ஒரு மனிதனுடைய குடும்பத்தாரே அவனுக்குச்சத்துருக்களாயிருப்பார்கள்.

௩௭. * என்னிலுந் தகப்பனையாவது, தாயையாவது அதிகமாய்ச்சிநேகிக்கிறவன் எனக்குப்பாத்திரனல்ல. என்னிலும் மகனையாவது, மகளையாவது அதிகமாய்ச்சிநேகிக்கிறவன் எனக்குப்பாத்திரனல்ல. * லூக். ௰௪: ௨௬.

௩௮. அல்லாமலுந் தன் சிலுவையை யெடுத்துக்கொண்டு, என்பின்னே செல்லாதவன் எனக்குப்பாத்திரனல்ல.

௩௯. தன் ஜீவனைக்காக்கிறவன் அதையிழந்துபோவான். என்னிமித்தந் தன் ஜீவனையிழந்துபோகிறவன் அதைக்காப்பான்.

௪௰ உங்களைச்சேர்த்துக்கொள்ளுகிறவன் * என்னைச்சேர்த்துக்கொள்ளுகிறான். என்னைச்சேர்த்துக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரைச் சேர்த்துக்கொள்ளுகிறான். * யோவா. ௰௩: ௨௰.

௪௧. தீர்க்கதரிசியென்கிற நாமத்தினிமித்தம் ஒரு தீர்க்கதரிசியை யேற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்குரிய பலனை யடைவான். நீதிமானென்கிற நாமத்தினிமித்தம் நீதிமானை யேற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுக்குரிய பலனை யடைவான்.

௪௨. * இந்தச்சிறியவர்களில் ஒருவன் சீஷனாயிருக்கிறதினிமித்தம் அவனுக்கு ஒருகலயத் தண்ணீர்மாத்திரந் தாகத்துக்குக்கொடுக்கிறவன், தன் பலனை யிழந்துபோகானென்று மெய்யாய் உங்களுக்குச்சொல்லுகிறேனென்றார். * மத். ௨௫: ௪௰. மாற். ௯: ௪௧. எபிரே. ௬: ௰.

௰௧ அதிகாரம்.

[(௨.) யோவான் தன்னுடைய சீஷர்களைக் கிறிஸ்துவண்டைக்கு அனுப்பினது. (௭) யோவானைக்குறித்து, கிறிஸ்துப்பகர்ந்த சாட்சி. (௰௮) யோவானையும், கிறிஸ்துவையுங் குறித்த சனங்களுடைய தாற்பரியம். (௨௰) கோருசின், பெத்சாயிதா, கப்பர்நாகூம் என்ற பட்டணங்களுடைய நன்றியறியாமையையும், குணப்படாமையையுங் குறித்து, கிறிஸ்துக்கண்டித்து, (௨௫) சுவிசேஷத்தைப் பேதைமையுள்ளவர்களுக்கு அறிவிக்கிறதினாலே தோன்றுகிற தம்முடைய பிதாவின் ஞானத்தைப்புகழ்ந்து, (௨௮) பாவச்சுமையை உணர்ந்தவர்கள் யாவரையுந் தம்மிடத்தில்வரும்படி அழைத்தது.]

இயேசுவானவர் தம்முடைய பன்னிரண்டு சீஷருக்குங் கட்டளைகொடுத்து முடித்தபின்பு, அவர்களுடைய பட்டிணங்களில் உபதேசம்பண்ணி, பிரசங்கிக்கும்படிக்கு அவ்விடம் விட்டுப்புறப்பட்டார்.

௨. அந்தருணத்திலே காவலிலிருந்த, * யோவான் கிறிஸ்துவின் கிரியைகளைக்கேள்விப்பட்டு, தன் சீஷரில் இரண்டுபேரை யழைத்து, * லூக். ௭: ௰௮, ௩௫.

௩. நீங்கள்போய் அவரைநோக்கி, * வருகிறவர் நீர்தாமோ, அல்லது வேறொருவர் வரக்காத்திருக்கவேண்டுமோவென்று கேளுங்களென்று சொன்னான். * ௫ மோ. ௰௮: ௰௫.

௪. அவர்கள் அப்படியே வந்து, கேட்டபொழுது இயேசுவானவர் அவர்களுக்கு மாறுத்தரமாகச்சொன்னதாவது; நீங்கள் கேட்டுங் கண்டுமிருக்கிறவைகளை யோவானுக்குப்போய் அறிவியுங்கள்.

௫. என்னவெனில், என்னாலே * குருடர் பார்வை யடைகிறார்கள். சப்பாணிகள் நடக்கிறார்கள். குஷ்டரோகிகள் சுத்தமடைகிறார்கள். செவிடர் கேட்கிறார்கள். மரித்தோர் எழுந்திருக்கிறார்கள். † எளியவர்களுக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகின்றது. * ஏசா. ௩௫: ௫, ௬. † ஏசா. ௬௧: ௧.

௬. அல்லாமலும் என்னைக்குறித்து, இலச்சையடையாதிருக்கிறவன் பாக்கியவானென்றுசொல்லி, அவர்களை யனுப்பினார்.

௭. அவர்கள் போனபின்பு, இயேசுவானவர் சனங்களைநோக்கி, யோவானைக்குறித்துச் சொன்னதாவது; நீங்கள் வனாந்தரத்திலே எதைப்பார்க்கப்புறப்பட்டீர்கள். காற்றினால் அடித்தசைக்கப்படுகிற நாணலையோ எதைப்பார்க்கப்புறப்பட்டீர்கள்!

௮. அல்லது, மெல்லிய வஸ்திரங்களைத்தரித்திருக்கிற மனிதனையோ, மெல்லிய வஸ்திரங்களை யுடுத்திருக்கிறவர்கள் அரசர் மாளிகைகளிலிருக்கிறார்கள்.

௯. அல்லது எதைப்பார்க்கப்புறப்பட்டீர்கள். தீர்க்கதரிசியையோ? ஆம் தீர்க்கதரிசியிலும், அதிக மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச்சொல்லுகிறேன்.

௰. அதெப்படியெனில், * இதோ, நான் என்னுடைய தூதனை உமக்குமுன்பாக அனுப்புகிறேன். அவன் உமக்குமுன்னே உம்முடைய மார்க்கத்தைச்செம்மைபண்ணுவானென்று ஒருவனைக்குறித்து, எழுதியிருக்கின்றதே அவனிவன்தான். * மல்கி. ௩: ௧.

௰௧. அல்லாமலும், ஸ்திரீகளிடத்திற் பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனிலும் பெரியவனொருவனும் எழும்பவில்லையென்று, மெய்யாய் உங்களுக்குச்சொல்லுகிறேன். ஆகிலும் பரலோக இராச்சியத்திலே சிறியவனானவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறான்.

௰௨. அல்லாமலும் யோவான்ஸ்நானன் தோன்றினகாலமுதற்கொண்டு இதுவரைக்

கும் பரலோக இராச்சியம் பலவந்தப்படுகின்றது. பலவந்தம்பண்ணுகிறவர்கள் அதைப்பிடித்துக்கொள்ளுகிறார்கள்.

௰௩. நியாயப்பிரமாணமுந் தீர்க்கதரிசிகள் யாவரும் அதை யோவான்வரைக்குந் தீர்க்கதரிசனமாய் அறிவித்தார்கள்.

௰௪. நீங்கள் ஒத்துக்கொள்ள மனதிருந்தால், * வருபவனாகிய எலியா இவன்தான். * மத். ௰௭: ௰௨. மல்கி. ௪: ௫.

௰௫. கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.

௰௬. * இந்தச்சந்ததியை ஆருக்கு நிகர் சொல்வேன். சந்தைகளில் உளுக்காந்து தங்கள் தோழரைநோக்கி, * லூக். ௭: ௩௧, ௩௫.

௰௭. உங்களுக்காக ஊதினோம் நீங்கள் கூத்தாடவேயில்லை. உங்களுக்காகப்புலம்பினோம் நீங்கள் மார்பில் அடிக்கவேயில்லையென்றுசொல்லிக்கூப்பிடுகிற பிள்ளைகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

௰௮. எப்படியென்றால், யோவான்வந்து * போசனபானம் பண்ணாமலிருந்தான் பசாசைக்கொண்டிருக்கிறான் என்றார்கள். * மத். ௩: ௪.

௰௯. மனிதனுடைய குமாரன் வந்து * போசனபானம் பண்ணுகிறான். இதோ, பெருந்தீனிக்காரனென்றும், குடிக்கிறவனென்றும், ஆயக்காரருக்கும், பாவிகளுக்குஞ் சிநேகிதனென்றுஞ் சொல்லுகிறார்கள். ஆனாலும், ஞானமானது தன்பிள்ளைகளாலே நீதியாய் எண்ணப்படுமென்றார். * மத். ௯: ௰, ௰௧.

௨௰. அப்பொழுது அவர் தமது பலத்த செய்கைகளில் அநேகங்களைக்கண்டபட்டினத்தார் மனந்திரும்பாமலிருந்தபடியினாலே, அவர்களைக்கடிந்துகொள்ளத்தொடங்கிச்சொன்னதாவது;

௨௧. * ஐயோ! கோராசின் பட்டினத்தாரே உங்களுக்குவேதனைவரும். ஐயோ! பெத்சாயிதாப்பட்டினத்தாரே உங்களுக்கும் வேதனைவரும். உங்களுக்குள்ளே நடந்த பலத்த செய்கைகள் தீரு சீதோன் பட்டினத்தாருக்குள்ளே நடந்திருந்தால், அவர்கள் சீக்கிரமாய் இரட்டையுடுத்தி, சாம்பலில் உளுக்காந்து மனந்திரும்பியிருப்பார்கள். * லூக். ௰: ௰௩.

௨௨. ஆதலால், நியாயத்தீர்ப்புநாளிலே அவர்களைப்பார்க்கிலும், நீங்களே அதிக தண்டிப்பை அடைவீர்களென்று உங்களுக்குச்சொல்லுகிறேன்.

௨௩. வானபரியந்தமுயர்ந்த கப்பர்நாகூம் பட்டினத்தாரே ஐயோ! பாதாளபரியந்தந் தாழ்த்தப்படுவீர்கள். உங்களுக்குள்ளே நடந்த பலத்தசெய்கைகள் சோதோம் பட்டினத்தாருக்குள்ளே நடந்திருந்தால், அவர்களுடைய பட்டினம் இந்நாள்வரைக்குமிருக்குமே.

௨௪. ஆதலால், * நியாயத்தீர்ப்புநாளிலே அவர்களுக்குவருந் தண்டிப்பு எளிதாயிருக்கும். நீங்களே அதிகதண்டிப்பை அடைவீர்களென்று உங்களுக்குச்சொல்லுகிறேனென்றார். * மத். ௰: ௰௫.

௨௫. அக்காலத்திலே * இயேசுவானவர் சொன்னதாவது; பிதாவே! வானத்தையும், பூமியையும் ஆளுகிறவரே நீர் இவைகளை (லோக) † ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைத்துக்குழந்தைகளுக்குவெளிப்படுத்தினபடியினாலே உம்மைத்துதிக்கிறேன். * லூக். ௰: ௨௧, ௨௨. † ௧ கொரி. ௧: ௨௬, ௨௭. சங்கீ. ௮: ௩.

௨௬. ஆம், பிதாவே! இப்படியே உமக்குப்பிரியமாயிருந்ததென்றார்.

௨௭. அல்லாமலும், சகலமும் என்பிதாவினாலே எனக்கு * ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கின்றது. பிதாத்தவிர மற்றொருவனுங் குமாரனையறியான். குமாரன் தவிர மற்றொருவனும் பிதாவையறியான். மேலும் எவனுக்குக்குமாரன் அவரைவெளிப்படுத்தச்சித்தமாயிருக்கிறாரோ, அவனும் பிதாவையறிவான். * மத். ௨௮: ௰௮. யோவா. ௩: ௩௫. மத். ௰௭: ௨.

௨௮. வருத்தப்பட்டுப்பாரஞ் சுமந்துகொள்ளுகிறவர்களாகிய நீங்களெல்லாரும், என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு ஆறுதல் செய்வேன்.

௨௯. நான் சாந்தமாயும், மனத்தாழ்மையாயுமிருக்கிறபடியினாலும், நான் வைக்கிற நுகத்தடிமெதுவாயும், * நான் ஏற்றுகிற சுமை இலேசாயுமிருக்கிறபடியினாலும், * ௧ யோவா. ௫: ௩.

௩௰. நீங்கள் என்னுடைய நுகத்தடியையேற்றுக்கொண்டு, என்னிடத்திற் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுதுங்கள் ஆத்துமாக்களுக்காறுதல் கிடைக்குமென்றார்.

௰௨ அதிகாரம்.

[(௧) ஓய்வுநாளின் மீறுதலைக்குறித்துப்பரிசேயர்களுடைய குருட்டாட்டத்தை, (௩) வேதத்தினாலும், (௯) நியாயத்தினாலும், (௰௩) ஒரு அற்புதத்தினாலுங் கிறிஸ்துக்கடிந்துகொண்டது. (௨௨) அவர் பசாசு பிடித்த குருடும், ஊமையுமான ஒரு மனுஷனைக்குணமாக்கினது. (௩௧) பரிசுத்த ஆவிக்குவிரோதமாய், செய்யப்படுந் தூஷணம்மன்னிக்கப்படுவதில்லையென்பது. (௩௬) வீண்வார்த்தைகளுக்கும் நியாயத்தீர்ப்புக் கேட்கப்படுமென்பது. (௩௮) ஒரு அடையாளத்தைக்கேட்ட அவிசுவாசிகளை அவர் கடிந்துகொண்டு, (௪௬) அவர் தம்மு

டைய சகோதரனும், சகோதரியும், தாயு மின்னுமென்று காண்பித்தது.]

அக்காலத்தில் ஒய்வுநாளிலே இயேசுவானவர் * பயிர் வழியேபோனார். அப்பொழுது அவருடைய சீஷர் பசியாயிருந்தபடியினாலே கதிர்களைக்கொய்து சாப்பிடத்தொடங்கினார்கள். * மாற். ௨: ௨௩, ௨௮.

௨. அதைக்கண்ட பரிசேயர் அவரை நோக்கி இதோ, ஒய்வுநாளிற் செய்யத்தகாததை உம்முடைய சீஷர்கள் செய்கிறார்களென்றார்கள்.

௩. அவர்களுக்கு அவர் சொன்னதாவது; * தாவீதும், அவனோடிருந்தவர்களும் பசியாயிருந்தபொழுது, * ௧ சாமு. ௨௧: ௬.

௪. அவன் தேவாலயத்திற் பிரவேசித்து, * ஆசாரியரேயன்றி, தானும், தன்னோடிருந்தவர்களுஞ் சாப்பிடத்தகாத தேவசமுகத்தப்பங்களைச்சாப்பிட்டானென்று நீங்கள்வாசிக்கவில்லையா! * ௩மோ. ௨௪: ௫, ௯.

௫. அல்லது, * ஆசாரியரானவர்கள் தேவாலயத்திலே ஒய்வுநாள்களில் ஒய்ந்திராமல் வேலைசெய்தும், குற்றமில்லாதிருக்கிறார்களென்று, நீங்கள் வேதத்திலே. வாசிக்கவில்லையா! * ௪ மோ. ௨௮: ௯, ௰.

௬. தேவாலயத்திலும், பெரியவர் இங்கேயிருக்கிறாரென்று உங்களுக்குச்சொல்லுகிறேன்.

௭. மேலும், பலியிலும் * இரக்கத்தை விரும்புகிறேனென்கிற (வாக்கியத்தின்கருத்தை) நீங்கள் அறிந்தீர்களானாற் குற்றமில்லாத இவர்களை நீங்கள் குற்றப்படுத்தமாட்டீர்கள். * மத். ௯: ௰௩.

௮. அல்லாமலும், மனிதனுடைய குமாரனானவர் ஒய்வுநாளைக்குறித்துங் கர்த்தராயிருக்கிறாரென்றார்.

௯. பின்பு அவர் அவ்விடம்விட்டுப்போய், அவர்களுடைய * செப ஆலயத்திற் பிரவேசித்தார். * மாற் ௩: ௧, ௯. லூக். ௬: ௬, ௰௧.

௰. அங்கே சூம்பின கையையுடைய மனிதனொருவன் இருந்தான். அப்பொழுது அவர்கள் அவர்மேற் குற்றஞ் சாற்றும்படிக்கு அவரைநோக்கி, * ஒய்வுநாளிற் சுகமாக்குகிறது நியாயமாவென்று கேட்டார்கள். * லூக். ௰௩: ௰௪. ௰௪: ௩.

௰௧. அவர் சொன்னது; உங்களில் எவனுனுந் தன் ஆடு ஒய்வுநாளில் ஒருகுழியிலே விழுந்தால், அதைப்பிடித்துத்தூக்கி விடுவானல்லவா?

௰௨. ஆட்டிலும் மனிதனானவன் மிகவு மேன்மையாயிருக்கிறான். ஆதலால், ஒய்வுநாளிலே நன்மைசெய்கிறது நியாயந்தானென்று சொல்லிப்பின்பு அந்த மனிதனை நோக்கி,

௰௩. உன் கையை நீட்டென்றார். அவன் அதை நீட்டினான். உடனே அது மறுகையைப்போலவே சுகமாயிற்று.

௰௪. அப்பொழுது பரிசேயர் புறப்பட்டுப்போய், அவரைச்சங்கரிக்கும்படிக்கு யோசனைபண்ணிக்கொண்டார்கள்.

௰௫. அதை இயேசுவானவர் அறிந்து அவ்விடம்விட்டுப்போனார். அப்பொழுது அநேக சனங்கள் அவர் பின்னே சென்றார்கள்.

௰௬. எல்லாரையும் அவர் குணமாக்கி, பின்பு தம்மைப்பிரசித்தம் பண்ணாதபடிக்கு * அவர்களுக்குக்கட்டளையிட்டார். * மத். ௯: ௩௰. மாற். ௩: ௰௨.

௰௭. அதினாலே இதோ, நான் தெரிந்துகொண்ட ஊழியக்காரன் எனக்கு அன்பானவர். என் ஆத்துமாவுக்குப்பிரியமானவர். இவரிடத்திலே என்னுடைய ஆவியிருக்கச்செய்வேன். இவர் நியாயமானதை உலகத்தாருக்கறிவிப்பார்.

௰௮. சண்டைபண்ணாமலும், கூக்குரல் பண்ணாமலுமிருப்பார். இவருடைய சத்தம் வீதிகளில் ஒருவராலுங் கேட்கப்படுவதில்லை.

௰௯. நியாயமானது செயமாயிருக்கும்படி செய்கிறவரைக்கும், இவர் நெரிந்திருக்கிற நாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலுமிருப்பார்.

௨௰. இவருடைய நாமத்தின்மேலே புறத்தேசத்தார் நம்பிக்கையாயிருப்பார்களென்று,

௨௧. * ஏசாயா தீர்க்கதரிசி உரைத்தவசனம் நிறைவேறிற்று. * ஏசா. ௪௨: ௧, ௪.

௨௨. அப்பொழுது பசாசுபிடித்த குருடும், * ஊமையுமான ஒருவன் அவரிடத்திற் கொண்டுவரப்பட்டான். குருடும், ஊமையுமானவன் பேசவும், காணவுந் தக்கதாக அவனைக்குணமாக்கினார். * மத். ௯: ௩௨. லூக். ௰௧: ௰௪.

௨௩. சனங்களெல்லாரும் பிரமித்து, இவர் தாவீதின் குமாரனல்லவாவென்றார்கள்.

௨௪. பரிசேயர் அதைக்கேட்டு, இவன் * பசாசுகளுடைய தலைவனாகிய பெயெல்செபூவினாலே பசாசுகளைத்துரத்துகிறானேயன்றி மற்றப்படியல்லவென்றார்கள். * மத். ௯: ௩௪.

௨௫. இயேசுவானவர் அவர்களுடைய சிந்தனைகளை அறிந்து அவர்களைநோக்கி, ஒரு இராச்சியத்தார் தங்களுக்குள்ளே தானே பிரிவினைபண்ணினால் அழிந்துபோவார்கள். அல்லாமலும் ஒருபட்டினத்தாராகிலும், குடும்பத்தாராகிலுந் தங்களுக்குள்ளே பிரிவினைபண்ணினால் நிலை நிற்கமாட்டார்கள்.

௨௬. அப்படிப்போலச்சாத்தான் மற்றொரு சாத்தானைத்துரத்தினால், அவர்களுக்குள்ளே தானே பிரிவினையுண்டாகுமே. அப்

படியானால், அவனுடைய இராச்சியம் எப்படி நிலை நிற்கும்.

௨௭. அல்லாமலும், நான் பெயெல்செபூலினாலே பசாசுகளைத் துரத்துகிறவனென்றால், உங்கள் பிள்ளைகள் அவைகளை ஆராலே துரத்துகிறார்கள். ஆகையால், அவர்களே உங்களுக்கு நியாயத்தீர்ப்புக்கொடுப்பார்கள்.

௨௮. * நான் பராபரனுடைய ஆவியாலே பசாசுகளைத்துரத்துகிறபடியால் பராபரனுடைய ஆளுகையே உங்களிடத்தில் வந்திருக்கின்றது. * ௧ யோவா. ௩: ௮.

௨௯. அல்லது முன்பு பலவானைக்கட்டாவிட்டால், அவனுடைய வாசஸ்தலத்திலே ஒருவன் எப்படிப்பிரவேசித்து, அவனுடைய உடைமைகளைக்கொள்ளையிடுவான். (பலவானைக்கட்டினபின்பல்லவா) அவனுடைய வாசஸ்தலத்தைக்கொள்ளையிடுவான்.

௩௰. என்பங்கிலிராதவன் எனக்கு விரோதமாயிருக்கிறான். என்னுடனே கூடச்சேர்த்துக்கொள்ளாதவன் சிதற அடிக்கிறான்.

௩௧. ஆதலால், நான் உங்களுக்குச்சொல்லுகிறதாவது; * எந்தப்பாவமும், தூஷணமும் மனிதர்களுக்கு மன்னிக்கப்படும். தேவ ஆவியை (நிந்திக்கும்) தூஷணமாத்திரம் மனிதருக்கு மன்னிக்கப்படுவதில்லை. * மாற். ௩: ௨௮, ௩௰.

௩௨. எவனாகிலும் மனிதனுடைய குமாரனுக்கு விரோதம்பேசினால், அது அவனுக்கு மன்னிக்கப்படும். எவனாகிலும் பரிசுத்த தேவ ஆவிக்கு விரோதம்பேசினால், அது அவனுக்கு இம்மையிலும், மறுமையிலும் மன்னிக்கப்படுவதில்லை.

௩௩. மேலும், ஒருமரத்தின் தன்மையை அதின் கனிகளாலே அறியலாம். ஆகையால், நீங்கள் * ஒருமரத்தை நல்லமரமென்றெண்ணினால், அதின் கனியையும் நல்லதென்றெண்ணுங்கள். அல்லது நீங்கள் ஒருமரத்தைக்கெட்டமரமென்றெண்ணினால், அதின் கனியையுங் கெட்டதென்றெண்ணுங்கள். * மத். ௭: ௰௬, ௰௭.

௩௪. இருதயத்தின் நிறைவினாலே வாய்பேசும். ஆதலால் விரியன்குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க நன்மையானவைகளை யெப்படிப்பேசுவீர்கள்.

௩௫. * நல்ல மனிதனானவன் தன் இருதயத்திலுள்ள நல்ல பொக்கிசத்தில் நல்லவைகளையெடுத்துக்காண்பிக்கிறான். பொல்லாத மனிதன் தன் பொல்லாத பொக்கிசத்திற் பொல்லாதவைகளை யெடுத்துக்காண்பிக்கிறான். * லூக். ௬: ௪௫.

௩௬. மனிதர்கள்பேசும் வீணான வார்த்தைகள்யாவையுங்குறித்து நியாயத்தீர்ப்புநாளிலே உத்தரவுகொடுப்பார்களென்று உங்களுக்குச்சொல்லுகிறேனென்றார்.

௩௭. எப்படியும் உன் வார்த்தைகளினாலே நீதிமானென்றும், உன் வார்த்தைகளினாலே குற்றவாளியென்றுந் தீர்க்கப்படுவாய்.

௩௮. அப்பொழுது வேதபாரகரிலும், பரிசேயரிலுஞ் சிலர் அவரைநோக்கி, போதகரே, உம்மாலே * ஒரு அடையாளத்தைக்காண விரும்புகிறோமென்றார்கள். * மத். ௰௬: ௧, ௪. லூக். ௰௧: ௨௯, ௩௨.

௩௯. அதற்கு அவர் சொன்னது, சோரமார்க்கமாய்ப்போகிற பொல்லாதசந்ததியாகிய இவர்கள் ஒரு அடையாளத்தைக் கேட்கிறார்கள். யோனாதீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறு அடையாளம் இவர்களுக்குக்கொடுக்கப்படுவதில்லை.

௪௰. என்னவென்றால், * யோனாவென்பவன் இரவும், பகலும் மூன்றுநாள் ஒருபெரியமீனுடைய வயிற்றிலிருந்ததுபோல மனிதனுடையகுமாரனும் இரவும், பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்திலேயிருப்பாரென்பதே. * யோனா. ௨: ௧.

௪௧. * யோனாவென்பவன் பிரசங்கம்பண்ணினபொழுது நினிவேபட்டினத்தார் மனந்திரும்பினார்கள். யோனாவிலும் அதிக மேன்மையானவர் இதோ, இங்கேயிருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்புநாளிலே நினிவேபட்டினத்தார் எழும்பி இவர்களைக்குற்றவாளிகளென்று தீர்ப்பார்கள். * ௩: ௫.

௪௨. அல்லாமலுந் தெற்கு இராசஸ்திரீயிருந்த தூரமானதேசத்திலிருந்து, * சாலொமோனுடைய ஞானத்தைக்கேட்கவந்தாள். சாலொமோனிலும் அதிக மேன்மையானவர் இதோ இங்கேயிருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்புநாளிலே அந்த இராசஸ்திரீயெழும்பி, இவர்களைக்குற்றவாளிகளென்று தீர்ப்பாள். * ௧ இரா. ௰: ௧.

௪௩. அல்லாமலும், * அசுத்தமான ஆவி ஒருமனிதனைவிட்டுப்புறப்பட்டபின்பு, தண்ணீரில்லாத இடங்களில் அலைந்து இளைப்பாறுதற்கான இடத்தைத்தேடியும் அடையாமலிருக்கும்பொழுது, * லூக். ௰௧: ௨௪.

௪௪. அது என்வீட்டுக்குத்திரும்பிப்போவேனென்றுசொல்லி, (அங்கே) சென்று அவ்விடத்தை வெறுமையாயும், பெருக்கிச் சோடிக்கப்பட்டதாயுமிருக்கக்கண்டு திரும்பிப்போய்,

௪௫. தன்னிலும் அதிக்பொல்லாத வேறே ஏழு ஆவிகளைத்தன்னுடனே கூட்டிக்கொண்டுவந்து பிரவேசித்து, அங்கேவாசம்பண்ணும். * இவ்விதமாய் அந்தமனிதனுடைய முன்னிலைமையிலும் பின்னிலைமை அதிககேடுள்ளதாயிருக்கின்றது. அப்படியே இந்தப்பொல்லாத சந்ததிக்குஞ் சம்பவிக்குமென்றார். * ௨ பேது. ௨: ௨௰.

௪௬. அவர் இப்படிச்சனங்களுடனேபேசுகையில், * அவருடைய தாயும், சகோ

தரருஞ் வந்து வெளியேநின்று அவரோடே பேசத்தேடினார்கள். * மாற். ௩: ௩௧. லூக். ௮: ௰௯, ௨௧.

௪௭. அப்பொழுது ஒருவன் அவரைநோக்கி, இதோ உம்முடைய தாயாரும், சகோதரரும் வெளியேநின்று உம்மோடேபேசத்தேடுகிறார்களென்றான்.

௪௮. அப்படித்தமக்குச்சொன்னவனுக்கு அவர்மாறுத்தரமாக என்னுடைய தாய் யாவள்? என்சகோதரர் யார் என்றுசொல்லி,

௪௯. தம்முடைய கையைத்தம்முடைய சிஷர்மேலே நீட்டி இதோ, இவர்கள் என் தாயும் என் சகோதரருமாயிருக்கிறார்கள்.

௫௰. எவனானாலும் பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படிசெய்தால், அவனே என் சகோதரனுமாய், சகோதரியுமாய், தாயுமாயிருக்கிறானென்றார்.

௰௩ அதிகாரம்.

[(௩) விதைக்கிறவனையும், விதையையும் உவமையாகக்காட்டியது. (௰௮) அதின் வியாக்கியானம். (௨௪) களைகளையும், (௩௧) கடுகுவிதையையும், (௩௩) புளித்தமாவையும், (௪௪) வயலில் ஒளிக்கப்பட்ட பொக்கிசத்தையும், (௪௫) முத்தையும், (௪௭) கடலிற்போடப்பட்ட வலையையும் உவமையாகக்காட்டியது. (௫௩) கிறிஸ்துதம்முடைய சொந்த ஊராரால் அசட்டை பண்ணப்பட்டது.]

அந்நாளிலே இயேசுவானவர் வீட்டிலிருந்து புறப்பட்டுக்கடலினருகே யுளுக்காந்தார்.

௨. அப்பொழுது அநேகசனங்கள் அவரிடத்திற் கூடிவந்தபடியால், அவர் படவிலேறி உளுக்காந்து சனங்களெல்லாருங் கரையிலே நிற்க,

௩. அநேக விசேஷங்களை உவமைகளால் அவர்களுக்குச்சொன்னதாவது; * விதைக்கிறவனொருவன் விதைக்கப்புறப்பட்டான். அவன் விதைக்கையிற் சில (விதை) வழியருகே விழுந்தன. * மாற். ௪: ௩. லூக். ௮: ௫.

௪. அவைகளைப்பறவைகள்வந்து பட்சித்தன.

௫. வேறுசில (விதை) மிகுந்த மண்ணில்லாத கற்பாறையிடங்களில் விழுந்து ஆழமானமண்ணில்லாததினால் உடனே முளைத்தன.

௬. வெயில் தோன்றினபொழுது அவை தீந்துபோய் வேரில்லாததினாலே யுலர்ந்துபோயின.

௭. வேறுசில (விதை) முள்ளுக்களுள்ள இடத்திலே விழுந்தன. முள்ளுக்கள் வளர்ந்து, அவைகளை நெருக்கிப்போட்டன.

௮. வேறுசில (விதை) நல்ல நிலத்தில் விழுந்து சில நூறாகவும், சில அறுபதாகவும், சில முப்பதாகவும் பலன்கொடுத்தன.

௯. கேட்கிறதற்குக்காதுள்ளவன் கேட்கக்கடவனென்றார்.

௰. அப்பொழுது சீஷர்கள் அவரிடத்தில் வந்து என்னத்தினாலே உவமைகளால் அவர்களோடே பேசுகிறீரென்றார்கள்.

௰௧. அதற்கு அவர்சொன்னது, பரலோக இராச்சியத்தின் இரகசியங்களை அறியும்படிக்கு, * உங்களுக்கு அருள் அளிக்கப்பட்டது. அவர்களுக்கு அப்படி அளிக்கப்படவில்லை. * மத். ௰௧: ௨௫.

௰௨. எப்படியெனில், * எவன் உள்ளவனாயிருக்கிறானோ அவனுக்குக்கொடுக்கப்படும். பரிபூரணமும் அடைவான். எவன் உள்ளவனல்லாதவனாயிருக்கிறானோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும். * ௨௫: ௨௯.

௰௩. அவர்கள் கண்டுங் காணாமலும், கேட்டுங் கேளாமலும், சிந்தித்துக்கொள்ளாமலுமிருக்கிறபடியினாலே, நான் உவமைகளால் அவர்களுடனே பேசுகிறேன்.

௰௪. இந்தச்சனங்கள் கண்களினாலேகாணாமலும், காதுகளினாலேகேளாமலும், இருதயத்தினாலே சிந்தித்துக்கொள்ளாமலும், திரும்பாமலும், என்னால் ஆரோக்கியம் அடையாமலுமிருக்கும்படிக்கு, அவர்கள் கடினமாக்கப்பட்ட இருதயமுடையவர்களுமாய், வருத்தத்தோடே கேட்கிற காதுள்ளவர்களுமாய், மூடிக்கொண்டிருக்கிற கண்களையுடையவர்களுமாயிருக்கிறபடியினாலே,

௰௫. நீங்கள், * உற்றுக்கேட்டாலும், சிந்தித்துக்கொள்ளாமலுமிருப்பீர்கள். உற்றுப்பார்த்தாலும், அறியாமலிருப்பீர்களென்று, ஏசாயாசொன்ன தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறிவருகின்றது. * ஏசா. ௬: ௯, ௰.

௰௬. உங்கள் கண்களோ காணுகிறபடியினாலும், உங்கள் காதுகள் கேட்கிறபடியினாலும், * பாக்கியமுள்ளவைகள். * லூக். ௰: ௨௩, ௨௪.

௰௭. அநேகந் தீர்க்கதரிசிகளும், நீதிமான்களும் நீங்கள் காணுகிறவைகளைக்காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக்கேட்கவும் விரும்பியுங் காணாமலும், கேளாமலும்போனார்களென்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன்.

௰௮. ஆகையால் விதைக்கிறவனுடைய உவமையைக்கேளுங்கள்.

௰௯. ஒருவன் பரலோக இராச்சியத்தைக்குறித்து, வசனத்தைக்கேட்டும் அதைச்சிந்தித்துக்கொள்ளாமலிருக்கிறபொழுதுபொல்லாங்கன்வந்து, அவனுடைய இருதயத்தின்மேல் விதைக்கப்பட்டதை யெடுக்கிறான். அவனேவிதைவிழுந்த வழிக்கொப்பானவன்.

௨௰. விதைவிழுந்த கற்பாறைக்கொப்பா
னவன் அந்த வசனத்தைக்கேட்டு உட
னே அதைச்சந்தோஷத்தோடே யேற்றுக்
கொண்டு,

௨௧. பின்பு அதுதனக்குள்ளே வேர்பற்றி
யிராமற் கொஞ்சக்காலம்மாத்திரம் அதைப்
பற்றிக்கொள்ளுவான். அந்தவசனத்தினிமித்
தம் உபத்திரவமும், துன்பப்படுத்தலுமுண்
டாகிறபொழுது, உடனே அவன் தவறுவா
னென்பதே.

௨௨. விதைவிழுந்த முள்ளுள்ள இடத்துக்
கொப்பானவன் அந்தவசனத்தைக்கேட்கி
றபொழுது, லவுகீகக்கவலைகளும், * ஐசுவ
ரியத்தின் வஞ்சனையும் அவ்வசனத்தை நெ
ருக்கிப்போடுவதால் கனியற்றவனுவானென்
பதே. * ௧ தீமோ. ௬: ௯.

௨௩. விதைவிழுந்த நல்லநிலத்துக்கொப்
பானவன் அந்தவசனத்தைக்கேட்டும், சிந்
தித்தும், அதின்படிசெய்தும், நூறும், அ
றுபதும், முப்பதுமாகப்பலனைக்கொடுத்
தும் வருவானென்பதேயென்றார்.

௨௪. பின்பு அவர் வேறொரு உவமையை
அவர்களுக்குச்சொல்லிக்காட்டினார். அதா
வது, பரலோக இராச்சியம் ஒருவயல் நி
லத்துக்கொப்பாயிருக்கின்றது. அந்த நி
லத்திலே எசமானனவன் நல்லவிதையை
விதைத்தான்.

௨௫. பின்புமனிதர் நித்திரைபண்ணுகை
யில், அவனுடைய பகைஞன்வந்து கோ
துமைக்குள்ளே களைகளை விதைத்துப்போ
னான்.

௨௬. பயிரானது வளர்ந்து தானியத்தை
உண்டாக்கினபொழுது அந்தக்களைகளுங்
காணப்பட்டன.

௨௭. வேலைக்காரர் எசமானிடத்தில் வந்து
ஆண்டவனே, நீர் உமது வயல் நிலத்திலே
நல்லவிதையை விதைக்கவில்லையா! களைகள்
அதிலே எப்படியுண்டாயினவென்றார்கள்.

௨௮. அதற்கவன்பகைஞன் அப்படிச்செய்
தானென்றான். அப்பொழுது வேலைக்கா
ரர் நாங்கள்போய் அவைகளைப்பிடுங்கிப்
போடச்சித்தமாயிருக்கிறீரோ என்று கேட்
டார்கள்.

௨௯. அதற்கவன்சொன்னது, வேண்டாம்
களைகளைப்பிடுங்குகிறபொழுது, நீங்கள் கோ
துமையையுங்கூட வேரோடே பிடுங்காத
படிக்கு,

௩௰. அவ்விரண்டையும், அறுப்புக்காலம்
வரைக்கும் வளர விடுங்கள். அறுப்புக்கா
லத்திலே அறுக்கிறவர்கள் முதலாவது, களை
களைப்பிடுங்கி, அவைகளைச்சுட்டெரிக்கிறதற்
குக்கட்டுக்களாகக்கட்டவும், * கோதுமை
யை என் களஞ்சியத்திற் சேர்க்கவுங் கட்ட
ளையிடுவேனென்று சொன்னானென்றார். *
மத். ௩: ௰௨.

௩௧. பின்பு, அவர் வேறொரு உவமையை
அவர்களுக்குச்சொல்லிக்காட்டினார். அதா
வது, பரலோக இராச்சியம் * கடுகுவிதைக்
கு ஒப்பாயிருக்கின்றது. அதை ஒரு மனி
தன் எடுத்துத்தன் நிலத்திலே விதைத்தான்.
* மாற். ௪: ௩௰, ௩௨. லூக். ௰௩: ௰௮, ௰௯.

௩௨. அது எல்லாவிதைகளிலுஞ் சிறியதா
யிருந்தும் வளரும்பொழுது, கீரைகளிலும்
பெரிதாகி, ஆகாசத்துப்பறவைகள் அதின்
கிளைகளில் வந்தடையத்தக்கதான செடியா
மென்றார்.

௩௩. பின்பு, அவர் வேறொரு உவமையை
அவர்களுக்குச்சொன்னார். அதாவது, மூன்
றுமரக்கால் மாமுழுவதும் புளிப்பாகும் வ
ரைக்கும் ஒருஸ்திரீ புளிப்புமாவையெடுத்து,
அதிலே அடக்கிவைத்தாள். பரலோக இ
ராச்சியம் * அந்தப்புளிப்புமாவுக்கொப்பா
யிருக்கின்றதென்றார். * லூக். ௰௩:௨௰,௨௧.

௩௪. என் வாயைத்திறந்து, உவமைகளா
லே பேசுவேன். * உலகத்தோற்றம் முதற்
கொண்டு, மறைபொருளானவைகளை வெ
ளிப்படுத்துவேனென்று, தீர்க்கதரிசியாலு
ரைக்கப்பட்டது நிறைவேறத்தக்கதாக,
* சங். ௭௮: ௨.

௩௫. * இயேசுவானவர் இவைகளையெல்
லாம் உவமையாய்ச்சனங்களுடனே பேசி
னார். உவமைகளினாலேயன்றி, வேறுவித
மாய் அவர் அவர்களுடனே பேசவில்லை.
* மாற். ௪: ௩௩, ௩௪.

௩௬. அப்பொழுது இயேசுவானவர் சனங்
களை அனுப்பிப்பின்பு வீட்டுக்குப்போனார்.
அங்கே அவருடைய சீஷர் அவரிடத்தில்
வந்து, நீர் வயல் நிலத்தின் களைகளைக்குறித்
துக்காட்டின உவமையை எங்களுக்கு வெ
ளிப்படுத்த வேண்டுமென்று கேட்டார்கள்.

௩௭. அவர்களுடனே அவர் மறுமொழியா
கச்சொன்னதாவது; நல்ல விதையை வி
தைக்கிறவன் மனிதனுடைய குமாரனே. வ
யல் நிலம் உலகமே.

௩௮. நல்ல விதை இராச்சியத்தின் புத்தி
ரரே. களைகள் பொல்லாங்கனுடைய புத்தி
ரரே.

௩௯. அவைகளை விதைக்கிற பகைஞன் ப
சாசே. * அறுப்பு உலகத்தின் முடிவே.
அறுக்கிறவர்கள் தேவ தூதர்களே. * அபி.
௰௪: ௰௫.

௪௰. ஆதலால், களைகள் சேர்க்கப்பட்டு,
அக்கினியினாற் சுட்டெரிக்கப்படுகிறதுபோ
ல இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும்.

௪௧. மனிதனுடைய குமாரன் * தன்னு
டைய தூதரையனுப்புவான். அவர்கள் அவ
னுடைய இராச்சியத்திலிருக்கிற சகல இட
றல்களையும், அக்கிரமஞ் செய்கிறவர்களை
யுஞ் சேர்த்து, * ௨௫: ௩௨.

௪௨. * அழுதலும், பற்கடிப்புமுண்டாயிருக்கிற அக்கினிச்சூளையிலே போடுவார்கள். * அ: ௰௨. ௨௨: ௰௩.

௪௩. அப்பொழுது நீதியான்கள் தங்கள் பிதாவின் இராச்சியத்திலே * சூரியனைப்போலப்பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன். * தானி. ௰௨: ௩.

௪௪. அல்லாமலும் பரலோக இராச்சியம் வயல் நிலத்தில் ஒளிக்கப்பட்டிருக்கிறபொக்கிசத்துக்கு ஒப்பாயிருக்கின்றது. அதை ஒரு மனிதன் கண்டு அதை மறைத்து, * அதைக்குறித்து அடைந்த சந்தோஷத்தினலேபோய், தனக்குள்ள யாவையும்விற்று, அந்த வயல். நிலத்தையே கொள்ளுகிறுன். * ௰௬: ௨௪.

௪௫. அல்லாமலும் பரலோக இராச்சியம் நல்ல முத்துகளைத்தேடி,

௪௬. * ஒரு ஆணிமுத்தைக்கொண்டுபோய்த்தனக்குள்ள யாவையும்விற்று, அதைக் கொள்ளுகிற வியாபாரி ஒருவனுக்கு ஒப்பாயிருக்கின்றது. * வாக். ௮: ௰, ௰௧.

௪௭. அல்லாமலும் பரலோக இராச்சியம் ஒருவலைக்கு ஒப்பாயிருக்கின்றது. வலையானது கடலிலே போடப்பட்டு, எல்லாச்சாதியான மீன்களையும்வாரி நிறைந்தபொழுது,

௪௮. சனங்கள் அதைக்கரையிலிழுத்து, உளுக்காந்து நல்லவைகளைப்பாத்திரங்களிற் சேர்த்துக்கொண்டு, தகாதவைகளைத் தள்ளிப்போடுகிறுர்கள்.

௪௯. இவ்விதமாக உலகத்தின் முடிவிலே நடக்கும். * தேவதூதர் புறப்பட்டு, நீதிமான்களிலிருந்து துன்மார்க்கரைப்பிரித்து, * ௨௫: ௩௨.

௫௰. அழுதலும் பற்கடிப்புமுண்டாயிருக்கிற அக்கினிச்சூளையிலே போடுவார்களென்றுசொல்லி,

௫௧. பின்பு, நீங்கள் இவைகளையெல்லாம் அறிந்துகொண்டீர்களாவென்று, இயேசுவானவர் சீஷர்களிடத்திற் கேட்டதற்கு, ஆண்டவரே! அறிந்துகொண்டோமென்றுர்கள்.

௫௨. அவர் பின்னும் அவர்களைநோக்கி, அப்படியிருக்கையாற் பரலோக இராச்சியத்தைக்குறித்துப்போதனையடைந்த வேதபாரகனெவனே அவன் தன் பொக்கிசத்திற் புதியவைகளையும், பழையவைகளையும் எடுத்துக்காண்பிக்கிற வீட்டெசமானுக்கு ஒப்பாயிருக்கிறுனென்றுர்.

௫௩. இப்படி இயேசுவானவர் இந்த உவமைகளைச்சொல்லி முடித்தபின்பு,

௫௪. அவர் அவ்விடம்விட்டு, * தாம் வளர்ந்த ஊரிலேவந்து, செப ஆலயத்திலே சனங்களுக்கு உபதேசம்பண்ணினுர். அவர்கள் அதைக்கேட்டுப்பிரமித்து, இப்படிப்பட்ட ஞானமும், வல்லமைகளும் இவனுக்கு எங்கேயிருந்து வந்தன. * மாற். ௬: ௧, ௬. லூக். ௪: ௰௬.

௫௫. இவன் தச்சனுடைய குமாரனல்லவா? இவனுடைய தாய் மரியாளென்னப்பட்டிருக்கிறுளல்லவா! யாக்கோபு, யோசே, சீமோன், யூதா என்பவர்கள் இவனுடைய சகோதரரல்லவா?

௫௬. இவனுடைய சகோதரிகளெல்லாரும் நமக்குள்ளே இருக்கிறுர்களல்லவா? இப்படியிருக்க, இவை யெல்லாம் இவனுக்கு எங்கேயிருந்து வந்தனவென்றுசொல்லி,

௫௭. அவரைக்குறித்து இடறல் பட்டார்கள். அப்பொழுது * இயேசுவானவர் அவர்களைநோக்கி, தீர்க்கதரிசி யொருவன் தன்னூரிலேயும், தன் குடும்பத்திலேயுமேயன்றி, மற்ற இடங்களிலே கன ஈனப்படானென்றுர். * யோவா. ௪: ௪௪.

௫௮. மேலும், அந்தச்சனங்களுடைய அவிசுவாசத்தினலே அவர் அவ்விடத்திலே அநேக அற்புதங்களைச்செய்யவில்லை.

௰௪ அதிகாரம்.

[(௧) கிறிஸ்துவைக்குறித்து ஏரோது நினைத்த நினைவு, (௩) யோவான் சிரச்சேதம் பண்ணப்பட்ட காரணம், (௰௩) இயேசுவானவர் ஓர் வனாந்தரமான இடத்திற்குப் போய், (௰௫) அவ்விடத்தில் ஐந்து அப்பங்களினலும், இரண்டு மீன்களினலும், ஐயாயிரம்பேருக்குப்போசனங்கொடுத்து, (௨௨) அவர் கடலிலே நடந்து, சீஷரிடத்தில் வந்து, (௩௪) கெனேசரேத்தினிடத்திலிறங்கித் தம்முடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்ட பிணியாளிகளைக்குணமாக்கினது.]

அக்காலத்திலே காற்பங்கு தேசாதிபதியாகிய * ஏரோதே இராசா இயேசுவின் கீர்த்தியைக்கேள்விப்பட்டு, * மாற். ௬: ௰௪, ௨௯. லூக். ௯: ௭, ௯.

௨. தன் ஊழியக்காரரைநோக்கி, அவன் யோவான்ஸ்நானன் அவன் மரித்தோரிலிருந்து எழுந்திருந்தவன். அதினலே அவன் அற்புதங்களைச்செய்து வருகிறுனென்றுன்.

௩. அதெப்படியென்றுல், ஏரோதே இராசா தன் தம்பியாகிய பிலிப்பினுடைய மனைவி ஏரோதியாளைக்குறித்து, நீர் அவளைச் சேர்த்துக்கொள்ளக்கூடாதென்று,

௪. * யோவான் அவனுடனே சொன்னபடியினலே ஏரோதே இராசா அவனைப் பிடித்துக்கட்டிக்காவலில் வைத்தான். * ௩ மோ. ௰௮: ௰௬.

௫. அவனைக்கொலைசெய்யவும் மனதாயிருந்தான். அப்படியிருந்தும் * சனங்கள் யோவானைத் தீர்க்கதரிசியென்றெண்ணின படியினலே அவன் அவர்களுக்குப்பயந்து (அப்படிச்செய்யவில்லை.) * ௨௧: ௨௬.

௬. பின்பு ஏரோதேயினுடைய சென்ம
நாள் கொண்டாடப்படுகிற காலத்திலே ஏ
ரோதியாளின் குமாரத்தி, ஏரோதே இரா
சாவுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகத்
தக்கதாக நடனம்பண்ணினபொழுது,

௭. அவன் அவளைநோக்கி, நீ எதைக்கேட்
டாலுந் தருவேனென்று, அவளுக்கு ஆணை
யிட்டு வார்த்தை கொடுத்தான்.

௮. உடனே அவள் தன் தாய் தனக்குப்
போதித்திருந்தபடியே நீர் யோவான்ஸ்நா
னனுடைய சிரசை ஒரு தாலத்தில் இங்கே
யெனக்குக்கொடுக்கவேண்டுமென்று கேட்
டாள்.

௯. இராசா துக்கம் அடைந்தான். அப்
படியிருந்துந் தான்கொடுத்த ஆணையினிமித்
தமும், பந்தியிற் கூடவிருந்தவர்களினிமித்
தமும் அவன் அதைக்கொடுக்கக்கட்டளை
யிட்டான்.

௰. அந்தப்படி இராசாவினாலே அனுப்பப்
பட்டவர்கள் காவற் கூடத்துக்குப்போய்
யோவானைச்சிரச்சேதம்பண்ணி,

௰௧. வந்து, அவனுடைய சிரசை ஒரு தா
லத்திலே வைத்து, அந்தப்பெண்ணுக்குக்
கொடுத்தார்கள். அவள் அதைத்தன் தாய்க்
குக்கொண்டுபோய்க்கொடுத்தாள்.

௰௨. பின்பு அவனுடைய சீஷர்கள் வந்து,
அவனுடைய உடலை யெடுத்து, அடக்கம்
பண்ணிவந்து இயேசுவுக்கு அந்தச்சங்கதி
யை யறிவித்தார்கள்.

௰௩. * இயேசுவானவர் அதைக்கேட்டு,
அவ்விடம்விட்டு, வனாந்தரமான இடத்திலே
தனியேயிருக்க ஒரு படவிலேறிப்போனார்.
சனங்கள் அதைக்கேள்விப்பட்டு, பட்டினங்
களிலிருந்து, கால் நடையாய் அவர் பின்
சென்றார்கள். * மாற். ௬: ௩௰, ௩௩. லூக்.
௯: ௰, ௰௭. யோவா. ௬: ௧, ௰௫.

௰௪. இயேசுவானவர் புறப்பட்டு, திரளான
சனங்களைக்கண்டு, * அவர்களுக்கு இரக்க
மாய் மனதுருகி, அவர்களில் வியாதிப்பட்ட
வர்களைக்குணமாக்கினார். * ௯: ௩௬.
௰௫: ௩௨.

௰௫. சாயங்காலத்திலே அவருடைய சீஷர்
அவரிடத்தில் வந்து, இது வனாந்தரமான இ
டம். அல்லாமலும் பகல் போயிற்று. ஆத
லால், இந்தச்சனங்கள் கிராமங்களுக்குப்
போய், தங்களுக்காகப்போசன பதார்த்
தங்களைக்கொள்ளும்படிக்கு, இவர்களை அ
னுப்பிவிடுமென்றார்கள்.

௰௬. அதற்கு இயேசுவானவர் இவர்கள்
போகவேண்டுவதில்லை. நீங்களே இவர்க
ளுக்குச்சாப்பாடு கொடுங்களென்றார்.

௰௭. அவர்கள் சொன்னது; ஐந்தப்பமும்,
இரண்டு மீன்களுமேயல்லாமல் வேறொன்
றும் எங்களிடத்திலில்லை யென்றார்கள்.

௰௮. அவைகளை எனக்கு இங்கே கொண்
டுவாருங்களென்றார்.

௰௯. பின்பு சனங்கள் புல்லின்மேற் பந்தி
யிருக்கும்படிக்கு, அவர் கட்டளையிட்டு அவ்
வைந்தப்பங்களையும், இரண்டு மீன்களையும்
எடுத்து, வானத்தை யண்ணாந்து பார்த்து,
அவைகளை யாசீர்வதித்து, அப்பங்களைப்
[illegible]ச்சீஷர்களுக்குக் [illegible]டுத்தார். சீஷர்
கள் அ[illegible]க்குக்கொடுத்தார்
கள்.

௨௰. அவர்களெல்லாருஞ் சாப்பிட்டு, திருந்
தி யடைந்தார்கள். அதுவுமல்லாமற் சேஷ
மானவைகளைப்பன்னிரண்டு கூடை நிறை
ய எடுத்தார்கள்.

௨௰௧. அப்படிச்சாப்பிட்டவர்கள் பெண்க
ளும், பிள்ளைகளுந்தவிர ஏறக்குறைய ஐயா
யிரம் பேரிருந்தார்கள்.

௨௰௨. உடனே * இயேசுவானவர் சனங்க
ளை யனுப்பிவிடுகையில், தம்முடைய சீஷர்
கள் படவிலேறித்தமக்குமுன்னே அக்க
ரைக்குப்போகும்படிக்கு, அவர்களைத் துரி
தப்படுத்தினார். * மாற். ௬: ௪௫, ௫௨.
யோவா. ௬: ௰௬, ௨௧.

௨௰௩. சனங்களை யனுப்பிவிட்டபின்பு அவர்,
தனியே * செபத்தியானம்பண்ணும்படிக்
கு, ஒரு மலையின்மேலேறினார். சாயந்தர
மானபொழுது, அவர்மாத்திரம் அங்கே யி
ருந்தார். * லூக். ௬: ௰௨. ௯: ௰௮.

௨௰௪. அவ்வேளையிலே படவு கடலின் நடு
வே சேர்ந்து, எதிர்க்காற்றிருந்ததினாலே
அலைகளால் அலைவுபட்டது.

௨௰௫. அப்படியிருக்கிறபொழுது, இரவின்
நாலாஞ்சாமத்திலே இயேசுவானவர் கட
லின்மேலே நடந்து, அவர்களிடத்துக்குப்
போனார்.

௨௰௬. அவர் கடலின்மேல் நடக்கிறதைச்
சீஷர்கண்டு கலங்கி, ஆவேசமுண்டாயி
ருக்கிறதென்று புலம்பிப்பயத்தினாலே கூப்
பிட்டார்கள்.

௨௰௭. உடனே இயேசுவானவர் திடன்
கொள்ளுங்கள். நான்தான் பயப்படாதிருங்
களென்று அவர்களுடனே சொன்னார்.

௨௰௮. பேதுரு அவருக்கு ஆண்டவரே நீ
ரேயானாற் சலத்தின்மேலே உம்மிடத்தில்
வரும்படி எனக்குக்கட்டளையிடுமென்றான்.

௨௰௯. அதற்கவர் வாவென்றார். அப்பொ
ழுது, பேதுரு படவைவிட்டிறங்கி, இயேசு
வினிடத்துக்கு வரும்படிக்குச்சலத்தின்மே
லே நடந்து,

௩௰. காற்றுப்பலத்திருக்கிறதைக்கண்டு, ப
யம் அடைந்து, அமிழத்தொடங்கி, ஆண்
டவரே! என்னை இரட்சிக்கவேண்டுமென்று
கூப்பிட்டான்.

௩௰௧. உடனே! இயேசுவானவர் கையை
நீட்டி, அவனைப்பிடித்துக்கொண்டு, * அற்

பவிசுவாசியே ஏன் சந்தேகப்பட்டாயென்
ருர். * ௮: ௨௬.
௩௨. அவர்கள் படவிலேறினவுடனே காற்
று அமைதலாயிற்று.
௩௩. அப்பொழுது படவிலுள்ளவர்கள் வந்
து, * மெய்யாகவே நீர் பராபரனுடைய
குமாரனாயிருக்கிறீரென்று சொல்லி, அவ
ரை வணங்கினார்கள். * ௰௬: ௰௬.
௩௪. * பின்பு அவர்கள் அக்கரைக்கோ
டிக்கெனேசரேத்து நாட்டில் வந்தார்கள்.
* மாற். ௬: ௫௩, ௫௬.
௩௫. அவ்விடத்து மனிதர் அவரை யறிந்
து, அந்தத்திசைகளிலெங்கும் ஆள்களை ய
னுப்பி, பிணியாளிகளெல்லாரையும் அவரி
டத்தில் அழைத்துக்கொண்டு வந்து,
௩௬. அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தை
மாத்திரந் தொடும்படிக்கு, உத்தரவு கேட்
க அதைத்தொட்ட யாவருஞ் சொஸ்தம்
அடைந்தார்கள்.

௰௫ அதிகாரம்.

[(௩) வேதபாரகரும், பரிசேயருந் தேவ கற்பனைகளைத்தங்களுடைய பாரம்பரைகளினாலே மீறினதற்காக, கிறிஸ்து அவர்களைக் கடிந்துகொண்டு, (௰௧) வாய்க்குள்ளேபோகிற பதார்த்தம் மனுஷனைத்தீட்டுப்படுத்தாதென்று போதித்தது. (௨௧) அவர் கானான் தேசத்தாளுடைய மகளையும், (௩௰) மற்ற அநேகங் கும்புகளையுங் குணமாக்கி, (௩௨) ஏழு அப்பங்களினாலும், சில சிறுமீன்களினாலும், ஸ்திரீகளும், பிள்ளைகளுந்தவிர நாலாயிரம் புருஷர்களுக்குப்போசனங் கொடுத்தது.]

* அக்காலத்திலே எருசலேமிலிருந்து
வந்த வேதபாரகரும், பரிசேய
ரும், இயேசுவினிடத்தில் வந்து, * மாற்.
௭: ௧—௨௩.
௨. உம்முடைய சீஷர் தங்கள் கைகளைக்
கழுவாமற் போசனம்பண்ணுகிருர்கள்.
அப்படி அவர்கள் பெரியோர்களுடைய பா
ரம்பரை நியாயத்தை ஏன் மீறிநடக்கிருர்க
ளென்ருர்கள்.
௩. அதற்கு அவர் சொன்னது, உங்கள் பா
ரம்பரை நியாயத்தினாலே நீங்களும் பராபர
னுடைய கற்பனையை ஏன் மீறிநடக்கிறீர்
கள்.
௪. எப்படியெனில், உன் தகப்பனையும்,
தாயையுங் கனம்பண்ணவேண்டுமென்றும்,
* தகப்பனையாகிலும், தாயையாகிலும்,
நிந்திப்பவனை மரண ஆக்கினைக்குட்படுத்த
வேண்டுமென்றும், பராபரன் கட்டளையிட்
டார். * ௨ மோ. ௨௧: ௰௭. ௩ மோ. ௨௰:
௯. வாக். ௨௰: ௨௰.
௫. அப்படியிருந்தும், நீங்கள் எவனாகி
லுந் தன் தகப்பனுடனே அல்லது தாயுட
னே உமக்கென்னாலே உதவுகிறதெதுவோ
அதைக்காணிக்கையாகக்கொடுக்கி
றேனென்று சொன்னால்,
௬. அவன் தன் தகப்பனை அல்லது தா
யைக்கனம் பண்ணவேண்டுவதில்லையென்று
போதித்து, இவ்விதமாய்ப்பராபரனுடைய
கற்பனையை, உங்கள் பாரம்பரை நியாயத்தி
னாலே அவமாக்கி வருகிறீர்கள்.
௭. ஆ, வஞ்சகரே! இந்தச்சனங்கள் தங்
கள் வாயினாலே என்னைச்சேர்ந்து, தங்கள்
உதடுகளினாலே என்னைக்கனம்பண்ணியும்,
தங்களிருதயமோ எனக்குத்தூரமாய் விலகி
யிருக்கின்றது.
௮. அப்படி யிவர்கள் மனிதர்களுடைய
கற்பனைகளாகிய போதகங்களைப்போதிக்கி
றவர்களாயிருந்து, எனக்கு வீணாய் ஆராத
னை செய்கிருர்களென்று,
௯. ஏசாயாவென்பவன் * உங்களைக்குறித்
து நன்ருய்த்தீர்க்கதரிசனமுரைத்தானென்
று சொன்னார். * ஏசா. ௨௯: ௰௩.
௰. பின்பு சனங்களைத்தம்மிடத்தில் வர அ
ழைத்து, நீங்கள் கேட்டுச்சிந்தித்துக்கொள்
ளுங்கள்.
௰௧. வாய்க்குள்ளே போகிறபொருள் ஒரு
வனையும், அசுசிப்படுத்தமாட்டாது. வாயி
லிருந்து புறப்படுகிறபொருளே ஒருவனை
அசுசிப்படுத்துகின்றதென்று அவர்களுட
னே சொன்னார்.
௰௨. அப்பொழுது அவருடைய சீஷர் அ
வரிடத்தில் வந்து, பரிசேயர் இந்த வசனத்
தைக்கேட்டு விசனப்பட்டார்களென்று அ
றிந்திருக்கிறீராவென்ருர்கள்.
௰௩. அதற்கவர் என் பரமபிதா நடாத
நாற்றுகள் யாவும் பிடுங்கப்படும்.
௰௪. அவர்களை விட்டுவிடுங்கள். குருடருக்
கு * வழிகாட்டுகிற குருடராயிருக்கிருர்கள்.
ஒரு குருடன் மற்றொரு குருடனுக்கு வழி
காட்டினால், இருவருங் குழியிலே விழுவார்
களென்ருர். * ௨௩: ௰௬.
௰௫. அப்பொழுது, பேதுரு அவரைநோக்
கி, இந்த உவமையை எங்களுக்கு வெளிப்
படுத்தவேண்டுமென்று கேட்டான்.
௰௬. அதற்கு இயேசுவானவர் நீங்களும்
இன்னம் புத்தியில்லாதவர்களா?
௰௭. வாய்க்குள்ளே போகிறவைகள் யாவும்
வயிற்றிற் பிரவேசித்து, பின்பு ஆசனவழி
யாய்க்கழிந்து போகின்றனவென்பதை நீங்
கள் இன்னஞ்சிந்தித்துக்கொள்ளவில்லையா?
௰௮. * வாயிலிருந்து புறப்படுகிறவைகள்
இருதயத்திலிருந்து புறப்பட்டுவருகின்றன.
அவைகளே மனிதனை அசுசிப்படுத்துகின்ற
ன. * யாக். ௩: ௬.
௰௯. எவையெனில், * பொல்லாத சிந்த
னைகள், கொலைகள், விபசாரங்கள், வேசித்
தனங்கள், களவுகள், பொய்ச்சாட்சிகள்,

தூஷணங்களாகிய இவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவருகின்றன. * ௧ மோ. ௬: ௫. அ: ௨௧.

௨௰. இவைகள் மனிதனை அசுசிப்படுத்துகிறவைகள். கைகழுவாமற் சாப்பிடுகிறது மனிதனை அசுசிப்படுத்தாதென்றார்.

௨௧. * பின்பு இயேசுவானவர் அவ்விடம் விட்டுப்புறப்பட்டு, தீருசீதோன்பட்டணங்களின் திசைகளுக்குப்போனார். * மாற். ௭: ௨௪, ௩௰.

௨௨. அப்பொழுது அவ்விடங்களின் எல்லைகளிலிருந்து வந்த கானான்தேசத்தாளாகிய ஒரு ஸ்திரீ அவரைநோக்கி, ஆண்டவரே! தாவீதின் குமாரனே! என் மகள் பசாசினாலே கடினமாய் வாதிக்கப்படுகிறாள். எனக்கு இரங்கவேண்டுமென்று சொல்லிக் கூப்பிட்டாள்.

௨௩. அவரோ அவளுக்கு மாறுத்தரமாக ஒரு வார்த்தையுஞ் சொல்லவில்லை. அப்பொழுது அவருடைய சீஷர்வந்து, அவரைநோக்கி, இவள் நம்மைப்பின்றொடர்ந்து கூப்பிடுகிறாளே. ஆதலால், இவளை யனுப்பிவிடுமென்று வேண்டிக்கொண்டார்கள்.

௨௪. அதற்கு அவர் காணமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் குடும்பத்தாரிடத்துக்கேயன்றி, (மற்றவர்களிடத்தில்) நான் அனுப்பப்படவில்லையே யென்றார்.

௨௫. அவளோ வந்து ஆண்டவரே! எனக்குச்சகாயஞ் செய்யவேண்டுமென்று அவரை நமஸ்காரம் பண்ணினாள்.

௨௬. அவர் சொன்னது, பிள்ளைகளுடைய அப்பத்தை யெடுத்து, நாய்களுக்குப்போடுகிறது நல்லதல்லவே யென்றார்.

௨௭. அதற்கவள் ஆண்டவரே! மெய்தான். ஆகிலும், நாய்கள் தங்கள் எசமான்கள் போசனஞ்செய்கிற பலகைகளிலிருந்து விழுகிற உச்சிட்டங்களைத்தின்னுமே யென்றாள்.

௨௮. அப்பொழுது இயேசுவானவர் அவளைநோக்கி, ஆ, ஸ்திரீயே! உன் விசுவாசம் பெரிதாயிருக்கின்றது. நீ விரும்பினபடி உனக்காகக்கடவதென்றார். அந்நேரமே அவளுடைய மகள் சுகம் அடைந்தாள்.

௨௯. * பின்பு இயேசுவானவர் அவ்விடம் விட்டுப்புறப்பட்டு, கலிலேயாக்கடலினருகே வந்து, ஒரு மலையிலேறி அங்கே உட்கார்ந்தார். * மாற். ௭: ௩௧, ௩௭. அ: ௧, ௰.

௩௰. அப்பொழுது சப்பாணிகள், குருடர், ஊமையர், முடவர்கள்முதலான அநேகம் பேரைக்கூட்டிக்கொண்டுவந்து, மிகுந்த சனங்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவர்களை அவருடைய பாதத்தினிடத்தில் வைத்தார்கள். அவர்களை அவர் குணமாக்கினார்.

௩௧. ஊமையர் பேசுகிறதையும், முடவர்கள் சொஸ்தம் அடைகிறதையும், சப்பாணிகள் நடக்கிறதையும், குருடர் காண்கிறதையுஞ் சனங்கள்கண்டு, ஆச்சரியப்பட்டு, இஸ்ரவேலின் தேவனைத் துதித்தார்கள்.

௩௨. பின்பு இயேசுவானவர் தம்முடைய சீஷரைத்தம்மிடத்தில் அழைத்துச்சனங்களைக்குறித்து, * மன உருக்கமாயிருக்கிறேன். என்னத்தினாலென்றால், இவர்கள் மூன்று நாளென்னிடத்திலே தங்கி, போசனமில்லாமலிருக்கிறார்கள். இவர்கள் வழியிலே சோர்ந்துபோகும்படிக்கு, பட்டினியாய் இவர்களை அனுப்பிவிடமாட்டேனென்றார். * ௰௪: ௰௪.

௩௩. அதற்கு அவருடைய சீஷர்கள் இவ்வளவு சனங்களுக்குத்திருத்தியுண்டாகும்படிக்கு வேண்டிய அப்பங்கள் இந்த வனாந்தரத்திலே நமக்கு எப்படி யகப்படுமென்றார்கள்.

௩௪. இயேசுவானவர் உங்களிடத்தில் எவ்வளவு அப்பங்களுண்டென்றார். ஏழு அப்பங்களும், சில சிறு மீன்களுமுண்டென்று சீஷர் சொல்ல,

௩௫. அவர் சனங்களைத்தரையிலே பந்தியிருக்கச்சொல்லி,

௩௬. பின்பு அந்த ஏழு அப்பங்களையும், மீன்களையுமெடுத்து, தோத்திரஞ் செய்து அவைகளைப்பிட்டு, தம்முடைய சீஷர்களுக்குக்கொடுத்தார். சீஷர் அவைகளைச்சனங்களுக்குக்கொடுக்க,

௩௭. எல்லாருஞ் சாப்பிட்டுத்திருத்தியடைந்தார்கள். பின்பு சேஷமானவைகள் ஏழு கூடை நிறையச்சேகரித்துக்கொள்ளப்பட்டன.

௩௮. பெண்களும், பிள்ளைகளுந் தவிரப் போசனம்பண்ணின புருஷர் நாலாயிரம் பேர்.

௩௯. அவர் சனங்களை யனுப்பிவிட்டு, படவிலேறி மகதலவூரின் திசைகளிற் சேர்ந்தார்.

௰௬ அதிகாரம்.

[(௧) பரிசேயர் ஒரு அடையாளத்தைக் கேட்டது. (௬) இயேசு பரிசேயர், சதுசேயரென்பவர்களுடைய புளித்தமாவுக்குச் சீஷர்கள் எச்சரிக்கையாயிருக்கப்போதித்தது. (௰௩) கிறிஸ்துவைக்குறித்துச்சனங்கள் நினைத்த நினைவு. (௰௬) பேதுரு அவரை அறிக்கைபண்ணினது. (௨௧) இயேசு தம்முடைய மரணத்தை முன்னறிவித்து, (௨௩) அப்படிச்சம்பவிக்காதபடிக்கு, பேதுரு ஏவினதற்காக அவனைக்கடிந்துகொண்டு, (௨௪) தம்மைப்பின்பற்றுகிறவர்கள் சிலுவையைச்சுமக்கவேண்டுமென்று புத்தி சொன்னது.]

அப்பொழுது * பரிசேயரும், சதுசேயரும் அவரைச்சோதிக்கும்ப

டிக்கு, அவரிடத்தில் வந்து வானத்திலிருந்து
ஒரு அடையாளத்தைத்தங்களுக்குக்காண்
பிக்கவேண்டுமென்று கேட்டார்கள். *மாற்
அ: யச, உக.

உ. அவர்களுக்கு அவர் சொன்னது * அஸ்
தமானமாகிறபொழுது, செவ்வானந்தோன்
றியபடியால், வெளிவாங்குமென்கிறீர்கள்.
* லூக். யஉ: ருச, ருரு.

௩. அல்லாமலும் உதயமாகிறபொழுது,
வானஞ் சிவப்பாயும், மந்தாரமாயுமிருக்
கிறபடியால், இன்றைக்குப்பெருங்காற்றும்
மழையுமுண்டாகுமென்கிறீர்கள். வஞ்சக
ரே! வானத்தின்தோற்றத்தை வகையறுக்க
அறிந்திருக்கிறீர்கள். காலங்களின் அடை
யாளங்களைக்குறித்து வகையறுக்கமாட்டீர்
களா!

ச. சோரமார்க்கமுள்ளபொல்லாத * சந்
ததியாரானவர்கள் அடையாளங் கேட்கிறார்
கள். யோனாதீர்க்கதரிசியின் அடையாள
மேயன்றி, வேறொரு அடையாளமும் இவர்
களுக்குக்கொடுக்கப்படுவதில்லை யென்று
சொல்லி அவர்களை விட்டுப்போனார்.
* யஉ: ௩௯, சய,

ரு. அவருடைய சீஷர்கள் அக்கரைக்குப்
போனபொழுது, அவர்கள் அப்பங்களைக்
கூடக்கொண்டுபோக மறந்திருந்தார்கள்.
* மாற். அ: யச, உக.

௬. அப்பொழுது இயேசுவானவர் அவர்க
ளைநோக்கி, * நீங்கள் பரிசேயர், சதுசேய
ரென்பவர்களுடைய புளிப்புள்ளமாவுக்கு
விலகி மிகவும் எச்சரிக்கையாயிருங்களென்
றார். * லூக். யஉ: க.

எ. அவர்கள் நாம் அப்பங்களைக்கூடக்
கொண்டு வாராததைக்குறித்து, (இப்படிச்
சொல்லுகிறாரென்று) தங்களுக்குள்ளே
யோசனைபண்ணிக்கொண்டார்கள்.

அ. இயேசுவானவர் அதையறிந்து அவர்க
ளைநோக்கி, * அற்பவிசுவாசிகளே நீங்கள்
அப்பங்களைக்கூடக் கொண்டுவராததைக்கு
றித்து (நான் இப்படிச்சொன்னதாக) உங்க
ளுக்குள்ளே யோசனைபண்ணுகிறதென்ன!
* ௬: ௩ய.

௯. இன்னம் உங்களுக்குப்புத்தியில்லையோ!
* ஐயாயிரம் பேருக்குள்ளே (கொடுத்
த) ஐந்து அப்பங்களையும், நீங்கள் அவ்வள
வுகூடை நிறையச்சேகரித்த துண்டங்களை
யும், * யச: ய௯, உய.

ய. * நாலாயிரம் பேருக்குள்ளே (கொடுத்
த) ஏழு அப்பங்களையும், நீங்கள் அவ்வளவு
கூடை நிறைய எடுத்த துண்டங்களையும்
நினைத்துக்கொள்ளுகிறதில்லையா! * யரு:
௩௯, ௩எ.

யக. பரிசேயர், சதுசேயரென்பவர்களு
டைய புளிப்புள்ள மாவுக்குவிலகி, எச்சரிக்
கையாயிருக்கவேண்டுமென்று, நான் அப்
பத்தைக்குறித்துச்சொல்லவில்லை யென்று
நீங்கள் சிந்தித்துக்கொள்ளாமலிருக்கிறதெப்
படியென்றார்.

யஉ. அப்பொழுது அவர்கள் பரிசேயர்,
சதுசேயரென்பவர்களுடைய அப்பங்க
ளின் புளிப்புள்ளமாவுக்கல்ல அவர்களுடை
ய உபதேசத்துக்கே விலகி எச்சரிக்கையா
யிருக்கச்சொன்னாரென்று அறிந்தார்கள்.

ய௩. * பின்பு இயேசுவானவர் பிலிப்புக்கே
சாரியாவின் திசைகளில் வந்தபொழுது, அ
வர் தம்முடைய சீஷர்களை நோக்கி, மனித
னுடைய குமாரனாகிய என்னைச்சனங்கள்
ஆரென்று சொல்லுகிறார்களென்றுகேட்
டார். * மாற். அ: உஎ, உ௯. லூக். ௯:
யஅ, உய.

யச. அதற்கவர்கள் சொன்னது, சிலர் உம்
மை யோவான்ஸ்நானனென்றும், சிலர்
எலியாவென்றும், சிலர் எரேமியா அல்லது
தீர்க்கதரிசிகளிலொருவரென்றுஞ் சொல்லு
கிறார்களென்றார்கள்.

யரு. அதற்கவர் நீங்கள் என்னை ஆரென்று
சொல்லுகிறீர்களென்று கேட்டபொழுது,

ய௬. அதற்குச்சீமோன் பேதுரு சொன்ன
து, * நீர் சீவனுள்ள பராபரனுடைய குமா
ரனாகிய கிறிஸ்து என்றான். * யோவா. க:
ருய. ௬: ௬௯.

யஎ. அவனுடனே இயேசுவானவர் சொன்
னது, யோனாவின் குமாரனாகிய சீமோனே,
மாம்ச இரத்தமல்ல. பரமண்டலங்களிலி
ருக்கிற என்பிதா இதை உனக்கு வெளிப்
படுத்தினார். ஆதலால், நீ பாக்கியமுள்ள
வன்.

யஅ. மேலும் நீ பேதுருவாயிருக்கிறாய்
* இந்தக்கன்மலையின்மேல் நான் என்னு
டைய சபையைக்கட்டுவேன். பாதாளத்
தின் வாசல்களும் அதைச்செயிப்பதில்லை
யென்று உனக்குச்சொல்லுகிறேன். *எபே.
உ: உய, உ௩.

ய௯. அல்லாமலும், பரலோக இராச்சியத்
தின் திறவுகோல்களை * உனக்குக்கொடுப்
பேன். பூமியிலே நீ கட்டுவதேதோ, அது
பரலோகத்திலே கட்டப்பட்டிருக்கும்.
பூமியிலே நீ கட்டவிழப்பதேதோ, அது
பரலோகத்திலே கட்டவிழ்க்கப்பட்டிருக்கு
மென்றுசொல்லி, * யஅ: யஅ. யோவா.
உய: உ௩.

உய. * பின்பு தாம் கிறிஸ்தென்று ஒரு
வருக்குஞ் சொல்லாதபடிக்குத்தம்முடைய
சீஷர்களுக்குக்கட்டளையிட்டார். * லூக்.
௯: உக.

உக. அதுமுதல் * இயேசுவானவர் தாம்
எருசலேமுக்குப்போய்ப்பெரியோர்களாலு
ம், பிரதான் ஆசாரியராலும், வேதபாரக
ராலும், மிகுந்தபாடுபடவும், கொலைசெய்
யப்படவும், மூன்றும்நாளிலே எழுந்திருக்

கவும் வேண்டுமென்று, தம்முடைய சீஷருக்
குக்காண்பிக்கத்தொடங்கினார். * ௰௭:
௰௨, ௨௨: ௨௩. ௨௰: ௰௮, ௰௯. மாற். ௮:
௩௧, ௩௮. லூக். ௯: ௨௨, ௨௭.

௨௨. அப்பொழுது பேதுரு அவரைத்
தனியே அழைத்து, ஆண்டவரே! உம்
மிடத்தில் இரக்கமுண்டாவதாக. அப்படி
உமக்குவாராதிருப்பதாகவென்று அவரு
டனே கண்டிப்பாய்ச்சொன்னான்.

௨௩. இயேசுவானவர் திரும்பிப்பேதுருவி
னிடத்தில், ஆ, சாத்தானே! நீ என்முன்
னிராமற்போ. நீ பராபரனுக்குப்பிரிய
மானவைகளைச்சிந்தியாமல், மனிதருக்குப்பி
ரியமானவைகளைச்சிந்திக்கிறபடியினாலே எ
னக்குத்துன்பமாயிருக்கிறாயென்றுசொல்லி,

௨௪. பின்பு தம்முடைய சீஷர்களைநோக்கி,
என்னைப்பின்பற்றி நடக்க ஒருவன் * விரும்
பினால் தன்னைத்தான்வெறுத்து, தன் சிலு
வையை யெடுத்துக்கொண்டு என்னைப்பின்
பற்றக்கடவன். * ௰: ௩௮.

௨௫. என்னத்தினாலென்றால், * தன் சீவனை
இரட்சிக்கவிரும்புகிறவன் அதையிழந்து
போவான். என்னிமித்தந்தன் சீவனையிழந்
துபோகிறவன் அதைக்கண்டடைவான்.
* யோவா. ௰௨: ௨௫.

௨௬. அல்லாமலும், மனிதனானவன் உல
கம் முழுமையுஞ் சம்பாதித்துக்கொண்
டாலும் தன் சீவனை நஷ்டப்படுத்தினால், அவ
னுக்கு என்னலாபமுண்டாயிருக்கும். அன்
றியும், ஒருமனிதன் * தன்சீவனை மீட்கிற
தற்கு என்னத்தைக்கொடுப்பான். * சங்.
௪௯: ௯.

௨௭. அல்லாமலும், * மனிதனுடைய கு
மாரன் தம்முடைய பிதாவின் மகிமையைப்
பொருந்தி, தம்முடைய தூதரோடுங்கூட
வருவான். அப்பொழுது † அவனவனுடைய
செய்கையின்படியே அவனவனுக்குப்பலன்
அளிப்பான். * ௨௫: ௩௧. † உரோ. ௨: ௬.
௨ கொரி. ௫: ௰.

௨௮. இங்கே நிற்கிறவர்களிற் சிலர் மனித
னுடைய குமாரன் தம்முடைய இராச்சி
யத்தில் வருவதைக்காண்கிறதற்கு முன்னே
மரணத்தை அடைவதில்லையென்று மெய்
யாய் உங்களுக்குச்சொல்லுகிறேனென்றார்.

௰௭ அதிகாரம்.

[(௧) கிறீஸ்து மறுரூபப்பட்டது. (௰௪)
அவர் சந்திரரோகியைக்குணமாக்கி, (௨௨)
தம்முடையபாடுகளைமுன்னறிவித்தது, (௨௪)
தீர்வையைச்செலுத்தினது.]

* ஆறுநாளுக்குப்பின்பு இயேசுவான
வர் தனித்திருக்கும்படி பேதுரு
வையும், யாக்கோபையும், அவனுடைய தம்
பியாகிய யோவானையுங் கூட்டிக்கொண்டு
உயர்ந்தமலையின்மேற்போய், * மாற். ௯:
௨, ௯. லூக். ௯: ௨௮, ௩௬.

௨. அங்கே அவர்களுக்குமுன்பாக மறுரூ
பமானார். அவருடைய முகஞ் சூரியனைப்
போலப்பிரகாசித்தது. அவருடைய வஸ்
திரங்கள் ஒளியைப்போல வெண்மையா
யின.

௩. அப்பொழுது மோசே, எலியா என்
பவர்கள் அவரோடே பேசிக்கொள்ளுகிற
வர்களாய் அவர்களுக்குக்காணப்பட்டார்
கள்.

௪. அப்பொழுது பேதுரு இயேசுவை
நோக்கி, ஆண்டவரே, நாம் இங்கேயிருக்
கிறது நல்லது. உமக்குச்சித்தமானால் இங்
கே உமக்கும், மோசேயுக்கும், எலியாவுக்
கும் ஓரோருகுடிலாக மூன்று குடில்களை
யுண்டாக்குவோமென்றான்.

௫. அப்படி அவன் பேசுகையில் நடந்த
தென்னவெனில், ஒளியுள்ளமேகம் அவர்கள்
மேல் நிழலிட்டதுமல்லாமல், * இவர் எ
னக்கு அன்பாயிருக்கிற என்னுடைய குமா
ரன். இவரிற் பிரியமாயிருக்கிறேன். † இவ
ருக்குச்செவிகொடுங்களென்று அந்த மே
கத்திலிருந்து சத்தமுண்டாயிற்று. * ௩:
௰௭. ௨ பேது. ௧: ௰௭, ௰௮. ஏசா. ௪௨:
௧. † ௫ மோ. ௰௮: ௰௫.

௬. சீஷர் அதைக்கேட்டு, முகங்குப்புற
விழுந்து மிகவும் பயந்தார்கள்.

௭. அப்பொழுது இயேசுவானவர் வந்து
அவர்களைத்தொட்டு, எழுந்திருங்கள் பயப்
படாதிருங்களென்று சொன்னார்.

௮. அவர்கள் தங்கள் கண்களை, உயர்த்து
கிறபொழுது, இயேசுவையேயன்றி, மற்
றொருவரையுங் காணவில்லை.

௯. பின்பு அவர்கள் மலையிலிருந்திறங்குகி
றபொழுது, * இயேசுவானவர் அவர்களை
நோக்கி, மனிதனுடைய குமாரன் மரித்
தோரிலிருந்தெழுந்திருக்கிறவரைக்கும் நீங்
கள் இந்தத்தரிசனையை ஒருவருக்குஞ்சொல்
லவேண்டாமென்று கட்டளையிட்டார். *
௰௬: ௨௰.

௰. அப்பொழுது அவருடைய சீஷர்கள்
அவரைநோக்கி, அப்படியானால், * முத
லாவது எலியாவரவேண்டுமென்று வேத
பாரகர் எப்படிச்சொல்லுகிறார்களென்றார்
கள். * ௰௧: ௰௪. மல். ௪: ௫. மாற். ௯:
௰௧, ௰௩.

௰௧. அதற்கு இயேசுவானவர் சொன்னது,
முன்பு எலியா வந்து, * எல்லாவற்றையுஞ்
சீர்ப்படுத்தவேண்டுமென்பது மெய்தான். *
லூக். ௧: ௰௭.

௰௨. அல்லாமலும் எலியாவந்தாயிற்றென்
று உங்களுக்குச்சொல்லுகிறேன். அவனை
அவர்கள் அங்கிகரித்துக்கொள்ளாமல், *
அவனுக்குத்தங்கள் இஷ்டப்படிசெய்தார்

கள். அப்படி மனிதனுடைய குமாரனும்
அவர்களாற் பாடுபடுவானென்றார். * ௰௪:
௩, ௰௨.
௰௩. அப்பொழுது அவர் யோவான்ஸ்நா
னனைக்குறித்துத்தங்களுடனே பேசினாரென்
று சீஷர் அறிந்தார்கள்.
௰௪. * பின்பு அவர்கள் சனக்கூட்டத்தி
னிடத்திற் சேர்ந்தபொழுது, ஒரு மனிதன்
அவரிடத்தில் வந்து, அவர் முன்பாக முழங்
காற்படியிட்டு, * மாற். ௯: ௰௪, ௨௯.
லூக். ௯: ௩௭, ௪௩.
௰௫. ஆண்டவரே, என் மகனுக்கிரங்கும்,
அவன் சந்திரரோகியாய்க்கொடியவேத
னைப்படுகிறான். எப்படியென்றால், அடிக்
கடி தீயிலேயும், அடிக்கடி சலத்திலேயும்
விழுகிறான்.
௰௬. அவனை உம்முடைய சீஷரிடத்திற்
கொண்டுவந்தேன். அவர்களுக்கு அவனைக்
குணமாக்கத்திராணியில்லையென்றான்.
௰௭. அதற்கு இயேசுவானவர்சொன்னது,
ஆ, விசுவாசமில்லாத மாறுபாடுள்ள சந்த
தியாரே, எதுவரைக்கும் உங்களோடிருப்
பேன். எதுவரைக்கும் உங்களிற்பொறு
மையாயிருப்பேன். அவனை என்னிடத்திற்
கொண்டுவாருங்களென்றார்.
௰௮. அவனைக்கொண்டுவந்தபொழுது, இ
யேசுவானவர் அவனிலுள்ளபசாசை அதட்
டினார். உடனே அது அவனை விட்டுப்போ
யிற்று. அந்தப்பிள்ளை அந்நேரமே சுகம்
அடைந்தான்.
௰௯. பின்பு சீஷர்கள் மாத்திரம் இயேசு
வினிடத்தில் வந்து நாங்கள் அதைத் துரத்
தும்படிக்கு ஏன் எங்களுக்குத்திராணியில்
லை யென்றார்கள்.
௨௰. அதற்கு இயேசுவானவர், உங்கள்
அவிசுவாசத்தினாலே (திராணியில்லை.) மே
லும் ஒரு கடுகுவிதை அவ்வளவு விசுவா
சம்மாத்திரம் உங்களுக்குண்டானால், * நீங்
கள் இந்தமலையைநோக்கி இவ்விடம்விட்டு
அப்புறம் போவென்றுசொல்ல, அது
போம். அல்லாமலும் உங்களாற்கூடாத
காரியமொன்றுமிருப்பதில்லையென்று மெய்
யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன். *
௨௧: ௨௧.
௨௧. ஆகிலும் செபத்தினாலும், உபவாசத்
தினாலுமேயன்றி (வேறுவிதமாய்) இந்தச்
சாதியைத்துரத்தப்படாதென்றார்.
௨௨. * அல்லாமலும் அவர்கள் கலிலே
யாநாட்டிலே சஞ்சரித்திருந்த காலத்தி
லே இயேசுவானவர் அவர்களைநோக்கி, ம
னிதனுடையகுமாரன் மனிதர்களுடையகை
யில் ஒப்புக்கொடுக்கப்படுவான். * மாற்.
௯: ௩௰, ௩௨. லூக். ௯: ௪௩, ௪௫.
௨௩. அவர்கள் அவனைக்கொலைசெய்வார்
கள். பின்பு மூன்றும்நாளிலே எழுந்திருப்
பானென்றார். அவர்கள் மிகுந்த துக்கம்
அடைந்தார்கள்.
௨௪. அவர்கள் கப்பர்நாகூமூரில் வந்த
பொழுது வரிப்பணத்தைச்சேர்க்கிறவர்கள்
பேதுருவினிடத்தில் வந்து உங்கள் போத
கர் வரிப்பணத்தைக்கொடுக்கிறதில்லையா
வென்றார்கள். கொடுக்கிறாரென்றான்.
௨௫. பின்பு அவன் வீட்டிலே வந்தபொழு
து அவன் (பேசுகிறதற்கு) முன்னே இயே
சுவானவர் அவனைநோக்கி, சீமோனே பூமி
யின் இராசாக்கள் ஆர்கையிலே தீர்வை
அல்லது வரிவாங்குகிறார்கள்! தங்கள் பிள்
ளைகள் கையிலோ அந்நியர் கையிலோ இது
உனக்கெப்படித்தோன்றுகின்றதென்றார்.
௨௬. அந்நியர்கையில் வாங்குகிறார்களென்
று பேதுரு சொன்னான். அதற்கு இயேசு
வானவர் அப்படியானாற் பிள்ளைகள் செலுத்
தவேண்டுவதில்லையே.
௨௭. ஆனாலும் நாம் அவர்களுக்கு வித
னம்வரப்பண்ணாதபடிக்கு, நீ கடலிடத்துக்
குப்போய்த்தூண்டிலைப்போட்டு முதலாவ
து எழும்புகிறமீனையெடுத்து அதின்வாயைத்
திறந்துபார். அதிலே ஒருவெள்ளிக்காசைக்
காண்பாய். அதை யெடுத்துவந்து எனக்
காகவும், உனக்காகவும் அவர்களுக்குக்
கொடு என்றார்.

௰௮ அதிகாரம்.

[(௧) கிறிஸ்துத்தம்முடையசீஷர்கள் தாழ்
மையுள்ளவர்களாயும், கெடுதிசெய்யாதவர்
களாயுமிருக்கவும், (௭) இடறல்களை விலக்
கிச்சிறியவர்களை அசட்டைபண்ணாமலிருக்
கவும் எச்சரித்து, (௰௫) சகோதரர் நமக்
குத்தப்பிதஞ்செய்தால் அவர்களுக்கு இன்ன
தைச்செய்யவேண்டுமென்றும், (௨௧) இத்
தனைதரம் அவர்களைமன்னிக்கவேண்டுமென்
றும் போதித்து, (௨௩) ஊழியக்காரரிடத்
தில்கணக்குவாங்கி, (௩௨) தன்தோழன்மேல்
இரக்கத்தைப்பாராட்டாதவனுக்குத்தண்ட
னைசெய்த இராசாவினுடைய உவமையி
னாலே அதை விஸ்தரித்தது.]

அக்காலத்திலே சீஷர்கள் இயேசுவி
னிடத்துக்கு வந்து, பரலோக இ
ராச்சியத்திலே எவன் பெரியவனாயிருப்பா
னென்றார்கள். * மாற். ௯: ௩௩. லூக். ௯:
௪௬, ௪௮.
௨. அப்பொழுது இயேசுவானவர் ஒருபிள்
ளையைத்தம்மிடத்தில் அழைத்து, அதை ய
வர்களுக்குள்ளே நிறுத்திச்சொன்னதாவது;
௩. நீங்கள் மனந்திரும்பி, * பிள்ளைகளைப்
போலாகாவிட்டாற் பரலோக இராச்சியத்
திற் பிரவேசிக்கமாட்டீர்களென்று மெய்
யாய் உங்களுக்குச்சொல்லுகிறேன். * லூக்.
௰௮: ௰௬, ௰௭. ௧ பேது. ௨: ௩.
௪. ஆகையால், இந்தப்பிள்ளையைப்போலத்

தன்னைத்தாழ்த்துகிறவனே பரலோக இராச்
சியத்திற் பெரியவனாயிருப்பான்.
௫ அல்லாமலும் இப்படிப்பட்ட ஒருபிள்
ளையை என் நாமத்தினாலே யேற்றுக்கொள்
ளுகிறவன் என்னை யேற்றுக்கொள்ளுகிறான்.
௬. * என்மேல் விசுவாசமாயிருக்கிற இந்
தச்சிறியரிலொருவன் குற்றஞ்செய்வதற்குக்
காரணமானவனெவனோ, அவனுடையகழுத்
தில் ஏந்திரக்கல்லைக்கட்டி அவனைச்சமுத்தி
ரத்துக்குள்ளே யமிழ்த்தினால் அவனுக்கு நல
மாயிருக்கும். * லூக். ௰௭: ௧; ௨.
௭. ஐயோ கெடுத்தலினிமித்தம் உலகத்
துக்கு வேதனைவரும். கெடுத்தல் அவசிய
மாய்வரவேண்டும். ஆனாலும் ஐயோ கெடுத்
தலைச்செய்கிறவனுக்கு வேதனைவரும்.
௮. ஆதலால், * உன்கையாவது, உன்
காலாவது உன்னைக்கெடுக்கிறதற்கு ஏதுவா
னால் அவைகளைத்தறித்தெறிந்துபோடு. நீ
இரண்டுகையை அல்லது இரண்டுகாலையு
டையவனாய் நித்திய அக்கினியிலே தள்ளப்
படுவதிலுஞ் சப்பாணியாய், அல்லது ஊ
னனாய் (நித்திய) சீவனுள்ள இடத்திற் பிர
வேசிக்கிறதே உனக்கு நன்மையாயிருக்கும்.
* ௫: ௨௯, ௩௰.
௯. மேலும் உன்னுடைய கண் உன்னைக்
கெடுக்கிறதற்கு ஏதுவானால், அதைப்பிடுங்
கி யெறிந்துபோடு. நீ இரண்டு கண்ணையு
டையவனாய் எரிநரகத்திலே தள்ளப்படுவ
திலும் ஒற்றைக்கண்ணனாய் (நித்திய) சீவ
னுள்ள இடத்திற்பிரவேசிக்கிறதே உனக்கு
நன்மையாயிருக்கும்.
௰. இந்தச்சிறியரில் ஒருவனையும் அசட்டை
பண்ணாதபடிக்குப்பாருங்கள். * என்னத்
தினாலென்றால், அவர்களுக்கேற்ற தேவதூ
தர்கள் பரமண்டலங்களிலே என் பரமபி
தாவினுடைய சமுகத்தை எப்பொழுதுந்
தரிசிக்கிறார்களென்று உங்களுக்குச்சொல்
லுகிறேன். * சங். ௩௪: ௮.
௰௧. அல்லாமலும், * மனிதனுடையகுமா
ரன் கெட்டுப்போனதை இரட்சிக்கவந்தான்.
* லூக். ௰௯: ௰.
௰௨. உங்களுக்கெப்படித்தோன்றுகின்ற
து. * ஒரு மனிதனுக்குண்டாயிருக்கிற நூ
று ஆடுகளில் ஒன்று சிதறிப்போனால், அவன்
தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைக
ளில் விட்டுப்போய்ச்சிதறிப்போனதைத்தே
டுவானல்லவோ! * லூக். ௰௫: ௪.
௰௩. இது உங்களுக்கெப்படித்தோன்று
கின்றது! அவன் அதைக்கண்டுபிடித்தாற் சி
தறிப்போகாத தொண்ணூற்றொன்பதிலும்
அதைக்குறித்து அதிகமாய்ச்சந்தோஷிப்ப
டுவானென்று மெய்யாகவே உங்களுக்குச்
சொல்லுகிறேன்.
௰௪. அந்தப்படி இந்தச்சிறியரில் ஒருவ
னாகிலுங் கெட்டுப்போகும்படிக்குப்பரமண்
டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவுக்குச்சித்
தமில்லை.
௰௫. உன்சகோதரன்உனக்குவிரோதமாய்க்
குற்றஞ்செய்தால், நீபோய், * அவனோடே
மாத்திரமிருந்து அவனைக்கடிந்துகொள்.
அவன் உனக்குச்செவிகொடுத்தால், ஆதாய
மாக அவனைப்பெற்றுக்கொள்வாய். * ௩
மோ. ௰௯: ௰௭.
௰௬. அவன் செவிகொடாமலிருந்தால்,
சங்கதிகளெல்லாம் * இரண்டு மூன்று சாட்
சிகளுடைய வாக்கினால் நிலைவரப்படும்படிக்
கு, நீ இரண்டொருவரைக்கூட்டிப்போ.
* ௫ மோ. ௰௯: ௰௫.
௰௭. அவன் அவர்களுக்குங் கீழ்ப்படியாதி
ருந்தால், நீ அதைச்சபைக்கு அறிவிக்க
வேண்டும். அவன் சபையையும் அசட்டை
பண்ணினால், நீ அவனை அஞ்ஞானியைப்
போலவும், ஆயக்காரனைப்போலவுமெண்
ணுவாயாக.
௰௮. * பூமியிலே நீங்கள் எவைகளைக்கட்டு
வீர்களோ, அவைகள் பரலோகத்திலே கட்
டப்பட்டிருக்கும். பூமியிலே எவைகளை அ
விழ்ப்பீர்களோ? அவைகள் பரலோகத்திலே
அவிழ்க்கப்பட்டிருக்குமென்று மெய்யாய்
உங்களுக்குச்சொல்லுகிறேன். * ௰௬: ௰௯.
௰௯. * அல்லாமலும் பூமியிலே எந்தக்கா
ரியத்தைக்குறித்தும், உங்களில் இரண்டு
பேர் வேண்டிக்கொள்ள ஒருமைப்பட்டால்,
அது பரமண்டலங்களிலிருக்கிற என் பிதா
வினால், அவர்களுக்குண்டாகுமென்று உங்க
ளுக்குச்சொல்லுகிறேன். * ௧ யோவா. ௩.
௨௨. ௫: ௰௪.
௨௰. என்னத்தினாலென்றால், இரண்டுபே
ராவது, மூன்றுபேராவது என்னுடைய நா
மத்திலே எங்கே கூடிவந்திருக்கிறார்களோ
அங்கே * அவர்களுக்குள்ளே யிருக்கிறேன்
என்றார். * ௨௮: ௨௰.
௨௧. அப்பொழுது பேதுரு அவரிடத்தில்
வந்து, ஆண்டவரே! என் சகோதரன் எ
னக்கு விரோதஞ் செய்தால், அவனுக்கு
நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும்,
ஏழுதரமட்டுமோவென்றான்.
௨௨. இயேசுவானவர் அவனுக்குச்சொன்
னது, * ஏழுதரமட்டுமல்ல. ஏழெழுபது
தரமென்று உனக்குச்சொல்லுகிறேன். *
லூக். ௰௭: ௪.
௨௩. எப்படியெனில், பரலோக இராச்சி
யந் தன் ஊழியக்காரருடனே கணக்குப்
பார்க்கச்சித்தமான இராசனுக்கொப்பாயி
ருக்கின்றது.
௨௪. அவன் கணக்குப்பார்க்கத்தொடங்கி
னபொழுது, பதினாயிரந் தாலந்து கடன்
பட்டவனை அவனுக்குமுன்பாகக்கொண்டு
வந்தார்கள்.
௨௫. அவன் கடனைத்தீர்க்கத்திராணியில்

லாதபடியால், ஆண்டவன் அவனையும், அவனுடைய மனைவியையும், பிள்ளைகளையும், அவனுக்குண்டான யாவையும் விற்றுக்கடனைத்தீர்க்கக்கட்டளையிட்டான்.

௨௬. அப்பொழுது அந்த ஊழியக்காரன் விழுந்து வணங்கி, ஆண்டவனே! எல்லாவற்றையும், உமக்குக்கொடுத்துத்தீர்க்கிறேன். நீர் எனக்கு இரங்கிப்பொறுக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டான்.

௨௭. அந்தப்படி ஆண்டவன் அந்த ஊழியக்காரனுக்கு இரங்கி, அவனை விடுதலைபண்ணிக்கடனையும் அவனுக்கு மன்னித்தான்.

௨௮. பின்பு அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னோடேகூட வேலைசெய்து, தனக்கு நூறு தேநாரியபணங் கடன்பட்டிருந்த ஒருவனைக்கண்டு, அவனைப்பிடித்துத்தொண்டையைநெரித்து, நீ பட்ட கடனை எனக்குக்கொடுத்துத்தீரென்றான்.

௨௯. உடனே அந்த ஊழியக்காரன் அவனுடைய கால்களினருகே விழுந்து, எல்லாவற்றையும் உனக்குக்கொடுத்துத்தீர்க்கிறேன். எனக்கிரங்கிப்பொறுக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டான்.

௩௰. ஆனாலும் அவன் மனதில்லாமற்போய் அவன்பட்ட கடனைத்தீர்க்குமளவும், அவனைக்காவலிற் போடுவித்தான்.

௩௧. அந்த நடக்கைகளை மற்ற ஊழியக்காரர் கண்டு மிகுந்த துக்கம் அடைந்து, ஆண்டவனிடத்துக்குப்போய் நடந்த எல்லாவற்றையும் அவனுக்கறிவித்தார்கள்.

௩௨. அப்பொழுது ஆண்டவன் அவனை அழைப்பித்து, அவனைநோக்கிப்பொல்லாத ஊழியக்காரனே! நீ யென்னை வேண்டிக்கொண்டபடியினாலே நான் அந்தக்கடன் யாவையும் உனக்கு மன்னித்தேனே.

௩௩. நான் உனக்கிரங்கினதுபோல நீயும் உன்னோடேகூட ஊழியஞ்செய்கிறவனுக்கு இரங்கவேண்டுமல்லவோ என்று சொல்லி,

௩௪. கோபம் அடைந்து, * அவன்பட்ட கடன் யாவையுந் தனக்குக்கொடுத்துத்தீர்க்குமளவும், அவனை உபாதிக்கிறவர்களுக்கு ஒப்புக்கொடுத்தான். * ௫: ௨௫. யாக். ௨: ௰௩.

௩௫. * அவனவன் தன் சகோதரன்செய்த தப்பிதங்களை நீங்கள் மனப்பூருவமாய் மன்னியாமற்போனால், இப்படிப்போல உங்கள் பரமபிதா உங்களுக்குஞ் செய்வாரென்றார். * ௬: ௰௫. மாற். ௰௧: ௨௫, ௨௬.

௰௯ அதிகாரம்.

[(௨) கிறிஸ்து வியாதிஸ்தரைக்குணமாக்கி, (௩) பெண்சாதியைத்தள்ளிப்போடுவதைக்குறித்துப்பரிசேயருக்கு உத்தரவுசொல்லி, (௰) விவாகம் வேண்டியகாலத்தைக்காண்பித்து, (௰௩) சிறுபிள்ளைகளையேற்றுக்கொண்டு, (௰௬) ஒரு வாலிபனுக்கு நித்திய சீவனை அடையும் வழியையும், (௨௰) உத்தம சற்குணனாயிருக்கும் விதத்தையும் படிப்பித்து, (௨௩) ஐசுவரியவான்கள் பராபரனுடைய இராச்சியத்துக்குள் பிரவேசிக்கிறது அரிதென்று சீஷர்களுக்குச் சொல்லி, (௨௭) தம்மைப்பின்பற்றும்படிக்கு எதையும் வெறுக்கிறவர்களுக்குப்பலனுண்டாகுமென்று வாக்குத்தத்தம்பண்ணினது.]

* மேற்சொல்லிய உபதேசங்களை இயேசுவானவர் சொல்லி முடித்தபின்பு, அவர் கலிலேயாநாட்டை விட்டு, யோர்தானுக்கருகேயிருக்கிற யூதேயாநாட்டின் எல்லைகளுக்குப்போனார். * மாற். ௰: ௧—௰௨.

௨. அநேக சனங்கள் அவர் பின்சென்றார்கள். அவ்விடத்திலே அவர்களிலுள்ள (பிணியாளிகளை) அவர் குணமாக்கினார்.

௩. அப்பொழுது சில பரிசேயர் அவரைச் சோதிக்கும்படிக்கு, அவரிடத்தில் வந்து புருஷனானவன் தன் மனைவியை எந்த நிமித்தமானாலுந் தள்ளிவிடலாமாவென்று கேட்டார்கள்!

௪. அதற்கவர் சொன்னது, * ஆதியிலே சிருஷ்டிகர் மனிதரை உண்டாக்கினபொழுது, ஒரு ஆணையும், ஒருபெண்ணையும் உண்டாக்கினாரென்கிறதையும், * ௧ மோ. ௧: ௨௭.

௫. * இதினிமித்தம் ஒருவன் தகப்பனையும், தாயையும் விட்டுத்தன் மனைவியுடனே இசைந்திருப்பான். அவ்விருவரும் ஒரே சரீரத்தைப்போலிருப்பார்களென்று, அவர் சொன்னதையும் நீங்கள் வாசிக்கவில்லையோ! * ௧ மோ. ௨: ௨௪.

௬. அப்படி யிருக்கிறபடியினாலே அவர்கள் இருவராயிராமல், ஒரே சரீரத்தைப் போலிருக்கிறார்கள். ஆதலாற் பராபரன் இணைத்ததை மனிதர் பிரிக்கக்கூடாதென்றார்.

௭. அவர்கள் சொன்னது அப்படியானால், * தள்ளுதலின் சீட்டைக்கொடுத்து, அவளைத்தள்ளிவிடும்படிக்கு, மோசே யென்பவர் ஏன் கட்டளையிட்டாரென்றார்கள். * ௫ மோ. ௨௪: ௧.

௮. அதற்கு அவர் சொன்னது, உங்களிருதயங் கடினமானபடியால், நீங்கள் உங்கள் மனைவிகளைத்தள்ளிவிடும்படிக்கு, மோசே உங்களுக்கிடங்கொடுத்தார். ஆதிமுதலோ அப்படி யிருந்ததில்லை.

௯. ஆகையால், * எவனானாலும் வேசிமார்க்கமாய் நடவாமலிருக்கிற மனைவி

யைத்தள்ளிவிட்டு, வேறொருத்தியை விவாகம்பண்ணினால், அவன் விபசாரம்பண்ணுகிறான். தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரம்பண்ணுகிறானென்று உங்களுக்குச்சொல்லுகிறேனென்றார். * ௫: ௩௨. லூக். ௰௬: ௰௮.

௰. அவருடைய சீஷர்கள் அவருடனே சொன்னது, விவாகம்பண்ணின புருஷனுடைய காரியமிப்படியானால், விவாகம்பண்ணுகிறது நன்மையல்லவென்றார்கள்.

௰௧. அதற்கு அவர் சொன்னதாவது; திராணி பெற்றவர்களேயன்றி, மற்ற எவர்களானாலும், (நீங்கள் சொன்ன) வசனத்தின்படி செய்யமாட்டார்கள்.

௰௨. அண்ணகர்களுண்டு, சிலர் அப்படிப் பட்டவர்களாய்ப்பிறந்தார்கள். சிலர் மற்ற மனிதர்களாலே அண்ணகர்களாக்கப்பட்டார்கள். * சிலர் பரலோக இராச்சியத்துக்காகத்தங்களை அண்ணகர்களாக்கினார்கள். அப்படிப்பற்றிக்கொள்ளத்திராணியுள்ளவனெவனோ அவன் அப்படிப்பற்றிக்கொள்ளக்கடவனென்றார். * ௧ கொரி. ௭: ௩௨, ௩௫.

௰௩. * அப்பொழுது அவர் பிள்ளைகளின்மேற் கைகளைவைத்து, அவர்களுக்காகச்செபம்பண்ணும்படிக்கு, அவரிடத்திற் கொண்டுவந்தார்கள். அவர்களைச்சீஷர் அதட்டினார்கள். * மாற். ௰: ௰௩, ௰௬. லூக். ௰௮: ௰௫, ௰௭.

௰௪. இயேசுவானவர் (அதைக்கண்டு) சொன்னதாவது; பிள்ளைகள் என்னிடத்திலே வருகிறதற்குத்தடைபண்ணாமல் இடங்கொடுங்கள். * பரலோக இராச்சியம் அப்படிப்பட்டவர்களுடையதாய் இருக்கின்றதேயென்று சொல்லி, * ௰௮: ௨, ௪.

௰௫. அவைகள்மேற் கைகளைவைத்தப்பின்பு அவ்விடம்விட்டுப்புறப்பட்டுப்போனார்.

௰௬. அப்பொழுது ஒருவன்வந்து, அவரை நோக்கி, நல்லபோதகரே! * நித்தியசீவனையடையும்படிக்கு, நான் எந்த நன்மையைச்செய்யவேண்டுமென்றான். * லூக். ௰: ௨௫. மாற். ௰: ௰௭, ௨௭. லூக். ௰௮: ௰௮, ௨௭.

௰௭. அவனுடனே அவர் சொன்னது, நீ என்னை நல்லவனென்று ஏன் சொல்லுகிறாய்! பராபரனாகிய ஒருவரேதவிர நல்லவன் ஒருவனுமில்லையே. நீ * சீவனிற் பிரவேசிக்க விரும்பினாற் கற்பனைகளைக்கைக்கொள்ளென்றார். * லூக். ௰: ௨௬, ௨௮.

௰௮. அவைகளெவைகளென்று, அவன் கேட்டான். அதற்கு இயேசுவானவர் சொன்னது; கொலைசெய்யாதிருப்பாயாக, விபசாரம்பண்ணாதிருப்பாயாக, களவுசெய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக,

௰௯. உன் தகப்பனையும், தாயையுங்கனம்பண்ணுவாயாக, உன்னைப்போலப்பிறனில் * அன்புகூர்வாயாக என்பவைகளேயென்றார். * ௩ மோ. ௰௯: ௰௮.

௨௰. அந்த வாலிபன் சொன்னது, இவைகளையெல்லாம் நான் சிறுவயதுமுதற் கைக்கொண்டிருக்கிறேன். நான் இன்னஞ்செய்யவேண்டியதென்னவென்றான்

௨௧. இயேசுவானவர் சொன்னது, நீ பூரணசற்குணனாயிருக்கவிரும்பினால், நீ போய் * உனக்குண்டாயிருக்கிறவைகளை விற்றுப் பரலோகத்திலே உனக்குப்பொக்கிஷமுண்டாயிருக்கும்படிக்கு, தரித்திரருக்குக்கொடுத்துப்பின்புவந்து, என் பின்னேசெல்லு என்றார். * ௬: ௨௰. லூக். ௰௨: ௩௩. ௧ தீமோ. ௬: ௰௮, ௰௯.

௨௨. வாலிபன் இந்த வசனத்தைக்கேட்டு, மிகுந்த ஆஸ்திகளையுடையவனானபடியினாலே துக்கத்தோடே போய்விட்டான்.

௨௩. அப்பொழுது இயேசுவானவர் தம்முடைய சீஷரைநோக்கி, ஐசுவரியமுள்ளவன் பரலோக இராச்சியத்திற் பிரவேசிக்கிறது அரிதாயிருக்கின்றதென்று, மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன்.

௨௪. அல்லாமலும், ஐசுவரியவான் பராபரனுடைய இராச்சியத்திற் பிரவேசிக்கிறதைப்பார்க்கிலும், ஒட்டகம் ஊசியின் காதிலே நுழைகிறதே எளிதாயிருக்கின்றதென்று உங்களுக்குச்சொல்லுகிறேனென்றார்.

௨௫. அவருடைய சீஷர்கள் அதைக்கேட்டு மிகவும் பிரமித்து, அப்படியானால் இரட்சிக்கப்படுகிறவர்கள் யாரென்றார்கள்.

௨௬. இயேசுவானவர் அவர்களைப்பார்த்துச்சொன்னதாவது; மனிதரால் இது கூடாத காரியந்தான். * பராபரனோ எந்தக் காரியத்தையுஞ் செய்ய வல்லவரென்றார். * யோபு ௪௨: ௨. எரே. ௩௨: ௰௭. லூக். ௧: ௩௭.

௨௭. * அப்பொழுது பேதுரு அவருடனே சொன்னதாவது; இதோ நாங்களெல்லாவற்றையும்விட்டு, உம்மைப்பின்பற்றி வந்தோம். அதற்காக எங்களுக்கென்ன பலன் வருமென்றான். * மாற். ௰: ௨௮, ௩௧. லூக். ௰௮: ௨௮, ௩௰.

௨௮. இயேசுவானவர் சொன்னது, (சகலமும்) புதிதாக்கப்படுங் காலத்திலே மனிதனுடைய குமாரன் தனது மகிமையுள்ள பத்திராசனத்தில் வீற்றிருக்கும்பொழுது, என்னைப்பின்பற்றி வந்த நீங்களும் * இஸ்ரவேலராகிய பன்னிரண்டு கோத்திரங்களுக்கு நியாயத்தீர்ப்புக்கொடுக்கிறவர்களாகப் பன்னிரண்டு பத்திராசனங்களிலிருப்பீர்களென்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன். * லூக். ௨௨: ௩௰.

௨௯. * அல்லாமலும், என் நாமத்தினிமித்தம் வீட்டையாகிலும், சகோதரரையாகிலும், சகோதரிகளையாகிலும், தகப்பனையாகிலும், தாயையாகிலும், மனைவியையாகிலும், பிள்ளைகளையாகிலும், நிலங்களையாகிலும் விட்டவனெவனோ அவன் நூறத்தனையாய்ப்பலன் அடைந்து, நித்திய ஜீவனையுஞ் சுதந்தரித்துக்கொள்வான். * ௰: ௩௭.

௩௰. ஆகிலும் * முந்தினோராகிய அநேகர் பிந்தினோராயிருப்பார்கள். பிந்தினோராகிய (அநேகர்) முந்தினோராயிருப்பார்கள்.— * ௨௰: ௰௬. லூக். ௰௩: ௩௰.

௨௰ அதிகாரம்.

[(௧) திராக்ஷத்திராட்சத்தோட்டத்தில் வேலைசெய்கிறவர்களின் உவமையினால் பராபரன் ஒருவனுக்குங் கடனாளியல்லவென்று காண்பித்து, (௰௭) தம்முடைய பாடுகளை முன்னறிவித்து, (௨௰) செபெதேயுவின் பிள்ளைகளின் தாயாருக்கு அருளிச்செய்த உத்தரவினால் தம்முடைய சீஷர்கள் மனத்தாழ்மையாயிருக்கப்படிப்பித்து, (௩௰) இரண்டு குருடருக்குப்பார்வையைக்கொடுத்தது.]

அதெப்படியெனில், பரலோக இராச்சியத்தின் (ஆளுகை) ஒரு வீட்டெசமானுடைய (நடக்கைக்) கொப்பாயிருக்கின்றது. அவன் தன் திராட்சத்தோட்டத்திலே வேலைசெய்யக்கூலிக்காரரை அழைத்துக்கொண்டு வரும்படிக்கு,

௨. அதிகாலையிலே புறப்பட்டு, சில கூலிக்காரரைக்கண்டு, நாளொன்றுக்கொருபணங் கூலி தீர்மானம்பண்ணி, அவர்களைத்தன் திராட்சத்தோட்டத்திற்கனுப்பிவந்தான்.

௩. மூன்றும் மணிவேளையிலேயும் அவன் புறப்பட்டு, கடைத்தெருவிலே வீணராய் நிற்கிற வேறு சிலரைக்கண்டு,

௪. நீங்களுந் திராட்சத்தோட்டத்திற் போங்கள். நியாயமானபடி உங்களுக்குக் கூலிதருவேனென்று அவர்களுக்குச்சொன்னான். அவர்கள் போனார்கள்.

௫. ஆறும், ஒன்பதாம் மணிவேளைகளிலே அவன் திரும்பப்புறப்பட்டு அப்படிப்போலச்செய்தான்.

௬. பின்பு, பதினோராம் மணிவேளையிலே அவன் புறப்பட்டு, வீணராய் நிற்கிற வேறே சிலரைக்கண்டு, பகல் முழுவதும் நீங்கள் இங்கே ஏன் வீணராய் நிற்கிறீர்களென்று கேட்டான்.

௭. அவர்கள் ஒருவரும் எங்களை வேலை கொள்ளவில்லையென்றார்கள். அவன் சொன்னது, நீங்களுந் திராட்சத்தோட்டத்திற்குப் போங்கள். நியாயமானபடி கூலியை வாங்கிக்கொள்வீர்களென்றான்.

௮. அஸ்தமனமானபொழுது திராட்சத்தோட்டத்திற்கு எசமானானவன் தன் காரியக்காரனுடனே சொன்னது, நீ கூலிக்காரரையழைத்து, பின்பு வந்தவர்களைத்தொடங்கி, முன்பு வந்தவர்கள் வரைக்குங் கூலியைக்கொடு என்றான்.

௯. அந்தப்படி, பதினோராம் மணிவேளையில் வேலைகொள்ளப்பட்டவர்கள்வந்து ஆளுக்கு ஒவ்வொரு பணமாகப்பணத்தை வாங்கிக்கொண்டார்கள்.

௰. கடைசியில் வேலைக்கு வந்தவர்களுஞ் சேர்ந்து, தங்களுக்கு அதிககூலிவருமென்றெண்ணினார்கள். அவர்களும் ஆளுக்கு ஒவ்வொரு பணமாகப்பணத்தைவாங்கினார்கள்.

௰௧. அதை வாங்குகிறபொழுது அவர்கள் வீட்டெசமானை நோக்கி,

௰௨. பின்னேவந்த இவர்கள் ஒருமணி நேரமாத்திரம் வேலைசெய்தார்கள். இவர்களைப்பகலின் பாரத்தையும், வெயிலையுஞ் சுமந்த எங்களுக்குச்சமனாக்கினீரென்று முறுமுறுத்தார்கள்.

௰௩. அவர்களில் ஒருவனுக்கு மாறுத்தரமாக அவன் சொன்னதாவது; சிநேகிதனே! நான் உனக்கு அநியாயஞ் செய்யவில்லை. நீ ஒரு பணங் கூலிக்காக என்னோடே சம்மதிக்கவில்லையோ?

௰௪. உன்னுடையதை நீ வாங்கிக்கொண்டுபோ. நான் உனக்குக்கொடுத்ததுபோலப்பின்னேவந்த இவனுக்குங் கொடுக்க மனதாயிருக்கிறேன்.

௰௫. என்னுடையதை நான் என் இஷ்டப்படியே செய்யக்கூடாதா! நான் தயவாயிருக்கிறபடியினாலேயோ நீ வன் கண்ணனாயிருக்கிறாயென்றான்.

௰௬. இவ்விதமாகப்பிந்தினோர் முந்தினோராயிருப்பார்கள். முந்தினோர் பிந்தினோராயிருப்பார்கள். மேலும், * அழைக்கப்பட்டவர்கள் அநேகர். தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர்மாத்திரமிருக்கிறார்களென்றார். * ௨௨: ௰௪.

௰௭. * இயேசுவானவர் எருசலேம்பட்டினத்திற்குப் பிரயாணமாய்ப்போகிறபொழுது வழியிலே அவர் பன்னிரண்டு சீஷரைமாத்திரம் அழைத்து அவர்களுடனே சொன்னது, * மாற் ௰: ௩௨, ௩௪. லூக். ௰௮: ௩௧, ௩௪.

௰௮. இதோ, எருசலேமுக்குப்போகிறோம். * அங்கே மனிதனுடைய குமாரன் பிரதான ஆசாரியருக்கும், வேதபாரகருக்கும் ஒப்புக்கொடுக்கப்படுவான். அவர்கள் அவனை மரணத்திற்குள்ளாக்கும்படி தீர்ப்புக்கொடுத்து, * ௰௬: ௨௧. ௰௭: ௰௨. ௨௨: ௨௩.

௰௯. அவனைப்பரியாசம்பண்ணவும், வாரினால் அடிக்கவும், சிலுவைமரத்தில் அறையவும், புறத்தேசத்தாருக்கு ஒப்புக்கொடுப்பார்கள். பின்பு மூன்றும்நாளிலே அவன் உயிரோடெழுந்திருப்பானென்றார்.

௨௰. * அக்காலத்திலே செபெதேயுவின் குமாரருடைய தாய் தன் குமாரரோடுங் கூட அவரிடத்தில் வந்து, சாஷ்டாங்கமாய் வணங்கி ஒரு விண்ணப்பம்பண்ண விரும்பினாள். * மாற். ௰: ௩௫, ௪௫.

௨௧. அவர் உனக்கென்னவேண்டுமென்றார். அவள் அவருடனே சொன்னதாவது; நீர் இராச்சிய பரிபாலனஞ் செய்யும்பொழுது என் குமாரராகிய இவ்விரண்டுபேரிலொருவன் உமது வலது பாரிசமாகவும், ஒருவன் உம்முடைய இடது பாரிசமாகவும் இருக்கும்படி செய்யவேண்டுமென்றாள்.

௨௨. அதற்கு இயேசுவானவர் சொன்னது, நீங்கள் கேட்டது உங்களுக்குத்தானே தெரியவில்லை. * நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்களா? நான் பெற்றுக்கொள்ளும் ஸ்நானத்தை நீங்கள் பெற்றுக்கொள்வீர்களாவென்றார். அவர்கள் அப்படியே செய்வோமென்றார்கள். * யோவா. ௰௮: ௰௧.

௨௩. அப்பொழுது அவர்சொன்னது, என் பாத்திரத்திற்குடிப்பீர்கள். நான் பெற்றுக்கொள்ளும் ஸ்நானத்தையும் பெற்றுக்கொள்வீர்கள். அது மெய்தான். ஆனாலும் என் பிதாவினாலே எவர்கள் குறிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்கேயன்றி, (மற்றொருவருக்கும்) என் வலது பாரிசத்திலேயும், என் இடது பாரிசத்திலேயும் உட்காந்திருக்கிற (கனத்தை) நான் கொடுக்கக்கூடாதென்றார்.

௨௪. மற்றப்பத்துப்பேரும் (அந்தச்சங்கதியைக்) கேட்டு, அந்தச்சகோதரரிருவரைக்குறித்து விசனப்பட்டார்கள்.

௨௫. அப்பொழுது இயேசுவானவர் அவர்களை யழைத்துச்சொன்னதாவது; *உலகத்தாருக்குள்ளே பிரபுக்கள் குடிகளை (இறுமாப்பாய்) ஆளுகிறார்கள். அல்லாமலும், பெரியோர்கள் அவர்கள்மேற் (கண்டிப்பாய்) அதிகாரத்தைச்செலுத்துகிறார்களென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். * லூக். ௨௨: ௨௫, ௨௭.

௨௬. உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது. உங்களில் எவனாகிலும் பெரியவனாய் இருக்கவேண்டுமென்றிருந்தால், அவன் உங்கள் ஊழியக்காரனாயிருக்கக்கடவன்.

௨௭. * உங்களில் எவனாகிலும் முதலாளியாயிருக்கவேண்டுமென்றிருந்தால், அவன் உங்கள் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். * ௨௩: ௰௧.

௨௮. * மனிதனுடைய குமாரனும், ஊழியங் கொள்ளும்படிக்கு வாராமல் ஊழியஞ் செய்யும்படிக்கும் அநேகரை † மீட்கும் பொருளாகத்தனது ஜீவனைத்தரும்படிக்கும் வந்தானே யென்றார். * பிலிப்பி. ௨: ௭. † உரோ. ௫: ௰௫. ௧ தீமோ. ௨: ௫. ௧ யோவா. ௨: ௨.

௨௯. * அவர்கள் எரிகோபட்டினத்திலிருந்து புறப்பட்டுப்போகையில் அநேக சனங்கள் அவர் பின்சென்றார்கள். * மாற். ௰: ௪௬. மு லூக். ௰௮: ௩௫. மு

௩௰. அப்பொழுது குருடரான இரண்டுபேர் வழியருகே உட்காந்திருந்து, இயேசுவானவர் வழியே வருகிறாரென்று கேள்விப்பட்டு, ஆண்டவரே! தாவீதின் குமாரனே! எங்களுக்கிரங்குமென்று கூப்பிட்டார்கள்.

௩௧. சனங்கள் (அதைக்கேட்டு) அவர்கள் பேசாமலிருக்கும்படிக்கு அவர்களை யதட்டினார்கள். அவர்களோ ஆண்டவரே! தாவீதின் குமாரனே! எங்களுக்கிரங்குமென்று அதிகமாய்க்கூப்பிட்டார்கள்.

௩௨. அப்பொழுது இயேசுவானவர் நின்று அவர்களை யழைத்து, உங்களுக்கு நான் என்னசெய்யவேண்டுமென்றிருக்கிறீர்கள் என்றார்.

௩௩. அவர்கள் சொன்னது, ஆண்டவரே! எங்கள் கண்களைத்திறக்கவேண்டுமென்றிருக்கிறோமென்றார்கள்.

௩௪. இயேசுவானவர் உருக்கமாயிரங்கி, அவர்களுடைய கண்களைத்தொட்டார். உடனே அவர்கள் பார்வையடைந்து அவர் பின்னே சென்றார்கள்.

௨௧ அதிகாரம்.

[(௧) இயேசுவானவர் ஒரு கழுதையின்மேலேறி எருசலேமிற் பிரவேசித்தது. (௰௨) தேவாலயத்திலிருந்த வியாபாரிகளைத்துரத்தினது. (௰௭) அத்திமரத்தைச்சபித்தது. (௨௰) தமது அதிகாரத்தைக்குறித்து, ஆசாரியர் முதலானவர்களுக்கு உத்தரவு சொன்னது. (௨௮) இரண்டு குமாரரை உவமையாகக்காட்டியது. (௩௩) எசமானுடைய ஊழியக்காரரைக்கொலைசெய்த தோட்டக்காரரை உவமையாகக்காட்டியது.]

* அவர்கள் எருசலேம் பட்டினத்திற்குச்சமீபமாய் ஒலிவமலையினருகேயிருக்கிற பெத்துபாகேயூருக்கு வந்தபொழுது, இயேசுவானவர் இரண்டு சீஷரைநோக்கி, * மாற். ௰௧: ௧, ௰. லூக். ௰௯: ௨௯, ௪௪. யோவா. ௰௨: ௰௨, ௰௯.

௨. உங்களுக்கெதிராயிருக்கிற அந்தக்கிராமத்திலே போங்கள். அங்கே நீங்கள் (போன) உடனே கட்டப்பட்டிருக்கிற ஒரு கழுதையையும், அதினோடேகூட ஒருகுட்டியையுங் காண்பீர்கள்.

௩. அவைகளின் கட்டவிழ்த்து எனக்காகக்கொண்டுவாருங்கள். ஒருவன் உங்களுக்கு ஏதாகிலுஞ் சொன்னால், ஆண்டவருக்கு

இவைகள் வேண்டுமென்று சொல்லுங்கள்.
உடனே அவன் அவைகளை அனுப்பிவிடுவா
னென்று சொல்லி யனுப்பினார்.
௪. (சீயோன் குமாரத்தியென்னும் எருச
லேம் பட்டினமே.) இதோ, உன் இராசா
மனத்தாழ்மையுள்ளவருமாய், நுகத்தடிக்
குக்கீழ்ப்பட்ட கழுதையின் குட்டியாகிய
கழுதையின்மேலேறியிருக்கிறவருமாய் உன்
னிடத்திற்குவருகிறாரென்று, சீயோன் குமா
ரத்தியுடனே சொல்லுங்களென்று,
௫. தீர்க்கதரிசியினாலே சொல்லப்பட்டது
* நிறைவேறும்படிக்கு அவையெல்லாம்
நடந்தன. * ஏசா. ௬௨: ௰௧. சகரி. ௯: ௯.
௬. இயேசுவானவர் கட்டளையிட்டபடியே
செய்யச்சீஷர்கள்போய்,
௭. கழுதையையும், அதின் குட்டியையுங்
கொண்டுவந்து. பின்பு தங்கள் வஸ்திரங்
களை அவைகளின்மேற்போட்டு அவரை
அவைகளின்மேல் ஏற்றிப்போனார்கள்.
௮. திரளான சனங்களோ தங்கள் வஸ்தி
ரங்களை வழியிலே விரித்தார்கள். வேறு
சிலர் மரங்களின் கிளைகளைத்தறித்து வழி
யிலே தெளித்தார்கள்.
௯. மேலும் முன் நடப்பாரும், பின் நடப்
பாருமாகிய சனங்கள் தாவீதின் குமார
னுக்கு ஓசன்னா * பராபரனுடைய நாமத்
தினாலே வருகிறவர் தோத்திரிக்கப்படத்தக்
கவர். உன்னதமான வானங்களில் ஓசன்னா
என்று ஆர்ப்பரித்தார்கள். * சங்கீ. ௱௰௮:
௨௫, ௨௬.
௰. அப்படி அவர் எருசலேம் பட்டினத்
திற் பிரவேசிக்கையில், பட்டினத்தாரெல்
லாரும் கலக்கம் அடைந்து, இவர் ஆரென்
று விசாரித்தார்கள்.
௰௧. சனங்கள் சொன்னது, இவர் கலிலே
யா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து
வந்த தீர்க்கதரிசியாகிய இயேசு என்றார்
கள்.
௰௨. இயேசுவானவர் தேவாலயத்திற் பிர
வேசித்து, * அதிலே விற்கிறவர்களும்
கொள்ளுகிறவர்களுமாகிய யாவரையும், வெ
ளியே துரத்தி, காசுக்காரருடைய பலகை
களையும், புறாக்களை விற்கிறவர்களுடைய ஆ
சனங்களையுங்கவிழ்த்துப்போட்டு, *யோவா.
௨: ௰௩, ௰௭. மாற். ௰௧: ௰௧. ௰௫: ௰௭.
லூக். ௰௯: ௪௫. ழ
௰௩. என்னுடைய ஆலயஞ் * செபத்துக்
கான ஆலயமென்னப்படுமென்றெழுதியிருக்
கின்றது. நீங்களோ அதைக்கள்ளர் குகை
யாக்கினீர்களென்று அவர்களுடனேசொன்
னார். * ஏசா. ௫௬: ௭. † எரே. ௭: ௰௧.

* ஓசன்னா வென்பதற்கு இப்பொழுது
இரட்சண்ணியத்தைச்செய்வீராக என்பது
அர்த்தமாம்.

௰௪. அல்லாமலும், குருடரும், சப்பாணி
களுந் தேவாலயத்தில் அவரிடத்திற்கு வந்
தபொழுது அவர்களைக்குணமாக்கினார்.
௰௫. அவர் செய்த அதிசயங்களையும், தா
வீதின் குமாரனுக்கு ஓசன்னாவென்று தே
வாலயத்திற் கூப்பிடுகிற பிள்ளைகளையும்,
பிரதான ஆசாரியரும், வேதபாரகருங்கண்
டு மிகுந்த விதனமடைந்து,
௰௬. அவரைநோக்கி, இவர்கள் சொல்லு
கிறதைக்கேட்கிறீரோ என்றார்கள். அதற்கு
இயேசுவானவர் சொன்னது, கேட்கிறேன்.
* குழந்தைகள் பாலகருடைய வாயினால்
துதியை யுண்டுபண்ணினீரென்கிறதை நீங்
கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையோ? என்
றுசொல்லி, * சங்கீ. ௮: ௩.
௰௭. அவர்களை விட்டுப்பட்டணத்திலிருந்
து புறப்பட்டு, பெத்தானியூருக்குப்போய்
அங்கே இராத்திரி தங்கினார்.
௰௮. * காலையிலே அவர் மறுபடியும் பட்
டினத்திற்குப்போகையில் அவருக்குப்பசி
யுண்டானபொழுது, * மாற். ௰௧: ௰௨. ௰௪:
௨௰, ௨௪.
௰௯. வழியருகே ஒரு அத்திமரத்தை அவர்
கண்டு அதினிடத்திற்போய் அதிலே இலைக
ளையே யன்றி, கனிகளைக்காணாமலிருக்கிற
பொழுது அவர் அதைநோக்கி, இனிமே
லொருக்காலும் உன்னிற் கனியுண்டாகா
திருக்கக்கடவதென்று சொன்னார். உட
னே அத்திமரம் பட்டுப்போயிற்று.
௨௰. சீஷர்கள் அதைக்கண்டு ஐயோ!
இந்த அத்திமரம் எப்படிச்சீக்கிரமாய்ப்
பட்டுப்போயிற்றென்று ஆச்சரியத்தோடே
சொன்னார்கள்.
௨௧. இயேசுவானவர் அவர்களுக்குச்சொன்
னது, நீங்கள் * சந்தேகப்படாமல் † விசு
வாசித்தால் இந்த அத்திமரத்திற் சம்ப
வித்ததை நீங்கள் செய்வது மல்லாமல்,
நீங்கள் இந்தமலையைநோக்கி, எழும்பிச்
சமுத்திரத்திலே தள்ளப்படுவாயாகவென்று
சொன்னால், உடனே அப்படியாகுமென்று
மெய்யாய் உங்களுக்குச்சொல்லுகிறேன்.
* யாக். ௧: ௬. † ௰௭: ௨௰. லூக். ௰௭: ௬.
௨௨. அல்லாமலுஞ் செபத்திலே நீங்கள்
* எதைக்கேட்டாலும், விசுவாசித்தீர்களா
னால் அதைப்பெறுவீர்களென்றார். * ௭: ௭.
யோவா. ௰௪: ௰௩.
௨௩. * அவர் தேவாலயத்தில் வந்து உப
தேசம்பண்ணுகிறபொழுது, பிரதான ஆசா
ரியரும், சனங்களின் மூப்பரும் அவரிடத்
தில் வந்து எந்த அதிகாரத்தினாலே நீர்
இவைகளைச்செய்கிறீர். இப்படிப்பட்ட
அதிகாரத்தை யுமக்குக்கொடுத்தவர் யா
ரென்றார்கள். * மாற். ௰௧: ௨௭, ௩௩. லூக்.
௨௰: ௧, ௨௮.
௨௪. அதற்கு இயேசுவானவர்சொன்னது,

நானும் உங்களிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்பேன். அதை நீங்களெனக்குச்சொன்னீர்களானால், நான் இவைகளைச்செய்கிற அதிகாரமின்னதென்று நானும் உங்களுக்குச்சொல்லுவேன்.

௨௫. யோவான் கொடுத்த ஞானஸ்நானம் ஆராலுண்டாயிருந்தது. பராபரனாலோ மனிதராலோ! அதைச்சொல்லுங்களென்றார். அவர்களோ அது பராபரனாலுண்டாயிற்றென்றோமானால் இவர் ஏன் அவனை விசுவாசிக்கவில்லையென்பார்.

௨௬. அது மனிதராலுண்டாயிற்றென்றோமாகில் சனங்களெல்லாரும், யோவானைத் * தீர்க்கதரிசி யென்றெண்ணுகிறபடியினாலே அவர்களுக்குப்பயப்படுகிறோமென்று தங்களுக்குள்ளே யோசனைபண்ணி, * ௰௪: ௫.

௨௭. பின்பு இயேசுவானவரை நோக்கி, எங்களுக்குத்தெரியாதென்றார்கள். அப்பொழுது அவரும் அவர்களுடனே சொன்னது, நான் இவைகளைச்செய்கிற அதிகாரம் இன்னதென்று நானும் உங்களுக்குச் சொல்லமாட்டேன்.

௨௮. ஆகிலும் உங்களுக்கெப்படித்தோன்றுகின்றது? ஒருமனிதனுக்கு இரண்டு குமாருண்டு, அவர்களில் மூத்தவனிடத்தில் அவன் வந்து மகனே! நீ இன்றைக்கென் திராட்சத்தோட்டத்திற்போய் வேலைசெய் என்றான்.

௨௯. அதற்கவன் போகமாட்டேனென்றான். பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான்.

௩௰. தகப்பன் இளையவனிடத்திலும் வந்து அப்படித்தானே சொன்னான். அதற்கவன் ஐயா, உடனே போகிறேனென்று சொல்லியும் போகவில்லை.

௩௧. இவ்விருவரிலெவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தானென்று, அவர் கேட்டபொழுது மூத்தவனே செய்தானென்றார்கள். அப்பொழுது இயேசுவானவர் அவர்களுக்குச்சொன்னதாவது; * ஆயக்காரரும், வேசிகளும் உங்களுக்கு முன்னே பராபரனுடைய இராச்சியத்திலே பிரவேசிக்கிறார்களென்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன். * லூக். ௭: ௨௯, ௩௰.

௩௨. எப்படியென்றால், யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்தும் நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை. ஆயக்காரரும், வேசிகளுமோ அவனை விசுவாசித்தார்கள். அதை நீங்கள் கண்டும், பின்பு அவனை விசுவாசிக்கும்படிக்கு மனஸ்தாபப்படாமலிருக்கிறீர்கள்.

௩௩. வேறு உவமையைக்கேளுங்கள். * ஒருவீட்டெசமானுண்டு. அவன் ஒரு திராட்சத்தோட்டத்தை யுண்டாக்கி, அதைச் சுற்றிவேலியடைத்து, அதில் ஆலையுநாட்டிக்கோபுரத்தையுங் கட்டிப்பின்பு அதைத் தோட்டக்காரர்வசமாய்விட்டுப்புறத்தேசத்திற்குப்போனான். * மாற். ௰௨: ௧, ௰௨. லூக். ௨௰: ௯, ௰௯.

௩௪. கனிகாலஞ் சமீபமானபொழுது, கனிகளைவாங்கிக்கொண்டுவரும்படிக்குத்தன் ஊழியக்காரரைத் தோட்டக்காரரிடத்தில் அனுப்பினான்.

௩௫. தோட்டக்காரரோ அவன் ஊழியக்காரரைப்பிடித்து, ஒருவனை அடித்து, ஒருவனைவெட்டி மற்றொருவன்மேற் கல்லெறிந்துகொன்றார்கள்.

௩௬. மறுபடியும் எசமான் முந்தினவர்களிலும் அதிகமான வேறு ஊழியக்காரரை அனுப்பினான். * அவர்களையும் அப்படியே செய்தார்கள். * அப்போ. ௭: ௩௫, ௩௯. ௪: ௧, ௩.

௩௭. கடைசியிலே அவன் என்னுடைய குமாரனுக்கு அஞ்சுவார்களென்றெண்ணி, தன் குமாரனை அவர்களிடத்தில் அனுப்பினான்.

௩௮. தோட்டக்காரரோ குமாரனைக்கண்டபொழுது, இவன் சுதந்தரவாளி, இவனைக் கொன்று இவனுடைய சுதந்தரத்தைக்கட்டிக்கொள்வோம் * வாருங்களென்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டு, * ௨௬: ௩, ௪.

௩௯. அவனைப்பிடித்துத்திராட்சத்தோட்டத்திற்குப்புறம்பேதள்ளி, கொலைசெய்தார்கள்.

௪௰. ஆகையால், திராட்சத்தோட்டத்திற்கு எசமான் வரும்பொழுது, அந்தத் தோட்டக்காரரை என்னசெய்வானென்று கேட்டார்.

௪௧. அதற்கு அவர்கள் சொன்னது, அவன் அந்தப்பொல்லாதவர்களைக்கடினமாய் அழித்துத்தகுதியான காலங்களில் தனக்குக்கனிகளைக்கொடுக்கும் வேறே தோட்டக்காரர் வசமாய்த்திராட்சத்தோட்டத்தை விடுவானென்றார்கள்.

௪௨. இயேசுவானவர் அவர்களுக்குச்சொன்னதாவது; * வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளினகல்லே மூலைக்குத்தலையானகல்லாயிற்று. அது பராபரனாலே ஆயிற்று. அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கின்றதென்று வேதத்திலே நீங்கள் ஒருக்காலும் வாசித்ததில்லையா? * சங். ௱௰௮: ௨௨, ௨௩. அப். ௪: ௰௧.

௪௩. அப்படியிருக்க, பராபரனுடைய இராச்சியம் * உங்களிலிருந்து நீக்கப்பட்டு அதின் கனிகளைத்தருகிற சனங்களுக்குக் கொடுக்கப்படுமென்று உங்களுக்குச்சொல்லுகிறேன். * அ: ௰௨. அப். ௰௩: ௪௬.

௪௪. அன்றியும், இத்தக்கல்லின்மேல் வி

ழுகிறவன், * நொறுக்கப்படுவான். இதுவோ எவன்மேல் விழுமோ அவனை நருங்கடிக்குமென்றார். * ஏசா. ௮: ௰௪, ௰௫. லூக். ௨: ௩௪.

௪௫. பிரதான ஆசாரியரும், பரிசேயரும் அவருடைய உவமைகளைக்கேட்டு, தங்களைக்குறித்துப்பேசுகிறாரென்று அறிந்து,

௪௬. அவரைப்பிடிக்க மனதாயிருந்தார்கள். ஆகிலுஞ் சனங்கள் அவரைத்தீர்க்கதரிசியென்றெண்ணினபடியினாலே அவர்கள் சனங்களுக்குப்பயந்து (அப்படிச்செய்யாமலிருந்தார்கள்.)

௨௨ அதிகாரம்.

[(௧) இராசகுமாரனுடைய கலியாண உவமை. (௯) புறச்சாதியார்கள் அழைக்கப்பட்டது. (௰௨) கலியாணவஸ்திரமில்லாதிருந்தவனுக்குண்டான தண்டனை. (௰௫) இராயனுக்கு வரிசெலுத்தவேண்டியதென்பது. (௨௩) கிறிஸ்து மரித்தோர் உயிர்த்தெழுதலைக்குறித்துச்சதுசேயருக்கு நியாயஞ்சொல்லி, (௩௪) பிரதான கற்பனை யின்னதென்று நியாயசாஸ்திரிக்கு உத்தரவுகொடுத்து, (௪௧) பேசியாவைக்குறித்துப்பரிசேயரிடத்திலே விசாரித்தது.]

இயேசுவானவர் மறுபடியும் உவமைகளாய் அவர்களுடனே சொன்னதாவது;

௨. * பரலோக இராச்சியத்தின் (ஆளுகை) தன் குமாரனுக்குக்கலியாணஞ்செய்த இராசனுடைய (நடக்கைக்) கொப்பாயிருக்கின்றது. * ஏசா. ௨௫: ௬. லூக். ௰௪: ௰௬, ௨௪.

௩. அழைக்கப்பட்டவர்களை, கலியாணத்திற்கு வரச்சொல்லும்படிக்கு அவன் தன் ஊழியக்காரரை அனுப்பினான். அவர்களோ வரமாட்டோமென்றார்கள்.

௪. மறுபடியும் அவன் வேறே ஊழியக்காரரைநோக்கி, அழைக்கப்பட்டவர்களிடத்திற்கு நீங்கள் போய், * என் விருந்தை எத்தனம்பண்ணினேன். என் எருதுகளும், கொழுத்த செந்துக்களும் அடிக்கப்பட்டன. எல்லாம் எத்தனமாயிருக்கின்றன. கலியாணத்திற்கு வாருங்களென்று சொல்லுங்களென்று அனுப்பினான். * வாக். ௯: ௧, ௭.

௫. அவர்களோ அதையெண்ணாமல் ஒருவன் தன் வயலுக்கும், ஒருவன் தன் வியாபாரத்திற்கும் போய்விட்டார்கள்.

௬. மற்றவர்களோ அவனுடைய ஊழியக்காரரைப்பிடித்து நிந்தித்துக்கொலைசெய்தார்கள்.

௭. இராசா அதைக்கேட்டுக்கோபம் அடைந்து, தன் சேனைகளை அனுப்பி, (அவர்களால்) அந்தக்கொலைபாதகரை அழித்து, அவர்களுடைய பட்டினத்தையுஞ் சுட்டெரித்தான்.

௮. அப்பொழுது அவன் தன் ஊழியக்காரரைநோக்கி, கலியாணவிருந்து எத்தனமாயிருக்கின்றது. அழைக்கப்பட்டவர்களோ அதற்குப்பாத்திரரல்லாதிருந்தார்கள்.

௯. ஆகையால், நீங்கள் வழிச்சந்திகளிற்போய் அகப்படுகிறயாவரையுங் கலியாணவிருந்துக்கு அழைத்துவாருங்களென்றான்.

௰. அந்த ஊழியக்காரர் வழிகளிற் புறப்பட்டுப்போய் அகப்பட்ட பொல்லாதவர்களையும், நல்லவர்களையுங் கூட்டிவந்தார்கள். விருந்துசாலை பந்தியிருக்கிறவர்களால் நிறைந்தது.

௰௧. பின்பு பந்தியிருக்கிறவர்களைப்பார்க்கும்படிக்கு இராசா பிரவேசித்தபொழுது, * கலியாணவஸ்திரத்தைத்தரித்திராத ஒருவனை அங்கேகண்டு, * அபி. ௰௯: ௮. ௨ கொரி. ௫: ௩. அபி. ௩: ௰௮.

௰௨. சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படிப்பிரவேசித்தாயென்று சொன்னபொழுது அவன் பேசாமலிருந்தான்.

௰௩. அப்பொழுது இராசா ஊழியக்காரரைநோக்கி, இவனுடைய கால்களையும், கைகளையுங்கட்டி, * இவனையெடுத்துப்போய் அழுகையும், பறகடிப்புமுண்டாயிருக்கிற மிகுந்த இருளிலே போடுங்களென்று கட்டளையிட்டான். * ௮: ௰௨.

௰௪. அந்தப்படியே, * அநேகர் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். சிலர்மாத்திரந் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறார்களென்றார். * ௨௰: ௰௬.

௰௫. * அப்பொழுது பரிசேயர்போய் வசனங்களில் அவரை அகப்படுத்தும்படிக்கு யோசனைபண்ணி, * மாற். ௰௨: ௰௩, ௰௭. லூக். ௨௰: ௨௰, ௨௬.

௰௬. தங்கள் சீஷர்களையும், ஏரோதேயின் மனிதர்களையும் அவரிடத்திற்கனுப்பினார்கள். (அவர்கள்வந்து) போதகரே, நீர்சத்தியமுள்ளவருமாய், பராபரனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப்போதிக்கிறவருமாய், மனிதருடைய முகத்தைப்பாராமலிருக்கிறபடியால், ஒருவரையுங்குறித்துக்கவலையில்லாதவருமாயிருக்கிறீரென்று அறிந்திருக்கிறோம்.

௰௭. ஆதலால் உமக்கெப்படித்தோன்றுகின்றது. இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமாய் இருக்கின்றதோ இல்லையோ! அதையெங்களுக்குச்சொல்லவேண்டுமென்றார்கள்.

௰௮. இயேசுவானவர் அவர்களுடைய துர்க்குணத்தையறிந்து வஞ்சகரே, நீங்களென்னை ஏன் சோதிக்கிறீர்கள்.

௰௯. வரிக்காசை எனக்குக்காண்பியுங்க

வென்றார். அவர்கள் ஒருதெநாரியப்பணத்தை அவருக்குக்கொடுத்தார்கள்.

௨௰. அப்பொழுது அவர் சொன்னது, இந்தச்சொரூபமும், மேலெழுத்தும் ஆருடையதென்றார் இது இராயனுடையதென்றார்கள்.

௨௧. அவர் சொன்னது, * அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும், பராபரனுடையதையோ பராபரனுக்குஞ் செலுத்துங்களென்றார். * ௨ரோ. ௰௩: ௭.

௨௨. அவர்கள் அதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு அவரைவிட்டுப்போனார்கள்.

௨௩. * உயிரோடெழுந்திருக்கும் மறுமையில்லையென்று சொல்லுகிற சதுசேயர் அந்நாளிலே அவரிடத்தில் வந்து, * அப். ௨௩: ௮. மாற். ௰௨: ௰௮, ௨௭. லூக். ௨௰: ௨௭, ௩௰.

௨௪. போதகரே, * புருஷனொருவன் பிள்ளைகளில்லாமல் இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவனுக்குச்சந்ததியுண்டாகும்படிக்கு அவனுடைய மனைவியை விவாகம்பண்ணவேண்டுமென்று மோசே சொன்னாரே. * ரு மோ. ௨௫: ரு.

௨௫ அப்படியானால், எங்களிடத்திற்சகோதரர் ஏழுபேரிருந்தார்கள். அவர்களில் மூத்தவன் விவாகம்பண்ணிச்சந்ததியில்லாமல் மரித்துத்தன்மனைவியைத்தன் சகோதரனுக்குவிட்டான்.

௨௬. இப்படி இரண்டாஞ்சகோதரன் முதல் ஏழாஞ் சகோதரன்வரைக்கும் (அவளையே விவாகம்பண்ணிப்பிள்ளையில்லாமல், மரித்தார்கள்)

௨௭. எல்லாருக்கும் பின்பு அந்தப்பெண்ணும் இறந்துபோனாள்.

௨௮. அப்படி அவ்வேழுபேரும் அவளை விவாகம்பண்ணினபடியால், உயிரோடெழுந்திருக்குங்காலத்திலே அவள் அவர்களில் எவனுக்கு மனைவியாயிருப்பாளென்று கேட்டார்கள்.

௨௯. இயேசுவானவர் அவர்களுக்கு மாறுத்தரமாகச்சொன்னதாவது; வேத எழுத்துக்களையும், பராபரனுடைய பலத்தையும் நீங்கள் அறியாதிருக்கிறபடியால் தப்பாய் நினைத்திருக்கிறீர்கள்.

௩௰. மறுமையிலே பெண் கொள்வதும், கொடுப்பதுமிராது. அவர்கள் பரலோகத்திலே பராபரனுடைய தூதரைப்போலிருக்கிறார்கள்.

௩௧. மரித்தோர் உயிரோடெழுந்திருக்குதலைக்குறித்தோவெனில், நான் * ஆபிரகாமினுடைய தேவனுமாய் ஈசாக்கினுடைய தேவனுமாய் யாக்கோபினுடையதேவனுமாயிருக்கிறேனென்று, * ௨ மோ. ௩: ௬.

௩௨. பராபரனாலே உங்களுக்குரைக்கப்பட்டதை நீங்கள் வாசிக்கவில்லையோ? அவர் மரித்தோருடைய தேவனல்லாமற் சீவனுள்ளோருடைய தேவனாகவேயிருக்கிறாரென்றார்.

௩௩. சனங்கள் அவருடைய உபதேசத்தைக்கேட்டு, * அதைக்குறித்துப்பிரமிப்புக்கொண்டார்கள். * ௭: ௨௮.

௩௪. * அவர் சதுசேயர் பேசாமலிருக்கும்படி செய்ததைப்பரிசேயர்கேட்டு அவரிடத்திற் கூடிவந்தார்கள். * மாற். ௰௨: ௨௮, ௩௪.

௩௫. அவர்களில் நியாயசாஸ்திரியொருவன் அவரைச்சோதிக்கும்படிக்கு,

௩௬. போதகரே, வேதத்திலே எது பிரதானமானகற்பனையாயிருக்கின்றதென்று கேட்டான்.

(௩௭. இயேசுவானவர் சொன்னது, * உன் தேவனாகிய பராபரனில் உன்முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுமனதோடும் அன்புகூர்வாயாக.

௩௮. என்பது முதலாவது பிரதானமான கற்பனையாயிருக்கின்றது.)

௩௯. அதற்கொப்பாயிருக்கிற இரண்டாங் கற்பனையென்னவென்றால், * பிறனிடத்தில் உன்னைப்போல அன்பு கூர்வாயாகவென்பதே. * ௩ மோ. ௰௯: ௰௮.)

௪௰. இவ்விரண்டு கற்பனைகளில், நியாயப்பிரமாணம் முழுமையும், தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கின்றனவென்றார்.

௪௧. * மேலும் பரிசேயர் கூடியிருக்கையில் இயேசுவானவர் அவர்களைநோக்கி, * மாற். ௰௨: ௩௫, ௩௭. லூக். ௨௰: ௪௧, ௪௪.

௪௨. கிறிஸ்துவைக்குறித்து, உங்களுக்கெப்படித்தோன்றுகின்றது! அவர் யாருடையகுமாரனென்று கேட்டார். அவர் தாவீதின்குமாரனென்றார்கள்.

௪௩. இயேசுவானவர் சொன்னது, அப்படியானால், * நான் உம்முடைய சத்துருக்களை உமது பாதப்படியாக்கிப்போடுகிறவரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்திலே உளுக்காருமென்று, பராபரன் என் கர்த்தருடனே சொன்னாரென்று, * சங்கீ. ௱௰: ௧.

௪௪. தாவீது (பரிசுத்த) ஆவியினாலே சொல்லி, (இவ்விதமாய்) அவரைக்கர்த்தரென்று சொல்லியிருக்கிறதெப்படி!

௪௫. தாவீது அவரைக்கர்த்தர் என்று சொல்லியிருக்க, அவர் எப்படி அவனுடைய குமாரனாயிருப்பாரென்றார்.

௪௬. அதற்கு மாறுத்தரமாக ஒருவனும், ஒரு வார்த்தையையுஞ் சொல்லத்திராணியிருந்ததில்லை. அந்நாள்முதறகொண்டு ஒருவரும் அவரிடத்தில் வினாக்களைக்கேட்கத்துணிந்ததுமில்லை.

௨௩ அதிகாரம்.

[(௧) கிறிஸ்து வேதபாரகர், பரிசேயருடைய கெட்ட நடக்கைகளைப்பின்பற்றுமலவர்களின் நல்ல உபதேசங்களைக்கைக்கொள்ளவேண்டியதென்று சனங்களுக்குப் போதித்த, (௫) அவர்களுடைய பெருமையைக்குறித்து, தம்முடைய சீஷர்கள் எச்சரிக்கையாயிருக்கக்கற்பித்தது. (௰௩) அவர்களுடைய மாயத்தையும், குருட்டாட்டத்தையுங்குறித்து அவர்களுக்கு எட்டுவகை வேதனைகளைக்கூறி, (௩௭) எருசலேமின் அழிவை முன்னறிவித்தது.]

௧ * அப்பொழுது இயேசுவானவர் சனங்களுக்கும், தம்முடைய சீஷருக்குஞ் சொன்னதாவது; * மாற் ௰௨: ௩௮, ௪௰. லூக். ௨௰: ௪௫, ௪௭.

௨. வேதபாரகரும், பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்திலிருக்கிறவர்கள்.

௩ ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படிக்கு, அவர்கள் உங்களுக்குச்சொல்லுகிற யாவையுங் கைக்கொண்டு நடக்கக்கடவீர்கள் அவர்களுடைய கிரியைகளின்படியோ செய்யாமலிருங்கள். என்னத்தினாலெனில், அவர்கள் சொல்லியுஞ் செய்யாமலிருக்கிறார்கள்.

௪. அல்லாமலும் * அவர்கள் பாரமாயும், சுமப்பதற்கரிதாயுமிருக்கிற சுமைகளைக்கட்டி, மனிதருடைய தோள்களின்மேல் வைக்கிறார்கள். தாங்கள் தாமோ அவைகளை ஒரு விரலினாலும் அசைக்க மனமில்லாமலிருக்கிறார்கள். * லூக். ௰௧: ௪௬.

௫. தங்கள் கிரியைகள் யாவையும் அவர்கள் மனிதரால், * காணப்படும்படிக்குச் செய்கிறார்கள். † கற்பனைகள் எழுதியிருக்கிற நாடாக்களை அகலமாக்கி, தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களை விஸ்தாரம்பண்ணி, * ௬: ௧. † ௪ மோ. ௰௫: ௩௮, ௪.

௬. விருந்துகளில் * முதல் இடத்திலிருக்கவும், செப ஆலயங்களில் முதல் ஆசனங்களிலிருக்கவும், * லூக். ௰௧: ௪௩.

௭. சந்தைகளில் (மற்றவர்களால்) வாழ்த்துதல் அடையவும் இரபீ, இரபீயென்றழைக்கப்படவும் விரும்புகிறார்கள்.

௮. நீங்களோ இரபீயென்றழைக்கப்படக்கூடாது. என்னத்தினாலெனில், கிறிஸ்து என்பவரொருவரே உங்களுக்குக்குருவாயிருக்கிறார். நீங்கள் எல்லாருஞ் சகோதரராயிருக்கிறீர்கள்.

௯. மேலும் பரமண்டலத்திலிருக்கிறவரொருவரே உங்களுக்குப்பிதாவாயிருக்கிறார். ஆகையால், நீங்கள் பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதாவென்றழைக்கக்கூடாது.

௰. அல்லாமலுங் கிறிஸ்து என்பவரொருவரே உங்கள் குருவாயிருக்கிறார். ஆகையால், நீங்கள் உங்களைக்குருக்களென்று அழைக்கப்படக்கூடாது.

௰௧. * தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான். தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். * ௨௰: ௨௬, ௨௭.

௰௨. * ஆகலால், உங்களிற் பெரியவன் உங்கள் ஊழியக்காரனாயிருக்கக்கடவன். * வாக். ௨௬: ௨௩. லூக். ௰௪: ௰௧. ௰௮: ௰௪. ௧ பேது. ௫: ௫.

௰௩. வஞ்சகராகிய வேதபாரகரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்கு வேதனைவரும். * என்னத்தினாலெனில், மனிதர் முன்பாக நீங்கள் பரலோக இராச்சியத்தைப்பூட்டிப்போடுகிறீர்கள். நீங்களோ அதிற்பிரவேசிக்கிறதில்லை. பிரவேசிக்க மனதாயிருக்கிறவர்கள் பிரவேசியாதபடிக்குஞ் செய்கிறீர்கள். * லூக். ௰௧: ௫௧.

௰௪. வஞ்சகராகிய வேதபாரகரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்கு வேதனைவரும். என்னத்தினாலென்றால், நீங்கள் விஸ்தாரமாய்ச்செப மந்திரங்களைச்சொல்லுகிறோமென்று சொல்லி, கைம்பெண்களுடைய பொருள்களைப்பட்சிக்கிறீர்கள். அதினிமித்தம் அதிக ஆக்கினை உங்களுக்குக்கிடைக்கும்.

௰௫. வஞ்சகராகிய வேதபாரகரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்கு வேதனைவரும். என்னத்தினாலெனில், ஒருவனை (யூத) மார்க்கத்தானாக்கும்படிக்கு, நீங்கள் சமுத்திரத்தையும், பூமியையுங் கடந்து திரிகிறீர்கள். அவன் அப்படிப்பட்டவனானபொழுது, நீங்கள் உங்களைப்பார்க்கிலும், அவனை இரட்டிப்பாய் நரகத்துக்குரியவனாக்குகிறீர்கள்.

௰௬. குருடராய் 'வழிகாட்டுகிறவர்களே! ஐயோ! உங்களுக்கு வேதனைவரும். ஒருவன் தேவாலயத்தின்மேற் சத்தியம்பண்ணினால், அது செல்லாது. ஒருவன் தேவாலயத்திலுள்ள பொன்மேற் சத்தியம்பண்ணினானாகில், அவன் அந்தப்படியே செய்யவேண்டுமென்கிறீர்கள்.

௰௭. மதிகேடரே, குருடரே, எது பெரிது? பொன்னோ பொன்னைப்பரிசுத்தமாக்குகிற தேவாலயமோ?

௰௮. அன்றியும் ஒருவன் பீடத்தின்மேற் சத்தியம்பண்ணினால், அது செல்லாது. ஒருவன் அதிலுள்ள காணிக்கையின்மேற் சத்தியம்பண்ணினானாகில் அவன் அதின்படியே செய்யவேண்டுமென்கிறீர்கள்.

௰௯. மதிகேடரே, குருடரே, எது பெரிது? காணிக்கையோ! காணிக்கையைப்பரிசுத்தமாக்குகிற பீடமோ?

௨௰ ஆகையாற் பீடத்தின்மேற் சத்தியம்பண்ணுகிறவன் அதின்மேலும், அதிலிருக்கி

ற எல்லாப்பொருள்களின்மேலுஞ் சத்தியம் பண்ணுகிறான்.

௨௧. தேவாலயத்தின்மேற் சத்தியம்பண்ணுகிறவன் அதின்மேலும், அதில் வாசமாயிருக்கிறவர்மேலுஞ் சத்தியம்பண்ணுகிறான்.

௨௨. * அல்லாமலும் வானத்தின்மேற் சத்தியம்பண்ணுகிறவன் பராபரனுடைய பத்திராசனத்தின்மேலும், அதில் வீற்றிருக்கிறவர்மேலுஞ் சத்தியம்பண்ணுகிறான். * ரு: ௩௪.

௨௩. வஞ்சகராகிய வேதபாரகரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்குவேதனைவரும். என்னத்தினாலெனில், * நீங்கள் துளசியிலும், வெந்தயத்திலும், சீரகத்திலும் பத்திலொருபாகத்தைக்கொடுத்து, வேதத்திற்(சொல்லியிருக்கிற) அதிக கனமான காரியங்களாகிய நீதியையும், இரக்கத்தையும், உண்மையையும்விட்டுவிட்டீர்கள். இவைகளையே நீங்கள் நடப்பித்து அவைகளையும் விட்டுவிடாமலிருக்கவேண்டும். * லூக். ௰௧: ௪௨.

௨௪. ஆ, குருடராய் வழிகாட்டுகிறவர்களே! கொசுகில்லாதபடிக்குத் (தண்ணீரை) வடிக்கட்டி, ஒட்டகத்தையோ விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள்.

௨௫. வஞ்சகராகிய வேதபாரகரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்கு வேதனைவரும். என்னத்தினாலெனில், * போசனபான பாத்திரங்களின் வெளிப்புறத்தை நீங்கள் சுத்தஞ் செய்கிறீர்கள். அவைகளினுள்ளோ கொள்ளையும், அநீதியும் நிறைந்திருக்கின்றன. * லூக். ௰௧: ௩௯, ௪௰.

௨௬. குருடனான பரிசேயனே, முதலாவது போசனபான பாத்திரங்களின், * உள்ளத்தைச்சுத்தம்பண்ணுவாயாக. அப்பொழுது அவைகளின் வெளிப்புறமுஞ் சுத்தமாயிருக்கும். * தீத். ௧: ௰௫.

௨௭. வஞ்சகராகிய வேதபாரகரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்கு வேதனைவரும். என்னத்தினாலெனில், நீங்கள் சாந்து பூசப்பட்ட கல்லறைகளுக்கொப்பாயிருக்கிறீர்கள். அவைகள் புறம்பே அலங்காரமாயிருக்கின்றன. உள்ளேயோ மரித்தோருடைய எலும்புகளும், சகலவிதமான அசுத்தமும் நிறைந்திருக்கின்றன.

௨௮. அப்படிப்போல நீங்களும் புறம்பே மனிதருக்கு, நீதிமான்களென்று காணப்படுகிறீர்கள். உங்கள் உள்ளத்திலோ வஞ்சகமும், அக்கிரமமும் நிறைந்திருக்கின்றன.

௨௯. வஞ்சகராகிய வேதபாரகரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்கு வேதனைவரும். என்னத்தினாலெனில், * நீங்கள் தீர்க்கதரிசிகளுடைய சமாதிகளைக்கட்டி, நீதிமான்களின் கல்லறைகளைச்சிங்காரித்து, * லூக். ௰௧: ௪௭, ௪௮.

௩௰ எங்கள் பிதாக்களுடைய நாள்களிலிருந்தோமானால் அவர்களோடேகூட நாங்கள், தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தைச் சிந்தமாட்டோமென்கிறீர்கள்.

௩௧. ஆகையால், நீங்கள் தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்தவர்களின், * புத்திரரென்று உங்களைக்குறித்து, நீங்கள்தானே சாட்சிகொடுக்கிறீர்கள். * அப். எ: ௫௧, ௫௨.

௩௨. அப்படியிருக்க, நீங்கள் உங்கள் பிதாக்களின் அக்கிரம அளவை நிரப்புங்கள்.

௩௩. சர்ப்பங்களே, விரியன் பாம்புகளின் (குட்டிகளே) * நீங்கள் நரகாக்கினைக்கு எப்படித்தப்பிப்போவீர்கள். * ௩: எ.

௩௪. ஆதலாற்கேளுங்கள். * நான் தீர்க்கதரிசிகளையும், ஞானிகளையும், வேதபாரகரையும் உங்களிடத்திற்கு அனுப்புகிறேன். † அவர்களிற் சிலரை நீங்கள் கொன்று சிலுவைகளிலும் அறைந்து, சிலரை உங்கள் ஆலயங்களில் வாரினால் அடித்து, ஊரூருக்குத் துன்பப்படுத்துவீர்கள். * லூக். ௰௧: ௪௯, ௫௧. † அப். ரு: ௪௰. எ: ௫௮. ௨ கொரி. ௰௧: ௨௪.

௩௫. * நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் நீங்கள், † தேவாலயத்துக்கும், பீடத்துக்கும் நடுவே கொலைசெய்த பரகியாவின் குமாரனான சகரியாவின் இரத்தம் வரைக்கும் பூமியிலே சிந்தப்பட்ட நீதியான இரத்தமெல்லாம் உங்கள்மேல் வரும்படிக்கு (அப்படிச்செய்வீர்கள்.) * ௧ மோ. ௪: ௮ † ௨ நாளா. ௨௪: ௨௧, ௨௨.

௩௬. அவையெல்லாம் இந்தச்சந்ததியின் மேலேவருமென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௩௭. ஆ, * எருசலேம் பட்டணத்தாரே! எருசலேம் பட்டணத்தாரே! உங்களிடத்தில் அனுப்பப்பட்டவர்கள்மேற் கல்லெறிந்து தீர்க்கதரிசிகளைக்கொலை செய்கிறவர்களே, கோழி தன் குஞ்சுகளைச்சிறகுகளின் கீழே கூட்டிச்சேர்த்துக்கொள்ளும் விதமாய் அநேகந்தரம் உங்களைக்கூட்டிச்சேர்த்துக்கொள்ள விரும்பினேன். நீங்களோ வரமாட்டோமென்கிறீர்கள். * லூக். ௰௩: ௩௪, ௩௫.

௩௮. (ஆகையால்) * உங்கள் வாசஸ்தலம் பாழாக்கப்படும். * ௧ இரா. ௯: எ.

௩௯. அல்லாமலும், பராபரனுடைய நாமத்தினாலே வருகிறவர் தோத்திரிக்கப்படத்தக்கவரென்று, * நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக்காணாதிருப்பீர்களென்று உங்களுக்குச்சொல்லுகிறேனென்று திருவுளம்பற்றினார். * ஓசெ. ௩: ௪, ௫.

௨௪ அதிகாரம்.

[(௧) கிறிஸ்துத்தேவாலயத்தின் அழிவையும், (௩) அந்த அழிவு சம்பவிக்கிறதற்கு

ளுன் உண்டாகும் உபத்திரவங்களையும், (௨௯) தாம் நியாயந் தீர்க்கும்படி வரும் போதுண்டாகும் அடையாளங்களையும், முன்னறிவித்து, (௩௬) அந்தநாளும், நாழிகையுந் தெரியாததினால், (௪௨) எந்நேரமும் எசமானனுடைய வருகையை எதிர்நோக்கிய நற்பணிவிடைக்காரர்களைப்போல எச்சரிக்கையாய்க் காத்திருக்கப் போதித்தது.]

* இயேசுவானவர் தேவாலயத்தைவிட்டுப்புறப்பட்டுவருகிறபொழுது அவருடைய சீஷர்கள் சேர்ந்து, தேவாலயங்கட்டியிருக்கிற வகைகளை அவருக்குக்காண்பித்தார்கள். * மாற். ௰௩: ௧, ௩௨. லூக். ௨௧: ௬, ௩௧.

௨. இயேசுவானவர் அவர்களுடனே சொன்னது, இவைகளெல்லாவற்றையும் பார்க்கிறீர்களல்லவோ? * (இவைகளில்) ஒருகல் மற்றொருகல்லின்மேல் இங்கேவைக்கப்படுவதில்லை. எல்லாம் இடிக்கப்படுமென்று மெய்யாய்உங்களுக்குச்சொல்லுகிறேனென்றார். * லூக். ௰௯: ௪௪.

௩. பின்பு அவர் ஒலிவமலையின்மேலுளுக்காந்திருக்கையிற் சீஷர் மாத்திரம் அவரிடத்தில் வந்து இவை எப்பொழுது சம்பவிக்கும். மேலும் நீர்வருவதற்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளமெது! இவைகளை நீர் எங்களுக்குச்சொல்லவேண்டுமென்றார்கள்.

௪. அவர்களுக்கு மாறுத்தரமாக இயேசுவானவர் சொன்னதாவது; அநேகர் வந்து என் நாமத்தையெடுத்து, தங்களைக்கிறிஸ்தென்றுசொல்லி அநேகம்பேரை வஞ்சிப்பார்கள்.

௫. * ஆதலால், ஒருவனும் உங்களைவஞ்சியாதபடிக்குப்பாருங்கள். * உரோ. ௰௬: ௰௭. எபே. ௨௯: ௮. யோவா. ௫: ௪௩.

௬. அல்லாமலும் யுத்தங்களையும், யுத்தங்களின் நடக்கைகளையுங் கேள்விப்படுவீர்கள். அப்பொழுது நீங்கள் கலங்காதபடிக்குப்பாருங்கள். அவையெல்லாஞ் சம்பவிக்கவேண்டும். ஆனாலும் முடிவு உடனே வராது.

௭. ஆகையால், ஒரு சனக்கூட்டம் மற்றொரு சனக்கூட்டத்திற்கும், ஒரு இராச்சியம் மற்றொரு இராச்சியத்திற்கும் விரோதமாய் எழும்பும். பஞ்சங்களும், பெருவாரிக்காய்ச்சல்களும், பூமியதிர்தல்களும் அங்கங்கே உண்டாகும்.

௮. ஆனாலும் அவையெல்லாம் உபாதிகளுக்கு ஆரம்பமாயிருக்கும்.

௯. * அப்பொழுது உபத்திரவப்படும்படிக்கு உங்களை ஒப்புக்கொடுத்து, உங்களைக்கொலைசெய்வார்கள். என்னுடைய நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லா உலகத்தாராலும் பகைக்கப்படுவீர்கள். * யோவா. ௰௬: ௨, ௪.

௰. அக்காலத்திலே அநேகர் இலச்சை அடைந்து, ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள்.

௰௧. அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகம்பேரை வஞ்சிப்பார்கள்.

௰௨. மேலும் * அக்கிரமம் மிகுதியாவதினால், அநேகருடைய அன்பு மாறிப்போம். * ௨ தீமோ. ௩: ௧.

௰௩. ஆனாலும் முடிவுபரியந்தம் * நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான். * ௰: ௨௨. அறிவி. ௧: ௰.

௰௪. அல்லாமலும் உலகத்தாரெல்லாருக்குஞ் சாட்சியாக இராச்சியத்தின் சுவிசேஷம் பூமியிலெங்கும் பிரசங்கிக்கப்படும். அப்பொழுது முடிவுவரும்.

௰௫. அப்படியிருக்க இதை வாசிக்கிறவன் சிந்தித்துக்கொள்ளக்கடவன் * பாழாக்குகிற அருவருப்பைக்குறித்துத்தானியேல் தீர்க்கதரிசி சொன்னாரே. அதை நீங்கள் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக்காணும்பொழுது, * தானி. ௯: ௨௭.

௰௬. யூதேயாவிலுள்ளவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்.

௰௭. * வீட்டின்மேலிருப்பவன் தன் வீட்டிலுள்ளவைகளையெடுத்துக்கொண்டுபோகும்படிக்கு இறங்காமற் (போகக்) கடவன். * லூக். ௰௭: ௩௧.

௰௮. அல்லாமலும் வயலிலிருப்பவன் தன் வஸ்திரங்களையெடுத்துக்கொண்டு போகும்படிக்குப்பின்னிட்டுத்திரும்பாமற்(போகக்) கடவன்.

௰௯. ஐயோ! அந்த நாள்களிற் கருப்பவதிகளுக்கும், முலைகொடுக்கிறவர்களுக்கும் உபத்திரவமிருக்கும்.

௨௰. மேலும் உலகமுண்டானது முதற்கொண்டு இதுவரைக்குஞ் சம்பவியாததுமாய், இனிமேலுஞ் சம்பவியாததுமாயிருக்கிற மிகுந்த உபத்திரவம் அக்காலத்திலேயுண்டாயிருக்கும்.

௨௧. ஆதலால், நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலானாலும், ஓய்வுநாளிலானாலுஞ் சம்பவியாதபடிக்கு வேண்டுதல் பண்ணக்கடவீர்கள்.

௨௨. அந்த நாள்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனுந் தப்பிப்போவதில்லை. தெரிந்து கொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்தநாள்கள் குறைக்கப்படும்.

௨௩. * அக்காலத்திலே கள்ளக்கிறிஸ்துக்களும், † கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பித் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை (வஞ்சிக்கக்) கூடுமானால், அவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக மிகுந்த அதிசயங்களையும், அற்

புதங்களையுஞ் செய்வார்கள். * ௫ மோ.
௰௩: ௧, ௩. † ௨ தெச. ௨: ௯, ௰௧. அறி.
௰௩: ௰௪. ௱
௨௪. ஆதலால் அக்காலத்திலே * ஒருவன்
உங்களைநோக்கி இதோ, கிறிஸ்து இங்கே
யிருக்கிறார். அதோ அங்கேயிருக்கிறாரென்
று சொன்னால், நீங்கள் அவனை நம்பாமலி
ருப்பீர்களாக. * லூக். ௰௭: ௨௩.
௨௫. அதை நான் உங்களுக்கு இப்பொழு
து முன்னறிவித்தேன்.
௨௬. ஆகையால் அதோ, வனாந்தரத்திலி
ருக்கிறாரென்று சொன்னால், வெளியே புறப்
படாதிருங்கள்.
௨௭. இதோ, வீட்டின் அறைகளுக்குள்ளி
ருக்கிறாரென்றால், அதை நம்பாதிருங்கள்.
மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி, மேற்கு
வரைக்கும் (சீக்கிரமாய்ப்) பிரகாசிக்கிற
விதமாய் மனிதனுடைய குமாரன்வருவான்
௨௮. அல்லாமலும் * பிணமெங்கேயோ
அங்கே கழுகுகள் கூடிவரும். * ஆப்கூ.
௩௯: ௩௰. லூக். ௰௭: ௩௭.
௨௯. அந்த நாள்களிலுள்ள உபத்திரவத்
திற்குப்பின்பு உடனே * சூரியன் இருள்
அடையும். சந்திரன் பிரகாசங்கொடாம
லிருக்கும். நட்சத்திரங்கள் வானத்திலிருந்
து விழும் வானத்திலுள்ள (மற்ற) வல்லமை
களும் அசைக்கப்படும். * ஏசா. ௰௩: ௯, ௰.
அறிவி. ௬: ௰௨. ௱
௩௰. அப்பொழுது மனித குமாரனுடைய
அடையாளம் வானத்திலே காணப்படும்.
* அல்லாமலும் மனிதனுடையகுமாரன் வா
னத்தின் மேகங்கள்மேலே மிகுந்த வல்லமை
யோடும் மகிமையோடும் வருகிறதைப்பூமி
யிலுள்ள கோத்திரத்தார் எல்லாருங்கண்டு
புலம்புவார்கள். * மாற். ௰௪: ௬௨. அறி.
௧: ௭.
௩௧. அல்லாமலும் அவர் தூதரை * வலு
வாய்த்தொனிக்கும் எக்காளந்தடனே அ
னுப்புவார். அவர்கள் வானத்தின் எல்லைக
ளுக்குள்ளே நாலுதிசைகளிலுமிருந்து அவ
ரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைச்சே
ர்த்துக்கொள்வார்கள். * ௧ கொரி. ௰௫: ௫௨.
௩௨. அத்திமரத்தினால் ஒரு உவமையைக்
கற்றுக்கொள்ளுங்கள். அதின்கிளை தளிரா
கி இலைகளைக்கொடுக்கிறபொழுது வசந்த
காலஞ் சமீபமாயிருக்கின்றதென்றறிந்திருக்
கிறீர்கள்.
௩௩. அப்படிப்போல நான் சொன்னவைக
ளெல்லாஞ் சம்பவிக்கிறதை நீங்கள் கா
ணும்பொழுது சமீபமாகவேயிருக்கிறாரென்
றறியக்கடவீர்கள்.
௩௪. இந்தச்சந்ததி யொழிந்துபோகும்.
முன்னமே அவையெல்லாஞ் சம்பவிக்குமெ
ன்று மெய்யாய் உங்களுக்குச்சொல்லுகி
றேன்.

௩௫. வானமும், பூமியும் ஒழிந்துபோம்.
என் வசனங்களோ ஒழியாமலிருக்கும்.
௩௬. அவை சம்பவிக்கும் நாளையும், நாழி
கையையும் என்பிதா ஒருவரேதவிர மற்
றொருவனும் அறியமாட்டான். பரமண்ட
லங்களிலுள்ள தேவதூதர்களுமதையறியார்
கள்.
௩௭. * நோவாவின் காலத்திலே நடந்த
துபோல மனிதனுடைய குமாரன் வருங்
காலத்திலேயும் நடக்கும். * ௧ மோ. ௬: ௰௧.
௰௭: ௨௬, ௨௭. மாற். ௰௩: ௩௩. ௱ லூக்.
௨௧: ௩௪, ௩௬.
௩௮. எப்படியென்றால், சலப்பிரளயத்திற்
கு முன்னான நாள்களிலே நோவா பேழைக்
குட்பிரவேசித்த நாள்வரைக்குஞ் சனங்
கள் போசனபானம்பண்ணி,
௩௯. பெண்கொண்டு பெண்கொடுத்துத்
(தங்களுக்குமோசம் வருமென்று) நினையா
மலிருந்தார்கள். அப்பொழுதே சலப்பிர
ளயம் வந்து, அனைவரையுங் கொண்டுபோ
யிற்று. அதுபோல மனிதனுடைய குமா
ரன் வரும்பொழுதும் நடக்கும்.
௪௰. அக்காலத்திலே * இரண்டு புருஷர்
வயலிலிருப்பார்கள். அவர்களில் ஒருவன்
பிடித்துக்கொள்ளப்படுவான். ஒருவன் தப்
பிப்போவான். * லூக். ௰௭: ௩௪, ௩௬.
௪௧. இரண்டு பெண்கள் திரிகை திரித்துக்
கொண்டிருப்பார்கள். அவர்களில் ஒருத்தி
பிடித்துக்கொள்ளப்படுவாள். ஒருத்தி தப்
பிப்போவாள்.
௪௨. அப்படியிருக்க, * உங்கள் எச
மான்வரும் நாழிகையை நீங்கள் அறியாத
படியினாலே விழித்திருக்கக்கடவீர்கள். *
௨௫: ௰௩.
௪௩. * திருடன்வந்த சாமத்தை வீட்டெச
மான் அறிந்தானானால், அவன் விழித்துக்
கொண்டு தன்வீடு கன்னமிடப்படாதபடிக்
குச்செய்திருப்பானென்றறிந்திருக்கிறீர்கள்.
* லூக். ௰௨: ௩௯, ௪௬. ௧ தெச. ௫: ௨.
௪௪. அப்படியிருக்க, நீங்கள் நினையாத
நாழிகையிலே மனிதனுடைய குமாரன்வரு
வதால் நீங்களும் எத்தனமாயிருக்கக்கட
வீர்கள்.
௪௫. எசமான் தன் வேலைக்காரருக்குத்
திட்டமாய்ப்போசனங் கொடுக்கும்படிக்கு
அவர்கள்மேல் விசாரணைக்காரனாகவைத்த
உண்மையும், புத்தியுமுள்ள ஊழியக்காரன்
யாவன்?
௪௬. எசமான் வந்து, எந்த ஊழியக்கார
னை அப்படிச்செய்யக்காண்பானோ அவ
னே பாக்கியவானாயிருப்பான்.
௪௭. தன் ஆஸ்திகளெல்லாவற்றின் மே
லும் அவனை வைப்பானென்று மெய்யாய்
உங்களுக்குச்சொல்லுகிறேன்.
௪௮. அந்த ஊழியக்காரனோ பொல்லாத

வனாய் என் எசமான் திரும்பிவரத்தாமதமாயிருப்பானென்று எண்ணி,

சகூ. தன்னோடேகூட ஊழியஞ்செய்கிறவர்களை அடிக்கத்தொடங்கி, வெறியரோடே புசித்துக்குடிக்கிறவனானால்,

ருய. அந்த ஊழியக்காரன் நினையாதிருக்கிற நாளிலேயும், அவனுக்குத்தெரியாத நேரத்திலேயும் அவனுடைய எசமான் வந்து,

ருக. அவனைக்கடினமாய் அடித்து, * அழுகையும், பற்கடிப்புமுள்ள இடத்திலே வஞ்சகரோடே அவனுடைய பங்கை யேற்படுத்துவான். * உரு: நய.

உரு அதிகாரம்.

[(க) பத்துக்கன்னியாஸ்திரீகளையும், (யச) தாலந்துகளையுங் குறித்த உவமைகள். (நக) கடைசி நியாயத்தீர்ப்பின் விவரங்கள்.]

அப்பொழுது பரலோக இராச்சியத்தார் தங்கள் தீவட்டிகளைப்பிடித்து, மணவாளனுக்கெதிர்கொண்டு போகப்புறப்படுகிற பத்துக்கன்னிகளுக்கொப்பாயிருப்பார்கள்.

உ. அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்களாயும், ஐந்துபேர் புத்தியீனராயுமிருந்தார்கள்.

ந. புத்தியீனருள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளை யெடுத்தபொழுது, எண்ணெயைக் கூடக்கொண்டுபோகவில்லை.

ச. புத்தியுள்ளவர்களோ தீவட்டிகளோடுங் கூட, தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையுங் கொண்டுபோனார்கள்.

ரு. மணவாளன் தாமதித்தபொழுது எல்லாரும் நித்திரை மயக்கம் அடைந்து தூங்கினார்கள்.

சா. அப்படியிருக்குங் காலத்திலே பாதி இராத்திரியிலே இதோ, மணவாளன் வருகிறார். அவருக்கெதிர்கொண்டு போகப்புறப்படுங்களென்று கூக்குரலுண்டாயிற்று.

எ. உடனே அந்தக்கன்னிகளெல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை விளக்கினார்கள்.

அ. (அப்பொழுது) புத்தியீனருள்ளவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி, எங்கள் தீவட்டிகள் அணைந்துபோகின்றன. ஆகையால், உங்கள் எண்ணெயிற் கொஞ்சம் எங்களுக்குத்தாருங்களென்றார்கள்.

கூ. அதற்குப்புத்தியுள்ளவர்கள் சொன்னது, நாங்கள் கொடுத்தால் எங்களுக்கும், உங்களுக்குங் குறைச்சலுண்டாகும். அப்படியாகாதபடிக்கு நீங்கள் கடைக்காரரிடத்திற்போய் உங்களுக்காக எண்ணெயைக்கொள்ளுங்களென்றார்கள்.

ய. அந்தப்படி அவர்கள் கொள்ளப்போகிறபொழுது மணவாளன்வந்தார். எத்தினமாயிருந்தவர்கள் அவரோடேகூடக்கலியாணத்திற்குப்போய் (வீட்டில்) பிரவேசித்தார்கள்.

யக. உடனே கதவு பூட்டப்பட்டது. பின்பு மற்றக்கன்னிகளும் வந்து * ஆண்டவரே! ஆண்டவரே! எங்களுக்குத்திறக்கவேண்டுமென்றார்கள். * லூக். யந: உரு.

யஉ. அதற்கு அவர் சொன்னது, * உங்களை அறியமாட்டேனென்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேனென்றார். * எ: உந.

யந. அப்படியிருக்க, மனிதனுடைய குமாரன் வரும் நாளையாவது, நாழிகையையாவது நீங்கள் அறியாமலிருக்கிறபடியினாலே * விழித்துக்கொண்டிருக்கக்கடவீர்கள். * க கொரி. யசா: யந. அறி. யசா: யரு.

யச. அன்றியும், (பரலோக இராச்சியம்) * புறத்தேசத்திற்குப்பிரயாணமாய்ப்போகமனதுள்ள மனிதன் தன் ஊழியக்காரரை அழைத்துத்தன் ஆஸ்திகளை அவர்களுக்கொப்புக்கொடுத்ததுபோலிருக்கும். * லூக். யகூ: யஉ. மு

யரு. அவனுடைய திராணிக்குத்தக்கதாக ஒருவனுக்கு ஐந்துதாலந்து * நிறைபொன்னும், ஒருவனுக்கு இரண்டுதாலந்து நிறைபொன்னும், பின்னொருவனுக்கு ஒருதாலந்து (நிறைபொன்னும்) கொடுத்துப்பின்பு உடனே புறத்தேசத்திற்குப்போனான்.

யசா. ஐந்துதாலந்தைப்பெற்றவன் போய் அவைகளால் வியாபாரம்பண்ணி, வேறைந்து தாலந்தைச்சம்பாதித்தான்.

யஎ. அப்படிப்போல இரண்டு தாலந்தைப்பெற்றவனும் வேறிரண்டு தாலந்தைச் சம்பாதித்தான்.

யஅ. ஒருதாலந்தைப்பெற்றவனோ போய் நிலத்திலே ஒரு குழியைத்தோண்டித்தன் எசமானுடைய திரவியத்தை அதிலே புதைத்துவைத்தான்.

யகூ. அநேககாலமான பின்பு, அந்த ஊழியக்காரருடைய எசமான் திரும்பிவந்து அவர்களோடே கணக்குப்பார்த்தான்.

உய. அப்பொழுது ஐந்து தாலந்தைப்பெற்றவன் சேர்ந்து, வேறைந்து தாலந்தைக்கொண்டுவந்து ஆண்டவனே! ஐந்து தாலந்தை யெனக்கொப்புவித்தீரே இதோ, அவைகளால் வேறைந்து தாலந்தைச்சம்பாதித்தேனென்றான்.

உக. அப்பொழுது எசமானானவன் அவனை நோக்கி, நல்லது உத்தமமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே! கொஞ்சத்

---

* யூதர்களுக்குள்ளே வழங்கின தாலந்து நிறைபொன் ஒன்றிற்கு ஏறக்குறையப்பதின்மூன்றாயிரத்தறுநூற்றெண்பதுவராகன் ஒப்பாயிருக்கும்.

தில் உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன். உன் எசமானுடைய சந்தோஷத்திற்குட் பிரவேசித்து வாவென்றான்.

௨௨. இரண்டு தாலந்தைப்பெற்றவனும் சேர்ந்து ஆண்டவனே! நீர் இரண்டு தாலந்தை யெனக்கொப்புவித்தீரே இதோ, அவைகளால் வேறிரண்டு தாலந்தைச்சம்பாதித்தேனென்றான்.

௨௩. அவனுடனே எசமான் சொன்னது, நல்லது, உத்தமமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே! கொஞ்சத்திலுண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னையதிகாரியாகவைப்பேன். உன் எசமானுடைய சந்தோஷத்திற்குட்பிரவேசித்துவாவென்றான்.

௨௪. பின்பு ஒருதாலந்தைப்பெற்றவனும் வந்து ஆண்டவனே! நீர் விதையாத இடத்திலே அறுக்கிறவருமாய்த்தெளியாத இடத்திற் சேர்க்கிறவருமாயிருக்கிற கடினமான மனிதனாயிருக்கிறீரென்று அறிந்தேன்.

௨௫. ஆகையால், நான் பயந்துபோய் உமது தாலந்தை நிலத்திற் புதைத்து வைத்தேன். இதோ, உம்முடையதைத் திரும்ப எடுத்துக்கொள்ளுமென்றான்.

௨௬. அவனுக்கு மாறுத்தரமாக எசமான் சொன்னதாவது; பொல்லாதவனும், சோம்பனுமான ஊழியக்காரனே! நான் விதையாத இடத்தில் அறுக்கிறவனென்றும், தெளியாத இடத்திற் சேர்க்கிறவனென்றும் நீ அறிந்தாயா?

௨௭. அப்படியானால், நீ யென் திரவியத்தை வியாபாரிகளிடத்தில் வைக்கவேண்டியதாயிருந்தது. அப்பொழுது நான் வந்து என்னுடையதை வட்டியோடேகூட எடுத்துக்கொள்வேனே யென்றுசொல்லி,

௨௮. பின்பு * உள்ளவனெவனோ அவனுக்குக்கொடுக்கப்படும். சம்பூரணமும் அவனுக்குண்டாகும். உள்ளவனல்லாதவனிடத்தில் இருக்கிறதையும் எடுத்துக்கொள்ளப்படும். * ௰௩: ௰. லூக். ௮: ௰௮.

௨௯. ஆகையால், இவனுடைய கையிலிருக்கிற தாலந்தை நீங்கள் வாங்கி, பத்துத் தாலந்தை யுடையவனுக்குக்கொடுங்கள்.

௩௰. அல்லாமலும், அப்பிரயோசனமான இந்த ஊழியக்காரனை * அழுகையும், பற்கடிப்புமுள்ள மிகவுந் தூரமான இருளிலே தள்ளிப்போடுங்களென்றான். * ௨௨: ௰௩.

௩௧. அன்றியும், * மனிதனுடைய குமாரன் தமது மகிமையோடே தம்முடைய சகல பரிசுத்த தூதருடனேயுங்கூட வரும்பொழுது, அவர் தமது மகிமையுள்ள பத்திராசனத்தின்மேல் வீற்றிருப்பார். * ௰௬: ௨௭.

௩௨. அப்பொழுது உலகத்தாரெல்லாரும் அவருக்குமுன்பாகக் * கூட்டப்படுவார்கள். மேய்ப்பனானவன் ஆடுகளையும், கடாக்களையும் பிரிக்கிறதுபோல அவரவர்களை வெவ்வேறாகப்பிரித்து, * ௨ கொரி. ௫: ௰.

௩௩. ஆடுகளுக்கொப்பானவர்களை, தமது வலது பக்கத்திலேயும், கடாக்களுக்கொப்பானவர்களைத்தமது இடது பக்கத்திலேயும் நிறுத்துவார்.

௩௪. அப்பொழுது இராசாவானவர் தம்முடைய வலது பக்கத்தில் நிற்பவர்களைநோக்கி, நான் பசியாயிருந்தபொழுது * நீங்கள் எனக்குச்சாப்பாடுகொடுத்தீர்கள். நான் தாகமாயிருந்தபொழுது என் தாகத்தைத்தீர்த்தீர்கள். நான் அந்நியனாயிருந்தபொழுது என்னைச்சேர்த்துக்கொண்டீர்கள்.

௩௫. எனக்கு வஸ்திரமில்லாதபொழுது எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள். நான் வியாதியாயிருந்தபொழுது எனக்கு உதவிசெய்ய வந்தீர்கள். நான் காவலிலிருந்தபொழுது என்னைப்பார்க்க வந்தீர்கள்.

௩௬. ஆகையால், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே! உலகமுண்டானது முதல் உங்களுக்காக் எத்தினம்பண்ணப்பட்டிருக்கிற இராச்சியத்தைச்சுதந்தரித்துக்கொள்ள வாருங்களென்பார். * ஏசா. ௫௮: ௭, ௮. எபி. ௬: ௰.

௩௭. அப்பொழுது நீதிமான்கள் அவருக்கு மாறுத்தரமாகச்சொல்வது, ஆண்டவரே! நாங்கள் உம்மைப்பசியும், தாகமுமுள்ளவரென்று எப்பொழுது கண்டு உமக்குப் போசனபானங் கொடுத்தோம்.

௩௮. நாங்கள் உம்மை அந்நியனென்றும், வஸ்திரமில்லாதவரென்றும், எப்பொழுது கண்டு, உம்மைச்சேர்த்துக்கொண்டு உமக்கு வஸ்திரங்கொடுத்தோம்.

௩௯. நாங்கள் உம்மை வியாதியுள்ளவரென்றும், காவலிலிருக்கிறவரென்றும், எப்பொழுது கண்டு உம்மிடத்தில் வந்தோமென்பார்கள்.

௪௰. அதற்கு இராசா சொல்வது, மிகவுஞ் சிறியரான * என் சகோதரராகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச்செய்தீர்களோ அதை யெனக்கே செய்தீர்களென்று மெய்யாய் உங்களுக்குச்சொல்லுகிறேனென்பார். * ௰: ௪௰. [illegible] வாக். ௰௯: ௰௭.

௪௧. பின்பு அவர் தமது இடதுபக்கத்தில் நிற்பவர்களைநோக்கி, * நான் பசியாயிருந்தபொழுது, நீங்கள் எனக்குச்சாப்பாடு கொடுக்கவில்லை. நான் தாகமாயிருந்தபொழுது, நீங்கள் என் தாகத்தைத்தீர்க்கவில்லை.

௪௨. நான் அந்நியனாயிருந்தபொழுது, நீங்கள் என்னைச்சேர்த்துக்கொள்ளவில்லை. எனக்கு வஸ்திரமில்லாதபொழுது, நீங்கள் எனக்கு வஸ்திரங்கொடுக்கவில்லை. நான் வி

யாதி யுள்ளவனுமாய்க்காவலில் வைக்கப்பட்டவனுமாயிருந்தபொழுது, நீங்கள் எனக்கு உதவிசெய்ய வரவில்லை.

௪௩. * ஆகையாற் சபிக்கப்பட்டவர்களே! நீங்கள் என்னைவிட்டுச்சாத்தானுக்காகவும், அவனுடைய தூதர்களுக்காகவும், எத்தனம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினிக்குப்போங்களென்பார். * ௭: ௨௩.

௪௪. அப்பொழுது அவர்களும், அவருக்கு மாறுத்தரமாகச்சொல்வது, ஆண்டவரே! உம்மைப்பசி தாகமுள்ளவரென்றும், அந்நியனென்றும், வஸ்திரமில்லாதவரென்றும், வியாதி யுள்ளவரென்றும், காவலிலிருக்கிறவரென்றும் நாங்கள் எப்பொழுது கண்டு, உபக்கூழியஞ்செய்யாதிருந்தோமென்பார்கள்.

௪௫. அதற்கு அவர் சொல்வது, * மிகவுஞ் சிறியரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச்செய்யாதிருந்தீர்களோ அதை எனக்குஞ் செய்யாதிருந்தீர்களென்பார். * யாக். ௨: ௰௩.

௪௬. அப்படியே * அவர்கள் நித்தியவேதனை யடையவும், நீதிமான்களோ நித்திய சீவனை யடையவும் போவார்களென்றார். * யோவா. ௫: ௨௯.

௨௬ அதிகாரம்.

[(௧) பிரதானியர்கள் கிறிஸ்துவைக்கொலை செய்ய யோசனை பண்ணினது. (௬) ஒரு ஸ்திரீ அவருடைய சிரசில் எண்ணெயைப் பூசினது. (௰௪) யூதா அவரை விற்றது. (௰௭) கிறிஸ்துப்பஷாவைச் சாப்பிட்டு, (௨௬) பரிசுத்த இராப்போசனத்தை யேற்படுத்தி, (௩௬) தோட்டத்தில் செபம் பண்ணினபின்பு, (௪௭) யூதாவினால் ஒரு முத்தத்தின்வழியாய்க்காட்டிக்கொடுக்கவும், (௫௭) காயிபாவினிடத்திற் கொண்டுபோகவும், (௬௯) பேதுருவினால் மறுதலிக்கவுமுடன்பட்டது.]

* இந்த வசனங்கள் யாவையும் இயேசுவானவர் சொல்லிமுடித்த பின்பு அவர் தம்முடைய சீஷருடனே சொன்னதாவது; * மாற். ௰௪: ௧—௰௧. லூக். ௨௨: ௧, ௨.

௨. இரண்டுநாளைக்குப்பின்பு பஸ்காப் பண்டிகை வருமென்றறிந்திருக்கிறீர்கள் அப்பொழுது மனிதனுடையகுமாரன் சிலுவைமரத்திலே அறையப்படுவதற்கு, ஒப்புக்கொடுக்கப்படுவானென்றார்.

௩. அக்காலத்திலே பிரதான ஆசாரியரும், வேதபாரகரும், சனங்களிலுள்ள மூப்பருங் காயிபா என்னப்பட்ட பிரதான ஆசாரியனுடைய அரமனையிற் கூடிவந்து,

௪. தந்திரமாய் இயேசுவானவரைப்பிடித்துக்கொலைசெய்யும்படிக்கு யோசனைபண்ணியிருக்கிறபொழுது,

௫. பண்டிகைநாள்களில் அப்படிச்செய்யக்கூடாது. செய்தாற் சனங்களுக்குள்ளே கலகமுண்டாகுமென்று (நிறுத்தினார்கள்.)

௬. அன்றியும் இயேசுவானவர் பெத்தானியூரிற் குஷ்டரோகியாயிருந்த சீமோனுடைய வீட்டிலிருக்கையில்,

௭. ஒருஸ்திரீ, * விலையேறப்பெற்ற தயிலமுள்ள பரணியை யெடுத்துக்கொண்டு வந்து அவர் பந்தியிருக்கிறபொழுது அதை அவருடைய சிரசின்மேலூற்றினாள். * யோவா. ௰௨: ௧, ௮.

௮. அவருடைய சீஷர் அதைக்கண்டு விசனமடைந்து இந்தக்கேடு என்னத்திற்கு?

௯. இந்தத்தயிலத்தை உயர்ந்த கிரயத்திற்குவிற்று, தரித்திரருக்குக்கொடுத்தால் (இலாபமிருக்குமே) என்றார்கள்.

௰. இயேசுவானவர் அதை யறிந்து அவர்களுக்குச்சொன்னது, நீங்கள் இந்த ஸ்திரீயை ஏன் வருத்தப்படுத்துகிறீர்கள்! என்னிடத்தில் நற்கிரியையைச்செய்தாளே.

௰௧. தரித்திரர் எக்காலத்திலும் உங்களுடனே யிருக்கிறார்கள். நானோ எக்காலத்திலேயும் உங்களோடே யிருப்பதில்லை.

௰௨. இவள் இந்தத்தயிலத்தை யென் சரீரத்தின்மேலூற்றினது என்னை அடக்கம் பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கின்றது.

௰௩. உலகத்தில் எவ்விடத்திலே இந்தச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுமோ அவ்விடத்திலே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததுஞ் சொல்லப்படுமென்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேனென்றார்.

௰௪. அப்பொழுது பன்னிரண்டு சீஷரில் ஒருவனாகிய யூதா ஸ்காரியோத்தென்னப்பட்டவன் பிரதான ஆசாரியனிடத்திற்குப் போய்,

௰௫. நான் அவரை உங்களுக்குக்காட்டிக் கொடுப்பேன். நீங்கள் எனக்கு என்னகொடுக்கிறீர்களென்றான். அவர்கள், * அவனுக்கு முப்பது வெள்ளிக்காசை * ஏற்பாடுத்திக் (கொடுத்தார்கள்.) * சக. ௰௧: ௰௨.

௰௬. அதுமுதல் அவன் அவரைக்காட்டிக் கொடுக்கும்படிக்கு, தகுதியான காவத்தைத்தேடிக்கொண்டான்.

௰௭. * பின்பு அவர்கள் புளியாத அப்பஞ் சாப்பிடுகிறநாள்களில் முதல்நாளிலே சீஷர்கள் இயேசுவினிடத்திற்குவந்து நீர் பஸ்

---

* யூதர்களுடைய வெள்ளிக்காசு ஒன்றிற்கு ஏறக்குறைய ஒருரூபாய் ஒப்பாயிருக்கு.

காப்பண்டிகையின் இராப்போசனம் பண்
ணும்படிக்கு நாங்கள் எங்கே யெத்தினம்
பண்ணச்சித்தமாயிருக்கிறீரென்று கேட்
டார்கள். * மாற். ௰௪: ௰௨, ௨௫. லூக்.
௨௨: ௭, ௩௩.
௰௮ அதற்கு அவர் சொன்னது, நீங்கள்
பட்டினத்திலே யொருவனிடத்திற்போய்
என்காலஞ் சமீபமாயிருக்கின்றது, உன்னி
டத்திலே என் சீஷரோடுங்கூடப்பஸ்காப்
பண்டிகை கொண்டாடுவேனென்று போ
தகர் சொல்லுகிறாரென்று அவனுடனே
சொல்லுங்களென்றார்.
௰௯. இயேசுவானவர் கட்டளையிட்டபடி
யே சீஷர்கள்போய், பஸ்காப்போசனத்
தை யெத்தினம்பண்ணினார்கள்.
௨௰. அஸ்தமனமானபொழுது அவர் பன்
னிருவரோடுங்கூடப்பந்தியிருந்தார்.
௨௧. * அவர்கள் போசனம்பண்ணுகை
யில் அவர் உங்களிலொருவன் என்னைக்காட்
டிக்கொடுப்பானென்று மெய்யாய் உங்க
ளுக்குச்சொல்லுகிறேனென்றார். * யோ.
௰௩: ௨௧, ௩௰.
௨௨. அப்பொழுது அவர்கள் மிகவுந் துக்
கப்பட்டு அவரை நோக்கி ஆண்டவரே,
நானே அப்படிச்செய்வேனென்று ஒவ்
வொருவராய்ச்சொல்லத்தொடங்கினார்கள்.
௨௩. அதற்கு அவர் சொன்னது, என்னோ
டேகூடத்தாலத்தில் கைதோய்க்கிறவனே
என்னைக்காட்டிக்கொடுப்பான்.
௨௪. மனிதனுடையகுமாரன் தன்னைக்கு
றித்து எழுதியிருக்கிறவிதமாய்ப்போகிறான்.
அப்படியிருந்தும் ஐயோ, மனிதனுடைய
குமாரன் எந்த மனிதனாலே காட்டிக்கொ
டுக்கப்படுவானோ அம்மனிதனுக்கு வேதனை
வரும். அம்மனிதன் பிறவாதிருந்தானானால்
அவனுக்கு நலமாயிருக்குமென்றார்.
௨௫. (பின்னாலே) அவரைக்காட்டிக்கொ
டுத்த யூதாவும் அவரை நோக்கி இரபீ,
நானோ அப்படிச்செய்வேனென்றான். நீ
சொன்னபடியே யிருக்குமென்றார்.
௨௬. அன்றியும் அவர்கள் போசனம்பண்
ணுகையில், * இயேசுவானவர் அப்பத்தை
யெடுத்துக்கொண்டு ஆசீர்வதித்து அதைப்
பிட்டுச்சீஷர்களுக்குக்கொடுத்து, இது என்
னுடைய சரீரமாயிருக்கின்றது. நீங்கள் எ
டுத்துப்புசியுங்களென்றார். * ௧ கொ. ௰௧:
௨௩, ௨௫.
௨௭. பின்பு அவர் பாத்திரத்தையும் எடுத்
துக்கொண்டு தோத்திரம்பண்ணி, அதை
அவர்களுக்குக்கொடுத்து நீங்களெல்லாரும்
இதிற் பானம்பண்ணுங்கள்.
௨௮. இது அநேகருக்குப்பாவமன்னிப்பு
* உண்டாகும்படிக்குப்புதிய உடம்படிக்
கைக்கேற்றதாய், சிந்தப்படுகிற † என்
இரத்தமாயிருக்கின்றது. * உரோ. ௫:
௰௫. † எரே. ௩௧: ௩௧, ௩௪.
௨௯. இதுமுதற்கொண்டு, நான் உங்களோ
டேகூட என் பிதாவின் இராச்சியத்திலே
நவமாய்ப்பானம்பண்ணும் நாள்வரைக்கும்
இந்தத்திராட்ச இரசத்தை நான் பானம்
பண்ணுவதில்லையென்று உங்களுக்குச்
சொல்லுகிறேனென்றார்.
௩௰. அவர்கள் தோத்திரப்பாட்டைப்பாடி
ன பின்பு, ஒலிவமலைக்குப்புறப்பட்டுப்போ
னார்கள்.
௩௧. அப்பொழுது, இயேசுவானவர் அவர்
களைநோக்கி, * நான் மேய்ப்பனை உபத்தி
ரவப்படுத்தும்பொழுது, ஆடுகள் சிதறிப்
போமென்று எழுதியிருக்கின்றது. ஆகை
யால், இந்த இராத்திரியிலே நீங்களெல்லா
ரும் என்னைக்குறித்துக்கலக்கம் அடைந்து
போவீர்கள். * சகரி. ௩௩: ௭. மாற். ௰௪:
௨௬, ௩௧.
௩௨. நானோ எழுந்திருந்தபின்பு, உங்க
ளுக்குமுன்னே * கலிலேயாநாட்டுக்குப்
போவேனென்றார். * ௨௮: ௰௬.
௩௩. அதற்குப்பேதுருசொன்னது, எல்லா
ரும் உம்மைக்குறித்துக்கலக்கம் அடைந்
து போனாலும், நான் ஒருக்காலும் கலக்
கம் அடைந்து போகமாட்டேனென்றான்.
௩௪. அவனுடனே இயேசுவானவர் சொன்
னது; இந்த இராத்திரியிலே * சேவல்கூவு
கிறதற்குமுன்னமே நீ யென்னை மூன்றுத
ரம் மறுதலிப்பாயென்று மெய்யாய் உனக்
குச்சொல்லுகிறேனென்றார். * யோவா.
௰௩: ௩௮.
௩௫ அதற்குப்பேதுரு சொன்னது, நான்
உம்மோடே மரணம் அடையவேண்டிய
தாயிருந்தாலும், உம்மை மறுதலிக்கமாட்
டேனென்றான். மற்றச்சீஷரெல்லாரும் அப்
படியே சொன்னார்கள்.
௩௬. * அப்பொழுது இயேசுவானவர் அ
வர்களோடேகூடக்கெதுசேமனே யென்
னும் இடத்திற்குவந்து சீஷரைநோக்கி,
நான் அங்கேபோய்ச்செபம்பண்ணுமளவும்
நீங்கள் இவ்விடத்தில் உளுக்காந்திருங்க
ளென்றுசொல்லி, * மாற். ௰௪: ௩௨, ௪௨.
லூக். ௨௨: ௩௯, ௪௬.
௩௭. * பேதுருவையும், செபேதேயுவின்
குமாரரிருவரையுங் கூட்டிக்கொண்டுபோ
ய்த்துக்கம் அடையவும், மிகவும் வியாகு
லப்படவுந் தொடங்கி, * ௰௭: ௧, ௨.
௩௮. பின்பு அவர்களைநோக்கி, என் ஆத்
துமா * மரணபரியந்தம் மிகுந்த துக்கப்
பட்டிருக்கின்றது. நீங்களிங்கே தரித்திருந்
து, என்னோடேகூட விழித்திருங்களென்று
சொல்லி, * சங்கீ. ௯௯: ௨, ௩.
௩௯. சற்றப்புறம்போய்ச்சாஷ்டாங்கமா
யவிழுந்து, என் பிதாவே, இந்தப்பாத்திரம்

என்னைவிட்டு நீங்கக்கூடாமானால், * அப்ப
டிச்செய்யும். இல்லாவிட்டால் என்னுடை
ய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்
தத்தின்படியே யாகக்கடவதென்று செபம்
பண்ணினார். * உய: உஉ. எபி. ரு: எ.

சய. பின்பு அவர் சீஷரிடத்தில் வந்து,
அவர்கள் நித்திரை பண்ணக்கண்டு, பேது
ருவைநோக்கி, இப்படி நீங்கள் ஒரு மணி
நேரமாகிலும் என்னோடேகூட விழித்திரும்
கத்திராணியில்லையோ?

சக. நீங்கள் * குற்றஞ்செய்வதற்கான கா
ரணத்திற் பிரவேசியாதபடிக்கு விழித்திருந்
து செபம்பண்ணுங்கள். ஆவியானது மன
துள்ளதுதான். சரீரமோ பலவீனமுள்ள
தென்று சொல்லி, * கலா. ரு: யஎ. க
பேது. ரு: அ.

சஉ. இரண்டாந்தரம் போய் என் பிதா
வே! இந்தப்பாத்திரத்திலுள்ளதை நான்
பானம் பண்ணுவிட்டால், இது என்னைவிட்டு
நீங்காதா! நீங்கக்கூடாதிருந்தால் உம்மு
டைய சித்தத்தின்படியே யாகக்கடவதென்
று செபம்பண்ணினார்.

சங. சீஷர்களோ மிகுந்த நித்திரை மயக்
கமுள்ளவர்களானபடியால், அவர் திரும்பி
வந்தபொழுது அவர்கள் மறுபடியும் நித்
திரை பண்ணக்கண்டார்.

சச. அவர் மறுபடியும் அவர்களைவிட்டுப்
போய் மூன்றுந்தரம் அந்த விண்ணப்பவார்
த்தைகளைத்தானே செபம்பண்ணி, பின்பு
தம்முடைய சீஷரிடத்தில் வந்து,

சரு. நீங்கள் பின்னும் நித்திரைபண்ணி
யிளைப்பாறுவீர்களா? இதோ, மனிதனு
டைய குமாரன் பாவிகளுடைய கைகளில்
ஒப்புக்கொடுக்கப்படுகிறநேரஞ்சமீபித்தது.

சசு. அதோ, என்னைக்காட்டிக்கொடுக்
கிறவன் சமீபமாய்வருகிறான். எழுந்திருங்
கள் போவோமென்றார்.

சஎ. * அவர் பேசுகையிற் பன்னிருவரில்
ஒருவனாகிய யூதா வந்தான். அவனோடெங்
கூடப்பிரதான ஆசாரியரும், சனத்தின்
மூப்பரும், அனுப்பின திரளான சனங்களும்
கத்திகளையும், தடிகளையும் பிடித்துவந்தார்
கள். * மாற். யச: சங, ருஉ. லூக். உஉ:
சஎ, ருச.

சஅ. அவர்களுக்கு அந்தத்துரோகியான
வன் எவனை நான் முத்தஞ் செய்வேனோ
அவன்தானே இயேசு. அவனைப்பிடித்துக்
கொள்ளுங்களென்று அடையாளமாகச்
சொல்லியிருந்தான்.

சகூ. அந்தப்படி அவன் உடனே இயேசு
வினிடத்தில்வந்து இரபீ, நீர் வாழ்கவென்று
அவரை முத்தஞ் செய்தான்.

ருய. இயேசுவானவரோ அவனைநோக்கிச்
சிநேகிதனே! என்னத்திற்காக வந்திருக்கிறா
யென்றார். உடனே (மற்ற)வர்கள் சேர்ந்து
இயேசுவானவர்மேற் கைகளைவைத்து அவ
ரைப்பிடித்தார்கள்.

ருக. அப்பொழுது இயேசுவுடனேயிருக்
கிறவர்களிலொருவன் தன் கத்தியைப்பிடிந்
து உருவிப்பிரதான ஆசாரியனுடைய வே
லைக்காரனைக்காதற வெட்டினான்.

ருஉ. இயேசுவானவரோ அவனுடனே
சொன்னது, * கத்தியை (இப்படி) எடுக்
கிறவர்களெல்லாருங் கத்தியினாலே அழிந்து
போவார்களாகையால் உன் கத்தியைத்தி
ரும்ப அதினிடத்திலேபோடு. * க மோ.
கூ: கு. அறி. யங: ய.

ருங. (என்னைக்காப்பாற்றும்படிக்கு) என்
பிதா அரைலட்சத்திற்கு அதிகமான தூ
தரை என்னிடத்தில் அனுப்பவேண்டுமென்
று நான் இப்பொழுதே அவரை வேண்டிக்
கொள்ளக்கூடாதென்று நினைக்கிறாயா?

ருச. (நானே அப்படிச்செய்தால்) வேத
எழுத்துக்கள் எப்படி நிறைவேறும்?

ருரு. இப்படியே சம்பவிக்கவேண்டுமென்
று சொல்லிப்பின்பு சனக்கூட்டத்தைநோக்
கி, நீங்கள் ஒரு கள்ளனைப்பிடிக்கும்படிக்
குப்புறப்படுகிறதுபோல, கத்திகளோடும்,
தடிகளோடும் என்னைப்பிடிக்க வந்தீர்கள்.
தினந்தோறும் நான் தேவாலயத்திலே,
உங்களுக்குள்ளேயிருந்து உபதேசம்பண்
ணினேன். அப்பொழுது நீங்கள் என்னைப்
பிடிக்கவில்லையே.

ருசு. தீர்க்கதரிசிகளின் எழுத்துக்கள் நி
றைவேறும்படிக்கு, இவையெல்லாம் நடந்
துவருகின்றனவென்றார். அப்பொழுது சீஷ
ரெல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்
கள்.

ருஎ. * இயேசுவைப்பிடித்தவர்களோ அ
வரைப்பிரதான ஆசாரியனாகிய காயிபாவி
னிடத்திற்குக்கொண்டுபோனார்கள். அங்கே
வேதபாரகரும், மூப்பருங் கூடிவந்திருந்
தார்கள். * மாற். யச: ருங. லூக். உஉ:
ருரு. யோவா. யஅ: யரு—உஎ.

ருஅ. அப்படியிருக்க, பேதுரு தூரத்திலே
பிரதான ஆசாரியனுடைய அரமனைவரைக்
கும் அவர் பின்சென்று, பின்பு அதிற்பிரவே
சித்துச்சங்கதியின் முடிவைப்பார்க்கிறதற்
குச்சேவகரிடத்தில் உட்கார்ந்தான்.

ருகூ. அத்தருணத்திலே பிரதான ஆசாரி
யரும், மூப்பரும், மற்றப்பெரிய சங்கத்
தார் யாவரும் இயேசுவைக்கொலைசெய்யும்
படிக்கு, அவருக்கு விரோதமாய்ப்பொய்ச்
சாட்சியைத்தேடினார்கள். அகப்படவில்லை.

கூய. * அநேகம்பேர்வந்து பொய்ச்சாட்
சிகளைச்சொல்லியும் ஒவ்வ இல்லை. * சங்கீ.
௩ரு: யக, யஉ.

கூக. பின்பு இரண்டுபேர்வந்து இவன் *
தேவாலயத்தை யிடித்துப்போடவும், மூன்
று நாட்குள்ளே யதைக்கட்டவும் வல்ல

மையுள்ளவனையிருக்கிறேனென்று சொன்னானென்று பொய்ச்சாட்சி சொன்னார்கள். * யோவா. ௨: ௰௯, ௨௧.

௬௨. அப்பொழுது பிரதான ஆசாரியன் எழுந்திருந்து அவரைநோக்கி, இவர்கள் உனக்கு விரோதமாய்ச்சாட்சிசொன்னதை நீ கேட்டாயா? இதற்கு மாறுத்தரமாக ஏதையாகிலுஞ் சொல்லுகிறதில்லையாவென்றான்.

௬௩. இயேசுவானவரோ பேசாமலிருந்தார். அப்பொழுது பிரதான ஆசாரியன் அவருடனே சொன்னது, பராபரனுடைய குமாரனாகிய கிறிஸ்து நீதானோ! அதை நீ யெங்களுக்குச்சொல்லவேண்டுமென்று சீவனுடைய தேவன்மேலுன்னை ஆணையிட்டுக் கேட்கிறேனென்றான்.

௬௪. இயேசுவானவர் சொன்னது, நீர் சொன்னபடியே யிருக்கின்றது. அல்லாமலும் இது முதற்கொண்டு, * நீங்கள் மனிதனுடைய குமாரனைச்சர்வவல்லமையுள்ளவருடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கவும், வானத்தின் மேகங்கள்மேல் வரவுங் காண்பீர்களென்று உங்களுக்குச்சொல்லுகிறேனென்றார். * ௰௬: ௨௭. ௨௫: ௩௧.

௬௫. பிரதான ஆசாரியன் அதைக்கேட்டவுடனே தன் வஸ்திரங்களைக்கிழித்துக்கொண்டு, இவன் தேவதூஷணஞ் சொன்னான். இனிச்சாட்சிகள் நமக்கு வேண்டுவதென்ன! இப்பொழுதே இவன் தூஷணத்தைக்கேட்டீர்களே.

௬௬. உங்களுக்கு எப்படித்தோன்றுகின்றதென்றான். அதற்கு மற்றவர்கள் சொன்னது, இவன் மரணத்திற்குப்பாத்திரனாயிருக்கிறானென்றார்கள்.

௬௭. அப்பொழுது சிலர் அவருடைய முகத்திலே துப்பி, * சிலர் அவரைக்கையினாற்குட்டி, சிலர் அவருடைய கன்னத்தில் அறைந்து, * ஏசா. ௫௰: ௬.

௬௮ கிறிஸ்துவே! உம்மை யடித்தவன் யாவன்? அதை ஞான திருஷ்டியாய் எங்களுக்குச்சொல்லுமென்று (இழிவாய்ச்) சொன்னார்கள்.

௬௯. அத்தருணத்திலே பேதுரு அரமனையின் பிரகாரத்திலே உளுக்காந்திருந்தான். அப்பொழுது வேலைக்காரியொருத்தி, அவனிடத்தில் வந்து, நீயுங் கலிலேயனாகிய இயேசுவுடனே இருந்தாயென்றாள்.

௭௰. அதற்கு அவன் சொன்னது, நீ பேசுகிறது எனக்குத்தெரியாதென்று எல்லாருக்கும் முன்பாக மறுதலித்துப்பின்பு மண்டபத்திற்குப்போனான்.

௭௧. அங்கே வேறொரு பெண் அவனைக் கண்டு, இவனும் நாசரேத்தூரானாகிய இயேசுவுடனே இருந்தானென்று அங்கே இருந்தவர்களுக்குச்சொன்னாள்.

௭௨. அவனோ சொன்னது, அம்மனிதனையறியமாட்டேனென்று மறுபடியும் ஆணையோடே மறுதலித்தான்.

௭௩. சற்றுநேரத்திற்குப்பின்பு, அங்கே நின்றவர்கள் பேதுருவினிடத்தில் வந்து, மெய்யாய் நீயும் அவர்களில் ஒருவன், உன் பேச்சு அதை வெளிப்படுத்துகின்றதென்றார்கள்.

௭௪. அப்பொழுது பேதுரு சொன்னது, நான் அந்த மனிதனை யறியவேயில்லையென்று சபித்துக்கொண்டு சத்தியம் பண்ணினான்.

௭௫ உடனே சேவல் கூவிற்று. பேதுரு (அதைக்கேட்டு,) சேவல் கூவுமுன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாயென்று இயேசுவானவர் சொன்ன வசனத்தை நினைத்துக்கொண்டு வெளியேபோய் மிகவும் அழுதான்.

௨௭ அதிகாரம்.

[(௧) இயேசு கட்டிப்பிலாத்துவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது. (௩) யூதா நான்றுகொண்டு செத்தது. (௰௯) பிலாத்துத்தன் மனைவியினாலே எச்சரிக்கப்பட்டது. (௨௪) அவன் தன் கைகளைக்கழுவி, (௨௬) பரபாசை விடுதலையாக்கினது. (௨௯) கிறிஸ்துத் தமக்கு முள்முடி தரித்து, (௩௪) சிலுவையில் அறையவும், (௪௰) நிந்திக்கவும் (௫௰) மரித்து அடக்கம்பண்ணவும் உடன்பட்டது. (௬௬) அவருடைய கல்லறை முத்திரித்துக்காவல் பண்ணப்பட்டது.]

விடியற் காலமானபொழுது * சகல பிரதான ஆசாரியரும், சனங்களின் மூப்பரும் இயேசுவைக்கொலைசெய்யும்படிக்கான வகையைக்குறித்து யோசனை பண்ணி, * சங்கீ ௨: ௨. மாற். ௰௫: ௧.

௨. அவரை, கட்டிக்கொண்டுபோய்ப் பொந்தியு பிலாத்தென்னுந் துரைக்கு அவரை யொப்புக்கொடுத்தார்கள்.

௩. அப்பொழுது அவரைக்காட்டிக்கொடுத்த யூதாவென்பவன் அவர் மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக்கண்டு, மனஸ்தாபம் அடைந்து, அந்த முப்பது வெள்ளிக்காசைப்பிரதான ஆசாரியரிடத்திற்கும், மூப்பரிடத்திற்குந் திரும்பக்கொண்டுவந்து, குற்றமில்லாதவரை நான் காட்டிக் கொடுத்ததினால்,

௪. எனக்குப்பாவம் வந்ததென்றான். அதற்கவர்கள் சொன்னது, அது எங்களுக்கென்ன? நீயேபாரென்றார்கள்.

௫. அப்பொழுது அவன் அந்த வெள்ளிக்காசைத்தேவாலயத்தில் எறிந்து, புறப்பட்டுப்போய் * நான்றுகொண்டு செத்தான். * அப்போ. ௧: ௰௮.

௬. பிரதான ஆசாரியர். அந்தப்பணத்தை யெடுத்து, இது இரத்தக்கிரயமாகையால் இதைக்காணிக்கைப்பெட்டியிலே போடக் கூடாதென்றுசொல்லி,

௭. ஆலோசனைபண்ணின பின்பு அதினாலே அந்நியரை அடக்கம்பண்ணும்படிக்கு ஒரு குயவனுடைய நிலத்தைக்கொண்டார்கள்.

௮. ஆதலால், இந்நாள்வரைக்கும் அந்த நிலம் * இரத்த நிலமென்னப்பட்டிருக்கின்றது. * அப். ௧: ௰௯.

௯. அப்பொழுது * இஸ்ரவேல் சனங்களால் அவர்மதிக்கப்பட்டகிரயமாகிய முப்பது வெள்ளிக்காசை அவர்கள் எடுத்து,

௰. பராபரன் எனக்குக்கட்டளையிட்டபடியே அதையொரு குயவனுடைய நிலத்திற்காகக்கொடுத்தார்களென்று எரேமியா தீர்க்கதரிசிசொன்னவசனம் நிறைவேறிற்று. * சகரி. ௰௧: ௰௨, ௰௩.

௰௧. * இயேசுவானவர் துரைக்குமுன்பாக நின்றபொழுது அந்தத்துரை அவரைநோக்கி, நீ யூதருடைய இராசாவா என்றுகேட்டான். அதற்கு இயேசுசொன்னது, நீர் சொல்லுகிறபடியே யிருக்கின்றதென்றார். * மாற். ௰௫: ௨—௰௫. லூக். ௨௩: ௩—௫. ௰௩—௨௫. யோவா. ௰௮: ௨௮—௪௰. ௰௯: ௰௬. ௰௫: ௧—௰௬.

௰௨. பின்பு பிரதான ஆசாரியரும், மூப்பரும் அவர்மேற் குற்றஞ்சாற்றி வருகிறபொழுது, அவர் மாறுத்தரம் ஒன்றுஞ் சொன்னதில்லை.

௰௩. அப்பொழுது பிலாத்து அவரைநோக்கி, இவர்கள் உன்னைக்குறித்துச்சொல்லுகிற குற்றங்களை நீ கேட்கிறதில்லையோ என்றான்.

௰௪. அவரோ துரைக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாகத்தக்கதாக ஒன்றுக்கும் மாறுத்தரமாக ஒரு வார்த்தையுஞ் சொல்லாமலிருந்தார்.

௰௫. காவற் பண்ணப்பட்டவர்களில் எவனைச்சனங்கள் கேட்கிறார்களோ அவனைத் துரை விடுதலையாக்குகிறது பண்டிகைதோறும் வழக்கமாயிருந்தது.

௰௬. அல்லாமலும், அக்காலத்திலே கீர்த்தியடைந்த பாதகனாகிய பரபாசென்னப்பட்ட ஒருவன் காவலில்வைக்கப்பட்டிருந்தான்.

௰௭. ஆகையால், சனங்கள் கூடியிருக்கையிற் பிலாத்து அவர்களைநோக்கி, பரபாசென்பவனும், கிறிஸ்து என்னப்பட்ட இயேசு என்பவனுமிருக்கிறார்களே, இவர்களில் எவனை நான் உங்களுக்காக விடுதலையாக்க விரும்புகிறீர்கள் என்றுகேட்டான்.

௰௮. அவர்கள் அவரைப்பொறாமையினாலே ஒப்புக்கொடுத்தார்களென்று பிலாத்து அறிந்தபடியினாலே (அவன் அப்படியே கேட்டான்.)

௰௯. அல்லாமலும், அவன் நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில், அவனுடைய மனைவியினால் அனுப்பப்பட்ட ஒருவன்வந்து நான் இன்றைக்குச்சொப்பனத்திலே இந்த நீதிமானைக்குறித்து மிகவும் பாடுபட்டேன். ஆகையால், நீர் அவரைக்குறித்து ஒன்றுஞ் செய்யாதிருப்பீராகவென்று அம்மாள் அறிவிக்கச்சொன்னாளென்றான்.

௨௰. அத்தருணத்திலே பிரதான ஆசாரியரும், மூப்பரும் பரபாசைக்கேட்கும்படிக்கும், இயேசுவைக்கொலைசெய்யப்பண்ணும்படிக்குஞ் சனங்களை (வசனங்களினாலே) ஏவினார்கள்.

௨௧. ஆதலால், இவ்விரண்டுபேரில் எவனை நான் உங்களுக்கு விடுதலைபண்ணவேண்டுமென்று துரை சனங்களைநோக்கிக்கேட்டபொழுது, அவர்கள் பரபாசை விடுதலையாக்கவேண்டுமென்று கூப்பிட்டார்கள்.

௨௨. அதற்குப்பிலாத்துச்சொன்னது, அப்படியானாற் கிறிஸ்து என்னப்படுகிற இயேசுவை நான் என்னசெய்யலாமென்றான். அவனைச்சிலுவைமரத்தில் அறையப்பண்ணவேண்டுமென்று எல்லாருங் கூப்பிட்டார்கள்.

௨௩. அதற்குத்துரை சொன்னது, ஏன் எந்தப்பொல்லாங்கைச் செய்தானென்றான். அப்பொழுது அவர்கள் அவனைச்சிலுவைமரத்தில் அறையப்பண்ணவேண்டுமென்று அதிகமதிகமாய்க்கூப்பிட்டார்கள்.

௨௪. பிலாத்து (தன்னுடைய பிரயாசம்) வீணாயிருக்கிறதென்றும், கலகம் அதிகமாகிறதென்றுங்கண்டு, சனங்களுக்கு முன்பாகத்தண்ணீர் அள்ளிக்கைகளைக்கழுவி இந்த நீதிமானின் இரத்தத்தைச்சிந்துகிறதற்கு நான் குற்றமில்லாதவன், நீங்களே பாருங்களென்றான்.

௨௫. அதற்குச்சனங்கள் எல்லாருஞ்சொன்னது, இவனுடைய இரத்தம் * எங்கள் மேலும், எங்கள் பிள்ளைகள் மேலுமிருப்பதாகவென்றார்கள். * ௨௩: ௩௫.

௨௬. அப்பொழுது அவன் பரபாசை அவர்களுக்காக விடுதலையாக்கி, இயேசுவை யோ வாரினால் அடிப்பித்துப்பின்பு சிலுவையில் அறையப்படும்படிக்கு ஒப்புக்கொடுத்தான்.

௨௭. பின்பு துரையினுடைய போர்ச்சேவகர் இயேசுவை அதிகாரச்சாலையிலே கொண்டுபோய்ப்போர்ச்சேவகராகிய கூட்டமெல்லாம் அவர்மேற் கூடிவரப்பண்ணி,

௨௮. அவருடைய வஸ்திரங்களைக்களைந்து சிவப்பான மேல்அங்கியை அவருக்கு உடுத்தி,

௨௯. முள்ளுக்களால் ஒருமுடியைப்பின்னி, அவருடைய சிரசின்மேல்வைத்து அவருடைய வலதுகையில் ஒருகோலைக்கொடுத்துப்பின்பு அவர் முன்பாக முழங்காற் படியிட்டு யூதரின் இராசாவே! வாழ்க என்று அவரைப்பரியாசம்பண்ணி,

௩௰. * அவர்மேல் துப்பி, அந்தக்கோலையெடுத்து அவருடைய சிரசில் அடித்தார்கள். * ௨௬; ௬௭. ஏசா. ௫௰: ௬.

௩௧. * அவரைப்பரியாசம் பண்ணினபின்பு அவர்கள் அவருக்கு உடுத்தின மேல்அங்கியைக்கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி அவரைச்சிலுவைமரத்தில் அறையும்படிக்குக்கொண்டுபோனார்கள். * மாற். ௰௫: ௨௰—௩௬. லூக். ௨௩: ௨௬.—௩௩. யோவா. ௰௯: ௰௭—௨௬.

௩௨. போகையில் அவர்கள் சிரேனே யூரானாகிய சீமோனென்பவனைக்கண்டு, அவன் அவருடைய சிலுவைமரத்தைச்சுமக்கும்படிக்குப்பலவந்தம் பண்ணினார்கள்.

௩௩. பின்பு அவர்கள் தலையோட்டிடமென்று அருத்தங்கொள்ளுங் கொல்கதா என்னும் இடத்துக்கு வந்தபொழுது,

௩௪. கசப்பான கிரைகலந்த * காடியை அவருக்குக்குடிக்கக்கொடுத்தார்கள். அவர் அதைருசிபார்த்துக்குடிக்கமனதில்லாதிருந்தார். * சங்கீ. ௬௯: ௨௨.

௩௫. அவரைச்சிலுவைமரத்தில் அறைந்தபின்பு அவர்கள் அவருடைய வஸ்திரங்களைக்குறித்துச்சீட்டுப்போட்டு அவைகளைப்பங்கிட்டார்கள். அதினாலே என்வஸ்திரங்களைத்தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்பேற் சீட்டுப்போட்டார்களென்று * தீர்க்கதரிசியாலுரைக்கப்பட்டது நிறைவேறிற்று. * சங்கீ. ௨௨: ௰௮.

௩௬. பின்பு அவர்கள் அங்கே யுட்கார்ந்து அவரைக்காத்துக்கொண்டிருந்தார்கள்.

௩௭. அல்லாமலும், அவருடைய மரணஆக்கினையின் காரணத்தை யறிவிக்கும்படிக்கு இவன் யூதருடைய இராசாவாகிய இயேசுவென்றெழுதி அவருடைய சிரசுக்கு மேலிடத்தில் வைத்தார்கள்.

௩௮. அன்றியும், அவருடைய வலது புறத்தில் ஒரு கள்ளனும், அவருடைய இடது புறத்தில் ஒருகள்ளனுமாக இரண்டு கள்ளரும் * அவருடனே கூடச்சிலுவைமரங்களில் அறையப்பட்டார்கள். * ஏசா. ௫௩: ௰௨.

௩௯. அப்படியிருக்க * அவ்வழிநடந்து போகிறவர்கள் தங்கள் தலைகளையசைத்து, * சங்கீ. ௨௨: ௭.

௪௰. ஆ, * தேவாலயத்தையிடித்த மூன்று நாள்களுக்குள்ளே கட்டுகிறவனே, நீதானே யுன்னையிரட்சித்துக்கொள். நீ பராபரனுடைய குமாரனானால் சிலுவைமரத்திலிருந்திறங்கிவாவென்று அவரைத்தூஷணித்தார்கள். * ௨௬: ௬௧.

௪௧. அப்படிப்பிரதான ஆசாரியரும், வேதபாரகரும், மூப்பருஞ் சொன்னது,

௪௨. இவன் மற்றவர்களை யிரட்சித்தான். தன்னைத்தானே இரட்சிக்கத்திராணியில்லை. இவன் இஸ்ரவேலின் இராசாவானால் இப்பொழுதே சிலுவையிலிருந்திறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம்.

௪௩. * இவன் தன்னைப்பராபரனுடைய குமாரனென்றுசொல்லி, பராபரன்மேல் நம்பிக்கையாயிருந்தானே. அவர் இவன்மேற் பிரியமாயிருந்தால், இப்பொழுது இவனைமீட்டு விடட்டுமென்று அவரைப்பரியாசம் பண்ணினார்கள். சங்கீ. ௨௨: ௮.

௪௪. இவ்விதமாய் அவரோடேகூடச்சிலுவைமரங்களில் அறையப்பட்ட கள்ளரும் அவரை நிந்தித்தார்கள்.

௪௫. அன்றியும் ஆறும் மணிநேரந் தொடங்கி, ஒன்பதாம் மணிநேரம்வரைக்கும் அத்தேசமெங்கும்அந்தகாரமுண்டாயிற்று.

௪௬. பின்பு ஒன்பதாம் மணிநேரத்திலே இயேசுவானவர் ஏலி, ஏலி, லாமா, சபக்தானியென்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டார். * அதற்கு என்தேவனே! என் தேவனே! ஏன் என்னைக்கைவிட்டீர் என்று அருத்தயாம். * சங்கீ. ௨௨: ௧. எபி. ௫: ௭.

௪௭. அவ்விடத்தில் நின்றவர்களிற் சிலர் அதைக்கேட்டு, இவன் எலியாவையழைக்கிறானென்றார்கள்.

௪௮. அவர்களிலொருவனோ ஓடிக்கடற்காளானையெடுத்துக்காடியால் நிரப்பி, அதையொரு கம்பின்மேற் பூட்டி அவருக்குக்குடிக்கக்கொடுத்தான்.

௪௯. மற்றவர்களோ சொன்னது, பொறுத்துக்கொள். எலியா இவனையிரட்சிக்க வருவானோ அதைப்பார்ப்போமென்றார்கள்.

௫௰. * பின்பு இயேசுவானவர் மறுபடியும் மிகுந்த சத்தமிட்டு ஆவியைவிட்டுவிட்டார். * மாற். ௰௫: ௩௭—௪௭. லூக். ௨௩: ௪௬—௫௬. யோவா. ௰௯: ௩௰—௪௨.

௫௧. அப்பொழுது சம்பவித்ததென்னவென்றால், தேவாலயத்திலுள்ள * திரைச்சீலைமேலேதொடங்கி, கீழேமட்டும் † இரண்டாகக்கிழிந்தது. பூமியும் அதிர்ந்தது.—கல்மலைகளும் பிளந்தன. கல்லறைகளுந் திறந்தன * ௨ மோ. ௨௬: ௩௧, ௩௩. † எபி. ௰: ௰௯, ௨௰.

௫௨. நித்திரையடைந்திருந்த பரிசுத்தவான்களுடைய அநேகஞ் சரீரங்கள் அவர் எழுந்திருந்த பின்பு எழுப்பப்பட்டு,

௫௩. கல்லறைகளைவிட்டுப்புறப்பட்டுப்பரிசுத்தபட்டினத்திற் பிரவேசித்து அநேகருக்குத்தரிசனையானார்கள்.

ருச. போர்ச்சேவகரின் தலைவனும், அவனோடேகூட இயேசுவைக்காத்திருந்தவர்களும் பூமியதிர்ச்சியையும், மற்ற நடக்கைகளையுங் கண்டபொழுது மிகுந்தபயம் அடைந்து, மெய்யாய் இவர் தேவ குமாரனாயிருந்தாரென்று சொல்லிக்கொண்டார்கள்.

ருரு. அல்லாமலும், * இயேசுவுக்கூழியஞ்செய்து, கலிலேயாவிலிருந்து அவரைப்பின்சென்றுவந்தஸ்திரீகளாகிய மகுதலாவூர் மரியாளும், * லூக். அ: உ.

ருசு. யாக்கோபுக்குந் யோசேப்புக்குந்தாயாகியமரியாளும், செபேதேயுவின் குமாரருடையதாயும், மற்ற அப்படிப்பட்ட அநேகஸ்திரீகளும் அங்கே தூரத்திலே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ருஎ. அஸ்தமனமானபொழுது அரிமத்தியா வூராகிய ஐசுவரியமுள்ளவனுமாய் இயேசுவுக்குச்சீஷனுமாயிருந்த யோசேப்பென்பவன் பிலாத்துவினிடத்திற்போய் இயேசுவின் சரீரத்தைக்கேட்டான்.

ருஅ. அதை அவனுக்குக்கொடுக்கும்படிக் குப்பிலாத்துக்கட்டளையிட்டான்.

ருகூ. அந்தப்படி யோசேப்பு அவருடைய சரீரத்தையெடுத்துத்துய்யதான மெல்லியபிடவையிலே சுற்றி,

சூய. * தான் கன்மலையில் வெட்டுவித்திருந்த தன்னுடைய புதிய கல்லறையில் அதைவைத்து அக்கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப்புரட்டிவைத்துப்போனான். * ஏசா. ருங: கூ.

சூக. அத்தருணத்திலே மகுதலா வூராளாகிய மரியாளும், மற்ற மரியாளுங் கல்லறைக்கெதிராக உளுக்காந்திருந்தார்கள்.

சூஉ. ஏர்தினநாளுக்குப்பின்னான மறுநாளிலே பிரதான ஆசாரியரும், பரிசேயரும் பிலாத்துவினிடத்திற் கூடிவந்து சொன்னதாவது;

சூங. துரையே, அந்த எத்தன் உயிரோடிருந்தபொழுது தான் மூன்றுநாளைக்குள்ளே எழுந்திருப்பேனென்று அவன் சொன்னதை நினைத்திருக்கிறோம்.

சூச. ஆகையால், அவனுடைய சீஷர் இராத்திரியிலே வந்து அவனை, களவாய்க்கொண்டுபோய், பின்பு மரித்தோரிலிருந்தெழுந்தானென்று சனங்களுக்குச்சொல்லாதபடிக்கும், முந்தின வஞ்சனையைப்பார்க்கிலும் பிந்தினவஞ்சனை கொடிதாகாதபடிக்கும் நீர் மூன்றும்நாள்வரைக்குங் கல்லறையைப்பத்திரம்பண்ணக்கட்டளையிடவேண்டுமென்றார்கள்.

சூரு. அதற்குப்பிலாத்துச்சொன்னது, காவற்பண்ணுகிற போர்ச்சேவகர் உங்களிடத்திலுண்டே, அவர்களாலே நீங்கள் உங்கள் இஷ்டப்படிபோய்க்கல்லறையைப்பத்திரம்பண்ணுங்களென்றான்.

சூசு. அந்தப்படி அவர்கள்போய்க்கல்லில் முத்திரைபோட்டுக் காவலுக்காகப்போர்ச்சேவகரைவைத்துக்கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள்.

உஅ அதிகாரம்.

[(க) கிறிஸ்து உயிர்த்தெழுந்ததை ஒருதூதன் ஸ்திரீகளுக்கு அறிவித்தது. (கூ) அவர் அவர்களுக்குக்காணப்பட்டது. (யக) அவருடைய சரீரங் கல்லறையினின்று திருடப்பட்டதென்றுசொல்ல, பிரதான ஆசாரியர் போர்ச்சேவகருக்குப்பணங் கொடுத்தது. (யசு) கிறிஸ்துத்தம்முடைய சீஷர்களுக்குக்காட்சியாகி, (யகூ) அவர்கள் சகலசாதிக்கும் ஞானஸ்நானங்கொடுத்துப் போதிக்கும்படி அவர்களை அனுப்பினது.]

* ஓய்வுநாள்முடிந்து கிழமையின் முதலாம்நாள் பிறக்கையில் மகுதலாவூர் மரியாளும், மற்றமரியாளுங் கல்லறையைப்பார்க்கப்புறப்பட்டார்கள். * மாற். யசு: க—அ. லூக். உச: க—எ.

உ. அப்பொழுது பூமி மிகவும் அதிரத்தக்கதாகப்பராபரனுடைய தூதன் வானத்திலிருந்திறங்கிவந்து வாசலிலிருந்த கல்லைப்புரட்டித்தள்ளி அதின்மேல் உளுக்காந்தான்.

௩. அவனுடையமுகம் மின்னல்போலவும், அவனுடைய உடை உறைந்தமழையைப் போல வெண்மையாகவுமிருந்தது.

ச. காவற்பண்ணுகிற போர்ச்சேவகர் அவனைக்கண்டுபயத்தினால் அதிர்ந்து செத்தவர்களைப்போலானார்கள்.

ரு. தூதனோ அந்தஸ்திரீகளைநோக்கி, நீங்கள் பயப்படாதிருங்கள். சிலுவை மரத்திலே அறையப்பட்ட இயேசுவைத்தேடிவந்தீர்களென்று அறிந்திருக்கிறேன்.

கூ. அவர்சொன்னபடியே எழுந்திருக்கிறாரகையால், அவர் இங்கேயில்லை. * நீங்கள்வந்து கர்த்தரை வைக்கப்பட்ட இடத்தைப்பார்த்து, * யசு: உக. யஎ: உ௩. உய: யகூ.

எ. பின்பு சீக்கிரமாய்ப்போய் அவர் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கிறார், உங்களுக்குமுன்னே, * கலிலேயாவுக்குப்போவார், அங்கே அவரைக்காண்பீர்களென்று அவருடைய சீஷருக்கு அறிவியுங்கள். நான் உங்களுக்குச்சொன்னதை நினைத்துக்கொள்ளுங்களென்றான். * உசு: ௩உ.

அ. உடனே அவர்கள் பயத்தோடும், மிகுந்த சந்தோஷத்தோடுங் கல்லறையைவிட்டு அவருடைய சீஷருக்கு அறிவிக்கும்படிக்கு ஓடிப்போனார்கள்.

கூ. அப்படி அவர்கள் அவருடைய சீஷருக்கு அறிவிக்கப்போகையில் நடந்ததென்னவென்றால், இயேசுவானவர் தாமே அவர்

களுக்கெதிர்ப்பட்டு நீங்கள் வாழ்கவென்றார். உடனே அவர்கள்சேர்ந்து சாஷ்டாங்கமாய் அவரைவணங்கி அவருடைய பாதங்களைக்கட்டிக்கொண்டார்கள்.
௰. அப்பொழுது இயேசுவானவர் அவர்களுடனே சொன்னதாவது; பயப்படாதிருங்கள். என் * சகோதரர் கலிலேயா நாட்டிலே என்னைக்காண்பார்கள். ஆகையால், அவர்கள் அவ்விடத்திற்குப்போகும்படிக்கு நீங்கள்போய்ச்சொல்லுங்களென்றார். * யோவா. ௨௰: ௰௭.
௰௧. அவர்கள் போகையில் காவற்பண்ணினசேவகரிற் சிலர் பட்டணத்தில்வந்து எல்லா நடக்கைகளையும் பிரதான ஆசாரியருக்கு அறிவித்தார்கள்.
௰௨. அப்பொழுது அவர்களும், மூப்பர்களுங் கூடிவந்து யோசனைபண்ணினபின்பு, அவர்கள் அந்தப்போர்ச்சேவகருக்கு மிகுந்த பணத்தைக்கொடுத்து,
௰௩. நீங்கள் எப்படிச்சொல்லவேண்டுமென்றால், நாங்கள் நித்திரைபண்ணுகையில் அவனுடைய சீஷர்கள் அவனைக்களவாய்க்கொண்டு போனார்களென்று சொல்லுங்கள்.
௰௪. தேசாதிபதி இதைக்கேள்விப்பட்டால் நாங்கள் அவரைச்சமாதானப்படுத்தி உங்களுக்கு, கஸ்திவாராதபடிக்குச்செய்வோமென்றார்கள்.
௰௫. போர்ச்சேவகர், அந்தப்பணத்தை யெடுத்துக்கொண்டு தாங்கள் அடைந்த போதிப்பின்படியே செய்தார்கள். அப்படியிந்தச்சங்கதி யூதருக்குள்ளே இந்நாள் வரைக்கும் பிரசித்தமாய் இருக்கின்றது.
௰௬. பதினொரு சீஷர்கள், * கலிலேயா நாட்டில் இயேசுவானவர் தங்களுக்குக்குறித்திருந்த மலையின்மேற் போனார்கள். * ௨௬: ௩௨. ௨௮: ௭, ௰. மாற். ௰௪: ௨௮, ௰௬: ௭. ௧ கொரி. ௰௫: ௬.
௰௭. அங்கே அவர்கள் அவரைக்கண்டு சாஷ்டாங்கமாய் வணங்கினார்கள். சிலரோ சந்தேகப்பட்டார்கள்.
௰௮. அப்பொழுது இயேசுவானவர் சேர்ந்து அவர்களுடனே திருவுளம்பற்றினதாவது; பரமண்டலத்திற்கும், பூமண்டலத்திற்கும், * சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. * ௰௧: ௨௭. யோவா. ௩: ௩௫.
௰௯. ஆகையால், நீங்கள் புறப்பட்டு உலகத்தாரெல்லாரையுஞ் சீஷராக்கி, பிதாக்குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,
௨௰. நான் உங்களுக்குக்கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ இம்மையின் முடிவுவரைக்கும் நான் எப்பொழுதும், * உங்களுடனேகூட விருக்கிறேனென்றார். ஆமென். * ௰௮: ௨௰.

மாற்கு என்பவர் எழுதின சுவிசேஷம்.

MARK.

---

௧ அதிகாரம்.

[(௧) யோவான்ஸ்நானனுடைய உத்தியோகம். (௯) இயேசு ஞானஸ்நானம்பெற்று, (௰௨) சோதிக்கப்பட்டு, (௰௪) பிரசங்கம் பண்ணினது. (௰௬) அவர் பேதுருவையும், அந்திரேயாவையும், யாக்கோபையும், யோவானையும் அழைத்து, (௨௩) பசாசுபிடித்திருந்த ஒருவனையும், (௨௯) பேதுருவினுடைய மாமியையும், (௩௨) மற்ற அநேகம் பிணியாளிகளையுங் குணமாக்கி, (௪௧) ஒரு குஷ்டரோகியைச்சுத்தமாக்கினது.]

பராபரனுடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவைக்குறித்த சுவிசேஷத்தின் ஆரம்பம்,
௨. இதோ, நான், * என்னுடைய தூதனை உமக்குமுன்பாக் அனுப்புகிறேன். அவன் உமக்குமுன்னே (போய்) உம்முடைய மார்க்கத்தை யெத்தினம்பண்ணுவானென்றும், பராபரனுடைய மார்க்கத்தை ஆயத்தப்படுத்தி, * மல். ௩: ௧.
௩. * அவருடைய பாதைகளைச்செவ்வைபண்ணுங்களென்று வனாந்தரத்திலே ஒருவன் கூப்பிடுவானென்றுந் தீர்க்கதரிசிகள்எழுதினபடியே, * ஏசா. ௪௰: ௩. யோ. ௧: ௨௩.
௪. யோவானென்பவன், * வனாந்தரத்திலே ஞானஸ்நானங்கொடுத்து, பாவமன்னிப்பை யடையும்படிக்கு மனந்திருப்புகிறதற்கேற்ற ஞானஸ்நானத்தைப்பிரசங்கம் பண்ணிக்கொண்டுவந்தான. * மத். ௩: ௧. லூக். ௩: ௨.

௫. அப்பொழுது யூதேயாதேசத்தாரனை
வரும், எருசலேம்பட்டணத்தாரெல்லாரும்
புறப்பட்டு அவனிடத்திற்போய்த்தங்கள் பா
வங்களை யறிக்கையிட்டு அவனாலே யோர்
தான் நதியிலே ஞானஸ்நானம் பெற்றார்
கள்.
௬. அந்த யோவான் ஒட்டக மயிருடை
யைத்தரித்துத்தன் னுடைய அரையில் வார்க்
கச்சைகட்டிக்கொண்டவனுமாய் வெட்
டுக்கிளிகளையும், காட்டுத்தேனையும் புசிக்கிற
வனுமாயிருந்தான்.
௭. அக்காலத்திலே அவன் பிரசங்கம்பண்
ணினதாவது; * என்னிலும் அதிக வல்ல
மையுடையவர் எனக்குப்பின்வருகிறார். அவ
ருடைய பாத இரட்சைகளின் வாரைக்கு
னிந்து அவிழ்க்கிறதற்கு நான் பாத்திர
னல்ல. * யோவா. ௧: ௨௭.
௮. நான் * சலத்தினால் உங்களுக்கு ஞா
னஸ்நானங் கொடுத்தேன். அவர் பரிசுத்த
ஆவியினாலே யுங்களுக்கு ஞானஸ்நானங்
கொடுப்பாரென்பதே. * யோவா. ௧: ௨௬.
௯. அந்தநாள்களில், இயேசுவானவர் கலி
லேயாநாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து
வந்து யோர்தான் நதியிலே யோவானாலே
ஞானஸ்நானம் பெற்று,
௰. சலத்தினின்றேறினவுடனே, வானம் பி
ரிந்ததையும், * ஆவியானவர் புறாவைப்
போலத்தம்மேலிறங்கினதையுங் கண்டார்.
* யோவா. ௧: ௩௨, ௩௪.
௰௧. அப்பொழுது, நீர் எனக்கன்பாயிருக்
கிற என் குமாரன் உம்மிற் பிரியமாயிருக்கி
றேனென்று பரமண்டலங்களிலிருந்து சத்
தமுண்டாயிற்று.
௰௨. அதின்பின்பு ஆவியானவர் அவரை
வனாந்தரத்திற்குப்போகப்பண்ணினார்.
௰௩. அந்த வனாந்தரத்திலே யவர் நாற்ப
துநாளிருந்து, சாத்தானாலே சோதிக்கப்
பட்டுக்*காட்டுமிருகங்களுக்குள்ளே யிருந்
தார். பின்பு தேவதூதர்கள் அவருக்கூழி
யஞ் செய்தார்கள். * மத். ௪: ௧—௰௧.
லூக். ௪: ௧—௰௩.
௰௪. * யோவான் காவலில் வைக்கப்பட்
ட பின்பு இயேசுவானவர் கலிலேயாநாட்டி
லே வந்து, * மத். ௪: ௰௨—௨௨.
௰௫. * காலம் நிறைவேறியிருக்கின்றது.
பராபரனுடைய இராச்சியத்தின் ஆளுகை
சமீபமாய் வந்தது. நீங்கள் மனந்திரும்பிச்
சுவிசேஷத்தை விசுவாசித்துக்கொள்ளுங்க
ளென்று பராபரனுடைய இராச்சியத்தைக்
குறித்து, சுவிசேஷத்தைப்பிரசங்கம்பண்
ணினார். * கலா. ௪: ௫.
௰௬. அல்லாமலும், இயேசுவானவர் கலி
லேயாநாட்டின் கடலருகே நடக்கையில்,
மீன் பிடிக்கிறவர்களாகிய சீமோனும், அவ
னுடைய சகோதரன் அந்திரேயாவுங் கட
லில் வலைவீசி யிருக்கிறபொழுது,
௰௭. அவர்களைக்கண்டு, எனக்குப்பின்
சென்று வாருங்கள். உங்களை நான் மனித
ரைப்பிடிக்கிறவர்களாக்குவேனென்றார்.
௰௮. உடனே யவர்கள் தங்கள் வலைகளை
விட்டு, அவரைப்பின்பற்றினார்கள்.
௰௯. அவர் அவ்விடம்விட்டுச்சற்றேதூரம்
போனபின்பு செபெதேயுவின்குமாரன் யாக்
கோபும், அவனுடைய சகோதரன் யோவா
னும் படவிலே வலைகளை முடிந்துகொண்டி
ருக்கையில் அவர்களைக்கண்டு, உடனே ய
வர்களையும் அழைத்தார்
௨௰. அப்பொழுது கூலியாள்களுடனே
கூடப்படவிலிருக்கிற தங்கள் தகப்பனாகிய
செபெதேயுவைவிட்டு, அவருக்குப்பின்
சென்றார்கள்.
௨௧. * பின்பு கப்பர்நாகூமூரிற் பிரவே
சித்தார்கள். ஓய்வுநாளிலே யவர் தாமதியா
மற் செப ஆலயத்திற்குப்போய்ப்போதகம்
பண்ணினார். * லூக். ௪: ௩௧. மூ
௨௨. அவர் வேதபாரகரைப்போலல்ல,
* அதிகாரமுடையவரைப்போல, போத
கம்பண்ணினபடியினாலே சனங்கள் அவரு
டைய உபதேசத்தைக்குறித்துப்பிரமித்
தார்கள். * மத். ௭: ௨௮. யோவா. ௭: ௪௬.
௨௩. அவர்களுடைய செப ஆலயத்திலே
அசுத்த ஆவியுள்ள ஒரு மனிதனிருந்தான்.
௨௪. அவன் * நாசரேத்தூரானாகிய இயே
சுவே! எங்களுக்கும் உமக்குமென்ன? எங்க
ளைக்கெடுக்கவாவந்தீர்! உம்மை யறிந்திருக்
கிறேன். நீரே பராபரனுடைய பரிசுத்த
ரென்று கூப்பிட்டான். * ௫: ௭. மத்தே.
௮: ௨௯.
௨௫. இயேசுவானவர் சொன்னது, நீ பே
சாமல் இவனைவிட்டுப்புறப்பட்டுப்போவென்
று, அவனிலுள்ள (ஆவியை) அதட்டினார்.
௨௬. அப்பொழுது அந்த அசுத்த ஆவி
யவனை யலக்கழித்து, மிகுந்த சத்தமாய்க்
கூப்பிட்டுப்புறப்பட்டுப்போயிற்று.
௨௭. (அதைக்கண்ட) எல்லாரும் பிரமிப்
படைந்து, ஒருவரையொருவர்பார்த்து இ
வர் அதிகாரத்தோடே அசுத்த ஆவிகளுக்
குங் கட்டளையிடுகிறார்: உடனே யவைகள்
இவருக்குக்கீழ்ப்படிகின்றன. இதென்ன!
இதெப்படிப்பட்ட புதிய உபதேசம் என்
று சொல்லிக்கொண்டார்கள்.
௨௮. அதுமுதல் அவருடைய கீர்த்தி கலி
லேயாநாட்டின் திசைகளிலெங்கும் பிரசித்
தமாயிற்று.
௨௯. உடனே யவர்கள் செப ஆலயத்தை
விட்டுப்புறப்பட்டு, யாக்கோபோடும், யோ
வானோடுங்கூடச்* சீமோன், அந்திரேயா
என்பவர்களுடைய வீட்டில் வந்தார்கள்.

அங்கே சீமோனுடைய மாமி சுரமாய்க் கிடந்தாள். * மத். ௮: ௰௪, ௰௫.

௩௰. உடனே யவர்கள் அவளைக்குறித்து, அவருக்குச்சொன்னார்கள்.

௩௧. அவர்போய் அவளுடைய கையைப் பிடித்து, அவளைத் தூக்கிவிட்டார். உடனே சுரம் அவளைவிட்டு நீங்கிற்று. அவள் அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்.

௩௨. சூரியன் அஸ்தமிக்கும் * மாலைக்காலத்திலே சகலவிதமான பிணியாளிகளையும், பசாசுபிடித்தவர்களையும் அவரிடத்திற் கொண்டுவந்தார்கள். * மத். ௮: ௰௬.

௩௩. அல்லாமலும் பட்டினத்தாரெல்லாரும் (அவரிருந்த) வீட்டுவாசலுக்குமுன்பாகக்கூடிவந்தார்கள்.

௩௪. அப்பொழுது அவர் பலவியாதிகளால், உபத்திரவப்படுகிற அநேகரைக்குணமாக்கி, அநேகம் பசாசுகளையும் துரத்தினார். தம்மை யந்தப்பசாசுகளறிந்தபடியால், அவைகள் பேசுகிறதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை.

௩௫. அதிகாலையிலே இருட்டோடே யவர் எழுந்திருந்து புறப்பட்டு, * வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே செபம்பண்ணினார். * லூக். ௫: ௰௬.

௩௬. சீமோனும், அவனோடிருந்தவர்களும் அவருக்குப்பின்னேபோய், அவரைக்கண்டபொழுது;

௩௭. சனங்களெல்லாரும் உம்மைத்தேடுகிறார்களென்று சொன்னார்கள்.

௩௮. அவர்களுடனே யவர் சொன்னது, * பிரசங்கம் பண்ணும்படிக்குப்புறப்பட்டேனே. ஆகையால், இங்கே சுற்றியிருக்கிற கிராமங்களுக்கும் போவோம் வாருங்களென்று சொல்லி, * ஏசா. ௬௧: ௧.

௩௯. (புறப்பட்டுக்) கலிலேயாநாட்டிலெங்கும் (போய்ச்)சனங்களுடைய செப ஆலயங்களிற் பிரசங்கம்பண்ணிப்பசாசுகளைத் துரத்தினார்.

௪௰. அப்படியிருக்கையில், ஒரு குஷ்டரோகி அவரிடத்தில் வந்து முழங்காற்படியிட்டு, உமக்குச்சித்தமானால் என்னைச்சுத்தமாக்க உம்மாலாகுமென்று, அவரை வேண்டிக்கொண்டான்.

௪௧. * இயேசுவானவர் மனதுருகிக்கையை நீட்டி, அவனைத்தொட்டு, எனக்குச்சித்தமுண்டு சுத்தமாகு என்றார். * மத். ௮: ௨, ௪. லூக். ௫: ௰௨, ௰௬.

௪௨. இப்படியவர் சொல்லுகையில், உடனே குஷ்டரோகம் அவனைவிட்டு நீங்க, அவன் சுத்தமானான்.

௪௩. பின்பு அவர் அவனைநோக்கி, நீ யிதை யொருவருக்குஞ் சொல்லவேண்டாம்.

௪௪. * அல்லாமலும் நீபோய், உன்னை ஆசாரியனுக்குக்காண்பித்து, உனக்குண்டான சுத்தத்தைக்குறித்து, அவர்களுக்குச்சாட்சியாகும்படிக்கு, மோசே கட்டளையிட்டவைகளைப்பலியிடு என்று கண்டிப்பாய்ச்சொல்லி, * மத். ௯: ௩௰.

௪௫. உடனே யவனை யனுப்பிவிட்டார். அப்படியிருந்தும், அவன் புறப்பட்டுப்போய், இந்தச்சங்கதியை மிகவும் பிரசங்கிக்கவும், அறிவிக்கவுந்தொடங்கினான். ஆதலால், அவர் வெளியரங்கமாய்ப்பட்டினத்திற் பிரவேசிக்கமாட்டாமல் வெளியான வனாந்தரமான இடங்களிலே தங்கி வந்தார். அங்கேயும் எல்லாத்திசைகளிலிருந்தும் அவரிடத்திற்கு வந்தார்கள்.

௨ அதிகாரம்.

[(௧) கிறிஸ்து ஒரு திமிர்வாதக்காரனைக்குணமாக்கி, (௰௪) ஆயத்துறையிலிருந்த மத்தேயுவை அழைத்து, (௰௫) ஆயக்காரரோடும், பாவிகளோடுஞ் சாப்பிட்டு, (௰௮) தம்முடைய சீஷர்கள் உபவாசம்பண்ணாதிருந்ததைக்குறித்தும். (௨௩) ஓய்வுநாளில் கதிர்களைக்கொய்ததைக்குறித்தும், உத்தரவு சொன்னது.]

* சிலநாள்களுக்குப்பின்பு அவர் மறுபடியுங் கப்பர்நாகூமூருக்குப்போனார். அவர் வீட்டிலே யிருக்கிறாரென்று சனங்கள் கேள்விப்பட்டபொழுது, * லூக். ௫: ௰௭—௨௬.

௨. உடனே வாசற்படிக்கு வெளியிலேயும் இடமில்லாதிருக்கத்தக்கதாக அநேகர் கூடிவந்தார்கள். அவர்களுக்குச் (சுவிசேஷ) வசனத்தைப்போதித்தார்.

௩. அப்பொழுது நாலுபேர் * ஒரு திமிர்வாதக்காரனைச்சுமந்துகொண்டு, அவரிடத்திற்கு வந்தார்கள். * மத். ௯: ௧—௮.

௪. சனங்கள் மிகுதியானபடியினாலே, அவர்கள் அவருக்குச்சமீபமாய்ச்சேர இடம்பெறாமல், அவரிருந்த வீட்டின் மேற்கூரையைப்பிரித்து, வழியுண்டாக்கித்திமிர்வாதக்காரன் கிடக்கிற படுக்கையை யிறக்கினார்கள்.

௫. இயேசுவானவர் அவர்களுடைய விசுவாசத்தைக்கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி, மகனே! உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டனவென்றார்.

௬. அங்கே உளுக்கார்ந்திருந்த வேதபாரகரிற் சிலர் (அதைக்கேட்டு,)

௭. இப்படித்தேவதூஷணங்களாக இவன் சொல்லுகிறதென்ன! பராபரனொருவருக்கேயன்றி, மற்றொருவனுக்கும் பாவங்களை மன்னிக்க வல்லமையுண்டா என்று தங்கள் இருதயங்களிலே சிந்தித்துக்கொண்டார்கள்.

௮. அவர்கள் அப்படித்தங்களுக்குள்ளே சிந்தித்திருக்கிறார்களென்று இயேசுவான

வர் தம்முடைய ஆவியினாலே யறிந்து, உ
டனே யவர்களைநோக்கி, நீங்கள் உங்கள்
இருதயங்களில் இப்படி ஏன் சிந்திக்கிறீர்
கள்?
௯. இந்தத்திமிர்வாதக்காரனுடனே உன்
பாவங்கள் மன்னிக்கப்பட்டனவென்று
சொல்லுகிறதோ, எழுந்திருந்து உன் ப
டுக்கையை யெடுத்துக்கொண்டு நட என்று
சொல்லுகிறதோ, எது எளிது?
௰. மனிதனுடைய குமாரன் பூமியிலே பா
வங்களை மன்னிக்கிறதற்கு அதிகாரமுடைய
வனாயிருக்கிறதை,
௰௧. நீங்கள் அறியும்படிக்குப் (பாருங்க
ளென்றுசொல்லி,) திமிர்வாதக்காரனைநோக்
கி, நீ யெழுந்திருந்து, உன் படுக்கையை
யெடுத்துக்கொண்டு, உன் வீட்டிற்குப்போ
வென்று உனக்குக்கட்டளையிடுகிறேனென்
றார்.
௰௨. உடனே யவன் எல்லாருக்கு முன்பா
க எழுந்திருந்து, தன் படுக்கையை யெடுத்
துக்கொண்டு போனான். அப்பொழுது யா
வரும் பிரமித்து, நாம் ஒருக்காலும் இப்ப
டிக்காணவில்லையே என்றுசொல்லி, பராபர
னைப்புகழ்ந்தார்கள்.
௰௩. * பின்பு அவர் புறப்பட்டு, மறுபடி
யுங் கடலின் அருகே போனபொழுது சனங்
களெல்லாரும் அவரிடத்தில் வந்தார்கள்.
அவர்களுக்கு உபதேசம்பண்ணினார். *
லூக். ௫: ௨௭—௩௨.
௰௪. அவர் கடந்துபோகையில், * ஆயத்
துறையில் உளுக்காந்திருக்கிற அல்பேயுவின்
குமாரனாகிய லேவியென்பவனைக்கண்டு, நீ
யெனக்குப்பின்சென்றுவா என்றார். அவன்
எழுந்து அவருக்குப்பின்சென்றான். * மத்.
௯: ௯—௰௭.
௰௫. அல்லாமலும், அவனுடைய வீட்டி
லே அவர் போசன பந்தியிருக்கையில், அ
நேகம் ஆயக்காரரும் பாவிகளும் அவருக்
குப்பின்சென்று வந்தபடியால், அவர்களும்
இயேசுவானவருடனேயும், அவருடைய சீஷ
ருடனேயுங் கூடப்பந்தியிலிருந்தார்கள்.
௰௬. அப்படி யவர் ஆயக்காரரோடும், பா
விகளோடும் போசனம் பண்ணுகிறதை வே
தபாரகரும், பரிசேயருங்கண்டு, அவருடை
ய சீஷரை நோக்கி, அவர் ஆயக்காரரோ
டும், பாவிகளோடும் போசனம் பண்ணலா
மா என்றார்கள்.
௰௭. இயேசுவானவர் அதைக்கேட்டு, அ
வர்களை நோக்கி, சொஸ்தமுள்ளவர்களுக்கு
வயித்தியன் வேண்டுவதில்லை. வியாதியுள்ள
வர்களுக்கே யவன் வேண்டும். நான் நீதி
மான்களையல்ல, பாவிகளையே மனந்திருப்பு
தலுக்கழைக்க வந்தேனென்றார்.
௰௮. அன்றியும், யோவானுடைய சீஷ
ரும், பரிசேயருடைய சீஷரும் உபவாசம்
பண்ணிவந்தார்கள். அப்பொழுது சிலர்
அவரிடத்தில் வந்து, யோவானுடைய சீஷ
ரும், பரிசேயருடைய சீஷரும் உபவாசம்
பண்ணுகிறார்கள். உம்முடைய சீஷர்மாத்தி
ரம் ஏன் உபவாசம் பண்ணவில்லை என்றார்
கள்.
௰௯. அதற்கு இயேசுவானவர் சொன்னது,
கலியாணத்திற்கு வந்த மனிதர் தங்களுட
னே மணவாளன் இருக்கையில் உபவாசம்
பண்ணுவார்களா! தங்களுடனே மணவா
ளன் இருக்கிற காலத்திலே உபவாசம் பண்
ணமாட்டார்களே.
௨௰. மணவாளன் அவர்களைவிட்டு நீக்கப்
படுங் காலம் வருகின்றது. அக்காலத்திலே
யவர்கள் உபவாசம் பண்ணுவார்கள்.
௨௧. ஒருவனுங் கோடித்துண்டை, பழை
ய வஸ்திரத்தில் இணைக்கமாட்டான். இ
ணைத்தால் அதில் இணைத்த புதியதுண்டு ப
ழைய வஸ்திரத்திலெடுபட்டுப்போக அதி
க பொத்தலுண்டாகுமே.
௨௨. அல்லாமலும் ஒருவனுந் திராட்சரசங்
களின் புதிய இரசத்தைப்பழைய துருத்திக
ளில் வார்த்து வைக்கமாட்டான். வைத்
தால், அந்தப்புதிய இரசந் துருத்திகளைக்
கிழித்துப்போடும். இரசமுஞ் சிந்திப்போம்.
துருத்திகளுங் கெட்டுப்போம். புதிய இர
சத்தைப்புதிய துருத்திகளில் வார்த்துவைக்
க வேண்டுமேயென்றார்.
௨௩. பின்பு ஒய்வுநாளில் * அவர் பயிர் வழி
யே போனபொழுது, அவருடைய சீஷர்
நடக்கையிற் கதிர்களைக்கொய்யத்தொடங்
கினார்கள். * மத். ௰௨: ௧—௮. லூக். ௬:
௧—௫.
௨௪. ஆதலாற் பரிசேயர் அவரைநோக்கி
இதோ, இவர்கள் ஒய்வுநாள்களிற் செய்யத்
தகாததை ஏன் செய்கிறார்கள் என்றார்கள்.
௨௫ அவர்களுக்கு அவர் சொன்னது, அபி
யத்தாரென்னும் பிரதான ஆசாரியனுடை
ய நாள்களிலே தாவீது தாழ்வுபட்டு, தா
னும், தன்னோடிருந்தவர்களும் பசியாயிருந்
தபொழுது,
௨௬. * தேவாலயத்திற்குட் பிரவேசித்து,
ஆசாரியரேயன்றி, மற்றொருவரும் புசிக்கத்
தகாத தேவ சமுகத்தப்பங்களைப்புசித்த
தையும், தன்னோடிருந்தவர்களுக்குக்கொ
டுத்ததையும் நீங்கள் ஒருக்காலும் அறிய
வில்லையோ என்றுசொல்லி, * ௧ சாமுவே.
௨௧: ௬.
௨௭. பின்பு மனிதர் ஒய்வுநாளுக்காக உண்
டாக்கப்படவில்லை. ஒய்வுநாள் மனிதருக்
காக உண்டாக்கப்பட்டது.
௨௮. ஆகையால், மனிதனுடையகுமாரன்
ஒய்வுநாளின் கர்த்தனாயிருக்கிறானென்றார்.

௩ அதிகாரம்.

[(௧) கிறிஸ்துவானவர் சூம்பின கையுள்ளவனையும், (௰) மற்றப்பிணியாளிகளையுங் சுகமாக்கி, (௰௧) அசுத்த ஆவிகளை அதட்டி, (௰௩) பன்னிரண்டு அப்போஸ்தர்களையுந் தெரிந்துகொண்டு, (௨௨) பெயேல்செபூவினால் பசாசுகளைத் துரத்தக்கூடுமென்ற தூஷணத்தை யெடுத்துக்காட்டி, (௩௧) தம்முடைய சகோதரர்களும், சகோதரிகளும், தாயாரும் இன்னாரென்று காட்டினது.]

மறுபடியும் அவர் செப ஆலயத்திற் பிரவேசித்தார். * அங்கே சூம்பின கையுடைய ஒரு மனிதனிருந்தான். * மத். ௰௨: ௯—௰௪. லூக். ௬: ௬—௰௧.

௨. அவர் ஓய்வுநாளில் அவனைச்சொஸ்தமாக்கினால், அவர்மேற் குற்றஞ் சாற்றலாமென்று அவர்களெண்ணி, அவரை யுற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

௩. ஆதலால் அவர் சூம்பின கையுள்ளவனை நோக்கி, நீ யெழுந்து நடுவிலே வந்திரு என்று சொல்லி,

௪. பின்பு அவர்களைநோக்கி, ஓய்வுநாள்களில் நன்மை செய்கிறதோ? தீமை செய்கிறதோ? ஜீவனை யிரட்சிக்கிறதோ? ஜீவனை வாங்குகிறதோ? எது நியாயமாயிருக்கின்றது என்று கேட்டார். அவர்கள் பேசாமலிருந்தார்கள்.

௫. அப்பொழுது அவர் அவர்களுடைய இருதயத்தின் கடினத்தினாலே விசனப்பட்டு, கோபத்தோடே அவர்களைச்சுற்றிப்பார்த்துப்பின்பு அந்த மனிதனைநோக்கி, உன் கையை நீட்டென்றார். அவன் நீட்டினான். உடனே அது மற்றக்கையைப்போலச் சொஸ்தமாயிற்று.

௬. பின்பு பரிசேயர் புறப்பட்டுப்போய் அவரை யழிக்கும்படிக்கு. ஏரோதேயின் மனிதரோடுங்கூட அவருக்கு விரோதமாய் உடனே ஆலோசனை பண்ணினார்கள்.

௭. இயேசுவானவர் தம்முடைய சீஷருடனேகூட அவ்விடம்விட்டுக்கடலோரத்திற்குப்போனார்.

௮. கலிலேயா நாட்டிலும், யூதேயாநாட்டிலும், எருசலேம் நகரத்திலும், இதுமேயா நாட்டிலும், யோர்தான் நதியினோரங்களிலுமிருந்து, மிகவுந் திரளாக வந்த சனங்கள் அவருக்குப்பின்சென்றார்கள். அல்லாமலும் தீரு, சீதோன் என்னும் பட்டினங்களின் திசைகளிலிருந்து மிகவுந் திரளாகவந்த சனங்கள் அவர் செய்த அற்புதங்களைக் கேள்விப்பட்டு; அவரிடத்தில் வந்தார்கள்.

௯. அப்பொழுது அநேகரை யவர் சொஸ்தமாக்கினபடியினாலே உபத்திரவப்பட்டவர்களெவர்களோ அவர்களவரைத்தொடும் படிக்கு அவர்மேலே விழுந்தார்கள்.

௰. ஆதலால் தாம் சனங்களால் நெருக்கப்படாதபடிக்கு, அவர் தம்முடைய சீஷரை நோக்கி, தமக்காக ஒருபடவை யெத்தனம் பண்ணச்சொன்னார்.

௰௧. அசுத்தமான ஆவியானவர்களும் அவரைக்கண்டவுடனே அவருக்கு முன்பாக விழுந்து, நீர் பராபரனுடைய குமாரனென்று கூப்பிட்டார்கள்.

௰௨. * தம்மை யவர்கள் பிரசித்தம் பண்ணாதபடிக்கு அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார். * ௧: ௨௫.

௰௩. பின்பு * அவர் ஒரு மலையின்மேலேறி, தமக்குச்சித்தமானவர்களை வரவழைத்தார். அவர்கள் அவரிடத்தில் வந்தார்கள். * லூக். ௬: ௰௨—௰௬.

௰௪. அப்பொழுது அவர் தம்முடனேகூடவிருக்கவும், (சுவிசேஷத்தைப்) பிரசங்கம் பண்ணும்பொருட்டாய் அனுப்பவும்,

௰௫. வியாதிகளை நீக்கி, பசாசுகளைத்துரத்தக்கதாக அதிகாரமுள்ளவர்களாகவும் பன்னிரண்டுபேரை யேற்படுத்தினார்.

௰௬. அவர்கள் யாரெனில், * சீமோன், செபேதேயுவின் குமாரனாகிய யாக்கோபு, * மத். ௰: ௨.

௰௭. யாக்கோபின் சகோதரனாகிய யோவான், அந்திரேயா, பிலிப்பு, பர்த்தோலோமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு, மத்தேயு, கானானாகிய சீமோன்,

௰௮. அவரைக்காட்டிக்கொடுத்த யூதாஸ் காரியோத்து என்பவர்களே.

௰௯. இவர்களில் முந்தின சீமோனுக்குப் பேதுரு என்றும், செபேதேயுவின் குமாரராகிய யாக்கோபுக்கும், யோவானுக்கும் போவநெர்கெஸ் என்றும் நாமங்களைக்கொடுத்தார். போவநெர்கெஸ் என்பதற்கு இடிமுழக்கம் இடுகிறவர்களென்று அருத்தமாம்.

௨௰. பின்பு வீட்டிற்குப்போனார்கள்.

௨௧. அங்கே யவர்கள் போசனம் பண்ணுகிறதற்குக்காலமில்லாதபடிக்கு அநேக சனங்கள் மறுபடியுங் கூடிவந்தார்கள். அவருடைய இனத்தார் அதைக்கேட்டு, அவருக்கு மயக்கமுண்டாயிற்றென்றுசொல்லி, அவரைப்பிடித்துக்கொள்ளும்படிக்கு வந்தார்கள்.

௨௨. எருசலேம் நகரத்திலிருந்து வந்த வேதபாரகர் * அவன் பெயேல்செபூலைக் கொண்டிருக்கிறான். பசாசுகளுடைய தலைவனாலே பசாசுகளைத்துரத்துகிறான் என்றார்கள். * மத். ௰௨: ௨௪. லூக். ௰௧: ௰௫.

௨௩. அவர்களை யவர் அழைத்து, உவமைகளால் அவர்களுடனே சொன்னதாவது; சாத்தான் சாத்தானைத்துரத்துவதெப்படி?

௨௪. ஒரு இராச்சியத்தார் தங்களுக்குள்

ளே பிரிவினையுண்டுபண்ணினால் அந்த இ
ராச்சியம் நிலை நிற்கமாட்டாதே.
௨௫. ஒரு குடும்பத்தார் தங்களுக்குள்ளே
பிரிவினை யுண்டுபண்ணினால், அந்தக்குடும்
பம் நிலை நிற்கமாட்டாதே.
௨௬. (அப்படிப்போல,) சாத்தான் தனக்
குத்தானே விரோதமாக எழும்பிப்பிரிந்
தால், அவன் நிலை நிற்கமாட்டாமல் முடிவு
அடைவான்.
௨௭. ஒருவன் முன்பு பலவானைக்கட்டா
விட்டால், அவனுடைய வீட்டிலே பிரவே
சிக்கவும், அவனுடைய ஆஸ்திகளைக்கொள்
ளையிடவுமாட்டான். (கட்டினால்) அவனு
டைய வீட்டைக்கொள்ளையிடுவான்.
௨௮. * மனிதர் செய்கிற பாவங்கள்யா
வும், அவர்கள் செய்கிற எந்தத்தூஷணங்க
ளும் மன்னிக்கப்படும். * லூக். ௰௨: ௰.
௨௯. பரிசுத்த ஆவியைத்தூஷணிக்கிற
வன் மாத்திரம் என்றென்றைக்கும் மன்னிப்
படையாமல் நித்திய ஆக்கினைக்குப்பாத்திர
னாயிருக்கிறானென்று மெய்யாய் உங்களுக்
குச்சொல்லுகிறேனென்றார்.
௩௰. அசுத்தமான ஆவியைக்கொண்டிருக்
கிறானென்று, அவர்கள் சொன்னபடியினா
லே (அவர் இப்படிச்சொன்னார்.)
௩௧. அத்தருணத்திலே அவருடைய * தா
யாரும், சகோதரரும் வந்து வெளியே நின்
று அவரை யழைக்கும்படி ஆளனுப்பினார்
கள். * மத். ௰௨: ௪௬, ௫௰. லூக். ௮:
௰௯—௨௧.
௩௨. அப்பொழுது அவரைச்சுற்றியுளுக்
காந்த சனங்கள் அவரைநோக்கி அதோ,
உம்முடைய தாயாரும் உம்முடைய சகோ
தரரும் வெளியே நின்று உம்மைத்தேடுகி
றார்களென்றார்கள்.
௩௩. அதற்கவர் என்னுடைய தாயும், என்
னுடைய சகோதரரும் யார் என்றுசொல்லி,
௩௪. தம்மைச்சூழ உளுக்காந்தவர்களைச்
சுற்றிப்பார்த்து, * என்னுடைய தாயும்,
என் சகோதரரும் இவர்களே. * யோவா.
௰௫: ௰௪. எபி. ௨: ௰௧.
௩௫. எப்படியெனில், பராபரனுடைய சித்
தத்தின்படி செய்கிறவனெவனோ அவனே
என் சகோதரன், என் சகோதரி, என் தா
யாயிருக்கிறானென்றார்.

௪ அதிகாரம்.

[(௧) விதைக்கிறவனைக்குறித்த உவமை. (௰௪) அதின் வியாக்கியானம். (௨௧) நமது மெய்ஞ்ஞானத்தைக்காட்ட வேண்டியது. (௨௬) மறைவாய் வளர்ந்த வித்தையும், (௩௰) கடுகு விதையையும், உவமையாகக் காட்டியது. (௩௫) கிறிஸ்துக்கடற் கொந்தளிப்பை யமர்த்தினது.]

பின்பு அவர் மறுபடியும் * கடலோ
ரத்திலே போதகம்பண்ணத்தொ
டங்கினார். மிகுந்த சனங்கள் கூடி அவரி
டத்தில் வந்தபடியினாலே அவர் படவிலே
றிக்கடலிலுளுக்காந்தார். சனங்களெல்லா
ரும் கடற்கரையிலிருந்தார்கள். * மத்.
௰௩: ௧—௨௩. லூக். ௮: ௪—௰௮.
௨. அப்பொழுது அவர் உவமைகளாய்
அநேகங்காரியங்களையவர்களுக்குப்போதித்
தார். போதிக்கிறபொழுது அவரவர்களு
டனே சொன்னதாவது; கேளுங்கள்.
௩. விதைக்கிறவன் விதைக்கப்புறப்பட்
டான்.
௪. அவன் விதைக்கையிற் சிலவிதை வழி
யருகே விழுந்தன. அப்பொழுது ஆகா
யத்தின் பறவைகள் வந்து அவைகளைப்பட்
சித்தன.
௫. சிலவிதை மிகுந்த மண்ணில்லாத கற்
பாறை நிலத்தில் விழுந்தன. அதற்கு மிகுந்
த மண்ணில்லாததினால் உடனே முளைத்து,
௬. சூரியகாந்தி தோன்றினபொழுது, தீந்
து அவைகளுக்கு வேரில்லாமையினாலுலர்ந்
துபோயின.
௭. சிலவிதை முள்ளுக்களுள்ள நிலத்திலே
விழுந்தன. முள்ளுக்கள் எழும்பி, அவை
பலன் கொடாதபடிக்கவைகளை நெருக்கிப்
போட்டன.
௮. சிலவிதை நல்ல நிலத்தில் விழுந்து ஓங்
கிவளர்ந்து ஒன்றுமுப்பதும், ஒன்றுஅறுப
தும், ஒன்று நூறுமாகப்பலன்கொடுத்தன.
௯. கேட்கிறதற்குக்காதுள்ளவன் கேட்கக்
கடவனென்று திருவுளம் பற்றினார்.
௰. பின்பு அவர் தனித்திருக்கையிற் பன்
னிருவரோடுங் கூட அவரைச்சூழ இருந்த
வர்கள் அந்த உவமையைக்குறித்து அவ
ரிடத்தில் விசாரித்தார்கள்.
௰௧. அவர்களுடனே யவர் சொன்னது,
பராபரனுடைய இராச்சியத்தின் இரகசி
யத்தையறியும்படி உங்களுக்கு அருள் அ
ளிக்கப்பட்டது.
௰௨. * புறம்பேயிருக்கிறவர்கள் மனந்
திரும்பாமலும், தங்கள் பாவமன்னிப்பை
யடையாமலுமிருக்கத்தக்கதாக உற்றுப்
பார்த்தும் அறியாமலும், உற்றுக்கேட்
டுஞ் சிந்தியாமலுமிருக்கும்படிக்கு, அவை
யெல்லாம் உவமைகளாக அவர்களுக்குச்
சொல்லப்பட்டுவருகின்றனவென்றுசொல்லி,
* ஏசா. ௬: ௯, ௰. அப். ௨௮: ௨௬, ௨௭.
௰௩. பின்பு அவர்களை நோக்கி, நீங்கள்
அந்த உவமையை யறியவில்லையா? அப்
படியானால், மற்ற எல்லா உவமைகளையும்
எப்படி யறிவீர்கள்.
௰௪. விதைக்கிறவன் வசனத்தை விதைக்
கிறவனே.

௰௫. விதை விழுந்தவழிக்கொப்பானவர்கள் விதைக்கப்படுகிற வசனத்தைக்கேட்டவுடனே சாத்தான் வந்து, அவர்களிருதயங்களின்மேல் விதைக்கப்பட்ட வசனத்தையெடுத்துப்போடுகிறான்.

௰௬. விதைவிழுந்த கற்பாறை நிலத்துக்கொப்பானவர்கள் அந்தவசனத்தைக்கேட்கிறபொழுது உடனே யதைச்சந்தோஷத்தோடே யேற்றுக்கொண்டும்,

௰௭. தங்களிலே வேரூன்றியிராமற் கொஞ்சக்காலமாத்திரம் அதைப்பற்றிக்கொள்ளுகிறார்கள். அவ்வசனத்தினிமித்தம் உபத்திரவமும், துன்பப்படுதலுமுண்டானவுடனே வழுவுகிறார்கள்.

௰௮. விதைவிழுந்த முள்ளுக்களுள்ள நிலத்திற் கொப்பானவர்கள் அவ்வசனத்தைக் கேட்டும்,

௰௯. அது பலனற்றதாய் இருக்கும்படிக்கு இவ்வுலகக்கவலைகளும், * ஐசுவரியத்தின் வஞ்சனையும், மற்றக்காரியங்களின் மேலுண்டாகிற இச்சைகளுந் தோன்றி, அந்தவசனத்தை நெருக்கிப்போடுகிறதற்கு (இடங்கொடுக்கிறார்கள்.) * ௧ தீமோ. ௬: ௯, ௰.

௨௰. விதைவிழுந்த நல்ல நிலத்திற் கொப்பானவர்கள் அவ்வசனத்தைக்கேட்டுப்பற்றிக்கொண்டு ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப்பலன் கொடுக்கிறார்களென்றார்.

௨௧. அன்றியும், அவர் அவர்களுடனே சொன்னது, * விளக்கை ஒருதண்டின்மேல் வைக்கிறதற்கேயன்றி மரக்காவின் கீழாகிலும், கட்டிலின் கீழாகிலும் வைக்கிறதற்குக்கொண்டுவருவார்களா? * மத்தே. ௫: ௰௫.

௨௨. ஆதலால், வெளியரங்கமாகாத அந்தரங்கமான பொருளுமில்லை. வெளிக்கு வாராத மறைபொருளுமில்லை.

௨௩. கேட்கிறதற்கு ஒருவன் காதுள்ளவனாயிருந்தாற் கேட்கக்கடவனென்றார்.

௨௪. அன்றியும், அவர்களுடனே யவர் சொன்னது, நீங்கள் கேள்விப்படுகிறதின்னதென்று சிந்தித்துக்கொள்ளுங்கள். எந்த அளவினால் நீங்கள் அளப்பீர்களோ அதினாலே யுங்களுக்கும் அளக்கப்படும்.

௨௫. அல்லாமலும், * எவன் உள்ளவனாயிருக்கிறானோ அவனுக்குக்கொடுக்கப்படும். எவன் இல்லாதவனாயிருக்கிறானோ அவனிடத்திலே உள்ளதும் எடுத்துப்போடப்படும். ஆகையாற் கேள்விப்படுகிற உங்களுக்கு அதிகமுங் கொடுக்கப்படுமென்றார். * மத். ௰௩: ௰௨. ௨௫: ௨௯.

௨௬. அன்றியும் அவர் சொன்னதாவது; பராபரனுடைய இராச்சியம் ஒரு மனிதன் தன்னிலத்திலே விதை விதைக்கிறதற்கொப்பாயிருக்கின்றது.

௨௭. பின்பு இராத்திரிதோறும் நித்திரைபண்ணி, பகல்தோறும் எழுந்திருப்பான்.

௨௮. அவனுக்குத்தெரியாமற் பூமியானது முன்பு முளையையும், பின்பு கதிரையும், பின்பு கதிரிலே நிறைந்த தானியத்தையும் பலனாகத்தானாய்க்கொடுக்கின்ற தன்மையுள்ளதாயிருக்கிறபடியால், அந்த விதை முளைத்துப்பயிராம்.

௨௯. அப்படிப்பயிர் பருவமானபொழுது அறுப்புக்காலமானபடியினாலே அவன் அதை யறுக்கிறதற்கு ஆள்களையனுப்புவான் என்றார்.

௩௰. அன்றியும் அவர் சொன்னது, நாம் பராபரனுடைய இராச்சியத்தை யெதற்கொப்பாக்கலாம்? அதை யெந்த உவமையினாலே காண்பிக்கலாம்.

௩௧. * அது ஒரு கடுகுவிதைக்கொப்பாய் இருக்கின்றது. அது நிலத்தில் விதைக்கப்படுகிறபொழுது பூமியிலுள்ள சகலவிதைகளிலும் அது சிறிதாயிருந்தும், * மத். ௰௩: ௩௧, ௩௨. லூக். ௰௩: ௰௯.

௩௨. விதைக்கப்பட்ட பின்பு வளர்ந்து சகல கீரைகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் நிழலில் வந்தடையத்தக்கதாக விஸ்தாரமான கிளைகளை விடுகின்றதென்றார்.

௩௩. கேட்டறியும்படிக்கு, சனங்களுக்குண்டான திராணிக்குத்தக்கதாக அவர் இப்படிப்பட்ட அநேக உவமைகளினாலே அவர்களுக்கு வசனத்தைச்சொன்னார்.

௩௪. உவமைகளினாலே யன்றி, அவர் அவர்களுக்கொன்றுஞ் சொல்லவில்லை. தம்முடைய சீஷருடனே அவர் தனித்திருக்கிறபொழுது மாத்திரம் அவர்களுக்கு எல்லாவற்றையும் விவரித்துச்சொன்னார்.

௩௫. * அந்தநாளிலே சாயங்காலமானபொழுது, அவர் அவர்களைநோக்கி அக்கரைக்குப்போவோம் வாருங்கள் என்றார். * மத். ௮: ௨௩-௨௭. லூக். ௮: ௨௨-௨௫.

௩௬. ஆதலால் அவர்கள் சனங்களைவிட்டு அவர் படவிலிருந்தபடியே யவரைக் கொண்டுபோனார்கள். வேறு படவுகளும் அவரோடே கூடப்போயின.

௩௭. அப்பொழுது அவர் பின்பக்கத்திலே ஒரு தலையணையைவைத்து, நித்திரைபண்ணிக்கொண்டிருக்கையில், பலத்த சுழல்காற்றுண்டானதினாலே படவை மூடிக்கொள்ளத்தக்கதாக அலைகள் அதின்மேல் மோதின.

௩௮. உடனே யவர்கள் அவரையெழுப்பிப் போதகரே! நாங்கள் மடிந்துபோனால் உமக்குக்கவலையில்லையா என்றார்கள்.

௩௯. அவர் எழுந்து, காற்றுக்குக்கட்டளையிட்டு, கடலையும்நோக்கி, கோஷமாயிராதே, அமைதலாயிரு என்றார். உடனே

காற்று நின்றுபோக மிகுந்த அமைதலுண்
டாயிற்று.
௪௰. பின்பு அவர் அவர்களைநோக்கி, இப்
படியேன்பயப்படுகிறீர்கள். என்னத்தினாலே
யுங்களுக்கு விசுவாசமில்லை என்றார்.
௪௧. அவர்கள் மிகவும் பயந்து, காற்றும்,
கடலும், இவருக்குக்கீழ்ப்படிகின்றனவே.
இவர் யாரோ என்று ஒருவரோடொருவர்
சொல்லிக்கொண்டார்கள்.

௫ அதிகாரம்.

[(௧) லேகியோனென்னும் பேய்கள் பி
டித்திருந்தவனைக்கிறிஸ்து விடுதலையாக்கின
போது, (௰௩) அவைகள் பன்றிகளுக்குள்
பிரவேசித்தது. (௨௫) அவர் பெரும்பாடுள்
ள ஸ்திரீயைக்குணமாக்கி, (௩௫) யாவீ
ரென்பவனுடைய மகளை மரணத்தினின்
றெழுப்பினது.]

*பின்பு அவர்கள் கடலுக்கக்கரையி
லுள்ள கதரேனருடைய தேசத்
திற்கு வந்தார்கள். * மத். ௮: ௨௮—௩௪.
லூக். ௮: ௨௬—௩௯.
௨. அவர் படவிலிருந்திறங்கின உடனே அ
சுத்த ஆவியுள்ள ஒரு மனிதன் பிரேதக்கல்
லறைகளிலிருந்து அவருக்கெதிராக வந்
தான்.
௩. அவனுடைய குடியிருப்புப்பிரேதக்கல்
லறைகளிலே யிருந்தது. ஒருவனும் அவ
னைச்சங்கிலிகளினாலுங் கட்டக்கூடாததாயி
ருந்தது.
௪. அநேகதரம் அவன் விலங்குகளினாலும்,
சங்கிலிகளினாலுங் கட்டப்பட்டிருந்தும்,
அவன் அந்தச்சங்கிலிகளைமுறித்து, விலங்கு
களைத்தறித்துப்போட்டான். ஒருவனும் அ
வனைக்கீழ்ப்படுத்தக்கூடாததாய் இருந்தது.
௫. அல்லாமலும், அவன் எப்பொழுதும்
இரவும், பகலும், மலைகளிலும், கல்லறைக
ளிலும் தங்கிக்கூக்குரலிட்டுத்தன்னைத்தா
னே கற்களாற் கீறிக்கொண்டிருந்தான்.
௬. அவன் தூரத்திலே இயேசுவானவ
ரைக்கண்டு, * ஓடிவந்தபொழுது அவனை
நோக்கி, * ௩: ௰௧.
௭. அசுத்த ஆவியே நீயிந்த மனிதனைவிட்
டுப்போவென்று அவர் கட்டளையிட்டபடி
யினாலே,
௮. அவன் அவருக்குத்தாழ்ந்து வணங்கி,
இயேசுவே! உன்னதமான பராபரனுடைய
குமாரனே! எனக்கும், உமக்குமென்ன?
என்னை வேதனைப்படுத்தாதபடிக்கு உமக்
கு, பராபரன்மேல் ஆணையிடுகிறேனென்று
மிகுந்த சத்தமாய்க்கூப்பிட்டான்.
௯. அவர் அவனைநோக்கி, உன்பேரென்ன
என்று கேட்டார். அதற்கு அவன் அநேக
ராயிருக்கிறோமாகையால் என்பேர் லேகி
யோனென்று சொல்லி,
௰. பின்பு அத்திசையிலிருந்து தங்களை
யோட்டிவிடாதபடிக்கு, அவரை மிகவும்
வேண்டிக்கொண்டான்.
௰௧. அவ்விடத்திலே மலையினருகே மிகுந்
த கூட்டமான பன்றிகள் மேய்ந்துகொண்
டிருந்தன.
௰௨. அப்பொழுது பசாசுகளெல்லாரும்
அவருடனேசொன்னது, நாங்கள் பன்றிக
ளிற் பிரவேசிக்கும்படிக்கு, எங்களையனுப்
புமென்று அவரை வேண்டிக்கொண்டார்
கள்.
௰௩. உடனே இயேசுவானவர் அவர்களுக்
கு உத்தரவுகொடுத்தார். அப்பொழுது அ
சுத்த ஆவிகள் புறப்பட்டுப்பன்றிகளுக்குள்
ளே பிரவேசித்தன. உடனே ஏறக்குறைய
இரண்டாயிரம்பன்றிகளாகிய அந்தக்கூட்
டம் உயர்ந்தமேட்டிலிருந்து கடலிலே
பாய்ந்து அதில் அமிழ்ந்து மாண்டது.
௰௪ அப்பொழுது, பன்றிகளை மேய்த்த
வர்கள் ஓடி, அதைப்பட்டினத்திலும், வெ
ளிப்புறங்களிலும் அறிவித்தார்கள். பின்பு
சம்பவித்ததைப்பார்க்கும்படிக்கு, சனங்
கள் புறப்பட்டு,
௰௫ இயேசுவினிடத்தில் வந்து, லேகி
யோனாகிய பசாசுகள் பிடித்திருந்தவன்
வஸ்திரம் உடுத்திக்கொண்டு உளுக்காந்
து, புத்தியடைந்திருக்கிறதைக்கண்டுபயந்
தார்கள்.
௰௬. பசாசுகள் பிடித்தவனுக்கும், பன்
றிகளுக்குஞ் சம்பவித்ததைக்கண்டவர்க
ளும், அவர்களுக்கு விவரமாய்ச்சொன்னார்
கள்.
௰௭. அப்பொழுது தங்கள் எல்லைகளை விட்
டு, அப்புறம்போகும்படிக்கு அவரை வேண்
டிக்கொண்டார்கள்.
௰௮. அந்தப்படியவர் படவிற் பிரவே
சிக்கிறபொழுது பசாசுபிடித்திருந்தவன்
அவருடனேகூடப்போகும்படிக்கு, அவரை
வேண்டிக்கொண்டான்.
௰௯. இயேசுவானவர் அவனுக்கு உத்தரவு
கொடாமல், நீயுன்வீட்டிலே உன் இனத்
தாரிடத்திற்குப்போய், கர்த்தர் உனக்கிரங்
கி உனக்குச்செய்த மிகுந்த விசேஷங்களை
அவர்களுக்கறிவிப்பாயாகவென்றார்.
௨௰. அந்தப்படியவன் போய்த்தனக்கு
இயேசுவானவர் செய்த விசேஷங்களைத்
தேக்கப்போலியென்னுந் தேசத்திலே பிர
சித்தம்பண்ணினான். யாவரும் ஆச்சரியப்
பட்டார்கள்.
௨௧. பின்பு இயேசுவானவர் மறுபடியும்
படவிலேறி, இக்கரைக்குவந்து கடலோரத்
திலே யிருந்தபொழுது மிகுந்த சனங்கள்
கூடி அவரிடத்தில் வந்தார்கள்.
௨௨. அப்பொழுது, செப ஆலயத்தலைவ
ரிலொருவனாகிய யாவீரு என்பவனும் வந்

து, அவரைக்கண்டவுடனே அவருடைய பாதத்தினருகே விழுந்து,

௨௩. என் குமாரத்தி மரண அவஸ்தைப் படுகிறாள். அவள் ஆரோக்கியம் அடையும் படிக்கு நீர்வந்து, அவள்மேற் கைகளைவைத் தருளும். அப்பொழுது பிழைப்பாளென்று அவரை மிகவும் வேண்டிக்கொண்டான்.

௨௪. ✻ அவர் அவனோடேகூடப்போனார். அவரை நெருக்கத்தக்கதாக அநேக சனங் கள் அவருக்குப்பின்சென்றார்கள். ✻ மத். ௯: ௰௯. லூக். ௮: ௪௧.

௨௫. ✻ அப்பொழுது பன்னிரண்டுவருஷ மாய்ப்பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீயானவள், ✻ மத். ௯: ௨௰, ௨௧. லூக். ௮: ௪௩.

௨௬. அநேக பரிகாரிகளால் மிகுந்த வருத்தப்பட்டு, தனக்குண்டான யாவையுஞ் செலவழித்துஞ் சற்றாகிலுஞ் சுகமடையாமல் அதிக வருத்தப்படுகிறபொழுது,

௨௭. இயேசுவைக்குறித்துக்கேள்விப்பட்டு, அவருடைய வஸ்திரங்களைமாத்திரந் தொட்டாற் சுகம் அடையலாமென்றெண்ணி,

௨௮. சனங்களுக்குள்ளே (சென்று அவருக்குப்)பின்னாலேவந்து, அவருடைய வஸ்திரத்தைத்தொட்டாள்.

௨௯. உடனே அவளுடைய இரத்த ஊறல் நின்றுபோயிற்று: அந்த வேதனை நீங்கத் தான் ஆரோக்கியமடைந்ததை அவள் சரீரத்திலுணர்ந்தாள்.

௩௰. உடனே இயேசுவானவர் தம்மிலிருந்து வல்லமை புறப்பட்டதைத்தமக்குள் அறிந்து, திரும்பிச்சனங்களைப்பார்த்து, என் வஸ்திரங்களைத்தொட்டவர் யாரென்றார்?

௩௧. அதற்கு அவருடைய சீஷர்கள் சொன்னது, சனங்கள் உம்மை நெருக்குகிறதை நீர் கண்டும், என்னைத்தொட்டவர்யாரென்று, எப்படிச்சொல்லுகிறீரென்றார்கள்.

௩௨. அவர் அப்படிச்செய்தவரைக்காணும்படிக்குச்சுற்றிலும் பார்த்தார்.

௩௩. அப்பொழுது தன்னிடத்திலே நடந்ததை யறிந்த ஸ்திரீ பயந்து நடுங்கி வந்து அவரைச்சாஷ்டாங்கமாய்வணங்கி, எல்லாவற்றையும் அவருக்கு உண்மையாய்ச் சொன்னாள்.

௩௪. அவளுடனே அவர் சொன்னது, மகளே! ✻ உன் விசுவாசம் உன்னைக்குணமாக்கிற்று. நீ சமாதானத்தோடேபோய் உன் வேதனையின்றிச்சுகமாயிருவென்றார். ✻ ௰: ௫௨.

௩௫. அவர் பேசிக்கொண்டிருக்கையில், செப ஆலயத்தலைவனுடைய வீட்டிலிருந்து சிலர் வந்து, உம்முடைய குமாரத்தி இறந்துபோனாள். இனி யேன் போதகரை வருத்தப்படுத்துகிறீரென்றார்கள்.

௩௬. அவர்கள் சொன்ன வார்த்தையை இயேசுவானவர் கேட்டு, உடனே ஆலயத் தலைவனைநோக்கி, நீர் பயப்படவேண்டாம். விசுவாசமாகவே யிருமென்று சொல்லி,

௩௭. பின்பு பேதுருவும், யாக்கோபின் சகோதரனாகிய யோவானுந்தவிர வேறொருவருந் தமக்குப்பின்செல்லுகிறதற்கு இடங் கொடாமல்,

௩௮. ஆலயத்தலைவனுடைய வீட்டிலே சேர்ந்து சந்தடியையும், அழுதுகொண்டு மிகவும் புலம்புகிறவர்களையுங் கண்டு,

௩௯. உட்பிரவேசித்து நீங்கள் சந்தடி பண்ணி, அழுதுகொள்ளுகிறதென்ன? பிள்ளை ✻ இறந்துபோகாமல் நித்திரை பண்ணுகிறாளென்றார். ✻ யோவா. ௰௧: ௰௧.

௪௰. அவர்கள் அவரைநோக்கி, நகைத்தார்கள். பின்பு அவர் எல்லாரையும் வெளியே போகப்பண்ணி, பிள்ளையின் தகப்பனையும், தாயையும், தம்மோடே வந்தவர்களையும் அழைத்துக்கொண்டு, பிள்ளைகிடக்கிற இடத்திற் பிரவேசித்து,

௪௧. அதின் கையைப்பிடித்து, தலித்தா கூமியென்றார். அதற்குச்சிறுபெண்ணே எழுந்திரு. உனக்குக்கட்டளையிடுகிறேனென்று அருத்தமாம்.

௪௨. உடனே பன்னிரண்டுவயதுள்ள அந்தப்பெண் எழுந்து நடந்தாள். (அதைக் கண்டவர்கள்) மிகுந்த ஆச்சரியத்தோடே பிரமித்தார்கள்.

௪௩. அப்பொழுது அவர்கள் அதை ஒருவருக்கும் அறிவியாதபடிக்கு, உறுதியாய்க் கட்டளையிட்டு, பின்பு அவர்களுக்குச்சாப்பாடு கொடுக்கும்படிச்சொன்னார்.

௬ அதிகாரம்.

[(௧) கிறிஸ்துத்தம்முடைய ஊராராலே அசட்டை பண்ணப்பட்டது. (௭) அவர் பன்னிரண்டு சீஷர்களுக்கும் அசுத்த ஆவிகளின்மேல் அதிகாரத்தைக்கொடுத்தது. (௰௪) கிறிஸ்துவைக்குறித்த பலவிதமான தாற்பரியங்கள். (௰௮) யோவான்ஸ்நானன் தலை வெட்டுண்டு, (௨௯) அடக்கம் பண்ணப்பட்டது. (௩௰) அப்போஸ்தலர்கள் பிரசங்கம்பண்ணித்திரும்பி வந்தது. (௩௪) ஐந்து அப்பங்களினாலும், இரண்டு மீன்களினாலுஞ் செய்யப்பட்ட அற்புதம். (௪௮) கிறிஸ்துக்கடலின்மேல் நடந்தது. (௫௩) அவரைத்தொட்ட யாவருஞ் சுகமடைந்தது.]

அவர் அவ்விடம்விட்டுப்புறப்பட்டுத் தாம் வளர்ந்த ✻ ஊருக்குப்போனார். அவருடைய சீஷர் அவருக்குப்பின் சென்றார்கள். ✻ மத். ௰௩: ௫௩—௫௮. லூக். ௪: ௰௬—௩௰.

௨. ஓய்வுநாள் வந்தபொழுது, அவர் செப ஆலயத்திலே யுபதேசம்பண்ணத்தொ

டங்கினார். அதைக்கேட்ட அநேகர் பிரமிப்படைந்து, எங்கேயிருந்து இவைகள் இவனுக்குத்தெரியவந்தன. இவனுடைய கைகளினால் இப்படிப்பட்ட பலத்த அற்புதங்கள் நடக்கத்தக்கதாக இவனுக்குக் கொடுக்கப்பட்ட ஞானமெப்படிப்பட்டது.

௩. இவன் மரியாளுக்குக்குமாரனும், யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் என்பவர்களுக்குச்சகோதரனுமாகிய * தச்சனல்லவா? இவனுடைய சகோதரிகளும் இங்கே நம்மிடத்திலிருக்கிறார்கள் அல்லவாவென்று சொல்லி, அவரைக்குறித்து வெறுப்படைந்தார்கள். * யோவா. ௬: ௪௨.

௪. அவர்களுடனே இயேசுவானவர் சொன்னது, * ஒரு தீர்க்கதரிசி தன்னூரிலும், தன் இனத்தாரிடத்திலும், தன் குடும்பத்திலுமேயன்றி (மற்ற இடங்களில்) கனஈனம் அடையானென்றார். * யோவா. ௪: ௪௪.

௫. அங்கே அவர் சில நோவாளிகள்மேற் கைகளைவைத்து, அவர்களைக்குணமாக்கினதேயன்றி, வேறொரு அற்புதத்தைச்செய்யமாட்டாமல்,

௬. அவர்களுடைய அவிசுவாசத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்.

௭. பின்பு அந்தத்திசையிலுள்ள கிராமங்களிலே திரிந்து, உபதேசம்பண்ணினார். அல்லாமலும், * அவர் பன்னிருவரையும் அழைத்து, அசுத்தமான ஆவிகளின்மேல் அவர்களுக்கு அதிகாரங் கொடுத்து, * மத். ௰: ௧. லூக். ௯: ௧—௫.

௮. அவர்கள் பையையானாலும், ஆகாரத்தையானாலும், கச்சையிற் பணத்தையானாலும் வழிக்காகக்கூடக்கொண்டுபோகாமல் ஒரு தடியைமாத்திரம் எடுத்துப்போகவும்,

௯. பாதரட்சைகளைப்போட்டுக்கொண்டு போகவும், இரண்டங்கிகளைத்தரியாதிருக்கவும் அவர்களுக்குக்கட்டளையிட்டு,

௰. பின்பு அவர்களுக்குச்சொன்னதாவது; எங்கேயாகிலும் நீங்கள் ஒரு வீட்டிற் பிரவேசித்ததுமுதல் அவ்விடத்தைவிட்டுப்புறப்படுகிறவரைக்கும் அங்கேதானே தங்கியிருங்கள்.

௰௧. எவர்கள் உங்களை ஏற்றுக்கொள்ளாமலும், உங்களுக்குச்செவிகொடாமலுமிருக்கிறார்களோ, அவர்களுடைய இடத்தை நீங்கள் விட்டுப்புறப்பட்டு அவர்களுக்கு விரோதமான சாட்சியாக உங்கள் உள்ளங்கால்களிற் படிந்திருக்கிற தூசியை யுதறிப்போடுங்கள். நியாயத்தீர்ப்பு நாளிலே சோதோம் கொமோராப்பட்டினத்தாரிலும் அந்தப்பட்டினத்தார் அதிகதண்டிப்பை யடைவார்களென்று மெய்யாகவே யுங்களுக்குச்சொல்லுகிறேனென்றுசொல்லி

இரண்டிரண்டுபேராக அவர்களை யனுப்பினார்.

௰௨. அவர்கள் புறப்பட்டு, * மனந்திரும்புங்களென்று பிரசங்கித்து, * மத். ௩: ௨. ௪: ௰௭.

௰௩. அநேகம் பசாசுகளைத்துரத்தி, அநேகம் நோவாளிகளை எண்ணெயாற்பூசிக்குணமாக்கினார்கள்.

௰௪. * அவருடையபேர் பிரசித்தமானபடியினாலே இராசனாகிய ஏரோது, (அவரைக்குறித்துக்) கேள்விப்பட்டு, யோவான்ஸ்நானன் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டிருக்கிறான். * மத். ௰௪: ௧—௰௨. லூக். ௯: ௭—௯.

௰௫. ஆதலாற் பலத்த அற்புதங்கள் அவனாலே செய்யப்படுகின்றனவென்றான். சிலர், * அவரை எலியாவென்றும், அவரை ஒருதீர்க்கதரிசி அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவனைப்போலிருக்கிறாரென்றுஞ் சொன்னார்கள். * மத். ௰௬: ௰௪.

௰௬. ஏரோது அதைக்கேட்டபொழுது, அவன் நான் சிரச்சேதம்பண்ணின யோவான்தான். அவன் மரித்தோரிலிருந்தெழுப்பப்பட்டிருக்கிறானென்றான்.

௰௭. அதெப்படியென்றால், ஏரோது, * தன் சகோதரனாகிய பிலிப்பினுடைய மனைவி ஏரோதியாளை விவாகம்பண்ணினபொழுது, * லூக். ௩: ௰௯—௨௰.

௰௮. யோவான் ஏரோதைநோக்கி, நீர் உம்முடைய சகோதரனுடைய மனைவியைக்கொள்ளுகிறது நியாயமல்லவென்று சொன்னபடியினாலே, ஏரோது (ஆள்களையனுப்பி) அவனைப்பிடித்துக்காவலிற் கட்டிவைத்தான்.

௰௯. அல்லாமலும் ஏரோதியாள் அவனுக்குக்கெடுதிநினைத்து, அவனைக்கொலைசெய்ய விரும்பினாள்.

௨௰. ஏரோது யோவானை நீதியும், பரிசுத்தமுமுள்ளவனென்று அறிந்து அவனுக்குப்பயந்து அவனை நன்றாய்க்காத்து அவனுடைய ஆலோசனையின்படி அநேககாரியங்களைச்செய்து விருப்பத்தோடே யவனுடைய சொற்கேட்டுவந்தான். ஆகையால், அவள் அப்படிச்செய்யக்கூடாமல் இருந்தது.

௨௧. பின்பு அதற்கேற்றநாள்வந்தது. எப்படியென்றால், ஏரோது தன் சென்மநாளிலே தன்னுடைய மந்திரிகளுக்கும், சேனாபதிகளுக்கும், கலிலேயாநாட்டின் பிரபுக்களுக்கும் விருந்துபண்ணினகாலத்திலே,

௨௨. ஏரோதியாளுடைய குமாரத்தி உள்ளேசென்று ஏரோதுக்கும், பந்தியிருந்த மற்றவர்களுக்கும் பிரியமுண்டாகத்தக்கதாக நடனம்பண்ணினபொழுது, இராசா அந்தச்சிறுபெண்ணைநோக்கி உனக்குவேண்

டியதை யென்னிடத்திற்கேள். நான் உனக்
குத்தருவேனென்று சொன்னதுமல்லாமல்,
௨௩. நீ என் இராச்சியத்தில் பாதிவரைக்
கும் எதைக்கேட்டாலும் அதை யுனக்குத்
தருவேனென்று அவளுக்கு ஆணையுமிட்
டான்.
௨௪. அப்பொழுது அவள் வெளியேபோய்,
தன்தாயைநோக்கி நான் என்னகேட்க
வேண்டுமென்று சொன்னதற்கு யோவான்ஸ்
நானனுடைய தலையைக்கேளென்றாள்.
௨௫. உடனே யவள் சீக்கிரமாய் இராசா
வினிடத்திற்குத்திரும்பிப்போய், நீர் இப்
பொழுதுதானே ஒருதால்த்திலே யோவா
ன்ஸ்நானனுடைய தலையை யெனக்குத்தர
வேண்டுமென்றுகேட்டாள்.
௨௬. அப்பொழுது இராசா மிகுந்த துக்
கமடைந்தான். அப்படியிருந்தும் ஆணை க
ளினிமித்தமும், பந்தியிருந்தவர்களினிமித்
தமும் அவளுக்கு அதை மறுக்க மனதில்
லாமல்,
௨௭. உடனே யவனுடைய தலையைக்
கொண்டுவரும்படிக்கு, போர்ச்சேவகனாகி
ய காவற்காரனுக்கு, கட்டளையிட்டனுப்பி
னான். அந்தப்படியே யவன்போய்க்காவற்
கூடத்திலே • யோவானைச்சிரச்சேதம்பண்
ணி,
௨௮. ஒருதாலத்திலே யவனுடைய தலை
யைக்கொண்டுவந்து, அதைச்சிறுபெண்
ணுக்குக்கொடுத்தான். சிறுபெண் அதைத்
தன் தாய்க்குக்கொடுத்தாள்.
௨௯. அவனுடைய சீஷர் அதைக்கேட்டு
வந்து அவனுடலையெடுத்து ஒரு கல்லறை
யிலே வைத்தார்கள்.
௩௰. அத்தருணத்திலே அப்போஸ்தலர்
கள் இயேசுவினிடத்திற் கூடிவந்து தாங்
கள் செய்தயாவையும், போதகம்பண்ணி
ன யாவையும் அவருக்கு அறிவித்தார்கள்.
௩௧. பின்பு அவர்கள் போசனம்பண்ணும்
படிக்கும், * சமயமில்லாதிருக்கத்தக்க
தாக வருகிறவர்களும், போகிறவர்களும்
மிகுதியானபடியினாலே அவர் அவர்களை
நோக்கி, நீங்கள் வனாந்தரமான இடத்தி
லே தனித்திருந்து சற்றே யிளைப்பாறவா
ருங்களென்று சொன்னார். * மத். ௰௪:
௰௩—௨௧. லூக். ௯: ௰—௰௭. யோவா. ௬:
௫—௰௫.
௩௨. அந்தப்படியவர்கள் தனித்திருக்கும்
படிக்குப்படவிற் பிரவேசித்து வனாந்தரமா
ன இடத்திற்குப்போனார்கள்.
௩௩. அவர்கள் புறப்பட்டுப்போகிறதைச்
சனங்கள்கண்டு, அவர்கள் (போகிற) இடத்
தையறிந்து சகலபட்டினங்களிலுமிருந்த்
கால்நடையாய் அவ்விடத்திற்கோடி அவர்
களுக்குமுன்னே யங்கேசேர்ந்து அவரிடத்
திற் கூடிவந்தார்கள்.

௩௪ இயேசுவானவர் கரையிலே வந்து மி
குந்தசனங்களைக்கண்டபொழுது, அவர்கள்
மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலிருந்தப
டியினாலே அவர்கள்மேல் உருக்கமாய் இ
ரங்கி அநேககாரியங்களை யவர்களுக்கு உப
தேசித்தார்.
௩௫. பின்பு பொழுது மிகவுங் கழிந்துபோ
னபடியால், அவருடைய சீஷர் அவரிடத்
தில்வந்து இது வனாந்தரமான இடம். அல்
லாமலும் மிகவும் பொழுதுபோயிற்று.
௩௬. போசனம்பண்ணுகிறதற்கு இவர்களி
டத்திலொன்றுமில்லை. ஆகையால், இவர்
கள் சுற்றியிருக்கிற ஊர்களுக்கும், கிரா
மங்களுக்கும்போய், தங்களுக்காக அப்பங்
களை வாங்கிக்கொள்ளும்படிக்கு இவர்களை
யனுப்பிவிடவேண்டுமென்றார்கள்.
௩௭. அதற்கவர், நீங்களே யிவர்களுக்
குப்போசனங்கொடுங்களென்றார். அவர்கள்
சொன்னது, இவர்களுக்குப்போசனங்கொ
டுக்கும்படிக்கு நாங்கள்போய் இருநூறு
தேநாரியபணத்திற்கு அப்பங்களை வாங்
கிக்கொண்டு வரலாமாவென்றார்கள்.
௩௮. அதற்கவர் எவ்வளவு அப்பங்கள் உங்
களிடத்திலுண்டு. போய்ப்பாருங்களென்
றார். அவர்கள் விசாரித்து (வந்து) ஐந்
து அப்பமும், இரண்டு மீனுமிருக்கின்றன
வென்று சொன்னார்கள்.
௩௯. அப்பொழுது அவர்கள் கூட்டங்
கூட்டமாக எல்லாச்சனங்களையும் பசுமை
யான புல்லின்மேல் உளுக்காரப்பண்ணும்
படிக்குக்கட்டளையிட்டார்.
௪௰. அப்படி நூறுபேர் ஒரு கூட்டமும்,
ஐம்பதுபேர் ஒரு கூட்டமுமாகச்சதுக்கஞ்
சதுக்கமாய் உளுக்காந்தார்கள்.
௪௧. பின்பு அவர் அவ்வைந்து அப்பங்
களையும், இவ்விரண்டுமீனையும் எடுத்து வா
னத்தை யண்ணாந்துபார்த்து, அவைகளை
யாசீர்வதித்துப்பின்பு அப்பங்களைப்பிட்டுச்
சனங்களுக்குக்கொடுக்கும்படிக்கு அவைக
ளை, சீஷர்களுக்குக்கொடுத்துப்பின்பு அவ்
விரண்டுமீனையும் அவர்களெல்லாருக்கும் பங்
கிட்டார்.
௪௨. எல்லாருஞ் சாப்பிட்டுத்திருத்திய
டைந்தார்கள்.
௪௩. அல்லாமலும் (அப்பங்களிலும்) மீன்
களிலுஞ் சேஷமானவைகளைப்பன்னிரண்டு
கூடை நிறைய எடுத்தார்கள்.
௪௪. ஏறக்குறைய ஐயாயிரம்புருடர் போ
சனம்பண்ணினார்கள்.
௪௫. * பின்பு தாம் சனங்களையனுப்புகை
யில் தமக்குமுன்னாகச்சீஷர்கள் படவிலேறி
அக்கரையிற் பெதுசாயிதாவென்னும் ஊ
ருக்குப்போகும்படிக்கு அவர்களைத்துரிதப்
படுத்தினார். * மத். ௰௪: ௨௨.
௪௬. பின்பு அவர் சனங்களையனுப்பிச்செ

பதியானம் பண்ணும்படிக்கு மலையிலேறினார்.

௪௭. சாயந்தரமானபொழுது படவு கடலின் நடுவிலே சேர்ந்தது. * அவர் மாத்திரங் கரையிலே யிருந்தார். * யோவா. ௬: ௰௬.

௪௮. அப்பொழுது காற்று அவர்களுக்கெதிரானபடியினாலே அவர்கள் வருத்தத்தோடே (படவைத்) தள்ளினதை யவர்கண்டு, பின்பு இராத்திரியில் நாலாஞ்சாமத்திலே புறப்பட்டுக்கடலின்மேல் நடந்து அவர்களிடத்திற்குச்சமீபித்து, அவர்களைக்கடந்து போக மனதாயிருந்தார்.

௪௯. கடலிலே நடந்துபோகிற அவரையவர்கள் கண்டபொழுது, அது ஆவேசமென்றெண்ணிச்சத்தமிட்டார்கள்.

௫௰. அல்லாமலும் எல்லாரும் அவரைக்கண்டு கலக்கமடைந்தார்கள். உடனே யவர் அவர்களைநோக்கித்திடமாய் இருங்கள். நான்தான். பயப்படாதிருங்களென்று அவர்களுடனே சொன்னார்.

௫௧. பின்பு அவர் அவர்களிருக்கிறபடவிற் பிரவேசித்த உடனே, காற்றுநின்றுபோயிற்று.

௫௨. அவர்கள் கடினமான இருதயமுடையவர்களாகையால், அந்த அப்பங்களைக்குறித்துச்சிந்தனைபண்ணாமலிருந்தபடியினாலே மிகவும் மிகுதியாய்த்தங்களுக்குள்ளே பிரமித்து ஆச்சரியப்பட்டார்கள்.

௫௩. பின்பு அவர்கள் புறப்பட்டு, * கெநேசரேத்துநாட்டிலே வந்து கரைபிடித்தார்கள். * மத். ௰௪: ௩௪—௩௬.

௫௪. அவர்கள் படவைவிட்டிறங்கினவுடனே, சனங்கள் அவரையறிந்து,

௫௫. அந்தத்திசையிலெங்கும் ஓடித்திரிந்து படுக்கைகளிற் கிடக்கிற பிணியாளிகளையெடுத்து, அவர் வந்திருக்கிறாரென்று கேள்விப்பட்ட இடங்களிற் கொண்டுவரத்தொடங்கினார்கள்.

௫௬. அல்லாமலும் அவர் பிரவேசித்த கிராமம், பட்டினம், ஊர் எவைகளோ, அவைகளின் சந்தைகளிற் பிணியாளிகளை வைத்து, அவர்கள் அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தை மாத்திரந் தொடும்படிக்கு, அவரை வேண்டிக்கொண்டார்கள். எவர்கள் அதைத் தொட்டார்களோ, அவர்கள் சொஸ்தம் அடைந்தார்கள்.

௭ அதிகாரம்.

[(௧) சீஷர்கள் கைகழுவாமற் போசனம் பண்ணினதைக்குறித்து, பரிசேயர் குற்றம் பிடித்தது. (௮) அந்தப்பரிசேயர் முதலியவர்கள் மனுஷர்களுடைய பாரம்பரை நியாயங்களினாற் பராபரனுடைய கட்டளைகளை மீறினது. (௰௪) போசனம் மனுஷனை அசுசிப்படுத்தாதென்பது. (௨௪) கிறிஸ்துச் சீரோப்பேனிக்கே சாதியான ஒரு ஸ்திரீயின் மகளிடத்திலிருந்த அசுத்த ஆவியை நீக்கி, (௩௧) செவிடனும், தெத்தவாயனுமான ஒருவனைச்சுகப்படுத்தினது.]

*பரிசேயரும், மற்ற யூதர்களெல்லாரும் பெரியோர்களுடைய பாரம்பரை நியாயங்களைக்கைக்கொள்ளும்படிக்கு, மணிக்கட்டுவரைக்குங் கைகழுவாமற் போசனம் பண்ணமாட்டார்கள். * மத்தே. ௰௫: ௧—௨௰.

௨. அல்லாமலுஞ் சந்தைகளிலிருந்து (வந்தால்) ஸ்நானம்பண்ணாமற் போசனம் பண்ணமாட்டார்கள். மேலும், சல பாத்திரங்களையும், குடங்களையும், செப்புப்பானைகளையும், கட்டில்களையும் ஸ்நானம் பண்ணுவித்து, மற்றும் அப்படிப்பட்ட அநேகஞ் சடங்குகளைப்பற்றிக்கொள்ளுவார்கள்.

௩. ஆதலாற் பரிசேயரும், வேதபாரகரிற் சிலருங்கூடி எருசலேம் பட்டினத்திலிருந்து அவரிடத்தில் வந்து,

௪. அவருடைய சீஷரிற் சிலர் கைகழுவாமல் அசுத்தமான கைகளோடே போசனம் பண்ணுகிறதைக்கண்டபொழுது, அவர்கள் அவரைநோக்கி,

௫. உம்முடைய சீஷர் பெரியோருடைய பாரம்பரை நியாயத்தை மீறிநடந்து, கைகழுவாமற் போசனம் பண்ணுகிறதென்னவென்று கேட்டார்கள்.

௬. அதற்கு மாறுத்தரமாக அவர் சொன்னது, * நீங்கள் பராபரனுடைய கட்டளையைவிட்டு, குடங்களையும், சலபாத்திரங்களையும் ஸ்நானம் பண்ணுவித்து, மற்றும் அப்படிப்பட்ட அநேக சடங்குகளைச்செய்து, மனிதர்களுடைய பாரம்பரை நியாயங்களைக்கைக்கொள்ளுகிறீர்கள். * மத். ௨௩: ௨௫—௨௬.

௭. ஆகையால், இந்தச்சனங்கள் உதடுகளினாலே யென்னைக்கனம்பண்ணியும் இவர்களுடைய இருதயம் எனக்குத்தூரமாய் விலகியிருக்கின்றதென்றும்,

௮. * மனிதர்களுடைய கற்பனைகளாகிய உபதேசங்களை யிவர்கள் கற்றுக்கொண்டு வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்களென்றும், ஏசாயாவென்பவன் மாயக்காரராகிய உங்களைக்குறித்து, நன்றாய்த்தீர்க்கதரிசனஞ் சொல்லி யிருக்கிறானென்றுஞ் சொல்லி, * கொலோ. ௨: ௨௰—௨௨. † ஓசெ. ௨௯: ௰௩.

௯. பின்பு உங்கள் பாரம்பரை நியாயங்களைக்காத்துக்கொள்ளும்படிக்கு நீங்கள் பராபரனுடைய கட்டளையைத்தள்ளிக்கொண்டு வருகிறது நன்றாயிருக்கிறது.

௰. என்னவென்றால், * உன் தகப்பனையும், உன் தாயையுங் கனம்பண்ணுவாயாகவென்றும், தகப்பனையாவது, தாயையாவது நிந்திக்கிறவனுக்கு மரண ஆக்கினையைக்கொடுக்கவேண்டுமென்றும் மோசே சொன்னாரே. * ௨ மோ. ௨௰: ௰௨.

௰௧. நீங்கள் ஒருவன் தன் தகப்பனையாவது, தாயையாவது நோக்கி, உங்களுக்கு என்னாலே உதவுகிறதேதோ அது (தேவாலயத்திற்குக்காணிக்கையாகிய) கொர்பானாவதாகவென்று சொன்னார்.

௰௨. பின்பு அவன் தன் தகப்பனுக்குந், தன் தாய்க்கும் உதவிசெய்ய வேண்டுவதில்லையென்று உத்தரவுகொடுத்து,

௰௩. இவ்விதமாய் உங்களால் உண்டாக்கப்பட்ட பாரம்பரை நியாயத்தினாலே பராபரனுடைய வசனத்தை அவமாக்குகிறீர்கள். அதுபோல நீங்கள் மற்றும் அநேகங் காரியங்களையுஞ் செய்கிறீர்களென்று சொல்லி,

௰௪. பின்பு எல்லாச்சனங்களையும் அழைத்து அவர்களுடனே சொன்னது, நீங்களெல்லாரும் எனக்குச்செவிகொடுத்துச்சிந்தித்துக்கொள்ளுங்கள்.

௰௫. ஒரு மனிதனுக்குப்புறம்பேயிருக்கிற எந்தப்பொருளும் அவனுக்குட் பிரவேசிக்கிறபொழுது, அவனை யசுசிப்படுத்த மாட்டாது. அவனுள்ளத்திலிருந்து புறப்படுகிற பொருள்களே அவனை யசுசிப்படுத்துகின்றன.

௰௬. கேட்கிறதற்கு ஒருவன் காதுள்ளவனானாற் கேட்கக்கடவனென்றார்.

௰௭. பின்பு அவர் சனங்களைவிட்டு வீட்டிற் பிரவேசித்தபொழுது, அவருடைய சீஷர்கள் அந்த உவமையைக்குறித்து அவரிடத்தில் வினாவினார்கள்.

௰௮. அவர்களுடனே அவர் சொன்னது, நீங்களும் புத்தியில்லாதவர்களா? புறம்பேயிருக்கிற எந்தப்பொருளும் மனிதனுக்குட் பிரவேசிக்கிறபொழுது, அவனை யசுசிப்படுத்தமாட்டாதென்று நீங்களும் அறிந்திருக்கவில்லையா?

௰௯. அது அவனுடைய இருதயத்திலே பிரவேசியாமல் வயிற்றிற் பிரவேசிக்கிறதே. அதிலிருந்து, எல்லாப்போசனங்களையுங் கழிக்கிற ஆசன வழியாய்ப்புறப்படுகின்றன.

௨௰. மனிதனுடைய உள்ளத்திலிருந்து புறப்படுகிறதே அவனை யசுசிப்படுத்துகின்றது.

௨௧. அதெப்படியெனில், * மனிதருடைய இருதயத்திலிருந்து, * மத்தே. ௰௫: ௰௯, ௨௰.

௨௨. விபசாரம், வேசைத்தனம், கொலை, திருட்டு, (தகாத) பொருளாசை, மூர்க்கம், கபடம், காமவிகாரம், பொறாமை, தூஷணம், அகந்தை, மதிகேடு என்பவைகளுக்கு ஏதுவான பொல்லாத யோசனைகள் புறப்படுகின்றன.

௨௩. தீமையான இவைகள் எல்லாம் உள்ளத்தில் இருந்து புறப்பட்டு, மனிதரை யசுசிப்படுத்துகின்றனவென்று திருவுளம் பற்றினார்.

௨௪. * பின்பு அவர் எழுந்து, அவ்விடம் விட்டு, தீரு, சீதோன் பட்டணங்களின் எல்லைகளுக்குப்போனார். அங்கே அவர் ஒரு வீட்டிலே பிரவேசித்த பின்பு தம்மை யொருவரும் அறியாமல் இருக்கும்படிக்கு மனதாயிருந்தும், அவர் மறைந்திருக்கிறதற்கு ஏதுவில்லை. * மத். ௰௫: ௨௧—௨௮.

௨௫. எப்படியென்றால், சூர்பேநீக்கியா தேசத்திற் பிறந்த அஞ்ஞானியாகிய ஒரு ஸ்திரீயானவளுக்கு அசுத்த ஆவியையுடைய மகள் இருந்தாள்.

௨௬. அந்த ஸ்திரீ அவரைக்குறித்துக் கேள்விப்பட்டபொழுது, அவள் வந்து, வணக்கமாய் அவருடைய பாதங்களின் அருகே விழுந்து, தன்னுடைய மகளில் இருந்து பசாசைத்துரத்த வேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டாள்.

௨௭. இயேசுவானவர் அவளை நோக்கி, பிள்ளைகளுடைய ஆகாரத்தை யெடுத்து, நாய்களுக்குக்கொடுக்கிறது நியாயமல்ல. ஆகையால், முதலாவது பிள்ளைகளே திருத்தியடையட்டும் என்றார்.

௨௮. அதற்கு அவள் சொன்னது, ஆண்டவரே! அது சரிதான். ஆனாலும், போசனப்பலகைகளின் கீழிருக்கிற நாய்கள் பிள்ளைகளுடைய உச்சிட்டங்களைத்தின்னுமே யென்றாள்.

௨௯. அப்பொழுது அவர் சொன்னது, நீ இந்த வசனத்தைச்சொன்னபடியினாலே, (சந்தோஷமாய்ப்)போ. பசாசு உன் மகளில் இருந்து புறப்பட்டுப்போயிற்றென்றார்.

௩௰. அவள் தன் வீட்டிலேபோய்ச்சேர்ந்தபொழுது, பசாசு புறப்பட்டுப்போனதையும், தன் மகள் கட்டிலின்மேற் படுத்திருக்கிறதையுங் கண்டாள்.

௩௧. * பின்பு அவர் தீரு, சீதோன் பட்டிணங்களின் திசைகளைவிட்டு, புறப்பட்டுத் தெக்கப்போலியென்னுந் தேசத்தின் திசைகளின் வழியாய் மறுபடியுங் கலிலேயா நாட்டின் கடல் அருகே வந்தார். * மத். ௰௫: ௨௯—௩௧.

௩௨. அங்கே கொன்னைவாயையுடைய செவிடனை யவரிடத்திற் கொண்டுவந்து, அவர் தமது கையை அவன்மேல் வைக்கும்படிக்கு அவரை வேண்டிக்கொண்டார்கள்.

௩௩. அப்பொழுது அவர் கூட்டத்தில் இருந்து, அவனை யொருபக்கத்திலே கொண்டுபோய், தம்முடைய விரல்களை யவனுடை

ய காதுகளில் வைத்து, * உமிழ்ந்து, அவ
னுடைய நாவைத்தொட்டு, * ௮: ௨௩.

௩௪. பின்பு, வானத்தை * யண்ணாந்து
பார்த்து, மூச்சைவிட்டு, எப்பத்தாவென்
றார். எப்பத்தா என்பதற்குத்திறக்கப்படு
வாயாக என்று அருத்தமாம். * யோவா.
௰௧: ௪௧.

௩௫. உடனே யவனுடைய காதுகள் திறக்
கப்பட்டன. அவன் நன்றாய்ப்பேசுந்தக்க
தாக, அவனுடைய நாவின் கட்டும் நீக்கப்
பட்டது.

௩௬. பின்பு அவர்கள் அதை யொருவருக்
குஞ் சொல்லாதபடிக்கு அவர்களுக்குக்கட்
டளையிட்டார். அப்படி இருந்துந் தங்க
ளுக்கு அவர் அப்படிக்கட்டளையிட்டது
எவ்வளவோ அவ்வளவாய் அதைப்பிரசித்
தம் பண்ணினார்கள்.

௩௭. அல்லாமலும், அவர் சகலத்தையும்
நன்றாய்ச்செய்தருளினார். செவிடர் கேட்க
வும், ஊமையர் பேசவும் பண்ணுகிறாரென்
று மிகவும் மிகுதியான ஆச்சரியத்தோடே
சொல்லிக்கொண்டார்கள்.

௮ அதிகாரம்.

[(௧) கிறிஸ்து நாலாயிரம்பேருக்கு அற்புத
மாய்ச்சாப்பாடுகொடுத்தது. (௰) பரிசேய
ருக்கு ஒரு அடையாளமுங் கொடுக்கப்படு
வதில்லையென்பது. (௰௪) பரிசேயருடைய
புளித்தமாவுக்கும், ஏரோதேயினுடைய பு
ளித்தமாவுக்கும் எச்சரிக்கையாய் இருக்கப்
போதித்தது. (௨௨) ஒரு குருடனுக்குப்
பார்வை யளித்தது. (௩௰) பாடுபட்டு உயி
ரோடே எழுந்திருக்கப்போகிறவராகிய கி
றிஸ்துத்தாமே என்று அறிவித்தது. (௩௪)
சுவிசேஷத்தின் நிமித்தமாய் வருந் துன்பங்
களைப்பொறுமையோடே சகிக்கவேண்டு
மென்று போதித்தது.]

* அந்த நாள்களிலே சனங்கள் மிகுந்
த கூட்டமாய்ப்போசனம் பண்
ணுகிறதற்கு ஒன்றும் இல்லாதிருந்தபொழு
து, இயேசுவானவர் தம்முடைய சீஷர்களை
யழைத்து, * மத். ௰௫: ௩௨.

௨. இந்தச்சனங்கள் என்னிடத்தில் வந்து
மூன்றுநாளாயிற்று. இப்பொழுது போச
னம் பண்ணுகிறதற்கு இவர்களுக்கு ஒன்
றும் இல்லையே. ஆகையால் இவர்கள்மேல்
* உருக்கமாய் இரங்குகிறேன். * ௬: ௩௪.

௩. அல்லாமலும், இவர்களிற் சிலர் தூரத்
தில் இருந்து வந்தவர்களாகையால் நான்
அவர்களைப்பட்டினியாய் வீட்டிற்கு அனுப்
பினால் வழியிலே சோர்ந்துபோவார்களென்
று சொன்னபொழுது,

௪. சீஷர்கள் அவருக்கு மாறுத்தரமாக,
இந்த வனாந்தரத்திலே ஒருவன் இவர்களுக்
கு, அப்பங்களினாலே திருத்தியாக்குவதெப்
படி யென்றார்கள்.

௫. அதற்கு அவர் எத்தனை அப்பங்கள்
உங்களிடத்தில் உண்டென்று கேட்டார்
ஏழு அப்பங்கள் உண்டென்றார்கள்.

௬. அப்பொழுது சனங்கள் தரையிலே இ
ருக்கும்படி கட்டளையிட்டுப்பின்பு அந்த
ஏழு அப்பங்களையும், எடுத்துத்தோத்திரம்
பண்ணி, அவைகளைப்பிட்டு, அவர்களுக்குள்
ளே பரிமாறும்படிக்கு அவைகளைச்சீஷர்க
ளிடத்திற் கொடுத்தார். அந்தப்படியே அ
வர்கள் சனங்களுக்குப்பரிமாறினார்கள்.

௭. அல்லாமலுஞ் சில சிறு மீன்கள் அவர்
களிடத்தில் இருந்தன. அவர் தோத்திரஞ்
சொன்ன பின்பு அவைகளையும் பரிமாறும்
படிக்குக்கட்டளையிட்டார்.

௮. அப்படிச்சனங்கள் * சாப்பிட்டுத்தி
ருத்தி அடைந்தார்கள். ஏழு கூடை நிறை
யச்சேஷமானவைகளையும் எடுத்துக்கொண்
டார்கள். * ௨ இரா. ௪: ௪௪.

௯. சாப்பிட்டவர்கள் ஏறக்குறைய நாலா
யிரம்பேருண்டு.

௰. பின்பு அவர்களை அனுப்பிவிட்டு, உட
னே தம்முடைய சீஷருடனேகூடப்பட
விலேறித்தலுமனுத்தா ஊரின் திசைகளில்
வந்தார்.

௰௧. * அங்கே இருந்து பரிசேயர் அவ
ரைப்பரிட்சை பார்க்கும்படிக்குப்புறப்பட்
டு வந்து, அவருடனே தருக்கம்பண்ண ஆ
ரம்பித்து அவர் வானத்திலிருந்து, ஒரு
அடையாளத்தைக்காட்டும்படி கேட்டார்
கள். * மத். ௰௬: ௧—௪.

௰௨. அப்பொழுது அவர் தமது உள்ளத்
தில் இருந்து பெருமூச்சுவிட்டு, இந்தத்த
லைமுறையார் என்னத்தினாலே ஓரடையா
ளத்தைக்கேட்கிறார்கள். * இந்தச்சந்ததி
யாருக்கு ஓரடையாளமுங் கொடுக்கப்படு
வது இல்லையென்று மெய்யாய் உங்களுக்
குச்சொல்லுகிறேனென்று சொல்லி, * லூக்.
௰௧: ௨௯.

௰௩. அவர்களை விட்டு, மறுபடியும் படவி
லேறி அக்கரைக்குப்போனார்.

௰௪. * சீஷர்கள் அப்பங்களைக்கூடக்
கொண்டுபோக மறந்தார்கள். படவில் (பிர
வேசிக்கையில்) ஒரே அப்பமாத்திரம் அவர்
களிடத்திலிருந்தது. * மத். ௰௬: ௫—௰௨.

௰௫. அப்பொழுது அவர் அவர்களைநோக்
கி, நீங்கள் பரிசேயருடைய புளிப்புள்ள
மாவுக்கும், ஏரோதினுடைய புளிப்புள்ள
மாவுக்கும் விலகி மிகவும் * எச்சரிக்கையா
யிருக்கக்கடவீர்களென்று அவர்களுக்குக்
கட்டளை யிட்டார். * லூக். ௰௨: ௧. கலா.
௫: ௯.

௰௬. அவர்கள் (அதைக்கேட்டுத்) தங்க
ளுக்குள்ளே யோசனைபண்ணிக்கொண்டு

நம்மிடத்தில் அப்பங்கள் இல்லாதபடியால் இப்படிச்சொன்னார் என்றார்கள்.

௰௭. இயேசுவானவர் அதை அறிந்து அவர்களை நோக்கி, உங்களிடத்தில் அப்பங்கள் இல்லாததைக்குறித்து, ஏன் யோசனை பண்ணுகிறீர்கள். * இதுவரைக்கும் நீங்கள் அறிந்துகொள்ளாமலும், சிந்தித்துக்கொள்ளாமலுமா இருக்கிறீர்கள்! இதுவரைக்கும் உங்கள் இருதயங் கடினமாயிருக்கிறதா? * ௬: ௫௨.

௰௮. கண்கள் இருந்தும், நீங்கள் காணாமலா இருக்கிறீர்கள்! காது இருந்தும், நீங்கள் கேளாமலா இருக்கிறீர்கள்? நீங்கள் நினைவுகூரவில்லையா?

௰௯. அந்த ஐயாயிரம் பேருக்குள்ளே நான் * அவ்வைந்து அப்பங்களையும் பிட்டுக்கொடுத்தபொழுது, எவ்வளவு கூடை நிறையச்சேஷமானவைகளை எடுத்தீர்களென்று கேட்டதற்கு, பன்னிரண்டு கூடை நிறைய எடுத்தோம் என்றார்கள். * ௬: ௪௩, ௪௪

௨௰. அல்லாமலும், * அந்த நாலாயிரம் பேருக்குள்ளே (நான்) அந்த ஏழு அப்பங்களையுங் (கொடுத்த)பொழுது, எவ்வளவு கூடை நிறையச்சேஷமானவைகளை எடுத்துக்கொண்டீர்களென்று கேட்டதற்கு ஏழு கூடை நிறைய என்றார்கள். * ௮: ௯

௨௧. அவர் சொன்னது, அப்படியிருக்க, நீங்கள் சிந்தித்துக்கொள்ளாமல் இருப்பதெப்படியென்று திருவுளம்பற்றினார்.

௨௨. பின்பு அவர் பெத்சாயிதா ஊருக்கு வந்தார். அங்கே ஒரு குருடனை அவரிடத்திற்குக்கொண்டுவந்து, அவனைத்தொடும்படிக்கு அவரை வேண்டிக்கொண்டார்கள்.

௨௩. அப்பொழுது அவர் குருடனுடைய கையைப்பிடித்து, * அவனைக்கிராமத்திற்குப்புறம்பே கொண்டுபோய், அவனுடைய கண்களில் உமிழ்நீரைத்தடவி, தம்முடைய கைகளை அவன்மேல் வைத்து, உனக்கு ஏதாகிலுந் தோன்றுகிறதாவென்று கேட்டார். * ௭: ௩௩.

௨௪. அவன் அண்ணாந்து நடந்து போகிற மனிதரை மரங்கள்போலக்காண்கிறேன் என்றான்.

௨௫. பின்பு அவர் மறுபடியுந் தம்முடைய கைகளை அவனுடைய கண்களின்மேல் வைத்து, அவன் திரும்ப அண்ணாந்து பார்க்கும்படி செய்தார். அப்பொழுது அவன் நன்றாய்க்குணமாக்கப்பட்டு, சகலத்தையுந் தெளிவாய்ப்பார்த்தான்.

௨௬. பின்பு அவர் * அவனை நோக்கி, நீ கிராமத்திற் பிரவேசியாமலும், அதில் ஒருவனுக்கும், இதைச்சொல்லாமலும் இருவென்று சொல்லி, அவனை வீட்டிற்கு அனுப்பிவிட்டார். * ௭: ௩௬.

௨௭. * பின்பு இயேசுவானவர் தம்முடைய சீஷர்களோடுங்கூட அவ்விடம்விட்டுப்பிலிப்பின் கேசரியாப்பட்டினத்து அருகே இருக்கிற கிராமங்களுக்குப்போனார். வழியிலே அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி, என்னைக்குறித்து, மனிதர் என்னசொல்லுகிறார்கள் என்று கேட்டார். * மத். ௰௬: ௰௩—௨௰. லூக். ௯: ௰௮—௨௰.

௨௮. அவர்கள் சொன்னது, சிலர் உம்மை ஸ்நானனாகிய யோவானென்றும், சிலர் எலியாவென்றும், சிலர் உம்மைத்தீர்க்கதரிசிகளில் ஒருவனென்றுஞ் சொல்லுகிறார்களென்றார்கள்.

௨௯. அப்பொழுது, அவர் நீங்கள் என்னைக்குறித்து, என்னசொல்லுகிறீர்களென்றார். அதற்குப்பேதுரு * நீர் கிறிஸ்துவே யென்றான். * யோவா. ௧: ௪௧. ௬: ௬௯.

௩௰. * அப்பொழுது தம்மைக்குறித்து, அப்படி ஒருவருக்குஞ் சொல்லாதபடிக்குக் கெட்டியாய் அவர்களுக்குக்கட்டளையிட்டார். *மத். ௰௬: ௨௰. லூக். ௯: ௨௧--௨௭.

௩௧. அல்லாமலும், மனிதனுடைய குமாரன் மிகவும் பாடுபடவும், பெரியோர்கள் பிரதான ஆசாரியர் வேதபாரகர் என்பவர்களாலே தள்ளப்படவும், மரணம் அடையவும், பின்பு மூன்று நாளுக்குள்ளே உயிரோடே எழுந்திருக்கவும் வேண்டுமென்று அவர்களுக்கு அறிவிக்கத்தொடங்கினார்.

௩௨. அப்படி அவர் வெளியரங்கமாய்ப் பேசிக்கொண்டபொழுது, பேதுரு அவரைப்பக்கத்திலே அழைத்து, அவரைக்கடிந்துகொள்ளத்தொடங்கினான்.

௩௩. உடனே அவர் திரும்பித்தம்முடைய சீஷர்களை நோக்கிப்பார்த்துப்பின்பு பேதுருவை நோக்கி, * நீ பராபரனுக்குப்பிரியமானவைகளைச்சிந்தியாமல், மனிதருக்குப் பிரியமானவைகளைச் சிந்திக்கிறபடியினாலே சாத்தானே! நீ என்முன் இராமற்போவென்று அவனைக்கடிந்துகொண்டு, * ௨ சாமு. ௰௯: ௨௨.

௩௪. பின்பு தம்முடைய சீஷருடனே சனங்களை அழைத்து, எனக்குப்பின்செல்ல விரும்புகிறவன் எவனோ அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை ஏற்றிக்கொண்டு, எனக்குப்பின் செல்லக்கடவன்.

௩௫. என்னத்தினாலென்றால், எவனானாலும், * தன் சீவனை இரட்சிக்கவிரும்பினால், அதை இழந்துபோவான். என்னிமித்தமும், சுவிசேஷத்தினிமித்தமுந் தன் சீவனை இழந்துபோகிறவன் எவனோ அவனே அதை இரட்சிப்பான். * மத். ௰: ௩௯.

௩௬. அல்லாமலும் ஒருவன் உலகம் யாவையுஞ் சம்பாதித்துக்கொண்டாலும், தன் சீவனை இழந்துபோனால், அவனுக்கு என்ன லாபம் உண்டாகும்.

௩௭. அல்லது, * ஒரு மனிதன் தன் சீவனை

மீட்கும்படிக்கு, என்னைத் தந்தைக்கொடுப்பான். * சங். ௪௯: ௯.

௩௮. அன்றியும், * விபசாரமும், பாவமும் உள்ள இந்தச்சந்ததியாருக்குள்ளே எவன் என்னையும் என் வசனங்களையுங்குறித்து, இலச்சை அடைவானோ? அவனைக்குறித்தும் மனிதனுடைய குமாரன் தம்முடைய பிதாவின் மகிமையோடும், பரிசுத்த சீஷர்களுடனேயுங்கூட வரும்பொழுது இலச்சை அடைவான். * மத். ௰: ௩௩. ௨ தீமோ. ௨: ௰௨.

௯ அதிகாரம்.

[(௨) இயேசு மறுரூபம் அடைந்தது. (௰௧) அவர் எலியாவின் வரவைக்குறித்துத் தம்முடைய சீஷர்களுக்குச்சொன்னது. (௰௪) ஊமையும், செவிடுமான ஒரு ஆவியைத்துரத்தினது. (௩௰) தம்முடைய மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் முன் அறிவித்தது. (௩௩) சீஷர்களுக்குத்தாழ்மையைப்படிப்பித்தது. (௩௮) அவர்களை விரோதியாதவர்களைத்தடைபண்ணாமலும், விசுவாசிகளுக்கு இடறல் உண்டாக்காமலும் இருக்கப்போதித்தது.]

* அல்லாமலும், இங்கே நிற்கிறவர்களிற் சிலர் பராபரனுடைய ஆளுகை பலத்தோடே வருகிறதைக்காணுமளவும் மரணம் அடைவது இல்லையென்று மெய்யாய் உங்களுக்குச்சொல்லுகிறேன் என்றார். * மத்தே. ௰௬: ௨௮. மத். ௰௭: ௧—௰௩. லூக். ௯: ௨௮—௩௬.

௨. ஆறுநாளுக்குப்பின்பு இயேசுவானவர் பேதுருவையும், யாக்கோபையும், யோவானையுங்கூட்டித்தனித்து இருக்கும்படிக்கு, அவர்களை உயரமான மலையிற் கொண்டுபோய் அவர்களுக்கு முன்பாக மறு உருவப்பட்டார்.

௩. அவருடைய வஸ்திரங்கள் பூமியிலே வண்ணான் செய்யக்கூடாத வண்ணமாயும், உறைந்த மழையைப்போலவும் மிகவும் வெண்மையாய்ப்பிரகாசித்தன.

௪. அல்லாமலும், மோசேயும், எலியாவும், அவர்களுக்குக்காணப்பட்டு, இயேசுவுடனே பேசிக்கொண்டார்கள்.

௫. அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி, இரபீ, நாம் இங்கே யிருக்கிறது நல்லது. ஆகையால், உமக்காகவும், மோசேயுக்காகவும், எலியாவுக்காகவும் ஒவ்வொரு குடிலாகமூன்று குடில்களை உண்டுபண்ணுவோம் என்றான்.

௬. மிகுந்த பயம் அவர்களைப்பிடித்தபடியால், அவன் தான் பேசுகிற வசனங்களைத் தானே அறியாமல் அப்படிச்சொன்னான்.

௭. அப்பொழுது ஒரு மேகம் அவர்களை மூடிக்கொண்டது. அல்லாமலும், * இவர் எனக்கு அன்பாயிருக்கிற என்னுடைய குமாரன். இவருக்குச்செவிகொடுங்களென்று அந்த மேகத்தில் இருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. * மத்தே. ௩: ௰௭. ௨ பே. ௧: ௰௭.

௮. உடனே அவர்கள் சுற்றிப்பார்த்தபொழுது, தங்கள் சேகரத்தில் இயேசுவையேயன்றி, மற்றொருவனையுங் காணவில்லை.

௯. பின்பு அவர்கள் மலையில் இருந்திறங்கினபொழுது, அவர் அவர்களைநோக்கி, நீங்கள் (மலையிலே) கண்டவைகளை மனிதனுடைய குமாரன் மரித்தோரில் இருந்து எழுந்திருப்பதற்குமுன்னே யொருவருக்கும் அறிவியாதிருங்களென்று கட்டளையிட்டார்.

௰. அவர்கள் அந்த வசனத்தை ஞாபகப்படுத்தி, மரித்தோரிலிருந்து எப்படி உயிரோடெழுந்திருக்கலாம் என்று தங்களுக்குள்ளே யோசனைபண்ணிக்கொண்டு,

௰௧. பின்பு அவரை நோக்கி, முன்பு எலியா வரவேண்டுமென்று வேதபாரகர் சொல்லுகிறார்களேயென்று வினவினார்கள்.

௰௨. அதற்கவர் சொன்னது, முன்பு எலியா வந்து சகலத்தையுஞ் சீர்ப்படுத்த வேண்டுவதுதான். அல்லாமலும் மனிதனுடைய குமாரன் மிகவும் பாடுபடவும், அசட்டைபண்ணப்படவும் வேண்டுமென்று எழுதியிருக்கிறதுபோல, அவனும் பாடுபடவேண்டும்.

௰௩. * எலியா வந்தாயிற்றென்று உங்களுக்குச்சொல்லுகிறேன். அவனைக்குறித்து எழுதியிருக்கிறபடி அவனை யவர்கள் தங்கள் இஷ்டப்படிக்குச்செய்தார்கள் என்றார். * மத். ௰௧: ௰௪.

௰௪. * பின்பு அவர் (மற்றச்) சீஷர்களிடத்தில் வந்தபொழுது, அவர்களைச்சூழ மிகுந்த சனங்களையும், அவர்களுடனே தருக்கம்பண்ணின வேதபாரகரையுங் கண்டார். * மத். ௰௭: ௰௪—௨௧. லூக். ௯: ௩௭—௪௨.

௰௫. சனங்கள் எல்லாரும் அவரைக்கண்டவுடனே, அவர்கள் மிகவும் பிரமித்து ஓடிவந்து அவரை வந்தனஞ் செய்தார்கள்.

௰௬. அப்பொழுது அவர் வேதபாரகரை நோக்கி, நீங்கள் எதைக்குறித்து இவர்களுடனே தருக்கம்பண்ணுகிறீர்களென்று கேட்டார்.

௰௭. அதற்குச்சனங்களில் ஒருவன் சொன்னது, போதகரே ஊமையான ஆவியையடைந்திருக்கிற என் மகனை உம்மிடத்திற் கொண்டுவந்தேன்.

௰௮. அந்த ஆவி எவ்விடத்தில் ஆனாலும் அவனை, பிடித்துக்கொள்ளுகிறபொழுது அவனைத் (தரையிலே) மோதுகின்றது.

பின்பு அவன் (வாயினாலே) நுரைதள்ளத் தன் பற்களைக்கடித்துக்கொண்டு சோர்ந்து போகிறான். அதைத்துரத்தும்படிக்கு உம்முடைய சீஷரை வேண்டிக்கொண்டேன். அப்படிச்செய்யும்படிக்கு அவர்களாற் கூடாமற் போயிற்றென்றான்.

௰௯ அப்பொழுது அவர் திருவுளம்பற்றினது, ஆ, விசுவாசமில்லாத சந்ததியாரே, எதுவரைக்கும் நான் உங்களோடிருப்பேன். எதுவரைக்கும் உங்களிற் பொறுமையாயிருப்பேன். அவனை யென்னிடத்திற் கொண்டுவாருங்கள் என்றார். அவனை யவரிடத்திற் கொண்டுவந்தார்கள்.

௨௰. அவரைக்கண்டவுடனே, அந்த ஆவி அவனை யலக்கழித்தது. மேலும் அவன் தரையிலே விழுந்து (வாயினால்) நுரைதள்ளப்புரண்டான்.

௨௧. அப்பொழுது இயேசுவானவர் அவனுடைய தகப்பனை நோக்கி, இப்படி இவனுக்குண்டாய் எத்தனை நாளாயிற்றென்று கேட்டதற்கு அவன் சொன்னது, சிறுவயதுமுதற்கொண்டு இருக்கிறது.

௨௨. அல்லாமலும் இவனை யழிக்கும்படிக்கு, அது அநேகந்தரம் நெருப்பிலேயும், சலத்திலேயுந் தள்ளிற்று. அப்படியிருந்தும், நீர் ஏதாகிலுஞ் செய்யக்கூடுமானால் எங்களுக்கு உருக்கமாய் இரங்கி, உதவி செய்தருளுமென்றான்.

௨௩. இயேசுவானவர் சொன்னது, நீ விசுவாசிக்கக்கூடுமானால், ஆகும். விசுவாசிக்கிறவனுக்கு, * எதுவும் நடக்குமென்று சொன்னவுடனே, * லூக். ௰௭: ௬,

௨௪. அந்தப்பிள்ளையின் தகப்பன் அழுதுகொண்டு, ஆண்டவரே, விசுவாசிக்கிறேன். என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யுமென்று கூப்பிட்டான்.

௨௫. அத்தருணத்திலே சனங்கள் ஓடி வந்து கூட்டமாகிறதை இயேசுவானவர் கண்டபொழுது, அவர் அந்த அசுத்த ஆவியுடனே சொன்னது, ஊமையும், செவிடுமான ஆவியே, நீ யிவனை விட்டுப்புறப்பட்டு, இனி யிவனிடத்திற் பிரவேசியாமற் போவென்று உனக்குக்கட்டளையிடுகிறேனென்றுசொல்லி, அதை யதட்டினார்.

௨௬. அப்பொழுது அது சத்தமிட்டு அவனை மிகவும் அலக்கழித்துப்புறப்பட்டுப் போயிற்று. அவன் இறந்துபோனானென்று அநேகர் சொல்லத்தக்கதாகச்செத்தவனைப்போலக்கிடந்தான்.

௨௭. இயேசுவானவர் அவனுடைய கையைப்பிடித்து, அவனை யெடுத்தார், உடனே யவன் எழுந்திருந்தான்.

௨௮. பின்பு அவர் வீட்டிற்கு வந்தபொழுது, அவருடைய சீஷர் இரகசியமாய் அவரை நோக்கி, நாங்கள் அதைத்துரத்தும்படிக்கு எங்களுக்கு ஏன் திராணியில்லையென்று கேட்டார்கள்.

௨௯. அவர் சொன்னது, செபத்தினாலும், உபவாசத்தினாலுமே யன்றி, மற்றொருவிதமாய் அந்தச்சாதியை, துரத்தக்கூடாதென்றார்.

௩௰. * பின்பு அவர்கள் அவ்விடம்விட்டுப் பிரயாணப்பட்டுக்கலிலேயாநாட்டின் வழியாய்ப்போகிறபொழுது, அவர் தம்முடைய சீஷர்களுக்கு உபதேசம்பண்ணவேண்டுமென்றிருந்தபடியினாலே, (தாம் போகிறதை) ஒருவரும் அறியாயலிருக்கவேண்டுமென்று விரும்பினார். * மத். ௰௭: ௨௨, ௨௩. லூக். ௯: ௪௩—௪௫.

௩௧. பின்பு அவர் அவர்களை நோக்கி, * மனிதனுடைய குமாரன் மனிதர்களுடைய கையில் ஒப்புக்கொடுக்கப்படுவான். அவர்கள் அவனைக்கொலைசெய்வார்கள், மரித்த பின்பு அவன் மூன்றாம்நாளிலே உயிரோடெ எழுந்திருப்பானென்றார். * அ: ௩௧.

௩௨. அவர்கள் அந்தச்சங்கதியை யறிந்துகொள்ளவில்லை. மேலும் அவரிடத்தில் விசாரிக்கிறதற்கும் பயந்தார்கள்.

௩௩. * பின்பு அவர் கப்பர்நாகூம் பட்டினத்திற்சேர்ந்து, ஒரு வீட்டிலே யிருந்தபொழுது, அவர் அவர்களை நோக்கி வழியிலே நீங்கள் எதைக்குறித்து உங்களுக்குள்ளே தருக்கம் பண்ணிக்கொண்டீர்களென்று கேட்டார். * லூக். ௯: ௪—௬

௩௪ அவர்கள் தங்களில் எவன் பெரியவனென்று ஒருவரோடொருவர் வழியிலே தருக்கம்பண்ணிக்கொண்டபடியினாலே, பேசாமல் இருந்தார்கள்.

௩௫. அப்பொழுது அவர் உட்கார்ந்து பன்னிருவரையும அழைத்துச்சொன்னது, * ஒருவன் முதல்வனாய் இருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் பிந்தினவனுமாய், எல்லாருக்கும் ஊழியக்காரனுமாய்இருக்கக்கடவனென்றுசொல்லி, * மத். ௰௮: ௯.

௩௬. ஒரு பிள்ளையை யெடுத்து அதை யவர்களுக்குள்ளே நிறுத்திப்பின்பு அதை * யணைத்துக்கொண்டு, * ௰: ௰௬.

௩௭. இப்படிப்பட்ட பிள்ளைகளில் ஒன்றை என்னுடைய நாமத்தினாலே சேர்த்துக்கொள்ளுகிறவன் எவனோ அவன் என்னைச் சேர்த்துக்கொள்ளுகிறான். அல்லாமலும் என்னைச்சேர்த்துக்கொள்ளுகிறவன் எவனோ அவன் என்னை (மாத்திரம்) அல்ல, என்னை யனுப்பினவரையுஞ் சேர்த்துக்கொள்ளுகிறான் என்றார்.

௩௮. அப்பொழுது யோவான் அவரை நோக்கிப் போதகரே, நமக்குப்பின்செல்லாமலிருக்கிற ஒருவன் உம்முடைய நா

மத்தினாலே பசாசுகளைத் துரத்தக்கண்டோம். அவன் நமக்குப்பின்செல்லாதபடியால், அவன் அப்படிச்செய்யாதபடிக்குச்சொன்னோமென்றான்.

௩௯. அதற்கு இயேசுவானவர் சொன்னது, நீங்கள் அவனுக்குத்தடைபண்ணவேண்டாம். என்னத்தினாலென்றால், என்னுடைய நாமத்தினாலே யற்புதஞ் செய்கிறவன் என்னைக்குறித்துச்சீக்கிரமாய்த்தீமை சொல்லமாட்டான்.

௪௰. அல்லாமலும் உங்களுக்கு விரோதியல்லாதவன் உங்கள் பங்கிலிருக்கிறான்.

௪௧. * அன்றியும் நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாய் இருக்கிறபடியினாலே ஒருவன் என் நாமத்தினிமித்தம் ஒருகலயந் தண்ணீர் உங்களுக்குக்கொடுத்தால் அவன் தன் பலனை யிழந்துபோவதில்லை யென்று மெய்யாய் உங்களுக்குச்சொல்லுகிறேன். * மத். ௰: ௪௨.

௪௨. அன்றியும் என்னை விசுவாசிக்கிறவர்களாகிய இந்தச்சிறியவர்களில் * ஒருவன் குற்றஞ் செய்வதற்குக்காரணமாய் இருக்கிறவன் எவனோ அவன் தன் கழுத்திலே ஏந்திரக்கல்லைக்கட்டப்பட்டு, சமுத்திரத்திலே தள்ளப்பட்டால், அவனுக்கு நன்மையாய் இருக்கும். * மத். ௰௮: ௬—௯

௪௩. உன் கை யுன்னைக்கெடுக்கிறதற்கு ஏதுவானால், அதைத்தறித்துப்போடு. நீ யிரண்டு கையை யுடையவனாய், * மத். ௫: ௨௯, ௩௰.

௪௪. நித்திய நரக அக்கினியிலே போவதிலும் ஊனனாய்ச்சீவனிற் பிரவேசிக்கிறதே யுனக்கு நலமாய் இருக்கும். * அந்நரகத்திற் குரியவர்களுடைய புழுச்சாவாமலும், அக்கினி அவியாமலும் இருக்கின்றன. * ஏசா. ௬௬: ௨௪.

௪௫. அல்லாமலும் உன்கால் உன்னைக்கெடுக்கிறதற்கு ஏதுவானால், அதைத்தறித்துப்போடு. நீ யிரண்டு காலையுடையவனாய்,

௪௬. நித்திய நரக அக்கினியிலே தள்ளப்படுகிறதிலும், சப்பாணியாய்ச்சீவனிற் பிரவேசிக்கிறதே யுனக்கு நலமாய் இருக்கும். அந்நரகத்திற் குரியவர்களுடைய புழுச்சாவாமலும், அக்கினி யவியாமலும் இருக்கின்றன.

௪௭ அல்லாமலும் உன்கண் உன்னைக்கெடுக்கிறதற்கேதுவானால், அதைப்பிடுங்கிப்போடு.

௪௮. நீ யிரண்டு கண்ணை யுடையவனாய் நரக அக்கினியிலே தள்ளப்படுகிறதிலும் ஒற்றைக்கண்ணனாய்ப்பராபரனுடைய இராச்சியத்திலே பிரவேசிக்கிறதே யுனக்கு நலமாய் இருக்கும். அந்நரகத்திற் குரியவர்களுடைய புழுச்சாவாமலும், அக்கினி யவியாமலும் இருக்கின்றன.

௪௯. எல்லாப்பலிகளும் உப்பினாலே சாரமாக்கப்படுகிறதுபோல, * யாவனும் அக்கினியினாலே சாரமாக்கப்படுவான். * ௩ மோ. ௨: ௰௩.

௫௰. * உப்பானது நல்லது. உப்பானது சாரமற்றதேயானால், எதினாலே யதற்குச் சாரமுண்டாக்குவீர்கள். உங்களுக்குள்ளே உப்புண்டாயிருக்கும்படி செய்யுங்கள். அல்லாமலும் ஒருவரோடொருவர் சமாதானமாய் இருக்கக்கடவீர்கள் என்றார். * மத் ௫: ௰௩.

௰ அதிகாரம்.

[(௨) கிறிஸ்து விவாகப்பிரிவைக்குறித்துப் பரிசேயர்களுக்கு உத்தரவுசொல்லி, (௰௩) தம்மிடத்திற் கொண்டுவரப்பட்ட பிள்ளைகளை ஆசீர்வதித்து, (௰௭) நித்திய சீவன் அடையும் வழியைக்குறித்து, ஓர் ஐசுவரியவானுக்கு நியாயஞ்சொல்லி, (௨௩) ஐசுவரியத்தின் தீமைகளைக்குறித்துச்சீஷர்களுக்கு அறிவித்தது. (௨௮) சுவிசேஷத்தினிமித்தம் யாதொன்றை வெறுத்து விடுகிறவர்கள், தகுந்தபலன் அடைவார்களென்று கூறி) (௩௨) தம்முடைய மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் முன்னறிவித்து, (௩௫) பெருமையுள்ள இருவருடைய விண்ணப்பத்தைமறுத்து அவர்களுக்கு மனத்தாழ்மையைப்படிப்பித்து, (௪௬) குருடனாய் இருந்த பர்த்திமேயுவுக்குப்பார்வை யளித்தது.]

* பின்பு அவர் எழுந்து, யோர்தான் அருகேயுள்ள யூதேயா நாட்டின் திசைகளுக்குப்போனார். அங்கே மறுபடியுஞ் சனங்கள் அவரிடத்திற் கூடிவந்தார்கள். அவரும் வழக்கத்தின்படி அவர்களுக்கு மறுபடியும் உபதேசம் பண்ணினார். * மத். ௰௯: ௧—௰௨.

௨. அல்லாமலும் பரிசேயர் அவரைச் சோதிக்கும்படிக்கு அவரிடத்தில் வந்து, புருஷனானவன் தன்மனைவியைத்தள்ளிவிடலாமாவென்று கேட்டார்கள்.

௩. அவர்களை யவர் நோக்கி, மோசேயென்பவர் உங்களுக்கு எப்படிக்கட்டளையிட்டாரென்றார்.

௪. அவர்கள் சொன்னது, தள்ளுதற் சீட்டையெழுதி அவளைத்தள்ளிவிடும்படிக்கு * மோசே உத்தரவு கொடுத்தாரென்றார்கள். * ௫ மோ. ௨௪: ௧.

௫. அப்பொழுது இயேசுவானவர் அவர்களுக்குச்சொன்னது, உங்களுடைய இருதயங் கடினமானபடியினாலே மோசே உங்களுக்கிந்தக்கட்டளையை யெழுதினார்.

௬. உலகமுண்டானது முதற்கொண்டு

பராபரன் அவர்களை ஆணும், பெண்ணுமாகச்செய்தார்.

௭. * அதினிமித்தம் ஒருவன் தன் தகப்பனையும், தாயையும் விட்டுத் தன்மனைவியுடனே யிசைந்திருப்பானென்றும், * ௧ மோ. ௨: ௨௪.

௮. அவர்கள் இருவரும் ஒரே சரீரமாய் இருப்பார்களென்றுஞ் சொல்லியிருக்கிறபடியினாலே அவர்கள் இருவராயிராமல், ஒரே சரீரமாய் இருக்கிறார்கள்.

௯. ஆகையாற் பராபரன் இணைத்ததை மனிதன்பிரியாமல் இருக்கக்கடவனென்றார்.

௰. பின்பு வீட்டிலே அவருடைய சீஷர்கள் அதைக்குறித்து மறுபடியும் அவரிடத்தில் விசாரித்தபொழுது,

௰௧. அவர்சொன்னது, * தன்மனைவியைத் தள்ளிவேறொருத்தியை விவாகம்பண்ணுகிறவன் எவனோ அவன் அவளுக்கு விரோதமாய் விபசாரஞ் செய்கிறவன். * மத். ரு: ௩௨.

௰௨. அல்லாமலும், மனைவியானவள் தன் புருஷனைத்தள்ளி வேறொருவனை விவாகம் பண்ணினால், அவள் விபசாரஞ் செய்கிறவளென்றார்.

௰௩. * அப்பொழுது அவராலே தொடப்படும்படிக்குப்பிள்ளைகளை யவரிடத்திற்குக் கொண்டுவந்தார்கள். சீஷர்கள் அவைகளைக்கொண்டுவந்தவர்களை யதட்டினார்கள். * மத். ௰௯: ௰௩-௰௫. லூக். ௰௮: ௰௫-௰௭.

௰௪. இயேசுவானவர் அதைக்கண்டு விசனம் அடைந்து, பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்குத்தடைபண்ணாமல், இடங்கொடுங்கள். பராபரனுடைய இராச்சியம் அப்படிப்பட்டவைகளுக்குடைமையானதே.

௰௫. * எவனாகிலும், ஒருபிள்ளையைப்போலப்பராபரனுடைய இராச்சியத்தை யேற்றுக்கொள்ளாமலிருந்தால், அவன் அதிற் பிரவேசிப்பதில்லையென்று மெய்யாய் உங்களுக்குச்சொல்லுகிறேனென்று சொல்லி, *மத்.௰௮:௩.௧பேது.௨:௩.௧கொரி.௰௪:௨௰.

௰௬. பின்பு * அவைகளை யணைத்துக்கொண்டு தம்முடைய கைகளை யவைகள்மேல் வைத்து அவைகளை யாசீர்வதித்தார். * ௯: ௩௬.

௰௭. * பின்பு அவர் புறப்பட்டு வழியிலே நடக்கையில் ஒருவன் அவரிடத்திற் கோடிவந்து, முழங்காற்படியிட்டு நல்லபோதகரே! நித்திய சீவனைச்சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு நான் செய்யவேண்டியதென்னவென்று கேட்டான். * மத். ௰௯: ௰௬—௨௯. லூக். ௰௮: ௰௮—௨௭.

௰௮. அவனுடனே யவர் சொன்னது, நீ யென்னை நல்லவனென்று ஏன் சொல்லுகிறாய்? பராபரனாகிய ஒருவரேயன்றி மற்றொருவனும் நல்லவனல்லவே.

௰௯. விபசாரம் பண்ணாமலிருப்பாயாக. கொலைசெய்யாதிருப்பாயாக. களவுசெய்யாதிருப்பாயாக. பொய்ச்சாட்சிசொல்லாதிருப்பாயாக. வஞ்சனை செய்யாதிருப்பாயாக. உன்தகப்பனையும், தாயையுங் கனம்பண்ணுவாயாகவென்றிருக்கிற கற்பனைகளையறிந்திருக்கிறாயே யென்றார்.

௨௰. அதற்கவன் சொன்னது, போதகரே அவைகளையெல்லாம் நான் என் சிறுவயதுமுதற் கைக்கொண்டுவருகிறேனென்றான்.

௨௰௧. அப்பொழுது இயேசுவானவர் அவனைப்பார்த்து அவனிடத்தில் அன்புகூர்ந்து சொன்னது, உன்னிடத்திற் பின்னுமொன்று குறைவாயிருக்கிறது. நீ போய் உனக்குண்டானவைகளைவிற்றுப் * பரமண்டலத்திலே பொக்கிசத்தை யடைந்து கொள்ளத்தக்கதாக அவைகளை ஏழைகளுக்குக்கொடுத்துப் பின்பு வந்து சிலுவையையெடுத்துக்கொண்டு எனக்குப்பின் செல்லுவாயாகவென்றார். * மத். ௬: ௰௯, ௨௰.

௨௰௨. அவன் மிகுந்த ஆஸ்திகளை யுடையவனானபடியினாலே யந்த வசனத்தைக்கேட்டு மனம்நொந்து துக்கத்தோடே யவரை விட்டுப்போனான்.

௨௰௩. அப்பொழுது இயேசுவானவர் சுற்றிப்பார்த்து, தம்முடைய சீஷர்களுடனே சொன்னது, பொருள்களைப்பெற்றவர்கள் பராபரனுடைய இராசகியத்திற் பிரவேசிக்கிறது மிகவும் அரிது என்றார்.

௨௰௪. அல்லாமலுஞ் சீஷர்கள் அந்த வசனங்களைக்குறித்துத்திகைத்தபொழுது, இயேசுவானவர் அவர்களுக்குப்பின்னுஞ் சொன்னது, பிள்ளைகளே! பொருள்களின்மேல் * நம்பிக்கையாயிருக்கிறவர்கள் பராபரனுடைய இராச்சியத்திற் பிரவேசிக்கிறது மிகவும் அரிதாகவே யிருக்கிறது. * சங். ௬௨: ௰௧.

௨௰௫. ஐசுவரியமுள்ளவன் பராபரனுடைய இராச்சியத்திற் பிரவேசிக்கிறதிலும் ஒட்டகமானது ஒரு ஊசியின் காதில் நுழைகிறது எளிதாயிருக்கின்றதென்றார்.

௨௰௬. அவர்கள் அதிகமாய்ப்பிரமித்து அப்படியானால் இரட்சிக்கப்படுபவர்கள் யாரென்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்.

௨௰௭. அப்பொழுது இயேசுவானவர் அவர்களைப்பார்த்து மனிதர்களுக்கு அது கூடாதகாரியந்தான். பராபரனே யெதையுஞ் செய்யத்திராணியுள்ளவராகையாற் பராபரனுக்கு * அது கூடாதகாரியம் அல்லவென்றார். * லூக். ௧: ௩௭. ௧மோ. ௰௮:௰௪.

௨௰௮. * பின்பு பேதுரு அவரைநோக்கி, இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உமக்குப்பின் சென்றோமேயென்றான். * மத். ௰௯: ௨௭—௩௰. லூக். ௰௮: ௨௮-௩௰.

௨௰௯. அதற்கு இயேசுவானவர் சொன்ன

து, என்னிமித்தமும், சுவிசேஷத்தின் நிமித்
தமும் வீட்டையாவது, சகோதரர்களையா
வது, சகோதரிகளையாவது, தகப்பனையாவ
து, தாயையாவது, மனைவியையாவது, பிள்
ளைகளையாவது, நிலங்களையாவது விட்டு,
௩௰. பின்பு இம்மையிலே துன்பங்களுட
னேகூட நூறுமடங்காய் வீடுகளையும், ச
கோதரர்களையும், சகோதரிகளையும், தாய்
களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறு
மையிலே நித்திய சீவனையும் பெற்றுக்
கொள்ளாமலிருக்கிறவன் ஒருவனுமில்லை
யென்றும்,
௩௧. * முந்தினோராகிய அநேகர் பிந்தி
னோராயும், பிந்தினோர் முந்தினோராயும்
இருப்பார்களென்றும் மெய்யாய் உங்களுக்
குச்சொல்லுகிறேனென்றார். * மத். ௨௰:௰௬.
௩௨. * அன்றியும், அவர்கள் எருசலேம்
நகரத்திற்குப் பிரயாணமாய்ப்போன பொ
ழுது, இயேசுவானவர் அவர்களுக்கு முன்
னே நடந்தார். அவர்கள் பிரமித்துப்பயத்
தோடே அவருக்குப்பின்சென்றார்கள். அப்
பொழுது அவர் பன்னிருவரையும் மறுபடி
யும் அழைத்துத்தமக்குச்சம்பவிக்குங் காரி
யங்களையவர்களுக்கு அறிவித்துச்சொன்ன
து, * மத். ௨௰: ௰௭-௰௯ லூக். ௰௮:௩௧-௩௪.
௩௩. இதோ, எருசலேமுக்குப்போகிறோம்.
அங்கே மனிதனுடைய குமாரன் பிரதான
ஆசாரியருக்கும், வேதபாரகருக்கும் ஒப்
புக்கொடுக்கப்படுவான். அவர்கள் அவனை
மரண ஆக்கினைக்குட்படுத்தும்படிக்குத்தீர்
ப்புச்செய்து, அவனைப்புறத்தேசத்தாருக்கு
ஒப்புக்கொடுப்பார்கள்.
௩௪. அவர்கள் அவனை இழிவுசெய்து, அவ
னைவாரினால் அடித்து, அவன்மேலே துப்பி,
அவனைக்கொலை செய்வார்கள். ஆகிலும்,
மூன்றும் நாளிலே அவன் உயிரோடெழுந்
திருப்பானென்றார்.
௩௫. * பின்பு செபேதேயுவின் குமாரர்க
ளாகிய் யாக்கோபும், யோவானும் அவ
ரிடத்தில் வந்து, போதகரே! நாங்கள்
வேண்டிக்கொள்ளுகிறபடி நீர் எங்களுக்
குச்செய்யவேண்டுமென்று விரும்புகிறோம்
என்றார்கள். * மத். ௨௰: ௨௰—௨௮.
௩௬. அதற்கவர், நானுங்களுக்குச்செய்ய
நீங்கள் விரும்புகிறதென்னவென்றார்.
௩௭. அவர்கள் சொன்னது, நீர் மகிமை
யை அடைந்திருக்கும்பொழுது, எங்களி
லொருவன் உம்முடைய வலது பக்கத்திலே
யும், ஒருவன் உம்முடைய இடது பக்கத்
திலேயுமிருக்க அநுக்கிரகம் பண்ணவேண்
டுமென்று சொன்னார்கள்.
௩௮. இயேசுவானவர் சொன்னது, நீங்கள்
கேட்டது உங்களுக்கே தெரியவில்லை. நான்
பானம்பண்ணும் பாத்திரத்திற் பானம்பண்
ணவும், நான் பெற்றுக்கொள்ளும் ஸ்நா
னத்தைப்பெற்றுக்கொள்ளவும் உங்களாற்
கூடுமாவென்று சொன்னதற்கு,
௩௯. அவர்கள் கூடுமென்றார்கள் அப்பொ
ழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி,
நான் பானம்பண்ணும் பாத்திரத்தில் நீங்
களும் பானம் பண்ணுவீர்கள். அல்லாம
லும், நான் பெற்றுக்கொள்ளும் ஸ்நானத்
தை நீங்களும் பெற்றுக்கொள்வீர்கள்.—
அது மெய்தான்.
௪௰. ஆனாலுங் குறிக்கப்பட்டவர்களுக்கே
யன்றி, (மற்றொருவருக்கும்) என் வலது
பக்கத்திலும், என் இடது பக்கத்திலுமிருப்
பதற்கான (கனத்தை) நான் கொடுக்கக்
கூடாதென்றார்.
௪௧. மற்றப்பத்துப்பேரும் அதைக்கேள்
விப்பட்டு, யாக்கோபின்மேலும், யோவான்
மேலுங் கோபமாய் இருக்கத்தொடங்கினார்
கள்.
௪௨. அப்பொழுது இயேசுவானவர் அவர்
களை யழைத்துச்சொன்னது, நீங்கள் அ
றிந்திருக்கிறபடி உலகத்தாருக்குள்ளே பிர
புக்களென்னப்பட்டிருக்கிறவர்கள் இறு
மாப்பாய் ஆளுகிறார்கள். அல்லாமலும்,
அவர்களுடைய பெரியோர்கள் இஷ்டப்
படிக்கு அவர்களமேல் அதிகாரஞ் செலுத்
துகிறார்கள்.
௪௩. அப்படி உங்களுக்குள்ளே இருக்கக்
கூடாது. உங்களுக்குள்ளே பெரியவனாய்
இருக்க விரும்புகிறவன் உங்கள் ஊழியக்கா
ரனாய் இருக்கக்கடவன்.
௪௪. உங்களில் முதலாளியாய் இருக்க
விரும்புகிறவன் எல்லாருக்கும் அடிமையாய்
இருக்கக்கடவன்.
௪௫. மனிதனுடைய குமாரனும் ஊழியம்
அடையும்படிக்கு வாராமல், ஊழியஞ்
செய்யும்படிக்கும், அநேகரை மீட்கும்
பொருளாகத்தன்னுடைய சீவனைக்கொடுக்
கும் படிக்கும் வந்தானே என்றார்.
௪௬. பின்பு, அவர்கள் எரிகோபட்டினத்
திற்கு வந்தார்கள். அவரும், அவருடைய
சீஷர்களும், மிகுந்த சனங்களும் * அதை
விட்டுப்போனபொழுது, தீமேயு என்பவனு
டைய மகனாகிய குருடனான பருத்திமேயு
என்பவன் வழியிலே பிச்சைகேட்டுக்கொண்
டிருக்கையில், * மத். ௨௰: ௨௯.
௪௭. நாசரேத்தாரராகிய இயேசுவானவர்
வருகிறாரென்று கேள்விப்பட்டு, இயேசுவே!
தாவீதின் குமாரனே! என்மேல் இரக்கமாய்
இருமென்று கூப்பிடத்தொடங்கினான்.
௪௮. அவன் பேசாமல் இருக்கும்படிக்கு
அநேகர் அவனைக்கடிந்துகொண்டார்கள்.
அப்படியிருந்தும் அவன் தாவீதின் குமார
னே! என்மேல் இரக்கமாய் இருமென்று
அதிகமாய்க்கூப்பிட்டான்.

௪௯. அப்பொழுது இயேசுவானவர் நின்று, அவனை யழைத்துவரச்சொன்னார். அந்தப்படி சிலர் அவனையழைத்துத்திடமாயிரு. எழுந்திரு. அவர் உன்னை யழைக்கிறாரென்றார்கள்.

௫௰. உடனே யவன் தன் வஸ்திரந்தைத் தள்ளி யெழுந்து, இயேசுவானவர் இடத்தில் வந்தான்.

௫௧. அவர் அவனை நோக்கி, நான் உனக்கு என்னசெய்ய வேண்டுமென்று இருக்கிறாய் என்றார். குருடனானவன் சொன்னது, இரபூனி, நீர் எனக்குப்பார்வைகொடுக்கவேண்டும் என்றான்.

௫௨. இயேசுவானவர் சொன்னது, * உன் விசுவாசம் உன்னைக்குணமாக்கிற்று. நீ போகலாம் என்றார். உடனே யவன் பார்வை யடைந்து, வழியிலே இயேசுவுக்குப் பின்சென்றான். * ரு: ௩௪.

௰௧ அதிகாரம்.

[(௧) கிறிஸ்துச்சிறப்பாய் எருசலேமுக்குள் பிரவேசித்தது. (௰௨) கனியற்ற அத்திமரந்தைச்சபித்தது. (௰௫) தேவாலயத்தைச் சுத்திகரித்தது. (௨௰) விசுவாசத்தில் உறுதிகொள்ளவும், பகைஞரை மன்னிக்கவும் சீஷர்களுக்குப்போதித்தது. (௨௭) பராபரனால் அனுப்பப்பட்ட மனுஷனாகிய யோவானுடைய சாட்சியினால் அவருடைய செய்கைகளுக்கு உதாரணங் கொடுத்தது.]

* பின்பு அவர்கள் எருசலேம் நகரத்திற்குச்சமீபமாய்ப்போய் ஒலிவமலையருகே யிருக்கிற பெத்பாகே, பெத்தானியா வூர்களுக்குச் சேர்ந்தபொழுது, அவர் தம்முடைய சீஷரில் இரண்டுபேரை நோக்கி, * மத். ௨௧: ௧—௰௭. லூக். ௰௯: ௨௯. யோவா. ௰௨: ௰௨—௰௯.

௨. உங்களுக்கு முன்பாகவிருக்கிற அந்தக் கிராமத்திற்குப்போங்கள். நீங்கள் அதிற் பிரவேசித்தவுடனே, ஒருவரும் ஏறமற் கட்டப்பட்டிருக்கிற (கழுதையின்) குட்டியைக் காண்பீர்கள். அதின் கட்டவிழ்த்து, அதைக் கொண்டுவாருங்கள்.

௩. ஒருவன் ஏன் இப்படிச்செய்கிறீர்கள் என்று உங்களுடனே சொன்னால், ஆண்டவருக்கு இது வேண்டுமென்று சொல்லுங்கள். உடனே யவன் அதை யிவ்விடத்திற்கு அனுப்பிவிடுவானென்று அனுப்பினார்.

௪. அந்தப்படி யவர்கள்போய் வெளியே தெருவிற் கதவின் அருகே கட்டப்பட்டிருக்கிற (கழுதையின்) குட்டியைக்கண்டு, அதின் கட்டவிழ்க்கிறபொழுது,

௫. அங்கே நின்ற சிலர் அவர்களை நோக்கி, நீங்கள் ஏன் இதின் கட்டவிழ்க்கிறீர்கள் என்றார்கள்.

௬. இயேசுவானவர் தங்களுக்குக்கட்டளையிட்டபடி சீஷர் அவர்களுக்கு உத்தரவு சொன்னார்கள். அப்பொழுது அவர்களை விட்டுவிட்டார்கள்.

௭. ஆகையால், சீஷர் அந்தக்குட்டியை இயேசுவினிடத்திற்குக்கொண்டுவந்து, தங்கள் வஸ்திரங்களை யதின்மேற் போட்டார்கள். அவர் அதின்மேல் ஏறிப்போனார்.

௮. அப்பொழுது அநேகர் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள். சிலர் மரங்களின் கிளைகளைமுறித்து, வழியிலே பரப்பினார்கள்.

௯. அல்லாமலும், முன்னடப்பாரும், பின்னடப்பாரும் * ஓசன்னா! பராபரனுடைய நாமத்தினாலே வருகிறவர் தோத்திரஞ்செய்யப்படக்கடவர். * சங். ௱௰௮: ௨௫, ௨௬.

௰. பராபரனுடைய நாமத்தினாலே வருகிறவர் நம்முடைய பிதாவாகிய தாவீதின் ஆளுகை வாழ்த்திக்கொள்ளப்படக்கடவது. உன்னதமான இடங்களிலே ஓசன்னாவென்று கூப்பிட்டார்கள்.

௰௧. அப்பொழுது இயேசுவானவர் எருசலேமிலேயும், தேவாலயத்திலேயும் பிரவேசித்தார். அங்கே அவர் எல்லாவற்றையுஞ் சுற்றிப்பார்த்து, அந்திசாயந்தரமானபொழுது பன்னிருவருடனே புறப்பட்டு, பெத்தானியூருக்குப்போனார்.

௰௨. * மறுநாளிலே யவர்கள் பெத்தானியூரைவிட்டுப் புறப்பட்டபொழுது, அவருக்குப்பசியுண்டாயிற்று. * மத்தே. ௨௧: ௰௮, ௰௯.

௰௩. உடனே அவர் தூரத்திலேயுள்ள இலையையுடைய * அத்திமரத்தைக்கண்டு, அதிலே ஒரு கனியையாகிலுங் கண்டு, பறித்துக்கொள்ளலாமென்று, அவ்விடத்திற்குப் புறப்பட்டு, அதின் அருகே சேர்ந்தபொழுது, அத்திமரங்கள் கனி கொடுக்கிற காலம் இல்லாதபடியால், இலைகளையே யல்லாமல், மற்றொன்றையும் அவர் காணவில்லை. * மத். ௨௧: ௰௯.

௰௪. அப்பொழுது இயேசுவானவர் அதை நோக்கி, இனி ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்திலே கனியைப்புசியாதிருப்பானாக வென்று சொன்னார். அதை அவருடைய சீஷர்கள் கேட்டார்கள்.

௰௫. பின்பு அவர்கள் எருசலேமுக்கு வந்தார்கள். * அங்கே இயேசுவானவர் தேவாலயத்திற் பிரவேசித்து, அதிலே விற்பாரையும், கொள்வாரையுந் துரத்தி, காசுக்காரருடைய பலகைகளையும், புறாக்களை விற்கிறவர்களுடைய ஆசனங்களையுங் கவிழ்த்து, * மத். ௨௧: ௰௨, ௰௩. லூக். ௰௯: ௪௫, ௪௬.

௰௬. ஒருவரும் ஒரு பாத்திரத்தைத்தேவாலயத்தின் வழியாய்க்கொண்டுபோகிறதற்கு இடங்கொடாமல் இருந்தார்.

௰௭. அல்லாமலும், * என்னுடைய ஆல

யம் எல்லாத்தேசத்தாருஞ் செபம்பண்
ணும்படிக்கான ஆலயம் என்னப்படுமென்
று, எழுதியிருக்கின்றதல்லவா? நீங்கள் † இ
தைக்கள்ளர் குகை யாக்கினீர்கள் என்று
அவர்களுக்குப்போதித்தார். * ஏசா. ௫௬:
௭. † எரே. ௭: ௰௧.
௰௮. வேதபாரகரும், பிரதான ஆசாரிய
ரும் அதைக்கேட்டபொழுது, சனங்கள்
எல்லாரும் அவருடைய உபதேசத்தைக்
குறித்து, ஆச்சரியப்பட்டபடியினாலே அவ
ருக்குப்பயந்து, அவரை மாய்க்கும்படிக்கு
வகைதேடினார்கள்.
௰௯. சாயந்தரமானபொழுது, அவர் நக
ரத்திற்குப்புறம்பே போனார்.
௨௰. * மறுநாளிலே அவர்கள் திரும்பிப்
புறப்பட்டபொழுது, அந்த அத்திமரம் வே
ரோடே பட்டுப்போனதைக்கண்டார்கள்.
* மத். ௨௧: ௨௰—௨௨.
௨௧. உடனே பேதுரு நினைவுகொண்டு,
அவரைநோக்கி இரபீ, இதோ நீர் சபித்த
அத்திமரம் பட்டுப்போயிற்றென்றான்.
௨௨. அதற்கு மாறுத்தரமாக, அவர் அவர்
களுடனே சொன்னது, பராபரனில் விசுவா
சமாய் இருங்கள்.
௨௩. ஏனென்றால், * எவனானாலும் இந்த
மலையை நோக்கி, நீ யெழுந்து சமுத்திரத்
திலே விழுவாயாகவென்று சொல்லி, தன்னி
ருதயத்திலே ஒன்றுஞ் சந்தேகப்படாமல்,
தான் சொன்னபடியே நடக்குமென்று விசு
வாசித்தால், அந்தச்சொற்படியே யவனுக்
கு நடக்குமென்று மெய்யாய் உங்களுக்குச்
சொல்லுகிறேன். * மத். ௰௭: ௨௰.
௨௪. ஆதலால், நான் (பின்னும்) உங்க
ளுக்குச்சொல்லுகிறதாவது; * செபம்பண்
ணும்பொழுது, நீங்கள் வேண்டிக்கொள்
ளும் யாவையும் பெற்றுக்கொள்ளலாமென்
று விசுவாசியுங்கள். அப்பொழுது, அவை
கள் உங்களுக்குண்டாகும். * மத். ௭: ௭.
௨௫. அல்லாமலும், பரமண்டலத்தில் இ
ருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை
மன்னிக்கும்படிக்கு நீங்கள் செபம்பண்ண
எழுந்து நிற்கும்பொழுது, ஒருவன்மேல்
உங்களுக்கு விதனமுண்டானால் மன்னித்
துக்கொள்ளுங்கள்.
௨௬. நீங்கள் * மன்னியாதிருப்பீர்களா
னால், பரமண்டலங்களில் இருக்கிற உங்கள்
பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியா
திருப்பார் என்றார். * மத். ௬: ௰௫.
௨௭. * அவர்கள் மறுபடியும் எருசலே
முக்கு வந்தபின்பு, அவர் தேவாலயத்திலே
உலாவுகையிற் பிரதான ஆசாரியரும், வேத
பாரகரும், மூப்பரும் அவரிடத்தில் வந்து,
* மத். ௨௧: ௨௩—௨௭. லூக். ௨௰: ௧—௮.
௨௮ எந்த அதிகாரத்தினாலே நீர் இவை
களைச்செய்கிறீர். இவைகளைச்செய்கிறதற்கு
உமக்கு அதிகாரத்தைக்கொடுத்தவர் யார்
என்றார்கள்.
௨௯. அவர்களுடனே இயேசுவானவர்
சொன்னது, நானும் உங்களிடத்தில் ஒரு
காரியத்தைக்கேட்கிறேன். அதற்கு நீங்கள்
மாறுத்தரஞ் சொல்லுங்கள். அப்பொழுது
நான் இவைகளைச்செய்கிற அதிகாரத்தை
யும் உங்களுக்கு அறிவிப்பேன்.
௩௰. யோவான் கொடுத்த ஸ்நானம் பரா
பரனால் உண்டானதோ? மனிதர்களாலே
உண்டானதோ! அதைச்சொல்லுங்கள் என்
றார்.
௩௧. அப்பொழுது அவர்கள் அது பராபர
னால் உண்டானதென்றால், இவர் ஏன் நீங்
கள் அவனை விசுவாசிக்கவில்லை என்பார்.
௩௨. அது மனிதரால் உண்டானதென்றால்,
எல்லாரும் யோவானைத்தீர்க்கதரிசியென்று
எண்ணுகிறப்டியால், அவர்களாலே நமக்
கு மோசம் வருமென்று, தங்களுக்குள்ளே
யோசனை பண்ணிக்கொண்டு,
௩௩. * பின்பு, இயேசுவானவரை நோக்கி,
எங்களுக்குத்தெரியாதென்றார்கள். அப்
பொழுது இயேசுவானவர் அவர்களுடனே
சொன்னது, (அப்படியானால்) நானும் இ
வைகளைச்செய்கிற அதிகாரத்தின் தன்மை
இன்னதென்று உங்களுக்குச்சொல்லமாட்
டேன் என்றார். * மத். ௨௰: ௮. லூக்.
௨௰: ௭, ௮.

௰௨ அதிகாரம்.

[(௧) பொல்லாத தோட்டக்காரர்களுக்கு
விட்ட திராட்சத்தோட்டத்தின் உவமை
யினால், கிறிஸ்து யூதர்களுக்கும், அந்நியர்
களுக்கும் அடுத்த நிலைமையை யெடுத்துக்
காண்பித்தது. (௰௩) இராயனுக்கு வரிகொ
டுப்பதைக்குறித்துப்பரிசேயருக்கும், எரோ
தேயின் மனுஷருக்கும் உத்தரவு சொன்
னது, (௰௮) உயிர்த்தெழுதல் இல்லையென்று
சாதித்த சதுசேயருடைய தப்பறையைக்
காண்பித்து, அந்த உபதேசத்தைநிச்சயித்
தது. (௨௮) பிரதான கற்பனையேதென்று
கேட்ட வேதபாரகனுக்கு உத்தரவு அரு
ளிச்செய்தது. (௩௫) கிறிஸ்துவைக்குறித்
து வேதபாரகர் கொண்டிருந்த தாற்பரி
யத்தைக்கண்டித்தது. (௩௮) அவர்களுடை
ய பெருமையையும், மாயத்தையுங் குறித்
துச்சனங்களை எச்சரித்தது. (௪௧, இரண்டு
காசைத்தருமப்பெட்டியிற் போட்ட ஏழை
விதவையைப்புகழ்ந்தது.]

*
அல்லாமலும், அவர் உவமைகளாய்
அவர்களுடனே சொன்னது, ஒரு
மனிதன் ஒருதிராட்சத்தோட்டத்தையுண்டு
பண்ணி, அதைச்சுற்றி வேலியடைத்து, அ
தில் ஆலையைநாட்டி, ஒருகோபுரத்தையுங்
கட்டிப்பின்பு அதைத்தோட்டக்காரர் வசி

மாய்விட்டு, புறத்தேசத்திற்குப்போனான். * மத். ௨௧: ௩௩—௪௰. லூக். ௨௰: ௯—௰௯.

௨. தகுதியான காலத்திலே அந்தத்திராட்சத்தோட்டத்தின் கனிகளில் ஒருபாகத்தைத்தோட்டக்காரரிடத்தில் வாங்கிக்கொள்ளும்படிக்கு, அவன் ஒரு ஊழியக்காரனை அவர்களிடத்திற்கு அனுப்பினான்.

௩. அவர்கள் அவனைப்பிடித்து அடித்து, வெறுமையாய் அனுப்பினார்கள்.

௪. மறுபடியும் அவன் வேறொரு ஊழியக்காரனை யவர்களிடத்தில் அனுப்பினான். அவன்மேல் அவர்கள் கல்லெறிந்து, தலையிற் காயப்படுத்தி, கன ஈனத்தோடே யவனை யனுப்பினார்கள்.

௫. பின்பு அவன் வேறொருவனை யனுப்பினான். அவனை யவர்கள் கொலைசெய்தார்கள். (அப்படி யவனால் அனுப்பப்பட்ட) அநேகரிற் சிலரையடித்து, சிலரைக்கொலைசெய்தார்கள்.

௬. அவனுக்குப்பிரியமான ஒரேகுமாரன் இருந்தான். ஆதலால், அவன் தன் குமாரனுக்கஞ்சுவார்களென்றெண்ணிக்கடைசியிலே அவனையும், அவர்களிடத்தில் அனுப்பினான்.

௭. அந்தத்தோட்டக்காரர் (அவனைக்கண்டு) இவன் சுதந்தரவாளி, இவனுடைய சுதந்தரம் நமது வசமாகும்படிக்கு நாம் இவனைக்கொலைசெய்யக்கடவோம் வாருங்களென்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டு,

௮. பின்பு அவனைப்பிடித்துக்கொலைசெய்து, திராட்சத்தோட்டத்திற்குப்புறம்பே தள்ளினார்கள்.

௯. ஆனபடியினாலே அந்தத்தோட்டத்தின் எசமான் என்னசெய்வான்! அவன் வந்து, அந்தத்தோட்டக்காரரை யழித்துத் தோட்டத்தை மற்றவர்களுக்கு ஒப்புக்கொடுப்பான் அல்லவா!

௰. * வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத்தலையான கல்லாயிற்று. * சங். ௱௰௮: ௨௨.

௰௧. * அது பராபரனாலே யாயிற்று. அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாய் இருக்கின்றதென்கிற வேதவாக்கியத்தை நீங்கள் வாசிக்கவில்லையாவென்றார். * சங். ௱௰௮: ௨௩.

௰௨. அப்பொழுது அவர்கள் தங்களைக்குறித்து, இந்த உவமையைச்சொன்னார் என்றறிந்தபடியால், அவரைப்பிடிக்க மனதாய் இருந்தார்கள். * ஆனாலுஞ் சனங்களுக்குப்பயந்து அவரை விட்டுப்போனார்கள். * மத். ௰௪: ௫.

௰௩. * பின்பு அவர்கள் வசனங்களினாலே அவரை யகப்படுத்தும்படிக்கு, சில பரிசேயரையும், ஏரோதேயின் மனிதரையும் அவரிடத்தில் அனுப்பினார்கள். * மத். ௨௨: ௰௫—௨௨. லூக். ௨௰: ௨௰—௨௬.

௰௪. அவர்கள் வந்து அவரை நோக்கி, போதகரே! நீர் மனிதனுடைய முகத்தைப் பாராமல், பராபரனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய் உபதேசிக்கிறவராய் இருக்கிறீர். ஆகையால், நீர் சத்தியமுடையவருமாய், ஒருவரையுங் குறித்து, கவையில்லாதவருமாய்இருக்கிறீரென்று அறிந்திருக்கிறோம். இராயனுக்கு வரிப்பணத்தைக் கொடுக்கிறது நியாயமோ இல்லையோ?

௰௫. நாம் கொடுக்கவேண்டுமோ! கொடாமல் இருக்கவேண்டுமோ? என்றார்கள். அவர் அவர்களுடைய மாயத்தையறிந்து, நீங்கள் என்னை ஏன் சோதிக்கிறீர்கள்? நான் பார்க்கும்படிக்கு, ஒரு தெநாரியு எனக்குக் கொண்டுவாருங்கள் என்றார்.

௰௬. அவர்கள் கொண்டுவந்தார்கள். அப்பொழுது அவர் சொன்னது, இந்தச்சொரூபமும், மேலெழுத்தும் யாருடையவைகள் என்றார். அதற்கு அவர்கள் இராயனுடையவைகள் என்றார்கள்.

௰௭. இயேசுவானவர் சொன்னது, * இராயனுடைய வைகளை இராயனுக்கும், பராபரனுடையவைகளைப்பராபரனுக்குஞ் செலுத்துங்கள் என்று சொன்னார். அப்பொழுது அவரைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள். * உரோம ௰௩: ௭.

௰௮. பின்பு உயிரோடெழுந்திருக்கும் மறுமையில்லையென்றுசொல்லுகிற * சதுசேயரென்பவர்கள் அவரிடத்தில் வந்து, * மத். ௨௨: ௨௩—௩௩. லூக். ௨௰: ௨௭—௪௰. அப். ௨௩: ௮.

௰௯. போதகரே! * ஒருவன் பிள்ளைகளில்லாமல் தன் மனைவியைவிட்டிறந்தால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம்பண்ணி, அவனுக்குச்சந்ததியுண்டாக்கவேண்டுமென்று, நமக்கு மோசே கட்டளை யிட்டிருக்கிறாரே. * ௫ மோ. ௨௫: ௫.

௨௰. ஓரிடத்தில் ஏழுபேர் சகோதரரிருந்தார்கள். அவர்களில் மூத்தவன் ஒருபெண்ணை விவாகம்பண்ணி, பின்பு சந்ததியில்லாமல் இறந்துபோனான்.

௨௧. அப்பொழுது இரண்டாஞ் சகோதரன் அவளை விவாகம்பண்ணி, சந்ததியில்லாமல் இறந்து போனான். மூன்றாஞ்சகோதரனும் அப்படிப்போனான்.

௨௨. ஏழுபேரும் அவளை விவாகம்பண்ணிச் சந்ததியில்லாமற் போனார்கள். எல்லாருக்கும் பின்பு அந்தப்பெண்ணும் இறந்து போனாள்.

௨௩. ஆகையால், அவர்கள் உயிரோடெழுந்திருக்குங் காலத்திலே ஏழுபேருக்கும் மனைவியாய் இருந்த அவள் அவர்களில் எவ

னுக்கு மனைவியாயிருப்பாளென்று கேட்டார்கள்.

௨௪. அவர்களுடனே இயேசுவானவர் சொன்னதாவது; நீங்கள் வேதவாக்கியங்களையும், பராபரனுடைய வல்லமையையும் அறியாமல் இருக்கிறபடியாலல்லவா வஞ்சிக்கப்பட்டிருக்கிறீர்கள்.

௨௫. மரித்தவர்கள் உயிரோடெழுந்திருக்கும்பொழுது பெண்கொள்வதும், கொடுப்பதும் இராது. அவர்கள் பரலோகத்திலுள்ள தூதரைப்போல் இருப்பார்களே.

௨௬. மரித்தோர் எழுப்பப்படுவதைக்குறித்து, நாம் ஆபிரகாமினுடைய தேவனுமாய், ஈசாக்கினுடைய தேவனுமாய், யாக்கோபினுடைய தேவனுமாய் இருக்கிறவரென்று செடியிலிருந்து பராபரன் மோசேயுடனே சொல்லிய வாக்கியம் மோசேயின் ஆகமத்திலே * எழுதியிருக்கின்றதே. அதை நீங்கள் வாசிக்கவில்லையா! * ௨ மோ. ௩: ௬.

௨௭. அவர் மரித்தவர்களுடைய தேவனாயிராமல், சீவனுள்ளோருடைய தேவனாயிருக்கிறார். ஆகையால், நீங்கள் மிகவும் வஞ்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்றார்.

௨௮. * அவர்கள் அப்படிப்பேசிக்கொண்டதை வேதபாரகரில் ஒருவன் கேட்டு, அவர் அவர்களுக்கு நன்றாய் மாறுத்தரஞ் சொன்னார் என்றறிந்து, அவரைநோக்கி, கற்பனைகளில் எது பிரதானமானதென்று கேட்டான். * மத். ௨௨: ௩௫—௪௰.

௨௯. அதற்கவர் சொன்னது, கற்பனைகளிற் பிரதானமான கற்பனை யென்னவென்றால், * இஸ்ரவேலே! கேள். உன்தேவனாகிய பராபரன் ஒருவரே பராபரன். * ௫ மோ. ௬: ௪, ௫.

௩௰. உன்தேவனாகிய பராபரனிடத்தில் நீ உன்முழு இருதயத்தோடும், உன்முழு ஆத்துமாவோடும், உன்முழுமனதோடும், உன் பெலன்கள் எல்லாவற்றோடும் அன்பு கூர்வாயாகவென்பதே பிரதானமான கற்பனை.

௩௧. இரண்டாங் கற்பனை * யதற் கொப்பாய் இருக்கின்றது. என்னவெனில், உன்னிடத்தில் அன்பு கூருகிறதுபோலப்பிறனிடத்திலும் அன்புகூர்வாயாகவென்பதே. இவைகளிலும் வேறொருபெரிதான கற்பனையில்லை என்றார். * ௩ மோ. ௰௯: ௰௮.

௩௨. வேதபாரகன் சொன்னது, நல்லது போதகரே! நீர் சத்தியத்தின்படி சொன்னீர். ஒரே தேவனுண்டு. அவரைத்தவிர வேறொரு தேவன் இல்லை.

௩௩. அல்லாமலுந் தகனபலி முதலான பலிகளிலும் முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழுப் பலத்தோடும் அவரிடத்தில் அன்புகூர்வதும், தன்மேல் அன்பு கூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூர்வதுமே மேன்மையாய் இருக்கின்றனவென்றான்.

௩௪. அவன் புத்தியோடே பேசினதை இயேசுவானவர் கண்டு, நீ பராபரனுடைய இராச்சியத்திற்குத்தூரமானவன் அல்லவென்று, அவனுடனே சொன்னார். பின்பு ஒருவனும் அவரிடத்தில் வினாவத்துணியவில்லை.

௩௫. இயேசுவானவர் தேவாலயத்திலே உபதேசம் பண்ணுகையில், அவர் அவர்களை நோக்கி, * தாவீது தானே பரிசுத்த ஆவியினாலே சொன்னது, † பராபரன் என் கர்த்தாவை நோக்கி, உம்முடைய சத்துருக்களை நான் உமது பாதப்படியாக்குமளவும், நீர் என்னுடைய வலதுபாரிசத்திலே யுளுக்காருமென்றார் என்பதே. * மத். ௨௨: ௪௪. லூக். ௨௰: ௪௨, ௪௩. † சங்கீ. ௱௰: ௧.

௩௬. * ஆகையாற் கிறிஸ்து தாவீதின் குமாரன் என்று வேதபாரகர் எப்படிச் சொல்லுகிறார்கள். * லூக். ௨௰: ௪௧.

௩௭. தாவீது தானே அவரைக்கர்த்தாவென்றுசொல்லியிருக்க, அவர் எப்படி அவனுடைய குமாரனாய் இருக்கிறாரென்று சொன்னார். அநேக சனங்கள் அவருடைய உபதேசத்தை இன்பமாய்க்கேட்டார்கள்.

௩௮. * அன்றியும், அவர் உபதேசம்பண்ணுகையில், அவர்களுடனே சொன்னது, நீளமான அங்கிகளைத்தரித்திருந்து நடக்கவும், சந்தைகளிலே வாழ்த்துதல் அடையவும், * மத். ௨௩: ௧—௩௩. லூக். ௨௰: ௪௫—௪௭.

௩௯. * செப ஆலயங்களில் முதல் ஆசனங்களில் இருக்கவும், போசனபந்திகளில் முதல் இடங்களில் இருக்கவும் விரும்பி விஸ்தாரமாய், செபமந்திரங்களைச்சொல்லுகிறோமென்றுசொல்லி, கைம்பெண்களுடைய ஆஸ்திகளைப்பட்சித்துவருகிற வேதபாரகருக்கு இடங்கொடாமல் எச்சரிக்கையாய் இருங்கள். * லூக். ௰௧: ௪௩—௫௨.

௪௰. அவர்கள் அதிக தண்டிப்பை அடைவார்கள் என்றார்.

௪௧. அல்லாமலும் * இயேசுவானவர் பொக்கிசப்பெட்டிக்கெதிரே உளுக்காந்தபொழுது, அதிலே சனங்கள் பணத்தைப் போடுகிறதைப்பார்த்தார். அநேக ஐசுவரியவான்கள் மிகவும் போட்டார்கள். * லூக். ௨௧: ௧—௪.

௪௨. எளியவளான ஒரு கைம்பெண்ணும் வந்து, கோதிரான்தேசென்னும் இரண்டு காசைப்போட்டாள்.

௪௩. அப்பொழுது அவர் தம்முடைய சீஷர்களை அழைத்து, இந்தப்பொக்கிசப் பெட்டியிலே போட்டவர்கள் எல்லாரிலும் * இவ்வேழைக்கைம்பெண் அதிகமாய்ப்

போட்டாளென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன். * ௨ கொரி. ௮: ௰௨.

௪௪. என்னத்தினாலென்றால், அவர்கள் எல்லாருந் தங்களுக்குண்டான சம்பூரணத்திற் சில போட்டார்கள். இவள் தன் எளிமையில் தன் சீவனத்திற்குண்டான யாவையும் போட்டாள் என்றார்.

௰௩ அதிகாரம்.

[(௧) கிறிஸ்து தேவாலயத்தின் அழிவையும், (௯) சுவிசேஷத்தினிமித்தமாய் உண்டாகும் துன்பத்தையும், (௰) சுவிசேஷம் சகல சாதிகளுக்கும், பிரசங்கிக்கப்படுவதையும், (௰௪) யூதர்களுக்குண்டாகும் உபத்திரவங்களையும், (௨௪) அவர் நியாயத் தீர்ப்புக்குவரும் விதத்தையும், (௩௨) அந்த நேரம் ஒருவருக்குந் தெரியாதிருக்கிறபடியால் மரணத்தின்வழியாய் எவனிடத்திலும் அவர் வரும்போது, அவர்கள் ஆயத்தமுள்ளவர்களாய் இருக்கும்படிக்கு எவனும் விழித்துச்செபம்பண்ண வேண்டுமென்பதையும் முன்னறிவித்தது.]

பின்பு * அவர் தேவாலயத்தை விட்டுப்புறப்படுகிறபொழுது அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி, போதகரே! இதோ இவைகள் எப்படிப்பட்ட கற்கள்? இது எப்படிக்கட்டப்பட்டிருக்கின்றதென்றான். *மத். ௨௪: ௧—௩௬. லூக். ௨௧: ௫—௩௩.

௨. அவனுடனே இயேசுவானவர் சொன்னது, இந்தப்பெரிய மாளிகையைப்பார்க்கிறாயா! * இதில் ஒரு கல்லின்மேலே மற்றொரு கல் வைக்கப்படுவதில்லை. எல்லாம் இடிக்கப்படுமென்றார். * லூக். ௰௯: ௪௪.

௩. பின்பு அவர் தேவாலயத்திற்கெதிராக ஒலீவமலையின்மேல் உளுக்காந்திருக்கையில் பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவுமாத்திரம் அவரை நோக்கி,

௪. இவைகள் எப்பொழுது நடக்கும்! இவைகள் எல்லாம் நிறைவேறுங் காலத்திலே என்ன அடையாளந் தோன்றும்! அதையெங்களுக்குச்சொல்லவேண்டுமென்று கேட்டார்கள்.

௫. அவர்களுக்கு மாறுத்தரமாக இயேசுவானவர் சொன்னது, அநேகர் தோன்றி என்னுடைய நாமத்தை யெடுத்து, நானே அவரென்று சொல்லி, அநேகரை வஞ்சனை செய்வார்கள்.

௬. ஆகையால், ஒருவனும் உங்களை வஞ்சனை செய்யாதபடிக்கு, எச்சரிக்கையாய் இருங்கள்.

௭. அல்லாமலும் நீங்கள் யுத்தங்களையும், யுத்தங்களுக்கேற்ற பேச்சுகளையுங் கேள்விப்படும்பொழுது கலக்கம் அடையாதிருங்கள்.

௮. அப்படி நடக்கவேண்டுமே. அப்பொழுது முடிவு உடனே வாராது. ஆகையால், ஒரு சனக்கூட்டம் மற்றொரு சனக்கூட்டத்திற்கும், ஒரு இராச்சியத்தார் மற்றொரு இராச்சியத்தாருக்கும் விரோதமாய் எழும்புவார்கள். பல இடங்களிலே பூமி யதிர்தல்களும், பஞ்சங்களும், கலகங்களுஞ் சம்பவிக்கும், இவைகள் வேதனைகளின் ஆரம்பமாய் இருக்கும்.

௯. அப்பொழுது நீங்கள்எச்சரிக்கையாய் இருக்கக்கடவீர்கள். என்னத்தினாலெனில், என்னிமித்தம் உங்களைப்பெரிய சங்கத்தாருக்கு ஒப்புக்கொடுப்பார்கள். செப ஆலயங்களிலே நீங்கள் அடிக்கப்பட்டு, துரைகளுக்கும், இராசாக்களுக்குஞ் சாட்சியாக அவர்களுக்குமுன்பாக நிறுத்தப்படுவீர்கள்.

௰. அல்லாமலும் முன்பு சுவிசேஷமானது, உலகத்தார் எல்லாருக்கும் பிரசங்கம் பண்ணப்படவேண்டும்.

௰௧. * அப்படி ஒப்புக்கொடுக்கும்படிக்கு உங்களைக்கொண்டுபோகும்பொழுது, நீங்கள் என்ன பேசுவோமென்று முன் கவலைப்படாமலும், சிந்தித்துக்கொள்ளாமலும் இருங்கள். நீங்களல்ல, பரிசுத்த ஆவியே பேசுகிறவராகையால், அந்நேரத்திலே உங்களுக்கு அளிக்கப்படுவதையே பேசக்கடவீர்கள். * மத்தே. ௰: ௰௯.

௰௨. * அன்றியும் ஒருவன் தன் சகோதரனையும், தகப்பன் தன் பிள்ளையையும் மரணத்திற் கொப்புக்கொடுப்பார்கள். பிள்ளைகளுந் தங்களைப்பெற்றவர்களுக்கு விரோதமாய் எழும்பி, அவர்கள் மரணம் அடையும்படி செய்விப்பார்கள். * மிகா. ௭: ௬.

௰௩. நீங்களும் என் நாமத்தினிமித்தம் யாவராலும் பகைக்கப்படுவீர்கள். எப்படியும் முடிவுவரைக்கும் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான்.

௰௪. * மேலும் பாழாக்குகிற அருவருப்பைக்குறித்து, தானியேல் தீர்க்கதரிசி சொன்னாரே (அதை) வாசிக்கிறவன் சிந்தித்துக்கொள்ளக்கடவன். அது நிற்கப்படாத இடத்திலே நீங்கள் அதை நிற்கக்காணும்பொழுது யூதேயாவிலுள்ளவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவார்கள். * தானி. ௯: ௨௭.

௰௫. வீட்டின்மேல் இருப்பவன் தன் வீட்டிற்குள்ளே இறங்காமலும், அதிலிருந்து எதையாகிலும் எடுத்துக்கொண்டு போகும்படி பிரவேசியாமலும் போகக்கடவன்.

௰௬. அல்லாமலும் வயலில் இருப்பவன் தன் வஸ்திரத்தை யெடுத்துப்போகும்படிக்குப்பின்னிட்டுத்திரும்பாமற் போகக்கடவன்.

௰௭. ஐயோ! அந்நாள்களிற் கருப்பவதிகளுக்கும், முலை கொடுக்கிறவர்களுக்கும் உபத்திரவம் இருக்கும்.

௰௮. மேலும் பராபரன் உலகத்தை உண்டாக்கினதுமுதற்கொண்டு, இதுவரைக்குஞ் சம்பவியாததுமாய், இனிமேலுஞ் சம்பவியாததுமாய் இருக்கிற உபத்திரவமே அந்நாள்களில் இருக்கும்.

௰௯. ஆதலால் நீங்கள் ஓடிப்போகிறது மாரிக்காலத்திலே சம்பவியாதபடிக்கு வேண்டுதல் பண்ணக்கடவீர்கள்.

௨௰. அல்லாமலும் பராபரன் அந்நாள்களைக்குறையப்பண்ணாமலிருந்தால், ஒருவருந் தப்பிப்போவதில்லை. அவர் தெரிந்துகொண்டவர்களினிமித்தமே அந்நாள்களைக் குறைத்தார்.

௨௧. அன்றியுங் கள்ளக்கிறிஸ்துக்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பித்தெரிந்துகொள்ளப்பட்டவர்களை (வஞ்சிக்கக்) கூடுமானால், அவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அதிசயங்களையும் அற்புதங்களையுஞ் செய்வார்கள். * ௫ மோ. ௰௩: ௧, ௩. ௨ தெச. ௨: ௯, ௰௨.

௨௨. ஆகையால், அக்காலத்திலே ஒருவன் இதோ! இங்கே கிறிஸ்தென்றும், அதோ அங்கே கிறிஸ்தென்றும் உங்களுடனே சொன்னால் அவனை நீங்கள் நம்பவேண்டாம்.

௨௩. எச்சரிக்கையாகவே இருங்கள். இதோ! இவைகள் எல்லாவற்றையும் உங்களுக்குமுன் அறிவித்தேன்.

௨௪. அன்றியும் அக்காலத்திலே அந்த உபத்திரவத்திற்குப்பின்பு * சூரியன் இருள் அடையும், சந்திரன் பிரகாசங்கொடாமல் இருக்கும். * மத். ௨௪: ௨௯.

௨௫. * நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும். அல்லாமலும் வானத்திற் பலமுள்ளவைகள் எல்லாம் அசைக்கப்படும். * அறி. ௬: ௰௨.

௨௬. அப்பொழுது * மனிதனுடைய குமாரன் மிகுந்த வல்லமையோடும், மகிமையோடும், மேகங்களின்மேல் வருவார். அவரை அவர்கள் காண்பார்கள். தானி. ௭: ௰௩.

௨௭. அல்லாமலும் அவர் அப்பொழுது, தம்முடைய தூதரை அனுப்பி வானத்தின் எல்லைகளாகிய நாலுதிசைகளிலும் இருந்து தாம் தெரிந்துகொண்டவர்களைச்சேர்த்துக்கொள்வார்.

௨௮. * அத்திமரத்தினாலே உவமையாக ஒரு விசேஷத்தைக்கற்றுக்கொள்ளுங்கள். அதின் கிளை தளிராகி, இலைகளைக்கொடுக்கிறபொழுது, வசந்தகாலஞ்சமீபமாய் இருக்கிறதென்று அறிகிறீர்கள். * மத்தே. ௨௪: ௨௪—௩௪.

௨௯. அப்படிப்போல இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்பொழுது மிகவுஞ் சமீபமாய் இருக்கிறாரென்று அறியக்கடவீர்கள்.

௩௰. இவைகள் யாவுஞ் சம்பவிக்குமளவும் இந்தச்சந்ததி ஒழிந்துபோவதில்லையென்று மெய்யாய் உங்களுக்குச்சொல்லுகிறேன்.

௩௧. * வானமும், பூமியும் ஒழிந்துபோம். என் வசனங்களோ ஒழியாமல் இருக்கும். * மத். ௨௪: ௩௫.

௩௨. (அவைசம்பவிக்கும்) நாளையும், நாழிகையையும், பிதாவானவரே யன்றி மற்றொருவனும் அறியமாட்டான். பரமண்டலங்களிலுள்ள தூதரும், குமாரனும் அதை அறியார்கள்.

௩௩. * அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால், எச்சரிக்கையாய் விழித்துக்கொண்டு, செபம் பண்ணக்கடவீர்கள். * மத்தே. ௨௫: ௰—௨௪, ௩௭. லூக். ௨௧: ௩௪--௩௬.

௩௪. ஒரு மனிதன் தன் வீட்டைவிட்டுப்புறத்தேசத்திற்குப்போக மனதாய், தன் ஊழியக்காரருக்கு அதிகாரங் கொடுத்து, ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வேலையை நியமித்துக்காவற்காரன் விழித்துக்கொண்டிருக்கும்படிக்குக்கட்டளையிடுகிறதுபோல் இருக்கின்றது.

௩௫. ஆகையால் வீட்டெசமான் சாயந்தரம் பாதிராத்திரி சேவல் கூவும் நேரங் காலை இவைகளில் இன்னவேளையில் வருவார் என்று நீங்கள் அறியாதிருக்கிறபடியால்,

௩௬. அவர் சடுதியாய்வந்து உங்களைத்தூங்குகிறவர்கள் என்று கண்டுபிடியாதபடிக்கு விழித்துக்கொண்டிருங்கள்.

௩௭. விழித்துக்கொண்டிருங்கள் என்று நான் உங்களுக்குச்சொன்னதுபோல மற்றயாவருக்கும் அப்படியே சொல்லுகிறேன் என்றார்.

௰௪ அதிகாரம்.

[(௧) கிறிஸ்துவுக்குவிரோதமாகப்பண்ணப்பட்ட ஆலோசனை. (௩) ஒரு ஸ்திரீ தயிலத்தை அவர் சிரசின்மேல் வார்த்தது. (௰) யூதா தன் ஆண்டவரைப்பணத்துக்கு விற்றது. (௰௨) கிறிஸ்துத்தம்முடைய சீஷர்களில் ஒருவனாற் காட்டிக்கொடுக்கப்படுவதை முன் அறிவித்து, (௨௨) பஷா ஆயத்தம்பண்ணப்பட்டுப்புசிக்கப்பட்டபின்பு இராப்போசனத்தை ஏற்படுத்தி, (௨௬) சீஷர்கள் எல்லாருந் தம்மை விட்டோடிப்போவதையும், பேதுரு தம்மை மறுதலிப்பதையுங்குறித்து முன்னறிவித்தது. (௪௩) யூதா அவரை முத்தத்தினாற் காட்டிக்கொடுத்தது. (௪௬) அவர் தோட்டத்திற் பிடிக்கவும், (௫௩) அநியாயமாய்க்குற்றஞ் சார்த்தவும் யூதர்களுடைய ஆலோசனைச்சங்கத்தாரால் ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கவும், (௬௫) அவர்களால் நிந்திக்கவும், (௬௬) பேதுருவினால் மூன்றுவிசை மறுதலிக்கவுமுட்பட்டது.]

இரண்டு நாளுக்குப்பின்பு, புளியாத
அப்பஞ் சாப்பிடுகிற பஸ்காப்பண்
டிகை வந்தது. * பிரதான ஆசாரியரும்,
வேதபாரகரும் தந்திரமாய் அவரைப்பி
டித்துக்கொலை செய்யும்படிக்கு வகைதே
டிக்கொண்டு இருக்கையில், * மத். ௨௬:
௨—௫. லூக். ௨௨: ௧, ௨.

௨. அவர்கள் சொன்னது, பண்டிகையி
லே யப்படிச்செய்யக்கூடாது செய்தாற்
சனங்களுக்குள்ளே கலகமுண்டாகும் என்
ருர்கள்.

௩. அவர் பெத்தானி யூரிலே குஷ்டரோ
கியாய் இருந்த சீயோனுடைய வீட்டிற்
போசனபந்தி இருக்கையில், * ஒருஸ்தி
ரீயானவள் மிகவும் விலையேறப்பெற்ற க
ளங்கம் இல்லாத சுகந்த வருக்கத்தாற்
செய்த நருது என்னும் பரிமள தயில
முள்ள வெண்கற் பரணியை யெடுத்துவந்
து, அதைத்திறந்து, அதிலுள்ள தயிலத்
தை அவருடைய தலையின்மேல் வார்த்
தாள். * மத். ௨௬: ௭—௰௩. யோவா.
௰௨: ௩—௮.

௪. அப்பொழுது சிலர் தங்களுக்குள்ளே
விசனம் அடைந்து இந்தப்பரிமள தயி
லத்தை யேன் கெடுத்துப்போடுகிருள்.

௫ இதை முந்நூறு தேநாரியு வெள்ளிக்
கு மேலான கிரயத்திற்கு விற்று ஏழைக
ளுக்குக்கொடுக்கலாமே யென்று சொல்லி
அவளுக்கு விரோதமாய் மொறு மொறுத்
தார்கள்.

௬. அப்பொழுது இயேசுவானவர் சொன்
னது, இவளை விட்டுவிடுங்கள். ஏன் இவ
ளை வருத்தப்படுத்துகிறீர்கள்? இப்படி இ
வள் ஒரு நற்கிரியை யென்னிடத்திற் செய்
தாள்.

௭. ஏழைகள் எப்பொழுதும் உங்களுட
னே இருப்பார்கள். மனதிருந்தால், நீங்கள்
அவர்களுக்கு நன்மை செய்யலாம். நான்
எப்பொழுதும் உங்களிடத்தில் இரேன்.

௮. இவள் தன்னுலானமட்டுஞ் செய்தாள்.
என் சரீரத்தை யடக்கம்பண்ண எத்தன
மாக்கும்படிக்கு இவள் முந்தி யிதிற் சுகந்
தவருக்கமிட்டாள்.

௯. உலகம் முழுவதிலும் இந்தச்சுவிசே
ஷம் பிரசங்கிக்கப்படும் இடம் எங்கேயோ
அங்கே யிவளை நினைத்துக்கொள்வதற்கு
இவள் இப்பொழுது செய்ததுஞ் சொல்
லப்படுமென்று மெய்யாய் உங்களுக்குச்
சொல்லுகிறேன் என்ருர்.

௰. * பின்பு பன்னிருவரில் ஒருவனுகிய
யூதாஸ்காரியோத்தென்பவன் பிரதான ஆ
சாரியருக்கு அவரைக்காட்டிக்கொடுக்கும்
படிக்கு அவர்களிடத்திற் போனுன். *
மத். ௨௬: ௰௪—௰௬. லூக். ௨௨: ௩—௬.

௰௧. அவனுடைய வார்த்தைகளை அவர்
கள் கேட்டுச்சந்தோஷப்பட்டு அவனுக்
குப்பணங் கொடுக்கும்படிக்கு வாக்குத்
தத்தம் பண்ணினுர்கள். பின்பு அவன் அ
வரைக்காட்டிக்கொடுப்பதற்குத்தகுதியான
காலத்தைப்பார்த்துக்கொண்டிருந்தான்.

௰௨. * புளியாத அப்பங்களைச்சாப்பிடும்
நாள்களிற் பஸ்கா ஆட்டுக்குட்டி பலியி
டப்படும் முதல் நாளிலே அவருடைய சீ
ஷர்கள் அவரை நோக்கி, நீர் பஸ்கா
வைப்புசிக்கும்படிக்கு, நாங்கள் எங்கே
போய் எத்தினம்பண்ணச்சித்தயாய் இருக்
கிறீரென்று கேட்டார்கள். * மத். ௨௬:
௰௭—௰௯. லூக். ௨௨: ௭—௰௩.

௰௩. அப்பொழுது அவர் தம்முடைய சீ
ஷரில் இரண்டுபேரை அழைத்து, நீங்கள்
பட்டினத்திற்குப்போங்கள். அங்கே ஒரு
மனிதன் தண்ணீர்க்குடத்தை, சுமந்து
கொண்டு உங்களுக்கெதிராக வருவான்.
அவனுக்குப்பின் செல்லுங்கள்.

௰௪. அல்லாமலும் அவன் பிரவேசிக்கும்
வீட்டிலே நீங்களும் (பிரவேசித்து,) அதின்
எசமானனை நோக்கி, நான் என் சீஷர்க
ளுடனே பஸ்காவைப்போசனம்பண்ணத்
தக்கதான இடமெங்கே யென்று போத
கர் கேட்கிருரென்று சொல்லுங்கள்.

௰௫. அப்பொழுது அவன் கம்பளமுதலா
னவைகள் விரித்து எத்தினமாக்கப்பட்டி
ருக்கிற விஸ்தாரமான மேல்வீட்டிற் பெ
ரிய அறையை யுங்களுக்குக்காண்பிப்
பான். அங்கே நமக்காக எத்தினம் பண்
ணுங்களென்று சொல்லி அனுப்பினுர்.

௰௬. அந்தப்படி அவருடைய சீஷர்கள்
புறப்பட்டுப்பட்டினத்தில் வந்து, தங்களுக்
கு அவர் சொன்னபடியே கண்டு, பஸ்காப்
போசனத்தை யெத்தினம் பண்ணினுர்கள்.

௰௭. சாயந்தரமானபொழுது, அவர் பன்
னிருவருடனேகூட அவ்விடத்திற்குப்போ
னுர்.

௰௮. அவர்கள் பந்தியில் இருந்து சாப்பி
டுகையில், இயேசுவானவர் அவர்களை
நோக்கி, * என்னோடேகூடச்சாப்பிடுகிற
உங்களில் ஒருவனே யென்னைக்காட்டிக்
கொடுப்பானென்று, மெய்யாய் உங்களுக்
குச்சொல்லுகிறேன் என்ருர். * லூக். ௨௨:
௨௧—௨௩. யோவா. ௰௩: ௨௧—௩௰.

௰௯. அவர்கள் அதைக்கேட்டு, மிகுந்த
துக்கம் அடைந்து, நானோ நானோ வென்
று ஒவ்வொருவராய் அவரிடத்திற் கேட்
கத்தொடங்கினுர்கள்.

௨௰. அவர்களுக்கு மாறுத்தரமாக அவர்
சொன்னது, பன்னிருவரில் ஒருவனே யென்
னோடேகூடத்தாலத்திலே தோய்க்கிறவ
னே (அப்படிச்செய்வான்.)

௨௧. மனிதனுடைய குமாரன் தன்னைக் குறித்து எழுதியிருக்கிறபடி போகிறான். ஆனாலும் ஐயோ! மனிதனுடைய குமாரனைக் காட்டிக்கொடுப்பவன் எவனோ அவனுக்கு வேதனைவரும். அம்மனிதன் பிறவாமல் இருந்தானானால், அவனுக்கு நலமாய் இருக்குமென்றார்.

௨௨. * அல்லாமலும், அவர்கள் சாப்பிடுகிறபொழுது, இயேசுவானவர் அப்பத்தை யெடுத்து, ஆசீர்வாதஞ்செய்து, அதைப் பிட்டு அவர்களுக்குக்கொடுத்து, இதை யெடுத்துப்புசியுங்கள். இது என்னுடைய சரீரமாய் இருக்கின்றதென்று சொல்லி, * மத். ௨௬: ௨௬,௨௭. லூக். ௨௨: ௰௯,௨௰.

௨௩. பின்பு பாத்திரத்தையும் எடுத்து, தோத்திரம்பண்ணி, அதை யவர்களுக்குக்கொடுத்து, அவர்கள் எல்லாரும் அதிற் பானம் பண்ணினபின்பு, சொன்னதாவது;

௨௪. இது புதிய ஏற்பாட்டுக்கேற்றதாய் அநேகருக்காகச்சிந்தப்படும் என்னுடைய இரத்தமாய் இருக்கின்றது.

௨௫. பராபரனுடைய இராச்சியத்திலே நான் திராட்ச இரசத்தை நவமாய் உங்களுடனே பானம்பண்ணும் நாள்வரைக்கும் அதை நான் மறுபடியும் பானம் பண்ணுவதில்லையென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௨௬. * அவர்கள் தோத்திரம் பாடினபின்பு ஒலிவமலைக்குப்போனார்கள். * மத். ௨௬: ௩௰—௩௫. யோவா. ௰௮: ௧.

௨௭. அப்பொழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி, * மேய்ப்பனானவனை அடிப்பேன். அப்பொழுது ஆடுகள் சிதற அடிக்கப்படும் என்றெழுதியிருக்கிறபடியால், நீங்கள் எல்லாரும் இந்த இராத்திரியிலே யென்னைக்குறித்து வழுவுவீர்கள். * சக. ௰௩: ௭. யோவா. ௰௬: ௩௨.

௨௮. ஆனாலும், நான் உயிரோடிருக்கும்படி எழுப்பப்பட்டபின்பு உங்களுக்கு முன்னே கலிலேயா நாட்டுக்குப்போவேன் என்றார்.

௨௯. அதற்குப்பேதுரு, எல்லாரும் உம்மைக்குறித்து வழுவினாலும் நான் அப்படிச்செய்யமாட்டேன் என்றான்.

௩௰. அவனுடனே இயேசுவானவர் இந்த இராத்திரியிலே சேவல் இரண்டாந்தரங் கூவுமுன்னமே, நீ மூன்றுதரம், * என்னை மறுதலிப்பாய் என்று மெய்யாய் உனக்குச்சொல்லுகிறேன் என்றார். * லூக். ௨௨: ௩௪. யோவா. ௰௩: ௩௮.

௩௧. அதற்கவன் நான் உம்மோடே சாகவேண்டுவதாய் இருந்தாலும், உம்மை மறுதலிக்க மாட்டேனென்று அதிக உறுதியாய்ச்சொன்னான். மற்றவர்கள் எல்லாரும் அப்படியே சொன்னார்கள்.

௩௨. * பின்பு அவர்கள் கெத்சேமனேயென்னும் இடத்திற் சேர்ந்தார்கள். அங்கே அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி, நான் போய்ச்செபம் பண்ணுகையில், நீங்கள் இங்கே இருங்களென்று சொல்லி, * மத். ௨௬: ௩௬—௪௬. லூக். ௨௨: ௩௯—௪௬.

௩௩. பேதுருவையும், யாக்கோபையும், யோவானையும் கூட்டிக்கொண்டுபோய் மிகுந்த திகிலையும், வியாகுலத்தையும், அடையத்தொடங்கி,

௩௪. என் ஆத்துமா மரணவேதனைப்படுகின்றது. நீங்கள் இங்கே தங்கி விழித்திருங்களென்று சொல்லி,

௩௫. சற்றே தூரம்போய், தரையிலே விழுந்து, அந்தநேரந் தம்மைவிட்டு நீங்கக்கூடுமானால், அது நீங்கும்படிக்கு,

௩௬. அப்பா, பிதாவே, உம்மாலே யெல்லாமாகும். இந்தப்பாத்திரம் என்னை விட்டு நீங்கும்படிசெய்யும். இல்லாவிட்டால், * என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே யாகக்கடவதென்று செபம்பண்ணினார். * யோவா. ௬: ௩௮.

௩௭. பின்பு அவர் வந்து அவர்கள் தூங்குகிறதைக்கண்டு, பேதுருவுடனே சொன்னது, சீமோனே! தூங்குகிறாயா? ஒருமணிநேரம் நீ விழித்துக்கொள்ளக்கூடாதா?

௩௮. குற்றஞ் செய்வதற்கான காரணத்தில் நீங்கள் பிரவேசியாதபடிக்கு, விழித்துக்கொண்டு செபம்பண்ணுங்கள். ஆவியானது மனதுள்ளதுதான். மாம்சதேகம் பெலவீனமுள்ளதென்று சொல்லி,

௩௯. மறுபடியும் அப்புறம்போய், மேற்சொல்லிய விதமாய்ச்செபம்பண்ணினார்.

௪௰. பின்பு அவர் திரும்பி, அவர்களுடைய கண்கள் கனமான தூக்கத்தை யடைந்தபடியினாலே, மறுபடியும் அவர்கள் தூங்குகிறதைக்கண்டார். அல்லாமலும் அவர்கள் அவருக்குச்சொன்ன மாறுத்தரத்தையும் அவர்கள் தாமே யறியவில்லை.

௪௧. பின்பு அவர் மூன்றாந்தரம் அவர்களிடத்தில் வந்து, நீங்கள் பின்னுந் தூங்கி இளைப்பாறுகிறீர்களா? இதுபோதும். நேரம்வந்தது. இதோ, மனிதனுடைய குமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிறான்.

௪௨. அதோ, என்னைக்காட்டிக்கொடுக்கிறவன் சமீபிக்கிறான். எழுந்திருங்கள். நாம் போவோம் வாருங்கள் என்றார்.

௪௩. * உடனே அவர் பேசுகையில், பன்னிருவரில் ஒருவனாகிய யூதாவும், அவனோடேகூடப் பெரிய ஆசாரியராலும், வேதபாரகராலும், மூப்பராலும் அனுப்பப்பட்டு, கத்திகளையும், தடிகளையும் பிடித்துக்கொண்டு

வருகிற மிருந்த சனங்களுந் தோன்றினார்
கள். * மத். உசு: சஎ--ருசு. லூக். உஉ:
சஎ—ருஅ. யோவா, யஅ: உ--யச.

சச. அவரைக்காட்டிக்கொடுக்க வந்த
வன் எவனை முத்தஞ்செய்வேனோ அவனே
யவன். அவனை நீங்கள் பிடித்து, பத்திர
மாய்க்கொண்டுவரவேண்டுமென்று, அடை
யாளமாக மற்றவர்களுக்குச்சொல்லி இருந்
தான்.

சரு. ஆகையால், அவன் வந்தவுடனே,
அவரிடத்திற் சேர்ந்து, இரபீ, இரபீ, என்
று சொல்லி, அவரை முத்தஞ்செய்தான்.

சசு. அப்பொழுது அவர்கள் அவரைக்
கைப்பிடியாகப்பிடித்தார்கள்.

சஎ. உடனே சமீபமாய் நின்றவர்களில்
ஒருவன் கத்தியை யெடுத்து, பிரதான ஆ
சாரியனுடைய வேலைக்காரனைக்காதற
வெட்டினான்.

சஅ. அப்பொழுது இயேசுவானவர் அவர்
களை நோக்கி, ஒரு கள்ளனைப் (பிடிக்கிறதற்
குப்புறப்படுகிறது) போல நீங்கள் என்
னைப்பிடிக்கும்படிக்கு, கத்திகளோடும், தடி
களோடும் புறப்பட்டு வந்தீர்கள்.

சகூ. நாடோறும் நான் உங்களுக்குள்ளே
தேவாலயத்திலே உபதேசம் பண்ணினேன்
அப்பொழுது நீங்கள் என்னைப்பிடிக்க வில்
லை. ஆனாலும், வேத வாக்கியங்கள் நிறை
வேற வேண்டும் என்று சொன்னார்.

ருய. உடனே (சிஷர்) எல்லாரும் அவரை
விட்டு ஓடிப்போனார்கள்.

ருக. ஒரு வாலிபன் ஒரு வஸ்திரத்தை
மாத்திரந் தன்மேற் போர்த்துக்கொண்டு,
அவருக்குப்பின்சென்றான். அவனைச்சேவ
கர் பிடித்தார்கள்.

ருஉ. அப்பொழுது அவன் தன் வஸ்திரத்
தை விட்டு, நிருவாணமாய் அவர்களைவிட்டு
ஓடிப்போனான்.

ருங. * இயேசுவானவரை அவர்கள் பிர
தான ஆசாரியனிடத்திற்குக்கொண்டுபோ
னார்கள். அங்கே ஆசாரியர் எல்லாரும், மூப்
பரும், வேதபாரகரும் கூடிவந்தார்கள்.
* மத். உசு: ருஎ. யோவா. யஅ: யரு—உஎ.

ருச. பேதுரு தூரமாக அவருக்குப்பின்
சென்று, பிரதான ஆசாரியனுடைய மாளி
கையின் பிரகாரத்தில் வந்து, அங்கே ஊழி
யக்காரருடனே, நெருப்பின் அருகே உருக்
கார்ந்து அனல் காய்ந்துகொண்டிருந்தான்.

ருரு. அந்தருணத்திலே பிரதான ஆசாரிய
ரும், மற்றப்பெரிய சங்கத்தார் எல்லாரும்
இயேசுவானவரைக்கொலைசெய்யும் பொ
ருட்டாய் அவருக்கு விரோதமாய்ச்சாட்சி
களைத்தேடினார்கள்.

ருசு. அகப்படவில்லை. அநேகர் அவருக்கு
விரோதமாய்ப்பொய்ச்சாட்சி சொல்லியும்
அந்தச்சாட்சிகள் ஒவ்வ இல்லை.

ருஎ. அப்பொழுது சிலர் எழுந்து, இவன்
* கையினாற் செய்யப்பட்ட இந்தத்தேவா
லயத்தை நான் இடித்து, பின்பு மூன்று நா
ளுக்குள்ளே கையில்லாமல் வேறொன்றைக்
கட்டுவேனென்று சொல்லக்கேட்டோமென்
று, * யோவா. உ: யகூ—உக.

ருஅ. அவருக்கு விரோதமாகப்பொய்ச்
சாட்சி சொன்னார்கள்.

ருகூ. அப்படியும் அவர்களுடைய சாட்சி
ஒவ்வாமல் இருந்தது.

சுய. பின்பு பிரதான ஆசாரியன் நடுவிலே
எழுந்து, இயேசுவானவரை நோக்கி, நீ மா
றுத்தரஞ் சொல்லுகிறதில்லையா? இவர்கள்
உனக்கு விரோதமாய் என்ன சாட்சி சொல்
லுகிறார்கள் என்று கேட்டான்?

சுக. அவர் * மாறுத்தரமாக ஒன்றும்
பேசாமல் இருந்தார். பிரதான ஆசாரியன்
மறுபடியும் அவரை நோக்கி, தோத்திரஞ்
செய்யப்படத்தக்கவருடைய குமாரனாகிய
கிறிஸ்து நீதானோவென்று கேட்டான்?
* ஏசா. ருங: எ.

சுஉ. இயேசுவானவர் சொன்னது, அவர்
நான்தான். * அல்லாமலும் மனிதனுடைய
குமாரன் சர்வ வல்லமையுள்ளவருடைய வ
லது பாரிசத்திலே உருக்காரவும், வானத்
தின் மேகங்களின்மேல் வரவுங் காண்பீர்கள்
என்றார். * மத். உச: கூய.

சுங. அப்பொழுது பிரதான ஆசாரியன்
தன் வஸ்திரத்தைக்கிழித்து,

சுச. வேறு சாட்சி நமக்கு வேண்டுமா?
இத்தூஷணத்தைக்கேட்டீர்களே. உங்க
ளுக்கு எப்படித்தோன்றுகின்றதென்றான்.
அவர்கள் எல்லாரும் அவன் மரண ஆக்கி
னைக்குப்பாத்திரனென்று தீர்மானம் பண்
ணினார்கள்.

சுரு. அப்பொழுது சிலர் அவர்மேலே துப்
பி, அவருடைய முகத்தைமூடி, கையினாலே
யடித்து, நீ தீர்க்கதரிசனஞ் சொல்லென்
று அவருடனே சொல்லத்தொடங்கினார்கள்.
அல்லாமலும், ஊழியக்காரர் அவரைக்கன்
னத்தில் அடித்தார்கள்.

சுசு. அந்தருணத்திலே பேதுரு மாளிகை
யின் பிரகாரத்திற் கீழே இருக்கிறபொழுது
பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரிக
ளில் ஒருத்தி வந்து,

சுஎ. அனல் காய்ந்துகொண்டிருக்கிற பே
துருவைக்கண்டு, அவனை யுற்றுப்பார்த்து,
நீயும் நாசரேத்தூராகிய இயேசுவுடனே
இருந்தாயே என்றாள்.

சுஅ. அதற்கவன் சொன்னது, (அவரை)
அறியமாட்டேன். நீ சொல்லுகிறதையும்
நான் அறியேன் என்று மறுதலித்து, பின்பு
வெளியிலேயுள்ள மண்டபத்திற்குப்போ
னான். அப்பொழுது சேவல் கூவிற்று.

சுகூ. பின்பு வேலைக்காரி அவனை மறுபடி-

யும் பார்த்து, சமீபமாய் நின்றவர்களை நோக்கி, இவன் அவர்களில் ஒருவன் என்றாள். அவன் மறுபடியும் மறுதலித்தான்.

௭௰. சற்று நேரத்திற்குப்பின்பு, அங்கே நின்றவர்கள் மறுபடியும் பேதுருவை நோக்கி, நீ மெய்யாய் அவர்களில் ஒருவனாய் இருக்கிறாய். நீ கலிலேயா நாட்டான்தான். உன் பேச்சு அதைக்காண்பிக்கின்றது என்றார்கள்.

௭௧. அதற்கவன் நீங்கள் சொல்லுகிற மனிதனை நான் அறியமாட்டேன் என்று சொல்லி, சபிக்கவும், ஆணையிடவுந் தொடங்கினான்.

௭௨. உடனே சேவல் இரண்டாந்தரங் கூவிற்று. அப்பொழுது, சேவல் இரண்டாந்தரங் கூவுமுன்னமே, நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று தன்னுடனே இயேசுவானவர் சொன்ன வசனத்தைப் பேதுரு நினைத்து விலகிப்போய் அழுது கொண்டான்.

௰௫ அதிகாரம்.

[(௧) இயேசு கட்டுண்டு, பிலாத்துக்கு முன்பாகக்கொண்டுபோகப்பட்டு, குற்றஞ் சாற்றப்பட்டது. (௰௫) பிரசைகளுடைய கூக்குரலின் நிமித்தமாய், கொலைபாதகனாகிய பறபாசு விடுதலைபெற இயேசு சிலுவையில் அறையப்படும்படிக்கு ஒப்புவிக்கப்பட்டது. (௰௭) அவர் முள்முடி தரிப்பிக்கவும், (௰௯) துப்பவும், பரியாசம் பண்ணவும் உட்பட்டது. (௨௧) சிலுவை சுமப்பதில் அவர் சோர்வடைந்தது. (௨௭) இரண்டு கள்ளர்களின் நடுவிலே தொங்கப்பட்டது. (௨௯) யூதர்களுடைய பெருமையுள்ள நிந்தைகளைச்சகித்தது. (௩௯) அவர் தேவ குமாரன் என்று சேர்வைக்காரனால் அறிக்கை இடப்பட்டு, (௪௫) மேன்மையாய் அடக்கம் பண்ணப்பட்டது.]

* அதிகாலையிலே பிரதான ஆசாரியரும், மூப்பரும், வேதபாரகரும், மற்றப்பெரிய சங்கத்தார் யாவரும் ஆலோசனை பண்ணிக்கொண்ட பின்பு, அவர்கள் அவரைக்கட்டிக்கொண்டுபோய், பிலாத்துத்துரைக்கு ஒப்புக்கொடுத்தார்கள். * மத். ௨௭: ௧, ௨, ௰௧—௩௰. லூக். ௨௩: ௧—௫. யோவா. ௰௮: ௨௮. ௰௯: ௧—௰௬.

௨. பிலாத்து அவரைநோக்கி, நீ யூதர்களுடைய இராசாவா என்று கேட்டான். அதற்கு அவர் நீர் (சரியாய்ச்) சொன்னீர் என்றார்.

௩. அல்லாமலும், பிரதான ஆசாரியர் அவர்மேல் அநேகங் குற்றங்களைச்சாற்றி வருகிறபொழுது,

௪. பிலாத்து மறுபடியும் அவரைநோக்கி, இதோ இவர்கள் உனக்கு விரோதமாக மிகுந்த சாட்சிகளைச்சொல்லுகிறார்களே அதற்கு நீ ஒன்றையுஞ் சொல்லுகிறதில்லையா என்று கேட்டான்?

௫. இயேசுவானவர் பிலாத்துத்தானே ஆச்சரியப்படத்தக்கதாக ஒன்றையுஞ் சொல்லவில்லை.

௬. பண்டிகைதோறும் அவர்கள் கேட்டுக்கொள்ளும் பாதகன் எவனோ அவனை அவர்களுக்காக விடுதலையாக்குகிறது வழக்கமாய் இருந்தது.

௭. கலகம்பண்ணி, கலகத்திலே கொலை செய்து, பின்பு கட்டப்பட்டவர்களில் ஒருவனாகிய பறபாசென்பவன் இருந்தான்.

௮. ஆதலால், வழக்கத்தின்படி தங்களுக்குப்பிலாத்துச்செய்யவேண்டும் என்று, சனங்கள் கூப்பிட்டுக்கேட்டுக்கொள்ளத்தொடங்கினார்கள்.

௯. அப்பொழுது பிலாத்து, அவர்களை நோக்கி, நான் யூதர்களுடைய இராசனை உங்களுக்காக விடுதலையாக்க விருப்பம் உண்டாவென்றான்.

௰. பிரதான ஆசாரியர் பொறாமையினாலே அவரை யொப்புக்கொடுத்ததை யவன் அறிந்தபடியால் அப்படிக்கேட்டான்.

௰௧. அப்பொழுது பிரதான ஆசாரியர் பறபாசைத்தங்களுக்காக விடுதலையாக்கும்படிக்குக்கேட்டுக்கொள்ள வேண்டும் என்று சனங்களை யேவினார்கள்.

௰௨. மறுபடியும் பிலாத்து, அவர்களை நோக்கி, யூதர்களுடைய இராசாவென்று நீங்கள் சொல்லுகிறவனை நான் என்னசெய்ய விரும்புகிறீர்கள் என்றான்.

௰௩. அவனைச்சிலுவைமரத்திலே யறைய வேண்டும் என்று மறுபடியுங் கூப்பிட்டார்கள்.

௰௪. அதற்கு, பிலாத்துச்சொன்னது, ஏன்! இவன் என்னதீமை செய்தான் என்றான். அதற்கு அவர்கள் இவனைச்சிலுவைமரத்திலே யறையவேண்டும் என்று அதிகமாய்க் கூப்பிட்டார்கள்.

௰௫. அப்பொழுது பிலாத்து, சனங்களைச் சமாதானப்படுத்த மனதாய்ப்பறபாசை விடுதலையாக்கி, இயேசுவை வாரினால் அடிப்பித்து, சிலுவைமரத்திலே யறையும்படிக்கு அவரை யொப்புக்கொடுத்தான்.

௰௬. உடனே போர்ச்சேவகர் அவரை நியாயத்தலமாகிய மண்டபத்திற்குள்ளே கொண்டுபோய், போர்ச்சேவகராகிய கூட்டம் எல்லாங் கூடி வரவழைத்து,

௰௭. பின்பு சிவப்பான அங்கியை யவருக்கு உடுத்தி, முள்ளுக்களால் ஒரு முடியைப்பின்னி அவர்மேல் வைத்து,

௰௮. யூதருடைய இராசாவே! நீர் வாழ்க வென்று அவரை வாழ்த்துதல் செய்து,

௰௯. பின்பு ஒரு கோலினாலே அவருடைய

தலையில் அடித்து, அவர்மேலே துப்பி, முழங்கால் படியிட்டு அவரை வணங்கினார்கள்.

௨௰. * அப்படி யவர்கள் அவரை யிழிவு செய்த பின்பு, அந்தச்சிவப்பான அங்கியை அவரில் இருந்து களைந்து, அவருடைய வஸ்திரங்களை யவருக்குடுத்தி, அவரைச்சிலுவை மரத்தில் அறையும்படிக்குக்கொண்டுபோனார்கள். * மத். ௨௭: ௩௧—௪௯. லூக். ௨௩: ௨௬—௪௫. யோவா. ௰௯: ௰௭—௨௯.

௨௧. வழியிலே அலேக்சந்தர், உருப்பு என்பவர்களுடைய தகப்பனாகிய கிரேனே யூரானான சீமோன் வயல் நிலத்தில் இருந்து வருகிறபொழுது, அவனைப்பலவந்தத்தினாலே (இழுத்து) அவருடைய சிலுவைமரத்தை எடுத்துக்கொண்டுபோகும்படி செய்து,

௨௨. பின்பு அவரைத்தலையோட்டிடம் என்று அருத்தங்கொள்ளும் கொலுகத்தா என்னும் இடத்திற்குக்கொண்டுபோய்,

௨௩. கசப்புக்கலந்த திராட்ச இரசத்தைக் குடிக்கும்படி யவருக்குக்கொடுத்தார்கள். அவர் அதை அநுபவிக்கவில்லை.

௨௪. அல்லாமலும், அவரைச்சிலுவைமரத்திலே யறைந்த பின்பு அவர்கள் அவருடைய * வஸ்திரங்களைப்பங்காகவைத்து, ஒவ்வொருவன் ஒவ்வொருபங்கை யெடுத்துக்கொள்ளும்படிக்கு அவைகளைக்குறித்துச்சீட்டுப்போட்டார்கள். * சங். ௨௨: ௰௮.

௨௫. அவரைச்சிலுவைமரத்திலே யறைந்தபொழுது, மூன்றும் மணிநேரமாயிற்று.

௨௬. அவருடைய மரணத்தின் காரணத்தை யறிவிக்கும்படிக்கு, இவன் யூதர்களுடைய இராசாவென்று எழுதி அதைச் (சிலுவையின்மேற்) கட்டினார்கள்.

௨௭. அல்லாமலும், அவருடைய வலதுபக்கத்தில் ஒருகள்ளனும், அவருடைய இடதுபக்கத்தில் ஒரு கள்ளனுமாக இரண்டு கள்ளரை அவருடனே கூடச்சிலுவைமரங்களில் அறைந்தார்கள்.

௨௮. அதினாலே யவர் * அக்கிரமக்காரரோடே யெண்ணப்படுவார் என்று சொல்லிய வேதவாக்கியம் நிறைவேறிற்று. * ஏசா. ௫௩: ௰௨.

௨௯. அல்லாமலும், அவ்வழியாய் நடந்து வருகிறபேர்கள் தங்கள் தலைகளை யசைத்து ஆ, * தேவாலயத்தை யிடித்து மூன்றுநாளுக்குள்ளே யதைக்கட்டுகிறவனே, * ௰௪: ௫௮. யோவா. ௨: ௰௯—௨௧.

௩௰. உன்னை இரட்சித்துக்கொண்டு, சிலுவையில் இருந்திறங்கிவாவென்று சொல்லி, அவரைத்தூஷணித்தார்கள்.

௩௧. அப்படிப்போலப்பிரதான ஆசாரியரும், வேதபாரகரும் ஒருவரை யொருவர் நோக்கி, மற்றவர்களை யிவன் இரட்சித்தான். தன்னைத்தானே இரட்சிக்கத்திராணியில்லை.

௩௨. நாம் கண்டு விசுவாசிக்கும்படிக்குக் கிறிஸ்துவுமாய், இஸ்ரவேலருடைய இராசாவுமாய் இருக்கிறவன் இப்பொழுது சிலுவையில் இருந்திறங்கிவரக்கடவன் என்று பரியாசமாகச்சொன்னார்கள். அவருடனே கூடச்சிலுவைமரங்களில் அறையப்பட்டபேர்களும் அவரை நிந்தித்தார்கள்.

௩௩. ஆறும் மணிநேரம்முதல் ஒன்பதாம் மணிநேரம்வரைக்குந் தேசமெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று.

௩௪. ஒன்பதாம் மணிநேரத்திலே இயேசுவானவர் எலோயி, எலோயி, லம்மா, சபக்தானி என்று மிகுந்த சத்தத்தோடு * கூப்பிட்டார். அதற்கு என்தேவனே! என் தேவனே! ஏன் நீரென்னைக்கைவிட்டீர் என்று அருத்தமாம். * சங். ௨௨: ௧.

௩௫. சமீபமாய் நின்றவர்களிற் சிலர் அதைக்கேட்டு இதோ, இவன் எலியாவை யழைக்கிறான் என்றார்கள்.

௩௬. ஒருவன் பொறுத்துக்கொள்ளுங்கள். இவனை யிறக்கும்படிக்கு எலியாவருவதைப் பார்ப்போம் என்று சொல்லி, ஒரு கடற்காளானைக் * காடியிலே தோய்த்து, அதை யொருகம்பின்மேற் பூட்டிச்சூவைக்கும்படி அவருக்குக்கொடுத்தான். * சங். ௬௯: ௨௧.

௩௭. * பின்பு இயேசுவானவர் மிகுந்த சத்தமிட்டுச்சீவனைவிட்டார். * மத். ௨௭: ௫௰—௫௬. லூக். ௨௩: ௪௬—௪௯. யோவா. ௰௯: ௩௰—௩௭.

௩௮. உடனே தேவாலயத்திலுள்ள திரைச்சீலை மேல்தொடங்கி, கீழ்வரைக்கும் இரண்டாகக்கிழிந்தது.

௩௯. அல்லாமலும், அவருக்கெதிரே நின்ற சேனைத்தலைவன் அவர் அப்படிப்பட்ட சத்தத்தோடே சீவனைவிட்டதைக்கண்டு, மெய்யாய் இந்த மனிதன் தேவகுமாரனாய் இருந்தான் என்றான்.

௪௰. ஸ்திரீகளுந் தூரத்திலிருந்து பார்த்தார்கள். அவர்களிற் கலிலேயா நாட்டிலே * யவருக்குப்பின்சென்று ஊழியஞ்செய்து வந்த மகுதல வூராளாகிய மரியாளும், சின்னயாக்கோபுக்கும், யோசேப்புக்குந் தாயாகிய மரியாளும், சாலோமே யென்பவளும், * லூக். ௮: ௨, ௩.

௪௧. அவருடனேகூட எருசலேமுக்கு வந்த மற்ற அநேக ஸ்திரீகளும்இருந்தார்கள்.

௪௨. ஓய்வுநாளுக்கு முந்தினநாள் எத்தினநாளானபடியினாலே சாயந்தரமான பொழுது,

௪௩. * அரிமத்தியா வூரானுமாய், கனம் பொருந்திய ஆலோசனைக்காரனுமாய், பராபரனுடைய இராச்சியத்தின் ஆளுகை வரக்காத்துக்கொள்ளுகிறவனுமாய் இருந்த

யோசேப்பு என்பவன் தயிரியங்கொண்டு, பிலாத்துவின் இடத்திற்குப்போய், இயேசுவினுடைய சரீரத்தைக்கேட்டுக்கொண்டான். * மத். ௨௭: ௫௭. லூக். ௨௩: ௫௰—௫௨. யோவா. ௰௯: ௩௮.

௪௪. அவர் அப்படிச்சீக்கிரமாய் மரணம் அடைந்ததைக்குறித்துப்பிலாத்து ஆச்சரியப்பட்டு, சேனைத்தலைவனை யழைப்பித்து, அவர் இறந்துபோய் எவ்வளவுகாலமாயிற்றென்று விசாரித்து,

௪௫. சேனைத்தலைவனாலே அறிந்துகொண்ட பின்பு, அந்தச்சரீரத்தை யோசேப்புக்கு ஒப்புக்கொடுத்தான்.

௪௬. அவன் போய், பட்டைவாங்கிக்கொண்டுவந்து, சரீரத்தை யிறக்கிப்பிடவையிலே சுற்றி, கல்மலையிலே வெட்டப்பட்ட கல்லறையிலே அதை வைத்து, அந்தக்கல்லறையின் திறப்பிலே ஒரு கல்லைப்புரட்டி வைத்தான்.

௪௭. அவரை வைக்கப்பட்ட இடத்தை மகுதல வூராளாகிய மரியாளும், யோசேப்பின் தாயாகிய மரியாளும் பார்த்தார்கள்.

௰௬ அதிகாரம்.

[(௧) ஒருதெய்வதூதன் கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலை மூன்று ஸ்திரீகளுக்கு அறிவித்தது. (௯) கிறிஸ்து நாமே மகுதலேனாளாகிய மரியாளுக்கும், (௰௨) கிராமத்துக்கு நடந்துபோகிற இரண்டுபேருக்கும், (௰௪) பின்பு அப்போஸ்தலர்களுக்கும் தரிசனையானது. (௰௫) அப்போஸ்தலர்களை உலகம் எங்கும் பிரசங்கிக்கும்படி அனுப்பினது. (௰௯) அவர் பரமண்டலத்துக்கு ஏறினது.]

ஓ*ய்வுநாளான பின்பு மகுதல வூராளாகிய மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சாலோமே யென்பவளும் அவருக்கு அபிஷேகம் பண்ணும்படிக்கு, சுகந்த வருக்கங்களை வாங்கிக்கொண்டு, * மத். ௨௮: ௧—௪. லூக். ௨௪: ௧—௪.

௨. ஓய்வுநாளுக்குப்பின், முதல் நாளின் அதிகாலையிலே சூரியன் உதயமாகிறபொழுது, கல்லறைக்குப்போனார்கள்.

௩. (போகையில்) அவர்கள் அந்தக்கல்லறையின் திறப்பிலே இருக்கிற கல்லை நமக்காக யாவன் தள்ளிப்போடுவான் என்று சொல்லி,

௪. பின்பு அண்ணாந்து பார்க்கிறபொழுது அந்தக்கல் மிகவும் பெரிதாய் இருந்தும், அது தள்ளப்பட்டதென்று கண்டார்கள்.

௫. கல்லறையிலே யவர்கள் பிரவேசித்தபொழுது, வலது பக்கத்திலே வெண்மையான அங்கியைத்தரித்து உளுக்காந்திருக்கிற ஒரு வாலிபனைக்கண்டு மிகவும் பயந்தார்கள்.

௬. * அவன் அவர்களுடனே சொன்னது, பயப்படாதிருங்கள். சிலுவையிலே அறையப்பட்ட நாசரேனனாகிய இயேசுவை நீங்கள் தேடுகிறீர்கள். அவர் எழுந்தார். அவர் இங்கே யில்லை. இதோ, அவரை வைக்கப்பட்ட இடம். * மத். ௨௮: ௫—௮. லூக். ௨௪: ௫—௭.

௭. ஆகையால், நீங்கள் அவருடைய சீஷர்கள் இடத்திற்கும், பேதுருவின் இடத்திற்கும்போய், உங்களுடனே யவர் சொன்னபடி, உங்களுக்கு முன்பாகக்கலிலேயாநாட்டுக்குப்போவார். அங்கே * யவரைக்காண்பீர்கள் என்று அவர்களுக்குச்சொல்லுங்கள் என்றான். * ௰௪: ௨௮.

௮. உடனே யவர்கள் புறப்பட்டுத்திகிலோடும், பிரமிப்போடுங் கல்லறையைவிட்டோடிப்போனார்கள். அவர்கள் பயப்பட்டபடியினாலே, ஒருவருக்கும் ஒன்றையுஞ் சொல்லவில்லை.

௯. ஓய்வுநாளுக்குப்பின்பு, முதல்நாளின் அதிகாலையில் அவர் எழுந்திருந்த பின்பு * முதலாவது மகுதல வூராளாகிய மரியாளுக்குக்காணப்பட்டார். * யோவா. ௨௰: ௰௪—௰௮.

௰. அவராலே ஏழுபேய்களில் நின்று நீக்கப்பட்டவள் அவளே அவள் புறப்பட்டுப்போய் அவருடனே யிருந்தவர்களுமாய்ப் புலம்பி அழுதுகொள்ளுகிறவர்களுமாய் இருந்த (சீஷர்களுக்கு) அறிவித்தாள்.

௰௧. அவர் உயிரடைந்து, அவளாலே காணப்பட்டார் என்று அவர்கள் கேள்விப்பட்டும் அதை நம்பவில்லை.

௰௨. அதின் பின்பு அவர்களில் இரண்டுபேர் ஒரு * ஊருக்குப்புறப்பட்டுப்போகையில், அவர்களுக்கும் அவர் மறுரூபத்தோடே காணப்பட்டார். * லூக். ௨௪: ௰௩—௩௫.

௰௩. அவர்களுந் திரும்பி, அதைமற்றவர்களுக்கு அறிவித்தார்கள். அவர்களையும் இவர்கள் நம்பவில்லை.

௰௪. பின்பு * அவர் போசனபந்தியில் இருந்த பதினொருவருக்குங் காணப்பட்டு, தாம் உயிரோடெழுந்து வந்ததைக்கண்ட பேர்களுடைய (வார்த்தையை) யவர்கள் நம்பாமல் இருந்தபடியால், அவர்களுடைய அவிசுவாசத்துக்காகவும், இருதயத்தினுள்ள கடினத்திற்காகவும் அவர்களைக்கடிந்து கொண்டார். * லூக். ௨௪: ௩௬—௪௰.

௰௫. அல்லாமலும், அவர் அவர்களைநோக்கி, * நீங்கள் உலகத்தில் எங்கும்போய்ச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற யாவருக்குஞ் சுவிசேஷத்தைப்பிரசங்கம் பண்ணுங்கள். * மத். ௨௮: ௰௯.

யசு. விசுவாசமுள்ளவனாகி, ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவோன். * விசுவாசியாதவன் ஆக்கினைக்குள்ளாக்கப்படு வான். , * யோவா. ரு: யஅ.

யஎ. அன்றியும், விசுவாசமுள்ளவர்களால் எப்படிப்பட்ட அதிசயங்கள் நடக்குமென்றால், என் நாமத்தினாலே யவர்கள் பேய்களைத்துரத்தி, * புதிய பாஷைகளைப்பேசிக் கொண்டு, * அப். உ: ச.

யஅ. பாம்புகளையும் பிடித்துக்கொள்வார்கள். அல்லாமலும், மரணத்திற்கு ஏதுவானதை யவர்கள் குடித்தால், அது அவர்களைச்சேதப்படுத்தாமல் இருக்கும். அல்லாமலும், பிணியாளிகளின்மேல் அவர்கள் கைகளை வைக்கும்பொழுது, அவர்கள் சொஸ்தம் அடைவார்கள் என்றார்.

யசு. * கர்த்தர் அவர்களுடனே பேசிக்கொண்டபின்பு அவர் பரமண்டலத்துக்கேற்றப்பட்டு, பராபரனுடைய வலதுபாரிசத்திலே வீற்றிருக்கிறார். * லூக். உச: ருக. அப்போ. க: ச—யக.

உய. அவர்கள் புறப்பட்டு எங்கும் பிரசங்கம் பண்ணிக்கொண்டு வந்தார்கள். அப்பொழுது கர்த்தர் அவர்களுடனேகூடக்கிரியைசெய்து, அதிசயங்களை நடக்கப்பண்ணினதினாலே, (அவர்களுடைய) உபதேசத்தை உறுதியாக்கினார். ஆமன்.

லூக்கா என்பவர் எழுதின சுவிசேஷம்.

LUKE.

கிறிஸ்துப்பிறந்ததென்று சொல்லப்பட்ட வழக்கமான வருஷத்தொகைக்குமுன் ஆறும் வருஷம்.

க அதிகாரம்.

[(க) லூக்காவின் முகவுரை. (ரு) யோவான்ஸ்நானனும், (உசு) கிறிஸ்துவும் உற்பத்தியானது. (ருசு) எவிசபேத்தும், மரியாளும் கிறிஸ்துவைக்குறித்துத்தீர்க்கதரிசனம் உரைத்தது. (ருஎ) யோவானுடைய செனனமும், சுன்னத்தும் சொல்லப்பட்டது. (சுஎ) சகரியா கிறிஸ்துவைக்குறித்தும், (எசு) யோவானைக்குறித்தும், தீர்க்கதரிசனஞ் சொன்னது.]

மிகுந்த கனம்பொருந்திய தேயோப்பிலுவே! எங்களுக்குள்ளே நிறைவேறின சங்கதிகளை ஆதிமுதற் கண்ணினாலே (கண்டு சுவிசேஷ) வசனத்தைப்போதித்திருக்கிறவர்கள் எங்களுக்கு ஒப்புக்கொடுத்ததின்படியே,

உ. அவைகளைக்குறித்து, சரித்திரத்தை எழுதும்படிக்கு அநேகர் துணிந்தார்கள்.

ரு. ஆகையால், * ஆதிமுதல் எல்லாவற்றையும் நன்றாய் ஆராய்ந்து பார்த்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட பொருள்களின் நிச்சயத்தை நீர் அறியும்படிக்கு, * க யோ. க: க.

ச. அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுத வேண்டும் என்று, எனக்கு நன்றாய்த்தோன்றிற்று. (அவையாவன;)

ரு. யூதேயா தேசத்தின் இராசாவாகிய ஏரோதேயின் நாள்களிலே * அபியா என்னும் ஆசாரிய வகுப்பிற் சகரியா என்னப்பட்ட ஆசாரியன் இருந்தான். ஆரோனின் குடும்பத்திற் பிறந்த எவிசபேத் என்னப்பட்டவள் அவனுக்கு மனைவியாய் இருந்தாள். * க நாளா. உச: ய.

சு. அவ்விருவரும் பராபரனுக்கு முன்பாக நீதி யுள்ளவர்களாய்க்கர்த்தர் இட்ட சகல கற்பனைகளின்படியேயும், நியாயங்களின்படியேயுங் குற்றம் இல்லாமல் நடந்து வந்தார்கள்.

எ. எவிசபேத்து மலடியாய் இருந்ததும் அல்லாமல், அவ்விருவரும் வயதுசென்றவர்களானபடியினாலே அவர்களுக்குப்பிள்ளை இல்லை.

அ. அப்படி யிருக்குங்காலத்தில், அவன் தன் ஆசாரிய வகுப்பின் முறைமைக்குத்தக்கதாக, பராபரனுக்குமுன்பாக ஆசாரிய ஊழியஞ் செய்து வருகிறபொழுது,

கூ. ஆசாரியருடைய வழக்கத்தின்படி அவன் * தூபங் கொடுக்கிறதற்குச்சீட்டைப்பெற்று, தேவாலயத்திற் பிரவேசித்தான். * உ மோ. ருய: எ, அ.

ய. தூபங் கொடுக்கிற வேளையிலே கூட்டமான சனங்கள் எல்லாரும் புறம்பே செபம் பண்ணிக்கொண்டு இருந்தார்கள்.

யக. அப்பொழுது பராபரனுடைய தூதன் ஒருவன் தூபபீடத்தின் வலதுபக்கத்திலே நின்று, அவனுக்குக்காணப்பட்டான்.

௰௨. சகரியா அவனைக்கண்டு கலங்கிப்ப
யம் அடைந்தான்.
௰௩. தூதன் அவனைநோக்கி, சகரியாவே!
நீ பயப்படவேண்டாம். உன் விண்ணப்பங்
கேட்கப்பட்டது. உன் மனைவியாகிய எலி
சபேத்து ஒரு குமாரனைப்பெறுவாள். அவ
னுக்கு யோவான் என்று பேரிடுவாயாக.
௰௪. அவனால் உனக்குச்சந்தோஷமும்,
களிப்பும் உண்டாகும். அவனுடைய பிறப்
பைக்குறித்து, அநேகர் சந்தோஷப்படு
வார்கள்.
௰௫. என்னத்தினாலெனில், அவன் பராபர
னுக்கு முன்பாகப் * பெரியவனாய்த்திராட்
ச இரசத்தையும், மதுவையுங் குடியாமல்
தன் தாயின் வயிற்றிலே பரிசுத்த ஆவியினா
லே நிரப்பப்பட்டு இருப்பான். * மத். ௰௧:
௯—௰௧.
௰௬. அல்லாமலும், அவன் இஸ்ரவேல் சந்
ததியாரில் அநேகரை அவர்களுடைய தே
வனாகிய பராபரனிடத்திற்குத்திருப்புவான்.
௰௭. பிதாக்களுடைய இருதயங்களைப்பிள்
ளைகள் இடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை
நீதிமான்களுடைய புத்திக்குந் திருப்பிச்
செம்மையான சனங்களைப்பராபரனுக்காக
எத்தனம் பண்ணும்படிக்கு, அவன் * எலி
யாவின் ஆவியையும், பலத்தையும் உடை
யவனாய் அவருக்குமுன்னே நடப்பான் என்
றான். * மல்கி. ௪: ௫—௬. மத். ௰௧: ௰௪.
௰௮. அப்பொழுது சகரியா தேவதூதனை
நோக்கி, நான் அதை எதினாலே அறிவேன்.
நான் கிழவனாய் இருக்கிறேன். என் மனைவி
யும் வயதுசென்றவளாய் இருக்கிறாளே என்
றான்.
௰௯. அவனுக்குத்தூதன் மாறுத்தரமாகச்
சொன்னது நான் தேவனுடைய சந்நிதா
னத்திலே நிற்கின்ற * காபிரியேல் என்ப
வன் உன்னுடனே பேசி இவைகளை உனக்
குச்சுவிசேஷமாக அறிவிக்கும்படிக்கு, அ
னுப்பப்பட்டு வந்தேன். * தானி. ௮: ௰௬.
௯: ௨௧.
௨௰. என் வார்த்தைகள் தகுதியான கா
லத்திலே நிறைவேறும். அவைகளை நீ விசு
வாசியாதபடியினாலே, இந்தக்காரியங்கள்
சம்பவிக்கும் நாள்வரைக்கும் நீ பேசத்திரா
ணி இல்லாமல் ஊமையனாய் இருப்பாய்
என்றான்.
௨௧. சகரியாவைக் (காணக்) காத்திருந்த
சனங்கள் அவன் தேவாலயத்திலே தாம
தித்ததினாலே ஆச்சரியப்பட்டார்கள்.
௨௨. அவன் வெளியே வந்தபொழுது அ
வர்களோடே பேசத்திராணி இல்லாமல்
இருந்தான். அதினாலே தேவாலயத்தில் ஒ
ரு தரிசனையைக்கண்டு இருப்பான் என்று
அறிந்தார்கள். அவனும் அவர்களுக்குச்ச
மிக்கைகாட்டி, ஊமையனாய் இருந்தான்.
௨௩. பின்பு அவன் தன் ஊழியத்தின்
நாள்கள் நிறைவேறினபொழுது, தன் வீட்
டுக்குப்போனான்.
௨௪. அந்நாள்களுக்குப்பின்பு அவனுடை
ய மனைவியாகிய எலிசபேத்துக்கருப்பந்த
ரித்து,
௨௫. * சனங்களுக்குள்ளே எனக்கு உண்
டாயிருந்த நிந்தையை நீக்கும்படிக்குப்
பராபரன் இந்த நாள்களில் என்னைநோக்
கி, இப்படி எனக்குச்செய்தார் என்று
சொல்லி, ஐந்து மாதம்வரையும் ஒளித்துக்
கொண்டாள். * ௧ மோ. ௩௰: ௨௩.
௨௬. ஆறும் மாதத்திலே காபிரியேல் என்
னுந் தூதன் கலிலேயாநாட்டிலுள்ள நாச
ரேத்தென்னும் பட்டினத்திலே,
௨௭. தாவீதின் குடும்பத்தானாகிய யோ
சேப் என்னும் நாமமுள்ள புருஷனுக்கு
* நியமிக்கப்பட்டு இருந்த கன்னியாகிய
மரியாள் என்பவளிடத்திற்கு, பராபரனால்
அனுப்பப்பட்டு, * மத். ௧: ௰௮.
௨௮. அவள் இருக்கிற வீட்டுக்குட்பிரவே
சித்து, கிருபை பெற்றவளே நீ வாழ்க.
பராபரன் உன்னுடனே யிருக்கிறார். பெண்க
ளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்
றான்.
௨௯. அவள் அவனைக்கண்டு, அவனுடை
ய வார்த்தையைக்கேட்டுக்கலங்கி, இந்த
வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று
சிந்தித்தாள்.
௩௰. தூதன் அவளுடனே சொன்னது, மரி
யாளே! நீ தேவனிடத்திற் கிருபை பெற்ற
படியினாலே நீ பயப்படவேண்டாம்.
௩௧. * நீ கருப்பந்தரித்து ஒரு குமார
னைப்பெறுவாய். அவருக்கு † இயேசு என்
று பேர் இடுவாயாக. * ஏசா. ௭: ௰௪.
† மத். ௧: ௨௧.
௩௨. அவர் பெரியவராய் உன்னதமானவ
ருடைய குமாரன் என்னப்படுவார். அல்
லாமலுந் தேவனாகிய பராபரன், அவருக்கு
அவருடைய பிதாவாகிய தாவீதின் * இரா
சாசனத்தைக்கொடுப்பார். * ஏசா. ௯:
௬, ௭. ௨ சாமு. ௭: ௰௨, ௰௩.
௩௩. அவர் யாக்கோபினுடைய குடும்பத்
திற்கு என்றென்றைக்கும் இராசனாய் இருப்
பார். அவருடைய ஆளுகைக்கு முடிவு வா
ராது என்றான். * தானி. ௨: ௪௪. ௭: ௰௪.
மிகா. ௪: ௭.
௩௪. அதற்கு மரியாள் தூதனைநோக்கி, இ
தெப்படியாகும். ஒரு புருஷனையும் அறி
யேனே என்றாள்.
௩௫. தூதன் அவளுக்கு மாறுத்தரமாகச்
சொன்னது, * பரிசுத்த தேவ ஆவி உன்
மேல்வரும். உன்னதமானவருடைய பலம்
உன்மேல் நிழலிடும். ஆகையால், உன்னி
டத்திற்பிறக்கும் பரிசுத்தமானது தேவனு

டைய குமாரன் என்னப்படும். * மத்தே. ௧: ௰௮—௨௰.

௩௬. அல்லாமலும், * பராபரனாற் கூடாத காரியம் ஒன்றும் இல்லாதபடியினாலே, * ௧ மோ. ௰௮: ௰௪.

௩௭. உனக்கு இனமாயிருக்கிற எலிசபேத்தும், தனது முதுமையான வயதிலே ஒரு புத்திரனைக்கருப்பந் தரித்தாள். மலடி என்னப்பட்ட அவளுக்கு இது ஆறும் மாதமே என்றான்.

௩௮. அதற்கு மரியாள், இதோ! நான் ஆண்டவருக்கு அடிமையாய் இருக்கிறேன். உம்முடைய வார்த்தையின்படி எனக்காகக் கடவதென்றாள். அப்பொழுது தேவதூதன் அவளை விட்டுப்போனான்.

௩௯. அந்த நாள்களில் மரியாள் எழுந்து மலைத்தேசத்திலே யூதாவிலுள்ள பட்டினத்திற்குத்தீவிரமாய்ப்போய்,

௪௰. சகரியாவின் வீட்டிற் பிரவேசித்து, எலிசபேத்தை வாழ்த்துதல் செய்தாள்.

௪௧. எலிசபேத்து, மரியாளுடைய வாழ்த்துதலைக்கேட்டபொழுது, அவளுடைய வயிற்றில் இருந்த பிள்ளை துள்ளிற்று. அல்லாமலும் எலிசபேத்துப்பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு,

௪௨. மிகுந்த சத்தத்துடனே சொன்னதாவது; பெண்களுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள். உன் கருப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது.

௪௩. என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்திற்கு வருகிறது எனக்கெதினாலே கிடைத்தது.

௪௪. நீ வாழ்த்துதல் சொல்லிய சத்தம், என் காதுகளில் விழுந்தவுடனே என் வயிற்றிற் பிள்ளை களிப்பாய்த்துள்ளிற்று.

௪௫. விசுவாசித்தவளுக்கு, * பராபரனாலே சொல்லப்பட்டவைகள் நிறைவேறுவதால் அவள் பாக்கியமுள்ளவளே என்றாள். * யோவா. ௨௰: ௨௯.

௪௬. அப்பொழுது மரியாள் சொன்னதாவது;

௪௭. * என் ஆத்துமா பராபரனைப்புகழ்கின்றது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனிற் களிகூருகின்றது. * ௧ சாமு. ௨: ௧.

௪௮. என்னத்தினாலெனில், அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார். வல்லமையுடையவர் எனக்குப்பெரிய காரியங்களை, செய்தபடியினாலே,

௪௯. இது முதல் வம்சத்தார் எல்லாரும் என்னைப்பாக்கியவதி என்பார்கள். அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது.

௫௰. * அவருடைய இரக்கந் தலைமுறைதலைமுறையாக அவருக்குப்பயப்படுகிறவர்களிடத்தில் உண்டாய் இருக்கும். * சங். ௱௩: ௰௭.

௫௧. அவர் தம்முடைய கையினாலே பலத்த காரியங்களைச்செய்தார். தங்கள் இருதயத்தின் சிந்தனையில், * இறுமாப்பாய் இருக்கிறவர்களை யவர் சிதறப்பண்ணி, * ௧ பேது. ௫: ௫.

௫௨. பலவான்களை, பத்திராசனங்களில் இருந்து தள்ளித்தாழ்மையுள்ளவர்களை உயர்த்தி,

௫௩. பசியுள்ளவர்களை நன்மைகளினாலே நிரப்பிச்சம்பூரணமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பினார்.

௫௪. அவர் நம்முடைய பிதாக்களோடே சொன்னபடியே, * ஆபிரகாமுக்கும், அவனுடைய சந்ததிக்கும் என்றென்றைக்கும் இரக்கஞ் செய்ய நினைத்து, * ௧ மோ. ௰௭: ௭. ௰௮: ௰௮.

௫௫. தம்முடைய தாசராகிய, * இஸ்ரவேலரை ஆதரித்தார் என்றாள். * ஏசா. ௪௧: ௰.

௫௬. பின்பு மரியாள் ஏறக்குறைய மூன்றுமாதம் அவளுடனே இருந்து, தன் வீட்டுக்குத்திரும்பினாள்.

௫௭. எலிசபேத்துக்குப்பேறுகாலம் உண்டானபொழுது, அவள் ஒரு குமாரனைப் பெற்றாள்.

௫௮. பராபரன் தமது இரக்கத்தை அவளிடத்திற் பெரிதாக்கினார் என்று, அவளுடைய அயலகத்தாரும், பந்துசனங்களுங் கேள்விப்பட்டு, அவளுடனே கூடச்சந்தோஷப்பட்டார்கள்.

௫௯. பின்பு எட்டாம் நாளிலே யவர்கள் பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ணும் படிக்கு வந்து அதின் தகப்பனுடைய நாமத்தின்படி யதற்குச்சகரியா வென்று பேரிட்டார்கள்.

௬௰. அப்பொழுது அதின் தாய் சொன்னது, அப்படியல்ல, அதற்கு யோவான் என்று பேரிடவேண்டும் என்றாள்.

௬௧. அவர்கள் அவளை நோக்கி, உன் உறவிலே யிந்தப்பேராக அழைக்கப்பட்டவர்கள் ஒருவரும் இல்லையே யென்று சொல்லி,

௬௨. அதினுடைய தகப்பனை நோக்கி, இதற்கு என்ன பேரிட மனதாய் இருக்கிறீர் என்று சமிக்கையினாலே கேட்டார்கள்.

௬௩. அவன் எழுதுகிறதற்குப்பலகையைக் கேட்டு வாங்கி, இதின்பேர் யோவான் என்றெழுதினான். எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்.

௬௪. அல்லாமலும், அந்நிமிஷத்திலே அவனுடைய வாயும், நாவுந் திறக்கப்பட,

அவன் பராபரனைத்தோத்திரஞ் செய்து பேசினான்.

௬௫. (அதினாலே) அவர்களைச்சுற்றி வாசமாய் இருந்த எல்லாருக்கும் பயம்வந்தது. அன்றியும், யூதேயாவின் மலைத்தேசம் எங்கும் அந்தச்சங்கதிகள் எல்லாஞ் சொல்லிக்கொள்ளப்பட்டன.

௬௬. (அவைகளைக்) கேள்விப்பட்டவர்கள் எல்லாரும், (அவைகளைத்) தங்கள் மனதிலே வைத்துக்கொண்டு அந்தப்பிள்ளை எப்படிப்பட்டதாய் இருக்குமோ வென்றார்கள். கர்த்தருடைய கை அந்தப்பிள்ளையினிடத்தில் இருந்தது.

௬௭. அன்றியும் அவனுடைய தகப்பனாகிய சகரியா பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, தீர்க்கதரிசனமாய்ப்பகர்ந்ததாவது;

௬௮. நாம் நம்முடைய சத்துருக்களின் கைகளுக்குத்தப்புவிக்கப்பட்டவர்களாக,

௬௯. நம்முடைய வாழ்நாளெல்லாம் பயமில்லாமல், * தேவபத்தியாயும், நீதியாயும் தமக்கு முன்பாக ஊழியஞ் செய்வதற்கு அநுக்கிரகஞ் செய்யும் பொருட்டாய், * ௧ பேது. ௧: ௰௫.

௭௰. தாம் நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு இட்ட * ஆணையாகிய தம்முடைய பரிசுத்த உடம்படிக்கையை நினைத்து, * ௧ மோ. ௨௨: ௰௬—௰௮.

௭௧. நம்முடைய பிதாக்கள்மேல் இரக்கமாகி,

௭௨. தாம் உலகத்தின் தோற்றம் முதற்கொண்டிருந்த தமது பரிசுத்த தீர்க்கதரிசிகளால் அருளிச்செய்தபடியே,

௭௩. நம்முடைய சத்துருக்களில் நின்றும், நம்மைப்பகைக்கிற யாவருடைய கைகளினின்றும்,

௭௪. நம்மை இரட்சிக்கிற பலத்த இரட்சகரைத்தம்முடைய தாசனாகிய தாவீதின் குடும்பத்திலே, * தோன்றப்பண்ணி, * சங். ௱௩௨: ௰௭.

௭௫. (இவ்விதமாய்த்) தம்முடைய சனங்களைச்சந்தித்து மீட்டுக்கொண்ட இஸ்ரவேலருடைய தேவனாகிய பராபரனுக்குத் தோத்திரம் உண்டாவதாக,

௭௬. பாலகனே, நீ மரண நிழலாகிய இருளிலே யகப்பட்டிருக்கிறவர்களுக்கு, * ஒளி யுண்டுபண்ணும்படியாயும், நம்முடைய கால்களைச்சமாதானமுள்ள மார்க்கத்திலே நடத்தும்படியாயும், * ஏசா. ௯: ௨. ௪௨: ௬—௭.

௭௭. * உன்னதத்தில் இருந்து சூரிய உதயம் நமக்குத்தோன்றப்பண்ணின நம்முடைய தேவனுடைய மிகுந்த இரக்கங்களினாலே, * மல். ௪: ௨.

௭௮. அவருடைய சனங்களுக்குப்பாவ மன்னிப்பாகிய இரட்சண்ணியத்தைத்தெரியப்படுத்தி,

௭௯. இவ்விதமாய், * அவருக்காக மார்க்கத்தைச்செம்மையாக்கும் பொருட்டாக அவருக்குமுன்னே நடப்பாய். ஆகையால், நீ எல்லாரிலும் மேலானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய் என்றான். * ஏசா. ௪௰: ௩.

௮௰. பின்பு அந்தப்பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பலங்கொண்டு, இஸ்ரவேலருக்குத்தன்னைக்காண்பிக்கும் நாள்வரைக்கும் வனாந்தரங்களில் இருந்தான்.

௨ அதிகாரம்.

[(௧) அகுஸ்து இராசா உரோம இராச்சியத்தைக்குடிமதிப்புச்செய்தது (௬) கிறிஸ்துப்பிறந்தது. (௮) அதை ஒரு தூதன் மேய்ப்பர்களுக்கு அறிவித்து, (௰௨) அதற்காக அநேகம் தூதர் ஸ்தோத்திரம் பாடினது. (௨௧) கிறிஸ்துச்சுன்னத்துப்பண்ணப்பட்டது. (௨௨) மரியாள் சுத்திகரிக்கப்பட்டது. (௨௮) சிமேயோனும், அன்னாளும் கிறிஸ்துவைக்குறித்துத்தீர்க்கதரிசனம் உரைத்தது. (௪௰) இயேசு ஞானத்தில் வளர்ந்து, (௪௬) தேவாலயத்திற் சாஸ்திரிகளோடே சம்பாஷித்து, (௫௧) தாய் தகப்பனுக்குக்கீழ்ப்படிந்திருந்தது.]

அந்நாள்களிற் குடிகள் எல்லாருக்கும் உண்டாகிய பேர் முதலானவைகளையும் எழுதவேண்டும் என்று, * அகுஸ்து இராயனுடைய கட்டளை வந்தது. * ௧ மோ. ௪௯: ௰.

௨. சீரியா நாட்டிலே கிரேனி என்பவன் துரையானபொழுது, முதலாவது இந்தக்குடி மதிப்பு உண்டாயிற்று.

௩. அந்தப்படி எல்லாரும் எழுதப்படும்படிக்குத்தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போனார்கள்.

௪. அப்பொழுது யோசேப்பும், * தாவீதின் குடும்பத்தானுமாய், வம்சத்தானுமாய் இருந்தபடியினாலே, தனக்கு நியமிக்கப்பட்ட கருப்பவதியாகிய மனைவி மரியாளுடனேகூட எழுதப்படும்படிக்குக்கலிலேயா நாட்டில் உள்ள நாசரேத்தூரை விட்டு, * ௧: ௨௭.

௫. யூதேயா நாட்டிலுள்ள பெத்லேகேம் என்னப்பட்ட தாவீதின் ஊருக்குப்போனான்.

௬. அவ்விடத்திலே யவர்களிருக்குங் காலத்தில் அவள் பிள்ளைபெறுகிறதற்குக்காலஞ் சம்பவித்தது.

௭. அப்பொழுது அவள் தன், * முதற்பேறான குமாரனைப்பெற்று, அவரைப் பிடவைகளிற்சுற்றிச்சத்திரத்திலே, (வேறு) இ

டம் இல்லாதபடியினலே அவரைப்பசுத்
தொட்டியிலே வைத்தாள். * மத். ௧:
௨௫.
௮ அன்றியும் அந்தத்திசையிலே மேய்ப்
பர் வெளியிலே தங்கி, இராத்திரியிலே தங்
கள் ஆட்டுக்கூட்டத்தைக்காத்துக்கொண்
டிருந்தார்கள்.
௯. அப்பொழுது பராபரனுடைய தூதன்
அவர்களிடத்தில் வந்து நிற்க, பராபரனு
டைய மகிமை யவர்களைச்சுற்றிப்பிரகா
சித்தது. அவர்கள் மிகவும் பயந்தார்கள்
௰. உடனே தேவதூதன் அவர்களை நோக்
கி, பயப்படாதிருங்கள். எல்லாச்சனங்க
ளுக்கும் உண்டாகும் மிகுந்த சந்தோ
ஷத்தை உங்களுக்குச்சுவிசேஷமாக அறி
விக்கிறேன்.
௰௧. என்னவென்றல், இன்று கர்த்தராகி
ய கிறிஸ்தென்னும் இரட்சகர், * தா
வீதின் ஊரிலே உங்களுக்காகப்பிறந்தார்.
* மீகா. ௫: ௨.
௰௨. பிள்ளையைப்பிடவைகளிற் சுற்றிப்ப
சுத்தொட்டியிலே வைத்திருக்கக்காண்பீர்
கள். அதுவே உங்களுக்கடையாளம் என்
றான்.
௰௩. அப்பொழுது சடுதியாய்ப்பரமண்ட
லத்திலுள்ள மிகுந்த சேனைகள் அந்தத்
தூதனுடனேகூட விருந்தன.
௰௪ உன்னதங்களில் இருக்கிற பராபர
னுக்குப்புகழ்ச்சியும், பூமியிலே சமாதா
னமும், மனிதர்மேற் பிரியமும் உண்டா
வதாகவென்று பராபரனைத்துதித்தார்கள்
௰௫ பின்பு தேவதூதர்கள் அவர்களை
விட்டு, பரமண்டலத்திற்குப்போனபொழு
து, மேய்ப்பர் ஒருவரை யொருவர் நோக்
கி, நாம் பெத்லேகேம் ஊருக்குப்போய்,
கர்த்தரால் நமக்கறிவிக்கப்பட்டு நடந்த
இந்தச்சங்கதியைப்பார்ப்போம் வாருங்
கள் என்றுசொல்லிக்கொண்டு,
௰௬. தீவரமாய்ப்போய் மரியாளையும், யோ
சேப்பையும், பசுத்தொட்டியிலே கிடக்
கிற பிள்ளையையுங் கண்டார்கள்.
௰௭. பின்பு அவர்கள் அந்தப்பிள்ளையைக்
குறித்துத்தங்களுக்கு, சொல்லப்பட்டவார்த்
தையைப்பிரசித்தம் பண்ணினர்கள்.
௰௮. மேய்ப்பராற் சொல்லப்பட்டவை
களைக்கேட்ட யாவரும் அவைகளைக்குறித்
து ஆச்சரியப்பட்டார்கள்.
௰௯. மரியாள் அவ்வார்த்தைகளை எல்லாந்
தன் இருதயத்திலே காத்துச்சிந்தித்துக்
கொண்டாள்.
௨௰. மேய்ப்பருந் தங்களுடனே சொல்
லப்பட்டதின்படியே கேட்டுக்கண்டயாவுக்
காகவும் பராபரனைப்புகழ்ந்து, துதித்துக்
கொண்டு திரும்பினர்கள்.
௨௧. பிள்ளைக்கு விருத்த சேதனஞ் செய்
கிறதற்குரிய * எட்டாம் நாளிலே அது
கருப்பமாகிறதற்குமுன்னே † தேவதூத
னலே சொல்லப்பட்ட இயேசு என்னும்
நாமம் அதற்குக்கொடுக்கப்பட்டது. * ௧
மோ. ௰௭: ௰௨. † ௧: ௩௧.
௨௨. அல்லாமலும் மோசேயின் * நியா
யப்பிரமாணத்தின்படியே அவர்களைச்சுத்
தி கரிப்பதற்கான நாள்கள் நிறைவேறின
பொழுது, * ௩ மோ. ௰௨: ௨.
௨௩. * முதற்பேறன எந்த ஆண்பிள்ளை
யும் பராபரனுக்குப்பிரதிஷ்டையாக்கப்
படவேண்டும் என்று, பராபரன் அருளிச்
செய்த நியாயப்பிரமாணத்தில் எழுதி இருக்
கிறபடி, * ௨ மோ. ௰௩: ௨. ௨௨: ௨௯.
௩௪: ௰௯.
௨௪. அவர்கள் அதைப்பராபரனுக்கு ஒப்
புக்கொடுக்கும்படிக்கும், பராபரனுடைய
நியாயப்பிரமாணத்திற் சொல்லி இருக்கிற
படி, * ஒருசோடு காட்டுப்புறவை அல்ல
து இரண்டு புறக்குஞ்சுகளைப்பலியிடும்படிக்
கும் பிள்ளையை எருசலேம் பட்டினத்திற்குக்
கொண்டுபோனர்கள். * ௩ மோ. ௰௨: ௮.
௨௫. அப்பொழுது சிமேயோன் என்று
பேர்கொண்ட மனிதன் எருசலேமில் இருந்
தான். அவன் நீதியும், தேவபத்தியும் உள்
ளவனுமாய், இஸ்ரவேலருக்கு ஆறுதல்
செய்கிறவர் வரக்காத்திருக்கிறவனுமாய் இ
ருந்தான். அவனில் பரிசுத்த ஆவியானவர்
இருந்தார்.
௨௬. அல்லாமலும் பராபரனுடைய கிறிஸ்
துவைக்காணுமுன்னே நீ மரணம் அடைவ
தில்லையென்று, பரிசுத்த ஆவியினலே அவ
னுக்கு உத்தரவு உண்டாய் இருந்தது.
௨௭. அவன் அந்த ஆவியினலே ஏவப்பட்
டு, தேவாலயத்திலே வந்திருந்தான். அப்
பொழுது இயேசு என்னும் பிள்ளையை நியா
யப்பிரமாண முறைமையின்படி செய்யத்
தாய் தகப்பன்மார் அவரை உள்ளே கொண்
டு வருகையில்,
௨௮. அவன் அவரைத்தன் கைகளில் ஏந்
திக்கொண்டு பராபரனைத்தோத்திரித்துச்
சொன்னது;
௨௯. ஆண்டவரே! புறத்தேசத்தார்களுக்
கு அறிவைக்கொடுப்பதற்கும், உம்முடைய
சனங்களாகிய இஸ்ரவேலருக்கு மகிமை
உண்டாக்கு * வதற்குமான ஒளியாய்,
* ஏசா. ௪௨: ௬, ௭.
௩௰. உம்மாலே * எல்லாச்சனங்களுக்கு
முன்பாகவும், * ஏசா. ௪௯: ௬.
௩௧. எத்தனமாக்கப்பட்ட இரட்சகரை
நான் என் கண்களாலே கண்டபடியினலே,
௩௨. தேவரீர் உம்முடைய வார்த்தையின்
படி இப்பொழுது அடியேனைச்சமாதானத்
தோடே அனுப்பிவிடுகிறீர் என்றான்.
௩௩. அப்படி அவரைக்குறித்துச்சொல்

லப்பட்டவைகளை அவருடைய தாயும், யோ
சேப்புங் கேட்டு ஆச்சரியப்பட்டார்கள்.
௩௪. பின்னுஞ் சிமேயோன் அவர்களை ஆ
சீர்வதித்து, அவருடைய தாயாகிய மரியா
ளுடனே சொன்னது, இதோ அநேகருடை
ய * இருதய சிந்தனைகள் வெளியரங்க மா
கும்படிக்கு, * ஏசா. ௮: ௰௪—௰௫. ௧ கொ
ரிந். ௧: ௨௩, ௨௪.
௩௫. இஸ்ரவேலரில் அநேகர் விழுதற்கும்,
எழுந்திருக்குதற்கும், விரோதமாய்ப்பேசட
படும் அடையாளமாய் இருப்பதற்கும் இ
வர் நியமிக்கப்பட்டு இருக்கிறார். உன்
ஆத்துமாவையே ஒரு கத்தி உருவிப்போம்
என்றான்.
௩௬. அல்லாமலும், ஆசேருடைய கோத்
திரத்திலே பானுவேலின் குமாரத்தியும்,
தீர்க்கதரிசியுமாகிய அன்னாள் என்பவள் இ
ருந்தாள். அவள் கன்னிகையாய்ப்பின்பு ஏ
ழுவருஷம் புருஷனுடனே வாழ்ந்து மிகுந்த
வயது சென்றவளாய் இருந்தாள்.
௩௭. ஏறக்குறைய எண்பத்திநாலு வயதுள்
ள அந்தக்கைம்பெண் தேவாலயத்தை விட்
டு நீங்காமல் இரவும், பகலுஞ் செபம்
பண்ணி, உபவாசித்து, ஆராதனை செய்து
கொண்டு வந்தாள்.
௩௮. அவளும் அவ்வேளையிலே போய் நின்
று, பராபரனைத்துதித்து; எருசலேமிலே
மீட்புண்டாகக்காத்திருந்த யாவருடனே
யும் அவரைக்குறித்துப்பேசினாள்.
௩௯. பராபரனுடைய நியாயப்பிரமாணத்
தின்படி, சகலத்தையும் அவர்கள் செய்து
முடித்த பின்பு கலிலேயா தேசத்தில் உள்ள
தங்கள் ஊராகிய நாசரேத்தூருக்குத்திரும்
பினார்கள்.
௪௰. * பிள்ளையானது வளர்ந்து, ஆவியி
லே பலன்கொண்டு, ஞானத்தால் நிறையப்
பட்டு, தேவ தயவுள்ளவரானார். * ௫௨ வச.
௪௧. அவருடைய தாய் தகப்பன்மார் *
பஸ்காவின் பண்டிகைக்கு வருஷந்தோறும்
எருசலேம் பட்டினத்திற்குப்போவார்கள்
* ௨ மோ. ௩௪: ௨௩.
௪௨. அந்தப்படிக்கு அவர் பன்னிரண்டு
வயதுள்ளவரானபொழுது, அவர்கள் பண்
டிகை முறைமையின்படி எருசலேமுக்குப்
போய்,
௪௩. வேண்டியநாள் அங்கே இருந்து பின்
பு திரும்பி வருகிறபொழுது, பிள்ளையாகிய
இயேசு தம்முடைய தாய்க்கும், யோசேப்
புக்குந் தெரியாமல் எருசலேமிலே தானே
இருந்தார்.
௪௪. அவர்கள் அவர் பிரயாணக்காரருடை
ய கூட்டத்தில் இருப்பார் என்று எண்ணி,
ஒருநாட் பிரயாணமாய் நடந்துபோய், இ
னத்தாருக்குள்ளும், அறிமுகமானவர்களுக்
குள்ளும் அவரைத்தேடி,
௪௫. அவரைக்காணாமல் இருக்கிறபொழு
து, எருசலேமுக்குத்திரும்பி அவரைத்
தேடி,
௪௬. மூன்றுநாட்குப்பின்பு தேவாலயத்
திலே அவர் போதகருக்குள்ளே உளுக்காந்
திருக்கவும், அவர்களுக்குச்செவிகொடுக்க
வும், அவர்களை வினவவுங் கண்டார்கள்.
௪௭. அவருடைய வசனங்களைக்கேட்ட
யாவரும் அவருடைய புத்தியையும், மாறுத்
தரங்களையுங் குறித்துப்பிரமித்தார்கள்.
௪௮. (தாய் தகப்பன்மார்) அவரைக்கண்
டு, அதிசயப்பட்டார்கள். அல்லாமலும்,
அவருடைய தாய் அவரை நோக்கி, மகனே!
என்னத்தினாலே நீ எங்களுக்கு இப்படிச்
செய்தாய்! இதோ, உன் தகப்பனும், நா
னும் விசாரத்தோடே உன்னைத்தேடினோ
மே என்றாள். அதற்கு அவர்,
௪௯. நீங்கள் என்னை ஏன் தேடினீர்கள்;
நான் என் தகப்பனுக்கேற்றவைகளிலே
இருக்க வேண்டியதென்று அறியீர்களா
என்றார்?
௫௰. அவர்கள் தங்களுக்கு அவர் சொன்ன
வார்த்தையின் (கருத்தை) உணர்ந்துகொள்
ளவில்லை.
௫௧. பின்பு அவர் அவர்களுடனே கூடப்
போய் நாசரேத்தூரிற் சேர்ந்து, அவர்க
ளுக்குக்கீழடங்கினார். நடந்த சங்கதிகளை
யெல்லாம் அவருடைய தாய் தன் இருதயத்
திற் காத்துக்கொண்டாள்.
௫௨. இயேசுவானவர் ஞானத்தையும், வய
தையும், * பராபரன் இடத்திலும், மனிதர்
இடத்திலுந் தயையையும் அதிகமதிகமாய்
அடைந்துகொண்டார். * ௧ சாமு. ௨: ௨௬.

௩ அதிகாரம்.

[(௧) யோவானுடைய பிரசங்கத்தையும்,
ஞானஸ்நானத்தையுங் குறித்தது. (௰௫)
அவன் கிறிஸ்துவைக்குறித்துக்கொடுத்த
சாட்சி. (௨௰) ஏரோதே யோவானைக்காவ
லில் வைத்தது. (௨௧) கிறிஸ்து ஞானஸ்
நானம் பெற்றபோது பரமண்டலத்தில் இ
ருந்து சாட்சி வெளிப்பட்டது. (௨௩) கி
றிஸ்துவின் ஆயசின் பிரமாணமும், யோ
சேப்பைத்தொடங்கி, மேற்போகின்ற அவ
ருடைய வம்ச வரிசையின் அட்டவணையும்
அடங்கியது.]

திபேரியு இராயன் இராச்சிய பரிபால
னம் பண்ணின பதினைந்தாம் வரு
ஷத்திலே, பொந்தியுபிலாத்து என்பவன்
யூதேயாநாட்டுக்குத்துரையாயும், ஏரோது
என்பவன் காற்பங்காகிய கலிலேயாநாட்
டுக்கு அதிபதியாயும், அவனுடைய சகோ
தரனாகிய பிலிப்பு என்பவன் காற்பங்காகிய
இத்துரேயாநாட்டுக்கும், திராகோனித்தி
நாட்டுக்கும் அதிபதியாயும், இலிசானி என்

பவன் காற் பங்காகிய அபிலேனே நாட்டுக்கு அதிபதியாயும்,

௨. அன்னான், காயிபா என்பவர்கள் பிரதான ஆசாரியராயும் இருந்த காலத்திலே வனாந்தரத்திற் சகரியாவின் குமாரனாகிய * யோவானுக்குத்தேவ வசனம் உண்டாயிற்று. * மத். ௩: க—௰௨. மாற். ௧: ௧—௮.

௩. ஆனபடியால், அவன் யோர்தான் நதிக்கருகான தேசமெங்கும் நடந்து, பாவ மன்னிப்புக்காக மனந் திரும்பும்படிக்கு ஏற்ற ஞானஸ்தானத்தைக்குறித்துப் பிரசங்கித்தான்.

௪. பராபரனுர்காக மார்க்கத்தை நன்றாகச்செய்து, அவருக்காகப் பாதைகளைச் செம்மை பண்ணுங்கள் என்றும்,

௫. பள்ளங்கள் எல்லாம் நிரப்பப்படும். சகல மலைகளும், குன்றுகளுந் தாழ்த்தப்படும். கோணலான பாதைகள் செம்மையாகும். முருட்டுவழிகள் சமனாகும் என்றும் மனிதர் எல்லாரும் பராபரனுடைய இரட்சிப்பைக்காண்பார்கள் என்றும்,

௬. வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று, * ஏசாயா தீர்க்கதரிசியினுடையபுஸ்தகத்தில் எழுதி இருக்கிற பிரகாரமாகப்பிரசங்கித்தான். * ஏசா. ௪௰: ௩—௫. ௫௨: ௰.

௭. ஆதலால், அவன் தன்னாலே ஞானஸ்நானம் பெறும்படிக்குப்புறப்பட்டு வந்த சனங்களை நோக்கி, விரியன் பாம்புகளின் குட்டிகளே! இனிவரும் கோபத்திற்கு நீங்கள் தப்பித்துக்கொள்ளும்படியாய், உங்களுக்கு வகை காட்டினவன் எவன்?

௮. (தப்ப விரும்பினால்) மனந்திரும்புகிறதற்கு ஏற்ற கனிகளைக்கொடுங்கள். ஆபிரகாம் எங்களுக்குத்தகப்பன் என்று உங்கள் உள்ளத்திற் சொல்லத்தொடங்காதிருங்கள். ஆபிரகாமுக்கு, பராபரன் இந்தக் கற்களாற் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராய் இருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௯. அல்லாமலும், இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகில் வைத்திருக்கின்றது. ஆகையால், நல்ல கனி கொடாத மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்படும் என்றான்.

௰. அப்பொழுது சனங்கள் அவனை நோக்கி, அப்படியானால் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள்.

௰௧. அவர்களுக்கு மாறுத்தரமாக, * அவன் சொன்னது, இரண்டு சட்டைகளை உடையவன் சட்டை இல்லாதவனுக்குக் கொடுக்கக்கடவன். ஆகாரமுடையவனும் அப்படியே செய்யக்கடவன் என்றான். * க யோவா. ௩: ௰௭.

௰௨. பின்பு ஆயக்காரரும் ஞானஸ்நானம் பெறும்படிக்கு, அவன் இடத்திற் சேர்ந்து, போதகரே! நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள்.

௰௩. அவர்களுடனே அவன் சொன்னது, உங்களுக்குக்கட்டளை இடப்பட்டதற்கு மேலாக ஒன்றையும் பலவந்தமாய்க்கேட்டுக் கொள்ளாதிருங்கள் என்றான்.

௰௪. போர்ச்சேவகரும் அவனை நோக்கி, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள். அவர்களுடனே அவன் சொன்னது, நீங்கள் ஒருவனுக்கும் இடுக்கண் செய்யாமலும், ஒருவனைக்குறித்தும் பொய்ச்சாட்சி சொல்லாமலும் உங்கள் சம்பளமே போதும் என்று எண்ணிக் கொண்டு இருக்கக்கடவீர்கள் என்றான்.

௰௫. அப்பொழுது சனங்கள் காத்திருந்து யோவான் கிறிஸ்துவாய் இருக்கிறாரோவென்று எல்லாருந் தங்கள் இருதயங்களில் அவனைக்குறித்துச்சிந்தனைகொண்டு இருக்கிற பொழுது,

௰௬. யோவான் எல்லாருடனேயுஞ் சொன்னது, நான் சலத்தினாலே உங்களுக்கு ஞானஸ்தானங் கொடுக்கிறேன். என்னிலும் அதிக பலத்தவர் வருகிறார். அவருடைய பாத இரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல, அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுப்பார்.

௰௭. தூற்றுஞ் சுளகு அவருடைய கையில் இருக்கின்றது. அவர் தம்முடைய களத்தை நன்றாய் விளக்கி, கோதுமையைத்தம்முடைய களஞ்சியத்திலே சேர்த்துப்பதரை அவியாத அக்கினியினாற் சுட்டெரிப்பார் என்று சொன்னதுமன்றி,

௰௮. மற்றும் அநேகம் புத்திகளைச்சொல்லிச் சனங்களுக்குச்சுவிசேஷத்தை அறிவித்தான்.

௰௯. அப்படியிருக்குங் காலத்திலே *காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோது என்பவன் தன் சகோதரனும் பிலிப்பினுடைய மனைவியாகிய ஏரோதியாளின் நிமித்தமாகவும், மற்றப்பொல்லாங்குகளைச்செய்ததின் நிமித்தமாகவும் யோவானாற் கடிந்துகொள்ளப்பட்டபொழுது, * மத். ௰௪: ௩. மாற். ௬: ௰௭.

௨௰. தான் செய்துவந்த பொல்லாங்குகள் யாவையுமன்றி யோவானையுங் காவலில் அடைத்தான்.

௨௧. * சனங்கள் எல்லாரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட காலத்தில், இயேசுவானவரும் ஞானஸ்நானம் பெற்றார். அப்பொழுது அவர் செபம் பண்ணுகையில், வானந் திறக்கப்பட்டதும் அல்லாமல், * மத். ௩: ௰௩. மாற். ௧: ௯—௰௧.

௨௨. கண்ணுக்குத்தோன்றிய உருவாய், ஒரு புறாவைப்போலப்பரிசுத்த ஆவியானவர் அவர்மேல் இறங்கினார். * அன்றியும், நீர் எனக்கு அன்பான குமாரனாய் இருக்கிறீர். உம்மிற் பிரியமாய் இருக்கிறேன் என்று வானத்தில் இருந்து சத்தம் உண்டாயிற்று. * ௯: ௩௫.

௨௩. இப்படி இயேசுவானவர் ஏறக்குறைய முப்பது வயது உள்ளவராய் வெளிப்படத்தொடங்கினார்.

௨௪. சனங்கள் அவரை யோசேப்பின் குமாரன் என்று எண்ணினார்கள்.

௨௫ அந்த யோசேப்பு, எலியின் குமாரன். எலி, மார்தாத்தின் குமாரன். மாத்தாத்து, லேவியின்குமாரன். லேவி, மெல்கியின் குமாரன். மெல்கி, இயன்னாவின் குமாரன். இயன்னா, யோசேப்பின் குமாரன். யோசேப்பு, மத்தத்தியாவின் குமாரன். மத்தத்தியா, ஆமோசின் குமாரன். ஆமோசு, நாஹூமின் குமாரன். நாஹூம், எஸ்லியின் குமாரன். எஸ்லி, நங்காயின் குமாரன்.

௨௬. நங்காய், மாகாத்தின் குமாரன். மாகாத்து, மத்தத்தியாவின் குமாரன். மத்தத்தியா, சேமேயின் குமாரன். சேமேய், யோசேப்பின் குமாரன். யோசேப்பு, யூதாவின் குமாரன். யூதா, யோவன்னாவின் குமாரன்.

௨௭. யோவன்னா, இரேசாவின் குமாரன். இரேசா, சொரோபாபேலின் குமாரன். சொரோபாபேல், சலாத்தியேலின் குமாரன். சலாத்தியேல், நேரியின் குமாரன்.

௨௮. நேரி, மேல்கியின் குமாரன். மேல்கி, அத்தியின் குமாரன். அத்தி, கோசாமின் குமாரன். கோசாம், எல்மோதாமின் குமாரன். எல்மோதாம், ஏரின்குமாரன். ஏர், யோசேயின் குமாரன்.

௨௯. யோசே, எலியேசரின் குமாரன். எலியேசர், யோரீமின் குமாரன். யோரீம், மாத்தாத்தின் குமாரன். மாத்தாத்து, லேவியின் குமாரன்.

௩௰. லேவி, சிமியோனின் குமாரன். சிமியோன், யூதாவின் குமாரன். யூதா, யோசேப்பின் குமாரன். யோசேப்பு, யோனானுடைய குமாரன். யோனான், எலியாக்கீமின் குமாரன்.

௩௧. எலியாக்கீம், மேலேயாவின் குமாரன். மேலேயா, மயினானுடைய குமாரன். மயினான், மாத்தாத்தாவின் குமாரன். மாத்தாத்தா, * நாத்தானுடைய குமாரன். நாத்தான், தாவீதின் குமாரன். * ௨ சாமு. ௫: ௰௪.

௩௨. தாவீது, ஈசாயின் குமாரன். ஈசாய், ஓபேதின் குமாரன். ஓபேது, போவாசின் குமாரன். போவாசு, சல்மோனுடைய குமாரன். சல்மோன், நகசோனுடைய குமாரன்.

௩௩. நகசோன், அமினதாபின் குமாரன். அமினதாப், ஆராமின் குமாரன். ஆராம், எஸ்ரோமின் குமாரன். எஸ்ரோம், பாரேசின் குமாரன். பாரேசு, யூதாவின் குமாரன். யூதா, யாக்கோபின் குமாரன்.

௩௪. யாக்கோபு, ஈசாக்கின் குமாரன். ஈசாக்கு, ஆபிரகாமின் குமாரன். ஆபிரகாம், தாராவின் குமாரன். தாரா, நாகோரின் குமாரன்.

௩௫ நாகோர், சேருகின் குமாரன். சேருகு, இராகுவின் குமாரன். இராகு, பலேக்கின் குமாரன். பலேக்கு, ஏபேரின் குமாரன். ஏபேர், சாலாமின் குமாரன்.

௩௬. சாலாம், கேனானுடைய குமாரன். கேனான், அருப்பகுசாத்தின் குமாரன். அருப்பகுசாத்து, சேமின் குமாரன். சேம், நோவாவின் குமாரன். நோவா, இலாமேக்கின் குமாரன்.

௩௭. இலாமேகு, மெத்தூசலாகின் குமாரன். மெத்தூசலாகு, ஏனோக்கின் குமாரன். ஏனோக்கு, யாரேத்தின் குமாரன். யாரேத்து, மகலெலேயேலின் குமாரன். மகலெலேயேல், காயினானுடையகுமாரன். காயினான், ஏனோசின் குமாரன்.

௩௮. ஏனோசு, சேத்தினுடைய குமாரன். சேத்து, ஆதாமின் குமாரன். ஆதாம், பராபரனால் உண்டானவன்.

௪ அதிகாரம்.

[(௧) கிறிஸ்துச்சோதிக்கப்பட்டு உபவாசம் பண்ணினது. (௰௩) அவர் பசாசைச் செயித்தது. (௰௪) அவர் பிரசங்கிக்கத் தொடங்கினது. (௰௫) நாசரேத்தூரார் அவருடைய கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து, ஆச்சரியப்பட்டது. (௩௩) பசாசு பிடித்தவனையும், (௩௮) பேதுருவின் மாமியையும், (௪௰) பின்னும் பலவித வியாதிக்காரரையும் சொஸ்தம் பண்ணினது. (௪௧) பசாசுகள் அவரை இன்னார் என்று சொன்னதற்காகக்கடிந்து கொள்ளப்பட்டது. (௪௩) அவர் பட்டணங்கள்தோறும் பிரசங்கித்தது.]

* இயேசுவானவர் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டுத்திரும்பி, ஆவியினாலே வனாந்தரத்திற் கொண்டுபோகப்பட்டார். * மத். ௪: ௧—௰௧. மாற். ௧: ௰௨, ௰௩.

௨. அங்கே நாற்பதுநாள் பசாசினாலே (குற்றஞ்செய்யத்)தூண்டப்பட்டு, அந்நாள்களிலே ஒன்றும் புசியாமல் இருந்தார். * ௨ மோ. ௩௪: ௨௮.

௩. அவைகள் முடிந்தபின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது பசாசா

னவன் அவரை நோக்கி, நீ தேவனுடைய
குமாரனானால் இந்தக்கல்லை அப்பமாகும்ப
டி சொல்லென்றான்.
௪. அதற்கு இயேசுவானவர், * மனிதன்
அப்பத்தினாலே மாத்திரம் அல்ல, பராபர
னுடைய வார்த்தை எதுவோ அதினாலும்
பிழைப்பான் என்று எழுதியிருக்கின்றது
என்றார். * ௫ மோ. ௮: ௩.
௫. பின்பு பசாசானவன் அவரை உயர்ந்த
மலையின்மேற் கொண்டுபோய், ஒரு நிமி
ஷத்திலே உலகத்தின் இராச்சியங்களை எல்
லாம் அவருக்குக்காண்பித்து,
௬. இவை எல்லாவற்றின்மேலும் அதிகார
மும், இவைகளின் மகிமையும் எனக்கு ஒப்
புக்கொடுக்கப்பட்டு இருக்கிறபடியால்,
நான் இவைகளை உனக்குத்தருவேன். என்
இஷ்டப்படிக்கே நான் இவைகளை எவனுக்
குங் கொடுக்கிறேன்.
௭. ஆகையால், நீ என்னைத்தொழுது
கொண்டால், எல்லாம் உன்னுடையதாய்
இருக்குமென்று, அவருடனே சொன்னான்.
௮. இயேசுவானவர் அவனுக்குச்சொன்ன
து, சாத்தானே! நீ எனக்குப்பின்னாகப்
போ. * உன் தேவனாகிய பராபரனைத்தொ
ழுதுகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராத
னை செய்வாயாக என்று எழுதியிருக்கின்ற
தே என்றார். * ௫ மோ. ௫: ௭. ௰: ௨௰.
௯. அன்றியும் அவன் அவரை எருசலேம்
பட்டினத்திற்குக்கொண்டுபோய், அவரைத்
தேவாலயத்தின் உப்பரிகையின்மேல் நிறுத்
தி, உன்னைக்காப்பாற்றும்படிக்கு உன்னைக்
குறித்து, தம்முடைய தூதர்களுக்குக்கட்ட
ளை இடுவார் என்றும்,
௰. உன் கால் கல்லில் இடறாதபடிக்கு அ
வர்கள் தங்கள் கைகளில் உன்னை ஏந்திக்
கொண்டு போவார்கள் என்றும், * எழுதி
யிருக்கின்றது. * சங். ௯௧: ௰௧, ௰௨.
௰௧. ஆகையால், நீ தேவனுடைய குமார
னானால் இங்கேயிருந்து தாழக்குதியென்று
அவருடனே சொன்னான்.
௰௨. அதற்கு மாறுத்தரமாக * இயேசு
வானவர் சொன்னது; உன்னுடைய தேவ
னாகிய பராபரனைப்பரிட்சை பாராதிருப்
பாயாக என்று சொல்லி இருக்கின்றது
என்றார். * ௫ மோ. ௬: ௰௬.
௰௩. பசாசானவன் (அவரைத்) தூண்டிவி
டுகிறவைகளை எல்லாம் முடித்தபொழுது,
சிலகாலம் அவரை விட்டுப்போனான்.
௰௪. * பின்பு இயேசுவானவர் ஆவியினு
டைய பலத்தினாலே கலிலேயா நாட்டுக்குத்
திரும்பினார். அதைச்சூழ்ந்து இருக்கிற தே
சம் எங்கும் அவருடைய கீர்த்தி பரவிற்று.
* மத். ௪: ௰௭. மாற். ௧: ௰௪, ௰௫. ௨௧: ௨௨.
௰௫. அல்லாமலும் அவர்களுடைய செப
ஆலயங்களில் அவர் உபதேசம் பண்ணி,
எல்லாராலும் புகழ்ச்சி அடைந்தார்.
௰௬. அவர் தாம் வளர்ந்த நாசரேத்தூ
ருக்குப்போய், தமக்கு வழக்கமானபடி ஓய்
வுநாளிலே செப ஆலயத்திற் பிரவேசித்து
வாசிக்க எழுந்து நிற்கிறபொழுது,
௰௭. ஏசாயாதீர்க்கதரிசியின் புஸ்தகத்தை
அவருக்குக்கொடுத்தார்கள். அந்தப்புஸ்த
கத்தை அவர் விரித்தபொழுது,
௰௮. பராபரனுடைய ஆவி என்னில் இருக்
கின்றது. தரித்திரருக்கு நான் சுவிசேஷத்
தை அறிவிக்கும்படி எனக்கு அபிஷேகம்
பண்ணினார். நருங்குண்டவர்களைக்குணமாக்
கும்படிக்கும், சிறைப்பட்டவர்களுக்கு விடு
தலையையும், குருடருக்குப்பார்க்குதலையும்
பிரசங்கிக்கும்படிக்கும், நொறுங்குண்டவர்
களை விடுதலையாக்கி,
௰௯. பராபரனாலே அங்கிகரிக்கப்படுவதற்
கான வருஷத்தைப்பிரசங்கிக்கும்படிக்கும்
என்னை அனுப்பினார் என்று * எழுதியிருந்
த இடத்தைக்கண்டு, * ஏசா. ௬௧: ௧—௩.
௨௰. புஸ்தகத்தைச்சுருட்டி, ஊழியக்கா
ரன் இடத்திற்கொடுத்து உட்கார்ந்தார்.
செப ஆலயத்திலுள்ள எல்லாருடைய கண்
களும் அவர்மேலே நோக்கமாய் இருந்தன.
௨௧. அப்பொழுதவர் அவர்களுடனே பே
சத்தொடங்கி, நீங்கள் கேட்ட வேதவாக்
கியம் இன்றைத்தினமே நிறைவேறிற்று
என்றார்.
௨௨. எல்லாரும் அவருக்கு நல்ல சாட்சி
கொடுத்து, அவர் திருவாய் மலர்ந்தருளிச்
செய்த கிருபையுள்ள வசனங்களைக்குறித்து
ஆச்சரியப்பட்டு, பின்பு இவன் யோசேப்
பினுடைய குமாரன் அல்லவோ என்றார்கள்.
௨௩. அவர்களுடனே அவர் சொன்னது,
வயித்தியனே, உன்னைத்தானே குணமாக்கு
என்கிற வழக்கச்சொல்லையும், நாங்கள்
கேள்விப்பட்டபடி, கப்பர்நாகூமில் (உன்
னாலே) செய்யப்பட்டதெதுவோ, அதை
உன் ஊராகிய இவ்விடத்திலேயுஞ் செய்
என்பதையும், நீங்கள் என்னுடனே சொல்
லுவீர்கள் என்பதற்குச்சந்தேகம் இல்லை.
௨௪. அப்படியிருக்க, * தீர்க்கதரிசியான
வன் தன் ஊரிலே அங்கிகரிக்கப்பட்டவன்
அல்லவென்று, மெய்யாகவே உங்களுக்குச்
சொல்லுகிறேன். * யோவா. ௪: ௪௪.
௨௫. அன்றியும், * எலியாவின் காலத்தி
லே மூன்றுவருஷமும், ஆறுமாதமும் வா
னம் அடைக்கப்பட்டு, தேசம் எங்கும் மி
குந்த பஞ்சமுண்டாய் இருந்தபொழுது,
இஸ்ரவேலருக்குள்ளே அநேகங் கைம்பெண்
களிருந்தும், * ௧ இரா. ௰௭: ௧—௯.
௨௬. சீதோன் நாட்டிலுள்ள சரேப்பத்
தா ஊரிலிருந்த ஒரு கைம்பெண்ணிடத்திற்

கேயன்றி, மற்றொருத்தியின் இடத்துக்கும் எலியா வென்பவர் அனுப்பப்படவில்லை.

௨௭. அல்லாமலும், * எலிசா என்னுந் தீர்க்கதரிசியின் காலத்திலே இஸ்ரவேலருக்குள்ளே அநேகங் குஷ்டரோகிகள் இருந்தும், சீரியு தேசத்தானாகிய நாகமானேயன்றி, அவர்களில் வேறொருவனுஞ் சுத்தமாக்கப்படவில்லை என்று சத்தியத்தின்படியே யுங்களுக்குச்சொல்லுகிறேன் என்றார். * ௨ இரா. ௫: ௧௪.

௨௮. செப ஆலயத்தில் இருந்த எல்லாரும், இவைகளைக்கேட்டபொழுது,

௨௯. கோபத்தால் நிரப்பப்பட்டு எழுந்து அவரை யூருக்குப்புறம்பே தள்ளி, தங்கள் ஊருக்கடுத்த செங்குத்தான மலையின் சிகரத்தில் இருந்து, அவரைத்தாழத்தள்ளும்படிக்கு அவ்விடத்திற்குக்கொண்டுபோனார்கள்.

௩௰. அவர் * அவர்கள் மத்தியில் நின்று கடந்துபோனார். * யோவா. ௮: ௫௯.

௩௧. பின்பு அவர் கலிலேயாதேசத்திலுள்ள கப்பர்நாகூம் பட்டினத்திற்குப்போய், ஓய்வுநாள்களில் சனங்களுக்கு உபதேசம் பண்ணினார்.

௩௨. * அவருடைய வசனம் அதிகாரமுள்ளதாய் இருந்தபடியினாலே அவர்கள் அவருடைய உபதேசத்தைக்குறித்துப்பிரமித்தார்கள். * மத். ௭: ௨௮, ௨௯. யோவா. ௭: ௪௬.

௩௩. * அல்லாமலுஞ் செப ஆலயத்திலே அசுத்தமான ஆவியுள்ள ஒரு மனிதன் இருந்தான். * மாற். ௧: ௨௩—௩௪.

௩௪. அவன் (அவரைக்கண்டு,) ஐயோ! நாசரேத்தூராகிய இயேசுவே! எங்களுக்கும், உமக்கும் என்ன? எங்களைக்கெடுக்கவா வந்தீர். உம்மை யறிந்திருக்கிறேன். நீர் பராபரனுடைய * பரிசுத்தரே! என்று மிகுந்த சத்தத்துடனே கூப்பிட்டான். * ௧: ௩௫.

௩௫. அதற்கு இயேசுவானவர், நீ பேசாமல் இவனை விட்டுப்போவென்று அதை அதட்டினார். அப்பொழுது பசாசு அவனைச்சனங்களுக்குள்ளே தள்ளி, அவனுக்கு ஒரு சேதமுஞ் செய்யாமல் அவனை விட்டுப்போயிற்று.

௩௬. எல்லாரும் பிரமிப்படைந்து இவர் அதிகாரத்தோடும், வல்லமையோடும் அசுத்த ஆவிகளுக்குக்கட்டளையிட அவைகளும் புறப்படுகின்றனவே. இதென்ன வசனம் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

௩௭. அவருடைய கீர்த்தி அத்தேசத்திலுள்ள இடங்கள் யாவிலும் பிரசித்தமாயிற்று.

௩௮. பின்பு அவர்செப ஆலயத்தை விட்டு, சீமோன் என்பவனுடைய வீட்டுக்குப்போனார். * சீமோனுடைய மாமி மிகுந்த சுரமாய்க்கிடந்தாள். அவளுக்காக அவரை வேண்டிக்கொண்டார்கள். * மத். ௮: ௧௪, ௧௫.

௩௯. அப்பொழுது அவர் அவள் இடத்திற்குனிந்து நின்று சுரத்தை அதட்டினார். அது அவளை விட்டு நீங்கிற்று. உடனே யவள் எழுந்திருந்து அவர்களுக்குப்பணிவிடைசெய்தாள்.

௪௰. பின்பு சூரியன் அஸ்தமித்தபொழுது * அநேக சனங்கள் தங்களிடத்தில் இருந்த பல வியாதிகளுள்ளவர்களை அவரிடத்திற்குக்கொண்டுபோனார்கள். அவர்கள் எல்லார்மேலும் அவர் தம்முடைய கைகளை வைத்து அவர்களைக்குணமாக்கினார். * மத். ௮: ௧௬.

௪௧. * அநேகரிடத்தில் இருந்து பசாசுகளும் புறப்பட்டன. அவைகள் நீர் பராபரனுடைய குமாரனாகிய கிறிஸ்தென்று கூப்பிட்டன. அவர் தம்மைக்கிறிஸ்தென்று அவைகள் அறிந்தபடியினாலே அவைகள் பேசுகிறதற்கு இடங்கொடாமல் அதட்டினார். * மாற். ௧: ௩௫—௩௯.

௪௨. உதயமானபொழுது அவர் புறப்பட்டு வனாந்தரமான இடத்திற்குப்போனார். சனங்கள் அவரைத்தேடி அவரிடத்திற்போய்த்தங்களை விட்டுப்போகாதபடிக்கு அவரை நிறுத்திக்கொண்டார்கள்.

௪௩. அதற்கவர் அவர்களை நோக்கி, நான் மற்ற ஊர்களுக்கும் பராபரனுடைய ஆளுகையைச்சுவிசேஷமாய் அறிவிக்க வேண்டும். அதற்காகவே யனுப்பப்பட்டேன் என்றார்.

௪௪. அந்தப்படி யவர் கலிலேயாதேசத்திலுள்ள செப ஆலயங்களிற் பிரசங்கம்பண்ணிக்கொண்டுவந்தார்.

௫ அதிகாரம்.

[(௧) கிறிஸ்து பேதுருவின் படவில் இருந்து சனங்களைப்போதித்தது. (௪) மீன்கள் அதிசயமாய்ப்பிடிக்கப்பட்டதால் அவனும், அவன் தோழரும் மனிதரைப்பிடிக்கிறவர்களாகுவதைக் காண்பித்தது. (௰௨) குஷ்டரோகியைச்சுத்தஞ் செய்தது. (௰௬) வனாந்தரத்திற் செபம் பண்ணினது. (௰௮) திமிர்வாதக்காரனைக்குணமாக்கினது. (௨௭) ஆயக்காரனான மத்தேயுவை அழைத்தது. (௨௯) ஆத்தும வைத்தியனாய் இருந்த கிறிஸ்து பாவிகளோடே புசித்தது. (௩௪) தாம் பரமண்டலத்துக்கேறின பிற்பாடு, அப்போஸ்தலர்கள் உபவாசிக்கவேண்டியதையும், துன்பங்களையு முன்னறிவித்தது. (௩௬) பலவீன விசுவாசிகளைப்பழைய து

ருத்திகளுக்கும், பழைய வஸ்திரங்களுக்
கும் ஒப்பாக்கினது.]

ஒருகாலத்திலே சனங்கள் பராபரனு
டைய வசனத்தைக்கேட்கும்படிக்கு,
அவரை நெருக்கி இருக்கிறபொழுது, அவர்
கெனேசரேத்தென்னப்பட்ட சிறியகடலின்
அருகே நின்று,
௨. கடற்கரையில் இரண்டுபடவுகளில் இ
ருந்து மீன்பிடிக்கிறவர்கள் இறங்கி, வலை
களை யலசிக்கொண்டிருக்க, அவ்விரண்டுப
டவுகளையுங் கண்டு,
௩. அவைகளில் ஒன்றாகிய சீமோனுடைய
படவிலேறி அதைக்கரையில் இருந்து சற்
றே தள்ளும்படிக்கு அவனை வேண்டிக்கொ
ண்டு, * அதிலே உளுக்காந்து அங்கே
இருந்து சனங்களுக்கு உபதேசம்பண்ணி
னார். * மாற். ௪: ௧.
௪. அவர் உபதேசித்து முடித்த பின்பு
சீமோனை நோக்கி, நீ ஆழத்திலே தள்ளிக்
கொண்டுபோய், மீன்பிடிக்கும்படிக்கு உங்
கள் வலைகளைத்தாழவிடுங்கள் என்றார்.
௫. சீமோன் அவருக்கு மாறுத்தரமாகச்
சொன்னது, ஐயரே! இராமுழுவதும் நாங்
கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்பட
வில்லை. அப்படியிருந்தும் உம்முடைய
சொல்லின்படி வலையைத்தாழ விடுகிறேன்
என்றான்.
௬. அந்தப்படி யவர்கள் செய்தபொழுது
அவர்களுடைய வலை கிழிந்துபோகத்தக்க
தாக மிகுந்த மீன்களைச்சேர்த்துக்கொண்
டார்கள்.
௭. அப்பொழுது மற்றப்படவில் இருந்த
பங்காளிகள் வந்து தங்களுக்கு உதவிசெய்
யும்படிக்கு, அவர்களுக்குச் சமிக்கைகாட்
டினார்கள். அவர்கள் போய் இரண்டு படவு
களையும் அமிழ்த்தத்தக்க பாரமாக நிரப்பி
னார்கள்.
௮. சீமோன் பேதுரு அதைக்கண்டு இயே
சுவினுடைய முழங்கால்களின் அருகே வி
ழுந்து, ஆண்டவரே! நான் பாவியாய் இ
ருக்கிறபடியினாலே நீர் என்னைவிட்டுப்போ
க வேண்டும் என்றான்.
௯. அவர்கள் அவ்வளவு மீன்களைப்பிடித்
ததின் நிமித்தம், அவனுக்கும், அவனோடி
ருந்த யாவருக்குந் திகிலுண்டானபடியி
னாலே அப்படிச்சொன்னான்.
௰. சீமோனுடைய தோழராகிய செபே
தேயுவின் குமாரராகிய யாக்கோபுக்கும்,
யோவானுக்கும் அந்தப்படியே உண்டா
யிற்று. அப்பொழுது இயேசுவானவர் சீ
மோனை நோக்கி, நீ பயப்படவேண்டாம்.
இதுமுதல் நீ மனிதரைப்பிடிக்கிறவனாய்
இருப்பாய் என்றார்.
௰௧. பின்பு அவர்கள் படவுகளைக்கரையோ
ரத்திலே கொண்டுபோய் நிறுத்தி, எல்லா
வற்றையும் விட்டு அவருக்குப்பின்சென்றார்
கள்.
௰௨. * மேலும் அவர் ஒரு ஊரில் இருக்
கையிற் குஷ்டரோகம் நிறைந்த ஒரு மனி
தன் இயேசுவானவரைக்கண்டு முகங்குப்புற
விழுந்து, ஆண்டவரே! உமக்குச்சித்தமுண்
டானால் என்னைச்சுத்தமாக்க உம்மாலாம்
என்று அவரை வேண்டிக்கொண்டான்.
* மாற். ௧: ௪௰—௪௫.
௰௩. அவர் தமது கையை நீட்டி அவனைத்
தொட்டு எனக்குச்சித்தமுண்டு, சுத்தமாகு
என்றார். உடனே குஷ்டரோகம் அவனை
விட்டு நீங்கிற்று.
௰௪. பின்பு அவர் அவனைநோக்கி, நீ இதை
யொருவருக்குஞ் சொல்லாமற்போய் உன்
னை ஆசாரியனுக்குக்காண்பித்து, சனங்க
ளுக்குச்சாட்சியாக * மோசே நியமித்த
படியே நீ சுத்தமானதைக்குறித்துப்பலி
செலுத்து என்று கட்டளையிட்டார். * ௩
மோ. ௰௪: ௨௨.
௰௫. அப்படியிருந்தும், அவருடைய கீர்த்
தி யதிகமாகப்பரவிற்று. அநேக சனங்கள்
அவருடைய உபதேசத்தைக்கேட்கும்படிக்
கும், அவராலே தங்கள் வியாதிகளில் நின்று
சுகம் அடைந்துகொள்ளும்படிக்குங் கூடி
வந்தார்கள்.
௰௬. அவர் வனாந்தரத்திலே தனித்துப்
போய்ச் * செபம் பண்ணிக்கொண்டிருந்
தார். * மாற். ௧: ௩௫.
௰௭. அன்றியும், ஒருநாளிலேயவர் உபதே
சித்துக்கொண்டிருக்கிறபொழுது, கலிலே
யா நாட்டிலும், யூதேயா நாட்டிலுமுள்ள
சகல கிராமங்களில் இருந்தும், எருசலேம்
பட்டணத்தில் இருந்தும் வந்த பரிசேய
ரும், நியாய சாஸ்திரிகளும் உளுக்காந்
திருந்தார்கள். பிணியாளிகளைக்குணமாக்கத்
தக்கதாக, கர்த்தருடைய பலம் உண்டா
யிற்று. * மாற். ௨: ௧—௰௨.
௰௮. அப்பொழுது சில மனிதர் * திமிர்
வாதக்காரன் ஒருவனைப்படுக்கையோடே
எடுத்துக்கொண்டு உள்ளேபோகவும், அ
வர் முன்பாக வைக்கவும் வகைதேடி, *
மத். ௯: ௨—௮.
௰௯. மிகுந்த கூட்டம் இருந்தபடியினா
லே அவனை யுளளே கொண்டுபோகிறதற்
கு இடங் காணாமல், வீட்டின்மேல் ஏறித்
தட்டோடுகளின் வழியாய்ப்படுக்கையுட
னே கூட நடுவிலே இயேசுவுக்கு முன்பா
க அவனை இறக்கினார்கள்.
௨௰. அவர்களுடைய விசுவாசத்தை அ
வர் கண்டு மனிதனே, * உன் பாவங்கள்
உனக்கு மன்னிக்கப்பட்டனவென்று அவ
னுடனே சொன்னார். * ௭: ௪௮.
௨௰௧. அப்பொழுது வேதபாரகரும், பரி

சேயரும் யோசனைபண்ணிச்சொன்னது, தேவதூஷணங்களைச்சொல்லுகிற இவன் யாவன்? பராபரன் ஒருவரேதவிரப்பாவங்களை மன்னிக்கத்திராணியுள்ளவர் யாரென்றார்கள்?

௨௨. இயேசுவானவர் அவர்களுடைய யோசனைகளை அறிந்து, அவர்களை நோக்கி நீங்கள் உங்கள் இருதயங்களிற் சிந்திக்கிறதென்ன!

௨௩. உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டனவென்று சொல்லுகிறதோ, எழுந்து நடவென்று சொல்லுகிறதோ எது எளிது?

௨௪. பூமியிலே பாவங்களை மன்னிக்கிறதற்கு மனிதனுடைய குமாரன் அதிகாரமுடையவன் என்று நீங்கள் அறியும்படிக்கு, (பாருங்கள் என்று) சொல்லித்திமிர்வாதக்காரனை நோக்கி, நீ எழுந்து உன் படுக்கையை யெடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப்போவென்று உனக்குச்சொல்லுகிறேன் என்றார்.

௨௫. உடனே யவன் அவர்களுக்கு முன்பாக எழுந்திருந்து தன் படுக்கையை யெடுத்துக்கொண்டு பராபரனைப்புகழ்ந்து தன் வீட்டுக்குப்போனான்.

௨௬. ஆதலால் எல்லாரும் பிரமிப்படைந்து பராபரனைப்புகழ்ந்தார்கள். அல்லாமலும் அவர்கள் பயத்தால் நிறையப்பட்டு அதிசயமானவைகளை இன்றுகண்டோம் என்றார்கள்.

௨௭. * அதின் பின்பு அவர் புறப்பட்டு ஆயத்துறையில் உளுக்காந்திருந்த லேவியென்னும், ஆயக்காரனைக்கண்டு நீ யெனக்குப்பின்சென்றுவா என்றார். * மத். ௯: ௯—௰௩. மார். ௨: ௰௪—௨௨.

௨௮. அந்தப்படி அவன் எல்லாவற்றையும் விட்டு எழுந்திருந்து அவருக்குப்பின் சென்றான்.

௨௯. அல்லாமலும் அந்த லேவி யென்பவன் தன் வீட்டிலே அவருக்குப்பெரிய விருந்து பண்ணினான். அநேக ஆயக்காரரும், மற்றப்பேர்களும் அவர்களுடனே பந்தி இருந்தார்கள்.

௩௰. உடனே அவ்விடத்து வேதபாரகரும், பரிசேயரும் அவருடைய சீஷருக்கு விரோதமாக, * முறுமுறுத்து என்னத்தினாலே நீங்கள் ஆயக்காரரோடும், பாவிகளோடும் போசன பானம் பண்ணுகிறீர்கள் என்றார்கள். * ௭: ௩௪.

௩௧. இயேசுவானவர் அவர்களுக்கு மாறுத்தரமாகச்சொன்னது, சொஸ்தமுள்ளவர்களுக்கு வயித்தியன் வேண்டுவதில்லை. வியாதி யுள்ளவர்களுக்கே அவன் வேண்டும்.

௩௨. மேலும் நீதிமான்களை அல்ல, பாவிகளையே மனந்திரும்பும்படிக்கு அழைக்க வந்தேன் என்றார்.

௩௩. பின்பு, * அவர்கள் அவரை நோக்கி, யோவானுடைய சீஷரும், பரிசேயருடைய சீஷரும் அநேகந்தரம் உபவாசம் பண்ணி, செப மந்திரங்களை, சொல்லிக்கொண்டு வருகிறார்களே, உம்முடைய சீஷர் போசன பானம் பண்ணலாமா வென்றார்கள்? * மத். ௯: ௰௪—௰௭.

௩௪. அதற்கவர் சொன்னது, மணவாளன் கலியாணத்திற்கு வந்த மனிதரோடிருக்குங் காலத்திலே நீங்கள் அவர்களை உபவாசம் பண்ணும்படி செய்யக்கூடுமோ!

௩௫. மணவாளன் அவர்களை விட்டு நீங்கப்படும் நாள்கள் வரும். அப்பொழுது அவர்கள் உபவாசிப்பார்கள் என்று சொல்லி,

௩௬. பின்னும் உவமையாய்ச்சொன்னது, ஒருவனும் புதியவஸ்திரத்துண்டைப்பழைய வஸ்திரத்தோடே யிணைக்கமாட்டான். இணைத்தாற் புதியதானது (பழையதைக்) கிழிக்கும். அல்லாமலும் புதிய வஸ்திரத்துண்டு பழையதற்கு ஒவ்வமாட்டாது.

௩௭. அன்றியும் ஒருவனும் புதிய திராட்ச இரசத்தைப்பழைய துருத்திகளில் வார்த்து வைக்கமாட்டான். வைத்தால் புதிய இரசந் துருத்திகளைக்கிழித்துப்போடும் அப்பொழுது அது சிந்திப்போம். துருத்திகளுங் கெட்டுப்போம்.

௩௮. புதிய இரசத்தைப்புதிய துருத்திகளில் வார்த்துவைத்தால் இரண்டுங் காத்துக்கொள்ளப்படும்.

௩௯. அல்லாமலும் பழைய இரசத்தைப் பானம் பண்ணுகிறவன் உடனே புதிய இரசத்தை விரும்பமாட்டான். பழைய இரசம் அதிக நல்லதென்று சொல்வானே என்றார்.

௬ அதிகாரம்.

[(௧) ஓய்வுநாளை ஆசரிப்பதைக்குறித்துப் பரிசேயருடைய குருட்டாட்டத்தைக்கிறிஸ்து வேதத்தினாலும், புத்தியினாலும், அற்புதத்தினாலுங் கண்டித்தது. (௰௩) பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத்தெரிந்தேற்படுத்தினது. (௰௭) பிணியாளிகளைக்குணமாக்கினது. (௨௰) ஆசீர்வாதங்களையும், சாபங்களையுங் காட்டி, (௨௭) பகைஞரைச்சிநேகிக்கவேண்டிய விதத்தையும், (௪௬) அஸ்திவாரம் இல்லாத வீடு விழுந்துபோவதுபோலச்சோதனையின் காலத்தில் நாம் விழாமல் இருக்க வசனத்தைக்கேட்பதோடே நற் கிரியைகளான கிழப்படிகளுங் கலந்திருக்க வேண்டும் என்பதையுஞ் சனங்களுக்கு முன்பாக, சீஷர்களுக்குப் போதித்தது.]

புளியாத அப்பங்களை, சாப்பிடுகிற நாள்களில் இரண்டாம் நாளுக்குப் பின் வந்த முதலாம் ஒய்வு நாளிலே, அவர் * பயிர்வழியே நடந்து போகிறபொழுது, அவருடைய சீஷர் கதிர்களைக்கொய்து கைகளினாலே கசக்கித்தின்றார்கள். * மத். ௰௨: ௧—௮. மாற். ௨: ௨௩—௨௮.

௨. அவர்களுடனே பரிசேயரிற் சிலர் ஒய்வுநாள்களிற் செய்யத்தகாததை நீங்கள் செய்யவேண்டுவதென்ன வென்றார்கள்.

௩. * அவர்களுக்கு மாறுத்தரமாக இயேசுவானவர் சொன்னது, தாவீதும், அவனோடிருந்தவர்களும் பசியாய் இருந்த பொழுது அவன் தேவாலயத்திற் பிரவேசித்து, * ௩ மோ. ௨௪: ௫—௯.

௪. ஆசாரியர் மாத்திரமே யன்றி மற்றொருவரும் புசிக்கத்தகாத தேவசமுகத்தப்பங்களை எடுத்துப்புசித்துப்பின்பு தன்னோடிருந்தவர்களுக்குங் கொடுத்தான் என்று, * நீங்கள் வாசிக்கவில்லையா என்றுசொல்லி, * ௧ சாமு. ௨௧: ௬.

௫. பின்பு மனிதனுடைய குமாரன் ஒய்வுநாளைக்குறித்தும் ஆண்டவராய் இருக்கிறார் என்று அவர்களுடனே சொன்னார்.

௬. * மற்றொரு ஒய்வு நாளிலே அவர் செப ஆலயத்திற் பிரவேசித்து உபதேசித்தார். அங்கே சூம்பின வலதுகையை உடைய ஒரு மனிதன் இருந்தான். * மத். ௰௨: ௯—௰௪. மாற். ௩: ௧—௬.

௭. அப்பொழுது வேதபாரகரும், பரிசேயரும் அவரிடத்திற் குற்றங் காணும்படிக்கு ஒய்வுநாளிலுங் குணமாக்குவாரா வென்று, * எண்ணி அவரை நோக்கிக்காத்திருந்தார்கள். * ௰௪: ௧—௩.

௮. அவர்களுடைய யோசனைகளை அவர் அறிந்து சூம்பின கையை யுடையவனை நோக்கி, நீ எழுந்து நடுவே நில்லென்றார். அந்தப்படி அவன் எழுந்து நின்றான்.

௯. அப்பொழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி, நான் உங்களிடத்தில் ஒன்று கேட்கிறேன். ஒய்வு நாள்களில் நன்மை செய்கிறதோ! தீமை செய்கிறதோ? சீவனைக்காக்கிறதோ? அழிக்கிறதோ? எது நியாயம் என்று சொல்லி,

௰. அவர்கள் எல்லாரையுஞ் சுற்றிப்பார்த்து அந்த மனிதனை நோக்கி, உன் கையை நீட்டென்றார். அவன் அப்படிச்செய்தான். உடனே அவனுடைய கை மறு கையைப் போலச்சொஸ்தமாயிற்று.

௰௧. பின்பு அவர்கள் மதியில்லாமையால் நிறையப்பட்டு இந்த இயேசுவை யென்ன செய்யலாம் என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்.

௰௨. * அன்றியும் அந்நாள்களில் அவர் செபம்பண்ணும்படிக்கு மலைக்குப்போய் இராத்திரி முழுவதும் பராபரனை நோக்கிச்செபம்பண்ணிக்கொண்டு, * மாற். ௩: ௰௩—௰௯.

௰௩. பின்பு உதயம் ஆகிறபொழுது தம்முடைய சீஷரை வரவழைத்து,

௰௪. * அவர்களிற் பேதுரு என்று தாம் பேரிட்ட சீமோனையும், அவனுடைய சகோதரனாகிய அந்திரேயாவையும், யாக்கோபையும், யோவானையும், பிலிப்பையும், பர்த்தொலொமேயுவையும், * மத். ௰: ௨—௪.

௰௫. மத்தேயுவையும், தோமாவையும், அல்பேயுவினுடைய குமாரனாகிய யாக்கோபையும், வைராக்கியன் என்னப்பட்ட சீமோனையும்,

௰௬. யாக்கோபின், * சகோதரனாகிய யூதாவையும், பின்பு தம்மைக்காட்டிக்கொடுத்த ஸ்காரியோத்தூரானாகிய யூதாவையும் இப்படிப்பன்னிரண்டுபேரையுந் தெரிந்துகொண்டு அவர்களை அப்போஸ்தலர் என்று பேர்சொல்லி, * யூதா. ௧: ௧. வசனம்.

௰௭. பின்பு அவர்களுடனே கூட இறங்கிச்சமனான ஒரு இடத்திலே நின்றார். அங்கே அவருடைய சீஷரில் அநேகம்பேர் அவருடைய உபதேசத்தைக்கேட்டுத் தங்கள் வியாதிகளினின்று குணமாக்கப்படும்படிக்கு யூதேயாநாட்டின் திசைகள் யாவற்றிலும் எருசலேம் நகரத்திலுந் தீரு, சீதோன் பட்டினங்களுள்ள கடலோரத்திலும் இருந்து அநேக சனங்களும் வந்திருந்தார்கள்.

௰௮. அசுத்தமான ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களுங் கூடிவந்திருந்து ஆரோக்கியம் அடைந்தார்கள்.

௰௯. வல்லமை அவரில் இருந்து புறப்பட்டு, எல்லாரையுங் குணமாக்கினபடியினாலே சனங்கள் எல்லாரும் அவரைத்தொடப்பார்த்தார்கள்.

௨௰. அப்பொழுது அவர் தம்முடைய சீஷர்களை நோக்கிப்பார்த்துச்சொன்னதாவது; * தரித்திரராகிய நீங்கள் பராபரனுடைய இராச்சியத்தை உடையவர்களாகையால் நீங்கள் பாக்கியவான்கள் * ௫: ௬, ௭. மத். ௫: ௨.

௨௧. இப்பொழுது பசியாய் இருக்கிற நீங்கள் (இனித்) திர்ப்தி யடைவீர்களாகையால் நீங்கள் பாக்கியவான்கள். இப்பொழுது, * அழுகிற நீங்கள் (இனி) நகைப்பீர்களாகையால் நீங்கள் பாக்கியவான்கள். * ஏசா. ௬௧: ௧—௩.

௨௨. மனிதனுடைய குமாரனிமித்தமாக சனங்கள் * உங்களைப்பகைத்து, உங்

களை விலக்கி நிந்தைப்படுத்தி, உங்கள் நாமத்தைப்பொல்லாததென்று தள்ளிப்போடும்பொழுது நீங்கள் பாக்கியராய் இருப்பீர்கள். * ௧ பேது. ௪: ௰௪.

௨௩. பரமண்டலத்திலே உங்கள் பலன் மிகுதியாய் இருப்பதால் அக்காலத்திலே, * நீங்கள் சந்தோஷப்பட்டுக்களிகூருங்கள். அவர்களுடைய பிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள். * அப். ௭: ௪௧.

௨௪. ஐசுவரியவான்களாகிய நீங்கள் உங்கள் * நன்மைகளை அடைந்து தீர்ந்தபடியால், ஐயோ உங்களுக்கு வேதனை வரும். * ௰௬: ௨௫.

௨௫. திர்ப்தியுள்ளவர்களாகிய நீங்கள் பசியை அடைவீர்களாகையால் ஐயோ, உங்களுக்கு * வேதனை வரும். இப்பொழுது நகைக்கிற நீங்கள் (இனித்) துக்கப்படுவீர்களாகையால் ஐயோ உங்களுக்கு வேதனை வரும். * ஏசா. ௬௫: ௰௩, ௰௪.

௨௬. எல்லா மனிதர்களும் உங்களைக்குறித்துப்புகழ்ச்சியாய், பேசும்பொழுது ஐயோ உங்களுக்கு வேதனை வரும். அவர்களுடைய பிதாக்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்.

௨௭. அன்றியும் (எனக்குச்) செவிகொடுக்கிற உங்களுக்கு நான் கட்டளை இடுகிறதாவது; உங்கள் * சத்துருக்களில் அன்பு கூர்ந்து உங்களைப்பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்து, * மத்தே. ௫: ௪௪, ௪௫.

௨௮. உங்களைச்சபிக்கிறவர்களை ஆசீர்வதித்து உங்களை வருத்தப்படுத்துகிறவர்களுக்காகச்செபம் பண்ணுங்கள்.

௨௯. * உன் கன்னத்தில் அறைகிறவனுக்கு மறு கன்னத்தையுங் கொடு. உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளுகிறவனுக்கு உன் அங்கியையும் எடுத்துக்கொள்ளத்தடைபண்ணுதிருப்பாயாக. * மத். ௫: ௩௯—௪௧.

௩௰. * உன்னை வேண்டிக்கொள்ளுகிற யாவனுக்குங் கொடுப்பாயாக. உன்னுடையதை ஒருவன் எடுத்துக்கொண்டால் அவனிடத்தில் அதைத்திரும்பக்கேளாதிருப்பாயாக. * மத். ௫: ௪௨.

௩௧. * சனங்கள் உங்களுக்குச்செய்யும்படி நீங்கள் விரும்புகிறதெப்படியோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச்செய்யக்கடவீர்கள். * மத். ௭: ௰௨.

௩௨. * உங்களைச்சிநேகிக்கிறவர்களை (மாத்திரம்) நீங்கள் சிநேகித்தால் உங்களுக்கு என்ன பலன் வரும்? பாவிகளுந் தங்களைச்சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கருர்களே. * மத். ௫: ௪௬, ௪௭.

௩௩. உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கு (மாத்திரம்) நீங்கள் நன்மை செய்தால் உங்களுக்கு என்ன பலன் வரும்?

௩௪. பாவிகளும் அப்படிச்செய்கிருர்களே, திரும்பக்கொடுப்பார்கள் என்று நீங்கள் நம்பி அப்படிச்செய்பவர்களுக்கு (மாத்திரம்) கடன் கொடுத்தால் உங்களுக்கு என்ன பலன் வரும்! பாவிகளுஞ் சரியாய்த் திரும்ப அடைந்து கொள்ளும்படியாய் மற்றப்பாவிகளுக்குக்கடன் கொடுக்கிருர்களே.

௩௫. ஆகையால் உங்கள் சத்துருக்களைச் சிநேகித்து நன்மைசெய்து கைமாறெண்ணுமற் கடன் கொடுங்கள். அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாய் இருக்கும். * அல்லாமலும் நன்றி அறியாதவர்கள் மேலும், பொல்லாதவர்கள் மேலுந் தயவாய் இருக்கிற உன்னதமானவருக்கு, பிள்ளைகளாய் இருப்பீர்கள். * மத். ௫: ௪௪, ௪௫.

௩௬. ஆகையால் உங்கள் பிதா, * இரக்கமுள்ளவராய் இருக்கிறதுபோல நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள். * மத். ௫: ௪௮.

௩௭. மற்றவர்களை, * குற்றவாளிகள் என்று எண்ணிக்கொள்ளாதிருங்கள். அப்பொழுது நீங்களுங் குற்றவாளிகள் என்று எண்ணிக்கொள்ளப்படாதிருப்பீர்கள். மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாக்கும்படி, தீராதிருங்கள் அப்பொழுது நீங்களும் ஆக்கினைக்குள்ளாகும்படி தீர்க்கப்படாதிருப்பீர்கள். விடுதலை பண்ணுங்கள். அப்பொழுது நீங்களும் விடுதலை யாக்கப்படுவீர்கள். * மத். ௭: ௧.

௩௮. கொடுங்கள், * அப்பொழுது உங்களுக்குங் கொடுக்கப்படும். அமுக்கிக்குலுக்கிச்சரிந்து விழும்படி நன்ருய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள். நீங்கள் அளக்கிற அளவு எதுவோ அதினுலே உங்களுக்குத்திரும்ப அளக்கப்படுமே என்ருர். * வாக். ௰௯: ௰௭.

௩௯. பின்னும் அவர் உவமையாய் அவர்களுடனே சொன்னதாவது; * குருடனுக்குக்குருடன் வழிகாட்டலாமா? இருவரும் பள்ளத்தில் விழுவார்கள் அல்லவா? * மத். ௰௪: ௰௫.

௪௰. சீஷன் தன் போதகருக்கு மேற்பட்டவன் அல்ல. நிறைவாய்க்கற்றுக்கொண்டவனே தன் போதகரைப்போல் இருப்பான்.

௪௧. * நீ உன்னுடைய கண்ணில் உள்ள உத்திரத்தை யுணராமல் உன் சகோதரனுடைய கண்ணில் உள்ள கிராயைப்பார்கிறது என்ன! * மத். ௭: ௩—௫.

௪௨. அல்லது நீ உன் கண்ணிலுள்ள உத்திரத்தைக்காணுமல் இருக்க நீ உன் சகோதரனை நோக்கிச்சகோதரனே, நான் உன்

கண்ணில் உள்ள சிராயை எடுத்துப்போடு
கிறேன். இடங்கொடு என்று எப்படிச்
சொல்லலாம்! வஞ்சகனே, முன்பு நீ உன்
கண்ணில் இருக்கிற உத்திரத்தை எடுத்துப்
போடு. பின்பு உன் சகோதரனுடைய கண்
ணில் உள்ள சிராயை எடுத்துப்போடும்
வகையைத்தெளிவாக அறிவாய்.
௪௩. * கெட்டகனி கொடுக்கிறமரம் நல்
ல மரம் அல்ல, நல்ல கனிகொடுக்கிற மரங்
கெட்டமரம் அல்ல. * மத். ௭: ௰௭, ௰௮.
௪௪. முட்செடிகளில் அத்திப்பழங்களைப்
பறிக்கிறதும் இல்லை. நெரிஞ்சிச்செடியி
லே திராட்சத்தைப்பறிக்கிறதும் இல்லை.
ஆகையால், எந்தமரமும் அதினதினுடை
ய கனியால் அறியப்படும்.
௪௫. நல்ல மனிதன் தன் இருதயத்தில்
உள்ள, * நற்பொக்கிசத்தில் நலமானதை
யே எடுத்துக்காண்பிப்பான். பொல்லாத
மனிதனுந் தன் இருதயத்தில் உள்ள பொல்
லாத பொக்கிசத்திற் பொல்லாததையே
எடுத்துக்காண்பிப்பான். இருதயத்தின் ப
ரிபூரணத்தினால் அவனுடைய வாய் பேசு
மே. * மத். ௰௨: ௩௪, ௩௫.
௪௬. அன்றியும் நான் கட்டளை இடுகிற
வைகளை நீங்கள் செய்யாமல் இருக்க என்
னை, * ஆண்டவரே ஆண்டவரே என்று
என்னத்துக்கு அழைக்கிறீர்கள்? * மத்.
௭: ௨௧—௨௩.
௪௭. * என்னிடத்தில் வந்து என் வசனங்
களைக்கேட்டு, அவைகளின்படி செய்கிற
வனை உங்களுக்குக்காண்பிப்பேன். * மத்.
௭: ௨௪.
௪௮. அவன் எவனுக்கு ஒப்பாய் இருக்கி
றான் என்றால், ஆழமாய்த்தோண்டிப்பா
றையின்மேல் அஸ்திபாரப்போட்டு வீடு
கட்டின மனிதனுக்கே ஒப்பாய் இருக்கி
றான். பெருவெள்ளம் உண்டானபொழுது
நீரோட்டம் அந்த வீட்டில் மோதியும் அ
து கல்மலையின்மேல் அஸ்திபாரம் போட்
டிருந்தபடியால், அதை அசைக்கக்கூடா
மற் போயிற்று.
௪௯. (என் வசனத்தைக்) கேட்டும் அதின்
படி செய்யாதவன் அஸ்திபாரம் இல்லா
மற் பூமியின் மேல் வீடுகட்டினவனுக்கு
ஒப்பாய் இருக்கிறான். வெள்ளம் அதில்
மோதினவுடனே அது விழுந்து மிகவும்
இடிந்து போயிற்றென்றார்.

௭ அதிகாரம்.

[(௧) கிறிஸ்து ஒரு அஞ்ஞானியாய் இ
ருந்த சேர்வைக்காரனிடத்தில் யூதரின் வி
சுவாசத்திலும், அதிக விசுவாசத்தைக்
கண்டது. (௰) அவனுடைய வேலைக்கார
னைக்குணமாக்கினது. (௰௭) நாயீனூர் வி
தவையின் மகனை உயிரோடெழுப்பினது
(௰௯) யோவான் அனுப்பின தூதர்களுக்
குத்தம்முடைய அற்புதங்களை ஒரு குறிப்
பாகக்காட்டி, உத்தரவு அருளிச்செய்த
து. (௨௪) யோவானைக்குறித்துத்தம்முடை
ய தாற்பரியத்தை சனங்களுக்கு அறிவித்
தது. (௩௰) யோவானுடைய செய்கை
களினாலாவது, தம்முடைய செய்கைகளி
னாலாவது, குணப்படாத யூதர்களைக்கடிந்
துகொண்டு, (௩௬) மகதலேனாளாகிய ம
ரியாளுக்குச்செய்த கிருபையினால் விசுவா
சித்துக்குணப்படுகிற பாவிகளுக்குப்பாவங்
களை மன்னிக்கிற பாவிகளுடைய சிநேகி
தர் என்று தம்மைத்திருஷ்டாந்தப்படுத்
தினது.

* ஜனங்கள் கேட்கத்தக்கதாக் அவர்தம்
முடைய வாக்கியங்கள் யாவையுஞ்
சொல்லி முடித்தபின்பு கப்பர்நாகூம் ஊ
ருக்குப்போனார். * மத். ௮: ௫—௰௩.
௨. அங்கே நூறுபோர்ச்சேவகருக்குத்த
லைவனாகிய ஒருவனுக்குப்பிரியமான வே
லைக்காரன் வியாதியினாலே மரணத்துக்கே
துவாய் இருந்தான்.
௩. அந்தத்தலைவன் இயேசுவைக்குறித்துக்
கேள்விப்பட்ட பொழுது அவர் வந்து தன்
வேலைக்காரனைக்குணமாக்கவேண்டும் என்
று அவரை வேண்டிக்கொள்ளும்படிக்கு
யூதருடைய மூப்பரை அவரிடத்தில் அனுப்
பினான்.
௪. அவர்கள் இயேசுவின் இடத்திற்போய்
அவரை மிகவும் வேண்டிக்கொண்டு பின்
பு சொன்னது, அவன் நம்முடைய தே
சத்தாரில் அன்பாய் இருந்து எங்களுக்கா
க வொரு செப ஆலயத்தையுங் கட்டினான்.
௫. ஆகையால், உம்முடைய தயவுக்கு
அவன் பாத்திரனாய் இருக்கிறான் என்றார்
கள்.
௬. இயேசுவானவர் அவர்களுடனே கூ
டச்சென்றார். வீட்டுக்குச்சமீபமாய்ப்போ
னபொழுது அந்தத்தலைவன் சிநேகிதரை
நோக்கி, (நீங்கள் அவரிடத்திற்போய்)
ஆண்டவரே, நீர் என் வீட்டுவாசலுக்குட்
பிரவேசிக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல.
௭. அதினாலே நான்தானே உம்மிடத்தில்
வருகிறதற்கும் என்னை அபாத்திரன் என்
றெண்ணினேன். ஆகையால், நீர் வருத்தப்
படாதிரும்.
௮. அல்லாமலும், நான் அதிகாரத்துக்
குக்கீழ்ப்பட்டவனாய் இருந்தும் எனக்குக்
கீழிருக்கிற சேவகரில் ஒருவனைப்போ வென்
னப்போகிறான். மற்றொருவனை வாவென்
னவருகிறான். என் வேலைக்காரனை நோக்கி,
இதைச்செய் என்னச்செய்கிறான். ஆகை
யால், நீர் ஒரு வார்த்தைமாத்திரஞ் சொன்
னால் என் வேலைக்காரன் சொஸ்தம் அடை

வான் என்று சொல்லுங்கள் என்று அனுப்பினன்.

௯. இயேசுவானவர் அதைக்கேட்டு அவனைக்குறித்து ஆச்சரியப்பட்டு, திரும்பிக்கொண்டு தமக்குப்பின்செல்லுகிற சனங்களை நோக்கி, இப்படிப்பட்ட விசுவாசத்தை நான் இஸ்ரவேலருக்குள்ளுங் காணவில்லை என்றுங்களுக்குச்சொல்லுகிறேன் என்றார்.

௰. அனுப்பப்பட்டவர்கள் திரும்ப வீட்டுக்கு வருகிறபொழுது வியாதியாய் இருந்த ஊழியக்காரன் ஆரோக்கியம் அடைந்திருக்கிறதைக்கண்டார்கள்.

௰௧. மறுநாளிலே அவர் நாயீன் என்னும் ஊருக்குப்போனார். அவருடைய சீஷர் அநேகரும், மற்றநேக சனங்களும் அவருடனே கூடப்போனார்கள்.

௰௨. அவர் ஊரின் வாசலுக்குச்சமீபமானபொழுது, ஒரு கைம்பெண்ணுடைய ஒரே குமாரன் இறந்துபோய் வெளியே கொண்டு வரப்பட்டான். ஊராரில் அநேக சனங்களும் அவளுடனே கூடவந்தார்கள்.

௰௩. கர்த்தர் அவளைப்பார்த்து அவள்மேல் உருக்கமாய் இரங்கி, நீ அழவேண்டாம் என்று சொல்லி, கிட்டப்போகையிற் பாடையைச்சுமக்கிறவர்கள் நின்றார்கள்.

௰௪. உடனே யவர் அதைத்தொட்டு வாலிபனே * எழுந்திரு என்றுனக்குச்சொல்லுகிறேன் என்றார். * மாற். ௫: ௪௧. யோவா. ௰௪: ௪௩.

௰௫. அப்பொழுது மரித்தவன் எழுந்துஉளுக்காந்து பேசத்தொடங்கினன்: அவனை யவர் தாய்க்கு ஒப்புக்கொடுத்தார்.

௰௬. எல்லாரும் பயம் அடைந்து, மகா தீர்க்கதரிசி நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றும், பராபரன் தம்முடைய சனங்களைச்சந்தித்துப்பார்த்தார் என்றுஞ்சொல்லிப்பராபரனைப்புகழ்ந்தார்கள்.

௰௭. அல்லாமலும், இந்தச்சங்கதி யூதேயாநாடு முழுவதிலும், சுற்றியிருக்கிற தேசங்கள் யாவற்றிலும் பிரசித்தமாயிற்று.

௰௮. இவை யெல்லாவற்றையும், யோவானுடைய சீஷர் அவனுக்கு அறிவித்தார்கள்.

௰௯. அப்பொழுது * யோவான் தன் சீஷரில் இரண்டுபேரை யழைத்து நீங்கள் இயேசுவின் இடத்திற்போய் வருவார் என்று சொல்லப்பட்டவர் நீரா? அல்லது வேறொருவர் வரக்காத்திருக்கவேண்டுமாவென்று கேளுங்கள் என்று சொல்லி அனுப்பினன். * மத் ௰௧: ௨—௬.

௨௰. அந்தப்படி யவர்கள் அவர் இடத்திற்போய் வருவார் என்று சொல்லப்பட்டவர் நீரா? அல்லது வேறொருவர் வரக்காத்திருக்கவேண்டுமாவென்று, கேட்கும்படிக்கு யோவான்ஸ்நானன் எங்களை உம்மிடத்திற்கனுப்பினன் என்றார்கள்.

௨௧. அவ்வேளையிலே அவர் வியாதிகளையும், வேதனைகளையும், பொல்லாத ஆவிகளையுமுடைய அநேகம் பேரைக்குணமாக்கி, குருடர் அநேகருக்குப்பார்வையை யருளினார்.

௨௨. அப்பொழுது இயேசுவானவர் அவர்களுக்குச்சொன்னது, குருடர் பார்வையை அடைகிறார்கள். சப்பாணிகள் நடக்கிறார்கள் குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள். செவிடர் கேட்கிறார்கள். மரித்தோர் எழுப்பப்படுகிறார்கள். தரித்திரருக்குச்சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுவருகின்றது. இப்படி நீங்கள் பார்க்கிறவைகளையும், கேட்கிறவைகளையும் யோவானுக்குப்போய் அறிவியுங்கள்.

௨௩. அல்லாமலும், என்னாலே இலச்சையடையாமல் இருக்கிறவன் பாக்கியவான் என்றார்.

௨௪. யோவானுடைய தூதர்கள் போனபின்பு அவர் யோவானைக்குறித்துச்சனங்களுடனே சொன்னது, * காற்றினல் அசைக்கப்படுகிற நாணலையா நோக்கிப்பார்க்கும்படிக்கு வனாந்தரத்திற்குப்போனீர்கள். * மத். ௰௧: ௭—௰௫.

௨௫. அல்லது மெல்லிய வஸ்திரங்களைத்தரித்திருக்கிற மனிதனையா பார்க்கும்படிக்குப்புறப்பட்டீர்கள். மகிமையான உடுப்போடும், செல்வத்தோடும் இருக்கிறவர்கள் அரசருடைய அரமனைகளில் இருக்கிறார்களே.

௨௬. அல்லது, ஒரு தீர்க்கதரிசியையா பார்க்கும்படிக்குப்புறப்பட்டீர்கள். ஒரு தீர்க்கதரிசியிலும், அதிகமானவனையே (பார்த்தீர்கள் என்று) உங்களுக்குச்சொல்லுகிறேன்.

௨௭. இதோ, * நான் என்னுடைய தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன். அவன் உமக்குமுன் நடந்து, உமக்காக மார்க்கத்தைத்திருத்துவான் என்று, ஒருவனைக்குறித்து எழுதியிருக்கின்றதே அவன் இவன்தான். * மல். ௩: ௧.

௨௮. ஆகையால், நான் உங்களுக்குச்சொல்லுகிறதாவது; ஸ்திரீகள் இடத்திற்பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனிலும் பெரிய தீர்க்கதரிசி யொருவனும் இல்லை. ஆனாலும், பராபரனுடைய இராச்சியத்திலே சிறியவனானவன் அவனிலும் பெரியவனாய் இருக்கிறான்.

௨௯. அன்றியும், (யோவானுடைய உபதேசத்தைக்) கேட்ட சகல சனங்களும், ஆயக்காரரும் அவனாலே ஞானஸ்நானத்தைப்பெற்று, பராபரன் நீதிபரர் என்று அறிக்கை யிட்டார்கள்.

௩௰. பரிசேயரும், நியாயசாஸ்திரிகளுமா

ளவர்கள் மாத்திரம் அவனாலே ஞானஸ்நானத்தைப்பெறாமல், தங்களைக்குறித்துப் பராபரனுடைய ஆலோசனையைத்தள்ளினார்கள்.

௩௧. அப்படியிருக்க, * இந்தத்தலைமுறையின் மனிதரை நான் யாருக்கு நிகர் சொல்வேன்! இவர்கள் யாருக்கு ஒப்பாய் இருக்கிறார்கள். * மத். ௰௧: ௰௬—௰௯.

௩௨. சந்தையில் உளுக்கார்ந்து ஒருவரையொருவர் நோக்கி, உங்களுக்காக ஊதினோம், நீங்கள் கூத்தாடவில்லை. உங்களுக்காகப்புலம்பினோம். நீங்கள் அழவில்லையென்று, எதிர்கூப்பிடுகிற பிள்ளைகளுக்கு ஒப்பாய் இருக்கிறார்கள்.

௩௩. எப்படியெனில், யோவான்ஸ்நானன் வந்து அப்பம் புசியாமலும், திராட்ச இரசங் குடியாமலும் இருந்தான். அதினாலே யவன் பேய்கொண்டவன் என்கிறீர்கள்.

௩௪. மனிதனுடைய குமாரன் வந்து போசனபானம் பண்ணுகிறான். அதினாலே இதோ, போசனப்பிரியன், மதுபானப்பிரியன், ஆயக்காரருக்கும், பாவிகளுக்குஞ் சிநேகிதன் என்கிறீர்கள்.

௩௫. ஆனாலும் ஞானமானது தன்னையடைந்தவர்களாலே நீதியாக்கப்படுகின்றதென்றார்.

௩௬. பரிசேயரில் ஒருவன் தன்னுடனே போசனம்பண்ணும்படிக்கு அவரைவேண்டிக்கொண்டான். அந்தப்படி அவர் பரிசேயனுடைய வீட்டுக்குப்போய்ப் பந்தி இருந்தார்.

௩௭. அப்பொழுது பட்டினத்திலுள்ள பாவியாகிய ஒரு ஸ்திரீ அவர் பரிசேயனுடைய வீட்டிலே பந்தி இருக்கிறதை யறிந்து, * ஒரு பரணியிற் பரிமளதயிலங் கொண்டுவந்து, * யோவா. ௰௨: ௩.

௩௮. அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டு, அவருடைய பாதங்களைக்கண்ணீரினாலே நனைத்து, தன் தலையின் மயிராலே துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ் செய்து பரிமள தயிலத்தைப்பூசினாள்.

௩௯. அவரை யழைத்த பரிசேயன் அதைக் கண்டபொழுது, இவர் தீர்க்கதரிசியானால் தம்மைத்தொடுகிற ஸ்திரீ இன்னாள் என்றும், இப்படிப்பட்டவள் என்றும் அறிந்திருப்பார். * இவள் பாவியாய் இருக்கிறாளே யென்று தனக்குள்ளே எண்ணிக் கொண்டான். * ௰௫: ௨.

௪௰. இயேசுவானவர் அவனை நோக்கி, சீமோனே! உனக்கு ஒரு வார்த்தைசொல்ல விரும்புகிறேன் என்றார். போதகரே! சொல்லும் என்றான்.

௪௧. (இயேசுவானவர் சொன்னது,) கடன்காரன் ஒருவனுக்குக்கடனாளிகள் இரண்டு பேர் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும், மற்றொருவன் ஐம்பது வெள்ளிக்காசுங் கொடுக்கவேண்டியிருந்தது.

௪௨. அவர்கள் கொடுக்கிறதற்குத்திராணியில்லாதவர்களானபொழுது இருவருக்குங் கடனை மன்னித்தான். ஆகையால், அவர்களில் எவன் அவன் இடத்தில் அதிக அன்பாய் இருப்பான். அதைச்சொல்லென்றார்.

௪௩. சீமோன் மாறுத்தரமாகச்சொன்னது, அதிகமான மன்னிப்பைப்பெற்றவன் எவனோ, அவனே என்று நினைக்கிறேன் என்றான். அப்பொழுது அவர் நிதானமாய்த்தீர்த்தாய் என்றுசொல்லி,

௪௪. பின்பு ஸ்திரீயின் இடத்திலே திரும்பிச்சீமோனுடனே சொன்னது, இந்தஸ்திரீயைப்பார்க்கிறாயா? நான் உனது வீட்டில் வந்தபொழுது நீ என் கால்களுக்காகத்தண்ணீரைத்தரவில்லை. இவள் கண்ணீரினாலே என் கால்களை நனைத்துத்தன் தலையின்மயிராலே துடைத்தாள்.

௪௫. நீ என்னை முத்தஞ் செய்யவில்லை, இவள் இங்கே பிரவேசித்தது முதல் என் பாதங்களை ஒயாமல் முத்தஞ் செய்தாள்.

௪௬. நீ யென்தலையில் எண்ணெயைப்பூசவில்லை. இவள் பரிமளதயிலத்தை என் பாதங்களிற் பூசினாள்.

௪௭. ஆனதால், இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டபடியினாலே மிகவும், அன்பாய் இருக்கிறாள் என்று உனக்குச்சொல்லுகிறேன். அல்லாமலும், கொஞ்சம் மன்னிக்கப்பெற்றவன் எவனோ அவன் கொஞ்சம் அன்பாய் இருக்கிறான் என்று சொல்லி,

௪௮. பின்பு அவளை நோக்கி, * உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டனவென்றார். * ௫: ௨௰, ௨௧.

௪௯. அப்பொழுது பந்தியில் இருந்தவர்கள் பாவங்களை மன்னிக்கிற இவன் யாவன் என்று சொல்லிக்கொண்டார்கள்.

௫௰. அவர் (பின்னும்) ஸ்திரீயை நோக்கி, உன்விசுவாசம் உன்னை யிரட்சித்தது. சமாதானத்தோடே போ என்றார்.

௮ அதிகாரம்.

[(௧) ஸ்திரீகள் கிறிஸ்துவுக்குத்தங்கள் ஆஸ்திகளாலே உதவிசெய்தது. (௪) கிறிஸ்து அப்போஸ்தலர்களோடே பலவிடங்களிலும், பிரசங்கம் பண்ணின பின்பு விதைக்கிறவன் உவமையையும், (௰௬) விளக்கின் உவமையையும் எடுத்துக்காட்டி, (௨௧) தம்முடைய தாயும், சகோதரரும் இன்னார் என்று அறிவித்து, (௨௨) காற்றை அதட்டி, (௨௬) ஒருவனைப்பிடித்திருந்த பசாசுகளைப்பன்றிகளின் கூட்டத்

திலே துரத்தினது. (௩௭) அவர் கதரேனரால் விலக்கப்பட்டது. (௪௩) பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீயைக்குணமாக்கினது. (௪௯) யாவீரு என்பவனுடைய மகளை உயிரோடே எழுப்பினது.]

பின்பு அவர் பிரயாணமாய்ப்பட்டிணங்கள்தோறும், ஊர்கள்தோறுந் திரிந்து பராபரனுடைய இராச்சியத்தைச் சுவிசேஷமாய்ப்பிரசங்கம் பண்ணினார்.

௨. பன்னிருவரும், பொல்லாத ஆவிகளில் நின்றும், வியாதிகளில் நின்றுங் குணமாக்கப்பட்ட சில ஸ்திரீகளும் * அவருடனே கூடப்போனார்கள். * மாற். ௰௬: ௯.

௩. ஏழு பசாசுகளில் நின்றும் நீக்கப்பட்ட மகுதலேனாள் என்னப்பட்ட மரியாளும், ஏரோதேயின் காரியக்காரனாகிய கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கூழியஞ்செய்து கொண்டுவருகிற மற்ற அநேக ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள்.

௪. * பட்டினங்களில் இருந்து மிகுந்த சனங்கள் வந்து, அவரிடத்திற் கூடியிருக்கிறபொழுது அவர் உவமையாய்ச்சொன்னது, * மாற். ௪: ௧—௨௫.

௫. * பயிரிடுகிறவன் தன் விதையை விதைக்கப்புறப்பட்டான். அவன் விதைக்கையில் சில விதை வழியருகே விழுந்து, பின்பு மிதிக்கப்பட்டன. ஆகாசத்தின் பறவைகளும் வந்து அவைகளைப்பட்சித்தன. * மத். ௰௩: ௩—௨௩.

௬. சில விதை கற்பாறையின்மேல் விழுந்தன. அவை முளைத்தபின் ஈரம் இல்லாததினாலே உலர்ந்துபோயின.

௭. சில விதை முட்செடிகளுள்ள இடத்திலே விழுந்தன. முட்செடிகள் கூடவளர்ந்து அவைகளை நெருக்கிப்போட்டன.

௮. சில விதை நல்ல நிலத்தில் விழுந்து முளைத்து, நூறுமடங்காய்ப்பலன் தந்தனவென்று சொல்லி, பின்பு கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று கூப்பிட்டார்.

௯. அப்பொழுது அவருடைய சீஷர் அவரைநோக்கி, இந்த உவமையின் கருத்தென்னவென்று கேட்டார்கள்.

௰. அவர் சொன்னது, பராபரனுடைய இராச்சியத்தின் இரகசியங்களை யறியும்படிக்கு நீங்கள் அருள் பெற்றவர்கள். மற்றவர்கள் கண்டுங் காணாமலும், கேட்டும் உணராமலும் இருக்கத்தக்க விதமாக (அவைகள்) உவமைகளாய் அவர்களுக்குச்சொல்லப்படுகின்றன.

௰௧. அந்த உவமையின் கருத்தாவது, விதையானது பராபரனுடைய வசனமே.

௰௨. (விதை விழுந்த) வழியானது (அந்த வசனத்தைக்) கேட்கிறபொழுது விசுவாசியாமலும், இரட்சிக்கப்படாமலும் இருக்கும்படிக்கு, தங்கள் இருதயத்தில் இருந்து, அவ்வசனம் பசாசினாலே எடுக்கப்படுகிறவர்களேயாம்.

௰௩. (விதை விழுந்த) கற்பாறையானது, (அவ்வசனத்தைக்) கேட்கிறபொழுது சந்தோஷத்தோடே யேற்றுக்கொண்டு பின்பு அது தங்களுக்குள்ளே வேர்கொள்ளும்படி செய்யாமற் சிலகாலம் (மாத்திரம்) விசுவாசித்துச்சோதனைக்காலத்திலே வழுவிப்போகிறவர்களேயாம்.

௰௪. (விதை விழுந்த) முட்செடிகள் உள்ள நிலமானது தேவ வசனத்தைக்கேட்கிறவர்களாய் இருந்தும், நிறைந்த பலனைக்கொடாதபடிச்சுக்கவலைகளும், * ஐசுவரியமும், சீவனத்தின் செல்வமும் உள்ளவர்களாய் நடந்து, அவைகளினாலே அதை நெருக்கிப்போடுகிறவர்களேயாம். * ௰௮: ௨௪. ௧ தீமோ. ௬: ௯.

௰௫. (விதை விழுந்த) நல்ல நிலமானது அவ்வசனத்தைக்கேட்டு, நன்றும், உண்மையுமான இருதயத்திலே அதைக்காத்துக்கொண்டு இடைவிடாமற் * பலன் கொடுக்கிறவர்களேயாம். * கலாத். ௫: ௨௨.

௰௬. ஒருவனும் * விளக்கைக்கொளுத்தி அதை ஒரு பாத்திரத்தினாலே மூடவும், கட்டிலின் கீழே வைக்கவுமாட்டான். உள்ளே வருகிறவர்கள் வெளிச்சங்காணும்படிக்கு அதைத்தண்டின்மேலே வைப்பான். * மத். ௫: ௰௫.

௰௭. அந்தப்படி வெளியரங்கமாகாத அந்தரங்கமும் இல்லை. அறியப்பட்டு வெளிக்கு வாராத மறைபொருளும் இல்லை.

௰௮. ஆதலால், நீங்கள் கேட்கிற விதத்தைச்குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். என்னத்தினாலெனில், உள்ளவனுக்குக்கொடுக்கப்படும். இல்லாதவன் தனக்குஉண்டென்று நினைக்கிற பொருளும் அவனிடத்தில் இருந்து எடுத்துக்கொள்ளப்படும் என்றார்.

௰௯. அப்பொழுது * அவருடைய தாயும், சகோதரரும் அவர் இடத்திற்குப்போகையிற் சனக்கூட்டத்தின் நிமித்தம் அவர்கள் அவரைச்சேருகிறதற்கு இடம் இல்லை. * மத். ௰௨: ௪௬—௫௰.

௨௰. அப்பொழுது சிலர் அவரை நோக்கி, உம்முடைய தாயும், சகோதரரும் உம்மைப்பார்க்க வேண்டும் என்று வெளியே நிற்கிறார்கள் என்று அறிவித்தார்கள்.

௨௰௧. அவர்களுக்கு மாறுத்தரமாக * அவர் சொன்னது, பராபரனுடைய வசனத்தைக் கேட்டு, அதின்படி செய்கிறவர்களே என் தாயுமாய் என் சகோதரருமாய் இருக்கிறார்கள் என்றார். * யோவா. ௰௫: ௰௪.

௨௰௨. * ஒரு நாளிலே அவர் தம்முடைய

சீஷரோடுங்கூட ஒரு படவில் ஏறி அவர்களை நோக்கி, கடலின் அக்கரைக்குப்போகக் கடவோம் என்றார். அந்தப்படி கரையை விட்டுப்போனார்கள். * மத். ௮: ௨௩—௨௭. மாற். ௪: ௩௫—௪௧.

௨௩. அவர்கள் படவை நடத்துகையில், அவர் நித்திரை பண்ணினார். அப்பொழுது படவு சலத்தினாலே நிரப்பப்படவும், அவர்களுக்கு மோசம் வரவுந் தக்கதாகக்கடலிற் சுழல் காற்று உண்டாயிற்று.

௨௪. உடனே அவர்கள் சேர்ந்து, ஆண்டவரே! ஆண்டவரே! நாங்கள் கெட்டுப்போகிறோமே என்று (கூப்பிட்டு,) அவரை யெழுப்பினார்கள். அப்பொழுது அவர் எழுந்து, காற்றையும், சலத்தின் உக்கிரத்தையும் அதட்டினார். உடனே அவைகள் நின்று போக அமைதல் உண்டாயிற்று.

௨௫. பின்பு அவர் அவர்களை நோக்கி, உங்கள் விசுவாசம் எங்கே என்றார். அவர்கள் பயந்து, ஆச்சரியப்பட்டு, இவர் எப்படிப்பட்டவரோ காற்றுக்களுக்கும், சலத்திற்குங் கட்டளை இடுகிறாரே. அவைகளும் இவருக்குக்கீழ்ப்படிகின்றனவே என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

௨௬. * பின்பு கலிலேயா நாட்டுக்கு எதிரான கதரேனர் தேசத்திலே சேர்ந்தார்கள். * மத். ௮: ௨௮—௩௪. மாற். ௫: ௧—௨௰.

௨௭. அவர் அக்கரையில் இறங்கினபொழுது அநேகநாளாய், பசாசுகள் பிடித்தவனுமாய், வஸ்திரந் தரியாதவனுமாய், வீட்டிலே தங்காமற் பிரேதக்கல்லறைகளிலே தங்கினவனுமாய் இருந்த அப்பட்டினத்து மனிதன் ஒருவன் அவருக்கு எதிராக வந்தான். அநேகந் தரம் அந்த அசுத்த ஆவி யவனை யலக்கழித்து வந்தது.

௨௮. அல்லாமலும், அவன் சங்கிலிகளாலும், விலங்குகளாலுங் கட்டப்பட்டு, காவல் பண்ணப்பட்டிருந்தும் அவன் விலங்குகளைத்தறித்துப்போட்டு, பசாசினால் வனாந்தரங்களுக்குத் துரத்தப்பட்டான். ஆதலால் இயேசுவானவர் அந்த ஆவி யவனைவிட்டுப் போகும்படிக்குக்கட்டளையிட்டார்.

௨௯. ஆனபடியினாலே அவன் இயேசுவானவரைக்கண்டபொழுது, கூக்குரல் இட்டு அவருக்கு முன்பாக விழுந்து இயேசுவே! உன்னதமான பராபரனுடைய குமாரனே! எனக்கும், உமக்கும் என்ன! என்னை வேதனைப்படுத்தாதபடிக்கு உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான்.

௩௰. அப்பொழுது இயேசுவானவர் அவனை நோக்கி, உன்பேர் என்னவென்று கேட்டார். அதற்கு அவன் லேகியோன் என்று * சொன்னான். அநேகம் பசாசுகள் அவனுக்குட் புகுந்தபடியால், அந்தப்பேர் அவனுக்கு உண்டாயிற்று.

௩௧. அல்லாமலுந் தங்களைப்பாதாளத்திற்குப்போகும்படி கட்டளை இடாதபடிக்கு அவைகள் அவரை வேண்டிக்கொண்டன.

௩௨. அப்பொழுது அவ்விடத்திலே அநேகம் பன்றிகள் கூட்டமாய் மலையிலே மேய்ந்துகொண்டிருந்தன. அவைகள் அந்தப்பன்றிகளுக்குட் பிரவேசிக்கும்படி உத்தரவு கொடுக்கவேண்டும் என்று அவரை வேண்டிக்கொண்டன. அப்படியே யவைகளுக்கு உத்தரவு கொடுத்தார்.

௩௩. உடனே பசாசுகள் அந்த மனிதனை விட்டு நீங்கிப்பன்றிகளுக்குட் புகுந்தன. அப்பொழுது அந்தப்பன்றிக்கூட்டம் உயர்ந்த மேட்டில் இருந்து கடலிலே பாய்ந்து அமிழ்ந்து போயிற்று.

௩௪. அவைகளை மேய்த்தவர்கள் அதைக் கண்டு ஓடிப்போய்ப்பட்டினத்திலும், வெளிப்புறங்களிலும் அறிவித்தார்கள்.

௩௫. அப்படி நடந்ததைச்சனங்கள் பார்க்கும்படிக்குப்புறப்பட்டு, இயேசுவின் இடத்திற்போய், பசாசுகள் விட்டுப்போன மனிதன் இயேசுவினுடைய பாதங்கள் அருகே வஸ்திரந் தரித்தவனாய் உருக்காந்து புத்தி அடைந்திருக்கிறதைக்கண்டு பயப்பட்டார்கள்.

௩௬. பசாசுகள் பிடித்திருந்தவன் இரட்சிக்கப்பட்ட வகையைக்கண்டவர்களும் அதை யவர்களுக்கு அறிவித்தார்கள்.

௩௭. அப்பொழுது கதரேனருடைய சுற்றுத்தேசத்தின் திரளான சனங்கள் எல்லாரும் மிகுந்த பயம் அடைந்தவர்களானபடியினாலே தங்களை விட்டுப்போகும்படிக்கு அவரை வேண்டிக்கொண்டார்கள். அந்தப்படி யவர் படவில் ஏறித்திரும்பினார்.

௩௮. பசாசுகள் விட்டுப்போன மனிதன் அவருடனே கூடப்போய் இருக்கும்படிக்கு அவர் இடத்தில் உத்தரவு கேட்டுக் கொண்டான்.

௩௯. இயேசுவானவர் அவனை நோக்கி, நீ உன் வீட்டிற்குத்திரும்பிப்போய், * பராபரன் உனக்குச்செய்த விசேஷங்களை யறிவிப்பாயாக என்று சொல்லி, அனுப்பிவிட்டார். அந்தப்படி அவன்போய், தனக்கு இயேசுவானவர் செய்த விசேஷங்களைப்பட்டினத்தில் எங்கும் பிரசித்தம் பண்ணினான். * மாற். ௫: ௰௯, ௨௰.

௪௰. பின்பு இயேசுவானவர் திரும்பி வந்தபொழுது அவர் வரக்காத்துகொண்டிருந்

* லேகியோன் என்பதற்கு ஏறக்குறைய நாலாயிரம்பேர் என்று அருத்தமாம்.

து சனங்கள் எல்லாரும் அவரை உபசாரஞ் செய்தார்கள்.
௪௧. * அப்பொழுது செப ஆலயத்தலைவனான யாவீரு என்பவன் வந்து, இயேசுவின் பாதங்கள் இடத்தில் விழுந்து, தனக்குண்டான பன்னிரண்டு வயதுள்ள ஒரே குமாரத்தி மரணத்திற்கு ஏதுவாய் இருந்தபடியினாலே, * மத். ௯: ௰௮, ௰௯. மாற். ௫: ௨௨.
௪௨. தன் வீட்டிலே வரும்படிக்கு அவரை வேண்டிக்கொண்டான். அவர் அவனுடனே கூடப்போகையில் சனங்கள் அவரை நெருக்கினார்கள்.
௪௩. அப்பொழுது, * பன்னிரண்டு வருஷம் பெரும்பாடு பட்டு, தன் பொருள்கள் யாவையும் பரிகாரிகளுக்குச்செலவழித்து, ஒருவராலுஞ் சுகம் அடையாத ஒரு ஸ்திரீ (அவருக்குப்) பின்னாலே சேர்ந்து,
௪௪. அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத்தொட்டாள். உடனே அவளுடைய இரத்த ஊறல் நின்று போயிற்று. * மத். ௯: ௨௰—௨௨.
௪௫. அப்பொழுது இயேசுவானவர் என்னைத்தொட்டவர் யார் என்றார். நாங்கள் அறியோம் என்று எல்லாருஞ் சொன்னபொழுது, பேதுருவும், அவனோடிருந்தவர்களும் அவரை நோக்கி, ஐயரே! சனங்கள் உம்மை நெருக்கி, உரஞ்சிக்கொண்டு இருக்கிறார்களே. அப்படி இருக்க, என்னைத்தொட்டவர் யார் என்று எப்படிக்கேட்கிறீர் என்றார்கள்.
௪௬. இயேசுவானவர் சொன்னது, என்னில் இருந்து பலம் புறப்பட்டதை அறிந்திருக்கிறேன். ஆகையால், ஒருவர் என்னைத்தொட்டது உண்டு என்றார்.
௪௭. அப்பொழுது ஸ்திரீயானவள் மறைந்திருக்கக்கூடாது என்று கண்டு, நடுங்கி வந்து, அவர் முன்பாகச்சாஷ்டாங்கமாய் வணங்கி, தான் அவரைத்தொட்ட காரணத்தையும் உடனே குணம் அடைந்ததையும் எல்லாச்சனங்களுக்குமுன்பாக அவருக்கு அறிவித்தாள்.
௪௮. அவர் அவளுடனே சொன்னது, மகளே! சந்தோஷமாய் இரு. உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. * சமாதானத்தோடே போவென்றார். * ௭: ௫௰.
௪௯. அவர் அப்படிப்பேசிக்கொள்ளுகையிற் செப ஆலயத்தலைவனுடைய வீட்டில் இருந்து ஒருவன் வந்து, அவனை நோக்கி, உம்முடைய குமாரத்தி இறந்துபோனாள். போதகரை (இனி) வருத்தப்படுத்தாதிரும் என்றான்.
௫௰. இயேசுவானவர் அதைக்கேட்டு, யாவீரு என்பவனைநோக்கி, நீர் பயப்படாமல் விசுவாசமாயிரும். அப்பொழுது இரட்சிக்கப்படுவாள் என்றார்.

௫௧. பின்பு அவர் வீட்டிலே சேர்ந்தபொழுது, * பேதுருவையும், யாக்கோபையும், யோவானையும், பெண்ணுடைய தகப்பனையும், தாயையுந் தவிர மற்றொருவரும் உள்ளே பிரவேசிக்கிறதற்கு இடங் கொடாமல், * மத். ௰௭: ௧. ௨௬: ௩௭.
௫௨. எல்லாரும் அவளைக்குறித்து, அழுது துக்கங் கொண்டாடுகிறதைக் (கண்டு) நீங்கள் அழவேண்டாம். அவள் இறந்துபோகஇல்லை. நித்திரை பண்ணுகிறாள் என்றார்.
௫௩. அவள் இறந்து போனாள் என்று அவர்கள் அறிந்து அவரைக்குறித்து நகைத்தார்கள்.
௫௪. பின்பு அவர் எல்லாரையும் வெளியே போகப்பண்ணி, அவளுடைய கையைப்பிடித்துப்பிள்ளையே! எழுந்திரு என்று கூப்பிட்டார்.
௫௫. * உடனே அவளுடைய ஆவி திரும்பி வந்தபடியால், அவள் எழுந்திருந்தாள். அவளுக்குச்சாப்பாடு கொடுக்கும்படிக்குக் கட்டளையிட்டார். * ௭: ௰௫. யோவா. ௰௧: ௪௪.
௫௬. அவளுடைய தாய், தகப்பன்மார் பிரமித்தார்கள். அப்பொழுது நடந்ததை ஒருவருக்குஞ் சொல்லாதபடிக்கு அவர்களுக்குக்கட்டளையிட்டார்.

௯ அதிகாரம்.

[(௧) கிறிஸ்துத்தம்முடைய அப்போஸ்தலர்களை அற்புதங்கள் செய்யவும், பிரசங்கிக்கவும் அனுப்பினது. (௰௭) அவர் ஐயாயிரம்பேரைப்போஷித்தது. (௰௮) உலகத்தார் தம்மைக்குறித்து எவ்விதமாய் நினைக்கிறார்களென்று கேட்டு, தம்முடைய பாடுகளை முன் அறிவித்து, (௨௩) தம்முடைய பொறுமையை மாதிரியாகக்காண்பித்தது. (௨௮) அவர் மறுரூபப்பட்டது. (௩௭) சந்திரரோகியைக்குணமாக்கினது. (௪௩) தம்முடைய பாடுகளை மறுபடியுஞ் சீஷர்களுக்கு முன் அறிவித்தது. (௪௬) தாழ்மையாய் நடந்து, (௫௧) குரோதங் கொள்ளாமல், யாவரோடுஞ் சாந்தமாயிருக்க அவர்களைப் படிப்பித்தது. (௫௭) தங்கள் சுய இஷ்டப்படி ஒப்புவாரானால், அநேகர் கிறிஸ்துவைப்பின் செல்லுவார்கள் என்பது.]

பின்பு * அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரைக்கூடி வரவழைத்து, எந்தப்பசாசுகளையும், வியாதிகளையும் நீக்குவதற்கு வல்லமையையும், அதிகாரத்தையும் அவர்களுக்குக்கொடுத்து, * மத். ௰: ௧. மாற். ௬: ௭—௰௩.
௨. பராபரனுடைய இராச்சியத்தைக்குறித்துப்பிரசங்கிக்கும்படிக்கும், பிணியாளிகளைச்சொஸ்தமாக்கும்படிக்கும் அவர்களை அனுப்ப,

௩. அவர்களுடனே சொன்னது, வழிக்குத்
தடிகளையாவது, பையையாவது, அப்பத்
தையாவது, காசையாவது எடுத்துக்கொள்
ளாதிருங்கள். இரண்டு அங்கிகளையுங் கொ
ண்டுபோக வேண்டாம்.
௪. நீங்கள் பிரவேசிக்கும் வீடு எதுவோ,
அதிலே நீங்கள் புறப்படுகிறவரைக்குந் தங்
குங்கள்.
௫. * உங்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள்
எவர்களோ, அவர்களுடைய பட்டினத்தை
விட்டுப்புறப்படுகிறபொழுது, அவர்களுக்கு
விரோதமான சாட்சிக்காக உங்கள் கால்க
ளின் தூளை உதறிப்போடுங்கள் என்று
சொல்லி அனுப்பினார். * ௰: ௰, ௰௧.
௬. அந்தப்படி அவர்கள் புறப்பட்டுக்கிரா
மங்கள்தோறும் போய்த்திரிந்து சுவிசே
ஷத்தைப்பிரசங்கித்துப் (பிணியாளிகளைக்)
குணமாக்கினார்கள்.
௭. * அக்காலத்திலே காற்பங்கு தேசாதி
பதியாகிய ஏரோதே அவராலே செய்யப்
பட்ட யாவையுங் கேள்விப்பட்டுச்சிலர்
யோவான் மரித்தோரில் இருந்தெழுந்தான்
என்றும், * மத். ௰௪: ௧, ௨.
௮. சிலர் எலியா தோன்றினார் என்றும்,
சிலர் பழைய தீர்க்கதரிசிகளில் ஒருவன்
உயிர் அடைந்து எழுந்தான் என்றுஞ்
சொன்னபடியினாலே கலக்கம் அடைந்து.
௯. யோவானை நான் சிரச்சேதம் பண்ணி
னேன் இப்படிப்பட்டவைகளைச்செய்ய
நான் கேள்விப்படுகிற இவன் யாவனென்று
ஏரோதே சொல்லி, அவரைப்பார்க்க விரும்
பினான்.
௰. * அப்போஸ்தலர்கள் திரும்பி வந்து,
தாங்கள் செய்த யாவையும் அவருக்கு விவ
ரித்துச்சொன்னார்கள். அப்பொழுது அவர்
அவர்களைக்கூட்டிக்கொண்டு, தனித்திருக்
கும்படிக்கு, பெத்சாயிதா என்னும் பட்டி
னத்தைச்சேர்ந்த வனாந்தரத்திற்குப்போ
னார்.* மத். ௰௪: ௰௩—௨௩. மாற். ௬: ௩௰
௰௧. சனங்கள் அதை அறிந்து, அவருக்
குப்பின் போனார்கள். அவர்களை அவர்
அங்கிகரித்துக்கொண்டு, பராபரனுடைய
இராச்சியத்தைக்குறித்து, அவர்களுடனே
பேசிச்சொஸ்தம் அடையவேண்டும் என்று
இருந்தவர்களைச்சொஸ்தம் ஆக்கினார்..
௰௨. சாயந்தரத்திலே பன்னிருவருஞ்
சேர்ந்து, அவரை நோக்கி, இங்கே வனாந்
தரமான இடத்திலே இருக்கிறோம். ஆகை
யாற் சனங்கள் சுற்றி இருக்கிற பட்டினங்
களுக்கும் ஊர்களுக்கும் போய், விடாய்
தீர்ந்து போசனஞ் சம்பாதித்துக்கொள்
ளும்படிக்கு அவர்களை அனுப்பிவிடவேண்
டும் என்றார்கள்.
௰௩. அதற்கு அவர் நீங்களே அவர்களுக்
குச்சாப்பாடு கொடுங்கள் என்றார். ஏறக்கு
றைய ஐயாயிரம் புருஷர் இருந்தபடியி
னாலே,
௰௪. அவர்கள் சொன்னது, ஐந்து அப்ப
மும், இரண்டு மீனுமாத்திரம் எங்களிடத்
தில் உண்டு. ஆகையால் நாங்கள் போய்
இந்தச்சனங்கள் எல்லாருக்காகவும் போச
னத்திற்கு ஏற்றவைகளை வாங்கிக்கொள்ளா
விட்டால், (திர்ப்தி உண்டாகமாட்டாதே)
என்றார்கள்.
௰௫. அவர் தம்முடைய சீஷருடனே
சொன்னது, இவர்கள் ஐம்பது ஐம்பதாகப்
பந்தியில் உளுக்காரும்படி செய்யுங்கள்
என்றார். அவர்கள் அப்படியே செய்தார்
கள். எல்லாரும் உளுக்காந்தார்கள்.
௰௬. அப்பொழுது அவர் அவ்வைந்து
அப்பங்களையும், இரண்டு மீன்களையும் எடுத்
து, வானத்தை அண்ணாந்து பார்த்து, அ
வைகளை ஆசிர்வதித்துப்பிட்டு, சனங்களின்
முன் வைக்கும்படிக்குச்சீஷருக்குக்கொ
டுத்தார்.
௰௭. எல்லாரும் புசித்துத்திர்ப்தி அடைந்
தார்கள். அல்லாமலும் பன்னிரண்டு கூடை
நிறையச்சேஷமானவைகளும் எடுத்துக்
கொள்ளப்பட்டன.
௰௮. * பின்பு ஒருநாள் அவர் தம்முடைய
சீஷர் கூடவிருக்கத்தனித்துச்செபம் பண்
ணினபொழுது, அவர் அவர்களை நோக்கி,
என்னைக்குறித்துச்சனங்கள் என்ன சொல்
லுகிறார்கள் என்று கேட்டார். * மத்.
௰௬: ௰௩—௨௩. மாற். ௮: ௨௭—௩௩.
௰௯. அவர்கள் மாறுத்தரமாகச்சொன்ன
து, சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்
றும், சிலர் எலியா என்றும், சிலர் பழைய
தீர்க்கதரிசிகளில் ஒருவன் உயிர் அடைந்
து எழுந்தான் என்றுஞ் சொல்லுகிறார்கள்
என்றார்கள்.
௨௰. அவர் சொன்னது, நீங்கள் என்னைக்
குறித்து என்ன சொல்லுகிறீர்கள் என்றார்.
அதற்குப்பேதுரு, நீர் பராபரனுடைய
கிறிஸ்து என்றான்.
௨௧. அப்பொழுது அவர்கள் அதை ஒரு
வருக்குஞ் சொல்லாதபடிக்கு அவர்களுக்
குக்கெட்டியாய்க்கட்டளை இட்டார்.
௨௨. அன்றியும் அவர் சொன்னது, மனித
னுடைய குமாரன் அநேகம் பாடுபடவும்,
மூப்பராலும், பிரதான ஆசாரியராலும்,
வேதபாரகராலும் தள்ளப்படவும், கொல்
லப்படவும், பின்பு மூன்றும் நாளிலே உயி
ரோடே எழுந்திருக்கவும் வேண்டும் என்
றார்.
௨௩. அல்லாமலும், * அவர் எல்லாருட
னேயுஞ் சொன்னது, ஒருவன் எனக்குப்
பின்செல்ல மனதாய் இருந்தால் அவன் த
ன்னைத்தான் வெறுத்துத்தன் சிலுவைமரத்
தைத்தினந்தோறும் எடுத்துக்கொண்டு,

என்னைப்பின்பற்றக்கடவன். * மத். ௰௬: ௨௪. மாற். ௮: ௩௪.

௨௪. என்னத்தினாலெனில், * தன் ஜீவனை இரட்சித்துக்கொள்ள விரும்புகிறவன் அதை இழந்துபோவான். என்னிமித்தந் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்வான். * யோவா. ௰௨: ௨௫

௨௫. அன்றியும் மனிதனானவன் உலகமுழுவதையுஞ் சம்பாதித்துக்கொண்டு, தன்னைத்தான் அழித்தால், அல்லது சேதப்படுத்தினால், அவனுக்கு என்ன லாபம் உண்டாயிருக்கும்!

௨௬. அன்றியும் என்னைக்குறித்தும், என் வசனங்களைக்குறித்தும் வெட்கப்படுகிறவன் எவனோ அவனைக்குறித்து மனிதனுடைய குமாரன் தம்முடைய மகிமையோடும், பிதாவானவருடைய மகிமையோடும், பரிசுத்த தூதருடைய மகிமையோடும், வரும்பொழுது வெட்கம் அடைவான்.

௨௭. இங்கே நிற்கிறவர்களிற் சிலர் பராபரனுடைய ஆளுகையைக்காணுமளவும் மரணத்தை அடைவது இல்லையென்று மெய்யாய் உங்களுக்குச்சொல்லுகிறேன் என்றார்.

௨௮. * இந்த வசனங்களை அவர் சொல்லி, ஏறக்குறைய எட்டுநாள் ஆனபொழுது, அவர் பேதுருவையும், யோவானையும், யாக்கோபையுங் கூட்டிக்கொண்டு † செபம் பண்ணும்படிக்கு ஒரு மலையில் ஏறினார். * மத். ௰௭: ௧—௯. மாற். ௯: ௨—௯. † ௯: ௰௨.

௨௯. அவர் செபம் பண்ணுகையில், அவருடைய முகரூபம் மாறிற்று. அல்லாமலும் அவருடைய வஸ்திரம் வெண்மையாகிப்பிரகாசங் கொடுத்தது.

௩௰. அன்றியும் மோசே, எலியா இவ்விரண்டுபேரும் மகிமையோடே காணப்பட்டு அவருடனே பேசி,

௩௧. அவர் எருசலேமிலே நிறைவேற்றும் மரணத்தைக்குறித்துச்சம்பாஷணை பண்ணிக்கொண்டார்கள்.

௩௨. பேதுருவும், அவனோடிருந்தவர்களுங் கனமான நித்திரையடைந்து, விழித்துக்கொண்டபொழுது, அவருடைய மகிமையையும், அவரிடத்தில் நின்ற அவ்விரண்டு பேரையுங் கண்டார்கள்.

௩௩. அன்றியும், அவ்விருவரும் அவரை விட்டுப்பிரிந்துபோகையில், பேதுரு இயேசுவை நோக்கி, ஐயரே! நாம் இங்கே யிருக்கிறது நல்லது. நாங்கள் உமக்கும், மோசேயுக்கும், எலியாவுக்கும் ஒவ்வொரு குடிலாக மூன்று குடில்களையும் உண்டாக்குவோம் என்று தகுதியான யோசனை பண்ணாமற் சொன்னான்.

௩௪. அப்படி யவன் சொல்லுகிறபொழுது ஒரு மேகம் வந்து அவர்கள்மேலே நிழல் இட்டது. அவ்விருவரும் மேகத்திற்குட்பிரவேசிக்கையிற் சீஷர் பயந்தார்கள்.

௩௫. அப்பொழுது * இவர் (எனக்கு) அன்பாய் இருக்கிற என்னுடைய குமாரன். இவருக்குச்செவி கொடுங்கள் என்று மேகத்தில் இருந்து சத்தம் உண்டாயிற்று. * ௩: ௨௨.

௩௬. அந்தச்சத்தம் உண்டாகுகையில் இயேசுவானவர் மாத்திரம் இருந்தார். பின்பு அவர்கள் கண்டவைகளில் ஒன்றையும் அக்காலத்திலே ஒருவருக்கும் அறிவியாமல் மவுனமாய் இருந்தார்கள்.

௩௭. மறுநாளிலே அவர்கள் மலையில் இருந்து இறங்கின பொழுது, அநேக சனங்கள் அவருக்கு எதிர்கொண்டு வந்தார்கள்.

௩௮. * அல்லாமலும் அவர்களில் ஒருவன் கூப்பிட்டுச்சொன்னது, போதகரே! நீர் என் மகனை நோக்கிப்பார்க்கும் படிக்கு உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். அவன் எனக்கு ஒரே பிள்ளையானவன். * மத். ௰௭: ௰௪—௨௧. மாற். ௯: ௰௪—௨௯.

௩௯. ஒரு ஆவி அவனைப்பிடிக்கிறது. உடனே அலறுகிறான். அவனை நுரைதள்ள அலக்கழித்து அவனைக்கசக்கின பின்பும் அவனை விட்டு நீங்குகிறது அரிதாய் இருக்கின்றது.

௪௰. அதைத்துரத்தும் படிக்கு உம்முடைய சீஷரை வேண்டிக்கொண்டேன். அவர்களுக்கு அப்படிச்செய்யத்திராணி இல்லை என்றான்.

௪௧. இயேசுவானவர் மாறுத்தரமாகச்சொன்னது, விசுவாசம் இல்லாத மாறுபாடான சந்ததியே! எதுவரைக்கும் உங்கள் இடத்தில் இருந்து உங்களிற் பொறுமையாய் இருப்பேன் என்று சொல்லிப்பின்பு உன் மகனை இங்கே கொண்டு வா என்றார்.

௪௨. அவன் வருகிற பொழுது, பசாசு அவனை நொறுக்கி அலக்கழித்தது. இயேசுவானவர் அந்த அசுத்த ஆவியை அதட்டிப்பிள்ளையைக்குணமாக்கி, அவனைத்தகப்பனுக்கு ஒப்புக்கொடுத்தார்.

௪௩. (அதைக்கண்ட) எல்லாரும் பராபரனுடைய மகத்துவத்தைக்குறித்துப்பிரமித்தார்கள். இயேசுவானவர் செய்த எல்லாவற்றையுங் குறித்து, யாவரும் ஆச்சரியப்படுகிறபொழுது அவர் தம்முடைய சீஷரைநோக்கிச்சொன்னது,

௪௪. மனிதனுடைய குமாரன் * மனிதர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவான். இந்த வசனங்களை நீங்கள் நன்றாய்க்கேட்டுக்காத்துக்கொள்ளக்கடவீர்கள் என்றார். * ௰௮: ௩௨—௩௪.

௪௫. அவர்கள் அந்த வசனங்களின் கருத்

தை யறியாமல் இருந்தார்கள். அது அவர்களுக்குத்தோன்றாதபடிக்கு மறைபொருளாய் இருந்தது. அல்லாமலும், அவர்கள் அந்த வசனங்களைக்குறித்து அவரிடத்தில் விசாரித்துக் கொள்ளுகிறதற்குப் பயப்பட்டார்கள்.

௪௬. ஒருநாள் * அவர்கள் தங்களில் எவன் பெரியவனாய் இருப்பான் என்று யோசனை பண்ணிக்கொண்டார்கள். * மாற். ௯: ௩௩—௩௭.

௪௭. * அவர்களுடைய இருதயத்தின் யோசனையை இயேசுவானவர் அறிந்து, ஒரு பிள்ளையை எடுத்து அதைத்தமக்கு அருகே நிறுத்தி, * மத். ௰௮: ௨, ௩.

௪௮ இந்தச்சிறு பிள்ளையை என் நாமத்தின் நிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான். என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை யனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான். ஆதலால், * உங்கள் எல்லாரிலுஞ் சிறியவனாய் இருக்கிறவனே பெரியவனாய் இருப்பான் என்றார். * ௰௮: ௰௪.

௪௯. அப்பொழுது யோவான் (அவரை நோக்கி,) ஐயரே! உம்முடைய நாமத்தினாலே பசாசுகளைத்துரத்துகிற ஒருவனை நாங்கள் கண்டு, அவன் எங்களுடனேகூட (உமக்குப்) பின் செல்லாதபடியினாலே அவனுக்குத்தடை பண்ணினோம் என்றான்.

௫௰. அதற்கு இயேசுவானவர் சொன்னது, நமக்கு விரோதமாய் இராதவன் நம்முடைய பக்ஷத்தில் இருக்கிறான். ஆகையால், நீங்கள் அவனுக்குத்தடைபண்ணவேண்டாம் என்றார்.

௫௧. அவர் எடுக்கப்படும்படிக்குக்காலஞ் சமீபமானபொழுது அவர் எருசலேமுக்குப் போகக்கண்ணோட்டமாகி, தமக்கு முன்பாகத்தூதர்களை யனுப்பினார்.

௫௨. அவர்கள்போய் அவருக்காக இடம் எத்தினம் பண்ணும்படிக்கு, சமாரியருடைய ஒரு கிராமத்திலே பிரவேசித்தார்கள்.

௫௩. அவர் எருசலேம் நகரத்திற்குப்போகிறவரானபடியினாலே அவ்வூரார் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

௫௪. அவருடைய சீஷராகிய யாக்கோபும், யோவானும் அதைக்கண்டு, ஆண்டவரே! * எலியாவானவர் செய்ததுபோல நாங்கள் இவர்களை யழிக்கும்படிக்கு வானத்தில் இருந்து, அக்கினிவரும்படிசொல்லச் சித்தமாய் இருக்கிறீராவென்றார்கள். * ௨ இரா. ௧: ௰—௰௨.

௫௫. அப்பொழுது * அவர் திரும்பி, அவர்களை அதட்டி, நீங்கள் இன்ன ஆவியையுடையவர்கள் என்றறியீர்களா? * மத். ௰௬: ௨௩.

௫௬. மனிதனுடைய குமாரன் மனிதருடைய ஜீவனை யழிக்கும்படிக்கு அல்ல, * இரட்சிக்கும்படிக்கு வந்தானே யென்றார். * யோவா. ௩: ௰௭.

௫௭. பின்பு வேறொரு கிராமத்திற்குப்போனார்கள். அவர்கள் வழியிலே போகையில் ஒருவன் * அவரை நோக்கி, ஆண்டவரே! நீர் போகும் இடம் எங்கேயோ அங்கே உமக்குப்பின் செல்லுவேன் என்றான். * மத். ௮: ௰௯—௨௨.

௫௮. அவனுடனே இயேசுவானவர் சொன்னது, நரிகளுக்குக்குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்குக்கூடுகளும் உண்டு. மனிதனுடைய குமாரன் மாத்திரந் தன் தலையைச்சாய்க்கிறதற்கு இடம் இல்லாதவனாய் இருக்கிறான் என்றார்.

௫௯. வேறொருவனை அவர் நோக்கி, எனக்குப்பின் சென்றுவாவென்றார். (அதற்கு) அவன் சொன்னது, ஆண்டவரே! முன்பு நான்போய் என் தகப்பனை யடக்கம் பண்ணும்படிக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான்.

௬௰. அதற்கு இயேசுவானவர் சொன்னது, மரித்தோர் தங்களிடத்தில் மரித்தவர்களை அடக்கம்பண்ணட்டும். நீ புறப்பட்டுப் பராபரனுடைய ஆளுகையைப்பிரசித்தம் பண்ணென்றார்.

௬௧. பின்பு வேறொருவன் வந்து உமக்குப்பின் செல்லுவேன். அதற்கு முன்பு நான்போய் என்வீட்டில் இருக்கிறவர்களிடத்தில் அனுப்பிக்கொண்டுவரும்படி உத்தரவுகொடும் என்றான்.

௬௨. அவனுடனே இயேசுவானவர் சொன்னது; கலப்பையைப்பிடித்துக்கொண்டு, * பின்னாகப்பார்க்கிற எவனும் பராபரனுடைய இராச்சியத்திற்குத்தகுதியானவன் அல்லவென்றார். * பிலிப்பி. ௩: ௰௪.

௰ அதிகாரம்.

[(௧) கிறிஸ்து எழுபது சீஷர்களை அற்புதங்கள் செய்யவும், பிரசங்கிக்கவும் அனுப்பினது. (௰௭) அவர்களைத்தாழ்மையாய் இருக்கவேண்டியதென்றும், இன்னதின்னதிற் சந்தோஷப்பட வேண்டியது என்றும் புத்திசொன்னது. (௨௧) தம்முடைய பிதாவின் கிருபைக்காக அவரை ஸ்தோத்திரம் பண்ணி, (௨௩) தம்முடைய சபையின் மேன்மையைப்பாராட்டினது. (௨௫) நித்திய ஜீவனை அடையும் வழியையும், உன் இரக்கத்தை விரும்புகிறவன் உனக்கு அடுத்தவன் என்கிறதையும் படிப்பித்து, (௩௮) மார்த்தாளைக்கடிந்துகொண்டு, அவளுடைய சகோதரி மரியாளைப்புகழ்ந்தது.]

பின்பு கர்த்தர் * வேறு எழுபதுபேரை நியமித்துத்தாம் போகச்சித்தமான பட்டினம், ஊர்கள் யாவுக்கும் அவர்

களை இருவர் இருவராகத்தமக்கு முன்னே அனுப்புகையில் அவர்களுடனே சொன்னதாவது; அறுப்பு மிகுதியாகவே இருக்கின்றது. * ௪ மோ. ௰௪: ௰௬—௨௪.

௨. * வேலையாள்கள் சிலர்மாத்திரம் இருக்கிறார்கள். ஆகையால், அறுப்புக்கு எசமான் அறுக்கிறதற்கு (அதிக) வேலையாள்களை அனுப்பும்படிக்கு, † அவரை வேண்டிக்கொள்ளுங்கள். * மத். ௯: ௩௬, ௩௭. † ௨ தெச. ௩: ௧, ௨.

௩. நீங்கள் புறப்படுங்கள். * ஆடுகளைக் கோனாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல உங்களை அனுப்புகிறேன். * மத். ௰: ௰௬.

௪. * பணப்பையை யாவது, சாமான்பையை யாவது, பாத இரட்சைகளை யாவது கூட எடுத்துக்கொண்டு போகாமலும், வழியில் ஒருவரையும் வினவுதல் செய்யாமலும் இருங்கள். * ௯: ௩. மத். ௰: ௯—௰௩.

௫. ஒரு வீட்டிற் பிரவேசிக்கிறபொழுது. இந்த வீட்டாருக்குச்சமாதான சவுக்கியம் உண்டாவதாக வென்று முதலாவது சொல்லுங்கள்.

௬. அவ்விடத்திலே சமாதான சவுக்கியத்திற்குப்பாத்திரன் ஒருவன் இருந்தால், நீங்கள் வாழ்த்திய சமாதான சவுக்கியம் அவனிடத்திலே தங்கும். அப்படிப்பட்டவன் அல்லாதிருந்தால், அது உங்கள் இடமாய்த் திரும்பும்.

௭. அந்த வீட்டிலே நீங்கள் இருந்து வேலையாள் தன் கூலிக்குப்பாத்திரனானபடியினாலே அவர்களுக்குண்டாய் இருக்கிறவைகளைப்போசனபானம் பண்ணுங்கள். வீடுகள்தோறும் போகாதிருங்கள்.

௮. ஒரு பட்டினத்திலே நீங்கள் சேர்ந்தபொழுது, அங்கே அவர்கள் உங்களைச்சேர்த்துக்கொண்டால், உங்கள் முன் வைக்கிறவைகளைப்புசித்து,

௯. அவ்விடத்திலுள்ள பிணியாளிகளைக்குணமாக்கிப்பராபரனுடைய ஆளுகை உங்களுக்குச்சமீபமாய் வந்தது என்று அவர்களுக்கு அறிவியுங்கள்.

௰. * ஒரு பட்டினத்திலே நீங்கள் பிரவேசித்தபொழுது, அங்கே அவர்கள் உங்களைச் சேர்த்துக்கொள்ளாதிருந்தால், அதின் வீதிகளில் நீங்கள் புறப்பட்டு, * ௯: ௫.

௰௧. எங்களில் ஒட்டின உங்கள் பட்டினத்தின் புழுதியையும் உங்களுக்கு எதிராகத்துடைத்துப்போடுகிறோம். ஆகிலும், பராபரனுடைய ஆளுகை உங்களுக்குச்சமீபமாய் வந்தது என்கிறதை யறிபக்கடவீர்கள் என்று சொல்லுங்கள்.

௰௨. அந்நாளிலே சோதோம் பட்டினத்தாரிலும், அப்படிப்பட்ட பட்டினத்தார் அதிக தண்டிப்பை அடைவார்கள் என்று உங்களுக்குச்சொல்லுகிறேன்.

௰௩. ஐயோ! கோராசின் பட்டினத்தாரே, ஐயோ! பெத்சாயிதா பட்டினத்தாரே உங்களுக்கு வேதனை வரும். உங்களுக்குள்ளே நடந்த பலத்த செய்கைகள் தீரு, சீதோன் என்னும் பட்டினங்களில் நடந்தனவானால், அவர்கள் சீக்கிரமாய்த் (துக்கத்தினாலே) இரட்டை உடுத்தி, சாம்பலில் உளுக்காந்து மனந்திருப்பி இருப்பார்கள். * மத்தே. ௰௧: ௨௪—௨௪.

௰௪. ஆகையால், நியாயத்தீர்ப்பு நாளிலே தீரு, சீதோன் பட்டினத்தாருக்கு வருந் தண்டிப்பு எளிதாய் இருக்கும் நீங்கள் அதிக தண்டிப்பை அடைவீர்கள்.

௰௫. வான பரியந்தம் உயர்ந்த கப்பர் நாகூம் பட்டினத்தாரே, நீங்களும் பாதாளபரியந்தந் தாழ்த்தப்படுவீர்கள் என்று சொல்லி,

௰௬. பின்பு மறுபடியுஞ் சீஷரை நோக்கி, உங்களுக்குச்செவிகொடுக்கிறவன் எனக்குச் செவிகொடுக்கிறான். உங்களைத்தள்ளுகிறவன் என்னைத்தள்ளுகிறான். * என்னைத்தள்ளுகிறவன் என்னை அனுப்பினவரைத்தள்ளுகிறான் என்று சொல்லி அனுப்பினார். * மத். ௰: ௪௰. யோவா. ௰௩: ௨௰.

௰௭. பின்பு, அந்த எழுபதுபேருஞ் சந்தோஷத்துடனே திரும்பிவந்து, ஆண்டவரே! பசாசுகளும் உம்முடைய நாமத்தினாலே எங்களுக்குக்கீழ்ப்பட்டு இருக்கின்றன என்றார்கள்.

௰௮. அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, சாத்தான் வானத்தில் இருந்து மின்னைப்போல விழுகிறதைக்கண்டேன்.

௰௯. இதோ, * பாம்புகள் மேலும், தேள்கள்மேலும், சத்துருவின் வல்லமையெல்லாவற்றின் மேலும், மிதிக்கத்தக்கதாக அதிகாரத்தை உங்களுக்குக்கொடுக்கிறேன். ஒன்றும் உங்களைச்சேதப்படுத்த மாட்டாது. * ௨ரோ. ௰௬: ௨௰. சங்கி. ௯௧: ௰௨.

௨௰. ஆகிலும் ஆவிகள் உங்களுக்குக்கீழ்ப்பட்டிருக்கிறதினாலே நீங்கள் சந்தோஷப்படாமல், * உங்கள் நாமங்கள் பரமண்டலங்களில் எழுதி இருக்கிறதினாலே சந்தோஷப்படுங்கள் என்றார். * அறிவி. ௩: ௫.

௨௧. அந்நேரத்திலே இயேசுவானவர் ஆவியிலே களிகூர்ந்து சொன்னதாவது; * பிதாவே! வானத்தையும், பூமியையும் ஆளுகிறவரே! நீர் இவைகளை (உலக) ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தின படியினாலே, உம்மைத்துதிசெய்கிறேன். ஆ, பிதாவே! அப்படியே உமக்குப்பிரியமாய் இருந்ததென்று சொல்லி, * மத். ௰௧: ௨௫.

௨௨. பின்பு * சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு இருக்கின்றன. பிதாத்தவிர ஒருவனுங் குமாரனை யறி

யான். குமாரன் தவிர ஒருவனும் பிதாவை யறியான். குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச்சித்தமாய் இருக்கிறாரோ அவனும் அவரை அறிவான் என்று சொல்லி, * மத். ௨௮: ௰௮.

௨௩. பின்பு, சீஷரைமாத்திரம் நோக்கி, நீங்கள் இவைகளைப்பார்க்கிறவர்களானபடியினாலே நீங்கள் பாக்கியமுள்ளவர்கள்.

௨௪. அநேக தீர்க்கதரிசிகளும், இராசாக்களும் நீங்கள் பார்க்கிறவைகளைக்காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக்கேட்கவும், விரும்பியும், காணாமலும், கேளாமலும் போனார்கள் என்று உங்களுக்குச்சொல்லுகிறேன் என்றார். * ௧ பேது. ௧: ௰—௰௨.

௨௫. அப்பொழுது நியாயசாஸ்திரி ஒருவன் எழுந்திருந்து, அவரைச்சோதிக்கும்படிக்கு, போதகரே! நித்திய சீவனைச்சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு, நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான்.

௨௬. அதற்கு அவர் வேதப்பிரமாணத்திலே என்ன எழுதி இருக்கின்றது! என்னத்தை அறிந்திருக்கிறீர் என்றார்?

௨௭. அவன் பிரதி உத்தரமாகச்சொன்னது, உன்முழு இருதயத்தினாலும், உன்முழு ஆத்துமாவினாலும், உன் முழுப்பலத்தினாலும், உன் முழுச்சிந்தையினாலும், உன் தேவனாகிய பராபரன் இடத்தில் அன்புகூரவும், நீ உன்னிடத்தில் அன்பு கூருகிறதுபோலப் பிறன் இடத்தில் அன்பு கூரவும்வேண்டும் என்று எழுதி இருக்கின்றது என்றான்.

௨௮. அவர் சொன்னது, நீர் சரியாய்ச் சொன்னீர். நீர் அப்படிச்செய்தாற் சீவனை அடைவீர் என்றார்.

௨௯. அப்பொழுது அவன் தன்னை நீதிமான் என்று காண்பிக்க மனதாய் இயேசுவை நோக்கி, எனக்கடுத்த பிறன் யாவன் என்றான்?

௩௰. அதற்கு இயேசுவானவர் சொன்னது, ஒரு மனிதன் எருசலேம் நகரத்தில் இருந்து, எரிகோ பட்டினத்துக்குப்போகையில், கள்ளர் கையில் அகப்பட்டான். அவர்கள் அவனுடைய வஸ்திரங்களைக்கழற்றி, அவனைக்காயப்படுத்தி, அரை உயிராக விட்டுப் போனார்கள்.

௩௧. அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே சென்று, அவனைக்கண்டு பக்கமாய் விலகிப்போனான்.

௩௨. அப்படிப்போல ஒரு லேவியனும் அவ்விடத்திற் சேர்ந்து, அவனைக்கண்டு பக்கமாய் விலகிப்போனான்.

௩௩. பின்பு சாமாரியன் ஒருவன் பிரயாணமாய்ப்போய் அவன் இடத்திற் சேர்ந்து, அவனைக்கண்டு,

௩௪. உருக்கமாய் இரங்கி, அணுகி, அவனுடைய காயங்களில் எண்ணெயும், திராட்சரசமும் வார்த்து, காயங்களைக்கட்டி, அவனைத்தன் மிருகத்தின்மேல் ஏற்றி, ஒரு மண்டபத்திற்குக்கொண்டுபோய், பராமரித்துக்கொண்டு,

௩௫. மறுநாளிலே புறப்படுகிறபொழுது, இரண்டு வெள்ளிக்காசை எடுத்து, மண்டபத்தான் கையிலே கொடுத்து, நீ இவனை விசாரித்துக்கொள். அதிகமாய் இவனுக்காக எதையாகிலுஞ் செலவழித்தால் அதை நான் திரும்ப வரும்பொழுது உனக்குக் கொடுப்பேன் என்றான்.

௩௬. அப்படி இருக்கக்கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு அந்த மூன்றுபேரில் எவன் அடுத்த பிறனாய் இருந்தான்? உமக்கு எப்படித்தோன்றுகின்றது என்றார்.

௩௭. அவன் இடத்தில் இரக்கஞ் செய்தவனே என்றான். அப்பொழுது இயேசுவானவர் நீரும் போய் அந்தப்படியே செய்யும் என்றார்.

௩௮. பின்பு அவர்கள் பிரயாணமாய்ப்போகையில், அவர் ஒரு கிராமத்திற் பிரவேசித்தார். அங்கே * மார்த்தாள் என்று பேர் கொண்ட ஒரு ஸ்திரீ அவரைத்தன் வீட்டிலே உபசாரஞ் செய்தாள். * யோவா. ௰௧: ௧.

௩௯. அவளுக்குச்சகோதரியான மரியாள் இயேசுவின் பாதங்கள் அருகே உளுக்காந்துகொண்டிருந்து, அவருடைய வசனத்திற்குச்செவிகொடுத்தாள்.

௪௰. மார்த்தாள் மிகவும் ஊழியஞ்செய்யக்கவலை உள்ளவளாய் அவர் இடத்திற் சேர்ந்து நின்று, ஆண்டவரே! நான் மாத்திரம் ஊழியஞ் செய்யும்படிக்கு என் சகோதரி என்னைவிட்டிருக்கிறது உமக்குக்கவை இல்லையா! அவள் எனக்கு உதவி செய்யும்படி சொல்லும் என்றாள்.

௪௧. இயேசுவானவர் அவளுக்கு மாறுத்தரமாகச்சொன்னது, மார்த்தாளே! மார்த்தாளே! நீ அநேகங் காரியங்களுக்காகக்கவலைப்பட்டு, கலக்கமாய் இருக்கிறாய்.

௪௨. * ஒன்றுமாத்திரம் வேண்டும். மரியாளே நல்லபங்கைத்தெரிந்துகொண்டு இருக்கிறாள். அது அவள் இடத்தில் இருந்து எடுக்கப்படுவதில்லை என்றார். * மத். ௬: ௩௩.

௰௧ அதிகாரம்.

[(௧) பராபரன் நல்ல ஈவுகளைக்கொடுப்பார் என்று ஊக்கமாய்ச்செபம்பண்ணப் படிப்பித்து, ஊமையான ஒரு பசாசைத் துரத்தி, தூஷணையுள்ள பரிசேயரைக்கண்டித்து, (௨௮) ஆசீர் வதிக்கப்பட்டவர்கள் இன்னார் என்று காண்பித்து, (௨௯) சனங்களுக்குப்பிரசங்கித்து, பரிசேயர், வேதபாரகர், நியாயசாஸ்திரிகள் என்பவர்களுடைய மாயமான வேஷத்தைக்கண்டித்தது.]

ஒருநாள் அவர் ஒரு இடத்தில் இருந்து செபம்பண்ணி, முடித்த பின்பு அவருடைய சீஷரில் ஒருவன் அவரைநோக்கி, ஆண்டவரே! யோவான் தன் சீஷருக்குச் செபம் பண்ணும் வகையைப்போதித்தது போல நீரும் எங்களுக்குப்போதிக்கவேண்டும் என்றான்.

௨. அதற்கு அவர் சொன்னது, நீங்கள் செபம் பண்ணும்பொழுது, * பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே! உம்முடைய நாமம் பரிசுத்தமாய்த்தொழுதுகொள்ளப்படுவதாக. உம்முடைய ஆளுகை வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக. * மத். ௬: ௯—௰௩.

௩. தினந்தோறும் எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தைத்தாரும்.

௪. எங்களுக்குக்குற்றஞ்செய்த யாவருக்கும் நாங்கள் மன்னிக்கிறபடியினாலே தேவரீரும் எங்கள் பாவங்களை மன்னித்தருளும். நாங்கள் குற்றஞ் செய்வதற்கான காரணத்திற் பிரவேசியாதபடி செய்து, பொல்லாங்கின் நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும் என்று சொல்லுங்கள் என்றார்.

௫. அன்றியும், அவர் அவர்களுடனே சொன்னதாவது; உங்களில் ஒருவன் பாதி இராத்திரியிலே தனக்குச்சிநேகிதனானவன் இடத்திற்குப்போய், சிநேகிதனே! என் சிநேகிதன் பிரயாணமாய் என்னிடத்தில் வந்திருக்கிறான்.

௬. அவன் போசனம் பண்ணச்செய்யும்படிக்கு என்னிடத்தில் ஒன்றும் இல்லை. ஆகையால், நீ எனக்கு மூன்று அப்பங்களைக் கடன் கொடுக்க வேண்டும் என்று கேட்கும்பொழுது,

௭. வீட்டினுள்ளிருக்கிறவன் எனக்குத் தொந்தரவு செய்யாதிரு. இப்பொழுது கதவு பூட்டியாயிற்று. என் பிள்ளைகள் என்னுடனே கூடப்படுத்துக்கொண்டு இருக்கிறார்கள். நான் எழுந்து உனக்குக்கொடுக்கக் கூடாது என்று மாறுத்தரமாகச்சொல்லி,

௮. தனக்கு அவன் சிநேகிதனாய் இருக்கிறதினாலே அவனுக்குக்கொடாதிருந்தும், பின்பு தன்னை அவன் அதிக வருத்தஞ் செய்கிறபடியினாலே எழுந்திருந்து, அவனுக்கு வேண்டியபடிக்குக்கொடுப்பான் என்று உங்களுக்குச்சொல்லுகிறேன் என்றார்.

௯. அந்தப்படி நானுங்களுக்குச்சொல்லுகிறதாவது; * வேண்டிக்கொள்ளுங்கள், அப்பொழுது உங்களுக்குக்கொடுக்கப்படும். தேடிக்கொள்ளுங்கள். அப்பொழுது கண்டு அடைவீர்கள். தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத்திறக்கப்படும். * மத். ௭: ௭—௰௧.

௰. என்னத்தினாலெனில், வேண்டிக்கொள்ளுகிற எவனும் வாங்கிக்கொள்ளுகிறான். தேடிக்கொள்ளுகிறவன் கண்டு அடைகிறான். தட்டுகிறவனுக்குத்திறக்கப்படும்.

௰௧. அன்றியும் உங்களில் தகப்பனானவன் இடத்திற் குமாரன் அப்பங் கேட்கிறபொழுது அவனுக்குக்கல்லைக்கொடுப்பானோ? மீனைக்கேட்டால் மீனையல்ல, பாம்பைக்கொடுப்பானோ?

௰௨. முட்டையைக்கேட்டால், அவனுக்குத்தேளைக்கொடுப்பானோ?

௰௩. ஆதலாற் பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைச்செய்யும்படி அறிந்திருக்கப்பரம பிதாவானவர் தம்மை வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு மிகவும் அதிகமாய்ப்பரிசுத்த ஆவியைக்கொடாமல் இருப்பாராவென்றார்.

௰௪. ஒருநாள் ஊமையாகச்செய்கிற பசாசைத்துரத்தினார். பசாசு போனபின்பு ஊமையன் பேசினான். அதைக்குறித்துச் சனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

௰௫. அவர்களிற் சிலர் சொன்னது, இவன் பசாசுகளின் தலைவனாகிய * பெயேல்சேபூலினாலே பசாசுகளைத்துரத்துகிறான் என்றார்கள். * மத். ௯: ௩௨—௩௪. ௰௨: ௨௨—௩௰. மாற் ௩: ௨௨—௩௰.

௰௬. வேறு சிலர் அவரைச்சோதிக்கும்படிக்கு, * வானத்தில் இருந்து ஓரடையாளம் உண்டாகும்படி அவரிடத்திலே கேட்டுக்கொண்டார்கள். * மத். ௰௨: ௩௮. ௰௬: ௧.

௰௭. அவர்களுடைய சிந்தனைகளை அவர் அறிந்து அவர்களுடனே சொன்னதாவது; ஒரு இராச்சியத்தார் தங்களுக்குள்ளே பிரிவினை உண்டுபண்ணினால் அவர்கள் அழிந்து போவார்கள். குடும்பங் குடும்பமாக மடிந்துபோவார்கள்.

௰௮. அப்படிக்குச்சாத்தானுந் தனக்குத் தானே விரோதயாகப்பிரிவு உண்டுபண்ணினால் அவனுடைய இராச்சியம் எப்படி நிற்கும்? இப்படி இருக்க, நீங்கள் என்னைப்பெயேல்சேபூலினாலே பசாசுகளைத் துரத்துகிறவன் என்கிறீர்கள்.

௰௯. நான் பெயேல்சேபூலைக்கொண்டு பசாசுகளைத்துரத்துகிறவன், ஆனால் உங்கள் பிள்ளைகள் ஆரைக்கொண்டு அவைகளைத்துரத்துகிறார்கள். ஆகையால், அவர்கள் உங்களுக்கு நியாயத்தீர்ப்புக்கொடுக்கிறவர்களாய் இருப்பார்கள்.

௨௰. நான் பராபரனுடைய வல்லமையினாலே பசாசுகளை, துரத்துகிறபடியாற் பராபரனுடைய ஆளுகை உங்களுக்குள்ளே சடுதியாய் வந்திருக்கின்றதே.

௨௧. ஆயுதந் தரித்த பலவான் தன் அரமனையின் வாசலைக்காக்கிறபொழுது அவனுடைய பொருள் பத்திரப்பட்டிருக்கும்.

௨௨. * அவனிலும் அதிக பலவான் வந்து அவனைச்செயித்தால் அவன் நம்பி இருந்த சகல ஆயுத வர்க்கத்தையும் பறித்துக் கொண்டு அவனுடைய உடைமைகளைப் பங்கிட்டுக்கொள்வான். * கொ. ௨: ௰௫.

௨௩. என்னுடனே இராதவன் எனக்கு விரோதமாய் இருக்கிறான். என்னைப்போலச் சேர்த்துக்கொள்ளாதிருக்கிறவன் சிதற அடிக்கிறான்.

௨௪. * அசுத்த ஆவி ஒருமனிதனை விட்டுப்புறப்படுகிறபொழுது அது தண்ணீர் இல்லாத இடங்களில் இளைப்பாறும் இடத்தைத்தேடித்திரிந்து அடையாமல் இருக்குங்காலத்தில் அது தான் விட்டுவந்த வீட்டிற்குத்திரும்ப வேண்டும் என்று சொல்லி, * மத். ௰௨: ௪௩—௪௫.

௨௫. அந்தப்படி வருகிறபொழுது அது பெருக்கிச்சிங்காரிக்கப்பட்டிருக்கக்கண்டு,

௨௬. பின்பு போய்த்தன்னிலும் அதிக பொல்லாத வேறேழு ஆவிகளைக்கூட்டிக் கொண்டுவந்து உட்பிரவேசித்து அங்கே குடி இருக்கும். அப்பொழுது, * அம்மனிதனுடைய முன் நிலைமையிலும் பின் நிலைமை அதிககேடுள்ளதாய் இருக்கும் என்றார். * ௨ பேது. ௨: ௨௰.

௨௭. இவைகளை அவர் சொல்லுகையிற் கூட்டத்தில் இருந்த ஒருஸ்திரீயானவள் அவரை நோக்கி, உம்மைச்சுமந்த வயிறும், நீர் பாலுண்ட முலைகளும் பாக்கியமுள்ளவைகள் என்று சத்தமாய்க்கூப்பிட்டாள்.

௨௮. அவர் சொன்னது, அதனிலும் அதிகமாய்ப்பராபரனுடைய வாக்கைக்கேட்டு அதைக்காத்துக்கொள்ளுகிறவர்களே பாக்கியவான்கள் என்றார்.

௨௯. அன்றியுஞ் சனங்கள் திரளாய்க்கூடிவந்திருக்கிறபொழுது அவர் சொன்னதாவது; * இந்தச்சந்ததியார்கள் பொல்லாதவர்களாய் இருக்கிறார்கள். ஓரடையாளத்தைத்தேடுகிறார்கள். ஆனாலும் யோனா தீர்க்கதரிசியின் அடையாளமே அன்றி வேறடையாளம் இவர்களுக்குக்கொடுக்கப்படுவதில்லை. * மத். ௰௨: ௩௯—௪௨. யோனா. ௨: ௧.

௩௰. ஆதலால் யோனாவானவன் நினிவே பட்டினத்தாருக்கு அடையாளமாய் இருந்ததுபோல மனிதனுடைய குமாரனும் இந்தச்சந்ததிக்கிருப்பார்.

௩௧. * தெற்கின் இராசஸ்திரீ சாலொமோனுடைய ஞானத்தைக்கேட்கும்படிக் குப்பூமியின் எல்லைகளில் இருந்து வந்தாள் சாலொமோனிலும் இந்தச்சந்ததியிலே தோன்றினவன் அதிகமாய் இருக்கிறான். (ஆனாலும் இவர்கள் கேட்கமாட்டார்கள்.) ஆதலால் அந்த இராசஸ்திரீ நியாயத்தீர்ப்பு நாளிலே இவர்களுடனே கூட எழும்பி இவர்களை ஆக்கினைக்குள்ளாகத்தீர்ப்பாள். * ௨ நாளா. ௯: ௧.

௩௨. நினிவேபட்டினத்தார் யோனாவின் பிரசங்கத்தைக்கேட்டு, * மனந் திரும்பினார்கள். யோனாவிலும் இந்தச்சந்ததியிலே தோன்றினவன் அதிகமாய் இருக்கிறான். (ஆனாலும் இவர்கள் மனந் திரும்பவில்லை.) ஆகையால் நினிவே பட்டினத்தார் நியாயத்தீர்ப்புநாளிலே இவர்களுடனே கூட எழும்பி இவர்களை ஆக்கினைக்குள்ளாகத்தீர்ப்பார்கள். * யோனா. ௩: ௫.

௩௩. அன்றியும் ஒருவனும் விளக்கைக் கொளுத்தி அதை அந்தரங்கத்தில் ஆவது, மரக்காலின் கீழாவது வைக்கமாட்டான். உள்ளே வருகிறவர்கள் வெளிச்சங் காணும்படிக்கு அதை ஒரு தண்டின்மேலே வைப்பான்.

௩௪. * கண்ணானது சரீரத்தின் விளக்காய் இருக்கின்றது. அப்படி இருக்க உன் கண் சொஸ்தமுள்ளதாய் இருந்தால் உன் சரீரம் முழுவதும் வெளிச்சம் அடைந்திருக்கும். அது கெட்டதானால் உன் சரீரம் இருள் அடைந்திருக்கும். * மத். ௬: ௨௨, ௨௩.

௩௫. ஆகையால் உன்னிலுள்ள வெளிச்சமானது இருளாய் இராதபடிக்கு எச்சரிக்கையாய் இரு.

௩௬. அப்படி உன் சரீரம் ஒரு புறத்திலும் இருள் அடைந்திராமல் முழுவதும் வெளிச்சமாய் இருந்தால் அப்பொழுது ஒரு விளக்குத்தன் பிரகாசத்தினாலே உன்னை வெளிச்சமாக்குகிறதுபோல அது முழுவதும் வெளிச்சம் அடைந்திருக்கும் என்றார்.

௩௭. அவர் அப்படிப்பேசிக்கொள்ளுகையில் ஒரு பரிசேயன் தன்னுடனே கூடப் பகற்போசனம் பண்ணும்படிக்கு அவரை வேண்டிக்கொண்டான். அவர்போய்ப்பந்தி இருந்தார்.

௩௮. போசனம் பண்ணுகிறதற்கு முன்னே அவர் ஸ்நானம்பண்ணாமல் இருந்ததைப்பரிசேயன் கண்டு ஆச்சரியப்பட்டான்.

௩௯. * அப்பொழுது கர்த்தர், அவனை நோக்கி, பரிசேயராகிய நீங்கள் போசனபான பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தம் பண்ணுகிறீர்கள். உங்கள் உள்ளங் கொள்ளையினாலும், துராசையினாலும் நிறைந்திருக்கின்றது. * மத். ௨௩: ௨௫, ௨௬.

௪௰. ஆ, புத்தியீனரே, வெளிப்புறத்தை

யுண்டாக்கினவர் உட்புறத்தையும் உண்டாக்கவில்லையா?

௪௧. அப்படி இருக்க, * உங்களுக்குண்டானவைகளை, பிச்சையாகக்கொடுங்கள். அப்பொழுது சகலமும் உங்களுக்குச்சுத்தமாய் இருக்கும். * ௰௨: ௩௩. ஏசா. ௫௮: ௭.

௪௨. * ஐயோ பரிசேயராகிய உங்களுக்கு வேதனை வரும். என்னத்தினாலெனில், நீங்கள் ஒக்காசியிலும். அருபி பூண்டிலும், சகலவிதக்கீரைகளிலும் பத்தில் ஒன்று கொடுத்து நியாயத்தையும், தேவ அன்பையும் விட்டு விலகுகிறீர்கள். இவைகளை நீங்கள் நடப்பித்து அவைகளையும் விட்டுவிடாதிருக்கவேண்டும். * மத். ௨௩: ௨௩.

௪௩. * ஐயோ பரிசேயரே, உங்களுக்கு வேதனை வரும். என்னத்தினாலெனிற் செப ஆலயங்களில் முதலாசனத்தையும், சந்தைகளில் வாழ்த்துதல்களையும் விரும்புகிறீர்கள். * மத். ௨௩: ௬, ௭.

௪௪. * ஐயோ வஞ்சகராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு வேதனை வரும். என்னத்தினாலெனிற் காணப்படாத பிரேதக்குழிகளைப்போல் இருக்கிறீர்கள். மனிதர் அவைகளை அறியாமல் அவைகள் மேலே நடக்கிறார்கள் என்று சொல்லுகிறபொழுது, * மத். ௨௩: ௨௭, ௨௮.

௪௫. நியாயசாஸ்திரிகளில் ஒருவன் அவரை நோக்கிப்போதகரே, நீர் இப்படிச் சொல்லுகிறதினாலே எங்களையும் நிந்திக்கிறீரே என்றான்.

௪௬. அதற்கு அவர் சொன்னது, ஐயோ, நியாய சாஸ்திரிகளாகிய உங்களுக்கும் வேதனைவரும். என்னத்தினாலெனில், * மிகவும் பாரமான சுமைகளை மனிதர்கள் மேல் ஏற்றுகிறீர்கள். நீங்கள் தாமே உங்கள் விரல்களில் ஒன்றினாலும் அந்தச்சுமைகளைத்தொடமாட்டீர்கள். * மத். ௨௩: ௪.

௪௭. ஐயோ, உங்களுக்கு வேதனை வரும். என்னத்தினாலெனில், உங்கள் பிதாக்களாற் கொலை செய்யப்பட்ட, * தீர்க்கதரிசிகளுடைய பிரேதக்குழிகளின்மேலே திண்ணையைக்கட்டுகிறீர்கள். * மத். ௨௩: ௨௯—௩௧.

௪௮. உங்கள் பிதாக்கள் அவர்களைக்கொலைசெய்த பின்பு நீங்கள் அவர்களுடைய கல்லறைகளின்மேல் வீடுகட்டுகிறபடியால் நீங்கள் உங்கள் பிதாக்களுடைய கிரியைகளுக்குச்சம்மதிக்கிறவர்கள் என்று சாட்சி கொடுக்கிறீர்கள்.

௪௯. * ஆகையால், பராபரனுடைய ஞானஞ் சொல்லுகிறதாவது, நான் தீர்க்கதரிசிகளையும், அப்போஸ்தலரையும் அவர்கள் இடத்தில் அனுப்புவேன். அவர்களிற் சிலரைக்கொலைசெய்து சிலரைத்துன்பப்படுத்துவார்கள். * மத். ௨௩: ௩௪.

௫௰. உலகத்தோற்றம் முதற்கொண்டு, * ஆபேலின் இரத்தந் தொடங்கிப்பலிபீடத்துக்கும், தேவாலயத்துக்கும் நடுவே அழிக்கப்பட்ட, † சகரியாவின் இரத்தம் வரைக்குஞ் சிந்தப்பட்ட சகல தீர்க்கதரிசிகளுடைய இரத்தமும் இந்தச்சந்ததியினிடத்திலே கேட்கப்படும்படிக்கு அப்படிச் செய்வார்கள். * ௧ மோ. ௪: ௮. † ௨ நா. ௨௪: ௨௧, ௨௨.

௫௧. இந்தச்சந்ததியின் இடத்திலே அது கேட்கப்படும் என்று நிச்சயமாய் உங்களுக்குச்சொல்லுகிறேன்.

௫௨. ஐயோ, நியாயசாஸ்திரிகளாகிய உங்களுக்கு வேதனைவரும். * என்னத்தினாலெனில், அறிவின் திறவுகோலை எடுத்துக் கொண்டுபோனீர்கள். நீங்களோ உட்பிரவேசிக்கவில்லை. உட்பிரவேசிக்கிறவர்களுக்குத்தடைபண்ணினீர்கள் என்றார். * மத். ௨௩: ௰௩.

௫௩. இவைகளை அவர் அவர்களுடனே பேசிக்கொண்டபொழுது வேதபாரகரும், பரிசேயரும் அவரிடத்திற் குற்றங் காணும்படிக்கு,

௫௪. அநேக காரியங்களைக்குறித்து அவர் பேசும்படி மிகவும் அவரை நெருக்கமாய் வினாவித்தந்திரமாய்க்காத்திருந்து அவருடைய வாய்மொழியிலே தப்பிதங் காணப்பார்த்தார்கள்.

௰௨ அதிகாரம்.

[(௧) கிறிஸ்துத்தம்முடைய சீஷர்கள் மாயத்துக்கு இடங்கொடாமல் இருக்கவும், பயம் இல்லாமல் தம்முடைய உபதேசங்களைப்பிரசங்கிக்கவும் போதித்தது. (௰௩) அவர் பெரிய களஞ்சியங்களைக்கட்டின ஒரு ஐசுவரியவானை உவமையாகக்கொண்டு பொருள் ஆசையைக்குறித்துச்சனங்களை எச்சரித்தது. (௨௨) அதிகமாய் உலக காரியங்களிற் கவலைப்படாமல் இருக்கவும் (௩௧) பராபரனுடைய இராச்சியத்தைத்தேடவும், (௩௩) பிச்சை கொடுக்கவும், (௩௯) கர்த்தர் வந்து தட்டும்போது அவருடைய வரவை எதிர் பார்த்திருந்து திறக்கவும் வேண்டும் என்பது. (௪௧) கிறிஸ்துவின் ஊழியக்காரர் தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட வைகளைக்காத்து, (௪௯) துன்பம் வரும் என்று எதிர்நோக்கவேண்டியதென்பது. (௫௪) ஒப்புரவாக்குதல் இல்லாமல் மரணம் அடைவது பயங்கரம் ஆனதால், (௫௮) சனங்கள் இந்தக்காலத்தையே கிருபையின் காலம் என்று நினைக்கவேண்டும் என்பது.]

அத்தருணத்திலே அநேகம் ஆயிரஞ்
சனங்கள் ஒருவரையொருவர் மிதிக்
கத்தக்கவிதமாகக்கூடி வந்திருக்கிறபொழு
து, அவர் தம்முடைய சீஷருடனே சொன்
னதாவது; பிரதானமாய் நீங்கள் வஞ்சக
மாகிய பரிசேயருடைய * புளிப்புள்ள மா
வுக்கு இடங்கொடாமல் எச்சரிக்கையாய்
இருங்கள். * மத். ௰௬: ௬.
௨. *வெளியாகாத மறைபொருளும், அறி
யப்படாத அந்தரங்கமும் ஒன்றும் இல்லை.
* ௮: ௰௭.
௩. அப்படியிருக்க, நீங்கள் இருளிற் பே
சினது எதுவோ, அது வெளிச்சத்திலே
கேட்கப்படும். நீங்கள் அறைகளிற் காதுக்
குட் சொன்னது எதுவோ, அது வீடுகள்
மேலே பிரசங்கிக்கப்படும்.
௪. அல்லாமலும் என் சிநேகிதரான உங்க
ளுக்கு நான் சொல்லுகிறதாவது; *சரீரத்
தைக்கொலைசெய்தாலும், அதின்பின்பு அதி
கம் ஒன்றும் உங்களுக்குச்செய்யத்திராணி
யில்லாதவர்களுக்குப் † பயப்படாதிருங்கள்.
* மத். ௰: ௨௮—௩௧. † ஏசா. ௫௧: ௭.
௫. நீங்கள் பயப்படத்தக்கவர் இன்னார்
என்று உங்களுக்குக்காண்பிக்கிறேன். கொ
லைசெய்தபின்பு நரகத்திலே தள்ளுகிறதற்கு
அதிகாரம் உடையவராகிய (பராபரனுக்
குப்) பயப்படுங்கள். அவருக்கே பயப்ப
டக்கடவீர்கள் என்று உங்களுக்குச்சொல்
லுகிறேன்.
௬. இரண்டு காசுக்கு ஐந்து அடைக்க
லான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவோ?
ஆனாலும் அவைகளில் ஒன்றும் பராபரனு
க்கு மறைக்கப்படுகிறதில்லை.
௭. உங்கள் தலையிலுள்ள எல்லா மயிர்க
ளும் எண்ணப்பட்டிருக்கின்றன. ஆகை
யாற் பயப்படாதிருங்கள். அநேகம் அ
டைக்கலான் குருவிகளிலும் நீங்கள் மேன்
மையாய் இருக்கிறீர்கள்.
௮. அன்றியும் நான் உங்களுக்குச்சொல்
லுகிறதாவது; * எவனாகிலும் மனிதர் முன்
பாக என்னை அறிக்கை பண்ணினால் மனித
னுடைய குமாரனும் பராபரனுடைய தூ
தர்கள் முன்பாக அவனை அறிக்கை பண்
ணுவான். * மத். ௰: ௩௨, ௩௩.
௯. மனிதர் முன்பாக என்னை மறுதலிக்
கிறவன் பராபரனுடைய தூதர்கள் முன்
பாக மறுதலிக்கப்படுவான்.
௰. * எவனாகிலும் மனிதனுடைய குமார
னுக்கு விரோதமாய்ப்பேசினால் அது அவ
னுக்கு மன்னிக்கப்படும். பரிசுத்த ஆவி
யைத்தூஷணிக்கிறவனுக்கு அது மன்னிக்
கப்படாது. * மத். ௰௨: ௩௧, ௩௨.
௰௧. * அன்றியும் செப ஆலயங்களுக்கும்,
துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும்
முன்பாக உங்களைக்கொண்டு போய் விடும்
பொழுது எப்படி என்னத்தை எதிர் உத்
தரவாகச்சொல்லுவோம் என்றும், எதைப்
பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்
கள். * மத். ௰: ௰௮, ௰௯.
௰௨. நீங்கள் பேசவேண்டியவைகளைப்பரி
சுத்த ஆவியானவர் அந்நேரத்திலே உங்க
ளுக்குப்போதிப்பாரே என்றார்.
௰௩. அப்பொழுது கூட்டத்தில் ஒருவன்
அவரை நோக்கிப்போதகரே! என் சகோ
தரன் எனக்கும், தனக்கும் உண்டான சுதந்
தர ஆஸ்தியைப்பங்கிட்டுக்கொள்ளும்படிக்
குக்கட்டளை இடும் என்றான்.
௰௪. அதற்கு அவர் சொன்னது, மனிதனே!
என்னை உங்களுக்கு நியாயாதிபதியாகவும்,
பங்கிடுகிறவனாகவும் ஏற்படுத்தினவன் யா
வன் என்று சொல்லி,
௰௫. பின்பு எல்லாரையும் நோக்கி, * ஒரு
வனுக்கு எவ்வளவு ஆஸ்தி உண்டாயி
ருந்தாலும், அவைகளினாலே அவனுடைய
ஜீவன் உண்டாயிராது. † ஆகையால்
நீங்கள் பொருளாசைக்கு இடங்கொடா
மல் எச்சரிக்கையாய் இருக்கக்கடவீர்கள்
என்றார். * மத். ௪: ௪. † ௧ தீமோ. ௬:
௬—௰.
௰௬. அல்லாமலும் ஒரு உவமையை அவர்
களுக்குச்சொன்னார். அதாவது, ஐசுவரிய
முள்ள ஒரு மனிதனுடைய காணி பூமி நன்
றாய் விளைந்தன.
௰௭. அப்பொழுது அவன் தனக்குள்ளே
சிந்தித்துக்கொண்டு சொன்னது; என் தானி
யத்தைச்சேர்த்து வைக்கிறதற்கு வேண்டி
ய இடம் இல்லையே.
௰௮. நான் என்ன செய்யலாம்? என் களஞ்
சியங்களை நான் இடித்து அதிக பெரிதா
னவைகளைக்கட்டி எனக்குண்டான தானி
யம் யாவையும், என் பொருளையும் அங்கே
சேர்த்து வைக்க வேண்டும்.
௰௯. பின்பு நான் என் ஆத்துமாவே! அநே
க வருஷங்களுக்கு உனக்காக மிகுந்த பொ
ருள்கள் வைக்கப்பட்டு இருக்கின்றன. ஆ
கையால் இளைப்பாறிப்புசித்துக்குடித்து ம
கிழ்ச்சியாய் இரு என்று என் ஆத்துமாவு
டனே சொல்ல வேண்டும் என்றான்.
௨௰. அப்பொழுது பராபரன் அவனுட
னே சொன்னது, புத்தியீனனே! இந்த இ
ராத்திரியிலே * உன் ஆத்துமாவை உன்னி
டத்திற் கேட்டு எடுத்துக்கொள்வார்கள்.
அப்பொழுது நீ சேகரித்தவைகள் † ஆருக்
காக இருக்கும் என்றார். * சங்கீ. ௩௭: ௩௫,
௩௬. † சங்கீ ௩௯: ௬.
௨௧. பராபரனில் ஐசுவரியவானாய் இரா
மல் தனக்காகப்பொக்கிசங்களைச்சேர்க்கிற
வனுக்கு அப்படியே சம்பவிக்கும் என்று
சொல்லி,

௨௨. பின்பு தம்முடைய சீஷரை நோக்கி, * அதினாலே நீங்கள் உங்கள் ஜீவனைக்குறித்து என்ன உண்போம் என்றும், உங்கள் சரீரத்தைக்குறித்து என்ன உடுப்போம் என்றுங் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச்சொல்லுகிறேன். * மத். ௬: ௨௫.

௨௩. ஆகாரத்திற்கு ஜீவனும், உடைக்குச் சரீரமும் அதிகமாய் இருக்கின்றதே.

௨௪. காகங்களை நோக்கிப்பாருங்கள். அவைகள் விதைக்கிறதும் இல்லை. அறுக்கிறதும் இல்லை. அவைகளுக்குப்பண்டகசாலையும், களஞ்சியமும் இல்லை. அவைகளுக்கும் பராபரன் உணவு கொடுக்கிறார். பறவைகளிலும் நீங்கள் மிகவும் அதிக மேன்மையாயிருக்கிறீர்கள் அல்லவா?

௨௫. அன்றியும் உங்களில் ஒருவன் கவலைப்படுகிறதினாலே தன் வயதோடே ஒரு நாழிகையாகிலுங் கூட்டப்படுவானா?

௨௬. மிகவுஞ் சிறிதானது உங்களால் ஆகாதிருக்க மற்றவைகளுக்காக நீங்கள் என்னத்திற்குக்கவலைப்படுகிறீர்கள்?

௨௭. லீலி என்னும் புஷ்பங்கள் வளருகிற வகையைச்சிந்தித்துக்கொள்ளுங்கள். அவைகள் வருந்துகிறதும் இல்லை. நூற்கிறதும் இல்லை. (அவை மிகவும் அழகாய்இருக்கின்றன.) சாலோமோன் தானே மிகுந்த மகிமையுடையவனாயிருந்தும் அவைகளில் ஒன்றைப்போல (அழகாய்) உடுத்தியிருக்க இல்லையென்று உங்களுக்குச்சொல்லுகிறேன்.

௨௮. அப்படியிருக்க, அற்பவிசுவாசிகளே! இன்றைக்கு வெளியில் இருந்து நாளைக்கு அடுப்பிற்போடப்படுகிற புல்லுக்குப் பராபரன் இவ்விதமாக உடுத்தினால் மிகவும் அதிகமாய் உங்களுக்கு அப்படிச்செய்வார் அல்லவா!

௨௯. ஆகையால், என்னத்தை உண்போம்! என்னத்தைப்பானம் பண்ணுவோம் என்று நீங்கள் கேளாமலும், கலக்கம் அடையாமலும் இருங்கள்.

௩௰. உலகத்தார் இப்படிப்பட்டவைகள் யாவையுந் தேடுகிறார்கள். இவைகள் உங்களுக்கு வேண்டும் என்று உங்கள் பிதாவானவர் அறிந்திருக்கிறார்.

௩௧. விசேஷமாய்ப்பராபரனுடைய இராச்சியத்தைத்தேடுங்கள். அப்பொழுது இவைகள் எல்லாம் உங்களுக்குக்கூடக்கொடுக்கப்படும்.

௩௨. சிறிய ஆட்டுக்கூட்டமே! உங்கள் பிதா இராச்சியத்தை உங்களுக்குக்கொடுக்கப்பிரியமாய் இருக்கிறார்.

௩௩. ஆகையாற் பயப்படாதிருங்கள் உங்களுக்கு உண்டானவைகளை விற்றுப்பிச்சை கொடுங்கள். உங்கள் பொக்கிசம் எங்கேயோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.

௩௪. ஆகையால், * பழமையாய்ப்போகாத பணப்பைகளையும், குறைந்துபோகாத பொக்கிசத்தையும் பரமண்டலங்களில் உங்களுக்காக உண்டுபண்ணுங்கள். அங்கே திருடன் சேருகிறதும் இல்லை. பூச்சி கெடுக்கிறதும் இல்லை. * மத். ௬: ௰௯—௨௧.

௩௫. * உங்கள் அரைகள் கட்டப்பட்டவைகளாகவும், உங்கள் விளக்குகள் எரிகிறவைகளாகவும், தங்கள் எசமான் கலியாணத்தில் இருந்து திரும்பிவந்து தட்டும்பொழுது உடனே அவருக்குத்திறக்கும்படிக்கு அவன் வரக்காத்திருக்கிற மனிதருக்கு ஒப்பாகவும் இருங்கள். * எபே. ௬: ௰௪.

௩௬. எசமான் வந்து விழித்திருக்கக்காணும் ஊழியக்காரரே பாக்கியர்.

௩௭. அவன் அரையிற் கச்சைக்கட்டிக்கொண்டு அவர்களைப்பந்தியிருக்கச்செய்து பின்பு வந்து அவர்களுக்கு ஊழியஞ்செய்வான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௩௮. அவன் இரண்டாஞ்சாமத்திலாவது, மூன்றாஞ் சாமத்திலாவது வந்து அப்படியே கண்டால் அவ்வூழியக்காரர் பாக்கியவான்களாய் இருப்பார்கள்.

௩௯. * திருடன் இன்னவின்ன நேரத்தில் வருவான் என்று வீட்டெசமான் அறிந்தால், அவன் விழித்திருந்து தன் வீட்டைக் கன்னம் இடும்படிக்கு இடங் கொடுக்க மாட்டான். அது உங்களுக்குத்தெரியும். * மத் ௨௪: ௪௩, ௪௪.

௪௰. அந்தப்படியே நீங்களும் * நினையாத நேரத்திலே மனிதனுடைய குமாரன் வருவதால் எத்தனமாய் இருக்கக்கடவீர்கள் என்றார். * ௨௧: ௩௪—௩௬.

௪௧. அப்பொழுது பேதுரு அவரை நோக்கி, ஆண்டவரே! இந்த உவமையை நீர் எங்களுக்கு (மாத்திரஞ்) சொல்லுகிறீரோ! எல்லாருக்குஞ் சொல்லுகிறீரோவென்றான்.

௪௨. அதற்குக்கர்த்தர் சொன்னது, * தகுதியான காலத்திலே படிகொடுக்கும்படிக்கு எசமான் தன்னுடைய பணிவிடைச்சனங்கள்மேல் வைக்கத்தக்க உண்மையும், புத்தியும் உள்ள விசாரணைக்காரன் யாவன்? * மத். ௨௪: ௪௫.

௪௩. எசமான் வரும்பொழுது அப்படிச் செய்யக்காணப்படுகிற ஊழியக்காரன் பாக்கியவான்.

௪௪. எசமான் தனக்குண்டான எல்லாவற்றின்மேலும், அவனை வைப்பான் என்று மெய்யாய் உங்களுக்குச்சொல்லுகிறேன்.

௪௫. அந்த ஊழியக்காரன் என் எசமான் வரத்தாமதிக்கிறார் என்று தன் இருதயத்தில் எண்ணி, வேலைக்காரரையும், வேலைக்கா

ரிகளையும் அடிக்கவும், புசித்துக்குடித்து வெறிகொள்ளவுந் தொடங்கினால்,

௪௬. அந்த ஊழியக்காரன் நினையாத நாளிலும், அறியாதநேரத்திலும் அவனுடைய எசமான் வந்து, அவனைத்துண்டித்துப் போட்டு, உண்மை இல்லாதவர்களுடனே யவனுக்குப்பங்கை ஏற்படுத்துவான்.

௪௭. மிகுதியைப்பெற்றவன் எவனோ அவன் இடத்தில் மிகவும் விசாரிக்கப்படும். மிகுதியைப்பற்றிக்கொண்டவன் இடத்தில் அதிகங் கேட்கப்படும்.

௪௮. ஆதலால் தன் எசமானுடைய சித்தத்தை யறிந்தும், எத்தனமாய் இராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருக்கிற ஊழியக்காரன் அநேக அடிகளைப் பெற்றுக்கொள்ளுவான். (சித்தத்தை) யறியாதவனாய் இருந்து, அடிகளுக்கு ஏற்றவைகளைச்செய்கிறவன் கொஞ்ச அடிகளைப் பெற்றுக்கொள்வான்.

௪௯. * அக்கினியைப்பூமியின்மேற் போட வந்தேன். அது இப்பொழுதே பற்றி எரியும் படிக்கு விரும்புகிறேன். * எரே. ௨௩: ௨௯.

௫௰. அதற்கு முன்னே நான் * அடைய வேண்டிய ஒரு ஸ்நானம் உண்டு. அது முடியும் அளவும் நான் மிகவும் நெருக்கப் படுகிறேன். * மத். ௨௰: ௨௨. சங்கீத. ௬௯: ௨.

௫௧. * நான் பூமிக்குச்சமாதானத்தைத் தரும்படிக்கு வந்தேன் என்று நினைக்கிறீர்கள்? அதை யல்ல, பிரிவினையைத்தரும்படிக்கு வந்தேன் என்று உங்களுக்குச்சொல்லுகிறேன். * மத்தே. ௰: ௩௪—௩௬.

௫௨. எப்படியெனில், இது முதல் ஒரே குடும்பத்திலே ஐந்துபேர் பிரிந்திருப்பார்கள். மூன்றுபேர் இரண்டு பேருக்கும் இரண்டுபேர் மூன்றுபேருக்கும் விரோதமாய் இருப்பார்கள்.

௫௩. தகப்பன் மகனுக்கும், மகன் தகப்பனுக்கும், தாய் மகளுக்கும், மகள் தாய்க்கும், மாமி தன் மருமகளுக்கும், மருமகள் தன் மாமிக்கும் விரோதமாகப்பிரிந்து போவார்கள் என்றார்.

௫௪. பின்பு அவர் சனங்களுடனே சொன்னது, நீங்கள் ஒரு மேகம் மேற்கிலே எழும்புகிறதைக்காண்கிற உடனே, பெரு மழை வரும் என்று சொல்லுகிறீர்கள். அந்தப் படியுமாகும்.

௫௫. அல்லாமலுந் தென்றல் அடிக்கிறதை நீங்கள் காண்கிறபொழுது, காங்கை உண்டாகும் என்கிறீர்கள் அந்தப்படியேயும் ஆகும். ஆ, வஞ்சகரே! பூமியின் உருவத்தையும், வானத்தின் உருவத்தையும் வகையறுக்க அறிந்திருக்கிறீர்கள். * இக்காலத்தைமாத்திரம் நீங்கள் வகையறுமல் இருக்கிறது எப்படி! * மத். ௰௬: ௩.

௫௭. அல்லாமலும் நியாயம் இன்னதென்று நீங்கள் உங்களாலே எண்ணிக்கொள்ளாமல் இருக்கிறது என்ன!

௫௮. * நீ உன் எதிராளி உடனேகூடத் துரையின் இடத்துக்குப்போகிறபொழுது, அவனை விட்டு நீங்கும்படிக்கு, வழியிலே பிரயாசப்படுவாயாக. இல்லாவிட்டால், அவன் உன்னை நியாயாதிபதிக்கு முன்பாகக்கொண்டுபோவதும் அல்லாமல், நியாயாதிபதி உன்னைச்சேவகனுக்கு ஒப்புக்கொடுப்பான். சேவகன் உன்னைக்காவலிற் போடுவான். * மத்தே. ௫: ௨௫, ௨௬.

௫௯. நீ ஒரு காசாகிலுங் குறையாமற் செலுத்துகிற வரைக்கும் அவ்விடத்தில் இருந்து விடுதலையாக்கப்படமாட்டாய் என்று உனக்குச்சொல்லுகிறேன் என்றார்.

௰௩ அதிகாரம்.

[(௧) கிறிஸ்து, கலிலேயர் முதலானவர்களுக்கு வந்த கேட்டை அறிவித்து, மற்றவர்கள் குணப்பட வேண்டும் என்று பிரசங்கித்தது. (௬) வெட்டப்பட்ட கனிகொடாத அத்திமரத்தை உவமையாகக்காட்டினது. (௰௧) கூனியாகிய ஒரு ஸ்திரீயைக்குணமாக்கினது. (௰௮) கடுகு விதையின் உவமையினாலும், புளித்த மாவின் உவமையினாலும், தம்மாலே தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் இருதயத்தில் நடந்தேறுந் திருவசனத்தின் வல்லமையுள்ள கிரியைகளைக் காண்பித்து, (௨௪) நெருக்கமான வாசல் வழியாய்ப்பிரவேசிக்கப்போதித்து, (௩௧) ஏரோதையும், எருசலேமையுங் கடிந்துகொண்டது.]

பிலாத்து என்பவன் சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளுடனே கலந்திருந்தான். அந்தக்கலிலேயரைக்குறித்து, அவ்வேளையிலே அங்கே இருக்கிற சிலர் அவருடனே பேசிக்கொண்டார்கள்.

௨. அவர்களுக்குப்பிரதியுத்தாரமாக இயேசுவானவர் சொன்னதாவது; அந்தக்கலிலேயர் அப்படிப்பட்டவைகளை அநுபவித்ததினாலே மற்றெல்லாக்கலிலேயரிலும் (அதிக) பாவிகளாய் இருந்தார்கள் என்று நினைக்கிறீர்கள்?

௩. அப்படி இல்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் * மனந்திரும்பாவிட்டால் எல்லாரும் அப்படிக்கெட்டுப் போவீர்கள். * சங்கீ. ௭: ௰௩.

௪. அல்லாமலுஞ் சீலோவாவிலே கோபுரம் விழுந்து, பதினெட்டுப்பேரைக்கொன்றதே. எருசலேமிற் குடியிருக்கிற மனிதர் எல்லாரிலும் அந்தப்பதினெட்டுப்பேரும்

அதிக குற்றவாளிகளாய் இருந்தார்கள் என்று நினைக்கிறீர்கள்?

௫. அப்படி இல்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் மனந்திரும்பாவிட்டால், எல்லாரும் அப்படிப்போலக் கெடுவீர்கள் என்றார்.

௬. அல்லாமலும், அவர் சொன்ன உவமையாவது, ஒருவன் திராட்சத்தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நாட்டி இருந்தான்.

௭. பின்பு அவன் வந்து, அதிலே கனியைத் தேடினபொழுது ஒன்றுங் காணவில்லை. உடனே அவன் தோட்டக்காரனை நோக்கி, இதோ மூன்றுவருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத்தேடி வருகிறேன். ஒன்றுங் காணவில்லை. இதை வெட்டிப்போடு. நிலத்தையும் இது என்னத்திற்குக்கெடுக்கிறது என்றான்.

௮. அதற்கவன் சொன்னது ஐயா, நான் இதைச்சுற்றி, கொத்தி எருப்போடுவேன். ஒருவேளை இது கனிகொடுக்கும், ஆகையால், இது இந்த வருஷம் வரைக்கும் இருக்கட்டும்.

௯. கனி கொடாதிருந்தால், நீர் இனிமேல் இதை வெட்டிப்போடலாம் என்று சொன்னான் என்றார்.

௰. ஓர் ஓய்வுநாளில் அவர் ஒரு செப ஆலயத்திற் போதகம்பண்ணிக்கொண்டு இருந்தபொழுது,

௰௧. பதினெட்டு வருஷமாய், பெலஈனமாகச்செய்கிற ஆவியையுடைய ஒரு ஸ்திரீ அங்கே இருந்தாள். அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாய் இருந்தாள்.

௰௨. இயேசுவானவர் அவளைக்கண்டு, தம்மிடத்தில் அழைத்து ஸ்திரீயே! உன் பெலஈனத்தில் இருந்து விடுதலையாக்கப்பட்டாய் என்று சொல்லி, அவள் மேலே தம்முடைய கைகளை வைத்தார்.

௰௩. உடனே அவள் நிமிர்ந்து, பராபரனைத்துதிசெய்தாள்.

௰௪. இயேசுவானவர் ஓய்வு நாளிலே குணமாக்கினதைச்செப ஆலயத்தலைவன்கண்டு, விதனம் அடைந்து சனங்களை நோக்கி, வேலை செய்யும்படிக்கான ஆறுநாள் உண்டு அவைகளிலே நீங்கள் வந்து, குணமாக்கிக் கொள்ளுங்கள். ஓய்வு நாளிலே அப்படிச் செய்யக்கூடாது என்றான்.

௰௫. அவனுக்கு மாறுத்தரமாகக்கர்த்தர் சொன்னது, வஞ்சகனே! உங்களில் எவனானுந் தன் எருதை அல்லது, தன் கழுதையை ஓய்வுநாளிலே தொழுவில் இருந்து, அவிழ்த்துக்கொண்டு போய் அதற்குத்தண்ணீர் காட்டுகிறதில்லையா?

௰௬. (அதுபோல) ஆபிரகாமின் சந்ததியிற் பதினெட்டு வருஷஞ் சாத்தானாலே கட்டப்பட்டு இருக்கிற இவளை ஓய்வு நாளிலே அந்தச்சங்கிலியில் இருந்து அவிழ்த்துவிட வேண்டியதில்லையா என்றார்.

௰௭. அப்படி அவர் சொன்னபொழுது அவரை விரோதித்திருந்த அனைவரும் வெட்கப்பட்டார்கள். அல்லாமலுஞ் சனங்கள் யாவரும் அவர் செய்த மகிமையான செய்கைகளைக்குறித்துச் சந்தோஷப்பட்டார்கள்.

௰௮. பின்பு அவர் சொன்னது, * பராபரனுடைய இராச்சியம் எதற்கு ஒப்பாய் இருக்கின்றது? அதை எதற்கு நிகர் சொல்வேன். * மத்தே. ௰௩: ௩௧—௩௩.

௰௯. அது ஒரு கடுகு விதைக்கு ஒப்பாய் இருக்கின்றது. (எப்படியெனில்) ஒரு கடுகை ஒரு மனிதன் எடுத்துத்தன் தோட்டத்திற் போட்டான். அது வளர்ந்து பெரிய செடியாயிற்று. அப்பொழுது ஆகாசத்துப்பறவைகள் அதின் கிளைகளிற் கூடுகட்டினவென்றார்.

௨௰ அன்றியும் அவர் சொன்னது, பராபரனுடைய இராச்சியத்தை எதற்கு நிகர் சொல்வேன்?

௨௧. அது புளிப்புள்ள மாவுக்கு ஒப்பாய் இருக்கின்றது. எப்படியெனில், அதை ஒரு ஸ்திரீ எடுத்து, மூன்று மரக்கால் மா முழுவதும் புளிப்படையத்தக்கதாக அதிலே அடக்கிவைத்தாள் என்றார்.

௨௨. அன்றியும், அவர் எருசலேமுக்குப் பிரயாணமாய்ப்போகிறபொழுது, பட்டினங்கள் தோறும், கிராமங்கள் தோறும் போய் உபதேசம் பண்ணினார்.

௨௩. அப்பொழுது ஒருவன் அவரைநோக்கி, ஆண்டவரே! சிலபேர் மாத்திரந்தான் இரட்சிக்கப்படுவார்களோவென்றான்.

௨௪. அதற்கு அவர் சொன்னது, * இடுக்கமான வாசலின் வழியாய்ச் (சீவனிற்) பிரவேசிக்க மிகவும் பிரயாசப்படுங்கள். என்னத்தினாலெனில், அநேகர் உட்பிரவேசிக்கத் தேடினாலும் பிரவேசிக்கமாட்டார்கள் என்று உங்களுக்குச்சொல்லுகிறேன். * மத். ௭: ௰௩, ௰௪.

௨௫. வீட்டெசமான் எழுந்திருந்து கதவைப்பூட்டின பின்பு, நீங்கள் வெளியே நின்று * கதவினைத்தட்டி ஆண்டவரே! ஆண்டவரே எங்களுக்குத்திறக்கவேண்டும் என்று கூப்பிடத்தொடங்குங் காலத்திலே அவர் நான் உங்களை அறியேன் என்றும், நீங்கள் விட்டுவந்த இடத்தை அறியமாட்டேன் என்றும் உங்களுடனே சொல்லும்பொழுது, * வாக்கி. ௧: ௨௮.

௨௬. நீங்கள் உமக்கு முன்பாகப்போசனபானம் பண்ணினோமே. நீர் எங்கள் வீதிகளிலே போதகம் பண்ணினீரே என்று சொல்லுவீர்கள்.

௨௭. ஆனாலும், அவர் சொல்வது உங்களை

அறியேன். நீங்கள் விட்டுவந்த இடத்தை அறியேன். அக்கிரமக்காரராகிய நீங்கள் எல்லாரும் என்னைவிட்டுப்போங்கள் என்று சொல்வார் என்று உங்களுக்குச்சொல்லுகிறேன்.

௨௮ நீங்கள் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களையும், சகல தீர்க்கதரிசிகளையும், பராபரனுடைய இராச்சியத்தில் உள்ளவர்கள் என்றும், உங்களைப்புறம்பே தள்ளப்பட்டவர்கள் என்றுங் காணும்பொழுது, உங்களுக்கு அழுகையும், பற்கடிப்பும் உண்டாய் இருக்கும்.

௨௯. அன்றியும், * கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும், தெற்கிலும் இருந்து சனங்கள் வந்து, பராபரனுடைய இராச்சியத்திற் பந்தியிருப்பார்கள். * மத்தே. ௮: ௰௧, ௰௨.

௩௰. அப்பொழுது, பிந்தினோர் * முந்தினோராய் இருப்பார்கள். முந்தினோர் பிந்தினோராவார்கள் என்றார். * மத். ௰௯: ௩௰.

௩௧. அந்த நாளிலே சில பரிசேயர் அவரிடத்திற்போய், ஏரோதே உம்மைக்கொலைசெய்ய மனதாய் இருக்கிறான். ஆகையால், நீர் இவ்விடத்தை விட்டுப்போக வேண்டும் என்றார்கள்.

௩௨. அவர்களுடனே அவர் சொன்னது; நீங்கள்போய் இன்றைக்கும், நாளைக்கும் நான் பசாசுகளைத் துரத்தி, ஆரோக்கியங்களைச்செய்து முடித்து, மூன்றும் நாளில் நிறைவடைவேன்.

௩௩. முக்கியமாக எருசலேமுக்குப்புறம்பே ஒரு தீர்க்கதரிசி மடிந்துபோகிறதவழக்கம் அல்லாதபடியால், நான் இன்றைக்கும், நாளைக்கும், பின்வருகிற நாளிலேயும், இவ்விடங்களில் நடக்கவேண்டியதாய் இருக்கின்றது என்று அந்த நரிக்குச்சொல்லுங்கள்.

௩௪. எருசலேம் பட்டினத்தாரே! எருசலேம் பட்டினத்தாரே! உங்களிடத்தில் அனுப்பப்பட்டவர்கள்மேற் கல்லெறிந்து, * தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்கிறவர்களே! ஒரு கோழி தன் குஞ்சுகளைத்தன் சிறகுகளின்கீழே சேர்த்துக்கொள்ளுகிற விதமாய், நான் அநேகதரம் உங்களைச்சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றிருந்தேன். நீங்கள் வரமாட்டோம் என்றீர்கள். * மத்தே. ௨௩: ௩௭—௩௯.

௩௫. (ஆதலால்,) * உங்கள் வாசஸ்தலம் பாழாக்கிவிடப்படும். அல்லாமலும், நீங்கள் பராபரனுடைய நாமத்தினால் வருகிறவர் தோத்திரஞ்செய்யப்படத்தக்கவர் என்று சொல்லுங் காலபரியந்தம் என்னைக்காணாமல் இருப்பீர்கள் என்றார். * ஏசா. ௧: ௭, ௮.

௰௪ அதிகாரம்.

[(௧) கிறிஸ்து நீர்க்கோவையுள்ள ஒருவனை ஓய்வுநாளிலே குணமாக்கினது. (௭) தாழ்மையாய் நடக்கவேண்டும் என்றும், (௰௨) எளியவர்களுக்கு விருந்துசெய்ய வேண்டும் என்றுங் கற்பித்தது. (௰௫) பராபரனுடைய வசனத்தை அசட்டைபண்ணுகிற லவுகீக சிந்தையுள்ள மனிதர்கள் பரமண்டலத்திற் பிரவேசிக்கக்கூடாததைப்பெரிய விருந்தின் உவமையினாலே காண்பித்தது. (௨௫) சிலுவையைச்சுமந்து தம்முடைய சீஷர்களாய் இருக்கவேண்டியவர்கள் வெட்கத்துடன் பின்வாங்கிப்போய், (௩௪) சாரமற்ற உப்பைப்போல அப்பிரயோசனமுள்ளவர்களாய் இராதபடிக்கு, முன்னடியாய் நஷ்டத்தையும், நயத்தையுஞ் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்பது.]

ஒரு ஓய்வுநாளில் அவர் பரிசேயருக்குள்ளே தலைவரானவர்களில் ஒருவனுடைய வீட்டிலே போசனம் பண்ணும்படிக்குப்போகிறபொழுது,

௨. பாண்டு வியாதியுள்ள ஒரு மனிதன் அவருக்கு முன்பாக நிற்கையில், அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.

௩. அப்பொழுது இயேசுவானவர் நியாயசாஸ்திரிகளையும், பரிசேயரையும் நோக்கி, ஓய்வுநாளிலே குணமாக்குகிறது நியாயமாவென்றார்.

௪. அதற்கு அவர்கள் பேசாமல் இருந்தார்கள். அப்பொழுது அவர் அவனைப்பிடித்துக்குணமாக்கி,

௫. அனுப்பிப்பின்பு அவர்களுடனே சொன்னது, * உங்களில் எவனுடைய தன் கழுதையாவது, எருதாவது ஓய்வுநாளில் ஒரு கிணற்றிலே விழுந்தால் உடனே யதைத் தூக்கிவிடானோவென்றார். * ௰௩: ௰௫.

௬. அதற்கு மாறுத்தரஞ் சொல்ல அவர்கள் திராணி இல்லாதிருந்தார்கள்.

௭ விருந்துக்கழைக்கப்பட்டவர்கள் பந்தியில் முதலிடங்களைத்தெரிந்துகொண்டதை அவர் பார்த்து அவர்களுக்கு உவமையாய்ச்சொன்னது,

௮. நீ ஒருவனாற் கலியாணத்துக்கழைக்கப்பட்டபொழுது, பந்தியில் முதலிடத்தில் உட்காராதிரு. என்னத்தினாலென்றால், உன்னிலும் அதிக கனமுள்ளவன் அவனால் அழைக்கப்பட்டிருக்க,

௯. உன்னையும், அவனையும் அழைத்தவன் உன்னிடத்தில் வந்து இவருக்கிடங்கொடும் என்றுசொல்ல, நீ வெட்கத்தோடே தாழ்ந்த இடத்திற்போயிருக்கவேண்டியதாய் இருக்கும்.

௰. ஆகையால், நீ அழைக்கப்பட்டபொ

ழுது, நீ போய்த்தாழ்ந்த இடத்தில் உட்காருவாயாக. அப்பொழுது உன்னையழைத்தவன் உன்னிடத்தில் வந்து சிநேகிதனே! மேலான இடத்திற்போயிரும் என்று சொல்ல, பந்தியில் இருக்கிறவர்களுக்கு முன்பாக உனக்குக்கனம் உண்டாகும்.

௰௧. அப்படிக்கு எவன் * தன்னை யுயர்த்துகிறானோ அவன் தாழ்த்தப்படுவான். எவன் தன்னைத்தாழ்த்துகிறானோ அவன் உயர்த்தப்படுவான் என்றார். * வாக். ௨௯: ௨௩.

௰௨. அல்லாமலும், அவர் தம்மைவிருந்துக்கழைத்தவனுடனே சொன்னது, நீர் பகல் விருந்தை அல்லது இராவிருந்தைப் பண்ணுகிறபொழுது உம்முடைய சிநேகிதரையும், சகோதரரையும், மற்ற இனத்தாரையும், ஐசுவரியமுள்ள பிறரையும் அழைக்கக்கூடாது. அழைத்தால், அவர்களும் உம்மை யழைப்பார்கள். அதினாலே உமக்குப்பதிற் பலனுண்டாகும்.

௰௩ நீர் விருந்துபண்ணும்பொழுது ஏழைகள், ஊனர், சப்பாணிகள், குருடர் இப்படிப்பட்டவர்களை அழைப்பீராக.

௰௪. அப்பொழுது அவர்கள் உமக்குப் பதில் கொடுக்கத்திராணியில்லாதபடியால் நீர் பாக்கியராய் இருப்பீர். நீதிமான்கள் உயிரோடெழுந்திருக்குங் காலத்திலே உமக்குப்பதில் அளிக்கப்படும் என்றார்.

௰௫. அவரோடே கூடப்பந்தியிருந்தவர்களில் ஒருவன் இந்த வசனங்களைக்கேட்டபொழுது, அவன் அவரை நோக்கி, பராபரனுடைய இராச்சியத்திற் போசனம் பண்ணுகிறவன் பாக்கியவான் என்றான்.

௰௬. அதற்கவர் சொன்னது, ஒருமனிதன் பெரிய விருந்து பண்ணி,

௰௭. அநேகரை யழைத்து விருந்து வேளையிலே தன் ஊழியக்காரனை நோக்கி, நீ அழைக்கப்பட்டவர்கள் இடத்துக்குப்போய்ச்சகலமும் எத்தனமாயிற்று. ஆகையால், வாருங்கள் என்று சொல்லு என்று அனுப்பினான்.

௰௮. அப்பொழுது அவர்கள் எல்லாரும் போக்குச்சொல்லத்தொடங்கினார்கள். ஒருவன் சொன்னது, ஒருவயல் நிலத்தைக் கொண்டேன். நான்போய் அதைப்பார்க்க அவசியமாய் இருக்கின்றது. ஆகையால், எனக்கு மன்னிக்கவேண்டும் என்று உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

௰௯. வேறொருவன் சொன்னது, ஐந்தேர் மாடுகொண்டேன். அவைகளை நான்போய்ச்சோதிக்கவேண்டும். ஆகையால், எனக்கு மன்னிக்கும்படிக்கு உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

௨௰. வேறொருவன் சொன்னது, பெண்ணை விவாகம்பண்ணினேன். அதினாலே நான் வரக்கூடாது என்றான்.

௨௧. பின்பு அந்த ஊழியக்காரன் வந்து அவைகளைத்தன் எசமானுக்கு அறிவித்தான். அப்பொழுது வீட்டெசமான் கோபம் அடைந்து தன் ஊழியக்காரனை நோக்கி, நீ சீக்கிரமாய்ப்பட்டினத்தின் தெருக்களிலும், வீதிகளிலும் போய்த்தரித்திரரையும், ஊனரையும், சப்பாணிகளையும், குருடரையும் இங்கே அழைத்துக்கொண்டுவாவென்றான்.

௨௨ அந்தப்படி ஊழியக்காரன் அழைத்து வந்து ஆண்டவரே! நீர் கட்டளையிட்டபடி செய்தாயிற்று.

௨௩. பின்னும் இடம் உண்டென்றான். அப்பொழுது எசமான் ஊழியக்காரனுடனே சொன்னது, நீ வழிகளிலும், வேலிகள் அருகேயும் புறப்பட்டுப்போய் என்வீடு நிறையவரும்படிக்குச்சனங்களை வருந்திக்கூட்டிக்கொண்டுவா.

௨௪. அழைக்கப்பட்டிருந்த அந்த மனிதரில் ஒருவராகிலும் என்னுடைய விருந்தை ருசிபார்ப்பதில்லையென்றுங்களுக்குச்சொல்லுகிறேன் என்று சொன்னார்.

௨௫. பின்பு அநேக சனங்கள் அவரோடே கூடப்பிரயாணமாய்ப்போகையில் அவர் திரும்பிப்பார்த்து அவர்களுடனே சொன்னதாவது;

௨௬. ஒருவன் என்னிடத்தில் வந்தும் * தன் தகப்பனையும், தாயையும், மனைவியையும், பிள்ளைகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தன் சுயசீவனையும் பகையாவிட்டால் என் சீஷனாய் இருக்கமாட்டான்.
* மத். ௰: ௩௭, ௩௮.

௨௭. அல்லாமலுந் தன் சிலுவைமரத்தைச்சுமந்துகொண்டு, எனக்குப்பின் செல்லாதவன் என் சீஷனாய் இருக்கமாட்டான்.

௨௮. உங்களில் எவனானாலும் ஒருகோபுரத்தைக்கட்டமனதாய் இருந்தால், தான் அஸ்திபாரம்போட்டபின்பு அதை முடியக்கட்டுகிறதற்குத்திராணியில்லாமல் இருக்கும்பொழுது,

௨௯. அதைப்பார்க்கிறவர்கள் எல்லாரும் இந்த மனிதன் கட்டத்தொடங்கி, முடிக்கிறதற்குத்திராணியில்லையென்று தன்னைப் பரியாசம் பண்ணாதபடிக்கு,

௩௰. அவன் முன்பு உட்கார்ந்து அதைக் கட்டித்தீர்க்கிறதற்குத்திராணியுண்டா இல்லையாவென்று அறியும்படி செல்லுஞ் செலவைக்கணக்குப்பாராமல் இருப்பானோ!

௩௧. அல்லது எந்த * இராசாவானாலும், மற்றொரு இராசனுடனே யுத்தஞ் செய்யப்போகிறதற்கு முன்பு உட்கார்ந்து தனக்கு விரோதமாய் இருபதினாயிரஞ் சேவகரைக்கொண்டு வருகிறவனோடே பதினாயி

ரஞ் சேவகரைக்கொண்டு எதிர்க்கக்கூடு
மா? கூடாதா வென்று ஆலோசனை பண்
ணுமல இருப்பானு!
௩௨. கூடாதென்று அறிந்தால் அவன் தூ
ரத்தில் இருக்கையில் தானுபதிகளை அனுப்
பிச்சமாதானத்துக்காக, கேட்டுக்கொள்
ளும்படிக்கு (அப்படிச்செய்வான் அல்ல
வா!)
௩௩. அதுபோல உங்களில் எவனானாலுந்
தனக்குண்டான எல்லாவற்றையும் வெறுத்
து விடாவிட்டால் என் சீஷனாய் இருக்க
மாட்டான்.
௩௪. * உப்பானது நல்லதுதான். உப்
பானது சாரமற்றுப்போனால் எதினாலே அ
து சாரமாக்கப்படும். * மத். ௫: ௰௩.
௩௫. அது நல்ல நிலத்திலாகிலும், எருவி
லாகிலும் போடப்படத்தக்கது அல்ல. அ
தை வெளியே கொட்டிப்போடுவார்கள்.
கேட்கிறதற்குக்காதுள்ளவன் கேட்கக்கட
வன் என்றார்.

௰௫ அதிகாரம்.

[(௧) காணாமற்போன ஆட்டையும், (௮) காணாமற்போனபணத்தையும், (௰௧) கெட்டுப்போன குமாரனையும், உவமைகளாகச் சொன்னது.]

அன்றியுஞ் சகல * ஆயக்காரரும்,
பாவிகளும் அவருடைய வசனங்க
ளைக்கேட்கும்படிக்கு அவரிடத்திற் சேர்ந்
தார்கள். * மத். ௯: ௰.
௨. அப்பொழுது பரிசேயரும், வேதபா
ரகரும் முறுமுறுத்து இவர் பாவிகளை
யேற்றுக்கொண்டு அவர்களோடே சாப்பி
டுகிறார் என்றார்கள்.
௩. அவர்களுடனே அவர் சொன்ன உவ
மையாவது;
௪. உங்களில், * யாவனானாலுந் தனக்
குடைமையான நூறு ஆடுகளில் ஒன்றை
இழந்தால் தொண்ணூற்றொன்பது ஆடுக
ளையும் வனாந்தரத்தில் விட்டுப்போய் இழந்
ததைக்கண்டு பிடிக்கும் பரியந்தந் தேடா
மல் இருப்பானு! * மத். ௰௮: ௰௨.
௫. கண்டுபிடித்தபின்பு அவன் அதைச்
சந்தோஷமாய்த்தன் தோள்களின் மேல்
ஏற்றிக்கொண்டு வீட்டுக்கு வந்தபோது,
௬. சிநேகிதரையும், அயலாரையுங் கூ
ட வரவழைத்து, காணாமற்போன என் ஆட்
டைக்கண்டுபிடித்தேன். ஆகையால், என்
னோடே கூடச்சந்தோஷப்படுங்கள் என்
பான் அல்லவா!
௭. அதுபோல, * மனந் திரும்ப அவசி
யப்படாத தொண்ணூற்றொன்பது நீதி
மான்களிலும் மனந் திரும்புகிற ஒரே பாவி
யைக்குறித்து, பரமண்டலத்திலுள்ளவர்க
ளுக்குச்சந்தோஷம் உண்டாகும் என்று
உங்களுக்குச்சொல்லுகிறேன். * ௫: ௩௧,
௩௨.
௮. அல்லது பத்துத்திராகுமா பணத்தை
உடைய பெண் எவளானாலும் ஒரு திரா
குமாவை, * இழந்தால் விளக்கைக்கொ
ளுத்தி வீட்டைப்பெருக்கி அதைக்கண்டு பி
டிக்கும் பரியந்தம் நன்றாய்த்தேடாமல் இ
ருப்பாளா!
௯. கண்டுபிடித்தபின்பு அவள் சிநேகிதி
களையும், அயல் வீட்டுக்காரிகளையுங் கூட
வரவழைத்து நானிழந்த திராகுமாவைக்
கண்டுபிடித்தேன். ஆகையால், என்னோ
டேகூடச்சந்தோஷப்படுங்கள் என்பாள் அல்
லவா?
௰. அதுபோல மனந் திரும்புகிற ஒரே
பாவியைக்குறித்துப்பராபரனுடைய தூத
ருக்கு முன்பாகச்சந்தோஷம் உண்டாய்
இருக்கின்றது என்று உங்களுக்குச்சொல்
லுகிறேன் என்றார்.
௰௧. பின்னும் அவர் சொன்னதாவது; ஒ
ரு மனிதனுக்கு இரண்டு குமாரர் இருந்
தார்கள்.
௰௨. அவர்களில் இளையவன் தகப்பனை
நோக்கித்தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு
வரும் பங்கைத்தரவேண்டும் என்றான். அந்
தப்படி அவன் அவர்களுக்குப்பொருளைப்
பங்கிட்டான்.
௰௩. சில நாளுக்குப்பின்பு இளைய மகன்,
எல்லாவற்றையுஞ் சேர்த்துக்கொண்டு தூ
ரதேசத்திற்குப்பிரயாணமாய்ப்போய் அங்
கே கெட்டமார்க்கமாய், சீவனம்பண்ணித்
தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான்.
௰௪. எல்லாவற்றையும் அவன் செலவழித்
த பின்பு அத்தேசத்திலே மிகுந்த பஞ்ச
காலம் உண்டாயிற்று.
௰௫. அப்பொழுது அவனுக்குக்குறைவு வ
ரத்தொடங்கின படியினாலே அவன் போய்
அந்தத்தேசத்துக்குடிகளில் ஒருவனைச்
சேர்ந்துகொண்டான். அந்தக்குடியான
வன் அவனைத்தன் வயல்களிலே பன்றிகளை
மேய்க்கும் படிக்கு அனுப்பினான்.
௰௬. அப்பொழுது பன்றிகள் தின்னுகிற
தவிடுகளினாலே தன் வயிற்றை நிரப்ப ஆ
சைப்பட்டான். அவற்றையும் ஒருவனும்
அவனுக்குக்கொடுக்கவில்லை.
௰௭. அப்படி இருக்குங் காலத்தில் அவன்
புத்தி அடைந்து சொன்னதாவது; ஆ,
என் தகப்பன் இடத்திலே எத்தனை கூலிக்
காரர் மிகுந்த உணவை உடையவர்களாய்
இருக்கிறார்கள். நான் இங்கே பசியினாலே
கெட்டுப்போகிறேன்.
௰௮. நான் எழுந்து என் தகப்பன் இடத்

* திராகுமா ஒன்றிற்கு ஏறக்குறைய இரண்டு சின்னபணம் ஒப்பாய் இருக்கும்.

துக்குப்போய்த்தகப்பனே! தேவனுக்கும்,
உமக்கும் விரோதமாய்ப்பாவஞ் செய்தேன்.
௰௯. இது முதல் நான் உம்முடைய குமா
ரன் என்றழைக்கப்படுவதற்கு அபாத்திர
னாய் இருக்கிறேன். உம்முடைய கூலிக்
காரரில் ஒருவனைப்போல என்னை வைத்
துக்கொள்ளும் என்று சொல்லவேண்டும்
என்று எண்ணி,
௨௰. எழுந்து புறப்பட்டுத்தன் தகப்பன்
இடத்துக்குப்போனான். அப்பொழுது அ
வன் தூரமாய் இருக்கையில் தகப்பன் அ
வனைக்கண்டு உருக்கமாய் இரங்கி ஓடிவந்
து அவனுடைய கழுத்தைக்கட்டிக்கொண்
டு அவனை முத்தஞ் செய்தான்.
௨௧. குமாரன் அவனை நோக்கி, தகப்ப
னே தேவனுக்கும், உமக்கும் விரோதமாய்,
பாவஞ் செய்தேன் இது முதல் உம்முடை
ய குமாரன் என்று அழைக்கப்படுவதற்கு
நான் பாத்திரன் அல்லவென்று சொன்ன
பொழுது,
௨௨. தகப்பன் தன் வேலைக்காரரை நோக்
கி, நீங்கள் (போய்) முக்கியமான வஸ்
திரத்தைக்கொண்டுவந்து இவனுக்கு உ
டுத்தி, இவனுடைய கைக்கு மோதிரத்
தையுங் கால்களுக்குப்பாத இரட்சைகளை
யுங் கொடுத்து,
௨௩. பின்பு கொழுத்தகன்றைக்கொண்டு
வந்தடித்துச்சமையுங்கள்.
௨௪. என் குமாரனாகிய இவன் மரித்தான்.
மறுபடியும் உயிரோடு இருக்கிறான். இவன்
காணாமற்போனான். இப்பொழுது காணப்
பட்டான். ஆகையால், நாம் புசித்து ம
கிழ்ச்சியாய் இருக்கக்கடவோம் என்றான்.
அந்தப்படி அவர்கள் சந்தோஷப்படத்
தொடங்கினார்கள்.
௨௫. அவனுடைய மூத்தகுமாரன் வயலில்
இருந்தான். அவன் திரும்பி வீட்டுக்குச்
சமீபமாய் வந்தபொழுது கீதவாத்தியத்
தையும், நடனக்களிப்பையுங் கேட்டு,
௨௬. வேலைக்காரரில் ஒருவனை அழைத்து
இது என்னவென்று விசாரித்தான்.
௨௭. வேலைக்காரன் அவனை நோக்கி, உன்
சகோதரன் வந்தான். உன் தகப்பன் அவ
னைச்சுகத்தோடே திரும்பப்பெற்றுக்கொண்
டபடியினாலே கொழுத்த கன்றை அடிப்
பித்தான் என்றான்.
௨௮. அப்பொழுது அவன் கோபம் அ
டைந்து உள்ளேபோக மனதில்லா திருந்
தான். ஆதலால் தகப்பன் வெளியேவந்து
அவனை மிகவும் வேண்டிக்கொண்டு அழைத்
தான்.
௨௯. அவன் தகப் னுக்குப்பிரதி யுத்தர
மாகச்சொன்னது, இவ்வளவு வருஷம் நான்
உமக்கூழியஞ் செய்து உம்முடைய கற்ப
னையை ஒருக்காலும் மீறி நடக்கவில்லை.
அப்படி இருந்தும் நான் என் சிநேகித
ரோடே மகிழ்ச்சியாய் இருக்கும்படிக்கு ஒ
ருக்காலும் நீர் ஒரு ஆட்டுக்குட்டியை எ
னக்குக்கொடுக்கவில்லையே.
௩௰. உம்முடைய பொருள்களை வேசிக
ளோடே பட்சித்த உம்முடைய குமாரனா
கிய இவன் வந்தபொழுது கொழுத்த கன்
றை இவனுக்காக அடிப்பித்தீர் என்றான்.
௩௧. அதற்குத்தகப்பன் சொன்னது, மக
னே நீ எப்பொழுதும் என்னோடிருக்கிறாய்.
அல்லாமலும், எனக்குண்டான யாவும்
உன்னுடையவைகளாய் இருக்கின்றன.
௩௨. உன் சகோதரனாகிய இவன் மரித்
தான். மறுபடியும் உயிரோடிருக்கிறான்.
காணாமற் போனான். (இப்பொழுது) கா
ணப்பட்டான். ஆனபடியினாலே நாம் ம
கிழ்ச்சியாகிக்களிப்படைய வேண்டுமே என்
று சொன்னான் என்றார்.

௰௬ அதிகாரம்.

[(௧) அநீதியுள்ள உக்கிராணக்காரனைக்கு
றித்த உவமை. (௰௪) கிறிஸ்துப்பொரு
ளாசையும், வஞ்சனையுமுள்ள பரிசேயரைக்
கடிந்தது. (௰௯) ஐசுவரியவானையும், ஏ
ழையான இலாசருவையுங் குறித்த உவ
மை.]

அன்றியும் அவர் தம்முடைய சீஷ
ரோடு சொன்னதாவது; ஐசுவரிய
முள்ள மனிதனுக்கு ஒரு உக்கிராணக்கா
ரன் இருந்தான். அவன் எசமானுடைய
ஆஸ்திகளை அழிக்கிறதாக அவனுக்கறிவித்
தார்கள்.
௨. அப்பொழுது எசமான் அவனை அ
ழைத்து உன்னைக்குறித்து நான் இப்படிக்
கேள்விப்பட்டிருக்கிறேன். நீ இனிமெல்
உக்கிராணக்காரனாய் இருக்கக்கூடாது. ஆ
கையால், உன் உக்கிராணக்கணக்கைக்கொ
டு என்றான்.
௩. அப்பொழுது உக்கிராணக்காரன் த
னக்குள்ளே எண்ணிக்கொண்டதாவது,
என் எசமான் உக்கிராண விசாரிப்பை என்
னில் இருந்து எடுத்துக்கொள்ளுகிறபடியி
னாலே என்னசெய்யலாம்! (நிலங்) கொத்
துகிறதற்குப்பெலன் இல்லை. இரக்க வெட்க
மாய் இருக்கின்றது.
௪. உக்கிராண விசாரிப்பை விட்டுத்தள்
ளப்படும்பொழுது என்னைத்தங்கள் வீடுக
ளிற் சேர்த்துக்கொள்ளுகிறதற்கான (சிநே
கிதர்கள்) உண்டாகும்படிக்கு, செய்ய
வேண்டியவகை தெரியவந்ததென்றெண்
ணி,
௫. தன் எசமானிடத்திற் கடன் பட்டவர்
களை ஒருவன் ஒருவனாக அழைத்து முத
லாவது வந்தவனை நோக்கி, நீ என் எச
மானிடத்திற் பட்ட கடன் எவ்வளவு என்

றான். அதற்கவன் நூறுகுடம் எண்ணெயென்றான்.

௬. அப்பொழுது உக்கிராணக்காரன் அவனை நோக்கி, நீ உன் சீட்டை எடுத்துச் சீக்கிரமாய் உட்கார்ந்து ஐம்பது என்று எழுதென்றான்.

௭. பின்பு அவன் வேறொருவனை நோக்கி, நீ பட்டக்கடன் எவ்வளவு என்றான். அதற்கவன் நூறுகலன் கோதுமை என்றான். அப்பொழுது உக்கிராணக்காரன் அவனை நோக்கி, நீ உன் சீட்டை யெடுத்து எண்பது என்றெழுதென்றான்.

௮. அநீதியுள்ள உக்கிராணக்காரன் விவேகமாய்ச்செய்தபடியினாலே எசமான் அவனைப்புகழ்ந்தான். * இவ்விதமாய் ஒளியின் பிள்ளைகளிலும் இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக விவேகமாய் இருக்கிறார்கள். * எபே. ௫: ௮.

௯. நானும் உங்களுக்குச்சொல்லுகிறதாவது; * நீங்கள் மாளும்பொழுது, உங்களை நித்தியமான வீடுகளிற் சேர்த்துக்கொள்ளும்படிக்குக் கபடமுள்ள லவுகீகப்பொருளால் உங்களுக்காகச்சிநேகிதரைச்சம்பாதியுங்கள். * ௧ தீமோ. ௬: ௰௭—௰௯.

௰. கொஞ்சத்திலே உண்மை யுள்ளவன் அநேகத்திலேயும் உண்மையாய் இருப்பான். கொஞ்சமாய் அநீதி செய்கிறவன் அநேகமாயும் அநீதி செய்வான்.

௰௧. அப்படியிருக்க நீங்கள் கபடமுள்ள லவுகீகப்பொருளிலே உண்மை யில்லாமல் இருந்தால் மெய்யான பொருள்களை உங்களுக்கு ஆர் நம்பிக்கையோடே ஒப்புவிப்பார்கள்.

௰௨. அல்லாமலும், நீங்கள் மற்றொருவனுடையதை உண்மையில்லாமையாய் நடத்தினால், உங்களுக்குச்சொந்தமாக எதையாகிலும் யார் உங்களுக்குக்கொடுப்பார்கள்?

௰௩. எந்த * வேலைக்காரனாலும் இரண்டு எசமான்களுக்கு அடிமை செய்யமாட்டான். ஒருவனைப்பகைத்து மற்றவனைச்சிநேகிப்பான். அல்லது ஒருவனைப்பற்றிக்கொண்டு, மற்றவனை யசட்டைபண்ணுவான். நீங்கள் பராபரனுக்கும் லவுகீகப்பொருளுக்கும் அடிமையாய் இருக்கமாட்டீர்கள் என்றார். * மத். ௬: ௨௪.

௰௪. * பணத்தின்மேல் ஆசை யுள்ளவர்களாகிய பரிசேயரும் இந்த வசனங்கள் யாவையுங் கேட்டு, அவரைக்குறித்துப்பரியாசம் பண்ணினார்கள். * மத். ௨௩: ௰௪.

௰௫. அப்பொழுது அவர் அவர்களைநோக்கி, நீங்கள் மனிதர் முன்பாக உங்களை நீதிமான்கள் என்று காண்பிக்கிறீர்கள். ஆனாலும் பராபரன் உங்கள் * இருதயங்களை அறிந்திருக்கிறார். மனிதருக்குள்ளே மேன்மையாய் எண்ணப்பட்டிருக்கிறது பராபரனுக்குமுன்பாக அருவருப்பாய் இருக்கின்றது. * சங்கீ. ௭: ௰.

௰௬. * நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசிகளுடைய பிரமாணங்களும் யோவான் வரைக்குஞ் சென்றன. அதுமுதற் பராபரனுடைய ஆளுகை சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகின்றது. யாவரும் வலுமையாய் அதற்குட்படுகிறார்கள். * மத். ௰௧: ௰௩.

௰௭. * வானமும், பூமியும் ஒழிந்துபோகிறது எளிதாய் இருந்தாலும் வேதப்பிரமாணத்தில் ஒரு எழுத்தின் உறுப்பும் கெட்டுப்போகாது. * ௨௧: ௩௩. மத். ௫: ௰௮.

௰௮. * தன் மனைவியைத்தள்ளி வேறொருத்தியை விவாகம்பண்ணுகிறவன் விபசாரஞ் செய்கிறான். புருஷனாலே தள்ளப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறான். * மத். ௫: ௩௨.

௰௯. அன்றியும் ஐசுவரியமுள்ள ஒரு மனிதன் இருந்தான். அவன் இரத்தாம்பரமும் மெல்லிதான உடையுந் தரித்து அநுதினமுஞ் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான்.

௨௰. அல்லாமலும் இலாசரு என்னப்பட்ட ஒரு தரித்திரன் இருந்தான். அவன் பருக்கள் நிறைந்த தேகமுள்ளவனாய் அந்த ஐசுவரியவானுடைய வாசலின் அருகே கிடந்து அவனுடைய போசன பாத்திரத்தில் இருந்து விழும் உச்சிட்டங்களாலே தன் பசியை ஆற்ற ஆசையாய் இருந்தான்.

௨௧. அதுவுமல்லாமல் நாய்கள்வந்து அவனுடைய பருக்களை நக்கும்.

௨௨. பின்பு அந்தத்தரித்திரனானவன் மரித்துத்தேவதூதரால் ஆபிரகாமினுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான். ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான்.

௨௩. பின்பு அவன் நரகத்திலே வேதனைப்படுகிறபொழுது தன் கண்களை உயர்த்தித் தூரத்திலே ஆபிரகாமையும், அவனுடைய மடியிலே இலாசருவையுங் கண்டு,

௨௪. தகப்பனாகிய ஆபிரகாமே! இந்தச் * சுவாலையிலே மிகுந்த வேதனைப்படுகிறேன். ஆகையால், நீர் என்மேல் இரங்கி இலாசரு தன் விரலின் நுனியைத்தண்ணீரிலே தோய்த்து என்னுடைய நாவைக்குளிரப்பண்ணும்படிக்கு அவனை அனுப்பவேண்டும் என்று கூப்பிட்டான். * மாற். ௯: ௪௪.

௨௫. அதற்கு ஆபிரகாம சொன்னது, மகனே! நீ பூமியிலே உயிரோடிருந்தகாலத்திலே உனக்கு (இஷ்டமான) * நன்மைகளைப்பெற்றுக்கொண்டாயே. இலாசருவும் அப்படியே தீமைகளைப்பெற்றுக்கொண்டான். அதை நினைத்துக்கொள். இப்பொ

ழுது இவன் தேற்றப்படுகிறான். நீ வேதனைப்படுகிறாய். * ௬: ௨௫.

௨௬. அதுவும் அல்லாமல் இவ்விடத்தைக் கடந்து உங்களிடத்துக்கு வரவும், அல்லது அவ்விடத்தைக்கடந்து எங்களிடத்துக்கு வரவும் மனது உள்ளவர்களுக்குக்கூடாதபடிக்கு எங்களுக்கும், உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கின்றதே என்றான்.

௨௭. அதற்கவன் சொன்னது, தகப்பனே! அப்படியானால் (பூமியிலே) எனக்கு ஐந்துபேர் சகோதரர் உண்டு. அவர்களும் வேதனையுள்ள இவ்விடத்துக்கு வராதபடிக்கு இவன் போய் அவர்களுக்கு (இதைக் குறித்துச்) சாட்சி கொடுக்கும்பொருட்டாய்,

௨௮. இவனை என் தகப்பனுடைய வீட்டுக்கு அனுப்பும் என்று உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான்.

௨௯. அதற்கு ஆபிரகாம் சொன்னது, அவர்களுக்கு மோசேயும், தீர்க்கதரிசிகளும் உண்டே. அவர்களுக்குச்செவி கொடுக்கலாமே என்றான்.

௩௰. அவன் சொன்னது, அப்படியல்ல. தகப்பனாகிய ஆபிரகாமே! மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்துக்குப்போனால் மனந்திருப்புவார்கள் என்றான்.

௩௧. அதற்கு அவன் சொன்னது, அவர்கள் மோசேயுக்கும், தீர்க்கதரிசிகளுக்குஞ் செவிகொடாமல் இருந்தால், மரித்தோரில் இருந்து ஒருவன் எழுந்துபோனாலுஞ் சம்மதிக்கமாட்டார்கள் என்று சொன்னான் என்றார்.

௰௭ அதிகாரம்.

[(௧) பிறருக்கு இடறல் செய்யாமல் இருக்கவும், (௩) ஒருவருக்கொருவர் மன்னிக்கவுங் கிறிஸ்து கற்பித்து, (௬) விசுவாசத்தின் பலனைச்சொன்னது. (௭) நாம் பராபரனுக்கு அடங்கவேண்டியதே யொழிய அவர் நமக்கு அடங்கவேண்டியது இல்லையென்பது. (௰௧) இயேசு பத்துக்குஷ்டரோகிகளைக்குணமாக்கி, (௨௨) பராபரனுடைய இராச்சியத்தையும், மனுஷகுமாரனுடைய வருகையையுங் குறித்துச்சொன்னது.]

அன்றியும் அவர் தம்முடைய சீஷருடனே சொன்னதாவது; * குற்றஞ் செய்வதற்கான காரணங்கள் நடவாமல் இருக்கிறது கூடாத காரியந்தான். ஆனாலும் ஐயோ! அவைகளைச்செய்கிறவனுக்கு வேதனை வரும். * மத். ௰௮: ௭.

௨. அவன் இந்தச்சிறியரில் ஒருவன் குற்றஞ் செய்கிறதற்குக்காரணமாய் இராதபடிக்கு அவனுடைய கழுத்திலே எந்திரக்கல்லைக்கட்டிச்சமுத்திரத்திலே யமிழ்த்தினால் அவனுக்கு நலமாய் இருக்கும்.

௩. நீங்கள் சாவதானமாய் இருக்கக்கடவீர்கள். * பிறன் ஒருவன் உனக்கு விரோதமாய்ப்பாவஞ் செய்தானானால் அவனைக் கடிந்துகொள். அவன் மனஸ்தாபப்பட்டால் அவனுக்கு மன்னிப்பாயாக. * ௩ மோ. ௰௯: ௰௭. மத். ௰௮: ௰௫.

௪. அவன் ஒரு நாளிலே ஏழுதரம் உனக்கு விரோதமாய்ப்பாவஞ் செய்து ஒரு நாளிலே ஏழுதரம் உன்னிடத்தில் வந்து மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால் அவனுக்கு மன்னிப்பாயாகவென்றார்.

௫. அப்பொழுது அப்போஸ்தலர் கர்த்தரை நோக்கி, விசுவாசம் எங்களுக்குள்ளே பெருகும்படி செய்யும் என்றார்கள்.

௬. அதற்குக்கர்த்தர் சொன்னது, * கடுகு விதை யவ்வளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால் நீங்கள் இந்தக்காட்டத்திமரத்தை நோக்கி, நீ வேருடனே பிடுங்கப்பட்டுக்கடலில் நாட்டப்படுவாயாகவென்று சொல்ல அது உங்களுக்குக்கீழ்ப்படியும். * மத். ௰௭: ௨௰.

௭. அன்றியும் உங்களில் எவனாகிலும் உழுதலையாவது, மேய்த்தலையாவது செய்கிற (தன்) வேலைக்காரனை வயலில் இருந்து வரக் (காணும்) பொழுது நீ போய்ச்சாப்பிடுவென்றுடனே அவனுக்குச்சொல்லுவான்?

௮. நீ எனக்காக இராப்போசனத்தை எத்தனம்பண்ணி, கச்சையைக் கட்டிக்கொண்டு நான் போசனபானம்பண்ணுமளவும் எனக்கு ஊழியஞ்செய். பின்பு நீ போசனபானம் பண்ணலாம் என்றல்லவா அவனுடனே சொல்லுவான்?

௯. அந்த வேலைக்காரன் தனக்குக்கட்டளையிட்டவைகளைச் செய்கிறபடியினாலே எசமான் அவனை உபசாரஞ் செய்வானா! அப்படிச்செய்யமாட்டான் என்று நினைக்கிறேன்.

௰. அப்படிப்போல நீங்களும் உங்களுக்குக்கட்டளையிடப்பட்ட யாவையுஞ் செய்தபொழுதும் நாங்கள் உபசாரம் பெற்றுக் கொள்ளுதற்கான ஊழியக்காரர் அல்ல. எங்களுக்குக்கட்டளையிடப்பட்டதைமாத்திரஞ் செய்தோமேயென்று சொல்லுவீர்களாகவென்றார்.

௰௧. அன்றியும் அவர் எருசலேமுக்குப் பிரயாணமாய்ப்போகையிற் சமாரியாநாட்டின் வழியாயும், கலிலேயாநாட்டின்வழியாயும் நடந்து,

௰௨. ஒரு கிராமத்திற் பிரவேசிக்கிறபொழுது, குஷ்டரோகமுள்ள பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து தூரத்திலே நின்று,

௰௩. இயேசுவே! ஐயரே, எங்கள்மேல் இரங்கும் என்று கூப்பிட்டார்கள்.

௰௪. அவர்களை யவர் கண்டு, * நீங்கள்
போய் உங்களை ஆசாரியருக்குக்காண்பி
யுங்கள் என்றார். அந்தப்படி யவர்கள் போ
கையிற் சுத்தமானார்கள். * ௩மோ ௰௪: ௨

௰௫. அப்பொழுது அவர்களில் ஒருவன்
தான் ஆரோக்கியம் அடைந்ததைக்கண்டு,

௰௬. திரும்பி மிகுந்த சத்தத்துடனே பரா
பரனைத்துதித்து அவருடைய பாதத்தின்
அருகே சாஷ்டாங்கமாய் விழுந்து அவருக்
குத்தோத்திரஞ் செலுத்தினான்.

௰௭. அவன் சாமாரியா தேசத்தான். அப்
பொழுது இயேசுவானவர் சொன்னது, பத்
துப்பேரும் அல்லவோ சுத்தமானார்கள்.
ஒன்பதுபேர் எங்கே!

௰௮. பராபரனுக்குத் துதியைச்செலுத்
தும்படிக்கு இந்த அந்நியனே யொழிய
மற்றொருவனுந் திரும்பி வரவில்லையாவென்
று சொல்லி,

௰௯. அவனை நோக்கி, நீயெழுந்துபோ.
உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்
றார்.

௨௰. பராபரனுடைய ஆளுகை யெப்பொ
ழுதுவரும் என்று பரிசேயர் அவரிடத்தில்
விசாரித்தபொழுது, அவர் அவர்களுக்கு
மறுமொழியாகச்சொன்னது, பராபரனு
டைய ஆளுகை வேடிக்கைப்பிரகாரமாக
வாராது.

௨௧. இதோ, இங்கே யென்றும், அதோ
அங்கே யென்றுஞ் சொல்லமாட்டார்கள்.
பராபரனுடைய ஆளுகை * உங்களுக்குள்
ளிருக்கின்றதே யென்றார். * ௰௧: ௨௰.

௨௨. பின்னுஞ் சீஷருடனே அவர் சொன்
னது, மனித குமாரனுடைய நாள்களில்
ஒன்றைக்காணும்படிக்கு நீங்கள் ஆசைப்
படுங் காலம்வரும். அதைக்காணாமல் இருப்
பீர்கள்.

௨௩. அப்பொழுது சிலர் உங்களைநோக்கி,
இதோ, * இங்கே யிருக்கிறார் என்றும்,
அதோ அங்கே யிருக்கிறார் என்றுஞ் சொல்
லுங் காலத்தில் நீங்கள் புறப்படாமலும்,
பின்செல்லாமலும் இருங்கள். * மத். ௨௪:
௨௩.

௨௪. மின்னலானது வானத்தின் ஒரு பக்கத்
தில்இருந்து மற்றொருபக்கம்வரைக்கும் பிர
காசிக்கிறதுபோல மனிதனுடைய குமா
ரன் தன்னுடைய நாளில் இருப்பார்.

௨௫. அதற்கு * முன்பு அவன் அநேகம்
பாடுகளை யநுபவித்து, இந்தச்சந்ததியினா
லே தள்ளப்படவேண்டி இருக்கின்றது. *
மத். ௰௬: ௨௧.

௨௬. * நோவாவின் நாள்களில் நடந்தது
போல மனிதகுமாரனுடைய நாள்களிலும்
நடக்கும். * மத். ௨௪: ௩௭—௩௯.

௨௭. நோவா பேழைக்குள் பிரவேசித்த
நாள்வரைக்குஞ் சனங்கள் போசனபானம்
பண்ணியும், பெண்கொண்டும், பெண்கொ
டுத்தும் வந்தார்கள். அந்நாளிலே சலப்
பிரளயம் வந்து எல்லாரையும் அழித்தது.

௨௮. லோத்தினுடைய நாள்களில் நடந்
ததுபோலவும் நடக்கும். சனங்கள் போ
சனபானம் பண்ணியும், பொருள்களைக்
கொண்டும், விற்றும், செடிகளை நாட்டியும்,
(வீடுகளைக்) கட்டியும் வந்தார்கள்.

௨௯. லோத்து என்பவன் சோதோம்
ஊரைவிட்டு, புறப்பட்ட நாளிலே வானத்
தில் இருந்து * அக்கினியும், கந்தகமும்
பெய்து எல்லாரையும் அழித்தன. * ௧மோ.
௰௯: ௨௪, ௨௫.

௩௰. மனிதனுடைய குமாரன் வெளிப்படும்
நாளில் அப்படியே இருக்கும்.

௩௧. அந்த நாளிலே வீட்டின்மேல் இருப்
பவன் வீட்டுக்குள் இருக்கிற தன் பண்டங்
களை யெடுத்துக்கொண்டு போகும்படிக்கு,
இறங்காமற் போகக்கடவன். அன்றியும்,
வயலில் இருப்பவன் பின்னிட்டுத்திரும்பா
மற் போகக்கடவன்.

௩௨. லோத்தினுடைய * மனைவியை
நினையுங்கள். * ௧மோ. ௰௯: ௨௬.

௩௩. * எவனானாலுந் தன் சீவனை இரட்
சித்துக்கொள்ளத்தேடினால் அதை இழந்து
போவான். எவனானாலும், அதை இழந்
தால் அதைக்காத்துக்கொள்ளுவான். *
யோவா. ௰௨: ௨௫.

௩௪. அந்த இராத்திரியில் ஒரே படுக்கை
யின்மேற் கிடக்கும் இரண்டுபேரில் ஒருவன்
பிடித்துக்கொள்ளப்படுவான். மற்றவன்
விட்டுவிடப்படுவான்.

௩௫. மாவையரைக்கும் இரண்டு பெண்க
ளில் ஒருத்தி பிடித்துக்கொள்ளப்படுவாள்.
மற்றவள் விட்டு விடப்படுவாள்.

௩௬. வயலில் இருக்கும் இரண்டுபேரில் ஒரு
வன் பிடித்துக்கொள்ளப்படுவான். மற்ற
வன் விட்டு விடப்படுவானென்றுங்களுக்குச்
சொல்லுகிறேனென்று சொன்னபொழுது,

௩௭. அவர்கள் அவரை நோக்கி, ஆண்ட
வரே! எங்கே யென்றார்கள். அதற்கு அவர்
சொன்னது, * பிணம் எங்கேயோ அங்கே
கழுகுகள் சேருமென்றார். * மத். ௨௪: ௨௮.

௰௮ அதிகாரம்.

[(௧) மிகவும்வேண்டிக்கொண்டகைம்பெண்
ணை உவமையாகக்காட்டி, (௯) பரிசேய
னையும், ஆயக்காரனையுங் குறித்துச்சொன்
னது. (௰௫) குழந்தைகள் கிறிஸ்துவண்
டைக்குக்கொண்டுவரப்பட்டது. (௰௮)
கிறிஸ்துவைப்பின்பற்ற மனதுள்ள ஒருதலை
வன் தன் ஐசுவரியத்தினாலே தடைபட்
டதைக்குறித்து, (௨௮) அவர் தமது நிமித்
தம் எல்லாவற்றையும் வெறுக்கிறவர்களுக்
குண்டாகும் பலனைக்காட்டி, (௩௧) தமது

மரணத்தை முன்னறிவித்தது, (௩௫) ஒரு குருடனுக்குப்பார்வை யளித்தது.]

அன்றியும், அவர்கள் * சோர்ந்து போகாமல் எப்பொழுதுஞ் செபம் பண்ணவேண்டுவதைக்குறித்து, அவர் அவர்களுக்குச்சொன்ன உவமையாவது; * ௧ தெ. ௫: ௰௭.

௨. ஒருபட்டினத்திலே ஒரு நியாயாதிபதி பராபரனுக்குப்பயப்படாமலும், மனிதரை யெண்ணாமலும் இருந்தான்.

௩. அல்லாமலும், அந்தப்பட்டினத்திலே ஒருகைம்பெண்ணிருந்தாள். அவள் அவனிடத்திற்போய் எனக்கு விரோதியானவன் இடத்திற் பழிவாங்கவேண்டுமென்றாள்.

௪. அவன் அநேகநாள் மனதில்லாதிருந்தான். பின்பு அவள் அவனிடத்தில் அதிகமாய்க்கேட்டபடியினாலே அவன் தனக்குள்ளே யெண்ணினது. நான் பராபரனுக்குப் பயப்படாமலும், மனிதரை யெண்ணாமலும் இருந்தும்,

௫. இந்தக்கைம்பெண் என்னைத்தொந்தரவு பண்ணுகிறபடியால், நான் இவளுக்காகப்பழிவாங்கவேண்டும். இல்லாவிட்டால் இவள் எப்பொழுதும் வந்து, என்னை வருத்தப்படுத்துவாள் என்றெண்ணினான் என்று கர்த்தர் சொல்லி,

௬. பின்பு அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச்சிந்தியுங்கள்.

௭. அந்தப்படி பராபரன் தாம் தெரிந்தகொண்டவர்களைக் குறித்துத் தாமதித்துத் தம்மை நோக்கி, இரவும், பகலுங் கூப்பிடுகிற அவர்களுக்காகப்பழிவாங்காமல் இருப்பாரா!

௮. சீக்கிரத்தில் அவர்களுக்காகப்பழிவாங்குவாரென்று உங்களுக்குச்சொல்லுகிறேன். ஆகிலும், மனிதனுடைய குமாரன் வரும்பொழுது பூமியிலே விசுவாசத்தைக்காண்பாரோவென்றார்.

௯. அன்றியுந் தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலருக்கு அவர் சொன்ன உவமையாவது,

௰. இரண்டு மனிதர் செபம்பண்ணும்படிக்குத்தேவாலயத்திற்குப்போனார்கள். அவர்களில் ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன்.

௰௧. * பரிசேயனானவன் தனித்து நின்று பண்ணின செபமாவது, பராபரனே! நான் பறிகாரர், அநீதர், விபசாரர், இப்படிப்பட்ட மற்றமனிதரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராதவனானபடியினாலே உமக்குத்தோத்திரஞ் செலுத்துகிறேன். * மத். ௫: ௨௰.

௰௨. வாரத்துக்குள்ளே இரண்டுதரம் உபவாசிக்கிறேன். எனக்குண்டான யாவற்றிலும் பத்திலொன்றைச் செலுத்துகிறேன் என்றான்.

௰௩. பின்பு ஆயக்காரன் தூரமாய் நின்று தன் கண்களையும், வானத்துக்குயர்த்தத்துணியாமல் தன்மார்பிலே யடித்துக்கொண்டு பராபரனே! பாவியாகிய என்மேலிரக்கமாய் இருமென்றான்.

௰௪. அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய், தன் வீட்டிற்குத்திரும்பிப்போனானென்று உங்களுக்குச்சொல்லுகிறேன். * தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான். தன்னைத்தாழ்த்துகிறவனே உயர்த்தப்படுவானென்றார். * மத். ௨௩: ௰௨.

௰௫. பின்பு * குழந்தைகளை யவர் தொடும்படிக்கு அவரிடத்திற் கொண்டுவந்தார்கள். சீஷர் அதைக்கண்டு அவர்களை யதட்டினார்கள். * மத். ௰௯: ௰௩—௰௫. மாற். ௰: ௰௩—௰௬.

௰௬. இயேசுவானவர் அவைகளைக்கொண்டுவரும்படி கட்டளையிட்டுச்சொன்னது, பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்குத்தடை பண்ணாமல் இடங்கொடுங்கள். * பராபரனுடைய இராச்சியம் அப்படிப்பட்டவர்களை யுடையதே. * மத். ௰௮: ௩.

௰௭. எவனாகிலும், பிள்ளையைப்போலப் பராபரனுடைய இராச்சியத்தை யேற்றுக்கொள்ளாவிட்டால் அதிற் பிரவேசிக்கமாட்டானென்றார்.

௰௮. அப்பொழுது * தலைவன் ஒருவன் அவரை நோக்கி, நல்லபோதகரே நித்திய சீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு நான் என்னசெய்யவேண்டுமென்று கேட்டான். * மத். ௰௯: ௰௬—௨௯. மாற். ௰: ௰௭—௨௭.

௰௯. அதற்கு இயேசுவானவர் சொன்னது, நீர் என்னை நல்லவரென்று ஏன் சொல்லுகிறீர்! பராபரன் ஒருவரே அல்லாமல் மற்றொருவனும் நல்லவன் அல்லவே.

௨௰. விபசாரம் பண்ணாதிருப்பாயாக.— கொலைசெய்யாதிருப்பாயாக. களவுசெய்யாதிருப்பாயாக. பொய்ச்சாட்சிசொல்லாதிருப்பாயாக. உன்தகப்பனையும், தாயையுங் கனம் பண்ணுவாயாகவென்று சொல்லுகிற கற்பனைகளை அறிந்திருக்கிறீரேயென்றார்.

௨௧. அதற்கு அவன் அவைகளை யெல்லாம் என் சிறுவயது முதற் கைக்கொண்டிருக்கிறேனென்றான்.

௨௨. இயேசுவானவர் அதைக்கேட்டு அவனுடனே சொன்னது, பின்னும் ஒன்றை நீர் செய்யவேண்டியதாய் இருக்கின்றது. உமக்குண்டானவைகளை யெல்லாம் நீர் விற்றுப் * பரமண்டலத்திலே உமக்குப்பொக்கிசம் உண்டாயிருக்கும்படிக்குத்தரித்திரருக்குப்பங்கிட்டுக்கொடுத்துப்பின்பு வந்து

எனக்குப்பின் செல்லவேண்டுமென்றார். * மத். ௯: ௨௰.

௨௩. அவன் மிகுந்த ஐசுவரியவானானபடியினாலே அந்த வசனத்தைக்கேட்டபொழுது மிகுந்த துக்கம் அடைந்து (போனான்.)

௨௪. அவன் மிகுந்த துக்கம் அடைந்ததை இயேசுவானவர் கண்டு சொன்னதாவது; ஆஸ்திகளையுடையவர்கள் பராபரனுடைய இராச்சியத்திற் பிரவேசிப்பது மிகவும் அரிது.

௨௫. ஒட்டகமானது ஒரு ஊசியின் காதிலே நுழைவது எளிதானாலும் ஐசுவரியவான் பராபரனுடைய இராச்சியத்திற் பிரவேசிக்கிறதும் எளிதாய் இருக்குமென்றார்.

௨௬. அதைக்கேட்டவர்கள் சொன்னது, அப்படியானால் யார் இரட்சிக்கப்படுவார்களென்றார்கள்.

௨௭. அதற்கவர்சொன்னது, மனிதராலாகமாட்டாதவைகள் பராபரனாலே யாகுமென்றார்.

௨௮. * அப்பொழுது பேதுரு அவரை நோக்கி, இதோ நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உமக்குப்பின்சென்று வருகிறோமென்றான். * மத். ௰௯: ௨௭. மாற். ௰: ௨௮—௩௧.

௨௯. அதற்கவர் சொன்னது, பராபரனுடைய இராச்சியத்தினிமித்தமாக வீட்டையாவது, தாய் தகப்பன்மாரையாவது, சகோதரரையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது விட்டயாவரும்,

௩௰. இம்மையிலே அதிகமடங்காயும் மறுமையிலே நித்திய சீவனையும் அடையாமல் இருப்பதில்லை யென்றார்.

௩௧. பின்பு * அவர் பன்னிருவரைச்சேர்த்துக்கொண்டு அவர்களுடனே சொன்னது, † இதோ, எருசலேமுக்குப்போகிறோம். அங்கே மனிதனுடைய குமாரனைக்குறித்து, தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்ட யாவும் நிறைவேறும். * மத். ௨௰: ௰௭. மாற். ௰: ௩௨. † மத். ௨௰: ௰௮. மாற். ௰: ௩௩.

௩௨. எப்படியெனில், அவன் புறத்தேசத்தாருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, பரியாசமும், நிந்தையும் அடைந்து துப்பப்படுவான்.

௩௩. * அல்லர்மலும் அவனை வாரினால் அடித்துக்கொலைசெய்வார்கள். மேலும் மூன்றும் நாளிலே உயிரோடு எழுந்திருப்பான் என்றார், * ௯: ௨௨. மத். ௨௰: ௰௯. மாற். ௰: ௩௪.

௩௪. அவர்கள் இவைகளில் ஒன்றையும் உணரவில்லை. அவைகளின் பொருள் அவர்களுக்கு மறைவாய் இருந்தது. அவர் சொன்னவைகளை யறியாமல் இருந்தார்கள்.

௩௫. அவர் யெரிகோவூருக்குச்சமீபமான பொழுது, * வழி அருகே உளுக்காந்து பிச்சை கேட்டுக்கொண்டிருக்கிற ஒரு குருடன், * மத். ௨௰: ௩௰. மாற் ௰: ௪௬.

௩௬. சனங்கள் நடக்கிறதை, கேள்விப்பட்டு இதென்னவென்று விசாரித்தான்.

௩௭. நாசரேத்தூரானாகிய இயேசு நடந்து போகிறார் என்று அவனுக்கு அறிவித்தார்கள்.

௩௮. அப்பொழுது அவன் இயேசுவே! தாவீதின் குமாரனே! எனக்கு இரங்குமென்று அதிகமாய்க்கூப்பிட்டான்.

௩௯. முன்னடப்பார் அவன் பேசாமல் இருக்கும்படிக்கு அவனை அதட்டினார்கள். அவன் தாவீதின் குமாரனே! எனக்கு இரங்குமென்று அதிகமாய்க்கூப்பிட்டான்.

௪௰. அப்பொழுது இயேசுவானவர் நின்று அவனைத்தம்மிடத்திற் கொண்டுவரும்படி கட்டளையிட்டார். அவன் கிட்ட வந்தபொழுது அவர் அவனை நோக்கி,

௪௧. நான் உனக்கு என்னசெய்யவேண்டுமென்று இருக்கிறாயென்றார். அதற்கவன் ஆண்டவரே! நான் பார்வை யடையும்படி செய்யவேண்டுமென்றான்.

௪௨. இயேசுவானவர் அவனை நோக்கி, நீ பார்வை அடைவாயாக. உன் விசுவாசம் உன்னை இரட்சித்ததென்றார்.

௪௩. உடனே அவன் பார்வையடைந்து, பராபரனைப்புகழ்ந்து அவருக்குப்பின்சென்றான். அதைக்கண்ட சனங்களெல்லாரும் பராபரனுக்குத்துதிசெலுத்தினார்கள்.

௰௯ அதிகாரம்.

[(௧) ஆயக்காரனான சகேயுவைக்குறித்துச் சொல்லியது. (௰௧) பத்து இராத்தல் வெள்ளியைப்பெற்ற ஊழியக்காரரை உவமையாகக்காட்டியது. (௨௮) கிறிஸ்துக்கெம்பீரமாய் எருசலேமுக்குள் பிரவேசிக்கையில், (௪௧) அதைக்குறித்து அழுது, (௪௫) தேவாலயத்தில் விற்கிறவர்களையும், கொள்ளுகிறவர்களையுந் துரத்தி, (௪௭) அதிலே நாடோறும் உபதேசித்தது. அதிகாரிகள் அவரைக்கொலைசெய்ய விரும்பி, சனங்களுக்கு அஞ்சினதினாலே கூடாமற் போயிற்று.

பின்பு அவர் யெரிகோ வூரிற் பிரவேசித்து அப்புறம் நடந்துபோனார்.

௨. அப்பொழுது ஆயக்காரருக்குத்தலைவனும், ஐசுவரியவானுமாய் இருந்த சகேயு என்னப்பட்ட மனிதன் இயேசுவானவரை அறியும்படிக்கு அவரைப்பார்க்க வகைதேடினான்.

௩. அவன் குறியவனானபடியாற் சனக்கூட்டத்திலே அவரைக்காணக்கூடாமல் இருந்தது.

௪. அப்பொழுது அவன் அவரைப்பார்க்கும்படிக்கு முன்னாக ஓடி அவர் செல்லுகி

ற வழியிலே நிற்கின்ற காட்டு அத்திமரத்
தின்மேல் ஏறினான்.
௫. இயேசுவானவர் அந்த இடத்திற் சென்
றபொழுது அண்ணாந்து பார்த்து, அவனைக்
கண்டு, சகேயுவே! இன்றைக்கு நான் உன்
வீட்டிலே தங்கவேண்டும். ஆகையால், நீ
சீக்கிரமாய் இறங்கி வாவென்றார்.
௬. அந்தப்படி அவன் சீக்கிரமாய் இறங்
கிச் சந்தோஷத்தோடே அவருக்கு உபசா
ரஞ் செய்தான்.
௭. அதைக்கண்ட அனைவருஞ் சொன்ன
து,* இவர் பாவியான மனிதன் இடத்திலே
தங்கும்படிக்குப்போகிறாரென்று மொறு
மொறுத்தார்கள். * ௰௫: ௨.
௮. சகேயு என்பவன் நின்று கர்த்தரை
நோக்கி, * ஆண்டவரே! என் ஆஸ்திகளிற்
பாதியை ஏழைகளுக்குக்கொடுக்கிறேன்.
அல்லாமலும், நான் ஒருவன் இடத்தில்
எதையாகிலும் அநியாயமாய் எடுத்திருந்
தேனானால் நாலுமடங்காய்ப்பதிற் செலுத்
துகிறேனென்றான். * ௰௧: ௪௧.
௯. அப்பொழுது இயேசுவானவர் அவ
னைக்குறித்துச்சொன்னது, * இழந்துபோ
னதைத்தேடி இரட்சிக்கும்படிக்கு மனித
னுடைய குமாரன் வந்திருக்கிறபடியினாலே,
இன்றைக்கு இந்தக்குடும்பத்திற்கு இரட்
சிப்புண்டாயிற்று. * மத். ௯: ௰௩. ௰௮:
௰௧. ௧ திமோ. ௧: ௰௫.
௰. இவனும் ஆபிரகாமினுடைய சந்തதி
யான் அல்லவாவென்றார்.
௰௧. அன்றியும் அவர்கள் இவைகளைக்கேட்
டுக்கொண்டு இருக்கையில், அவர் எருசலே
முக்குச்சமீபமானபடியினாலும், பராபரனு
டைய ஆளுகை சீக்கிரமாகக்காணப்படும்
என்று அவர்கள் நினைத்தபடியினாலும் அவர்
சொன்ன உவமையாவது;
௰௨. * உயர்குலத்தானாகிய ஒருவன் ஒரு
இராச்சியத்தைப்பெற்றுக்கொண்டு, பின்பு
திரும்பி வரும்படிக்கு, தூரதேசத்துக்குப்
போக மனதாய், * மத். ௨௫: ௰௪—௩௰.
௰௩. தன்னுடைய பத்து ஊழியக்காரரை
யழைத்து, அவர்களுக்குப்பத்து இராத்தல்
திரவியங் கொடுத்து, நான் வருகிற வரைக்
கும் இதினாலே தொழில் செய்யுங்களென்
று சொல்லிப்போனான்.
௰௪. அவனுடைய பட்டினத்தார் அவனைப்
பகைத்து, அவன் எங்களை யாளுகைசெய்ய
எங்களுக்கு மனதில்லையென்று சொல்லும்
படிக்கு அவனுக்குப்பின்னாகத்தானாபதிக
ளை யனுப்பினார்கள்.
௰௫. அப்படி இருந்தும் அவன் இராச்சி
யத்தைப்பெற்றுக்கொண்டு, திரும்பிவந்து,
தான் திரவியங்கொடுக்கப்பெற்றிருந்த அந்
த ஊழியக்காரர் தொழில் செய்ததினாலே
ஆதாயமாக்கிக்கொண்டது இவ்வளவென்
று அறியும்படிக்கு, அவர்களைத்தன் இடத்
துக்கழைத்துவரச்சொன்னான்.
௰௬. அந்தப்படியே முந்தினவன் சேர்ந்து
ஆண்டவனே! உம்முடைய இராத்தல் பத்
து இராத்தலை ஆதாயம்பண்ணிற்றென்றான்.
௰௭. அவனுடனே எசமான் சொன்னது,
நல்லது, உத்தம ஊழியக்காரனே! நீ
கொஞ்சத்திலே உண்மையாய் இருந்தபடி
யினாலே பத்துப்பட்டினங்களுக்கு அதிகாரி
யாய் இருவென்றான்.
௰௮. பின்பு, இரண்டாம் ஊழியக்காரன்
சேர்ந்து, ஆண்டவனே! உம்முடைய இராத்
தல் ஐந்து இராத்தலை ஆதாயம் பண்ணிற்
றென்றான்.
௰௯. அவனுடனேயும் அவன் சொன்னது,
நீயும் ஐந்து பட்டினங்களுக்கு அதிகாரி
யாய் இருவென்றான்.
௨௰. பின்பு வேறொருவன் சேர்ந்து, ஆண்
டவனே! நீர் வையாததை யெடுக்கிறவரு
மாய், விதையாததை அறுக்கிறவருமாய்
இருக்கிற கடினமுள்ள மனிதனாய் இருக்கிற
தை நான் அறிந்து, உமக்குப்பயப்பட்ட
படியினாலே,
௨௰௧. உம்முடைய இராத்தலை ஒரு சேலையி
லே வைத்துக்கொண்டேன். இதோ, அது
இருக்கின்றதென்றான்.
௨௰௨. அவனுடனே அவன் சொன்னது,
பொல்லாத ஊழியக்காரனே! * உன் வாக்
கின்படி உனக்கு நியாயத்தீர்ப்புக்கொடுக்
கிறேன். நான் வையாததை யெடுக்கிறவனு
மாய் விதையாததை அறுக்கிறவனுமாய் இ
ருக்கிற கடினமுள்ள மனிதனென்று அறிந்
தாயே. * மத் ௰௨: ௩௭.
௨௰௩. ஆகையால், நான் திரும்பி வருகிற
பொழுது என் திரவியத்தை வட்டியோடே
பெற்றுக்கொள்ளும்படிக்கு நீ யதை (வட்
டிக்காகக்) காசுக்கடையிலே ஏன் கொடுக்
கவில்லை யென்றுசொல்லி,
௨௰௪. சமீபமாய் நிற்கிறவர்களை நோக்கி,
நீங்கள் அந்த இராத்தலை இவனில் இருந்து
எடுத்துப்பத்து இராத்தல் உள்ளவனுக்குக்
கொடுங்களென்று கட்டளையிட்டபொழுது,
௨௰௫. அவர்கள் ஆண்டவனே! அவனுக்குப்
பத்து இராத்தல் உண்டே யென்ன,
௨௰௬. அவன் பின்னுஞ் சொன்னது, நான்
உங்களுக்குச்சொல்லுகிறதாவது; உள்ளவ
னுக்குக்கொடுக்கப்படும். இல்லாதவனுக்கு
உண்டாய் இருக்கிறதும் அவனில் இருந்து
எடுக்கப்படும்.
௨௰௭. அன்றியும், நான் தங்களுக்கு இராசா
வாய் இருக்க மனதில்லாமல் எனக்குச்சத்
துருக்களான அவர்களை இங்கே கொண்டு
வந்து, எனக்கு முன்பாக வெட்டிப்போடுங்
களென்று சொன்னானென்றார்.
௨௰௮ இவைகளை அவர் சொன்ன பின்பு

அவர் எருசலேமுக்குப்போகும்படி முன்
னே நடந்தார்.

௨௯. அப்படி அவர் * ஒலீவமலை யென்
னப்பட்ட மலையின் அருகே இருக்கிற பெ
த்பாகே யூருக்கும், பெத்தானியா வூருக்
குஞ் சமீபமானபொழுது, அவர் தம்முடை
ய சீஷரில் இருவரை நோக்கி, * மத். ௨௧:
௧—௰௧. மாற். ௰௧: ௧—௰. யோவா. ௰௨:
௰௨—௰௯.

௩௰. அதோ உங்களுக்கெதிராய் இருக்கிற
கிராமத்துக்குப்போங்கள். அதிற் பிரவே
சிக்கும்பொழுது மனிதரில் ஒருவனுகிலும்
ஒருக்காலும் ஏறுத கழுதைக்குட்டியைக்
கட்டி இருக்கக்காண்பீர்கள். அதை யவிழ்த்
துக்கொண்டு வாருங்கள்.

௩௧. இதை ஏன் அவிழ்க்கிறீர்களென்று
ஒருவன் உங்கள் இடத்திற் கேட்டால் ஆண்
டவருக்கு இது வேண்டுமென்று அவனுக்
குச்சொல்லுங்களென்றார்.

௩௨. அந்தப்படி அனுப்பப்பட்டவர்கள்
போய், தங்களுக்கு அவர் சொன்ன பிரகா
ரமாகக்கண்டார்கள்.

௩௩. கழுதைக்குட்டியை அவர்கள் அவிழ்க்
கிறபொழுது அதின் எசமான்கள் அவர்களை
நோக்கி, குட்டியை ஏன் அவிழ்க்கிறீர்கள்
என்றார்கள்.

௩௪. அதற்கு அவர்கள் ஆண்டவருக்கு
இது வேண்டுமென்று சொல்லி,

௩௫. அதை இயேசுவின் இடத்திற்குக்
கொண்டுவந்து, தங்கள் வஸ்திரங்களைக்
குட்டியின்மேற் போட்டு, இயேசுவை அ
தின்மேல் ஏற்றினார்கள்.

௩௬. அப்படி அவர் போகையில் அவர்கள்
தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்
கள்.

௩௭. அல்லாமலும், அவர் ஒலீவ மலையின்
அடிவாரமாய்ச்சேர்ந்து வருகிறபொழுது,
சீஷரின் கூட்டத்தாரெல்லாருந் தாங்கள்
கண்ட சகல அற்புதங்களையுங் குறித்துச்
சந்தோஷப்பட்டு, மிகுந்த சத்தத்துடனே
பராபரனைத்துதிக்கத்தொடங்கி, * பரா
பரனுடைய நாமத்தினாலே வருகிற இரா
சா தோத்திரிக்கப்பட்டவர். * சங்கீ.
௱௰அ: ௨௬.

௩௮. பரமண்டலத்திற் சமாதான சவுக்கி
யமும், உன்னதங்களிற் புகழ்தலும் உண்
டாவதாக என்றார்கள்.

௩௯. அப்பொழுது கூட்டத்தில் இருந்த
பரிசேயரிற் சிலர் அவரை நோக்கிப்போ
தகரே, நீர் உம்முடைய சீஷரை அதட்
டவேண்டும் என்றார்கள்.

௪௰. அவர்களுக்கு மறுமொழியாக அவர்
சொன்னது, இவர்கள் பேசாமல் இருந்
தாற் கற்களே கூப்பிடும் என்று உங்களுக்
குச்சொல்லுகிறேன் என்றார்.

௪௧. அன்றியும் அவர் பட்டினத்துக்குச்
சமீபமானபொழுது அவர் அதைப்பார்த்து
அதைக்குறித்துக்கண்ணீர்விட்டு நீ யுனக்
குக்கிடைத்த இந்த நாளிலே, * உன் சு
மாதானத்துக்கேற்றவைகளை, சிந்தித்துக்
கொண்டால் நலமாய் இருக்கும். * ஓ
சே, ௩௨: ௨௯.

௪௨. இப்பொழுது அவைகள் உன் கண்க
ளுக்கு மறைவாய் இருக்கின்றன.

௪௩. உன்னைச்சந்திக்குங் காலத்தை நீ
சிந்தித்துக்கொள்ளாமல் இருக்கிறபடியினா
லே உன் சத்துருக்கள் உன்னை, சூழ மதில்
போட்டு உன்னை வளைந்துகொண்டு,

௪௪. எங்கும் உன்னை இறுகப்பிடித்து உன்
னையும், உன்னில் உள்ளவர்களையுந் தரை
யாக்கி உன்னிடத்தில், * ஒருகல் மற்றொ
ருகல்லின்மேல் இராதபடிக்குச்செய்யும்
நாள்கள் உனக்கு வரும் என்றார். * ௨௧: ௬.

௪௫. பின்பு அவர் தேவாலயத்திற் பிரவே
சித்து,

௪௬. அதிலே, * விற்கிறவர்களையும், கொள்
ளுகிறவர்களையும் நோக்கி, † நம்முடைய
ஆலயஞ் செபம் பண்ணுதற்கான ஆலயம்
என்றெழுதி இருக்கின்றதே. நீங்கள் இ
ந்த, ‡ கள்ளர் குகை ஆக்கினீர்கள் என்
று சொல்லி, அவர்களைப்புறம்பே துரத்தி
னார். * மத். ௨௧: ௰௨—௰௩. மாற். ௰௧:
௰௫. † ஏசா. ௫௬: ௭. ‡ எரே. ௭: ௰௧.

௪௭. அல்லாமலும் நாடோறும் அவர்
தேவாலயத்தில் உபதேசம் பண்ணிக்கொண்
டு இருந்தார். அப்பொழுது பிரதான ஆசா
ரியரும், வேதபாரகரும், சனத்தின் மூப்
பரும் அவரைக்கொலை செய்ய வகைதேடி,

௪௮. சனங்கள் எல்லாரும் மிகுந்த சிந்த
னையோடே அவருக்குச்செவிகொடுத்தப
டியினாலே வகையைக்காணாமற் போனார்
கள்.

௨௰ அதிகாரம்.

[(௧) ஆட்சேபித்த பரிசேயருக்குக்கிறிஸ்
துத்தமது அதிகாரத்தை யோவான் ஞா
னஸ்நானத்தைக்குறித்த கேள்வியினாலே ஸ்
தாபித்தது. (௯) திராட்சத்தோட்டக்கா
ரரை உவமையாக எடுத்துச்சொன்னது.
(௰௯) இராயனுக்கு வரிசெலுத்துவதைக்
குறித்துச்சொன்னது. (௨௭) உயிர்த்தெ
ழுதலில்லை என்ற சதுசேயருக்கு அதை
உண்டென்றெண்பித்தது. (௪௧) கிறிஸ்
துத்தாவீதின் குமாரன் என்றறிவித்ததைச்
சொன்னது. (௪௫) வேதபாரகரைக்குறித்
துச்சீஷர்களை எச்சரித்தது.]

அந்நாள்களில் ஒருநாளிலே, * அவர்
தேவாலயத்திற் சனங்களுக்கு உப
தேசம்பண்ணி, சுவிசேஷத்தைப்பிரசங்
கிக்கிறபொழுது, பிரதான ஆசாரியரும்,

வேதபாரகரும், மூப்பரும் அவருக்கு வி
ரோதமாய் வந்து நின்று, * மத். ௨௧:
௨௩—௨௭. மாற். ௰௧: ௨௭.
௨. அவரை நோக்கி, * நீர் எந்த அதி
காரத்தினால் இவைகளைச்செய்கிறீர். இப்
படிப்பட்ட அதிகாரத்தை உமக்குக்கொ
டுத்தவர் இன்னார் என்று எங்களுக்குச்சொல்
லும் என்றார்கள். * மாற். ௰௧: ௨௮.
௩. அதற்கு மாறுத்தரயாக அவர் சொன்
னது, நானும் உங்கள் இடத்தில் ஒரே வி
னாவைக்கேட்பேன்.
௪. என்னவென்றால், யோவான் கொடுத்
த ஸ்நானந் தேவனால் உண்டாயிற்றோ மனி
தரால் உண்டாயிற்றோ அதை எனக்குச்
சொல்லுங்கள் என்றார்.
௫. அப்பொழுது அவர்கள் தங்களுக்குள்
ளே யோசனை பண்ணினதாவது;
௬. தேவனால் உண்டாயிற்றென்று நாம்
சொன்னால், நீங்கள் அவரை ஏன் விசுவா
சிக்கவில்லை என்பார். அது மனிதரால் உண்
டாயிற்றென்று நாம் சொன்னால், எல்லாச்
சனங்களும் யோவானைத்தீர்க்கதரிசி என்
றெண்ணிக்கொள்ளுகிறபடியினாலே, நம்
மேற் கல்லெறிவார்கள் என்று யோசனை
பண்ணி,
௭. பின்பு அது வந்த விதம் எங்களுக்குத்
தெரியாதென்றார்கள்.
௮. அதற்கு இயேசுவானவர் சொன்னது,
அப்படியானால், நான் இன்ன அதிகாரத்
தினாலே இவைகளைச்செய்கிறேன் என்று
நானும் உங்களுக்குச்சொல்லமாட்டேன்
என்றார்.
௯. பின்பு அவர் சனங்களுடனே சொன்
ன உவமையாவது, * ஒரு மனிதன் திராட்
சத்தோட்டத்தை உண்டாக்கி, அதைத்
தோட்டக்காரர் வசமாய் விட்டு, அநேக
காலமாய்ப்புறத்தேசம்போய் இருந்தான்.
* மத். ௨௧: ௩௩. மாற். ௰௨: ௧—௰௨.
௰. தகுதியான காலத்திலே அந்தத்தோட்
டக்காரர் திராட்சத்தோட்டத்தின் கனிக
ளில் ஒரு பங்கை, தனக்குக்கொடுத்தனுப்
பும்படிக்கு, அவன் ஒரு ஊழியக்காரனை
அவர்கள் இடத்துக்கனுப்பினான். அந்தத்
தோட்டக்காரர் அவனை அடித்து, வெறு
மையாய் அனுப்பிவிட்டார்கள்.
௰௧. பின்பு அவன் வேறொரு ஊழியக்கா
ரனை அனுப்பினான். அவனையும் அவர்கள்
அடித்து, நிந்தைப்படுத்தி, வெறுமை
யாய் அனுப்பிவிட்டார்கள்.
௰௨. அதன் பின்பு அவன் மூன்றாம் ஊழி
யக்காரனை அனுப்பினான். அவனையும் அ
வர்கள் காயப்படுத்தித்துரத்தினார்கள்.
௰௩. அப்பொழுது திராட்சத்தோட்டத்
தின் எசமான் எண்ணினது, நான் என்ன
செய்யலாம்? எனக்குப்பிரியமான குமார
னை அனுப்பினால், அவர்கள் கண்டு கனஞ்
செய்வார்கள் என்றெண்ணி அவனை அனுப்
பினான்.
௰௪. தோட்டக்காரர் அவனைக்கண்டபொ
ழுது, இவன் சுதந்தரவாளி. சுதந்தரம்
நம்முடைய தாகும்படிக்கு இவனைக்கொ
லை செய்யவேண்டும் என்று தங்களுக்குள்
ளே யோசனைபண்ணி,
௰௫. வாருங்கள் என்றுசொல்லி, அவனைத்
திராட்சத்தோட்டத்துக்கு வெளியே தள்
ளிக்கொலைசெய்தார்கள். ஆதலால், திராட்
சத்தோட்டத்தின் எசமான் அவர்களை என்
னசெய்வான்!
௰௬. அவன் வந்து அந்தத்தோட்டக்கா
ரரை அழித்துத்திராட்சத்தோட்டத்தை,
வேறு மனிதருக்குக்கொடுப்பான் அல்லவா
என்றார். அதை அவர்கள் கேட்டு, அப்ப
டி ஆகாதிருப்பதாக என்றார்கள்.
௰௭. அப்பொழுது அவர் அவர்களைப்பார்த்
து, வீடு கட்டுகிறவர்கள் ஆகாது என்று
தள்ளின கல்லே கோடிக்குத்தலையான கல்
லாயிற்றென்று எழுதி இருக்கிற வேதவாக்
கியத்தின் கருத்து என்ன?
௰௮. அந்தக்கல்லின் மேல் விழுகிறவன் எ
வனோ அவன், * நொறுக்கப்படுவான்.
அன்றியும் அது விழப்படுபவன் எவனோ
அவனை நசுக்கிப்போடும் என்றார். * ஏசா.
௮: ௰௪, ௰௫.
௰௯. அப்பொழுது தங்களைக்குறித்து அந்
த உவமையைச்சொன்னார் என்று, பிரதா
ன ஆசாரியரும், வேதபாரகரும் அறிந்து
அந்நேரத்திலே அவர் மேற் கைகளைப்போ
ட விரும்பினார்கள். சனங்களுக்குப்பயப்
பட்டபடியால் (நிறுத்தினார்கள்.)
௨௰. பின்பு அவர்கள் அவரையே நோக்
கிக்கொண்டு, ஆளுகைக்கும், நியாயாதி
காரத்துக்கும் முன்பாக அவரை ஒப்புக்
கொடுக்கிறதற்கேதுவாக, * அவருடைய
வசனத்திற் குற்றங் கண்டுபிடிக்கும்படிக்
குத்தங்களை நீதிமான்கள்போலக்காண்பிக்
கிற வேவுகாரரை அவரிடத்தில் அனுப்பி
னார்கள். * மத். ௨௨: ௰௫—௨௨. மாற்.
௰௨: ௰௩—௰௭.
௨௧. அவர்கள் வந்து அவரை நோக்கிப்
போதகரே, நீர் செம்மையாய்ப்பேசி உப
தேசிக்கிறவர் என்றும், பட்சபாதம் இல்
லாமற் சத்தியமாய், பராபரனுடைய
மார்க்கத்தைப்போதிக்கிறவர் என்றும் அ
றிந்திருக்கிறோம்.
௨௨. நாம் இராயனுக்கு வரிகொடுக்கலா
மோ? கொடாமல் இருக்கலாமோவென்று,
அவரிடத்திற் கேட்டார்கள்.
௨௩. அவர்களுடைய தந்திரத்தை அவர்
அறிந்து அவர்களை நோக்கி, நீங்கள் என்
னை ஏன் சோதிக்கிறீர்கள்?

௨௪. பணத்தை எனக்குக்காண்பியுங்கள்.
அதில் இருக்கிற சொரூபமும், மேலெழுத்
தும் ஆருடையவைகள் என்றார். அவை
இராயனுடையவைகள் என்று மாறுத்த
ரஞ் சொன்னார்கள்.
௨௫. அவர் சொன்னது, அப்படி. ஆனால்,
நீங்கள் * இராயனுடையதை இராய
னுக்கும், பராபரனுடையதைப் பராபர
னுக்குஞ் செலுத்துங்கள் என்றார். *
உரோ. ௰௩: ௭.
௨௬. அவர்கள் அவரை, சனங்களுக்கு
முன்பாக ஒரு வசனத்தில் அகப்படுத்தக்கூ
டாமல் அவருடைய மாறுத்தரத்தைக்கு
றித்து ஆச்சரியப்பட்டு மவுனமாய் இருந்
தார்கள்.
௨௭. பின்பு, * மறுமை ஆகிய உயிரோ
டெழும்புதல் இல்லை என்று சொல்லுகிற
சதுசேயரிற் சிலர் அவர் இடத்தில் வந்து
கேட்டதாவது; * மத். ௨௨: ௨௩—௩௩.
மாற். ௰௨: ௰௮—௨௭.
௨௮. போதகரே, * பெண்ணை விவாகம்
பண்ணின ஒருவன் பிள்ளை இல்லாமல் இ
றந்து போனால், அவனுடைய மனைவியை
அவனுடைய சகோதரன் (சேர்ந்து) தன்
சகோதரனுக்கு, சந்ததி உண்டாக்க
வேண்டும் என்று மோசே நமக்குக்கட்ட
ளையாக எழுதினாரே. * ௫ மோ. ௨௫: ௫.
௨௯. அந்தப்படி (ஓரிடத்திலே) சகோ
தரர் ஏழுபேர் இருந்தார்கள். அவர்களில்
மூத்தவன் ஒரு பெண்ணை விவாகம்பண்ணி,
பிள்ளை யில்லாமல் இறந்துபோனான்.
௩௰. அப்பொழுது இரண்டாஞ் சகோத
ரன் அந்தப்பெண்ணை விவாகம்பண்ணி,
அவனும் பிள்ளை இல்லாமல் இறந்துபோ
னான்.
௩௧. மூன்றாஞ் சகோதரன் முதல் ஏழுபேர்
வரைக்கும் அந்தப்படியே அவளை விவா
கம்பண்ணிப்பிள்ளைகளைப்பெறாமல் இறந்து
போனார்கள்.
௩௨. அவர்கள் எல்லாருக்கும் பின்பு அந்
தப்பெண்ணும் இறந்துபோனாள்.
௩௩. இவ்விதமாய் ஏழுபேரும் அவளை வி
வாகம்பண்ணினவர்களாய் இருக்க, (மரித்
தோர்) உயிரோடெழுந்திருக்குங் காலத்
தில் அவர்களில் எவனுக்கு அவள் மனை
வியாய் இருப்பாள் என்றார்கள்.
௩௪. அவர்களுக்கு மாறுத்தரமாக இயே
சுவானவர் சொன்னது, இம்மையில் இருக்
கிறவர்கள் பெண்கொண்டும், கொடுத்தும்
வருகிறார்கள்.
௩௫. மறுமையில் உள்ள பாக்கியத்தையும்,
மரித்தோரிலிருந்து எழுந்திருக்குதலையும்,
அடைவதற்குப்பாத்திரராய் எண்ணப்படு
பவர்கள் பெண் கொள்வதும், கொடுப்ப
தும் இல்லை.
௩௬. என்னத்தினாலெனில், அவர்கள் உயி
ரோடே எழுந்திருக்கத்தக்கவர்களாய் இ
ருக்கத்தேவ தூதருக்கொப்பானவர்களு
மாய், பராபரனுடைய பிள்ளைகளுமாய்
இருப்பதால் அவர்கள் இனி மரிக்கக்கூடா
திருப்பார்களே.
௩௭. அன்றியும் மரித்தோர் எழுந்திருப்
பார்கள் என்பதை * மோசேயும் முட்செ
டியைக்குறித்து எழுதின சரித்திரத்திலே
காண்பித்தார். எப்படியெனில், அவர் பரா
பரனை ஆபிரகாமினுடைய தேவனென்றும்,
ஈசாக்கினுடைய தேவனென்றும், யாக்
கோபினுடைய தேவனென்றும் சொல்லி
யிருக்கிறார். * ௨ மோ. ௩: ௬.
௩௮. பராபரன் மரித்தோருடைய தேவ
னாய் இராமல் சீவனுள்ளோருடைய தேவ
னாய் இருக்கிறார். அவர்கள் எல்லாரும் அவ
ருக்குப்பிழைத்திருக்கிறார்களே என்றார்.
௩௯. வேதபாரகரிற் சிலர் அதைக்கேட்
டு, போதகரே! நன்றாய்ச்சொன்னீர் என்
றார்கள்.
௪௰. பின்பு அவர்கள் அவரிடத்தில் வே
றொன்றைக்கேட்கத்துணிய இல்லை.
௪௧. அப்பொழுது அவர் அவர்களை நோக்
கி, கிறிஸ்துவானவர் * தாவீதின் குமார
னாய் இருப்பாரென்று என்னத்தினாலே
சொல்லுகிறார்கள். * மத். ௨௨: ௪௨.
மாற். ௰௨: ௩௫—௩௭.
௪௨. அல்லாமலும் பராபரன் என் கர்த்
தாவைநோக்கி, நான் உம்முடைய சத்து
ருக்களை உமது பாதப்படியாக்கிப்போடும
ளவும்,
௪௩. நீர் எனது வலதுபாரிசத்தில் உட்கா
ருமென்றாரென்று தாவீது தானே * சங்
கீதப்புத்தகத்திற் சொல்லியிருக்கிறாரே.
* சங்கீ. ௱௰: ௧.
௪௪. தாவீது அவரைக்கர்த்தர் என்று
சொல்லியிருக்க, எப்படி யவர் அவனுடை
ய குமாரனுவாரென்றார்.
௪௫. அப்பொழுது சனங்கள் எல்லாருங்
கேட்க * அவர் தம்முடைய சீஷருடனே
சொன்னதாவது; * மத். ௨௩: ௧.
௪௬. * நீளமான வஸ்திரங்களைத்தரித்து
நடக்க மனதாயிருந்து சந்தைகளில் வாழ்
த்துதலையும், செப ஆலயங்களில் முதல் ஆ
சனங்களையும், விருந்துகளில் முதல் இடங்
களையும் விரும்பி, * மாற். ௰௨: ௩௮—௪௰.
௪௭. * கைம்பெண்களுடைய பொருள்க
ளைப்பட்சித்து வஞ்சகமாய் விஸ்தாரமான
செபம் பண்ணி வருகிற வேதபாரகருக்கு
நீங்கள் இடங்கொடாமல். எச்சரிக்கையாய்
இருங்கள். அவர்களே அதிக ஆக்கினையை
அடைவார்களென்றார். * ஏசே. ௨௨: ௭.

௨௧ அதிகாரம்.

[(௧) கிறிஸ்துத்தருமப்பெட்டியிலே இரண்டு காசைப்போட்ட ஒரு கைம்பெண்ணைப் புகழ்ந்து, (௫) தேவாலயமும், எருசலேமும் அழிக்கப்படுவதை முன்னறிவித்து, (௨௫) கடைசிநாளுக்கு முன்னுண்டாகும் அடையாளங்களைக்காட்டி, (௩௪) அவர்கள் விழித்திருக்கும்படிக்குப்புத்தி சொன்னது.]

பின்பு * அவர் கண்ணை உயர்த்திப் பார்க்கிறபொழுது, ஐசுவரியவான்கள் தங்கள் காணிக்கைகளைத்தருமப்பெட்டியிற் போடுகிறதைக்கண்டார். * மாற். ௰௨: ௪௧.

௨. அல்லாமலும், இரண்டு காசை அதிலே போட்ட ஒரு ஏழைக்கைம்பெண்ணையும் அவர் கண்டு,

௩. இந்த ஏழைக்கைம்பெண் மற்றெல்லாரிலும் அதிகம் போட்டாளென்று மெய்யாய் உங்களுக்குச்சொல்லுகிறேன்.

௪. எப்படியெனில், அவர்களெல்லாருந்தங்கள் பரிபூரணத்தில் எடுத்துத்தேவ காணிக்கைப்பெட்டியிற் போட்டார்கள். இவள் தன் குறைவிலே தன் சீவனத்துக்கு உண்டான யாவையும் போட்டாளென்றார்.

௫. பின்பு * சிலர் தேவாலயத்தைக்குறித்து அது அழகான கற்களாலும், காணிக்கைகளாலும் அலங்கரிக்கப்பட்டு இருக்கின்றதென்று சொன்னபொழுது அவர் சொன்னது, * மத். ௨௪: ௧. மாற். ௰௩: ௧.

௬. நீங்கள் பார்க்கிற இவைகளில் ஒரு கல் மற்றொரு கல்லின்மேல் இராதபடிக்கு எல்லாம் இடிக்கப்படும் நாள்கள் வருமென்றார்.

௭. அப்பொழுது அவரை அவர்கள் நோக்கி, போதகரே! அவைகள் எப்பொழுது நடக்கும்? அவைகள் சம்பவிக்கும் காலத்துக்கு அடையாளம் என்னவென்று கேட்டார்கள்.

௮. அதற்கவர் சொன்னது, அநேகர் என் நாமத்தை யெடுத்துத்தங்களை அவரே என்றும், காலஞ் சமீபமாய் வந்ததென்றுஞ் சொல்லுவார்கள். நீங்கள் வஞ்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கை உள்ளவர்களாய் அவர்களுக்குப்பின்செல்லாமல் இருங்கள்.

௯. அல்லாமலும் யுத்தங்களையும், கலகங்களையுங்குறித்துக் கேள்விப்படும் பொழுது திகில் அடையாதிருங்கள். அப்படிப்பட்டவைகள் முன்னடக்கவேண்டுமே. ஆனாலும் முடிவு உடனே வாராதென்று சொல்லிப்பின்பு திருவுளம்பற்றினதாவது;

௰. ஒரு சனக்கூட்டம் மற்றொரு சனக்கூட்டத்துக்கும், ஒரு இராச்சியத்தார் மற்றொரு இராச்சியத்தாருக்கும் விரோதமாக எழும்புவார்கள்.

௰௧. அல்லாமலும் பல இடங்களிலே பூமி மிகவும் அதிர்தலும் பஞ்சங்களும், பெருவாரிக்காய்ச்சல்களும் உண்டாயிருக்கும். வானத்திலிருந்து பயம் உண்டாக்குகிற காரியங்களும் பெரிய அடையாளங்களும் உண்டாகும்.

௰௨. அவைகள் எல்லாவற்றுக்கும் முன்னே என்னுடைய நாமத்தினிமித்தம் அவர்கள் உங்கள்மேலே * தங்கள் கைகளைப்போட்டு உங்களைத்துன்பப்படுத்திச்செப ஆலயங்களுக்கும், சிறைச்சாலைகளுக்கும் ஒப்புக்கொடுத்து இராசாக்களுக்கும், துரைகளுக்கு முன்பாகக்கொண்டுபோவார்கள். * யோவா. ௰௬: ௨.

௰௩. ஆனாலும் அது நீங்கள் சாட்சி கொடுக்கும்படிக்கு ஏதுவாயிருக்கும்.

௰௪. ஆகையால் எப்படி மாறுத்தரவு சொல்லலாமென்று நீங்கள் * கவலைப்படாதிருக்கும்படி உங்கள் மனதைத்திடப்படுத்துங்கள். * மத். ௰: ௰௯.

௰௫. நானே யுங்களுக்குத் (தகுதியான) பேச்சையும், ஞானத்தையுங் கொடுப்பேன். உங்கள் * எதிராளிகள் யாவரும் அதற்கு விரோதமாய்ப்பேசவும், எதிர் நிற்கவும் மாட்டார்கள். * ௨ மோ. ௪: ௰௨.

௰௬. அன்றியும், பெற்றாராலும், * சகோதரராலும், இனத்தாராலும், சிநேகிதராலுங் காட்டிக்கொடுக்கப்படுவீர்கள். உங்களிற் சில்ரைக் கொலைசெய்விப்பார்கள். * மீகா. ௭: ௬.

௰௭. என் நாமத்தினாலே நீங்கள் சகலவிதமான மனிதராலும் பகைக்கப்படுவீர்கள்.

௰௮. * ஆனாலும் உங்கள் தலையின் மயிரில் ஒன்றாகிலும் அழியாது. * ௰௨: ௭.

௰௯. பொறுமையினாலே உங்கள் ஆத்துமாக்களைக்காத்துக்கொள்ளக்கடவீர்கள்.

௨௰. அன்றியுஞ் சேனைகளால் எருசலேம் வளைக்கப்பட்டிருக்கிறதை நீங்கள் காணும்பொழுது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள்.

௨௧. அப்பொழுது யூதேயாநாட்டில் இருப்பவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகவும், எருசலேமுக்குள்ளே யிருப்பவர்கள் வெளியே புறப்படவும், நாட்டுப்புறங்களில் இருப்பவர்கள் அதற்குட்பிரவேசியாமல் இருக்கவுங்கடவர்கள்.

௨௨. எழுதியிருக்கிறயாவும் நிறைவேறும்படியாய், அந்நாள்களே பழிவாங்குதற்கானவைகளாயிருக்கும்.

௨௩. அந்நாள்களில் ஐயோ! கருப்பவதிகளுக்கும், முலைகொடுக்கிறவர்களுக்கும் வேதனை யுண்டாயிருக்கும். என்னத்தினாலெனில், இத்தேசத்தின்மேல் மிகுந்த இடுக்கணும், இந்தச்சனத்தின்மேற் கோபாக்கினையும் உண்டாகும்.

௨௪. கட்கங்களினாலே அற்று விழுவார்கள். அல்லாமலும் புறத்தேசத்தார் யாவருக்குள்ளேயுஞ் சிறைப்பட்டுப்போவார்கள். அன்றியும், புறத்தேசத்தாருடைய காலங்கள் * நிறைவேறுகிறவரைக்கும் எருசலேம் புறத்தேசத்தாராலே மிதிக்கப்படும். * உரோ. ௰௧: ௨௫.

௨௫. * சூரியனிலும், சந்திரனிலும், நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும். பூமியின்மேலுள்ள சனங்களுக்குள்ளே கலக்கமான உபத்திரவம் உண்டாகும் சமுத்திரமும் அலைகளுங் கோஷ்டமாய் இருக்கும். * ஏசா. ௰௩: ௰.

௨௬. வானத்திற் பலமானவைகளும் அசையும். ஆதலாற் பூலோகத்தின்மேல் வருகிற காரியங்களுக்குப்பயந்து அவைகளை நோக்கிப் பார்க்கிறதினாலே மனிதர்கள் சோர்ந்து போவார்கள்.

௨௭. அப்பொழுது * மனிதனுடைய குமாரனை மிகுந்த வல்லமையோடும், மகிமையோடும் மேகத்தில் வரக்காண்பார்கள். * அப்போ. ௧: ௰௧.

௨௮. அவைகள் சம்பவிக்கத்தொடங்கும்பொழுது, * உங்கள் மீட்புச்சமீபமாய் வருவதால் நீங்கள் நிமிர்ந்து, உங்கள் தலைகளையுயர்த்தக்கடவீர்கள் என்று சொல்லி, * உரோ. ௮: ௨௩.

௨௯. பின்பு உவமையாய்ச்சொன்னதாவது; அத்திமரத்தையும், மற்றச்சகல மரங்களையும் பாருங்கள்.

௩௰. அவைகள் தளிர்க்கிறதை நீங்கள் காணும்பொழுது, வசந்தகாலஞ் சமீபமாயிற்றென்று அறிகிறீர்கள்.

௩௧. அந்தப்படியே நான் சொன்னவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்பொழுது, பராபரனுடைய ஆளுகை சமீபமாயிற்றென்று அறியக்கடவீர்கள்.

௩௨. அவையெல்லாஞ் சம்பவிக்கிறவரைக்கும் இந்தச்சந்ததி ஒழிந்துபோகாதென்று மெய்யாய் உங்களுக்குச்சொல்லுகிறேன்.

௩௩. * வானமும், பூமியும் ஒழிந்துபோம். என் வசனங்கள் ஒழிந்துபோகாது. * ௰௬: ௰௭. சங்கீ. ௱௨: ௨௬, ௨௭.

௩௪. அன்றியும், பூமியில் எங்குங்குடியிருக்கிற அனைவர்மேலும், அந்தநாள் * ஒரு வலையைப்போல வருவதால், * ௧ தெச. ௫: ௩.

௩௫. உங்கள் இருதயங்கள் * பெருந்தீனியினாலும், வெறியினாலும், பிழைப்பின் கவலையினாலும் பாரம் அடையாதபடிக்கும் அந்த நாள் உங்களுக்குச்சடுதியாய் வாராதபடிக்கும் எச்சரிக்கையாய் இருக்கக்கடவீர்கள். * உரோ. ௰௩: ௰௩, ௰௪. எபே. ௫: ௰௮.

௩௬. ஆகையால், இனிச்சம்பவிப்பவைகள் யாவுக்கும் நீங்கள் தப்பித்துக்கொண்டு, மனிதனுடைய குமாரனுக்குமுன்பாக நிற்கப்பாத்திரவான்களென்று எண்ணப்படும்படிக்கு, எக்காலமுஞ் செபம்பண்ணி விழித்திருக்கக்கடவீர்கள் என்று திருவுளம்பற்றினார்.

௩௭. அன்றியும், அவர் பகற்காலங்களிலே தேவாலயத்தில் உபதேசித்துக்கொண்டு, இராக்காலங்களில்வெளியேபோய் ஒலீவமலையென்னப்பட்ட மலையிலே தங்கி வந்தார்.

௩௮. அவருடைய உபதேசத்தைக்கேட்கும்படிக்குச்சனங்களெல்லாரும் அதிகாலையிலே தேவாலயத்தில் அவர் இடத்துக்கு வந்தார்கள்.

௨௨ அதிகாரம்.

[(௧) யூதர்கள் கிறிஸ்துவைக்கொலைசெய்யும்படி தேடினது. (௩) அவரைக்காட்டிக்கொடுக்கும்படி சாத்தான் யூதாவை ஏவினது. (௭) அப்போஸ்தர்கள் பஸ்காவை ஆயத்தம்பண்ணினது. (௰௯) கிறிஸ்துப்பரிசுத்த இராப்போசனத்தைக்கட்டளையிட்டு, (௨௧) தம்மைக்காட்டிக்கொடுப்பவனைக்குறிப்பாகச்சொல்லி, (௨௪) மற்ற அப்போஸ்தலர்கள் பெருமையற்றிருக்கப்போதித்தது. (௩௧) பேதுருவின் விசுவாசம் அவனைவிட்டு எடுபடாதேபோனாலும், (௩௪) அவன் தம்மை மூன்றுதரம் மறுதலிப்பானென்று முன் அறிவித்தது. (௩௯) அவர் மலையின்மேற் செபம்பண்ணி, இரத்த வேர்வைவிட்டு, (௪௭) முத்தியிடுதலினாலே காட்டிக்கொடுக்கப்பட்டு, (௫௰) மல்குவின் அறுப்புண்ட காதைச் சொஸ்தப்படுத்தி, (௫௪) பேதுருவினால் மூன்றுதரம் மறுதலிக்கவும், (௬௩) பரியாச தூஷணம்பண்ணவும்பட்டு, (௬௯) தம்மைப்பராபரனுடைய குமாரனென்று அறிக்கையிட்டது.]

* பஸ்கா என்னப்பட்ட புளியாத அப்பப்பண்டிகை சமீபமாயிற்று. * மத். ௨௬: ௨. மாற். ௰௪: ௧.

௨. அப்பொழுது பிரதான ஆசாரியரும், வேதபாரகருஞ்சனங்களுக்குப்பயப்பட்டபடியினாலே, அவரைக்கொலை செய்யும்படிக்கு (இரகசியமாய்) வகைதேடினார்கள்.

௩. அக்காலத்திலே பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத்தென்று பேர்கொண்ட யூதாவுக்குள்ளே சாத்தான் புகுந்தான்.

௪. ஆதலால் அந்த யூதாவென்பவன் பிரதான ஆசாரியரும், ஆலயத்தலைவருமானவர்கள் இடத்திற்போய், அவர்களுக்கு அவரைக்காட்டிக்கொடுக்கும் வகையைக்குறித்து, அவர்களுடனே யோசனை பண்ணிக்கொண்டான்.

௫. அவர்கள் சந்தோஷப்பட்டு அவனுக்குத்திரவியங்கொடுக்கத்தீர்மானித்தார்கள்.

௬. * அதற்கு அவன் பொருந்திச்சனக்கூட்டம் இல்லாதபொழுது, அவரை யவர்களுக்குக்காட்டிக்கொடுக்கும்படிக்குத்தகுதியான காலத்தைத்தேடினான். * மத். ௨௰௬: ௰௪. மாற். ௰௪: ௰௧.

௭. * பஸ்காவின் ஆட்டுக்குட்டியைப்பலியிடவேண்டிய புளியாத அப்பநாள்வந்தது. * மத். ௨௰௬: ௰௭. மாற். ௰௪: ௰௨.

௮. அப்பொழுது அவர் பேதுருவையும், யோவானையும் அழைத்து, நாம் பஸ்காவைப்புசிக்கும்படிக்கு நீங்கள் போய் நமக்காக அதை எத்தினம்பண்ணுங்கள் என்றார்.

௯. அதற்கு அவர்கள் நாங்கள் எங்கே அதை யெத்தினம்பண்ண விரும்புகிறீரென்றார்கள்.

௰. அவர் சொன்னது, நீங்கள் பட்டினத்துக்குட் பிரவேசிக்கும்பொழுது, ஒருவன் தண்ணீர்க்குடஞ்சுமந்துகொண்டு உங்களுக்கு எதிர்ப்படுவான். நீங்கள் அவனுக்குப் பின்சென்று அவன் போகும் வீட்டிலே போய்,

௰௧. அந்த வீட்டு எசமானை நோக்கி, நான் என் சீஷரோடுங்கூடப்பஸ்காவைப் புசிக்கத்தக்கதான இடம் எங்கே யென்று போதகர் உம்மிடத்திற் கேட்கச்சொன்னாரென்று சொல்லுங்கள்.

௰௨. அவன் கம்பளமுதலானவைகள் விரித்திருக்கிற விஸ்தாரமான மேல்வீட்டை யுங்களுக்குக்காண்பிப்பான். அங்கே எத்தினம் பண்ணுங்களென்று அனுப்பினார்.

௰௩. அவர்கள்போய், அவர் சொன்ன பிரகாரமாகக் * கண்டு, பஸ்காப்போசனத்தை யெத்தினம்பண்ணினார்கள். * ௰௯: ௩௨.

௰௪. தகுதியான நேரம் வந்தபொழுது, அவரும் அவருடனே பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியில் இருந்தார்கள்.

௰௫. அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, நான் பாடு படுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப்பஸ்காப்போசனம் பண்ண மிகவும் ஆசையாய் இருந்தேன்.

௰௬. என்னத்தினாலென்றால், பராபரனுடைய இராச்சியத்திலே அது நிறைவேறுமளவும் நான் பின்னும் இதிற் புசிப்பதில்லையென்று உங்களுக்குச்சொல்லுகிறேன் என்றுசொல்லி,

௰௭. பின்பு பாத்திரத்தை யெடுத்துக்கொண்டு தோத்திரஞ் செய்து,

௰௮. பராபரனுடைய ஆளுகை வருமளவும் நான் மறுபடியுந் திராட்ச இரசத்திலே பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச்சொல்லுகிறேன். ஆகையால் நீங்கள் இதை யெடுத்து உங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ளுங்கள் என்றார்.

௰௯. அல்லாமலும் அவர் * அப்பத்தை யெடுத்துக்கொண்டு தோத்திரம்பண்ணி அதைப்பிட்டு அவர்களுக்குக்கொடுத்து, இது உங்களுக்காகக்கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கின்றது. என்னை நினைக்கிறதற்காக இப்படிச்செய்யுங்களென்று சொல்லி, இராப்போசனம் பண்ணின பின்பு, * மத். ௨௰௬: ௨௰௬, ௨௰௮. மாற். ௰௪: ௨௰௨—௨௰௪. ௧ கொரி. ௰௧: ௨௰௩—௨௰௫.

௨௰. அந்தப்படியே பாத்திரத்தையுங் கொடுத்து, இந்தப்பாத்திரம் உங்களுக்காகச்சிந்தப்படுகிற என் இரத்தத்தினாலே புதிய உடம்படிக்கையாய் இருக்கிறதென்று சொல்லி,

௨௰௧. பின்பு இதோ, என்னைக்காட்டிக்கொடுக்கிறவனுடைய கை என்னுடனேகூடப் பந்தியில் இருக்கின்றது.

௨௰௨. தீர்மானத்தின்படியே மனிதனுடைய குமாரன் போகிறான், அது மெய்தான். ஆனாலும் ஐயோ, எந்த மனிதன் அவனைக் காட்டிக்கொடுக்கிறானோ அந்த மனிதனுக்கு வேதனை வரும் என்றார்.

௨௰௩. அப்பொழுது அவர்கள் நம்மில் யாவன் அப்படிச்செய்வானென்று தங்களுக்குள்ளே விசாரிக்கத்தொடங்கினார்கள்.

௨௰௪. அன்றியும் அவர்கள் * தங்களில் எவன் பெரியவனாயிருப்பானென்று தங்களுக்குள்ளே வாக்குவாதம்பண்ணிக்கொண்டு இருந்தபொழுது, * மாற். ௯: ௩௪.

௨௰௫. அவர் அவர்களுக்குச்சொன்னதாவது; புறத்தேசத்தாருடைய இராசாக்கள் அவர்களைப்பலவந்தமாய் ஆண்டுகொள்ளுகிறார்கள். அல்லாமலும், அவர்கள்மேல் அதிகாரஞ்செலுத்துகிறவர்கள் தருமதுரைகளென்று அழைக்கப்படுகிறார்கள்.

௨௰௬. * உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது. உங்களிற் பெரியவன் சிறியவனைப்போலவும், தலைவன் ஊழியக்காரனைப்போலவும் இருக்கக்கடவன். * ௧ பேது. ௫: ௩—௬.

௨௰௭. பந்தியில் இருக்கிறவன், ஊழியஞ்செய்கிறவன் இவ்விருவரில் எவன் பெரியவன்! பந்தியில் இருக்கிறவன் அல்லவா! ஆனாலும் * நான் உங்களுக்குள்ளே ஊழியஞ்செய்கிறவனைப்போல் இருக்கிறேன் * யோவா. ௰௩: ௰௪. பிலி. ௨: ௭—௮.

௨௰௮. மேலும் எனக்கு வந்த துன்பகாலங்களில் என்னுடனே யிருந்தவர்கள் நீங்களே.

௨௰௯. ஆகையால் என் பிதா எனக்கு ஓர் இராச்சியத்தை யேற்படுத்தியிருக்கிறபடியால்,

௩௰. நீங்கள் என் இராச்சியத்தில் என் பந்தியிலே போசனபானம்பண்ணி, இஸ்ரவே

வின் பன்னிரண்டு கோத்திரந்தாருக்கு நியாயந்தீர்ப்புக்கொடுக்கிறவர்களாய் * ஆசனங்களின்மேல் உளுக்காரும்படிக்கு நான் உங்களை யேற்படுத்துகிறேனென்றார். * மத். ௰௯: ௨௮.

௩௧. கர்த்தர் பின்னுஞ் சொன்னதாவது; சீமோனே, சீமோனே, கோதுமையைச்சுளகினாற் புடைக்கிறதுபோல உங்களைப்புடைக்கும்படிக்குச் * சாத்தான் உத்தரவு கேட்டான். * ௧ பேது. ௫: ௮

௩௨. நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன். அந்தப்படி நீ யினிமேல் மனந்திரும்பினபின் உன் சகோதரரை ஸ்திரப்படுத்துவாயாகவென்றார்.

௩௩. அதற்கு அவன் சொன்னது, ஆண்டவரே! உம்முடனேகூட நான் காவலிலும், சாவிலும் வர எத்தினமாய் இருக்கிறேன் என்றான்.

௩௪. அவர் சொன்னது, * பேதுருவே, இன்று சேவல் கூவுமுன்னே நீ யென்னை அறிந்திருக்கிறதை மூன்றுதரம் மறுதலிப்பாயென்று உனக்குச்சொல்லுகிறேன் என்றார். * யோவா. ௰௩: ௩௮.

௩௫. பின்னும் அவர் அவர்களுடனே சொன்னது, நான் உங்களைப் * பணப்பையும், சாமான்பையும், பாதரட்சைகளும் இல்லாமல் அனுப்பினபொழுது, ஏதாகிலும் உங்களுக்குக்குறைவாய் இருந்ததாவென்றார். ஒன்றுங் குறைவாய் இருக்கவில்லையென்றார்கள். * ௯: ௩. மத். ௰: ௯, ௰.

௩௬. அவர் சொன்னது, இப்பொழுது பணப்பையையும், சாமான்பையையும் உடையவன் அவைகளை யெடுத்துக்கொள்ளக்கடவன். அல்லாமலுங் கத்தியில்லாதவன் தன் வஸ்திரத்தை விற்று ஒன்றைக்கொள்ளக்கடவன்.

௩௭. என்னத்துக்கு என்றால், என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகள் முடிகிறபடியினாலே * அக்கிரமக்காரரோடே யெண்ணப்பட்டாரென்று எழுதியிருக்கிறது என்னிடத்தில் நிறைவேற வேண்டுமென்று உங்களுக்குச்சொல்லுகிறேன் என்றார். * ஏசா. ௫௩: ௰௨.

௩௮. அதற்கு அவர்கள் ஆண்டவரே! இதோ, இரண்டு கத்திகள் உண்டு என்றார்கள். (அவைகளே) போதுமென்று அவர்களுடனே சொன்னார்.

௩௯. பின்பு * அவர் புறப்பட்டு வழக்கத்தின்படியே ஒலிவமலைக்குப்போனார். அவருடைய சீஷரும் அவருக்குப்பின்சென்றார்கள். * மத். ௨௬: ௩௬. மாற். ௰௪: ௩௨. யோவா. ௰௮: ௧.

௪௰. அவ்விடத்திற் சேர்ந்தபொழுது, அவர் அவர்களைநோக்கி, நீங்கள் குற்றஞ்செய்வதற்கான காரணத்திற்பிரவேசியாதபடிக்குச் செபம்பண்ணுங்கள் என்றுசொல்லி,

௪௧. கல்லெறிதூரத்தில் அவர்களை விட்டுப்போய்,

௪௨. முழங்காற்படியிட்டுப்பிதாவே, உமக்குச்சித்தமானால் இந்தப்பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும். இல்லாவிட்டால் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே யாவதாகவென்று செபம்பண்ணினார்.

௪௩. அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன்தோன்றி அவரைப்பலப்படுத்தினான்.

௪௪. பின்னும் * அவர் கொடிய வேதனைப்பட்டு அதிக உக்கிரத்தோடே செபம்பண்ணினார். அப்பொழுது அவருடைய வேர்வை இரத்தத்துளிகளைப்போலாகித்தரையிலேவிழுந்தது. * யோவா. ௰௨: ௨௭.

௪௫. பின்பு அவர் செபம்பண்ணி முடித்தபொழுது, எழுந்திருந்து தம்முடைய சீஷரிடத்திற்போய் அவர்கள் துக்கத்தினாலே நித்திரை பண்ணக்கண்டு,

௪௬. என்னத்திற்காகத்தூங்குகிறீர்கள்? நீங்கள் குற்றஞ் செய்வதற்கான காரணத்திற் பிரவேசியாதபடிக்கு, எழுந்திருந்து செபம்பண்ணுங்களென்றார்.

௪௭. * அவர் அப்படிப்பேசுகையிற் சனங்கள் கூட்டமாய்ச்சேர்ந்தார்கள். அவர்களுக்கு முன்னாகப்பன்னிருவரில் ஒருவனான யூதாவென்பவன் நடந்துபோய் இயேசுவை முத்தஞ் செய்யும்படிக்கு அவரிடத்திற் சேர்ந்தான். * மத். ௨௬: ௪௭. மாற். ௰௪: ௪௩. யோவா. ௰௮: ௩.

௪௮. அப்பொழுது இயேசுவானவர் அவனை நோக்கி, யூதாவே! நீ மனிதனுடைய குமாரனை முத்தத்தினாலேயா காட்டிக்கொடுக்கிறாயென்றார்.

௪௯. அல்லாமலும், அவரைச்சுற்றி இருந்தவர்கள் சம்பவிப்பதை யறிந்து அவரை நோக்கி, ஆண்டவரே! கத்தியினாலே நாங்கள் வெட்டலாமாவென்று சொல்ல,

௫௰. (உடனே) அவர்களில் ஒருவன் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலது காதறவெட்டினான்.

௫௧. அப்பொழுது இயேசுவானவர் இம்மட்டில் நிறுத்துங்களென்று சொல்லி, அவனுடைய காதைத்தொட்டு அவனைக்குணமாக்கினார்.

௫௨. பின்பு இயேசுவானவர் தமக்கு விரோதமாய் வந்த பிரதான ஆசாரியரையும், தேவாலயத்தலைவரையும், மூப்பரையும் நோக்கி, ஒரு கள்ளனைப்பிடிக்கப்புறப்படுகிறதுபோல நீங்கள் கத்திகளோடும், தடிகளோடும் புறப்பட்டு வந்தீர்கள்.

௫௩. தினந்தோறும் நான் தேவாலயத்தில் உங்களுடனே இருக்கையில், நீங்கள் என்

மேற் கைகளைப்போடவில்லை. இதுவே உங்
களுக்கு ஏற்ற நேரமுமாய், இருளின் வல்ல
மையுமாய் இருக்கின்றதென்றார்.

௫௪. அப்பொழுது * அவர்கள் அவரைப்
பிடித்து, பிரதான ஆசாரியனுடைய மாளி
கைக்குக்கொண்டுபோனார்கள். பேதுருவுந்
தூரமாக அவருக்குப்பின் சென்றான். *
மத். ௨௬: ௫௭. மாற். ௰௪: ௫௩. யோவா.
௰௮: ௰௨.

௫௫. அல்லாமலும், அவர்கள் மாளிகை
யின் பிரகாரத்தின் நடுவிலே நெருப்பை
உண்டுபண்ணி அதைச்சுற்றி யுளுக்காந்த
பொழுது, * பேதுருவும் அவர்களுக்குள்
ளே உளுக்காந்தான். * மத். ௨௬: ௫௮.
மாற். ௰௪: ௫௪. யோவா. ௰௮: ௰௬—௨௭.

௫௬. அப்பொழுது ஒருவேலைக்காரி அவ
னை நெருப்பின் இடத்தில் இருக்கக்கண்டு,
அவனை யுற்றுப்பார்த்து இவனும் அவனோ
டிருந்தானென்றாள்.

௫௭. அதற்கு அவன் ஸ்திரீயே! அவனை
அறியேனென்று அவரை மறுதலித்தான்.

௫௮. சற்று நேரத்துக்குப்பின்பு வேறொரு
வன் அவனைக்கண்டு, நீயும் அவர்களில் ஒரு
வனென்றான். அதற்குப்பேதுரு மனிதனே!
நானல்லவென்றான்.

௫௯. ஏறக்குறைய ஒருமணி நேரத்துக்குப்
பின்பு வேறொருவன் அவனைப்பார்த்து மெய்
யாய் இவனும் அவனோடிருந்தான். இவன்
கலிலேயன் தானேயென்று நிச்சயத்தோ
டே சொன்னான்.

௬௰. அதற்குப்பேதுரு மனிதனே! நீ பே
சுகிறதை அறியேனென்றான். உடனே அ
வன் பேசுகையிற் சேவல் கூவிற்று.

௬௧. அப்பொழுது கர்த்தர் திரும்பிப்பே
துருவை நோக்கிப்பார்த்தார். உடனே
பேதுரு சேவல் கூவுமுன்னே நீ என்னை
மூன்றுதரம் மறுதலிப்பாயென்று தன்னோ
டே கர்த்தர் சொன்ன வசனத்தை நினைத்
துக்கொண்டு,

௬௨. வெளியேபோய் மிகுந்த மனத்துக்
கத்தோடே அழுதான்.

௬௩. * இயேசுவைப்பிடித்துக்கொண்ட
மனிதர் அவரை யசட்டைபண்ணி, *
ஏசா. ௫௰: ௬.

௬௪. அடித்து, அவருக்கு முக்காடிட்டு,
அவருடைய முகத்தில் அறைந்து உன்னை
யடித்தவன் யாவன்? அதைத்தீர்க்கதரிசன
மாய்ச்சொல்லென்று சொல்லி,

௬௫. மற்றும் அநேகவிதமாய் அவரைத்
தூஷணித்தார்கள்.

௬௬. உதயமானபொழுது சனத்தின் மூப்
பரும், பிரதான ஆசாரியரும், வேதபாரக
ருங் கூடிவந்து, தங்கள் ஆலோசனைச்சங்
கத்தில் அவரைக்கொண்டுவரும்படிசெய்து
அவரை நோக்கி,

௬௭. நீ கிறிஸ்துவானால் அதை எங்களுக்
குச்சொல்லென்றார்கள். அதற்கவர், நானுங்
களுக்குச்சொன்னாலும் என்னை நம்பமாட்
டீர்கள்.

௬௮. நான் உங்களிடத்தில் விசாரித்தா
லும் நீங்கள் எனக்கு மாறுத்தரவு சொல்ல
வும், என்னை விடுதலையாக்கவுமாட்டீர்கள்.

௬௯. இது முதல் மனிதனுடைய குமாரன்
சருவ வல்லமையுள்ள பராபரனுடைய வல
து பாரிசத்தில் உளுக்காருவானென்றார்.

௭௰. அதற்கவர்களெல்லாரும் அந்தப்படி
நீ பராபரனுடைய குமாரனோவென்றார்கள்.
அவர் சொன்னது, நீங்கள் சொல்லுகிறபடி
நானே யவரென்றார்.

௭௧. அப்பொழுது அவர்கள் சொன்னது,
இனி வேறுசாட்சி நமக்கு வேண்டுவதென்
ன? நாம்தானே இவனுடைய வாயினாலே
கேட்டோமே யென்றார்கள்.

௨௩ அதிகாரம்.

[(௧) இயேசு பிலாத்துவுக்கு முன்பாகக்குற்
றஞ் சாற்றப்பட்டு, ஏரோதேயின் இடத்
துக்கு அனுப்பப்பட்டது. (௮) ஏரோதே
அவரைப்பரியாசம் பண்ணினது. (௰௨)
விரோதிகளாய் இருந்த ஏரோதேயும், பி
லாத்துஞ் சிநேகிதர்களானது. (௰௩) பர
பாசென்பவன் சனங்களுடைய கேட்டுக்
கொள்ளுதலினாலே பிலாத்துவினால் விடுதலை
யாக்கப்பட, இயேசுவானவர் சிலுவையில்
அறையும்படி ஒப்புவிக்கப்பட்டது. (௨௭)
தமக்காகப்புலம்பின ஸ்திரீகளுக்கு எருசலே
மின் அழிவைச்சொல்லி, (௩௪) தம்முடைய
சத்துருக்களுக்காக வேண்டிக்கொண்டது.
(௩௯) இரண்டு குற்றவாளிகளும் அவரோட
னே கூடச்சிலுவையில் அறையப்பட்டது.
(௪௬) அவர் மரித்து, (௫௰) அடக்கம்
பண்ணப்பட்டது.]

பின்பு அவர்களுடைய கூட்டத்தா
ரெல்லாரும் எழுந்திருந்து அவ
ரைப்பிலாத்தென்னுந் துரையின் இடத்துக்
குக்கொண்டுபோய்,

௨. இவன் தன்னை இராசாவாகிய கிறிஸ்
தென்றும், சனங்கள் இராயனுக்கு வரிகொ
டுக்கவேண்டுவதில்லை யென்றுஞ் சொல்லி,
அவர்களைக்கலகப்படுத்தக்கண்டோமென்று
அவர்மேற் குற்றஞ் சாற்றத்தொடங்கினார்
கள்.

௩. * அப்பொழுது பிலாத்தென்பவன் அ
வரை நோக்கி, நீ யூதருடைய இராசாவா
வென்றுகேட்டான்? அதற்கு அவர் நீர்
சொல்லுகிறபடியே இருக்கின்றதென்றார்.
* மத். ௨௭: ௰௧—௨௬. மாற். ௰௫: ௨—௰.
யோவா. ௰௮: ௨௬—௩௩. ௰௯: ௧—௰௪.

௪. பின்பு பிலாத்தென்பவன் பிரதான ஆ
சாரியரையும், சனக்கூட்டத்தையும் நோக்கி நாம்

லி, இந்த மனிதன் இடத்திலே ஒரு குற்றத்தையுங் காணேனென்றான்.

௫. அதற்கு அவர்கள் சொன்னது, இவன் கலிலேயா நாட்டைத்தொடங்கி, இவ்விடம்வரைக்கும் யூதேயாநாட்டிலெங்கும் உபதேசம்பண்ணி, சனங்களைக்கலகப்படுத்துகிறானென்று அதிக உக்கிரத்தோடே சொன்னார்கள்.

௬. கலிலேயா நாடென்பதைப்பிலாத்துக் கேள்விப்பட்டபொழுது இம்மனிதன் கலிலேயனோவென்று விசாரித்த பின்பு,

௭. * அவர் ஏரோதே இராசாவின் அதிகாரத்துக்குள்ளானவரென்றறிந்து, அந்நாள்களில் எருசலேமிலே வந்திருந்த ஏரோதின் இடத்திற்கு அவரை யனுப்பினான். * ௩: ௧.

௮. ஏரோதென்பவன் இயேசுவைக்குறித்து, மிகுந்த காரியங்களைக்கேள்விப்பட்டிருந்தபடியினாலே * அநேக நாளாய் அவரைக்காண ஆசையாய் இருந்தான். ஆதலால், அவன் அவரைக்கண்டபொழுது மிகவுஞ் சந்தோஷப்பட்டு, அவர் செய்யும் அற்புதத்தைப்பார்க்கலாமென்றெண்ணி; * ௯: ௯.

௯. அநேகங் காரியங்களைக்குறித்து அவரிடத்தில் வினாவினான். அவர் அவனுக்கு மறுமொழியொன்றுஞ் சொல்லவில்லை.

௰. பிரதான ஆசாரியரும், வேதபாரகரும் வந்து நின்று உக்கிரயாய் அவர்மேற் குற்றஞ் சாற்றினார்கள்.

௰௧. அப்பொழுது ஏரோதென்பவனும், அவனுடைய போர்ச்சேவகரும் அவரையசட்டைபண்ணி, பிரகாசமுள்ள வஸ்திரத்தை அவருக்கு உடுத்தி, இப்படிப்பரியாசம்பண்ணின பின்பு,

௰௨. அவரைத்திரும்பப்பிலாத்துவின் இடத்துக்கனுப்பினான். அந்தநாளிலே முன்னே ஒருவருக்கொருவர் பகைஞராய் இருந்த பிலாத்தென்பவனும், ஏரோதென்பவனுஞ் சிநேகிதரானார்கள்.

௰௩. அப்பொழுது பிலாத்தென்பவன் பிரதான ஆசாரியரையும், தலைவரையும், சனங்களையுங் கூடிவரச்செய்து அவர்களை நோக்கி,

௰௪. நீங்கள் இந்த மனிதன் சனங்களைக் கலகப்படுத்துகிறவனென்று சொல்லி, இவனை என்னிடத்திற் கொண்டுவந்தீர்கள்.— அந்தப்படி நான் உங்களுக்கு முன்பாக இவனைச்சோதித்தபொழுது, நீங்கள் இவன்மேற் சாற்றின குற்றங்களில் ஒன்றையும் நான் இவன் இடத்திலே காணவில்லை.

௰௫. பின்பு உங்களை ஏரோதின் இடத்துக்கு அனுப்பினேன். அவரும் இவனிற் குற்றங் காணவில்லை.

௰௬. ஆதலால், இவன் மரணத்துக்கேதுவானதொன்றுஞ் செய்யாதவனாய் இருக்கிறபடியால், நான் இவனைத்தண்டித்து விடுதலையாக்குவேனென்றான்.

௰௭. பண்டிகைதோறும் அவன் அவர்களுக்காக ஒருவனை விடுதலையாக்கவேண்டியிருந்தபடியால் அப்படிச்சொன்னான்.

௰௮. திரளான சனங்களெல்லாரும அதைக்கேட்டு, இவனை ஆக்கினைக்குட்படுத்திப்பரபாசை எங்களுக்காக விடுதலையாக்கவேண்டுமென்று கூக்குரல் இட்டார்கள்.

௰௯. அந்தப்பரபாசென்பவன் நகரத்திலே நடந்த ஒருகலகத்துக்காகவும், கொலைபாதகத்துக்காகவுங் காவலில் வைக்கப்பட்டிருந்தான்.

௨௰. அப்பொழுது பிலாத்தானவன் இயேசுவை விடுதலையாக்க மனதாய் மறுபடியும் அவர்களுக்குச்சொன்னான்.

௨௧. அதற்கவர்கள், இவனைச்சிலுவைமரத்தில் அறையவேண்டும். இவனைச்சிலுவைமரத்தில் அறையவேண்டுமென்று கூக்குரல் இட்டார்கள்.

௨௨. அவன் மூன்றாந்தரஞ் சொன்னது, இவன் எந்தப்பொல்லாங்கைச்செய்தான். இவன் இடத்திலே மரணத்துக்கேதுவான குற்றம் ஒன்றையுங் காணேனே. ஆகையால், நான் இவனைத்தண்டித்து விடுதலைபண்ணுவேனென்றான்.

௨௩. அப்படி இருந்தும் அவரைச்சிலுவைமரத்தில் அறையும்படிக்கு அவர்கள் மிகுந்த சத்தத்துடனே கேட்டுக்கொண்டார்கள். அவர்களும் பிரதான ஆசாரியரும் இட்ட கூக்குரல் * அதிகப்பட்டது. * யோவா. ௰௯: ௰௨.

௨௪. அப்பொழுது பிலாத்தென்பவன் அவர்களுடைய மனுவின்படி யாகும்படிக்குத் தீர்மானம் பண்ணி,

௨௫. கலகத்தின் நிமித்தமும் கொலைபாதகத்தின் நிமித்தமுங் காவலில் வைக்கப்பட்டிருந்தவனை யவர்களுடைய விண்ணப்பத்தின்படி அவர்களுக்காக விடுதலையாக்கி, இயேசுவானவரையே அவர்களுடைய இஷ்டத்துக்கு ஒப்புக்கொடுத்தான்.

௨௬. அந்தப்படி அவர்கள் அவரைக் கொண்டுபோகிறபொழுது வயலில் இருந்து வருகிற * சிரேனே யூரானாகிய சீமோனென்பவனைப்பிடித்து, சிலுவை மரத்தை இயேசுவின் பின் சுமந்துபோகும்படி அவன்மேலே வைத்தார்கள். * மத். ௨௭: ௩௨. மாற். ௰௫: ௨௧.

௨௭. திரளான கூட்டமாகிய சனங்களும், அவருக்காகத்துக்கமாய்ப்புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவருக்குப்பின்சென்றார்கள்.

௨௮. அப்பொழுது இயேசுவானவர் அவர்கள் முகமாய்த்திரும்பிச்சொன்னது, எருசலேமின் ஸ்திரீகளே! நீங்கள் எனக்காக

அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுது கொள்ளுங்கள்.

௨௯. என்னத்தினாலெனில், மலடிகளும், பிள்ளை பெறாத ஸ்திரீகளும், பால்கொடாத ஸ்திரீகளும் பாக்கியம் உள்ளவர்களென்று சொல்லப்படும் நாள்கள் வரும்.

௩௰. அப்பொழுது இவர்கள் * மலைகளை நோக்கி, எங்கள் மேல் விழுங்களென்றும், குன்றுகளை நோக்கி, எங்களை மூடிக்கொள்ளுங்களென்றுஞ் சொல்லுவார்கள். * ஓசெ. ௰: ௮.

௩௧. பசுமையான மரத்துக்கு இப்படிச் செய்தாற் பட்டுப்போன மரத்துக்கு மிகவும் அதிகமாய் இப்படிச்செய்யப்படும் அல்லவாவென்றார்.

௩௨. * குற்றவாளிகளாகிய வேறிரண்டு பேரும் அவரோடேகூட மரணம் அடையத்தக்கதாகக் கொண்டு போகப்பட்டார்கள். * ஏசா. ௫௩: ௰௨.

௩௩. தலையோட்டிடமென்னப்பட்ட இடத்திலே அவர்கள் சேர்ந்தபொழுது அங்கே அவரையும், அவருடைய வலது பக்கத்திலே ஒரு குற்றவாளியையும், * அவருடைய இடது பக்கத்திலே மற்றக்குற்றவாளியையுஞ் சிலுவை மரங்களில் அறைந்தார்கள். * மத். ௨௭: ௩௫—௪௪. மாற். ௰௫: ௨௪—௩௭.

௩௪. அப்பொழுது இயேசுவானவர் * பிதாவே! இவர்கள் தங்கள் செய்கையின் தன்மையை அறியாதிருக்கிறார்கள். ஆதலால், இவர்களுக்கு மன்னித்தருளுமென்றார். † அவருடைய வஸ்திரங்களையவர்கள் பங்கிட்டு, (அவைகளைக்குறித்துச்) சீட்டுப்போட்டார்கள். * ஏசா. ௫௩: ௰௨. † சங். ௨௨: ௰௮.

௩௫. சனங்கள் நின்று பார்த்துக்கொண்டார்கள். அவர்களுடனே கூடத்தலைவரும் அவரை இகழ்ந்து, இவன் மற்றவர்களை இரட்சித்தான். இவன் பராபரனாலே தெரிந்துகொள்ளப்பட்ட கிறிஸ்துவானால், தன்னைத் தானே இரட்சிக்கலாமே என்றார்கள்.

௩௬. போர்ச்சேவகரும் அவரை யசட்டைபண்ணி அவர் இடத்திற் சேர்ந்து, அவருக்குக்காடியைக்காண்பித்து,

௩௭. நீ யூதரின் இராசாவானால், உன்னை இரட்சித்துக்கொள்ளென்றார்கள்.

௩௮. அவருக்கு மேலாக இவன் யூதருடைய இராசாவென்று கிரேக்கை, லத்தீன், எபிரேயு என்னும் பாஷைகளால் எழுதப்பட்டிருந்தது.

௩௯. அல்லாமலுந் தூக்கிப்போடப்பட்ட குற்றவாளிகளில் ஒருவன் அவரைத்தூஷணித்து, நீ கிறிஸ்துவானால் உன்னையும், எங்களையும் இரட்சித்துக்கொள்ளென்றான்.

௪௰. அப்பொழுது மற்றவன் அவனுடனே சொன்னது, இந்த ஆக்கினைக்குள்ளாய் இருக்கிற நீயும் பராபரனுக்குப்பயப்படாமவா இருக்கிறாய். நாம் நம்முடைய நடக்கைகளுக்குத்தகுதியாக இந்த ஆக்கினையை நியாயமாய் அடைகிறோம்.

௪௧. இவர் தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையென்று அவனைக்கடிந்துகொண்டு,

௪௨. பின்பு, இயேசுவுடனே சொன்னது, ஆண்டவரே! நீர் உம்முடைய இராச்சியத்திற் சேரும்பொழுது அடியேனை நினைத்தருளுமென்றான்.

௪௩. அவனுடனே இயேசுவானவர் சொன்னது, இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசில் இருப்பாயென்று மெய்யாய் உனக்குச்சொல்லுகிறேனென்றார்.

௪௪. பின்பு ஏறக்குறைய ஆறுமணி நேரமாயிற்று. (அது முதல்) ஒன்பதாமணி நேரம் வரைக்கும் அந்தத்தேசத்தில் எங்கும் அந்தகாரம் உண்டாகச்சூரியன் இருள் அடைந்தது.

௪௫. அல்லாமலுந் தேவாலயத்தில் உள்ள திரைச்சீலை நடுவிலே கிழிந்து போயிற்று.

௪௬. அல்லாமலும் இயேசுவானவர் பிதாவே! உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புக்கொடுக்கிறேனென்று, * மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு, அதின் பின்பு சீவனை விட்டார். * மத். ௨௭: ௫௰. மாற். ௰௫: ௩௭. யோவா. ௰௯: ௩௰.

௪௭. அப்படி, சம்பவித்தவைகளைப்படைத்தலைவன் கண்டு, மெய்யாய் இந்த மனிதன் நீதிமானாய் இருந்தானென்று பராபரனைத் துதிசெய்தான்.

௪௮. அல்லாமலும், அந்தச்சங்கதியைப் பார்க்கக்கூடி வந்திருந்த சனங்களெல்லாருஞ் சம்பவித்தவைகளைப்பார்த்தபொழுது, தங்கள் மார்புகளில் அடித்துக்கொண்டு திரும்பினார்கள்.

௪௯. அன்றியும், அவருக்கு அறிமுகமானவர்களெல்லாரும், கலிலேயாவில் இருந்து, அவரைப்பின்சென்று வந்த ஸ்திரீகளுந் தூரத்திலே நின்று அவைகளைப்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

௫௰. பின்பு யூதருடைய பட்டிணமாகிய அரிமத்தியா ஊரானுமாய், உத்தமமும், நீதியும் உள்ளவனுமாய்ப்பராபரனுடைய ஆளுகை வரக்காத்திருந்தவனுமாய்,

௫௧. யூதர்களுடைய ஆலோசனைக்கும், செய்கைக்குஞ் சம்மதியாத ஆலோசனைக்காரனுமாய் இருந்த யோசேப்பென்பவன் பிலாத்துவின் இடத்திற்போய்,

௫௨. இயேசுவின் சரீரத்தைக்கேட்டு (உத்தரவு பெற்ற பின்பு,)

௫௩. அதை இறக்கி, மெல்லிய புடவையிலே சுற்றி, கல்மலையில் வெட்டப்பட்டதுமாய், ஒருக்காலும் ஒருவனையும் வைக்கப்படாததுமாய் இருந்த ஒரு கல்லறையிலே வைத்தான்.

௫௪. அந்த நாள் ஆயத்த நாளாய் இருந்தது. ஓய்வுநாளும் ஆரம்பமாயிற்று.

௫௫. கலிலேயாவில் இருந்து அவருடனே கூட வந்திருந்த ஸ்திரீகள் அவனுக்குப்பின் சென்று, கல்லறையையும், அவருடைய சரீரம் வைக்கப்பட்ட விதத்தையும் பார்த்து,

௫௬. பின்பு திரும்பிப்போய், சுகந்தவருக்கங்களையும், பரிமள தயிலங்களையும் எத்தினம்பண்ணி, கற்பனைப்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்.

௨௪ அதிகாரம்.

[(௧) கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இரண்டு தூதர்களாலே கல்லறையின் இடத்தில் வந்திருந்த ஸ்திரீகளுக்கு அறிவிக்கப்பட்டது, (௬) இந்தச்செய்தியை இவர்கள் மற்றவர்களுக்கு அறிவித்தது. (௰௩) கிறிஸ்து எம்மாவென்னும் கிராமத்துக்குப்போகிற இரண்டு சீஷர்களுக்குத்தரிசனையாகி, (௩௬) பின்பு அப்போஸ்தலர்கள் எல்லாருக்குங் காணப்பட்டு, அவர்களுடைய அவிசுவாசத்தைக்கடிந்துகொண்டு, (௪௭) அவர்களுக்கு ஒரு கட்டளைகொடுத்து, (௪௯) பரிசுத்த ஆவியை அனுப்புவோமென்று வாக்குத்தத்தம் பண்ணி, (௫௧) பின்பு பரமண்டலத்துக்கு ஏறினது.]

* வாரத்தின் முதல் நாள் அதிகாலையிலே அவர்கள் தாங்கள் எத்தினம் பண்ணின சுகந்த வருக்கங்களை யெடுத்துக்கொண்டு, வேறு சில ஸ்திரீகளுங்கூடக் கல்லறையின் இடத்திற் சென்று, * மத். ௨௮: ௧—௰. மாற். ௰௬: ௧—௰௧. யோவா. ௨௰: ௧—௰௮.

௨. அதின்மேல் இருந்த கல் தள்ளப்பட்டிருக்கிறதைக்கண்டு,

௩. உட்பிரவேசித்து, கர்த்தராகிய இயேசுவின் சரீரத்தைக்காணாமல்,

௪. அதைக்குறித்து மிகுந்த கலக்கம் அடைந்துகொண்டிருக்கையில்,

௫. பிரகாசமான வஸ்திரங்களையுடைய இரண்டுபேர் அவர்கள் அருகே நின்றார்கள்.

௬. அப்பொழுது அந்த ஸ்திரீகள் பயந்து, தரையைநோக்கி, குனிந்து நிற்கையில் அவ்விரண்டுபேரும் அவர்களைநோக்கி, உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோர் இடத்தில் என்னத்தினாலே தேடுகிறீர்கள். அவர் இங்கே இல்லை. எழுந்துபோனார்.

௭. முன்னே அவர் கலிலேயா நாட்டில் இருந்த காலத்திலே * மனிதனுடைய குமாரன் பாவிகளான மனிதர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப்படவும், மூன்றாம்நாளிலே திரும்ப எழுந்திருக்கவும் வேண்டுமென்று உங்களுடனே சொன்னதை நினைத்துக்கொள்ளுங்களென்றார்கள். * ௯: ௨௨.

௮. அப்பொழுது அவர்கள் அவருடைய திருவசனங்களை நினைத்து,

௯. கல்லறையைவிட்டு, திரும்பி அந்தச் சங்கதியைப்பதினொருவருக்கும், மற்றெல்லாருக்கும் அறிவித்தார்கள்.

௰. அதை அப்போஸ்தலருடனே சொன்னவர்கள் * மகுதலா ஊராளாகிய மரியாளும், யோவன்னாளும், யாக்கோபின் தாய் மரியாளும், இவர்களுடனே இருந்த மற்ற ஸ்திரீகளுமே. * ௮: ௨, ௩.

௰௧. அவர்கள் சொன்ன வசனங்களை அப்போஸ்தலர்கள் ஒரு கட்டுக்கதையைப்போல எண்ணி, அவர்களுடைய சொல்லை நம்பவில்லை.

௰௨. ஆனாலும் பேதுரு எழுந்து, கல்லறையின் இடத்துக்கோடி அதற்குள்ளே பார்க்கக்குனிந்து, சேலைகளைத்தனியே வைத்திருக்கக்கண்டு, சம்பவித்திருக்கிறதைக்குறித்துத் தன்னில் ஆச்சரியப்பட்டுக்கொண்டு போனான்.

௰௩. அன்றியும் அன்றைத்தினமே அவர்களில் * இரண்டுபேர் எருசலேம் நகரத்துக்கு அறுபதுஸ்தாதி * வழிதூரமான எம்மாவு என்னும் ஊருக்குப்போனார்கள். * மாற். ௰௬: ௰௨, ௰௩.

௰௪. (போகையில்) அவர்கள் சம்பவித்திருந்த இக்காரியங்கள் யாவையுங்குறித்து ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்.

௰௫. அப்படி யவர்கள் பேசி விசாரித்துக்கொள்ளுகிறபொழுது, இயேசுவானவர் தாமுஞ் சமீபமாகி அவர்களுடனேகூட நடந்தார்.

௰௬. அப்படியிருந்தும், அவரை யறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தன.

௰௭. அப்பொழுது அவர் அவர்களைநோக்கி, நீங்கள் துக்கம் உள்ளவர்களாய் வழிநடந்து ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளுகிற காரியங்கள் என்னவென்றார்.

௰௮. அதற்கு அவர்களில் ஒருவனாகிய கிலேயாப்பா என்பவன் சொன்னது, நீ மாத்திரமோ எருசலேமில் இந்நாள்களிற் சம்பவித்தவைகளை யறியாத அந்நியனாய் இருக்கிறாயென்றான்.

௰௯. அவர் எவையென்றார். அதற்கு அவர்கள் சொன்னது, நாசரேத் ஊரானாகிய இயேசுவைக்குறித்தவைகளே. அவர் பராபரனுக்கும், சகல சனங்களுக்கு முன்பாகச்செய்கையிலும், வசனத்திலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார்.

௨௰. அப்படி யிருந்தும் நம்முடைய பிர

* அறுபதுஸ்தாதி என்பது ஏறக்குறைய ஐந்து நாழிகை வழியாய் இருக்கும்.

தான ஆசாரியரும், தலைவரும் அவரை மர
ண ஆக்கினைக்குட்படுத்தி, சிலுவைமரத்
தில் அறைந்தார்கள்.
உக. * இஸ்ரவேலரை மீட்பவர் அவரே
யென்று நாங்கள் நம்பினேம். அவைகள்
சம்பவித்து இன்று மூன்றுநாளாகிறதே.
* அப்போ. க: கூ.
உஉ. எங்களிற் சில ஸ்திரீகள் அதிகாலையி
லே கல்லறையினிடத்திற்போய் அவருடை
ய சரீரத்தைக்காணுமல் திரும்பி வந்து,
உங. அவர் உயிரோடிருக்கிருர் என்று
சொன்ன தேவ தூதரைத்தரிசித்தோமென்
று சொல்லி, எங்களைப்பிரமிக்கப்பண்ணி
ஞர்கள்.
உச. அப்பொழுது எங்களிற் சிலர் கல்ல
றையினிடத்திற்போய், ஸ்திரீகள் சொன்
னபடியே கண்டார்கள். அவரைக்காண
இல்லையென்ருர்கள்.
உரு. அப்பொழுது அவர் அவர்களுடனே
சொன்னது, தீர்க்கதரிசிகள் சொன்ன யா
வையும் விசுவாசிக்கிறதற்குப்புத்தி யில்லா
மல் மந்த இருதயம் உள்ளவர்களே,
உசா. கிறிஸ்துவானவர் பாடுபடவும், தம
து மகிமைக்குட்பிரவேசிக்கவும் வேண்டிய
தாயிருந்ததில்லையாவென்று சொல்லி,
உஎ. மோசேயையும், சகல தீர்க்கதரிசிக
ளையுந்தொடங்கி, வேதவாக்கியங்கள் எல்
லாவற்றிலும் தம்மைக்குறித்துச்சொல்லியி
ருக்கிறவைகளை அவர்களுக்கு விவரமாய்க்
காண்பித்தார்.
உஅ. அத்தருணத்திலே தாங்கள் போகிற
ஊருக்குச்சமீபமானுர்கள். அப்பொழுது
அவர் அப்புறம்போக மனதைக்காண்பித்
தார்.
உகூ. அவர்கள் சொன்னது, சாயந்தரமா
யிற்றே. பொழுதும் போகிறதே. ஆகை
யால், நீர் எங்களிடத்திலே தங்கவேண்டு
மென்று மிகவும் வேண்டிக்கொண்டார்
கள். அதன்பின்பு அவர் அவர்களிடத்திலே
தங்கும்படி பிரவேசித்தார்.
ஙய. அப்படி யவர்களுடனே பந்தியிருக்
கையில், அவர் அப்பத்தை யெடுத்து ஆசீர்
வாதஞ்சொல்லி, அதைப்பிட்டு அவர்களுக்
குக்கொடுத்தார்.
ஙக. அப்பொழுது அவர்களுடைய கண்
கள் திறக்கப்பட அவரை யறிந்தார்கள்.
ஙஉ. உடனே அவர் அவர்களுக்கு விலகி
ஞர். அப்பொழுது, அவர்கள் ஒருவரை
யொருவர்நோக்கி, வழியிலே அவர் நம்மு
டனே பேசி,
ஙங. வேதவாக்கியங்களை நமக்கு விளக்க
மாய்க்காண்பித்தபொழுது, நமக்குள்ள இ
ருதயம் அன்பாய்க்கொழுந்துவிட்டு வளர
வில்லையாவென்று சொல்லி, அந்நேரமே
யெழுந்து, எருசலேமுக்குத்திரும்பிப்
போய்ப்பதினொருவரும், அவர்களோடிருந்
தவர்களுங் கூடியிருக்கக்கண்டு,
ஙச. கர்த்தர் மெய்யாய் எழுந்திருந்து,
* சீமோனுக்குத்தரிசனையாஞரென்று அ
வர்கள்சொல்லக்கேட்டு, * க கொரி. ௰ரு:ரு.
ஙரு. பின்பு வழியிலே நடந்தவைகளையும்,
அவர் அப்பத்தைப்பிட்கையில் தாங்கள் அ
வரை யறிந்துகொண்டதையும் விவரித்துச்
சொல்ஞர்கள்.
ஙசா. அப்படி அவர்கள் பேசிக்கொள்ளு
கையில் * இயேசுவானவர் தாமே யவர்க
ளுக்குள்ளே நின்று உங்களுக்குச்சமாதான
சவுக்கியம் உண்டாவதாகவென்று அவர்க
டனே சொன்ஞர். * மாற். யசா: யச.
யோவா. உய: யகூ.
ஙஎ. அவர்கள் அவரை ஒரு ஆவியென்
றெண்ணிக்கலக்கமும், பயமும் அடைந்
தார்கள்.
ஙஅ. அப்பொழுது அவர் அவர்களைநோக்
கி, நீங்கள் என்னத்திற்தாகக்கலங்குகிறீர்
கள்? என்னத்திற்காக உங்கள் இருதயங்க
ளிற் சந்தேகங்கள் எழும்புகின்றன?
ஙகூ. என் கைகளையும், கால்களையும் பா
ருங்கள். நான்தான் இருக்கிறேன். என்னைத்
தொட்டுப்பாருங்கள். நீங்கள் காண்கிறப
டி எனக்கு மாம்சமும், எலும்புகளும் உண்
டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கும் இல்லை
யேயென்று சொல்லி,
சய. கைகளையும், கால்களையும் அவர்களுக்
குக்காண்பித்தார்.
சக. அப்படியிருந்துஞ் சந்தோஷத்தின
லே அவர்கள் பின்னும் விசுவாசியாமற் பிர
மிப்பாயிருக்கிறபொழுது போசனத்துக்கு
ஏதாகிலும் இங்கே யுண்டாவென்ருர்.
சஉ. அப்பொழுது அவர்கள் பொரித்த
மீன் கண்டத்தையும், தேன்கூட்டுத்துணிக்
கையையும் அவருக்குக்கொடுத்தார்கள்.
சங. அவைகளை யவர் எடுத்து அவர்களுக்
குமுன்பாகப்புசித்து,
சச. பின்பு அவர்களுடனே சொன்னதாவ
து; மோசேயின் பிரமாணப்புத்தகத்திலே
யும், தீர்க்கதரிசனப்புத்தகங்களிலேயும்,
சங்கீதப்புத்தகங்களிலேயும் என்னைக்குறித்
து எழுதியிருக்கிறயாவும் நிறைவேற வேண்
டுமென்று நான் உங்களோடே யிருந்தகா
லத்திலே உங்களுடனே சொல்லிக்கொண்
ட சங்கதிகள் இவைகளேயென்றுசொல்லி,
சரு. பின்பு வேதவாக்கியங்களை யவர்கள்
அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய ம
னதுக்குப்புத்திகொடுத்து அவர்களுடனே
சொன்னதாவது;
சசா. இவ்விதமாய் எழுதியிருக்கின்றது.
அல்லாமலும் அந்தப்படியே கிறிஸ்துப்
பாடுபடவும், மூன்றும்நாளிலே மரித்தோரி
லிருந்து எழுந்திருக்கவும்,

சஎ. எருசலேந்தொடங்கிச்சகல தேசத்
தாருக்கும் அவருடைய நாமத்தினாலே * ம
னந்திரும்புதலையும், பாவமன்னிப்பையும்
பிரசங்கிக்கவேண்டியதாயிருந்தது. * அப்.
ரு: ௩க.

சஅ. நீங்களே அவைகளுக்குச்சாட்சிகளா
யிருக்கிறீர்கள்.

சகூ. பின்பு நான் * என்பிதா வாக்குத்தத்
தம் பண்ணினதை உங்களுக்கு அனுப்பு
வேன். நீங்கள் உன்னதத்திலிருந்து வரும்
பலனைப்பெற்றுக்கொள்ளுகிறவரைக்கும் எ
ருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்.
* யோவா. யச: உகூ. அப். க: ச.

ருய. பின்பு அவர் பெத்தானியூர் வரைக்
கும் அவர்களை அழைத்துக்கொண்டுபோய்
த்தம்முடைய கைகளை யுயர்த்தி, அவர்களை
ஆசீர்வதித்தார்.

ருக. அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்
அவர்களை விட்டுப்பிரிந்து, * பரமண்டலத்
திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். * மாற்.
யகூ: யகூ, உய. அப் க: ச—கூ.

ருஉ. அப்பொழுது அவர்கள் அவரைத்
தொழுதுகொண்டு, மிகுந்த சந்தோஷத்
தோடே எருசலேம் நகரத்துக்குத்திரும்பி
ருங. இடைவிடாமல் தேவாலயத்திலே
பராபரனைத்துதித்து வாழ்த்திக்கொண்டி
ருந்தார்கள். ஆமன்.

யோவான் என்பவர் எழுதின சுவிசேஷம்.

JOHN.

க அதிகாரம்.

[(க) இயேசுக்கிறிஸ்துவினுடைய தெய்வீ
கத்தையும், மானுஷிகத்தையும், உத்தியோ
கத்தையுங் காட்டியது. (யரு) அவரைக்கு
றித்து யோவான் கொடுத்த சாட்சியைச்
சொல்லியது. (௩கூ) அந்திரேயா, பேதுரு
முதலான சீஷர்கள் அழைக்கப்பட்டது.]

ஆதியிலே * வார்த்தை யிருந்தது.
அவ்வார்த்தை பராபரனிடத்தில்
இருந்தது. அல்லாமலும் அவ்வார்த்தை
யே † பராபரன். * க யோவா. க: க.
ரு: எ. அறி. யகூ: ய௩. † க யோவா. ரு: உய.
உ அது ஆதியிலே * பராபரனிடத்தில்
இருந்தது. * வாக். அ: உஉ—௩ய.
௩. சகலமும் * அதினாலே யுண்டாயின.
அதுவில்லாமல் ஒரு கிருட்டியும் உண்டாக
வில்லை. அதிலே சீவன் உண்டாயிருந்தது.
* சங். ௩௩: கூ. கொலோ. க: யகூ, யஎ.
ச. அந்தச் * சீவன் மனிதருடைய ஒளியா
யிருந்தது. * ரு: உகூ.
ரு. அந்த * ஒளி இருளிலே பிரகாசமாயிற்
று. இருளானது அதைப்பற்றிக்கொள்ள
வில்லை. * அ: யஉ. கூ: ரு. யஉ: சகூ.
கூ. * யோவான் என்னும் ஒரு மனிதன்
பராபரனால் அனுப்பப்பட்டு. * மத். ௩: க.
எ. தன்னாலே எல்லாரும் விசுவாசிக்கும்ப
டிக்கு அந்த ஒளியைக்குறித்துச்சாட்சி
கொடுக்க வந்தான்.
அ. அவன் அந்த ஒளியல்ல. அந்த ஒளி
யைக்குறித்துச்சாட்சி கொடுக்கவே வந்
தான்.
கூ. மெய்யான ஒளியானவர் உலகத்திலே
தோன்றுகிற மனிதர் யாவரையும் பிரகா
சிப்பிக்கிறார்.
ய. அவர் உலகத்தில் இருந்தார். அல்லாம
லும், உலகம் அவராலே* உண்டாயிற்று. உ
லகம் அவரை அறியவில்லை. * எபி. க: உ.
யக. அவர் தமது சொந்தத்திற் சேர்ந்
தார். அவருக்குச்சொந்தமானவர்கள் அ
வரை ஏற்றுக்கொள்ளவில்லை.
யஉ. அவருடைய நாமத்தின்மேல் விசுவா
சமாய், அவரை யேற்றுக்கொண்டவர்கள்
எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும்
* பராபரனுடைய பிள்ளைகளாயிருக்கும்
படி அதிகாரங்கொடுத்திருக்கிறார். * உரோ.
அ: யரு. கலாத். ௩: உகூ.
ய௩. அவர்கள் இரத்தத்தினாலாவது, மாம்
ச இச்சையினாலாவது, புருஷனுடைய சித்
தத்தினாலாவது பிறவாமற் * பராபரனா
லே பிறந்தார்கள். * ௩: ரு. யாக். க:
யஅ. க யோவா. கூ: ரு.
யச. அந்த வார்த்தை * மனிதனுக்கிரு
பையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்த
வராய் நமக்குள்ளே வாசம்பண்ணினார். அ
வருடைய மகிமையைக்கண்டோம். † அது
பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகி
மையாகவேயிருந்தது * ஏசா. எ: யச.
மத். க: யகூ. † ஏசா. சய: ஞ.
யரு. அவரைக்குறித்த யோவான் * சாட்
சியாக எனக்குப்பின் வருகிறவர் எனக்கு

முன் இருந்தவர். ஆகையால், என்னிலும்
மேன்மை யுள்ளவராய் இருக்கிறார் என்று
நான் சொல்லியிருந்தேனே. அவர் இவ
ரேயென்று கூப்பிட்டான். * மத். ௩:
௰௧. மாற். ௧: ௭.
௰௬. நியாயப்பிரமாணம் மோசேயின் மூ
லமாய்க்கொடுக்கப்பட்டது. கிருபையும்,
சத்தியமும் இயேசுக்கிறிஸ்து மூலமாய்
உண்டாயின.
௰௭. ஆனபடியினாலே அவருடைய பரிபூர
ணத்தில் நாங்கள் எல்லாரும் மிகுந்த தயை
யைப்பெற்றுக்கொண்டோம்.
௰௮. ஒருவனுந்தேவனை * யொருக்கா
லுங் காணவில்லை. பிதாவின் மடியில் இருக்
கிற ஒரே பேறான குமாரனே † அவரை
நமக்கு வெளிப்படுத்தினார். * ௨ மோ
௩௩: ௨௰. † லூக். ௰: ௨௨.
௰௯. எருசலேமிலுள்ள யூதர்கள் ஆசாரிய
ரையும், லேவியரையும் யோவானிடத்தி
லே யனுப்பி, நீர் ஆர் என்று விசாரித்த
பொழுது,
௨௰. யோவான் கொடுத்த சாட்சியாவது,
அவன் மறுதலியாமல் அறிக்கையிட்டான்.
நான் கிறிஸ்து அல்லவென்றே அறிக்கை
யிட்டான்.
௨௧. அப்பொழுது அவர்கள் அவனை
நோக்கி, அப்படியானால் நீர் ஆர்! எலியா
வாவென்று கேட்டார்கள். அதற்கு அ
வன் நான் அவன் அல்லவென்றான். அவர்
கள் நீர் தீர்க்கதரிசியானவராவென்று கேட்
டதற்கு நான் அல்லவென்று சொன்னான்.
௨௨. ஆதலால் அவர்கள் பின்னும் அவனை
நோக்கி, எங்களை யனுப்பினவர்களுக்கு
நாங்கள் உத்தரவு கொடுக்கும்படிக்கு நீர்
தானே உம்மைக்குறித்து என்ன சொல்லு
கிறீர் என்றார்கள்.
௨௩. அதற்கு அவன் சொன்னது, ஏசாயா
தீர்க்கதரிசி சொன்னபடியே * நான் பரா
பரனுக்காக மார்க்கத்தைச்செம்மைப்படுத்
துங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகி
றவனுடைய சத்தமாய் இருக்கிறேன் என்
றான். * மத். ௩: ௩.
௨௪. அப்பொழுது அனுப்பப்பட்டவர்க
ளாகிய பரிசேயர் பின்னும் அவனைநோக்கி,
௨௫. நீர் கிறிஸ்தவும் அல்ல, எலியாவும்
அல்ல; தீர்க்கதரிசியும் அல்லவென்றால், நீர்
ஞானஸ்நானத்தை யெப்படிக்கொடுக்க
லாம் என்றார்கள்.
௨௬. அதற்கு யோவான் சொன்னது,
நான் * சலத்தினாலே ஞானஸ்நானங்கொ
டுக்கிறேன். நீங்கள் அறியாதிருக்கிற ஒரு
வர் உங்களுக்குள்ளே யிருக்கிறார். * மத்.
௩: ௰௧.
௨௭. அவர் எனக்குப்பின்பு வந்தும் எனக்
குமுன் இருந்தவர். அவருடைய பாத இ
ரட்சையின் வாரை யவிழ்ப்பதற்கு நான்
பாத்திரன் அல்லவென்றான்.
௨௮. இவைகள் யோர்தான் ஆற்றின் அக்
கரையில் யோவான் ஞானஸ்நானங்கொ
டுத்த பெத்தாபரா வூரிலே நடந்தன.
௨௯. மறுநாளிலே யோவான் இயேசு
வைத்தன்னிடத்திற்கு வரக்கண்டு சனங்க
ளுடனே சொன்னதாவது; அவரே உலகத்
தின் பாவத்தைச்சுமந்து தீர்க்கிற தேவ
ஆட்டுக்குட்டி,
௩௰. எனக்குப்பின் ஒரு புருஷன் வருகிறார்
என்றும், அவர் எனக்குமுன் இருந்தபடி
யால் என்னிலும் மேன்மையாய் இருக்கி
றார் என்றும் நான் சொன்னேனே அவர்
இவரே.
௩௧. நானும் இவரை யறியாதிருந்தேன்.
இப்பொழுது இவர் இஸ்ரவேலருக்கு வெ
ளியாக்கப்படும்பொருட்டாய் நான் சலத்
தினாலே ஞானஸ்நானங்கொடுக்க வந்தேன்
என்றான்.
௩௨. பின்னும் யோவான் சாட்சியாகச்
சொன்னதாவது; * புறாவைப்போல ஆவி
யானவர் வானத்திலிருந்து இறங்கி அவர்
மேலே தங்கினதைக்கண்டேன். நான் அ
வரை யறியவில்லை. * மத். ௩: ௰௬.
௩௩. அப்பொழுது சலத்தினாலே ஞானஸ்
நானங்கொடுக்கும்படிக்கு என்னை யனுப்
பினவர் என்னுடனே சொன்னது, நீ கா
ணத்தக்கதாக ஆவியானவர் இறங்கித்தங்
கப்படுபவர்யாரோ, அவரே பரிசுத்த ஆவி
யினாலே ஞானஸ்நானங்கொடுக்கிறவரென்
றார்.
௩௪. அந்தப்படியே நான் கண்டு இவ
ரே பராபரனுடைய குமாரனென்று சாட்
சி கொடுத்தேன் என்றான்.
௩௫. மறுநாளிலே யோவானும், அவனு
டைய சீஷரில் இரண்டுபேரும் மறுபடி
யும் நிற்கிறபொழுது,
௩௬. இயேசுவானவர் நடந்து போகிற
தை யவன் கண்டு, * அவரே தேவ ஆட்
டுக்குட்டி யென்றான். அவன் அப்படிச்
சொன்னதை அவ்விரண்டு சீஷருங்கேட்டு
இயேசுவானவருக்குப்பின் சென்றார்கள்.
* ௨௯ வச.
௩௭. அப்பொழுது இயேசுவானவர் திரும்பி
அவர்கள் பின் வரக்கண்டு அவர்களை நோக்
கி, என்ன தேடுகிறீர்கள் என்றார்.
௩௮. அதற்கு அவர்கள் இரபீ, நீர் எங்
கே தங்குகிறீர் என்றார்கள். இரபீ யென்
பதற்குப்போதகரேயென்று அருத்தமாம்.
௩௯. அவர் சொன்னது, நீங்கள் வந்துபா
ருங்களென்றார். அந்தப்படி யவர்கள்
போய் அவர் தங்கிய இடத்தைப்பார்த்து
ஏறக்குறையப்பத்துமணி நேரமானபடி

யால், அன்றைத்தினம் அவரிடத்திலே யிருந்தார்கள்.

௪௰. யோவான் சொன்னதைக்கேட்டு அவருக்குப்பின்சென்ற இரண்டுபேரில் ஒருவன் சீமோன் பேதுருவினுடைய சகோதரனாகிய அந்திரேயா,

௪௧. அவன் முதலாவது, தன் சகோதரனாகிய சீமோனைக்கண்டு மேசியாவைக் கண்டோமென்று அவனுடனே சொன்னான். மேசியா வென்பதற்குக்கிறிஸ்து என்று அருத்தமாம்.

௪௨. பின்பு அவனை இயேசுவின் இடத்திற்கு அழைத்துக்கொண்டுபோனான். இயேசுவானவர் அவனைப்பார்த்து நீ யோனாவின் மகனாகிய சீமோன் இனிக் * கேபாவென்று அழைக்கப்படுவாயென்றார். கேபா என்றாலும் பேதுரு என்றாலும் ஒக்கும். * மத். ௰௬: ௰௮.

௪௩. மறுநாளிலே இயேசுவானவர் கலிலேயா நாட்டுக்குப்போக மனதாய்ப்பிலிப்பைக்கண்டு நீ யெனக்குப்பின்சென்று வாவென்றார்.

௪௪. பிலிப்பு என்பவன் அந்திரேயா பேதுரு என்பவர்களுடைய ஊராகிய பெத்சாயிதா பட்டினத்தான்.

௪௫. பிலிப்பு என்பவன் நாத்தான்வேலைக் கண்டு அவனுடனே சொன்னது, வேதத்திலே * மோசேயும், தீர்க்கதரிசிகளும் எழுதப்பட்டவரைக்கண்டோம். நாசரேத்தூரில் இருந்துவந்த யோசேப்பின் குமாரனாகிய இயேசு அவரே யென்றான். * ௧ மோ. ௩: ௰௫. ௪௯: ௰. ௫ மோ. ௰௮: ௰௮.

௪௬. அதற்கு நாத்தான்வேல் நாசரேத்தூரில் இருந்தும் ஒரு நன்மை தோன்றுமாவென்றான். பிலிப்பு நீ வந்துபார் என்றான்.

௪௭. அந்தப்படி இயேசுவானவர் நாத்தான்வேலைத்தம்மிடத்திற்கு வரக்கண்டு, அவனைக்குறித்து இவனே கபடம் இல்லாத மெய்யான இஸ்ரவேலன் என்றார்.

௪௮. அதற்கு நாத்தான்வேல், நீர் என்னை எப்படி யறிந்திருக்கிறீர் என்றான். அவனுக்கு மாறுத்தரமாக இயேசுவானவர் சொன்னது, பிலிப்பு உன்னை யழைக்கிறதற்குமுன்னே நீ அத்திமரத்தின்கீழ் இருக்கிறபொழுது, உன்னைக்கண்டேன் என்றார்.

௪௯. அதற்கு நாத்தான்வேல் இரபீ, நீரே பராபரனுடைய குமாரன். நீரே இஸ்ரவேலரின் இராசாவென்றான்.

௫௰. அதற்கு இயேசுவானவர் அத்திமரத்தின்கீழே யுன்னைக்கண்டேன் என்று நான் உன்னுடனே சொன்னதினாலே விசுவாசித்தாய். இதிலும் பெரிதானவைகளைக்காண்பாய் என்றார்.

௫௧. பின்னும் அவர் அவனைநோக்கி, இதுமுதல் நீங்கள் வானந் திறந்திருக்கிறதையும், * தேவதூதர்கள் மனிதனுடைய குமாரனிடத்தில் இருந்து ஏறுகிறதையும், அவர்மேல் இறங்குகிறதையுங் காண்பீர்களென்று மெய்யாகவே யுங்களுக்குச்சொல்லுகிறேன் என்றார். * ௧ மோ. ௨௮: ௰௨.

௨ அதிகாரம்.

[(௧) கிறிஸ்துதண்ணீரைப்பழரசமாக்கினது. (௰௨) கப்பர்நாகூமுக்கும், எருசலேமுக்கும்போய், (௰௪) தேவாலயத்திலே கொள்ளுகிறவர்களையும், விற்கிறவர்களையுந்துரத்தினது. (௰௯) அவர் தம்முடைய மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் முன்னறிவித்தது. (௨௩) அவர் செய்த அற்புதங்களினிமித்தம் விசுவாசித்த பற்பலருக்குத்தம்மை யொப்புக்கொடாமல் இருந்தது.]

மூன்றும்நாளிலே கலிலேயா நாட்டில் உள்ள கானாவூரிலே ஒருகலியாணம் நடந்தது. இயேசுவின் தாயும் அங்கேயிருந்தாள்.

௨. அல்லாமலும் இயேசுவும், அவருடைய சீஷருங்கலியாணத்திற்கு அழைக்கப்பட்டு இருந்தார்கள்.

௩. அப்பொழுது திராட்சரசங்குறைந்திருந்தபடியால், இயேசுவினுடைய தாய் அவரை நோக்கி, அவர்களுக்குத்திராட்ச இரசமில்லை யென்றாள்.

௪. அதற்கு இயேசுவானவர், * ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன? என்னுடைய நேரம் வரவில்லையேயென்றார். * ௰௯:௨௬.

௫. பின்பு அவருடைய தாய் பணிவிடைக்காரரை நோக்கி, அவர் உங்களுக்குச்சொல்லுகிறபடியே செய்யுங்கள் என்றாள்.

௬. அங்கே யூதர்கள் தங்களைச்சுத்திகரிக்கிற முறைமையின்படியே ஒவ்வொன்று இரண்டு மூன்று பெரிய குடந்தண்ணீரைக் கொள்ளுகிற ஆறுகற்சாடிகள் வைக்கப்பட்டிருந்தன.

௭. பின்பு இயேசுவானவர் பணிவிடைக்காரரை நோக்கிச் சாடிகளிலே தண்ணீரை நிரப்புங்கள் என்றார். அவர்கள் அவைகள் நிறைய நிரப்பினார்கள்.

௮. அதன் பின்பு நீங்கள் இப்பொழுது, (இதை) மொண்டு பந்தி விசாரிப்புக்காரனிடத்திற்கொண்டுபோங்களென்றார். அவர்கள் கொண்டுபோனார்கள்.

௯. அப்பொழுது திராட்ச இரசமாய்ப்போன தண்ணீரைப்பந்தி விசாரிப்புக்காரன் ருசிபார்த்து, அது இரசமானவகையை யறியாமல், மணவாளனை யழைத்து,

௰ எந்த மனிதனும் முன்பு நல்ல திராட்ச இரசத்தைவார்த்து, சனங்கள் திருத்தி அ

டைந்த பின்பு, ருசி குறைந்ததை வார்ப்
பான். நீர் இதுவரைக்கும் நல்ல இரசத்
தை வைத்திருந்தீரென்றான். தண்ணீரை
மொண்டுகொண்ட பணிவிடைக்காரர் அந்த
இரசம் உண்டானவகையை அறிந்தார்கள்.
௰௧. இப்படி இயேசுவானவர் கலிலேயா
நாட்டிலுள்ள கானூன் ஊரிலே அற்புதங்
களைச்செய்யத்தொடங்கி, தம்முடைய மகி
மையை வெளிப்படுத்தினார். அவருடைய
சீஷர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்
கள்.
௰௨. அதன் பின்பு அவரும், அவருடைய
தாயும், அவருடைய சகோதரரும், சீஷ
ருங் கப்பர்நாகூம் ஊருக்குப்போய்ச்சில
நாள் அங்கே தங்கினார்கள்.
௰௩. பின்பு யூதருடைய பஸ்காப்பண்டி
கை சமீபமாயிற்று.
௰௪. அப்பொழுது இயேசுவானவர் எருச
லேம் நகரத்திற்குப்போய்த்தேவாலயத்தி
லே மாடுகளையும், ஆடுகளையும், புறாக்களை
யும் * விற்கிறவர்களும், காசுக்காரரும் உ
ளுக்கார்ந்திருக்கிறதைக்கண்டு, * மத். ௨௧:
௰௨.
௰௫. கயிற்றால் ஒரு கொறடாவை உண்டு
பண்ணி, அவர்கள் யாவரையும், ஆடுமாடுக
ளையுந் தேவாலயத்திற்குப்புறம்பே துரத்தி,
காசுக்காரருடைய காசுகளைக்கொட்டிப்
பலகைகளைக்கவிழ்த்து,
௰௬. புறாக்களை விற்கிறவர்களை நோக்கி,
இவ்விடத்தில் இருந்து, இவைகளை யெடுத்
துக்கொண்டுபோங்கள். என் பிதாவின் ஆ
லயத்தை வியாபாரவீடாக்காதிருங்களென்
றார்.
௰௭. அப்பொழுது * உம்முடைய ஆல
யத்தின் நிமித்தம் உண்டான பத்தி வயி
ராக்கியம் என்னைப்பட்சித்ததென்றெழுதியி
ருக்கிறதை அவருடைய சீஷர் நினைத்துக்
கொண்டார்கள். * சங்கீ. ௬௯: ௯.
௰௮. பின்பு யூதர்கள் அவரை நோக்கி,
* எந்த அற்புதத்தை யெங்களுக்குக்காண்
பிக்கிறீர். இப்படிப்பட்டவைகளைச்செய்கி
றீரே என்றார்கள் அதற்கு இயேசுவான
வர் சொன்னது, * ௬: ௩௰.
௰௯. * இந்தத்தேவாலயத்தை யிடித்துப்
போடுங்கள். பின்பு நான் இதை மூன்று
நாளுக்குள்ளே எழுப்புவேனென்றார். * மத்.
௨௬: ௬௧. ௨௭: ௪௰.
௨௰. யூதர்கள் சொன்னது, இந்தத்தேவா
லயம் நாற்பத்தாறு வருஷமாகக்கட்டப்
பட்டதே. நீர் இதை மூன்று நாளுக்குள்
ளே யெழுப்புவீராவென்றார்கள்.
௨௧. அவர் தம்முடைய சரீரமாகிய தே
வாலயத்தைக்குறித்துப்பேசினார்.
௨௨. ஆதலால், அவர் மரித்தோரில் இருந்
து எழுந்துபோன பின்பு, அவர் சொன்ன
தை அவருடைய சீஷர் * நினைத்து, வேதத்
தையும், இயேசுவானவர் சொன்ன வசனத்
தையும் அதிகமாய் விசுவாசித்தார்கள். *
லூக். ௨௪: ௮.
௨௩. அந்தப்பஸ்காப்பண்டிகையின் கா
லத்திலே அவர் எருசலேம் நகரத்தில் இ
ருக்கையில் அவர் செய்த அற்புதங்களை
அநேகம் பேர்கண்டு, அவரிடத்தில் விசுவா
சம் வைத்தார்கள்.
௨௪. அப்படியிருந்தும், இயேசுவானவர்
அவர்களெல்லாரையும் அறிந்தபடியினாலே
தம்மை யவர்களுக்கு ஒப்புக்கொடுக்க
வில்லை.
௨௫ மனிதருள்ளத்தில் இருப்பதை யவர்
அறிகிறவரானபடியால், மனிதரைக்குறித்
து ஒருவரும் அவருக்கு அறிவைக்கொடுக்க
வேண்டுவதில்லை.

௩ அதிகாரம்.

[(௧) கிறிஸ்து நீக்கோதேமுக்கு மறுபிறப்
பைக்குறித்தும், (௰௪) தமது மரணத்தை
விசுவாசிப்பதைக்குறித்தும், (௰௬) உல
கத்தார்மேல் பராபரன் வைத்த முக்கிய
மான அன்பைக்குறித்தும், (௰௮) அவிசு
வாசத்தின் நிமித்தமாயுண்டாகும் ஆக்கினை
யைக்குறித்தும் போதித்தது. (௨௩) யோ
வான் சனங்களுக்கு ஞானஸ்நானங் கொ
டுத்து, கிறிஸ்துவைக்குறித்துச்சாட்சி பக
ர்ந்து, உபதேசம் பண்ணினது.]

யூதருக்குள்ளே தலைவனாக நீக்கோ
தேமென்னப்பட்ட பரிசேயன் ஒரு
வன் இருந்தான்.
௨. அவன் இராத்திரிகாலத்திலே இயேசு
வின் இடத்திற்போய் இரபீ, தன்னுடனே
பராபரன் இராவிட்டால் நீர் செய்கிற இப்
படிப்பட்ட அற்புதங்களைப்போல ஒருவ
னுஞ் செய்யமாட்டான். ஆகையால், நீர்
பராபரனாலே வந்தபோதகரென்று அறிந்
திருக்கிறோமென்றான்.
௩. இயேசுவானவர் அவனை நோக்கி, ஒரு
வன் மறுபடியும் * பிறவாவிட்டால், பரா
பரனுடைய இராச்சியத்தைப்பார்க்கமாட்
டானென்று மெய்யாகவே உமக்குச்சொல்
லுகிறேனென்றார். * மத். ௰௮: ௩.
௪. அதற்கு நீக்கோதேமு முதுமையுள்ள
ஒருமனிதன் (மறுபடியும்) எப்படிப்பிறப்
பான். அவன் இரண்டாந்தரந் தன்னு
டைய தாயின் வயிற்றிற் பிரவேசித்துப்பி
றக்கக்கூடுமாவென்றான்.
௫. இயேசுவானவர் சொன்னது, ஒருவன்
* சலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்
டால் பராபரனுடைய இராச்சியத்திற் பிர
வேசிக்கமாட்டானென்று மெய்யாகவே
உமக்குச்சொல்லுகிறேன். * எசேக். ௩௬:
௨௫—௨௭. தீத். ௩: ௫, ௭.

௬. * மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும். ஆவியினால் பிறப்பது ஆவியாய் இருக்கும். * ௧ மோ. ௬: ௩.

௭. நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டுமென்று நான் உமக்குச்சொன்னதைக்குறித்து நீர் அதிசயப்படவேண்டுவதில்லை.

௮. காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திற் செல்லுகின்றது. * அதின் சத்தத்தைக்கேட்கிறீர். ஆகிலும், அது வந்த இடத்தையும், அதுபோகும் இடத்தையும் அறியமாட்டீர். ஆவியினாலே பிறந்தவனெவனோ அவனும் அப்படியேயிருக்கிறானென்றார். * சங். ௱௩௯: ௰௩—௰௬. பிரச. ௰௧: ௫.

௯. அதற்கு நீக்கோதேமு, இது சம்பவிப்பதெப்படியென்றான்.

௰ இயேசுவானவர் சொன்னது, நீர் இஸ்ரவேலருக்குள்ளே போதகராய் இருந்தும், இவைகளை அறியாமல் இருக்கிறீரா!

௰௧. மெய்யாகவே! நான் உமக்குச்சொல்லுகிறதாவது; நாங்கள் அறிந்திருக்கிறதைக்குறித்துச்சொல்லி, நாங்கள் கண்டதைக்குறித்துச்சாட்சிகொடுத்து வந்தும், நீங்கள் எங்கள் சாட்சியை யேற்றுக்கொள்ளுகிறதில்லை.

௰௨. பூமிக்கேற்றவைகளை நான் உங்களுக்குச்சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே. பரமகாரியங்களை நான் உங்களுக்குச் சொன்னால், எப்படி விசுவாசிப்பீர்கள்.

௰௩. * பரமண்டலத்தில் இருந்திறங்கியும், பரமண்டலத்திலே யிருக்கிற மனித குமாரனே யன்றி, ஒருவரும் பரமண்டலத்திற் கேறவில்லையே. * ௬: ௬௨.

௰௪. அல்லாமலும், * பாம்பானது வனாந்தரத்திலே மோசேயினாலே உயர்த்தப்பட்டதுபோல, மனிதனுடைய குமாரனும் உயர்த்தப்படவேண்டும். * ௪ மோ. ௨௧: ௮—௯.

௰௫. அவனை * விசுவாசித்துக்கொள்ளுகிறவனெவனோ அவன் கெட்டுப்போகாமல், நித்திய சீவனை யடையும்படிக்கு அப்படியே யாகவேண்டும். * மாற். ௰௬: ௰௬.

௰௬. என்னத்தினாலெனிற் * பராபரன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவனெவனோ அவன் கெட்டுப்போகாமல், நித்திய சீவனை யடையும்படிக்கு அவரையே கொடுத்து, இவ்வளவாய் உலகத்தாரிடத்தில் அன்பாய் இருந்தார். * உரோ. ௫: ௮.

௰௭. பராபரன் * உலகத்தாரை ஆக்கினைக்குட்படுத்தும்படிக்காகவல்ல, உலகத்தாரை யிரட்சிக்கும்படிக்காகவே தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பினார். * ௰௨: ௪௭.

௰௮. அவரை விசுவாசித்துக்கொள்ளுகிறவன் * ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கப்படான். அவரை விசுவாசியாதவனோ பராபரனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவனாய் இராதபடியால், அவனுக்கு ஆக்கினைத்தீர்ப்புச்செய்தாயிற்று. * ௫: ௨௪.

௰௯. ஒளியானது உலகத்தில் வந்திருந்தும், மனிதர் தங்கள் கிரியைகள் பொல்லாதவைகளாய் இருக்கிறபடியால், அந்த ஒளியிலும், இருளை விரும்பிக்கொண்டிருக்கிறதே ஆக்கினைத்தீர்த்தலுக்கேதுவாய் இருக்கின்றது.

௨௰. பொல்லாங்கைச்செய்கிறயாவனும் ஒளியைப்பகைக்கிறதால், தன் கிரியைகள் அதட்டப்படாதபடிக்கு ஒளியிற் சேரமாட்டான்.

௨௧. சத்தியத்தைச்செய்கிறவனோ தன் கிரியைகளைப்பராபரனுடைய சித்தத்தின்படி செய்கிறபடியினாலே * அவைகள் வெளியாகும்படிக்கு ஒளியிலே சேருகிறானென்றார். * எபே. ௫: ௮.

௨௨. அதின் பின்பு இயேசுவானவரும், அவருடைய சீஷரும் யூதேயாதேசத்திலே போனார்கள். அங்கே அவர் அவர்களோடுங் கூடச்சஞ்சரித்து * ஞானஸ்நானங் கொடுத்து வந்தார். * ௪: ௨.

௨௩. அல்லாமலும், அக்காலத்திலே * காவலில் வைக்கப்படாதிருந்த யோவானும், சாலிமூரின் அருகேயிருக்கிற அயினோன் ஊரிலே மிகுந்த சலம் உண்டாயிருந்தபடியால், அங்கே ஞானஸ்நானங் கொடுத்து வந்தான். * மத். ௰௪: ௩.

௨௪. சனங்கள் அவ்விடத்திற்குப்போய் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

௨௫. அப்பொழுது யோவானுடைய சீஷரிற் சிலரும், மற்ற யூதருஞ் சுத்தம் பண்ணுதலைக்குறித்து வாக்குவாதம் பண்ணிக்கொண்டு,

௨௬. பின்பு யோவான் இடத்திற்போய் இரபீ, உம்முடனேகூட யோர்தானின் அக்கரையிலே ஒருவர் இருந்தாரே. நீரும் அவரைக்குறித்துச் சாட்சிகொடுத்தீரே.—அவர் ஞானஸ்நானங் கொடுக்கிறார். எல்லாரும் அவரிடத்திற் போகிறார்களென்றார்கள்.

௨௭. அதற்கு யோவான் சொன்னது, ஒரு மனிதனானவன் தனக்குப்பரமண்டலத்தில் இருந்து கொடுக்கப்படாவிட்டால் தானாய் ஒன்றையுந் தன்னுடையதாக்கிக்கொள்ளத் திராணியில்லை.

௨௮. நான் கிறிஸ்தல்ல, அவருக்கு முன்னாக அனுப்பப்பட்டவனாய் இருக்கிறேனென்று நான் சொன்னதைக்குறித்து நீங்களே யெனக்காகச்சாட்சிகளாய் இருக்கிறீர்கள்.

௨௯. மனைவியை உடையவனே மணவா

ளன். மணவாளனுடைய சிநேகிதன் நின்று, அவருடைய சொல்லைக்கேட்கிறவனாய் அவருடைய சத்தத்தைக்குறித்து மிகவுஞ் சந்தோஷப்படுகிறான். இந்தச்சந்தோஷம் எனக்குச்சம்பூரணமாய் உண்டாயிற்று.

௩௰. அவர் பெருகவும், நானோ குறையவும் வேண்டும்.

௩௰௧. உயரத்தில் இருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர். பூமியில் இருந்து உண்டானவன் பூமியின் தன்மையுடையவனாய், பூமியின் தன்மையைப்படி பேசுகிறான். பரத்தில் இருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவராய் இருந்து,

௩௰௨. * தாம் கண்டு கேட்டதைச்சாட்சியாகச்சொல்லுகிறார். அப்படியிருந்தும், அவருடைய சாட்சியை ஒருவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. * ௧: ௰௮.

௩௰௩. அவருடைய சாட்சியை யேற்றுக்கொள்ளுகிறவன் பராபரன் சத்தியமுடையவர் என்று நிச்சயப்படுத்துகிறான்.

௩௰௪. பராபரனாலே அனுப்பப்பட்டவர் பராபரனுடைய வசனங்களைச்சொல்லுகிறார். அல்லாமலும், பராபரன் தமது ஆவியை * அளவாய் அவருக்குக்கொடுக்கவில்லை. * கொலோ. ௧: ௰௯. ௨: ௯.

௩௰௫. பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாய் இருந்து, * சகலத்தையும் அவருக்கு ஒப்புக்கொடுத்தார். * மத். ௰௧: ௨௭.

௩௰௬. * குமாரனிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் நித்திய சீவனை உடையவனாய் இருக்கிறான். குமாரனை விசுவாசியாதவன் சீவனைக்காண்பதில்லை. பராபரனுடைய கோபாக்கினையே அவன்மேல் நிலைநிற்கும் என்றான். * மாற். ௰௬: ௰௬.

௪ அதிகாரம்.

[(௧) கிறிஸ்துச்சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீயின் இடத்திற் சம்பாஷித்து, அவளுக்குத்தம்மை இன்னார் என்று அறிவித்தது. (௨௭) அவருடைய சீஷர்கள் அதைப்பற்றி ஆச்சரியப்பட்டது. (௩௧) பராபரனுடைய மகிமையைக்குறித்துத்தமக்கிருந்த வயிராக்கியத்தை அவர்களுக்கு அறிவித்தது. (௩௯) சமாரியரில் அநேகர் அவரை விசுவாசித்தது. (௪௬) அவர் கலிலேயாவுக்குப்போய்க்கப்பர்நாகூமிலே ஒரு தலைவனுடைய மகனைச் சொஸ்தமாக்கினது.]

அக்காலத்தில் யோவானிலும், இயேசுவானவர் அநேகம்பேரைச் சீஷராக்கி, * ஞானஸ்நானங்கொடுக்கிறார் என்று பரிசேயர் கேள்விப்பட்டார்கள். * ௩: ௨௨—௨௬.

௨. அதைக்கர்த்தர் அறிந்து, யூதேயா நாட்டைவிட்டு, மறுபடியுங் கலிலேயா நாட்டுக்குப்போனார்.

௩. இயேசுவானவர் தாமே ஞானஸ்நானங் கொடுக்கவில்லை. அவருடைய சீஷர்களே கொடுத்தார்கள்.

௪. அப்பொழுது, அவர் சமாரியா நாட்டின் வழியாய்ப்போக வேண்டியதாய் இருந்தது.

௫. ஆதலால், * யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்குக்கொடுத்த நிலத்துக்கு அருகான சீகார் என்னப்பட்ட சமாரியா ஊரினிடத்தில் இயேசுவானவர் சேர்ந்து, * ௧ மோ. ௪௮: ௨௨. யோசு. ௨௪: ௩௨.

௬. அங்கேயிருந்த யாக்கோபின் கிணற்றின் அருகே ஏறக்குறைய ஆறுமணி நேரத்திலே பிரயாணத்தினால் இளைப்படைந்தவராய் உளுக்காந்தார்.

௭. அப்பொழுது, அவருடைய சீஷர் உணவுகளைக்கொள்ளும்படி ஊருக்குள்ளே போயிருந்த காலத்திலே சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மெண்டு கொள்ளும்படிக்குச்சேர்ந்தாள்.

௮. அவளுடனே இயேசுவானவர் தாகத்துக்குத்தா வென்றார்.

௯. யூதர்கள் சமாரியா நாட்டாருடனே கலவாமல் இருக்கிறபடியினாலே சமாரியா ஸ்திரீ அவரை நோக்கி, நீர் யூதனாயிருக்கச்சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்திலே தாகத்துக்குத் தாவென்றெப்படிக் கேட்கலாமென்றாள்.

௰. அதற்கு இயேசுவானவர் சொன்னது, நீ பராபரனுடைய ஈவையும், தாகத்துக்குத்தாவென்றுன்னுடனே சொல்லுகிறவனையும் அறிந்தாயானால், நீயே அவனிடத்தில் விண்ணப்பம்பண்ணுவாய். அவன் * சீவத்தண்ணீரை யுனக்குக்கொடுப்பானென்றார். * ௭: ௩௮, ௩௯.

௰௧. ஸ்திரீயானவள் சொன்னது, ஆண்டவரே, மெண்டுகொள்ளுகிறதற்கு உம்மிடத்திற் பாத்திரமில்லையே. கிணறும் ஆழமாய் இருக்கிறதே. ஆதலால், எங்கேயிருந்து சீவத்தண்ணீர் உமக்கு உண்டாயிற்று.

௰௨. நம்முடைய தகப்பனாகிய யாக்கோபும், அவருடைய பிள்ளைகளும், அவருடைய சீவசெந்துக்களும் இந்தக்கிணற்றிலே குடித்தார்கள். அவரே இதை யெங்களுக்குக் கொடுத்தார். அவரிலும் நீர் பெரியவரா வென்றாள்.

௰௩. அதற்கு இயேசுவானவர் சொன்னது, இந்தத்தண்ணீரைக்குடிக்கிறவன் மறுபடியுந் தாகம் அடைவான்.

௰௪. நான் கொடுக்கிற தண்ணீரைக்குடிக்கிறவனெவனோ, அவன் * என்றென்றைக்குந் தாகம் அடைவதில்லை. நான் அவனுக்குக்கொடுக்குந் தண்ணீர் அவனுக்குளே

நித்திய ஜீவன்வரைக்கும் ஊறுகிற நீரூற்று
மென்றார். * ௬: ௨௭—௩௫.
௰௫. ஸ்திரீயானவள் சொன்னது, ஆண்ட
வரே! நான் தாகம் அடையாமலும், இங்
கே மொண்டுகொள்ளும்படி வாராமலும்
இருப்பதற்கு, நீர் அப்படிப்பட்ட தண்ணீ
ரை யெனக்குத்தரவேண்டும் என்றாள்.
௰௬. அப்பொழுது இயேசுவானவர் அவ
ளை நோக்கி, நீ போய் உன் புருஷனை அ
ழைத்துக்கொண்டுவாவென்றார்.
௰௭. அதற்கு ஸ்திரீயானவள், எனக்குப்
புருஷன் இல்லையென்றாள். இயேசுவானவர்
சொன்னது; எனக்குப்புருஷன் இல்லையென்
று நீ செம்மையாய்ச்சொன்னாய்.
௰௮. எப்படியெனில், ஐந்துபுருஷர் உனக்
கிருந்தார்கள். இப்பொழுது இருக்கிறவன்
உனக்குப்புருஷனல்ல, அதை நீ யுள்ளபடி
சொன்னாயென்றார்.
௰௯. அப்பொழுது ஸ்திரீயானவள் அவ
ரை நோக்கி, ஆண்டவரே! நீர் தீர்க்கதரிசி
யென்று எனக்குத்தோன்றுகின்றது.
௨௰. நம்முடைய பிதாக்கள் இந்த மலையி
லே தொழுதுகொண்டார்களே. நீங்கள்
* எருசலேமிலுள்ள தலத்திலே தொழுது
கொள்ளவேண்டும் என்றீர்களே யென்றாள்.
* ௫ மோ. ௰௨: ௫, ௬.
௨௧. இயேசுவானவர் சொன்னது; ஸ்திரீ
யே! நீங்கள் இந்த மலையிலாவது, எருச
லேமிலாவது பிதாவைத்தொழுதுகொள்ளா
திருக்குங்காலம் வருகின்றது.
௨௨. என்னை நம்பு. நீங்கள் * அறியாத
தைத்தொழுதுகொள்ளுகிறீர்கள். யூதர்க
ளாகிய எங்களிடத்திலிருந்து இரட்சிப்புத்
தோன்றுவதால், நாங்கள் அறிந்திருக்கிற
தைத்தொழுதுகொள்ளுகிறோம். * ௨ இரா.
௰௭: ௨௯.
௨௩. அல்லாமலும், உண்மையாய்த்தொழு
துகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியினா
லும், உண்மையினாலுந் தொழுதுகொள்
ளுங் காலம்வரும். இப்பொழுதும் வந்திருக்
கின்றது. அப்படியே தம்மைத்தொழுது
கொள்ளுகிறவர்களைப்பிதாவானவர் விரும்பு
கிறாரே.
௨௪. பராபரன் * ஆவியாயிருக்கிறார். அ
வரைத்தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியி
னாலும், உண்மையினாலும் அவரைத்தொழு
துகொள்ளவேண்டும் என்றார். * ௨ கொரி.
௩: ௰௭.
௨௫. (அப்பொழுது) ஸ்திரீயானவள் சொ
ன்னது, மேசியா வருகிறாரென்று அறிந்தி
ருக்கிறேன். அவர் வரும்பொழுது, எல்லா
வற்றையும் நமக்கறிவிப்பார் என்றாள். மே
சியாவென்பதும், கிறிஸ்து என்பதும் ஒக்
கும்.
௨௬. இயேசுவானவர் சொன்னது; * உன்
னுடனே பேசுகிற நானே அவரென்றார்.
* ௯: ௩௭.
௨௭. அத்தருணத்திலே அவருடைய சீஷர்
வந்து, ஸ்திரீயுடனே அவர் பேசிக்கொண்
ணுகிறதைக் (கண்டு) ஆச்சரியப்பட்டார்
கள். ஆகிலும், என்ன தேடுகிறீர் என்றாவ
து, என்னத்தினாலே இவளுடனே பேசுகிறீர்
என்றாவது ஒருவனும் (அவரிடத்தில்) கேட்
கவில்லை.
௨௮. ஸ்திரீயானவள் தன் குடத்தைவைத்
து, ஊருக்குள்ளேபோய்ச்சனங்களை நோ
க்கி,
௨௯. நான் செய்த யாவையும் எனக்கு
ஒரு மனிதன் சொன்னான். அவன் கிறிஸ்து
வா அல்லவா என்று வந்துபாருங்கள் என்
றாள்.
௩௰. அந்தப்படி அவர்கள் ஊரிலிருந்து
புறப்பட்டு, அவரிடத்திற் சேர்ந்தார்கள்.
௩௧. அதற்குமுன்னே சீஷர் அவரைநோக்
கிப்போதகரே! சாப்பிடுமென்று வேண்
டிக்கொண்டார்கள்.
௩௨. அதற்கவர், நீங்கள் அறியாதிருக்கிற
போசனம் என்னிடத்தில் உண்டென்றார்.
௩௩. அப்பொழுது, சீஷர் ஒருவரையொரு
வர்நோக்கி, மற்றொருவன் அவருக்குப்போ
சனங் கொண்டுவந்திருப்பானோ வென்றார்
கள்.
௩௪. பின்னும் இயேசுவானவர் அவர்களு
டனேசொன்னது, நான் என்னை யனுப்பின
வருடைய சித்தத்தின்படிசெய்து, அவரு
டைய கிரியையை முடிப்பதே என்னுடை
ய போசனமாய் இருக்கின்றது.
௩௫. அறுப்புநாள் வருகிறதற்கு நாலுமா
தம் செல்லுமென்று நீங்கள் சொல்லுகிற
தில்லையா? அதோ வயல்நிலங்கள் விளைந்து,
இப்பொழுதே * அறுப்புக்கு வெண்மை
யாய் இருக்கின்றனவென்று, உங்கள் கண்
களை யுயர்த்திப்பாருங்களென்று உங்களுக்
குச்சொல்லுகிறேன். * மத். ௯: ௩௭.
௩௬. விதைக்கிறவனும், அறுக்கிறவனுங்
கூடச்சந்தோஷப்படத்தக்கதாக, அறுக்
கிறவன் கூலியைவாங்கி, நித்திய ஜீவனுக்
காகப்பலனைச்சேர்த்துக்கொள்ளுகிறான்.
௩௭. இதைக்குறித்து, ஒருவன் விதைக்கி
றான். மற்றொருவன் அறுக்கிறானென்கிற
வழக்கச்சொல் மெய்யாய் இருக்கின்றது.
௩௮. நீங்கள் பிரயாசப்படாத பயிரை அ
றுக்கும்படிக்கு, நான் உங்களை யனுப்பி
னேன். மற்றவர்கள் வேலைசெய்தார்கள்.
நீங்கள் அவர்களுடைய வேலையினால் எத்
தினமானதிற் பிரவேசித்தீர்கள் என்றார்.
௩௯. அந்தஸ்திரீ நான்செய்த யாவையும்
எனக்குச்சொன்னார் என்று சாட்சியிட்ட
வசனத்தினிமித்தம் அந்த ஊரிலுள்ள சமா

ரியரில் அநேகர் அவர்மேல் விசுவாசமானார்கள்.

௪௰. ஆதலால் சமாரியர் அவரிடத்தில்வந்து, தங்களிடத்திலே தங்கும்படிக்கு அவரை வேண்டிக்கொண்டார்கள். அந்தப்படி அவர் இரண்டுநாள் அங்கே தங்கினார்.

௪௧. அப்பொழுது, மிகவும் அதிகமான மனிதர் அவருடைய உபதேசத்தினிமித்தம் விசுவாசித்து,

௪௨. பின்பு ஸ்திரீயை நோக்கி, உன் சொல்லினால்மாத்திரமல்ல, நாங்களும் அவருடைய உபதேசத்தைக்கேட்டு,அவர்மெய்யாய்க்கிறிஸ்துவாகிய * உலக இரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோமென்றார்கள். * ௧ தீமோ. ௪: ௰.

௪௩. இரண்டு நாள் அங்கே தங்கி, பின்பு அவர் அவ்விடத்தைவிட்டுப்புறப்பட்டுக் கலிலேயா நாட்டுக்குப்போனார்.

௪௪. ஆகிலுந் தீர்க்கதரிசியானவன் தன் * சென்ம ஊரிலே கனம் அடையானென்று இயேசுவானவர் தாமே சொல்லி இருந்தார். * மத். ௰௩: ௫௭.

௪௫. அவர் கலிலேயா நாட்டிலே சேர்ந்த பொழுது எருசலேமிலே பண்டிகை நாளில் அவர் செய்த யாவையும் பார்த்திருந்த கலிலேயர் அவரை யேற்றுக்கொண்டார்கள். பின்பு இயேசுவானவர் * தாம் தண்ணீரைத்திராட்ச இரசமாக்கின கலிலேயாவிலுள்ள கானாவூருக்கு மறுபடியும் போனார். * ௨: ௧.

௪௬. அப்பொழுது கப்பர் நாகூமூரிலே இராசாவின் மனிதரில் ஒருவனுடைய குமாரன் வியாதி யுள்ளவனாய்க்கிடந்தான்.

௪௭. இயேசுவானவர் யூதேயாவில் இருந்து கலிலேயாவில் வந்ததை அந்த மனிதன் கேள்விப்பட்டவுடனே, அவரிடத்திற்குப் போய்த்தன் மகனுக்கு மரணஞ் சமீபித்திருந்தபடியினாலே, அவனைக்குணமாக்கும் படிக்கு வரவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான்.

௪௮. இயேசுவானவர் அவனை நோக்கி, * நீங்கள் அடையாளங்களையும், அற்புதங்களையுங் காணாவிட்டால், விசுவாசிக்க மாட்டீர்களென்றார். * ௧ கொரி. ௧: ௨௨.

௪௯. அதற்கு இராசாவின் மனிதன் சொன்னது, ஆண்டவரே! என் பிள்ளை சாகிறதற்கு முன்னே வாருமென்றான்.

௫௰. இயேசுவானவர் சொன்னது, நீ வீட்டிற்குப்போ. உன்னுடைய குமாரன் பிழைத்திருக்கிறானென்றார். இயேசுவானவர் சொன்ன வசனத்தை நம்பி, அந்த மனிதன் போனான்.

௫௧. அவன் போகையில், அவனுடைய ஊழியக்காரர் அவனுக்கு எதிராக வந்து, உம்முடைய குமாரன் பிழைத்திருக்கிறான் என்று அறிவித்தார்கள்.

௫௨. அப்பொழுது எவ்வளவு மணி நேரத்திலே யவனுக்குக்குணமுண்டாயிற்றென்று அவர்களிடத்தில் விசாரித்தான். அவர்கள் சொன்னது, நேற்று ஏழாம் மணிநேரத்திலே சுரம் அவனைவிட்டு நீங்கிற்றென்றார்கள்.

௫௩. அந்தநேரம், உன் குமாரன் பிழைத்திருக்கிறானென்று இயேசுவானவர் தன்னுடனே சொன்ன மணி நேரமேயென்று தகப்பனானவன் அறிந்தான். பின்பு அவனும் அவனுடைய குடும்பத்தார் அனைவரும் அவர் இடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.

௫௪. இயேசுவானவர் யூதேயாவைவிட்டுக் கலிலேயா நாட்டிற்குத்திரும்பிப்போன பொழுது, இந்த இரண்டாம் அற்புதத்தைச் செய்தார்.

௫ அதிகாரம்.

[(௧) இயேசு ஓய்வுநாளில் முப்பத்தெட்டு வருஷம் வியாதிப்பட்டிருந்தவனைக்குணமாக்கினது. (௰) அதற்காக யூதர்கள் அவரைத் துன்பப்படுத்தினது. (௰௭) அவர் பிதாவின் சாட்சியினாலும், (௩௨) யோவானுடைய சாட்சியினாலும், தம்முடைய கிரியைகளின் சாட்சியினாலும், (௩௯) வேத எழுத்துகளினாலும், தம்மை இன்னாரென்று அறிவித்து அவர்களைக்கடிந்துகொண்டது.]

அதின் பின்பு, யூதருடைய பண்டிகை உண்டானபொழுது, இயேசுவானவர் எருசலேமுக்குப்போனார்.

௨. அந்த எருசலேம் நகரத்திலே ஆட்டுவாசலின் அருகே எபிரேயு பாஷையிலே பேதெஸ்தாவென்னப்பட்ட ஒரு குளம் இருக்கின்றது. அதற்கு ஐந்து மண்டபங்களும் உண்டு.

௩. அவைகளிலே குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் முதலான அநேக வியாதிக்காரர் படுத்துக்கொண்டு சலம் அசைகிறவரைக்கும் பார்த்திருந்தார்கள்.

௪ என்னத்தினாலெனிற் சில காலங்களிலே தேவதூதன் ஒருவன் அந்தக்குளத்தில் இறங்கிச்சலத்தைக்கலக்குகிறதும், சலங்கலக்கப்பட்ட பின்பு முதலாவது, அதற்குட்படுகிறவனெவனோ அவன் எந்த வியாதிப்பட்டவனாய் இருந்தாலுங் குணம் அடைகிறதும் வழக்கமாய் இருந்தது.

௫. அதின் பொருட்டாக அங்கே முப்பத்தெட்டு வருஷம் வியாதியுள்ள ஒரு மனிதன் இருந்தான்.

௬. படுத்திருந்த அவனை இயேசுவானவர் கண்டு, அவன் அநேக நாள் வியாதியுள்ளவனென்று அறிந்து, அவனை நோக்கி, நீ சொஸ்தமடைய விரும்புகிறாயா என்றார்.

௭. வியாதிப்பட்டவன் அவருக்கு மாறுத்

தரமாகச்சொன்னது, ஆண்டவனே! சலந்
கலக்கப்படுகிறபொழுது, என்னைக்குளத்
திற் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவரும்
இல்லை. நான் நடந்து போகிறதற்கு முன்
னாக வேறொருவன் இறங்குவான் என்றான்.
௮. இயேசுவானவர் சொன்னது, * எழுந்
திரு. உன் படுக்கையை யெடுத்துக்கொண்டு
நடவென்றார். * மத். ௯: ௬.
௯. உடனே அந்த மனிதன் குணமடைந்
து தன் படுக்கையை யெடுத்துக்கொண்டு
நடந்துபோனான். அந்த நாள் ஓய்வுநா
ளாய் இருந்தது.
௰. ஆதலால், யூதர்கள் குணமாக்கப்பட்ட
வனைநோக்கி, * ஓய்வுநாளாய் இருக்கிறபடி
யால், நீ படுக்கையை யெடுத்துப்போகிற
து நியாயமல்லவென்றார்கள். * ஆச். ௬: ௨.
௰௧. அவர்களுக்கு அவன் சொன்னது,
என்னைக்குணமாக்கினவர் என்னை நோக்கி,
உன் படுக்கையை யெடுத்துக்கொண்டு நட
வென்று சொன்னார் என்றான்.
௰௨. அதற்கு அவர்கள் சொன்னது, உன்
படுக்கையை யெடுத்துக்கொண்டு நடவென்
று உன்னுடனே சொன்ன மனிதன் எவன்
என்று கேட்டார்கள்.
௰௩. அவ்விடத்தில் சனக்கூட்டம் இருந்த
படியினாலே, இயேசுவானவர் விலகி இருந்
தார்.
௰௪. ஆகையாற் குணமாக்கப்பட்டவன்
அவரை அறியவில்லை. அதற்குப்பின்பு இயே
சுவானவர் தேவாலயத்திலே யவனைக்கண்டு
இதோ, குணம் அடைந்தாய். அதிககேடு
உனக்கு வராதபடிக்கு, * இனிப்பாவஞ்
செய்யாதிருப்பாயாகவென்றார். * ௮: ௰௧.
௰௫. அப்பொழுது அந்த மனிதன்போய்த்
தன்னைக்குணமாக்கினவர் இயேசுவென்று
யூதருக்கு அறிவித்தான்.
௰௬. ஓய்வுநாளிலே அவர் அப்படிச்செய்
தபடியினாலே, யூதர்கள் இயேசுவைத்துன்
பப்படுத்தி, அவரைக்கொலைசெய்ய வகை
தேடினார்கள்.
௰௭. இயேசுவானவர் அவர்களை நோக்கி,
என் பிதா இதுவரைக்குங் கிரியை செய்து
வருகிறார். * நானுங் கிரியைசெய்து வரு
கிறேன் என்றார். * ௰௪: ௰.
௰௮. அவர் ஓய்வுநாளைக்காத்துக்கொள்
ளாதிருந்ததுமல்லாமற் பராபரனைத்தம்மு
டைய சொந்தப்பிதாவென்றுஞ் சொல்வித்
தம்மையே பராபரனுக்குச்சமமாக்கினபடி
யினாலே யூதர்கள் பின்னும் அதிகமாய் அவ
ரைக்கொலைசெய்ய வகைதேடினார்கள்.
௰௯. அப்பொழுது இயேசுவானவர் அவர்
களைநோக்கி, மெய்யாகவே நான் உங்களுக்
குச்சொல்லுகிறதாவது, பிதாவானவர் செய்
யக்குமாரன் காணுகிறதெதுவோ அதை
யேயன்றி, வேறொன்றையுந் தானாய்ச்செய்
ய மாட்டான். ஆதலால், அவர் செய்கிற
வைகள் எவைகளோ அவைகளைக்குமார
னும் அப்படியே செய்கிறான்.
௨௰. எப்படியென்றாற் பிதாவானவர் குமா
ரன் இடத்தில் அன்புகூர்ந்து, தாஞ்செய்
கிற யாவையும் அவனுக்குக்காண்பிக்கிறார்.
நீங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இ
வைகளிலும் அதிக பெரியவைகளான கிரி
யைகளையே யவனுக்குக்காண்பிப்பார்.
௨௧. எவையெனிற் பிதாவானவர் மரித்
தோரை யெழுப்பி உயிரோடிருக்கச்செய்கி
றதுபோல, குமாரனுந் தன்னுடைய இஷ்
டப்படியே மரித்தோரை உயிரோடிருக்கச்
செய்கிறார்.
௨௨. அல்லாமலும், பிதாவைக்கனம்பண்
ணுகிறதுபோல எல்லாருங் குமாரனைக்கனம்
பண்ணும்படிக்குப்பிதாவானவர் ஒருவருக்
கும் நியாயத்தீர்ப்புக்கொடாமல், * நியா
யத்தீர்ப்பின் அதிகாரம் யாவையுங் குமார
னுக்கு ஒப்புக்கொடுத்தார். * அப்போ.
௰௭: ௩௧.
௨௩. * குமாரனைக்கனம்பண்ணாமல் இருக்
கிறவன் அவரை யனுப்பின பிதாவைக்கனம்
பண்ணாமல் இருக்கிறான். ௧ யோவா. ௨:
௨௩.
௨௪ என் வசனங்களுக்குச்செவிகொடுத்
து என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவ
னுக்கு நித்திய சீவன் உண்டு. * அவன் ஆக்
கினைத்தீர்ப்புக்குள் அகப்படாமல் மரணத்
தைவிட்டு நீங்கி, சீவனுக்குட்பட்டிருக்கிற
னென்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்
லுகிறேன். * ௩: ௰௮.
௨௫. அல்லாமலும், * மரித்தோர் பராபர
னுடைய குமாரன் சத்தத்தைக்கேட்குங்
காலம்வருகின்றது. இப்பொழுதே அதுவந்
திருக்கின்றது. அதைக்கேட்கிறவர்கள் பி
ழைப்பார்களென்றுமெய்யாகவேஉங்களுக்
குச்சொல்லுகிறேன். * ௰௧: ௪௪. எபே. ௨: ௧.
௨௬. என்னத்தினாலெனிற் பிதாவானவர்
தம்மில்தாமே சீவனை உடையவராய் இருக்
கிறதுபோல, குமாரனுந் தன்னில் தானே
சீவனை உடையவனாய் இருக்கும்படி வல்ல
மையை அவனுக்குக்கொடுத்தார்.
௨௭. அல்லாமலும் அவன் மனிதனுடைய
குமாரனாய் இருக்கிறபடியினாலே நியாயத்
தீர்ப்புச்செய்யும்படிக்கு அதிகாரத்தையும்
அவனுக்குக்கொடுத்தார்.
௨௮. இதைக்குறித்து ஆச்சரியப்படா
திருங்கள். என்னத்தினாலெனிற் பிரேதக்குழி
களில் உள்ள யாவரும் அவனுடைய சத்தத்
தைக்கேட்குங் காலம் வரும்.
௨௯. அப்பொழுது * நன்மை செய்தவர்
கள் சீவனை யடையும்படிக்கும், தீமைசெய்
தவர்கள் ஆக்கினையை யடையும்படிக்கும்
எழுந்துபுறப்படுவார்கள். * தானி. ௰௨: ௨.

௩௰. * நான் தானாய் ஒன்றுஞ் செய்ய மாட்டேன், நான் கேட்கிறபடி நியாயந் தீர்க்கிறேன். நான் என்னுடைய சித்தத்தையல்ல, என்னை யனுப்பின பிதாவினுடைய சித்தத்தையே தேடுகிறபடியால் என்னுடைய தீர்ப்பு நீதியாய் இருக்கும். *௬:௩௮

௩௰௧. நான் மாத்திரம் என்னைக்குறித்துச் சாட்சி கொடுத்தால், என் சாட்சி மெய்யென்று கொள்ளவேண்டாம்.

௩௰௨. வேறொருவனும், * என்னைக்குறித்துச்சாட்சிகொடுக்கிறான். அவன் என்னைக் குறித்துக்கொடுக்கிற சாட்சி மெய்யென்று அறிந்திருக்கிறேன். * மத்தே. ௩: ௰௭.

௩௰௩. நீங்கள் * யோவான் இடத்திற்கு மனிதரை யனுப்பினபொழுது, அவனும் மெய்யான சாட்சியைக்கொடுத்தான். * ௧: ௰௫.

௩௰௪. அப்படியிருந்தும் நான் மனிதராலே சாட்சியைக்கொள்ளமாட்டேன். நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கு இவைகளைச்சொல்லுகிறேன்.

௩௰௫. அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காகவே இருந்தான். நீங்களுஞ் சிலகாலம் அவனுடைய ஒளியிலே களிகூரமனதாய் இருந்தீர்கள்.

௩௰௬. யோவானுடைய சாட்சியிலும் அதிகமேன்மையான சாட்சி எனக்குண்டு. அதென்னவெனில், நான் நிறைவேற்றும்படிக்குப்பிதா எனக்குக்கொடுத்த கிரியைகளே. நான் செய்துவருகிற இந்தக்கிரியைகள் பிதா என்னை யனுப்பினாரென்கிறதற்கு என்னைக்குறித்துச்சாட்சி கொடுக்கின்றன.

௩௰௭. அதுவுமல்லாமல், என்னை யனுப்பின பிதாவே யென்னைக்குறித்துச்சாட்சி கொடுத்தார். நீங்கள் அவருடைய சத்தத்தை யொருக்காலும் கேட்கவில்லையா! அவருடைய தரிசனையைக்காணவில்லையா!

௩௰௮. அப்படியிருந்தும் அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசியாதபடிக்கு, அவருடைய வசனத்தை உங்களுக்குள்ளே தரித்துக்கொள்ளாமல் இருக்கிறீர்கள்.

௩௰௯. வேதவாக்கியங்களினாலே நித்திய சீவன் உங்களுக்கு உண்டாகுமென்று எண்ணுகிறபடியால், நீங்கள் அவைகளை ஆராய்ந்து பாருங்கள். அவைகளுமே யென்னைக்குறித்துச்சாட்சி கொடுக்கின்றன.

௪௰. அப்படியிருந்துஞ் சீவனை அடையும்படிக்கு நீங்கள் என்னிடத்தில்வர மனதில்லை.

௪௰௧. நான் மனிதராற் புகழ்ச்சியை எடுத்துக்கொள்ளமாட்டேன்.

௪௰௨. நீங்கள் தேவ அன்பில்லாதவர்கள் என்று அறிந்திருக்கிறேன்.

௪௰௩. நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும் நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை. வேறொருவன் தன் சொந்த நாமத்தினாலே வந்தால் அவனை ஏற்றுக்கொள்வீர்கள்.

௪௰௪. நீங்கள் பராபரனாலே மாத்திரம் உண்டாகும் புகழ்ச்சியைத்தேடாமல் * ஒருவரால் ஒருவர் புகழ்ச்சியை யெடுத்துக்கொள்ளுகிறவர்களாய் இருக்க எப்படிவிசுவாசிப்பீர்கள். *௰௨: ௪௩.

௪௰௫. பிதாவின் இடத்தில் நான் உங்கள் மேற் குற்றஞ் சாற்றுவேனென்று நினையாதிருங்கள். நீங்கள் நம்பிக்கொள்ளுகிற மோசே யிருக்கிறாரே அவரே உங்கள்மேற் குற்றஞ் சாற்றுவார்.

௪௰௬. எப்படியெனில், மோசே * என்னைக்குறித்தெழுதினார். ஆகையால், நீங்கள் அவரை விசுவாசித்தால் என்னையும் விசுவாசிப்பீர்கள். * ௧ மோ. ௩: ௰௫—௨௨. ௰௮: ௪௯, ௰. ௫ மோ. ௰௮: ௰௫.

௪௰௭. அவர் எழுதினதை நீங்கள் விசுவாசியாமல் இருந்தால் என்னுடைய வசனங்களை யெப்படி விசுவாசிப்பீர்களென்றார்.

௬ அதிகாரம்.

[(௧) கிறிஸ்து ஐந்து அப்பங்களினாலும், இரண்டு மீன்களினாலும் ஐயாயிரம்பேரைப் புசிப்பித்தது. (௰௫) அதின் நிமித்தஞ் சனங்கள் அவரை இராசாவாக்கும்படி பிரயத்தனம் பண்ணினது. (௰௬) அவர் அவர்களை விட்டுப்போய், தம்முடைய சீஷர்கள் இடத்திற்குக்கடலின் மேல் நடந்தது. (௨௬) பின்பு தம்மைப்பின்றொடர்ந்தவர்களையும், மாம்ச சிந்தையோடே செவிகொடுத்த பேர்களையுங் கடிந்துகொண்டு, (௩௨) விசுவாசிகளுக்குச்சீவ அப்பமென்று தம்மை அறிவித்தது. (௬௬) அநேக சீஷர்கள் அவரைவிட்டுப்பிரிந்தது. (௬௮) பேதுரு அவரைக்குறித்து, நல்லறிக்கை பண்ணினது. (௭௰) அவர் யூதாவைப்பசாசென்றுசொன்னது.]

அதின் பின்பு இயேசுவானவர் கலிலேயாக்கடலென்றும், திபேரியாக் கடலென்றும் பேர்கொண்ட கடலின் அக்கரைக்குப்போனார்.

௨. * வியாதிப்பட்டவர்கள் இடத்தில் அவர் செய்த அற்புதங்களைத்திரளான சனங்கள் கண்டபடியால் அவருக்குப்பின் சென்றார்கள். * மத். ௰௪: ௰௪—௨௧.

௩. இயேசுவானவர் மலையில் ஏறி அங்கே தம்முடைய சீஷருடனேகூட உட்கார்ந்தார்.

௪. அக்காலத்திலே யூதருடைய பஸ்காவென்னும் பண்டிகைசமீபமாய் இருந்தது.

௫. அப்பொழுது இயேசுவானவர் தம்முடைய கண்களை உயர்த்தி, திரளான சனங்கள் தம்மிடத்திற்கு வரக்கண்டு பிலிப்பை நோக்கி, இவர்களுக்குச்சாப்பாடு கொடுக்

கும்படிக்கு நாம் எங்கே அப்பங்களைக் கொள்ளலாமென்றார்.
௬. (அவர்களைக்குறித்துச்) செய்யவேண்டுவதை அவர் அறிந்தும் அவனைச்சோதிக்கும்படிக்கு இப்படிச்சொன்னார்.
௭. பிலிப்பு அவருக்கு மாறுத்தரமாகச் சொன்னது, இவர்களில் ஒவ்வொருவன் கொஞ்சங் கொஞ்சமாக எடுத்துக்கொண்டாலும் இருநூறு தேநாரியுபணத்து அப்பங்களும் போதாதென்றான்.
௮. அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனுமாய், சீமோன் பேதுருவின் சகோதரனுமாய் இருந்த அந்திரேயா அவரை நோக்கி,
௯. இங்கே ஒரு பையன் இருக்கிறான் அவன் கையிலே வாற்கோதுமை அப்பங்களைந்தும், மீன்களில் இரண்டும் உண்டு. இவ்வளவு சனங்களுக்கும் அவைகள் எம்மாத்திரமென்றான்.
௰. அப்பொழுது இயேசுவானவர் சனங்களை உளுக்காரப்பண்ணுங்களென்றார். அவ்விடத்திலே மிகுந்த புல்விருந்தது. அதின்மேல் ஏறக்குறைய ஐயாயிரம்பேர் உளுக்காந்தார்கள்.
௰௧. பின்பு இயேசுவானவர் அந்த அப்பங்களையெடுத்துக்கொண்டு, தோத்திரம்பண்ணிச்சீஷருக்குக்கொடுத்தார். சீஷர் அவைகளைப்பந்தியில் இருக்கிறவர்களுக்குக்கொடுத்தார்கள். அப்படிப்போல மீன்களிலும் அவர்கள் இஷ்டம் எவ்வளவோ அவ்வளவு அவர்களுக்குக்கொடுத்தார்.
௰௨. அவர்கள் திர்ப்தி அடைந்தபின்பு அவர் தம்முடைய சீஷரை நோக்கி, ஒன்றுங் கெட்டுப்போகாதபடிக்குச்சேஷமானவைகளைச்சேகரித்துக்கொள்ளுங்களென்றார்.
௰௩. அந்தப்படி அவர்கள் சேகரித்து வாற்கோதுமை அப்பங்களைந்திற் சாப்பிட்டவர்கள் சேஷப்படுத்தினவைகளாற் பன்னிரண்டு கூடைகளை நிரப்பினார்கள்.
௰௪. அப்பொழுது இயேசுவானவர் செய்த அற்புதத்தைச்சனங்கள் கண்டு, மெய்யாய் இவர் உலகத்தில் வரவேண்டிய * தீர்க்கதரிசியானவரென்றார்கள். * லூக். ௭: ௰௬.
௰௫. ஆதலால், அவர்கள் வந்து தம்மை *இராசாவாக்கும்படிக்குப்பிடித்துக்கொண்டுபோகமனதாய் இருக்கிறதை இயேசுவானவர் அறிந்து, மறுபடியும் விலகித்தனியே மலையின்மேல் ஏறினார். * ௰௮: ௩௬.
௰௬. சாயங்காலமானபொழுது அவருடைய சீஷர் * கடற்கரையில் இறங்கி, படவில் ஏறிக்கடலின் அக்கரையான கப்பர்நாகூம் ஊருக்குப்போகப்புறப்பட்டார்கள். அப்பொழுது இருட்டாய் இருந்தது. இயேசுவானவரும் அவர்களிடத்திற்சேரவில்லை. * மத். ௰௪: ௨௨, ௨௫. மாற். ௬. ௪௫—௫௨.
௰௭. அல்லாமலும், பெருங்காற்றடித்தபடியினாலே கடல் எழும்பிற்று.
௰௮. அப்படி அவர்கள் ஏறக்குறைய இருபத்தைந்து அல்லது முப்பது ஸ்தாதிவழிதூரத்தில் தடுப்பு வலித்துக்கொண்டிருக்கிறபொழுது,
௰௯. இயேசுவானவர் கடலின்மேலே நடந்து படவுக்குச்சமீபமாய் வருகிறதைக் கண்டு பயந்தார்கள்.
௨௰. அவர் அவர்களுடனே சொன்னது, நான் தான் பயப்படாதிருங்களென்றார்.
௨௧. அப்பொழுது அவரைப்படவில் ஏற்றிக்கொள்ள விரும்பினார்கள்; உடனே படவு அவர்கள்போகிற கரையைப்பிடித்தது.
௨௨. மறுநாளிலே கடலின் அக்கரையிலே நின்ற சனங்கள் அவருடைய சீஷர் ஏறின அந்த ஒரேபடவு தவிர, அங்கேவேறொருபடவில்லையென்றும், இயேசுவானவர் தம்முடைய சீஷருடனே கூடப்படவிலேறாமல் இருக்க, அவருடைய சீஷர்மாத்திரம் போனார்களென்றும் அறிந்தார்கள்.
௨௩. கர்த்தர் தோத்திரஞ்செய்த பின்பு, அவர்கள் அப்பஞ்சாப்பிட்ட இடத்திற்குச் சமீபமாய்த்திபேரியாவில் இருந்து வேறே படவுகளும் வந்தன.
௨௪. அப்பொழுது இயேசுவானவரும் அங்கேயில்லை. அவருடைய சீஷரும் இல்லையென்று சனங்கள் கண்டு, உடனே படவுகளில் ஏறி இயேசுவைத்தேடிக் கப்பர்நாகூம் ஊருக்கும் போனார்கள்.
௨௫. கடலின் அக்கரையிலே அவர்கள் அவரைக்கண்டபொழுது இரபீ நீர் எப்பொழுது இங்கே வந்தீரென்றார்கள்.
௨௬. இயேசுவானவர் அவர்களை நோக்கி, நீங்கள் அற்புதங்களைக்கண்டதினாலல்ல, அந்த அப்பத்தைப்புசித்துத்திர்ப்தியடைந்ததினாலே என்னைத்தேடுகிறீர்களென்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன்.
௨௭. அழிந்துபோகிற போசனத்திற்காகவல்ல, நித்திய சீவனுள்ளவரைக்கும் நிலைநிற்கிற போசனத்திற்காகவே பிரயாசப்படுங்கள். அதை * மனிதனுடைய குமாரன் உங்களுக்குக்கொடுப்பான். பராபரனென்னும் பிதா அதற்காக அவனை முத்திரைப்படுத்தினாரேயென்றார். * ௪: ௰௪.
௨௮. அதற்கு அவர்கள் சொன்னது, பராபரனுக்கு ஏற்ற கிரியைகளை நடத்தும்படிக்கு நாங்கள் என்னசெய்யலாமென்றார்கள்.
௨௯. இயேசுவானவர் சொன்னது, பராபரன் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிக்கிறதே * அவருக்கு ஏற்றகிரியையாய் இருக்கின்றதென்றார். * அப். ௰௬: ௩௧.
௩௰. அதற்கு அவர்கள் சொன்னது, அப்

படியானால், உம்மை விசுவாசிக்கும்படிக்கு நாங்கள் காணத்தக்கதாக எந்த அற்புதத்தைச்செய்கிறீர். என்னத்தை நடப்பிக்கிறீர்.

௩௧. * வானத்தில் இருந்து அப்பத்தையவர்களுக்குப் புசிக்கக்கொடுத்தாரென்றெழுதி இருக்கிறபடி நம்முடைய் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப்புசித்தார்களே என்றார்கள். * ௨ மோ. ௰௬: ௪—௰௫.

௩௨. அதற்கு இயேசுவானவர் சொன்னது, வானத்தில் இருந்து, அப்பத்தை மோசே உங்களுக்குக்கொடுக்கவில்லை. என் பிதாவானவரே வானத்தில் இருந்து மெய்யான அப்பத்தை உங்களுக்குக்கொடுக்கிறாரென்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன்.

௩௩. வானத்தில் இருந்திறங்கி வந்து, உலகத்திற்குச்சீவனைக்கொடுக்கிறவரே பராபரன் அருளிச்செய்கிற அப்பமாய் இருக்கிறாரென்றார்.

௩௪. அப்பொழுது அவர்கள் சொன்னது, ஆண்டவரே! அந்த அப்பத்தையெங்களுக்கு எப்பொழுதுந் தாரும் என்றார்கள்.

௩௫. இயேசுவானவர் சொன்னது, சீவ அப்பம் நானே. என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியை அடையான். என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலுந் தாகமடையான்.

௩௬. நான் உங்களுக்குச்சொன்னபடி நீங்கள் என்னைக்கண்டும் விசுவாசியாயல் இருக்கிறீர்கள்.

௩௭. பிதாவானவர் எனக்குக்கொடுக்கிற யாவரும் என்னிடத்தில் வருகிறார்கள்.

௩௮. என்னிடத்தில் வருகிறவனை நான் தள்ள மாட்டேன். என்னத்தினாலெனில், என் சித்தத்தின்படியல்ல, என்னை யனுப்பினவருடைய சித்தத்தின்படியே செய்யும்பொருட்டாய் நான் வானத்திலிருந்து இறங்கிவந்தேன்.

௩௯. அவர் எனக்குக்கொடுத்தவர்களில் * ஒருவனையும் நான் இழந்துபோகாமற் கடைசிநாளிலே யவர்களை யெழுப்பும்படிக்கு என்னை யனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கின்றது. * ௰: ௨௮, ௨௯. ௰௭: ௰௨.

௪௰. குமாரனைக்கண்டு அவனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் நித்திய சீவனை யடையும்படிக்கும், கடைசிநாளிலே நான் அவனை யெழுப்பும்படிக்கும் என்னை யனுப்பினவருடைய சித்தமாகவே இருக்கின்றதென்றார்.

௪௧. நான் வானத்தில் இருந்துவந்த அப்பமாய் இருக்கிறேன் என்று அவர் சொன்னபடியினாலே, யூதர்கள் அவரைக்குறித்து முறுமுறுத்து,

௪௨. * இவர் யோசேப்பினுடைய குமாரனாகிய இயேசு அல்லவா? இவருடைய தகப்பனையும், தாயையும் அறிந்திருக்கிறோமே. அப்படியிருக்க, நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேனென்று எப்படிச் சொல்லுகிறார் என்றார்கள். * லூக். ௪: ௨௨.

௪௩. அதற்கு மாறுத்தரமாக இயேசுவானவர் சொன்னது, உங்களுக்குள்ளே முறுமுறுக்கவேண்டாம்.

௪௪. என்னை யனுப்பினபிதா ஒருவனை யிழுத்துக்கொள்ளாவிட்டால், அவன் என்னிடத்தில் வரமாட்டான். கடைசிநாளில் நானே யவனை எழுப்புவேன்.

௪௫. எல்லாரும் பராபரனாலே போதிக்கப்பட்டு இருப்பார்களென்று * தீர்க்கதரிசன புஸ்தகத்தில் எழுதி யிருக்கின்றதே. ஆகையாற் பராபரனிடத்திற் கேட்டுக்கற்றுக்கொள்ளுகிறவன் எவனோ அவன் என்னிடத்தில் வருகிறான். * ஏசா. ௫௪: ௰௩.

௪௬. பராபரனை யொருவன் கண்டான் என்று நான் சொல்லவில்லை. * பராபரனில் இருந்து வந்தவன் மாத்திரமே பிதாவைக்கண்டான். * ௧: ௰௮.

௪௭. * என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவனுக்கு நித்திய சீவன் உண்டென்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன். * ௩: ௰௬—௩௬.

௪௮. சீவ அப்பம் நானே. உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப்புசித்தும்பின்பு மரித்தார்கள்.

௪௯. வானத்தில் இருந்து வந்த இந்த அப்பத்தைப்புசிக்கிறவன் மரியாமல் இருப்பான்.

௫௰. வானத்தில் இருந்து இறங்கின சீவன் உள்ள அப்பம் நானே. இந்த அப்பத்தைப்புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான். நான் கொடுக்கும் அப்பம் உலகத்தார் சீவனை யடைவதற்கு நான் கொடுக்கும் என் மாம்சமே யென்றார்.

௫௧. அப்பொழுது யூதர்கள் இவர் தம்முடைய மாம்சத்தை எப்படி நமக்குப்புசிக்கக்கொடுப்பார் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம்பண்ணினார்கள்.

௫௨. ஆதலால் இயேசுவானவர் அவர்களை நோக்கி, நீங்கள் மனித குமாரனுடைய மாம்சத்தைப்புசியாமலும், அவருடைய இரத்தத்தைப்பானம்பண்ணாமலும் இருந்தால், உங்களுக்குள்ளே சீவன் இருக்கமாட்டாதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௫௩. என் மாம்சம் மெய்யான போசனமாயும், என் இரத்தம் மெய்யான பானமாயும் இருக்கின்றது.

௫௪. ஆகையால் என் மாம்சத்தைப்புசித்து, என் இரத்தத்தைப்பானம்பண்ணுகிற

வனுக்கு நித்திய சீவன் உண்டு. கடைசி நாளில் நானே அவனை யெழுப்புவேன்.
௫௫. என் மாம்சத்தைப்புசித்து, என் இரத்தத்தைப்பானம்பண்ணுகிறவன் * எனக்குள்ளே தங்குகிறான். நானும் அவனுக்குள்ளே தங்குகிறேன். * ௰௫: ௪.
௫௬. என்னையனுப்பின சீவனுள்ள பிதாவினாலே நான் பிழைத்து இருக்கிறதுபோல என்னைப்புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்.
௫௭. இதுவே வானத்திலிருந்து இறங்கின அப்பம். இது உங்கள் பிதாக்கள் புசித்த மன்னாவைப்போல் அல்ல, அவர்கள் மரித்தார்களே, இந்த அப்பத்தைப்புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான் என்றார்.
௫௮. கப்பர்நாகூம் ஊரிலுள்ள செப ஆலயத்திலே அவர் உபதேசிக்கையில், இவைகளைத்திருவுளம்பற்றினார்.
௫௯. அவருடைய சீஷரில் அநேகர் அவைகளைக்கேட்டபொழுது, இது கடினமான உபதேசம், ஆர் இதைக்கேட்பார்கள் என்றார்கள்.
௬௰. சீஷர் அதைக்குறித்து மொறுமொறுக்கிறார்கள் என்று இயேசுவானவர் தமது உள்ளத்திலே யறிந்து, அவர்களுடனே சொன்னதாவது; இதுவா உங்களுக்கு இடச்சை யுண்டாக்குகின்றது.
௬௧. மனிதனுடைய குமாரன் * தான் முன் இருந்தவிடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் (எப்படியிருக்கும்.) * ௩: ௰௩. மாற். ௰௬: ௰௯.
௬௨. ஆவியே உயிர் உண்டாக்குகிறது. * மாம்சம் ஒன்றுக்கும் உதவாது. நான் உங்களுக்குச்சொல்லுகிற வசனங்களே ஆவியாயும், சீவனாயும் இருக்கின்றனவென்று சொல்வி, * ௨ கொரி. ௩: ௬.
௬௩. பின்பு இயேசுவானவர் * விசுவாசம் இல்லாதவர்கள் இன்னாரென்றும், தம்மைக் காட்டிக்கொடுப்பவன் இன்னானென்றும், ஆதிமுதல் அறிந்து வந்தபடியால், அவர் பின்னுஞ்சொன்னது, உங்களிற் சிலர் விசுவாசிக்கிறவர்களல்ல, * ௨: ௨௪, ௨௫.
௬௪. அதினாலே * ஒருவன் என் பிதாவினாலே யருள் கொள்ளாவிட்டால் என்னிடத்தில் வரமாட்டானென்று, (முன்னே) உங்களுக்குச்சொன்னேன் என்றார். * ௪௪. ௪௫.
௬௫. அது முதற்கொண்டு அவருடைய சீஷரில் அநேகர் அப்புறம் அவருடனே கூட நடவாமற் பின்வாங்கிப்போனார்கள்.
௬௬. அப்பொழுது இயேசுவானவர் பன்னிருவரையும் நோக்கி, போகும்படிக்கு உங்களுக்கும் மனதில்லையாவென்றார்.
௬௭. அதற்குச்சீமோன் பேதுரு சொன்னது, ஆண்டவரே! யாரிடத்திற்குப்போவோம். உம்மிடத்தில் நித்திய சீவன் உள்ள வசனங்கள் இருக்கின்றனவே.
௬௮. அல்லாமலும் * நீரே சீவனுள்ள பராபரனுடைய குமாரனாகிய கிறிஸ்தென்று நாங்கள் விசுவாசித்து அறிந்துகொண்டோம் என்றான். * ௪: ௫௰. மத். ௰௬: ௰௬.
௬௯. இயேசுவானவர் சொன்னது, பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ளவில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் * பசாசாய் இருக்கிறான் என்றார். * ௮: ௪௪.
௭௰. பன்னிருவரில் ஒருவனாகிய சீமோனின் குமாரன் யூதாஸ்காரியோத்தென்பவன் தம்மைக்காட்டிக்கொடுப்பதற்கு ஏதுவாயிருந்தபடியினாலே, அவனைக்குறித்து இப்படிச்சொன்னார்.

௭ அதிகாரம்.

[(௧) இயேசு தம்முடைய இனத்தாருடைய வீண்பெருமையைக்கடிந்துகொண்டது. (௰) அவர் கலிலேயாவிலிருந்து கூடாரப்பண்டிகைக்குப்போய், (௰௪) தேவாலயத்திற் பிரசங்கம்பண்ணினது. (௩௰) சனங்கள் பலவிதமாய் அவரைக்குறித்துப் பேசினது. (௪௫) சேவகர் அவரைப்பிடியாததினாலே பரிசேயர் அவர்களையும், அவருக்கு இசைந்து பேசின நிக்கோதேமையுங் கடிந்துகொண்டது.]

அதின் பின்பு இயேசுவானவர் யூதர்கள் தம்மைக்கொலைசெய்யத்தேடினபடியினாலே, யூதேயாநாட்டிலே சஞ்சரிக்க மனதில்லாமற் கலிலேயாநாட்டிலே சஞ்சரித்து வந்தார்.
௨. பின்பு * யூதருடைய கூடாரப்பண்டிகை சமீபமாயிற்று. * ௩ மோ. ௨௩: ௩௪.
௩. அப்பொழுது அவருடைய சகோதரர் அவரை விசுவாசியாதபடியினாலே,
௪. அவரை நோக்கி, நீர் செய்கிறகிரியைகளை உம்முடைய சீஷரும் பார்க்கும்படிக்கு, நீர் இவ்விடம்விட்டு யூதேயா நாட்டுக்குப்போகவேண்டும்.
௫. பிரபலமாயிருக்க விரும்புகிற எவனும் ஒரு காரியத்தையாகிலும், அந்தரங்கத்திலே செய்யமாட்டானே. நீர் இப்படிப்பட்டவைகளைச் செய்கிறபடியால், உம்மை உலகத்திற்கு வெளிப்படுத்தலாமே யென்றார்கள்.
௬. அவர்களுடனே இயேசுவானவர்சொன்னது, * என்னுடைய நேரம் இப்பொழுது வரவில்லை. உங்கள் நேரம் எப்பொழுதும் எத்தனமாயிருக்கின்றது. * ௨: ௪.
௭. உலகத்தார் உங்களைப்பகைக்கமாட்டார்கள். * அவர்களுடைய கிரியைகள் பொல்லாதவைகளென்று நான் சாட்சி

கொடுக்கிறபடியினாலே, என்னைப்பகைக்கி
றார்கள். * ௰௫: ௰௮.
௮. நீங்கள் இந்தப்பண்டிகைக்குப்போங்
கள் என்னுடைய நேரம் நிறைவேறாதப
டியால், நான் இப்பொழுது போக
மாட்டேன் என்றார்.
௯. இவைகளை அவர்களுடனே சொல்லிப்
பின்னுங் கலிலேயாநாட்டில் இருந்தார்.
௰. அவருடைய சகோதரர் போனபின்பு
அவரும் வெளியரங்கமாக அல்ல, அந்த
ரங்கமாய்ப்பண்டிகைக்குப்போனார்.
௰௧. பண்டிகை காலத்திலே யூதர்கள்
அவரைத்தேடி அவர் எங்கேயிருக்கிறார்
என்றார்கள்.
௰௨. அல்லாமலுஞ் சனங்களுக்குள்ளே அ
வரைக்குறித்து மிகுந்த பேச்சுண்டாயிற்
று. * சிலர் அவர் நல்லவரென்றும், சி
லர் அப்படியல்ல, அவன் சனங்களை வஞ்
சிக்கிறவனென்றுஞ் சொல்லிக்கொண்டார்
கள். * ௯: ௰௬. ௰: ௰௯—௨௧.
௰௩. அவர்கள் யூதருக்குப்பயப்படுகிறவர்
கள் ஆனபடியினாலே, ஒருவனாகிலும் அ
வரைக்குறித்துத்தாராளமாய்ப்பேசவில்லை.
௰௪. ஏறக்குறையப்பாதிப்பண்டிகை தீர்ந்
தபொழுது, இயேசுவானவர் தேவாலயத்
திற்குப்போய் உபதேசம் பண்ணினார்.
௰௫. அப்பொழுது யூதர்கள் ஆச்சரியப்
பட்டுக்கல்லாதவராகிய இவர் வேதவாக்கி
யங்களை யெப்படி யறிந்தார் என்றார்கள்.
௰௬. அவர்களுடனே இயேசுவானவர்
சொன்னது, நான் பண்ணுகிற உபதேசம்
என்னுடையதல்ல. என்னை யனுப்பினவ
ருடையதாய் இருக்கின்றது.
௰௭. இந்த உபதேசம் பராபரனால் உண்
டாய் இருக்கிறதென்பதும், அல்லது நான்
என்னாலே பேசுகிறேனென்பதும் அவருடை
ய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெ
வனோ அவனுக்கே தெரியும்.
௰௮. தன்னாலே பேசுகிறவன் தனக்கே புக
ழ்ச்சி வரத்தேடுகிறவன், தன்னை அனுப்பின
வருக்குப்புகழ்ச்சி வரத்தேடுகிறவன் சத்தி
யமுள்ளவன். அவன் இடத்திலே கபடம்
இராது.
௰௯. மோசேயானவர் நியாயப்பிரமாணத்
தை உங்களுக்குக்கொடுக்கவில்லையா? அப்
படி இருந்தும் உங்களில் ஒருவனும் அந்த
நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறதில்லை.
என்னத்திற்காக நீங்கள் என்னைக்கொலை
செய்யத்தேடுகிறீர்கள் என்றார்.
௨௰. அதற்குச்சனங்கள் சொன்னது, * நீ
பசாசையுடையவன். எவன் உன்னைக்
கொலைசெய்யத்தேடுகிறான் என்றார்கள்.
* ௮: ௪௮.
௨௧. இயேசுவானவர் சொன்னது, * ஒரு
கிரியையைச்செய்தேன். அதைக்குறித்து
நீங்கள் எல்லாரும் அதிசயப்படுகிறீர்கள்.
* ௫: ௧—௯.
௨௨. விருத்தசேதனம் மோசேயினாலே
யல்ல, * பிதாக்களால் உண்டாயிற்று.
(பின்பு) மோசே உங்களுக்கு விருத்தசேத
னத்தை யேற்படுத்தினார். அந்த விருத்தசே
தனத்தை நீங்கள் மனிதரில் ஓய்வுநாளிலே
யும் பண்ணுகிறீர்கள். * ௧ மோ. ௰௭: ௰.
௨௩. மோசேயின் நியாயப்பிரமாணத்
தைத்தள்ளாதபடிக்கு ஒருமனிதன் விருத்த
சேதனத்தை ஓய்வுநாளிலே பெறலாமென்
றால், நான் ஒரு மனிதன் முழுவதையும் ஓய்
வுநாளிலே சுகமாக்கினதினாலே நீங்கள் என்
மேல் எரிச்சலாய் இருக்கலாமா!
௨௪. புறம்பே தோன்றுகிறபடி தீர்மானம்
பண்ணாமல் நீதியின்படியே தீர்மானம்பண்
ணுங்கள் என்றார்.
௨௫. அப்பொழுது எருசலேம் நகரத்தா
ரிற் சிலர் சொன்னது, இவனையல்லவா கொ
லைசெய்யத்தேடுகிறார்கள்.
௨௬. இதோ இவன் தாராளமாய்ப்பேசுகி
றான். அவர்கள் இவனுடனே ஒன்றுஞ்
சொல்லவில்லையே. இவன் மெய்யான கி
றிஸ்துவாய் இருக்கிறானென்று அண்டவர்
கள் உண்மையாய் அறிந்தார்களா?
௨௭. நாம் இவன் வந்த இடத்தை யறிந்
திருக்கிறோம். கிறிஸ்து வரும்பொழுது
அவர் வந்த இடத்தை யொருவரும் அறிய
மாட்டார்களே யென்றார்கள்.
௨௮. அப்பொழுது தேவாலயத்தில் உப
தேசிக்கிற இயேசுவானவர் கூப்பிட்டதாவ
து; என்னை யறிந்திருக்கிறீர்களா? நான் பு
றப்பட்டு வந்த இடத்தையும் அறிந்திருக்கி
றீர்களா? நான் என் சுயமாய் வரவில்லை.
என்னை யனுப்பினவர் சத்தியமுள்ளவர்.
அவரை நீங்கள் அறியாதிருக்கிறீர்கள்.
௨௯. நான் அவரால் வந்திருக்கிறபடியினா
லும், அவர் என்னை யனுப்பினபடியினாலும்
நானே யவரை அறிந்திருக்கிறேன் என்றார்.
௩௰. அப்பொழுது அவரைப்பிடிக்க வகை
தேடினார்கள். * அவருடைய நேரம் அக்கா
லத்தில் வாராதபடியால் ஒருவனும் அவர்
மேலே கைகளைப்போடவில்லை. * ௮: ௨௰.
௩௧. அக்காலத்திற் சனங்களில் அநேகர்
* அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாகி,
கிறிஸ்து வரும்பொழுது இவர் செய்கிற
அற்புதங்களிலும் அதிகமானவைகளை அவர்
செய்வாராவென்றார்கள். * ௮: ௩௰.
௩௨. சனங்கள் அவரைக்குறித்து இப்ப
டிப்பேசிக்கொண்டிருக்கிறதைப் பரிசேயர்
கேட்டபொழுது அவர்களும், பிரதான ஆ
சாரியரும் அவரைப்பிடித்துக்கொண்டு வ
ரும்படிக்குச்சேவகரை அனுப்பினார்கள்.
௩௩. ஆதலால், இயேசுவானவர் சொன்ன
து; நான் * இனிச்சில காலமாத்திரம் உங்க

னுடனேகூடவிருந்து பின்பு என்னை யனுப்
பினவர் இடத்திற்குப்போவேன். * ௰௬: ௫.
௩௪. * நீங்கள் என்னைத்தேடிக்காணமற்
போவீர்கள். அல்லாமலும், நான் இருக்
கும் இடத்திற்கு நீங்கள் வரமாட்டீர்கள்
என்றார். * ௮: ௨௧.
௩௫. அப்பொழுது யூதர்கள் தங்களுக்குள்
ளே பேசிக்கொண்டது, இவரை நாம் கா
ணாதபடிக்கு இவர் எங்கே போவார். கிரேக்
கருக்குள்ளே சிதறி இருக்கிறவர்கள் இடத்
திற் போவாரா! கிரேக்கருக்கு உபதேசம்
பண்ணுவாரா?
௩௬. என்னைத்தேடிக்காணமற் போவீர்கள்
என்றும், நான் இருக்கும் இடத்திற்கு நீங்
கள் வரமாட்டீர்களென்றும் அவர் சொன்
ன வசனம் எப்படி இருக்கிறதென்றார்கள்.
௩௭. பின்பு, பண்டிகையின் கடைசியும்,
பெரிதுமான நாளிலே இயேசுவானவர் நின்
று கூப்பிட்டதாவது; ஒருவன் தாகமாய்
இருந்தால் என்னிடத்தில் வந்து பானம்
பண்ணக்கடவன்.
௩௮. வேதவாக்கியஞ் சொன்னபடி என்னி
டத்தில் விசுவாசமாய் இருப்பவனெவனோ
அவன் உள்ளத்தில் இருந்து * ஜீவத்தண்ணீ
ருள்ள நதிகள் ஓடுமென்றார். * ௪: ௰௪.
ஏசா. ௪௪: ௩, ௫௮: ௰௧. யோவே. ௩: ௧.
௩௯. இப்படி அவர் தம்மிடத்தில் விசுவாச
மாகிறவர்கள் அடையும் ஆவியைக்குறித்
துச்சொன்னார். இயேசுவானவர் அப்பொ
ழுது மகிமையாக்கப்படாதபடியினாலே,
அந்தப்பரிசுத்த ஆவி அக்காலத்திலே தோ
ன்றவில்லை.
௪௰. சனங்களில் அநேகர் அந்த வசனத்
தைக்கேட்டபொழுது இவர் மெய்யாய்த்
தீர்க்கதரிசியானவர் என்றார்கள்.
௪௧. வேறு சிலர் இவர் கிறிஸ்து என்றார்
கள். வேறு சிலர் சொன்னது, கிறிஸ்து
* கலிலேயா நாட்டில் இருந்தா வருவார்?
* ௧: ௪௬.
௪௨. * தாவீதின் சந்ததியிலும், தாவீ
திருந்த † பெத்லேகேமூரிலுமிருந்து கிறிஸ்
து வருவாரென்று வேதத்திலே சொல்லி
இருக்கவில்லையாவென்றார்கள். * ௨ சாமு.
௭: ௰௨, ௰௩. † மிகா. ௫: ௧.
௪௩. இவ்விதமாய் அவரைக்குறித்துச்சன
ங்களுக்குள்ளே பிரிவினை உண்டாயிற்று.
௪௪. அல்லாமலும், அவர்களிற் சிலர் அவ
ரைப்பிடிக்க மனதுள்ளவர்களாய் இருந்
தார்கள். ஆகிலும், ஒருவரும் அவர்மேற்
கைகளைப்போடவில்லை.
௪௫. பின்பு அந்தச்சேவகர் பிரதான ஆசா
ரியர் இடத்திற்கும், பரிசேயர் இடத்திற்குத்
திரும்பிப்போனார்கள். அவர்களை நோக்கி,
என்னத்தினாலே நீங்கள் அவனைக்கொண்டு
வரவில்லையென்றார்கள்.
௪௬. சேவகர் மாறுத்தரமாகச்சொன்ன
து, அந்த மனிதன் பேசுகிறதுபோல ஒருக்
காலும் ஒருவரும் பேசவில்லையென்றார்கள்.
௪௭. அதற்குப்பரிசேயர் சொன்னது, நீங்
களும் வஞ்சிக்கப்பட்டீர்களா?
௪௮. பெரியோர்களிலாவது, பரிசேயரி
லாவது ஒருவனாயினும் அவன்மேல் விசுவா
சமாய் இருக்கிறதுண்டா?
௪௯. வேதத்தை அறியாத சனங்கள்மாத்
திரஞ் சபிக்கப்பட்டவர்களென்றார்கள்.
௫௰. அவர்களில் ஒருவனுமாய், முன்னே
* இராத்திரியில் அவரிடத்திற் போனவனு
மாய் இருந்த நிக்கோதேமு என்பவன் அப்
பொழுது அவர்களை நோக்கி, * ௩: ௧, ௨.
௰௯: ௩௯.
௫௧. நாம் ஒரு மனிதனைச்சோதித்து, அவ
னுடைய செய்கைகளை அறிகிறதற்குமுன்
னே அவனை ஆக்கினைக்குட்படுத்தலாம்
என்று நம்முடைய நியாய சாஸ்திரஞ்
சொல்லுகிறதாவென்றான்.
௫௨. அதற்கு அவர்கள் சொன்னது, நீரும்
* கலிலேயனோ? நீர் ஆராய்ந்து பார்த்தால்
தீர்க்கதரிசிகள் கலிலேயா நாட்டில் இருந்
து தோன்றவில்லையென்று அறிவீர் என்றார்
கள். * லூக். ௨௨: ௫௯.
௫௩. பின்பு எல்லாருந் தங்கள் வீடுகளுக்
குப்போனார்கள்.

௮ அதிகாரம்.

[(௧) விபசார ஸ்திரீயைக்கிறிஸ்து விடுதலை
யாக்கினது. (௰௨) தாம் உலகத்தின் வெ
ளிச்சமென்று பிரசங்கித்து, தமது உபதே
சங்களுக்கடுத்த நியாயங்களை யெய்ப்பித்து,
(௩௩) ஆபிரகாமைக்குறித்துப்பெருமை பா
ராட்டின யூதர்களைக் கடிந்துகொண்டு,
(௫௯) அவர்களைவிட்டு மறைந்தது.]

இயேசுவானவர் ஒலீவமலைக்குப்போ
னார்.
௨. மறுநாட் காலையிலே தேவாலயத்திற்
குத்திரும்பினார். சனங்கள் எல்லாரும் அவரி
டத்திற் சேர்ந்தார்கள். அவர் உளுக்காந்
து அவர்களுக்கு உபதேசம் பண்ணினார்.
௩. அப்பொழுது விபசாரத்திலே கண்டு
பிடிக்கப்பட்ட ஒரு பெண்ணை வேதபாரக
ரும், பரிசேயரும் அவரிடத்திற் கொண்டு
போய், அவளை நடுவே நிறுத்தி,
௪. அவரை நோக்கி, போதகரே! இந்தப்
பெண் விபசாரம் பண்ணுகிறபொழுதே
பிடிக்கப்பட்டாள்.
௫. * இப்படிப்பட்டவர்களைக் கற்களாற்
கொலைசெய்ய வேண்டுமென்று மோசேயா
னவர் நியாய சாஸ்திரத்திலே நமக்குக்கட்
டளையிட்டிருக்கிறாரே. நீர் எப்படிச்சொல்
லுகிறீரென்றார்கள். * ௩ மோ. ௨௰: ௰.
௬. அவர்மேற் குற்றஞ் சாற்றுவதற்குக்கா

ரணம் பெறும்படிக்கு, அவர்கள் இப்படிச்
சொல்லி, அவரைச்சோதித்தார்கள். இயே
சுவானவர் குனிந்து, விரலினலே தரையில்
எழுதினர்.
௭. அவர்கள் பின்னும் அவரிடத்திற் கேட்
டுக்கொண்டிருந்தபொழுது, அவர் நிமிர்ந்
து அவர்களை நோக்கி, * உங்களிற் பாவம்
இல்லாதவனெவனே அவன் முதற்கல்லை
இவள்மேல் எறிந்துபோடவேண்டுமென்று
சொல்லி, * உரோ. ௨: ௧.
௮. மறுபடியுங் குனிந்து தரையிலெழுதி
னர்.
௯. அவர்கள் அதைக்கேட்டு, தங்கள் மன
தினலே கடிந்துகொள்ளப்பட்டவர்களாய்,
இயேசுவானவர் தனித்திருக்க அந்தப்
பெண் நடுவிலே நிற்க அவர்களைவிட்டு, பெ
ரியோர்முதற் சிறியோர் வரைக்கும் ஒருவன்
ஒருவனக எல்லாரும் புறப்பட்டுப்போனர்
கள்.
௰. இயேசுவானவர் நிமிர்ந்து, (பார்க்கை
யில்) அந்தப்பெண்ணைத்தவிர மற்றொருவ
ரையுங் காணதபொழுது, அவர் அவளை
நோக்கி, ஸ்திரீயே! உன்மேற் குற்றஞ் சாற்
றினவர்கள் எங்கே? ஒருவனகிலும் உன்னை
ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையாவென்
றர்.
௰௧. அவள் சொன்னது, ஆண்டவரே! ஒரு
வரும் அப்படிச்செய்யவில்லை யென்றள்.
இயேசுவானவர் சொன்னது, நானும் உன்
னை ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கமாட்டேன்.
நீபோய் * இனிப்பாவஞ் செய்யாதிருப்பா
யாகவென்றர். * ௫: ௰௪.
௰௨. மறுபடியும் இயேசுவானவர் சனங்க
ளை நோக்கி, * நான் உலகத்தின் ஒளியாய்
இருக்கிறேன். எனக்குப்பின்செல்லுகிறவன்
இருளிலே நடவாமற் சீவனகிய ஒளியை
அடைந்திருப்பான் என்றர். * ௧: ௫—௯.
ஏசா ௪௨: ௬, ௭. ௪௯: ௬.
௰௩. அப்பொழுது பரிசேயர் அவரைநோ
க்கி, நீரே உம்மைக்குறித்துச்சாட்சிகொ
டுக்கிறீர். உம்முடைய சாட்சியை மெய்
யென்று ஒத்துக்கொள்ளக்கூடாதென்றர்
கள்.
௰௪. அதற்கு இயேசுவானவர் சொன்னது;
நான் வந்த இடத்தையும், நான் போகும்
இடத்தையும் அறிந்திருக்கிறபடியினலே,
என்னைக்குறித்து நானே சாட்சிகொடுத்தா
லும், என்னுடைய சாட்சியை மெய்யென்
று ஒத்துக்கொள்ளவேண்டும். நீங்கள்
நான் வந்த இடத்தையும், நான் போகும்
இடத்தையும் அறியாமல் இருக்கிறீர்கள்.
௰௫. நீங்கள் மாம்சத்திற்கேற்றபடி தீர்
மானம் பண்ணுகிறீர்கள். நான் ஒருவனைக்
குறித்தும் தீர்மானம் பண்ணுகிறதில்லை.
௰௬. நான் தீர்மானம் பண்ணினல், நான்
மாத்திரம் அல்ல, நானும் என்னை அனுப்
பின பிதாவுங்கூட இருக்கிறபடியினலே,
என்னுடைய தீர்மானம் சத்தியத்தின்படி
யேயிருக்கும்.
௰௭. * இரண்டுபேருடைய சாட்சியை
மெய்யென்று ஒத்துக்கொள்ள வேண்டு
மென்று உங்கள் நியாயசாஸ்திரத்திலேயும்
எழுதியிருக்கின்றதே. * ௫ மோ. ௰௯: ௰௫.
௰௮. அந்தப்படி நான் என்னைக்குறித்துச்
சாட்சிகொடுக்கிறவனய் இருக்கிறேன். என்
னை யனுப்பின பிதாவும் என்னைக்குறித்துச்
சாட்சிகொடுக்கிறர் என்றர்.
௰௯. அப்பொழுது, அவர்கள் உம்முடை
ய பிதா எங்கே யென்றர்கள். இயேசுவான
வர் சொன்னது; நீங்கள் என்னையும், என்
பிதாவையும் அறியாமல் இருக்கிறீர்கள்.
* என்னை அறிந்தீர்களானல், என் பிதாவை
யும் அறிந்திருப்பீர்களென்றர். * ௰௬: ௩.
௨௰. தேவாலயத்திலே இயேசுவானவர்
உபதேசம்பண்ணித்தருமப்பெட்டியின் அ
ருகேயிருந்தபொழுது, இந்த வசனங்க
ளைச்சொன்னர். அப்படியிருந்தும் அவரு
டைய நேரம் வராதபடியால், ஒருவரும்
* அவரைப்பிடிக்கவில்லை. * ௭: ௩௰.
௨௧. பின்பு, இயேசுவானவர் அவர்களை
நோக்கி, நான் போவேன். * நீங்கள் என்
னைத்தேடுவீர்கள். ஆகிலும், உங்கள் பாவத்
தினலே சாவீர்கள். நான் போகும் இடத்
திற்கு நீங்கள் வரமாட்டீர்கள் என்றர்.
* ௭: ௩௪.
௨௨. அப்பொழுது, யூதர்கள் (ஒருவரை
யொருவர்) நோக்கி, நான் போகும் இடத்
திற்கு நீங்கள் வரமாட்டீர்கள் என்கிறனே
தன்னைத்தான் கொலைசெய்வானவென்று
பேசிக்கொண்டார்கள்.
௨௩. அவர் பின்னும் அவர்களுடனே சொ
ன்னது, * நீங்கள் கீழேயிருந்து தோன்றி
னவர்கள். நான் உயரத்திலிருந்து தோன்றி
னவன். நீங்கள் இவ்வுலகத்திற்குரியவர்கள்,
நான் இவ்வுலகத்திற்குரியவனல்ல. * ௩: ௩௧.
௨௪. ஆகையால், நீங்கள் உங்கள் பாவங்
களினலே சாவீர்களென்று உங்களுக்குச்
சொன்னேன். பின்னும், அவரே நானென்
று நீங்கள் விசுவாசியாவிட்டால், உங்கள்
பாவங்களினலே சாவீர்கள் என்றர். *
மாற். ௰௬: ௰௬.
௨௫ அதற்கவர்கள் நீர் யாரென்றர்கள்.
இயேசுவானவர் சொன்னது; ஆதிமுதல்
நான் உங்களுக்குச்சொல்லிவந்தவனே நான்.
௨௬. நான் உங்களைக்குறித்துப்பேசி நியா
யஞ் சொல்லுகிறதற்கு அநேக காரியங்கள்
உண்டு. என்னை அனுப்பினவர் சத்தியமுள்
ளவர். நான் அவரிடத்திற் கேள்விப்பட்ட
வைகளையே உலகத்தாருக்கு அறிவிக்கிறே
னென்றர்.

௨௭. அவர் பிதாவைக்குறித்துச்சொன்னார்
என்று அவர்கள் அறியாதிருந்தார்கள்.
௨௮. ஆதலால், இயேசுவானவர் பின்னும்
அவர்களுடனே சொன்னது; நீங்கள் * ம
னிதனுடைய குமாரனை யேற்றி யிருக்கும்
பொழுது என்னையே அவரென்றும், என்
னாலே, நான் ஒன்றுஞ் செய்யாமல், என்
பிதா எனக்குப்போதிக்கிறபடியே இவைக
ளைச்சொன்னேன் என்றும் அறிவீர்கள்.
* ௩: ௰௪, ௰௫. ௰௨: ௩௨.
௨௯. என்னை அனுப்பினவர் * என்னுட
னே யிருக்கிறார். பிதாவுக்குப்பிரியமானவை
களை நான் எப்பொழுதுஞ் செய்கிறபடி
யால், அவர் என்னைத்தனியே இருக்க விட
வில்லையென்றார். * ௰௪: ௰.
௩௰. இவைகளை அவர் சொல்லுகையில்,
* அநேகம்பேர் அவரிடத்தில் விசுவாசமா
னார்கள். * ௭: ௩௧.
௩௧. ஆதலால், இயேசுவானவர் தம்மை
விசுவாசித்த யூதரை நோக்கி, நீங்கள் என்
னுடைய உபதேசத்திலே நிலைத்திருந்தால்
மெய்யாய் என் சீஷராய் இருப்பீர்கள்.
௩௨. அல்லாமலும், சத்தியத்தை அறிவீர்
கள். சத்தியமானது, உங்களை விடுதலையாக்
கும் என்றார்.
௩௩. அதற்குச் (சிலர்) சொன்னது, நாங்
கள் ஆபிரகாமின் சந்ததியாராய் இருக்கி
றோமே யல்லாமல், நாங்கள் ஒருக்காலும்
ஒருவனுக்கு அடிமைகளாய் இருக்கவில்லை
யே. ஆதலால், நீங்கள் விடுதலை யாவீர்க
ளென்று நீர் எப்படிச்சொல்லுகிறீர் என்
றார்கள்.
௩௪. இயேசுவானவர் சொன்னது; * பா
வத்தைச்செய்கிறவன் எவனோ, அவன் பா
வத்திற்கு அடிமையாய் இருக்கிறானென்று
மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன்.
* ௨ ரோ. ௬: ௰௬. ௨ பேது. ௨: ௰௯.
௩௫. அடிமையானவன் என்றைக்கும் வீட்
டிலே தங்கான். குமாரனே யென்றைக்கும்
அதிலே தங்குவான்.
௩௬. ஆகையால், * குமாரனானவர் உங்க
ளை விடுதலையாக்கினால், மெய்யாய் விடுதலை
யாய் இருப்பீர்கள். * உரோ. ௬: ௨௨.
௮: ௨. கலாத். ௫: ௧.
௩௭. நீங்கள் ஆபிரகாமின் சந்ததியார்
என்று அறிந்திருக்கிறேன். அப்படியிருந்
தும் என்னுபதேசம் உங்களில் தரியாமல்
இருக்கிறபடியால், என்னைக்கொலைசெய்
யத்தேடுகிறீர்கள்.
௩௮. நான் என் பிதாவினிடத்திலே கண்ட
தைப்பேசுகிறேன். அப்படியே நீங்களும்
உங்கள் பிதாவினிடத்திலே கண்டதைச்
செய்கிறீர்கள் என்றார்.
௩௯. அதற்கவர்கள் * ஆபிரகாமே யெங்
கள் தகப்பனாய் இருக்கிறார் என்றார்கள்.
இயேசுவானவர் சொன்னது; நீங்கள் ஆபிர
காமின் பிள்ளைகளானால், ஆபிரகாமின் கிரி
யைகளுக்கு ஒப்பாய்ச்செய்வீர்களே. *
மத். ௩: ௯.
௪௰. நீங்கள் பராபரனிடத்திற் கேள்விப்
பட்ட சத்தியத்தை உங்களுக்குச்சொன்ன
மனிதனாகிய என்னைக்கொலைசெய்யத்தேடு
கிறீர்கள். ஆபிரகாம் இப்படிச்செய்யவில்
லையே.
௪௧. நீங்கள் உங்கள் பிதாவின் கிரியைக
ளுக்கு ஒப்பாய்ச்செய்கிறீர்களென்றார். அ
தற்கு அவர்கள் சொன்னது, நாங்கள் வே
சைமார்க்கத்தினாலே பிறந்தவர்கள் அல்ல,
ஒரே பிதா எங்களுக்கு உண்டு. பராபரனே
அவரென்றார்கள்.
௪௨. இயேசுவானவர் சொன்னது; பரா
பரனிலிருந்தே புறப்பட்டு வந்தேன். நான்
என்னாலே வரவில்லை. அவரே யென்னை அ
னுப்பினார். ஆகையால், பராபரன் உங்கள்
பிதாவாயிருந்தால், நீங்கள் என்னிடத்தில்
அன்புகூருவீர்கள்.
௪௩. என்னத்தினாலே என்னுடைய பேச்
சை யறியாமல் இருக்கிறீர்கள். என்னுடை
ய உபதேசத்தைக்கேட்க மனதில்லாதபடி
யினால் அல்லவோ (அப்படியிருக்கிறீர்கள்.)
௪௪. * பசாசானவனே உங்கள் பிதா.
(ஆகையால்,) உங்கள் பிதாவின் இச்சைக
ளின்படி செய்ய விரும்புகிறீர்கள். ஆதிமு
தற்கொண்டு, அவன் மனிதக்கொலைக்கார
னாய் இருக்கிறான். அல்லாமலும், † சத்தி
யத்தில் அவன் நிலைநில்லாதபடியால், சத்
தியம் அவனிடத்தில் இல்லை. அவன் பொய்
யனுமாய்ப்பொய்யின் தகப்பனுமாய் இருக்
கிறபடியால், பொய்பேசுகிறபொழுது தன்
சொந்தத்திலெடுத்துப்பேசுகிறான். * ௧
யோ. ௩: ௮. † யூதா. ௬. வசனம்.
௪௫. நான் சத்தியத்தை உங்களுக்குச்
சொல்லுகிறபடியினாலே, நீங்கள் என்னை
விசுவாசிக்கிறதில்லை.
௪௬. என்னிடத்திற் பாவம் உண்டென்று
உங்களில் எவன் நிச்சயமாய்ச்சொல்வான்!
ஆகையால், நான் சத்தியத்தைச்சொல்லு
கிறவனாய் இருக்க நீங்கள் என்னை யென்
னத்தினாலே விசுவாசிக்கிறதில்லை.
௪௭. * பராபரனால் உண்டானவன் பரா
பரனுடைய வசனங்களுக்குச்செவிகொடுக்
கிறான். நீங்கள் பராபரனால் உண்டாயிரா
தபடியால், செவிகொடாமல் இருக்கிறீர்க
ளென்றார். * ௧ யோவா. ௪: ௬.
௪௮. அப்பொழுது, யூதர்கள் அவரை
நோக்கி, நாங்கள் உன்னைச்சமாரியனென்
றும், * பேயை உடையவனென்றும் நியா
யமாய்ச்சொல்லுகிறோம் அல்லவா என்
றார்கள். * ௰: ௨௰.
௪௯. இயேசுவானவர் சொன்னது; நான்

பேயை யுடையவனல்ல. நான் என் பிதாவைக்கனம் பண்ணுகிறேன். நீங்கள் என்னைக்கனவீனம் பண்ணுகிறீர்கள்.

௫௰. அன்றியும், நான் எனக்குக்கனம் வரத்தேடுகிறதில்லை. அதைத்தேடி நியாயந்தீர்க்கிறவர் ஒருவர் இருக்கிறார்.

௫௧. * மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது; ஒருவன் என்னுடைய வசனத்தைக்கைக்கொண்டால், அவன் ஒருக்காலும் மரணத்தை அடைவதில்லையென்று சொன்னபொழுது, * ௫: ௨௪. ௰௧: ௨௫, ௨௬.

௫௨. யூதர்கள் அவரை நோக்கி, நீ பேயை யுடையவனென்று இப்பொழுது அறிந்திருக்கிறோம். ஆபிரகாமும், தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள். நீ சொல்லுகிறது ஒருவன் என் வசனத்தைக்கைக்கொண்டால், அவன் ஒருக்காலும் மரணத்தை ருசிபார்க்கமாட்டான் என்கிறாய்

௫௩. எங்கள் பிதாவாகிய ஆபிரகாமிலும் நீ பெரியவனோ! அவர் மரித்தார். தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள். நீ உன்னை எப்படிப் பட்டவனாக்குகிறாயென்றார்கள்.

௫௪. இயேசுவானவர் சொன்னது; நானே என்னைக்கனம் பண்ணினால், அந்தக்கனம் வீணாய் இருக்கும். என் பிதாவே என்னைக் கனம்பண்ணுகிறார். அவரை நீங்கள் உங்கள் தேவனென்று சொல்லுகிறீர்கள்.

௫௫. அப்படியிருந்தும் நீங்கள் அவரை அறியவில்லை. நான் அவரை அறிந்திருக்கிறேன். அவரை அறியமாட்டேனென்று சொன்னேனாகில், நான் உங்களைப்போலப் பொய்யனாய் இருப்பேன். அவரை நான் அறிந்து, அவருடைய வசனத்தைக்கைக் கொண்டுவருகிறேன்.

௫௬. உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக்காணக்களிப்பாய் ஆசைப் பட்டு, அதையே கண்டு சந்தோஷப்பட்டானென்றார்.

௫௭. அப்பொழுது, யூதர்கள் அவரை நோக்கி, உனக்கு ஐம்பது வயதில்லையே, நீ ஆபிரகாமைக்கண்டாயா என்றார்கள்.

௫௮. இயேசுவானவர் சொன்னது; ஆபிரகாம் பிறந்தகாலத்திற்கு முன்னும் நானே இருக்கிறேனென்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேனென்றார்.

௫௯. அப்பொழுது, அவர்மேலே யெறியும்படிக்குக்கற்களை யெடுத்துக்கொண்டார்கள். இயேசுவானவர் மறைந்து, * அவர்கள் நடுவே நடந்து, தேவாலயத்தைவிட்டு அப்புறம்போனார். * லூக். ௪: ௩௰.

௯ அதிகாரம்.

[(௧) இயேசுவினாலே ஒரு பிறவிக்குருடன்
பார்வை அடைந்து, (௮) பரிசேயரிடத்
திற் கொண்டுவரப்பட்டு, (௰௩) அதினிமித்
தம் அவர்கள் கோபமுடைந்து, அவனைப்
புறம்பே தள்ளினது. (௩௫) அவன் இயே
சுவினால் அங்கிகரிக்கப்பட்டு, அவரைக்கு
றித்து நல்லறிக்கை இட்டது. (௩௬) கி
றிஸ்துவினுற் பிரகாசிக்கிறவர்கள் இன்னார்
என்றது.]

அவர் அப்புறம் போகையிற் பிறவிக் குருடனாகிய ஒரு மனிதனைக்கண்டார்.

௨. அப்பொழுது அவருடைய சீஷர் அவரைநோக்கி, இரபீ, இவன் குருடனாய்ப் பிறக்கும்படிக்கு, இவனோ? இவனைப்பெற்றவர்களோ! ஆர் பாவஞ்செய்தார்கள் என்று கேட்டார்கள்.

௩. அதற்கு இயேசுவானவர் சொன்னது, இவனும் பாவஞ்செய்யவில்லை. இவனைப் பெற்றவர்களும் பாவஞ் செய்யவில்லை. * பராபரனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும்பொருட்டாக (இப்படிப்பிறந்தான்.) * ஏசா. ௫௫: ௫.

௪. பகற்காலம் இருக்குமளவும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும். ஒருவனுங் கிரியையைச் செய்யக்கூடாதபடிக்கு இராத்திரி வருகின்றது.

௫ நான் உலகத்தில் இருக்கையில், * உலகத்தின் ஒளியாய் இருக்கிறேன் என்றார். * ௮: ௰௨.

௬. இப்படி அவர் சொல்லிப்பின்பு, * தரையிலே துப்பி உமிழ் நீரினாற் சேறுண்டாக்கி அந்தச்சேற்றைக்குருடனுடைய கண்களின்மேற்பூசி, * மாற். ௮: ௨௩.

௭. பின்பு நீ * சீலோவாகுளத்திற்போய்க் கழுவென்றார். சீலோவா என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அருத்தம். அந்தப் படி அவன் போய்க்கழுவிப்பார்வை அடைந்து திரும்பிவந்தான். * நெகே. ௩: ௰௫.

௮. அப்பொழுது அயலகத்தாரும், முன்னே அவன் பிச்சைக்காரனாய் இருந்ததைக் கண்டவர்களும் அவனைப்பார்த்து (இங்கே) உட்கார்ந்து பிச்சைகேட்டுக்கொண்டிருந்தவன் இவனல்லவா என்றார்கள்?

௯. வேறுசிலர் அவன் இவன்தான் என்றார்கள். வேறுசிலர் இவன் அவனுடைய சாயலாய் இருக்கிறான் என்றார்கள். அவன் சொன்னது, நானே அவன் என்றான்.

௰. அப்பொழுது அவர்கள் அவனைநோக்கி, உன்கண்கள் எப்படித்திறக்கப்பட்டன என்றார்கள்.

௰௧. அவன் சொன்னது, இயேசு என்பவர் சேறுண்டாக்கி (அதை) யென்கண்களின்மேலே பூசி நீ சீலோவாகுளத்திற்குப் போய்க்கழுவு என்றார். அந்தப்படி நான்

போய்க்கழுவினபொழுது பார்வை அடைந்
தேன் என்றான்.
௰௨. அவர்கள் சொன்னது, அந்த மனி
தன் எங்கே என்றார்கள். அவன் எனக்குத்
தெரியாதென்றான்.
௰௩. அப்பொழுது முன்னே குருடனாய் இ
ருந்தவனை, பரிசேயரிடத்திற்குக்கொண்டு
போனார்கள்.
௰௪. இயேசுவானவர் சேறுண்டாக்கி அ
வனுடைய கண்களைத்திறந்த நாள், *ஓய்வு
நாளாய் இருந்தது. * ௫: ௯.
௰௫. ஆதலாற் பரிசேயரும் அவனை நோக்
கி, நீயெப்படிப்பார்வை அடைந்தாய் என்
று கேட்டார்கள். அதற்கவன் சொன்னது,
அவர் சேற்றை என்கண்களின்மேல் வைத்
தார். பின்பு நான் கழுவினேன். இப்பொ
ழுது காண்கிறேன் என்றான்.
௰௬. அப்பொழுது பரிசேயரிற் சிலர்
சொன்னது, அம்மனிதன் ஓய்வுநாளைக்
கைக்கொள்ளாதிருக்கிறபடியினாலே அவன்
பராபரனால் வந்தவன் அல்ல என்றார்கள்.
வேறுசிலர் சொன்னது, பாவியாய் இருக்
கிற ஒருவன் இப்படிப்பட்ட அற்புதங்க
ளைச்செய்வதெப்படி என்றார்கள். ஆகை
யால் அவர்களுக்குள்ளே பிரிவினை உண்டா
யிற்று.
௰௭. மறுபடியும் அவர்கள் குருடனாய் இ
ருந்தவனைநோக்கி, உன் கண்களைத்திறந்த
அவனைக்குறித்து நீ என்னசொல்லுகிறாய்
என்றார்கள். அவன் சொன்னது, அவர்
தீர்க்கதரிசியாய் இருக்கிறார் என்றான்.
௰௮. அப்பொழுது அவன் குருடனாய் இ
ருந்து, பின்பு பார்வை அடைந்தான் என்
கிறதை யூதர்கள் நம்பாமற் பார்வை அ
டைந்தவனுடைய தாய்தகப்பன்மாரை அ
ழைப்பித்து,
௰௯. அவர்களைநோக்கி, உங்கள் குமாரன்
குருடனாய்ப்பிறந்தான் என்று, நீங்கள்
சொல்லுகிறீர்களே. அவன் இவனா? இப்
பொழுது இவனுக்கு எப்படிப்பார்வை
உண்டாயிற்றென்று கேட்டார்கள்.
௨௰. அதற்கு அவனுடைய தாய்தகப்பன்
மார் சொன்னது, இவன் எங்கள் குமா
ரன் என்றும், குருடனாய்ப்பிறந்தான் என்
றும் அறிந்திருக்கிறோம்.
௨௧. இப்பொழுது இவன் பார்வை அ
டைந்தவகை எங்களுக்குத்தெரியாது. அவ
னுடைய கண்களைத்திறந்தவனையும் அறிய
மாட்டோம். இவன் பெரியவனாய் இருக்
கிறானே, இவனிடத்திலே கேளுங்கள். தன்
னைக்குறித்து இவனே பேசுவான் என்றார்
கள்.
௨௨. அக்காலத்திற்கு முன்னே இயேசு
வைக்கிறிஸ்தென்று சொல்பவன் எவனோ
அவனைச்செப ஆலயத்திற்குப்புறம்பாக்க
வேண்டும். என்று யூதர்கள் தீர்மானம்பண்
ணி இருந்தபடியாற் குருடனாய் இருந்தவ
னுடைய தாய் தகப்பன்மார், * அவர்க
ளுக்குப்பயந்து, * ௭: ௰௩.
௨௩. இவன் பெரியவனாய் இருக்கிறானே,
இவனிடத்திற் கேளுங்கள் என்று சொன்
னார்கள்.
௨௪. ஆதலால் அவர்கள் குருடனாய் இருந்
தவனை இரண்டாந்தரம் அழைத்து நீ பரா
பரனைக்கனஞ் செய்வாயாக அம்மனிதன்
பாவியாய் இருக்கிறான் என்று நாங்கள் அ
றிந்திருக்கிறோமே என்றார்கள்.
௨௫. அதற்கவன் சொன்னது, அவர் பா
வியோ அல்லவோ அது எனக்குத்தெரியா
து நான் குருடனாய் இருந்தேன். இப்பொ
ழுது காண்கிறேன். இதொன்றையே அ
றிந்திருக்கிறேன் என்றான்.
௨௬. அப்பொழுது அவர்கள் மறுபடியும்
அவனை நோக்கி, உனக்கென்னசெய்தான்!
உன்கண்களை எப்படித்திறந்தான் என்றார்
கள்?
௨௭. அவன் சொன்னது, முன்னே அதை
உங்களுக்குச்சொன்னேன். நீங்கள் செவி
கொடுக்கவில்லை. அதை மறுபடியுங் கேட்
க என்னத்தினாலே விரும்புகிறீர்கள்? நீங்க
ளும் அவருக்குச்சீஷராக மனதுள்ளவர்க
ளாய் இருக்கிறீர்களா என்றான்.
௨௮. அப்பொழுது அவர்கள் அவனை வை
து, நீயே அவனுடைய சீஷன். நாங்கள்
மோசேயினுடைய சீஷர்.
௨௯. மோசேயானவருடனே பராபரன்
பேசினதை அறிந்திருக்கிறோம். அவன் வந்
த இடத்தை அறியமாட்டோம் என்றார்
கள்.
௩௰. அதற்கு அந்த மனிதன் சொன்னது,
அவர் என்கண்களைத்திறந்திருந்தும், அவர்
வந்த இடத்தை நீங்கள் அறியாமல் இருக்
கிறது ஆச்சரியமானகாரியம்.
௩௧. அல்லாமலும் பாவிகளுக்குப்பராப
ரன் செவிகொடுக்கிறதில்லை என்றும், அவர்
மேற் பத்தியாய் இருந்து அவருடைய சித்
தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனுக்
குச்செவிகொடுக்கிறார் என்றும் அறிந்திருக்
கிறோம்.
௩௨. குருடனாய்ப்பிறந்தவனுடைய கண்க
ளை ஒருவன் திறந்தான் என்று உலகமுண்
டானது முதற்கொண்டு கேள்விப்படவில்
லையே.
௩௩. அவர் பராபரனால் வராதவராய் இ
ருந்தால் இப்படிப்பட்டவைகளில் ஒன்றை
யாகிலுஞ் செய்யத்திராணி இருக்கமாட்
டாதே என்றான்.
௩௪. அப்பொழுது அவர்கள் அவனை நோக்
கி, முழுவதும் பாவங்களிலே பிறந்த நீயா
எங்களுக்கு உபதேசம்பண்ணுகிறவன் என்

றுசொல்லி, அவனைப்புறம்பே தள்ளினார்கள்.

௩௫. அவனை அவர்கள் புறம்பே தள்ளினதை இயேசுவானவர் கேள்விப்பட்டுப்பின்பு அவனைக்கண்டு நீ பராபரனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாய் இருக்கிறாயா என்றார்.

௩௬. அதற்கவன் ஆண்டவரே, நான் அவர்மேல் விசுவாசமாய் இருக்கும்படிக்கு, அவர் இன்னார் என்று (காட்டவேண்டும் என்றான்.)

௩௭. இயேசுவானவர் சொன்னது, நீ அவரைக்கண்டாய். * உன்னுடனேபேசுகிறவரே அவர் என்றார். * ௪: ௨௬.

௩௮. உடனே அவன் ஆண்டவரே, விசுவாசிக்கிறேன் என்றுசொல்லி அவரைத் தொழுதுகொண்டான்.

௩௯. பின்பு இயேசுவானவர் சொன்னது, * காணாதவர்கள் காணவும், காண்கிறவர்கள் குருடராகவுந்தக்கதாக நியாயத்தீர்ப்புக் கொடுப்பதற்கு நான் இவ்வுலகத்திலே வந்தேன் என்றார். * ௨ கொரி. ௪: ௪—௬.

௪௰. பரிசேயரிற் சிலர் அவருடனே கூடவிருந்து அதைக்கேட்டபொழுது அவர்கள் அவரை நோக்கி, நாங்களுங் குருடரா என்றார்கள்.

௪௧. இயேசுவானவர் சொன்னது, நீங்கள் குருடராய் இருந்தால், உங்களுக்குப்பாவம் உண்டாய் இருக்கமாட்டாது. நீங்கள் காண்கிறோமென்று சொல்லுகிறபடியால், உங்கள் பாவம் நிற்கும்.

௰ அதிகாரம்.

[(௧) கிறிஸ்து வாசலும், நல்ல மேய்ப்பருமானவரென்றது. (௰௯) அவரைக்குறித்த பலருடைய தாற்பரியங்களைச்சொல்லியது. (௨௪) தாம் பராபரனுடைய குமாரனாகிய கிறிஸ்துவென்று தம்முடைய கிரியைகளினாலே திருஷ்டாந்தப்படுத்தி, (௩௯) யூதர்களுக்கு விலகி, (௪௰) மறுபடியும் யோர்தானைக்கடந்துபோனபோது, அவரில் அநேகர் விசுவாசித்தது.]

மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது; ஆட்டுக்கிடையின் வாசல்வழியாய் அதிற் பிரவேசியாமல், வேறுவழியாய் அதிற் பிரவேசிக்கிறவன் திருடனுமாய், கொள்ளைக்காரனுமாய் இருக்கிறான்.

௨. வாசலின் வழியாய்ப்பிரவேசிக்கிறவனே ஆடுகளின் மேய்ப்பனாயிருக்கிறான்.

௩ வாசலைக்காக்கிறவன் அவனுக்குத்திறக்கிறான். ஆடுகளும் அவனுடைய சத்தத்திற்குச்செவிகொடுக்கின்றன. அவனும் தன்னுடைய ஆடுகளைப்பேர்பேராக அழைத்து,அவைகளைவெளியேகொண்டுபோகிறான்.

௪. மேலும் அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்னாக நடந்துபோகிறான். மேலும் ஆடுகள் அவனுடைய சத்தத்தை யறிகிறபடியினாலே அவைகள் அவனுக்குப்பின்செல்லுகின்றன.

௫. அந்நியருடைய சத்தத்தை யறியாதபடியினாலே அவைகள் அந்நியனுக்குப்பின் செல்லாமல், அவனைவிட்டு ஓடிப்போகும் என்றார்.

௬. இந்த உவமையை இயேசுவானவர் அவர்களுடனே சொன்னபொழுது, அவர்கள் தங்களுக்கு அவர் சொன்னவைகளின் கருத்தை அறியவில்லை.

௭. ஆதலால், இயேசுவானவர் மறுபடியும் அவர்களை நோக்கி, நானே ஆடுகளின்வாசலென்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன்.

௮. * எனக்கு முன்னே வந்தவர்கள் எல்லாருந் திருடருமாய், கொள்ளைக்காரருமாய் இருந்தார்கள். ஆடுகள் அவர்களுக்குச்செவி கொடுக்கவில்லை. * எரே. ௨௩: ௨௧.

௯. நானேவாசல். ஒருவன் என்னாலே உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான். அல்லாமலும், அவன் உள்ளும், புறம்புஞ் சென்று, மேய்ச்சலைக்கண்டு பிடிப்பான்.

௰. திருடனானவன் திருடுகிறதற்கும், கொலைசெய்கிறதற்கும், கெடுக்கிறதற்குமேயன்றி, வேறொன்றுக்கும்வாரான். நான் * அவர்களுக்குச்சீவனும், பரிபூரணமும், உண்டாகும்படிக்கு வந்தேன். * சங்கீ. ௨௩: ௧.

௰௧. * நானே நல்ல மேய்ப்பன். நல்ல மேய்ப்பனானவன் ஆடுகளுக்காகத்தன் சீவனைக்கொடுக்கிறான். * சங். ௮௰: ௧. ஏசா. ௪௰: ௰௧. எசேக். ௩௪: ௨௩.

௰௨. மேய்ப்பன் அல்லாதவனுமாய், ஆடுகளை உடையவன் அல்லாதவனுமாய் இருக்கிற கூலியாள் கோனாய் வரக்காணும்பொழுது ஆடுகளை விட்டோடிப்போவான்.— அப்பொழுது கோனாய் அந்த ஆடுகளைப் பிடித்துச்சிதறடிக்கும்.

௰௩. மேலுங் கூலியாளானவன் கூலிக்காக வேலைசெய்கிறவனானபடியினாலும், ஆடுகளைக்குறித்து, அவனுக்குக்கவலை தோன்றாதபடியினாலும் ஓடிப்போவான்.

௰௪. * நானே நல்ல மேய்ப்பன். என் பிதா என்னை அறிந்திருக்கிறது போலவும், நான் பிதாவை யறிந்திருக்கிறதுபோலவும், * மத். ௰௧: ௨௭.

௰௫. * நான் என்னுடையவைகளை அறிந்து, என்னுடையவைகளால் அறியப்பட்டு, ஆடுகளுக்காக என் சீவனைக்கொடுக்கிறேன். * ௨ தீமோ. ௨: ௰௯.

௰௬. அன்றியும், இந்தக்கிடையில் உள்ள

வைகள் அல்லாமல், வேறுடுகளும் எனக்குண்டு. அவைகளையும், நான் கொண்டுவர வேண்டும். அவைகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கும். அப்பொழுது ஒரே ஆட்டுக்கூட்டமும், ஒரேமேய்ப்பனும் உண்டாய் இருக்கும்.

௰௭. நான் என் ஜீவனைப்பின்னும் அடைந்துகொள்ளும்படிக்கு, அதைக்கொடுக்கிறபடியினாலே பிதா என்னிடத்தில் அன்பாய் இருக்கிறார்.

௰௮. ஒருவனும் என்னிடத்தில் இருந்து அதை வாங்கமாட்டான். நான் என்னாலே யதைக்கொடுக்கிறேன். * அதைக்கொடுக்கிறதற்கும், அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளுகிறதற்கும் என்னிடத்தில் அதிகாரம் உண்டு. இதற்கேற்ற கட்டளையை என் பிதாவினாலேபெற்றுக்கொண்டேனென்றார். * ௨: ௰௯.

௰௯. இந்த வசனங்களைக்குறித்து, யூதருக்குள்ளே மறுபடியும்பிரிவினை உண்டாயிற்று.

௨௰. அவர்களில் அநேகர் சொன்னது, * அவன் பசாசை உடையவன். பயித்தியக்காரனாய் இருக்கிறான். என்னத்திற்காக அவனுக்குச்செவிகொடுக்கிறீர்களென்றார்கள். * ௭: ௨௰.

௨௧. மற்றப்பேர்கள் சொன்னது, இப்படிப்பட்ட வசனங்கள் பேய்கொண்டவனுடையவைகள் அல்லவென்றும், குருடரின் கண்களைப்பேயானவன் திறப்பானாவென்றுஞ் சொன்னார்கள்.

௨௨. பின்பு மாரிகாலத்தில் எருசலேம் நகரத்திலே தேவாலயப்பிரதிஷ்டையின் பண்டிகையைக்கொண்டாடி வருகையில்,

௨௩. இயேசுவானவர் தேவாலயத்திற் * சாலோமோனுடைய மண்டபத்தில் உலாவிக்கொண்டிருக்கிறபொழுது, * ௧ இரா. ௬: ௩.

௨௪. யூதர்கள் அவரை வளைந்துகொண்டு அவரை நோக்கி, எதுவரைக்கும் எங்கள் ஆத்துமாக்கள் சந்தேகமுள்ளவைகளாய் இருக்கும்படி செய்கிறீர். நீர் கிறிஸ்துவானால் (இதை) எங்களுக்குத்தாராளமாய்ச் சொல்லும் என்றார்கள்.

௨௫. அதற்கு இயேசுவானவர் சொன்னது, அதை உங்களுக்குச்சொன்னேன். நீங்கள் விசுவாசிக்கவில்லை. என் பிதாவின் நாமத்தினாலே நான்செய்கிற கிரியைகளே என்னைக்குறித்துச் * சாட்சிகொடுக்கின்றன. * ௫: ௩௬.

௨௬. அப்படியிருந்தும், நீங்கள் என் கிடையின் ஆடுகள் அல்லாதவர்களானபடியினாலே விசுவாசியாமல் இருக்கிறீர்கள்.

௨௭. நான் உங்களுக்குச்சொன்னபடியே * என் ஆடுகள் என் சத்தத்திற்குச்செவி கொடுக்கின்றன. அல்லாமலும், நான் அவைகளை யறிந்திருக்கிறேன். அவைகளும் எனக்குப்பின் செல்லுகின்றன. * ௮: ௪௭.

௨௮. அல்லாமலும், நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக்கொடுக்கிறேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போகாது. ஒருவனும் அவைகளை என் கையில் இருந்து பறித்துக்கொள்ளான்.

௨௯. அவைகளை எனக்குக்கொடுத்த என் பிதா எல்லாரிலும் பெரியவராய் இருக்கிறார். ஒருவனாகிலும் அவைகளை என் பிதாவின் கையில் இருந்து பறித்துக்கொள்ளான்.

௩௰. நானும், பிதாவும், ஒன்றாய் இருக்கிறோமென்றார்.

௩௧. அப்பொழுது யூதர்கள் அவரைக் கொலைசெய்யும்படிக்கு மறுபடியுங் கற்களை எடுத்துக்கொண்டார்கள்.

௩௨. இயேசுவானவர் அவர்களை நோக்கி, நான் என்பிதாவினாலே அநேக நற்கிரியைகளை உங்களுக்குக்காண்பித்தேன். அவைகளில் எந்தக்கிரியையின் நிமித்தம் நீங்கள் என்மேற் கல்லெறிவீர்களென்றார்.

௩௩. யூதர்கள் சொன்னது, நற்கிரியையின் நிமித்தமல்ல, நீ மனிதனாய் இருக்க உன்னைத்தேவனென்று சொல்லி, இவ்விதமாய்த் தேவதூஷணஞ் செய்கிறதின் நிமித்தமே உன்மேற் கல்லெறிவோமென்றார்கள்.

௩௪. அதற்கு இயேசுவானவர் சொன்னது, * தேவர்களாய் இருக்கிறீர்களென்று நான் சொன்னேன் என்பது உங்கள் வேதத்தில் எழுதியிருக்க வில்லையா! * சங். ௮௨: ௬.

௩௫. பராபரனுடைய வசனத்தைப்பெற்றுக்கொண்டவர்களை யவர் தேவர்களென்று சொல்ல வேதமுந் தள்ளப்படக்கூடாததாய் இருக்க,

௩௬. பிதாவினாற் பரிசுத்தமாக்கப்பட்டும், உலகத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிறநான் என்னைப்பராபரனுடைய குமாரனென்று சொன்னதினாலே தேவதூஷணஞ் செய்தாயென்று சொல்லலாமா!

௩௭. நான் என் பிதாவின் கிரியைகளைச் செய்யாதிருந்தால், நீங்கள் என்னை விசுவாசிக்க வேண்டுவதில்லை.

௩௮. (அவைகளை) நான் செய்திருக்கிறபடியால். நீங்கள் என்னை விசுவாசியாதிருந்தாலும் * பிதா என்னிலேயும், நான் அவரிலேயும் இருக்கிறதை அறிந்து, விசுவாசித்துக்கொள்ளும்படிக்கு, நீங்கள் அந்தக்கிரியைகளை விசுவாசிக்கவேண்டுமே யென்றார். * ௰௪: ௰, ௰௧.

௩௯. அப்பொழுது அவர்கள் மறுபடியும் அவரைப்பிடிக்கத்தேடினார்கள். அவர் * அவர்களுடைய கைகளின் நின்று விலகிப்புறப்பட்டு, * ௮: ௫௯. லூக். ௪: ௨௯, ௩௰.

௪௰. யோர்தான் ஆற்றின் அக்கரையிலே

முன்னே யோவான் ஞானஸ்நானங் கொடுத்த இடத்திற்குத்திரும்பிப்போய் அங்கே தங்கினார்.

௪௧. அநேகம்பேர் அவரிடத்திற் சென்று பின்பு சொன்னது, யோவான் ஒரு அற்புதமுஞ் செய்யாதிருந்தும், இவரைக்குறித்துச்சொன்னயாவும் மெய்யாய் இருக்கின்றனவென்றார்கள்.

௪௨. அவ்விடத்திலே அநேகம்பேர் அவர்மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள்.

௰௧ அதிகாரம்.

[(௧) மரித்து நாலுநாள் அடக்கம்பண்ணப்பட்டிருந்த லாசருவைக்கிறிஸ்து உயிரோடெழுப்பினது. (௪௫) அநேக யூதர்கள் அவரை விசுவாசித்தது. (௪௭) கிறிஸ்துவுக்கு விரோதமாகப்பிரதான ஆசாரியர்களும், பரிசேயர்களும், ஒருசங்கத்தை உண்டாக்கினது. (௪௯) காயிபாவென்றவன் அவரைக்குறித்துத்தீர்க்கதரிசனம் உரைத்தது. (௫௪) இயேசு தம்மை மறைத்துக்கொண்டது. (௫௭) பஸ்காப்பண்டிகையிலே சனங்கள் அவரைத்தேடினது.

அன்றியும் * மரியாளும், அவளுடைய சகோதரியாகிய மார்த்தாளும் இருந்த பெத்தானி யூராகிய லாசரு என்பவன் வியாதியுள்ளவனாய் இருந்தான். * லூக். ௰: ௩௮—௪௨.

௨. அந்தமரியாள் * கர்த்தர்மேற் பரிமளதயிலத்தைப்பூசித்தன் மயிரால் அவருடைய பாதங்களைத்துடைத்தவளே! அவளுடைய சகோதரனாகிய லாசரு வியாதிப்பட்டிருந்தான். * ௰௨: ௩.

௩. அப்பொழுது அவனுடைய சகோதரிகள் ஆண்டவரே! உமக்கு அன்பாய் இருக்கிறவன் வியாதியாய் இருக்கிறானென்று சொல்லி அனுப்பினார்கள்.

௪. இயேசுவானவர் அதைக்கேட்டு, அந்த வியாதி மரணத்திற்கு ஏதுவாய் இராமற் * பராபரனுடைய குமாரன் மகிமைப்படும்படிக்கு, பராபரனுடைய மகிமை விளங்குதற்கே ஏதுவாய் இருக்குமென்றார். * ௯: ௩.

௫. இயேசுவானவர் அந்த மார்த்தாள் இடத்திலும், அவளுடைய சகோதரியின் இடத்திலும், லாசருவின் இடத்திலும் அன்பாய் இருந்தார்.

௬. அப்படியிருந்தும் அவன் வியாதியாய் இருக்கிறதை அவர் கேட்ட பின்பு அவர் தாம் இருந்தவிடத்திலே பின்னும் இரண்டு நாள் தங்கினார்.

௭. அதின் பின்பு அவர் (தம்முடைய) சீஷரை நோக்கி, நாம் மறுபடியும் யூதயா நாட்டிற்குப்போவோம் வாருங்களென்றார்.

௮. அதற்குச்சீஷர் சொன்னது, இரபீ சில நாளுக்கு முன்னே யூதர்கள் உமதுமேற் * கல்லெறிய மனதுள்ளவர்களாய் இருந்தார்களே! நீர் மறுபடியும் அவ்விடத்திற்குப்போகலாமா என்றார்கள். * ௮: ௫௯.

௯. இயேசுவானவர் சொன்னது, பகலுக்குப்பன்னிரண்டு மணி நேரம் இல்லையா! பகற்காலத்திலே நடக்கிறவன் இவ்வுலகத்தின் ஒளியைக்காண்கிறபடியினாலே இடறமாட்டான்.

௰. இராத்திரி காலத்திலே நடக்கிறவன் தனக்கு ஒளியில்லாதபடியினாலே இடறுவானென்று சொல்லி,

௰௧. பின்பு நமக்குச்சிநேகிதனாகிய லாசரு * நித்திரை அடைந்தான். நான் அவனை எழுப்பப்போகிறேனென்றார். * மத். ௯: ௨௪.

௰௨. அப்பொழுது அவருடைய சீஷர் சொன்னது, ஆண்டவரே! அவன் நித்திரை அடைந்திருந்தாற் குணம் அடைவானென்றார்கள்.

௰௩. இயேசுவானவர் அவனுடைய மரணத்தைக்குறித்து அப்படிச்சொல்லியிருந்தார். அவர்கள் அவர் நித்திரை பண்ணுதலைக்குறித்தே பேசினாரென்று நினைத்தார்கள்.

௰௪. அப்பொழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி, லாசரு மரித்தானென்று தெளிவாய்ச்சொல்லி,

௰௫. பின்பு நீங்கள் விசுவாசிக்கும்படிக்கு, நான் அங்கே இராததினாலே உங்கள் நிமித்தஞ் சந்தோஷப்படுகிறேன். இப்பொழுது அவன் இடத்திற்குப்போவோம் வாருங்கள் என்றார்.

௰௬. அப்பொழுது திதிமு என்னப்பட்ட தோமாஸ் மற்றச்சீஷரை நோக்கி, அவரோடேகூட மரிக்கும்படிக்கு, நாமும் போவோம் வாருங்கள் என்றான்.

௰௭. ஆதலால், இயேசுவானவர் போனபொழுது, அவன் கல்லறையில் வைக்கப்பட்டு நாலுநாளாயிற்றென்று அறிந்தார்.

௰௮. பெத்தானியூர் எருசலேம் நகரத்திற்குச்சமீபமாய் ஏறக்குறையப்பதினைந்து ஸ்தாதிவழி தூரத்தில் இருந்தது.

௰௯. அன்றியும், யூதரில் அநேகர் மார்த்தாள், மரியாள் என்பவர்களுடைய சகோதரனைக்குறித்து, அவர்களுக்கு ஆறுதல் சொல்லும்படிக்கு, அவர்கள் இடத்திற்குப் போய் இருந்தார்கள்.

௨௰. இயேசுவானவர் வருகிறாரென்று மார்த்தாள் கேட்டபொழுது, அவருக்கு எதிர்கொண்டு போனாள். மரியாள் வீட்டிலே உளுக்காந்திருந்தாள்.

௨௰௧. பின்பு மார்த்தாள் இயேசுவினிடத்திற் (சேர்ந்து) ஆண்டவரே! நீர் இங்கே இருந்தீரானால் என்சகோதரன் மரிக்கமாட்டான்.

௨௰௨. இப்பொழுது நீர் பராபரனிடத்திற் கேட்டுக்கொள்வதெதுவோ அதைப்பரா

பரன் உமக்குக்கொடுப்பாரென்று அறிந்
திருக்கிறேனென்றாள்.
௨௩. அதற்கு இயேசுவானவர் உன் சகோ
தரன் உயிரோடெழுந்திருப்பானென்றார்.
௨௪. மார்த்தாள் சொன்னது, * கடைசி
நாளிலே (மரித்தோர்) உயிரோடெழுந்
திருக்கும்பொழுது அவனும் எழுந்திருப்
பானென்று அறிந்திருக்கிறேன் என்றாள்
* ௫: ௨௮, ௨௯.
௨௫. அதற்கு இயேசுவானவர் சொன்னது,
* நானே உயிரோடெழுப்புகிறவனுமாய்,
ஜீவனுமாய் இருக்கிறேன். என்னிடத்தில்
விசுவாசமாய் இருக்கிறவன் மரித்தாலும் பி
ழைப்பான். * ௰௪: ௬.
௨௬. அல்லாமலும், உயிரோடிருக்கையில்
என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன்
எவனோ அவன் ஒருக்காலும் மரியாமல் இ
ருப்பான். இதைவிசுவாசிக்கிறாயாவென்றார்.
௨௭. அவள் சொன்னது, ஆம் ஆண்டவ
ரே! நீர் கிறிஸ்து. நீர் பராபரனுடைய
குமாரன். நீர் உலகத்தில் வரவேண்டியவ
ரென்று நான் விசுவாசிக்கிறேனென்றாள்.
௨௮. இப்படிச்சொன்ன பின்பு, அவள்
போய்த்தன் சகோதரி மரியாளை இரகசிய
மாய் அழைத்துப்போதகர் வந்திருக்கிறார்.
உன்னை அழைக்கிறாரென்றாள்.
௨௯ அதை யவள் கேட்டவுடனே, சீக்கிர
மாய் எழுந்து அவரிடத்திற்போனாள்.
௩௰. அக்காலத்திலே இயேசுவானவர் கிரா
மத்திற்குள்ளே செல்லாமல், மார்த்தாள்
தம்மைச்சந்தித்த இடத்திலே இருந்தார்.
௩௧. அப்பொழுது வீட்டிலே அவளுடனே
கூடவிருந்து அவளுக்கு ஆறுதல் செய்கிற
யூதர்கள், மரியாள் சீக்கிரமாய் எழுந்து,
புறப்பட்டுப்போகிறதைக்கண்டு, அவள் கல்
லறையின் இடத்திலே அழுதுகொள்ளும்
படி போகிறாளென்று பேசிக்கொண்டு அவ
ளுக்குப்பின்சென்றார்கள்.
௩௨. இயேசுவானவர் இருந்த இடத்திலே
மரியாள் சேர்ந்து, அவரைக்கண்டவுடனே
அவருடைய பாதத்தின் அருகே விழுந்து,
ஆண்டவரே! நீர் இங்கே இருந்தீரானால்,
என் சகோதரன் மரிக்க மாட்டானே என்
றாள்.
௩௩. அவளும், அவளுடனே கூடப்போன
யூதரும் அழுகிறதை இயேசுவானவர் கண்
டபொழுது, உள்ளத்தில் இருந்து பெருமூச்
சுவிட்டுக்கலங்கி,
௩௪. அவனை எங்கே வைத்தீர்களென்றார்.
ஆண்டவரே! நீர் வந்து பாருமென்றார்கள்
௩௫. இயேசுவானவர் கண்ணீர் விட்டார்.
யூதர்கள் அதைப்பார்த்த,
௩௬. இதோ, அவர் அவனிடத்தில் மிகவும்
பட்சமாய் இருந்தாரே யென்றார்கள்.
௩௭. அவர்களிற் சிலர் சொன்னது, குருட
னுடைய கண்களைத் * திறந்த இவர் அவ
னை மரியாமல் இருக்கப்பண்ணவுங் கூடா
தாவென்றார்கள். * ௯: ௬, ௭.
௩௮. அப்பொழுது இயேசுவானவர் மறு
படியுந் தமக்குள்ளே பெருமூச்சுவிட்டு,
பின்பு கல்லறையின் இடத்திற் சேர்ந்தார்.
அது ஒரு குகையாய் இருந்தது. அதின்
மேலே ஒரு கல் வைக்கப்பட்டிருந்தது.
௩௯. அப்பொழுது இயேசுவானவர் கல்லை
யெடுத்துப்போடுங்களென்றார். மரித்தவ
னுடைய சகோதரியாகிய மார்த்தாள் அவ
ரை நோக்கி, ஆண்டவரே! இவன் புதைக்
கப்பட்டு நான்கு நாளானபடியினாலே, நா
றுமே யென்றாள்.
௪௰. அவளை இயேசுவானவர் நோக்கி, நீ
விசுவாசித்தால் பராபரனுடைய மகிமை
யைக்காண்பாயென்று நான் உனக்குச்
சொல்லவில்லையாவென்றார்.
௪௧. பின்பு, சவம் வைக்கப்பட்ட குகை
யில் இருந்த கல்லை யெடுத்துப்போட்டார்
கள். அப்பொழுது இயேசுவானவர் கண்
களை யுயர்த்தி, பிதாவே! நீர் எனக்குச்செவி
கொடுத்தபடியினாலே உம்மைத்தோத்திரஞ்
செய்கிறேன்.
௪௨. நீர் எப்பொழுதும் எனக்குச்செவி
கொடுக்கிறதை யறிந்திருக்கிறேன். சூழநிற்
கிற சனங்கள் * நீர் என்னை யனுப்பினதை
விசுவாசிக்கும்படிக்கு, அவர்களின் நிமித்த
மே இப்படிச்சொன்னேனென்று சொல்லி,
* ௰௨: ௩௰.
௪௩. பின்பு லாசருவே! வெளியே வாவெ
ன்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டார்.
௪௪. அப்பொழுது மரித்தவன் கால்க
ளும், கைகளுங் கட்டியிருந்த சேலைகளோ
டும், முகஞ் சுற்றப்பட்டிருந்த சேலையோ
டும் வெளியே வந்தான். பின்பு இயேசுவா
னவர் சொன்னது, இவனுடைய கட்டவிழ்த்
து, இவனை விட்டுவிடுங்களென்றார்.
௪௫. அப்பொழுது மரியாள் இடத்திற்குப்
போய், இயேசுவானவர் செய்தவைகளைக்
கண்ட யூதரில் அநேகர் * அவரிடத்தில்
விசுவாசமானார்கள். * ௰௨: ௰.
௪௬. வேறு சிலர் பரிசேயரிடத்திற்குப்
போய், இயேசுவானவர் செய்தவைகளை
அவர்களுக்கு அறிவித்தார்கள்.
௪௭. அப்பொழுது பிரதான ஆசாரியரும்,
பரிசேயரும், பெரிய * ஆலோசனைச்சங்
கத்தார் வந்து கூடும்படிசெய்து, பின்பு
சொன்னதாவது; அந்த மனிதன் அநேக
அற்புதங்களைச்செய்துவருகிறான். * சங்கீ.
௨: ௧, ௨. மத். ௨௬: ௩.
௪௮. நாம் அவனுக்கு இடங்கொடுத்தால்,
எல்லாரும் அவனிடத்தில் விசுவாசமாவார்
கள். பின்பு உரோமர் வந்து, நம்முடைய
ஸ்தலத்தையும், சனங்களையும் எடுத்துக்

கொள்வார்கள். ஆதலால், நாம் என்ன செய்வோமென்றார்கள்.

௪௯. அப்பொழுது அவர்களில் ஒருவனுமாய், அவ்வருஷத்துப்பிரதான ஆசாரியனுமாய் இருந்தகாயிபாவென்பவன், அவர்களை நோக்கி நீங்கள் ஒன்றுந் தெரியாதவர்கள்.

௫௰. சனங்கள் எல்லாருங் கெட்டுப்போகாதபடிக்கு, ஒரே மனிதன் சனங்களுக்காக மரணம் அடைவதே நமக்கு நலமாய் இருக்குமென்று, நீங்கள் சிந்தியாமலும் இருக்கிறீர்கள் என்றான்.

௫௧. இப்படி அவன் தானாய்ச்சொல்லாமல், அவன் அந்த வருஷத்திற் பிரதான ஆசாரியனாய் இருக்க, இயேசுவானவர் யூத சனங்களுக்காக மரணம் அடைவதைத் தீர்க்கதரிசனமாய்ச்சொன்னான்.

௫௨. மேலும், அந்தச்சனங்களுக்காக மாத்திரமல்ல, அங்கங்கே சிதறிப்போய் இருக்கிற பராபரனுடைய பிள்ளைகளை * யொன்றாகக்கூட்டிக்கொள்ளுகிறதற்காகவும், அவர் மரணம் அடைவதையே குறித்தான். * எபே. ௨: ௰௬.

௫௩. ஆதலால், அந்நாள்முதல் அவர்கள் அவரைக்கொலைசெய்யும்படிக்கு ஆலோசனை பண்ணிக்கொண்டு வந்தார்கள்.

௫௪. அதினாலே இயேசுவானவர் பின்னும், வெளியரங்கமாய் யூதருக்குள்ளே திரியாமல் அவ்விடத்தைவிட்டு, வனாந்தரத்திற்குச்சமீபமான இடமாகியஎபிராயிமூருக்குப்போய், அங்கே தம்முடைய சீஷருடனே கூடச் சஞ்சரித்தார்.

௫௫. அக்காலத்திலே யூதருடைய பஸ்காப்பண்டிகை சமீபமாய் இருந்தது. அதற்கு முன்னே அந்நாட்டில் இருந்த அநேகர் தங்களைச்சுத்திகரிக்கும் பொருட்டாக எருசலேமுக்குப்போனார்கள்.

௫௬. அங்கே அவர்கள் இயேசுவைத்தேடிக்கொண்டு தேவாலயத்திலே நிற்கையில், ஒருவரை யொருவர் நோக்கி, உங்களுக்கு எப்படித்தோன்றுகின்றது. அவர் பண்டிகைக்கு வராமல் இருப்பாராவென்று பேசிக்கொண்டார்கள்.

௫௭. பிரதான ஆசாரியரும், பரிசேயரும் அவரைப்பிடிக்கும்படிக்கு யோசித்து, அவர் இருக்கிற இடத்தை யொருவன் அறிந்தால் அதை யறிவிக்கவேண்டுமென்று கட்டளை கொடுத்திருந்தார்கள்.

௰௨ அதிகாரம்.

[(௧) மரியாள் இயேசுவின் பாதங்களைப்பரிமள தயிலத்தாற் பூசினது. (௯) அநேக சனங்கள் லாசருவைக்காணவந்தது. (௰) பிரதான ஆசாரியர் கிறிஸ்துவைக்கொலை செய்ய எண்ணினது. (௰௨) அவர் எருசலேமுக்குச்சவாரியின்மேற் போனது. (௨௰) கிரேக்கர் அவரைக்காண விரும்பினது. (௨௩) அவர் தம்முடைய மரணத்தை முன்னறிவித்தது. (௩௭) யூதர்கள் அவிசுவாசிகளாய் இருந்தாலும், (௪௨) யூதப்பிரபுக்களில் அநேகர் இரகசியமாய் விசுவாசித்தபடியினாலே, (௪௪) அவர்கள் தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தும்படி இயேசு புத்தி சொன்னது.]

பின்பு பஸ்காப்பண்டிகை வருகிறதற்கு ஆறுநாளுக்கு முன்னே இயேசுவானவர் தம்மாலே மரணத்தில் இருந்து எழுப்பப்பட்ட * லாசரு இருக்கிற பெத்தானியூருக்குப்போனார். * ௰௧: ௧.

௨. அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள். மார்த்தாள் பணிவிடை செய்தாள். லாசருவும் அவருடனே கூடப்பந்தி இருந்தவர்களில் ஒருவனாய் இருந்தான்.

௩. அப்பொழுது மரியாள் * விலையேறப்பெற்ற களங்கமில்லாத நருதென்னுந் தயிலத்தில் ஒரு இராத்தலை யெடுத்து, அதை இயேசுவினுடைய கால்களிற் பூசி, தன் மயிரால் அவைகளைத் துடைத்தாள். அந்தத் தயிலத்தின் பரிமளத்தினாலே வீடு நிரப்பப்பட்டது. * மத். ௨௬: ௭—௰௩. மாற். ௰௪: ௩—௯.

௪. அப்பொழுது சீஷரில் ஒருவனுமாய், அவரைக்காட்டிக்கொடுத்தவனுமாய், சீமோனுடைய குமாரனுமாய் இருந்த யூதாஸ்காரியோத்தென்பவன் சொன்னது,

௫. இந்தத்தயிலம் முந்நூறு தேநாரியுவிலைக்கு விற்றுத்தரித்திரருக்குக்கொடுக்கலாமே. என்னத்தினாலே அப்படிச்செய்யவில்லையென்றான்.

௬. அவன் தரித்திரரைக்குறித்துக்கவலைப்படுகிறவனாக அப்படிச்சொல்லாமல், அவன் திருடனாய்ப் * பணப்பையைவைத்துக்கொண்டு, (அதிலே) போடப்பட்டவைகளைச்சுமக்கிறவனானபடியினாலே இப்படிச் சொன்னான். * ௰௩: ௨௯.

௭. அப்பொழுது இயேசுவானவர் சொன்னது; இவளை விட்டுவிடு. என்னை அடக்கம் பண்ணும் நாளுக்காக இவள் இதைக்காத்துக்கொண்டிருந்தாள்.

௮. * தரித்திரர் எப்பொழுதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள். நான் எப்பொழுதும் உங்களிடத்திலே இரேனேயென்றார். * ௫ யோ. ௰௫: ௰௧.

௯. பின்பு, யூதரில் அநேகசனங்கள் அவர் அங்கே இருக்கிறதையறிந்து, இயேசுவின் பொருட்டாகமாத்திரமல்ல, அவரால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்ட லாசருவைக்காணும் பொருட்டாகவும் அவ்விடத்திலே போனார்கள்.

ய. லாசருவினாலே யூதர்களில், அநேகம் பேர் இயேசுவானவர் இடத்திற்போய் அவர்மேல் விசுவாசம் வைத்தபடியினாலே,

யக. பிரதான ஆசாரியர் லாசருவையுங் கொலைசெய்யும்படி தீர்மானம் பண்ணினார்கள்.

யஉ. * மறுநாளிலே இயேசுவானவர் எருசலேமுக்கு வருகிறாரென்று, பண்டிகைக்குப்போன சனங்கள் அநேகர் கேள்விப்பட்டு, * மத். உக: க—யக. மாற். யக: க—யக. லூக். யகூ: உகூ—சஅ.

யங. குருத்தோலைகளைப்பிடித்து அவருக்கு எதிர்கொண்டுபோகும்படி புறப்பட்டு, * ஓசன்னா, பராபரனுடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலரின் இராசா வாழ்த்தப்படக்கடவரென்று சத்தம் இட்டார்கள். * சங்கீ. ௱யஅ: உசு.

யச. அல்லாமலுங் குமாரத்தியாகிய சீயோனே! நீ பயப்படாதிரு. இதோ, உன் இராசா ஒரு கழுதைக்குட்டியின்மேலேறி வருகிறார் என்று * எழுதியிருக்கிறபடியே, * சகரி. கூ: கூ.

யரு. இயேசுவானவர் ஒரு கழுதையின் குட்டியைக்கண்டு, அதின்மேல் ஏறிப்போனார்.

யசு. அவரைக்குறித்து, அப்படி எழுதியிருக்கிறதை அவருடைய சீஷர் அக்காலத்திலே அறியவில்லை. இயேசுவானவர் மகிமையையடைந்தபின் அவர்கள் அதையும், தாங்கள் அப்படி அவருக்குச்செய்ததையும் நினைத்துக்கொண்டார்கள்.

யஎ. அன்றியும், அவருடனேயிருந்த சனங்கள் அவர் லாசருவைக்கல்லறையிலிருந்து வெளியே வரவழைத்து, அவனை உயிரோடெழுப்பினதைக்குறித்துச் சாட்சிகொடுத்தார்கள்.

யஅ அப்படிப்பட்ட அற்புதத்தை அவர் செய்தாரென்று சனங்கள் கேள்விப்பட்டதினாலே, அவர்கள் அவருக்கு எதிர்கொண்டுபோனார்கள்.

யகூ. ஆதலால், பரிசேயர் ஒருவரையொருவர் நோக்கி, நாம் செய்கிறதினாலே ஒரு பிரயோசனமும் இல்லையென்று அறிவோமாக. உலகமே அவனுக்குப்பின்செல்லுகின்றதே யென்று சொல்லிக்கொண்டார்கள்.

உய. அன்றியும், (பராபரனைத்) தொழுதுகொள்ளும்படி பண்டிகைக்குப்போனவர்களுக்குள்ளே சில கிரேக்கர் இருந்தார்கள்.

உக. அவர்கள் கலிலேயாநாட்டின் பெத்சாயிதா வூராகிய * பிலிப்பினிடத்திற்போய் ஐயா, நாங்கள் இயேசுவானவரைக் காண விரும்புகிறோமென்று அவரை வேண்டிக்கொண்டார். * க: சச, சரு

உஉ. பிலிப்பென்பவன் அதை அந்திரேயாவுக்குச்சொன்னான். பின்பு அந்திரேயாவும், பிலிப்பும் அதை இயேசுவுக்குச்சொன்னார்கள்.

உங. அப்பொழுது, இயேசுவானவர் அவர்களுடனே சொன்னது; * மனிதனுடைய குமாரன் மகிமைப்படும்படிக்குக்காலம் வந்தது. * யஎ: உ.

உச. மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது; * கோதுமைமணி நிலத்திற்குள் விழுந்து செத்துப்போகாவிட்டால் தனித்திருக்கும். அது செத்ததானால் மிகுந்த பலனைக்கொடுக்கும். * க கொரி. யரு: ஙசு.

உரு. * தன் சீவனைச்சிநேகிக்கிறவன் அதை இழப்பான். இவ்வுலகத்திலே தன் சீவனைப்பகைக்கிறவன் அதை நித்திய சீவன்வரைக்குங் காத்துக்கொள்வான். * லூக். யஎ: ஙங.

உசு. ஒருவன் எனக்கூழியஞ்செய்ய விரும்பினால், எனக்குப்பின்செல்லக்கடவன். அப்பொழுது, * நான் இருக்கும் இடம் எங்கேயோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான். அல்லாமலும், எனக்கூழியஞ் செய்கிறவனைப்பிதா கனம்பண்ணுவார். * யச: ங. யஎ: உச.

உஎ. இப்பொழுது என் ஆத்துமா கலங்குகின்றது. நான் என்ன சொல்லுவேன். பிதாவே! இந்த நேரத்திலிருந்து என்னை இரட்சிக்கவேண்டுமென்று (சொல்வேனோ?) இந்த நேரத்தின் பொருட்டாகவே வந்தேனென்று சொல்லி,

உஅ. பின்பு பிதாவே! உமது நாமத்தின் மகிமையைக்காண்பியுமென்றார். அப்பொழுது, அதின் மகிமையைக்காண்பித்தேன். இன்னும் அதைக்காண்பிப்பேன் என்று வானத்திலிருந்து சத்தம் உண்டாயிற்று.

உகூ. அங்கேநின்ற சனங்கள் அதைக்கேட்டு, இடிமுழக்கம் உண்டாயிற்றென்றார்கள். வேறுசிலர் சொன்னது, தேவதூதன் ஒருவன் அவருடனே பேசினான் என்றார்கள்.

ஙய. அப்பொழுது இயேசுவானவர் சொன்னது; இந்தச்சத்தம் என்னிமித்தம் உண்டாகாமல், * உங்கள் நிமித்தமே உண்டாயிற்று. * யக: சஉ.

ஙக இப்பொழுது, இவ்வுலகத்திற்கு நியாயத்தீர்ப்புக்கொடுக்கப்படுகின்றது. இப்பொழுது, * இவ்வுலகத்தின் பிரபு புறம்பாகத்தள்ளப்படுவான். * யகூ: யக.

ஙஉ. அல்லாமலும், * நான் பூமியிலிருந்து எற்றப்பட்டிருக்கும்பொழுது, † எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்வேன் என்று, * ங: யச, யரு. † அ: உஅ.

ஙங. தாம் மரணம் அடையும் விதத்தைக் குறித்தார்.

ஙச. அப்பொழுது சனங்கள் அவரை நோக்கி, * கிறிஸ்துவானவர் என்றைக்கும்

இருக்கிறார் என்று நாங்கள் வேதத்தால் கேள்விப்பட்டிருக்கிறோமே. அப்படியிருக்க மனிதனுடைய குமாரன் உயர்த்தப்பட வேண்டுமென்று நீர் எப்படிச்சொல்லுகிறீர்? இந்த மனித குமாரன் எவன் என்றார்கள்? * சங்கீ. ௱௰: ௪.

௩௫. அதற்கு இயேசுவானவர் சொன்னது; சிலகாலம்மாத்திரம் ஒளியானது உங்களுடனேயிருக்கும். இருள் உங்களைப்பிடியாதபடிக்கு, நீங்கள் ஒளியை யுடையவர்களாய் இருக்கையில் (அதிலே) நடவுங்கள். இருளிலே நடக்கிறவன் தான் நடந்துபோகிற இடம் இன்னதென்று அறியான்.

௩௬. நீங்கள் * ஒளியை யுடையவர்களாய் இருக்க, ஒளியின் பிள்ளைகளாகும்படிக்கு, ஒளியானதிலே விசுவாசமாய் இருப்பீர்களாகவென்று, இயேசுவானவர்சொல்லிப்புறப்பட்டு அவர்களுக்கு விலகி மறைந்தார். * எபே. ௫: ௮

௩௭. அவர் இவ்வளவு அற்புதங்களை அவர்களுக்கு முன்பாகச்செய்திருந்தும், அவர்கள் அவர்மேல் விசுவாசமாயிருக்கவில்லை.

௩௮. அதினாலே * கர்த்தாவே! எங்கள் பிரசங்கத்தை விசுவாசித்தவன் யாவன்? பராபரனுடைய புயம் யாவனுக்கு வெளிப்பட்டதென்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன வசனம் நிறைவேறிற்று. * ஏசா. ௫௩: ௧. உரோ. ௰: ௰௬.

௩௯. ஏசாயா வென்பவன் அவருடைய மகிமையைக்கண்டு, அவரைக்குறித்துப்பேசிக்கொண்டிருக்கிறபொழுது,

௪௰. * அவன் பின்னுஞ் சொன்னது, அவர்கள் தங்கள் கண்களினாலே காணாமலும், தங்கள் இருதயத்தினால் உணராமலும், மனந்திரும்பாமலும், என்னாலே யாரோக்கியம் அடையாமலும் இருக்கும்படிக்கு, அவர்களுடைய கண்களை அவர் குருடாக்கி, அவர்கள் இருதயத்தைக்கடினமாக்கினார் என்பதே. * ஏசா. ௬: ௯, ௰.

௪௧. அதினாலே அவர்கள் விசுவாசிக்கக்கூடாதிருந்தார்கள்.

௪௨. ஆகிலுந் தலைவரில் அநேகரும் அவர்மேல் விசுவாசமாயிருந்தார்கள்.

௪௩. அப்படியிருந்தும் அவர்கள் * பராபரனால்வருகிற கனத்திலும், மனிதரால் வருகிற கனத்தை அதிகமாய் விரும்பினபடியினாலே, பரிசேயராலே † செப ஆலயத்திற்குப்புறம்பாக்கப்படாதபடிக்கு, (அதை) அறிக்கையிடாமல் இருந்தார்கள். * ௫: ௪௪. † ௯: ௨௨.

௪௪. அப்பொழுது இயேசுவானவர் சத்தத்தோடே சொன்னதாவது; என்மேல் விசுவாசமாய் இருக்கிறவன் என்மேல் மாத்திரமல்ல, என்னை யனுப்பினவர்மேலும் விசுவாசமாயிருக்கிறான்.

௪௫. அல்லாமலும், * என்னைக்காண்கிறவன் என்னை அனுப்பினவரைக்காண்கிறான். * ௰௪: ௯

௪௬. என்மேல் விசுவாசமாய் இருக்கிற யாவரும் இருளிலிராதபடிக்கு, * நானே உலகத்தில் ஒளியாக வந்தேன். * ௮: ௧௨.

௪௭. அன்றியும், நான் * உலகத்தாரை ஆக்கினைக்குட்படுத்தும்பொருட்டல்ல, அவர்களை இரட்சிக்கும்பொருட்டே வந்தேன். ஆகையால், ஒருவன் என் வசனங்களைக் கேட்டும், விசுவாசித்துக்கொள்ளாமற்போனால், அவனை நான் ஆக்கினைக்குட்படுத்தமாட்டேன். * ௩: ௰௭.

௪௮. என்னைத்தள்ளி என் வசனங்களை ஏற்றுக்கொள்ளாதவனை ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கிறதொன்றிருக்கின்றது. நான் பண்ணின உபதேசமே கடைசிநாளிலே யவனை ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கும்.

௪௯. என்னத்தினாலென்றால், நானாக ஒன்றும் பேசவில்லை. என்னை அனுப்பின பிதாவே நான் பேசவும், உபதேசிக்கவும் வேண்டியவைகளை யெனக்குக்கட்டளையிட்டார்.

௫௰. அவருடைய கட்டளையே நித்திய சீவனென்று அறிந்திருக்கிறேன். ஆகையால், நான் உபதேசிக்கிறவைகளைப்பிதா எனக்குச்சொன்னபடியே உபதேசிக்கிறேனென்றார்.

௰௩ அதிகாரம்.

[(௧) சீஷர்களுடைய கால்களைக்கழுவி மனத்தாழ்மையும், சிநேகமுமுள்ளவர்களாய் இருக்கும்படி இயேசு புத்திசொன்னது. (௰௮) யூதா தம்மைக்காட்டிக்கொடுப்பானென்று முன்னறிவித்து, ஒரு குறிப்பினால் அதை யோவானுக்கு வெளிப்படுத்தினது. (௩௧) சீஷர்கள் ஒருவரை யொருவர் சிநேகிக்கும்படி புத்திசொல்லி, (௩௬) பேதுரு தம்மை மறுதலிப்பதைக்குறித்து அவனுக்கு அறிவித்தது.]

பஸ்காப்பண்டிகைக்கு முன்னே இயேசுவானவர் இவ்வுலகத்தைவிட்டு, பிதாவின் இடத்திற்குப்போகும்படிக்கு, தம்முடைய காலம் வந்ததென்றறிந்து, இவ்வுலகத்திலுள்ள தம்முடையவர்களிடத்தில்வைத்த அன்பை முடிவு பரியந்தமும் அவர்களிடத்தில் வைத்தார்.

௨. ஆகையால், அக்காலத்திலே * பசாசானவன் சீமோனுடைய குமாரனாகிய யூதாஸ்காரியோத்தின் இருதயத்திலே அவரைக்காட்டிக்கொடுக்கும்படிக்கான (யோசனையை) வைத்திருந்த பின்பு, * லூக். ௨௨: ௩.

௩. அவர்கள் இராப்போசனம் பண்ணிக்கொண்டிருக்கையில், இயேசுவானவர் * தமக்குச்சகலத்தையும் பிதா ஒப்புக்கொ

டுத்ததையும், தாம் பராபரனிடத்தில் இருந்
து வந்ததையும், பராபரனிடத்திற்குப்போ
கிறதையும் அறிந்து, * மத். ௰௧: ௨௭.
௨௮: ௰௮.
௪. இராப்போசனத்தை விட்டெழுந்து,
மேல்அங்கியைக் களைந்து, ஒரு சேலையை
எடுத்து, தம்மைச்சுற்றிக்கட்டிக்கொண்டு,
௫. பின்பு ஒரு சட்டியிலே தண்ணீர் வார்த்
துச்சீஷருடைய கால்களைக்கழுவவும், தாம்
கட்டிக்கொண்டிருந்த சேலையினாலே து
டைக்கவுந் தொடங்கனார்.
௬. அவர் சீமோன் பேதுருவினிடத்திற்
சேர்ந்தபொழுது, அவன் அவரை நோக்கி,
ஆண்டவரே! நீர் என் கால்களைக்கழுவலா
மாவென்றான்.
௭. அதற்கு இயேசுவானவர் சொன்னது,
நான் செய்கிறது இன்னதென்று நீ இப்
பொழுது அறியவில்லை. இனிமேல் அதை
அறிவாய் என்றார்.
௮. பேதுரு பின்னும் அவரைநோக்கி, நீர்
என் கால்களை யொருக்காலுங் கழுவக்கூ
டாதென்றான். அதற்கு இயேசுவானவர்
சொன்னது, நான் உன்னைக்கழுவாவிட்டால்
என்னிடத்திலே உனக்குப்பங்கில்லை யென்
றார்.
௯. அப்பொழுது சீமோன் பேதுரு ஆண்
டவரே! (அப்படியானால்) என் கால்களை
மாத்திரமல்ல, என் கைகளையும், தலையையுங்
கூட நீர் கழுவவேண்டுமென்றான்.
௰. இயேசுவானவர் சொன்னது, ஸ்நானம்
பண்ணினவனுடைய கால்களை மாத்திரங்
கழுவவேண்டும். மற்ற யாவும் அவனிடத்
திற் சுத்தமாய் இருக்கும். நீங்கள் * சுத்த
மாய் இருக்கிறீர்கள். ஆனாலும், எல்லாரும்
அல்லவென்றார். * ௰௫: ௩.
௰௧. அவர் * தம்மைக்காட்டிக்கொடுக்கிற
வனை யறிந்திருந்தபடியினாலே நீங்கள் சுத்
தமாய் இருக்கிறீர்கள். ஆனாலும், எல்லா
ரும் அல்லவென்று சொன்னார். * ௬: ௬௪.
௰௨. அவர்களுடைய கால்களைக்கழுவின
பின்பு, அவர் தமது மேல்அங்கியைத்தரித்
துக்கொண்டு, திரும்ப உளுக்கார்ந்து அவர்
களுடனே சொன்னதாவது; நான் உங்க
ளுக்குச்செய்ததை யறிந்திருக்கிறீர்களா!
௰௩. நீங்கள் என்னைப்போதகரென்றும்,
ஆண்டவரென்றும் அழைக்கிறீர்கள். * நா
ன் அவர்தான். ஆகையால், நீங்கள் சரியா
ய்ச்சொல்லுகிறீர்கள். * மத். ௨௩: ௮—௰.
௰௪. அப்படியிருக்க * ஆண்டவரும், போ
தகருமாகிய நானே உங்கள் கால்களைக்கழு
வினபடியால் நீங்களும் ஒருவருடைய கால்
களை யொருவர் கழுவக்கடவீர்கள். * பிலி.
௨: ௫—௭.
௰௫. நான் உங்களுக்குச்செய்ததுபோல
நீங்களுஞ் செய்யும்படிக்கு * உங்களுக்கு
வகையைக்காண்பித்தேன். * ௧ பேது.
௨: ௨௧.
௰௬. மெய்யாகவே நான் உங்களுக்குச்
சொல்லுகிறதாவது; ஊழியக்காரனானவன்
தன் எசமானிலும், அப்போஸ்தலனானவன்
தன்னை யனுப்பினவரிலும் பெரியவனல்ல.
௰௭. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடி
யால் இவைகளைச்செய்வீர்களானால் பாக்கி
யராய் இருப்பீர்கள்.
௰௮. உங்கள் எல்லாரையுங்குறித்து நான்
பேசவில்லை. நான் தெரிந்துகொண்டவர்க
ளை யறிந்திருக்கிறேன். * வேத வாக்கியம்
நிறைவேறும்படியாக என்னுடனே அப்பம்
புசிக்கிறவன் எனக்கு விரோதமாய்த்தன்
குதிகாலைத்தூக்கினான். * சங். ௪௧: ௯.
௰௯. அது நடக்கும்பொழுது நானே அவ
ரென்று, நீங்கள் விசுவாசிக்கும்படிக்கு அது
நடப்பதற்கு முன்னாகிய இப்பொழுது
அதை உங்களுக்குச்சொல்லுகிறேன்.
௨௰. என்னால் * அனுப்பப்படுகிறவன் எவ
னோ அவனை யேற்றுக்கொள்ளுகிறவன் என்
னையும் ஏற்றுக்கொள்ளுகிறான். என்னை ஏற்
றுக்கொள்ளுகிறவன் என்னை யனுப்பினவ
ரையும் ஏற்றுக்கொள்ளுகிறானென்று, மெய்
யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேனென்
றார். * மத்தே. ௰: ௪௰.
௨௧. இவைகளை வசனித்தபின்பு, இயேசு
வானவர் தமது ஆவியிலே கலக்கம் அடைந்
து உங்களில் ஒருவன் என்னைக்காட்டிக்
கொடுப்பானென்று மெய்யாகவே உங்களுக்
குச்சொல்லுகிறேனென்று சாட்சியிட்டார்.
௨௨. அப்பொழுது சீஷர் ஆரைக்குறித்
துச்சொல்லுகிறாரோ என்றுஐயப்பட்டு ஒரு
வரை யொருவர் பார்த்துக்கொண்டார்கள்.
௨௩. அவ்வேளையிலே அவருடைய சீஷரில்
ஒருவன் அவருடைய மடியிலே சாய்ந்தி
ருந்தான். அவன்மேலே இயேசுவானவரும்
அன்பாய் இருந்தார்.
௨௪. ஆனபடியினாலே அவர் இன்னாரைக்
குறித்துச்சொல்லுரென்று விசாரிக்கும்
படிக்குச்சீமோன் பேதுரு அவனுக்குச்
சமிக்கை காட்டினான்.
௨௫. அப்பொழுது அவன் இயேசுவின்
மார்பிலே சாய்ந்துகொண்டு ஆண்டவரே!
அவன் யாவன் என்றான்?
௨௬. இயேசுவானவர் சொன்னது, நான்
இந்தத்துணிக்கையைத்தோய்த்துக்கொடுக்
கப்படுபவன் எவனோ, அவனே யென்று
சொல்லி, துணிக்கையைத் தோய்த்துச்
சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்
திற்குக்கொடுத்தார். துணிக்கையை அவன்
வாங்கின பின்பு,
௨௭. சாத்தான் அவனுக்குட் புகுந்தான்.
அப்பொழுது இயேசுவானவர் அவனை நோ

க்கு, நீ செய்கிறதைச்சீக்கிரமாய்ச்செய்
யென்றார்.
உஅ. அவர் இப்படி அவனுடனே சொன்
னதின் கருத்தைப்பந்தி இருந்தவர்களில்
ஒருவரும் அறியவில்லை.
உகூ. சிலர் நினைத்தது யூதா * பணப்பை
யை வைத்துக்கொண்டிருக்கிறபடியினாலே
அவன் போய்ப்பண்டிகைக்கு வேண்டிய
பதார்த்தங்களைக் கொள்ளும்படிக்காவது,
தரித்திரருக்கேதாகிலுங் கொடுக்கும்படிக்
காவது, இயேசுவானவர் அவனுடனே
சொல்லி இருப்பாரென்று நினைத்தார்கள்.
* ௰உ: ௬.
௩௰. அவன் அந்தத்துணிக்கையை வாங்கி
னவுடனே புறப்பட்டுப்போனான். அப்பொ
ழுது இராக்காலமாய் இருந்தது.
௩௧. அவன் புறப்பட்டுப்போன பின்பு இ
யேசுவானவர் சொன்னதாவது; இப்பொழு
து மனிதனுடைய குமாரன் மகிமைப்படு
வான். அவனாலே பராபரனுடைய மகிமை
யும் விளங்கும்.
௩உ. பராபரனுடைய மகிமை அவனாலே
விளங்கும்பொழுது, * பராபரன் அவனையும்
மகிமைப்படுத்துவார். சீக்கிரமாய் அவனை
மகிமைப்படுத்துவார். * ௰எ: உ.
௩௩ பிரியமான பிள்ளைகளே! * இன்னுஞ்
சில காலம்மாத்திரம் நான் உங்களுடனே
கூட இருப்பேன். நீங்கள் என்னைத்தேடு
வீர்கள். அல்லாமலும் நான் போகும் இடத்
திற்கு நீங்கள் வரக்கூடாதென்று நான் யூத
ரோடே சொன்னதுபோல இப்பொழுது
உங்களோடுஞ் சொல்லுகிறேன். * எ:
௩௩, ௩௪.
௩௪. நீங்கள் * ஒருவரில் ஒருவர் அன்பாய்
இருங்கள். நான் உங்களிடத்தில் அன்பாய்
இருந்ததுபோல, நீங்களும் ஒருவரில் ஒரு
வர் அன்பாய் இருங்களென்று புதிதான கற்
பனையை யுங்களுக்குக்கொடுக்கிறேன். *
எபே. ரு: உ.
௩ரு. நீங்கள் * ஒருவரில் ஒருவர் அன்பாய்
இருந்தால் நீங்கள் என்னுடைய சீஷரென்
று எல்லாரும் அறிவார்கள் என்றார். * ௧
யோவா. உ: ௬, ௰.
௩௬. சீமோன் பேதுரு அவரை நோக்கி,
ஆண்டவரே! நீர் எங்கேபோகிறீரென்றான்.
அதற்கு இயேசுவானவர் சொன்னது, நான்
போகிற இடத்திற்கு நீ இப்பொழுது எனக்
குப்பின்செல்லமாட்டாய். * பின்பு எனக்
குப்பின்செல்லுவாய் என்றார். * உ௧: ௰௬.
௩எ. பேதுரு சொன்னது, ஆண்டவரே!
நான் என்னத்தினாலே இப்பொழுது உமக்
குப்பின்செல்லக்கூடாது. உமக்காக என்
சீவனைக்கொடுப்பேனென்றான்.
௩அ. இயேசுவானவர் சொன்னது, நீ எனக்
காக உன் சீவனைக்கொடுப்பாயா? சேவல்
கூவுகிறதற்கு முன்னே * நீ என்னை மூன்று
தரம் மறுதலிப்பாயென்று மெய்யாகவே
உனக்குச்சொல்லுகிறேன். * மார். ௰௪:
௩௰. லூக். உஉ: ௩௪.

௰௪ அதிகாரம்.

[(௧) கிறிஸ்துத்தம்முடைய சீஷர்களை
மோட்சமடையலாமென்ற நம்பிக்கையினா
லே தேற்றினது. (௬) தம்மை வழியென்
றும், சத்தியமென்றும், சீவனென்றும், பி
தாவோடே ஒருவராய் இருக்கிறவரென்றுங்
கூறி, (௰௩) தமது நாமத்தை முன்னிட்டு
அவர்கள் செய்யுஞ் செபங்கள் பலிக்கு
மென்கிற நிச்சயத்தைக்காட்டி, (௰ரு) தம்
மிடத்தில் அவர்கள் அன்பும் அடக்கமும்
உடையவர்களாய் இருக்கும்படி புத்தி
சொல்லி, (௰௬) தேற்றரவாளனாகிய பரிசுத்
த ஆவியை யனுப்புவோமென்று வாக்குத்
தத்தம் பண்ணி, (உஎ) சமாதான ஆசீர்வா
தத்தை அருளிச்செய்தது.]

உங்கள் இருதயங் கலங்காதிருப்பதாக.
பராபரனில் நம்பிக்கையாய் இருங்
கள். என்னிடத்திலும் நம்பிக்கையாய் இ
ருங்கள்.
உ. என் பிதாவின் வீட்டில் அநேகம் வா
சஸ்தலங்கள் உண்டு. அப்படி இல்லாதிருந்
தால் நான் உங்களுக்குச்சொல்லி இருப்
பேன். ஒரு ஸ்தலத்தை யுங்களுக்காக
எத்தினம் பண்ணப்போகிறேன்.
௩. நான்போய் உங்களுக்காக ஸ்தலத்தை
யெத்தினம் பண்ணின பின்பு, * நான் இருக்
கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படிக்
குத்திரும்பி வந்து, உங்களை என்னிடத்திற்
சேர்த்துக்கொள்வேன். * ௰உ: உ௬.
௰எ: உ௪.
௪. நான் போகிற இடத்தை யறிந்திருக்
கிறீர்கள். வழியையும் அறிந்திருக்கிறீர்கள்
என்று சொன்னபொழுது,
ரு. தோமாவென்பவன் அவரை நோக்கி,
ஆண்டவரே! நீர் போகிற இடத்தை யறிய
மாட்டோமே வழியை நாங்கள் எப்படி
அறிவோமென்றான்.
௬. அதற்கு இயேசுவானவர் சொன்னது,
* நானே வழியுமாய், சத்தியமுமாய், சீவ
னுமாய் இருக்கிறேன். என்னாலே யல்லா
மல் ஒருவனும் பிதாவினிடத்திற்குச்செல்ல
மாட்டான். * எபே. ௩: ௰உ. எபி. எ: உரு.
௰: ௰௬—உஉ.
எ. நீங்கள் என்னை யறிந்தால், என் பிதா
வையும் அறிந்திருப்பீர்கள். மேலும், இப்
பொழுது நீங்கள் அவரை யறிந்தும், அவ
ரைக்கண்டும் இருக்கிறீர்களென்றார்.
அ. பிலிப்புச்சொன்னது, ஆண்டவரே!
நீர் பிதாவை யெங்களுக்குக்காண்பிக்க

வேண்டும். அப்பொழுது எங்களுக்குத்திர்ப்
தியுண்டாயிருக்குமென்றான்.

௯. அவனுடனே இயேசுவானவர் சொன்
னது; பிலிப்பே! நான் இவ்வளவுகாலம் உங்
களுடனேகூடவிருந்தும் நீயென்னை அறி
யவில்லையா! என்னைக்கண்டவன் பிதாவைக்
கண்டான். அப்படியிருக்கப்பிதாவை எங்
களுக்குக்காண்பிக்கவேண்டுமென்று நீ எப்
படிச்சொல்லுகிறாய்?

௰ நான் பிதாவிலேயும், பிதா என்னிலே
யும் இருக்கிறதை நீ விசுவாசியாமல் இருக்
கலாமா? நான் உங்களுடனே சொல்லுகிற
வசனங்கள் என்னாலே சொல்லவில்லையே.
(என்) கிரியைகளையும், எனக்குள் வாசமாய்
இருக்கிற பிதாவானவரே செய்துவருகிறார்.

௰௧. நான் பிதாவிலேயும், பிதா என்னிலே
யும் இருக்கிறதை நம்புங்கள். (என் வசனத்
தினிமித்தம்) நம்பாதிருந்தால், என் கிரி
யைகளினிமித்தமே யென்னை நம்புங்கள்.

௰௨. மெய்யாகவே நான் உங்களுக்குச்
சொல்லுகிறதாவது; என்னிடத்தில் விசுவா
சமாய் இருக்கிறவன் நான் செய்கிற கிரி
யைகளைப்போலக் கிரியைகளைச்செய்வான்.
இவைகளிலும் அதிக பெரியவைகளையே
செய்வான். என்னத்தினாலெனில், நான் என்
பிதாவினிடத்திற்குப்போகிறேன்.

௰௩. அதுவுமல்லாமல், நீங்கள் என்னுமத்
தினாலே கேட்டுக்கொள்வதெதுவோ, அ
தைப்பிதா குமாரனாலே புகழப்படும்பொ
ருட்டு நான் செய்வேன்.

௰௪. நீங்கள் என் நாமத்தினாலே கேட்டுக்
கொள்வதெதுவோ அதை நான்செய்வேன்.

௰௫. நீங்கள் என்னிடத்தில் அன்புகூர்ந்
தால், * என் கற்பனைகளைக்கைக்கொள்
ளுங்கள். * ௰௫: ௰. ௧ யோவா. ௫: ௩.

௰௬. மேலும், என்றென்றைக்கும் உங்க
ளுடனேகூட விருக்கும்படிக்கான் சத்திய
ஆவியாகிய வேறுதேற்றுகிறவரைப்பிதா
வானவர் உங்களுக்குக்கொடுக்கும்படிக்கு
நான் அவரை வேண்டிக்கொள்வேன்.

௰௭. அந்தச்சத்திய ஆவியானவரை உல
கத்தார் காணாமலும், அறியாமலுமிருக்கிற
படியால், அவர்கள் அவரை அடைந்து
கொள்ளமாட்டார்கள். அவர் உங்களுட
னேகூடவிருந்து, உங்களுக்குள்ளே இருப்ப
தால் நீங்கள் அவரை யறிவீர்கள்.

௰௮. நான் உங்களைத்திக்கற்றவர்களாக வி
டுவதில்லை.

௰௯. உங்களிடத்தில் வருவேன். சிலகாலத்
திற்குப்பின்பு, உலகத்தார் என்னைக்காணார்
கள். நீங்கள் என்னைக்காண்பீர்கள். நான்
பிழைக்கிறபடியால், நீங்களும் பிழைப்பீர்
கள்.

௨௰. * நான் என் பிதாவிலேயும், நீங்கள்
என்னிலேயும், நான் உங்களிலேயும் இருக்
கிறதை அந்நாளிலே யறிவீர்கள். * ௰௭:
௨௧, ௨௨.

௨௧. என் கற்பனைகளை யடைந்து, அவை
களைக்கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில்
அன்புகூருகிறவன். என்னிடத்தில் அன்பு
கூருகிறவன்மேல் என் பிதா அன்பாயிருப்
பார். * நானும் அவன்மேல் அன்பாயி
ருந்து, என்னை யவனுக்கு வெளிப்படுத்து
வேனென்று சொன்னபொழுது, * வாக்.
அ: ௰௭.

௨௨. ஸ்காரியோத்தல்லாத யூதாவென்ப
வன் அவரை நோக்கி, ஆண்டவரே! நீர்
உம்மை உலகத்தாருக்கல்ல, எங்களுக்கு
வெளிப்படுத்துகிறதற்குக்காரணம் என்ன
வென்றான்.

௨௩. அதற்கு இயேசுவானவர் சொன்னது;
ஒருவன் என்னிடத்தில் அன்புகூர்ந்தால்,
அவன் என் வசனத்தைக்கைக்கொள்வான்.
அவனிடத்தில் என் பிதா அன்பாயிருப்பார்.
அல்லாமலும், நாங்கள் அவனிடத்தில் வந்
து, அவனோடே வாசம்பண்ணுவோம்.

௨௪. என்னிடத்தில் அன்புகூராமல் இருக்
கிறவன் என் வசனங்களைக்கைக்கொள்ள
மாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்
னுடையதல்ல. என்னை யனுப்பின பிதாவி
னுடைய தாகவே இருக்கின்றது.

௨௫. நான் உங்களுடனே இருக்கையில்,
இவைகளை உங்களுக்குச்சொன்னேன்.

௨௬. பின்பு, * பிதாவானவர் என் நாமத்
தினாலே யனுப்பும் பரிசுத்த ஆவியாகிய
தேற்றுகிறவரே சகலத்தையும் உங்களுக்கு
உபதேசம்பண்ணி, நான் உங்களுக்குச்சொ
ன்ன யாவையும் நீங்கள் நினைக்கும்படிசெய்
வார். * ௰௫: ௨௬.

௨௭. * சமாதானத்தை உங்களுக்குக்கொ
டுத்துப்போகிறேன். என்னுடைய சமா
தானத்தையே உங்களுக்குத்தருகிறேன். உ
லகத்தார் கொடுக்கிறதுபோல, நான் உங்க
ளுக்குக்கொடுக்கமாட்டேன். உங்கள் இரு
தயங் கலங்கவும், பயப்படவும் வேண்டுவ
தில்லை. * பிலிப். ௪: ௭.

௨௮. நான் போய்ப்பின்பு, உங்களிடத்திற்
குத்திரும்பி வருவேனென்று நான் உங்க
ளுடனே சொன்னதைக்கேட்டீர்களே. நீங்
கள் என்னிடத்தில் அன்புகூர்ந்திர்களானால்,
என்னிலும் பிதா பெரியவராகையால், நான்
பிதாவினிடத்திற் போகிறதைக்குறித்து நீங்
கள் சந்தோஷப்படுவீர்கள்.

௨௯. அது நடக்கும்பொழுது, நீங்கள்
விசுவாசிக்கும்படிக்கு, அது நடக்கிறதற்கு
முன்னாகிய இப்பொழுது அதை உங்களுக்
குச்சொன்னேன்.

௩௰. இனி நான் மிகவும் உங்களுடனே பே
சுவதில்லை. உலகத்தின் பிரபு வருகிறானே
அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை.

௩௧. நான் பிதாவினிடத்தில் அன்புகூர்ந்து, * அவர் எனக்குக்கட்டளையிட்டபடியே செய்கிறதை உலகத்தார் அறியும்படிக்கு, (அப்படி நடக்கும்) எழுந்திருங்கள். இவ்விடம் விட்டுப்போகக்கடவோம். * ௰: ௰௮.

௰௫ அதிகாரம்.

[(௧) கிறிஸ்துத்திராட்சச்செடியின் உவமையினாலே நமக்கும், தம்முடைய சீஷர்களுக்கும் இருக்கிற அன்பின் ஐக்கத்தைக்காட்டினது. (௰௮) உலகத்தின் பகையையும், துன்பத்தையுங்குறித்து ஆறுதல் சொன்னது. (௨௬) பரிசுத்த ஆவியின் செய்கைகளையும், அப்போஸ்தலர்களுடைய செய்கைகளையுங் குறித்துச்சொன்னது.]

நான் மெய்யான திராட்சச்செடி. என் பிதா திராட்சத்தோட்டக்காரன்.

௨. என்னிற் கனிகொடாதிருக்கிற கொடியெதுவோ அதை யவர் எடுத்துப்போடுகிறார். கனிகொடுக்கிறகொடி அதிக கனிகளைக்கொடுக்கும்படிக்கு அதைச்சுத்தம்பண்ணுகிறார்.

௩. நான் உங்களுக்குச்சொன்ன உபதேசத்தினாலே, நீங்கள் இப்பொழுது சுத்தமாயிருக்கிறீர்கள்.

௪. * என்னில் நிலைத்திருங்கள். நானும் உங்களில் நிலைத்திருப்பேன். கொடியானது திராட்சச்செடியிலே நிலைத்திராவிட்டால், அது தன்னாலே கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனிகொடுக்கமாட்டீர்கள். * யோவா. ௨: ௨௮.

௫. நானே திராட்சச்செடி. நீங்கள் கொடிகள். என்னையன்றி, உங்களால் ஒன்றுஞ் செய்யக்கூடாதபடியினாலே, என்னிடத்தில் நிலைகொண்டும், நான் நிலைகொள்ளப்பட்டும் இருக்கிறவன் மிகுந்த கனிகளைக்கொடுப்பான்.

௬. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், அவன் உலர்ந்துபோன கொடியைப்போல வெளியே போடப்படுவான். அப்படிப்பட்டவைகளைச்சேர்த்து, அக்கினியிலே போட்டுச்சுட்டெரிக்கிறார்கள்.

௭. நீங்கள் என்னிலேயும், என் வசனங்கள் உங்களிலேயும் நிலைத்திருந்தால், * நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்கு உண்டாகும். * மாற் ௰௧: ௨௪.

௮. நீங்கள் மிகுந்த கனிகளைக்கொடுத்து, எனக்குச்சீஷர்களாவதினாலே, * என் பிதா புகழப்படுவார். * மத். ௫: ௰௬.

௯. பிதா என்னிடத்தில் அன்புகூர்ந்திருக்கிறதுபோல, நானும் உங்களிடத்தில் அன்புகூருகிறேன். என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்.

௰. நான் என் பிதாவின் கற்பனைகளைக்கைக்கொண்டு, அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் * என் கற்பனைகளைக்கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள். * ௧ யோவா. ௫: ௩.

௰௧. உங்களிடத்தில் என்னுடைய சந்தோஷம் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாய் இருக்கும்படிக்கும், நான் இவைகளை உங்களுக்குச்சொன்னேன்.

௰௨. நான் உங்களிடத்தில் அன்புகூர்ந்திருக்கிறதுபோல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாய் இருக்கவேண்டுமென்று, * கட்டளையிடுகிறேன். * ௰௩: ௩௪.

௰௩. ஒருவன் தன் சிநேகிதருக்காகத்தன் பிராணனைக்கொடுக்கும்படியான அன்புக்கு அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை.

௰௪. * நான் உங்களுக்குக்கட்டளையிடுகிற யாவையும் நீங்கள் செய்தால், என்னுடைய சிநேகிதராயிருப்பீர்கள். * மத். ௰௨: ௫௰.

௰௫. ஊழியக்காரனானவன் தன்னெசமான் செய்கிறதை அறியாதிருக்கிறபடியால், இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லமாட்டேன். நான் என் பிதாவினிடத்திற் கேள்விப்பட்டயாவையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே, நான் உங்களைச்சிநேகிதரென்று சொல்லுகிறேன்.

௰௬. நீங்கள் என்னைத்தெரிந்துகொள்ளவில்லை. நீங்கள் என்னுடைய நாமத்தினாலே பிதாவானவரிடத்திற் கேட்டுக்கொள்வதெதுவோ அதை யவர் உங்களுக்குக்கொடுக்கத்தக்கதாக * நீங்கள் புறப்பட்டுக்கனிகளைக்கொடுக்கும்படிக்கும், உங்கள் கனிகள் நிலைத்திருக்கும்படிக்கும் நானே உங்களைத் தெரிந்துகொண்டு ஏற்படுத்தினேன். * மத். ௨௮: ௰௯, ௨௰.

௰௭. நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்றே உங்களுக்குக்கட்டளையிடுகிறேன்.

௰௮. உலகத்தார் உங்களைப்பகைக்கும்பொழுது, அவர்கள் உங்களுக்குமுன்னே யென்னைப்பகைத்தார்களென்று நினைக்கக்கடவீர்கள்.

௰௯. நீங்கள் உலகத்தாராயிருந்தால் உலகத்தார் தங்களைச்சேர்ந்தவர்களாகிய (உங்களைச்) சிநேகிப்பார்கள். * நீங்கள் உலகத்தாராயிராமல், என்னாலே உலகத்திலிருந்து தெரிந்துகொள்ளப்பட்டவர்களாய் இருக்கிறபடியினாலே, உலகத்தார் உங்களைப்பகைக்கிறார்கள். * ௰௭: ௰௪.

௨௰. * ஊழியக்காரன் தன்னெசமானுக்கு

மேற்பட்டவனல்லவென்று நான் உங்களுக்
குச்சொன்ன வசனத்தை நினைத்துக்கொள்
ளுங்கள். அவர்கள் என்னைத்துன்பப்படுத்
தினதுபோல உங்களையுந் துன்பப்படுத்து
வார்கள். அவர்கள் என் வசனத்தைக்கைக்
கொண்டதுபோல, உங்களுடையதையுங்
கைக்கொள்வார்கள். * மத். ௰: ௨௪, ௨௫.
௨௧. * என்னை யனுப்பினவரை அறியாத
படியினாலே அவர்கள் என் நாமத்தினிமித்
தமே இப்படிப்பட்டயாவையும் உங்களுக்
குச்செய்வார்கள். * ௧௬: ௩.
௨௨. நான் வந்து, அவர்களுக்குச்சொல்
லாதிருந்தேனானால், அவர்களுக்குப்பாவம்
உண்டாயிருக்கமாட்டாது. இப்பொழுது
அவர்கள் தங்கள் பாவத்திற்காகப்போக்குச்
சொல்ல இடமில்லை.
௨௩. என்னைப்பகைக்கிறவன் என் பிதாவை
யும் பகைக்கிறான்.
௨௪. மற்றொருவன் செய்யாத கிரியைகளை
நான் அவர்களுக்குள்ளே செய்யாதிருந்தே
னானால், அவர்களுக்குப்பாவம் உண்டாயி
ருக்கமாட்டாது. அவைகளை அவர்கள் கண்
டிருந்தும், என்னையும், என் பிதாவையும்
பகைக்கிறார்கள்.
௨௫ * நிமித்தம் இல்லாமல் என்னைப்
பகைத்தார்கள் என்று, அவர்களுடைய வே
தத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறை
வேறத்தக்கதாக (இப்படிச்செய்கிறார்கள்.)
* சங். ௬௯: ௪.
௨௬. பிதாவினிடத்தில் இருந்து நான் உங்
களுக்கு அனுப்பப்படுபவருமாய், பிதாவி
னிடத்தில் இருந்து புறப்படுகிறவருமாய்
இருக்கிற சத்திய ஆவியாகிய * தேற்றுகிற
வர் வரும்பொழுது, அவர் என்னைக்குறித்
துச்சாட்சி கொடுப்பார். * ௧௪: ௨௬.
௨௭. * நீங்களும் ஆதிமுதல் என்னுடனே
கூடவிருந்தபடியாற் சாட்சிகொடுப்பீர்கள்.
* அப். ௧: ௮.

௧௬ அதிகாரம்.

[(௧) கிறிஸ்து, தம்முடைய சீஷர்களுக்கு
வரும் துன்பத்தைக்குறித்து ஆறுதலாகப்
பரிசுத்த ஆவியின் வருகையையும், தாம்
உயிர்த்தெழுந்து பரமண்டலத்துக்கு ஏறு
வதையும் முன்னறிவித்து, (௨௩) தம்மு
டைய நாமத்திற் செய்யப்படும் விண்ணப்
பம் பிதாவினால் அங்கீகரிக்கப்படுமென்று
திருவுளம் பற்றி; (௩௩) அவர்கள் தமக்குட்
சமாதானமும், உலகத்திலே துன்பமும்
அடைவார்கள் என்று சொன்னது.]

நீங்கள் வழுவாதபடிக்கு இவைகளை
உங்களுடனே சொன்னேன்.
௨. * அவர்கள் உங்களைச்செப ஆலயத்
திற்குப்புறம்பாக்குவார்கள். அதுவுமல்லா
மல் உங்களைக்கொலைசெய்கிறவன் எவனும்
தான் பராபரனுக்கு ஆராதனை செய்கிறே
னென்று நினைக்குங் காலம்வரும். * மத்.
௨௪: ௯.
௩. அவர்கள் * பிதாவையும், என்னையும்
அறியாதபடியினாலே இப்படிப்பட்டவைக
ளை உங்களுக்குச்செய்வார்கள். * ௧௫: ௨௧.
௪. * அந்தக்காலம் வரும்பொழுது நான்
இப்பொழுது உங்களுக்குச் சொன்னதை
நீங்கள் நினைக்கும்படிக்கு இவைகளை உங்க
ளுடனே சொன்னேன். நான் தானே உங்
களுடனே கூடவிருந்தபடியினாலே நான்
இவைகளை ஆரம்பத்திலே உங்களுடனே
சொல்லவில்லை. * ௧௩: ௧௯.
௫. இப்பொழுது நான் என்னை யனுப்பின
வரிடத்திற்குப்போகிறேன். எங்கே போகி
றீர் என்று உங்களில் ஒருவனும் என்னிடத்
திற் கேளாமல்,
௬. நான் இவைகளை உங்களுக்குச்சொன்ன
தினாலே துக்கம் நிறைந்த இருதயமுள்ள
வர்களாய் இருக்கிறீர்கள்.
௭. நான் உங்களுக்குச்சத்தியத்தைச்சொ
ல்லுகிறேன். * நான்போகிறது உங்களுக்
குப்பிரயோசனமாய் இருக்கும். எப்படி
யெனில், நான் போகாதிருந்தால், அந்தத்
தேற்றுகிறவர் உங்களிடத்தில் வாரார்.—
போவேனேயாகில், அவரை உங்களிடத்
திற்கு அனுப்புவேன். * ௧௪: ௧௬.
௮. அவர் வந்து பாவத்தையும், நீதியை
யும், நியாயத்தீர்ப்பையுங் குறித்து உல
கத்தாருக்கு மெய்ப்பிக்கக்கொடுப்பார்.
௯. அவர்கள் என்னிடத்தில் விசுவாசமாய்
இராதபடியினாலே பாவத்தைக்குறித்தும்,
௰. நீங்கள் இனி என்னைக்காணாதபடிக்கு
நான் என் பிதாவின் இடத்திற்குப்போகிற
படியினாலே நீதியைக்குறித்தும்,
௧௧. * இவ்வுலகத்தின் பிரபு நியாயத்தீர்ப்
பு அடைந்தபடியினாலே நியாயத்தீர்ப்பைக்
குறித்துமே அறிவைக்கொடுப்பார். * ௧௨:
௩௧.
௧௨. நான் இன்னும் அநேகங் காரியங்
களை உங்களுக்குச்சொல்லவேண்டியிருக்
கிறது. நீங்கள் அவைகளை இப்பொழுது
சகிக்கமாட்டீர்கள்.
௧௩. சத்திய ஆவியானவர் வரும்பொழுது,
சகல சத்தியத்திலேயும் உங்களை நடத்து
வார். அவர் தம்முடைய சுயமாய்ப்பேசா
மல், தாம் கேள்விப்படுபவைகள் எவைக
ளோ அவைகளைப்பேசி இனிவருங் காரியங்
களையும் உங்களுக்கு அறிவிப்பார்.
௧௪. அவர் என்னுடையதிலே யெடுத்து
உங்களுக்கு அறிவிப்பதால், அவர் என்னு
டைய மகிமையை விளங்கப்பண்ணுவார்.
௧௫. * பிதாவினுடையவைகள்யாவும் என்
னுடையவைகள். அதினாலே அவர் என்

னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்று சொன்னேன். * ௰௭: ௰.

௰௬. நான் பிதாவின் இடத்திற்குப்போகிறபடியினாலே சற்றுக்காலமானபின்பு, நீங்கள் என்னைக்காணாமல் இருப்பீர்கள். மறுபடியுஞ் சற்றுக்காலமான பின்பு என்னைக் காண்பீர்கள் என்றும் அவர் சொன்னபொழுது,

௰௭. அவருடைய சீஷரிற் சிலர் தங்களுக்குள்ளே பேசிக்கொண்டதாவது; சற்றுக் காலமானபின்பு என்னைக்காணாமல் இருப்பீர்கள் என்றும், மறுபடியுஞ் சற்றுக்காலமானபின்பு என்னைக்காண்பீர்கள் என்றும், நான் பிதாவின் இடத்திற்போகிறேன் என்றும், அவர் நம்முடனே சொன்னதின் கருத்தென்ன?

௰௮. சற்றுக்காலமென்று அவர் சொன்னதின் கருத்தென்ன? அவர் சொன்னது நமக்கு விளங்கவில்லையே என்றார்கள்.

௰௯. பின்னும் தம்மிடத்தில் அவர்கள் வினவ விரும்புகிறதை இயேசுவானவர் அறிந்து அவர்களுடனே சொன்னது, சற்றுக்காலமானபின்பு என்னைக்காணாதிருப்பீர்கள்.— மறுபடியுஞ் சற்றுக்காலமானபின்பு என்னைக்காண்பீர்கள் என்று, நான் சொன்னதைக்குறித்தா நீங்கள் உங்களுக்குள்ளே விசாரிக்கிறீர்கள்?

௨௰. மெய்யாகவே! நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது; நீங்கள் அழுது புலம்புவீர்கள். உலகத்தார் சந்தோஷப்படுவார்கள். நீங்கள் துக்கப்படுவீர்கள். உங்கள் துக்கஞ் சந்தோஷமாகும்.

௨௧. கருப்ப ஸ்திரீயானவளுக்குப்பிரசவ காலம் வந்தபொழுது அவள் துக்கம் அடைகிறாள். பிள்ளை பெற்றபின்பு ஒரு மனிதன் உலகத்திற் பிறந்ததினாலே வருகிற சந்தோஷத்தினிமித்தம் அந்த உபத்திரவத்தை நினையாள்.

௨௨. அதுபோல நீங்களும் இப்பொழுது துக்கம் அடைந்திருக்கிறீர்கள். நான் மறுபடியும் உங்களைக்காண்பேன். அப்பொழுது உங்கள் இருதயஞ் சந்தோஷப்படும். அல்லாமலும், உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்தில் இருந்து எடுத்துப்போடமாட்டான்.

௨௩. அந்த நாளிலே நீங்கள் ஒன்றையும் என்னிடத்திற் கேட்கமாட்டீர்கள். மெய்யாகவே! நான் உங்களுக்குச்சொல்லுகிறதாவது; நீங்கள் * என் நாமத்தினாலே பிதாவின் இடத்திற் கேட்டுக்கொள்வதெதுவோ, அதை யவர் உங்களுக்குக்கொடுப்பார். * ௰௪: ௰௩.

௨௪. இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றையுங் கேட்கவில்லை. கேட்டுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாய் இருக்கும்படிக்குப்பெற்றுக்கொள்வீர்கள்.

௨௫. இவைகளை நான் உவமைகளாய் உங்களுடனே பேசினேன். காலம்வரும் அப்பொழுது நான் பிதாவைக்குறித்து உவமைகளாய் உங்களுடனே பேசாமல் வெளிப்படையாகவே உங்களுக்கு அறிவைக்கொடுப்பேன்.

௨௬. அந்தநாளிலே நீங்கள் என் நாமத்தினாலே விண்ணப்பம் பண்ணுவீர்கள். உங்களைக்குறித்து நான் பிதாவை நோக்கிக் கேட்டுக்கொள்ளுகிறேன் என்று உங்களுடனே சொல்லமாட்டேன்.

௨௭. நீங்கள் என்னைச்சிநேகித்து என்னைப்பராபரன் இடத்தில் இருந்து வந்தவன் என்று, * விசுவாசித்திருக்கிறபடியினாலே பிதாவானவர் தாமே உங்களைச்சிநேகிக்கிறாரே. * ௰௪: ௨௧.

௨௮. நான் பிதாவின் இடத்தில் இருந்து, புறப்பட்டு உலகத்திலே வந்தேன். மறுபடியும் உலகத்தைவிட்டு, பிதாவின் இடத்திற்குப்போகிறேன் என்று சொன்னபொழுது,

௨௯. அவருடைய சீஷர் அவரை நோக்கி, இப்பொழுது நீர் உவமையில்லாமல் வெளிப்படையாய்ப்பேசுகிறீர்.

௩௰. நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீரென்றும், ஒருவன் உம்மிடத்தில் வினவுகிறது உமக்குவேண்டுவதில்லை என்றும் இப்பொழுது அறிந்திருக்கிறோம். இதினாலே நீர் பராபரன் இடத்தில் இருந்து வந்ததை விசுவாசிக்கிறோம் என்றார்கள்.

௩௧. அதற்கு இயேசுவானவர் சொன்னது, இப்பொழுது விசுவாசிக்கிறீர்கள் கேளுங்கள்.

௩௨. நீங்கள் என்னைத்தனியேவைத்துச் * சிதறி அவரவரிடத்திற்குப்போகும் நேரம்வரும். அது இப்பொழுது வந்திருக்கின்றது. நான் தனித்திரேன். பிதாவானவர் என்னுடனே யிருக்கிறார். * மாற். ௰௪: ௨௭.

௩௩. என்னாலே நீங்கள் சமாதானமுள்ளவர்களாய் இருக்கும்படிக்கு இவைகளை உங்களுடனே சொன்னேன்.

௩௪. * இவ்வுலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டாய் இருக்கும். ஆனாலும், தயிரியங் கொள்ளுங்கள். நானே உலகத்தைச்செயித்தேனென்றார். * ௰௪: ௨௭. உரோ. ௫: ௧.

௰௭ அதிகாரம்.

[(௧) கிறிஸ்துத்தம்முடைய பிதாவை நோக்கி, தம்மை மகிமைப்படுத்தவும், (௬) அப்போஸ்தலர்களை, (௰௧) ஒருமையிலும், (௰௭) சத்தியத்திலுங் காக்கவும், (௨௰) அவர்களோடே மற்றெல்லா விசுவாசிகளை

யுந் தம்முடனேகூட மோட்சத்தில் மகி
மைப்படுத்தவும் வேண்டிக்கொண்டது.]

இவைகளை இயேசுவானவர் சொன்ன
பின்பு, அவர் தம்முடைய கண்களை
வானத்திற்கு நேராக உயர்த்தித்திருவுளம்
பற்றினதாவது;

௨. * பிதாவே! நேரம் வந்தது. நீர் உம்
முடைய குமாரனுக்குக்கொடுத்த யாவருக்
கும் அவன் நித்திய ஜீவனைக்கொடுக்கும்
பொருட்டாய். † மனிதர் யாவர்மேலும் அ
வனுக்கு அதிகாரம் கொடுத்தபடியே, உம்
முடைய குமாரன் உம்முடைய மகிமையை
விளக்கும்படிக்கு நீர் அவனை மகிமைப்படுத்
துவீராக. * ௰௨: ௨௩. † மத். ௰௧: ௨௭.

௩. ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மை
யும், நீர் அனுப்பின * இயேசுக்கிறிஸ்து
வையும் அறிந்துகொள்ளுகிறதே நித்திய
ஜீவன். * வாக். ௮: ௫௫.

௪. பூமியிலே நான் உம்முடைய மகிமை
யை விளக்கினேன். நான் செய்யும்படிக்கு
நீர் கொடுத்த கிரியையை முடித்தேன்.

௫. இப்பொழுது பிதாவே! உலகம் உண்
டாகிறதற்குமுன்னே உம்மிடத்தில் எனக்கு
உண்டாய் இருந்த உம்முடைய மகிமையி
னாலே என்னை மகிமைப்படுத்தும்.

௬. நீர் உலகத்தாரில் எடுத்து எனக்குக்
கொடுத்த மனிதருக்கு, உம்முடைய நாமத்
தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்மு
டையவர்களாய் இருந்தார்கள். * அவர்களை
எனக்கு ஒப்புக்கொடுத்தீர். அவர்கள் உம்
முடைய வசனத்தைக்கைக்கொண்டு இருக்
கிறார்கள். * ௬: ௩௭.

௭. நீர் எனக்குக்கொடுத்த யாவும் உம்மா
லே உண்டாயினவென்று அவர்கள் இப்
பொழுது அறிந்துகொண்டார்கள்.

௮. அல்லாமலும், நீர் எனக்குக்கொடுத்த
வசனங்களை நான் அவர்களுக்குக்கொடுத்
தேன், * அவர்கள் அவைகளை யேற்றுக்
கொண்டு, என்னை உம்மிடத்திலிருந்து புறப்
பட்டு வந்தவனென்று மெய்யாய் அறிந்து
நீர் என்னை யனுப்பினீரென்று விசுவாசித்
து இருக்கிறார்கள். * ௧ யோவா. ௪: ௰௪.

௯. நான் அவர்களுக்காக வேண்டிக்கொ
ள்ளுகிறேன். உலகத்தாருக்காகவல்ல, நீர்
எனக்குக்கொடுத்தவர்கள் உம்முடையவர்
களானபடியால், அவர்களுக்காகவேண்டிக்
கொள்ளுகிறேன்.

௰. * என்னுடைய யாவையும் உம்முடைய
வைகள். உம்முடையவைகள் என்னுடைய
வைகளாய் இருக்கின்றன. என்னுடைய ம
கிமை அவர்களுக்குள்ளே விளங்கி இருக்
கின்றது. * ௰௬: ௰௫.

௰௧. நான் உலகத்தில் இனி இரேன். அ
வர்கள் உலகத்திலே யிருப்பார்கள். நான்
உம்மிடத்திற்கு வருகிறேன். * பரிசுத்தமுள்
ள பிதாவே! நீர் எனக்குக்கொடுத்தவர்கள்
* நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு,
நீர் அவர்களை உம்முடைய நாமத்திலே
காத்துக்கொள்ளும். * ௰: ௩௰.

௰௨. இவ்வுலகத்திலே நான் அவர்களுட
னேகூட இருக்கையில், அவர்களை உம்மு
டைய நாமத்திலே காத்துக்கொண்டேன்.
நீர் எனக்குக்கொடுத்தவர்களை, காத்துக்
கொண்டு வந்தேன். * வேதவாக்கியம் நி
றைவேறத்தக்கதாகக்கேட்டின்மகன் கெட்
டுப்போனானே யல்லாமல், அவர்களில் ஒரு
வனாயினுங் கெட்டுப்போகவில்லை. * சங்கீ.
௱௯: ௮.

௰௩. இப்பொழுது நான் உம்மிடத்திற்கு
வருகிறேன். இவர்கள் என்னில் நிறைவாய்ச்
சந்தோஷப்படும்படிக்கு இவ்வுலகத்திலே
இவைகளைச்சொல்லுகிறேன்.

௰௪. நான் உம்முடைய வசனத்தை இவர்
களுக்குக்கொடுத்தேன். மேலும் நான் இவ்
வுலகத்தின் தன்மை இல்லாதவனாய் இருக்
கிறதுபோல, அவர்களும் இவ்வுலகத்தின்
தன்மை யில்லாதவர்களாய் இருக்கிறபடியி
னாலே, * உலகத்தார் அவர்களைப்பகைக்கி
றார்கள், * ௰௫: ௰௮, ௰௯.

௰௫. நீர் அவர்களை உலகத்தில் இருந்து
எடுத்துக்கொள்ளும்படியல்ல, அவர்களைப்
பொல்லாங்கில் இருந்து காப்பாற்றும்படி
வேண்டிக்கொள்ளுகிறேன்.

௰௬. நான் உலகத்தான் அல்லாதவனாய்
இருக்கிறதுபோல அவர்களும் இவ்வுலகத்
தார் அல்ல,

௰௭. உம்முடைய சத்தியத்தினாலே அவர்
களைப்பிரதிஷ்டையாக்கும். * உம்முடைய
வசனமே சத்தியம். * சங்கீ. ௱௰௯: ௪௩.

௰௮. நீர் என்னை இவ்வுலகத்தில் அனுப்பி
னதுபோல, நானும் அவர்களை உலகத்தில்
அனுப்புகிறேன்.

௰௯. அல்லாமலும் அவர்களுக்குஞ் சத்திய
மாய், பிரதிஷ்டையாக்கப்பட்டவர்களாய்
இருக்கும்படிக்கு, * அவர்களுக்காக நான்
என்னைத்தானே பிரதிஷ்டையாக்குகிறேன்.
* எபிரே. ௰: ௰.

௨௰. அல்லாமலும் நான் இவர்களுக்காக
மாத்திரமல்ல, இவர்களுடைய போதிப்பி
னாலே என்னிடத்தில் விசுவாசமாகும் பேர்
களுக்காகவும், எல்லாரும் ஒன்றாய் இருக்
கும்படிக்கு வேண்டிக்கொள்ளுகிறேன்.

௨௰௧. ஆ. பிதாவே! நீர் என்னை அனுப்பி
னதை உலகத்தார் விசுவாசிக்கத்தக்கதாக
நீர் என்னிலேயும், நான் உம்மிலேயும் இ
ருக்கிறதுபோல, அவர்களும் நம்மிலே
ஒன்றாய் இருக்கும்படிக்கே (வேண்டிக்
கொள்ளுகிறேன்.) * கலா. ௩: ௨௮.

௨௰௨. அல்லாமலும் நாம் ஒன்றாய் இருக்கி

றதுபோல, அவர்களும் ஒன்ருய் இருக்கும்ப
டிக்கு நீர் எனக்குக்கொடுத்த மகிமையை
நான் அவர்களுக்குக்கொடுத்தேன்.
௨௩. அவர்கள் ஒருமைப்பாட்டிலே நி
றைந்தவர்களாய் இருக்கும்படிக்கும் நீர்
என்னை அனுப்பினதையும், நீர் என்னிடத்
தில் அன்புகூருகிறதுபோல, அவர்களிடத்தி
லும் அன்புகூருகிறதையும் உலகத்தார் அ
றியும்படிக்கும், நான் * அவர்களிலேயும்,
நீர் என்னிலேயும் இருக்கவேண்டும்.
* ௧ கொரி. ௧: ௩௰.
௨௪. பிதாவே! உலகந் தோன்றினகாலத்
திற்குமுன்னே நீர் என்னிடத்தில் அன்பு
கூர்ந்தபடியினலே எனக்குக்கொடுத்த
என்னுடைய மகிமையை நீர் எனக்குக்
கொடுத்தவர்கள் காணும்படிக்கு * நான் இ
ருக்கும் இடம் எங்கேயோ, அங்கே அவர்
களும் என்னேடேகூட இருக்கவேண்டு
மென்று விரும்புகிறேன். * ௰௨ : ௨௬.
௨௫. நீதியுள்ள பிதாவே! உலகத்தார் உம்
மை அறியவில்லை. நான் உம்மை அறிந்தி
ருக்கிறேன். அல்லாமலும் நீர் என்னை அ
னுப்பினதை இவர்கள் அறிந்திருக்கிருர்கள்.
௨௬. அன்றியும் நீர் என்னிடத்தில் வைத்
திருக்கிற அன்பு இவர்களிலே இருக்கும்ப
டிக்கும், நான் இவர்களிலே இருக்கும்படிக்
கும், உம்முடைய நாமத்தை இவர்களுக்குத்
தெரியப்படுத்தினேன். பின்னும் அப்படி
யே தெரியப்படுத்துவேன் என்ருர்.

௰௮ அதிகாரம்.

[(௧) யூதா இயேசுவைக்காட்டிக்கொடுத்த
து. (௬) சேவகர் தரையில் விழுந்தது.
(௰) பேதுரு மல்குவின் காதை வெட்டின
து. (௰௨) அன்னு, காயிபா என்பவர்களுக்
குமுன்பாக இயேசு கொண்டுபோகப்பட்
டது. (௰௫) பேதுரு மறுதலித்தது. (௰௯)
இயேசுவானவர் காயிபாவுக்குமுன்பாகச்
சோதிக்கப்பட்டது. (௨௮) அவர் பிலாத்
துவுக்குமுன்பாகக்குற்றஞ் சாற்றப்பட்ட
து. (௩௬) தாம் தம்முடைய இராச்சியத்
தைக்குறித்துச்சொல்லியது. (௪௰) யூதர்
கள் பரபாவை விடுதலையாக்கும்படி கேட்
டுக்கொண்டது]

இயேசுவானவர் இவைகளைச்சொன்ன
பின்பு, அவர் தம்முடைய சீஷருட
னேகூடக் * கீதிரோன் என்னும் ஆற்றுக்கு
அப்புறம் போனுர். அங்கே ஒரு தோட்
டம் இருந்தது. அதிலே அவரும் அவருடை
ய சீஷரும் பிரவேசித்தார்கள். * ௨ சாமு
௰௫: ௨௩.
௨. இயேசுவானவர் தம்முடைய சீஷருட
னேகூட அடிக்கடி அங்கே கூடிவந்திருந்
தபடியினலே, அவரைக்காட்டிக்கொடுத்த
யூதாவும் அந்த இடத்தை அறிந்தான்.
௩. * ஆதலால், யூதாவானவன் போர்ச்சே
வகரின்கூட்டத்தையும், பிரதான ஆசாரி
யர் பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்
பட்ட ஊழிடக்காரரையுங் கூட்டிக்
கொண்டு, பந்தங்களோடும், தீவெட்டிக
ளோடும், ஆயுதங்களோடும் அவ்விடத்திற்
குப்போனுன். * மத். ௨௬: ௪௭. மாற்.
௰௪: ௪௩. லூக். ௨௨: ௪௭.
௪ அப்பொழுது இயேசுவானவர் தமக்கு
மேல்வரும் யாவையும் அறிந்து, புறப்பட்டு
அவர்களைநோக்கி, யாரைத்தேடுகிறீர்கள்
என்ருர்.
௫. அதற்கவர்கள் நாசரேத் தூரானுகிய
இயேசுவைத் தேடுகிறேம் என்ருர்கள்.
இயேசுவானவர் நானே அவனென்ருர். அ
வரைக்காட்டிக்கொடுத்த யூதாவும் அவர்
களுடனேகூட நின்றுன்.
௬. நானே அவனென்று அவர் சொன்ன
பொழுது, அவர்கள் பின்னிட்டுத்தரையிலே
விழுந்தார்கள்.
௭. பின்பு அவர் மறுபடியும் அவர்களை
நோக்கி, ஆரைத்தேடுகிறீர்களென்று கேட்
டார். நாசரேத் தூரானுகிய இயேசுவைத்
தேடுகிறேம் என்ருர்கள்.
௮. இயேசுவானவர் சொன்னது, நானே
அவனென்று உங்களுடனே சொன்னேனே.
நீங்கள் என்னைத்தேடினீர்களானுல் இவர்க
ளை விட்டுவிடுங்கள் என்ருர்.
௯. அதினலே * நீர் எனக்குக்கொடுத்த
வர்களில் ஒருவனையாகிலும் நான் இழக்க
வில்லையென்று அவர் சொல்லிய வசனம் நி
றைவேறிற்று. * ௰௭: ௰௨.
௰. அப்பொழுது சீமோன் பேதுரு தன்
னிடத்தில் இருக்கிற கத்தியை உருவிப்பிர
தான ஆசாரியனுடைய வேலைக்காரனுடை
ய வலதுகாதறவெட்டினுன். அந்த வே
லைக்காரனுக்கு மல்குஸ் என்று பேர்.
௰௧. இயேசுவானவர் பேதுருவை நோக்
கிக்கத்தியை உறையிலேபோடு. பிதா
எனக்குக்கொடுத்த பாத்திரத்தில் நான் பா
னம்பண்ணுமல் இருப்பேனு என்ருர்.
௰௨. பின்பு போர்ச்சேவகரும், ஆயிரஞ்
சேனைக்குத்தலைவனும், யூதர்களுடைய ஊ
ழியக்காரரும் * இயேசுவைப்பிடித்து அவ
ரைக்கட்டி, * லூக். ௨௨: ௫௪. மாற். ௰௪:
௪௬. மத். ௨௬: ௫௭.
௰௩. முதலாவது அன்னு என்பவனிடத்
திற்கொண்டுபோனுர்கள். அந்த அன்னு
அவ்வருஷத்துப்பிரதான ஆசாரியனுகிய
காயிபா என்பவனுக்கு மாமனுயிருந்தான்.
௰௪. * ஒரே மனிதன் சனங்களுக்குப்பதி
லாக மடிந்துபோனுல் நலமாய் இருக்கு
மென்று யூதருக்கு ஆலோசனை சொன்ன
வன் அந்தக்காயிபாவே. * ௰௧ : ௪௯—௫௨.
௰௫. * சீமோன், பேதுருவும் வேறொரு

சீஷனும் இயேசுவுக்குப்பின்சென்றார்கள்.
அல்லாமலும் அந்தச்சீஷன் பிரதான ஆசா
ரியனுக்கு அறிமுகமுள்ளவனாய், இயேசுவு
டனே கூடப்பிரதான ஆசாரியனுடைய
மாளிகைக்குட்பிரவேசித்தான். * மத்தே.
௨௬: ௫௮. மாற். ௰௪: ௫௪. லூக். ௨௨:
௫௪, ௫௫.

௰௬. பேதுரு வெளிவாசற்படியிலே நின்
றான். ஆதலால் பிரதான ஆசாரியனுக்கு
அறிமுகமுள்ள அந்த மற்றச்சீஷன் வெளி
யேபோய், வாசலைக்காக்கிறவளுடனே
சொல்லி, பேதுருவை உள்ளே அழைத்துக்
கொண்டான்.

௰௭. அப்போது வாசலைக்காக்கிற வேலைக்
காரி பேதுருவை நோக்கி, நீயும் அந்த ம
னிதனுடைய சீஷரில் ஒருவன் அல்லவா எ
ன்றாள். அவன் நான் அப்படிப்பட்டவன்
அல்லவென்றான்.

௰௮. குளிர்ச்சியான காலமானபடியினாலே
வேலைக்காரரும், ஊழியக்காரரும் நெருப்
பையுண்டாக்கி நின்று குளிர் காய்ந்தார்
கள். அவர்களுடனே பேதுருவும் நின்று
குளிர் காய்ந்தான்.

௰௯. பிரதான ஆசாரியன் இயேசுவான
வருடைய சீஷரையும், போதகத்தையுங்
குறித்து அவரிடத்தில் வினாவினான்.

௨௰. அவனுடனே இயேசுவானவர் சொன்
னதாவது; அந்தரங்கத்திலே நான் ஒன்
றும்பேசாமல், வெளியரங்கமாய் லோகத்
துடனே பேசினேன். செப ஆலயத்திலே
யும், யூதர்கள் எல்லாருங் கூடிவருகிற தே
வாலயத்திலேயும், எப்பொழுதும் உபதே
சம் பண்ணினேன்.

௨௧. என்னத்திற்கு நீர் என்னிடத்தில் வி
சாரிக்கிறீர். எனக்குச்செவிகொடுத்தவர்க
ளுக்கு, நான் சொல்லியவைகளைக்குறித்து
அவர்கள் இடத்திலே விசாரிப்பீராக. நான்
பேசினவைகளை அறிந்திருக்கிறார்களே என்
றார்.

௨௨. இப்படி அவர் சொன்னபொழுது
சமீபமாய் நின்ற * ஊழியக்காரரில் ஒரு
வன் பிரதான ஆசாரியனுக்கு இப்படிமா
றுத்தரவு சொல்லலாமாவென்றுசொல்லி,
இயேசுவானவரையொரு அடியடித்தான்.
அவனுடனே இயேசுவானவர் சொன்னது.
* அப்போ. ௨௩: ௨.

௨௩. நான் தகாதவிதமாய்ச்சொன்னேனா
னால், தகாததாய் இருக்கிறதையொப்புவி.
நான் தகுதியாய்ச்சொல்லியிருக்க என்னத்
தினாலே என்னை அடிக்கிறாய் என்றார்.

௨௪. அன்னாவென்பவன் கட்டப்பட்டவ
ரான அவரைப்பிரதான ஆசாரியனான
காயிபாவின் இடத்திற்கு அனுப்பி இருந்
தான்.

௨௫. சீமோன் பேதுரு நின்று குளிர்
காய்ந்தான். அப்பொழுது சிலர் அவனை
நோக்கி, நீயும் அவனுடைய சீஷரில் ஒரு
வன் அல்லவாவென்றார்கள். அதற்கவன்
நான் அல்லவென்று மறுதலித்தான்.

௨௬. பின்பு பிரதான ஆசாரியனுடைய
வேலைக்காரரில் ஒருவனுமாய், பேதுருவினா
லே காதறவெட்டப்பட்டவனுக்கு இனத்
தானுமாய் இருந்தவன் அவனை நோக்கி,
நான் உன்னை அவரோடேகூடத்தோட்டத்
திலே காணவில்லையாவென்றான்.

௨௭. அப்பொழுது பேதுரு மறுபடியும்
மறுதலித்தான். உடனே சேவல்கூவிற்று.

௨௮. * விடியற்காலமானபொழுது, அவர்
கள் காயிபாவினிடத்தில் இருந்து இயேசு
வானவரைப்பெரிய துரையின் நியாயஸ்த
லத்திற்குக்கொண்டுபோனார்கள். அவர்கள்
அசுசிப்படாமற் பஸ்காவைப்புசிக்கும்படிக்
கு, தாங்கள் அந்த நியாயஸ்தலத்திற்குட்
பிரவேசிக்கவில்லை. * மத். ௨௭: ௧, ௨.
மாற். ௰௫: ௧. லூக். ௨௩: ௧.

௨௯. ஆதலாற் பிலாத்து என்னுந் துரை
யவர்கள் இடத்திற்குப்போய், இந்த மனி
தன்மேல் என்னகுற்றஞ் சாற்றுகிறீர்கள் என்
றான்.

௩௰. அவனுடனே அவர்கள் சொன்னது,
இவன் பொல்லாங்கு செய்தவன் அல்லா
திருந்தால், இவனை யுமக்கு ஒப்புக்கொடுக்
கமாட்டோம் என்றார்கள்.

௩௧. ஆதலாற் பிலாத்து என்பவன் அவர்
களை நோக்கி, * இவனை நீங்களே கொண்டு
போய் உங்கள் நியாயசாஸ்திரத்தின்படி
இவனுக்கு நியாயத்தீர்ப்புக்கொடுங்கள் என்
றான். அதற்கு யூதர்கள் சொன்னது, ஒரு
வனுக்கு மரணத்தைக்கொடுக்கிறதற்கு எங்
கள் இடத்தில் அதிகாரம் இல்லையே என்
றார்கள். * ௰௯: ௬.

௩௨. * இயேசுவானவர் தமக்கு மரணம்
வரும் வகையைக்குறித்துச்சொன்னவசனம்
நிறைவேறத்தக்கதாக (அப்படிப்பேசினார்
கள்.) * ௰௨: ௩௨, ௩௩.

௩௩. அப்பொழுது பிலாத்தானவன் மறு
படியும் நியாயஸ்தலத்திற்குட்பிரவேசித்
து, இயேசுவை யழைத்து நீ யூதருடைய
இராசனாவென்று கேட்டான்.

௩௪. அவனுடனே இயேசுவானவர் சொன்
னது, இதை நீர் உம்மாலே சொல்லுகிறீ
ரோ அல்லது மற்றவர்கள் என்னைக்குறித்து
இதை உமக்குச்சொன்னார்களோவென்றார்.

௩௫. பிலாத்து மறுமொழியாகச்சொன்ன
து, நான் யூதனா! உன்னுடைய தேசத்
தாரும், பிரதான ஆசாரியரும் உன்னையெ
னக்கு ஒப்புக்கொடுத்தார்கள். என்னசெய்
தாய் என்றான்.

௩௬. அதற்கு இயேசுவானவர் சொன்னது,
என் இராச்சியம் இவ்வுலகத்தின் தன்மை

யுள்ளதல்ல, என் இராச்சியம் இவ்வுலகத்
தின் தன்மையுள்ளதானால், நான் யூதர்கை
யில் அகப்படாதபடிக்கு என் ஊழியக்கா
ரர் போராட்டஞ் செய்வார்கள். என் இ
ராச்சியம் இம்மையின் தன்மையுடையதல்
லவென்றார்.
௩௭. அப்பொழுது பிலாத்தானவன் அவ
ரை நோக்கி, ஆதலால் நீ இராசன் அல்ல
வாவென்றான். * இயேசுவானவர் சொன்
னது, நீர் சொல்லுகிறபடி நான் இராசன்
தான். சத்தியத்தைக்குறித்துச்சாட்சிகொ
டுக்கும்படிக்கு நான் பிறந்தேன். அதற்கா
கவே இவ்வுலகத்திற்கு வந்தேன். சத்திய
த்தின் தன்மை யுள்ளவன் எவனோ, அவன்
எனக்குச்செவிகொடுக்கிறானென்றார். * ௧
தீமோ. ௬: ௰௪.
௩௮. அதற்குப் பிலாத்துச்சத்தியம் எது
வென்று சொல்லி, மறுபடியும் யூதரிடத்
திற்குப்போய், அவர்களை நோக்கி, நான்
அவனிடத்தில் ஒரு குற்றமுங் காணேன்.
௩௯. பஸ்காப்பண்டிகையிலே நான் உங்
களுக்காக ஒருவனை விடுதலைபண்ணுகிறது
வழக்கமாய் இருக்கிறதே. ஆகையால்,
நான் யூதருடைய இராசனை உங்களுக்காக
விடுதலைபண்ண உங்களுக்கு விருப்பம் உண்
டாவென்றான்.
௪௰. அப்பொழுது அவர்கள் எல்லாரும்
இவனை யல்ல, பரபாவை விடுதலைபண்ண
வேண்டுமென்று கூப்பிட்டார்கள். பரபா
வென்பவன் கள்ளனாய் இருந்தான்.

௰௯ அதிகாரம்.

[(௧) கிறிஸ்து வாரினால் அடிக்கவும், முள்
முடி தரிக்கவும், கையினால் அறையவும் பட்
டது. (௪) பிலாத்து அவரை விடுதலை
யாக்க நினைத்தும், யூதர்களுடைய அமளி
யினாற் சிலுவையில் அறையும்படி அவரை
ஒப்புவித்தது. (௨௩) அவர்கள் அவருடைய
வஸ்திரங்களுக்காகச்சீவிபோட்டது. (௨௫)
அவர் தம்முடைய தாயாரை யோவான்
இடத்தில் ஒப்புவித்து, (௨௮) மரணம் அ
டைந்தது. (௩௧) அவருடைய விலா ஈட்
டியினாற் குத்தப்பட்டது. (௩௮) யோசேப்
பும், நீக்கோதேமும் அவரையடக்கம் பண்
ணினது.]

அப்பொழுது * பிலாத்து என்பவன்
இயேசுவைப்பிடித்து வாரினால் அ
டிப்பித்தான். * மத். ௨௭: ௨௬—௩௫.
மாற். ௰௫: ௰௫—௨௰. லூக். ௨௩: ௨௫.
௨. அல்லாமலும், * போர்ச்சேவகர் முள்
ளுக்களினால் ஒரு முடியைப்பின்னி, அதை
அவருடைய சிரசின்மேல்வைத்து, ஒரு சிவப்
பான அங்கியை யவருக்குத் தரிப்பித்து,
* மத். ௨௭: ௨௯, ௩௰.
௩. யூதருடைய இராசாவே! வாழ்கவென்
று சொல்லி, அவருடைய கன்னத்தில் அ
டித்தார்கள்.
௪. பிலாத்தானவன் மறுபடியும் வெளியே
போய், அவர்களை நோக்கி இதோ, இவனி
டத்தில் ஒரு குற்றத்தையும் நான் காணாமல்
இருக்கிறதை நீங்கள் அறியும்படிக்கு, இவ
னை உங்கள் இடத்திற் கொண்டுவருகிறேன்
என்றான்.
௫. உடனே முள்முடியும், சிவப்பான அங்
கியுந் தரிக்கப்பட்டவராய் இயேசுவானவர்
வெளியே வந்தார். அப்பொழுது பிலாத்து
அவர்களை நோக்கி, இந்த மனிதனைப்பாருங்
கள் என்றான்.
௬. பிரதான ஆசாரியரும், ஊழியக்கார
ரும் அவரைக்கண்டபொழுது, இவனைச்
சிலுவைமரத்திலே அறையும், இவனைச்சிலு
வை மரத்திலே அறையுமென்று கூப்பிட்
டார்கள். அதற்குப்பிலாத்துச்சொன்னது,
இவனிடத்தில் ஒரு குற்றத்தையுங் காண
வில்லையே! ஆகையால், நீங்களே இவனைக்
கொண்டுபோய்ச்சிலுவை மரத்தில் அறை
யுங்கள் என்றான்.
௭. யூதர்கள் மறுமொழியாகச்சொன்னது,
எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணம் உண்டு.
இவன் தன்னைப்பராபரனுடைய குமாரன்
என்று சொன்னபடியினாலே, அந்த நியா
யப்பிரமாணத்தின்படியே இவன் சாகவே
ண்டும் என்றார்கள்.
௮. இந்த வசனத்தைப்பிலாத்துக்கேட்ட
பொழுது, அதிகமாய்ப்பயந்து, மறுபடி
யும் நியாயஸ்தலத்திற்குள்ளேபோய்,
௯. இயேசுவானவரை நோக்கி, நீ எவ்வி
டத்தான் என்றான். அதற்கு இயேசுவான
வர் மாறுத்தரஞ் சொல்லவில்லை.
௰. ஆதலாற் பிலாத்து அவரை நோக்கி,
நீ எனக்கு மறுமொழி சொல்லுகிறதில்லை
யா! உன்னைச்சிலுவைமரத்தில் அறையும்
படி எனக்கதிகாரம் உண்டென்றும், உன்னை
விடுதலை பண்ணும்படியும் எனக்கதிகாரம்
உண்டென்றும் நீ அறியாமலா இருக்கி
றாய் என்றான்.
௰௧. இயேசுவானவர் சொன்னது, இந்த
அதிகாரம் உமக்கு உயரத்தில் இருந்து
கொடுக்கப்படாதிருந்ததானால் எனக்கு வி
ரோதமாய்ச்செய்யும் அதிகாரம் உமக்
குண்டாய் இருக்கமாட்டாது. ஆனபடியி
னாலே யென்னை உமக்கு ஒப்புக்கொடுத்த
வன் அதிகபாவமுள்ளவனென்றார்.
௰௨. அதுமுதற் பிலாத்தானவன் அவரை
விடுதலைபண்ணத்தேடினான். யூதர்கள் அவ
னை நோக்கி, இவனை விடுதலைபண்ணினால்,
நீ இராயனுக்குச்சிநேகிதனல்ல, தன்னை இ
ராசாவென்கிறவன் எவனோ அவன் இராய
னுக்கு விரோதியாய் இருக்கிறான் என்று
கூப்பிட்டார்கள்.

௰௩. அந்நாள் பஸ்காவுக்கு எத்தனமாக்
கப்படுகிற நாளுமாய், ஏறக்குறைய ஆரு
மணிநேரமுமாய் இருக்க,
௰௪. பிலாத்தானவன் இந்த வசனத்தைக்
கேட்டபொழுது, அவன் இயேசுவை வெளி
யே அழைத்துப்போய், தளவரிசைப்படுத்த
இடமென்றும், எபிரேயுபாஷையிலே கப்
பத்தாவென்றுஞ் சொல்லப்பட்ட இடத்தி
லே நியாயாசனத்தின்மேல் உட்கார்ந்து
யூதர்களை நோக்கி, உங்கள் இராசாவைப்
பாருங்கள் என்றான்.
௰௫. அவர்கள் இவனை யகற்றும், அகற்
றும். இவனைச்சிலுவைமரத்திலே அறையு
மென்று கூப்பிட்டார்கள். பிலாத்தானவன்
சொன்னது, உங்கள் இராசாவை நான்
சிலுவைமரத்திலே அறையலாமாவென்
றான். அதற்குப்பிரதான ஆசாரியர் இரா
யனே யல்லாமல் ஒரு இராசா எங்களுக்
கில்லையென்றார்கள்.
௰௬. அப்பொழுது அவரைச்சிலுவைமரத்
தில், அறையும்படிக்கு அவன் அவரை யவர்
களுக்கு ஒப்புக்கொடுத்தான். அந்தப்படி
யவர்கள் இயேசுவானவரைப்பிடித்துக்கொ
ண்டுபோனார்கள்.
௰௭. * அவர் தம்முடைய சிலுவைமரத்
தைச்சுமந்துகொண்டு, எபிரேயுபாஷையி
லே கொல்கத்தா என்று சொல்லப்பட்ட
தலையோட்டிடமென்னும் இடத்திற்குப்
புறப்பட்டுப்போனார். * மத். ௨௭: ௩௧.
மாற். ௰௫: ௨௰. லூக். ௨௩: ௨௬.
௰௮. * அங்கே யவர்கள் நடுவிலே அவ
ரையும், அவருடனே கூட இருபக்கங்களி
லே வேறு இரண்டுபேரையுஞ் சிலுவைம
ரங்களில் அறைந்தார்கள். * மத். ௨௭:
௩௮. மாற். ௰௫: ௨௭. லூக். ௨௩: ௩௩.
௰௯. அன்றியும், பிலாத்தானவன் * நாச
ரேத்தூராகிய இயேசு யூதருடைய இரா
சாவென்று எபிரேயு பாஷையிலேயும், கி
ரேக்கைப்பாஷையிலேயும், லத்தீன் பா
ஷையிலேயும் எழுதி அதைச்சிலுவைமரத்
தின்மேற்சேர்த்தான். * மத். ௨௭: ௩௭.
௨௰. இயேசுவானவர் சிலுவையில் அறை
யப்பட்டிருந்த இடம் நகரத்திற்குச்சமீப
மாயிருந்தபடியினாலே, யூதர்களில் அநேகம்
பேர் அந்த மேலெழுத்தைவாசித்தார்கள்.
௨௧. அப்பொழுது, யூதருடைய பிரதான
ஆசாரியர் பிலாத்துவினிடத்திற்குப்போய்,
யூதருடைய இராசாவென்று நீர் எழுதா
மல், தான் யூதருடைய இராசா என்று அ
வன் சொன்னானென்றே யெழுதவேண்டும்
என்றார்கள்.
௨௨. அதற்குப்பிலாத்து நான் எழுதினது
எழுதி ஆயிற்றென்றான்.
௨௩. போர்ச்சேவகர் இயேசுவைச்சிலுவை
மரத்திலே * அறைந்தபின்பு அவருடைய
வஸ்திரங்களையெடுத்து, ஒவ்வொரு சேவக
னுக்கு ஒவ்வொரு பங்கு வரும்படி நாலு
பங்காக்கினார்கள். அங்கியையும் எடுத்தார்
கள். அந்த அங்கி தைத்தலில்லாமல், மே
லேதொடங்கி முழுவதும் நெய்யப்பட்டி
ருந்தபடியால், * மத். ௨௭: ௩௫. மாற்.
௰௫: ௨௪. லூக். ௨௩: ௩௪. சங்கீ. ௨௨: ௰௮.
௨௪. அவர்கள் இதைக்கிழியாமல், இதைப்
பெற்றுக்கொள்ளுகிறவனை அறியும்படிக்
குச்சீட்டுப்போடக்கடவோமென்று, தங்க
ளுக்குள்ளே பேசிக்கொண்டார்கள். * என்
வஸ்திரங்களைத்தங்களுக்குள்ளே பங்கிட்டுக்
கொண்டு, என் உடையின்மேல் சீட்டுப்
போட்டார்களென்கிற வேதவாக்கியம் நி
றைவேறத்தக்கதாகப்போர்ச்சேவகர் அப்
படிச்செய்தார்கள். * சங்கீ. ௨௨: ௰௮.
௨௫. அல்லாமலும், இயேசுவின் சிலுவை
மரத்தின் அருகே அவருடைய தாயும், அ
வளுடைய சகோதரியாகிய கிலெயோப்பா
மரியாளும், மகுதலா ஊராளாகிய மரியாளும்
நின்றார்கள்.
௨௬. அப்பொழுது, இயேசுவானவர் தம்
முடைய தாயையும், அங்கே நின்ற தமக்கு
அன்பான சீஷனையுங்கண்டு,
௨௭. தம்முடைய தாயை நோக்கி, ஸ்திரீ
யே! இவனே உன் மகனென்றார். பின்பு,
அந்தச்சீஷனை நோக்கி, இவளே உன் தா
யென்றார். அந்நேரமுதற்கொண்டு அந்தச்
சீஷன் அவளைத்தன்னிடமாய்ச் சேர்த்துக்
கொண்டான்.
௨௮. இதின் பின்பு இயேசுவானவர் எல்
லாம் முடிந்து தீர்ந்ததென்று அறிந்து, வே
தவாக்கியம் நிறைவேறத்தக்கதாகத் * தா
கமாய் இருக்கிறேனென்றார். * சங்கீதம்
௬௯: ௨௧.
௨௯. அங்கே காடி நிறைந்த பாத்திரம்
வைக்கப்பட்டிருந்தது. ஆதலால், அவர்
கள் கடற்காளானைக்காடியில் தோய்த்து
ஈசோப்புத்தண்டிற்பூட்டி, அவருடைய வா
யினிடத்திற்கு நீட்டிக்கொடுத்தார்கள்.
௩௰. * இயேசுவானவர் காடியை வாங்கின
பின்பு முடிந்ததென்றுசொல்லித்தலையைச்
சாய்த்து ஆவியை யொப்புவித்தார். * மத்.
௨௭: ௫௰. மாற். ௰௫: ௩௭. லூக். ௨௩: ௪௬.
௩௧. அந்தநாள் பெரிய ஓய்வுநாளுக்கு ஆ
யத்தநாளானபடியினாலே, உடல்கள் அந்த
ஓய்வுநாளிலே சிலுவைமரங்களில் இராத
படி யூதர்கள் பிலாத்துவினிடத்திற்போய்,
அவர்களுடைய காலெலும்புகள் முறிக்கப்
படும்படிக்கும், உடல்கள் எடுத்துப்போ
டப்படும்படிக்கும் அவனிடத்தில் உத்தரவு
கேட்டுக்கொண்டார்கள்.
௩௨. அந்தப்படி போர்ச்சேவகர்போய்,
அவருடனேகூடச்சிலுவைகளில் அறையப்
பட்ட முந்தினவனுடைய காலெலும்புகளை

யும், மற்றவனுடைய காலெலும்புகளையும்
முறித்தார்கள்.
௩௩. அவர்கள் இயேசுவினிடத்திற்சேர்ந்த
பொழுது, அவர் மரித்ததைக்கண்டு, அவரு
டைய காலெலும்புகளை முறிக்கவில்லை.
௩௪. போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியி
னால் அவருடைய விலாவிற் குத்தினான். உட
னே இரத்தமும், சலமும் புறப்பட்டன.
௩௫. அதைக்கண்டவன் அதைக்குறித்துச்
சாட்சிகொடுக்கிறான்; அவனுடைய சாட்
சி மெய்யாய் இருக்கின்றது. நீங்கள் விசு
வாசிக்கும்படிக்கு, தான் சொல்லுகிறது
மெய்யென்று அவன் அறிந்திருக்கிறான்
௩௬. அவருடைய * எலும்புகளில் ஒன்
றும் முறிக்கப்படுவதில்லையென்கிற வேத
வாக்கியம் நிறைவேறத்தக்கதாக இவை
நடந்தன. * ௨ மோ. ௰௨: ௪௬.
௩௭. அல்லாமலும், * தாங்கள் குத்தினவ
ரைப்பார்ப்பார்களென்றும், வேறுவேதவாக்
கியஞ்சொல்லுகின்றது. * சகரியா ௰௨: ௰.
௩௮. அதற்குப்பின்பு அரிமத்தியா ஊரானு
மாய், இயேசுவானவருக்குச்சீஷனாய் இருந்
தும், யூதர்களுக்குப்பயப்பட்டதினாலே அ
தை மறைத்தவனுமாய் இருந்த யோசேப்
பென்பவன், இயேசுவினுடைய சரீரத்தை
யெடுத்துக்கொள்ளும்படிக்கு, பிலாத்துவினி
டத்தில் உத்தரவுகேட்டான். பிலாத்து
உத்தரவுகொடுத்தான். ஆகையால், அவன்
போய் இயேசுவின் சரீரத்தை யெடுத்துக்
கொண்டான். * மத். ௨௭: ௫௭. மாற்
௰௫: ௪௩. லூக். ௨௩: ௫௰.
௩௯. * ஆரம்பத்திலே ஓர் இராத்திரியில்
இயேசுவினிடத்திற்குப்போயிருந்த நீக்கோ
தேமென்பவனுஞ்சேர்ந்து,வெள்ளைப்போள
மும், கரியபோளமுங் கலந்த ஏறக்குறைய
நூறு இராத்தல் பரிமளத்தைக்கொண்டுவந்
தான். * ௩: ௧, ௨.
௪௰. அவர்கள் இயேசுவின் சரீரத்தை யெ
டுத்துக்கொண்டு, யூதர்கள் சவங்களிற் சு
கந்தவருக்கம் இடுகிற வழக்கத்தின்படி அ
தைச்சுகந்த வருக்கங்களுடனேகூடச்சீலை
களிற்கட்டினார்கள்.
௪௧. மேலும், அவர் சிலுவையில் அறை
யப்பட்ட இடத்திலே ஒரு தோட்டமும்,
அந்தத்தோட்டத்திலே யொருக்காலும், ஒ
ருவரும் வைக்கப்பட்டிராத புதிய கல்லறை
யும் இருந்தன.
௪௨. யூதருடைய ஆயத்த நாளானபடியி
னாலும், அந்தக்கல்லறை சமீபமானபடியி
னாலும் இயேசுவானவரை அவ்விடத்திலே
வைத்தார்கள்.

௨௰ அதிகாரம்.

[(௧) மரியாளும், (௩) பேதுருவும், யோவா
னும், அவர் உயிர்த்தெழுந்ததை அறியா
மற் கல்லறையினிடத்திற்போனது. (௰௧)
இயேசு மகுதலவூர் மரியாளுக்கும், (௰௯)
தம்முடைய சீஷர்களுக்குங் காட்சியானது.
(௨௪) தோமாவின் அவநம்பிக்கையையும்,
நல் அறிக்கையையுங் குறித்துச்சொல்லி
யது. (௩௰) வேத எழுத்துக்கள் இரட்சணி
யத்துக்குப்போதுமானவைகளென்பது.]

* பின்பு வாரத்தின் முதலாங்கிழமைக்
காலையிலே இருட்டிருக்கையில், ம
குதல ஊராளாகிய மரியாள் கல்லறையினி
டத்திற்குப்போய், அதில் இருந்த கல்லை
யெடுத்துப்போட்டதைக்கண்டாள். * மத்.
௨௮: ௧. மாற். ௰௬: ௧—௯. லூக். ௨௪: ௧.
௨. ஆதலால், அவள் ஓடிச்சீமோன்பேது
ருவினிடத்திலும், இயேசுவுக்கு அன்பாயி
ருந்த மற்றச்சீஷனிடத்திலும்போய்க்கல்ல
றையிலிருந்த கர்த்தரை யெடுத்துக்கொண்
டார்கள். அவரை வைத்த இடம் எங்களுக்
குத்தெரியவில்லையென்றாள்.
௩. அப்பொழுது பேதுருவும், அந்த மற்
றச்சீஷனுங் கல்லறையினிடத்திற்குப்போ
கும்படி புறப்பட்டு, இருவரும் ஒருமித்து
ஓடினார்கள்.
௪. பேதுருவிலும் அந்த மற்றச்சீஷன் அ
திகதுரிதமாய் ஓடி, முந்திக்கல்லறையினி
டத்திற்சேர்ந்து,
௫. குனிந்துநின்று அதற்குள்ளே பார்க்
கையிற் சேலைகள் வைத்திருக்கக்கண்டான்.
௬. அவன் உள்ளேபோகவில்லை. சீமோன்
பேதுரு அவனுக்குப்பின்சென்றுபோய்க்
கல்லறைக்குள்ளே பிரவேசித்து,
௭. சேலைகள் வைத்திருக்கிறதையும், அவ
ருடைய தலையைச்சுற்றியிருந்த சேலை மற்
றச்சேலைகளுடனே வையாமல், தனியாய்
ஓரிடத்திலே சுருட்டிவைத்திருக்கிறதையுங்
கண்டான்.
௮. அப்பொழுது, முந்திக்கல்லறையினி
டத்திற்குப்போன மற்றச்சீஷனும் உள்ளே
பிரவேசித்துக்கண்டு நம்பினான்.
௯. அவர் மரித்தோரிலிருந்தெழுந்திருக்க
வேண்டுமென்கிற வேதவாக்கியத்தை அவர்
கள் அதுவரைக்கும் அறிந்துகொள்ளாதி
ருந்தார்கள்.
௰. பின்பு அந்தச்சீஷர் தங்களுடைய இ
டத்திற்குத்திரும்பினார்கள்.
௰௧. மரியாள் கல்லறையின் அருகான வெ
ளியிலே அழுதுகொண்டு நின்றாள். அப்ப
டி அழுதுகொள்ளுகையில், அவள் கல்ல
றைக்குள்ளே குனிந்துபார்த்து,
௰௨. இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டி
ருந்த இடத்திலே வெண்மையான உடை
யுள்ளவர்களாய், தலைமாட்டிலே ஒருவனும்
கால்மாட்டிலே ஒருவனுமாக இரண்டுதூதர்
கள் உட்கார்ந்து இருக்கிறதைக்கண்டாள்.

௰௫. அவர்கள் அவளை நோக்கி, ஸ்திரீயே!
என்னத்தினாலே அழுகிறாய் என்றார்கள். அ
தற்கவள் சொன்னது, என் கர்த்தாவை யெ
டுத்துக்கொண்டுபோனார்கள். அவரைவைத்
த இடம் எனக்குத்தெரியவில்லை. அதினா
லே (அழுகிறேன்) என்றுசொல்லிப்பின்னா
கத்திரும்புகையில், இயேசுவானவர் நிற்கிற
தைக்கண்டாள்.
௰௬. அவள் அவரை இயேசு என்று அறிய
வில்லை. அப்பொழுது, இயேசுவானவர் அ
வளை நோக்கி,
௰௭. ஸ்திரீயே! என்னத்தினாலே அழுகி
றாய் ஆரைத்தேடுகிறாயென்றார்? அவள் அ
வரைத்தோட்டக்காரனென்று எண்ணி, அ
வருடனே சொன்னது, ஐயா! நீர் அவரை
யெடுத்துக்கொண்டுபோனீரானால், அவரை
வைத்த இடத்தை யெனக்குச்சொல்லவேண்
டும். நான் போய் அவரை யெடுத்துக்
கொள்ளுவேனென்றாள்.
௰௮. அப்பொழுது, இயேசுவானவர் மரி
யாளே யென்று அவளுடனே சொன்னார்
உடனே அவள் திரும்பிக்கொண்டு, இரபூனீ
யென்று அவருடனே சொன்னாள். இரபூனீ
யென்பதற்குப்போதகரே யென்று அர்த்த
மாம்.
௰௯. இயேசுவானவர் சொன்னது, நீ என்
னைத்தொடாதிரு. இன்னம் என் பிதாவின்
இடத்திற்கு நான் எழுந்துபோகவில்லையே.
* இப்பொழுது நீயென் சகோதரரிடத்
திற்குப்போய், என் பிதாவினிடத்திற்கும்,
உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனி
டத்திற்கும், உங்கள் தேவனிடத்திற்கும் எ
ழுந்துபோகிறேனென்று அவர்களுடனே
சொல்லென்றார். * சங்கீ. ௨௨: ௨௨.
௨௰. மகதலவூராளாகிய மரியாள் போய்,
தான் கர்த்தரைக்கண்டதையும், அவர் தன்
னுடனே சொன்னவைகளையுஞ் * சீஷருக்கு
அறிவித்தாள். * மாற். ௰௬: ௰.
௨௧. * வாரத்தின் முதற் கிழமையாகிய
அன்றைத்தினம் அஸ்தமனகாலத்தில் சீஷர்
கள் யூதர்களுக்குப்பயப்பட்டதினாலே கத
வுகளைப்பூட்டிக்கூடியிருக்கையில், இயேசு
வானவர்தோன்றி, நடுவே நின்று உங்களுக்
குச்சமாதான சவுக்கியமுண்டாவதாகவென்
று சொல்லி, * மாற். ௰௬: ௰௪. லூக்.
௨௪: ௩௬.
௨௰. தம்முடைய கைகளையும், விலாவை
யும், அவர்களுக்குக்காண்பித்தார். சீஷர்
கர்த்தரைக்கண்டபொழுது சந்தோஷப்
பட்டார்கள்.
௨௧. பின்பு இயேசுவானவர் மறுபடியும்
அவர்களுடனே சொன்னது, உங்களுக்குச்
சமாதான சவுக்கியமுண்டாவதாக. * பிதா
என்னை யனுப்பினதுபோல, நானும் உங்க
ளை யனுப்புகிறேனென்றுசொல்லி, * ௰௭: ௰௮.

௨௨. அவர்கள்மேலூதி, பின்பு சொன்ன
தாவது; பரிசுத்த ஆவியைப்பெற்றுக்
கொள்ளுங்கள்,
௨௩. * எவர்களுடைய பாவங்களை மன்
னிப்பீர்களோ அவர்களுக்கு அவைகள் மன்
னிக்கப்பட்டிருக்கும். எவர்களுடைய பா
வங்களை மன்னியாமல் இருப்பீர்களோ அவர்
களுக்கு அவைகள் மன்னிக்கப்படாமலிருக்
குமென்றார். * மத். ௰௬: ௰௯. ௰௮: ௰௮.
௨௪. அப்பொழுது இயேசுவானவர் வந்
திருந்த காலத்திலே பன்னிருவரில் ஒருவனா
கிய திதிமு என்னப்பட்ட தோமா அவர்க
ளுடனேகூட இருக்கவில்லை.
௨௫. ஆகலால் மற்றச்சீஷர் அவனை நோக்
கி, நாங்கள் கர்த்தரைக்கண்டோமென்றார்
கள். அதற்கு அவன் சொன்னது, அவரு
டைய கைகளில் ஆணிகள் அடித்திருந்த
தழும்பை நான் கண்டு, அந்தத்தழும்பிலே
என்விரலைவைத்து, அவருடைய விலாவிலே
என் கையை வையாவிட்டால் விசுவாசிக்க
மாட்டேனென்றான்.
௨௬. எட்டு நாளுக்குப்பின்பு அவருடைய
சீஷர் மறுபடியும் அறைக்குள்ளே இருந்
தார்கள். தோமாவும் அவர்களுக்குள்ளே
இருந்தான். கதவுகள் பூட்டப்பட்டிருந்தன.
அப்பொழுது இயேசுவானவர் தோன்றி நடு
வே நின்று, உங்களுக்குச்சமாதான சவுக்கி
யமுண்டாவதாகவென்று சொல்லி,
௨௭. பின்பு தோமாவை நோக்கி, உன்விர
லை இங்கே நீட்டி என் கைகளைப்பார். மே
லும், உன் கையை நீட்டி என் விலாவிலே
வை. அவிசுவாசியாய் இராமல் விசுவாசி
யாய் இருப்பாயாகவென்றார்.
௨௮. அதற்கு மாறுத்தரமாகத்தோமா
அவரைநோக்கி, என் கர்த்தாவே! என் தே
வனே! யென்றான்.
௨௯. இயேசுவானவர் சொன்னது, தோ
மாவே! நீ என்னைக்கண்டபடியினாலே விசு
வாசித்தாய். * காணாமல் இருந்து விசுவா
சிக்கிறவர்கள் பாக்கியவான்களென்றார்.—
* ௧ பேது. ௧: ௮, ௯.
௩௰. அன்றியும், இந்தப்புத்தகத்தில் எழு
தப்படாத * அநேக அற்புதங்களையும், இ
யேசுவானவர் தம்முடைய சீஷருக்கு முன்
பாகச்செய்தார். * ௨௧: ௨௫.
௩௧. இவைகள் இயேசுவானவர் பராபரனு
டைய குமாரனாகிய கிறிஸ்துவென்று, நீங்
கள் விசுவாசிப்பதற்கும், விசுவாசித்த பின்பு
அவருடைய நாமத்தினாலே ஜீவனையடைவ
தற்குமேதுவாக எழுதப்பட்டிருக்கின்றன.

௨௧ அதிகாரம்.

[(௧) கிறிஸ்து மறுபடியும் சீஷர்களுக்குத்
தரிசனையாகி, அவர்களுக்குப்பிடிபட்ட ஏரா
ளமான மீன்களினால் அவரை யவர்கள் இன்

னார் என்று அறிந்துகொண்டது. (௰௨) அவர் அவர்களோடே அசனம் பண்ணி, (௰௫) பேதுருவைத்தம்முடைய ஆட்டுக்குட்டிகளையும், ஆடுகளையும் மேய்க்கும்படி உறுதியாகக்கற்பித்து, (௰௮) அவனுடைய மரணத்தின் விவரத்தை அவனுக்கு முன் அறிவித்து, (௨௨) யோவானைக்குறித்துத் தம்மைக்கேட்ட கேள்விக்கு உத்தரவு சொன்னது. (௨௫) முடிவுரை.]

அதன் பின்பு இயேசுவானவர் திபேரியாவின் கடற்கரையிலே சீஷருக்குத்தம்மை மறுபடியுங் காண்பித்தார். அங்கே காண்பித்த பிரகாரமாவது;

௨. சீமோன் பேதுருவும், திதிமு என்னப்பட்ட தோமாவும், கலிலேயா நாட்டிலுள்ள கானா வூரானாகிய * நாத்தான்வேலும், செபேதேயுவின் குமாரரும், அவருடைய சீஷரில் வேறிரண்டுபேருங் கூடியிருக்குங் காலத்திலே, சீமோன் பேதுரு மற்றவர்களை நோக்கி, நான் மீன் பிடிக்கப்போகிறேனென்றான். அவர்கள் நாங்களும் உன்னுடனே கூட வருகிறோமென்றார்கள். * ௧: ௪௫.

௩. உடனே அவர்கள் புறப்பட்டுப்போய், படவேறினார்கள். அந்த இராத்திரியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை.

௪. விடியற் காலமானபொழுது, இயேசுவானவர் கரையிலே நின்றார். அவரை இயேசுவென்று சீஷர் அறியாமல் இருந்தார்கள்.

௫. அப்பொழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி, பிள்ளைகளே! போசனம் பண்ணுகிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்திலுண்டாவென்றார். அதற்கு அவர்கள் ஒன்றுமில்லை யென்றார்கள்.

௬. அவர் சொன்னது, நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப்போடவேண்டும். அப்பொழுது உங்களுக்கு அகப்படுமென்றார். அந்தப்படி அவர்கள்போட்டு, திரளான மீன்கள் அகப்பட்டதினாலே அதை இழுக்கமாட்டாதிருந்தார்கள்.

௭. ஆதலால், * இயேசுவுக்கு அன்பாய் இருந்த சீஷன் பேதுருவை நோக்கி, அவர் கர்த்தரென்றான். அவர் கர்த்தரென்று சீமோன் பேதுரு கேட்டவுடனே தான் வஸ்திரமில்லாதவனானபடியினாலே சட்டையைக் கட்டிக்கொண்டு கடலிலே குதித்தான். * ௰௩: ௨௩.

௮. மற்றச்சீஷர் ஏறக்குறைய இருநூறு முழமாத்திரங் கரைக்குத்தூரத்திலே இருந்தபடியினாலே மீன்களுடனே வலையை யிழுத்துக்கொண்டு படவினோடே (கரையைச்) சேர்ந்தார்கள்.

௯. அவர்கள் கரையிற்சேர்ந்து இறங்கினபொழுது, அக்கினி கரைகள் இருக்கிறதையும், அதின்மேல் மீன்வைத்திருக்கிறதையும், அப்பத்தையுங் கண்டார்கள்.

௰. பின்பு, இயேசுவானவர் சொன்னது, நீங்கள் இப்பொழுது பிடித்த மீன்களிற் சில கொண்டுவாருங்களென்றார்.

௰௧. அப்பொழுது சீமோன் பேதுரு படவுக்குத்திரும்பி, நூற்றைம்பத்துமூன்று பெரிய மீன்களால் நிறைந்த வலையைக்கரையில் இழுத்தான். இவ்வளவு இருந்தும் வலை கிழியவில்லை.

௰௨. பின்பு இயேசுவானவர் அவர்களை யழைத்துப்போசனம் பண்ணவாருங்கள் என்றார். அப்பொழுது அவரைக்கர்த்தரென்று சீஷர் அறிந்தபடியினாலே, அவர்களில் ஒருவனாகிலும் நீர் ஆரென்று கேட்கத்துணியவில்லை.

௰௩. அன்றியும் இயேசுவானவர் சேர்ந்து, அப்பத்தையும், மீனையுமெடுத்து அவர்களுக்குப்பரிமாறினார்.

௰௪. இயேசுவானவர் மரித்தோரிலிருந்தெழுந்த பின்பு, தம்முடைய சீஷருக்குக்காட்டின தரிசனைகளில் இது மூன்றாவது.

௰௫. அவர்கள் போசனம் பண்ணின பின்பு இயேசுவானவர் சீமோன் பேதுருவை நோக்கி, யோனாவின் குமாரனாகிய சீமோனே! இவர்களிலும் நீ யென்னிடத்தில் அதிகமாய் அன்புகூருகிறாயாவென்றார். அதற்கு அவன் சொன்னது, ஆண்டவரே! நான் உம்மிடத்தில் அன்பாய் இருக்கிறதை நீர் அறிந்திருக்கிறீர் என்றான். அவர் சொன்னது, என் ஆட்டுக்குட்டிகளைப் போஷிப்பாயாகவென்றார்.

௰௬. பின்பு அவர் இரண்டாந்தரம் அவனை நோக்கி, யோனாவின் குமாரனாகிய சீமோனே! என்னிடத்தில் அன்புகூருகிறாயாவென்றார். அதற்கவன் சொன்னது, ஆண்டவரே! நான் உம்மிடத்தில் அன்பு கூருகிறதையறிந்திருக்கிறீரென்றான். அவர் சொன்னது, என் ஆடுகளை மேய்ப்பாயாகவென்றார்.

௰௭. பின்பு அவர் மூன்றாந்தரம் அவனை நோக்கி, யோனாவின் குமாரனாகிய சீமோனே! நீ யென்னிடத்தில் அன்பு கூருகிறாயாவென்றார். என்னிடத்தில் அன்பு கூருகிறாயாவென்று அவர் மூன்றாந்தரந் தன்னுடனே சொன்னபடியினாலே பேதுரு துக்கமடைந்து, ஆண்டவரே! * நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர். நான் உம்மிடத்தில் அன்பு கூருகிறதையும் அறிந்திருக்கிறீர் என்றான். இயேசுவானவர் சொன்னது, என் ஆடுகளைப்போஷிப்பாயாக. * ௰௬: ௩௰.

௰௮. அல்லாமலும் நீ இளவயதுள்ளவனாய் இருக்கையில், நீயே உன் அரையிற் கச்சைகட்டிக்கொண்டு, உன் இஷ்டப்படிக்கு நடந்து திரிந்தாய். நீ முதிர்ந்த வயதுள்ளவனாய் இருக்கும்பொழுது, உன் கைகளை நீட்டுவாய். மேலும், வேறொருவன் உன் அ

ரையிற் கச்சைகட்டி உனக்கிஷ்டமில்லாத இடத்திற்குக்கொண்டுபோவானென்று மெய்யாகவே உனக்குச்சொல்லுகிறேனென்றார்.

௰௯.* அவர் பராபரனுக்குப்புகழுண்டாகத்தக்கதாக அடையும் மரண வகையைக் குறித்து, இப்படிச்சொன்னார். அப்படிச் சொன்ன பின்பு, எனக்குப்பின்சென்றுவாவென்று அவனுடனே சொன்னார். * ௨ பேது. ௧: ௰௩, ௰௪.

௨௰. அந்தப்படி பேதுரு (பின் செல்லுகையில்) திரும்பிப்பார்த்து, * இயேசுவுக்கு அன்பாயும், இராப்போசனம் பண்ணுகையில் அவருடைய மார்பிலே சாய்ந்து, ஆண்டவரே! உம்மைக்காட்டிக்கொடுப்பவன் யாவனென்று கேட்டுமிருந்த சீஷனும் பின் செல்லுகிறதைக்கண்டு, * ௰௩: ௨௫.

௨௧. இயேசுவானவரை நோக்கி, ஆண்டவரே! இவன் என்னவாயிருப்பான் என்றான்.

௨௨ அதற்கு இயேசுவானவர் சொன்னது, நான் வருமளவும் இவன் இருக்க எனக்குச்சித்தமானால், அதனாலே உனக்கென்ன நீயே யெனக்குப்பின்செல்லென்றார்.

௨௩. அதினாலே அந்தச்சீஷன் மரிப்பதில்லையென்கிற பேச்சுச்சகோதரருக்குள்ளே உண்டாயிற்று. இயேசுவானவர் அவன் மரிப்பதில்லையென்று சொல்லாமல் நான் வருமளவும் அவனிருக்க எனக்குச்சித்தமானால், அதினாலே யுனக்கென்னவென்று சொன்னார்.

௨௪. அந்தச்சீஷனே இந்தச்சங்கதிகளைக் குறித்துச்சாட்சி கொடுத்து, இவைகளை எழுதியிருக்கிறான். அவனுடைய சாட்சி மெய்யென்று அறிந்து இருக்கிறோம். அன்றியும் இயேசுவானவர் செய்த *மற்ற அநேக காரியங்களும் உண்டு. அவைகள் ஒவ்வொன்றாய்எழுதப்பட்டால், அதினாலேயுண்டாகும் புத்தகங்கள் வைக்கிறதற்கு உலகம் போதாதென்று எண்ணுகிறேன். *௨௰:௩௰. ஆமன்.

அப்போஸ்தலருடைய நடக்கைகள்.

ACTS.

---

௧ அதிகாரம்.

[(௧) கிறிஸ்து பரமண்டலம்போவதை அப்போஸ்தலர் காணும்பொருட்டு ஒலீவமலையண்டையில் அவர்களைக்கூட்டி, உலக சாட்சிகளாய் இருக்கும்படி சில நாளுக்குப்பின்பு பரிசுத்த ஆவியை யனுப்புவோம் என்று வாக்குத்தத்தம்பண்ணி, எருசலேமிலே அவர்கள் அந்த ஆவியின் வருகைக்குக் காத்திருக்கும்படி கற்பித்தது. (௯) அவர் பரமண்டலத்துக்கு ஏறினபின்பு இரண்டு தூதர்கள் அவருடைய இரண்டாம் வருகைக்கு எதிர்பார்த்திருக்க, அவர்களுக்குப் புத்திசொன்னது. (௰௨) அவர்கள் எருசலேமுக்குப்போய், யூதாவுக்குப்பதிலாக மத்தியாவை அப்போஸ்தலனாகத் தெரிந்துகொண்டது.]

தெயோப்பிலுவே! இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலருக்குப்பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்டபின்பு,

௨. * அவர் உயர்த்தப்பட்ட நாள்வரைக்குஞ் செய்தும், உபதேசித்தும் இருந்த யாவையுங்குறித்து, † முதலாம் பிரபந்தத்தைப்பண்ணினேன். * லூக். ௨௪: ௫௰, ௫௧. † லூக். ௧: ௧—௪.

௩. அவர் பாடுபட்டபின்பு, நாற்பதுநாளள்வும் அவர்களுக்குத்தரிசனையாகி, பராபரனுடைய இராச்சியத்தைக்குறித்து அவர்களுடனே பேசிக்கொண்டு, இவ்விதமாய் அவர்களுக்கு அநேகந் திருட்டாந்தங்களினாலே தம்மை உயிரோடிருக்கிறவர் என்று காண்பித்தார்.

௪. அன்றியும் அவர் அவர்களைக்கூடிவரச்செய்து அவர்களைநோக்கி, * யோவான் சலத்தினாலே ஞானஸ்நானங்கொடுத்தான். நீங்கள் சிலநாளுக்குப்பின்பு, பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வீர்கள். * மத். ௩: ௰௧.

௫. ஆகையால், நீங்கள் எருசலேம் நகரத்தை விட்டுப்போகாமல் * என்னிடத்திற்கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக்காத்திருங்களென்று கட்டளையிட்டார். * யோவா. ௰௪: ௰௬, ௰௭.

௬. அப்பொழுது கூடிவந்திருந்தவர்கள் அவரைநோக்கி, ஆண்டவரே! இராச்சிய பரிபாலனத்தை * இஸ்ரவேலருக்கு நீர் இக்காலத்திலா திரும்பக்கொடுப்பீர் என்று கேட்டார்கள் * லூக். ௨௪: ௨௧.

௭. அதற்கவர் சொன்னது, பிதாவானவர் தம்முடைய அதிகாரத்திலே வைத்திருக்கிற காலங்களையாகிலும், வேளைகளையாகிலும் அறிகிறது உங்களுக்குத்தகாது.

௮. பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்பொழுது, நீங்கள் பெலன் அடைந்து எருசலேமிலும், யூதேயா, சமாரியா தேசங்களில் எங்கும் பூமியின் எல்லைவரைக்கும், * எனக்குச்சாட்சிகளாய் இருப்பீர்கள் என்றார். * யோவா. ௰௫: ௨௭.

௯. இவைகளைச்சொன்னபின்பு அவர் * அவர்களுடைய கண்களுக்குமுன்பாக உயர்த்தப்பட்டார், அவர்கள் அவரைக்காணாதபடிக்கு, ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டுபோயிற்று. * லூக். ௨௪: ௫௧.

௰. அவர் போனபொழுது, அவர்கள் வானத்தை அண்ணாந்துபார்த்திருக்கையில் வெண்மையான வஸ்திரமுள்ள மனிதர் இரண்டுபேர் அவர்களின் அருகே நின்று,

௰௧. கலிலேயராகிய மனிதரே! நீங்கள் என்னத்திற்காக வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்! உங்களைவிட்டு வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அந்த இயேசுவானவர் உங்கள் கண்களுக்குமுன்பாக வானத்திற்கு எழுந்துபோனவிதமாய்த்திரும்பி வருவார் என்றார்கள்.

௰௨. அப்பொழுது அவர்கள் ஒலீவ என்னப்பட்ட மலையைவிட்டு, எருசலேம் நகரத்திற்குத்திரும்பினார்கள். அந்த மலை ஒரு ஓய்வுநாட் பிரயாணதூரமாய், எருசலேமுக்குச்சமீபமாய் இருக்கின்றது.

௰௩. அவர்கள் அங்கே போனபொழுது, மேல்வீட்டில் ஏறினார்கள். * அங்கே பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும், பிலிப்பும், தோமாவும், பருத்தோலோமேயும், மத்தேயும், அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபும், சேலோத்தே என்னப்பட்ட சீமோனும், யாக்கோபின் சகோதரனாகிய யூதாவுந் தங்கியிருந்தார்கள். * மத். ௰: ௨—௪.

௰௪. இவர்கள் எல்லாரும் இயேசுவின் தாயாகிய மரியாள் முதலான ஸ்திரீகளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டுச்செபத்திலேயும், வேண்டுதலிலேயும் உறுதியாய்த்தரித்திருந்தார்கள்.

௰௫. அந்நாள்களில் ஒருநாள் ஏறக்குறைய நூற்றிருபதுபேர் கூடிவந்திருந்தபொழுது, பேதுரு என்பவன் சீஷருக்குள்ளே எழுந்திருந்து சொன்னதாவது;

௰௬. சகோதரர்களே! இயேசுவைப்பிடித்தவர்களுக்கு வழிகாட்டின யூதாவைக்குறித்து, பரிசுத்த ஆவி தாவீதின் வாக்கினாலே முன்சொன்ன * வேதவாக்கியம் நிறைவேற வேண்டியதாய் இருந்தது. * சங். ௪௧: ௯.

௰௭. அவன் நமக்குள்ளே ஒருவனாக எண்ணப்பட்டு, இந்த ஊழியத்திற் பங்கைப் பெற்றவனாய் இருந்தானே.

௰௮ அன்றியும் அவனே அநியாயமான கூலியினாலே ஒரு நிலத்தைச்சம்பாதித்துக்கொள்ள ஏதுவாயிருந்து, பின்பு * தலைகீழாகவிழுந்து நடுவாய் வெடிக்கப்பட்டான். அவனுடைய குடல்கள் எல்லாஞ் சரிந்துபோயின. * மத். ௨௭: ௫.

௰௯. அதை எருசலேமிலுள்ள குடிகள் யாவரும் அறிந்திருக்கிறார்கள். அதனாலே யந்த நிலம் அவர்களுடைய பாஷையிலே * இரத்தநிலம என்று அர்த்தங்கொள்ளுகிற அக்கெல்தாமா என்னப்பட்டிருக்கின்றது. * மத்தே. ௨௭: ௭, ௮.

௨௰. சங்கீதப்புஸ்தகத்திலே எப்படி எழுதியிருக்கிறதென்றால், * அவனுடைய வாசஸ்தலம் பாழாகக்கடவது, ஒருவனும் அதில் வாசம் பண்ணுகிறவனாகவென்றும், † அவனுடைய கண்காணிப்பை வேறொருவன் பெறக்கடவனென்றும் எழுதியிருக்கின்றது. * சங். ௬௯: ௨௫. † சங். ௱௯: ௮.

௨௧. ஆதலாற் கர்த்தராகிய இயேசுவானவர் யோவான் ஞானஸ்நானங் கொடுத்தகாலமுதற்கொண்டு, தாம் நம்மைவிட்டு எடுத்துக்கொள்ளப்பட்டநாள்வரைக்கும்,

௨௨. நமக்குள்ளே வருகிறவராயும், போகிறவராயும் இருந்தகாலங்களிலே நம்முடனேகூட இருந்த மனிதர்களில் ஒருவன் அவர் உயிரோடே எழுந்திருக்கிறதைக்குறித்து நம்முடனேகூடச்சாட்சியாகவேண்டும் என்றான்.

௨௩. அப்பொழுது அவர்கள் யுஸ்து என்று மறுநாமமுள்ள பருசபா என்னப்பட்ட யோசேப்பு, மத்தியா, இவ்விரண்டுபேரையுந் தெரிந்தெடுத்துச்செபம்பண்ணினதாவது;

௨௪. * எல்லாருடைய இருதயங்களையும் அறிந்திருக்கிற கர்த்தாவே! * சங். ௭: ௰.

௨௫. யூதாவானவன் தனக்கேற்ற இடத்திற்குப்போகும்படிக்கு, அப்போஸ்தல ஊழியத்தின் பங்கைவிட்டு விலகினானே. அந்தப்பங்கைப் பெற்றுக்கொள்ளும்படிக்குத் தேவரீர் இவ்விரண்டுபேரில் தெரிந்துகொண்டவன் எவனோ, அவனை எங்களுக்குக்காண்பிப்பீராகவென்று சொல்லி,

௨௬. பின்பு அவர்களைக்குறித்துச்சீட்டுகளைப்போட்டார்கள். சீட்டானது மத்தியாவின்பேருக்கு விழுந்தது. அப்பொழுது அவன் பதினொரு அப்போஸ்தலருடனே (அப்போஸ்தலனாகச்) சேர்த்துக்கொள்ளப்பட்டான்.

௨ அதிகாரம்.

[(௧) அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டுப்பலபாஷைகளைப்பேசினபோது, சிலராற் புகழப்பட்டுச்சிலரால் இகழப்பட்டது. (௰௪) இகழ்ந்தவர்களைப் பேதுரு கடிந்துகொண்டு, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் பலத்தினாலே பேசினார்களென்றும், இயேசு உயிர்த்தெழுந்து பரமண்டலத்துக்கேறி, பரிசுத்த ஆவியையளித்து, பலவித அம்புதங்களைச்செய்து, பராபரனால் அங்கீகரிக்கப்பட்டவரும், அவருடைய ஆதித்தீர்மானத்தின்படி சிலுவையில் அறையப்பட்டவருமான மேசியாவென்றுங் காண்பித்து, (௩௭) குணப்பட்ட அநேகரை ஞானஸ்நானம்பண்ணினது (௪௰) குணப்பட்டவர்கள் அந்நியோந்நிய ஐக்கமாயிருந்ததையும், அப்போஸ்தலர்கள் பல அற்புதங்கள் செய்ததையும், பராபரன் திருச்சபையை நாளுக்குநாள் பெருகச்செய்ததையுங் காட்டியது.]

பெந்தேகோஸ்தென்னும் நாள் வந்திருக்கையில், அவர்கள் எல்லாரும் அவ்விடத்திலே * ஒருமனப்பட்டிருந்தார்கள். * ௧: ௰௪.

௨. அப்பொழுது சடுதியாய்ப்பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல வானத்தில் இருந்து முழக்கம் உண்டாகி, அவர்கள் உளுக்காந்திருந்த * வீடு முழுவதையும் நிரப்பிற்று. * ௧ இரா. ௮: ௰௧.

௩. அல்லாமலும் அக்கினியுள்ள நாவுகள் போலப்பிரிக்கப்பட்ட நாவுகள் அவர்களுக்குக்காணப்பட்டு அவர்கள் யாவர்மேலும் வந்திருந்தன.

௪. * அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, தங்களுக்கு ஆவியானவர் கொடுத்த திராணியின்படி † வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள். * ௧: ௪. † மாற். ௰௬: ௰௭.

௫. (அக்காலத்திலே) வானத்தின் கீழிருக்கிற சகலவிதமான தேசத்தாரிலும் இருந்து வந்த தேவபத்தியுள்ள யூதர்கள் எருசலேமிலே வாசம்பண்ணினார்கள்.

௬. அந்தச்சத்தம் உண்டானபொழுது திரளான சனங்கள் கூடிவந்து யாவருந் தங்கள் தங்கள் பாஷையிலேயவர்கள் பேசுகிறதைக்கேட்டபடியினாலே கலக்கம் அடைந்தார்கள்.

௭. எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் நோக்கிப்பேசுகிற இவர்கள் எல்லாருங் கலிலேயரல்லவா?

௮. நம்முடைய சென்ம பாஷைகளிலே அவர்கள் பேச நாம் யாவருங் கேட்கிறோமே. அதெப்படியாயிற்று.

௯. பருத்தரும், மேதரும், எலாமீத்தரும், மெசோப்பொத்தாமியா, யூதேயா, கப்பத்தோக்கியா, பொந்து, ஆசியா, பிரிகியா, பம்பீலியா,

௰. எகிப்து என்னுந் தேசங்களிலேயும், சிரேனே பட்டினத்தைச்சுற்றி இருக்கிற இலீபீயாவின் திசைகளிலேயுங் குடியிருப்பவர்களும், இங்கே சஞ்சரிக்கிற உரோமைப் பட்டினத்தாரும்,

௰௧. யூதரும், யூதமார்க்கத்திற் சேர்க்கப்பட்டவர்களும், கிரேத்தைத்தீவாரும், அரபிதேசத்தாருமாகிய நம்முடைய பாஷைகளிலே, அவர்கள் பராபரனுடைய மகிமைகளைப்பேசிக்கொள்ளக்கேட்கிறோமே யென்றார்கள்.

௰௨. பின்னும் எல்லாரும் பிரமித்து மிகவுஞ் சந்தேகப்பட்டு, இதென்ன வசம் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

௰௩. மற்றப்பேர் மதுபானத்தினாலே நிறைந்திருக்கிறார்கள் என்று பரியாசம் பண்ணினார்கள்.

௰௪. அப்பொழுது பேதுரு என்பவன் பதினொருவரோடேகூட நின்று, உரத்த சத்தத்தோடே யவர்களுடனே சொன்னதாவது; யூதரும், எருசலேமிற் குடியிருக்கிற மற்றவர்களுமாகிய நீங்கள் எல்லாரும் அறிந்துகொள்வீர்களாக. என் வார்த்தைகளுக்குச்செவிகொடுப்பீர்களாக.

௰௫. என்னவெனில், நீங்கள் நினைக்கிறது போல இவர்கள் வெறிகொண்டவர்களல்ல. பொழுது விடிந்து மூன்றாம் மணிவேளையாய் இருக்கின்றதே.

௰௬. * தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடி இதுவே நடந்து வருகின்றது. * யோவே ௩: ௧.

௰௭. (அவரைக்கொண்டு) பராபரன் உரைத்தாவது; கடைசி நாள்களில் நான் சகல மனிதர்மேலும், என்னுடைய ஆவியை யூற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளுந் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள். உங்கள் வாலிபர் தரிசனைகளைக்காண்பார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களை அடைவார்கள்.

௰௮. என்னுடைய ஊழியக்காரர்மேலும், என்னுடைய ஊழியக்காரிகள்மேலும் அந்நாள்களில் என்னுடைய ஆவியை யூற்றுவேன். அப்பொழுது தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்.

௰௯. அல்லாமலும், கர்த்தருடைய பெருமையும் பிரகாசமுமான நாள்வருமுன்னே உயர்ந்தவானத்தில் அற்புதங்களையும், தாழ்ந்த பூமியில் அதிசயங்களையும் உண்டாக்குவேன்.

௨௰. இரத்தமும், அக்கினியும், புகைக்காடும் உண்டாகும்படிசெய்வேன். * சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும்

மாற்றப்படும். * யோவே ௩: ௨, ௩. மத். ௨௪: ௨௯.

௨௧. அப்பொழுது பராபரனுடைய நாமத்தைத்தொழுது கூப்பிடுபவன் எவனே அவன் இரட்சிக்கப்படுவானென்பதே.

௨௨. இஸ்ரவேலரே! நான் சொல்லும் வார்த்தைகளைக்கேளுங்கள். நீங்கள் அறிந்திருக்கிறபடி, நாசரேத்தூராராகிய இயேசுவானவராலே பராபரன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அதிசயங்களையுஞ் செய்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்.

௨௩. அப்படியிருந்தும், பராபரன் நியமித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவர் முன்னறிந்ததின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவைமரத்தில் அறைந்துகொலை செய்தீர்கள்.

௨௪. அவரைக்குறித்துத்தாவீது சொல்லுகிறதாவது; நான் அசைக்கப்படாதபடிக்கு, பராபரன் என்வலதுபாரிசத்திலேயிருக்கிறபடியினாலே, * நான் எப்பொழுதும் அவரையெனக்கு முன்பாக வைத்துக்கொள்ளுகிறேன். * சங். ௰௬: ௮.

௨௫. அதினாலே என் இருதயம் மகிழ்ச்சியாய் இருக்கின்றது. என்நாவு சந்தோஷமாய்ப்பேசுகின்றது.

௨௬. மேலும், நீர் என் ஆத்துமாவை மரித்தோர் ஸ்தலத்திலே விடவும், உம்முடைய பரிசுத்தவான் அழிவைக்காணும்படி செய்யவுமாட்டீர்.

௨௭. ஜீவமார்க்கங்களை எனக்குத்தெரியப்படுத்தினீர். உம்முடைய சந்நிதானத்திலே என்னைச்சந்தோஷத்தாலே நிரப்புவீர். ஆதலால், என்னுடைய சரீரமும், நம்பிக்கையோடே படுத்துக்கொள்ளுமென்று சொல்லியிருக்கிறார்.

௨௮. ஆனபடியினாலே மரணமானது இயேசுவை யடக்கிக்கொள்ளக்கூடாதிருக்க, பராபரன் அதின் உபாதிகளின் கட்டவிழ்த்து, அவரை யெழுப்பினார்.

௨௯. * சகோதரர்களே! நமது கோத்திரத்தலைவனாகிய தாவீதைக்குறித்து, நான் உங்களுடனே தயிரியமாய்ப்பேசுகிறேன். கேட்பீர்களாக. அவர் மரணம் அடைந்து அடக்கம்பண்ணப்பட்டார். அவருடைய சமாதி இந்நாள்வரைக்கும் நம்மிடத்தில் இருக்கின்றது. * ௰௩: ௩—௬.

௩௰. ஆகலால், அவர் தீர்க்கதரிசியாய் இருந்து, * உன் ஆசனத்தில் வீற்றிருக்கும்படிக்கு, சரீரசம்பந்தமாய் உன்னுடைய சந்ததியிற் கிறிஸ்துவை யெழும்பப்பண்ணுவேனென்று, பராபரன் தனக்காணைகொடுத்ததை அறிந்து, * ௨ சாமு. ௭: ௰௨, ௰௩.

௩௧. அவர் கிறிஸ்துவினுடைய ஆத்துமா மரித்தோர் ஸ்தலத்திலே விடப்படுவதில்லையென்றும், அவருடைய சரீரம் அழிவையடைவதில்லையென்றும் முன்னறிந்து, அவர் உயிரோடெழுந்திருப்பதைக்குறித்துப் பேசினார்.

௩௨. இந்த இயேசுவையே பராபரன் எழுப்பினார். அதற்கு நாங்கள் எல்லாருஞ் சாட்சிகளாய் இருக்கிறோம். மேலுந் தாவீது பரமண்டலத்திற்கு எழுந்துபோகவில்லை.

௩௩. அதுவுமல்லாமல், அவர் சொன்னது, உம்முடைய சத்துருக்களை நான் உமது பாதப்படியாக்கிப்போடுமளவும்,

௩௪. எனதுவலது பாரிசத்திலே உளுக்காருமென்று, * பராபரன் என் ஆண்டவருடனே சொன்னாரென்றான். * சங். ௱௰: ௧.

௩௫. ஆதலால், இயேசுவானவர் பராபரனுடைய வலது பாரிசத்திலே உயர்த்தப்பட்டபின்பு, பரிசுத்த ஆவியைக்குறித்து, பிதாவினாலே வாக்குத்தத்தத்தைப்பெற்றபடியால், நீங்கள் இப்பொழுது கண்டு கேட்கிறபடி அதை யூற்றினார்.

௩௬. ஆனபடியினாலே நீங்கள் சிலுவைமரத்தில் அறைந்த அந்த இயேசுவையே பராபரன் ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கினாரென்று, இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்களென்றான்.

௩௭. அதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திற் குத்தப்பட்டவர்களாகிப்பேதுருவையும், மற்ற அப்போஸ்தலரையும் நோக்கிச்சகோதரரே! நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள்.

௩௮. அதற்குப்பேதுரு சொன்னதாவது; உங்களுக்குப்பாவமன்னிப்பு உண்டாகும்படிக்கு, நீங்கள் மனந்திருப்பி ஒருவனொருவனாய் இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்,—அப்பொழுது பரிசுத்த ஆவியாகிய ஈவையும் பெறுவீர்கள்.

௩௯. (அதைக்குறித்து) வாக்குத்தத்தமானது, உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய பராபரன் * வரவழைக்குந் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிற்றேயென்று சொல்லி, * யோவா. ௰: ௰௬.

௪௰. மற்ற அநேக வார்த்தைகளாலும், (அதைக்குறித்துச்) சாட்சியிட்டுத்தாறுமாறுள்ள இந்தச்சந்ததியைவிட்டு இரட்சிக்கப்படுவீர்களாகவென்று புத்திசொன்னான்.

௪௧. அந்தப்படியே அவனுடைய வார்த்தையைச்சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் எவர்களோ, அவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அந்நாளிலே ஏறக்குறை

ய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்
டார்கள்.
௪௨. அவர்கள் அப்போஸ்தலருடைய உ
பதேசத்திலேயும், ஒருவரோடொருவர் ஐக்
கப்படுதலிலேயும், அப்பம் பிட்குதலிலே
யும், செபம்பண்ணுதலிலேயும் உறுதியா
ய்த்தரித்திருந்தார்கள்.
௪௩. ஆத்துமாக்கள் யாவுக்கும் பயபக்தி
யுண்டாயிற்று. அன்றியும், அப்போஸ்த
லர்களாலே அநேக அற்புதங்களும் அதிச
யங்களுஞ் செய்யப்பட்டன.
௪௪. எல்லாவிசுவாசிகளும் ஒருமித்திருந்
து, * சகலத்தையும் பொதுவாய்வைத்த
நுபவித்து, * ௪: ௩௨. ரு மோ. ௰ரு: ௪.
௪௫. * ஆஸ்திகளையும், உடைமைகளையும்
விற்று, அவ்வகளில் ஒவ்வொருவனுக்கு
வேண்டுவது எவ்வளவோ அவ்வளவு பகிர்ந்
துகொடுத்தார்கள். * ௪: ௩௪, ௩௫. ஆக்.
௰௨: ௩௩.
௪௬. தினந்தோறும் அவர்கள் ஒருமனப்
பட்டுத்தேவாலயத்திலே [illegible]தரித்திருந்து, வீ
டுகள்தோறும் அப்பம்பிட்டு, மகிழ்ச்சியும்,
கபடமில்லாமையுமுள்ள இருதயத்தோடு
போசனம்பண்ணி, பராபரனைப் புகழந்து
கொண்டு,
௪௭. (மற்றச்) சனங்கள் எல்லாரிடத்தி
லுங் கிருபைபெற்றிருந்தார்கள். அன்றியும்
இரட்சிக்கப்படுகிற (மற்றப்) பேர்களைக்கர்த்
தர் தினந்தோறுஞ் சபையோடே சேர்த்
தார்.

௩ அதிகாரம்.

[(௧) குணமாக்கப்பட்ட ஒரு சப்பாணி
யைப்பார்க்கவந்த சனங்களுக்குப்பேதுரு
பிரசங்கித்த, (௰௨) அவன் குணமாக்கப்
பட்டது தனக்கும், யோவானுக்கும் இருந்
த வல்லமையினாலும், பரிசுத்தத்தினாலுமல்
ல. பராபரனாலும், அவருடைய குமாரனாகி
ய இயேசுவின் நாமத்தின்மேலுள்ள விசுவா
சத்தினாலுமேயென்றுசொல்லி, (௰௩) இயே
சுவைச்சிலுவையில் அறைந்ததற்காக அ
வர்களைக்கடிந்துகொண்டது: (௰௭) பரா
பரனுடைய ஆதித்தீர்மானத்தின்படியும்,
வேத எழுத்துகளின்படியும் நடந்ததாயி
னும் அந்தப்பாதகத்தை யவர்கள் அறியா
மையினாலே யேற்றுக்கொண்டதினாலே,
(௰௯) அவர்கள் மனந் திரும்பி, விசுவாசித்
து அந்த இயேசுவினாலேயே பாவமன்னிப்
பும், இரட்சிப்புமடையும்படி புத்திசொன்
னது.]

அக்காலத்தில் ஒருநாள் செபவேளை
யாகிய ஒன்பதாம் மணிநேரத்தி
லே பேதுருவும், யோவானுந் தேவாலயத்
திற்குப்போனார்கள்.
௨. அப்பொழுது தன் தாயின் வயிற்றில்
இருந்து * சப்பாணியாய்ப்பிறந்த ஒரு
மனிதன் சுமந்து வரப்பட்டான். தேவால
யத்திற் பிரவேசிப்பவர்கள் இடத்திற் பிச்
சை கேட்கும்படிக்கு நாடோறும் அவனை
அலங்கார வாசலென்னப்பட்ட தேவாலய
வாசலின் இடத்திலே வைப்பார்கள். * ௰௪:
அ.
௩. தேவாலயத்திற் பிரவேசிக்கும்படி போ
கிற பேதுருவையும், யோவானையும், அவன்
கண்டு பிச்சைகேட்டான்.
௪. அப்பொழுது யோவானுடனே கூடப்
பேதுரு அவனை யுற்றுப்பார்த்து, எங்களை
நோக்கிப்பாரென்றான்.
௫. அவன் அவர்களுடைய கையில் ஏதாகி
லும் பெற்றுக்கொள்ளலாமென்றெண்ணி
அவர்களை நோக்கிப்பார்த்தான்.
௬. அப்பொழுது பேதுரு சொன்னது,
வெள்ளியும், பொன்னும் என்னிடத்தில் இல்
லை. எனக்குண்டானதை யுனக்குத்தருகி
றேன். நாசரேத்தூரானாகிய இயேசுக்கிறிஸ்
துவின் நாமத்தினாலே நீ எழுந்து நடவென்
று சொல்லி,
௭. வலது கையினாலே அவனைப்பிடித்துத்
தூக்கியெடுத்தான். உடனே யவனுடைய
கால்களும், கரடுகளும் ஸ்திரம் அடைந்தன.
௮. அவன் குதித்தெழுந்து நின்று. நடந்
து அவர்களுடனே கூடத்தேவாலயத்திற்
பிரவேசித்து நடந்து, குதித்துப்பராபர
னைத்துதிசெய்தான்.
௯. அவன் நடக்கிறதையும், பராபரனைத்
துதிக்கிறதையுஞ் சனங்கள் எல்லாருங் கண்
டார்கள்.
௰ அல்லாமலுந் தேவாலயத்தின் அலங்
கார வாசலின் இடத்திலே பிச்சைகேட்க
உளுக்கார்ந்திருந்தவன் இவன்தானென்று
அவர்கள் அறிந்து, அவனுக்குச்சம்பவித்த
தைக்குறித்து மிகவும் பிரமித்து, அதிசயப்
பட்டார்கள்.
௰௧. அன்றியுங் குணமாக்கப்பட்ட சப்பா
ணி பேதுருவையும், யோவானையும் அடுத்
துக்கொண்டிருந்தபடியால்; சனங்கள் எல்
லாரும் பிரமிப்புள்ளவர்களாய், சாலொ
மோன் மண்டபமென்னப்பட்ட மண்டபத்
திலே அவர்களிடத்தில் ஓடிப்போய்க்கூடி
னார்கள்.
௰௨. பேதுரு அதைக்கண்டு, சனங்களுட
னே சொன்னதாவது; இஸ்ரவேலரே! இ
தைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிற
தென்ன? அல்லது, நாங்கள் எங்கள் சுய
வல்லமையினாலாவது, பத்தியினாலாவது இ
வனை நடக்கப்பண்ணினவர்களாக நீங்கள்
எங்களை நோக்கிப்பார்க்கிறதென்ன!
௰௩. நம்முடைய முன்னோர்களாகிய ஆபிர
காம், ஈசாக்கு, யாக்கோபென்பவர்களு
டைய தேவனுமிருக்கிறவர் தம்முடைய கு

மாரனாகிய இயேசுவை மகிமைப்படுத்தினார். அந்த இயேசுவைப்பிலாத்து விடுதலையாக்க எண்ணினபொழுது, நீங்கள் அவனுக்கு முன்பாக அவரை யொப்புக்கொடுத்து மறுதலித்தீர்கள்.

௰௪. * பரிசுத்தமும், நீதியுமுள்ளவரை நீங்கள் மறுதலித்துக்கொலைபாதகனான மனிதனை உங்களுக்காக விடுதலையாக்க வேண்டுமென்று கேட்டீர்கள். ஜீவனையுடைய அதிபதியையே கொலைசெய்தீர்கள். * மத்தே. ௨௭: ௨௰—௨௫.

௰௫. அவரைப்பராபரன் மரித்தோரிலிருந்தெழுப்பினார். அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்.

௰௬. மேலும், அவருடைய நாமத்தின்மேலுள்ள விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனை ஸ்திரப்படுத்திற்று. அவரைப்பற்றிக்கொண்ட விசுவாசமே உங்களெல்லாருக்கு முன்பாகவும் இந்தச்சர்வாங்க சுகத்தை இவனுக்குக்கொடுத்தது.

௰௭. சகோதரரே! நீங்களும், உங்கள் தலைவரும் அதை அறியாமையினாலே செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்.

௰௮. பராபரன் கிறிஸ்துப்பாடுபடவேண்டுமென்று, தம்முடைய தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் முன்னறிவித்தவைகளை இவ்விதமாய் நிறைவேற்றினார்.

௰௯. ஆனபடியினாலே, பராபரனுடைய சந்நிதானத்திலிருந்து சவுக்கியம் உண்டாகும் காலங்கள் வரவும் முன்னே குறிக்கப்பட்ட * இயேசுக்கிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பவுந் தக்கதாக, † உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும்படிக்கு, * அபி. ௨௨: ௰௨—௰௪ † ௨: ௩௮.

௨௰. நீங்கள் மனதைத்திருத்திக்குணப்படுங்கள்.

௨௧. உலகம் உண்டானது முதற் பராபரன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகளெல்லாம் நிறைவேறுங்காலம் வரும் பரியந்தம், இயேசுவானவர் பரமண்டலத்திலே யிருக்கவேண்டும்.

௨௨. அந்தத்தீர்க்கதரிசிகளில் மோசேயானவர் நம்முடைய முன்னோர்களுடனே சொன்னதாவது; உங்கள் தேவனாகிய பராபரன் * என்னைப்போலத்தீர்க்கதரிசி யொருவரை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து தோன்றப்பண்ணுவார். அவர் உங்களுக்குச்சொல்லும் யாவற்றிற்குஞ் செவிகொடுப்பீர்களாக. * ௫ மோசே ௰௮: ௰௫—௰௯.

௨௩. அந்தத்தீர்க்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ அவன் தன் சனத்தில் இராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவானென்று சொன்னார்.

௨௪. சாமுவேலும், அவனுக்குப்பின்வந்து பேசின தீர்க்கதரிசிகளெல்லாரும் இந்த நாள்களை முன்னறிவித்தார்கள்.

௨௫. நீங்களே அந்தத் * தீர்க்கதரிசிகளுடைய சந்ததியாருமாய், பூமியிலுள்ள வம்சத்தார் எல்லாரும், உன் சந்ததியினாலே ஆசீர்வதிக்கப்படுவார்களென்று பராபரன் ஆபிரகாமுக்குச்சொல்லி, இவ்விதமாய் நம்முடைய முன்னோர்களோடே பண்ணின உடம்படிக்கைக்குள்ளானவர்களுமாய் இருக்கிறீர்கள். * ௧ மோ. ௰௨: ௩.

௨௬. ஆதலால் முதலாவது, * உங்களுக்காகவே பராபரன் தம்முடைய குமாரனாகிய இயேசுவை யெழுப்பி, உங்களில் தங்கள் பொல்லாங்குகளைவிட்டுத்திரும்புகிறவர்களெவர்களோ, அவர்களெல்லாரையும் அவர் ஆசீர்வதிக்கும்படிக்கு, அவரை அனுப்பினாரென்றான். * ௰௩: ௪௬.

௪ அதிகாரம்.

[(௧) யூதர்களுடைய தலைவர்கள் பேதுருவின் பிரசங்கத்துக்காகத்தாங்கல் அடைந்து, (௪) (திருவசனத்தைக்கேட்ட அநேகம் ஆயிரம்பேர்கள் குணப்பட்டாலும்) அவனையும், யோவானையுங் காவலில் அடைத்தது. (௫) அவனைச்சோதித்தபோது, அவன் சப்பாணியாய் இருந்தவன் இயேசுவின் நாமத்தினால் சுகம் அடைந்தானென்றும், அந்த இயேசுவினாலேயே நாம் நித்திய இரட்சிப்பை அடையவேண்டுமென்றும் தயிரியமாய்ச்சொல்ல, (௰௩) அவர்கள் அவனுக்கும், யோவானுக்கும் அந்த நாமத்தில் பிரசங்கிக்கக்கூடாதென்று கற்பித்து, அவர்களைப்பயமுறுத்தினதினிமித்தம், (௨௩) சபையார் செபம்பண்ணினது. (௩௧) பராபரன் அவர்கள் கூடியிருந்த இடத்தை அசைத்ததால், அவர்கள் செபத்தைக்கேட்டாரென்று சாட்சியிட்டு, திருச்சபைக்குப் பரிசுத்த ஆவியின் ஈவையும், அந்நியோந்நிய ஐக்கத்தையும் உண்டுபண்ணினது.]

இப்படி அவனும், யோவானுஞ் சனங்களுடனே பேசிக்கொண்டிருக்கையில்,

௨. அவர்கள் சனங்களுக்கு உபதேசித்ததினாலும், இயேசுவானவர் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருக்கிறாரென்று அறிவித்ததினாலும் ஆசாரியரானவர்களும், தேவாலயத்தைக்காக்கிற சேனைத்தலைவனும், சதுசேயரானவர்களும் விசனப்பட்டு,

௩. அவர்களிடத்திற்போய் * அவர்களைப்பிடித்து, சாயங்காலமானபடியினாலே மறுநாள்வரைக்குங் காவலில் வைத்தார்கள். * ௫: ௰௮.

௪. அப்போஸ்தலருடைய வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் * விசுவாசித்தார்கள். அவர்களுடைய தொகை ஏறக்குறைய ஐயாயிரம்பேராய் இருந்தது. * ௨: ௪௧.

௫. மறுநாளிலே சனங்களுடைய தலைவரும், மூப்பரும், வேதபாரகரும்,

௬. பிரதான ஆசாரியனாகிய அன்னாவும், காய்பாவும், யோவானும், அலெக்சந்தரும், பிரதான ஆசாரிய குடும்பத்தாராகிய மற்றயாவரும் எருசலேமிலே கூடிவந்து,

௭. அவர்களை நடுவே நிற்கப்பண்ணி, * நீங்கள் எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே யிதைச்செய்தீர்களென்று கேட்டார்கள். * மத்தே. ௨௧: ௨௩.

௮. அப்பொழுது பேதுரு பரிசுத்த ஆவியினாலே நிறைந்து, அவர்களுடனே சொன்னதாவது; சனத்தலைவரும், இஸ்ரவேலரின் மூப்பருமானவர்களே!

௯. * உபகாரத்தைப் பெற்றுக்கொண்ட வியாதிக்காரனான இவன் எதினாலே சொஸ்தம் அடைந்தானென்று, இன்றைக்கு எங்களிடத்தில் விசாரிக்கிறபடியால், * யோவா. ௰: ௩௨.

௰. உங்களாலே சிலுவைமரத்தில் அறையப்பட்டவருமாய், பராபரனாலே மரித்தோரில் இருந்து எழுப்பப்பட்டவருமாய் இருக்கிற நாசரேத்தூராராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே இவன் உங்களுக்கு முன்பாகச்சொஸ்தமாய் நிற்கிறானென்று நீங்களும், இஸ்ரவேல் சனங்கள் எல்லாரும் அறிந்திருப்பீர்களாக.

௰௧. * வீடு கட்டுகிறவர்களாகிய உங்களால் அசட்டை பண்ணப்பட்ட கல் அவரே! அவரே கோடிக்குத்தலைக்கல்லானவர் * மத். ௨௧: ௪௨.

௰௨. அல்லாமலும் அவராலே யன்றி, வேறொருவராலும் இரட்சிப்புக்கிடையாது. நாம் இரட்சிப்பை யடையும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனிதர்களுக்குள்ளே வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லையென்றான்.

௰௩. பேதுருவும், யோவானுங் காண்பித்த தயிரியத்தை அவர்கள் பார்த்து, அவர்கள் படியாதவர்களென்றும், தாழ்மையானவர்களென்றும் அறிந்தபடியினாலே ஆச்சரியப்பட்டார்கள். அவர்கள் இயேசுவுடனேகூடவிருந்தவர்களென்றும் அறிந்தார்கள்.

௰௪. மேலுஞ் சுகமாக்கப்பட்ட மனிதனை அவர்களருகே நிற்கக்கண்டபடியால், அவர்கள் எதிர்பேசுகிறதற்கு இடமிருக்கவில்லை.

௰௫. அப்பொழுது அவர்கள் சங்கத்தை விட்டு வெளியேபோகும்படி கட்டளையிட்டு, பின்பு தங்களுக்குள்ளே யோசனைபண்ணிக்கொண்டு சொன்னதாவது;

௰௬. எருசலேமில் வாசம்பண்ணுகிறயாவருக்குந் தெரிந்திருக்கிற வெளியரங்கமான அற்புதம் அந்த மனிதர்களாற் செய்யப்பட்டது, அதை நாம் இல்லையென்று சொல்லக்கூடாது. ஆகையால், நாம் * அவர்களை என்னசெய்யலாம்? * யோவா. ௰௧: ௪௭.

௰௭. சனங்களுக்குள்ளே யது அதிகமாய்ப் பிரசித்தமாகாதபடிக்கு, இதுமுதல் அவர்கள் அந்த நாமத்தைக்குறித்து, ஒருமனிதனோடும் பேசக்கூடாதென்று, நாம் அவர்களைப்பயப்படுத்திக்கட்டளையிடவேண்டுமென்று சொல்லிக்கொண்டு,

௰௮. அவர்களை யழைத்து, இயேசுவின் நாமத்தைக்குறித்து எவ்வளவும் பேசாமலும், போதியாமலும் இருக்கும்படி, அவர்களுக்குக்கட்டளை யிட்டார்கள்.

௰௯. அதற்கு மாறுத்தரமாகப்பேதுருவும், யோவானுஞ் சொன்னதாவது; * நாங்கள் பராபரனுக்குக்கீழ்ப்படிகிறதிலும் உங்களுக்குக்கீழ்ப்படிகிறது பராபரனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமா? இதை நீங்கள் நிதானித்துப்பாருங்கள். * ௫: ௨௯.

௨௰. நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாமல் இருக்கக்கூடாதேயென்றார்கள்.

௨௧. அப்படி யிருந்தும், அற்புதத்தாற் சொஸ்தமாக்கப்பட்ட மனிதன் நாற்பது வயதுக்கதிக வயதுள்ளவனானபடியால்,

௨௨. நடந்ததைக்குறித்துச்சனங்களெல்லாரும் பராபரனைப்புகழ்ந்தபடியினாலே அப்போஸ்தலர்களைத்தண்டிக்கும்படிக்குச் சனங்களின் நிமித்தஞ் சங்கத்தார் வகையொன்றுங் காணாமல், அவர்களைப்பின்னும் பயப்படுத்தி விட்டுவிட்டார்கள்.

௨௩. அவர்கள் விடப்பட்டபின்பு தங்களைச்சேர்ந்தவர்கள் இடத்திற்குப்போய், தங்களுக்குப்பிரதான ஆசாரியரும், மூப்பருஞ் சொன்னயாவையும் அறிவித்தார்கள்.

௨௪. அவர்கள் அதைக்கேட்டு ஒருமனப்பட்டு, பராபரனை நோக்கிச்சொன்னதாவது; ஆண்டவரே! நீர் வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும், அவைகளிலுள்ளயாவையும் உண்டாக்கின தேவனும் இருக்கிறீர்.

௨௫. உம்முடைய தாசனாகிய தாவீதைக்கொண்டு தேவரீர் சொன்னது, உலகத்தார் என்னத்திற்குக்கலகம் பண்ணுகிறார்கள்? * சனக்கூட்டங்கள் என்னத்திற்கு வீணான காரியங்களைச்சிந்திக்கிறார்கள். * சங்கீ. ௨: ௧, ௨.

௨௬. பூமியிலுள்ள இராசாக்களும், காரியத்தலைவரும், பராபரனுக்கும், அவருடைய கிறிஸ்துவுக்கும் விரோதமாய் எழும்பி ஏகமாய்க்கூடினார்களென்றீர்.

௨௭. அதின்படி இந்த நகரத்திலே ஏரோ

தும், பொந்திபிலாத்தும், அஞ்ஞானிகளோடும், இஸ்ரவேல் சனங்களோடுங்கூடத்தேவரீருடையகையும், ஆலோசனையும் * முன்னே குறித்தவைகள் யாவையுஞ் செய்வதற்கு. * ௨: ௨௩.

௨௮. தேவரீர் அபிஷேகம்பண்ணிவைத்த உம்முடைய பரிசுத்த குமாரனாகிய இயேசுவுக்கு விரோதமாக மெய்யாய்க்கூடினார்கள்.

௨௯. அப்படியிருக்கக்கர்த்தாவே! அவர்கள் (எங்களைப்) பயப்படுத்துகிறதைத்தேவரீர் நோக்கிப்பார்த்து,

௩௰. (பிணியாளிகளைக்) குணமாக்குதற்கு உம்முடைய வல்லமை வெளிப்படும்படியாயும், உம்முடைய பரிசுத்த குமாரனாகிய இயேசுவின் நாமத்தினாலே அதிசயங்களும், அற்புதங்களும் நடக்கும்படியாயுஞ் செய்து, உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை மிகுந்த தயிரியத்தோடும்சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ் செய்யுமென்றார்கள்.

௩௧. * அவர்கள் செபம்பண்ணினபொழுது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அல்லாமலும், அவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, பராபரனுடைய வசனத்தைத்தயிரியத்தோடே சொன்னார்கள். * ௰௬: ௨௬.

௩௨. அன்றியுந் திரளான விசுவாசிகளுக்கு * ஒரே இருதயமும், ஒரே ஆத்துமாவும் இருந்தன. ஒருவனாகிலுந் தனக்குள்ளவைகளில் ஒன்றையுந் தன்னுடையதென்று சொல்லவில்லை. சகலமும் அவர்களுக்குப்பொதுவாய் இருந்தன. * ௧: ௰௪.

௩௩. கர்த்தராகிய இயேசு உயிரோடெழுந்ததைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலத்தோடே சாட்சிகொடுத்தார்கள்.

௩௪. யேனும் நிலங்களையும், வீடுகளையுமுடையயாவரும் அவைகளை விற்று, விற்கப்பட்ட பொருள்களின் விலைக்கிரயத்தை அப்போஸ்தலர் இடத்திற்கொண்டுபோய் அவர்களுடைய பாதத்திலே வைத்தார்கள்.

௩௫ (அதில்) * அவனவனுக்கு வேண்டியிருந்தபடி பகிர்ந்து கொடுக்கப்பட்டது. ஆதலால், அவர்களில் ஒருவனுங் குறைவுபடவில்லை. ஆனபடியினாலே மிகுந்த கிருபை அவர்களெல்லாருக்கும் உண்டாய் இருந்தது. * ஏசா. ௫௮: ௭.

௩௬. லேவியனுமாய், சிப்புருதீவிற் பிறந்தவனுமாய், ஆறுதலின் மகனென்றருத்தங்கொள்ளுகிற பருனப்பாவென்று பேரை அப்போஸ்தலராலே பெற்றுக்கொண்டவனுமாய் இருந்த யோசேப்பென்பவனுந் தனக்குண்டான நிலத்தைவிற்று,

௩௭. திரவியத்தைக்கொண்டுபோய் அப்போஸ்தலருடைய பாதத்திலேவைத்தான்.

௫ அதிகாரம்.

[(௧) அனனியாவும், அவன் பெண்சாதி சப்பிராளுஞ் செய்தமாயத்தினிமித்தம் பேதுருவினாலே தண்டிக்கப்பட்டுவிழுந்து செத்தது. (௰௨) சபையின் விசுவாசம் பெருகும்படி மற்ற அப்போஸ்தலர்களும் அநேக அற்புதங்களைச்செய்தது. (௰௭) அந்த அப்போஸ்தலர் மறுபடியும் காவலில் அடைக்கப்பட்டும், (௰௯) ஒரு தேவதூதனால் விடுதலையாக்கப்பட்டு, யாவருக்கும் பிரசங்கிக்கக்கட்டளைபெற்றது. (௨௧) அவர்கள் தேவாலயத்திற் பிரசங்கித்ததினாலே மரணத்துக்கு ஏதுவாயிருக்கையில் யூதர்களுக்குள்ளே பெரிய ஆலோசனைக்காரனாய் இருந்த கமாலியேல் சொன்ன ஆலோசனையின்படி உயிரோடே விடப்பட்டபின்பு, (௪௰) அடிபட்டும் நாள்தோறும் பிரசங்கித்துப்பராபரனை மகிமைப்படுத்தினது.]

அல்லாமலும், அனனியாவென்னப்பட்டவனும், அவனுடைய மனைவியாகிய சப்பிராளுந் (தங்கள்) காணியைவிற்றார்கள்.

௨. பின்பு அவன் தன்மனைவியும் அறிய, அந்தக்கிரயத்திலே சில பணத்தை வஞ்சித்துவைத்து, ஒருபங்கைமாத்திரங் கொண்டுபோய் அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்.

௩. அப்பொழுது பேதுரு சொன்னது, அனனியாவே! நிலத்தின் விலைக்கிரயத்திலே சில பணத்தை நீ மறைத்துவைத்து, பரிசுத்த ஆவியினிடத்திற் பொய்சொல்லும்படிக்கு, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?

௪. அது விற்கப்படாமல் இருந்தபொழுது உன்னுடைய தாயிருக்கவில்லையோ? அதை விற்றபின்பு (அதின்) கிரயம் உன் அதிகாரத்தில் இருக்கவில்லையோ? அப்படியிருக்க என்னத்தினாலே நீ இந்தக்காரியத்தை யுன் இருதயத்திலே வைத்தாய்! நீ மனிதரிடத்திலல்ல பராபரன் இடத்திலே பொய்சொன்னாயென்றான்.

௫ இந்த வார்த்தைகளை அனனியாகேட்டபொழுது அவன் விழுந்து சீவனைவிட்டான். இந்தச்சங்கதியைக்கேட்டயாவருக்கும் மிகுந்தபயம் உண்டாயிற்று.

௬. இலவாலிபர் எழுந்து அவனை ஒருசேலையிற்கட்டி வெளியேகொண்டுபோய் அடக்கம் பண்ணினார்கள்.

௭. ஏறக்குறைய மூன்றுமணி நேரத்திற்குப்பின்பு அவனுடைய மனைவி அந்த நடக்கையை யறியாமல் உள்ளேபோனாள்.

௮. அவளுடனே பேதுரு (உங்கள்) நிலத்தை இவ்வளவு கிரயத்திற்கா விற்றீர்கள்?

அதை யெனக்குச்சொல்லென்றான். அவள் இவ்வளவுக்கே யதை விற்றோமென்றாள்.

௯. அப்பொழுது பேதுரு சொன்னதாவது; பராபரனுடைய ஆவியைச்சோதிக்கிறதற்கு, நீங்கள் என்னத்தினாலே ஒருமைப்பட்டீர்கள்! உன் புருஷனை அடக்கம்பண்ணினவர்களுடைய கால்கள் உன்னையும் வெளியேகொண்டுபோகும்படிக்கு, அதோ வாசற்படியிலே வந்திருக்கின்றனவென்றான்.

௰. உடனே யவள் அவனுடைய பாதத்தில் விழுந்து சீவனை விட்டாள். வாலிபர் உள்ளேசென்று அவள் மரித்ததைக்கண்டு, அவளை வெளியேகொண்டுபோய் அவனுடைய புருஷன் இடத்தில் அடக்கம் பண்ணினார்கள்.

௰௧. அதினாலே சபையாரெல்லாருக்கும், அதைக்கேட்ட மற்றயாவருக்கும் மிகுந்த பயம் உண்டாயிற்று.

௰௨. பின்னும் அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அதிசயங்களும், அற்புதங்களுஞ் சனங்களுக்குள்ளே செய்யப்பட்டன. எல்லாரும் ஒருமனப்பட்டு, சாலோமோனுடைய மண்டபத்தில் இருந்தார்கள்.

௰௩. மற்றவர்களில் ஒருவரும் அவர்களுடனே சேர்ந்திருக்கத் துணியவில்லை.

௰௪. அப்படியிருந்தும் திரளான புருஷரும், ஸ்திரீகளுங் கர்த்தாவின் இடத்தில் விசுவாசமுள்ளவர்களாகிச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்:

௰௫. அல்லாமலுஞ் சனங்கள் அப்போஸ்தலரை மேன்மைப்படுத்தினார்கள். அதினாலே அவர்கள் பிணியாளிகளைப்படுக்கைகளின்மேலும், கட்டில்களின்மேலுங் கிடத்தி, பேதுரு நடந்துபோகையில், அவனுடைய நிழலாகிலுஞ் சிலரிற்படும்படிக்கு. அவர்களை வெளியே வீதிகளிற் கொண்டுபோனார்கள்.

௰௬. சுற்றுக்கிராமங்களிலும் இருந்து, திரளான சனங்கள் பிணியாளிகளையும், அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக்கொண்டுபோனார்கள். அவர்களெல்லாருங் குணமாக்கப்பட்டார்கள்.

௰௭. அப்பொழுது * பிரதான ஆசாரியனும், அவனுடனே கூடவிருந்த சதுசேயர் வகுப்பைச்சேர்ந்த அனைவரும் எழும்பி வயிராக்கியத்தால் நிரப்பப்பட்டு, * ௪: ௨.

௰௮. அப்போஸ்தலர்களைப்பிடித்து நகரத்தின் சிறைச்சாலையிலே வைத்தார்கள்.

௰௯. இராத்திரியிலே * பராபரனுடைய தூதன் சிறைச்சாலையின் கதவுகளைத்திறந்து அவர்களை வெளியேகொண்டு வந்து, * ௰௨: ௭—௰.

௨௰. நீங்கள் போய்த்தேவாலயத்திலே நின்று இந்தச்சீவவார்த்தைகளெல்லாவற்றையுஞ் சனங்களுக்குச்சொல்லுங்களென்றான்.

௨௧. அந்தப்படி அவர்கள் கேட்டு, அதிகாலையிலே தேவாலயத்திற்குப்போய்ப் போதகம் பண்ணினார்கள். அத்தருணத்திலே பிரதான ஆசாரியனும், அவனுடனே கூட இருந்தவர்களும்போய், பெரிய சங்கத்தாரையும், இஸ்ரவேல் சனங்களின் மூப்பர் எல்லாரையுங்கூடி வரவழைத்து, அப்போஸ்தலரைக்கொண்டு வரும்படி சிறைச்சாலைக்குச் (சேவகரை) அனுப்பினார்கள்.

௨௨. அந்தப்படி சேவகர் காவல்வீட்டிற்குப்போய் அங்கே அவர்களைக்காணாமல் திரும்பி,

௨௩. சிறைச்சாலை மிகவும் பத்திரமாய்ப் பூட்டப்பட்டிருக்கவும், காவற்காரர் கதவுகளின் முன்னே நிற்கவுங் கண்டோம். அவைகளைத்திறந்தபொழுது உள்ளே ஒருவரையுங் காணோமென்றறிவித்தார்கள்.

௨௪. இந்தச்செய்தியை ஆசாரியனும், தேவாலயத்தைக்காக்கிற சேனைத்தலைவனும், பிரதான ஆசாரியனுங்கேட்டு இதென்னவாயிருக்கிறதென்று அவர்களைக்குறித்துச்சந்தேகப்பட்டார்கள்.

௨௫. அப்பொழுது ஒருவன் சேர்ந்து நீங்கள் காவலில்வைத்த மனிதர் தேவாலயத்திலே நின்று சனங்களுக்கு உபதேசம் பண்ணுகிறார்களென்றறிவித்தான்.

௨௬. உடனே சேனைத்தலைவன் சேவகரோடுங் கூடப்போய், சனங்களாலே கல்லெறியப்படாதபடிக்கு அவர்களுக்குப் பயந்ததினாலே பலவந்தம் பண்ணாமல் அப்போஸ்தலரை யழைத்துக்கொண்டான்.

௨௭. அப்படி அவர்கள் அவர்களை யழைத்துப்போய், பெரிய சங்கத்தாருக்கு முன்பாக நிறுத்தினார்கள். அப்பொழுது பிரதான ஆசாரியன் அவர்களை நோக்கி,

௨௮. * நீங்கள் அந்த நாமத்தைக்குறித்து உபதேசம் பண்ணக்கூடாதென்று நாங்கள் உங்களுக்குக்கெட்டியாய்க் கட்டளையிடவில்லையோ! அப்படி இருந்தும் நீங்கள் உங்கள் உபதேசத்தினாலே எருசலேமை நிரப்பி, அந்த மனிதனுடைய இரத்தப்பழி எங்கள்மேல் வரப்பண்ண விரும்புகிறீர்கள் என்று சொன்னான். * ௪: ௰௮.

௨௯. அதற்குப்பேதுருவும், (மற்ற) அப்போஸ்தலருஞ் சொன்னதாவது; நாங்கள் * மனிதருக்குக்கீழ்ப்படிகிறதிலும், பராபரனுக்குக்கீழ்ப்படியவேண்டும். * ௪: ௰௯. தானி. ௬; ௰.

௩௰. * நீங்கள் மரத்திலே தூக்கிக்கொலைசெய்த இயேசுவை நம்முடைய முன்னோர்களுடைய தேவன் எழுப்பி, * ௩: ௰௫.

௩௧. இஸ்ரவேலருக்கு மனந்திரும்புதலையும், பாவமன்னிப்பையுங் கொடுக்கிறதற்கு

அவரை யதிபதியாகவும், இரட்சகராகவுந் தமது வலது கைப்புறமே உயர்த்தினர். * லூக். ௨௪: ௪௭.

௩௨. இந்தச்சங்கதிகளைக்குறித்து நாங்களும், பராபரன் தமக்குக்கீழ்ப்படிகிறவர்களுக்குக்கொடுத்த பரிசுத்த ஆவியும் அவருடைய சாட்சிகளாயிருக்கிறேமென்றார்கள்.

௩௩. அதை யவர்கள்கேட்டு மிகுந்த மூர்க்கம் அடைந்து அவர்களைக்கொலைசெய்யும்படிக்கு யோசனை பண்ணினார்கள்.

௩௪. அப்பொழுது எல்லாச்சனங்களாலுங் கனம்பெற்றுக்கொண்ட வேத சாஸ்திரியாகிய கமாலியேலென்னப்பட்ட பரிசேயனானவன் பெரிய சங்கத்தாருக்குள்ளே யெழுந்திருந்து, அப்போஸ்தலரைச்சற்றுநேரம் வெளியே கொண்டுபோகச்சொல்லிச் சங்கத்தாருடனே சொன்னதாவது;

௩௫. இஸ்ரவேலரே! நீங்கள் அந்த மனிதருக்குச்செய்ய நினைக்கிறதைக்குறித்து எச்சரிக்கையாய் இருப்பீர்களாக.

௩௬. இந்த நாள்களுக்குமுன்னே தெயுதாவென்பவன் எழும்பி, தன்னைப்பெரியவனென்று சொல்லி, ஏறக்குறைய நானூறு பேர் தன்னைப் பற்றிக்கொள்ளும்படி செய்து, பின்பு அழிக்கப்பட்டான். அவனை நம்பியிருந்த அனைவருங் கலைந்து வீணாய்ப் போய் விட்டார்கள்.

௩௭. அவனுக்குப்பின்பு குடிமதிப்புச்செய்யப்பட்ட நாள்களிலே கலிலேயனாகிய யூதா எழும்பி, அநேக சனங்களை, தன் வசமாக்கினான். அவனும் அழிந்துபோனான். அவனை நம்பியிருந்த அனைவருஞ் சிதற அடிக்கப் பட்டார்கள்.

௩௮. ஆனபடியினாலே நான் உங்களுக்குச் சொல்லுகிறதென்னவென்றால், இந்த மனிதர்களுடைய யோசனை அல்லது இவர்களுடைய கிரியை மனிதரால் உண்டானதானால் அது ஒழிந்துபோம்.

௩௯. அது பராபரனால் உண்டானால் அதை நீங்கள் ஒழித்துப்போடமாட்டீர்கள். ஆதலால், நீங்கள் * பராபரனோடே போர் செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்கு இவர்களுக்கு ஒன்றுஞ் செய்யாமல் இவர்களை விடுங்களென்றான். * ௬: ௫.

௪௰. அவனோடே மற்றவர்கள் பொருந்தி, அப்போஸ்தலரை வரவழைத்து, * அடித்து, இயேசுவின் நாமத்தைக்குறித்து அவர்கள் பேசாதிருக்கும்படிக்குக்கட்டளையிட்டு, அவர்களை விட்டுவிட்டார்கள். * மாற். ௰௩: ௯.

௪௧. அவர்கள் தாங்கள் அவருடைய நாமத்திற்காகக்கனவீனப்படுகிறதற்குப்பாத்திரரென்றெண்ணப்பட்டபடியினாலே * சந்தோஷமாய்ப்பெரிய சங்கத்தை விட்டுப் புறப்பட்டுப்போய், * மத். ௫: ௰௨.

௪௨. தினந்தோறுந் தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும் ஓயாமல் உபதேசம் பண்ணி, இயேசுவைக்கிறிஸ்தென்று சுவிசேஷமாய் அறிவித்தார்கள்.

௬ அதிகாரம்.

[(௧) அப்போஸ்தலர்கள் ஆத்துமபோசனமாகிய தேவவசனத்தைப் பரிமாறவேண்டியதாகையால், ஏழைக்கரகச்சரீரபராமரிப்புகளை, (௩) தெரிந்துகொள்ளப்பட்ட ஏழுபேர்கள் உதவிக்காரர்களாக ஏற்படுத்தப்பட்டது. (௫) இவ்வேழுபேர்களில் விசுவாசத்தாலும், பரிசுத்தத்தாலும் நிறைந்த ஸ்தேவான் ஒருவன், (௰௨) தர்க்கத்தாற் செயிக்கப்பட்ட எதிராளிகளாலே பிடிக்கப் பட்டு, (௰௩) பரிசுத்த ஸ்தலத்தையும், நியாயப்பிரமாணத்தையும் தூஷணித்ததாய் அநியாயமாய்க்குற்றஞ் சாற்றப்பட்டது.]

அந்த நாள்களிற் சீஷர்கள் பெருகினபொழுது கிரேக்கரானவர்களிலுள்ள கைம்பெண்கள் நாடோறுமுள்ள விசாரணையிலே நன்றாய் எண்ணிக்கொள்ளாதபடியினாலே, கிரேக்கரானவர்கள் எபிரேயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள்.

௨. அப்பொழுது பன்னிருவருஞ் சீஷர்களாகிய திரளைக்கூடி வரவழைத்துச்சொன்னதாவது; நாங்கள் பராபரனுடைய வசனம் போதிக்கிறதைவிட்டுப்பந்திகளைக்குறித்து விசாரிக்கிறது தகாது.

௩. ஆகையால், சகோதரரே! நீங்கள் உங்களுக்குள்ளே பரிசுத்த ஆவியும், ஞானமும் நிறைந்து நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரையுந் தெரிந்துகொள்ளுங்கள். அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம்.

௪. நாங்கள் செபம்பண்ணுதலிலும், (தேவ) வசனத்தைப்போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போமென்றார்கள்.

௫. இந்த யோசனை சபையார் எல்லாருக்கும் பிரியமாய் இருந்தது. ஆதலால், அவர்கள் விசுவாசமும், பரிசுத்த ஆவியும் நிறைந்தவனாகிய ஸ்தேவானையும், * பிலிப்பையும், பிரோகோரையும், நிக்கானரையும், தீமோனையும், பருமேனாவையும், யூதமார்க்கத்தானான அந்தியோகியாபட்டினத்தானாகிய நிக்கோலாவையுந் தெரிந்துகொண்டு, * ௮: ௫.

௬. அவர்களை அப்போஸ்தலருக்கு முன்பாக நிறுத்தினார்கள். இவர்கள் செபம்பண்ணி அவர்கள்மேலே தங்கள் கைகளை வைத்தார்கள்.

௭. பின்பு * பராபரனுடைய வசனம் வளர்ந்தது. சீஷருடைய இலக்கம் எருசலேமிலே மிகவும் பெருகிற்று. ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்திற்குக்கீழ்ப்பட்டார்கள். * ௰௯: ௨௰.

௮. அன்றியும், ஸ்தேவானென்பவன் கிரு

னையினாலும், பலத்தினாலும் நிலைந்து சனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும், அதிசயங்களையுஞ் செய்தான்.

௯. அப்பொழுது லிபர்த்தினர் என்னப்பட்டவர்களின் செப ஆலயத்தைச்சேர்ந்தவர்களிலும், சிரேனே பட்டினத்தாரிலும், அலெக்சந்தரிய பட்டினத்தாரிலும், சிலிக்கியாத்தேசத்தாரிலும், ஆசியாதேசத்தாரிலுஞ் சிலர் எழும்பி ஸ்தேவானுடனே தருக்கம் பண்ணிக்கொண்டார்கள்.

௰. அவன் பேசின * ஞானத்தோடும், ஆவியோடும் எதிர்த்து நிற்க அவர்களுக்கு வல்லமையில்லை. * லூக். ௨௧: ௰௫.

௰௧. அப்பொழுது அவர்கள் இரகசியமாய்ச்சில மனிதரைச்சம்பாதித்து இவன் மோசேயுக்கும், பராபரனுக்கும் விரோதமாகத் தூஷணமான வசனங்களைப் பேசக் கேட்டோமென்று சொல்லும்படி செய்து,

௰௨. பின்பு, சனங்களையும், மூப்பரையும், வேதபாரகரையும் எழுப்பி, அவன்மேற் பாய்ந்து அவனைப்பெரிய சங்கத்தாருக்கு முன்பாக இழுத்துக்கொண்டுபோய்,

௰௩. * பொய்ச்சாட்சிகளையும் ஏற்படுத்தினார்கள். அவர்கள் சொன்னது, இவன் பரிசுத்த ஸ்தலத்திற்கும், வேதநூலுக்குந் தூஷணமான வசனங்களை ஓயாமற் பேசுகிறான். * ௧ இராசா. ௨௧: ௰௩.

௰௪. நாசரேத்தூராராகிய அந்த இயேசுவென்பவர் இந்த ஸ்தலத்தை யழித்து, மோசே நமக்குக்கொடுத்த முறைமைகளை மாற்றுவாரென்று இவன் சொல்லக்கேட்டோமென்றார்கள்.

௰௫. பெரிய சங்கத்தில் உளுக்காந்திருந்த யாவரும் அவன்மேற் கண்ணோட்டமான பொழுது அவனுடைய முகந் தேவ தூதன் முகம்போல் இருக்கக்கண்டார்கள்.

௭ அதிகாரம்.

[(௧) ஸ்தேவான் தூஷணஞ் செய்கைக்குத் தரவாக, (௨) ஆபிரகாம் பராபரனை நியாயமாய்த்தொழுது கொண்டதையும், (௨௰) மோசே பிறவாததற்கு முன்னும், கூடாரமும், தேவாலயமும் கட்டப்படாததற்கு முன்னும் பராபரன் பிதாக்களை இப்படித் தெரிந்துகொண்டதையும், (௩௭) மோசே தானே கிறிஸ்துவைக்குறித்துச்சாட்சி இட்டதையும், (௪௪) தெய்வக்கட்டளைப்படி உண்டாக்கப்பட்ட புறம்பான சடங்குகள் எல்லாங் கொஞ்சக்காலத்துக்கு மாத்திரங் குறிக்கப்பட்டதையுஞ்சொல்லி, (௫௧) உலகத்தில் வருவாரென்று தீர்க்கதரிசிகளினால் முன்னறிவிக்கப்பட்ட நீதிபரராகிய கிறிஸ்துவைக்கொலைசெய்த துரோகத்துக்காக அவர்களைக்கடிந்துகொண்டு, (௫௪) இதின் பொருட்டு அவர்கள் அவனைக்கல்லெறிந்து கொல்லும்போது, அவன் தன் ஆத்துமாவை இயேசுவினிடத்தில் ஒப்புவித்து அவர்களுக்காக வேண்டிக்கொண்டது.]

பிரதான ஆசாரியன் அவனைநோக்கி, இப்படியா நடந்தது என்றான்.

௨. அதற்கவன் சொன்னதாவது; சகோதரரும், பிதாக்களுமானவர்களே! கேட்பீர்களாக. நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் காரான் ஊரிலே குடியிருக்கிறதற்கு முன்னே மெசொப்பொத்தாமியா நாட்டிலேயிருந்தபொழுது, மகிமைபொருந்திய பராபரன் அவனுக்குத்தரிசனையாகி,

௩. * நீ உன் தேசத்தையும், இனத்தாரையும் விட்டுப்புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்குந் தேசத்திற்குப்போ என்றார். * ௧ மோ. ௰௨: ௧.

௪. அப்பொழுது அவன் கல்தேயா தேசத்தைவிட்டுப்புறப்பட்டு, காரான் ஊரிலே வாசம்பண்ணினான். மேலும் அவனுடைய தகப்பன் மரித்தபின்பு அவ்விடத்தைவிட்டு நீங்கள் இப்பொழுது குடியிருக்கிற இத்தேசத்திற்குவந்து குடியிருக்கும்படி செய்தார்.

௫. இதில் ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுக்குச்சுதந்தரமாகக்கொடாமல், அவன் பிள்ளையில்லாதிருந்த காலத்திலே * உனக்கும், உனக்குப்பின்வரும் உன் சந்ததிக்கும் இதைக்காணியாட்சியாகத்தருவேனென்று அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணினார். * ௧ மோ. ௰௨: ௭.

௬. அன்றியும் பராபரன் அவனுடனே சொன்னது, * உன்னுடைய சந்ததியார் அந்நிய தேசத்திலே குடியிருப்பார்கள். அத்தேசத்தார் அவர்களை அடிமைகளாக்கி, நானூறு வருஷம் உபத்திரவப்படுத்துவார்கள். * ௧ மோ. ௰௫: ௰௩.

௭. அவர்கள் அடிமை வேலைசெய்யும் அந்தத்தேசத்தாரை நான் ஆக்கினைக்குட்படுத்துவேன். அதற்குப்பின்பு நான் உன் சந்ததியார் புறப்பட்டுவந்து, இவ்விடத்திலே எனக்கு ஆராதனை செய்வார்கள் என்று பராபரன் சொன்னார்.

௮. அன்றியும் * விருத்தசேதனம்பண்ணுதலை அவர் அவனுக்கு ஏற்படுத்தினார். அந்தப்படியே அவன் ஈசாக்கைப்பெற்றபொழுது எட்டாம்நாளில் அவனுக்கு விருத்தசேதனம்பண்ணினான். ஈசாக்கானவன் யாக்கோபையும், யாக்கோபானவன் கோத்திரத்தலைவராகிய பன்னிரண்டு பேரையும் பெற்று, அவர்களுக்கு விருத்தசேதனம் பண்ணினார்கள். * ௧ மோ. ௰௭: ௰.

௯. பின்பு கோத்திரத்தலைவராகிய அவர்கள் பொறாமைகொண்டு யோசேப்பை

எகிப்திற்குப் (போனவியாபாரிகளுக்கு) விற்றுப்போட்டார்கள்.

௯. பராபரன் அவனுடைய பக்கல் இருந்து எல்லா உபத்திரவங்களினின்றும் அவனைத் தாக்கி யெடுத்து, எகிப்தின் இராசாவாகிய பார்வோனுக்குமுன்பாக அவனுக்குக் கிருபையையும், ஞானத்தையுங் கொடுத்தார். அந்த இராசா இவனை எகிப்துதேசத்திற்கும், தன் குடும்பம் எல்லாவற்றிற்குந் துரையாக வைத்தான்.

௰௧. பின்பு எகிப்து கானான்தேசங்கள் முழுவதிலும் பஞ்சமும், மிகுந்த உபத்திரவமுமுண்டாயின. நம்முடைய பிதாக்களுக்கும் ஆகாரங் கிடைக்கவில்லை.

௰௨. அப்பொழுது எகிப்திலே தானியம் உண்டென்று யாக்கோபு கேள்விப்பட்டு, நம்முடைய பிதாக்களை முதலாந்தரம் (அவ்விடத்திற்கு) அனுப்பினார்.

௰௩. இரண்டாந்தரம் யோசேப்பு, தன் சகோதரருக்கு அறியப்பட்டான். அல்லாமலும், யோசேப்பினுடைய வம்சம் பார்வோனுக்குத்தெரியவந்தது.

௰௪. பின்பு யோசேப்புத்தன் தகப்பன் யாக்கோபும், (மற்ற) இனத்தார் யாவருமாகிய எழுபத்தைந்துபேரையும் அழைக்க அனுப்பினான்.

௰௫. அந்தப்படி யாக்கோபு எகிப்திற்குப் போனார். பின்பு அவரும், நம்முடைய பிதாக்களும் மரித்து, அங்கேயிருந்து சீகேம் ஊருக்குக்கொண்டுபோகப்பட்டு,

௰௬. ஆபிரகாம் சீகேமின் தகப்பனாகிய எமோருடைய சந்ததியாரிடத்தில் விலைக்கிரயமாக வாங்கியிருந்த சமாதியில் வைக்கப்பட்டார்கள்.

௰௭. பின்பு ஆபிரகாமுக்குப்பராபரன் ஆணையிட்டுப்பண்ணின வாக்குத்தத்தத்தின் காலஞ் சமீபமானபொழுது, யோசேப்பையறியாத வேறொரு இராசா தோன்றின காலமளவும்,

௰௮. சனங்கள் எகிப்திலே அதிகமாய்ப் பெருகினார்கள்.

௰௯. அவன் நம்முடைய வம்சத்தாரைச்சூதித்த வஞ்சனையாய் நடந்து, நம்முடைய பிதாக்களின் குழந்தைகள் உயிரோடிராதபடிக்கு, அவர்கள் அவைகளை வெளியே போட்டுவிடும்படிசெய்து, அவர்களை உபத்திரவப்படுத்தினான்.

௨௰. அக்காலத்திலே மோசேயென்பவன் பிறந்து பராபரனாலே அழகுள்ளவனாய் இருந்து, மூன்றுமாதந் தகப்பனுடைய வீட்டிலே வளர்க்கப்பட்டான்.

௨௧. அவனும் வெளியே போட்டுவிடப்பட்டபொழுது, பார்வோனுடைய குமாரத்தி அவனை எடுத்து, தனக்குக்குமாரனாக வளர்த்தாள்.

௨௨. அதினாலே மோசே எகிப்தாருடைய கல்விகள் யாவும் படித்துக்கொண்டு வசனங்களிலேயும், செய்கைகளிலேயும் வல்லவனானான்.

௨௩. அவன் நாற்பதுவயதுள்ளவனானபொழுது, இஸ்ரவேல் சந்ததியாராகிய தன்னுடைய வம்சத்தாரைச்சந்தித்துப்பார்க்கும்படி விருப்பமுள்ளவனாகிப்போனபொழுது,

௨௪. அநியாயம் அநுபவிக்கிற ஒருவனைக் கண்டு, (அவனைக்) காப்பாற்றி எகிப்தானை வெட்டினான்.

௨௫. அன்றியும் அவன் தன் கையினாலே பராபரன் தங்களுக்கு இரட்சிப்பைத்தருவாரென்று, தன் வம்சத்தார் அறிந்துகொள்வார்களென்று நினைத்தான். அவர்கள் அப்படி யறிந்துகொள்ளவில்லை.

௨௬. மறுநாளிலே சண்டைபண்ணிக் கொண்டிருக்கிற சிலருக்கு அவன் தன்னைக் காண்பித்து, புருஷரே! நீங்கள் சகோதரரானவர்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் அநியாயஞ் செய்கிறதென்னவென்று அவர்களைச்சமாதானப்படுத்தும்படி பேசினான்.

௨௭. (அவர்களிற்) பிறனுக்கு அநியாயஞ் செய்தவன் சொன்னது, எங்களுக்கு உன்னைத்தலைவனென்றும், நியாயாதிபதியென்றும் வைத்தவன் எவன்!

௨௮. நேற்று நீ அந்த எகிப்தானைக்கொலைசெய்தது போல என்னையுங் கொலைசெய்ய மனதாய் இருக்கிறாயாவென்று அவனைத் தள்ளினான்.

௨௯. இந்த வார்த்தையினாலே மோசே ஓடிப்போய், மாதியான் தேசத்தில் அந்நியனாய்ச்சஞ்சரித்து, அங்கே இரண்டு குமாரரைப்பெற்றான்.

௩௰. அன்றியும் நாற்பதுவருஷஞ் சென்றபின்பு சீனாமலையின் வனாந்தரத்திலே பராபரனுடைய தூதனானவர் ஒரு முட்செடி எரிகிற அக்கினிச்சுவாலையில் அவனுக்குத் தரிசனையானார்.

௩௧. மோசே அதைக்கண்டு, அந்தத்தரிசனையைக்குறித்து அதிசயப்பட்டு அதைப் பார்க்கும்படி சேர்ந்து வருகிறபொழுது பராபரனானவர்,

௩௨. நான் உன் பிதாக்களாகிய ஆபிரகாமுடைய தேவனுமாய், ஈசாக்கினுடைய தேவனுமாய், யாக்கோபினுடைய தேவனுமாய் இருக்கிற பராபரன் என்று திருவுளம்பற்றின சத்தம் அவனுக்குத் தோன்றிற்று. அப்பொழுது மோசே நடுக்கம் அடைந்து, (அதினாலே அதைப்) பார்க்கும்படி துணியாமல் இருந்தான்.

௩௩. பின்னும் பராபரன் அவனுடனே சொன்னது, நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமியாகையால், உன் பாத இரட்சைகளைக் கழற்றிப்போடு.

௩௪. எகிப்தில் இருக்கிற என்னுடைய சனங்களின் உபத்திரவத்தை நான்தானே பார்த்து, அவர்களுடைய தவிப்பைக் கேட்டு அவர்களை விடுவிக்கும்படிக்கு இறங்கினேன். ஆகையால் நீ வா, நான் உன்னை எகிப்திற்கு அனுப்புகிறேன் என்றார்.

௩௫. உன்னைத்தலைவன் என்றும், நியாயாதிபதியென்றும் வைத்தவன் எவன் என்று அவர்கள் சொல்லி, மறுதலித்திருந்த அந்த மோசேயையே பராபரன் முட்செடியில் அவனுக்குத்தரிசனையான தூதனாலே தலைவனாகவும், மீட்பனாகவும் அனுப்பினார்.

௩௬. அவனே அவர்களை அங்கேயிருந்து அழைத்துக்கொண்டுபோய், எகிப்து தேசத்திலேயும், சிவப்பான சமுத்திரத்திலேயும், நாற்பதுவருஷகாலமாய் வனாந்தரத்திலேயும் அற்புதங்களையும், திருஷ்டாந்தங்களையுஞ் செய்தான்.

௩௭. அந்தமோசேயே இஸ்ரவேல் சந்ததியாரை நோக்கி, உங்களுக்காக உங்கள் தேவனாகிய பராபரன் உங்கள் வம்சத்திலிருந்து * என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை எழும்பப்பண்ணுவார். அவருக்குச்செவிகொடுப்பீர்களாகவென்று சொன்னவன், * ௫ மோ. ௰௮: ௰௫.

௩௮. அவனே சீனாமலையிலே தன்னுடனே பேசின தூதனோடும், நம்முடைய பிதாக்களோடுங்கூட வனாந்தரத்திலே சபைக்குள்ளேயிருந்து, நமக்குக்கொடுக்கும்படி சீவவாக்கியங்களைப்பெற்றவன்.

௩௯. நம்முடைய பிதாக்கள் அவனுக்குக் கீழ்ப்பட மனதாயிராமல் அவனைத்தள்ளி, எகிப்துதேசத்திற்கு மனந்திரும்ப,

௪௰. ஆரோனைநோக்கி, எகிப்துதேசத்தில் இருந்து எங்களையழைத்துக்கொண்டுவந்த அந்த மோசேயுக்குச்சம்பவித்ததை அறியோம். ஆதலால், * எங்களுக்குமுன்பாக நடக்குந் தேவர்களை நீர் எங்களுக்காக உண்டுபண்ணவேண்டுமென்று சொல்லி, * ௨ மோ. ௩௨: ௧.

௪௧. அந்நாள்களில் ஒரு கன்றுக்குட்டியைச்செய்து, அந்த விக்கிரகத்திற்குப்பலியிட்டு, தங்கள் கைகளாற்செய்த கிரியைகளைக்குறித்துச்சந்தோஷப்பட்டார்கள்.

௪௨. அப்பொழுது பராபரன் அவர்களைவிட்டுத்திரும்பி, வானத்திலுள்ள சேனையைப்பணிந்துகொள்ளும்படி அவர்களை ஒப்புக்கொடுத்துவிட்டார். (அதைக்குறித்து) * இஸ்ரவேல் குடும்பத்தாரே! நீங்கள் வனாந்தரத்திலிருந்த நாற்பதுவருஷம்வரையிலே காணிக்கைகளையும், பலிகளையும் எனக்குச்செலுத்தினீர்களா? * ஆமோஸ் ௫: ௨௫.

௪௩. பணிந்துகொள்ளும்படிக்கு நீங்கள் செய்த சொரூபங்களாகிய மோளோகினுடைய கூடாரத்தையும், உங்கள் தேவனாகிய இரம்பான் என்னும் நட்சத்திரத்தையும் எடுத்து வந்தீர்களே. ஆதலால், நான் உங்களைப்பாபிலோனுக்கு அப்புறத்திலே குடியிருக்கும்படி போகப்பண்ணுவேனென்று தீர்க்கதரிசிகளின் புத்தகத்திலே யெழுதியிருக்கின்றதே.

௪௪. மேலும், நீ பார்த்த உருவின்படியே * சாட்சிப்பொருளையுடைய கூடாரத்தைச் செய்யென்று, மோசேயுடனே பேசிக்கொண்டவர் கட்டளையிட்ட பிரகாரமாக அது வனாந்தரத்திலே நம்முடைய பிதாக்களுக்குள்ளேயிருந்தது. * ௨ மோ. ௨௫: ௪௰. ௨௬: ௩௰.

௪௫. மேலும், யோசுவாவுடனேகூட நம்முடைய பிதாக்கள் அதைப்பெற்றுக்கொண்டு, தங்களுக்கு முன்னின்று பராபரன் துரத்தின அஞ்ஞானிகளுடைய தேசத்திற்குள்ளே அதைக்கொண்டுபோய், தாவீது இருந்த நாள்வரைக்கும் வைத்திருந்தார்கள்.

௪௬. அவன் பராபரனிடத்தில் தயவுபெற்றபடியினாலே, * யாக்கோபினுடைய தேவனுக்காக ஒரு வாசஸ்தலத்தைக்கட்டும்படிக்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். * சங். ௱௩௨: ௨—௫.

௪௭. (அவனல்ல) சாலோமோனே; அவருக்காக ஆலயத்தைக்கட்டினான்.

௪௮. * உன்னதமானவர் வானம், எனக்கு ஆசனமாயும், பூமி யென்னுடைய பாதப்படியாயும் இருக்கின்றது. எனக்காக நீங்கள் எப்படிப்பட்ட ஆலயத்தைக்கட்டுவீர்கள். அல்லது, நான் தங்கும்படிக்கேற்ற ஸ்தலமெது! * ஏசா. ௬௬: ௧, ௨.

௪௯. இவை யெல்லாவற்றையும் என்னுடையகை உண்டாக்கவில்லையாவென்று, பராபரன் திருவுளம் பற்றினாரென்று தீர்க்கதரிசி சொன்னபடியே;

௫௰. கைகளாற் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாய் இருக்கமாட்டார்.

௫௧. ஆ, * வணங்காத கழுத்துள்ளவர்களே! இருதயமும், காதும் விருத்தசேதனம் பெறாதவர்களே! உங்கள் பிதாக்களைப்போல நீங்களும் பரிசுத்த ஆவியை எப்பொழுதும் விரோதிக்கிறீர்கள். * ௨ மோ. ௩௨: ௯.

௫௨. * தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமல் இருந்தார்கள். நீதிபரர் வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலைசெய்தார்கள், அவருக்கே நீங்கள் இப்பொழுது துரோகிகளுமாய், அவரைக்கொலைசெய்தவர்களுமாயிருக்கிறீர்கள். * மத். ௨௩: ௩௪.

௫௩. தேவதூதரின் அணிவகுப்புகளுக்குள்ளே வேதப்பிரமாணத்தைப்பெற்றுக்கொ

ண்டிருந்தும், அதைக்கைக்கொள்ளாமல் இருக்கிறீர்களென்றுசொல்ல,

௫௪. அவர்கள் அவைகளைக்கேட்டுத் * தங்கள் இருதயங்களில் அறுக்கப்பட்டவர்களாய் அவனைக்குறித்துப்பற்கடித்தார்கள். * ௫: ௩௩.

௫௫. அவன் பரிசுத்த ஆவியினாலே நிறைந்து, வானத்தை அண்ணாந்துபார்த்துக்கொண்டு, பராபரனுடைய மகிமையையும், பராபரனுடைய வலதுபாரிசத்திலே நிற்கிற இயேசுவையுங்கண்டு,

௫௬. அதோ, வானந் திறக்கப்பட்டிருக்கிறதையும், மனித குமாரனானவர் பராபரனுடைய வலதுபாரிசத்திலே நிற்கிறதையும் பார்க்கிறேனென்று சொன்னபொழுது,

௫௭. அவர்கள் மிகுந்த சத்தத்துடனே கூப்பிட்டு, தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு,

௫௮. ஒருமனப்பட்டு அவன்மேலே பாய்ந்து, அவனைப்பட்டினத்திற்குப்புறம்பே தள்ளி, அவன்மேற் கல்லெறிந்தார்கள்.

௫௯. சாட்சிகளானவர்களுந் தங்கள் வஸ்திரங்களைச்சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதங்களருகேவைத்து: ஸ்தேவான்மேல் கல்லெறிந்தார்கள். * அவன் கர்த்தராகிய இயேசுவே! என் ஆவியையேற்றுக்கொள்ளுமென்று தொழுதுகொண்டு, * எபி. ௰௧: ௩௩, ௩௪.

௬௰ முழங்காற்படியிட்டு, * ஆண்டவரே! இவர்கள்மேல் இந்தப்பாவத்தை நிறுத்தாதிருமென்று, மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு; பின்பு நித்திரையடைந்தான். அவனைக்கொலைசெய்கிறது சவுல் என்பவனுக்கு மிகவும் பிரியமாயிருந்தது. * லூக். ௨௩: ௩௪.

௮ அதிகாரம்.

[(௧) எருசலேமில் உண்டான சபை துன்பப்பட்டு, (௫) உதவிக்காரனாகிய பிலிப்பின் பிரசங்கத்தினாலும், அற்புதங்களினாலும் சமாரியாவிலே ஸ்தாபிக்கப்பட்டபோது, ஸ்தம்பன வித்தைக்காரனாயிருந்த ஒரு பெரிய எத்தனாகிய சீமோன் என்பவனும் அநேகம் பேருடனே ஞானஸ்நானம் பெற்றது. பேதுருவும், யோவானும் சபையை ஸ்திரப்படுத்தவந்து செபத்தினாலும், சிரசின்மேல் கைகளை வைப்பதினாலும், பரிசுத்த ஆவி அளிக்கப்பட்டதை (௰௮) சீமோன் கண்டு, அந்த வரத்தை விலைக்கிரயமாகப் பெற்றுக்கொள்ளப் பார்த்தபோது, (௨௰) பேதுரு அவனுடைய மாயத்தையும், இச்சையையுங் கடிந்துகொண்டு, அவனுக்குக்குணப்படுதலுக்கடுத்த புத்திகள் சொல்லி, யோவானுடனேகூடக்கர்த்தருடைய வசனத்தைப்பிரசங்கித்து, எருசலேமுக்குத்திரும்பினது. (௨௬) போதிக்கவும், எத்தியோப்பிய பிரதானிக்கு ஞானஸ்நானங்கொடுக்கவும், பிலிப்பைத்தேவதூதன் அனுப்பினது.]

அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர் தவிர மற்றயாவரும் யூதேயா, சமாரியா தேசங்களிற் சிதறப்பட்டார்கள்.

௨ ஸ்தேவானைத்தேவபத்தியுள்ள சிலபேர்கள் எடுத்து அடக்கம்பண்ணி, அவனைக்குறித்து மிகவும் புலம்பி அழுதார்கள்.

௩. * சவுல் வீடுகள்தோறும் பிரவேசித்துப்புருஷரையும், ஸ்திரீகளையும் வெளியேயிழுத்துப்போய்க்காவலில் போடுவித்துச் சபையைப்பாழாக்கினான். * ௯: ௧, ௨.

௪. சிதறப்பட்டபேர்கள் திரிந்து தேவவசனத்தைச்சுவிசேஷமாய்ப்பிரசித்தம்பண்ணினார்கள்.

௫. அப்படியே * பிலிப்பென்பவன் சமாரியா நாட்டிலுள்ள ஒரு ஊருக்குப்போய், அங்கே கிறிஸ்துவைக்குறித்துப்பிரசங்கித்தான். * ௬: ௫.

௬. அப்பொழுது, அநேகம்பேர் இடத்திலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு, அவர்களைவிட்டுப்புறப்பட்டன. அநேக திமிர்வாதக்காரரும், சப்பாணிகளுங் குணமாக்கப்பட்டார்கள்.

௭. பிலிப்புச்செய்த அதிசயங்களைச்சனங்கள் கேள்விப்பட்டும், கண்டும் இருக்கையில், அவனால் சொல்லப்பட்டவைகளுக்கு ஒருமனப்பட்டு, எச்சரிக்கையாய் இருந்தார்கள்.

௮. அந்த ஊரிலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று.

௯. அன்றியும், சீமோன் என்று பெயர்கொண்ட ஒருவன் முன்னே அந்தவூரிலே ஸ்தம்பன வித்தைக்காரனாயிருந்து, தன்னைப்பெரியவனென்று சொல்லிச்சமாரியா நாட்டின் சனங்களைப்பிரமிக்கப்பண்ணிக்கொண்டிருந்தான்.

௰. சிறியோர், பெரியோர் யாவரும் இவன் பராபரனுடைய பெரிய சத்தியென்று அவனுக்கு எச்சரிக்கையாய் இருந்தார்கள்.

௰௧. அநேககாலம் அவன் தன்னுடைய மந்திர தந்திரங்களினாலே அவர்களைப்பிரமிக்கச்செய்தபடியால், அவர்கள் அவனுக்கு எச்சரிக்கையாய் இருந்தார்கள்.

௰௨. பின்பு பராபரனுடைய இராச்சியத்திற்கும், இயேசுக்கிறிஸ்துவின் நாமத்திற்கும் ஏற்றவைகளைச்சுவிசேஷமாய் அறிவிக்கிற பிலிப்பை அவர்கள் விசுவாசித்தபொழுது, புருஷரும், ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

௰௩. அப்பொழுது அந்தச்சீமோனும், விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுப்பிலிப்பைப்பற்றிக்கொண்டு, (அவனாலே) நடந்த அதிசயங்களையும், பலத்த செய்கைகளையும் பிரமிப்புடனே பார்த்தான்.

௰௪. சமாரியாநாடு பராபரனுடைய வசனத்தையேற்றுக்கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர் கேள்விப்பட்டபொழுது, அவர்கள் பேதுருவையும், யோவானையும் அவர்கள் இடத்திற்கு அனுப்பினார்கள்.

௰௫. அவர்கள்போய் அவர்களில் ஒருவனாகிலும் பரிசுத்த ஆவியைப்பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தைமாத்திரம் பெற்றவர்களானபடியினாலே,

௰௬. அவர்கள் பரிசுத்த ஆவியைப்பெற்றுக்கொள்ளும்படிக்கு,

௰௭. அவர்களைக்குறித்துச்செபம்பண்ணித் (தங்கள்) கைகளை அவர்கள்மேல் வைத்தார்கள். உடனே பரிசுத்த ஆவியைப்பெற்றார்கள்.

௰௮. அப்போஸ்தலர் தங்கள் கைகளை (அவர்கள்) மேல் வைத்ததினாலே, பரிசுத்த ஆவி கொடுக்கப்படுகிறதை, சீமோன் கண்டபொழுது, அவர்கள் இடத்திற்குப்பணங்கொண்டுபோய்,

௰௯. என் கைகளை வைக்கப்படுகிறவனெவனோ அவன் பரிசுத்த ஆவியைப்பெறத்தக்கதாக நீங்கள் எனக்கும், இந்த அதிகாரங் கொடுக்க வேண்டுமென்றான்.

௨௰. அதற்குப்பேதுரு சொன்னதாவது; * பராபரனுடைய ஈவைப்பணத்தினாலே சம்பாதித்துக்கொள்ளலாமென்று நீ நினைக்கிறபடியால், உன் பணம் உன்னோடே கேட்டுக்குள்ளாகக்கடவது. * மத். ௰: அ.

௨௧. உன் இருதயம், பராபரனுக்கு முன்பாகச்செம்மையாய் இராதபடியால், இந்தக்காரியத்திலே உனக்குப்பங்கும் பாகமுமில்லை.

௨௨. நீ கசப்புள்ள பிச்சும், அநீதிக்கட்டும் உடையவனாய் இருக்கிறதைப்பார்க்கிறேன்.

௨௩. ஆனபடியினாலே, உன் இருதயத்தின் சிந்திப்பு உனக்கு மன்னிக்கப்படக்கூடுமானால், உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி, பராபரனை நோக்கி வேண்டிக்கொள்வாயாகவென்றான்.

௨௪. சீமோன் சொன்னது, நீங்கள் உரைத்தவைகளிலொன்றும், எனக்கு வராதபடிக்கு, நீங்களே எனக்காகக்கர்த்தரை வேண்டிக்கொள்ளுங்களென்றான்.

௨௫. இவ்விதமாய் அவர்கள் கர்த்தருடைய வசனத்தைச்சாட்சியாய் அறிவித்துச் சொன்னபின்பு, எருசலேமுக்குத்திரும்பிச் சமாரியருடைய அநேக கிராமங்களில் சுவிசேஷத்தைப்பிரசங்கித்தார்கள்.

௨௬. அல்லியும் கர்த்தருடைய தூதன் பிலிப்புடனே சொன்னது, நீ எழுந்து தெற்கே பாழாய்க்கிடக்கிற காட்சா பட்டினத்திற்கு எருசலேமிலிருந்து போகிற மார்க்கத்திற்குப்போவென்றான்.

௨௭. அந்தப்படி அவன் எழுந்துபோனான். அப்பொழுது எத்தியோப்பியரை யாண்ட இராசஸ்திரீயாகிய கந்தாசியென்பவளுடைய மந்திரியுமாய், அவளுக்கு உண்டான பொக்கிசம் எல்லாவற்றின்மேலும் வைக்கப்பட்ட தலைவனுமாயிருந்த ஒரு எத்தியோப்பிய மனிதன் தொழுதுகொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து,

௨௮. ஊருக்குத்திரும்பி, தன் இரதத்திலே உட்கார்ந்து ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தை வாசித்துக்கொண்டு போனான்.

௨௯. ஆவியானவர் பிலிப்புடனே சொன்னது, அந்த இரதத்திற்குச்சமீபமாய் நீ சேர்ந்து, அதனோடே கூடிப்போ என்றார்.

௩௰. அந்தப்படி பிலிப்புச்சேர ஓடி, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தை வாசிக்கக்கேட்டு, நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத்தெரிந்திருக்கிறதா என்றான்.

௩௧. அவன் சொன்னது, ஒருவன் எனக்குக்காண்பியாவிட்டால், அது எனக்குத்தெரியுமா என்று சொல்லி, பிலிப்பு ஏறித்தன் பக்கத்தில் உட்காரும்படி அவனை வேண்டிக்கொண்டான்.

௩௨. அவன் வாசித்த வேதவாக்கியம் என்னவென்றால், * அவர் ஒரு ஆட்டைப்போல அடிக்கப்படும்படி கொண்டுபோகப்பட்டார். தன் மயிரைக்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச்சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல அவர் தமது வாயைத்திறவாதிருந்தார். * ஏசா. ௫௩: ௭.

௩௩. அவர் தாழ்மையாய் இருக்கையில் அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது. அவருடைய சீவன் பூமியிலிருந்து எடுத்துப்போடப்பட்டபடியினாலே அவருடைய தலைமுறையாரை யார் விவரித்துச் சொல்லுவார்கள் என்பதே.

௩௪. மந்திரியானவன் பிலிப்பை நோக்கி, தீர்க்கதரிசி தன்னைக்குறித்தோ? மற்றொருவனைக்குறித்தோ? யாரைக்குறித்து இதைச் சொன்னான்? அதை நீர் எனக்குச்சொல்லும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

௩௫. அப்பொழுது பிலிப்பு உத்தரவு சொல்ல, அந்த வேதவாக்கியந்தொடங்கி, இயேசுவின் சுவிசேஷத்தை அவனுக்குப்பிரசங்கித்தான்.

௩௬. இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து

போகையில் தண்ணீருள்ள ஓரிடத்திலே
சேர்ந்தபொழுது, மந்திரியானவன் சொன்
னது, இதோ தண்ணீர், நான் ஞானஸ்
நானம் பெற்றுக்கொள்ளுகிறதற்குத்தடை
யென்னவென்றான்.

ஙஎ. அதற்குப்பிலிப்புச்சொன்னது, நீர்
முழு இருதயத்தோடும் விசுவாசித்தாற்
பெற்றுக்கொள்ளலாம் என்றான். அவன்
சொன்னது, இயேசுக்கிறிஸ்துவைப்பரா
பரனுடைய குமாரனென்று விசுவாசிக்கி
றேனென்று சொல்லி, இரதத்தை நிறுத்
தச்சொன்னான்.

ஙஅ. பின்பு பிலிப்பும், மந்திரியும், இருவ
ரும் இறங்கித்தண்ணீரிற் பிரவேசித்தார்கள்.
அங்கே அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்
தான்.

ஙகூ. அவர்கள் தண்ணீரிலிருந்து ஏறின
பொழுது, கர்த்தருடைய ஆவியானவர்
பிலிப்பை எடுத்துக்கொண்டார். அதுமுதல்
மந்திரியானவன் அவனைக்காணுமற் சந்தோ
ஷத்தோடே தன்வழியே போனான்.

சய. பிலிப்பு ஆசோத்துப்பட்டினத்திலே
காணப்பட்டு, பின்பு பிரயாணமாய்ப்போ
ய்ச் * சேசாரியாபட்டினத்திற் சேரும்ப
ரியந்தஞ் சகல பட்டினங்களிலேயுஞ் சுவி
சேஷத்தைப் பிரசங்கித்துத் திரிந்தான்.
* உக: அ.

கூ அதிகாரம்.

[(க) சவுல் தமஸ்குவுக்குப்போகையில்,
(ச) பரம காட்சியினாலே தரையில் விழுந்
து, (ய) அப்போஸ்தலப்பட்டத்துக்கு அ
ழைக்கப்பட்டு, (யஅ) அனனியாவினால் ஞா
னஸ்நானம்பெற்று, (உய) கிறிஸ்துவைத்
தயிரியத்தோடே பிரசங்கித்தது. (உங)
யூதரும், (உகூ) கிரேக்கரும் அவனைக்கொல்
ல வகைதேடியும், அவன் அவர்களுக்கு அ
கப்படாமற்போனது. (ஙக) சபைக்கு ஓய்
விருந்தபோது பேதுரு ஏனேயாவென்ற
ஒரு திமிர்வாதக்காரனைச்சொஸ்தமாக்கி,
(ஙகூ) மரித்துப்போன தபீத்தாள் என்பவ
ளை உயிர்ப்பித்தது.]

சவுல் என்பவன் * பின்னுங் கர்த்தரு
டைய சீஷரைப்பயப்படுத்திக்கொலை
செய்யும்படி சீறிப்பிரதான ஆசாரியனிடத்
திற்குப்போய், * அ: ங.

உ. தமஸ்கு ஊரிலே புருஷரையாகிலும்,
ஸ்திரீகளையாகிலும் இந்த மார்க்கத்தா
ரென்றுகண்டால், அவர்களைக்கட்டி, எருச
லேமுக்குக்கொண்டுவரும்படிக்கு, அவ்வூரி
லுள்ள செப ஆலயத்தலைவருக்கு நிருபங்க
ளைக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்
கொண்டு போனான்.

ங. அவன் பிரயாணமாய்ப்போய்த் * தம
ஸ்கு ஊருக்குச்சமீபமாகையில், சடுதியாய்
வானத்திலிருந்து பிரகாசந்தோன்றி அவ
னைச்சூழ்ந்துகொண்டது. * உஉ: கூ—யகூ.
உகா: யஉ—யச.

ச. உடனே அவன் தரையிலே விழுந்து,
சவுலே! சவுலே! என்னத்திற்கு நீ என்னைத்
துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே
சொல்லுகிற சத்தத்தைக்கேட்டு, ஆண்ட
வரே, நீர் யாரென்றான்.

ரு. கர்த்தரானவர் சொன்னது, நீ துன்
பப்படுத்துகிற இயேசுவே நான் முள்ளில்
உதைக்கிறது உனக்குக்கடினமாமென்றார்.

கா. அவன் நடுங்கிப்பயந்து ஆண்டவரே!
நான் என்னசெய்யவேண்டுமென்றிருக்கிறீர்
என்றான். அதற்குக்கர்த்தர் சொன்னது, நீ
எழுந்து ஊரிற் பிரவேசிப்பாயாக. * நீ
செய்யவேண்டுவது அங்கே உனக்குச்
சொல்லப்படும் என்றார். * ய: கா.

எ. அவனுடனே கூடப்பிரயாணப்பட்டுப்
போனபேர்கள் சத்தத்தைக்கேட்டும், ஒரு
வரையுங் காணுமற் பிரமிப்போடே நின்றார்
கள்.

அ. பின்பு சவுல் தரையிலிருந்து எழுந்து
தன் கண்களைத்திறக்கிறபொழுது, ஒருவனை
யுங் காணுதவனாய் இருந்தான். ஆதலால்,
அவர்கள் அவனைக்கைலாகுகொடுத்து, தம
ஸ்கு ஊருக்கு அழைத்துக்கொண்டுபோ
னார்கள்.

கூ. அங்கே அவன் மூன்றுநாள் பார்வை
யில்லாமலும், புசியாமலும், பானம்பண்ணு
மலும் இருந்தான்.

ய. அன்றியுந் தமஸ்கு ஊரில் அனனியா
என்று பேருள்ள ஒரு சீஷனிருந்தான். அ
வனுக்குக்கர்த்தர் தரிசனையாகி, அனனியா
வே என்றார். அவன் ஆண்டவரே! இதோ,
அடியேன் என்றான்.

யக. கர்த்தர் அவனுடனே சொன்னது,
செம்மையென்னப்பட்ட தெருவிலே, யூதா
வின் வீட்டில் தருசுவூரானாகிய சவுல் என்ப
வன் இப்பொழுதே செபம்பண்ணுகிறான்.

யஉ. அல்லாமலும் பார்வை அடையும்ப
டிக்கு அவன் தரிசனத்திலே அனனியா
என்று பேருள்ள மனிதன் உள்ளே வரவும்,
கையைத்தன்மேல் வைக்கவுங் கண்டான்.
ஆதலால், நீ எழுந்து அங்கேபோய், அவ
னைத்தேடுவாயாகவென்றார்.

யங. அதற்கு அனனியா சொன்னது, ஆண்
டவரே! அந்த மனிதனைக்குறித்து நான் அ
நேகராலே கேள்விப்பட்டிருக்கிறபடி, அவ
ன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்த
வான்களுக்கு எத்தனை பொல்லாங்குகளைச்
செய்தான்.

யச. இங்கேயும், உம்முடைய நாமத்தைத்
தொழுதுகொள்ளுகிற யாவரையுங் கட்டும்
படிக்கு, அவன் பிரதான ஆசாரியரால் அ
திகாரம் பெற்றிருக்கிறானே யென்றான்.

௰௫. அதற்குக்கர்த்தர் சொன்னது, அவன் என்னுடைய நாமத்தினிமித்தம், இவ்வளவு பாடுபடவேண்டுமென்று அவனுக்குக்காண்பிப்பேன்.

௰௬. ஆதலாற் புறத்தேசத்தார்களுக்கும், இராசாக்களுக்கும், இஸ்ரவேல் சனங்களுக்கும் * என்னுடைய நாமத்தை யறிவிக்கும்படிக்கு, அவன் எனக்கு விசேஷமாகத்தெரிந்துகொள்ளப்பட்ட ஊழியக்காரனாய் இருக்கிறான், ஆகையால், நீ போவென்றார்

* ௨ கொரி. ௰௧: ௨௩.

௰௭. அப்பொழுது அனனியா போய் வீட்டிற்குட்பிரவேசித்து, கைகளை அவன்மேல் வைத்துச்சகோதரனாகிய சவுலே! நீ வந்த வழியிலே உனக்குத்தரிசனையான இயேசு என்னும் கர்த்தாவானவர் நீ பார்வையடைந்து பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கு என்னை அனுப்பினார் என்றான்.

௰௮. உடனே அவனுடைய கண்களிலிருந்து மீன் செதிள்களைப்போல விழுந்துபோக, அவன் பார்வையடைந்து எழுந்திருந்து ஞானஸ்நானம்பெற்று,

௰௯. பின்பு போசனம்பண்ணித்திடப்பட்டான். பின்பு சவுல் என்பவன் தமஸ்குவூரிலுள்ள சீஷருடனே சிலநாள் இருந்தான்.

௨௰. அல்லாமலும், இயேசுவானவரே பராபரனுடைய குமாரரென்று, அவன் உடனே செப ஆலயங்களிற் பிரசங்கித்தான்.

௨௧. (அதைக்) கேட்ட யாவரும், பிரமிப்படைந்து, எருசலேமில் இந்த நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவர்களைப் பாழாக்கி, இங்கேயும் அப்படிப்பட்டவர்களைக்கட்டி, பிரதான ஆசாரியரிடத்திற்குக்கொண்டு போகும்படி வந்தவன் இவனல்லவா என்றார்கள்?

௨௨. சவுல் என்பவன் அதிகமதிகமாகத்திடன்கொண்டு, இவரே கிறிஸ்துவென்று திருஷ்டாந்தப்படுத்தி, தமஸ்குவூரிற் குடியிருக்கிற யூதர்களைக்கலங்கப்பண்ணினான்.

௨௩. அநேகநாள் சென்றபின்பு யூதர்கள் அவனைக்கொலைசெய்ய ஆலோசனை பண்ணினார்கள். அவர்களுடைய யோசனை சவுலுக்குத்தெரியவந்தது.

௨௪. அவனைக்கொலை செய்யும்படிக்கு அவர்கள் இரவும், பகலுங் கோட்டைவாசல்களைக்காத்துக்கொண்டிருந்தார்கள்.

௨௫. அப்பொழுது சீஷர் இராத்திரியிலே அவனை எடுத்துக்கொண்டு, ஒரு கூடையில் வைத்து மதிலின்வழியாய் இறக்கிவிட்டார்கள்.

௨௬. பின்பு சவுல் எருசலேமுக்குப்போய்ச் சீஷரைச் சேர்ந்துகொள்ளப்பார்த்தான், அவர்கள் எல்லாரும் அவனைச்சீஷனென்று நம்பாமல் அவனுக்குப்பயப்பட்டார்கள்.

௨௭. அப்பொழுது பருனபா என்பவன் அவனைச்சேர்த்துக்கொண்டு அப்போஸ்தலரிடத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் வழியிலே அவன் கர்த்தரைக்கண்ட விதத்தையும், அவர் அவனுடனே பேசினதையுந் தமஸ்குவூரில் அவன் இயேசுவின் நாமத்திலே தயிரியமாய்ப்பிரசங்கம்பண்ணினதையும், அவர்களுக்கு விவரித்துச்சொன்னான்.

௨௮. அதின் பின்பு அவன் எருசலேமிலே அவர்களுடனே கூடப்போகிறவனுமாய், வருகிறவனுமாய் இருந்து,

௨௯. கர்த்தராகிய இயேசுவின் நாமத்தின் மேலே தயிரியமாய்ப்பிரசங்கம்பண்ணிக் கிரேக்கருடனேயும் பேசிக்கொண்டு தருக்கம்பண்ணினான். அவர்கள் அவனைக்கொலைசெய்யத்தேடினார்கள்.

௩௰. சகோதரர் அதை அறிந்து அவனைச் செசாரியா பட்டினத்திற்கு அழைத்துப் போய், பின்பு தருசுவூருக்கு அனுப்பினார்கள்.

௩௧. அப்படியிருக்குங் காலத்தில் யூதேயா, கலிலேயா, சமாரியா நாடுகள் எங்குஞ் சபைகள் சமாதானம் பெற்றிருந்து, கர்த்தருக்குப்பயப்படுகிற பயத்திலேயும், பரிசுத்த ஆவியின் போதிப்பிலேயும் வளர்க்கப்பட்டு நடந்து பெருகின.

௩௨. பேதுருவென்பவன் அவர்களெல்லாருக்குள்ளுஞ்சென்று வருகையில், லித்தா ஊரிலே குடியிருக்கிற பரிசுத்தவான்களிடத்திற்கும்போனான்.

௩௩. அங்கே யெட்டுவருஷமாகக்கட்டிலின்மேற்கிடந்த திமிர்வாதமுள்ள ஐநேயா வென்பவனைக்கண்டான். அவனுடனே பேதுரு சொன்னது,

௩௪. ஐநேயாவே! இயேசுக்கிறிஸ்து உன்னைக்குணமாக்குகிறார். நீ யெழுந்து, உன் படுக்கையை நீதானே போட்டுக்கொள் என்றான். உடனே அவன் எழுந்திருந்தான்.

௩௫. லித்தா ஊரிலும், சாரோன் திசையிலுங் குடியிருந்தவர்களெல்லாரும் அவனைக் கண்டு, கர்த்தரிடத்திற்கு மனந்திரும்பினார்கள்.

௩௬. அன்றியும், யோப்பா பட்டினத்திலே தொற்காளென்று அருத்தங் கொள்ளுகிற தபீத்தாள் என்னப்பட்ட ஒரு சீஷியிருந்தாள். அவள் நற்கிரியைகளையும், தருமங்களையும் நிறைவாய்ச்செய்துகொண்டு வந்தவள்.

௩௭. அக்காலத்திலே அவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள். அவளை அவர்கள் குளிப்பாட்டி மேல்வீட்டில் கிடத்திவைத்தார்கள்.

௩௮. யோப்பா பட்டினம், லித்தா ஊருக்குச்சமீபமானபடியினாலே, பேதுரு அவ்விடத்திலிருக்கிறானென்று சீஷர்கள் கேள்விப்பட்டு, அவன் தாமதம் இல்லாமல் தங்கள் இடத்திற்கு வரவேண்டுமென்று வேண்டிக்

கொள்ளும்படிக்கு இரண்டு மனிதரை அவ்
விடத்திற்கு அனுப்பினார்கள்.
௩௯. அந்தப்படி பேதுரு எழுந்து அவர்க
ளுடனே கூடப்போனான். அவன்போய்ச்
சேர்ந்தபொழுது, அவர்கள் அவனை மேல்
வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோனார்கள்.
அப்பொழுது, சகல கைம்பெண்களும் அ
வன் அருகே சேர்ந்து நின்று அழுதுகொண்
டு, தொற்காள் தங்களுடனேகூட இருக்கை
யிற் செய்த அங்கிகளையும், வஸ்திரங்களை
யும் காண்பித்தார்கள்.
௪௰. பேதுரு எல்லாரையும் வெளியேபோ
கப்பண்ணி, பின்பு முழங்காற்படியிட்டுச்
செபம்பண்ணி, பின்பு, சவத்தின் புறமாய்த்
திரும்பி, தபீத்தாளே! எழுந்திருவென்றான்.
அப்பொழுது, அவள் தன் கண்களைத்திறந்
து பேதுருவைப்பார்த்து உளுக்கார்ந்தாள்.
௪௧. அவன் அவளுக்குக்கைகொடுத்து, அ
வளை யெழுந்திருக்கப்பண்ணி, பரிசுத்த
வான்களையும், கைம்பெண்களையும் அழைத்
து, அவளை உயிருள்ளவளாக அவர்களுக்கு
முன் நிறுத்தினான்.
௪௨. அது யோப்பா பட்டினமெங்கும் அ
றியப்பட்டபொழுது, அநேகம்பேர் கர்த்
தாவின் இடத்தில் விசுவாசமுள்ளவர்களா
னார்கள்.
௪௩. அவன் யோப்பா பட்டினத்திலே
தோற்பதனிடுகிறவனாகிய சீமோன் என்ப
வனிடத்திலே அநேகநாள் தங்கினான்.

௰ அதிகாரம்.

[(௧) தேவபத்தனாகிய கொருநேலியு வென்
பவன், (௫) ஒரு தேவதூதனுடைய ஏவலி
னால் பேதுருவை அழைப்பித்தது. (௰௧)
பேதுரு ஒரு தரிசனையில், (௰௫-௨௰) அந்
நியர்களை அசட்டைசெய்யலாகாதென்று
கற்பிக்கப்பட்டது. (௩௪) அவன் கொருநே
லியுவுக்கும், அவனை அடுத்தவர்களுக்குங்
கிறிஸ்துவைப்பிரசங்கித்தபோது, (௪௪)
பரிசுத்த ஆவி அவர்கள்மேல் இறங்க, (௪௮)
அவர்கள் ஞானஸ்நானம் பெற்றது.]

அன்றியும், சேசாரியா பட்டினத்தி
லே இத்தாலியா தண்டென்னப்
பட்ட தண்டிலே நூறு போர்ச்சேவகருக்
கு, தலைவனாகிய கொருநேலியுவென்பவனி
ருந்தான்.
௨. அவன் தன் குடும்பத்தார் யாவரோ
டுங்கூடத்தேவபத்தியுள்ளவனுமாய், பரா
பரனுக்குப்பயப்படுகிறவனுமாயிருந்து, ச
னங்களுக்கு மிகுந்த தருமங்களைச்செய்து,
எப்பொழுதும் பராபரனை நோக்கிச்செபம்
பண்ணிக்கொண்டுவந்தான்.
௩. பகலிலே யேறக்குறைய ஒன்பதாம்
மணிநேரத்தில் அவன் தரிசனையடைந்து,
தன்னிடத்திற் பராபரனுடைய தூதன்
பிரவேசிக்கவும், கொருநேலியுவேயென்று
சொல்லவும் பிரத்தியட்சமாகக்கண்டு,
௪. அவனை யுற்றுப்பார்த்துப்பயமுள்ளவ
னாகி ஆண்டவரே! என்ன என்றான். அப்
பொழுது அவன் சொன்னதாவது; உன்
செபங்களையும், உன் தருமங்களையும் பரா
பரன் திருவுளத்திலே யெண்ணியிருக்கிறார்.
௫. ஆகலால், யோப்பா பட்டினத்திலே
கடலின் அருகான வீட்டிலே வாசம்பண்
ணி, * தோற்பதனிடுகிறவனாயிருக்கிற சீ
மோன் என்பவனிடத்திலே பேதுரு என்று
மறுபேர்கொண்ட சீமோன் தங்கியிருக்கி
றான். * ௯: ௪௩.
௬. அவனை அழைத்து வரும்படிக்கு நீ ம
னிதரை அவ்விடத்திற்கு அனுப்புவாயாக.
நீ செய்யவேண்டுவதை அவன் உனக்குச்
சொல்லுவானென்றான்.
௭. கொருநேலியுவுடனே பேசின தேவதூ
தன் போனபின்பு, அவன் தன்வீட்டு மனித
ரில் இரண்டுபேரையும், தன்னிடத்திற்காத்
திருக்கிற போர்ச்சேவகரில் தேவபத்தியுள்ள
ஒருவனையும் அழைத்து,
௮. எல்லாவற்றையும், அவர்களுக்கு விவ
ரித்துச்சொல்லி, அவர்களை யோப்பா பட்
டினத்திற்கு அனுப்பினான்.
௯. மறுநாளிலே அவர்கள் பிரயாணமாய்
அந்தப்பட்டினத்திற்குச் சமீபமாய்ச் சேரு
கையில், பேதுரு ஆறுமணிநேரத்திலே செ
பம்பண்ணும்படிக்கு வீட்டின்மேல் ஏறி
னான்.
௰. அப்பொழுது, அவன் மிகுந்த பசி
யடைந்து சாப்பிட மனதாயிருந்தான். அ
தற்காக அவர்கள் எத்தனம் பண்ணுகையில்,
௰௧. அவன் ஞானதிஷ்டியடைந்து, (அதி
லே) வானந் திறந்திருக்கவும், நான்கு தொங்
கல் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்
போல ஒருகூடு தன்னிடத்திற்கு இறங்கித்
தரையில் விடப்பட்டிருக்கவும்,
௰௨. அதிலே பூமியிலுள்ள சகலவிதமான
நாலுகால் சீவன்களும், காட்டு மிருகங்க
ளும், ஊர்வனவைகளும், ஆகாயத்துப்பற
வைகளும் இருக்கவுங் கண்டான்.
௰௩. அல்லாமலும், பேதுருவே! எழுந்தி
ரு. அடித்துப்புசிப்பாயாகவென்று ஒரு சத்
தம் அவனுக்கு உண்டாயிற்று.
௰௪. அதற்குப்பேதுரு ஆண்டவரே! அப்
படியல்ல. ஏலாததாயும், அசுத்தமாயும் இ
ருக்கிறதை நான் ஒருக்காலும் புசிக்கவில்லை
யே யென்றான்.
௰௫. அப்பொழுது, பராபரன் சுத்தமாக்
கினவைகளை நீ அசுத்தமென்றெண்ணாதிருப்
பாயாகவென்று இரண்டாந்தரஞ் சத்தம்
அவனுக்கு உண்டாயிற்று.
௰௬. மூன்றுந்தரமும் அப்படியே உண்டா

பிற்று. பின்பு, அந்தக்கூடு திரும்பி வானத்
திற்கெடுத்துக்கொள்ளப்பட்டது.
௰௭. அப்பொழுது பேதுரு, தான் கண்ட
தரிசனையின் கருத்தைக்குறித்து, தனக்குள்
ளே சந்தேகப்படுகையில், கொருநேலியுவி
னல் அனுப்பப்பட்ட மனிதர் சீமோனுடை
ய வீட்டை விசாரித்துக்கொண்டு, வாசற்
படியிலே நின்று,
௰௮. பேதுருவென்று பேர்கொண்ட சீ
மோன் இங்கே தங்கியிருக்கிறனுவென்று
சத்தமிட்டுக்கேட்டார்கள்.
௰௯. அப்பொழுது, பேதுரு அந்தத்தரிச
னையைக்குறித்துச்சிந்தனைபண்ணிக்கொண்
டிருக்கையில்,
௨௰ மூன்று மனிதர் உன்னைத்தேடுகிருர்
கள். அவர்களை நான் அனுப்பினேன். ஆ
தலால், நீ யெழுந்து தாழ இறங்கி, ஒன்
றுக்குஞ் சந்தேகப்படாமல், அவர்களுட
னே கூடப்போவென்று, ஆவியானவர் அவ
னுக்குச்சொன்னர்.
௨௧. அந்தப்படி பேதுரு, கொருநேலியு
வினலே தன்னிடத்திற்கு அனுப்பப்பட்ட
மனிதனிடத்திற்கிறங்கிப்போய், நீங்கள் தே
டுகிறவன் நான்தான். நீங்கள் வந்திருக்கிற
காரணம் என்னவென்றுன்.
௨௨. அவர்கள் சொன்னதாவது; நீதிமா
னுமாய், பராபரனுக்குப்பயப்படுகிறவனு
மாய், எல்லா யூதர்களுக்குள்ளும் நல்லவ
னென்று சாட்சிபெற்றிருக்கிறவனுமாயிருக்
கிற கொருநேலியென்னுஞ் சேனைத்தலைவன்
உம்மைத்தன் வீட்டிற்கழைப்பித்து, உம்
மால் வார்த்தைகளைக்கேட்கும்படிக்குப் பரி
சுத்த தூதனலே தேவெத்தினமாய்க்கட்ட
ளை பெற்றுக்கொண்டானென்றுர்கள்.
௨௩. அப்பொழுது பேதுரு, அவர்களை
உள்ளே அழைத்து, உபசாரம்பண்ணினன்.
மேலும், மறுநாளிலே அவன் அவர்களுட
னேகூடப்புறப்பட்டான். யோப்பா பட்டி
னத்திலிருந்த சகோதரரில் சிலரும் அவனு
டனேகூடப்போனுர்கள்.
௨௪. மறுநாளிலே செசரியா பட்டினத்
திற்சேர்ந்தார்கள். கொருநேலி தன் உற
வின் முறையாரையும், தனக்கு விசேஷமா
ன சிநேகிதரையும் வரவழைத்துக்கொண்டு,
பேதுரு முதலானவர்கள் வரக்காத்திருந்
தான்.
௨௫. பேதுரு உட்பிரவேசிக்கையில், கொ
ருநேலி அவனுக்கெதிர்கொண்டுபோய், அ
வனுடைய பாதத்தின் அருகேவிழுந்து,
தொழுதுகொண்டான்.
௨௬. பேதுரு அவனைத்தூக்கியெடுத்து,
எழுந்திரும். நானும் மனிதன்தானே யென்
று சொல்லி,
௨௭. அவனுடனே சம்பாஷணைபண்ணி,
பின்பு உள்ளேபோய், அநேகர் கூடிவந்தி
ருக்கிறதைக்கண்டு, அவர்களுடனே சொன்
னதாவது;
௨௮. நீங்கள் அறிந்திருக்கிறபடி யூதனுன
வன் அந்நிய தேசத்தாரோடே கலந்து,
அவனிடத்திற்குப்போகத்தகாததாய் இருக்
கின்றது. அப்படியிருந்தும் எந்த மனித
னையும் ஏலாதவனென்றும், அசுத்தனென்
றும் நான் சொல்லாதபடிக்கு, பராபரன்
எனக்குக்காண்பித்தார்.
௨௯. ஆதலால், நீங்கள் என்னை அழைப்
பித்தபொழுது, நான் எதிர்ப்பேசாமல் வந்
தேன். இப்படியிருக்க, எந்தக்காரியத்திற்
காக நீங்கள் என்னை அழைப்பித்தீர்களென்
று கேட்கிறேனென்றுன்.
௩௰. அதற்குக்கொருநேலி சொன்னதாவ
து; நாலாம்நாள் இந்நேரத்திலே நான்
உபவாசித்து, ஒன்பதாம்மணி நேரத்திலே
என் வீட்டிற் செபம்பண்ணிக்கொண்டிருந்
தேன். அப்பொழுது, பிரகாசமுள்ள உ
டையைத்தரித்திருந்த ஒருவன் எனக்கு
முன்பாக நின்று,
௩௧. கொருநேலியே! * பராபரன் உன்
செபத்தைக்கேட்டருளி, உன் தருமங்களை
நினைத்திருக்கிறுர். * லூக். க: ௰௩.
௩௨. ஆதலால், யோப்பா பட்டினத்திலே
கடலின் அருகே தோற்பதனிடுகிறவனுகிய
சீமோனுடைய வீட்டிலே தங்கி இருக்கிற
பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோ
னை வரவழைக்கும்படிக்கு, அவ்விடத்திற்கு
மனிதரை யனுப்பு. அவன் வந்து, உனக்
குச்சொல்லுவானென்றுர்.
௩௩. அந்தப்படி நான் உடனே உம்மிடத்
தில் மனிதரை யனுப்பினேன். நீர் வந்தது
நலமாய் இருக்கின்றது. இப்பொழுது பரா
பரனலே உமக்குக்கட்டளை யிடப்பட்ட
யாவையுங் கேட்கும்படிக்கு நாங்கள் எல்
லாரும் இங்கே பராபரனுக்கு முன்பாக
இருக்கிறுமென்றுன்.
௩௪. அப்பொழுது பேதுரு சொன்னதா
வது;
௩௫. * பராபரன் பட்சபாதமில்லாமல்,
† எவ்வகையான மனிதர்களிலுந் தமக்குப்
பயந்து, நீதியை நடப்பிக்கிறவனெவனே
அவனை யங்கிகரித்துக்கொள்ளுகிறுரென்று
மெய்யாய் உணர்ந்துகொள்ளுகிறேன்.—
* உரோ. உ: ௰௧. † ஏசா. ருகூ: சா, எ.
அறி. எ: கூ.
௩௬. * எல்லாருக்குங் கர்த்தராய் இருக்கி
ற இயேசுகிறிஸ்துவைக்கொண்டு, சமா
தானத்தைச்சுவிசேஷமாய் அறிவித்து, இஸ
ரவேலருக்கனுப்பின சங்கதியைக்குறித்துக்
(கேட்டீர்களாக.) * மத். உஅ: ௰அ, ௰கூ.
௩௭. யோவான் ஞானஸ்நானத்தைப்பிர
சங்கம் பண்ணின பின்பு, கலிலேயா நாடு

முதற்கொண்டு, யூதேயா நாட்டிலெங்கும் நடந்தகாரியத்தை யறிந்திருக்கிறீர்கள்.

௩௮. அதாவது, நாசரேத்தூரிலே தோன்றிய இயேசுவானவருக்கு, பராபரன் * பரிசுத்த ஆவியையும், வல்லமையையும் அபிஷேகம் பண்ணினார். (அந்தப்படி) பராபரன் அவருடனேகூட இருந்தபடியால், அவர் நன்மைசெய்கிறவராகவும், பசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையுங் குணமாக்குகிறவராகவுஞ் சுற்றித்திரிந்தார்.— * சங்கீ. ௪௫: ௭.

௩௯. * யூதருடைய நாட்டிலும், எருசலேமிலும் அவர் செய்தவைகளெல்லாவற்றிற்கும் நாங்கள் சாட்சிகளாய் இருக்கிறோம். அவரை ஒரு மரத்திலே தூக்கிக்கொலை செய்தார்கள். * மத். ௨௩: ௨௫.

௪௰. மூன்றும் நாளிலே பராபரன் அவரையெழுப்பி, அவர் மரித்தோரில் இருந்து எழுந்த பின்பு,

௪௧. எல்லாச்சனங்களுக்குமல்ல, அவரோடே போசனபானம் பண்ணி, பராபரனால் முன் நியமிக்கப்பட்டிருந்த சாட்சிகளாகிய எங்களுக்கே அவர் பிரசன்னமாகும்படி செய்தார்.

௪௨. மேலும், அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும், மரித்தோருக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும்படிக்கு, பராபரனாலே யேற்படுத்தப்பட்டவரென்று சனங்களுக்குச்சாட்சியாய்ப் * பிரசங்கம் பண்ணும்படி எங்களுக்குக்கட்டளையிட்டார். * மத். ௨௮: ௨௰. ௨ தீமோ. ௪: ௨.

௪௩. அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்வானென்று * தீர்க்கதரிசிகளெல்லாரும், அவரைக்குறித்துச்சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்.— * ௩: ௪.

௪௪. இந்த வார்த்தைகளைப்பேதுரு பேசுகையில் வசனத்தைக்கேட்ட யாவர்மேலும் பரிசுத்த ஆவி இறங்கினார்.

௪௫. அவர்கள் (அந்நிய) பாஷைகளைப் பேசி, பராபரனைப்புகழ்ந்தார்கள்.

௪௬. அதைப்பேதுருவுடனே கூடவந்திருந்த விருத்த சேதனமுடைய விசுவாசிகள் எல்லாருங் கேட்டு, பரிசுத்த ஆவியென்னும் ஈவு அஞ்ஞானிகளுக்குங் கொடுக்கப்பட்டபடியினாலே பிரமித்தார்கள்.

௪௭. மேலும் பேதுரு சொன்னது, நம்மைப்போலப்பரிசுத்த ஆவியைப்பெற்ற இவர்கள் தண்ணீரினால் ஞானஸ்நானம் பெறுதபடிக்கு, யாவனாகிலுந் தடைபண்ணலாமாவென்று சொல்லி, அவர்களுக்குக் கர்த்தருடைய நாமத்தினாலே ஞானஸ்நானங் கொடுக்கும்படி கட்டளையிட்டான்.

அப்பொழுது சில நாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள்.

௰௧ அதிகாரம்.

[(௧) பேதுரு அந்நியர்களிடத்திற் போனதின் நிமித்தங் குற்றஞ் சாற்றப்பட, (௫) அவன் அதற்குச்சொன்ன உத்தரவு. (௰௮) அங்கீகரிக்கப்பட்டது. (௰௯) சுவிசேஷம் பெனிக்கே, சீப்பிறு, அந்தியோகு முதலிய இடங்களிற் பிரசங்கிக்கப்பட்டபோது சபைகளைத்திடப்படுத்தும்படி பருனபா அனுப்பப்பட்டது. (௨௬) அந்தியோகியிலே சீஷர்கள் முதல்முதல் கிறிஸ்தவர்களென்று அழைக்கப்பட்டது. (௨௭) யூதேயாவிலுள்ள ஏழைச்சகோதரர்களுக்குப்பஞ்சகாலத்தில் ஒத்தாசை செய்தது.]

புறத்தேசத்தாரும் பராபரனுடைய வசனத்தை யேற்றுக்கொண்டார்கள் என்று யூதாவிலிருக்கிற அப்போஸ்தலரும், மற்றச்சகோதரருங் கேள்விப்பட்டார்கள்.

௨. பின்பு பேதுரு எருசலேமுக்குத்திரும்பிப்போனபொழுது விருத்தசேதனமுடையவர்கள் அவனை நோக்கி,

௩. நீர் விருத்தசேதனம் இல்லாதவர்கள் இடத்திற்போய், அவர்களோடே புசித்தீர் என்று விதனமாய்ச்சொன்னார்கள்.

௪. அதற்குப்பேதுரு வரிசையாய் அவர்களுடனே விவரமாய்ச்சொன்னதாவது;

௫. * நான் யோப்பாபட்டினத்திலே செபம் பண்ணிக்கொண்டிருந்தபொழுது, ஞான திருஷ்டியினாலே, நாலு தொங்கல் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருகூடு வானத்தில் இருந்து என்னிடத்தில் இறங்கிவரக்கண்டேன். * ௰: ௯.

௬. நான் உற்றுப்பார்க்கிறபொழுது, அதிலே பூமியிலுள்ள நாலுகாலையுடைய சீவன்களையும், காட்டு மிருகங்களையும், ஊர்வனவைகளையும், ஆகாயத்துப்பறவைகளையுங் கண்டேன்.

௭. அல்லாமலும், பேதுருவே! எழுந்திரு. அடித்துப்புசிப்பாயாகவென்று என்னுடனே சொல்லுகிற சத்தத்தைக்கேட்டேன்.

௮. அதற்கு நான் ஆண்டவரே! அப்படியல்ல. ஏலாததும், அசுத்தமுமாய் இருக்கிற தொன்றும் ஒருக்காலும் என் வாய்க்குள்ளே போகவில்லையேயென்றேன்.

௯. அப்பொழுது, பராபரன் சுத்தமாக்கினவைகளை நீ அசுத்தமென்றெண்ணாதிருப்பாயாகவென்று இரண்டாந்தரம் வானத்தில் இருந்து சத்தம் எனக்குண்டாயிற்று.

௰. இப்படி மூன்றுந்தரமும் உண்டான பின்பு எல்லாம் மறுபடியும் வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

௰௧. உடனே சேசாரியா பட்டினத்தில் இருந்து மூன்று மனிதர் என்னிடத்தில்

அனுப்பப்பட்டு, நான் இருந்த வீட்டிற்கு முன்னே வந்து நின்றார்கள்.

௰௨. அப்பொழுது நான் ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல், அவர்களுடனே கூடப் போகும்படிக்கு ஆவியானவர் என்னுடனே சொன்னார். பின்பு சகோதரர்களாகிய இவ் வாறுபேரும், நானுங்கூடி அந்த மனிதனுடைய வீட்டிற்குப்போனோம்.

௰௩. அப்பொழுது அவன் தன் வீட்டிலே தேவதூதன் ஒருவன் நிற்கக்கண்டதையும், நீ யோப்பாபட்டினத்திலிருக்கிற பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை யழைக்கும்படிக்கு மனிதரை யவ்விடத்திற்கு அனுப்பு.

௰௪. நீயும், உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப்படுவதற்கான வார்த்தைகளை அவன் உன்னுடனே சொல்லுவானென்று அந்தத் தூதன் தனக்குச்சொன்னதையும் எங்களுக்கு அறிவித்தான்.

௰௫. பின்பு நான் பேசத்தொடங்கினபொழுது, பரிசுத்த ஆவி ஆதியிலே நம்மிடத்தில் இறங்கினதுபோல, அவர்களிடத்திலும் இறங்கினார்.

௰௬. அப்பொழுது யோவான் சலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான். நீங்கள் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்களென்று * கர்த்தர்சொன்ன வார்த்தையை நினைத்துக்கொண்டேன். * ௧: ௫.

௰௭. ஆனபடியினாலே கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசித்துக்கொண்டிருக்கிற நமக்கு, பராபரன் அநுக்கிரகித்ததுபோல அந்த ஈவை அவர்களுக்கும் அநுக்கிரகித்திருக்க, பராபரனுக்குத் தடைபண்ணுகிறதற்கு நான் பலவானாய் இருந்தேனோவென்றான்.

௰௮ இவைகளை யவர்கள் கேட்டபொழுது, விரோதமாய்ப்பேசாமற் புறத்தேசத்தாருஞ் சீவனை யடையும்படி மனந்திரும்புதலை, பராபரன் அவர்களுக்கு அநுக்கிரகஞ் செய்தாரென்று பராபரனைப்புகழ்ந்தார்கள்.

௰௯. அன்றியும், ஸ்தேவானின் நிமித்தமாக * உண்டான உபத்திரவத்தினாற் சிதறடிக்கப்பட்டவர்கள் சுவிசேஷ வசனத்தை யூதர்களுக்கேயன்றி, மற்றொருவருக்கும் அறிவியாமற் பெனிக்கேநாடு, சீப்புருதீவு, அந்தியோகியா பட்டினமட்டுந் திரிந்தார்கள். * ௮: ௧—௪.

௨௰. அவர்களிற் சீப்புருதீவாரும், சிரேனே பட்டினத்தாரும் அந்தியோகியா பட்டினத்தில் வந்தபொழுது, கிரேக்கருடனேயும் பேசிக்கொண்டு, கர்த்தராகிய இயேசுவைச்சுவிசேஷமாய் அறிவித்தார்கள்.

௨௧. அவர்களுடனேகூடக் கர்த்தருடைய கை இருந்ததினாலே திரளான சனங்கள் விசுவாசித்து, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்.

௨௨. அவர்களைக்குறித்து எருசலேமிலுள்ள (சபையார்) கேள்விப்பட்டபொழுது, அந்தியோகியா பட்டினம் வரைக்கும் போகும்படிக்குப்பருனபாவை யனுப்பினார்கள்.

௨௩. அவன் (அங்கே) போய்ப்பராபரனுடைய கிருபையைக்கண்டபொழுது சந்தோஷப்பட்டதுமல்லாமல்,

௨௪. அவன் நல்லவனுமாய், பரிசுத்த ஆவியினாலும், விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாய் இருந்தபடியினாலே எல்லாரும் மனூக்கமாய், உறுதியாய்க்கர்த்தரிடத்தில் * நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப்புத்தி சொன்னான். அப்பொழுது அநேகம்பேர் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்.— * ௰௩: ௪௩.

௨௫ பின்பு பருனபாவென்பவன் சவுலைத் தேடும்படிக்கு, தருசூருக்குப்புறப்பட்டுப் போய் அவனைக்கண்டு, அந்தியோகியாபட்டினத்திற்கு அழைத்துக்கொண்டுபோனான்.

௨௬. அப்பொழுது அவர்கள் ஒருவருஷகாலமாய், சபையிலே கூடியிருந்து அநேக சனங்களுக்கு உபதேசம் பண்ணினார்கள். சீஷர்கள் முதலாவது அந்தியோகியாபட்டினத்திலே கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.

௨௭. அந்நாள்களில் எருசலேமிலேயிருந்து சில தீர்க்கதரிசிகள் அந்தியோகியா பட்டினத்திற்குப்போனார்கள்.

௨௮. அவர்களில் ஒருவனாகிய * ஆகாப்பென்பவன் எழுந்து, பூச்சக்கரமெங்கும் மிகுந்த பஞ்சம் வருமென்று ஆவியினாலே யறிவித்தான். அந்தப்படியே அது கிலவுதி இராயனுடைய காலத்திலே சம்பவித்தது. * ௨௧: ௰.

௨௯. அப்பொழுது * சீஷரில் அவரவர் தங்கள் தங்கள் திராணியின்படியே யூதேயாநாட்டிற் குடியிருக்கிற சகோதரருக்குத் தருமசகாயம்பண்ணி, அனுப்பவேண்டும் என்று தீர்மானம் பண்ணினார்கள். * ௨ரோ. ௰௫: ௨௫—௨௭.

௩௰. அந்தப்படி யவர்கள் சிலபொருள்களைச்சேர்த்துக்கொண்டு பருனபா, சவுல் என்பவர்கள்கையிலே கொடுத்து மூப்பரிடத்திற்கனுப்பினார்கள்.

௰௨ அதிகாரம்.

[(௧) ஏரோதே இராசா கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தி, யாக்கோபைக்கொலைசெய்து பேதுருவைக்காவலில் அடைத்தபோது, அவன் சபையின் செபத்தின்படி ஒருதெய்வதூதனால் விடுதலையாக்கப்பட்டது, (௨௰) ஏரோதே பெருமைபாராட்டி, தேவனுக்கடுத்த கனத்தை, தனக்குச்செலுத்தும்படி

செய்ததினிமித்தம் ஒரு தெய்வதூதனால் அடிக்கப்பட்டு திர்ப்பந்த மரணம் அடைந்தது. (௨௪) அவன் மரணம் அடைந்த பின்பு, பராபரனுடைய வசனம் பிரபலமானது.]

அக்காலத்திலே ஏரோதே என்னும் இராசா சபையிற் சிலரைத்துன்பப்படுத்தும்படிக்குத் தொடங்கினான்.

௨. யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபை அவன் கத்தியினாலே கொலைசெய்தான்.

௩. மேலும், அது யூதருக்குப்பிரியமாய் இருக்கிறதென்று அவன் கண்டு, பேதுருவையும் பிடிக்கத்தொடர்ந்தான். அந்நாள்கள் புளிப்பில்லாத அப்பப்பண்டிகைநாள்களாய் இருந்தன.

௪. அவனைப் பிடித்த பின்பு, பண்டிகை கழித்து அவனைச் சனங்களுக்கு முன்பாகக் கொண்டுபோகவேண்டும் என்று ஏரோதே யெண்ணி, அவனைச் சிறைச்சாலையிலே வைத்து, ஒருவகுப்பிற்கு நான்குபோர்ச்சேவகராக நான்கு வகுப்புகள் அவனைக்காக்கும்படி ஒப்புக்கொடுத்தான்.

௫. அப்படிப் பேதுரு காவலிலே காக்கப்பட்டிருக்கையில், சபையார் அவனைக்குறித்து இடைவிடாமற் பராபரனை நோக்கிச் செபம் பண்ணினார்கள்.

௬. அப்பொழுது ஏரோதே அவனைவெளியே கொண்டுவரும்படி குறித்தநாளுக்கு முன்னான இராத்திரியிலே பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே நித்திரைபண்ணிக்கொண்டிருக்கக்காவற்காரரும் கதவுக்கு முன்னிருந்து காவலறையைக் காத்துக்கொண்டிருக்க,

௭. சடுதியாய் அறையிலே பிரகாசமுண்டாகத்தக்கதாகக் * கர்த்தருடைய தூதன் ஒருவன் தோன்றி, பேதுருவின் விலாவிலே தட்டிச் சீக்கிரமாய் எழுந்திருவென்று அவனையெழுப்பினான். அப்பொழுது சங்கிலிகள் அவனுடைய கைகளைவிட்டு விழுந்தன.
* ௫: ௰௯.

௮. மேலும், தூதன் அவனுடனே சொன்னது, உன் அரையைக்கட்டி, உன்பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள்ளென்றான். அவன் அப்படிச்செய்தான். தூதன் பின்னுஞ் சொன்னது, உன்வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு, எனக்குப்பின்சென்று வாவென்றான்.

௯. அந்தப்படி அவன் புறப்பட்டு அவனுக்குப்பின்சென்று தூதனாற் செய்யப்பட்டது மெய்யென்றறியாமல், இது ஒரு தரிசனையென்று நினைத்தான்.

௰. அவர்கள் முதலாங் காவலையும், இரண்டாங்காவலையுங் கடந்து, பின்பு பட்டினத்திற்குப்போகிற இருப்புக்கதவின் இடத்திற் சேர்ந்தபொழுது, அவர்களுக்கு அது தானாய்த்திறக்க அதின்வழியாய் அவர்கள் புறப்பட்டு ஒருவீதியிலே நடந்துபோனார்கள். உடனே தூதன் அவனைவிட்டு நீங்கினான்.

௰௧. பேதுருவுக்குத்தெளிவு வந்தபொழுது ஏரோதேயின்கைக்கும், யூதருடைய விருப்பங்கள் யாவுக்கும் என்னை விடுதலையாக்கும்படிக்கு, கர்த்தர் தம்முடைய தூதனையனுப்பினார் என்று நான் இப்பொழுது மெய்யாய் அறிந்திருக்கிறேன் என்றான்.

௰௨. இப்படி அவன் சிந்தனைகொண்டு, மாற்கு என்று பேர்கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டிற்குப்போனான். அங்கே அநேகர் கூடிச்செபம்பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

௰௩. பேதுரு வாசற்கதவைத்தட்டினபொழுது, உரோதாளென்று பேர்கொண்ட ஒருவேலைக்காரி ஒற்றுக்கேட்க வந்து,

௰௪. பேதுருவின் சத்தத்தையறிந்து, சந்தோஷத்தினாலே வாசலைத்திறவாமல், உள்ளே ஓடிப்போய் வாசலுக்கு முன்னே பேதுரு நிற்கிறார் என்று அறிவித்தாள்.

௰௫. அவர்கள் நீ பயித்தியமாய்ச்சொல்லுகிறாய் என்றார்கள். அவள் அப்படியல்ல, அவரே இருக்கிறார் என்றாள். அப்பொழுது அவர்கள் சொன்னது, அவன் அவருடைய தூதனென்றார்கள்.

௰௬. பேதுரு பின்னுந் தட்டிக்கொண்டிருந்தபொழுது, அவர்கள் திறந்து அவனைக்கண்டு பிரமித்தார்கள்.

௰௭. உடனே அவர்கள் பேசாமல் இருக்கும்படி அவன் கையினாற் சமிக்கை காண்பித்து, கர்த்தர் தன்னைக்காவலில் இருந்து விடுதலையாக்கினவகையை அவர்களுக்கு விவரமாய்க்காட்டி, இவைகளை யாக்கோபுக்கும், மற்றச்சகோதரருக்கும், அறிவியுங்கள் என்று சொல்லிப்புறப்பட்டு, வேறொரு இடத்திற்குப்பிரயாணமாய்ப்போனான்.

௰௮. * பொழுது விடிந்த பின்பு பேதுருவைக்குறித்து, சேவகருக்குள்ளே உண்டான கலக்கங் கொஞ்சமல்ல, *௫: ௨௨—௨௪.

௰௯. ஏரோதே அவனைத்தேடிக்காணாமற் போனபொழுது, காவற்காரரைக்கெட்டியாய்ச்சோதித்து, அவர்களைக்கொலைசெய்யும்படி கட்டளையிட்டு, பின்பு யூதேயாநாட்டைவிட்டு, சேசாரியாபட்டினத்திற்குப் போய் அங்கே சஞ்சரித்தான்.

௨௰. அக்காலத்திலே ஏரோதே தீரியருக்கும், சீதோனருக்கும் மிகவும் பகையாய் இருந்தான். அப்பொழுது அவர்கள் தங்கள் பிழைப்புக்கு வேண்டியவைகளை இராசாவினுடைய தேசத்தில் இருந்து வாங்கிக்

கொள்வதினாலே அவர்கள் ஒருமனப்பட்டு அவன் இடத்திற்குப்போய், இராசாவினுடைய வீட்டு விசாரணைக்காரனாகிய பிலாஸ்தென்பவனைத்தங்கள் வசமாக்கிக்கொண்டு, சமாதானமாய் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

௨௧. அப்பொழுது குறித்தநாளிலே ஏரோதேயானவன் இராச அங்கியைத்தரித்துக்கொண்டு, சிங்காசனத்தின்மேல் உளுக்கார்ந்து அவர்களுக்குப்பிரசங்கம் பண்ணினான்.

௨௨. அதற்குச்சனங்கள், இது ஒருமனிதனுடைய சத்தமல்ல, தேவனுடைய சத்தமேயென்று கூப்பிட்டார்கள்.

௨௩. அவன் பராபரனுக்கேபுகழ்ச்சி உண்டாவதாகவென்று அறிக்கையிடாதபடியினாலே, உடனே கர்த்தருடைய தூதன் அவனையடித்தான். அவன் புழுக்களாலே தின்னப்பட்டு இறந்தான்.

௨௪. பராபரனுடைய வசனம் வளர்ந்து பெருகிற்று.

௨௫. பின்பு பருனபாவும், சவுலுந் * தருமஊழியத்தை நிறைவேற்றினபொழுது, மாற்கு என்று மறுபேர்கொண்ட யோவானைக்கூட்டிக்கொண்டு, எருசலேமை விட்டுத்திரும்பினார்கள். * ௰௧: ௨௯, ௩௰.

௰௩ அதிகாரம்.

[(௧) பவுலும், பருனபாவும் அந்தியோகியாவில் இருந்து பிரசங்கிக்க அனுப்பப்பட்டது. (௭) செருகியு பவுலையும், எலிமா என்னப்பட்ட ஸ்தம்பனவித்தைக்காரனையுங் குறித்தது. (௰௪) இயேசுவானவர் கிறிஸ்தென்று பவுல் அந்தியோகியாவிலே பிரசங்கித்தது. (௪௨) அந்நியர்கள் விசுவாசித்தது. (௪௫) யூதர்கள் மெறுமொறுத்துத்தூஷணித்ததினால், (௪௬) அவர்கள் அந்நியர்களிடத்திற்குப்போனது. (௪௮) நித்திய சீவனுக்குக்குறிக்கப்பட்டவர்கள் விசுவாசித்தது.]

அந்தியோகியா பட்டினத்திலுள்ள சபையிலே பருனபாவென்றும், நீகரென்னப்பட்ட சீமேயோனென்றும், சிரேனே ஊரானாகிய உலூகியென்னுந் தேசத்தின் காற்பங்குக்கு அதிபதியாகிய ஏரோதேயுடனே கூடவளர்க்கப்பட்ட மனாவனென்றும், சவுலென்றும் பெயர்களையுடைய இவர்கள் * தீர்க்கதரிசிகளுமாய், போதகருமாய் இருந்தார்கள். * ௰௧: ௨௭.

௨. அவர்கள் கர்த்தருக்காராதனைசெய்து உபவாசித்துக்கொண்டிருக்கிறபொழுது பரிசுத்த ஆவியானவர் சொன்னது, * பருனபாவையும், † சவுலையும் நான் அழைத்த கிரியைக்காக அவர்களைத்தெரிந்தெடுத்தனுப்புங்கள் என்றார். * ௪: ௩௫. † ௯: ௰௫.

௩. உடனே அவர்கள் * உபவாசித்துச் செபம்பண்ணி, † அவர்கள்மேற் கைகளை வைத்து அனுப்பினார்கள். * ௰௪: ௨௩. † ௬: ௬.

௪. ஆதலால், அவர்கள் பரிசுத்த ஆவியினால் அனுப்பப்பட்டு, சிலேக்கிய பட்டினத்திற்குப்போய் அங்கே கப்பலேறிச்சீப்புருதீவிற் சேர்ந்தார்கள்.

௫. பின்பு அவர்கள் சால்மிஸ் பட்டினத்திற்குப்போனபொழுது, யூதருடைய செப ஆலயங்களில் (அவர்களுக்கு,) பராபரனுடைய வசனத்தை அறிவித்தார்கள். * யோவானென்பவனும் அவர்களுக்கு உதவிக்காரனாய் இருந்தான். * ௰௨: ௰௨—௨௫.

௬. அவர்கள் அந்தத்தீவெங்குங் கடந்து பாப்போபட்டின பரியந்தம் போனபொழுது பரியேசுவென்று பேர்கொண்ட ஸ்தம்பனக்காரனுமாய், கள்ளத்தீர்க்கதரிசியுமாய், * ௨ மோ. ௭: ௰௧.

௭. புத்திசாலியாகிய செருகியு பவுல் என்னும், பிரதிதுரையின் இடத்தில் தங்கினவனுமாய் இருந்த ஒரு யூதனைக்கண்டார்கள்.. அந்தத்துரை பருனபாவையும், சவுலையும் அழைப்பித்து, பராபரனுடைய வசனத்தைக்கேட்க ஆசையாய் இருந்தபொழுது,

௮. * ஸ்தம்பனக்காரன் என்றருத்தங்கொள்ளுகிற எலிமாவென்னப்பட்ட அவன் பிரதிதுரையை விசுவாசத்தில் இருந்து விலக்கும்படிதேடி அவர்களோடெதிர்த்துப் பேசினான். * ௨ மோ. ௭: ௰௧.

௯. அப்பொழுது பவுல் என்றுஞ் சொல்லப்பட்ட சவுல் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய் அவன்மேற் கண் ஊன்றிச் சொன்னதாவது;

௰. எல்லாவிதமான கபடமும், எல்லாவிதமான பொல்லாங்கும் நிறைந்தவனே, * பசாசின்மகனே, சகல நீதிகளுக்கும் பகைஞனே, நீ கர்த்தருடைய செம்மையானமார்க்கங்களைப்புரட்டுகிறதில் ஓயமாட்டாயா! * ௮: ௪௪.

௰௧. இப்பொழுதுதே கர்த்தருடையகை உன்மேல்வருகின்றது. சிலகாலம் நீ சூரியனைக்காணாமற் குருடனாய் இருப்பாயென்றான். உடனே மந்தாரமும், இருளும் அவன்மேல் விழுந்தன. அவன் திரிந்து கைலாகுகொடுக்கிறவர்களைத்தேடினான்.

௰௨. இப்படிச்சம்பவித்ததைப்பிரதிதுரை கண்டு, கர்த்தரைக்குறித்துச்சொல்லிய உபதேசத்திற்காக அதிசயப்பட்டு விசுவாசமுள்ளவனானான்.

௰௩. பின்பு பவுலும், அவனைச்சேர்ந்தவர்களும், பாப்போ பட்டினத்தைவிட்டுப்பம்பீலியாநாட்டிலுள்ள பெருகே பட்டினத்

திற்குப்போனார்கள். யோவான் அவர்களை விட்டு, பிரிந்து எருசலேமுக்குத்திரும்பினான்.

௰௪. பின்பு அவர்கள் பெருகெபட்டினத்தைவிட்டு, புறப்பட்டுப்பிசிதிய நாட்டிலுள்ள அந்தியோகியாவுக்குப்போய் ஓய்வுநாளிலே செப ஆலயத்திற்குப்போய் உளுக்காந்தார்கள்.

௰௫. (அங்கே) நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசன (ஆகமமும்) வாசிக்கப்பட்டுத் தீர்ந்த பின்பு, சகோதரர்களே! நீங்கள் சனங்களுக்குப்புத்திசொல்ல விரும்பினாற் சொல்வீர்களாகவென்று ஆலயத்தலைவர் அவர்களுக்குச்சொல்ல ஆளனுப்பினார்கள்.

௰௬. அப்பொழுது பவுல் எழுந்து கையினாற் சாடைகாண்பித்துச்சொன்னதாவது; இஸ்ரவேலரே! பராபரனுக்குப்பயந்து நடக்கிற சகல சனங்களே கேட்பீர்களாக.

௰௭. இந்த இஸ்ரவேல் சந்ததியாருடைய தேவன் நம்முடைய முன்னோர்களைத்தெரிந்துகொண்டு, எகிப்து தேசத்திலே சஞ்சரித்து வந்த அவர்களுடைய சந்ததியை மேன்மைப்படுத்தி, பலத்தவல்லமையினாலே அதிலிருந்து அவர்களைப்புறப்படப்பண்ணி,

௰௮. நாற்பது வருஷகாலமாய் வனாந்தரத்திலே அவர்களைப்போஷித்துக்கொண்டு,

௰௯. கானான் தேசத்திலுள்ள ஏழுவகைச் சனக்கூட்டங்களை நீக்கி விட்டு, அவர்களுடைய தேசத்தை யவர்களுக்குச்சுதந்தரமாகப்பங்கிட்டு,

௨௰. பின்பு ஏறக்குறைய நானூற்றைம்பது வருஷத்திற்குள்ளே சாமுவேல் தீர்க்கதரிசிவரைக்கும், அவர்களுக்காக நியாயாதிபதிகளை ஏற்படுத்தினார்.

௨௧. சாமுவேலின் காலமுதல் அவர்கள் ஒரு இராசாவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதின்படி பராபரன் அவர்களுக்கு, பென்யமீனுடைய கோத்திரத்தானாகிய கீசென்பவனுடைய குமாரனாகிய சவுலைக்கொடுத்தார். அவன் நாற்பதுவருஷம் இருந்தான்.

௨௨. பின்பு அவர் அவனை விலக்கி, இயேசே என்பவனுடைய குமாரனாகிய தாவீதை * எனதுதிரு உள்ளத்திற்கு ஏற்றவனென்று கண்டேன். அவன் என்னுடைய சித்தத்தின்படி முழுவதுஞ் செய்வானென்று தாவீதைக்குறித்துச்சாட்சியிட்டு, அவனையே அவர்களுக்கு இராசனாக ஏற்படுத்தினார். * ௧ சாமு. ௰௩: ௰௪. ௰௬: ௰௨.

௨௩. அவனுடைய * சந்ததியிலே பராபரன் தமது வாக்குத்தத்தத்தின்படி இஸ்ரவேலருக்காக இயேசுவென்னும் இரட்சகரைத்தோன்றப்பண்ணினார். * ௨ சாமு. ௭: ௰௨. மத். ௧: ௧.

௨௪. அவருடைய பிரவேசத்திற்கு முன்னே யோவான் மனந்திரும்புதற்கு ஏற்ற ஞானஸ்நானத்தை எல்லா இஸ்ரவேலருக்கும் பிரசங்கித்தான்.

௨௫. மேலும் யோவான் (பணிவிடை) ஓட்டத்தை நிறைவேற்றுகிறபொழுது, (சனங்களுடனே) சொன்னதாவது; நீங்களென்னை எவனென்று எண்ணுகிறீர்கள். * நான் அவரல்ல. † எனக்குப்பின் ஒருவர் வருகிறார். அவருடைய பாத இரட்சையை அவிழ்க்கிறதற்கு நான் பாத்திரனல்லவென்று சொன்னான். * யோவான் ௧: ௨௰. † லூக். ௩: ௰௬.

௨௬. ஆபிரகாமின் சந்ததியாராகிய சகோதரர்களே, பராபரனுக்குப்பயப்படுகிற மற்றவர்களே, இந்த இரட்சிப்பை யறிவிக்கிற உபதேசம் உங்களுக்கே அனுப்பப்பட்டிருக்கின்றது.

௨௭. என்னவெனில், எருசலேமிற் குடியிருக்கிறவர்களும், அவர்களுடைய தலைவரும் அவரையாவது, ஓய்வுநாள்தோறும் வாசிக்கப்படுகிற தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களையாவது, அறியாமல் அவரை ஆக்கினைக்குள்ளாகத்தீர்த்ததினாலே அவைகளை நிறைவேற்றினார்கள்.

௨௮. மரணத்திற்கு ஏதுவான ஒன்றையும் (அவரிடத்திற்) காணமல் இருந்தும், அவர்கள் அவரைக்கொலை செய்யும்படிக்குப்பிலாத்துவை வேண்டிக்கொண்டார்கள்.

௨௯. அவரைக்குறித்து எழுதியிருக்கிறயாவையும், அவர் முடித்த பின்பு (சிலர்) அவரை மரத்தில் இருந்து இறக்கிக்கல்லறையிலே வைத்தார்கள்.

௩௰. பராபரன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார்.

௩௧. அன்றியும் அவர் தம்முடனே கூடக்கலிலேயாவில் இருந்து எருசலேமுக்குப் போனவர்களுக்கு அநேகநாள் தரிசனையானார். அவர்களே சனங்களுக்கு முன்பாக அவருடைய சாட்சிகளாய் இருக்கிறார்கள்.

௩௨. நீர் என்னுடைய குமாரன். இன்று நான் உம்மைச்செனிப்பித்தேன் என்று * இரண்டாம் சங்கீதத்திலே எழுதி யிருக்கிறபடி, * சங்கீ. ௨: ௭.

௩௩. இயேசுவை எழுப்பினதினாலே பராபரன் (நம்முடைய) முன்னோர்களுக்கு உண்டான வாக்குத்தத்தத்தை அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றினார் என்று நாங்களும் உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கிறோம்.

௩௪. அவர் மறுபடியும், மரியாதடிக்கு அவரை மரித்தோரில் இருந்து எழுப்பச் சித்தமானபடியினாலே * தாவீதிற்குச் (செய்த) உறுதியான தயவுகளை உங்களுக்குக்கட்டளை யிடுவேன் என்று திருவுளம் பற்றினார். * ஏசா. ௫௫: ௩.

௩௫. அன்றியும், * உம்முடைய பரிசுத்தவான் அழிவை யடையும்படி செய்யமாட்டீர் என்று வேறொரு சங்கீதத்திலே சொல்லி யிருக்கின்றது. * சங்கீ. ௰௬: ௰.

௩௬. * தாவீது தனது காலத்திலே பராபரனுடைய சித்தத்துக்கு ஊழியஞ் செய்தபின்பு நித்திரையடைந்து, தன் பிதாக்களிடத்திற் சேர்க்கப்பட்டு அழிவை யடைந்தான். * ௨: ௨௯.

௩௭. பராபரனாலே யெழுப்பப்பட்டவர் அழிவை யடையவில்லை.

௩௮. ஆதலாற் சகோதரர்களே, அவர் மூலமாய் உங்களுக்குப் * பாவமன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகின்றது. * லூக். ௨௪: ௪௭.

௩௯. அல்லாமலும், மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் விடுதலையாகக்கூடாதகாரியம் எதுவோ, அதினின்று விசுவாசிக்கிற யாவனும் அவராலே * விடுதலையாகிறான் என்று அறிந்து கொள்வீர்களாக. * ஏசா. ௫௩: ௰௧.

௪௰. அன்றியும் தீர்க்கதரிசிகளுடைய புஸ்தகத்திலே அசட்டைக்காரரே பாருங்கள். உங்கள் நாள்களில் ஒரு கிரியை செய்வேன். ஒருவன் அதை யுங்களுக்கு விவரித்துச்சொன்னாலும், நீங்கள் விசுவாசியாமல் இருப்பீர்கள். அது அப்படிப்பட்ட கிரியையாகவே யிருக்கும்.

௪௧. ஆதலாற் * பிரமிப்படைந்து அழிந்து போங்களென்று சொல்லி யிருக்கிறதின்படி, உங்களுக்கு வாராதபடிக்குச்சாவதானமாய் இருப்பீர்களாக வென்றான். * ஏசா. ௨௯: ௰௪. ஆபகூக். ௧: ௫.

௪௨. பின்பு அவர்கள் புறப்படுகையில் மறு ஓய்வுநாளிலே யந்த வசனங்களை, தங்களுக்குச்சொல்ல வேண்டுமென்று புறத்தேசத்தார் வேண்டிக்கொண்டார்கள்.

௪௩. மேலும் செப ஆலயச்சபை கலைந்து போனபின்பு, யூதர்களிலும், யூதமார்க்கத்திற் பிரவேசித்துத்தேவபத்தியாய் இருந்த பேர்களிலும் அநேகர் பவுலுக்கும் பருனபாவுக்கும், பின் சென்றார்கள். அவர்களுடனே அவர்கள் பேசிக்கொண்டு பராபரனுடைய கிருபையினாலே, * நிலைகொண்டிருக்கும்படிக்குப்புத்தி சொன்னார்கள். * ௰௧: ௨௩. ௰௪: ௨௨.

௪௪. மறு ஓய்வுநாளிலே கொஞ்சங்குறைய பட்டினத்தார் எல்லாரும் பராபரனுடைய வசனத்தைக்கேட்கும்படிக்குக்கூடிவந்தார்கள்.

௪௫. யூதர்கள் அவ்வளவு சனங்களைக்கண்டபொழுது, பொறாமையினாலே நிறையப்பட்டு, பவுல் சொன்னவைகளுக்கு விரோதமாய்ப்பேசினார்கள். விரோதித்தும், தூஷணித்தும் வந்தார்கள்.

௪௬. அப்பொழுது பவுலும், பருனபாவும் தயிரியங்கொண்டு சொன்னதாவது; முதலாவது உங்களுக்கே பராபரனுடைய வசனத்தைச்சொல்லவேண்டியதாய் இருந்தது. நீங்கள் அதைத்தள்ளி உங்களை நித்திய சீவனுக்கு அபாத்திரரென்று தீர்த்துக்கொள்ளுகிறபடியினாலே, நாங்கள் புறத்தேசத்தார் இடத்திற்குப்போகிறோம்.

௪௭. நீர் பூமியின் எல்லைபரியந்தமும் இரட்சகராய் இருக்கும்படிக்கு, உம்மைப் புறத்தேசத்தார்களுக்கு ஒளியென்றேற்படுத்தினேனென்கிற வேதவாக்கியத்தின்படி, பராபரன் எங்களுக்குக்கட்டளை யிட்டருளினபடியினாலே அப்படிச்செய்கிறோமென்றார்கள். * ஏசா. ௪௯: ௬.

௪௮. புறத்தேசத்தார்கள் அதைக்கேட்டுச்சந்தோஷம் அடைந்து, கர்த்தருடைய வசனத்தைப்புகழ்ந்து, நித்திய சீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்.

௪௯. பின்பு கர்த்தருடைய வசனம் அந்தேசமெங்கும் பிரபலமாயிற்று.

௫௰. யூதர்கள் பத்தியும், கனமும் பொருந்திய ஸ்திரீகளையும், பட்டினத்தின் முதலாளிகளையும் எழுப்பி, பவுல், பருனபா என்பவர்களைத் துன்பப்படுத்தும்படி செய்து, தங்கள் எல்லைகளில் இருந்து அவர்களைத் துரத்தினார்கள்.

௫௧. அப்பொழுது அவர்கள் * தங்கள் கால்களிற் பட்ட தூளை அவர்கள்மேற் சாட்சியாக உதறிப்போட்டு, இக்கோனியா பட்டினத்திற்குப்போனார்கள். சீஷரானவர்கள் சந்தோஷத்தினாலும், பரிசுத்த ஆவியினாலும் நிறையப்பட்டார்கள். * மத். ௰: ௰௪.

௰௪ அதிகாரம்.

[(௧) பவுலும், பருனபாவுந் துன்பப்பட்டு இக்கோனியாவை விட்டது. (௮) லீஸ்திராவிலே பவுல் ஒருசப்பாணியைக்குணமாக்கினதினால் அவர்கள் தேவர்களென்றெண்ணப்பட்டது. (௰௯) பவுல் கல்லெறியப்பட்டது. (௨௧) அவர்கள் பற்பல ஊர்களில் இருந்த சபைகளைச்சந்தித்துச்சீஷர்களை விசுவாசத்திலும், பொறுமையிலும் ஸ்திரப்படுத்தி, (௨௬) அந்தியோகுக்குத்திரும்பி வந்து, பராபரன் அவர்களைக்கொண்டு செய்ததை அறிவித்தது.]

இக்கோனியா பட்டினத்திலே அவர்கள் இருவரும் யூதருடைய செப ஆலயத்திற்குப்போய், பிரசங்கம் பண்ணினபொழுது யூதரிலும், கிரேக்கரிலுந் திரளான சனங்கள் விசுவாசித்தார்கள்.

௨. விசுவாசியாத யூதர்கள் சகோதரருக்கு விரோதமாகப்புறத்தேசத்தாருடைய

னதை யெழுப்பி, பகையுண்டாக்கினார்
கள்.
௩. அப்படியிருந்தும் அவர்கள் அங்கே
நெடுங்காலஞ் சஞ்சரித்து, கர்த்தரைக்கு
றித்துத்தயிரியமாய்ப்போதகம் பண்ணி
னார்கள். அவர் தமது கிருபையைக்காட்
டிய வசனத்திற்குச்சாட்சியுண்டாக * அதி
சயங்களும், அற்புதங்களும் அவர்கள் கைக
ளாற் செய்யப்படும்படி அநுக்கிரகித்தார்.
* ரு: ௧௨.
௪. அந்தப்பட்டினத்தின் சனங்கள் பிரிந்
து, சிலர் யூதரையும், சிலர் அப்போஸ்தல
ரையுஞ் சேர்ந்தார்கள்.
௫. அப்பொழுது அவர்களை நிந்தித்து,
அவர்கள்மேற் கல்லெறியும்பொருட்டாகப்
புறத்தேசத்தாரும், யூதர்களும் அவர்களு
டைய தலைவருடனேயுங்கூடக்கலகம்பண்
ணுகிறதை அவர்கள் அறிந்து,
௬. இலிக்கவோனியா நாட்டிலுள்ள லீஸ்
திராவூருக்கும், தெருபையூருக்கும், அவை
களைச்சூழ்ந்த புறத்திற்கும் * ஓடிப்போய்,
* மத்தே. ௰: ௨௩.
௭. அங்கே சுவிசேஷத்தை அறிவித்துக்
கொண்டு வந்தார்கள்.
௮. லீஸ்திராவூரிலே ஒருவன் * தன் தா
யின் வயிற்றில் இருந்து சப்பாணியாய்ப்
பிறந்து, ஒருக்காலும் நடவாமற் பெலனில்
லாத கால்களோடே உளுக்காந்திருந்து,
* ௩: ௨.
௯. பவுல் பேசுகிறதைக்கேட்டான். அ
வன்மேற் பவுல் கண்ணூன்றி, இரட்சிக்கப்
படும்படிக்கான விசுவாசம் அவனுக்குண்
டென்று கண்டு,
௰. நீ * உன் கால்களை யூன்றி, செம்மை
யாய் எழுந்து நில்லென்று, மிகுந்த சத்தத்
தோடே சொன்னான். உடனே அவன் குதித்
தெழுந்து நடந்தான். * ஏசா. ௩௫: ௬.
௧௧. பவுல் செய்ததைச்சனங்கள் கண்டு,
* தேவர்கள் மனிதரூபமெடுத்து நம்மிடத்
தில் இறங்கி யிருக்கிறார்களென்று இலிக்க
வோனியா பாஷையிலே சத்தமிட்டுக்கூப்
பிட்டார்கள். * ௨௮: ௬.
௧௨. மேலும், பருனபாவை இயூப்பித்தர்
தேவனென்றும், பவுல் பிரசங்கத்தை நடத்
தினவனானபடியினாலே அவனை மெருக்கூரி
தேவனென்றும் அழைத்தார்கள்.
௧௩. அல்லாமலும் பட்டினத்திற்குப்புறம்
பேயிருந்த இயூப்பித்தருடைய பூசாசாரி
எருதுகளையும், பூமாலைகளையும், வாசலின்
அருகே கொண்டுபோய், சனங்களோடே
கூடப்பலியிட மனதாய் இருந்தான்.
௧௪. அப்போஸ்தலராகிய பருனபாவும்,
பவுலும் அதைக்கேள்விப்பட்டு, (விதனத்தி
னாலே) தங்கள் வஸ்திரங்களைக்கிழித்துக்
கொண்டு,
௧௫. கூட்டத்திற்குள் ஓடி. மனிதர்களே!
என்னத்திற்கு இப்படிச்செய்கிறீர்கள்? நாங்
களும் உங்களைப்போலப்பாடுள்ள மனித
ராய் இருந்து,
௧௬. நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்
டு, * வானத்தையும், பூமியையும், சமுத்தி
ரத்தையும், அவைகளில் உள்ள யாவையும்
உண்டாக்கின சீவனுள்ள தேவனிடத்திற்
குத்திரும்பவேண்டுமென்று உங்களுக்குச்
சுவிசேஷமாய்ச்சொல்லுகிறோம். சென்ற
காலங்களில் அவர் எல்லாப்புறத்தேசத்தா
ரையுந் தங்கள் தங்கள் வழிகளிலே நடக்க
விட்டிருந்தும், * சங்கீ. ௱௪௬: ௬. அறிவி.
௧௪: ௭.
௧௭. அவர்களுக்கு நன்மை செய்துவந்து
வானத்திலிருந்து மழைகளையும், செழிப்புள்
ள காலங்களையும் நமக்குக்கொடுத்து ஆகா
ரத்தினாலும், சந்தோஷத்தினாலும் நம்மு
டைய இருதயங்களை நிரப்பி, இவ்விதமாய்
அவர் தம்மைக்குறித்துச்சாட்சிகொடாமல்
இருக்கவில்லையென்று கூப்பிட்டார்கள்.
௧௮. இப்படி அவர்கள் சொல்லி, தங்களுக்
கு, சனங்கள் பலியிடாதபடிக்குப்பிரயாசத்
தோடே நிறுத்தினார்கள்.
௧௯. பின்பு அந்தியோகியவூரிலும், இக்
கோனியூரிலும் இருந்து, யூதர்கள் அங்கே
போய், சனங்களுக்குப்போதனை செய்து,
* பவுவின்மேற் கல்லெறிந்து, அவன் மரித்
தானென்று நினைத்து, அவனைப்பட்டினத்
திற்கு வெளியே இழுத்தார்கள். * ௨ கொரி
௧௧: ௨௫.
௨௰. அங்கே சீஷர்கள் அவனைச்சூழ்ந்து
கொள்ளுகையில், அவன் எழுந்து ஊருக்
குட்பிரவேசித்து, மறுநாளிலே பருனபா
வுடனே தெருபையூருக்குப்போனான்.
௨௧. அந்த ஊரார்க்குச்சுவிசேஷத்தை
யறிவித்து, அநேகரைச்சீஷராக்கின பின்பு,
அவர்கள் லீஸ்திராவூருக்கும், இக்கோனி
யூருக்கும், அந்தியோகியாவூருக்குந் திரும்பி,
௨௨. சீஷருடைய ஆத்துமாக்களை ஸ்திரப்
படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்ப
டிக்குப்புத்திசொல்லி, நாம் * அநேக உபத்
திரவங்களின் வழியாய், பராபரனுடைய
இராச்சியத்திற் பிரவேசிக்கவேண்டுமென்று
ஞ் சொல்லிக்கொண்டார்கள். * மத். ௰: ௩௮.
௨௩. அன்றியுஞ் சபைகள்தோறும் அவர்
களுக்காக மூப்பரைத்தெரிந்தேற்படுத்தி,
உபவாசித்துச்செபம்பண்ணி, அவர்கள்
விசுவாசித்துக்கொண்டிருந்த கர்த்தருக்கு
அவர்களை யொப்புவித்தார்கள். பின்பு அவர்
கள் பிசீதியா நாட்டைக்கடந்துபோய்ப்
பம்பீலியா நாட்டிலே சேர்ந்து,
௨௪. பெருகேயூரிலே சுவிசேஷ வசனத்
தை யறிவித்து,

௨௫. அத்தாலியா பட்டினத்திற்குச்சென்று, அங்கே கப்பலேறி,

௨௬. தாங்கள் நிறைவேற்றின கிரியைக்காக, பராபரனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு, * புறப்பட்ட அந்தியோகியா பட்டினத்திற்குப்போனார்கள். * ௰௩: ௧—௩.

௨௭. அங்கே சேர்ந்தபொழுது, அவர்கள் சபையைக்கூடிவரப்பண்ணி, தங்களாற் பராபரன் செய்தவைகளையும், அவர் புறத்தேசத்தார்களுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்தார் என்பதையும் அறிவித்து, பின்பு அங்கே சீஷருடனேகூட அநேககாலஞ் சஞ்சரித்துக்கொண்டு வந்தார்கள்.

௰௫ அதிகாரம்.

[(௧) சுன்னத்தைக்குறித்துப்பெரிய வாக்குவாதம் உண்டானது. (௬) அப்போஸ்தலர் அதைக்குறித்து ஆலோசித்து, (௨௨) அவர்களுடைய தீர்மானத்தை நிருபங்கள் வழியாய்ச் சபைகளுக்கு அனுப்பினது. (௩௯) பவுலும், பருனபாவும் ஒருமித்துச் சகோதரரைச்சந்திக்க நினைத்தும் விகற்பப்பட்டுப்பிரிந்துபோனது.]

அக்காலத்திலே சிலர் யூதேயாவில் இருந்துபோய், நீங்கள் * மோசேயின் முறைமையின்படியே விருத்தசேதனம் பெற்றுக்கொள்ளாவிட்டால், இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம் பண்ணினார்கள். * கலாத். ௫: ௨—௪.

௨. அதினாலே கலகமும், அவர்களுக்கும், பவுல், பருனபா என்பவர்களுக்கும் மிகுந்த தருக்கமுமுண்டானபொழுது, அந்தத்தருக்ககாரியத்தைக்குறித்து, பவுலும், பருனபாவுந் தங்களில் வேறே சிலரும் எருசலேமிலுள்ள அப்போஸ்தலரிடத்திற்கும், மூப்பரிடத்திற்கும் போகவேண்டுமென்று தீர்மானம் பண்ணினார்கள்.

௩. அந்தப்படி அவர்கள் சபையாராலே வழிவிட்டனுப்பப்பட்ட பின்பு பெனீக்கே, சமாரியா நாடுகளின் வழியாய்ப்போய்ப் புறத்தேசத்தார் மனந்திரும்பினதை யறிவித்து, சகோதரரெல்லாருக்கும் மிகுந்த சந்தோஷத்தை யுண்டாக்கினார்கள்.

௪. எருசலேமிலே அவர்கள் சேர்ந்து, சபையினாலும், அப்போஸ்தலராலும், மூப்பராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்பு, தங்களாற் பராபரன் செய்தவைகளை யறிவித்தார்கள்.

௫. அப்பொழுது பரிசேயராகிய வகுப்பிலே விசுவாசிகளான சிலர் எழுந்து, அவர்கள் விருத்தசேதனத்தைப்பெற்றுக்கொண்டு, மோசேயின்பிரமாணத்தைக்கைக்கொள்ளும்படிக்கு உத்தரவு அனுப்ப வேண்டும் என்றார்கள்.

௬. பின்பு அப்போஸ்தலரும், மூப்பரும் அந்தக்காரியத்தை ஆராய்ந்து பார்க்கும்படிக்குக்கூடினார்கள்.

௭. மிகுந்த தருக்கமுண்டானபொழுது, பேதுரு எழுந்து அவர்களுடனே சொன்னதாவது; சகோதரரே! நீங்கள் அறிந்திருக்கிறபடி, பராபரன் அநேக நாள்களுக்கு முன்னே உங்களில் ஒருவனாகிய * என்னுடைய வாயினாலே புறத்தேசத்தார்கள் சுவிசேஷத்தின் வார்த்தையைக்கேட்டு விசுவாசிகளாகும்படி (என்னைத்) தெரிந்தெடுத்தார். * ௰: ௪௪—௪௭.

௮. மேலும் * இருதயங்களை அறிந்திருக்கிற பராபரன் நமக்குக்கொடுத்ததுபோல அவர்களுக்கும் பரிசுத்த ஆவியைக்கொடுத்து, * சங். ௭: ௰.

௯. (இவ்விதமாய்) அவர்களைக்குறித்துச் சாட்சியிட்டு, அவர்கள் இருதயங்களை விசுவாசத்தினாலே சுத்தமாக்கி, அவர் நமக்கும் அவர்களுக்கும் * ஒரு வித்தியாசமும் பண்ணவில்லை. * ௰: ௪௪, ௪௫.

௰. அப்படியிருக்க நம்முடைய பிதாக்களாலும், நம்மாலுஞ் சுமக்கக்கூடாதிருந்த நுகத்தடியைச்சீஷருடைய கழுத்தின்மேற் பிணைக்கிறதினாலே நீங்கள் பராபரனைச் சோதிக்கிறதென்ன?

௰௧. அப்படியல்ல, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் * கிருபையினாலே அவர்கள் இரட்சிக்கப்படுகிற பிரகாரமாக நாம் அப்படியே இரட்சிக்கப்படுவோமென்று நம்பி இருக்கிறோமே யென்றான். * எபே. ௨: ௮, ௯.

௰௨. அதன் பின்பு, கூடிவந்த யாவரும் அமைந்திருந்து, பருனபாவும், பவுலுந் தங்களாலே பராபரன் புறத்தேசத்தார்களுக்குள்ளேசெய்த அதிசயங்களையும், அற்புதங்களையும் விவரித்துச்சொல்லக்கேட்டார்கள்.

௰௩. அவர்கள் பேசி முடிந்த பின்பு, யாக்கோபு சொன்னதாவது; சகோதரர்களே! எனக்குச்செவிகொடுப்பீர்களாக.

௰௪. பராபரன் தமது நாமத்திற்காகப் புறத்தேசத்தார்களில் ஒரு சனக்கூட்டத்தை யெடுத்துக்கொள்ளும்படிக்கு முதலாவது அவர்களைநோக்கிப்பார்த்ததைச் சீமோன் சொன்னானே.

௰௫. அதற்குத்தீர்க்கதரிசிகளுடைய வசனங்களும் ஒத்திருக்கின்றன.

௰௬. மற்ற மனிதர்களும், என்னுடைய நாமத்தைப்பெற அழைக்கப்படும் புறத்தேசத்தார் எல்லாரும் பராபரனைத்தேடிக்கொள்ளும்படிக்கு,

௰௭. நான் இதற்குப்பின்பு திரும்பிவந்து

விழுந்த தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எழுப்புவேன். அதில் இடிந்துபோன இடங்களைத் திரும்பக்கட்டி, அதைத்திரும்பச்செம்மையாக நிறுத்துவேனென்று, இவைகளையெல்லாஞ்செய்கிற பராபரன் சொல்லுகிறாரென்று * எழுதியிருக்கின்றதே.

* ஆமோ. கூ: யக, யஉ.

யஅ. அநாதிகாலம் முதலாய்ப்பராபரனுடைய கிரியைகளெல்லாம் அவருக்குத்தெரிந்திருக்கின்றன.

யகூ. ஆகையால், புறத்தேசத்தார்களில் பராபரனிடத்திற்கு மனந் திருப்புகிறவர்களைக்கலக்கப்படுத்தாதபடிக்கு,

உய. அசுசிப்படுத்துகிற விக்கிரக போசனங்களுக்கும், வேசித்தனத்திற்கும், நெருக்குண்டு செத்தவைகளுக்கும், இரத்தத்திற்கும் விலகும்படியே அவர்களுக்கு எழுதவேண்டுமென்றெண்ணுகிறேன்.

உக. பூர்வகாலம் முதற்கொண்டு செப ஆலயங்களில், ஓய்வுநாள்தோறும் மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்பட்டுவருகிறபடியால், பட்டினந்தோறும் அவைகளைப்பிரசிந்தம் பண்ணுகிறவர்களும் உண்டேயென்றான்.

உஉ. அப்பொழுது அப்போஸ்தலரும், மூப்பரும், சபையார் எல்லாருந் தங்களிற் சகோதரருக்குள்ளே கனம்பொருந்திய பருசபாவென்னப்பட்ட யூதாவையும், சீலாவையுந் தெரிந்துகொண்டு, அவர்களைப்பவுலுடனேயும், பருனபாவுடனேயுங்கூட அந்தியோகியா பட்டினத்திற்கு அனுப்பவேண்டுமென்று யோசித்து எழுதின நிருபமாவது;

உங. அந்தியோகியா பட்டினத்திலும், சீரியா நாட்டின் மற்ற இடங்களிலும், கிலிக்கியா நாட்டிலும் இருக்கிற புறத்தேசத்தார்களிலிருந்து உண்டான சகோதரர்களுக்கு அப்போஸ்தலரும், மூப்பரும், (மற்றச்) சகோதரருமாகிய நாங்கள் சவுக்கியம் உண்டாகும்படி வாழ்த்துகிறோம்.

உச. எங்களால் கட்டளைபெறாத சிலர் எங்களிடத்திலிருந்து புறப்பட்டு, நீங்கள் விருத்தசேதனம் அடைய வேண்டுமென்றும், நியாயப்பிரமாணத்தைக்கைக்கொள்ளவேண்டுமென்றுஞ் சொல்லி, இப்படிப்பட்ட வார்த்தைகளினாலே உங்களைக்கலக்கப்படுத்தி, உங்கள் ஆத்துமாக்களைத்தள்ளாடப்பண்ணியிருக்கிறார்களென்று நாங்கள் கேள்விப்பட்டபடியினாலே,

உரு. நாங்கள் தெரிந்துகொண்ட சில மனிதரை நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்திற்காக, தங்கள் பிராணனையும்விட எத்தனமாய் இருந்தவர்களுமாய்,

உசு. எங்களுக்குப்பிரியமானவர்களுமாய் இருக்கிற பருனபாவோடும், பவுலோடுங்கூட உங்களிடத்திற்கு அனுப்பவேண்டுமென்று ஒருமனப்பட்டு யோசனை பண்ணிக்கொண்டு,

உஎ. அந்தப்படியே யூதாவையும், சீலாவையும் அனுப்புகிறோம். அவர்களும் இவைகளை வாக்கினாலே உங்களுக்கு அறிவிப்பார்கள்.

உஅ. எவையெனில், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததற்கும், வேசித்தனத்திற்கும் நீங்கள் விலகியிருக்கவேண்டும். இதுவே அல்லாமல் வேறதிகமான பாரம் ஒன்றும் உங்கள்மேல் போடாமல் இருக்கும்படிக்கு,

உகூ. பரிசுத்த ஆவியும், நாங்களுஞ் சித்தமாயிருக்கிறோம். மேற்சொல்லியவைகளினின்று, நீங்கள் உங்களைக்காத்துக்கொண்டால் நன்றுசெய்வீர்கள். சுகமாயிருப்பீர்களாகவென்றெழுதி, அவர்கள் கையில் கொடுத்தனுப்பினார்கள்.

ஙய. அவர்கள் அனுப்பி விடப்பட்டு அந்தியோகியா பட்டினத்திற்குப்போய், சபையைக்கூடிவரச்செய்து, அந்த நிருபத்தைக் கொடுத்தார்கள்.

ஙக. அதை அவர்கள் வாசித்தபின்பு, அதிலடங்கிய ஆறுதலான வசனங்களைக்குறித்துச்சந்தோஷப்பட்டார்கள்.

ஙஉ. பின்பு யூதாவும், சீலாவும், தாங்களுந் தீர்க்கதரிசிகளானபடியினாலே, அநேக வசனங்களினாலே சகோதரருக்குப்புத்திசொல்லி, அவர்களை ஸ்திரப்படுத்தி,

ஙங. சிலகாலம் அங்கேயிருந்து பின்பு சகோதரரால் சமாதானத்துடனே அப்போஸ்தலரிடத்திற்கனுப்பிவிடப்பட்டார்கள்.

ஙச. சீலா பின்னும் அங்கே தங்கினால் நலமாயிருக்குமென்றெண்ணியிருந்தான்.

ஙரு. அன்றியும் பவுலும், பருனபாவும் அந்தியோகியா வூரிலே சஞ்சரித்து, வேறு அநேகரோடுங்கூட, கர்த்தருடைய வசனத்தை உபதேசித்துச்சுவிசேஷமாய்ப்பிரசங்கித்துக்கொண்டு வந்தார்கள்.

ஙசு. சிலநாளுக்குப்பின்பு பவுல் பருனபாவை நோக்கி, கர்த்தருடைய வசனத்தை நாம் அறிவித்திருந்த சகல பட்டினங்களிலுமுள்ள சகோதரர் சுகமாயிருக்கிறார்களோ, இல்லையோவென்று அதைப்பார்க்கும்படிக்குத்திரும்பிப்பிரயாணமாய்ப்போவோம் வாவென்றான்.

ஙஎ. அப்பொழுது பருனபாவானவன் * மாற்கு என்றழைக்கப்பட்ட யோவானைக்கூட அழைத்துக்கொள்ளும்படி யோசனை சொன்னான். * யஉ: யஉ. யங: ரு.

ஙஅ. பவுல் * பம்பீலியா நாட்டிலே தங்களுடனேகூடக்கிரியைக்கு வாராமல், தங்களைவிட்டுப்பிரிந்துபோன அவனை அழைத்

துக்கொள்ளத்தகாதென்று சொன்னான். * ௰௩: ௰௩.

௩௯. அப்பொழுது கோபம் உண்டானதினாலே, அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்தார்கள். பர்னபாவானவன் மாற்கைக்கூட்டிக்கொண்டு கப்பலேறிச்சீப்புருதீவுக்குப்போனான்.

௪௰. பவுலானவன் சீலாவைத்தெரிந்துகொண்டு, சகோதரராலே பராபரனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு,

௪௧. புறப்பட்டுச்சீரியா நாட்டிலேயும், கிலிக்கியா நாட்டிலேயுந் திரிந்து சபைகளை ஸ்திரப்படுத்தினான்.

௰௬ அதிகாரம்.

[(௧) பவுல் தீமோத்தேயுவைச்சுன்னத்துப்பண்ணி, (௭) பரிசுத்த ஆவியினால் மறுதேசங்களுக்குப்போகத்தரிசனை அடைந்து, (௰௪) லீதியாளைக்குணப்படுத்தி, (௰௬) ஒரு பேயைத்துரத்தினது. (௰௯) அதினிமித்தம் பவுலும், சீலாவும் அடிக்கப்பட்டுக்காவலில் வைக்கப்பட்டது. (௨௬) காவற்கதவுகள் திறந்தது. (௩௧) காவற்காரன் குணப்பட்டது. (௩௭) அவர்கள் விடுதலையானது.]

பின்பு அவன் தெருபை யூருக்கும், லீஸ்திரா வூருக்கும்போனான். அங்கே * தீமோத்தேயு என்னப்பட்ட சீஷனிருந்தான். அவனுடைய தாய் விசுவாசமுள்ள ஒரு யூதஸ்திரீயானவள். அவனுடைய தகப்பன் கிரேக்கனானவன். * ௧ தீமோ. ௧: ௨.

௨. மேலும், அவன் லீஸ்திராவிலும், இக்கோனியாவிலும் இருக்கிற சகோதரராலே நற்சாட்சிபெற்றவன்.

௩. அவனைப்பவுல் தன்னுடனேகூடப்புறப்படவேண்டுமென்று விரும்பி, அவனுடைய தகப்பன் கிரேக்கனென்று, அவ்விடங்களிலிருக்கிற யூதர்களெல்லாரும் அறிந்தபடியால், அவனுக்கு விருத்தசேதனம் பண்ணினான்.

௪. பின்பு அவர்கள் பட்டினங்களில் திரிந்து நடக்கையில், எருசலேமிலுள்ள அப்போஸ்தலராலும், மூப்பராலுந் தீர்மானம்பண்ணப்பட்ட * சட்டங்களைக்காத்துக்கொள்ளும்படிக்கு, சனங்களுக்கு ஒப்புவித்தார்கள். * ௰௫: ௨௮, ௨௯.

௫. அதினாலே, சபைகள் விசுவாசத்திலே ஸ்திரப்பட்டு நாடோறும் பெருகினார்கள்.

௬. பின்பு அவர்கள் பிரிகியா நாட்டிலேயும், கலாத்தியா நாட்டிலேயுந் திரிந்துகொண்டு வருகிறபொழுது, ஆசியா தேசத்திலே அவர்கள் சுவிசேஷ வசனத்தைச்சொல்லாதபடிக்கு, பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டு,

௭. பின்பு மீசியாநாட்டிற்குப்போய், பித்தினிய நாட்டிற்குப்போகப் பிரயத்தினம்பண்ணினார்கள். அதற்கும் இயேசுவினுடைய ஆவியானவர் தடைபண்ணினார்.

௮. அப்பொழுது அவர்கள் மீசியா நாட்டைக்கடந்து, துரோவஸ் பட்டினத்திற்குப்போனார்கள்.

௯. அங்கே இராத்திரியிலே பவுலுக்கொரு தரிசனை உண்டாயிற்று. என்னவெனில், மக்கேதோனியா தேசத்தான் ஒருவன் நின்று நீ மக்கேதோனியாவில்வந்து எங்களுக்கு உதவிசெய்வாயாகவென்று அவனை வேண்டிக்கொண்டதாக இருந்தது.

௰. அந்தத்தரிசனையை அவன் கண்டபொழுது, அவர்களுக்குச்சுவிசேஷத்தை அறிவிக்கும்படிக்கு, கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயமாய் அறிந்து, உடனே மக்கேதோனியா தேசத்திற்குப்புறப்பட்டுப்போக, பிரயத்தினம்பண்ணி,

௰௧. கப்பலேறித்துரோவஸ்பட்டினத்தை விட்டு நேராய்ச்சமொத்திராக்கேதீவுக்கும், மறுநாளிலே நேயாப்போலிபட்டினத்திற்கும்போய்,

௰௨. அங்கே இருந்து மக்கேதோனியாதேசத்தின் தலையானதுமாய், உரோமர் குடியேறினதுமாய், இருக்கிற பிலிப்பிபட்டணத்திற்சேர்ந்து, சிலநாள் அதிலே சஞ்சரித்தோம்.

௰௩. பட்டணத்திற்குவெளியே ஆற்றின் அருகே, வழக்கமாய்ச்செபம்பண்ணுதற்கான இடத்திற்கு ஓய்வுநாளில் நாங்கள்போய், அங்கே உளுக்கார்ந்து, கூடிவந்திருந்த ஸ்திரீகளுடனே பேசிக்கொண்டோம்.

௰௪. ஒரு ஸ்திரீ தியத்திரா ஊராளுமாய், இரத்தாம்பரம்விற்கிறவளுமாய், தேவபத்தி உள்ளவளுமாய், லீதியாள் என்று பேர்கொண்டவளுமாய் இருந்தாள். அவள் பவுலினால் சொல்லப்பட்டவைகளைக்கேட்டுக்கொண்டிருக்கையில், அவைகளுக்கு அவள் எச்சரிக்கையாய் இருக்கும்படிக்கு, கர்த்தர் அவளுடைய இருதயத்தைத்திறந்தார்.

௰௫. பின்பு அவளும், அவளுடைய குடும்பத்தாரும் ஞானஸ்நானம்பெற்றபொழுது, அவள் எங்களைநோக்கி, நீங்கள் என்னைக்கர்த்தாவினிடத்தில் விசுவாசமானவளென்று எண்ணினால், என்வீட்டிலேவந்து தங்கி இருப்பீர்களாகவென்று எங்களை மிகவும் வேண்டிக்கொண்டு இருத்தினாள்.

௰௬. நாங்கள் செபத்திற்குப்போகையில், பீத்தோனுடைய ஆவியைக்கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினாலே தன் எசமான்களுக்கு * மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு வேலைக்காரி எங்களுக்கு எதிர்ப்பட்டாள். * ௰௯: ௨௪.

௰௭. அவள் பவுலுக்கும், எங்களுக்கும் பின்சென்று * இந்தமனிதர் உன்னதமான

பராபரனுடைய ஊழியக்காரர். உங்களுக்கு இரட்சிப்பின் மார்க்கத்தை அறிவிக்கிறவர்களென்று கூப்பிட்டாள். * மாற். ௧: ௨௪.

௰௮. இப்படி அநேகநாள்செய்தாள். அப்பொழுது, பவுல் விசனமடைந்து, திரும்பிக்கொண்டு, அந்த ஆவியுடனே சொன்னது, இவளை விட்டுப்புறப்படும்படிக்கு இயேசுக்கிறிஸ்துவினுடைய நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்றான். அந்நேரம் அது புறப்பட்டுப்போயிற்று.

௰௯. அவளுடைய எசமான்கள் தங்கள் ஆதாயத்து நம்பிக்கை அற்றுப்போயிற்றென்று அறிந்து; பவுலையும், சீலாவையும் பிடித்து, சந்தைவெளியிலுள்ள தலைவரிடத்திற்கு இழுத்து,

௨௰. பின்பு அவர்களைத்துரைகளுக்கு முன்பாகக்கொண்டுபோய், யூதர்களாகிய இந்த மனிதர் நம்முடைய பட்டினத்தைக்கலங்கப்பண்ணி,

௨௧. உரோமராகிய நம்மாலே ஏற்றுக்கொள்ளவும், செய்யவும்படாத முறைமைகளை யறிவிக்கிறார்களென்றார்கள்.

௨௨. அப்பொழுது சனங்கள் அவர்களுக்கு விரோதமாய் எழும்பினதும் அல்லாமல், துரைகள் அவர்கள் வஸ்திரங்களைக்கிழித்துப்போடவும், அவர்களை யடிக்கவுஞ் சொல்லி,

௨௩. மிகுதியாய் அவர்களை அடிப்பித்த பின்பு, சிறைச்சாலையிலே வைத்து, அவர்களைப்பத்திரமாய்க்காக்கும்படிக்கு, சிறைச்சாலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்கள்

௨௪. அவன் இப்படிப்பட்ட கட்டளையைப்பெற்றபொழுது, அவர்களை உள்ளுக்குள்ளான காவலறையிலே போட்டு, அவர்கள் கால்களை மரத்தில் அடித்துவைத்தான்.

௨௫. அப்படியிருந்தும் பாதி இராத்திரியிலே பவுலும், சீலாவுஞ் செபம்பண்ணி, பராபரனைத் துதித்துப்பாடினார்கள். காவலில் வைக்கப்பட்ட மற்றவர்கள் அதைக்கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

௨௬. சடுதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையத்தக்கதாக, பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே * கதவுகள் எல்லாந் திறக்கப்பட்டன. எல்லாரையுங் கட்டியிருந்த சங்கிலிகள் அற்றுப்போயின.— * ௫: ௰௯.

௨௭. சிறைச்சாலைக்காரன் விழித்து, சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, அதில் வைக்கப்பட்டவர்கள் ஓடிப்போனார்களென்று நினைத்து, கத்தியை உருவித்தன்னைக்கொலைசெய்ய, எத்தனமாய் இருந்தான்.

௨௮. பவுல் என்பவன் நாங்கள் எல்லாரும் இங்கே யிருக்கிறோம். ஆகையால், நீ உனக்குக்கேடொன்றுஞ் செய்யாதிருப்பாயாகவென்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டான்.

௨௯. அப்பொழுது அவன் விளக்குகளை அழைப்பித்து, உள்ளே ஓடி நடுக்கம் அடைந்தவனாய்ப்பவுலுக்கும், சீலாவுக்கும் முன்பாக விழுந்து,

௩௰. பின்பு அவர்களை வெளியே அழைத்துப்போய், ஆண்டவர்களே! இரட்சிக்கப்படுகிறதற்கு நான் என்னசெய்யவேண்டும் என்றான்.

௩௧. அதற்கவர்கள், * கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசித்துக்கொள்வாயாக. அப்பொழுது நீயும், உன் வீட்டாரும், இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி, * யோவா. ௩: ௰௫, ௰௬.

௩௨. அவனுக்கும், அவனுடைய வீட்டில் இருந்த யாவருக்குங் கர்த்தருடைய வசனத்தைப்போதித்தார்கள்.

௩௩. மேலும் அவ்விராத்திரியில் அந்நேரத்திலே அவன் அவர்களைச்சேர்த்துக்கொண்டு, அடிகளாலான காயங்களைக்கழுவினான். அன்றியும் அவனும், அவனைச்சேர்ந்த யாவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்.

௩௪. பின்பு அவன் அவர்களைத்தன் வீட்டிற்குள் அழைத்துப்போய், அவர்களுக்குப்போசனங் கொடுத்து, தானும் தன் வீட்டார் அனைவரும் பராபரனில் விசுவாசிகளானபடியினாலே மிகவும் மகிழ்ச்சியாய் இருந்தான்.

௩௫. உதயமானபொழுது, துரைகள் தலையாரிகளை அழைத்து, அந்த மனிதரை விட்டுவிடும்படி சொல்லுங்களென்று அனுப்பினார்கள்.

௩௬. சிறைச்சாலைக்காரன் பவுலுடனே சொன்னதாவது; உங்களை விடுதலையாக்கும்படிக்கு, துரைகள் கட்டளை அனுப்பினார்கள். ஆகையால், நீங்கள் புறப்பட்டு, சமாதானத்துடனே போவீர்களாகவென்றான்.

௩௭. அதற்குப்பவுல்சொன்னது, * உரோமராகிய எங்களை அவர்கள் நியாயம் விசாரியாமல் வெளியரங்கமாய் அடிப்பித்து, சிறைச்சாலையிலே போட்டு, இப்பொழுது இரகசியமாய் எங்களை விடுதலையாக்குகிறார்களா? அப்படியல்ல, அவர்களேவந்து, எங்களை வெளியே அழைத்து அனுப்பிவிடக்கடவர்கள் என்றான். * ௨௨: ௨௫.

௩௮. இந்த வசனங்களைத்தலையாரிகள் துரைகளுக்கு அறிவித்தார்கள். உரோமராய் இருக்கிறார்களென்று அவர்கள் கேட்டபொழுது, பயம் அடைந்து வந்து அவர்களுடனே தயவாகப்பேசிக்கொண்டு,

௩௯. பின்பு அவர்களை வெளியே அழைத்துப்போய், * பட்டினத்தை விட்டுப்போ

கும்படி கேட்டுக்கொண்டார்கள். * மத். ௮: ௩௪.

௪௰. அந்தப்படி அவர்கள் சிறைச்சாலையிலிருந்து புறப்பட்டு, லீதியாளிடத்திற்குப் போய்ச்சகோதரரைக்கண்டு, அவர்களுக்கு ஆறுதல்சொல்லிப்புறப்பட்டுப்போனார்கள்.

௰௭ அதிகாரம்.

[(௧) பவுல் தெசலோனிக்கே பட்டினத்திற் பிரசங்கித்தது. (௪) அவ்விடத்திற் சிலர் அவரை விசுவாசித்ததும், சிலர் அவரைத்தூஷணித்தது. (௰) அவர் பெரோயா பட்டினத்துக்கு அனுப்பப்பட்டு, அங்கே பிரசங்கித்தது. (௰௫) பின்பு அத்தேனே பட்டினத்துக்கு வந்து அவ்வூராரோடே தர்க்கித்து, அவர்கள் அறியாத தேவனை அவர்களுக்கு அறிவித்தது. (௩௪) அதனால் அநேகர் கிறிஸ்தவர்களானது.]

அவர்கள் அம்பிபோலி பட்டினத்தையும், அப்போலோனிய பட்டினத்தையுங் கடந்து, * தெசலோனிக்கா பட்டினத்திற்குப்போனார்கள். அங்கே யூதர்களுக்காக ஒரு செப ஆலயம் இருந்தது. * ௨ தீமோ. ௪: ௰.

௨. பவுல் தன் வழக்கத்தின்படி அவர்களிடத்திற்குப்போய், மூன்று ஓய்வுநாள்களில் வேதவாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்துக்கொண்டுவருகையில்,

௩. * கிறிஸ்து பாடுபடவும், மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டுமென்று காண்பித்து, நான் உங்களுக்கு அறிவிக்கிற இயேசுவே கிறிஸ்து என்று திருட்டாந்தப்படுத்தினான். * லூக். ௨௪: ௪௬, ௪௭.

௪. அவர்களிற் சிலர் அதற்குச்சம்மதித்து, பவுலையும், சீலாவையுஞ் சேர்ந்துகொண்டார்கள். தேவபத்தியுள்ள கிரேக்கரிலும் அநேகம்பேரும், கனம்பொருந்திய ஸ்திரீகளில் மிகுதியானபேரும் அப்படியே செய்தார்கள்.

௫. சம்மதியாத யூதர்கள் வயிராக்கியங்கொண்டு, தெருக்களிலே திரிந்தலைகிற சில பொல்லாத மனிதரைச்சேர்த்துக்கொண்டு கூட்டங்கூடி, பட்டினத்தைக்கலகப்படுத்தி, யாசோனுடைய வீட்டிற்குமுன்போய் நின்று, அவர்களைச்சனங்களுக்குமுன்பாகக் கொண்டுபோகும்படி வகைதேடினார்கள்.

௬. அவர்களைக்காணாமல் இருந்தபொழுது, அவர்கள் யாசோனையும், சில சகோதரரையும் பட்டினத்துத்தலைவரிடத்திற்கு இழுத்துக்கொண்டுபோய், உலகத்தைக் * கலகப்படுத்துகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள். * ௰௬: ௨௰.

௭. யாசோன் இவர்களை யேற்றுக்கொண்டான். இவர்கள் எல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை இராசாவென்று சொல்லி, இராயனுடைய கட்டளைக்கு விரோதமாய்ச்செய்கிறார்களென்று கூப்பிட்டு,

௮. இவைகளைக்கேட்டுக்கொண்ட சனங்களையும், பட்டினத்துத்தலைவரையுங் கலங்கப்பண்ணினார்கள்.

௯. அப்பொழுது அவர்கள் யாசோனிடத்திலும், மற்றவர்களிடத்திலுங் கையெழுத்து வாங்கிக்கொண்டு, அவர்களை விட்டுவிட்டார்கள்.

௰. உடனே சகோதரர்கள் இராத்திரிகாலத்திலே பவுலையும், சீலாவையும் பெரோயாவூருக்கு அனுப்பிவிட்டார்கள். அவர்கள் அங்கே சேர்ந்து, யூதர்களுடைய செப ஆலயத்திற்குப்போனார்கள்.

௰௧. தெசலோனிக்கேயிலுள்ளவர்களிலும், அவர்கள் மேன்மையுள்ளவர்களாய் மிகுந்த மனப்பூர்வத்தோடே சுவிசேஷ வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் மெய்யாய் அப்படிப்பட்டவைகளோ அல்லவோவென்று நாடோறும் வேதவாக்கியங்களை * ஆராய்ந்தார்கள். * யோவா. ௫: ௩௯.

௰௨. ஆதலால் அவர்களில் அநேகம்பேரும், கனம்பொருந்திய அநேக கிரேக்கஸ்திரீகளும், புருஷரும் விசுவாசிகளானார்கள்.

௰௩. பெரோயாவூரிலேயும் பராபரனுடைய வசனம் பவுலினால் அறிவிக்கப்படுகின்றதென்று தெசலோனிக்கேயரான யூதர்கள் அறிந்தபொழுது, அங்கேயும்போய்ச்சனங்களைக்கலகப்படுத்தினார்கள்.

௰௪. உடனே சகோதரர்கள் பவுலைச்சமுத்திரத்தின் வழியாய்ப்போக அனுப்பினார்கள். சீலாவும், தீமோத்தேயும் பின்னும் அங்கே தங்கினார்கள்.

௰௫. பவுலை வழிநடத்திப்போனவர்கள் அவனை அத்தேனே பட்டினத்திற்கழைத்துப்போய், அங்கே சீலாவும், தீமோத்தேயும் அதிசீக்கிரந் தன்னிடத்தில் வரவேண்டுமென்று, அவர்களுக்குச்சொல்லும்படி கற்பனை பெற்றுப்புறப்பட்டுப்போனார்கள்.

௰௬. அவர்கள் வரும்படிக்கு, பவுல் என்பவன் அத்தேனே பட்டினத்திற் காத்துக்கொண்டிருக்கையில் பட்டினம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைப்பார்த்து மனதில் மிகுந்த வயிராக்கியத்தை யடைந்துகொண்டு,

௰௭. பின்பு செப ஆலயத்திலே யூதர்களோடும், மற்றத்தேவபத்தியுள்ள பேர்களோடும், சந்தை வெளியிலே தனக்கெதிர்ப்பட்டவர்களோடும் நாள்தோறும் பேசிக்கொண்டான்.

௰௮. அப்பொழுது எப்பிக்கூரரும், ஸ்தோயிக்கருமான ஞானிகளிற்சிலர் அவனுடனே வாக்குவாதம் பண்ணிக்கொண்டு வருங்காலத்திலே சிலர் இந்த வாயாடி என்ன பேசு

வான் என்றார்கள். சிலர் அவன் இயேசுவையும், மரித்தோரிலிருந்து எழுந்திருக்குதலையும் அவர்களுக்குப்பிரசங்கித்தபடியினாலே இவன் அந்நியதேவர்களை அறிவிக்கிறவன் என்று தோன்றுகின்றதென்றார்கள்.

௰௯. அப்பொழுது அத்தேனே பட்டினத்தார் எல்லாரும் அங்கே தங்கும்படி வருகிற அந்நியரும் புதியவைகளைக்கேட்கிறதினாலும், பேசுகிறதினாலுமேயன்றி மற்றொருவிதமாய், தங்கள் காலத்தைப்போக்க விரும்பாதவர்களானபடியால்,

௨௰. அவர்கள் அவனை மாருஸ் தேவனுடைய மேடையிலுள்ள நியாய ஸ்தலத்திற்கு அழைத்துப்போய், நீ சொல்லுகிற புதிய உபதேசத்தை நாங்கள் அறியலாமா?

௨௧. நவமான காரியங்களையே எங்கள் காது கேட்கப்பண்ணுகிறாய். ஆகையால் நாங்கள் அவைகளை அறியவேண்டுமென்றிருக்கிறோம் என்றார்கள்.

௨௨. அப்பொழுது பவுல் மாருஸ் மேடையின் நடுவிலே நின்று சொன்னதாவது; அத்தேனரே! எல்லாவற்றிலுந் தேவபத்தியே உங்களுக்கு மிகவும் உண்டாயிருக்கிறதென்று எனக்குத்தோன்றுகின்றது. எப்படியென்றால், நான் திரிந்து, உங்கள் தேவாராதனைக்கேற்றவைகளை நோக்கிப்பார்த்தபொழுது, அறியப்படாத தேவனுக்கென்றெழுதியிருக்கிற ஒரு பீடத்தையுங் கண்டேன்.

௨௩. நீங்கள் அறியாமற் பணிவு செய்கிறவரையே நான் உங்களுக்கறிவிக்கிறேன்.

௨௪. உலகத்தையும், அதிலுள்ள யாவையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும், பூமிக்கும் ஆண்டவரானதால், கைகளாற் செய்யப்பட்ட கோவில்களில் வாசம் பண்ணுகிறதுமில்லை.

௨௫. * யாதொன்று தமக்குவேண்டுவதாக மனிதர் கைகளாற் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை. † எல்லாருக்குஞ் சீவனையும், சுவாசத்தையும், மற்ற யாவையும் அவர் கொடுத்திருக்கிறாரே. * சங்கீத. ௫௰: ௯. † ௧ மோ. ௨: ௭. யோபு ௩௩: ௪. ஏசா ௪௨: ௫.

௨௬. அல்லாமலும் அவரே ஒரே இரத்தத்திலிருந்து, மனிதர் எல்லாருந் தோன்றப்பண்ணி, நம்மில் ஒருவனுக்குந் தூரமல்லாத பராபரனாகிய தம்மை அவர்கள் தடவியடைந்துகொள்ளத்தக்கதாக,

௨௭. தம்மைத்தேடும்படிக்கு, அவர்களுக்காக முன் திட்டமாக்கப்பட்ட காலங்களையுங் குடியிருப்பெல்லைகளையுங் குறித்து, அவர்கள் பூமியில் எங்குங் குடியிருக்கும்படி செய்தார்.

௨௮. அவரால் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம். அதுபோல உங்களிற் சில புலவர்களும், அவருடைய வம்சத்தாராய் இருக்கிறோமென்று சொன்னார்கள்.

௨௯. ஆதலால், நாம் பராபரனுடைய வம்சத்தாராயிருக்கத் * தெய்வம் மனிதருடைய சித்திரவேலையினாலும், கோற்றுதலினாலும், பொன், வெள்ளி, கல் இவைகளாற் செய்யப்பட்டதற்கொப்பாய் இருக்கின்றதென்று நாம் நினைக்கலாகாது. * ஏசா. ௪௰: ௰௮—௨௫.

௩௰. * அறியாமையுள்ள காலங்களை, பராபரன் காணாதவர்போல் இருந்தார். இப்பொழுது மனந்திரும்பவேண்டுமென்று எவ்விடத்திலுமுள்ள மனிதர் யாவருக்கும் † கட்டளையிடுகிறார். * ௰௪: ௰௬. † லூக். ௨௪: ௪௭.

௩௧. மேலும் ஒரு நாளைக்குறித்தார். அதிலே அவர் தாம் நியமித்த ஒருவரைக்கொண்டு, பூச்சக்கரத்திலுள்ள யாவருக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுப்பார். அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அவர் அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்றான்.

௩௨. மரித்தோர் உயிரோடெழுந்திருக்குதலைக்குறித்து, அவர்கள் கேட்டபொழுது சிலர் இகழ்ந்தார்கள். சிலர் பின்னொருவேளை இதைக்குறித்து உன்னிடத்திற் கேட்போம் என்றார்கள்.

௩௩. அப்பொழுது, பவுல் அவர்களிலிருந்து புறப்பட்டுப்போனான்.

௩௪. சிலர் அவனைப்பற்றிக்கொண்டு, பின்பு விசுவாசிகளானார்கள். அவர்களில் தியொனீசியென்னும் நியாயாதிபதியும், தாமரியென்று பேருள்ள ஒரு ஸ்திரீயும், இவர்களுடனேகூட வேறுசிலரும் இருந்தார்கள்.

௰௮ அதிகாரம்.

[(௧) பவுல் தன் கைகளால் வேலைசெய்து, கொரிந்து பட்டினத்திலே அஞ்ஞானிகளுக்குப்பிரசங்கித்தது. (௯) கர்த்தர் ஒரு தரிசனையில் அவனுக்குத்தயிரியஞ் சொன்னது (௰௨) அவன் பிரதிகூரையாகிய கல்லியோனுக்கு முன்பாக, குற்றஞ்சாற்றப்பட்டும் விடுதலையானது. (௰௮) பின்பு பட்டிணங்கள்தோறும்போய், சீஷர்களைத்திடப்படுத்தினது. (௨௪) அப்பொல்லோ, ஆக்கிலாவாலும், பிரிஸ்கில்லாளாலும் போதிக்கப்பட்டு, (௨௮) பிரயோசனமுண்டாக, கிறிஸ்துவைக்குறித்துப்பிரசங்கித்தது.]

அதன்பின்பு, பவுல் அத்தேனே பட்டினத்தைவிட்டு, கொரிந்து பட்டிணத்திற்குப்போய்,

௨. இராயனாகிய கிலவுதி யூதரெல்லாரையும் ரோமை நகரியை விட்டுப்போகும்படி கட்டளையிட்டபடியினாலே இத்தாலி நாட்டில் நின்று நவமாய் வந்திருந்த ஆக்

இல்லாவென்று நாமமுள்ள பொந்துதேசத்
தானாகிய ஒரு யூதனையும், அவனுடையமனை
வியாகிய பிரிஸ்கில்லாளையும் அங்கே கண்டு,
௩. அவர்களிடத்திற்போய், தானும் அவர்
களும் ஒரே தொழில் செய்தவர்களானபடி
யினாலே, * அவர்களிடத்திலே தங்கித்தொ
ழில் செய்தான். அவர்களுடைய தொழில்
கூடாரம்பண்ணுதல். * ௧ கொரி. ௪: ௰௨.
௪. அன்றியும் அவன் ஓய்வுநாள்தோறுஞ்
செப ஆலயத்திலே சம்பாஷணைபண்ணி,
யூதருக்கும், கிரேக்கருக்கும் புத்தி சொன்
னான்.
௫ மக்கெதோனி நாட்டிலிருந்து * சீலா
வும், தீமோத்தேயும் வந்தபொழுது, பவுல்
தன் ஆவியிலே அதிக வயிராக்கியங்கொண்
டு, இயேசுவானவரே கிறிஸ்து என்று யூத
ருக்குக்காண்பித்தான். * ௰எ: ௰௪, ௰௫.
௬. அவர்களே எதிர்பேசித்தூஷணித்த
பொழுது, * அவன் தன் வஸ்திரங்களை யு
தறி, உங்களுக்குக்கேடு வரும்படிக்கு, நீங்
களே ஏதுவாய் இருக்கிறீர்கள். * நெகே.
௫: ௰௩.
௭. நான் சுத்தமாய் இருக்கிறேன். இதுமு
தல் நான் புறத்தேசத்தார்களிடத்திற் போ
கிறேனென்று அவர்களுடனே சொல்லி,
அவ்விடத்தைவிட்டு, தேவபத்தியுள்ள யூஸ்
து என்பவனுடைய வீட்டிலே போனான்.
அந்த வீடு செப ஆலயத்திற்கு அடுத்ததா
யிருந்தது.
௮. மேலுஞ் செப ஆலயத்தலைவனாகிய
* கிறிஸ்பு தன் வீட்டாரனைவரோடுங்கூ
ட, கர்த்தரை விசுவாசித்தான். கொரிந்திய
ரில் அநேகருஞ் சுவிசேஷத்தைக்கேட்டு,
விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள்.
* ௧ கொரிந். ௧: ௰௪.
௯. பின்பு இராத்திரியிலே கர்த்தர் ஒரு
தரிசனத்திலே பவுலுடனே சொன்னதாவ
து; இந்தப்பட்டினத்திலே அநேகம்பேர்
என்னுடைய சனங்களாய் இருக்கிறார்கள்.
ஆகையால், நான் உன் பங்கிலிருப்பேன்.
ஒருவனும் உனக்குத்தீமைசெய்யும்படிக்கு
உன்மேற் கைபோடுவதில்லை.
௰. ஆனபடியினாலே * நீ பயப்படாமற்
பேசுவாயாக. மவுனமாய் இராதிருப்பாயா
கவென்றார். * ௨௩: ௰௧.
௰௧. அந்தப்படி அவன் ஒரு வருஷமும்,
ஆறுமாதமும் அங்கே தங்கி, பராபரனு
டைய வசனத்தை அவர்களுக்குள்ளே உப
தேசம்பண்ணிக்கொண்டு வந்தான்.
௰௨. பின்பு கல்லியோன் என்பவன் அகா
யா நாட்டிலே பிரதிதுரையானபொழுது,
யூதர்கள் ஒருமனப்பட்டு, பவுலுக்கு விரோ
தமாய் எழும்பி, அவனை நியாயாசனத்திற்
கு முன்பாகக்கொண்டுபோய்,
௰௩. இவன் வேததூலுக்கு விரோதமான
விதமாய், பராபரனைச்சேவிக்கும்படி மனி
தருக்குப்போதிக்கிறான் என்றார்கள்.
௰௪. அதற்கு, பவுல் தன் வாயைத்திறக்
கையிற் கல்லியோன் யூதருடனே சொன்ன
தாவது; யூதரே! இது அநீதி. அல்லது மி
கவும் பொல்லாங்கான காரியமானால் நான்
உங்களுக்குப்பொறுமையாய், செவிகொ
டுக்க நியாயம் உண்டாயிருக்கும்.
௰௫. இது உபதேசத்திற்கும், நாமங்களுக்
கும், உங்கள் வேதநூலுக்கும் ஏற்ற தருக்க
மானபடியினாலே இப்படிப்பட்டவைகளைக்
குறித்து, நான் நியாயாதிபதியாய் இருக்க
விரும்புகிறதில்லை. ஆகையால், நீங்களே
பார்ப்பீர்களாகவென்று சொல்லி,
௰௬. அவர்களை நியாயாசனத்தைவிட்டுப்
போகப்பண்ணினான்.
௰௭. அப்பொழுது கிரேக்கர் எல்லாருஞ்
செப ஆலயத்தலைவனாகிய சொஸ்தனே
யைப்பிடித்து, நியாயாசனத்திற்குமுன்பா
கத்தானே அடித்தார்கள். அதைக்குறித்
து, கல்லியோன் விசாரணைபண்ணாமலிருந்
தான்.
௰௮. பின்னும் பவுல் அநேகநாள் அங்கே
தரித்திருந்தபின்பு, அவன் சகோதரருடைய
உத்தரவு வாங்கிக்கொண்டு, தனக்கொரு
* பிரார்த்தனை உண்டாயிருந்தபடியாற்
கெங்கிரேயா பட்டினத்திலே சிரச்சவரம்
பண்ணி, சீரியாத்தேசத்திற்குப்போகும்ப
டி கப்பலேறிப்போனான். பிரிஸ்கில்லா
ளும், ஆக்கில்லாவும் அவனுடனேகூடப்
போனார்கள். * ௪ மோ. ௬: ௫.
௰௯. அவன் எபேசு பட்டினத்திற்குச்சேர்
ந்தபொழுது, அவர்களை யங்கேவிட்டுச்செ
ப ஆலயத்திற்குட்பிரவேசித்து, யூதருடனே
சம்பாஷணைபண்ணினான்.
௨௰. அவர்கள் அவனைச்சிலகாலந் தங்களு
டனே இருக்கவேண்டுமென்று கேட்டுக்
கொண்டபொழுது, அவன் சம்மதியாமல்,
௨௧. வருகிறபண்டிகையிலே நான் எப்
படியும் எருசலேமில் இருக்கவேண்டும்.
† பராபரனுக்குச்சித்தமானால், திரும்பி
உங்களிடத்தில் வருவேனென்று சொல்லி,
அவர்களுடைய உத்தரவு வாங்கிக்கொண்டு,
கப்பலேறி எபேசு பட்டினத்தைவிட்டு,
* ௰௯: ௨௧. ௨௰: ௰௬. † ௧ கொரிந். ௪:
௰௯. எபிரே. ௬: ௩. யாக். ௪: ௰௫.
௨௨. செசாரியா பட்டினத்திற்குப்போ
ய், பின்பு (எருசலேமுக்குப்) போய், சபை
யாரின் சுகத்தை விசாரித்துக்கொண்டு,
பின்பு அந்தியோகியா வூருக்குச்சென்று,
௨௩. அங்கே சிலகாலஞ் சஞ்சரித்து, பின்
பு புறப்பட்டு, கலாத்தியா நாட்டிலேயும்,
பிரீகியா நாட்டிலேயும், ஊர்கள்தோறுந்
திரிந்து, சீஷரெல்லாரையும் ஸ்திரப்படுத்
திக்கொண்டு வந்தான்.

௨௪. அக்காலத்திலே அலெக்சந்திரியா
பட்டினத்திற் பிறந்தவனுமாய், சாதுரியவா
னுமாய், வேத எழுத்துக்களில் வல்லவனு
மாய் இருக்கிற அப்பொல்லோஸ் என்று
பேர்கொண்ட ஒரு யூதன் எபேசு பட்டி
னத்திற்குப்போனான்.
௨௫. அவன் கர்த்தருடைய மார்க்கத்
தைக்குறித்து உபதேசங்கேட்டு, யோவான்
கொடுத்த ஸ்நானத்தைமாத்திரம் அறிந்த
வனாய் இருந்தும், கர்த்தாவுக்குரியவைகளை
மிகுந்த சாக்கிரதையுள்ள மனதோடே பே
சித்திட்டமாய், போதகம்பண்ணிக்கொண்
டு வந்தான்.
௨௬. செப ஆலயத்திலே தயிரியமாய்ப்
பேசினான். ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லா
ளும் அவன் பேசுகிறதைக்கேட்டபொழு
து, அவனைச்சேர்த்துக்கொண்டு, பராபர
னுடைய மார்க்கத்தை அவனுக்கு அதிக
திட்டமாய்க்காண்பித்தார்கள்.
௨௭. பின்பு அவன் அகாயா நாட்டிலே
போகவேண்டுமென்றிருக்கையில், சீஷர்கள்
அவனை உபசாரஞ் செய்யும்படிக்கு, சகோ
தரர் அவர்களுக்கு எழுதினார்கள்.
௨௮. அவன் அங்கே சேர்ந்த பின்பு, அ
வன் வெளியரங்கமாய் யூதர்களுடனே பல
மாய்த்தருக்கம்பண்ணிக்கொண்டு, இயேசு
வே கிறிஸ்து என்று வேதவாக்கியங்களா
லே தெளிவாய்க்காண்பித்தபடியால் கிரு
பையினாலே விசுவாசிகளாய் இருந்தவர்க
ளுக்கு, * மிகுந்த உதவியாய் இருந்தான்.
* ௧ கொரி. ௩: ௬.

௰௯ அதிகாரம்.

[(௧) பவுல் கைகளைவைத்ததால் பரிசுத்த
ஆவி யளிக்கப்பட்டது. (௯) அவனுடைய
உபதேசங்களை யூதர்கள் தூஷணித்தும்,
அவைகள் அற்புதங்களால் மெய்ப்பிக்கப்
பட்டன. (௰௩) யூதர்களுக்குள்ளிருந்த மந்
திரவாதிகள், (௰௬) பசாசினால் அடிக்கப்
பட்டது. (௰௯) மந்திர தந்திர புஸ்தகங்
கள் சுட்டெரிக்கப்பட்டது. (௨௪) தெ
மேத்திரியு ஆதாயத்தினிமித்தம் பவுலுக்கு
விரோதமாய்ப்பண்ணின கலகத்தை, (௩௫)
சம்பிரதி அமர்த்தினது.]

அப்பொல்லோஸென்பவன் கொரிந்
து பட்டினத்தில் இருக்கையில், ப
வுல் மேலான தேசங்களில் திரிந்துகொண்டு,
எபேசு பட்டினத்திற்குப்போனபொழுது,
௨. சில சீஷரைக்கண்டு, நீங்கள் விசுவாசி
களானபொழுது, பரிசுத்த ஆவியைப்பெற்
றுக்கொண்டீர்களாவென்றான். அதற்கவர்
கள் பரிசுத்த ஆவி யுண்டென்று நாங்கள்
கேள்விப்படவும் இல்லையென்றார்கள்.
௩. அப்பொழுது அவன் சொன்னது, அப்
படியானால், எப்படிப்பட்ட ஞானஸ்நானம்
பெற்றீர்கள் என்றான். அவர்கள் * யோ
வான் கொடுத்த ஸ்நானத்தைப்பெற்றோம்
என்றார்கள். * ௰௮: ௨௫.
௪. அப்பொழுது பவுல் சொன்னது, யோ
வான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்
து இயேசுவை விசுவாசிக்கவேண்டும் என்று
சனங்களுக்குச்சொல்லி, மனந்திரும்புதற்கு
ஏற்ற ஞானஸ்நானத்தைக்கொடுத்தானே
என்றான்.
௫. அதை அவர்கள் கேட்டபொழுது அ
வர்கள் கர்த்தராகிய இயேசுவினுடைய
நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்.
௬. அல்லாமலும், பவுல் அவர்கள்மேலே
கைகளை வைத்தபொழுது, * பரிசுத்த ஆவி
யானவர் அவர்களிடத்தில் வந்தார். அவர்
கள் அந்நியபாஷைகளைப்பேசி, தீர்க்கதரி
சனஞ் சொன்னார்கள். * ௨: ௪.
௭. அந்த மனிதர் எல்லாரும் ஏறக்குறை
யப்பன்னிரண்டுபேராம்.
௮. பின்பு (பவுல்) செப ஆலயத்திற்குப்
போய்த் தயிரியமாய்ப் பிரசங்கம்பண்ணி,
மூன்றுமாதமளவும் பராபரனுடைய இராச்
சியத்திற் குரியவைகளைப்பேசி, தெளிவாய்க்
காண்பித்துக்கொண்டு வந்தான்.
௯. சிலர் கடினமான மனதுள்ளவர்களு
மாய் அவிசுவாசிகளுமாய் இருந்து, கூட்
டத்திற்கு முன்பாக இந்த மார்க்கத்தை
நிந்தித்தபொழுது, அவன் அவர்களை விட்டு
விலகி, சீஷரை அவர்களில் இருந்து பிரித்
துக்கொண்டு, திறன்னு என்பவனுடைய
பள்ளிக்கூடத்திலே நாள்தோறுஞ் சம்பா
ஷித்துக்கொண்டு வந்தான்.
௰. இப்படி இரண்டுவருஷம் நடந்தது.
அதினாலே ஆசியாவிலே குடியிருந்த யூதர்
கள், கிரேக்கர் இவர்கள் எல்லாருங் கர்த்த
ராகிய இயேசுவைக்குறித்து வசனத்தைக்
கேள்விப்பட்டார்கள்.
௰௧. அன்றியும், * அதிசயமான அற்புதங்
களை, பராபரன் பவுலின் கைகளினாலே
செய்து வருகையில், * ௰௪: ௩.
௰௨. * அவனுடைய சரீரத்தில் இருந்த
வேர்வைச்சேலைகளையும், கச்சைகளையும்
வியாதி யுள்ளவர்கள்மேல் வைத்தவுடனே,
வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயி
ன. பொல்லாத ஆவிகளும் அவர்களில் இ
ருந்து புறப்பட்டன. * ௫: ௰௫, ௰௬.
௰௩. அப்பொழுது தேசாந்திரிகளாய்த்தி
ரிகிற மந்திரவாதிகளாகிய யூதரிற் சிலர்
பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள்
மேற் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச்
சொல்லத்துணிந்து, பவுல் பிரசங்கிக்கிற இ
யேசுவின்பேரிலே உங்களுக்கு ஆணையிடுகி
றோம் என்றார்கள்.
௰௪. பிரதான ஆசாரியனாகிய இஸ்கேவா

வென்னும் யூதனுடைய குமாரர் ஏழுபேர்களே அப்படிச்செய்தார்கள்.

௰௫. அவர்களுக்கு உத்தரவாகப்பொல்லாத ஆவி சொன்னதாவது; இயேசுவை அறிந்திருக்கிறேன். பவுலையும் அறிவேன். நீங்கள் யாரென்று சொன்னவுடனே,

௰௬. பொல்லாத ஆவியை உடைய மனிதன் அவர்கள்மேற் பாய்ந்து, அவர்களைத் தனக்குட்படுத்திச்செயிக்க, அவர்கள் நிருவாணிகளாயும், காயம்பட்டவர்களாயும் அந்த வீட்டைவிட்டோடிப்போனார்கள்.

௰௭. அது எபேசிலே குடியிருக்கிற யூதர், கிரேக்கரெனவருக்குந் தெரியவந்தபொழுது, அவர்கள் எல்லாரும் பயம் அடைந்தார்கள். அல்லாமலும், கர்த்தராகிய இயேசுவின் நாமம் அவர்களுக்குள்ளே மேன்மைப்பட்டது.

௰௮. அன்றியும், விசுவாசிகளானவர்களில் அநேகர் சேர்ந்து, தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி, அறிக்கை யிட்டார்கள்.

௰௯. அன்றியும், வீண்வித்தைக்காரராய் இருந்தவர்களில், அநேகர் தங்கள் புஸ்தகங்களைக்கொண்டு வந்து, எல்லார் முன்பாகவுஞ் சுட்டெரித்தார்கள்.

௨௰. அவைகளின் கிரயம் ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசென்று மதிக்கப்பட்டது. இவ்வளவு பலமாய்க் * கர்த்தருடைய வசனம் வளர்ந்து வல்லமையைக்காண்பித்தது. * மத். ௰௩: ௩௧, ௩௨. ஏசா. ௫௫: ௰௧.

௨௰௧. இவை நிறைவேறின பின்பு பவுல் மக்கேதோனியா, அகாயா வென்னுந் தேசங்களின் வழியாய் எருசலேமுக்குப்போகும்படி மனதிலே யோசனைகொண்டு, நான் அங்கேயிருந்து, பின்பு * உரோமை நகரியையும் பார்க்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, * உரோ. ௰௫: ௨௩—௨௮.

௨௰௨. தனக்கு உதவிசெய்தவர்களில் இரண்டுபேராகிய தீமோத்தேயுவையும், எரஸ்துவையும் மக்கேதோனியா நாட்டிற்கனுப்பி, தான் பின்னுஞ் சில காலம் ஆசியாநாட்டிலே யிருந்தான்.

௨௰௩. அக்காலத்திற்குள்ளே * இந்தமார்க்கத்தைக்குறித்து மிகுந்த கலகம் உண்டாயிற்று. * ௨ கொரி. ௧: ௮—௰.

௨௰௪. எப்படியென்றால், தேமேத்திரியென்று நாமமுள்ள ஒருதட்டான் தியானாள் தேவிக்காக வெள்ளியினாற் சிறுகோவில்களைச் செய்துகொண்டு, தொழிலாளிகளுக்கு மிகுந்த * ஆதாயம் வருவித்து வந்தான். * ௰௬: ௰௯.

௨௰௫. அவர்களையும், அப்படிப்பட்டதொழிலைச்செய்கிற மற்றவர்களையும், அவன் கூடிவரச்செய்து சொன்னதாவது; மனிதர்களே! உங்களுக்குத்தெரிந்திருக்கிறபடி, பிழைப்பு இந்தத்தொழிலினாலே நமக்குவருகின்றது.

௨௰௬. மேலும் நீங்கள் கண்டும், கேட்டும் இருக்கிறபடி, அந்தப்பவுல் என்பவன் கைகளாற் செய்யப்பட்டவைகள் தேவர்களல்லவென்று சொல்லி, எபேசிலே மாத்திரமல்ல கொஞ்சங் குறைய ஆசியாநாட்டிலெங்கும் அநேக சனங்களுக்குப்போதித்து, அவர்களை மாறுபாடாக்குகிறான்.

௨௰௭. அதினாலே நம்முடைய அலுவல் கனவீனமடைவதற்கு ஏதுவாய் இருக்கிறதுமல்லாமல் மகாதேவியாகிய தியானாளுடைய கோவில் எண்ணமற்றுப்போகிறதற்கும், ஆசியாதேசத்தார் எல்லாராலும், பூச்சக்கரத்திலுள்ள யாவராலுஞ் சேவிக்கப்படுகிற அவளுடைய மகிமை அழிந்துபோகிறதற்கு மேதுவுண்டாய் இருக்கின்றதென்றான்.

௨௰௮. அதை யவர்கள் கேட்டு, மிகுந்த கோபம் அடைந்து, எபேசியருடைய தியானாளே பெரியவள் என்று கூப்பிட்டுக்கொண்டார்கள்.

௨௰௯. பட்டின முழுவதுங் கலக்கத்தினாலே நிரப்பப்பட்டது: மேலும் அவர்கள் பவுலுடனே கூடப்பிரயாணமாய் வந்த மக்கேதோனியராகிய காயுவையும், அரிஸ்தருகுவையும் இழுத்துக்கொண்டு ஒருமனப்பட்டு வேடிக்கைஸ்தலத்திற்குப் பாய்ந்தோடினார்கள்.

௩௰. அப்பொழுது பவுல் கூட்டத்திற்போகமனதாய் இருந்தான். சீஷர் அவனைப் போக விடவில்லை.

௩௰௧. மேலும் வேடிக்கை ஸ்தலத்திற்கு அவன் போகாமல் இருப்பதற்கு வேண்டிக்கொள்ளும்படிக்கு, அவனுடைய சிநேகிதராகிய ஆசியாதேசத்தலைவரிற் சிலர் அவனிடத்திற்கு ஆளனுப்பினார்கள்.

௩௰௨. அன்றியுங் கூட்டங் கலக்கமுள்ளதாய் இருக்க, அநேகர் தாங்கள் கூடிவந்த காரணத்தை அறியாதவர்களானபடியினாலே, சனங்கள் பலவிதமாய்க்கூக்குரல் இட்டார்கள்.

௩௰௩. அப்பொழுது யூதர்கள் அலெக்குசந்தர் என்பவனை முன்னிற்கத்தள்ளுகையிற் கூட்டத்திற் சிலர் அவனை முன்னே இழுத்தார்கள். அலெக்குசந்தர் கையினால் சயிக்கைகாட்டி, சனங்களுக்கு உத்தரவு சொல்ல விரும்பினான்.

௩௰௪. அவனை யூதன் என்று அவர்கள் அறிந்தபொழுது, எல்லாரும் எபேசியருடைய தியானாளே பெரியவள் என்று இரண்டுமணி நேரமளவும், ஏகமாய்க்கூப்பிட்டுக்கொண்டார்கள்.

௩௰௫. பின்பு மணியக்காரனானவன் சனங்கள் பேசாமல் இருக்கும்படிசெய்து, சொன்னதாவது; எபேசியரே! எபேசிபட்டினம் மகா தேவியாகிய தியானாளுக்கும், வானத்தில் இருந்து விழுந்த சொரூபத்திற்

கும், கோவில் பரிசாரகியாய் இருக்கிறதை யறியாதவனுண்டா?

௩௬. அது எதிர்ப்பேசப்படாத காரியமானபடியினாலே நீங்கள் ஒன்றும் பதறிச் செய்யாமல் அமைந்திருக்கவேண்டும்.

௩௭. இந்த மனிதர் கோவிற் கொள்ளைக்காரரல்ல, உங்கள் தேவியைத் தூஷணித்தவர்களுமல்ல, இப்படியிருந்தும் இவர்களை இங்கேகொண்டு வந்தீர்கள்.

௩௮. தேமேத்திரியுக்கும், அவனைச்சேர்ந்திருக்கிற தொழிற்காரருக்கும் ஒருவன்மேல் ஒருகாரியம் உண்டாய் இருந்தால நியாயம் விசாரிக்கும் நாள்களும், துரைகளும் இருக்கிறபடியினாலே ஒருவருக்கொருவர் விரோதமான பிராது அங்கே பண்ணக்கடவர்கள்.

௩௯. நீங்கள் வேறொருகாரியத்தை விசாரித்தால், அது நியாயசங்கத்திலே தீர்க்கப்படுமே.

௪௰. இன்றைக்குண்டான கலகத்திற்காக நாம் உத்தரவுசொல்ல அழைக்கப்படுவதற்கு ஏதுவுண்டாய் இருக்கின்றது. இந்தக் கலகம் பண்ணுவதற்கு நிமித்தம் இல்லாதபடியால், நாம் அதைக்குறித்து உத்தரவு சொல்லத்திராணி இல்லாதிருப்போமேயென்று சொல்லி,

௪௧. பின்பு கூட்டத்தை யனுப்பிவிட்டான்.

௨௰ அதிகாரம்.

[(௧) பவுல் மக்கேதோனியாவுக்குப்போனது. (௭) அவன் கர்த்தருடைய இராப்போசனத்தைப்பகிர்ந்து பிரசங்கித்தது. (௯) ஐத்திருவிழுந்து செத்தபின்பு, (௰) உயிரோடெழுப்பப்பட்டது. (௰௭) மிலேத்துவிலிருந்த மூப்பர்களை அழைப்பித்து, அவர்களுக்குத் தனக்குச்சம்பவிக்கப் போகிறதைச் சொல்லி, (௨௮) பராபரனுடைய சபையை அவர்களுக்கு ஒப்புவித்து, (௨௯) கள்ளப்போதகர்களுக்கு எச்சரிக்கையாய் இருக்கச்சொல்லி, (௩௨) அவர்களைப்பராபரனுடைய கிருபைக்கொப்புவித்து, (௩௬) அவர்களோடே செபம்பண்ணிப்பயணப்பட்டது.]

கலகம் அமைந்தபின்பு, பவுல் சீஷரைத் தன்னிடத்தில் அழைத்து, உத்தரவு வாங்கிக்கொண்டு, * மக்கேதோனியாவுக்குப்போகப்புறப்பட்டுப்போய், அந்தப்புறங்களில் திரிந்துகொண்டு, * ௧ தீமோ. ௧: ௩.

௨. சீஷர்களுக்கு அநேக வார்த்தைகளினால் புத்திசொல்லிக்கொண்டு கிரேக்கைதேசத்திலே சேர்ந்தான்.

௩. அங்கே மூன்றுமாதஞ் சஞ்சரித்தபின்பு, அவன் கப்பலேறிச்சீரியா நாட்டிற்குப் போக மனதாயிருந்தபொழுது, யூதர்கள் அவனுக்குத்தீமைசெய்ய இரகசியமாய் யோசனைகொண்டிருந்தபடியால், மக்கேதோனியா நாட்டின் வழியாய்த்திரும்பிப் போகத்தீர்மானம் பண்ணினான்.

௪. அப்பொழுது ஆசியாதேசம்வரைக்கும் அவனோடுகூடப்போனவர்கள் பெரோசியாவூரானாகிய சொப்பத்தர், தெசலோனிக்கேயரில் அரிஸ்தருக்கு, செக்குந்து, தெருபேயனாகிய காயு, தீமோத்தேயு, ஆசியா தேசத்தாராகிய திகிக்கு, திரோப்பிமு இவர்களே.

௫. அவர்கள் முன்னாகப்போய்த்துரோவா பட்டினத்திலே நாங்கள் வரும்படி காத்திருந்தார்கள்.

௬. நாங்கள் புளியாத அப்பப்பண்டிகை நாள்களுக்குப்பின்பு, கப்பலேறிப்பிலிப்பி பட்டினத்தைவிட்டு, ஐந்துநாளுக்குள்ளே துரோவா பட்டினத்திலே அவர்களிடத்திற் சேர்ந்து அங்கே ஏழுநாள் சஞ்சரித்தோம்.

௭. அப்பொழுது வாரத்து முதல்நாளிலே சீஷர் * அப்பம் பிட்கும்படிக்குக்கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே பேசிக்கொண்டு பாதிராத்திரியளவும் பிரசங்கத்தை நீடித்துப்பேசினான். * ௨: ௪௨.

௮. நாங்கள் கூடியிருந்த மெத்தைவீட்டிலே அநேகவிளக்குகள் வைக்கப்பட்டிருந்தன.

௯. அப்பொழுது, ஐத்திருவென்று பேர்கொண்ட ஒரு வாலிபன் சாளரவாசலில் உட்கார்ந்திருந்து, பவுல் மிகுந்தகாலம் பேசிக்கொண்டுவருகையில் கனதூக்கம் அடைந்து, நித்திரையினால் செயிக்கப்பட்டுச் சாய்ந்து, மூன்றும் மெத்தையிலிருந்து தாழவிழுந்து மரித்தவனாய் எடுக்கப்பட்டான்.

௰. உடனே பவுல் இறங்கிப்போய் * அவன்மேலே விழுந்து அணைத்துக்கொண்டு, பின்பு உயிர் இவனுக்குள் இருக்கின்றதாகையால் கலங்கப்படாதிருங்களென்றுசொல்லி, * ௧ இரா. ௰௭: ௨௧.

௰௧. பின்பு ஏறிப்போய், அப்பம்பிட்டுப் புசித்து, மிகுந்தநேரம் விடியற்காலமளவும் பேசிக்கொண்டு பின்பு புறப்பட்டான்.

௰௨. அந்த வாலிபனை அவர்கள் உயிருள்ளவனாக அழைத்துவந்து, மிகவும் ஆறுதல் அடைந்தார்கள்.

௰௩. பவுல் (அசுபட்டினம் வரைக்கும்) தான் காலால் நடக்க விரும்பி, நாங்கள் முன்னாலே கப்பலேறி அவ்விடத்திற்குப் போய், அங்கே தன்னை யேற்றிக்கொள்ளும்படி எங்களுக்கு உத்தரவு கொடுத்தபடியினாலே, நாங்கள் அசுபட்டினத்திற்குப்போயிருந்தோம்.

௰௪. பின்பு அவன் அவ்விடத்திலே எங்க

ளோடே சேர்ந்தபொழுது, நாங்கள் அவ
னை யேற்றிக்கொண்டு மித்திலேனு பட்டி
னத்திற்குப்போய்,
௰௫ பின்பு அவ்விடத்தைவிட்டு மறுநாளி
லே கீயுதீவுக்கு எதிராகச்சென்று,
௰௬. பவுல் எப்படியும் பெந்தேகோஸ்துப்
பண்டிகைநாளிலே, எருசலேம் நகரத்திற்
சேரவேண்டுமென்று தீவரப்பட்டபடியினா
லே, அவன் ஆசியா நாட்டிலே காலம்
போக்காதபடிக்கு, எபேசு பட்டினத்தைக்
கடந்துபோக வேண்டுமென்று தீர்மானம்
பண்ணினதால், மறுநாளிலே சாமுதீவை
யடைந்து, துரோகில்லியோனூர்த்துறையி
லே தங்கி, மறுநாளிலே மிலேத்து பட்டி
னத்திற்குப்போனோம்.
௰௭. மிலேத்திலிருந்து, அவன் எபேசிலுள்
ள சபையின் மூப்பரை அழைத்துவரும்ப
டிக்கு ஆளனுப்பினான். அவர்கள் தன்னி
டத்திற் சேர்ந்தபொழுது,
௰௮. அவன் அவர்களுடனே சொன்னதா
வது; நான் ஆசியாநாட்டில்வந்த முதலாம்
நாள்தொடங்கி,எல்லாக்காலங்களிலும்நான்
உங்களுடனேகூடவிருந்த வகையை அறிந்
திருக்கிறீர்கள்.
௰௯. எல்லாவிதமான மனத்தாழ்மையோ
டும், மிகுந்த கண்ணீரோடும், யூதருடைய
தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்
ட சோதனைகளோடும், நான் கர்த்தருக்கூ
ழியஞ் செய்துகொண்டு வந்தேன்.
௨௰. பிரயோசனமானவைகளில் ஒன்றை
யும் நான் மறைத்துவைக்கவில்லை. வெளி
யரங்கமாயும் வீடுகள்தோறும் உங்களுக்
கறிவித்து, உங்களுக்கு உபதேசம் பண்
ணிக்கொண்டுவந்தேன்.
௨௧. * பராபரனிடத்திற்கு மனந்திரும்பு
தலையும், நம்முடைய கர்த்தராயிருக்கிற இ
யேசுக்கிறிஸ்துவை விசுவாசித்துக்கொள்ளு
தலையுங்குறித்து, நான் யூதருக்கும், கிரேக்
கருக்குஞ் சாட்சிகொடுத்தேன். * மாற்.
௧: ௰௫.
௨௨. இப்பொழுது நான் ஆவியிலே கட்
டுண்டு எருசலேமுக்குப்போகிறேன். அங்
கே எனக்கு எதிர்ப்படுங் காரியங்களை நான்
அறியேன்.
௨௩. கயிறுகளும், உபத்திரவங்களும் எனக்
காக வைத்திருக்கின்றனவென்று, பரிசுத்த
ஆவியானவர் பட்டினந்தோறும் (எனக்கு)
அறிவிக்கிறதைமாத்திரம் அறிந்து இருக்கி
றேன்.
௨௪. அப்படியிருந்தும் அவைகளிலொன்
றையுங்குறித்துக்கவலைப்படேன். என் பிரா
ணனையும் நான் அருமையென்றெண்ணேன்.
என் ஓட்டத்தைச்சந்தோஷத்தோடே மு
டிக்கவும், * பராபரனுடைய கிருபையை
அறிவிக்கிற சுவிசேஷத்தைப்பிரசங்கம்பண்
ணும்படிக்கு, நான் கர்த்தராகிய இயேசு
வினிடத்திற்பெற்ற ஊழியத்தை முடிக்கவு
மே விரும்புகிறேன். * ௨௧: ௰௩.
௨௫. அன்றியும், நான் உங்களுக்குள்ளே
திரிந்து, பராபரனுடைய இராச்சியத்தைக்
குறித்துப்பிரசங்கம் பண்ணிக்கொண்டுவந்
தேனே. அதைக்கேட்டவர்களாகிய நீங்க
ளெல்லாரும் இனி என் முகத்தைப்பார்க்க
மாட்டீர்களென்று அறிந்திருக்கிறேன்.
௨௬. அப்படியிருக்கப்பராபரனுடைய ஆ
லோசனையில் ஒன்றையும் நான் மறைத்து
வையாமல், யாவையும் உங்களுக்கு அறி
வித்தபடியினாலே,
௨௭. உங்களில் ஒருவன் கெட்டுப்போனால்,
அதினாலே யெனக்குக்குற்றம் வருவதில்லை
யென்று, இன்றைக்கே உங்களுக்குச்சாட்
சியாகச்சொல்லுகிறேன்.
௨௮. ஆகையால், நீங்கள் உங்களைக்குறித்
தும், பராபரன் தமது சுய இரத்தத்தினாலே
சம்பாதித்துக்கொண்ட தமது சபையாகிய
ஆட்டுக்கூட்டம் முழுவதையும், மேய்ப்ப
தற்குப்பரிசுத்த ஆவி உங்களைக்கண்காணிக
ளாக, வைத்தபடியால், அதைக்குறித்தும்,
எச்சரிக்கையாயிருப்பீர்களாக.
௨௯. மேலும் நான் போனபின்பு, ஆட்டுக்
கூட்டத்தைத்தயையோடே நடப்பியாமல்,
* கொடிதாயிருக்கிற கோனாய்கள் உங்க
ளுக்குள்ளே பிரவேசிக்கும். * மத். ௭: ௰௫.
௩௰. அதுவுமல்லாமல், * உங்களிலுஞ் சி
லர் எழும்பி, சீஷர்களைத்தங்களிடத்தில் இ
ழுத்துக்கொள்ளும்படிக்கு, மாறுபாடான
வைகளைப்போதிப்பார்களென்று அறிந்தி
ருக்கிறேன். * சங்கீ. ௪௧: ௯.
௩௧. ஆனபடியினாலே, நீங்கள் விழித்துக்
கொண்டு, நான் மூன்று வருஷமாய் இரவும்,
பகலும் அவனவனுக்குக்கண்ணீரோடே
புத்திசொல்லிக்கொண்டுவந்ததை நினைத்
துக்கொள்வீர்களாக.
௩௨. இப்பொழுது சகோதரரே! பராபர
னுக்கும், அவருடைய கிருபையை அறிவிக்
கிற வார்த்தைக்கும் உங்களை யொப்புக்கொ
டுக்கிறேன். அவரே உங்களை யெறக்கட்ட
வும், பரிசுத்தமாக்கப்பட்ட எல்லாரும் இ
ருக்கிற இடத்திலே சுதந்தரத்தை உங்க
ளுக்குக்கொடுக்கவும் வல்லமையுள்ளவராயி
ருக்கிறார்.
௩௩. * ஒருவனுடைய வெள்ளியையாகி
லும், பொன்னையாகிலும், உடுப்பையாகி
லும் நான் இச்சிக்கவில்லை. * ௧ சாமு.
௰௨: ௩—௫.
௩௪. நீங்கள் அறிந்திருக்கிறபடி நானும்,
என்னுடனேகூட இருந்தவர்களும் வேண்
டிய பதார்த்தங்களை அடையும்படிக்கு,
* இந்தக்கைகளே வேலைசெய்தன. * ௧
கொரி. ௪: ௰௨.

௩௫. அப்படியே வேலைசெய்து, பலவீன
ரைத் தாங்கவும், வாங்குகிறதிலுங் கொடுக்
கிறதே பாக்கியமென்று, கர்த்தராகிய இ
யேசுசொன்ன வசனங்களை நினைக்கவும்
வேண்டுமென்று, எல்லாவிதத்தாலும் உங்
களுக்குக்காண்பித்தேனென்றுசொல்லி,

௩௬. பின்பு * முழங்காற்படியிட்டு, அவர்
கள் எல்லாரோடுங்கூடச்செபம்பண்ணி
ன். * ௨௧: ௫.

௩௭. இனிமேல் நீங்கள் என்னுடைய மு
கத்தைப்பார்க்க மாட்டீர்களென்று, அவன்
சொன்ன வசனத்திற்காக அவர்களெல்லா
ரும் அதிகமாய்த்துக்கப்பட்டு,

௩௮. மிகவும் அழுதுகொண்டு, பவுலின்
கழுத்தைக்கட்டிக்கொண்டு அவனை முத்
தஞ்செய்து, பின்புகப்பல்வரைக்கும் அவனு
டனேகூடப்போய் அனுப்பிவிட்டார்கள்.

௨௧ அதிகாரம்.

[(௧) பவுல் எருசலேமுக்குப்பயணமானது.
(௯) பிலிப்பின் குமாரத்திகள் தீர்க்கதரிச
னஞ் சொல்லுகிறவர்களாயிருந்தது. (௰௭)
பவுல் எருசலேமுக்குவந்து, (௨௭) யூதர்க
ளால் பிடிக்கப்பட்டபோது, (௩௧) பிரதான
சேர்வைக்காரனால் விடுதலையாகி, சனங்க
ளிடத்திற் பேசும்படி உத்தரவுபெற்றது.]

நாங்கள் அவர்களை விட்டுப்பிரிந்து
துறைபேர்ந்தபின்பு, நேராய்ப்போ
ய்க்கோஸ்தீவிற்சென்று மறுநாளில். உரோ
து தீவிற்சென்று அதினின்று பத்தராப்பட்
டினத்திற்குப்போய்,

௨. அங்கே பேனீக்கே தேசத்திற்குப்போ
க எத்தினமாய் இருந்த கப்பலைக்கண்டு,
அதிலேறிப்போய்ச்சீப்புரு தீவைக்கண்டு,

௩. அதை யிடதுபுறமாகவிட்டு, சீரியாநா
ட்டிற்கோடி, தீருபட்டினத்திலே அவர்க
ள் கப்பலின் சரக்குகளை யிறக்கவேண்டிய
படியால் அவ்விடத்திலே சேர்ந்து,

௪. பின்பு சீஷரைக்கண்டு, ஏழுநாள் அங்
கே தங்கினோம். அவர்கள் பவுலை நோக்கி,
நீர் * எருசலேமுக்குப்போகக்கூடாதென்
று ஆவியினாலே சொன்னார்கள். * ௨௰:௨௩.

௫. நாங்கள் அந்நாள்களை முடித்த பின்பு
புறப்பட்டுப்போனபொழுது, அவர்கள் எல்
லாரும் மனைவிகளோடும், பிள்ளைகளோடுங்
கூட, பட்டினத்திற்குப்புறம்பே (சற்றுத்
தூரம்) வரைக்கும் எங்களை வழிநடத்தினார்
கள். கடற்கரையிலே நாங்கள் * முழங்காற்
படியிட்டுச்செபம்பண்ணி, * ௨௰: ௩௬.

௬. ஒருவரிடத்திலே யொருவர் உத்தரவு
வாங்கிக்கொண்டபின்பு, நாங்கள் கப்பலே
றினோம். அவர்கள் தங்கள் வீடுகளுக்குத்
திரும்பினார்கள்.

௭. நாங்கள் தீரு பட்டினத்தைவிட்டு, பித்
தோலேமாயா பட்டினத்திற்குப்போய்க்
கப்பல் யாத்திரை முடித்து, சகோதரரை
வாழ்த்தி, ஒருநாள் அவர்களிடத்தில் தங்கி
னோம்.

௮. மறுநாளிலே பவுலைச்சேர்ந்த நாங்
கள் புறப்பட்டு, சேசாரியா பட்டினத்திற்
குப்போய், * ஏழுபேரில் ஒருவனாகிய பிலிப்
பென்னுஞ் சுவிசேஷகனுடைய வீட்டிற்
குச்சென்று அவனிடத்திலே தங்கினோம்.
* ௬: ௫—௮. ௮: ௫—௰௩.

௯. அவனுக்கு உண்டான குமாரத்திகளா
கிய நான்கு கன்னிகைகளுந் * தீர்க்கதரிச
னஞ் சொல்லுகிறவர்களாய் இருந்தார்கள்.
* ௨: ௰௭. யோவே. ௩: ௧, ௨.

௰. பின்னும், நாங்கள் அநேகநாள் அங்கே
தங்கி இருக்கையில், * அகாபு என்று பேர்
கொண்ட ஒரு தீர்க்கதரிசி யூதேயாவில்
இருந்து வந்திருந்தான். * ௰௧: ௨௮.

௰௧. அவன் எங்கள் இடத்தில் வந்து, பவு
லினுடைய கச்சையை யெடுத்து, தன் கை
களையும், கால்களையுங் கட்டிக்கொண்டு, இந்
தக்கச்சையை உடையவனை எருசலேமில்
உள்ள யூதர்கள் இப்படிக்கட்டி, புறத்தே
சத்தார்களுடைய கைகளில் ஒப்புக்கொடுப்
பார்கள் என்று, * பரிசுத்த ஆவி சொல்லு
கிறார் என்றான். * ௨௰: ௨௩.

௰௨. அதை நாங்கள் கேட்டபொழுது,
அவன் எருசலேமுக்குப்போகாதபடிக்கு,
நாங்களும், அத்தலத்தாரும் வேண்டிக்
கொண்டோம்.

௰௩. பவுல் மாறுத்தரவாகச்சொன்னதாவ
து; நீங்கள் அழுதுகொண்டு, என் இருதயம்
உடைந்துபோகப்பண்ணுகிறதென்ன? எரு
சலேமிலே நான் கர்த்தராகிய இயேசுவின்
நாமத்திற்காகக்கட்டப்படுவதற்கு மாத்திர
மல்ல, மரிப்பதற்கும் * எத்தினமாய் இருக்
கிறேனென்றான். * ௨௰: ௨௪.

௰௪. இப்படி யவன் சம்மதியாதபடியினா
லே, நாங்கள் கர்த்தருடைய சித்தம் ஆகக்
கடவதென்று அமைந்திருந்தோம்.

௰௫. அந்நாள்களுக்குப்பின்பு, நாங்கள் பி
ரயாண சாமான்களைச்சேர்த்துக்கொண்டு
எருசலேமுக்குப்போனோம்.

௰௬. சேசாரியா பட்டினத்திலுள்ள சீஷ
ரிற் சிலரும் எங்களுடனேகூட வந்து, சீப்
புரு தீவானுமாய், மிகுந்த காலஞ் சீஷனு
மாய் இருந்த மினாசோனித்திலே தங்கும்
படிக்கு எங்களை யவனிடத்தில் அழைத்தார்
கள்.

௰௭. நாங்கள் எருசலேமிற் சேர்ந்தபொ
ழுது சகோதரர் எங்களைச்சந்தோஷத்தோ
டே யேற்றுக்கொண்டார்கள்.

௰௮. மறுநாளிலே பவுலும், நாங்களும்
* யாக்கோபினிடத்திற்குப்போனோம். எல்

லா மூப்பர்களும் அங்கே *கூடிவந்தார்கள்.
* ௰௫: ௰௩.
௰௯. அவர்களுக்கு அவன் வாழ்த்துதல்
செய்து, பின்பு தன் ஊழியத்தினாலே பரா
பரன் புறதேசத்தாருக்குள்ளே செய்தவை
களை ஒவ்வொன்றாய் விவரித்துச்சொன்னான்.
௨௰. (அதை) அவர்கள் கேட்டு, கர்த்த
ரைத்தோத்திரம் பண்ணி, பின்பு அவனுட
னே சொன்னதாவது; சகோதரனே! யூதர்
களில் அநேக ஆயிரம்பேர் விசுவாசிகளான
தைப்பார்த்திருக்கிறாய், அவர்கள் எல்லாரும்
நியாயப்பிரமாணத்திற்காக வயிராக்கியம்
உள்ளவர்களாய் இருக்கிறார்கள்.
௨௧. நீ புறத்தேசத்தாருக்குள்ளே இருக்
கிற யூதரெல்லாருந் (தங்கள்) பிள்ளைகளை
விருத்தசேதனம் பண்ணவும், மற்ற முறை
மைகளின்படியே நடக்கவும் வேண்டுவதில்
லையென்று சொல்லி, இவ்விதமாய் அவர்
கள் மோசேயை விட்டுவிலகும்படி உபதே
சிக்கிறாய் என்று, அவர்கள் கேள்விப்பட்டு
இருக்கிறார்கள்.
௨௨. இப்பொழுது என்னசெய்யலாம்! நீ
வந்ததை யவர்கள் கேள்விப்பட்டு, மெய்
யாய்க்கூட்டங் கூடுவார்கள்.
௨௩. ஆகையால் நாங்கள் உனக்குச்சொல்
லுகிறபடி நீ செய்யவேண்டும். என்னவென்
றால், நான்குபேர் பிரார்த்தனைபண்ணிக்கொ
ண்டு எங்களிடத்தில் இருக்கிறார்கள்.
௨௪. அவர்களை நீ சேர்த்து அவர்களுட
னேகூடச்சுத்திபண்ணிக்கொண்டு, அவர்
கள் சிரச்சவரம் பண்ணுவதற்கு வேண்டிய
செலவு பண்ணுவாயாக. அப்படிச்செய்
தால் எல்லாருந் தங்களுக்கு உன்னைக்குறித்
து அறிவிக்கப்பட்டதொன்றுமில்லையென்
றும், நீதானே நியாயப்பிரமாணத்தைக்
கைக்கொண்டு நடக்கிறவனென்றும் அறி
வார்கள்.
௨௫. விசுவாசிகளான புறத்தேசத்தார் இப்
படிப்பட்டவைகளைக் கைக்கொள்ளாமல்,
* விக்கிரகங்களுக்குப்படைத்ததற்கும், இர
த்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததற்கும்,
வேசைத்தனத்திற்கும் மாத்திரம் விலகி
இருக்கவேண்டுமென்று, நாங்கள் தீர்மானம்
பண்ணி, அவர்களுக்கு எழுதி அனுப்பினோ
மேயென்றார்கள். * ௰௫: ௨௮, ௨௯.
௨௬. அப்பொழுது பவுல் அந்த மனித
ரைச்சேர்த்துக்கொண்டு மறுநாளிலே யவர்
களுடனேகூடச்சுத்தம்பண்ணி, பின்பு தே
வாலயத்திற் பிரவேசித்து, அவர்களில் ஒவ்
வொருவனுக்காக வேண்டிய பலிகொடுக்கப்
படுமளவுஞ் சுத்தமாக்குதற்கு ஏற்ற நாள்க
ளை நிறைவேற்றுவேனென்று அறிவித்தான்.
௨௭. அதற்கு ஏற்ற ஏழுநாளும் நிறைவே
றி வருகையில், ஆசியாதேசத்தில் இருந்து
வந்த யூதர்கள் தேவாலயத்திலே அவனைக்
கண்டு கூட்டமெல்லாங்கூடிவர அழைத்து,
௨௮. அவன்மேற் கைகளைப்போட்டு ஓய்
இஸ்ரவேலரே! உதவிசெய்யுங்கள். இவனே
நம்முடைய சனத்திற்கும், வேதப்பிரமா
ணத்திற்கும், இந்தத்தலத்திற்கும் விரோத
மாக எங்கும் எல்லாருக்கும் போதித்துவரு
கிறான். அதுவுமல்லாமல், இந்தத்தேவால
யத்திலே கிரேக்கரையும் அழைத்து வந்து,
இந்தப்பரிசுத்த தலத்தை யசுசிப்படுத்தினா
னென்று கூப்பிட்டார்கள்.
௨௯. முன்பு எபேசியனாகிய * திரோப்பி
மு என்பவனைப்பட்டிணத்திலே அவனுட
னேகூட இருக்கக்கண்டிருந்து, பின்பு பவுல்
அவனைத்தேவாலயத்திலே அழைத்து வந்
தானென்று நினைத்தபடியினாலே அப்படிச்
சொன்னார்கள். * ௨௰: ௪.
௩௰. அப்பொழுது நகரம் முழுவதுங் கலக்
கப்பட்டது. மேலுஞ் சனங்கள் கூட்ட
மாய் ஓடிவந்து பவுலைப்பிடித்து, அவனைத்
தேவாலயத்திற்குப்புறம்பே இழுத்தார்கள்.
உடனே வாசல்கள் பூட்டப்பட்டன.
௩௧. மேலும், அவர்கள் அவனைக்கொலை
செய்ய வகைதேடுகையில், எருசலேம் முழு
வதுங் கலக்கம் அடைந்திருக்கிறதென்று
போர்ச்சேவகரின் சேனாபதி கேள்விப்
பட்டு,
௩௨. உடனே போர்ச்சேவகரையும், அவர்
களுடைய தலைவரையுஞ் சேர்த்துக்கொண்
டு அவர்களிடத்திற்கு ஓடினான். சேனாப
தியையும், போர்ச்சேவகரையும் அவர்கள்
கண்டபொழுது பவுலை யடிப்பதை விட்
டார்கள்.
௩௩. அப்பொழுது, சேனாபதி சேர்ந்து
அவனைப்பிடித்து இரண்டு சங்கிலிகளினாலே
கட்டும்படி சொல்லி, இவன் யாவன் என்று
ம், என்ன செய்தானென்றும் விசாரித்தான்.
௩௪. அதற்குச்சனங்கள் பலவிதமாய்க்
கூப்பிட்டார்கள். அப்பொழுது கலக்கத்தி
னாலே யவன் நிச்சயத்தை யறியக்கூடா
திருந்தபடியால், அவனைக்கோட்டைக்குக்
கொண்டுபோகச்சொன்னான்.
௩௫. அவன் படிகள்மேலேறினபொழுது,
கூட்டம் பின்சென்று அவனைக்கொலைசெய்
யுமென்று கூப்பிட்டுக்கொண்டு,
௩௬. உக்கிரமாய் இருந்தபடியினாலே சே
வகர் அவனைத்தூக்கி யெடுத்துக்கொண்டு
போனார்கள்.
௩௭. அவர்கள் பவுலைக்கோட்டைக்குள்
ளே கொண்டுபோக எத்தினமாய் இருக்கை
யில் அவன் சேனாபதியை நோக்கி, நான்
உம்முடனே ஒரு வார்த்தை பேசலாமா
என்றான். அதற்கு அவன் சொன்னது, கி
ரேக்கைப்பாஷை உனக்குத்தெரியுமா!
௩௮. இந்தக்காலத்திற்கு முன்னே கலகம்

உண்டாக்கி, நாலாயிரங் கொலைபாதகரை வனாந்தரத்திலே கொண்டுபோன எகிப்தன் நீ யல்லவாவென்றான்?

௩௯. பவுல் சொன்னது, நான் கிலிக்கிய நாட்டிலுள்ள கீர்த்தியடைந்திருக்கிற *தருசுபட்டினத்தானாகிய யூதன். நான் சனங்களுடனே பேசும்படி எனக்குத்தரவுகொடுக்கவேண்டுமென்று உம்மைவேண்டிக்கொள்ளுகிறேனென்றான். * ௯: ௰௧. ௨௨: ௩.

௪௰. அவனுக்கு உத்தரவு கொடுத்த பின்பு பவுல் படிகளின்மேலே நின்று, கையினாலே சனங்களுக்குச்சயிக்கை காட்டினான். மிகுந்த அமைதல் உண்டானபொழுது, அவன் எபிரேயப்பாஷையிலே சத்தமிட்டுச்சொன்னதாவது;

௨௨ அதிகாரம்.

[(௧) பவுல் தான் குணப்பட்டு விசுவாசியான விதத்தையும், (௰௭) அப்போஸ்தலப்பட்டத்தக்கு அழைக்கப்பட்ட விதத்தையும், வெளியரங்கமாக அறிவித்தது. (௨௨) தான் அந்நியர்களுக்கு அனுப்பப்பட்ட அப்போஸ்தலனென்று சொன்னபோது யூதர்கள் கலகம்பண்ணினது. (௨௪) அவர்கள் அவனைச்சவுக்கால் அடிக்க நினைத்தபோது, (௨௫) தன்னை உரோம நாட்டானென்று தப்பித்துக்கொண்டது.]

சகோதரர்களே! பிதாக்களே! உங்களுக்கு நான் இப்பொழுது சொல்லும் உத்தரவுக்குச் செவிகொடுப்பீர்களாகவென்று சொன்னபொழுது,

௨. எபிரேயப்பாஷையிலே தங்களுடனே பேசுகிறதை அவர்கள்கேட்டு அதிக அமைதலாய் இருந்தார்கள். அவன் பின்னுஞ் சொன்னதாவது;

௩. நான் யூதன். கிலிக்கியாநாட்டிலுள்ள தருசு பட்டினத்திலே நான் பிறந்த பின்பு, இந்த நகரத்திலே கமாலியேலின் பாதத்தினிடத்தில் வளர்ந்து, முன்னோர்களுடைய வேதப்பிரமாணத்தின்படியே கெட்டியாய்ப்போதிக்கப்பட்டு, இன்றைத்தினம் நீங்களெல்லாரும் இருக்கிறதுபோல, பராபரனைக்குறித்து வைராக்கியனாயிருந்து,

௪. * இந்த மார்க்கத்தாரை மரணபரியந்தந் துன்பப்படுத்தி, புருஷரையும், ஸ்திரீகளையுங் கட்டிச்சிறைச்சாலைகளுக்கு ஒப்புக்கொடுத்து வந்தேன். * அ: ௩.

௫. அதற்குப்பிரதான ஆசாரியரும், மூப்பர்கள் யாவருஞ் சாட்சிகொடுப்பார்கள். * அவர்கள் கையிலே நான் சகோதரருக்கு நிருபங்களை வாங்கிக்கொண்டு, தமஸ்குவூரில் இருக்கிறவர்களும்; ஆக்கினைக்குள்ளாக்கப்படுவதற்கு அவர்களைக்கட்டி எருசலேமுக்குக்கொண்டுவரும்படி அவ்விடத்திற்குப் போனேன். * ௨௬: ௰௨

௬. அப்படி நான் * பிரயாணப்பட்டுத் தமஸ்கு வூருக்குச்சமீபமானபொழுது, மத்தியானவேளையிலே சடுதியாய் வானத்தில் இருந்து மிகுந்த ஒளியுண்டாகி என்னைச் சுற்றிப்பிரகாசித்தது. * ௯: ௩—௰௯.

௭. உடனே நான் தரையிலே விழுந்து சவுலே, சவுலே, என்னத்திற்கு நீ என்னைத் துன்பப்படுத்துகிறாய் என்று என்னுடனே சொல்லுகிற சத்தத்தைக்கேட்டேன்.

௮. அதற்கு நான் ஆண்டவரே! நீர் யார் என்றேன். அவர் என்னுடனே சொன்னது, நீ துன்பப்படுத்துகிற நாசரேத்தூராகிய இயேசுவே நான் என்றார்.

௯. என்னுடனே கூடவிருந்தவர்கள் அந்த ஒளியைக்கண்டு பயம் அடைந்தார்கள். என்னுடனே பேசினவருடைய சத்தத்தை அவர்கள் கேட்கவில்லை.

௰. பின்னும் நான் ஆண்டவரே! நான் என்னசெய்யவேண்டும் என்றேன். அதற்கு, கர்த்தர் சொன்னது, நீ எழுந்து தமஸ்கு ஊருக்குப்போ. நீ செய்யும்படிக்குக் கட்டளையிடப்பட்டயாவும் அங்கே உனக்குச்சொல்லப்படும் என்றார்.

௰௧. பின்பு நான் அந்த ஒளியின் மகிமையினாலே பார்வை யற்றுப்போனபடியால், என்னோடிருந்தவர்களாற் கைலாகு கொடுத்து, அழைக்கப்பட்டுப்போய், தமஸ்கு ஊரிற் சேர்ந்தேன்.

௰௨. அப்பொழுது வேதப்பிரமாணத்தின் படியே பத்தியுள்ளவனுமாய், அங்கே குடியிருக்கிற சகல யூதராலும் நல்லவன் என்று நற்சாட்சி பெற்றவனுமாய், இருக்கிற அனனியாவென்னும் ஒருவன் என்னிடத்தில் வந்து நின்று,

௰௩. என்னை நோக்கி, சகோதரனாகிய சவுலே! பார்வை அடைவாயாகவென்றான். அந்நேரமே நான் அவனை நோக்கிப்பார்த்தேன்.

௰௪. பின்பு அவன் சொன்னது, நீ கண்டு கேட்டவைகளைக்குறித்து, சகலவித மனிதருக்குஞ் சாட்சிகொடுக்கிறவனாய் இருக்கும்படிக்கு,

௰௫. நம்முடைய முன்னோர்களின் தேவன் உன்னை முன்குறித்திருந்து தம்முடைய சித்தத்தை நீ அறியவும், நீதிபரரைக்காணவும், அவருடைய திருவாயின் சத்தத்தைக் கேட்கவும் பண்ணினார்.

௰௬. இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன! நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம்பெற்று உன்பாவங்களை நீக்குவாயாகவென்றான்.

௰௭. பின்பு நான் எருசலேமுக்குத்திரும்ப வந்து, தேவாலயத்திலே செபம்பண்ணிக்கொண்டிருக்கையில், நான் ஞான திருஷ்டியடைந்து அவரைத்தரிசித்தேன்.

௰௮. அவர் என்னுடனே நீ என்னைக்குறித்துச்சொல்லுஞ் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதால், நீ தாமதப்படாமற் சீக்கிரமாய் எருசலேமை விட்டுப்போவென்றார்.

௰௯. அப்பொழுது நான் சொன்னது, ஆண்டவரே! உம்மை விசுவாசித்தவர்களை நான் காவலில்வைத்து, செப ஆலயங்களிலே அவர்களை யடிப்பித்திருந்ததையும்,

௨௰. உமக்குச்சாட்சியாகிய * ஸ்தேவானுடைய இரத்தஞ் சிந்தப்பட்டபொழுது, நானும் அருகே நின்று, அவனைக்கொலை செய்வதற்குச்சம்மதித்து, அவனைக்கொலை செய்தவர்களின் வஸ்திரங்களைக்காத்துக் கொண்டதையும், இவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றேன். * ௭: ௫௮, ௫௯.

௨௧. அவர் சொன்னது, நான் உன்னைத் தூரமாய்ப்புறத்தேசத்தாரிடத்திற்கு அனுப்புவேன். ஆதலால், நீ போவென்றுசொன்னார் என்றான்.

௨௨. இந்தவார்த்தைவரைக்கும் அவர்கள் அவனுக்குச்செவிகொடுத்து, இப்படிப்பட்டவனைப்பூமியில் இருந்து அகற்றவேண்டும், இவன் உயிரோடிருக்கிறது நியாயமல்லவென்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டார்கள்.

௨௩. இப்படியவர்கள் கூக்குரலிட்டு, தங்கள் வஸ்திரங்களைக்கழற்றிப்போட்டு, ஆகாசத்திலே புழுதி தூற்றிக்கொண்டு வருகையில்,

௨௪. சேனாபதி அவனைக்கோட்டைக்குள்ளே கொண்டுவரும்படி கட்டளையிட்டு, பின்பு அவர்கள் அவன்மேல் இப்படிக்கூக்குரல் இட்டதற்கான காரணத்தையறியும்படிக்கு, அவனைச்சவுக்காலே அடித்து விசாரிக்கச்சொன்னான்.

௨௫. அந்தப்படி யவர்கள் அவனை வார்களினால் அழுந்தக்கட்டுகையிற் பவுல் சமீபமாய் நின்ற படைத்தலைவனை நோக்கி, * உரோமனுமாய், நியாயமாய் ஆக்கினைக்குட்படாதவனுமாய் இருக்கிற மனிதனை நீங்கள் அடிக்கிறது நியாயமா என்றான். * ௰௬: ௩௭.

௨௬. தலைவன் அதைக்கேட்டுச்சேனாதிபதியினிடத்திற்குப்போய் அந்தமனிதன் உரோமன். ஆதலால், நீர்செய்வதைக்குறித்து, சாவதானமாயிருக்கவேண்டும் என்றறிவித்தான்.

௨௭. அப்பொழுது சேனாதிபதி பவுலினிடத்தில் வந்து நீ உரோமனா எனக்குச்சொல்லென்றான். அதற்கவன் அப்படித்தான் என்றான்.

௨௮. சேனாதிபதி சொன்னது, நான் மிகுந்த திரவியத்தினாலே இந்த மேன்மையைச்சம்பாதித்தேன் என்றான். அதற்குப் பவுல் சொன்னது, நான் அப்படிப்பட்டவனாகப்பிறந்தேன் என்றான்.

௨௯. ஆதலால், அவனை யடித்து விசாரிக்கும்படி எத்தனமாய் இருந்தவர்கள் உடனே யவனை விட்டார்கள். மேலுஞ் சேனாதிபதி அவன் உரோமன் என்றறிந்து தான் அவனைக்கட்டினதினாலே பயந்தான்.

௩௰. மறுநாளிலே பவுல் யூதரால் ஏற்படுத்தப்பட்ட குற்றமின்னதென்று அதன் நிச்சயத்தை யறியமனதாய், அவனுடைய கட்டவிழ்க்கும்படிசெய்து, பிரதான ஆசாரியரையும், அவர்களுடைய பெரிய சங்கத்தார் எல்லாரையுங் கூடிவரும்படி கட்டளையிட்டு, பின்பு பவுலைத்தாழக்கொண்டுபோய் அவர்களுக்குமுன் நிறுத்தினான்.

[illegible]காரம்.

[(௧) பவுல் ஆலோசனைச்சங்கத்துக்குமுன் தன்னை யெடுத்துப்பேசும்பொழுது, (௨) அனனீயா அவனை யடிக்கும்படி உத்தரவு கொடுத்தது. (௭) அவன்மேற் குற்றஞ் சாற்றினவர்களுக்குள்ளே பிரிவினை யுண்டானது. (௰௧) பராபரன் அவனைத்திடப்படுத்தினது. (௰௨) யூதர்கள் அவனுக்கு மோசஞ்செய்ய நினைத்திருந்தது, பிரதான சேர்வைக்காரனுக்கு அறிவிக்கப்பட்டது. (௨௭) அவன் பவுலைப்பேலிக்குசு துரையினிடத்திற்கு அனுப்பினது.]

அப்பொழுது பவுல் பெரிய சங்கத்தாரை நோக்கி, சொன்னதாவது; சகோதரர்களே! இந்நாள்வரைக்கும் என் மனது எனக்கு எவ்விதத்தாலும் நற்சாட்சி கொடுக்கத்தக்கதாக, பராபரனுக்கு முன்பாக நடந்துவந்தேன் என்று சொன்னபொழுது,

௨. பிரதான ஆசாரியனாகிய அனனீயா அவனுக்குச்சமீபமாய் நின்றவர்களை நோக்கி, * இவன்வாயிலே யடியுங்கள் என்று கட்டளையிட்டான். * யோவா. ௰௮: ௨௨.

௩. அப்பொழுது பவுல் அவனுடனே சொன்னது, * சாந்து பூசப்பட்ட சுவரே! பராபரன் உம்மை யடிப்பார். நியாயப்பிரமாணத்தின்படி எனக்கு நியாயத்தீர்ப்புக்கொடுக்கும்படி உட்கார்ந்திருக்கிற நீர் நியாயப்பிரமாணத்திற்குத்தப்பிதமாய் என்னை அடிக்கச்சொல்லலாமா? என்றான். * மத். ௨௩: ௨௭, ௨௮.

௪. சமீபத்தில் நின்றவர்கள் சொன்னது, பராபரனுடைய பிரதான ஆசாரியனையா வைகிறாய் என்றார்கள்.

௫. அதற்குப்பவுல் சொன்னது, சகோதரரே! இவர் பிரதான ஆசாரியன் என்று நான் நினைக்கவில்லை. * உன்சனத்தின் தலைவனைக்குறித்து, தீது சொல்லாதிருப்பாயாக

வென்று எழுதியிருக்கின்றதே என்றான். *
௨ மோ. ௨௨: ௨௮.
௬. பின்பு அவர்களில் ஒருபங்கு சதுசே
யரென்றும், ஒருபங்கு பரிசேயரென்றும்
பவுல் அறிந்து மிகுந்த சத்தத்தோடே சங்
கத்தாருக்குள்ளே கூப்பிட்டுச்சொன்னதா
வது; சகோதரர்களே! * நான் பரிசே
யனுமாய், ஒரு பரிசேயனுடைய மகனு
மாய் இருக்கிறேன். நித்திய சீவனுக்கு
ஏற்ற நம்பிக்கையைக்குறித்தும், மரித்தோர்
உயிரோடெழுந்திருக்குதலைக்குறித்தும், நா
ன் நியாயத்தீர்ப்படையும்படி இருக்கிறே
னென்று சொன்னபொழுது, * ௨௬: ௫.
பிலிப். ௩: ௫.
௭. சதுசேயர் உயிரோடெழுந்திருக்குதலு
மில்லை. அரூபியும், ஆவியும் இல்லை என்று
சொல்லுகிறபடியினாலும், பரிசேயர் அவ்
விரண்டும் உண்டென்று அறிக்கைபண்ணு
கிறபடியினாலும்,
௮. பரிசேயருக்கும், * சதுசேயருக்கும்
வாக்குவாதம் உண்டாயிற்று. கூட்டமும்
பிரிவினை யடைந்தது. * மத். ௨௨: ௨௩.
௯. மிகுந்த கூக்குரல் உண்டாயிற்று.—
அப்பொழுது பரிசேயரைச்சேர்ந்த வேத
பாரகர் எழுந்து மிகவும் விரோதமாய்ப்
பேசி, இந்தமனிதனிடத்தில் ஒரு பொல்
லாங்கையுங் காணேம். ஒரு ஆவி அல்லது,
ஒருதூதன் இவனுடனே பேசினதுண்டா
னால், (அதிலென்ன) என்றார்கள்.
௰. பின்பு மிகுந்த கலகம் உண்டானபொ
ழுது பவுல் அவர்களாற் பீறுண்டுபோவான்
என்று பெரிய சேனைத்தலைவன் பயந்து,
அவனையவர்களில் இருந்து பறித்துக்கோட்
டைக்குக்கொண்டுபோகும்படி போர்ச்சே
வகருக்குக்கட்டளை யிட்டான்.
௰௧. அன்று * இராத்திரியிலே கர்த்தர்
பவுலின் அருகே நின்று பவுலே திடன்
கொள். நீ என்னைக்குறித்து எருசலேமிலே
சாட்சிகொடுத்ததுபோல, உரோமை நக
ரியிலேயுஞ் சாட்சி கொடுப்பாயென்றார். *
௰௮: ௯.
௰௨. விடியற்காலமானபொழுது யூதரிற்
சிலர் இரகசியமாய்க்கூடி அந்தப்பவுலை
நாம் கொலைசெய்யுமளவும் புசியாமலும்,
குடியாமலும் இருப்போமாகவென்று சப
தம்பண்ணிக்கொண்டு, தங்களுக்குள்ளே
கட்டுப்பாடு செய்தார்கள்.
௰௩. இப்படிச்சபதத்தினாலே கட்டுப்பாடு
செய்தவர்கள் நாற்பதுபேருக்கு அதிகமாய்
இருந்தார்கள்.
௰௪. அவர்கள் பிரதான ஆசாரியரிடத்தி
லும், மூப்பரிடத்திலும்போய், சொன்ன
தாவது; நாங்கள் பவுலைக்கொலைசெய்யுமள
வும் ஒன்றையும் ருசிபார்க்கக்கூடாதென்று
கொடிய சபதம் பண்ணிக்கொண்டோம்.
௰௫. ஆனபடியினாலே நீங்கள் பெரிய சங்
கத்தாருடனேயுங்கூட அவனுடைய காரி
யத்தை அதிக கெட்டியாய் விசாரிக்க மன
துள்ளவர்கள்போலச்சேனாதிபதிக்குக்காண்
பித்து, அவர் நாளைக்கு அவனை யுங்களிடத்
திற் கொண்டுவரும்படி கேட்பீர்களாக. அப்
பொழுது அவன் உங்களுக்குச்சமீபமாய்
வரும் முன்னே நாங்கள் அவனைக்கொலை
செய்ய எத்தினமாயிருக்கிறோமென்றார்கள்.
௰௬. அந்தச்சர்ப்பனையைப் பவுலினுடை
ய சகோதரியின் குமாரன் கேள்விப்பட்டு,
உடனே கோட்டைக்குப்போய்ப்பவுலுக்கு
அறிவித்தான்.
௰௭. அப்பொழுது பவுல் படைத்தலைவரில்
ஒருவனை யழைத்து, இந்த வாலிபன் சேனா
திபதிக்கு ஒருகாரியத்தை யறிவிப்பான்.
ஆகையால் இவனை யவரிடத்திற்குக்கொண்
டுபோக வேண்டுமென்றான்.
௰௮. அந்தப்படி யவன் அவனைச்சேர்த்
துச்சேனாதிபதியிடத்திற்குக் கொண்டுபோ
ய், காவலில் வைக்கப்பட்டிருக்கிற பவுல்
என்னை யழைத்து, உமக்கு ஒருகாரியத்தை
ச்சொல்லவேண்டுமென்றிருக்கிற இந்த வா
லிபனை உம்மிடத்திற்குக்கொண்டுபோகும்
படி என்னைவேண்டிக்கொண்டானென்றான்.
௰௯. அப்பொழுது சேனாதிபதி அவனு
டைய கையைப்பிடித்து, தனிமையான இ
டத்திற் கொண்டுபோய் நீ யெனக்கென்ன
அறிவிக்க விரும்புகிறாயென்று கேட்டான்.
௨௰. அவன் சொன்னதாவது; யூதர்கள் பவு
லின் காரியத்தை அதிக கெட்டியாய் விசா
ரிக்க மனதுள்ளவர்கள்போலவந்து, நீர் நா
ளைக்கு அவனைப்பெரிய சங்கத்தாரிடத்திற்
குக்கொண்டு வரும்படிக்கு உம்மை வேண்
டிக்கொள்ளத்தீர்மானம் பண்ணினார்கள்.
அவர்களுக்குச்சம்மதியாதிருப்பீராக.
௨௧. என்னத்தினாலெனில், அவர்களில் நா
ற்பது பேருக்கு அதிகமான பேர்கள் அவ
னைக்கொலைசெய்யுமளவும், புசிக்கவும், கு
டிக்கவுமாட்டோமென்று சபதம்பண்ணிக்
கொண்டு, அவனுக்காக ஒளித்திருந்து, இப்
பொழுது உம்முடைய உத்தரவு வரக்காத்
துக்கொண்டு எத்தினமாய் இருக்கிறார்கள்
என்றான்.
௨௨. அப்பொழுது சேனாதிபதி சொன்ன
து, நீ இவைகளை எனக்கறிவித்ததை ஒருவ
ருக்குஞ் சொல்லாதிரு என்று வாலிபனுக்
குக்கட்டளையிட்டு அவனை யனுப்பி,
௨௩. பின்பு படைத்தலைவர் இருவரை ய
ழைத்து, செசாரியா பட்டினத்துக்குப்போ
கும்படிக்கு, இருநூறு போர்ச்சேவகரை
யும், குதிரைப்போர்ச்சேவகர் எழுபது பே
ரையும், இருநூறு விற்காரரையும், இராத்
திரியின் மூன்றும் மணிநேரத்திற்கு எத்தி
னம் பண்ணுங்கள்.

௨௪. அல்லாமலும் பவுலையேற்றி, துரை
யாகிய பேலிக்குசினிடத்திற்கு, பத்திரமா
ய்க்கொண்டுபோகும்படிக்கு, வாகனங்களி
விருக்கும்படி செய்யுங்களென்று சொல்லி,
௨௫. பின்பு எழுதின நிருபத்தின் விபரமா
வது;
௨௬. கனம்பொருந்திய துரையாகிய பே
லிக்குக்குக் கிலவுதியுலிசியா சவுக்கியமுண்
டாக வாழ்த்துகிறேன்.
௨௭. இந்த மனிதன் யூதர்களாற் பிடிக்கப்
பட்டு, அவர்களாற் கொலைசெய்யப்படுவ
தற்கு ஏதுவாய் இருந்தபொழுது, நான்
போர்ச்சேவகருடனே கூடப்போய், இவ
னை யிழுத்துக்கொண்டு வந்தபொழுது
இவன் உரோமனென்றறிந்தேன்.
௨௮. அவர்கள் இவன்மேற் சாற்றின குற்
றத்தை நான் அறிய மனதாய், இவனை
அவர்களுடைய பெரிய சங்கத்திற்குக்கொ
ண்டுபோனேன்.
௨௯. அங்கே அவன் மரணத்திற்கு அல்ல
து, சங்கிலிகளுக்கேற்ற குற்றமில்லாமல்
அவர்களுடைய வேதத்திற்குரிய தருக்கங்
களைக்குறித்துக்குற்றஞ் சாற்றப்பட்டவன்
என்று எனக்குத்தெரிய வந்தது.
௩௰. பின்பு யூதர்கள் இந்த மனிதனுக்கு
விரோதமாய் இரகசியமான யோசனைபண்
ணிக்கொள்ளுகிறார்களென்று, எனக்குத்தெ
ரிந்தபொழுது, நான் உடனே இவனை உம்
மிடத்திற்கனுப்பி, குற்றஞ் சாற்றுகிறவர்க
ளுந் தாங்கள் இவனுக்கு விரோதமாய்ச
சொல்லுகிற காரியங்களை உமக்கு முன்பா
கப்போய்ச்சொல்லும்படி கட்டளையிட்
டேன். சுகமாய் இருப்பீராகவென்றெழுதி
யனுப்பினான்.
௩௧. போர்ச்சேவகர் தங்களுக்குக்கட்டளை
யிடப்பட்டபடியே பவுலைச்சேர்த்துக்கொ
ண்டு, இராத்திரியிலே அந்திப்பத்திரி யூருக்
குக்கொண்டுபோய்,
௩௨. மறுநாளிலே குதிரைப்போர்ச்சேவ
கரை அவனுடனேகூடப்போக அனுப்பி,
தாங்களே கோட்டைக்குத்திரும்பினார்கள்.
௩௩. அவர்கள் சேசாரியா பட்டினத்திற்
சேர்ந்து, நிருபத்தைத் துரைக்குக்கொடுத்
து, பவுலையும் அவன் முன்பாக நிறுத்தினார்
கள்.
௩௪. துரை யதை வாசித்து, நீ யெந்தத்
தேசத்தானென்று கேட்டு, கிலிக்கிய தே
சத்தானென்று அறிந்து,
௩௫. பின்பு, உன்மேற் குற்றஞ் சாற்றுகிற
வர்களும் வந்திருக்கும்பொழுது, உன்னிட
த்தில் விசாரிப்பேனென்றுசொல்லி, ஏரோ
தேயின் அரமனையிலே அவனைக்காவலில்
வைக்கும்படி கட்டளையிட்டான்.

௨௪ அதிகாரம்.

[(௧) பவுல் தெர்த்துல்லு என்ற வாய்ச்சா
லகனாற் குற்றஞ் சாற்றப்பட்டபோது, (௰)
அவன் தன் நடக்கையையும் உபதேசத்தை
யுங் குறித்து உத்தரவு சொன்னது. (௨௪)
துரைக்கும், பெண்சாதிக்குங் கிறிஸ்து
லைப்பிரசங்கித்தது. (௨௬) துரை லஞ்சத்
தை விரும்பியும் அடையாமற்போனது.
(௨௭) அந்தத்துரையின் உத்தியோகம் மா
றினபோதும் பவுலைக்காவலில் வைத்துப்
போனது.]

ஐந்துநாளைக்குப்பின்பு, பிரதான ஆசா
ரியனாகிய அனனியா மூப்பரோடும்,
பேச்சிற் கெட்டிக்காரனாகிய தெர்த்துல்லு
வோடுங் கூடப்போய், பவுலுக்கு விரோத
மாய்த் துரையினுடைய சந்நிதானத்திற்
பிரவேசித்தார்கள்.
௨. அவன் அழைக்கப்பட்டு வந்தபொழு
து தெர்த்துல்லு குற்றம் ஏற்படுத்தினதா
வது;
௩. மிகுந்த கனம்பொருந்திய பேலிக்கு
சே! உம்மாலே நாங்கள் மிகுந்த சமாதா
ன சவுக்கியத்தை யநுபவிக்கிறதையும்,
உம்முடைய விசாரிப்பினாலே இந்தத்தேசத்
தாருக்காக மிகுந்த மகிமையுள்ள கிரியை
கள் நடக்கிறதையும், நாங்கள் எப்பொழு
தும், எங்கும் பெரிய உபகாரமென்றெண்
ணி யறிக்கை யிடுகிறோம்.
௪. நான் அந்த வார்த்தைகளாலே உமக்கு
வருத்தத்தை யுண்டுபண்ணாதபடிக்கு, நாங்
கள் சுருக்கமாய்ச்சொல்வதை, நீர் உம்மு
டைய பொறுமையோடே கேட்க வேண்
டிக்கொள்ளுகிறேன்.
௫. என்னவென்றால், இந்த மனிதன் பெரு
வாரிக்காய்ச்சலைப்போல, பூச்சக்கரத்தி
லுள்ள சகல யூதர்களுக்குள்ளுங் கலகமெ
ழுப்பி இருக்கிறதையும், நாசரேத்தாரென்
னுங் கெட்ட பிரிவுக்கு முதலாளியாயிருக்
கிறதையும்,
௬. எங்கள் * தேவாலயத்தை அசுசிப்படுத்
தத்தேடினதையும் நாங்கள் கண்டறிந்து
இவனைப்பிடித்து, எங்கள் வேதநூலின்படி
யே இவனுக்கு நியாயத்தீர்ப்புக்கொடுக்க
மனதாய் இருந்தோம். * ௨௧: ௨௮, ௨௯.
௭. அப்பொழுது சேனாபதியாகிய லீசி
யாவென்பவர்வந்து, மிகுந்த பலவந்தமாய்
இவனை யெங்கள் கைகளிலிருந்து பறித்துக்
கொண்டுபோய்,
௮. இவன்மேற் குற்றஞ் சாற்றுகிறவர்கள்
உம்மிடத்தில் வரும்படி கட்டளை யிட்டார்.
நீர் இவனிடத்திற் கெட்டியாய் விசாரித்
தால் நாங்கள் இவன்மேற் குற்றஞ் சாற்று
கிற காரியங்கள் யாவையும் அறிந்துகொள்
வீரென்றான்.

௯. மற்ற யூதர்களும் அதற்கிசைந்து, இப்படியே இருக்கிறதென்று சொன்னார்கள்.

௰. அப்பொழுது பவுல் பேசுகிறதற்குத் துரையினாலே சமிக்கை பெற்ற பின்பு, அவன் சொன்ன மாறுத்தரவாவது, அநேக வருஷம் நீர் இந்தத்தேசத்தாருக்கு நியாயாதிபதியாய் இருக்கிறதை நான் அறிந்து, அதிக சந்தோஷத்தோடே யெனக்காக உத்தரவு சொல்லுகிறேன்.

௰௧. நீர் அறியும்படி நான் பராபரனைத் தொழுதுகொள்ளும்படிக்கு, எருசலேமுக்குப்போனது முதல் இதுவரைக்கும் பன்னிரண்டு நாள்மாத்திரமாயிற்று.

௰௨. தேவாலயத்திலே நான் ஒருவரோடுந் தருக்கம்பண்ணவும், செப ஆலயங்களிலாகிலும், நகரத்திலாகிலுஞ் சனங்களுக்குள்ளே கலகம்எழுப்பவும் இவர்கள் காணவுமில்லை.

௰௩. இப்பொழுது என்மேற் சாற்றுகிற குற்றங்களுககுச் சாட்சிகளைக்காண்பிக்கவு மாட்டார்கள்.

௰௪. நான் உமக்கு அறிக்கையிடுகிறதென்னவென்றால், இவர்கள் வெட்டபிரிவு என்று சொல்லுகிற மார்க்கத்தின்படியே, நான் நியாயப்பிரமாணத்திலேயும், தீர்க்கதரிசன புஸ்தகங்களிலேயும் எழுதியிருக்கிறயாவையும் விசுவாசித்துக்கொண்டு எங்கள் முன்னோர்களுடைய தேவனுக்கு ஆராதனை செய்து,

௰௫. மரித்தோராகிய நீதிமான்களும், அநீதிமான்களும் மறுபடியும் உயிரோடெழுந்திருப்பார்களென்று இவர்களும் அடைந்திருக்கிற நம்பிக்கையைப் பராபரன்மேல் வைத்திருக்கிறேன்.

௰௬. அதினாலே நான் பராபரனுக்கும், மனிதருக்கும்முன்பாக எப்பொழுதும் *நற்சாட்சி கொடுக்கிற மனதுள்ளவனாய் இருக்கும்படி முயற்சிப்படுகிறேன். * ௨௩: ௧.

௰௭. அநேக வருஷங்களுக்குப்பின்பு நான் என்தேசத்தாருக்குத்தருமங்களை யொப்புக்கொடுக்கவும், * காணிக்கைகளைச்செலுத்தவும் வந்தேன். * ௨௧: ௨௬.

௰௮. கூட்டமில்லாமலும், அமளியில்லாமலும் நான் தேவாலயத்தில் அப்படிச்செய்து, சுத்தம் பண்ணிக்கொண்டிருக்கையில், ஆசியா தேசத்தாரான சில யூதர்கள் என்னைக்கண்டார்கள்.

௰௯. அவர்களிடத்தில் எனக்கு விரோதமான காரியமுண்டானால், அவர்களே உமக்கு முன்பாக இங்கே வந்து குற்றஞ் சாற்றவேண்டும்.

௨௰. அல்லது நான் பெரிய சங்கத்தாருக்கு முன்பாக நின்றபொழுது, என்ன குற்றத்தை யென்னிடத்திற் கண்டார்கள்.— அதை இவர்களுக்குச்சொல்லலாமே.

௨௰௧. நான் அவர்களுக்குள்ளே நின்றபொழுது, * மரித்தோர் உயிரோடெழுந்திருப்பார்களென்கிறதைக்குறித்து, நான் இன்றைக்கு உங்களால் நியாயத்தீர்ப்படையும்படி யிருக்கிறேனென்று நான் கூப்பிட்டேன். இந்த ஒரே சொல்நிமித்தமேயன்றி, வேறொன்றினிமித்தமுங் குற்றங்காணவில்லையே யென்றான். * ௨௩: ௬.

௨௰௨. பேலிக்ஸென்பவன் அதைக்கேட்டு, இந்த மார்க்கத்தைக்குறித்து அதிக விவரமாய் அறிந்தபின்பு, சேனாதிபதியாகிய லீசியா வரும்பொழுது நான் உங்கள் காரியத்தைக்கெட்டியாய் விசாரித்துக்கொள்வேனென்றுசொல்லி அவர்களை யனுப்பி,

௨௰௩. பின்பு பவுலைக்காத்துக்கொள்ளும்படிக்கும், அவனுக்குக்கண்டிப்புச்செய்யாதபடிக்கும், அவனுடைய மனிதர்களிலொருவனாகிலும் அவனிடத்திற்போய், அவனுக்கூழியஞ் செய்வதற்குத்தடைபண்ணாதபடிக்குந் தலைவனுக்குக்கட்டளையிட்டான்.

௨௰௪. சிலநாளுக்குப்பின்பு பேலிக்சு யூதஸ்திரீயாகிய தன் மனைவி துருசில்லாளுடனே கூடவந்து, பவுலை அழைப்பித்து, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தைக்குறித்து அவன் சொல்லக்கேட்டான்.

௨௰௫. அந்தப்படி அவன் நீதியையும், இச்சை அடக்கத்தையும், பின்வரும் நியாயத்தீர்ப்பையுங் குறித்துப் பேசிக்கொள்ளுகையில், பேலிக்சு பயமடைந்து, இப்பொழுது நீ போகலாம். இனிமேல் எனக்குச்சாவகாசம் இருக்கும்பொழுது, உன்னை மறுபடியும் அழைப்பிப்பேனென்றான்.

௨௰௬. மேலும், அவன் பவுலை விடுதலைபண்ணும்படியாய், தனக்கு அவன் பணங்கொடுப்பானென்று நம்பிக்கையாயிருந்தான். அதினிமித்தமே யவன் அநேகதரம் அவனை யழைப்பித்து அவனுடனே பேசிக்கொண்டான்.

௨௰௭. இரண்டு வருஷமானபொழுது, பேலிக்சுக்குப்பதிலாகப்பொர்க்கியு பெஸ்து என்னுந் துரை வந்தான். அப்பொழுது, பேலிக்சு யூதர்களுக்குச்சந்தோஷஞ்செய்ய மனதாய்ப்பவுலைக்காவலில்வைத்துவிட்டுப்போனான்.

௨௰௫ அதிகாரம்.

[(௧) யூதர்கள் பெஸ்துவுக்கு முன்பாகப்பவுல்மேல் குற்றஞ்சாற்றினது. (௮) அதற்கு அவன் உத்தரவுசொல்லி, (௰௧) இராயனுக்கு அபயமிட்டது. (௰௪) பெஸ்து இந்தக் காரியத்தை அகிரிப்பா இராசாவுக்கு அறிவித்து, (௨௰௩) பவுல் விசாரிக்கப்பட்டு, (௨௰௫) மரணத்துக்குப்பாத்திரவான் அல்லவென்று பெஸ்துவினாலே தீர்ப்படைந்தது.]

பெஸ்து என்பவன் துரைத்தனத்திற்குவந்து மூன்றுநாளுக்குப்

பின்பு சேசாரியா பட்டினத்திலிருந்து எருசலேமுக்குப்போனான்.

௨. அப்பொழுது பிரதான ஆசாரியனும், யூதருடைய பெரியோர்களும் அவனிடத்திற்சேர்ந்து, பவுலுக்கு விரோதமாய்ப்பிராதுபண்ணி,

௩. அவனை வழியிலே கொலைசெய்ய இரகசியமான யோசனையுள்ளவர்களாய் நீர் கிருபைசெய்து, அவனை எருசலேமுக்கு வரவழைப்பிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள்.

௪. அதற்குப்பெஸ்துசொன்னது, பவுல் சேசாரியாவிலே காக்கப்பட்டிருக்கிறானே.

௫. நானுஞ் சீக்கிரமாக அங்கேபோவேன். ஆதலால், உங்களில் திறமுள்ளவர்கள் கூடவந்து, அந்த மனிதனிடத்திற் குற்றமுண்டானால், அதை யவன்மேற் சாற்றுவார்களாகவென்றான்.

௬. பின்பு அவன் ஒரெட்டுப்பத்துநாள் அவர்களிடத்திற் சஞ்சரித்தபின்பு சேசாரியா பட்டினத்திற்குப்போய், மறுநாளிலே நியாயாசனத்திலுளுக்காந்து பவுலைக்கொண்டுவரச்சொன்னான்.

௭. அவன் வந்தபொழுது, எருசலேமிலிருந்துவந்த யூதர்கள் சுற்றிநின்று அநேகமான குற்றங்களை, பவுலின்மேற் சாற்றினார்கள். அவைகளை யவர்கள் மெய்ப்படுத்தத் திராணியிருக்கவில்லை.

௮. பின்பு பவுல்சொன்னது, நான் யூதருடைய வேத நூலுக்காகிலும், தேவாலயத்திற்காகிலும், இராயருக்காகிலும் விரோதமாய், ஒரு குற்றமுஞ் செய்யவில்லையென்றான்.

௯. அப்பொழுது பெஸ்து * யூதர்களுக்குத்தயவுசெய்ய மனதாய், பவுலுடனே சொன்னது, நீ எருசலேமுக்குப்போய், அங்கே யென்னாலே இந்தக்காரியங்களைக்குறித்து, நியாயத்தீர்ப்படைய மனதிருக்கிறதாவென்றான். * ௨௪: ௨௭.

௰. அதற்குப்பவுல் சொன்னது, இராயருடைய நியாயாசனத்திற்குமுன்பாக நிற்கிறேன். அதற்குமுன்பாக நான் நியாயத்தீர்ப்படையவேண்டும். யூதருக்கு நான் ஒரு அநியாயமுஞ் செய்யவில்லை. அதை நீரும் நன்றாய் அறிந்திருக்கிறீர்.

௰௧. அநியாயமானதையாவது, மரணத்திற்குப்பாத்திரமானதையாவது நான் நடப்பித்தேனானால், நான் சாகிறதற்கு மறுக்கமாட்டேன். இவர்கள் என்மேற் சாற்றுகிற குற்றங்களெல்லாம் வீணாயிருக்கிறபடியால், ஒருவரும் என்னை அவர்களுக்குச்சந்தோஷமாக ஒப்புக்கொடுக்கக்கூடாது. இராயருக்கே அபயமிடுகிறேனென்றான்.

௰௨. அப்பொழுது பெஸ்துத்தன் ஆலோசனைக்காரருடனே பேசிக்கொண்டு, நீ இராயருக்கு அபயமிட்டாய், இராயரிடத்திற்கே போவாயென்று உத்தரவுசொன்னான்.

௰௩. சிலநாள் சென்றபின்பு இராயனாகிய அகிரிப்பாவும், பேர்னீக்கேயாளும் பெஸ்துவை வாழ்த்தும்படிக்கு, சேசாரியா பட்டினத்திற்குப்போனார்கள்.

௰௪ அங்கே அவர்கள் அநேகநாள் சஞ்சரித்திருக்கையில், பெஸ்துப்பவுலின் சங்கதியை இராயனுக்கு விவரித்துச்சொன்னதாவது; பேலிக்குசென்பவராலே காவலில் வைத்துவிடப்பட்ட ஒரு மனிதனிருக்கிறான்.

௰௫. நான் எருசலேமிலே யிருந்தபொழுது, பிரதான ஆசாரியரும், யூதருடைய மூப்பரும் அவனுக்கு விரோதமாய்ப்பிராதுபண்ணி, அவன்மேல் ஆக்கினைத்தீர்ப்பைக்கேட்டுக்கொண்டார்கள்.

௰௬. அவர்களுக்கு நான் உத்தரவுசொன்னது, குற்றஞ்சாற்றப்பட்டவன் தன்மேற் குற்றஞ் சாற்றினவர்களுக்கு முன்பாகநின்று, அவர்கள் சாற்றின குற்றத்தைக்குறித்துத்தனக்காக எதிருத்தரஞ் சொல்லும்படிக்கு, அவன் இடம் அடைகிறதற்குமுன்னே, அப்படிப்பட்டவனை அவர்களுக்குத்தயவாய் அழிவுக்கு ஒப்புக்கொடுக்கிறது உரோமருக்குள்ளே வழக்கமல்லவென்றேன்.

௰௭. அந்தப்படி அவர்கள் இங்கே கூடிவந்தபொழுது, நான் தாமதம் எவ்வளவும் பண்ணாமல், மறுநாளிலே நியாயாசனத்திலுளுக்காந்து, அந்த மனிதனைக்கொண்டுவரச்சொன்னேன்.

௰௮. அப்பொழுது குற்றஞ்சாற்றினவர்கள் வந்துநின்று, நான் நினைத்திருந்த குற்றங்களில் ஒன்றையும் அவன்மேல் ஏற்படுத்தாமல்,

௰௯. தங்கள் மார்க்கத்திற்கும், மரணம் அடைந்த இயேசு என்னும் ஒருவன் உயிரோடிருக்கிறானென்று பவுல் சொன்னதற்கும் ஏற்ற சில தருக்கங்களை அவனுக்கு விரோதமாய்ச்சொன்னார்கள்.

௨௰. நான் இப்படிப்பட்ட தருக்கங்களைக்குறித்துச்சந்தேகப்பட்டபடியினாலே நீ எருசலேமுக்குப்போய், அங்கே இவைகளைக்குறித்து நியாயம் விசாரிக்கப்பட மனதிருக்கிறதாவென்றேன்.

௨௰௧. அதற்குப்பவுல் தான் இராயருக்கு முன்பாக விசாரிக்கப்படுமளவும் வைக்கப்படவேண்டுமென்று அபயமிட்டபொழுது, நான் அவனை இராயனிடத்திற்கனுப்பும்வரைக்குங் காத்துவைக்கும்படி கட்டளையிட்டேனென்றான்.

௨௰௨. அப்பொழுது அகிரிப்பா பெஸ்துவுடனே சொன்னது, நானும் அந்த மனிதனுடைய வசனங்களைக்கேட்க விரும்புகிறேனென்றான். அதற்கவன், நாளைக்கு நீர் அப்படிக்கேட்கலாமென்றான்.

௨௩. அந்தப்படி மறுநாளிலே அகிரிப்பாவும், பேர்னீக்கேயாளும் மிகுந்த ஆடம்பரத்தோடே வந்து, சேனாதிபதியுடனேயும் பட்டினத்திற் பிரதான மனிதருடனேயுங் கூட நியாயஸ்தலத்திற்குப்போனார்கள். உடனே பெஸ்துவினுடைய கட்டளையின்படி பவுல் கொண்டுவரப்பட்டான்.

௨௪. அப்பொழுது பெஸ்துச்சொன்னதாவது; அகிரிப்பா இராசாவே! எங்களோடேகூட இவ்விடத்திலிருக்கிற மனிதர்களே! நீங்கள் பார்க்கிற இந்த மனிதனைக்குறித்து யூதருடைய சபையெல்லாம் எருசலேமிலேயும், இவ்விடத்திலேயும் என்னை வேண்டிக்கொண்டு, இவன் இனி உயிரோடிருக்கத் தகாதென்று கூப்பிட்டார்கள்.

௨௫. நான் இவன் மரணத்திற்குப்பாத்திரமான தொன்றையுஞ் செய்யவில்லையென்றறிந்து, இவன்தானே இராயனுக்கபயமிட்டபடியினாலே, இவனை அவரிடத்தில் அனுப்பும்படி தீர்மானம் பண்ணினேன்.

௨௬. இவனைக்குறித்து ஆண்டவனுக்கெழுதுகிறதற்கு, நிச்சயப்பட்டகாரியம் எனக்குத்தெரியாது. ஆதலால், காவலினுட்பட்ட ஒருவனைக்குறித்த, குற்றத்தை அறிவியாமல், அவனை யனுப்புகிறது எனக்குப்புத்தியீனமான காரியமாய்த்தோன்றினபடியினாலே,

௨௭. இவனை விசாரித்துப்பார்த்தபின்பு, எழுதத்தக்க விசேஷம் எனக்கு உண்டாகும்படிக்கு இவனை உங்கள் முன்பாகவும், விசேஷமாய் அகிரிப்பா இராசாவே! உமக்கு முன்பாகவுங் கொண்டுவந்தேனென்றான்.

௨௬ அதிகாரம்.

[(௧) பவுல் அகிரிப்பாவுக்கு முன்பாகத்தன் சிறுவயது முதற்கொண்டு தான் நடக்கிற நடத்தையைக்குறித்தும், (௰௨) தான் அற்புதமாய்க்குணப்பட்டு அப்போஸ்தலப்பட்டத்துக்கு அழைக்கப்பட்டதைக்குறித்துந் திட்டமாய் அறிவித்தது. (௨௪) பெஸ்து நீ பயித்தியகாரனென்று சொன்னபோது, நியாயமான உத்தரவுசொன்னது. (௨௮) அகிரிப்பா கிறிஸ்தவனாகக்கொஞ்சங்குறையச்சம்மதித்தது. (௩௧) கூட்டத்தாரெல்லாரும் பவுலைக்குற்றமற்றவனென்று தீர்த்தது.]

பின்பு அகிரிப்பாவானவன் பவுலை நோக்கி, நீ உனக்காகப்பேசும்படிக்கு உத்தரவுகொடுத்தேனென்றான். அப்பொழுது பவுல் கையைநீட்டித்தனக்காகச்சொல்லிக்கொண்ட உத்தரமாவது;

௨. அகிரிப்பா இராசாவே! யூதர்கள் என்மேற்சாற்றுகிற சகல குற்றங்களைக்குறித்தும் நான் இன்றைக்கு உமக்குமுன்பாக மாறுத்தரஞ் சொல்லவேண்டுவதினாலே என்னைப்பாக்கியவானென்றெண்ணுகிறேன்.

௩. விசேஷமாய் நீர் யூதருடைய சகலமுறைமைகளையும், தருக்கங்களையும் அறிந்தவராய் இருக்கிறீரே. ஆகையால், நீர் நீடிய பொறுமையுடனே எனக்குச்செவிகொடுக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

௪. நான் என் வாலிபவயதுமுதற்கொண்டு எருசலேமிலே என் தேசத்தாருக்குள்ளேயிருந்தபடியால், என் வாலிபம் முதல் நான் நடந்த நடக்கையை யூதரெல்லாரும் அறிந்திருக்கிறார்கள்.

௫. நம்முடைய மார்க்கத்திலே மிகவுங் கெட்டியான * பரிசேயர் வகுப்பிலே நான் பரிசேயனாய்ச்சீவனம்பண்ணினதையும், ஆதிமுதல் அறிந்திருக்கிறார்கள். அவர்களுஞ் சாட்சிசொல்ல மனதாயிருந்தால், இப்படியே சொல்வார்கள். * ௨௩: ௬.

௬. இப்பொழுது நம்முடைய பிதாக்களுக்கு, பராபரன் அருளிச்செய்த வாக்குத்தத்தத்திற்கேற்ற நம்பிக்கைக்காக நான் நியாத்தீர்ப்பு அடையும்படி நிற்கிறேன்.

௭. இரவும், பகலும் இடைவிடாமற் பராபரனுக்கு, ஆராதனை செய்கிற நம்முடைய பன்னிரண்டு கோத்திரத்தாரும், அந்த * வாக்குத்தத்தம் நிறைவேறுமென்று நம்பியிருக்கிறார்கள். அகிரிப்பா இராசாவே! அந்த நம்பிக்கையினிமித்தமே யூதர்கள் என்மேற் குற்றஞ் சாற்றுகிறார்கள். * ௧ மோ. ௩: ௰௫.

௮. பராபரன் மரித்தோரை எழுப்புகிறது நம்பப்படாதகாரியமென்று நீங்கள் எண்ணுகிறதெப்படி?

௯. முன்னே * நானும் நாசரேத்தூரானாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய், அநேக காரியங்களை நடப்பிக்க வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்தேன். * கலா. ௧: ௰௩, ௰௪.

௰. அப்படியே எருசலேமிலே செய்தேன். நான் பிரதான ஆசாரியராலே அதிகாரம் பெற்று, பரிசுத்தவான்களில் அநேகரைக் காவல் வீடுகளில் அடைத்தேன். அவர்களைக்கொல்லவுஞ் சம்மதித்தேன்.

௰௧. அநேகதரம் நான் சகல செப ஆலயங்களிலேயும், அவர்களைத்தண்டித்துத்தூஷணிக்கும்படிக்கு, அவர்களைப்பலவந்தஞ் செய்தேன். நான் மிகவும் அவர்கள்மேலே மூர்க்கவெறியாய் இருந்த, அந்நிய பட்டினங்கள் வரைக்கும் அவர்களைத்துன்பப்படுத்தினேன்.

௰௨. இப்படிச்செய்து வருகையில் நான் * பிரதான ஆசாரியரிடத்திற்பெற்ற அதிகாரத்தோடும், உத்தரவோடுந் தமஸ்கூருக்குப்போனபொழுது, * ௯: ௧, ௨.

௰௩. இராசாவே வழியிலே மத்தியான கா
லத்திலே நான் சூரியனுடைய பிரகாசத்
திற்கதிகமான ஒளி வானத்திலிருந்து என்
னையும், என்னுடனே கூடப்பிரயாணப்பட்
டவர்களையுஞ் சுற்றி, பிரகாசிக்கக்கண்
டேன்.
௰௪. உடனே நாங்கள் எல்லாருந் தரையி
லே விழுந்தபொழுது, சவுலே! சவுலே! என்
னத்திற்கு நீ என்னைத் துன்பப்படுத்துகிறாய்!
முள்ளில் உதைக்கிறது உனக்குக்கடினமா
மென்று எபிரேயு பாஷையிலே சொன்ன
சத்தத்தைக்கேட்டேன்.
௰௫. அதற்கு நான் ஆண்டவரே! நீர் யார்
என்றேன்! அவர் சொன்னது, நான் நீ
துன்பப்படுத்துகிற இயேசு.
௰௬. இப்பொழுது நீ எழுந்து காலூன்றி
நில். நீ கண்டவைகளையும், நான் உனக்குக்
காண்பிப்பவைகளையுங் குறித்து, நான் உன்
னை ஊழியக்காரனென்றும், சாட்சியென்
றும், * ஏற்படுத்தும்படிக்கு உனக்குத்தரி
சனையானேன். * ௨௨: ௰௪, ௰௫.
௰௭. ஆகலால், நான் உன் தேசத்தாரி
னின்றும், புறத்தேசத்தாரினின்றும் உன்னை
விடுதலையாக்கி,
௰௮. அவர்கள் என்னைப்பற்றிக்கொள்ளும்
விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும், ப
ரிசுத்தவான்களிருக்கிற இடத்திலே சுதந்
தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படிக்கு,
அவர்களுடைய கண்களைத்திறக்கவும், அ
வர்களை இருளினின்று ஒளியினிடத்திற்கும்,
பசாசினுடைய அதிகாரத்தினின்று பரா
பரனிடத்திற்குந் திருப்பவும் உன்னை யவர்
களிடத்தில் அனுப்புகிறேன் என்றார்.
௰௯. அகிரிப்பா இராசாவே! அந்தப்பரம
தரிசனைக்கு நான் கீழ்ப்படாதவனாய் இரா
மல்,
௨௰. முதலாவது, * தமஸ்கு ஊரிலேயும்,
பின்பு எருசலேமிலேயும், யூதேயாதேச
மெங்குமுள்ளவர்களுக்குள்ளும் மற்றத்தே
சத்தாருக்குள்ளும்போய், அவர்கள் மனதை
மாற்றி, பராபரனிடத்திற்குத்திரும்பி மனந்
திருப்புதற்கேற்ற கிரியைகளைச்செய்யவேண்
டுமென்றறிவித்தேன். * ௯: ௰௯—௨௨.
௨௧. இதினிமித்தமே யூதர்கள் தேவால
யத்திலே என்னைப்பிடித்துப்பின்பு, * கொ
லைசெய்யும்படி தேடினார்கள். *௨௧:௩௰,௩௧.
௨௨. பராபரன் எனக்கு உதவிசெய்ததி
னாலே நான் இந்நாள்வரைக்குஞ் சிறியோ
ருக்கும், பெரியோருக்குஞ் சாட்சிசொல்லி
நிற்கிறேன் தீர்க்கதரிசிகளும், மோசேயும்,
பின்வருமென்று சொன்னதின்படியே,
௨௩. கிறிஸ்துப்பாடுபட்டும், மரணத்தினி
ன்று உயிரோடே எழுந்திருப்பவர்களில்
முதன்மையானவராயுமிருந்து, யூதசனங்
களுக்கும், மற்றத்தேசத்தாருக்கும் ஒளி
யைப்பிரசித்தம் பண்ணுகிறாரென்று நான்
சொல்லுகிறதே யன்றி, வேறொன்றையும்
நான் சொல்லுகிறதில்லை என்றான்.
௨௪. இவ்விதமாய், பவுல் தனக்காக உத்
தரவு சொன்னபொழுது, பெஸ்து மிகுந்த
சத்தத்துடனே சொன்னது, பவுலே, நீ பித்
தங்கொண்டிருக்கிறாய். அதிகக்கல்வி உன்
னைப் பயித்தியகாரனாக்குகின்றதென்றான்.
௨௫. அதற்கவன் சொன்னது, கனம்பொ
ருந்திய பெஸ்துவே! நான் பித்தங்கொண்
டிருக்கவில்லை. சத்தியமும் நற்புத்தியுமான
வார்த்தைகளை வசனிக்கிறேன்.
௨௬. இந்தச்சங்கதிகளை இராசா அறிந்தி
ருக்கிறார். இவை * ஒரு மூலையிலே நடந்த
காரியங்களல்ல. ஆதலால், இவைகளில்
ஒன்றும் அவருக்கு மறைவாயிருக்கமாட்
டாதென்று நான் எண்ணித்தயிரியமாய்,
அவருடனே பேசுகிறேன். * யோவா. ௰௮:
௨௰.
௨௭. அகிரிப்பா இராசாவே! தீர்க்கதரிசி
கள்மேல்உமக்குவிசுவாசம்உண்டா? விசுவா
சிக்கிறீரென்று அறிந்திருக்கிறேன்என்றான்.
௨௮. அப்பொழுது அகிரிப்பா பவுலுட
னே சொன்னது, நான் கிறிஸ்தவனாகிறதற்
குக்கொஞ்சங்குறைய நீ என்னைச்சம்மதிக்
கப்பண்ணுகிறாய் என்றான்.
௨௯. அதற்குப்பவுல் சொன்னது, நீர்மாத்
திரமல்ல. இன்று என் வசனங்களைக்கேட்
ட யாவருங் கொஞ்சமாயல்ல. (முழுவது
மே) இந்தச்சங்கிலிகளைத்தவிர என்னைப்
போலாகும்படிக்கு, பராபரனை வேண்டிக்
கொள்ளுகிறேன் என்றான்.
௩௰ இவைகளை யவன் சொன்னபின்பு இரா
சாவும், துரையும், பேர்னீக்கேயாளும், அ
வர்களுடனேகூட உளுக்காந்திருந்தவர்க
ளும் எழுந்துபோகையில்,
௩௧. ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு,
* இந்த மனிதன் மரணத்திற்கு அல்லது
சங்கிலிகளுக்குப்பாத்திரமான ஒன்றையுஞ்
செய்யவில்லை என்றார்கள். * ௨௩: ௯.
௩௨. மேலும் அகிரிப்பா பெஸ்துவுடனே
சொன்னது, அந்த மனிதன் இராயனுக்கு
அபயமிடாதிருந்தானானால், அவனை விடுத
லைபண்ணத்தகுதியாய் இருக்கும் என்றான்.

௨௭ அதிகாரம்.

[(௧) பவுல் உரோமாபுரிக்குப்போகக்கப்ப
லேறி, (௰) யாத்திரையினால் உண்டாகும்
நஷ்டத்தைச்சொல்லியும், (௰௧) கப்பற்கா
ரர் நம்பாதது. (௰௪) கொடுங்காற்றினாற்
கப்பல் அங்கும், இங்கும் அலைந்து, (௨௧)
சேதமாகியும், (௨௨, ௩௪, ௪௪.) சனங்கள்
சுகமாய், கரைசேர்ந்தது.]

பின்பு நாங்கள் கப்பலேறி, இத்தாலிய
தேசத்திற்குப்போகும்படி தீர்மான

ம் உண்டானபொழுது, பவுலும், காவலில்
வைக்கப்பட்டிருந்த வேறுசிலரும் இராய
னுடைய சேனையில் யூலியென்று பேர்
கொண்ட தலைவனுக்கு ஒப்புக்கொடுக்கப்
பட்டார்கள்.
௨. அந்தப்படி நாங்கள் அதிர்மீத்துப்பட்
டினத்திற் கப்பலேறி ஆசியாதேசத்துக்
கரையோரத்தின் வழியாய்ப்போக நினைத்
துப்புறப்பட்டோம். மக்கெதோனியாதே
சத்து, தெசலோனிக்கே பட்டினத்தானா
கிய அரிஸ்தருக்கு எங்களுடனேகூட இ
ருந்தான்.
௩. மறுநாளிலே சீதோன்துறையிற் சேர்ந்
தோம். யூலியென்பவன் பவுலைப் *பட்ச
மாய் நடப்பித்து, அவன் தன் சிநேகிதரி
டத்திலே போய், பராமரிப்பை அடையும்
படிக்கு உத்தரவு கொடுத்தான். *௨௪:
௨௩.
௪. அவ்விடத்தை நாங்கள் விட்டுப்புறப்
பட்டு, காற்றுகள் எதிரானபடியினாலே சிப்
புரு தீவுக்கு அருகாகப்போய்,
௫. கிலீக்கியா, பம்பீலியா தேசங்களின்
கடலின் வழியாய்ப்போய் லிக்கியா தே
சத்து மீறாபட்டினத்திற் சேர்ந்தோம்.
௬. அங்கே இத்தாலியா தேசத்திற்குப்
போக எத்தினமான அலெக்குசந்திரியா
பட்டினத்துக்கப்பலை, சேனைத்தலைவன்கண்
டு, எங்களை யதிலேறப்பண்ணினான்.
௭. காற்று எங்களுக்குத்தடைபண்ணினதி
னாலே நாங்கள் அநேகநாள் மெதுவாய்ச்
சென்று, வருத்தத்தோடே கினிது பட்டி
னத்திற்கெதிரேபோய், கிரேத்தைத்தீவின்
கீழ்ப்புறமான சலுமோன் என்னும் இடத்
திற்கெதிராய்ப்போய்,
௮. வருத்தத்தோடே அதைக்கடந்து,
நலுஸ்லீம் என்னப்பட்ட இடத்திற்சேர்ந்
தோம். லசேய் பட்டினம் அதற்குச்சமீ
பமாய் இருந்தது.
௯. அதுவரைக்கும் மிகுந்த காலஞ்சென்
றபடியினாலும், உபவாசப்பண்டிகை நா
ளுங் கழிந்துபோனதால், அதிகமாய்ப்போ
கிறது மோசம் வருதற்கேதுவானபடியினா
லும், பவுல் அவர்களை நோக்கி,
௰. புருஷரே! இந்த யாத்திரைக்கப்பலில்
உள்ள சரக்குகளுக்கும், கப்பல்களுக்கு
மாத்திரமல்ல. நம்முடைய சீவனுக்குங்கூ
ட வருத்தமும், மிகுந்த சேதமுமாய் இருக்
குமென்று காண்கிறேனென்று எச்சரித்
தான்.
௰௧. சேனைத்தலைவன் பவுலினாற் சொல்
லப்பட்டவைகளிலும் மாலுமியையும், கப்
பற்காரனையும் அதிகமாய் நம்பினான்.
௰௨. அல்லாமலும், அந்தத்துறை மழை
காலத்திலே தங்குதற்குத்தகுதியல்லாதபடி
யினாலே தென்மேற்கையும் வடமேற்கை
யும் நோக்குகிற பினிகஸ் என்னும் கிரேத்
தைத்தீவின் துறைமுகத்திலே மழைகாலத்
திற்குத்தங்குகிறதற்கு, அங்கே சேரக்கூடு
மானால் சேரும்படிக்கு இவ்விடம் விட்டுப்
புறப்படவேண்டுமென்று, அநேகம்பேர் ஆ
லோசனை சொன்னார்கள்.
௰௩. மேலுந் தென்றல் மெதுவாய் அடித்
தபடியால், அவர்கள் தங்கள் யோசனையின்
படி நிச்சயமாய் நடக்குமென்றெண்ணி,
அவ்விடம்விட்டுப்பேர்ந்து, கிரேத்தைத்தீவுக்
கருகாய்ப்போனார்கள்.
௰௪. சிலகாலத்திற்குப்பின்பு, ஐரொக்கிலி
தோனென்னப்பட்ட கடுங்காற்று அதில்
மோதிற்று.
௰௫. கப்பல் அதில் அகப்பட்டுக்கொண்டு,
காற்றுக்கெதிர்த்துப்போக மாட்டாதபடி
யினாலே, நாங்கள் காற்றின் போக்கிலே
கொண்டுபோகப்பட்டோம்.
௰௬. அப்படிக்கலவுதை யென்னப்பட்ட
ஒரு சிறியதீவைக்கடந்தோடுகையில், ஓடத்
தை வசப்படுத்திக்கொள்ளுதற்கு மிகுந்த
வருத்தம் உண்டாயிருந்தது.
௰௭. அதை யவர்கள் தூக்கியெடுத்தபின்பு,
எல்லாருடைய உதவியினாலும் கப்பலைச்
சுற்றிக்கட்டிச்சொரிமணலிலே விழுவோம்
என்று பயந்து, பாய்களையிறக்கி, இவ்வித
மாய்க்கொண்டுபோகப்பட்டோம்.
௰௮. மேலும், நாங்கள் பெருங்காற்றும
ழையினாலே மிகவும், அடிபட்டபடியால்,
மறுநாளிலே சில பாரத்தைக்கடலில் எறிந்
தார்கள்.
௰௯. மூன்றும்நாளிலே கப்பலின் தளவா
டங்களை யெங்கள் கைகளினாலே யெடுத்தெ
றிந்தோம்.
௨௰. அநேகநாளாய்ச்சூரியனாகிலும், நட்
சத்திரங்களாகிலுங் காணப்படாமல், மிகுந்
த பெருங்காற்றும், மழையும் எங்களைச்
சூழ்ந்திருந்தபடியினாலே, தப்பிப்போவதற்
கான நம்பிக்கையெல்லாம் அற்றுப்போ
யிற்று.
௨௧. அப்படியிருக்கையில், மிகுந்தகாலம்
அவர்கள் போசனம் பண்ணாமல் இருந்த
பொழுது, பவுல் அவர்களுக்குள்ளே யெழும்
பிச்சொன்னதாவது; புருஷரே! இந்த வ
ருத்தமும், சேதமும் வாராதபடிக்கு, நீங்
கள் என் சொல்லுக்குச்செவிகொடுத்துக்
கிரேத்தைத்தீவைவிட்டுப்புறப்படாமல் இ
ருக்கவேண்டியதாயிருந்தது.
௨௨. இப்பொழுது திடச்சித்தமாயிருங்க
ளென்று உங்களை வேண்டிக்கொள்ளுகி
றேன். கப்பல் சேதமேயன்றி, உங்களிலொ
ருவனுக்கும் பிராணசேதம் வருவதில்லை.
௨௩. எப்படியென்றால், நான் ஆதீனமாயி
ருந்து ஆராதனைசெய்கிற பராபரனுடைய
தூதன் இந்த இராத்திரியிலே என்னிடத்

தில்வந்து நின்று * பவுலே பயப்படாதிரு.
நீ இராயனுக்குமுன்பாக நிற்கவேண்டும்.
* ௨௩: ௰௧.
௨௪. அல்லாமலும், உன்னுடனே கூட
யாத்திரையாய் வருகிற யாவரையும் பரா
பரன் உனக்குத்தயவுபண்ணினாரென்றான்.
௨௫. ஆனபடியினாலே, புருஷரே! திடச்
சித்தமாயிருங்கள். எனக்குச்சொல்லப்பட்
ட பிரகாரமாகவே நடக்குமென்று பராபர
னை நம்புகிறேன்.
௨௬. நாம் * ஒரு தீவிலே விழுகிறதுமாத்
திரம் நடக்கவேண்டுமென்றான். * ௨௮: ௧.
௨௭. பதினாலாம் இராத்திரியானபொழு
து, நாங்கள் ஆதிரியாகடலில் அலைந்து
திரிகையில், நடுச்சாமத்திலே கப்பலாள்
களுக்கு ஒருகரை கிட்டியிருக்கிறதாய்த்
தோன்றிற்று.
௨௮. உடனே யவர்கள் சலத்தின் அள
வைச்சோதித்து, இருபது பாகமென்று
கண்டார்கள். சற்று அப்புறம் போனபொ
ழுது மறுபடியுஞ் சோதித்துப்பதினைந்து
பாகமென்றாண்டு,
௨௯. பாறையிடங்களில் விழுவோமென்று
பயந்து, கப்பலின் பின்பக்கத்தில் இருந்து
நான்கு நங்கூரங்களைப்போட்டு, உதயம்
எப்பொழுது உண்டாகுமென்று இருந்தார்
கள்.
௩௰. அப்பொழுது கப்பல் மனிதர்கள் கப்
பலைவிட்டோடிப்போக வகைதேடி, தாங்
கள் கப்பலின் முன்பக்கத்திலிருந்து நங்கூ
ரங்களைப்போட மனதுள்ளவர்கள்போல,
ஓடத்தைக்கடலில் இறக்குகையில்,
௩௧. பவுல் சேனைத்தலைவனையும், போர்ச்
சேவகரையும் நோக்கி, இவர்கள் கப்பலில்
இராவிட்டால், நீங்கள் தப்பிப்போகமாட்
டீர்களென்றான்.
௩௨. அப்பொழுது போர்ச்சேவகர் ஓடத்
தின் கயிறுகளையறுத்து, அதைத்தாழவிழ
விட்டார்கள்.
௩௩. உதயமாகத்தொடங்கினபொழுது எ
ல்லாரும் போசனம் பண்ணுதற்குப்பவுல்
அவர்களைத் தயிரியப்படுத்திச் சொன்னதாவ
து; நீங்கள் ஒன்றுஞ் சாப்பிடாயல் பட்டி
னியாய்க்காத்திருந்து, இன்று பதினாலாம்
நாளாயிற்றே.
௩௪. ஆகையால், போசனம் பண்ணும்படி
உங்களுக்குப்புத்திசொல்லுகிறேன். நீங்கள்
தப்புவதற்கு அதுவே உதவியாயிருக்கும்.
உங்கள் தலைகளிலிருந்து ஒரு மயிரும் விழா
து என்றுசொல்லி,
௩௫. அப்பத்தை யெடுத்துக்கொண்டு, எல்
லார்முன்பாகவும், * பராபரனைத்தோத்தி
ரித்து, அதைப்பிட்டுப்புசிக்கத்தொடங்கி
னான். * யோவா. ௬: ௰௧.
௩௬. அப்பொழுது, மற்றெல்லாருந் திடச்
சித்தம் அடைந்து போசனம் பண்ணினார்
கள்.
௩௭. கப்பலில் இருநூற்று எழுபத்தாறு
பேரிருந்தோம்.
௩௮. திருத்தியாகப்புசித்தபின்பு அவர்கள்
கோதுமையைக்கடலில் எறிந்து கப்பலை
லெகுவாக்கினார்கள்.
௩௯. உதயமானபொழுது இன்ன பூமி
யென்றறியாமல், சமமான கரையுள்ள ஒரு
துறைமுகத்தைப்பார்த்து, அங்கே போ
கக்கூடுமானால், அவ்விடத்திற்குத்தானே கப்
பலைப்போகப்பண்ணவேண்டுமென்று யோ
சனையாயிருந்து,
௪௰. நங்கூரங்களை யறுத்துக்கடலிலேவிட்
டுச்சுக்கானுடைய கயிறுகளையுந் தளரவிட்
டுச்சிறிய பாயைக்காற்றுக்கு விரித்துக்க
ரைக்குநேராய்ப்போகையில்,
௪௧. இருபுறமுங் கடலுள்ள ஓரிடத்திலே
சென்று கப்பல் தட்டிற்று. அதின் முன்
பக்கம் அசையாமல் ஊன்றியிருந்தது. பின்
பக்கம் அலைகளின் பலத்தினாலே யுடைந்து
போயிற்று.
௪௨. அப்பொழுது காவலிலிருந்தவர்களி
லொருவனும் நீந்தி ஓடிப்போகாதபடிக்கு,
அவர்களைக்கொலைசெய்ய வேண்டுமென்று
போர்ச்சேவகர் யோசனையாயிருந்தார்கள்.
௪௩. அவர்களுடைய தலைவன் பவுலைக்காப்
பாற்ற மனதாய் அவர்களுடைய யோசனை
யைத்தடுத்து, நீந்தத்தக்கவர்கள் முந்திக்
கடலில்விழுந்து கரையேறவும்,
௪௪. மற்றவர்களிற் சிலர் பலகைகளின்மே
லும்; சிலர் கப்பல்துண்டுகள்மேலும் போ
ய்க்கரையேறவுங் கட்டளையிட்டான். இவ்
விதமாய் * எல்லாருந் தப்பிக்கரைசேர்ந்
தார்கள். * ௨௪.

௨௮ அதிகாரம்.

[(௧) கப்பல் சேதமானபின்பு பவுல் அந்நி
யசாதியாரால் அங்கிகரிக்கப்பட்டது. (௩)
அவன்கையைச்சுற்றிக்கொண்ட விஷப்பூச்
சி அவனைத்தீண்டாதிருந்தது. (௮) அவன்
அந்தத்தீவில் அநேக வியாதிக்காரரைச்
சொஸ்தமாக்கினது. (௰௧) உரோமாபுரிக்
குப்போனது. (௰௭) தான் வந்த நோக்கத்
தை யூதர்களுக்கு அறிவித்தது. (௨௪) அ
வன் பிரசங்கித்தபின்பு சிலர் விசுவாசித்தும்,
சிலர் விசுவாசியாமற்போனது. (௩௰) அங்
கே இரண்டுவருஷகாலம் பிரசங்கித்துக்
கொண்டிருந்தது.]

அவர்கள் தப்பிக்கரைசேர்ந்தபின்பு
* அந்தத்தீவின்பேர் மெலித்தா
வென்றறிந்தார்கள். * ௨௭: ௬.
௨. அந்நியராகிய அந்தத்தீவார் எங்களுக்
குமிகுந்த அன்பைக்காண்பித்தார்கள். அவ்
வேளையிலிருந்த மழைக்காகவும், குளிர்ச்சிக்

காகவும் அவர்கள் நெருப்பை உண்டுபண்
ணி, எங்களனைவரையுஞ் சேர்த்துக்கொண்
டார்கள்.

௩. அப்பொழுது பவுல் சில விறகுகளைவா
ரி அந்த நெருப்பின்மேற் போடுகையில்,
ஒரு விரியன்பாம்பு அனலினாலே புறப்பட்டு
அவனுடைய கையைச்சுற்றிக்கொண்டது.

௪. தீவார் அந்தப்பொல்லாத பூச்சியை
அவனுடைய கையிலே தொங்கக்கண்ட
பொழுது, மெய்யாய் இந்தமனிதன் கொலை
பாதகன். இவன் சமுத்திரத்திற்குத்தப்பி
வந்தும் பழியானது இவனைப்பிழைக்க ஒட்
டவில்லையென்று, தங்களுக்குள்ளே சொல்
லிக்கொண்டார்கள்.

௫. அவன் அந்தப்பூச்சியைத்தீயிலேயுதறி
* ஒரு தீமையும் அடையாதிருந்தான்.
* மாற் ௰௬: ௰௮.

௬. அவர்கள் இவன் வீக்கங்கொண்டு சடு
தியாய் மரித்துவிழுவானென்று காத்திருந்
தார்கள். மிகுந்தகாலம் அவர்கள் அப்ப
டிக்காத்திருந்து, சேதம் எவ்வளவும் அவ
னுக்கு வாராததைக்கண்டபொழுது அவர்
கள் வேறு சிந்தையையடைந்து, * அவ
னைத்தேவனென்று சொல்லிக்கொண்டார்
கள். * ௰௪: ௰௧.

௭. மேலும், அவ்விடத்திற்குச்சமீபமாய்
அந்தத்தீவுக்கு முதலாளியாகிய புபிலியென்
று பேர்கொண்டவனுடைய காணிபூமியி
ருந்தது. அவன் எங்களை ஏற்றுக்கொண்டு
மூன்றுநாளும் பட்சமாய் விசாரித்துக்
கொண்டான்.

௮. புபிலியினுடைய தகப்பன் சுரத்தோ
டும், கழிச்சலோடுங் கிடந்தான். பவுல் அ
வனிடத்திற்போய்ச்செபம்பண்ணி, அவன்
மேலே தன்கைகளைவைத்து அவனைக்குண
மாக்கினான்.

௯. அப்படி நடந்தபொழுது, தீவிலேயி
ருந்த மற்ற வியாதிக்காரரும்வந்து குண
மாக்கப்பட்டார்கள்.

௰. அவர்கள் எங்களை மிகவுங் கனஞ்செய்
து, நாங்கள் கப்பலேறினபொழுது எங்க
ளுக்கு வேண்டியவைகளை ஏற்றினார்கள்.

௰௧. மூன்றுமாதஞ் சென்றபின்பு, தீவிலே
மழைகாலத்திற்குத்தங்கியிருந்த மிதுனமெ
ன்னும் அடையாளமுள்ள அலேக்குசந்திரி
பட்டினத்துக்கப்பலிலே நாங்கள் ஏறிப்பு
றப்பட்டுப்போய்,

௰௨. சீர்க்கூசைப்பட்டினத்தைச்சேர்ந்து
அங்கே மூன்றுநாள் தங்கி,

௰௩. பின்பு அவ்விடம்விட்டு, (சிசிலிதீவைச்)
சுற்றியோடி, இரேகியு பட்டினத்திற்சேர்ந்
தி, ஒருநாளுக்குப்பின் தென்றற்காற்றெடுக்
கையில், இரண்டாம்நாளிலே புத்தேயோலி
பட்டணத்திற்குப்போய்,

௰௪. அங்கே சகோதரரைக்கண்டோம்.
அவர்கள் ஏழுநாள் தங்களிடத்திலிருக்கும்
படி யெங்களை வேண்டிக்கொண்டார்கள்.
அந்தப்படி நாங்கள் (இருந்து) பின்பு உ
ரோமாபுரிக்குப்போனோம்.

௰௫. அவ்விடத்திலுள்ள சகோதரர் எங்
கள் சங்கதிகளைக்கேள்விப்பட்டு, புறப்பட்
டுச் (சிலர்) அப்பியுபுரமென்னும் இடம்வ
ரைக்கும் (சிலர்) மூன்று சத்திரமென்னும்
இடம்வரைக்கும் எங்களுக்கெதிர்கொண்டு
வந்தார்கள். அவர்களைப்பவுல்கண்டு, பரா
பரனைத்தோத்திரஞ்செய்து திடன்கொண்
டான்.

௰௬. உரோமாபுரியில் நாங்கள் சேர்ந்த
பொழுது, சேனைத்தலைவன் தன் காவலில்
இருந்தவர்களைச்சேனாதிபதிக்கொப்புக்கொ
டுத்தான். அப்பொழுது பவுல் தன்னைக்
காத்திருக்கும்படியான சேவகனுடனேகூ
டத்தனித்திருக்கும்படிக்கு உத்தரவு பெற்
றுக்கொண்டான்.

௰௭. மூன்றுநாளுக்குப்பின்பு பவுல் யூதரிற்
பிரதானமானவர்களைக்கூடிவரவழைத்தான்.
அவர்கள் கூடிவந்திருந்தபொழுது, அவன்
அவர்களுடனே சொன்னதாவது; சகோத
ரர்களே! (நம்முடைய) சனங்களுக்காவது,
முன்னோர்களின் முறைமைகளுக்காவது வி
ரோதமானதொன்றையும் நான் செய்யாம
லிருந்தும், காவலில் வைக்கப்பட்டு, எருச
லேமிலிருந்து உரோமர் கைகளில் ஒப்புக்
கொடுக்கப்பட்டேன்.

௰௮. அவர்கள் என் காரியத்தை விசாரித்
தபொழுது, மரணத்திற்கு ஏதுவான குற்றம்
ஒன்றையும் என்னிடத்திற் காணாதபடியினா
லே என்னை விடுதலையாக்கமனதாய் இருந்
தார்கள்.

௰௯. யூதர்கள் எதிர்பேசினபொழுது, நா
ன் இராயருக்கு அபயமிடும்படிக்கு, பலவந்
தப்பட்டேன். என் தேசத்தார்மேலே யா
தொரு குற்றஞ் சாற்ற மனதில்லாமல் அப்
படிச்செய்தேன்.

௨௰. இந்தச்சங்கதியைக்குறித்து நான்
உங்களைக்காணவும், உங்களுடனே பேச
வும் உங்களை யழைப்பித்தேன். * இஸ்ரவே
லருடைய நம்பிக்கையின் நிமித்தமே இந்
தச்சங்கிலியாற் கட்டப்பட்டிருக்கிறேனென்
றான். * ௨௬: ௬, ௭.

௨௧. அவனுடனே யவர்கள் சொன்னதாவ
து; உன்னைக்குறித்து யூதேயாவிலிருந்து
காகிதங்கள் எங்களிடத்தில் வரவுமில்லை.
(அங்கேயிருந்து) வந்த சகோதரரில் ஒரு
வனும் உன்மேற் பொல்லாங்கை யறிவித்
துச்சொல்லவுமில்லை.

௨௨. இந்த மார்க்கவகுப்பு எங்கும் விரோ
தமாய்ப்பேசப்படுகின்றதென்று நாங்கள்
அறிந்திருக்கிறபடியால், நீ சிந்திக்கிறவைக

ளை உன்னிடத்திலே கேட்க விரும்புகிறோமென்றார்கள்.

௨௩. அதற்காக அவர்கள் அவனுக்குக் குறித்த நாளிலே அநேகம்பேர் அவன் தங்கின இடத்திலே சேர்ந்தார்கள். அப்பொழுது அவன் காலைதொடங்கி, சாயங்காலம்வரைக்கும் மோசேயின் வேதநூலிலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலுமிருந்து இயேசுவுக்குரியவைகளை அவர்களுக்குப் போதித்து, பராபரனுடைய இராச்சியத்தைக்குறித்துச்சாட்சிகொடுத்து வியாக்கியானம் பண்ணினான்.

௨௪. அவன் சொன்னவைகளைச்சிலர் ஒத்துக்கொண்டார்கள். சிலர் விசுவாசியாதிருந்தார்கள்.

௨௫. இப்படியவர்கள் ஒருவரோடொருவர் இசைவாய் இராமல் வெளியே போகையிற் பவுல் அவர்களுக்குச்சொன்ன ஒரே வாக்கியமாவது;

௨௬. இந்தச்சனங்கள் * கண்களினாலே காணாமலும், காதுகளினாலே கேளாமலும், இருதயத்தினாற் சிந்தித்துக்கொள்ளாமலும், மனந்திருப்பாமலும், என்னால் ஆரோக்கியம் அடையாமலும் இருக்கும்படிக்கு இவர்கள் கடினமாக்கப்பட்ட இருதயமுடையவர்களுமாய், வருத்தத்தோடே கேட்கிற காதுள்ளவர்களுமாய், மூடிக்கொண்டிருக்கிற கண்களையுடையவர்களுமாய் இருக்கிறபடியினாலே, * ஏசா. ௬: ௯, ௰.

௨௭. நீங்கள் உற்றுக்கேட்டாலும், சிந்தித்துக்கொள்ளாமல் இருப்பீர்கள் உற்றுப்பார்த்தாலும் அறியாமல் இருப்பீர்களென்று இந்தச்சனங்களிடத்திற்குப்போய்ச்சொல்லென்கிறதை, பரிசுத்த ஆவி ஏசாயா தீர்க்கதரிசியைக்கொண்டு நம்முடைய முன்னோர்களுடனே நன்றாய்ச்சொன்னார்.

௨௮. ஆதலாற் பராபரனுடைய இரட்சிப்புப்புறத்தேசத்தார்களுக்கு அனுப்பப்பட்டதென்று நீங்கள் அறிந்துகொள்வீர்களாக. அவர்களே அதற்குச்செவிகொடுப்பார்களென்றான்.

௨௯. இவைகளையவன் சொன்ன பின்பு, யூதர்கள் தங்களுக்குள்ளே மிகவுந் தருக்கம் பண்ணிக்கொண்டுபோய்விட்டார்கள்.

௩௰. பின்பு பவுல் தனக்காகக்கூலிக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டுவருஷ முழுவதுந்தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு,

௩௧. மிகுந்த தயிரியத்தோடும், தடையில்லாமலும், பராபரனுடைய இராச்சியத்தைக்குறித்துப்பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் விசேஷங்களை உபதேசித்துக்கொண்டுவந்தான்.

முற்றும்.

அப்போஸ்தலனாகியபவுல்

உரோமாபுரியாருக்கெழுதின நிருபம்.

ROMANS.

---

௧ அதிகாரம்.

[(௧) பவுல் உரோமருக்குத்தான் அப்போஸ்தல அதிகாரம்பெற்றதையும், (௯) அவர்களிடத்திற்குச்செல்ல விரும்பினதையுங் காட்டினது. (௰௬) தான் பிரசங்கிக்குஞ் சுவிசேஷம் இன்னதென்றும், அதினால் விளங்கும் நீதி இன்னதென்றுங் காண்பித்தது. (௰௮) எல்லாவிதப்பாவங்களைக்குறித்துப் பராபரன் கோபத்தையும், (௨௧) அஞ்ஞானிகள் செய்யும் பாவங்கள் இன்னவைகள் என்பதையுங் காட்டினது.]

மனிதத்தன்மையின்படிக்கு, தாவீதின் சந்ததியிற் பிறந்தவருமாய்,

௨. பரிசுத்தமுள்ள ஆவிக்குரிய தன்மையின்படிக்கு மரித்தோரிலிருந்தெழுந்ததினாலே பராபரனுடைய குமாரனென்று பலமாய்க்காண்பிக்கப்பட்டவருமாய், தேவகுமாரனுமாய், நம்முடைய கர்த்தருமாய்,

௩. தம்மாலேயழைக்கப்பட்ட உங்களோடேகூட உலகத்தார் யாவரையுந் தமது திருநாமத்தின் நிமித்தம் விசுவாசத்திற்குக் கீழ்ப்படியப்பண்ணும்பொருட்டு,

௪. எங்களுக்குக்கிருபையையும், அப்போஸ்தலப்பட்டத்தையுங் கொடுத்தவருமாய் இருக்கிற இயேசுக்கிறிஸ்துவைக்குறித்து,

௫. பராபரன் தம்முடைய தீர்க்கதரிசிகளினாலே பரிசுத்த வேத வாக்கியங்களில் முன் வாக்குத்தத்தம் பண்ணியிருந்த சுவிசேஷத்திற்காகப் * பிரித்தெடுக்கப்பட்டும் அப்போஸ்தலனாக அழைக்கப்பட்டும். * அப். ௯: ௰௫. ௰௩: ௨. கலாத். ௧: ௰௫.

௬. இயேசுக்கிறிஸ்துவின் ஊழியக்காரனு
யும் இருக்கிற பவுல்,
௭. * உரோமைபுரியிலுள்ள தேவபிரியரும்
அழைக்கப்பட்ட பரிசுத்தருமாகிய அனைவ
ருக்கும் (எழுதுகிறதாவது;) நம்முடைய
பிதாவாகிய பராபரனாலும், கர்த்தராகிய
இயேசுக்கிறிஸ்துவினாலும் உங்களுக்குக்
கிருபையும், சமாதானமும் உண்டாவதாக.
* ௧ கொரிந். ௧: ௨.
௮. உங்கள் விசுவாசத்தைக்குறித்து உல
கத்திலெங்கும் பேசிக்கொள்ளுகிறபடியினு
லே முதலாவது, நான் உங்கள் எல்லாருக்
காகவும் இயேசுக்கிறிஸ்துமூலமாய் என்னு
டையபராபரனைத்தோத்திரஞ்செய்கிறேன்.
௯. பராபரனுடைய குமாரனுக்குரிய சுவி
சேஷத்திலே நான் என் (முழு) மனதோடும்
அவருக்கு ஊழியஞ் செய்துவருகிறேன்.
* அவர் நான் இடைவிடாமல் உங்களை நி
னைத்துக்கொண்டிருக்கிறதைக்குறித்துச்சா
ட்சியாய் இருக்கிறார். * பிலிப். ௧: ௮.
௰ நீங்கள் ஸ்திரப்படுவதற்காகச்சில ஞா
னவரங்களை யுங்களுக்குக்கொடுக்கும்படிக்
கு நான் உங்களைக்காண மிகவும் ஆசை
யாய் இருக்கிறபடியினாலே,
௰௧. நான் உங்களிடத்தில் வருகிறதற்குப்
பராபரனுடைய சித்தம் எனக்கு நல்ல பிர
யாணங் கிடைக்கப்பண்ண வேண்டுமென்று
எப்பொழுதும் என் செபங்களில் வேண்
டிக்கொள்ளுகிறேன்.
௰௨. * உங்களிலும், என்னிலுமுள்ள விசு
வாசத்தினாலே நாம் ஒருவருக்கொருவர்
ஆறுதலாய் இருக்கும்படிக்கே அப்படிச்
செய்து வருகிறேன். * ௰௫: ௨௯.
௰௩. சகோதரர்களே! மற்றத்தேசத்தாருக்
குள்ளே நான் பலனை யடைந்ததுபோல,
உங்களுக்குள்ளுஞ் சில பலனை யடையும்
பொருட்டாக உங்களிடத்தில்வர அடிக்
கடி மனதாய் இருந்தேன். ஆகிலும் இது
வரைக்கும் எனக்குத்தடையுண்டாயிற்றெ
ன்று அறிவீர்களாக.
௰௪. கிரேக்கருக்கும், அந்நிய சனங்களுக்
கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான்
கடனாளியாய் இருக்கிறேன்.
௰௫. ஆதலால், முதலாவது, யூதரிலும்,
பின்பு கிரேக்கரிலும் எவன் கிறிஸ்துவின்
சுவிசேஷத்தை விசுவாசிக்கிறானோ அவனுக்
கு இரட்சிப்புண்டாகும்படிக்கு அந்தச்சுவி
சேஷந் தேவ பலமுள்ளதாய் இருக்கிறபடி
யினாலே,
௰௬. நான் அதைக்குறித்து வெட்கப்படா
மல் என்னுடைய திராணியின்படி அதை
* உரோமைபுரியிலுள்ள உங்களுக்குப்பிர
சங்கம்பண்ண விரும்புகிறேன். * அப்.
௨௮: ௩௧.
௰௭. * விசுவாசத்தினாலே நீதிமானானவன்
பிழைப்பானென்று எழுதி யிருக்கிறபடி
† விசுவாசத்தினாலாகுந் தேவ நீதி விசுவா
சத்திற்கு ஏதுவென்று அந்தச்சுவிசேஷத்
தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.—
* யோவா. ௩: ௩௬. † ஆபகூக். ௨: ௪.
கலாத். ௩: ௰௧. எபிரே. ௰: ௩௮.
௰௮. என்னத்தினாலெனில், சத்தியத்தை
அநியாயத்தினாலே அடக்கிக்கொள்ளுகிற
மனிதருடைய எல்லாவித அவபத்திக்கும்,
அநியாயத்திற்கும், விரோதமாய், பராபர
னுடைய கோபம் வானத்தில் இருந்து வெ
ளிப்படுகின்றது.
௰௯. அதெப்படியென்றால், பராபரனைக்
குறித்து அறியப்படுவது, * அவர்களுக்குள்
ளே * வெளிப்பட்டிருக்கின்றது. † பரா
பரனே அதை யவர்களுக்கு வெளிப்படுத்தி
னார். * அப். ௰௪: ௰௭. † யோவா. ௧: ௰.
௨௰. * எப்படியென்றால், உலகமுண்டா
னது முதற்கொண்டு, அவருடைய நித்திய
வல்லமை, தேவத்துவம் என்பவைகள் கா
ணப்படாதவைகளாய் இருந்தும், உண்
டாக்கப்பட்டிருக்கிற வஸ்துக்களினாலே
தெளிவாய் அறியப்படும். ஆதலால், அவர்
கள் போக்குச்சொல்லிக்கொள்ளுகிறதற்கு
இடமில்லை. * சங்கீ. ௰௯: ௧.
௨௧. அவர்கள் பராபரனை யறிந்தும், அவ
ரைப்பராபரன் என்று புகழாமலும், தோ
த்திரஞ் செய்யாமலும் இருந்து, தங்கள்
யோசனைகளினாலே வீணரானார்கள். புத்தி
யில்லாத அவர்களுடைய இருதயம் இருள்
அடைந்தது.
௨௨. அவர்கள் தங்களை ஞானிகள் என்று
சொல்லிப்பயித்தியக்காரராகி,
௨௩. அழிவில்லாத தேவனுடைய மகிமை
யை அழிவுள்ள மனிதர், பறவைகள், மிரு
கங்கள், ஊர்வன என்றிவைகளுடைய
சொரூபமாக * மாற்றினார்கள். * சங்கீ.
௱௬: ௨௰. எரே. ௨: ௰௧.
௨௪. அதற்காக அவர்கள் தங்கள் இருத
யங்களின் இச்சைகளினாலே ஒருவரோடொ
ருவர் தங்கள் சரீரங்களைக்கனவீனப்படுத்
தத்தக்கதாக, பராபரன் அவர்களை அசுத்
தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.
௨௫. பராபரனைக்குறித்து அறிந்த சத்தி
யத்தை அவர்கள் பொய்யாகமாற்றி, என்
றென்றைக்குந் துதிக்கப்படத்தக்க சிருஷ்
டிகரைப்பார்க்கிலுஞ் சிருஷ்டியைத்தொழு
துகொண்டு சேவித்தபடியினாலே,
௨௬. பராபரன் அவர்களை * இகழ்ச்சியுள்
ள ஆசைகளுக்கு ஒப்புக்கொடுத்தார். அந்
தப்படி அவர்களுடைய பெண்கள் சுபாவ
அநுபோகத்தைச்சுபாவத்திற்கு விரோத
மான அநுபோகமாக மாற்றினார்கள். *
௩ மோ. ௰௮: ௨௨—௨௫. எபே. ௫: ௰௨.
௨௭. அதுபோல ஆண்களும் பெண்களைச்

சுபாவப்படி அநுபவியாமல், தங்கள் மோக
இச்சைகளினாலே ஒருவருக்கு ஒருவர் பொங்
கி, * ஆணோடேயாண் அவலட்சணமான
தை நடப்பித்து, இவ்விதமாய், தங்கள் தப்
பிதத்திற்கு, தகுதியான பலனைத்தங்களிடத்
திலே பெற்றுக்கொண்டார்கள். * ௩ மோ.
௨௰: ௰௩.
௨௮. அறிவினாலே பராபரனைப்பற்றிக்
கொள்ளும்படிக்கு, அவர்கள் கவலைப்படா
மல் இருந்தபடியால், தகாதவைகளைச்செய்
யும்படி மந்தமுள்ள மனதுக்குப்பராபரன்
அவர்களை ஒப்புக்கொடுத்தார்.
௨௯. அவர்கள் எல்லாவித அநீதியினாலும்,
வேசித்தனத்தினாலும், பொல்லாங்கினாலும்,
பொருளாசையினாலும், தீமையினாலும், பொ
றாமையினாலும், கொலையினாலும், வாக்கு
வாதத்தினாலும், தந்திரத்தினாலும், துர்க்
குணத்தினாலும் நிறைந்தவர்களுமாய்,
௩௰. புறங்கூறுகிறவர்களுமாய், நிந்திக்கிற
வர்களுமாய், பராபரனைப்பகைக்கிறவர்களு
மாய், இறுமாப்புள்ளவர்களுமாய், அகந்
தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய்,
தகாத விசித்திரங்களை உண்டுபண்ணுகிறவர்
களுமாய், தாய்தகப்பன்மாருக்குக்கீழ்ப்படி
யாதவர்களுமாய்,
௩௰௧. விவேகம் இல்லாதவர்களுமாய், உடம்
படிக்கைகளைத்தள்ளுகிறவர்களுமாய், சுபா
வ அன்பில்லாதவர்களுமாய், மன்னியாதவர்
களுமாய், இரக்கம் இல்லாதவர்களுமாய்,
௩௰௨. இப்படிப்பட்டவைகளைச்செய்கிறவர்
கள் மரணத்திற்குப்பாத்திரராய் இருக்கிறார்
கள் என்று, பராபரனுடைய நியாயப்பிர
மாணத்தை யறிந்தும், அவைகளைத்தாங்க
ளே செய்கிறதுமல்லாமல், அவைகளைச்செ
ய்கிற மற்றவர்களிடத்திற் சந்தோஷப்படு
கிறவர்களுமாய் இருக்கிறார்கள்.

௨ அதிகாரம்.

[(௧) தாங்களே பாவஞ்செய்து மற்றவர்க
ளைக்கடிந்துகொள்ளுகிற, (௯) யூதர்கள் ஆ
னாலும், அஞ்ஞானிகளானாலும், (௯) போ
க்கில்லாமற் பராபரனுடைய நியாயத்தீர்ப்
புக்கு ஏதுவாவதையும், (௰௪) அஞ்ஞானி
களிலும், (௰௭) சுன்னத்தடைந்த யூதர்களி
லும், நியாயப்பிரமாணத்தைக்கைக்கொள்
ளாதவர்கள் ஆக்கினைக்குத்தப்பாததையுங்
காட்டினது.]

அப்படியிருக்க, (மற்றவர்களைக்குறித்
து) தீர்ப்புச்சொல்லுகிறவனே, நீ
தீர்ப்புச்சொல்லுகிற காரியங்கள் எவைக
ளோ அவைகளை நீயேசெய்கிறபடியால்,
நீ மற்றவர்களுக்குக்கொடுக்கிற தீர்ப்பினா
லே உன்னைத்தானே ஆக்கினைக்குள்ளாக்கு
கிறாய். ஆதலால், நீ போக்குச்சொல்லிக்
கொள்ளுகிறதற்கு இடம் இல்லை. மேலும்
நமக்குத்தெரிந்திருக்கிறபடி,
௨. இப்படிப்பட்டவைகளைச்செய்கிறவர்க
ளுக்கு, பராபரன் கொடுக்கிற நியாயத்தீர்ப்
புச்சத்தியத்தின்படியே இருக்கின்றது.
௩. ஆனபடியினாலே இப்படிப்பட்டவைக
ளைச் செய்கிறவர்களுக்குத் தீர்ப்புச்சொல்லு
கிற மனிதனே! நீயே அவைகளைச்செய்
திருக்க, பராபரனுடைய நியாயத்தீர்ப்புக்
குத்தப்பிப்போகலாமென்று நினைக்கிறாயா?
௪. அல்லது, * பராபரனுடைய தயவு,
பொறுமை, நீடியசாந்தம் இவைகளின்
ஐசுவரியத்தை நீ அசட்டைபண்ணி, அவ
ருடைய தயவு உன் மனந்திருப்புதற்கு ஏது
வாய் இருக்கவேண்டும் என்று அறியாமல்
இருக்கிறாயா? * ௨ பேது. ௩: ௰௫.
௫ நீ உன்னிருதயத்தைக்கடினப்படுத்தி,
மனந்திருப்பாமல் இருக்கிறதாற் பராபர
னுடைய கோபாக்கினையும், நீதியுள்ளதீர்ப்
பும் வெளிப்படும்நாளிலே உனக்குக்கோ
பாக்கினைவரும்படி அதைச்சேர்த்துக்கொ
ள்ளுகிறாய்.
௬. * அப்பொழுது அவர் அவனவனுடை
ய கிரியைகளுக்குத்தக்கதாய், அவனவனுக்
குப்பதில் அளிப்பார். * சங் ௬௨: ௰௨.
எரே. ௰௭: ௰. மத். ௰௬: ௨௭. ௨ கொரி. ௫: ௰.
௭. இடைவிடாமல் நற்கிரியைகளைச்செய்
து, மகிமையையும், கனத்தையும், அழியா
மையையுந் தேடுகிறவர்களுக்கு நித்திய சீவ
னை அளிப்பார்.
௮. சண்டைக்காரராய் இருந்து சத்தியத்
திற்குக்கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக்
கீழ்ப்படிந்தவர்களோ,
௯. உக்கிரகோபாக்கினையை அடைவார்
கள். * பராபரனிடத்திற் பட்சபாதமில்லை.
* ௫ மோ. ௰: ௰௭.
௰. ஆதலால் முன்பு யூதரிலும், பின்பு கி
ரேக்கரிலும், எந்தமனிதன் பொல்லாங்
கைச்செய்கிறானோ அவனுக்கு உபாதியும்,
வியாகுலமும்வரும்.
௰௧. முன்பு யூதர்களிலும், பின்பு கிரேக்
கரிலும் எவன் நன்மைசெய்கிறானோ அவ
னுக்கு மகிமையும், கனமும், சமாதான
சவுக்கியமும் உண்டாகும்.
௰௨. மேலும் நியாயப்பிரமாணத்தை ய
டையாமல் எவர்கள் பாவஞ் செய்கிறார்க
ளோ, அவர்கள் நியாயப்பிரமாணத்தின்படி
யே நியாயத்தீர்ப்படையாமற் கெட்டுப்
போவார்கள். நியாயப்பிரமாணமுள்ளவர்
களாய் எவர்கள் பாவஞ் செய்கிறார்களோ
அவர்கள் நியாயப்பிரமாணத்தின்படி ஆக்
கினைக்குள்ளாக்கப்படுவார்கள்.
௰௩. நான் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தின்
படியே இயேசுக்கிறிஸ்துவைக்கொண்டு,
பராபரன் மனிதருடைய அந்தரங்கங்க

ளைக்குறித்து, நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் நாளிலே (அப்படி நடக்கும்.) அதெப்படியென்றால்,

௰௩. நியாயப்பிரமாணத்தைக்கேட்கிறவர்கள் மாத்திரம் பராபரனுக்கு முன்பாக நீதிமான்களாய் இருக்கமாட்டார்கள். நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவர்களே நீதிமான்களாக்கப்படுவார்கள்.

௰௪. அன்றியும், நியாயப்பிரமாணம் இல்லாத சனங்கள் இயல்பாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபொழுது, நியாயப்பிரமாணமில்லாத அவர்கள் தங்களுக்குத் தாமே நியாயப்பிரமாணமாய் இருக்கிறார்கள்.

௰௫. அவர்களுடைய மனது கூடச்சாட்சி பகருகிறதினாலும், அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றுக்கொன்று குற்றமுண்டு, அல்லது குற்றமில்லையென்று தீர்க்கிறதினாலும், அவர்கள் தங்களிருதயங்களில் நியாயப்பிரமாணத்திற்கு ஏற்றகிரியை எழுதியிருக்கின்றதென்று காண்பிக்கிறார்களே.

௰௭. கேள் நீ யூதனென்று பேர்பெற்றிருந்து, நியாயப்பிரமாணத்தை யூன்றிக்கொண்டு, பராபரனைக்குறித்துப்பெருமை பாராட்டி,

௰௮. நியாயப்பிரமாணத்தினாலே உபதேசிக்கப்பட்டவனாய், அவருடைய சித்தத்தை யறிந்து, வித்தியாசமானவைகளைச் சோதித்தறிகிறாய்.

௰௯. அல்லாமலும், நியாயப்பிரமாணத்தினாலே மெய்யறிவையும், சத்தியத்தையுங் காட்டிய குறிப்பிடமுள்ளவனாய், நீ உன்னைக்குருடருக்கு வழிகாட்டுகிறவன் என்றும்,

௨௰. அந்தகாரத்திலுள்ளவர்களுக்கு ஒளி கொடுக்கிறவன் என்றும், புத்தியீனருக்கு உபாத்தியென்றும்,குழந்தைகளுக்குப்போதகனென்றுஞ் சொல்லுகிறாய்.

௨௧. இப்படிப்பட்டவனானால், * மற்றவனுக்குப்போதிக்கிற நீ உனக்குத்தானே போதியாமல் இருக்கவாமா? களவுசெய்யக்கூடாதென்று பிரசங்கிக்கிற நீ களவு செய்யலாமா? * ௧ கொரி. ௯: ௨௭.

௨௨. விபசாரம்பண்ணக் கூடாதென்று சொல்லுகிற நீ விபசாரம் பண்ணலாமா? விக்கிரங்களை அருவருக்கிற நீ பரிசுத்தமானதைக்கொள்ளையிடலாமா?

௨௩. நியாயப் பிரமாணத்தைக்குறித்து, பெருமைபாராட்டுகிற நீ நியாயப்பிரமாணத்தை மீறிநடந்து பராபரனைக்கனவீனம் பண்ணலாமா!

௨௪. பராபரனுடைய நாமம் மற்றத்தேசத்தாருக்குள்ளே உங்களாலே தூஷணிக்கப்படுகின்றதென்று * எழுதியிருக்கிறபடி (செய்கிறாயே!) * எசே. ௩௬: ௨௰—௨௩.

௨௫. நீ வேதப்பிரமாணத்தின்படி செய்தால், விருத்தசேதனம் மெய்யாய் உனக்குப்பிரயோசனமாய் இருக்கும். நீ வேதப்பிரமாணத்தைமீறி நடந்தாயாகில், உன் விருத்தசேதனம் விருத்தசேதனம் இல்லாமையாயிற்று.

௨௬. மேலும் விருத்தசேதனம் இல்லாதவன் வேதப்பிரமாணத்துக்கு ஏற்ற நீதிகளைக்கைக்கொண்டால், அவனுடைய விருத்தசேதனமில்லாமை விருத்தசேதனமே என்றெண்ணப்படுமல்லவோ?

௨௭. அல்லாமலும் விருத்தசேதனமில்லாமற் சுபாவப்படிக்கே யிருந்து, வேதப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறவன் எழுதினபடியான விருத்தசேதனத்தினாலே யூதனாய் வேதப்பிரமாணத்தை மீறுகிற உன்னைக் குற்றப்படுத்துவானல்லவோ?

௨௮. ஆதலாற் புறம்பாக யூதனானவன் யூதனல்ல. புறம்பாகச்சரீரத்தில் உண்டான விருத்தசேதனம் விருத்தசேதனமல்ல.

௨௯. * உள்ளத்திலே யூதனானவனே யூதன். எழுதினபடியல்ல, ஆவியின்படி † இருதயத்தில் உண்டான விருத்தசேதனமே விருத்தசேதனம். இப்படிப்பட்டவனுடைய புகழ்ச்சி மனிதராலல்ல. பராபரனாலேயுண்டாயிருக்கின்றது. * ௫ மோ. ௰: ௰௬. ௩௰: ௬. † எரேமி. ௪: ௪.

௩ அதிகாரம்.

[(௧) இப்படிப்பட்டதென்று யூதருடைய மேன்மையையும், (௩) அதை அவர்கள் இழந்துபோகாததையும், (௯) நியாயப்பிரமாணம் அவர்களைப்பாவிகளென்று தீர்மானிக்கிறதையும், (௨௰) ஒருவரும் நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக்கப்படாமல், (௨௧) எல்லாரும் வித்தியாசமில்லாமல் விசுவாசத்தினாலேமாத்திரம் நீதிமான்களாக்கப்படுவதையும், (௩௧) விசுவாசத்தினால் நியாயப்பிரமாணம் ஒழிந்துபோகாததையுங் குறித்துச்சொல்லியது.]

இப்படியானால், யூதருடைய மேன்மை என்ன? அல்லது விருத்தசேதனத்தினாலே பிரயோசம் என்னவென்று கேட்டால்,

௨. அது எவ்விதத்திலும் மிகுதியாய் இருக்கின்றது. பராபரனுடைய வாக்கியங்கள் அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்டபடியினாலே அவர்களுக்குப்பிரதானமாய் மேன்மை உண்டாயிருக்கின்றது.

௩. * சிலர் விசுவாசியாமற்போனபடியால், அவர்களுடைய அவிசுவாசம் பராபரனுடைய உண்மையை அவமாக்குமல்லவோவென்று கேட்டால், அப்படியாக்கமாட்டாது. * ௯: ௬.

௪. தேவரீர் அப்படிக் * கடிந்து பேசும்

பொழுது, நீதிபரராகவும், நியாயந்தீர்க்கும்
பொழுது, புனிதராகவும் இருப்பீரென்று எ
ழுதியிருக்கிறபடி, † மனிதர் யாவரும் பொ
ய்யராயிருந்தாலும், ‡ பராபரனே சத்திய
முடையவரென்போமாக. *யோபு சய: உ,
௩. † சங். கூஉ: கூ. ாயகூ: யக. ‡ யோவா.
௩: ௩௩.
ரு. பின்னும் நான் மனிதர் பிரகாரமாகப்
பேசுகிறேன். நமது அநீதி பராபரனுடை
ய நீதியை விளங்கப்பண்ணினுல், நாம் என்
ன சொல்லலாம். பராபரன் கோபாக்கினி
யைச்செலுத்துகிறது அநியாயமல்லவோ
வென்றால்,
சா. அப்படிச்சொல்லவேகூடாது. அப்ப
டியானால் உலகத்தாருக்கு, பராபரன் எப்
படி நியாயத்தீர்ப்புச்செய்வார்.
எ. ஆகிலும், பராபரனுக்குப்புகழ்ச்சியுண்
டாகத்தக்கதாக அவருடைய சத்தியம்
என்பொய்யினாலே அதிக மேன்மையடைந்
ததுண்டானால், நான் பாவியென்று தீர்க்
கப்படுவதென்னவென்று (நீ சொல்வ,)
அ. நன்மை வரும்படிக்குத்தீமைசெய்யக்
கடவோமென்றுஞ் சொல்லலாமல்லவோ!
நாங்களே அப்படிச்செய்கிறவர்களென்று
நிந்திக்கப்படுகிறோம். நாங்களே அப்படிப்
போதிக்கிறவர்களென்று சிலர் சொல்லுகி
றார்கள் அப்படிப்போதிக்கிறவர்கள் ஆக்கி
னைக்குள்ளாக்கப்படுகிறது நியாயந்தான்.
கூ. அப்படியானால் (கிரேக்கருக்கு) மேன்
மையாய் இருக்கிறோமோவென்று கேட்
டால், அப்படி ஒருக்காலும் இருக்கமாட்
டோம். யூதர்கள், * கிரேக்கர் யாவரும் பா
வத்திற்குக்கீழானவர்களென்று முன் திருஷ்
டாந்தப்படுத்தினோமே. * உ௩. வசனம்.
ய. அந்தப்படியும் * எழுதியிருக்கிறதாவ
து; நீதிமான் ஒருவனுமில்லை. *சங்.யச:௩.
யக. மெய்யுணர்வுள்ளவனில்லை. பராபர
னைத்தேடுகிறவனில்லை.
யஉ. எல்லாரும் வழிதப்பி ஏகமாய்க்கெட்
டுப்போகிறார்கள்.
ய௩. நன்மைசெய்கிறவன் ஒருவனுமில்லை.
* அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட
சமாதியாய் இருக்கின்றது. தங்கள் நாவுக
ளால் வஞ்சனை செய்கிறார்கள். பாம்புகளின்
விஷம் † அவர்களுடைய உதடுகளின்கீழி
ருக்கின்றது. * சங். ரு: கூ. † சங். ாசය:௩.
யச. * அவர்களுடைய வாய் சபிப்பினா
லும், உபாதிக்கிற பேச்சினாலும் நிறைந்தி
ருக்கின்றது.. * சங். ய: எ.
யரு. * அவர்களுடைய கால்கள் இரத்தஞ்
சிந்துகிறதற்குத்தீவிரமாய் இருக்கின்றன.
* வாக். க: யசா. ஏசா. ருகூ: எ, அ.
யசா. அழிவும், இடுக்கணும் அவர்களுடை
ய வழிகளில் இருக்கின்றன.

யஎ. சமாதானமார்க்கத்தை அவர்கள் அ
றியார்கள்.
யஅ. * அவர்கள் கண்களுக்குமுன்பாகத்
தெய்வபயமில்லை என்பதே. * சங். ௩சா: க.
யகூ. மேலும் வாய்கள் யாவும் அடைக்கப்
படும்படிக்கும், உலகத்தார் எல்லோரும்
பராபரனுடைய ஆக்கினைக்கு ஏதுவானவர்
களாகும்படிக்கும் நியாயப்பிரமாணஞ்
சொல்லுகிறயாவும் நியாயப்பிரமாணத்தித்
குட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லப்பட்
டிருக்கின்றனவென்று அறிந்திருக்கிறோம்.
உய. இப்படியிருக்க, நியாயப்பிரமாணத்
தினாலே பாவத்தையறிகிற அறிவு வருகிற
படியால், * ஒரு மனிதனும் நியாயப்பிரமா
ணத்திற்கேற்ற கிரியைகளினாலே அவருக்
கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை.
* கலாத். உ: யசா..
உக. இப்பொழுது * நியாயப்பிரமாணத்
திற்கேற்ற கிரியையில்லாமற் பராபரனுக்கு
முன்பாக நீதிமானாகும்வகை வெளிப்பட்
டிருக்கின்றது. அதைக்குறித்து நியாயப்பி
ரமாணமும், தீர்க்கதரிசனங்களுஞ் சாட்சி
யிடுகின்றன. * அப். யரு: ய, யக.
உஉ. இயேசுக்கிறிஸ்துவைப்பற்றும் விசு
வாசத்தினாலே பராபரன் வரப்பண்ணுகிற
நீதி அதுவே. விசுவாசிக்கிற எவர்களுக்குள்
ளும் எவர்கள்மேலும் அது வரும்.
உ௩. வித்தியாசமேயில்லை. எல்லாரும் பா
வஞ்செய்து பராபரனுடைய மகிமையற்
றவர்களாய் இருந்து,
உச. * கைமாறில்லாமல், அவருடைய கி
ருபையினாலே கிறிஸ்து இயேசுவினுள்ள
மீட்பைக்கொண்டு, நீதிமான்களாக்கப்படு
கிறார்கள். * எபே. உ: அ.
உரு. பராபரன் தாம் பொறுமையாய் இ
ருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களை
மன்னித்துவிட்டதைக்குறித்து, தம்முடை
ய நீதியைக்காண்பிக்கும்பொருட்டாக, இ
யேசுக்கிறிஸ்துவினுடைய இரத்தத்தில் வி
சுவாசமாய் இருக்கிறதினாலே வருங் கிரு
பைக்கு மூலாதாரமாக அவரையே ஏற்ப
டுத்திவைத்தார்.
உசா. இயேசுவினிடத்தில் விசுவாசமாய்
இருக்கிறவனை நீதிமானாக்குகிறதில் அவர் நீ
தியுள்ளவராய் இருக்கும்படிக்கு, இக்கா
லத்திலே தமது நீதயைக்காண்பிக்கும்பொ
ருட்டாகவே (அப்படிச்செய்தார்.)
உஎ. ஆனபடியினாலே, மேன்மைபாராட்
டல் எங்கே! அது நீக்கப்பட்டதே. எந்தப்
பிரமாணத்தினாலேயென்றால், கிரியைகளைக்
குறிக்கிற பிரமாணத்தினாலேயல்ல, விசுவா
சத்தைக்குறிக்கிற பிரமாணத்தினாலே அப்
படியாயிற்று.
உஅ. ஆதலால் மனிதர்கள் நியாயப்பிரமா
ணத்திற்கேற்ற கிரியைகளினாலேயல்ல. விசு

வாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறார்களென்று தீர்க்கிறோம்.

௨௯. அன்றியும் பராபரன் யூதருக்குமாத்திரம் தேவனாயிருக்கிறாரோ! மற்றத்தேசத்தாருக்கும் தேவனாய் இருக்கிறார் அல்லவோ? மெய்யாய் அவர் மற்றத்தேசத்தாருக்கும் தேவனாயிருக்கிறார்.

௩௰. தேவனொருவரே யாகையால், அவர் விருத்தசேதனமுள்ளவர்களையும், விருத்தசேதனம் இல்லாதவர்களையும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கச்சித்தமாய் இருக்கிறார்.

௩௧. இப்படியானால், விசுவாசமென்கிறதினாலே நாம் நியாயப்பிரமாணத்தை யழித்துப்போடுகிறோமா? அப்படியல்லவே. நியாயப்பிரமாணத்தை (அதினாலே) நிலையாகவே நிறுத்துகிறோம்.

௪ அதிகாரம்.

[(௧) ஆபிரகாமுடைய விசுவாசம். (௰) அவன் சுன்னத்தடைவதற்குமுன்னமே அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. (௰௩) அவனும், அவன் வித்தாரும் விசுவாசத்தினாலேயே வாக்குத்தத்தத்தைப் பெற்றது. (௰௬). விசுவாசிகளெல்லாருக்கும் ஆபிரகாம் தகப்பன் என்றது. (௨௪) நம்முடைய விசுவாசமும் நமக்கு நீதியாக எண்ணப்படும் என்றது.]

அன்றியும், நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாஞ் சரீர (கருமங்களினாலே) என்னத்தைப்பெற்றுக்கொண்டான்.

௨. ஆபிரகாங் கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டானாகில், அவன் (தன்னை) மேன்மையாகப்பாராட்டலாம். ஆகிலும், பராபரனுக்குமுன்பாக அப்படி ஒன்றுமில்லை.

௩. வேதவாக்கியம் எப்படிச்சொல்லுகிறதென்றால், * ஆபிரகாம் பராபரனை விசுவாசித்தான். அதுவே அவனுக்கு நீதியென்றெண்ணப்பட்டதென்று சொல்லுகின்றது. * ௧ மோ. ௰௫: ௬.

௪. அன்றியும், கிரியைகளையுடையவனுக்கு வருகிற கூலி கிருபையென்றெண்ணப்படாமற் கடனென்றெண்ணப்படும்,

௫. * கிரியைகளையுடையவனாய் இராமல், துன்மார்க்கரை நீதிமானாக்குகிறவர்மேல் விசுவாசமாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியென்றெண்ணப்படும். * ௩: ௨௮.

௬. அந்தப்படி தாவீதுங் கிரியைகளில்லாமற் பராபரனாலே நீதிமானென்றெண்ணப்படுகிற மனிதனுடைய பாக்கியத்தைக் காண்பிக்க,

௭. * எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டனவோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டனவோ, அவர்களே பாக்கியவான்களென்றும், * சங். ௩௨: ௧, ௨.

௮. எவனுடைய பாவத்தை, பராபரன் எண்ணாமலிருக்கிறாரோ அவனே பாக்கியவானென்றுஞ் சொல்லி யிருக்கிறான்.

௯. இந்தப்பாக்கியம் விருத்தசேதனமுள்ளவனுக்குமாத்திரமா, அன்றி விருத்தசேதனமில்லாதவனுக்கும்வருமோ? (இருவருக்குமேவரும்.) அதெப்படியென்றால், நாங்கள் நிச்சயித்தபடி, விசுவாசமே ஆபிரகாமுக்கு நீதியென்றெண்ணப்பட்டது.

௰. எப்பொழுது அது அவனுக்கு அப்படியெண்ணப்பட்டது. அவன் விருத்தசேதனமுள்ளவனாய் இருந்தபொழுதோ, விருத்தசேதனமில்லாதவனாய்இருந்தபொழுதோ, (வென்றால்,) விருத்தசேதனமுள்ளவனாய் இருந்தபொழுதல்ல, விருத்தசேதனமில்லாதவனாய் இருந்தபொழுதே அப்படியெண்ணப்பட்டது.

௰௧. மேலும், விருத்தசேதனம் இல்லாதகாலத்திலே அவன் விசுவாசத்தினாலே யடைந்த நீதிக்கு * முத்திரையாக விருத்தசேதன அடையாளத்தைப்பெற்றான். விருத்தசேதனமில்லாமல், விசுவாசமுள்ளவர்களும் நீதிமான்களாக்கப்படும் பொருட்டாக அப்படிப்பட்ட விசுவாசிகளுக்கு அவன் தகப்பனாயிருக்கும்படிக்கும், *௧ மோ. ௰௭: ௰, ௰௧.

௰௨. விருத்தசேதனத்தை உடையவர்களாய் மாத்திரமல்ல, நம்முடைய முன்னோராகிய ஆபிரகாம் விருத்தசேதனம் இல்லாதகாலத்திலே நடந்த விசுவாசமார்க்கத்தில் நடக்கிறவர்களாயும் இருக்கிறவர்கள் நீதிமான்களாக்கப்படும்பொருட்டாக, அப்படிப்பட்ட விருத்தசேதனமுள்ளவர்களுக்குந் தகப்பனாயிருக்கும்படிக்கும் (அந்த அடையாளத்தைப்பெற்றான்.)

௰௩. அன்றியும், * உலகத்தைச்சுதந்தரிப்பானென்கிற வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்கும், அவனுடைய சந்ததிக்கும் நியாயப்பிரமாணத்தினால்வருகிற நீதியினாலல்ல, விசுவாசத்தினால்வருகிற நீதியினாலே கிடைத்தது. * ௧ மோ. ௰௨: ௨, ௩.

௰௪. ஆதலால், * நியாயப்பிரமாணத்தினால்வருகிற நீதியையுடையவர்கள் சுதந்தரரானால், விசுவாசம் வீணாய்ப்போம்.—வாக்குத்தத்தமும் அவத்தமாய்ப்போம். * கலாத். ௩: ௰௮.

௰௫. மேலும், * நியாயப்பிரமாணங் கோபாக்கினையை நடப்பிக்கின்றது. நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால், அக்கிரமமுந் தோன்றாதே. * ௩: ௨௰.

௰௬. ஆதலால், அந்தவாக்குத்தத்தஞ் சந்ததியார் எல்லாருக்கும் நிச்சயமாய் இருக்கும்பொருட்டாக, (அந்தச்சுதந்தரம்) கிரு

பையினுல் உண்டாகும்படிக்கு, அதுவிசுவாசத்தினுலே வருகின்றது. நியாயப்பிரமாணத்தை உடையவர்களாகிய சந்ததியாருக்குமாத்திரமல்ல, * அநேகதேசத்தாருக்கு உன்னைத்தகப்பனென்றேற்படுத்தினேன் என்றெழுதியிருக்கிறபடி, நம்மெல்லாருக்குந் தகப்பனுகிய ஆபிரகாமைப்போல விசுவாசத்தை யுடையவர்களான சந்ததியாருக்கும் அது நிச்சயமாய் இருக்கும். * கமோ. ௰எ: ரு.

௰எ. மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிறவராகிய பராபரனை அவன் விசுவாசித்துக்கொண்டு, அவராலே (அப்படிப்பட்ட தகப்பனுனுன்.)

௰அ. * உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்றுசொல்லப்பட்டபடியே, அவன்தான் அநேகதேசத்தாருக்குத்தகப்பனுவதை நம்புதற்கு ஏதுவில்லாமல் இருந்தும், நம்பிக்கையோடே யதை விசுவாசித்தான். * கமோ. ௰ரு: ரு.

௰கூ. அவன் விசுவாசத்திலே பலஈனமாயிருக்கவில்லை. அவன் ஏறக்குறைய நூறுவயதானபடியால், தன் சரீரஞ் செத்துப்போனதையும், சாராள் கருப்பம் உண்டாகாமல் இருந்ததையும் எண்ணுமல் இருந்தான்.

உ௰. பராபரனுடைய வாக்குத்தத்தத்தைக்குறித்து அவன் அவிசுவாசமாய்ச்சந்தேகப்படாமல்,

உக. பராபரன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்றவும் வல்லமையுள்ளவராயிருக்கிறுர் என்று உறுதியாய் நினைத்து, பராபரனைப்புகழ்ந்து பலத்த விசுவாசமுள்ளவனுனுன்.

உஉ. ஆகையால், அதுவே அவனுக்கு நீதியென்றெண்ணப்பட்டது.

உ௩. அது அவனுக்கப்படி எண்ணப்பட்டதென்பது அவனுக்காக மாத்திரமல்ல, நமக்காகவும் எழுதியிருக்கின்றது.

உச. நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டும் நம்மை நீதிமான்களாக்குதற்கு,

உரு. எழுப்பப்பட்டும் இருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரில் இருந்து, உயிரோடெழுப்பினவரை விசுவாசித்துக்கொண்டால், * நமக்கும் அது அப்படியே எண்ணப்படும். * ௰ரு: ச.

ரு அதிகாரம்.

[(க) விசுவாசத்தினுல் நீதிமான்களாகி, பராபரனிடத்திற் சமாதானம்பெற்று, (உ) நம்பிக்கையிற் சந்தோஷமடைந்து, (அ) பாவிகளாய் இருந்தபோதினும், அவருடைய இரத்தத்தின் புண்ணியத்தினிமித்தம் ஒப்புரவடைந்தால், (௰) அது கிடைத்தபின்பு இரட்சிக்கப்படுவோமென்றது. (௰உ) பாவமும், மரணமும், ஆதாமினுல் வந்தது போல, (௰எ) நீதியும், சீவனும் இயேசுக்கிறிஸ்துவினுல் வந்ததென்றது. (உ௰) பாவம்பெருகி இருந்தும், கிருபை அதிகமாய்ப் பெருகுகிறதென்பது.]

இவ்விதமாய் நாம் விசுவாசத்தினுலே நீதிமான்களாக்கப் பட்டபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைக்கொண்டு, நாம் பராபரனிடத்திற் * சமாதானம் பெற்றிருக்கிறேம். * ஏசா. ருரு: ரு.

உ. மேலும், நாம் நிற்கின்ற கிருபைக்குட் * பிரவேசிக்குதலையும் நாம் அவரைக்கொண்டு, விசுவாசத்தினுலே பெற்றும், பராபரனுடைய மகிமையை அடைவோம் என்று நம்பி, மேன்மைபாராட்டியும் இருக்கிறேம். * எபே. உ: ௰அ. ௩: ௰உ.

௩. அதுவுமல்லாமல், * உபத்திரவம் பொறுமையையும், பொறுமை நிச்சயத்தையும், நிச்சயம் நம்பிக்கையையும் உண்டாக்குகின்றனவென்று நாங்கள் அறிந்திருந்து, * மத். ரு: ௰உ. யாக். க: உ, ௩.

ச. உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறேம்.

ரு. மேலும், நமக்குக்கொடுக்கப்பட்டபரிசுத்த ஆவியினுலே பராபரனுடைய அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை * நம்மை வெட்கப்படுத்தாது. * சங். உரு: ௩.

சு. அன்றியும், * நாம் பெலனற்றவர்களாய் இருக்கையில், கிறிஸ்துத்தகுதியான காலத்திலே அக்கிரமக்காரருக்காக மரித்தார். * எபே. உ: ச, ரு.

எ. நீதிமானுக்காக மற்றொருவன் மரிக்கிறது அருமையாயிருக்கும். நல்லவனுக்காக ஒருவேளைமற்றொருவன் மரிக்கத்துணிவான்.

அ. கிறிஸ்துவோ நாம் பாவிகளாய் இருக்கையிலே நமக்காக மரித்ததினுலே பராபரன் நம்மேல்வைத்த * அன்பை விளங்கப்பண்ணினுர். * யோவா. ௩: ௰சு.

௯. இப்படி நாம் அவருடைய இரத்தத்தினுலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, (வரும்) கோபாக்கினையினின்று அவராலே மிகவும் அதிகமாய் இரட்சிக்கப்படுவோமே.

௰. நாம் பராபரனுக்குப்பகைஞராய் இருக்கையில், அவர் குமாரனுடைய மரணத்தினுலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானுல், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய சீவனுலே மிகவும் அதிகமாய் இரட்சிக்கப்படுவோமே.

௰க. அதுவுமல்லாமல், இப்பொழுது ஒப்

புரவாக்குதலை நமக்குக்கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து மூலமாய் நாம் பராபரனைக்குறித்துமே ன்மை பாராட்டுகிறோம்.

௰௨. என்னத்தினாலென்றால், ஒரே மனிதனாலே பாவமும், பாவத்தினாலே * மரணமும் உலகத்திலே பிரவேசித்தபின்பு, எல்லா மனிதரும் பாவிகளானபடியினாலே, மரணம் எல்லாமனிதருக்கும் வந்ததுபோலக் (கிறிஸ்துவினாலே எல்லாருக்கும் ஒப்புரவாக்குதல் உண்டாயிற்று. * ௬ : ௨௩.

௰௩. நியாயப்பிரமாணம் வருதற்கு முன்னே பாவம் உலகத்தில் இருந்தது. நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால், பாவம் எண்ணிக்கைப்படமாட்டாது.

௰௪. அப்படியிருந்தும் மரணமானது, ஆதாமுதல் மோசேவரைக்கும் ஆதாமின் மீறுதலுக்கு ஒப்பாய், பாவஞ் செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது. அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு அடையாளமானவன்.

௰௫. ஆனாலுங் கிருபையுள்ள ஈவின் சங்கதி விழுதலின் சங்கதியைப்போல் இருக்கிறதில்லை. * ஒரேமனிதன் விழுந்ததினாலே அநேகர் மரித்திருக்க, மிகவும் அதிகமாய்ப் பராபரனுடைய கிருபையும், இயேசுக்கிறிஸ்தென்னும் ஒரே மனிதனுடைய கிருபையினால் வருகிற ஈவும் அநேகர்மேலே பெருகியிருக்கின்றன. * ௧ கொரி. ௰௫: ௨௨.

௰௬. மேலும் அந்த ஈவு பாவஞ்செய்த ஒருவனால் உண்டான நியாயத்தீர்ப்பைப் போல் இருக்கவில்லை. அந்தத்தீர்ப்பு ஒரே குற்றத்தினிமித்தம் ஆக்கினைக்கு ஏதுவாய் இருந்தது. கிருபையுள்ள ஈவானது அநேக பாவங்களை நீக்கி, நீதியாக்குதற்கு ஏதுவாயிருக்கிறது.

௰௭. அல்லாமலும், ஒரே மனிதன் விழுந்தபின்பு, அந்த ஒரேமனிதனாலே மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையாகிய பரிபூரணத்தையும், நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும், பெறுகிறவர்கள் இயேசுக்கிறிஸ்து என்னும் ஒரே மனிதனாலே மிகவும் அதிகமாய், சீவனை யடைந்து ஆளுவார்கள்.

௰௮. ஆகையால், ஒரே மனிதனுடைய தப்பிதத்தினாலே எல்லாமனிதருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்புண்டானதுபோல, ஒரே மனிதனுடைய நீதியினாலும் எல்லா மனிதருக்குஞ் சீவனாகிய நீதிக்கு ஏதுவான தீர்ப்புண்டாயிற்று.

௰௯. அன்றியும், ஒரே மனிதன் கீழ்ப்படியாமல் இருந்ததினாலே, அநேகர் பாவிகளாக்கப்பட்டார்கள். அதுபோல ஒரே மனிதன் கீழ்ப்படிந்ததினாலே அநேகர் நீதிமான்களாக்கப்பட்டு வருவார்கள்.

௨௰. மேலும் நியாயப்பிரமாணந் தோன்றினதினாலே தப்பிதம் பெருகிற்று. அப்படிப்பாவம்பெருகி யிருந்துங் கிருபை அதிகமாய்ப்பெருகிற்று. ஆதலால், பாவம் மரணத்திற்கு ஏதுவாக (மனிதரை) ஆண்டுகொண்டதுபோல,

௨௰௧. நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலே கிருபையானது நித்திய சீவனுக்கு ஏதுவான நீதியினாலே ஆண்டுகொண்டது.

௬ அதிகாரம்.

[(௧) பாவத்துக்கு மரித்த நாம் பாவத்தில் நிலை நிற்கக்கூடாதென்பதற்கு ஞானஸ்நானமடையாளம் என்பது. (௰௨) நீதியின் ஊழியத்துக்கு நம்மை ஒப்புவித்திருக்கிறதினாலும், (௰௮) பாவத்தின் சம்பளம் மரணமாய் இருக்கிறதினாலும், (௨௩) பாவம் நம்மை இனி ஆளாதென்பது.]

ஆகையால், நாம் என்னசொல்லலாம். கிருபைபெருகும்படிக்குப்பாவத்திலே நிலை நிற்கக்கடவோமென்று சொல்லலாமா?

௨. அப்படிக்கூடாதே, பாவத்திற்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப்பிழைப்போம்,

௩. கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் * அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம்பெற்றதை அறியாமல் இருக்கிறீர்களா? * கொலோ. ௨ : ௰௨.

௪. மேலும். பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரில் இருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் * புதிதான சீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்தினாலே அவருடனே கூட அடக்கம்பண்ணப்பட்டோம். * எபே. ௪: ௨௩, ௨௪.

௫. ஆதலால் அவருடைய மரணத்திற்கு ஒப்பாக நாம அவருடனே நாட்டப்பட்டவர்களாய் இருக்க, அவர் உயிரோடெழுந்திருக்குதலுக்கு ஒப்பாகவும் அப்படியே இருப்போம்.

௬. மேலும் நமக்குத்தெரிந்திருக்கிறபடி நாம் இனிப்பாவத்திற்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவமாகிய சரீரம் அழிந்துபோகும் பொருட்டாக நம்முடைய பழைய மனிதத்துவம் அவரோடேகூடச் * சிலுவையில் அறையப்பட்டது. * கலா. ௫: ௨௪.

௭. ஆகையால் மரித்தவன் பாவத்திற்கு விலக்கப்பட்டானே.

௮. மேலும் * கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்திருக்க, * ௨ தீமோ. ௨: ௰௧.

௯. மரித்தோரில் இருந்தெழுந்த கிறிஸ்து இனி மரிப்பது இல்லை என்றும், மரணம்

இனி அவரை ஆண்டுகொள்ளாதென்றும், நாம் அறிந்தபடியால், அவருடனே கூடப் பிழைத்தும் இருக்கலாமென்று நம்புகிறோம்.
௰. ஆன்றியும் அவர் பாவத்திற்காக ஒரே தரம் மரித்தார். பின்பு அவர் பிழைத்திருக்கிறது பராபரனுக்காக இருக்கின்றது.
௰௧. அதுபோல நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களென்றும், நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைக் கொண்டு, * பராபரனுக்குப்பிழைத்திருக்கிறவர்களென்றும், எண்ணிக்கொள்வீர்களாக. * ௰௨ : ௧.
௰௨. ஆகையால் சாவுக்கு இனமான உங்கள் சரீரத்தின் இச்சைகளுக்கு, நீங்கள் கீழ்ப்படியத்தக்கதாகப் பாவம் அதிலே ஆளாதிருப்பதாக.
௰௩. அன்றியும் நீங்கள் நியாயப்பிரமாணத்தின் கீழ் அல்ல, கிருபையின் கீழ் இருக்கிறபடியாற் பாவம் உங்களைப்பலவந்தப் படுத்தமாட்டாது.
௰௪. ஆதலால் நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதிக்குரிய ஆயுதங்களாகப்பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரில் இருந்து பிழைக்கிறவர்களென்று, பராபரனுக்கு ஒப்புக்கொடுத்து உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகப் பராபரனுக்கு ஒப்புக்கொடுப்பீர்களாக.
௰௫. இதினாலே பொருளென்ன ஆயிற்று? நாம் நியாயப்பிரமாணத்தின் கீழ் இராமற் கிருபையின் கீழ் இருக்கிறபடியினாலே பாவஞ்செய்யலாமென்ற பொருளா? அப்படி அல்லவே.
௰௬. மரணத்திற்கு ஏதுவான பாவத்துக்காகிலும், நீதிக்கு ஏதுவான கீழ்ப்படிதலுக்காகிலும், எதற்குக்கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாய் இருக்கிறீர்களென்று அறியாமல் இருக்கிறீர்களா?
௰௭. முன்னே நீங்கள் பாவத்துக்கு அடிமைகளாய் இருந்தீர்கள். இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேசத்தின் பிரமாணத்திற்கு நீங்கள் மனச்சந்தோஷமாய்க்கீழ்ப்படிந்திருக்கிறபடியினாலே பராபரனுக்குத்தோத்திரம்.
௰௮. இப்படி நீங்கள் பாவத்தில் இருந்து விடுதலையாக்கப்பட்ட பின்பு, நீதிக்கு அடிமைகளானீர்கள்.
௰௯. உங்கள் சரீரத்தின் பல ஈனத்தினிமித்தம், மனிதர் பிரகாரமாகச்சொல்லுகிறேன். அக்கிரமத்தை நடப்பிக்கும்படி, (முன்னே) நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும், அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுப்பீர்களாக.
௨௰. பாவத்திற்கு நீங்கள் அடிமைகளாய் இருந்தகாலத்திலே நீதிக்கு நீங்கினவர்களாய் இருந்தீர்கள்.
௨௰௧. இப்பொழுது நீங்கள் வெட்கப்படுகிற காரியங்களினாலே அக்காலத்திலே உங்களுக்கென்ன பிரயோசனம் உண்டாயிற்று. மரணமே அவைகளின் முடிவாய் இருக்கின்றது.
௨௰௨. இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, பராபரனுக்கு அடிமைகளான பின்பு, பரிசுத்தமாகுதல் உங்களுக்குப்பிரயோசனமாயிற்று. நித்திய சீவனே அதின் கடைசிப்பலனாய் இருக்கின்றது.
௨௰௩. பாவத்தினால் வருகிற சம்பளம் * மரணம். பராபரனுடைய கிருபையுள்ள ஈவோ நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினால் உண்டான நித்தியசீவனே. * ௧ மோ. ௨: ௰௭.

௭ அதிகாரம்.

[(௧) உயிர் நீங்கின பின்பு, நியாயப்பிரமாணம் மனுஷனை ஆளாதென்பது. (௪) நாம் நியாயப்பிரமாணத்துக்குமரித்திருந்தாலும். (௭) அது பாவமாய் இராமல், (௰௨) பரிசுத்தமும், நீதியும், நன்மையுமாய் இருக்கிறதென்பது. (௰௬) பவுல்தானே அதைக் கைக்கொள்ளக்கூடாததினிமித்தம் வினைப் படுகிறதைச்சொல்லியது.]

நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன். சகோதரரே, ஒருமனிதன் உயிரோடு இருக்குமளவுமாத்திரம், நியாயப்பிரமாணம் அவனை ஆளுகின்றதென்று அறியீர்களா?
௨. அது எப்படியென்றாற் புருஷனைக் கொண்ட ஸ்திரீ தன் புருஷனுடைய சீவகாலமளவும் நியாயப்பிரமாணத்தின்படியே அவனோடே சேர்க்கப்பட்டு இருக்கிறாள். புருஷன் மரித்தபின்பு, அவள் தன் புருஷனுடைய பிரமாணத்திற்கு நீக்கப்படுகிறாள்.
௩. மேலும் புருஷன் உயிரோடு இருக்கையில், அவள் வேறொரு புருஷனை விவாகம் பண்ணினால், விபசாரியென்று அழைக்கப்படுவாள். புருஷன் மரித்த பின்பு அவள் அந்தப்பிரமாணத்தினின்று விடுதலையாகி, வேறொரு புருஷனைவிவாகம்பண்ணினாலும், விபசாரி அல்ல. அப்படிப்போல என் சகோதரரே.
௪. நாம் பராபரனுக்குக்கனியைக்கொடுக்கும்படிக்கு, மரித்தோரில் இருந்தெழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்

களாவதற்கு, நீங்களும் அவருடைய சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்தினின்று நீங்க மரித்தவர்களானீர்கள்.

௫. நாம் சரீரத்தின்படி நடந்த காலத்திலே நியாயப்பிரமாணத்திலே தோன்றிய பாவமான இச்சைகள், நாம் மரணத்திற்கு ஏதுவான கனிகளைக்கொடுக்கத்தக்கதாக, நம்முடைய அவயவங்களிலே பலஞ்செய்திருந்தன.

௬. இப்பொழுது நாம் * மரித்தவர்களாய் இருக்க, நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ் செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டி இருந்த நியாயப்பிரமாணத்தினின்று விடுதலையாக்கப்பட்டு இருக்கிறோம். * ௬: ௬.

௭. இதினாலே பொருள் என்னவாயிற்று. நியாயப்பிரமாணம் பாவமாய் இருக்கின்றதென்பதோ. அப்படி அல்லவே. மேலும் * இச்சியாதிருப்பாயாகவென்று, நியாயப்பிரமாணஞ் சொல்லாதிருந்தால், இச்சிப்பைப்பாவமென்று நான் அறியாமல் இருப்பேன். ஆதலாற் பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினாலே அறிந்தேன். * உ மோ. ௨௰: ௰௭.

௮. இப்படி நியாயப்பிரமாணம் இல்லாவிட்டாற் பாவஞ் செத்ததாயிருக்கும். ஆதலாற் பாவமானது கட்டளையினாலே இடம்பெற்றுச்சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது.

௯. இப்படியிருக்க, முன்னே நியாயப்பிரமாணம் இல்லாதபொழுது, நான் சீவனுள்ளவனாயிருந்தேன். கட்டளை வந்தபொழுது பாவந் திரும்ப உயிர்கொண்டது நான் மரித்தேன்.

௰. இப்படிப்பாவமானது கட்டளையினாலே இடம்பெற்று, என்னை வஞ்சித்து, அதினாலே என்னைக்கொலைசெய்ததினாலே,

௰௧. சீவனுக்காகக்கொடுக்கப்பட்ட கட்டளையை எனக்கு மரணத்தைக்கொடுக்கிறதென்று கண்டேன்.

௰௨. ஆகையால் நியாயப்பிரமாணமே பரிசுத்தமாய் இருக்கின்றது. கட்டளையும் பரிசுத்தமாயும், நீதியாயும், நன்மையாயும் இருக்கின்றது.

௰௩. இப்படியானால், நன்மையானது என் மரணத்திற்கு ஏதுவாயிற்றுவென்று கேட்டால், அப்படியாகவேயில்லை. பாவமே எனக்கப்படியாயிற்று. பாவங் கட்டளையினாலே மிகவும் பெரிதான பாவியாகும்படிக்கு. அதுவே நலமானதினாலே எனக்கு மரணம் உண்டாக்குகிறதாகத்தோன்றிற்று.

௰௪. மேலும் நமக்குத்தெரிந்திருக்கிறபடி நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கின்றது. (மனிதனாகிய) நானோ பாவத்துக்குக்கீழாக விற்கப்பட்டு,

௰௫. மாம்சத்துக்குரியவனாய்இருக்கிறேன். எப்படியெனில், நான் நடப்பிக்கிறதற்கு என் மனது சம்மதிக்கிறதில்லை. நான் விரும்புகிறதைச்செய்யாமற் பகைக்கிறதையே செய்கிறேன்.

௰௬. இப்படி என் மனது விரும்பாததை நான் செய்திருக்க, நியாயப்பிரமாணம் நல்லதென்று ஒத்துக்கொள்ளுகிறேன்.

௰௭. ஆதலால் நானல்ல, எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படி நடப்பிக்கின்றது.

௰௮. அதெப்படியென்றால் நான் அறிந்திருக்கிறபடி, மாம்சதேகியாகிய எனக்குள்ளே * நன்மை வாசமாய் இருக்கிறதில்லை. நன்மை செய்வதற்கான விருப்பம் என்னுடனே இருக்கின்றது. அப்படிச்செய்கிறதை என்னிடத்திற்காணேன். * க யோ. ௬: ௫.

௰௯. ஆதலால் எனக்கு விருப்பமான நன்மையை நான் செய்யாமல் எனக்கு விருப்பமில்லாத தீமையை நடப்பிக்கிறேன்.

௨௰. அந்தப்படி எனக்கு விருப்பமில்லாததை நான் செய்கிறவனாயிருக்க நானல்ல, எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாவமே அப்படிச்செய்கின்றது.

௨௧. ஆனபடியினாலே நன்மைசெய்ய விரும்புகிற என்னிடத்திலே * தீமை செய்யப்பண்ணுகிற பிரமாணத்தைக்காண்கிறேன். * சங்கீ. ௫௧: ௭. எபிரே. ௰௨: க, ௨.

௨௨. என் உள்ளத்தோடே பராபரனுடைய நியாயப்பிரமாணத்தின்பேற் பிரியமாயிருக்கிறேன்.

௨௩. என் அவயவங்களிலே * என் மனதின் பிரமாணத்துக்கு எதிராய்ப்போராடுகிறவேறுபிரமாணத்தைக்காண்கிறேன். அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னை அடிமையாக்கிக் கொள்ளுகிறது. * கலாத். ௫: ௰௭.

௨௪. ஐயோ! நான் நிர்ப்பாக்கியமுள்ள மனிதன். இந்த மரணத்திற்கேதுவான சரீரத்தினின்று ஆர் என்னை விடுதலையாக்குவார்.

௨௫. * நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலே (என்னை விடுதலையாக்குகிற) பராபரனையே தோத்திரஞ்செய்கிறேன். ஆதலால், நானே என் மனதினாலே பராபரனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலே பாவப்பிரமாணத்திற்கும் ஊழியஞ்செய்கிறேன். * க கொரி. ௰௫: ௫௭.

அ அதிகாரம்.

[(க) கிறிஸ்துவைப்பற்றிக்கொண்டு, தேவ ஆவியின்படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினைவராதென்றும், (௫-௰௩) மாம்சத்துக்கேற்ற

சிந்தையினால்வருந் தீமை யின்னதென்றும், (௬-௰௪) ஆவிக்கேற்ற சிந்தையினாலும், பராபரனுடைய புத்திரராயிருப்பதினாலும் வரும் நன்மை இன்னதென்றும், (௰௭) பராபரன் அநாதியாய்த்தீர்மானித்த தம்முடைய புத்திரரின் மகிமையான விடுதலைக்குச் சிருஷ்டிகளெல்லாம் எதிர்நோக்கிக்கொண்டிருக்குமென்றும், (௩௮) பராபரனுடைய அன்பினின்று உத்தமரை யாதொன்றும் நீக்கமாட்டாதென்றும் காட்டியது.]

ஆனபடியினாலே மாம்சத்தின்படியல்ல, ஆவியின்படியே நடந்து, கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு வாராது.

௨. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனைக்கொடுக்கிற ஆவியின் பிரமாணம் என்னைப்பாவம், மரணம் என்றிவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.

௩. அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலஈனமாயிருந்த நியாயப்பிரமாணஞ் செய்யக்கூடாததைப்பராபரன் செய்யத்தம்முடைய குமாரனைப்பாவ மாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப்போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத்தீர்த்தார்.

௪. மாம்சத்துக்கேற்றபடியல்ல, ஆவிக்கேற்றபடி நடக்கிற நம்மாலே நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படியாயிற்று.

௫. இப்படியிருக்க * மாம்சத்துக்கேற்றபடி நடக்கிறவர்கள் மாம்சத்துக்கேற்றவைகளைச்சிந்திக்கிறார்கள். ஆவிக்கேற்றபடி நடக்கிறவர்கள் ஆவிக்கேற்றவைகளைச்சிந்திக்கிறார்கள். * ௧ கொரி. ௨: ௰௪.

௬. மாம்சத்துக்கேற்றசிந்தை * மரணத்துக்கேதுவானது. ஆவிக்கேற்றசிந்தை ஜீவனுக்கும், சமாதானத்துக்கும் ஏதுவானது. * ௬; ௨௧.

௭. எப்படியென்றால், மாம்சத்துக்கேற்றசிந்தை பராபரனுடைய நியாயப்பிரமாணத்திற்குக்கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியத்திராணியில்லாமலுமிருக்கிறபடியால், அது பராபரனுக்கு விரோதமான பகையாயிருக்கின்றது.

௮. ஆனதால், மாம்சத்திற்கேற்றபடி நடக்கிறவர்கள் பராபரனுக்குப்பிரியமாயிருக்கமாட்டார்கள்.

௯. பராபரனுடைய ஆவி உங்களில் *வாசமாயிருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்துக்கேற்றபடியல்ல, ஆவிக்கேற்றபடி நடக்கிறவர்களாயிருக்கிறீர்கள். கிறிஸ்துவினுடைய ஆவியையுடையவனல்லாதவன் அவருடையவனல்ல. * ௧ கொரி. ௩: ௰௬. ௬:௰௯

௰. மேலுங் கிறிஸ்து உங்களிலிருந்தபடியால், பாவத்தினிமித்தஞ் சரீரம் அழிந்துபோனாலும், ஆவியானது நீதியினிமித்தஞ் ஜீவனாயிருக்கின்றது.

௰௧. அன்றியும், இயேசுவை மரித்தோரினின்று எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறபடியால், * கிறிஸ்துவை மரித்தோரிலிருந்தெழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே மரணத்துக்குரிய உங்கள் சரீரங்களை உயிரோடிருக்கச்செய்வார். * பிலி. ௩: ௨௧.

௰௨. ஆகையால், சகோதரரே! மாம்சத்திற்கேற்றபடி ஜீவனம் பண்ணத்தக்கதாக நாம் மாம்சத்துக்குக்கடனாளிகளாயிருக்கிறதில்லை.

௰௩. * மாம்சத்திற்கேற்றபடி ஜீவனம்பண்ணினால் சாவீர்கள். ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்துப்போட்டால் பிழைப்பீர்கள். * கலாத். ௬: ௮.

௰௪. மேலும், எவர்கள் * பராபரனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ அவர்கள் பராபரனுடைய புத்திரராயிருக்கிறார்கள். * சங்கீ. ௱௪௩: ௰. கலாத். ௫: ௰௮.

௰௫. அந்தப்படி நீங்களும் பின்னும் * பயப்படுகிறதற்கு, அடிமையின் ஆவியை அடையாமல், அப்பா! பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற † புத்திரசுவிகாரத்தின் ஆவியையே அடைந்திருக்கிறீர்கள். * ௨ தீமோ. ௧: ௭. † கலாத். ௩: ௨௬. ௪: ௬.

௰௬. நாம் பராபரனுடைய புத்திரராயிருக்கிறதைக்குறித்து, * ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூடச்சாட்சிகொடுக்கிறார். * ௨ கொரி. ௧: ௨௨.

௰௭. மேலும், நாம் புத்திரராயிருக்கச்சுதந்தரராயுமிருக்கிறோம். கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு, அவரோடேகூடப் * பாடுபட்டால், அவரோடேகூடச்சுதந்தரராய், பராபரனுடைய சுதந்தரராகவேயிருப்போம். * ௨ தீமோ. ௨: ௰௧,௰௨.

௰௮. ஆதலால், இக்காலத்துப்பாடுகள் இனி * நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடப் பாத்திரமானவைகளல்லவென்று எண்ணுகிறேன். * ௨ கொரி. ௪: ௰௭.

௰௯. மேலும் தற்செயலாலேயல்ல, சிருஷ்டிகளும் அழிவுக்கேற்ற அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு,

௨௰. பராபரனுடைய புத்திரர் மகிமையாய் அடையும் இரட்சிப்புக்கு வரும்படிக்கான நம்பிக்கையோடே கீழ்ப்படுத்தினவராலே வீணுக்குக்கீழ்ப்பட்டிருக்கிறபடியால்,

௨௧. சிருஷ்டிகளும் பராபரனுடைய புத்திரர் வெளிப்படுகிறதற்கு மிகுந்த ஆசையோடே காத்துக்கொண்டிருக்கின்றன.

௨௨. ஆனபடியால், நமக்குத்தெரிந்திருக்கிறபடி, சகல சிருஷ்டிகளுங்கூட இதுவரைக்குந்தவித்து வேதனைப்படுகின்றன.

௨௩. அவைகள்மாத்திரமல்ல. ஆவியின் முதற்பலன்களைப்பெற்ற நாமுங்கூட * நம்முடைய சரீரம் மீட்கப்படுதலாகிய புத்திரசுவிகாரம் வருதற்குக்காத்திருந்து, * லூக். ௨௧: ௨௮.

௨௪. நமக்குள்ளே தவிக்கிறோம். (அதின் மேலுள்ள) நம்பிக்கையால் நாம் இரட்சிக்கப்படுகிறோம். காணப்படுகிறபொருளை நம்புகிறது நம்பிக்கையல்ல. ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன!

௨௫. நாம் காணாததை நம்புகிறபடியால், அது வருவதற்குப்பொறுமையோடே காத்திருக்கிறோம்.

௨௬. அல்லாமலும், நாம் தகுதியாய்ச் செபம்பண்ணவேண்டுவதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், (தேவ) ஆவியானவர் தாமே சொல்லக்கூடாத பெருமூச்சுகளாலே நமக்காக வேண்டுதல்பண்ணி, நம்முடைய பலஈனங்களில் (நமக்கு) உதவிசெய்கிறார்.

௨௭. ஆவியானவர் பராபரனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் பண்ணுகிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தையின்னதென்று அறிந்துகொள்ளுகிறார்.

௨௮. அன்றியும், அவருடைய * முன்யோசனையின்படி அழைக்கப்பட்டவர்களாய், பராபரனில் அன்புகூருகிறவர்களுக்குச்சகலமும் நன்மையாகும்படிக்கேதுவாய் இருக்கின்றதென்று அறிந்திருக்கிறோம். * மாற். ௰௨: ௩௰.

௨௯. அதெப்படியெனில், பராபரன் தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே * முதற்பேறுனவராயிருக்கும்படிக்கு, தாம் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களையும் அவருடைய சாயலுக்கொப்பாய் இருப்பதற்குமுன் குறித்தார். * கொலோ. ௧: ௰௮.

௩௰. அல்லாமலும், எவர்களை முன் குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார். எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார். எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்.

௩௧. இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லவேண்டும். பராபரன் நம்முடைய பங்கிலிருக்க நமக்கு விரோதமாயிருப்பவன் எவன்!

௩௨. * அவர் தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல், நம்மெல்லாருக்காகவும் அவரையே ஒப்புக்கொடுத்திருக்க, அவரோடேகூட மற்றயாவையும் நமக்கு அநுக்கிரகம் பண்ணாமலிருப்பாரா? * யோவா. ௩: ௰௬.

௩௩. பராபரனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்மேல் யார் குற்றஞ் சாற்றலாம். பராபரனே (அவர்களை) நீதிமான்களாக்குகிறவர்.

௩௪. யார் (அவர்களை) ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கலாம்? கிறிஸ்துவே (அவர்களுக்காக) மரித்தார். மேலும், எழுந்தவராயுமிருக்கிறார். அதுவுமல்லாமல், அவர் பராபரனுடைய வலதுபாரிசத்திலிருந்து நமக்காக வேண்டுதல்செய்கிறார்.

௩௫. * உமது நிமித்தம் நாம் எந்நேரமுங் கொலைசெய்யப்படுகிறோமென்றும், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோமென்றும் எழுதியிருக்கிறபடியேயிருந்தும், * சங்கீ. ௪௪: ௨௨. ௨ கொரி. ௪: ௰௧.

௩௬. நம்மைக்கிறிஸ்துவின் அன்பைவிட்டுப்பிரிப்பவன் யாவன்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பப்படுதலோ, பசியோ, நிருவாணமோ, நாசமோசமோ, கட்கமோ.

௩௭. இவையெல்லாவற்றையும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே அதிகமாய்ச்செயங்கொள்ளுகிறோம்.

௩௮. மரணமானாலும், சீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரிகளானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும்,

௩௯. உயர்வானாலும், தாழ்வானாலும், வேறொருசிருஷ்டியானாலும், நம்மை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினால் விளங்கிய பராபரனுடைய அன்பைவிட்டுப்பிரிக்கமாட்டாதென்று நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்.

௯ அதிகாரம்.

[(௧) பவுல் யூதர்களைக்குறித்துத்துக்கித்தது. (௭) ஆபிரகாமின் வித்தெல்லாம் வாக்குத்தத்தத்தின் புத்திரரல்லவென்பது. (௰௮) பராபரன் தமக்கு இஷ்டமானவர்கள்மேல் இரக்கம்வைக்கிறாரென்பது. (௨௪) குயவன் களிமண்ணினாலே தனக்கிஷ்டமான பாண்டங்களைச்செய்கிறானென்பது. (௨௫) அஞ்ஞானிகள் சுதந்தரத்துக்குள்ளாகி யூதர்கள் புறம்பாக்கப்பட்டதை முன்னறிவிக்கப்பட்டதென்பது. (௩௨) யூதர்கள் விசுவாசத்தினாலுண்டாகும் நீதியை அங்கீகாரம் பண்ணாத முகாந்தரம் இன்னதென்பது.]

சரீர சம்பந்தமான என் வம்சத்தாராகிய என் இனத்தாருக்காக * நானே கிறிஸ்துவினாற் சபிக்கப்பட்டவனாகவேண்டுமென்றிருந்து, * ௨ மோ. ௩௨: ௩௨.

௨. அவர்களைக்குறித்து மிகுந்த துக்கமும், இடைவிடாத மனநோவுமுள்ளவனாய் இருக்கிறேன்.

௩. இயேசுக்கிறிஸ்துவின்மேலே (ஆணைப்படிக்கு இப்படி) மெய்யாய்ச்சொல்லுகி

றேன். பரிசுத்த ஆவியின்மேலே ஆணைப்
படிக்குப்பொய்சொல்லாமல் இருக்கிறேன்.
என் மனதுகூடச்சாட்சியாயிருக்கின்றது.
௪. அவர்கள் இஸ்ரவேல் சந்ததியாராய்
இருக்கிறார்களே. * புத்திர சுவிகாரமும்,
மகிமையும், உடம்படிக்கைகளும், வேதப்
பிரமாணமிடுதலும், தேவ ஆராதனையும்,
வாக்குத்தத்தங்களும் அவர்களுடையவை
களே. * உ மோ. ௪: ௨௨.
௫. பிதாக்கள் அவர்களுடையவர்களாய்
இருக்கிறார்களே. மேலும், சரீரத்தின்படிக்
குக் கிறிஸ்து அவர்களில் உண்டானாரே.
அவர் என்றென்றைக்குந் தோத்திரிக்கப்
பட்ட சர்வத்திற்கும் மேலான தேவனான
வர்—ஆமன்.
௬. பராபரனுடைய வசனம் * அவமாய்ப்
போயிற்றென்று சொல்லக்கூடாது. என்
னத்தினாலென்றால், இஸ்ரவேல் வம்சத்தார்
எல்லாரும் இஸ்ரவேலரல்லவே. * உ திமோ.
உ: ௰௯.
௭. அன்றியும், அவர்கள் ஆபிரகாமின் சந்
ததியானாலும் * எல்லாரும் புத்திரருமல்ல
வே. † ஈசாக்கினாலே உனக்குச்சந்ததி
உண்டாகுமென்று சொல்லியிருக்கின்றதே.
* யோவா. ௮: ௩௯. † ௧ மோ. ௨௧: ௰௨.
௮. இதின் பொருளென்னவென்றால், சரீர
முறைமையின்படி புத்திரரானவர்கள் பரா
பரனுடைய புத்திரரல்ல. * வாக்குத்தத்
தத்தினாலே குறிக்கப்பட்ட புத்திரரே
(அப்படிப்பட்ட) சந்ததியென்றெண்ணப்
படுகிறார்கள். * கலாத். ௪: ௨௮.
௯. அந்த வாக்குத்தத்தமான வார்த்தைக
ளாவன; * இக்காலத்திலே வருவேன். அப்
பொழுது சாராள் ஒரு குமாரனைப்பெறு
வாள் என்பவைகளே. * ௧ மோ. ௰௮: ௰
௰. இவைமாத்திரமல்ல, நம்முடைய முன்
னோராகிய ஈசாக்கென்னும் ஒருவனாலே
கருப்பவதியான ரெபேக்காளும் அதற்குச்
சாட்சி. எப்படியென்றால்,
௰௧. அவளுடைய பிள்ளைகள் பிறவாமலும்,
நன்மை, தீமையொன்றுஞ் செய்யாமலும்
இருந்த காலத்திலே * மூத்தவன் இளையவ
னுக்குஊழியஞ்செய்வானென்று அவளுடனே
சொல்லப்பட்டது. * ௧ மோ. ௨௫: ௨௩.
௰௨. அப்படிப்போல * யாக்கோபின்
மேல் அன்பாய் இருந்து, ஏசாவைப்பகைக்
கிறேனென்றும் எழுதியிருக்கின்றது. *
மல்கி. ௧: ௨, ௩.
௰௩. பராபரனுடைய சித்தந் தெரிந்து
கொண்டபடியே இருந்து, கிரியைகளினா
லே யல்ல, அழைக்கிறவராலே யாகும்படிக்
கு அப்படிச்சொல்லி இருக்கின்றது.
௰௪. ஆகையால் நாம் என்னசொல்லலாம்?
* பராபரனிடத்திலே அநீதியுண்டென்று
சொல்லலாமா? அப்படி யொருக்காலுஞ்
சொல்லக்கூடாது. மோசேயுடனே அவர்
சொன்னதாவது; * ௫ மோ. ௩௨: ௪.
௰௫. * எவன்மேல் தயையாய் இருக்கச்
சித்தமாய் இருப்பேனோ அவன்மேல் தயை
யாய் இருப்பேன். எவன்மேல் இரக்கமாய்
இருக்கச்சித்தமாய் இருப்பேனோ அவன்
மேல் இரக்கமாய் இருப்பேன் என்றாரே.
* உ மோ. ௩௩: ௰௯.
௰௬. ஆகையால், மனிதர் விரும்புகிறதினா
லும், ஓடுகிறதினாலுமல்ல, பராபரனுடைய
தயையினாலேயாயிருக்கின்றது?
௰௭. பின்னும் வேதத்திலே பார்வோனுட
னே அவர் சொன்னதாவது; * உன்னிடத்
தில் என்னுடைய வல்லமையைக்காண்பிக்
கும் பொருட்டாகவும், என்னுடைய நா
மம் பூமியில் எங்கும் பிரஸ்தாபமாகும்
பொருட்டாகவும் உன்னை நிலைநிற்கப்பண்
ணினேனென்றார். * உ மோ. ௯: ௰௬.
௰௮ ஆதலால், அவர் தமது இஷ்டத்தின்
படி யொருவனுக்குத்தயையாய் இருக்கி
றார். தமது இஷ்டத்தின்படி மற்றொருவ
னைக்கடினப்படுத்துகிறார்.
௰௯. இப்படியானால், ஏன் அவர் குற்றம்
பிடிக்கிறார்? அவருடைய சித்தத்திற்கு யா
வன் எதிர் நிற்பானென்று என்னுடனே
சொல்வாய்?
௨௰. ஆ, மனிதனே! பராபரனுக்கு எதி
ராய்த்தர்க்கிக்கிற நீ யாவன்? * உருவாக்
கப்பட்ட வஸ்து உருவாக்கினவனை நோக்
கி, நீ ஏன் என்னை யிப்படி யுண்டாக்கினா
யென்று சொல்லுமா? * ஏசா. ௪௫: ௯.
௨௧. அல்லது, மிதிபிட்ட களிமண்ணினா
லே குயவன் ஒரு பாத்திரத்தைக்கனமான
காரியத்திற்கும், மற்றொன்றைக்கனவீனமா
ன காரியத்திற்கும் பண்ணும்படி மண்ணின்
மேல் அதிகாரமுள்ளவனல்லவா!
௨௨. ஆனதாற் பராபரன் தமது கோபத்
தைக்காண்பிக்கவும், தமது வல்லமையைத்
தெரியப்படுத்தவுஞ் சித்தமாய், அழிவுக்குத்
தகுதியான கோபாக்கினைப்பாத்திரங்கள்
மேலே மிகவும் நீடிய சாந்தத்தோடே
பொறுமைவைத்துக்கொண்டது மல்லாமல்,
௨௩. தாம் மகிமைக்காக எத்தனமாக்கின
தயா பாத்திரங்கள்மேலே தம்முடைய மகி
மையின் ஐசுவரியத்தைத்தெரியப்படுத்தச்
சித்தமாய் அப்படிப்பொறுத்துக்கொண்
டால், (நீ எப்படித்தர்க்கிக்கலாம்!)
௨௪. அப்படிப்பட்டவர்களாகும்படி அவ
ர் யூதரில் மாத்திரமல்ல. புறதேசத்தாரி
லும் இருந்து நம்மை யழைத்தார்.
௨௫. அந்தப்படி ஓசேயாவின் புத்தகத்தி
லே யவர் சொல்லுகிறதாவது; * எனக்குச்
சனங்களல்லாதவர்களை என்னுடைய சனங்
களென்றும், சிநேகிக்கப்படாதிருந்தவளை

சிநேகிக்கப்பட்டவளென்றும் அழைப்பேன். * ஓசெ. உ: உங. க பேது. உ: ய.

உசு. * நீங்கள் என்னுடைய சனங்களல்லவென்று தங்களுக்குச்சொல்லப்பட்ட இடத்திலே அவர்கள் சீவனுள்ள பராபரனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவார்களென்கிறார். * ஓசெ. க: ய.

உஎ. அல்லாமலும், ஏசாயா வென்பவன் இஸ்ரவேலரைக்குறித்துக் கூப்பிடுகிறதாவது; * இஸ்ரவேல் சந்ததியார் சமுத்திரத்தின் மணலைப்போலப்பெருக்கமாய் இருந்தும் மீதியான சிலர் மாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள். * ஏசா. ய: உஉ.

உஅ. நீதியோடே சீக்கிரமாய்க்கர்த்தர் காரியத்தைத்தீர்த்து நிறைவேற்றுவார்.—சீக்கிரமாகவே அவர் காரியத்தைப்பூமியிலே தீர்த்துப்போடுவாரென்றான்.

உகூ. அல்லாமலும், அதற்கு * முன்னே ஏசாயா சொன்னது, சேனைகளையுடைய பராபரன் நமக்குள்ளே ஒரு சந்ததியை மீதியாகவையாதிருந்தாரானால், நாம் சோதோமைப்போலாகி, கொமொருவுக்கு ஒத்திருப்போமென்றான். * ஏசா. க: கூ.

ஙய. இவைகளின்பொருள் என்னவாயிற்று என்றுகேட்டால், நீதியைத்தேடாமலிருந்த புறத்தேசத்தார் விசுவாசத்தினாலே வருகிற நீதியையே பெற்றுக்கொண்டார்கள்.

ஙக. நியாயப்பிரமாணத்தினாலே நீதியைத்தேடின இஸ்ரவேலரோ விசுவாசத்தினாலல்ல,

ஙஉ. நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற கிரியைகளினாலேயதைத்தேடினபடியால், நியாயப்பிரமாணத்தினாலே நீதியையடையவில்லை

ஙங. இதோ, * விழுதற்கான கல்லையும், இலச்சையடைவதற்கான கல்மலையையுஞ் † சீயோனிலே வைக்கிறேன். அதினிடத்தில் விசுவாசமாய் இருப்பவனெவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று எழுதியிருக்கிறதின்படி அவர்கள் விழுவதற்கான அக்கல்லின்மேல் விழுந்தார்கள். * க கொரி. க: உங. † ஏசா. அ: யச. உஅ: யசு.

ய அதிகாரம்.

[(ரு) நியாயப்பிரமாணத்தின் நீதிக்கும், விசுவாசத்தின் நீதிக்கும் வித்தியாசத்தையும், (யக) விசுவாசிக்கிற எவனும் வெட்கப்படானென்றும், (யஅ) அஞ்ஞானிகளும் வேதவசனத்தை யேற்றுக்கொண்டு விசுவாசிப்பார்களென்றுஞ் சொல்லியது. (யகூ) இஸ்ரவேல் சனங்கள் இந்தச்சங்கதியை யறியாதவர்களல்லவென்பது.]

சகோதரரே! இஸ்ரவேலர் இரட்சிக்கப்படவேண்டுமென்று நான் என் இருதயத்தோடே மிகவும் விரும்பி, பராபரனை நோக்கி விண்ணப்பம் பண்ணுகிறேன்.

உ. அவர்கள் பராபரனைக்குறித்து வயிராக்கியமாய் இருக்கிறார்களென்று நானும் அவர்களுக்குச்சாட்சி சொல்லுகிறேன்.

ங. அந்த வயிராக்கியம் அறிவுக்கேற்றதல்ல. எப்படியென்றால், பராபரனால் வருகிற நீதியை யவர்கள் அறியாமல் தங்கள் சுய நீதியை நிலை நிறுத்தத்தேடுகிறபடியால், அவரால் வருகிற நீதிக்குக்கீழ்ப்படியாதிருக்கிறார்கள்.

ச. விசுவாசிக்கிற எவனுக்கும் நீதியுண்டாகும்படியாகக்கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் * முடிவாயிருக்கிறாரே. * மத். ரு: யஎ.

ரு. மேலும் மோசே நியாயப்பிரமாணத்தினால்வருகிற நீதியைக்குறித்து, * இவைகளைச்செய்கிற மனிதன் இவைகளாற் பிழைப்பானென்று எழுதினார். * ங மோ. யஅ: ரு.

சா. விசுவாசத்தினால் வருகிற நீதிப்பிரமாணமோ சொல்லுகிறதாவது; கிறிஸ்துவை இறங்கிவரப்பண்ணும்படிக்கு * வானத்திற்கேறிப்போமவன் யாவன்! * ரு மோ. ஙய: யஉ, யங.

எ. கிறிஸ்துவை மரித்தோரிலிருந்தேறிவரப்பண்ணும்படிக்கு, பாதாளத்திற்கு இறங்கிப்போமவன் யாவனென்று உன் இருதயத்திலே நினையாதிருப்பாயாகவென்பதுமல்லாமல்,

அ. அது பின்னுஞ் சொல்லுகிறதாவது; * இந்தச்சங்கதி உனக்குச்சமீபமாய் உன் வாயிலும், உன் இருதயத்திலும் இருக்கின்றதென்று சொல்லுகின்றது. அந்தச்சங்கதி நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் சங்கதிதான். * ரு மோ. ஙய: யச.

கூ. என்னவென்றால், நீதிமான்களாக்கப்படுவதற்கு இருதயத்தோடே விசுவாசிக்கவும், இரட்சிக்கப்படுவதற்கு வாயினாலே * அறிக்கையிடவும் வேண்டுவதால், * மத். ய: ஙஉ, ஙங.

ய. நீ உன்வாயினாலே கர்த்தராகிய இயேசுவை அறிக்கையிட்டு, பராபரன் அவரை மரித்தோரில் இருந்து எழும்பப்பண்ணினாரென்று உன் இருதயத்தோடே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.

யக. அந்தப்படி * அவரை விசுவாசிக்கிறவனெவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதமுஞ் சொல்லுகின்றது. * ஏசா. உஅ: யசு.

யஉ. அன்றியும் எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத்தொழுதுகொள்ளுகிற யாவருக்காகவும், ஐசுவரியமுள்ளவராயிருக்கிறபடியால், * யூதருக்கும், கிரேக்கருக்கும் வித்தியாசமேயில்லை. * ங: உஉ, உங.

யங. ஆதலாற் * கர்த்தருடைய நாமத்தைத்தொழுதுகொள்பவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான். * யோவே. ங: ரு.

யச. அவரை விசுவாசியாதவர்கள் எப்படி

யவரைத்தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக்குறித்துக்கேள்விப்படாதவர்கள் எப்படி அவரை விசுவாசிப்பார்கள்? மேலும் பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?

௰௫. மேலும் ஆ, * சமாதானத்தைக்கூறி நற்காரியங்களைச்சுவிசேஷமாய், அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் மிகவும் அழகானவைகளென்று எழுதியிருக்கிறபடி சிலர் அனுப்பப்படாவிட்டால், எப்படிப்பிரசங்கம் பண்ணுவார்கள். * ஏசா. ௫௨: ௭.

௰௬. ஆனாலும், இந்தச்சுவிசேஷத்திற்கு எல்லாருங் கீழ்ப்படியவில்லை. அதைக்குறித்து ஏசாயர் சொன்னதாவது; * கர்த்தாவே! நாங்கள் பிரசங்கம் பண்ணுகிறதை யாவன் விசுவாசித்தானென்றான். * ஏசா. ௫௩: ௧. யோவா. ௰௨: ௩௭, ௩௮.

௰௭. ஆதலால், விசுவாசங் கேள்வியினாலே வரும். கேள்வி பராபரனுடைய வசனத்தினாலே வருகின்றது.

௰௮. இப்படியிருக்க, நான் விசாரிக்கிறதென்னவென்றால், அவர்கள் கேள்விப்படவில்லையா! * அவைகளின்தொனி பூமியெங்குஞ்சென்றது. அவைகளின் வசனங்கள் பூச்சக்கரக்கடைசிவரைக்கும் புறப்பட்டனவென்பதின்படி, அவர்கள் மெய்யாய்க் கேள்விப்பட்டார்களே. * சங். ௰௯: ௪.

௰௯. பின்னும் நான் விசாரிக்கிறதென்னவெனில், இஸ்ரவேலர் அறியவில்லையோ! (அறியாமலிருக்கமாட்டார்கள். என்னத்தினாலென்றால்,) முதலாவது, மோசே சொன்னது, * எனக்குச்சனங்களல்லாதவர்களைக்கொண்டு நான் உங்களுக்குப்பொறாமையுண்டாக்குவேன். புத்தியீனமுள்ள சனங்களாலே யுங்களுக்குக்கோபம் மூட்டுவேனென்றான்.

௨௰. அல்லாமலும் ஏசாயா தயிரியமாகச்சொன்னது, * என்னைத்தேடாதவர்களாலே கண்டறியப்பட்டேன். என்னை விசாரித்துக்கேளாதவர்களுக்கு வெளியரங்கமானேன் என்றான். * ஏசா. ௬௫: ௧.

௨௧. இஸ்ரவேலரைக்குறித்து, சொல்லியிருக்கிறதாவது; * கீழ்ப்படியாதவர்களுமாய், விரோதம்பேசுகிறவர்களுமாயிருக்கிற சனங்களிடத்திற்கு முழுநாளும் என் கைகளை நீட்டினேனென்பதே. * ஏசா. ௬௫: ௨.

௰௧ அதிகாரம்.

[(௧) பராபரன் இஸ்ரவேலரெல்லாரையுந் தள்ளவில்லையென்றும், (௭) சிலர் தெரிந்துகொள்ளப்பட்டு, மற்றவர்கள் கடினப்பட்டுப்போனார்களென்றும், (௰௬) அவர்கள் குணப்படுவார்களென்ற நம்பிக்கை யுண்டென்றும், (௰௮) அவர்கள்மேல் அஞ்ஞானிகள் பெருமைபாராட்டக்கூடாதென்றும், (௨௮) யூதர்களும் இரட்சிப்புக்கு வந்து எட்டுவார்களென்றும், (௩௩) பராபரனுடைய செய்கைகள் அளவறுக்கக்கூடாதென்றுங் காட்டியது.]

இப்படியிருக்க, * பராபரன் தம்முடைய சனங்களைத்தள்ளிவிட்டாராவென்று கேட்டால், அப்படியவர் செய்யவேயில்லை. * ௧ சாமு. ௰௨: ௨௨. எரேமி. ௩௧: ௩௭.

௨. * நானும் ஆபிரகாமின் சந்ததியாயும், பென்யமீன் கோத்திரத்தானுயுமிருக்கிற இஸ்ரவேலனுயிருக்கிறேன். பராபரன் தாம் முன்னறிந்துகொண்ட தம்முடைய சனங்களைத்தள்ளவேயில்லை. எலியாவைக்குறித்து வேதஞ் சொல்லுகிறதை யறியீர்களா? * ௨ கொரி. ௰௧: ௨௨. பிலி. ௩: ௫.

௩. அவன் பராபரனை நோக்கி, * கர்த்தாவே! உம்முடைய தீர்க்கதரிசிகளை யவர்கள் கொலைசெய்து, உம்முடைய பீடங்களை யிடித்துப்போட்டார்கள். * ௧ இரா. ௰௯: ௰—௰௪.

௪. நான் மாத்திரம் மீதியாயிருக்கிறேன். என் பிராணனையும் வாங்கத்தேடுகிறார்களென்று இஸ்ரவேலரைக்குறித்து முறையிட்டபொழுது, அவனுக்குண்டான தேவஉத்தரவு என்னவென்றால், * பாகாலுக்கு முன்பாக முழங்காற்படியிடாத ஏழாயிரம் பெயரை எனக்காக மீதியாய் வைத்தேன் என்பதே. * ௧ இரா. ௰௯: ௰௮.

௫. அந்தப்படி இக்காலத்திலேயுங் கிருபையால் தெரிந்துகொள்ளப்பட்ட * மீதியுண்டாயிருக்கின்றது. * ௯: ௨௭.

௬. * அது கிருபையினால் உண்டாயிருக்கிறபடியால், அது கிரியைகளினாலே ஆகவில்லை. அப்படியல்லவென்றாற் கிருபையானது கிருபையாயிராது. அன்றியும் அது கிரியைகளினால் உண்டாயிருந்தால், அது கிருபையினாலிராது. அல்லவென்றாற் கிரியையானது கிரியையல்ல. * ௪: ௪, ௫.

௭. இதினாலே என்னதோன்றுகிறதெனில், இஸ்ரவேலர் * தேடுகிறதை அடையாமலிருக்கிறார்கள். தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ அதை யடைந்தார்கள். மற்றவர்கள் இன்றைத்தினம்வரைக்குங் கடினமான இருதயமுள்ளவர்களாய் இருக்கிறார்கள். * ௯: ௩௧.

௮. * பராபரன் கன நித்திரையுள்ள ஆவியையும், காணாதிருக்கிற கண்களையும், கேளாதிருக்கிற காதுகளையும் அவர்களுக்குக் கொடுத்தாரென்றெழுதியிருக்கிற பிரகாரமாக அப்படியிருக்கிறார்கள். * ஏசா. ௬: ௰. ௨௯: ௰.

௯. தாவீதுஞ் சொல்லுகிறதாவது; * அவர்களுடைய உணவிடம் அவர்களுக்

கண்ணியாயும், வலையாயும், விழுதற்கான
கல்லாயும், பதில் பெறுதற்கேதுவாயுமிருக்
கக்கடவது. * சங். ௬௯: ௨௨.
௰. * காணுதபடிக்கு அவர்களுடைய கண்
கள் அந்தகாரப்படக்கடவது. அவர்களு
டைய முதுகு எப்பொழுதுங் குனியும்படி
செய்யுமென்று சொல்லியிருக்கிறன், *சங்
௬௯: ௨௩.
௰௧. இப்படியிருக்க, அழிந்துபோகும்ப
டிக்கா இடறினர்களென்று கேட்டால், அ
ப்படியல்ல, அவர்களுக்குள்ளே எரிச்சலை
எழுப்புகிறதற்காக அவர்கள் விழுந்ததினு
லே புறத்தேசத்தாருக்கு இரட்சிப்புக்கி
டைத்தது.
௰௨. அவர்கள் விழுந்தது. உலகத்திற்கு
ஐசுவரியமும், அவர்கள் குறைவானது புறத்
தேசத்தாருக்கு ஐசுவரியமுமானதாயிருக்க,
அவர்கள் நிறைவானுல், மிகவும் அதிகமாய்
அப்படியாகுமல்லவோ?
௰௩. * புறத்தேசத்தாருக்காக நான் அப்
போஸ்தலனுயிருக்கிறதினுலே புறத்தேசத்
தாராகிய உங்களுடனே பேசுகிறேன்.
* அப்போ. ௯: ௰௫. ௰௩: ௨.
௰௪. அவர்களைத்தள்ளிவிடுதல் உலகத்தை
ஒப்புரவாக்குதலாயிருக்க அவர்களை யங்கி
கரித்துக்கொள்ளுதல் மரித்தோரிலிருந்து
ஜீவனுண்டானதுபோல் இருக்குமல்லவோ.
௰௫. ஆதலால் நான் எப்படியும் என் இன
த்தாரையேவி, அவர்களிற்சிலரை இரட்சிக்
கவேண்டுமென்று என் ஊழியத்தை மேன்
மை பாராட்டுகிறேன்.
௰௬. மேலும் முதல் விளைச்சல் பரிசுத்தமா
யிருக்க, அம்பாரமும் அப்படியே யிருக்
கின்றது. வேரானது பரிசுத்தமாயிருக்க,
கிளைகளும் அப்படியே யிருக்கின்றன.
௰௭. சில கிளைகள் ஒடித்துத்தள்ளப்பட்ட
துமல்லாமல், காட்டொலீவமரமாகிய நீ
அவைகளுடைய இடத்திலே ஒட்டவைக்
கப்பட்டு, ஒலீவமரத்தின் வேருக்கும், சாரத்
திற்கும் உடன்பங்காளியாயிருக்க,
௰௮. நீ அந்தக்கிளைகளுக்கெதிராய்ப்பெரு
மைபாராட்டாதிருப்பாயாக. பாராட்டுவா
யாளுல், நீ வேரைச்சுமவாமல் வேரே யுன்
னைச்சுமக்கிறதென்று நினைத்துக்கொள்.
௰௯. நான் ஒட்டவைக்கப்படுவதற்கு அந்
தக்கிளைகள் ஒடித்துப்போடப்பட்டனவெ
ன்று நீ சொல்லுகிறுய்.
௨௰. நல்லது அவிசுவாசத்தினுலே அவை
கள் ஒடித்துத்தள்ளப்பட்டன. நீ விசுவா
சத்தினுலே நிற்கிறுய். இறுமாப்பைக்காண்
பியாதிருப்பாயாக.
௨௧. சுபாவத்தின்படி கிளைகளானவைகளைப்
பராபரன் தப்பவிடாதிருக்க, உன்னையுந்
தள்ளாதபடிக்குப்பயந்திருப்பாயாக.
௨௨. மேலும் பராபரனுடைய தயவை
யுங் கண்டிப்பையும் பார்த்துக்கொள். வி
ழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்
னிடத்திலே தயவையுமே பார். அந்தத்தய
விலே நிலைத்திருப்பாயாக. இல்லாவிட்டால்
நீயும் வெட்டுண்டுபோவாய்.
௨௩. அன்றியும் அவர்களும் * அவிசுவா
சத்தினுலே நிலைத்திராவிட்டால், ஒட்ட
வைக்கப்படுவார்கள். அவர்களை மறுபடியும்
ஒட்டவைகக்கிறதற்கு, பராபரன் வல்லவ
ராயிருக்கிறுரே. * ௨ கொரி. ௩: ௰௬.
௨௪. அன்றியும் நீ சுபாவத்தின்படி காட்
டொலீவாகிய மரத்திலிருந்து வெட்டப்பட்
டு, உன் சுபாவத்திற்கு விரோதமாய் நல்ல
ஒலிவமரத்திலே ஒட்டவைக்கப்பட்டிருக்க,
மிகவும் அதிகமாய்ச் சுபாவக்கிளைகளாகிய
அவர்கள் தங்கள் சுய ஒலிவமரத்திலே ஒட்
டவைக்கப்படுவார்களல்லவா?
௨௫. ஆதலாற் சகோதரரே! நீங்கள் உங்
கள் சுய புத்தியிலே சாயாதபடிக்கு, ஒரு
இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்
றிருக்கிறேன். என்னவெனில், * புறத்தேசத்
தார் நிறைவாய்ப்பிரவேசிக்குமளவும் இஸ்ர
வேலரில், ஒரு பங்குக்குக்கடினமான மன
துண்டாயிருக்கும். * லூக். ௨௧: ௨௪.
௨௬. பின்பு * மீட்பர் சீயோனுக்குவந்து,
அக்கிரமத்தை யாக்கோபிலிருந்து நீக்கு
வாரென்றும், * ஏசா. ௫௯: ௨௰
௨௭. நான் * அவர்களுடைய பாவங்களை
நீக்கும்பொழுது, இதுவே நான் அவர்களு
டனே பண்ணும் உடம்படிக்கையென்றும்
எழுதியிருக்கிறபடியே, இஸ்ரவேலரெல்லா
ரும் இரட்சிக்கப்படுவார்கள். * ஏசா. ௨௭:
௯. எரே. ௩௧: ௩௧—௩௪.
௨௮ சுவிசேஷத்தைக்குறித்து, அவர்கள்
உங்கள்நிமித்தம் பகைஞராயிருக்கிறுர்கள்.
௨௯. தெரிந்து கொள்ளுதலைக்குறித்து,
பராபரன் கிருபைகொடுத்தலும், அழைத்த
லும் மாருதவைகளானபடியால், அவர்கள்
பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டவர்க
ளாயிருக்கிறுர்கள்.
௩௰. ஆதலால் நீங்கள் முற்காலத்திலே
பராபரனுக்குக்கீழ்ப்படியாதிருந்து, இப்
பொழுது அவர்களுடைய அவிசுவாசத்தினு
லே இரக்கம் பெற்றிருக்கிறதுபோல, அவர்
களும் இப்பொழுது கீழ்ப்படியாமலிருந்து,
(பின்பு) உங்களுக்குண்டான இரக்கத்தினு
லே (ஏவப்பட்டு) இரக்கம்பெறுவார்கள்.
௩௧. எல்லார்மேலும் இரக்கமாயிருக்கத்
தக்கதாக, பராபரன் * எல்லாரையும் அவி
சுவாசத்திற்குள்ளே அடைத்துப்போட்டப
டியால் அப்படியேயாம். * கலா. ௩: ௨௨.
௩௨. ஆ, பராபரனுடைய ஞானம், அறிவு
என்பவைகளின் சம்பூரணம் மிகுந்த ஆழ
முள்ளதாய் இருக்கின்றது.
௩௩. * அவருடைய நியாயத்தீர்ப்புகள்

அளவறுக்கப்படாதவைகள். அவருடைய நெறிகள் ஆராய்ந்து பார்க்கப்படாதவைகளாய் இருக்கின்றன. கர்த்தருடைய சிந்தையை அறிந்தவனெவன்? * சங். ௩௯: ௭.

௩௪. * அல்லது, அவருக்கு உசாவுதுணையாய் இருந்தவனெவன்? * ஏசா. ௪௰: ௰௩, ௰௪.

௩௫. * அல்லது, தனக்குப்பதில் கொடுக்கும்படிக்கு, அவருக்கு முந்தியொன்றைக் கொடுத்தவன் எவன்? * யோபு ௪௧: ௨.

௩௬. சகலமும் அவராலும், அவர் மூலமாயும், அவருக்காகவும் இருக்கின்றன. அவருக்கே யென்றென்றைக்கும் புகழ்ச்சியுண்டாகக்கடவது.—ஆமென்.

௰௨ அதிகாரம்.

[(௧) பராபரனுடைய இரக்கங்கள். (௩) எவனும் பெருமை பாராட்டாமல், தன் தன்னிலைமையை அறிந்து நடக்கவும், (௬) அவரைப்பிரியப்படுத்தும்படி நம்மை ஏவவும், (௯) அன்பு முதலிய நற்குணங்களுள்ளவர்களாய் இருக்கவும், (௰௯) குரோதத்தை நீக்கவும் வேண்டுமென்பது.]

அப்படியிருக்க, சகோதரரே! நீங்கள் புத்தியுள்ள ஆராதனைசெய்ய * உங்கள் சரீரங்களைச்சீவனுமாய், பரிசுத்தமுமாய், பராபரனுக்குப்பிரியமுமாய் இருக்கிற பலியாக நிறுத்தவேண்டும் என்று, பராபரனுடைய இரக்கங்களினிமித்தம் உங்களுக்குப்புத்தி சொல்லுகிறேன். * ௬: ௰௩.

௨. மேலும் * நீங்கள் இவ்வுலகத்திற்கொப்பாய் நடவாமல், † பராபரனுடைய நன்மையும், பிரியமும், நிறைவுமான சித்தம் இன்னதென்று நீங்கள் பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனதைப்புதிதாக்குதலினாலே மறுரூபமாய் நடந்து கொள்ளுங்கள். * ௧ பேது. ௧: ௰௪, ௰௫. † எபே ௫: ௰௭.

௩. அல்லாமலும், எனக்குக்கொடுத்திருக்கிற கிருபையினாலே நான் இன்னுஞ் சொல்லுகிறதாவது; உங்களில் எவனானாலுந் தன்னைக்குறித்து, நினைக்கவேண்டியதற்கு மேலாக நினையாமல், * அவனவனுக்குப்பராபரன் பங்கிட்ட விசுவாசம் எவ்வளவோ, அவ்வளவின்படி புத்தியாய் நடக்கத்தக்கதாக, (தன்னைக்குறித்து) நினைக்கவேண்டும். * ௧ கொரி. ௰௨: ௰௧. எபே. ௪: ௭.

௪. அதெப்படியெனில், * ஒரே சரீரத்திலே நாம் அநேக அவயவங்களையுடையவர்களாய் இருக்க, அவயவங்கள் யாவும் ஒரே தொழிலில்லாதவைகளாய் இருக்கிறதுபோல, * ௧ கொரி. ௰௨: ௨௭.

௫. அநேகராகிய நாமுங் கிறிஸ்துவுக்குள்ளே ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாய்,

௬. நமக்குக்கொடுக்கப்பட்ட கிருபையின்படியே * பலவித வரங்களுள்ளவர்களாய் இருக்கிறோம். அந்தப்படி தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவரத்தை உடையவன் விசுவாச அளவுக்கு ஏற்றதாக அப்படிச்செய்யக்கடவன். * ௧ கொரி. ௰௨: ௪.

௭. * உதவிசெய்கிற வரத்தையுடையவன் உதவி செய்கிறதிலே சாக்கிரதையாய் இருக்கக்கடவன். போதிக்கிறவன் போதிக்கிறதிலே சாக்கிரதையாய் இருக்கக்கடவன். * ௧ பேது. ௪: ௰, ௰௧.

௮. புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலே சாக்கிரதையாய் இருக்கக்கடவன். தருமங்களைக்கொடுக்கவேண்டுபவன் கபடமில்லாமையாய் அப்படிச்செய்யக்கடவன். முதலாளியானவன் சாக்கிரதையுடனே இருக்கக்கடவன். இரக்கஞ் செய்கிறவன் உச்சாயத்துடனே அப்படிச்செய்யக்கடவன்.

௯. உங்கள் அன்பு மாயமற்றதாய் இருப்பதாக. பொல்லாங்கானதை அருவருத்து, நன்மையில் ஒட்டிக்கொண்டிருப்பீர்களாக.

௰. * சகோதரசிநேகத்திலே ஒருவருக்கொருவர் மிகவும் பட்சமாய் இருங்கள். கனம்பண்ணுகிறதில் ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள். * எபே. ௪: ௨, ௩.

௰௧. அலுவலில் நீங்கள் அசதியாய் இருக்கக்கூடாது. உங்கள் * ஆவியிலே தீபவளர்ச்சியைப்போல் இருந்து கர்த்தருக்கூழியஞ் செய்யுங்கள். * அறிவி. ௩: ௰௫.

௰௨. நம்பிக்கையிலே * சந்தோஷமாய் இருப்பீர்களாக. உபத்திரவ காலத்திலே பொறுமையாய் இருங்கள். * லூக் ௰: ௨௰.

௰௩. செபத்தில் உறுதியாய்த்தரித்திருங்கள். * வருத்தப்படுகிற பரிசுத்தவான்களுக்கு உதவிசெய்யுங்கள். † அந்நியருக்கு உபசாரஞ் செய்கிறதை நாடுங்கள். * ௧ கொரி. ௰௬: ௧, ௨. † எபி. ௰௩: ௨.

௰௪. * உங்களைத்துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள். ஆசீர்வாதமேயன்றி, சாபமிடாதிருப்பீர்களாக. * மத். ௫: ௪௫, ௪௬.

௰௫. சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள். அழுகிறவர்களுடனே அழுங்கள்.

௰௬. * ஒருவருக்கொருவர் ஐக்கமான சிந்தையுள்ளவர்களாய் இருப்பீர்களாக — மேன்மையானவைகளைச்சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கிணங்குங்கள். * ௧ கொரி. ௧: ௰௧.

௰௭. உங்கள் சுய புத்தியிற் சாயாதிருப்பீர்களாக. * யாவனுக்குந் தீமைக்குத்தீமை செய்யாதிருங்கள். எந்த மனிதருக்கு முன்பாக யோக்கியமானவைகளை நடப்பியுங்கள். * ௧ தெச. ௫: ௰௫.

௰௮. * எல்லா மனிதரோடுஞ் சமாதானமாய் இருக்கக்கூடுமானால், உங்களால

மட்டும் அப்படியே செய்யுங்கள். * எபி. யஉ: யச.

யகூ. பிரியமானவர்களே! * பழிவாங்குதல் எனக்கு ஏற்றதுதானே. பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றெழுதியிருக்கிறபடியால், நீங்கள் தாமே பழிவாங்காமல், (அவருடைய) கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். * ௫ மோ. ஙஉ: ஙரு.

உய ஆதலால், * உன் சத்துருவுக்குப்பசி உண்டாயிருக்கும்பொழுது, அவனுக்குப் போசனங்கொடு. அவனுக்குத்தாகம் உண்டாயிருக்கும்பொழுது, அவன் தாகத்தைத் தீர்ப்பாயாக. நீ இப்படிச்செய்தால், அவனுடைய தலையின்மேல் நெருப்புள்ள கரிகளைக்குவிப்பாய். * வாக். உரு: உக, உஉ.

உக. தீமையினாலே நீ செயிக்கப்படாமல், தீமையை நன்மையினாலே செயிப்பாயாக.

யங அதிகாரம்.

[(க) துரைத்தனத்தாருக்குச்செலுத்தவேண்டிய கீழ்ப்படிதல் முதலான கடமைகளைக்குறித்தது. (அ) அன்பு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுமென்றும், (யக) பெருந்தீனி, குடிமுதலிய பாவச்செய்கைகள் சுவிசேஷத்துக்கு ஒவ்வாதென்றுங் காட்டியது.]

அதிகாரம் உள்ளவர்கள் பராபரனாலே யன்றி இருக்கமாட்டார்கள். ஆதலால், * எந்த மனிதனும் அதிகாரம் உடையவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன். உண்டாயிருக்கிற அதிகாரிகள் பராபரனாலே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். * தீத். ங: க.

உ. ஆனதால், அதிகாரம் உள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறவன் பராபரனுடைய நியமத்துக்கு எதிர்த்து நிற்கிறான். அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத்தாமே ஆக்கினைவரப்பண்ணுகிறார்கள்.

ங. மேலுந் துரைகளானவர்கள் நற்கிரியைகளுக்கல்ல, துர்க்கிரியைகளுக்குப்பயங் கொடுக்கிறவர்களாய் இருக்கிறார்கள். * ஆகையால், நீ அதிகாரத்துக்காகப்பயம் இல்லாதிருக்கவேண்டும் என்றிருந்தால், நன்மை செய்வாயாக. அதினால் உனக்குப்புகழ்ச்சியுண்டாம். * க பேது. உ: யங, யச.

ச. உனக்கு நன்மை உண்டாகும்பொருட்டு, அவன் பராபரனுடைய ஊழியக்காரனாய் இருக்கிறான். நீ தீமைசெய்தாற் பயங்கொள்வாயாக, கட்கத்தை அவன் வீணாய்ப்பிடிக்கவில்லை. பொல்லாங்கைச்செய்கிறவன்மேற் கோபாக்கினைவரப்பண்ணும்படி, அவன் நீதியைச்செலுத்துகிற தேவ ஊழியக்காரனாகவும் இருக்கிறானே.

௫. ஆகையால், நீங்கள் (அவர்களுக்குக்) கீழ்ப்படியவேண்டியதாய் இருக்கின்றது. கோபாக்கினையினிமித்தமாத்திரமல்ல, மனச்சாட்சியினிமித்தமும் அப்படியிருக்கவேண்டும்.

சூ. அதினாலே நீங்கள் (அவர்களுக்கு) வரிப்பணத்தையுங் கொடுக்கிறீர்களே. அவர்கள் தங்கள் உத்தியோகத்தை இடைவிடாமற் பற்றிக்கொள்ளுகிற தேவ ஊழியக்காரர்களாய் இருக்கிறார்களே.

எ. ஆனபடியினாலே * எவர்களுக்குங் கடமைகளைச்செலுத்துவீர்களாக. வரியைச் செலுத்தவேண்டியது எவனுக்கோ அவனுக்கு வரியைச்செலுத்துங்கள். தீர்வையைச்செலுத்தவேண்டியது எவனுக்கோ, அவனுக்குத் தீர்வையைச் செலுத்துங்கள். பயப்படவேண்டியது எவனுக்கோ அவனுக்குப்பயப்படுங்கள். கனத்தைச்செலுத்தவேண்டியது எவனுக்கோ அவனுக்குக் கனத்தைச்செலுத்துங்கள். * மத். உஉ: உக.

அ. ஒருவரிலொருவர் அன்பாய் இருக்கிறதே அன்றி, மற்றொன்றும் ஒருவனுக்குங் கடன் படாதிருப்பீர்களாக. மற்றவனில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறானே.

கூ. எப்படியென்றால், விபசாரம்பண்ணாதிருப்பாயாக. கொலைசெய்யாதிருப்பாயாக. களவுசெய்யாதிருப்பாயாக. பொய்ச்சாட்சிசொல்லாதிருப்பாயாக. இச்சியாதிருப்பாயாக என்றிந்தக்கற்பனைகளும், வேறெந்தக்கற்பனையும், உன்மேல் அன்புகூருகிறதுபோலப்பிறன்மேலும் அன்புகூர்வாயாகவென்கிற ஒரே பிரமாணத்திலே தொகையாய் அடங்கியிருக்கின்றன.

ய. * அன்பானது, பிறனுக்குப்பொல்லாங்கைச்செய்யாது. ஆதலால், அன்பு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறதாய் இருக்கின்றது. * க கொரி. யங: ச, ௫.

யக. மேலும், * நித்திரையை விட்டெழுந்திருக்கத்தக்கவேளையாயிற்று என்று, நாம் காலத்தை அறிந்திருக்கிறபடியால், இப்படி எச்சரிக்கிறேன். அன்றியும், நாம் விசுவாசிகளானபொழுது, இரட்சிப்புச்சமீபமாயிருந்ததிலும், இப்பொழுது அது நமக்கு அதிகசமீபமாய் இருக்கின்றது. * எபே. ௫: யச.

யஉ. * இரவுசென்று போயிற்று. பகல் சமீபமாயிற்று. ஆனபடியினாலே அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிப்போட்டு, ஒளியினாயுதங்களைத்தரித்துக்கொள்ளக்கடவோம். * க யோவா. உ: அ.

யங. * பெருந்தீனியாவது, வெறிகொள்ளுதலையாவது, வேசித்தனத்தையாவது, காமவிகாரத்தையாவது, சண்டையையாவது, பொறாமையையாவது நடப்பியாமல் † பகலிலே நடக்கிறவர்கள்போல யோக்கியமாய் நடக்கக்கடவோம். * வாக். உங:

௨௰. லூக். ௨௧: ௩௫ ௧ கொரி. ௬: ௬, ௰. யாக். ௩: ௰௪—௰௬. † ௧ பேது. ௪: ௩. ௧ பேது. ௨: ௰௨.

௰௪. துரிச்சைகளுக்கிடமாய் உங்கள் தேகத்தைப்போஷியாமற் * கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைத் தரித்துக்கொள்வீர்களாக. * கலாத். ௩: ௨௭.

௰௪ அதிகாரம்.

[(௩) சொற்பமானவைகளில் ஒருவரையொருவர் குற்றஞ் சார்த்தவும், அசட்டைபண்ணவுங் கூடாதென்றும், (௰௩) அவைகளினால் ஒருவருக்கொருவர் விதனமுண்டாக்காதிருக்கவேண்டுமென்றும் நியாயங்காட்டியது.]

விசுவாசத்திற் பலவீனமுள்ளவனுடைய நினைவுகளை நீங்கள் குற்றமாய் எண்ணாமல், அவனைச்சேர்த்துக்கொள்ளுங்கள்.

௨. ஒருவன் எல்லாப்பதார்த்தங்களையும், புசிக்கலாமென்று நம்புகிறான். பலவீனமுள்ள மற்றொருவன் மரக்கறிகளைமாத்திரம் புசிக்கிறான்.

௩. புசிக்கிறவன் புசியாதிருக்கிறவனை யசட்டை பண்ணாதிருப்பானாக. புசியாமல் இருக்கிறவனும் புசிக்கிறவனைக்குற்றமுள்ளவன் என்று நினையாதிருப்பானாக. பராபரன் அவனைச்சேர்த்துக்கொண்டாரே.

௪. * மற்றொருவனுடைய வேலைக்காரனைக்குற்றமுள்ளவனென்று தீர்க்கிற நீ யாவன்? அவன் நின்றாலும், விழுந்தாலும் அவனுடைய சொந்த எசமானே அவனை விசாரிப்பான். மேலும் பராபரன் அவனை நிலைநிறுத்த வல்லவரானபடியால், அவன் நிலைநிறுத்தப்படுவான். * யாக். ௪: ௰௨.

௫. அன்றியும், ஒருவன் * ஒருநாளை மற்றநாளிலும் விசேஷமாக எண்ணுகிறான். வேறொருவன் எல்லா நாள்களையுஞ் சரியாய் எண்ணுகிறான். (அதைக்குறித்து) அவனவன் தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாய் இருக்கக்கடவன். * கலாத். ௪: ௰. கொலோ. ௨: ௰௬.

௬. ஒருநாளை விசேஷித்துக்கொள்ளுகிறவன் கர்த்தருக்கென்று அப்படிச்செய்கிறான். நாள்களை விசேஷித்துக்கொள்ளாமல் இருக்கிறவனுங் கர்த்தருக்கென்று அப்படிச்செய்கிறான். புசிக்கிறவன் * பராபரனுக்குத்தோத்திரஞ் செலுத்துகிறபடியாற் கர்த்தருக்கென்று புசிக்கிறான். புசியாமல் இருக்கிறவனுங் கர்த்தருக்கென்று புசியாமல் இருந்து, பராபரனுக்குத்தோத்திரஞ் செலுத்துகிறான். * ௧ கொரி. ௰: ௩௧.

௭. நம்மில் யாவனுந் தனக்காகப்பிழைக்கிறதுமில்லை. யாவனுந் தனக்காக மரிக்கிறதுமில்லையே. நாம் பிழைக்கிறது கர்த்தருக்காகப்பிழைக்கிறோம். மரிக்கிறது கர்த்தருக்காக மரிக்கிறோம்.

௮. ஆகையால், நாம் பிழைத்தாலும், மரித்தாலும் கர்த்தருடையவர்களாயே இருப்போம்.

௯. அதற்காகக்கிறிஸ்துவும், மரித்தோர்மேலும், சீவனுள்ளோர்மேலும் ஆண்டவராய் இருக்கும்பொருட்டாக, மரித்தும், எழுந்தும், உயிரடைந்துமிருக்கிறார்.

௰. இப்படியிருக்க, * நீ உன் சகோதரனைக்குற்றமுள்ளவனென்று நினைக்கிறதென்ன! அல்லது, உன் சகோதரனை யசட்டைபண்ணுகிறதென்ன? † நாம் எல்லாருங் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிறுத்தப்படுவோமே. * லூக். ௬: ௩௭. † மத். ௨௫: ௩௨.

௰௧. நான் சீவனுள்ளவன் * முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும். நாவுகள் யாவும் பராபரனை அறிக்கைபண்ணுமென்று பராபரன் திருவுளம் பற்றுகிறாரென்று எழுதியிருக்கிறதல்லவோ? * பிலிப். ௨: ௰, ௰௧. ஏசா. ௪௫: ௨௩, ௨௪.

௰௨. அந்தப்படி நம்மில் அவனவன் தன் தன்னைக்குறித்துப் பராபரனுக்குக்கணக்கு ஒப்புவிப்பான்.

௰௩. ஆதலால், நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றமுள்ளவர்களென்று எண்ணாதிருப்போமாக. * வழுவுதற்காவது, விழுதற்காவது எதையாகிலுஞ் சகோதரனுக்கு முன்பாக வைத்துப்போடாதபடிக்கே எண்ணமுள்ளவர்களாவீர்களாக. * மத். ௰௮: ௭.

௰௪. நான் கர்த்தராகிய இயேசுவினாலே அறிந்திருக்கிறபடி * ஒருபொருளை அசுத்தமென்றெண்ணிக்கொள்ளுகிறவனுக்கு அது அசுத்தமாயிருக்கிறதேயன்றி, ஒரு பொருளுந்தானாய் அசுத்தமில்லை. *மத். ௰௫: ௰௧.

௰௫. அன்றியும், * புசிக்கிறதினாலே உன் சகோதரனுக்கு விதனமுண்டாக்கினால், நீ அன்பாய் நடக்கிறவனல்ல. அவனுக்காகக் கிறிஸ்து மரித்தாரே. அப்படிப்பட்டவனை உன் போசனத்தினாலே கெடுத்துப்போடாதிருப்பாயாக. * ௧ கொரி. ௮: ௯—௰௨.

௰௬. உங்கள் நன்மை தூஷிக்கப்படாதிருப்பதாக.

௰௭. பராபரனுடைய இராச்சியம் * புசிப்பினாலும், குடிப்பினாலுமல்ல. நீதியினாலும், சமாதானத்தினாலும், பரிசுத்த ஆவியால் வருகிற சந்தோஷத்தினாலும் பொருந்தி இருக்கின்றது. * ௧ கொரி. ௮: ௮.

௰௮. இவைகளாலே கிறிஸ்துவுக்கூழியஞ் செய்கிறவன் பராபரனுக்குப்பிரியமானவனாய், மனிதருக்குப்பாத்திரனுமாய் இருக்கிறான்.

௰௯. இப்படியிருக்க, சமாதானத்திற்கும்,

யாவரையும் ஐக்கப்படுத்துதற்கும் ஏற்றவைகளைத்தேடிக்கொள்ளக்கடவோம்.

௨௰. போசனத்தின் நிமித்தம் பராபரனுடைய கிரியையை அழித்துப்போடாதிருப்பாயாக. எந்தப்பதார்த்தமுஞ் சுத்தமுள்ளதுதான். (மற்றவன்) விழுதற்கேதுவாகும்படி எதையாகிலும் புசிக்கிறவனுக்கே அது தீமையாய் இருக்கும்.

௨௧. உன் சகோதரன் வழுவுதற்காவது, விழுதற்காவது, பலவீனமாகுதற்காவது ஏதுவான * மாம்சத்தைப்புசியாமலும், இரசத்தைப்பானம் பண்ணாமலும், மற்றெதையாகிலுஞ் செய்யாமலுமிருக்கிறதே நன்மையாயிருக்கின்றது. * ௧ கொரி ௮: ௰௩.

௨௨. நீ நிச்சய அறிவுள்ளவனானால், அதைப்பராபரனுக்கு முன்பாக நீ தானாய்க்கொள்வாயாக. ஒருவன் தான் சம்மதிக்கிறபொருளினாலே தனக்குக்குற்றம்வரப்பண்ணாதிருந்தால், அவன் பாக்கியவானாய் இருப்பான்.

௨௩. (போசன பதார்த்தங்களுக்குள்ளே) வித்தியாசம் பண்ணுகிறவன் (அவைகளை) * நிச்சய அறிவில்லாமற் புசித்தபடியினாலே ஆக்கினைக்கு ஏதுவாய் இருப்பான் — நிச்சய அறிவினாலே வாராதயாவும் பாவமாய் இருக்கின்றன. * எபி. ௰௧: ௬.

௰௫ அதிகாரம்.

[(௧) பலமுள்ளோர் பல ஈனரைத்தாங்கவேண்டுமென்பது. (௨) கிறிஸ்துத்தம்மைப்பிரியப்படுத்தாமல் யூதர்களையும், அஞ்ஞானிகளையும் ஏற்றுக்கொண்டதுபோல, நாமும் நம்மைப்பிரியப்படுத்தாமல் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பது. (௰௫) பவுல் நிருபத்தை எழுதினதற்காக நியாயஞ்சொல்லி, (௨௮) அவர்களை வந்து காண்பேனென்று வாக்குத்தத்தம்பண்ணி, (௩௰) அவர்கள் தனக்காக வேண்டிக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டது.]

ஆனபடியினாலே பலமுள்ளவர்களாகிய நாம் * பலவீனமுள்ளவர்களுடைய பலவீனங்களைப்பொறுமையோடே சகிக்கவேண்டும். அல்லாமலும், நாம் நமக்குப்பிரியமாய் நடவாமல், * ௧ கொரிந். ௯: ௨௨.

௨. அவனவன் தன் தனக்கடுத்த பிறனுடைய ஞானவளர்ப்புக்கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்குப்பிரியமாய் நடக்கக்கடவோம்.

௩: கிறிஸ்துவானவருந் தமக்குப்பிரியமாய் நடவாமல், * உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தைகள் என்மேல் விழுந்தனவென்று எழுதியிருக்கிறபடி நடந்தார். * சங். ௬௯: ௯.

௪. அன்றியும், * வேதவாக்கியங்கள் திருஷ்டாந்தப்படுத்தின பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்பொருட்டாய் முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப்போதகமாக எழுதப்பட்டிருக்கின்றன. * ௨ தீமோத். ௩: ௰௬, ௰௭.

௫. அந்தப்படி பொறுமையையும், ஆறுதலையுங்கொடுக்கிற பராபரன் நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்குத்தேவனும், பிதாவுமானவரை நீங்கள் ஐக்கமாய் ஒரே வாயினாலே துதிக்கும்படிக்கு,

௬. கிறிஸ்து இயேசுவினுடைய சித்தத்தின்படியே ஒருவருக்கொருவர் ஒரேவிதமான சிந்தையுள்ளவர்களாய் இருப்பதற்கு அநுக்கிரகஞ் செய்வாராக.

௭. அப்படியே பராபரனுக்குப்புகழ்ச்சியுண்டாகத்தக்கதாய்க்கிறிஸ்து நம்மைச்சேர்த்துக்கொண்டதுபோல, நீங்களும்ஒருவரையொருவர் சேர்த்துக்கொள்ளுங்கள்.

௮. (இதைக்குறித்து) நான் பின்னுஞ்சொல்லுகிறதாவது; பிதாக்களுக்குப்பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்களை யுறுதியாக்கும்படிக்கு, பராபரனுடைய சத்தியத்தின் நிமித்தம் இயேசுக்கிறிஸ்து விருத்தசேதனமுள்ளவர்களுக்கு ஊழியக்காரரானார்.

௯. புறத்தேசத்தாரும் (அவருடைய) இரக்கத்திற்காகப் பராபரனைத்துதிக்கும்படிக்கு அப்படியானார். ஆதலால், எழுதியிருக்கிறதாவது; * இதினிமித்தம் நான் புறத்தேசத்தாருக்குள்ளே உம்மை அறிக்கைபண்ணி, உம்முடைய நாமத்தைச்சொல்லி, சங்கீதம்பாடுவேனென்பதே. மறுபடியும் அவன் சொல்லியிருக்கிறது. * சங்கீ. ௰௮: ௪௯.

௰. * புறத்தேசத்தார்களே! அவருடைய சனங்களோடேகூடச் சந்தோஷப்படுங்களென்பதே. * ௫ மோ. ௩௨: ௪௩.

௰௧. மறுபடியும் அவன்சொன்னது, * எல்லாப்புறத்தேசத்தார்களே, பராபரனைத்துதியுங்கள். எல்லாச்சனங்களே, அவரை மிகவுந் துதியுங்களென்றான். * சங். ௱௰௭: ௧.

௰௨. ஏசாவுஞ் சொன்னது, * ஈசாயின் வேரிருக்கும் புறத்தேசத்தாரை யாளும்படி எழும்புவாருமிருப்பார்; அவரிற் புறத்தேசத்தார்கள் நம்பிக்கையாய் இருப்பார்களென்றான். * ஏசா. ௰௧: ௰. வெளி. ௫: ௫. ௨௨: ௰௬.

௰௩. அந்தப்படியே நீங்கள் பரிசுத்த ஆவியின் பலத்தினாலே அந்த நம்பிக்கையையதிகமாய் அடையும்படிக்கு நம்பிக்கைக்கு ஏதுவான பராபரன் விசுவாசத்தினாலுண்டாகும். எல்லாவித சந்தோஷத்தினாலும், சமாதான சவுக்கியத்தினாலும் உங்களை நிரப்புவாராக.

௰௪ என் சகோதரரே! நீங்கள் தாமே நற்குணத்தினால் நிறைந்தவர்களுமாய், * சகல அறிவினாலும் நிறைந்தவர்களுமாய், ஒரு

வருக்கொருவர் புத்திசொல்ல வல்லவர்களுமாய் இருக்கிறீர்களென்று நானும் உங்களைக்குறித்து நிச்சயமாய் அறிந்திருக்கிறேன். * கொலோ. ௧: ௮—௰.

௰௫. அப்படியிருந்தாலுஞ் சகோதரரே! பராபரன் எனக்குக்கொடுத்த கிருபையினாலே, நான் உங்களுக்கு ஞாபகப்படுத்தும்படிக்கு இவைகளை யதிக தயிரியமாய் எழுதினேன்.

௰௬. புறத்தேசத்தார்கள் பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட்டு, பராபரனுக்கு மிகவும் பிரியமான பலியாகும்படிக்கு, நான் புறத்தேசத்தாருக்கு இயேசுக்கிறிஸ்துவினுடைய ஊழியக்காரனாய், பராபரனுடைய சுவிசேஷத்திற்கேற்ற ஆராதனை செய்யும்பொருட்டு, அந்தக்கிருபை யெனக்குண்டாயிற்று.

௰௭. ஆதலால், நான் இயேசுக்கிறிஸ்துவைக்கொண்டு, பராபரனுக்குரியவைகளைக்குறித்து மேன்மைபாராட்டுதற்கு முகாந்தரமுண்டு.

௰௮. ஆனபடியினாலே கிறிஸ்துவானவர் என்னாலே நடப்பியாதவைகளிலொன்றையுங்குறித்துப்பேசத்துணியாமல்,

௰௯. புறத்தேசத்தார் வார்த்தையிலும், செய்கையிலும் விசுவாசத்திற்குக்கீழ்ப்படியும்படிக்கு, எருசலேம் நகரத்தைத்தொடங்கி, அதைச்சூழ்ந்த திசையிலேயும் இல்லிரிக்குத்தேசம்வரைக்குங்கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை விஸ்தாரமாய்ப்பிரசங்கிக்கத்தக்கதாக, அற்புதங்கள் அதிசயங்களென்றவைகளின் பலத்தினாலும், பரிசுத்த ஆவியினுடைய பலத்தினாலும், அவர் என்னாலே நடப்பித்தவைகளைக்குறித்துமாத்திரம் பேசத்துணிகிறேன்.

௨௰. மேலும், * அவரைக்குறித்து அறிவையடையாதவர்கள் அவரைப்பார்ப்பார்களென்றும், கேள்விப்படாதவர்கள் அறிந்துகொள்வார்களென்றும் எழுதியிருக்கிறபடியே, * ஏசா. ௫௨: ௰௫.

௨௧. நான் மற்றொருவனுடைய அஸ்திபாரத்தின்மேலே கட்டாதபடிக்கு, கிறிஸ்துவின் நாமம் சொல்லப்பட்டிராத இடங்களிலே சுவிசேஷத்தை அறிவிக்கும்படி, அதிககருத்துள்ளவனாயிருக்கிறேன்.

௨௨. அதினாலே நான் உங்களிடத்தில் வருகிறதற்கு அநேகந்தரம் தடையுண்டாயிற்று.

௨௩. இப்பொழுது, நான் இந்தத்திசைகளிலே யிருக்கிறதற்கு இடமில்லாதபடியினாலும், உங்களிடத்திற்குவரும்படி அநேக வருஷங்களாய் எனக்கு மிகுந்த விருப்பமுண்டாயிருந்தபடியினாலும்,

௨௪. நான் இஸ்பானியா தேசத்திற்குப் பிரயாணமாய்ப்போகும்பொழுது, உங்களிடத்தில்வந்து உங்களைக்கண்டுபேசவும், உங்களோடிருக்கிறதினாலே முந்திச்சற்றுமனச்சந்தோஷம் அடைந்தபின்பு, அவ்வழியே உங்களால் அனுப்பிவிடப்படவும் நம்பியிருக்கிறேன்.

௨௫. இப்பொழுது மக்கெதோனியா நாட்டிலும், அகாயாநாட்டிலுமுள்ள சபையார் * எருசலேமிலிருக்கிற பரிசுத்தவான்களுக்குள்ளேயிருக்கிற ஏழைகளுக்காகச்சில தருமங்களைச்சேர்த்துக்கொள்ளப் பிரியமானபடியினாலே, * அப்போ. ௰௯: ௨௧.

௨௬. நான் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்கூழியஞ் செய்யும்படி அவ்விடத்திற்குப்பிரயாணமாய்ப்போக எத்தனமாயிருக்கிறேன்.

௨௭. அப்படிப்பட்ட பிரியமுள்ளவர்களாவதற்கு, அவர்களுடைய கடனாளிகளாயுமிருக்கிறார்கள். எப்படியென்றால், புறத்தேசத்தார் அவர்களுடைய ஞான நன்மைகளிற் பங்குபெற்றிருக்க, (தங்கள்) சரீர நன்மைகளால், அவர்களுக்கூழியஞ்செய்ய நியாயமாயிருக்கின்றதே.

௨௮. இந்த ஊழியத்தை நான் நிறைவேற்றி இந்தப்பலனை அவர்கள் கையிலே பத்திரப்படுத்தினபின்பு, உங்களூர்வழியாய் இஸ்பானியா தேசத்திற்குச்செல்லுவேன்.

௨௯. நான் உங்களிடத்தில் வரும்பொழுது, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்திலுள்ள சம்பூரணமான ஆசீர்வாதங்களோடே வருவேனென்றறிந்திருக்கிறேன்.

௩௰. மேலுஞ் சகோதரரே! யூதேயாதேசத்திலிருக்கிற அவிசுவாசிகளுக்கு நான் தப்புவிக்கப்படும்படிக்கும், பராபரனுடைய சித்தத்தினாலே நான் சந்தோஷத்துடனே உங்களிடத்திற்குவந்து, உங்களோடேகூடச்சவுக்கியப்படத்தக்கதாக,

௩௧. நான் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குச்செய்யப்போகிற ஊழியம் அவர்களுக்குப்பிரியமாயிருக்கும்படிக்கும்,

௩௨. என்னோடேகூட நீங்கள் எனக்காகப் பராபரனை நோக்கி, * போராட்டமாய்ச் செபம்பண்ண வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவரால்வரும் அன்பினிமித்தமும் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். * ௧ மோ. ௩௨: ௨௪. ௨ தெச. ௩: ௨.

௩௩. சமாதானத்தை யளிக்கிற பராபரன் உங்களனைவரோடுங்கூட இருக்கக்கடவர். ஆமென்.

௰௬ அதிகாரம்.

[(௩) பவுல் அநேகருக்குச்சகோதரர் வாழ்த்துதல் சொல்லவும், (௰௭) பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டுபண்ணுகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருக்கவுங்காட்டி (௨௧) அநேகர் வினவுதல்களை அறிவித்து

Hh

பராபரனுக்கு ஸ்துதியும், ஸ்தோத்திரமுஞ் செலுத்தி நிருபத்தை முடித்தது.]

பரிசுத்தவான்களுக்கேற்றபடி நீங்கள் கெங்கிரேயாவூரின் சபைக்கு ஊழியக்காரியாகிய நம்முடைய சகோதரி வொய்பேயாளைக் கர்த்தரைப்பற்றியிருக்கிறவளென்று உபசாரஞ்செய்து,

௨. அவளுக்கு உங்கள் உதவி வேண்டிய காரியமேதோ அதிலே அவளுக்கு உதவியாயிருக்க வேண்டுமென்று, அவளை உங்களுக்கொப்புவிக்கிறேன். அவளும் அநேகருக்கும், எனக்குங்கூட ஆதரவாயிருந்தாளே.

௩. கிறிஸ்து இயேசுவினிடத்தில் என்னுடனேகூட வேலையாள்களாகிய * பிரிஸ்கில்லாளையும், ஆக்கில்லாவையும் வாழ்த்துதல் செய்யுங்கள். * அப். ௰௮: ௨—௨௬.

௪. அவர்கள் என் பிராணனுக்காக, தங்கள் கழுத்தையும் நீட்டினவர்கள். அவர்களுக்கு நான்மாத்திரமல்ல, புறத்தேசத்தாரிலுண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலைக்காண்பிக்கத்தக்கது.

௫. அவர்களுடைய வீட்டிலே கூடிவருகிற சபையையும் வாழ்த்துங்கள். அசாயாநாட்டிலே கிறிஸ்துவுக்கு முதற்பலனாகிய எனக்குப்பிரியமான எப்பெனெத்தென்பவனை வாழ்த்துங்கள்.

௬. எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாளை வாழ்த்துங்கள்.

௭. அப்போஸ்தலர்களால் புகழ்ச்சி அடைந்தவர்களுமாய், எனக்கு முந்திக்கிறிஸ்துவுக்குள்ளானவர்களுமாய், என் இனத்தாருமாய், என்னுடனேகூடக்காவலில் வைக்கப்பட்டிருக்கிறவர்களுமாயிருக்கிற அந்திரோனிக்கையும், யூனியாவையும் வாழ்த்துங்கள்.

௮. கர்த்தாவினாலே எனக்குப்பிரியமான அம்பிலியாவை வாழ்த்துங்கள்.

௯. கிறிஸ்துவினிடத்திலே நம்முடனேகூட வேலையாளாகிய உருபானுவையும் எனக்குப்பிரியமான ஸ்தாகுவையும் வாழ்த்துங்கள்.

௰. கிறிஸ்துவினிடத்தில் உண்மையான அப்பெல்லேயை வாழ்த்துங்கள். அரிஸ்தோபுலியினுடையவர்களை வாழ்த்துங்கள்.

௰௧. என் இனத்தானாகிய எரோதியோனை வாழ்த்துங்கள். கர்த்தரைப்பற்றியிருக்கிறவர்களாகிய நருக்கீசுவினுடையவர்களை வாழ்த்துங்கள்.

௰௨. கர்த்தாவினிமித்தம் பிரயாசப்படுகிற திரிபேனாளையும், திரிபோசாளையும் வாழ்த்துங்கள். கர்த்தாவினிமித்தம் மிகவும் பிரயாசப்பட்டு, எனக்குப்பிரியமாயிருக்கிற பெர்சிசாளை வாழ்த்துங்கள்.

௰௩. கர்த்தராலே தெரிந்துகொள்ளப்பட்ட உருப்புவையும், எனக்கும், அவனுக்குந் தாயானவளையும் வாழ்த்துங்கள்.

௰௪. அசிங்கிரித்துவையும், பிலேகோனையும், எர்மாவையும், பத்திரோபாவையும், எருமேயையும், அவர்களுடனேயிருக்கிற சகோதரரையும் வாழ்த்துங்கள்.

௰௫. பிலோலோகையும், யூலியாளையும், நேரேயையும், அவனுடைய சகோதரியையும், ஒலிம்பாவையும், அவர்களோடிருக்கிற பரிசுத்தவான்களெல்லாரையும் வாழத்துங்கள்.

௰௬. ஒருவரையொருவர் * பரிசுத்தமாய் முத்தஞ்செய்து வாழ்த்துங்கள். கிறிஸ்துவின் சபையார்கள் உங்களை வாழ்த்துகிறார்கள். * ௧ கொரி. ௰௬: ௨௰.

௰௭. மேலும் * சகோதரரே! நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு, விரோதமாய்ப்பிரிவினைகளையும், விழுதற்கேதுவானவைகளையும் உண்டாக்குகிறவர்களை ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். * தீத்து. ௩: ௰.

௰௮. அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்கல்ல, * தங்கள் வயிற்றுக்கூழியஞ்செய்து, † நயவசனிப்பினாலும், ஆசீர்வாதஞ் சொல்லுகிறதினாலும், பேதைமையானவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களானபடியினாலே, நீங்கள் அவர்களைவிட்டு விலகுவீர்களாக. * பிலிப். ௩: ௰௮, ௰௯. † கொலோ. ௨: ௪. ௨ பேது. ௨: ௩.

௰௯. நீங்கள் கீழ்ப்படிகிறவர்களென்பது யாவருக்குந் தெரியவந்திருக்கின்றது. ஆகையால், உங்களைக்குறித்துச்சந்தோஷப்படுகிறேன். மேலும், நீங்கள் நன்மைக்கு ஞானிகளுமாய், தீமைக்குப்பேதைகளுமாய் இருக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.

௨௰. மேலும், சமாதான சவுக்கியத்தை அளிக்கிற பராபரன் சீக்கிரமாய்ச் * சாத்தானை உங்கள் கால்களின்கீழே நசுக்கிப்போடும்படி செய்வார். நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருக்கக்கடவது. ஆமென். * ௧ மோ. ௩: ௰௫.

௨௰௧. * என் உடன்வேலையாளாகிய தீமோத்தேயும், என் இனத்தாராகிய இலூக்கியும், இயாசோனும், சோசிப்பத்தரும் உங்களை வாழ்த்துகிறார்கள். * அப். ௰௬: ௧. பிலிப். ௨: ௰௯.

௨௰௨. இந்த நிருபத்தையெழுதின தெர்த்தியென்னப்பட்ட நான் கர்த்தராலே உங்களை வாழ்த்துகிறேன்.

௨௰௩. எனக்கும், சபையாரெல்லாருக்கும் வீட்டிலே உபசாரஞ் செய்துவருகிற காயுவென்பவன் உங்களை வாழ்த்துகிறான். பட்டினத்து நிலைமைக்கணக்கனாகிய * எரஸ்

தும், சகோதரனாகிய குவர்த்தும் உங்களை வாழ்த்துகிருர்கள். * அப். யகூ: உஉ.

உச. நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய கிருபை உங்களெல்லாரோடுங்கூட இருக்கக்கடவது.—ஆமென்.

உரு. பூர்வீககாலங்களில் மறைவாயிருந்து இப்பொழுது தீர்க்கதரிசன ஆகமங்களினாலே, அநாதியான பராபரனுடைய கட்டளையின்படி வெளியரங்கமாக்கப்பட்டதுமாய்,விசுவாசத்திற்குக்கீழ்ப்படியும்படிக்கு, எல்லாத்தேசத்தாருக்கும் அறிவிக்கப்பட்டதுமாயிருக்கிற இரகசியத்தை வெளிப்படுத்துகிறதாயும்,

உகூ. இயேசுக்கிறிஸ்துவினுடைய பிரசங்கமாயுமிருக்கிற என் சுவிசேஷத்தின்படியே உங்களை ஸ்திரப்படுத்துதற்கு வல்லவருமாய்,

உஎ. * ஒருவராய், ஞானமுள்ளவருமாய் இருக்கிற பராபரனுக்கு இயேசுக்கிறிஸ்து மூலமாய் என்றென்றைக்கும் புகழ்ச்சியுண்டாவதாக.—ஆமென். * க தீமோத். க: ௰எ.

அப்போஸ்தலனாகிய பவுல்

கொரிந்தருக்கு எழுதின முதலாம் நிருபம்.

I. CORINTHIANS.

க அதிகாரம்.

[(க) பவுல் சபையாரை வாழ்த்தி, பராபரனைத்துதித்து, (௰) அவர்களை ஒருமனப்பட்டிருக்கக்கற்பித்து, (௰உ) அவர்களுடைய பிரிவினைகளைக்கடிந்துகொண்டது. (௰அ) பராபரன் ஞானிகளின் ஞானத்தை, (உக) சொல்லப்பிரசங்கத்தினாலே வீணாக்கி, (உகூ) ஞானிகளையும், வல்லவர்களையும், மேன்குலத்தாரையும் விட்டு, (உஎ,உஅ) பேதைகளையும், இழிகுலத்தாரையுந் தெரிந்துகொண்டது.]

பராபரனுடைய சித்தத்தினாலே * இயேசுக்கிறிஸ்துவின் அப்போஸ்தலனாக அழைக்கப்பட்ட பவுலும், * கலாத். க: க.

உ. சகோதரனாகிய சொஸ்தனேயுங் கொரிந்துவிலே, * பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயும், கிறிஸ்து இயேசுவினாற் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயுமிருக்கிற பராபரனுடைய சபையாருக்கும், எவ்விடத்திலேயும் நமக்குப்பொதுவாயிருக்கிற கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தைத்தொழுதுகொள்ளுகிற அனைவருங்கூட எழுதுகிறதாவது; * கூ: ௰க.

௩. நம்முடைய பிதாவாகிய பராபரனாலும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலும் உங்களுக்குக்கிருபையும், சமாதானமும் உண்டாகக்கடவது.

ச. நீங்கள் ஒருவரத்திலுங் குறைவில்லாதவர்களாயிருந்து, நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து வெளிப்படுவதற்குச்சந்தோஷமாய்க்காத்திருக்கத்தக்கதாக,

ரு. கிறிஸ்துவைக்குறித்துச்சொன்ன சாட்சி உங்களுக்குள்ளே ஸ்திரப்படுத்தப்பட்டிருக்கையால்,

சூ. நீங்கள் * இயேசுக்கிறிஸ்துவினாலே எல்லாவற்றிலும், எல்லா உபதேசத்திலேயும், எல்லா அறிவிலேயுஞ் சம்பூரணமுள்ளவர்களானபடியினாலே, * பிலிப். ௩: உ௰.

எ. அவர் மூலமாய் உங்களுக்குக்கொடுக்கப்பட்ட தேவகிருபைக்காக நான் உங்களைக்குறித்து, எப்பொழுதும் என் பராபரனைத்தோத்திரிக்கிறேன்.

அ. அவரும் நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின்நாளிலே நீங்கள் குற்றஞ்சாற்றப்படாதவர்களாய் இருக்கும்படி முடிவுபரியந்தம் உங்களை ஸ்திரப்படுத்துவார்.

கூ. நம்முடைய குமாரனுமாய் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவுடனே * ஐக்கமாயிருப்பதற்கு உங்களையழைத்த பராபரன் † உண்மையுள்ளவராயிருக்கிருரே. * யோவா. ௰ரு: ரு. † க தெ. ரு: உச.

௰. ஆகிலும் என் சகோதரரே! உங்களுக்குள்ளே வாக்குவாதங்களுண்டென்று குலோவேயாளுக்குரித்தானவர்களாலே எனக்கு அறிவிக்கப்பட்டது.

௰க. ஆதலால் நீங்களெல்லாரும் ஒரேவிதமாய்ப்பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதினாலும், * ஏக யோசனையினாலும் ஐ

கப்பட்டிருக்கவும் வேண்டுமென்று நம்மு டைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப்புத்தி சொல்லு கிறேன். * பிலிப். ௩: ௰௩.

௰௨. உங்களில் ஒருவன் நான் பவுலைச்சே ர்ந்தவனென்றும், ஒருவன் * அப்பொல் லோவைச்சேர்ந்தவனென்றும், ஒருவன் கே பாவைச்சேர்ந்தவனென்றும், ஒருவன் கிறி ஸ்துவைச்சேர்ந்தவனென்றுஞ் சொல்லுகி றபடியால், நானிப்படிச்சொல்லுகிறேன். * அப்போ. ௰௮: ௨௪.

௰௩. கிறிஸ்துப்பிரிந்திருக்கிறாரா? உங்களுக் காக, பவுல் சிலுவையிலறையப்பட்டானா? அல்லது பவுவின் நாமத்தினாலே ஞானஸ்நா னம் பெற்றீர்களா?

௰௪. என்னுடைய நாமத்தினாலே ஞானஸ் நானங் கொடுத்தேனென்று, ஒருவனுஞ் சொல்லாதபடிக்கு,

௰௫. நான் * கிறிஸ்புக்கும், காயுக்குமே யன்றி, உங்களில் வேறொருவருக்கும் ஞான ஸ்நானங் கொடாததினாலே பராபரனைத் தோத்திரஞ் செய்கிறேன். * அப். ௰௮: ௮.

௰௬. * ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் ஞானஸ்நானங் கொடுத்தேன். பின்னும் (உங்களில்) வேறொருவனுக்கு நான் ஞான ஸ்நானங் கொடுத்தேனோ, இல்லையோ வென்றறியேன். * ௰௬: ௰௫.

௰௭. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படிக் கேயல்லாமல், ஞானஸ்நானத்தைக்கொடுக் கும்படிக்கு, கிறிஸ்து என்னை அனுப்பவில் லையே. கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு, நான் அதை லவுகீக ஞான * வசனங்களோடேயல்ல. பிரசங்கிக் கும்படிக்கு அனுப்பினார். * ௨: ௪, ௫.

௰௮. அந்தச்சிலுவையைக்குறித்துச்சொல் லிய வசனங் கெட்டுப்போகிறவர்களுக்குப் பயித்தியமாகத்தோன்றுகின்றதேயன்றி, இ ரட்சிக்கப்படுகிற நமக்கு அது * தேவபல னாயிருக்கின்றது. * உரோ. ௧: ௰௫.

௰௯. அந்தப்படி ஞானிகளுடைய ஞானத் தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை மறைந்துபோகப்பண்ணுவேனெ ன்று எழுதியிருக்கின்றதே.

௨௰. ஞானியானவன் எங்கே? வேதபாரக னெங்கே? இப்பிரபஞ்சத்தருக்க சாஸ்திரி எங்கே? இந்த உலக ஞானத்தை, பரா பரன் பயித்தியமாக்கவில்லையா?

௨௧. எப்படியெனில், பராபரனுடைய ஞானத்திற்கேற்றதாய், * உலகத்தார் தங் கள் சொந்த ஞானத்தினாலே பராபரனை யறியாதபடியினாலே பயித்தியமாகத்தோ ன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கவேண்டுமென்று பராபரன் பிரிய மாயிருந்தார். மத். ௰௧: ௨௫, ௨௬.

௨௨. அந்தப்படி * யூதர்கள் அடையாள ளத்தைக்கேட்கிறார்கள். கிரேக்கர் ஞானத் தைத்தேடுகிறார்கள். * மத். ௰௨: ௩௮, ௩௯.

௨௩. நாங்களோ சிலுவையில் அறையப் பட்ட கிறிஸ்துவைக்கூறுகிறோம். அது யூதர்களுக்கு இடறலாயும், கிரேக்கருக்குப் பயித்தியமாயுமிருக்கின்றது.

௨௪. ஆகிலும் யூதரிலும், கிரேக்கரிலும் எவர்கள் அழைக்கப்பட்டார்களோ அவர்க ளுக்கு, கிறிஸ்துத்தேவபலனுமாய். * தேவ ஞானமுமாயிருக்கிறார். * கொலோ. ௨: ௧—௩.

௨௫. ஆனதால் தேவனைக்குறித்து அவர் கள் சொல்லுகிற பயித்தியம் மனிதருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயும், தேவ னைக்குறித்து அவர்கள் சொல்லுகிற பெல வீனம் மனிதருடைய பெலனிலும் அதிக பெலனுமிருக்கின்றது.

௨௬. அதற்காகச்சகோதரரே! உங்களை யழைத்தவிதத்தைப்பாருங்கள். அநேக லவுகீக * ஞானிகளாவது; அநேக வல்லவர் களாவது, அநேக உயர்குலத்தாராவது, இல்லையே. * யாக். ௩: ௰௩—௰௭.

௨௭. அந்த * ஞானிகளை வெட்கப்படுத் தும்படிக்கு, பராபரன் உலகத்திலே பயித் தியரென்றெண்ணப்பட்டவர்களைத் தெரிந் துகொண்டார். பெலவான்களை வெட்கப்ப டுத்தும்படிக்கு, பராபரன் உலகத்திலே பெலவீனரானவர்களைத்தெரிந்துகொண்டா ர். * மத். ௰௧: ௨௫. யாக். ௨: ௫. சங். ௮: ௨.

௨௮. இருக்கிறவர்களைத் தள்ளும்படிக்கு, இல்லாதவர்களையும், உலகத்திலே இழிந்த குலத்தாரானவர்களையும், அற்பமாய் எண் ணப்பட்டவர்களையும் பராபரன் தெரிந்து கொண்டார்.

௨௯. எந்த மாம்சதேகியும் பராபரனுக்கு முன்பாகப்பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச்செய்தார்.

௩௰. ஆகலால் நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். அவரே நமக்குத்தேவஞானமும், * நீதியும், † பரி சுத்தமும் மீட்புமானார். * எரே. ௨௩: ௫, ௬. † யோவா. ௰௭: ௰௯.

௩௧. ஆனதால் எழுதியிருக்கிறபடி, * மே ன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித் தே மேன்மைபாராட்டக்கடவன். * எரே. ௯: ௨௩. ௨ கொரி. ௰: ௰௭.

௨ அதிகாரம்.

[(௧) தன் பிரசங்க போதகஞ் சாதுரியமுள் ளதும், (௪) லவுகீக ஞானமுள்ளதுமாயிரா மற்போனாலும், (௪, ௫) அது தேவ பல னுள்ளதென்றும், (௬) உலக ஞானத்துக் கும், (௯) லவுகீகபுத்திக்கு மிகவும் உயர்ந்த தென்றும், (௰௪) அதைச்சுபாவப்படிக்கா

ள மனுஷன் அறியக்கூடாதென்றுஞ் சொ
ல்லியது.]

௧ சகோதரரே! நானும் உங்களிடத்தில்
வந்து, பராபரனுடைய சாட்சியை
* உயர்ந்த வசனிப்போடும், அல்லது ஞா
னத்தோடும் உங்களுக்கு அறிவிக்கவில்லை.
* ௧: ௰௭.
௨. நான் தீர்மானித்தபடி சிலுவையில் அ
றையப்பட்ட இயேசுக்கிறிஸ்துவையேயன்
றி, வேறொன்றையும் உங்களுக்கு அறிவிக்க
வில்லையே.
௩. அல்லாமலும் நான் * பெலவீனத்தோ
டும், பயத்தோடும், மிகுந்த நடுக்கத்தோ
டும் உங்களிடத்திலிருந்தேன். * அப். ௰௮:
௬—௰௩.
௪. என் பேச்சும், என் பிரசங்கமும் மனி
த ஞானத்திற்குரிய போதனை வார்த்தைக
ளாயிருக்கவில்லை.
௫. உங்கள் விசுவாசம் மனிதருடைய ஞா
னத்திலல்ல, * பராபரனுடைய பலத்திலே
நிற்கத்தக்கதாக அது ஆவியையும், பெல
னையுங் காண்பித்தது. * ௨ கொரி. ௪: ௭.
௬. எப்படியுந் தேறினவர்களுக்குள்ளே
நாங்கள் ஞானத்தையே பேசுகிறோம். அந்
த ஞானம் இப்பிரபஞ்சத்தின் ஞானமல்ல.
அழிந்துபோகிறவர்களாய் இப்பிரபஞ்சத்
தின் பிரபுக்களுடைய ஞானமுமல்ல.
௭. லோகத்தோற்றத்திற்கு முன்னே பரா
பரன் நம்முடைய மகிமைக்காகக்குறித்தது
துமாய், இரகசியத்திலே மறைக்கப்பட்ட
துமாயிருந்த * தேவ ஞானத்தையே பேசு
கிறோம். * ௧ தீமோ. ௩: ௰௬.
௮. அதை இப்பிரபஞ்சத்துப்பிரபுக்களில்
ஒருவனும் அறிந்துகொள்ளவில்லை. அறிந்
துகொண்டிருந்தார்களானால், * மகிமையின்
கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறைய
மாட்டார்களே.
௯. வேதத்தில் எழுதியிருக்கிறபடி, * பரா
பரன் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்
கு எத்தினம்பண்ணினவைகளை (மனிதர்)
கண்காணவுமில்லை. காது கேட்கவுமில்லை
அவைகள் மனிதருடைய இருதயத்திலே
தோன்றவுமில்லை. * ஏசா. ௬௪: ௪.
௰. நமக்கே * பராபரன் அவைகளைத்தம
து ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த
ஆவியானவர் எல்லாவற்றையும் பராபரனு
டைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறாரே.
* மத். ௰௬: ௰௭.
௰௧. மனிதனிலுள்ள ஆவியேயன்றி, மனித
ரில் எவன் மனிதனுக்குரியவைகளை அறிவா
ன் (மாட்டானே.) அப்படிப்போல, பரா
பரனுடைய ஆவியே அல்லாமல், ஒருவனும்
பராபரனுடைய ஆழங்களை அறியமாட்
டான்.
௰௨. இப்படியிருக்க நாங்கள் பராபரனால்
நமக்கருளப்பட்டவைகளை அறியும்படிக்கு,
உலகத்தின் ஆவியையல்ல, பராபரனிலிருந்
து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்.
௰௩. அவைகளை நாங்கள் மனிதருடைய
சொந்தஞானம் போதிக்கிற வார்த்தைகளா
லல்ல. பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்
தைகளாலே பிரசங்கம்பண்ணி, ஆவிக்குரி
யவைகளை ஆவிக்குரியவைகளாலே ஒத்துப்
பார்த்துக்காண்பிக்கிறோம்.
௰௪. ஆகிலும், * சென்மசுபாவத்தின்படி
யான மனிதன் பராபரனுடைய ஆவிக்குரி
யவைகளை ஏற்றுக்கொள்ளமாட்டான். அ
வைகள் அவனுக்குப்பயித்தியமாகத்தோன்
றுமே. மேலும், அவைகளை ஆவிக்கேற்ற
பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கவேண்
டியபடியால், அவன் அவைகளை அறியமாட்
டான். * யூதா. ௰௯ வசனம். ௨ரோ. ௮:
௫—௮.
௰௫. ஆவிக்குரியவனோ எல்லாவற்றையும்
ஆராய்ந்து நிதானிந்து, மற்றொருவனாலும்
ஆராய்ந்து நிதானிக்கப்படான்.
௰௬. * அவனுக்குப்போதிக்கத்தக்கதாகக்
கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யா
வன்? நாங்களே கிறிஸ்துவின் சிந்தையைப்
போலச் சிந்தையுள்ளவர்களாயிருக்கிறோம்.
* ஏசா. ௪௰: ௰௩.

௩ அதிகாரம்.

[(௨) குழந்தைகளுக்குப்பால் உரியதென்
றும், (௩) போராட்டமும், பிரிவினையும் மா
ம்சசிந்தைக்குரியதென்றும், (௭) நடுகிறவ
னும், தண்ணீர்பாய்ச்சுகிறவனும் விளைவுக்
குக்காரணரல்லவென்றும், (௯) தேவ ஊழி
யக்காரர் பராபரனோடே உடன்வேலையாள்
களென்றும், (௰௧) கிறிஸ்து ஒருவரே அஸ்
திவாரமென்றும், (௰௬) மனிதர்கள் தேவா
லயங்களென்றும், (௰௭) அவைகளைப்பரி
சுத்தமாய்க்காத்துக்கொள்ள வேண்டியதெ
ன்றும், (௰௯) இவ்வுலகஞானம் பராபர
னுடைய பார்வைக்குப்பயித்தியமென்றுஞ்
சொல்லியது.]

௧ நானுஞ் சகோதரரே! உங்களை ஆவிக்
குரியவர்களென்றெண்ணவும், உங்
களுடனே பேசவுங் கூடாமல், உங்களை
மாம்சத்திற்குரியவர்களென்றும், கிறிஸ்து
விற்குழந்தைகளென்றுமெண்ணி, உங்களு
டனே பேசவேண்டியதாயிருந்தது.
௨. உணவை நீங்கள் தாங்கத்திராணியில்
லாதபடியால், அதை உங்களுக்குக்கொடா
மல் * பாலைக்குடிக்கக்கொடுத்தேன். இன்
னமும், நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயி
ருக்கிறபடியால், இப்பொழுதும் அதைத்
தாங்கமாட்டீர்கள். * எபி. ௫: ௰௩.
௩. * வயிராக்கியமும், வாக்குவாதமு

பேதகங்களும் உங்களுக்குள்ளிருக்க, நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயும், மனிதருடைய மார்க்கமாய் நடக்கிறவர்களாயுமிருக்கிறீர்களல்லவோ? * ௧: ௰, ௰௧.

௪. உங்களில் ஒருவன் நான் பவுலைச்சேர்ந்தவனென்றும், வேறொருவன் நான் அப்பொல்லோவைச்சேர்ந்தவனென்றுஞ் சொல்லுகிறதால், நீங்கள் மாம்சத்திற்குரியவர்களல்லவா!

௫. பவுல்யாவன்? அப்பொல்லோயாவன்! அவர்கள் நீங்கள் விசுவாசிகளாகிறதற்கேதுவாயிருந்த ஊழியக்காரர்தானே. அதுவும், அவனவனுக்குக்கர்த்தர் அருள் அளித்தபடியே யிருக்கிறது.

௬. நான் நட்டேன். அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான். பராபரனே வளர்த்தார்.

௭. அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை. வளர்க்கிற பராபரனாலே எல்லாமாகும்.

௮. ஆகையால், நடுகிறவனும், நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள். ஆகிலும், * நாங்கள் பராபரனோடேகூடிய வேலையாள்களானபடியால், அவனவன் தன்தன்னுடைய வேலைக்குத்தக்கதாய்ப்பலனைப்பெறுவான். * ௨ கொரி. ௬: ௧.

௯. நீங்கள் பராபரனுடைய பண்ணையும், பராபரனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள்.

௰. எனக்களிக்கப்பட்ட தேவ கிருபையின்படியே விவேகமுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திபாரத்தைப்போட்டேன். வேறொருவன் அதின்மேல் கட்டுகிறான். எவனானாலுந் தான் அதின்மேலே கட்டுகிறது இன்னதென்று பார்க்கக்கடவன்.

௰௧. என்னத்தினாலெனில், இயேசுக்கிறிஸ்துவே அஸ்திபாரமாகப்போடப்பட்டிருக்கிறாரே. * போடப்பட்ட அந்த அஸ்திபாரத்தைத்தவிர, வேறே அஸ்திபாரத்தை ஒருவனும் போடக்கூடாது. * ஏசாயா. ௨௮: ௰௬.

௰௨. ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, இரத்தினக்கற்கள், மரங்கள், புல்லு, தாளடி இப்படிப்பட்டவைகளைச்சேர்த்துக்கட்டினால், அவனவனுடைய கிரியை வெளிப்படும்.

௰௩. அக்கினியினாலே வெளியாக்கப்படுவதால், அது தோன்றும்நாளே அதை வெளிப்படுத்தும். அவனுடைய கிரியை இப்படிப்பட்டதென்று * அக்கினியே சோதிக்கும். * ஏசா. ௪௮: ௰.

௰௪. அஸ்திபாரத்தின்மேலேகட்டின ஒருவனுடைய கிரியை நின்றால், அவன் பலனைப் பெறுவான்.

௰௫. ஒருவனுடைய கிரியை வெந்துபோனால், அவனுக்கு நஷ்டம்வரும். ஆகிலும், அவனே இரட்சிக்கப்படுவான். அதுவும் அக்கினியில் அகப்பட்டுத்தப்பினாற்போலவேயிருக்கும்.

௰௬. * நீங்கள் பராபரனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், பராபரனுடைய ஆவியானவர் உங்களிடத்தில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாமலிருக்கிறீர்களா? பராபரனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கின்றது. * ௨ கொரி. ௬: ௰௬.

௰௭. ஆதலால், அவருடைய ஆலயத்தை ஒருவன் கெடுத்தால், அவனைப்பராபரன் கெடுப்பார்.

௰௮. நீங்களே அந்த ஆலயம். ஒருவனுந் தன்னைத்தானே வஞ்சனைசெய்யாதிருப்பானாக. * ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறாரென்றும், * யோபு. ௫: ௰௩.

௰௯. * ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாயிருக்கின்றனவென்று கர்த்தர் அறிந்திருக்கிறாரென்றும் எழுதியிருக்கிறபடி, இவ்வுலகத்தின் ஞானம் பராபரனுக்குமுன்பாகப் பயித்தியமாயிருக்கின்றதே. * சங். ௯௪: ௰.

௨௰. ஆனதால், உங்களிலொருவன் இவ்வுலகத்திலே தன்னை ஞானியென்றெண்ணினால், அவன் மெய்ஞ்ஞானியாகும்படிக்குப் பயித்தியக்காரனாகக்கடவன்.

௨௰௧. இப்படியிருக்க ஒருவனும் மனிதரைக்குறித்துப் பெருமைபாராட்டக் கூடாது எல்லாம் உங்களுடையதே.

௨௰௨. பவுலாகிலும், அப்பொல்லோவாகிலும், கேபாவாகிலும், லோகமாகிலும், ஜீவனாகிலும், மரணமாகிலும், நிகழ்காரியங்களாகிலும், வருங்காரியங்களாகிலும் எல்லாமுங்களுடையது.

௨௰௩. * நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள். கிறிஸ்துப்பராபரனுடையவர். * ௨ கொரி. ௰: ௭.

௪ அதிகாரம்.

[(௧) போதகர்கள் இப்படி எண்ணப்படவேண்டுமென்றும், (௭) நமக்குரியவையெல்லாம் பெற்றுக்கொண்டோமென்றும், (௯) அப்போஸ்தலர்கள் லோகத்துக்கும், தூதர்களுக்கும், மனுஷருக்கும் விரோதமாகவும், (௰௩) உலகத்தின் குப்பையும், அழுக்குமாகவும் எண்ணப்பட்டவர்களாயிருந்தாலும், (௰௫) கிறிஸ்துவுக்குள் அவர்கள் நமக்குப் பிதாக்களென்றும், (௰௬) அவர்களை நாம் பின்பற்றவேண்டியதென்றுங் காட்டியது.]

இப்படியிருக்கிறபடியால், யாவரும் எங்களைக்கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், பராபரனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக்கொள்ளக்கடவர்கள்.

௨. * உக்கிராணக்காரரிடத்திலே உண்

மையையே காணத்தேடுவார்கள். * லூக். ௰௨: ௪௨.

௩. (அதைக்குறித்து) நான் உங்களாலே அல்லது மற்றொருமனித அதிகாரத்தினாலே நியாயத்தீர்ப்பைப்பெறுவது எனக்கு மிகவுஞ் சிறிதானகாரியமாயிருக்கின்றது. என்னைக்குறித்து நானுந்நியாயத்தீர்ப்புச்சொல்லுகிறதில்லை.

௪. குற்றத்தை நான் என்னிடத்தில் அறியேன். ஆகிலும், * அதினாலே நான் நீதிமானாகிறதில்லை. கர்த்தரே என்னைக்குறித்துத் தீர்ப்புச்சொல்லுகிறவர். * சங். ௱௩௰: ௩.

௫. ஆனபடியினாலே கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்திற்குமுன்னே ஒன்றையுங்குறித்துத் தீர்ப்புச்சொல்லாதிருப்பீர்களாக. அவரே இருளின் அந்தரங்கங்களை வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார். அப்பொழுது, அவனவனுக்குப்பராபரனாலே புகழ்ச்சியுண்டாகும்.

௬. சகோதரரே! எழுதப்பட்டதற்கு * மேலாகப் (போதகரை) எண்ணிக்கொள்ளாதபடிக்கு, நீங்கள் எங்களாலே கற்கும் பொருட்டாகவும், ஒருவனிமித்தம் மற்றொருவனுக்கு விரோதமாய் இறுமாப்பை அடையாதிருக்கும் பொருட்டாகவும் நான் உங்கள் நிமித்தம் என்னையும், அப்பொல்லோவையுந் திருஷ்டாந்தங்களாகவைத்து, இவைகளை யெழுதினேன். * வாக். ௩: ௭. உரோ. ௰௨: ௩.

௭. அன்றியும், உன்னை விசேஷித்துக்கொள்ளுகிறவன் யாவன்! * நீ பெற்றுக்கொள்ளாமல் உனக்குண்டாயிருக்கிறதுயாது. நீயும் பெற்றிருக்கப்பெற்றுக்கொள்ளாதவன் போல ஏன் பெருமைபாராட்டுகிறாய்! * யாக். ௧: ௰.

௮. இப்பொழுதே திருத்தியடைந்திருக்கிறீர்கள். இப்பொழுதே ஐசுவரியமுள்ளவர்களாய் இருக்கிறீர்கள். எங்களைத்தவிர ஆண்டீர்கள். நீங்கள் ஆண்டீர்களானால் நன்மையாயிருக்கும். அப்பொழுது உங்களுடனேகூட நாங்களும் ஆளுவோமே.

௯. அப்படியன்றி, எனக்குத்தோன்றுகிறபடி, பராபரன் அப்போஸ்தலராகிய எங்களைக்கடைசியிலே மரணத்திற்குக்குறிக்கப்பட்டவர்களைப்போலக்காணப்படப்பண்ணினார். உலகத்திற்கும், தூதருக்கும், மனிதருக்கும் வேடிக்கையானோம். நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் பயித்தியக்காரர்.

௰. நீங்கள் கிறிஸ்துவிற் புத்திசாலிகள். நாங்கள் பலவீனர். நீங்கள் பலவான்கள். நீங்கள் கனம்பொருந்தியவர்கள். நாங்கள் கனமற்றவர்கள்.

௰௧. இந்நேரம்வரைக்கும் * பசியும், தாகமும், நிருவாணமும் உள்ளவர்களாய் இருக்கிறோம். குட்டுண்டும், நிலையற்றும் இருக்கிறோம். * ௨ கொரி. ௰௧: ௨௪—௨௭.

௰௨. * எங்கள் கைகளினாலே வேலைசெய்து பிரயாசப்படுகிறோம். வையப்படுகிறபொழுது ஆசீர்வதிக்கிறோம். துன்பப்படுகிறபொழுது சகிக்கிறோம். * ௧ தெச. ௨: ௯.

௰௩. தூஷணிக்கப்படுகிறபொழுது, வேண்டிக்கொள்ளுகிறோம். இன்றைவரைக்கும் நாங்கள் உலகத்தின் குப்பைகளைப்போலவும், எல்லாருந் துடைக்கிற அழுக்கைப்போலவுமானோம்.

௰௪. உங்களை வெட்கப்படுத்தும்படிக்கு நான் இவைகளை எழுதவில்லை. நீங்கள் எனக்குப்பிரியமான பிள்ளைகள் என்று உங்களுக்குப்புத்தி சொல்லுகிறேன்.

௰௫. கிறிஸ்துவில் உங்களுக்குப்பதினாயிரம் உபாத்திகள் இருந்தாலும், அநேகந்தகப்பன்மார் உங்களுக்கில்லையே. * கிறிஸ்து இயேசுவிற் சுவிசேஷத்தினாலே நானே உங்களைப்பெற்றேன். * யாக். ௧: ௰௮. கலா. ௪: ௰௯.

௰௬. ஆகையால், * என்னைப்பின்பற்றுகிறவர்களாகுங்கள் என்று, உங்களுக்குப்புத்தி சொல்லுகிறேன். * ௰௧: ௧.

௰௭. இது நிமித்தமாக நான் எனக்குப்பிரியமும், கர்த்தருக்குள் உண்மையுமான என்னுடைய குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பினேன். அவன் எங்கும், எந்தச்சபையிலும் நான் போதிக்கிறவகை இன்னதென்று, கிறிஸ்துவுக்குள்ளான என்வழிகளை உங்களுக்கு நினைவுண்டாக்குவான்.

௰௮. நான் தானே உங்களிடத்திற்குவருகிறதில்லை என்கிறதாகச்சிலர் இறுமாப்படைந்தார்கள்.

௰௯. ஆகிலுங் கர்த்தருக்குச் சித்தமானால் நான் சீக்கிரமாய் உங்களிடத்திற்கு வந்து, பராபரனுடைய இராச்சியம் வசனிப்பினாலேயல்ல, பலத்தினாலே உண்டாயிருக்கிறபடியால்,

௨௰. இறுமாப்படைந்தவர்களுடைய வசனிப்பையல்ல, பலத்தை அறிந்துகொள்ளுவேன்.

௨௧. உங்களுக்கு என்னவேண்டும். நான் பிரம்புடனே உங்களிடத்தில் வரவேண்டுமோ? அல்லது அன்போடும், சாந்தமுள்ள ஆவியோடும் வரவேண்டுமோ?

௫ அதிகாரம்.

[(௧) அவர்களுக்குள்ளிருந்த முறைகேட்டைக்குறித்து, (௬) அவர்கள் சந்தோஷப்படாமல் வெட்கப்படவேண்டுமென்றும், (௭) புளித்தமாவை யொத்த பழைய குணத்தை நீக்கவேண்டுமென்றும், (௰) துஷ்டரு

தைவிட்டு நீங்கவேண்டுமென்றுஞ் சொல்லியது.]

அஞ்ஞானிகளுக்கள்ளுஞ் சொல்லப்படாத வேசித்தனம் உங்களுக்குள்ளே உண்டென்று பொதுவாகச்சொல்லிக்கொள்ளுகிறார்கள். என்னவெனில், ஒருவன் தன் தகப்பனுடைய மனைவியை வைத்துக்கொள்ளுகிறதே.

உ. மேலும், இப்படிப்பட்ட கிரியையைச் செய்தவனை உங்களில் இருந்து, நீக்கத்தக்கதாகத் துயரப்படவேண்டிய நீங்களும், இறுமாப்புள்ளவர்களாய் இருக்கிறீர்கள்.

ரு. ஆதலால், நான் சரீரத்தினாலே உங்களுக்குத்தூரமாயிருந்தும், * ஆவியால் உங்களோடேகூட இருக்கிறவனாய், அப்படிச் செய்தவனைக்குறித்து இப்பொழுதே கூட இருக்கிறதுபோலத் தீர்ப்புப்பண்ணினேன். * கொலோ. உ: ரு.

ச. (என்னவென்றால்,) * நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே நீங்களும், என்னுடைய ஆவியுங்கூட இருக்கையில், * யோவா. உய: உரு.

ரு. அப்படிப்பட்டவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படிக்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் வல்லமையோடே அவனுடைய * சரீரத்தில் அழிவுண்டாக அவனைச்சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். * சங். அரு: யசு, யஎ. க தீமோ. க: உ0.

சு. நீங்கள் மேன்மைபாராட்டல் நல்லதல்ல. * கொஞ்சமானபுளிப்புமாப்பிசைந்த மாவனைத்தையும், உப்பப்பண்ணுகிறதென்று அறியாமல் இருக்கிறீர்களா? * கலாத். ரு: சு.

எ. ஆனபடியினாலே கிறிஸ்து என்னும் நம்முடைய பஷாவும் நமக்காக அடிக்கப்பட்டிருக்கிறதால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாய் இருக்கிறபடியே, புதிதாய்ப்பிசைந்த மாவாகும்படிக்கு, * பழைய புளிப்புமாவைப்புறம்பே கழித்துப்போடுங்கள். * உ மோ. யஉ: யஅ, யசு.

அ. அப்படிக்குப்பழைய புளிப்புமாவோடேயல்ல, துர்க்குணம் பொல்லாப்பென்னும் புளிப்புமாவோடுமல்ல. துப்புரவு உண்மை யென்னும் புளிப்பில்லாமையோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்.

கூ. வேசிக்கள்ளருடனே கலந்திருக்கக்கூடாதென்று நிருபத்திலே உங்களுக்கு எழுதினேன்.

ய. அப்படி நான் இவ்வுலகத்தாராகிய வேசிக்கள்ளர், அல்லது பொருளாசைக்காரர், அல்லது கொள்ளைக்காரர், அல்லது விக்கிரகஆராதனைக்காரர் இவர்களைக்குறித்துப் பொதுவாய் எழுதவில்லை. அப்படியிருந்தால், நீங்கள் உலகத்தைவிட்டுப்புறப்பட்டுப்போகவேண்டியதாய் இருக்குமே.

யக. இப்பொழுதும் நான் உங்களுக்கு எழுதுகிறதென்னவென்றால், சகோதரன் என்னப்பட்ட ஒருவன் வேசிக்கள்ளன், அல்லது பொருளாசைக்காரன், அல்லது விக்கிரகஆராதனைக்காரன், அல்லது உதாசினன், அல்லது வெறியன், அல்லது கொள்ளைக்காரனானால், அவனோடே கலந்திருக்கக்கூடாது. * அப்படிப்பட்டவனுடனே கூடப்புசிக்கவுங் கூடாது. * உ தெச. ரு: சு.

யஉ. புறத்தில் இருக்கிறவர்களுக்கும் நியாயத்தீர்ப்புச் சொல்லுகிறது என்னுடைய காரியமா! உள்ளே இருக்கிறவர்களுக்கு நீங்களும் நியாயத்தீர்ப்புச் சொல்லுகிறீர்கள் அல்லவோ!

யரு. புறத்தில் இருக்கிறவர்களுக்கு, பராபரனே நியாயத்தீர்ப்புக்கொடுப்பார். ஆகையால், அந்தப்பொல்லாதவனை உங்களிடத்தில் இருந்து எடுத்துப்போடுங்கள்.

சு அதிகாரம்.

[(க) கொரிந்தர், (சு) அவிசுவாசிகள் முன்பாகத்தங்கள் சகோதரரோடே வழக்காடக்கூடாதென்றும், (கூ) அநீதிமான்கள் மோட்சம் அடையார்கள் என்றும், (யரு) நம்முடைய சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களும், (யகூ) பரிசுத்த ஆவியின் ஆலயங்களுமாய் இருக்கிறதென்றும், (யசு, யஎ) அந்த ஆலயங்கள் அசுசிப்படக்கூடாதென்றுஞ் சொல்லியது.]

உங்களில் ஒருவன் மற்றொருவனுக்கு விரோதமான காரியமுடையவனாய் இருக்கிறபொழுது, அவன் நியாயம் பெற்றுக்கொள்ளுதற்கு, பரிசுத்தவான்களிடத்திற்போகாமல், அநீதிக்காரரிடத்திலே போகத்துணிகிறதென்ன?

உ. * பரிசுத்தவான்கள் உலகத்திற்கு நியாயத்தீர்ப்புச்சொல்வார்கள் என்றறியாமல் இருக்கிறீர்களா? உலகமும் உங்களால் நியாயந் தீர்க்கப்படுவதால், அற்பவழக்குகளைத் தீர்க்க அபாத்திரராய் இருக்கிறீர்களா! * சங்கீ. சசு: யச. மத். யகூ: உஅ. லூக். உஉ: ருய. வெளி. உ: உசு. உய: ச.

ரு. தூதர்கள் நம்மால் நியாயத்தீர்ப்பைப் பெறுவார்கள் என்று அறியீர்களா? இச்சீவனுக்கு ஏற்றவைகளை நீங்கள் தீர்த்துக்கொள்ளக்கூடாதிருக்கிறதெப்படி?

ச. இச்சீவனுக்கு ஏற்றவழக்குகள் உங்களுக்கிருக்கும்பொழுது, நீங்கள் சபையினாலே அற்பமாய் எண்ணப்பட்டவர்களை வைக்கிறீர்கள்.

ரு. உங்களுக்கு வெட்கம் உண்டாகும்படி இதைச்சொல்லுகிறேன். இப்படிச்சகோ

தரனுக்கும், சகோதரனுக்கும் உண்டான வழக்கைத்தீர்க்கத்தக்க விவேகி ஒருவனாகிலும் உங்களுக்குள்ளே இல்லையோ?

சா. சகோதரனோடே சகோதரன் வழக்காடுகிறான். அப்படி அவிசுவாசிகளுக்கு முன்பாகவே செய்கிறான்.

எ. நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறதே எவ்விதத்திலுந் தப்பிதமாய் இருக்கின்றது. அப்படியன்றி, * நீங்கள் அநியாயத்தையும், சேதத்தையும் அநுபவியாதிருக்கிறதென்ன? * மத். ரு: ௩௯, ௪௰.

அ. அப்படிச்செய்யாமல், நீங்களே சகோதரருக்கே அநியாயஞ்செய்து சேதம் உண்டாக்குகிறீர்கள்.

கூ. அநியாயக்காரர் பராபரனுடைய இராச்சியத்தைச்சுதந்தரிப்பதில்லையென்று அறியாமல் இருக்கிறீர்களா! வஞ்சிக்கப்படாதிருங்கள். * வேசிக்கள்ளரும், விக்கிரக ஆராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், * கலாத். ரு: ௰௯—உக.

௰. திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் பராபரனுடைய இராச்சியத்தைச்சுதந்தரிப்பதில்லை.

௰க. (முன்னே) * நீங்களுஞ் சிலர் இப்படிப்பட்டவர்களாய் நடந்தீர்கள். இப்பொழுது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலும், நம்முடைய பராபரனுடைய ஆவியினாலுங் கழுவப்பட்டும், பரிசுத்தமாக்கப்பட்டும், நீதிமான்களாக்கப்பட்டும் இருக்கிறீர்கள். * உரோ. ௬: ௰எ. தீத். ௩: ௩—எ.

௰உ. நான் சகலத்தையும் அநுபவிக்கலாம். ஆகிலும், எல்லாந் தகுதியாய் இருக்கமாட்டாது. நான் சகலத்தையும் அநுபவிக்கலாம். ஆகிலும் நான் ஒன்றினாலும் ஆளப்படமாட்டேன்.

௰௩. போசன பதார்த்தங்கள் வயிற்றுக்கும், வயிறு போசன பதார்த்தங்களுக்கு மேற்கும். பராபரன் இதையும், அவைகளையும் அழியப்பண்ணுவார். சரீரம் வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கேயேற்றது. கர்த்தருஞ் சரீரத்திற்கேற்றவர்.

௰௪. ஆதலாற் கர்த்தரைப்பராபரன் எழுப்பினதுபோல, தம்முடைய வல்லமையினாலே நம்மையும் எழுப்புவார்.

௰ரு. உங்கள் சரீரங்கள் கிறிஸ்தவின் அவயவங்களாய் இருக்கின்றனவென்று அறியாமல் இருக்கிறீர்களா? அப்படியிருக்கக்கிறிஸ்துவினுடைய அவயவங்களை நான் எடுத்துக்கொண்டு வேசியின் அவயவங்களாக்கலாமா! அப்படிவாராதிருப்பதாக.

௰௬. அல்லது * இருவரும் ஒரே சரீரமாயிருப்பார்களென்று சொல்லியிருக்கிறபடி வேசியோடொட்டிக்கொள்ளுகிறவன் அவளுடனே ஒரே சரீரமாய் இருக்கிறானென்றும், * க மோ. உ: உ௪.

௰எ. * கர்த்தரோடொட்டிக்கொள்ளுகிறவன் (அவருடனே) ஒரே ஆவியாய் இருக்கிறானென்றும் அறியாமலிருக்கிறீர்களா? * யோவா. ௰௪: உ௩. ௰ரு: ரு. ௰எ: உக. எபே. ரு: ௩௰.

௰அ. * வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனிதன் செய்யும் எந்தப்பாவமுஞ் சரீரத்திற்குப்புறம்பே இருக்கின்றன. வேசித்தனஞ் செய்கிறவன் தன் சுய சரீரத்திற்கு விரோதமாகப்பாவஞ் செய்கிறான்.— * எபி. ௰௩: ௪.

௰கூ. அல்லது உங்கள் சரீரமானது பராபரனாலே நீங்கள் பெற்றும், உங்களில் தங்கியுமிருக்கிற * பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாய் இருக்கின்றதென்று அறியாமலிருக்கிறீர்களா! * ௩: ௰௬, ௰எ.

உ௰. அல்லாமலும், * மிகுந்த கிரயத்தினாலே நீங்கள் கொள்ளப்பட்டபடியினாலே நீங்கள் உங்களுடையவர்களல்லவே. ஆகையாற் பராபரனுக்குடையவர்களாகிய உங்கள் சரீரத்தினாலும், உங்கள் ஆவியினாலும் பராபரனுடைய மகிமையைப்பிரசித்தம் பண்ணுவீர்களாக. * க பேது. க: ௰அ,௰கூ.

எ அதிகாரம்.

[(உ) விவாகம், (௪) வேசித்தனத்துக்கு முறிவென்றும், (௰) விவாகக்கட்டு எளிதாய் முறிக்கப்படக்கூடாதென்றும், (௰அ—உ௰) அவனவனுக்குரிய தொழிலில் நிலைத்திருக்கவேண்டுமென்றும், (உரு) கன்னிகழியாமல் இருக்கவும் முகாந்தரம் இன்னதென்றும், (௩ரு) விவாகஞ் செய்யவும், செய்யாமல் இருக்கவும் முகாந்தரங்கள் இன்னவையென்றுஞ் சொல்லியது.]

நீங்கள் எனக்கெழுதின காரியங்களைக்குறித்து, நான் எழுதுகிறதென்னவென்றால், மனிதன் ஸ்திரீயைத்தொடாமல் இருந்தால் நலமாய் இருக்கும்.

உ. ஆகிலும் வேசித்தனங்களிராதபடிக்கு அவனவன் தன் மனைவியையும், அவளவள் தன் புருஷனையுங் கொள்வார்களாக.

௩. புருஷனுந் தன் மனைவிக்குச்செய்யவேண்டிய கடமையைச்செய்யக்கடவன். மனைவியுந் தன் புருஷனுக்கு அப்படியே செய்யக்கடவள்.

௪. மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கதிகாரியாயிராமற் புருஷனே யதற்கதிகாரியாயிருக்கிறான். அப்படியே புருஷனுந் தன் சுய சரீரத்திற்கதிகாரியாயிராமல் மனைவியே அதிகாரியாயிருக்கிறாள்.

ரு. ஒருவருக்கொருவர் விலகாதிருங்க[illegible] உபவாசத்திற்கும், செபம்பண்ணுதற்[illegible]

I i

சாவகாசமுண்டாய் இருக்கும்படிக்கு இருவருஞ் சிலகாலத்திற்காக விலகவேண்டுமென்று சம்மதித்தால், அப்படிச்செய்யலாம். பின்பு உங்களுக்கு விரத்தத்துவமில்லாமையால், சாத்தான் உங்களை யெழுப்பாதபடிக்கு மறுபடியுங் கூடியிருங்கள்.

௬. இதை நான் கட்டளையாகவல்ல, உத்தாரமாகச்சொல்லுகிறேன்.

௭. எல்லா மனிதரும் என்னைப்போலிருக்க விரும்புகிறேன். ஆகிலும், பராபரனாலே அவனவனுக்குச்சொந்தமான வரமுண்டு. ஒருவனுக்கு ஒருவிதமாயும், மற்றொருவனுக்கு ஒருவிதமாயுமிருக்கிறது.

௮. எப்படியும் விவாகமில்லாதவர்களையும், கைம்பெண்களையுங்குறித்து நான் சொல்லுகிறதென்னவென்றால், அவர்கள் என்னைப் போலிருந்துவிட்டால் நலமாய் இருக்கும்.

௯. ஆகிலும் அவர்கள் * விரத்தராயிருக்கக்கூடாதிருந்தால், விவாகம் பண்ணக்கடவர்கள். வேகிறதைவிட விவாகம்பண்ணுகிறது தகுதியாய் இருக்குமே. * ௧ தீமோ. ௫: ௰௫.

௰. விவாகம்பண்ணினவர்களுக்கு நானல்ல, கர்த்தர் கட்டளையிடுகிறதென்னவெனில், மனைவியானவள் தன் புருஷனைவிட்டுப்பிரியாதிருப்பாளாக.

௰௧. பிரிந்துபோனால் அவள் விவாகமில்லாதிருக்கக்கடவள். அல்லது, புருஷனுடனே ஒப்புரவாகக்கடவள். * புருஷனுந் தன் மனைவியைவிட்டுப் போகாதிருப்பானாக.— * மத்தே. ௰௯: ௬—௯.

௰௨. மற்றவர்களுக்குக்கர்த்தரல்ல, நான் சொல்லுகிறதாவது; சகோதரன் ஒருவன் அவிசுவாசியான மனைவியை யுடையவனாய் இருந்து, தன்னுடனே அவள் வாசமாயிருக்கச்சம்மதித்தால், அவளை விட்டுவிடாதிருக்கக்கடவன்.

௰௩. மனைவி யொருத்தியும் அவிசுவாசியான புருஷனை யுடையவளாய் இருந்து, தன்னுடனே அவன் வாசமாயிருக்கச்சம்மதித்தால், அவனை விட்டுவிடாதிருக்கக்கடவள்.

௰௪. என்னத்தினாலெனில், அவிசுவாசியான புருஷன் தன் மனைவியாற் பரிசுத்தமாக்கப்பட்டான். அவிசுவாசியான மனைவியும் புருஷனாற் பரிசுத்தமாக்கப்பட்டாள். இல்லாவிட்டால், உங்கள் பிள்ளைகள் அசுத்தமாய் இருக்குமே. இப்பொழுது அவைகள் பரிசுத்தமாய் இருக்கின்றனவே.

௰௫. ஆகிலும் அவிசுவாசிகளானவர்கள் பிரிந்துபோனாற் பிரிந்துபோகட்டும். சகோதரனாவது, சகோதரியாவது அப்படிப்பட்டவர்களால் அடிமையாக்கப்பட்டவர்களல்ல, சமாதானமாயிருக்கும்படிக்கே பராபரன் நம்மை யழைத்தார்.

௰௬. மனைவியே! நீ யுன் புருஷனைச்சீர்திருத்தக்கூடாதென்று எப்படி யறிந்திருக்கிறாய்! அல்லது புருஷனே! நீ யுன் மனைவியை, சீர்திருத்தக்கூடாதென்று எப்படி யறிந்திருக்கிறாய்!

௰௭. பராபரன் அவனவனுக்குப்பகிர்ந்து கொடுத்ததெப்படியோ, கர்த்தர் அவனவனை யழைத்ததெப்படியோ, அப்படியே அவனவனும் நடக்கக்கடவன். எல்லாச் சபைகளிலேயும் இப்படியே திட்டம்பண்ணுகிறேன்.

௰௮. ஒருவன் விருத்தசேதனத்தைப்பெற்றவனாய் அழைக்கப்பட்டிருந்தால், விருத்தசேதனமில்லாமையைத்தேடாமல் இருப்பானாக. ஒருவன் விருத்தசேதனமில்லாதவனாய் அழைக்கப்பட்டிருந்தால், விருத்தசேதனத்தைப்பெறாமல் இருப்பானாக.

௰௯. விருத்தசேதனத்தினால் ஒன்றுமில்லை. விருத்தசேதனமில்லாமையாலும் ஒன்றுமில்லை. பராபரனுடைய கற்பனைகளைக்கைக்கொள்ளுகிறதே பிரயோசனமாயிருக்கும்.

௨௰. அவனவனுந் தான் அழைக்கப்பட்டபொழுதிருந்த நிலைமையிலே நிலைநிற்கக்கடவன்.

௨௰௧. அடிமையாகிய நிலைமையிலே யழைக்கப்பட்டாயானால், சுவாதீனமாயிருக்கும்படி கவலைப்படாதிருப்பாயாக. சுவாதீனமாக்கப்படக்கூடுமேயானால், அப்படி அநுசரிக்கலாம்.

௨௰௨. கர்த்தரால் அழைக்கப்பட்ட அடிமையானவன் கர்த்தருக்குச்சுவாதீனனாயிருக்கிறான். அதுபோல அழைக்கப்பட்ட சுவாதீனன் கிறிஸ்துவுக்கு அடிமையாய் இருக்கிறான்.

௨௰௩. * மிகுந்த கிரயத்தினாலே கொள்ளப்பட்டீர்கள். மனிதருக்கு அடிமைகளாகாமலிருப்பீர்களாக. * ௬: ௨௰.

௨௰௪. சகோதரரே! அவனவன் அழைக்கப்பட்டபொழுதிருந்த நிலைமையிலேதானே பராபரனுக்குமுன்பாக நிலைநிற்கக்கடவன்.

௨௰௫. அன்றியும், விவாகமில்லாதவர்களுக்காகக்கர்த்தருடைய கட்டளை எனக்கில்லை. அப்படியிருந்தும் நான் உண்மையாயிருக்கிறதற்கு, கர்த்தரால் இரக்கம்பெற்றுயோசனை சொல்லுகிறேன்.

௨௰௬. ஆகையால் நான் பிரமாணிக்கிறதென்னவெனில், இப்பொழுதுண்டாயிருக்கிற இடுக்கணின் நிமித்தம் மனிதர் அப்படியே (விவாகமில்லாமல்) இருந்தால் அவர்களுக்கு நலமாய் இருக்கும்.

௨௰௭. நீ ஒரு மனைவியோடே கட்டப்பட்டிருந்தால் அவிழ்க்கப்படும்படி தேடாதிருப்பாயாக. நீ ஒரு பெண்ணில்லாதவனாயிருந்தால், ஒரு பெண்ணைத்தேடாதிருப்பாயாக.

௨௰௮. நீ விவாகம்பண்ணினாலும் பாவமில்லை. ஒரு கன்னிகாஸ்திரீ விவாகம்பண்ணினா

னும் பாவமில்லை. ஆகிலும் அப்படிப்பட்டவர்கள் (சரீரத்திலே) உபத்திரவப்படுவார்கள். அதற்கு நீங்கள் தப்பவேண்டுமென்கிறேன்.

௨௯. சகோதரரே! பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், இனிவருங் காலஞ் சுருக்கமானபடியினாலே மனைவிகளையுடையவர்கள் மனைவிகளில்லாதார்போலவும், அழுகிறவர்கள் அழாதார்போலவும்,

௩௰. சந்தோஷப்படுகிறவர்கள் சந்தோஷப்படாதார்போலவும், பொருளைக்கொள்ளுகிறவர்கள் பொருளைக்கொள்ளாதார்போலவும்,

௩௧. இவ்வுலகத்தை அநுபவிக்கிறவர்கள் அதை அநுபவியாதார்போலவுமிருக்கவேண்டும். * இவ்வுலகத்தின் வேஷங் கடந்துபோகின்றதே. * ௧ யோவா. ௨: ௰௭.

௩௨. நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன். விவாகமில்லாதவன் * கர்த்தருக்கு எப்படிப்பிரியமாயிருக்கலாமென்று கர்த்தருக்குரியவைகளுக்காகக்கவலைப்படுகிறான். * ௧ திமோத். ௫: ௫.

௩௩. விவாகம் பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படிப்பிரியமாயிருக்கலாமென்று உலகத்திற் குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான்.

௩௪. அதுபோல விவாக ஸ்திரீக்கும், கன்னிகாஸ்திரீக்கும் வித்தியாசமுண்டு. விவாகமில்லாதவள் சரீரத்திலும், ஆத்துமாவிலும் பரிசுத்தமாயிருக்கும்படிக்கு, கர்த்தருக்குரியவைகளுக்காகக்கவலைப்படுகிறாள். விவாகம்பண்ணினவள் புருஷனுக்கெப்படிப் பிரியமாயிருக்கலாமென்று உலகத்திற்குரியவைகளுக்காகக்கவலைப்படுகிறாள்.

௩௫. இதை நான் உங்கள்மேல் வலையைப் போடுகிறதற்காகச்சொல்லாமற் கனம்பொருந்தியதாயிருக்குமென்றும், தடையில்லாமற் கர்த்தரைப்பற்றிக்கொள்ளலாமென்றும் உங்கள் சுய பிரயோசனத்திற்காகவே சொல்லுகிறேன்.

௩௬. ஆகிலும் ஒருவன், தன் கன்னிகைவயது சென்றுபோனவளாகக்கலியாணமில்லாமல் இருந்தால், யோக்கியமல்ல என்றும், விவாகம் பண்ணுவிக்கவேண்டுமென்றும் நினைத்தால், தன் மனதின்படி செய்யக்கடவன். அது பாவமல்ல, விவாகம் பண்ணட்டும்.

௩௭. ஆகிலுந் தன் கன்னிகையைக்கொடுக்க அவசியத்தைக்காணாமல் தன் இருதயத்திலே உறுதியுள்ளவனும், தன் சுய சித்தத்தின்படிசெய்ய அதிகாரமுள்ளவனுமிருந்து, அவளை யப்படியே காக்கவேண்டுமென்று தன் இருதயத்திலே தீர்மானிக்கிறவனே நன்மை செய்கிறவன்.

௩௮. ஆதலால், விவாகம்பண்ணிக்கொடுக்கிறவனும் நன்மைசெய்கிறான். கொடாமலிருக்கிறவனும் அதிக நன்மைசெய்கிறான்.

௩௯. மனைவியானவள் * தன் புருஷன் உயிரோடிருக்குங்காலமளவுங் கட்டப்பட்டிருக்கிறாள். அவளுடைய புருஷன் மரித்தபின்பு அவள் எவனையாகிலுந் தன் இஷ்டப்படி விவாகம்பண்ண விடுதலையாய் இருக்கிறாள். கர்த்தருக்குட்பட்டவளாகமாத்திரம் அப்படிச்செய்யவேண்டும். * உரோ. ௭: ௨.

௪௰. அவள் விடுதலையாகவே யிருந்துவிட்டால், என்னுடைய யோசனையின்படி அதிக பாக்கியவதியாயிருப்பாள். என்னிடத்திலும் பராபரனுடைய ஆவி யுண்டென்றெண்ணுகிறேன்.

௮ அதிகாரம்.

[(௧) விக்கிரகங்களுக்குப்படைக்கப்பட்டவைகளைச்சாப்பிடக்கூடாதென்றும், (௮, ௯) நம்முடைய சுவாதீனத்தைத்துர்வகையாய்க்கையாடி, சகோதரருக்கு விதனத்தை உண்டுபண்ணக்கூடாதென்றும், (௰௧) நம்முடைய அறிவை அன்பினாலே கட்டிவைக்கவேண்டுமென்றுஞ் சொல்லியது.]

* விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைக்குறித்து, நாமெல்லாரும் அறிவுள்ளவர்களென்று அறிந்திருக்கிறோம். அறிவுமாத்திரம் இறுமாப்பாயிருக்கச்செய்கின்றது. அன்பே எழுப்புதற்கேதுவாயிருக்கிறது. * அப்போ. ௰௫: ௨௰.

௨. ஆகையால், * தன்னை யறிவுள்ளவனென்று (இறுமாப்பாய்) எண்ணுகிற ஒருவன் தான் அறியவேண்டிய பிரகாரமாக ஒன்றும் அறிந்தவனல்ல. * கலா. ௬: ௩.

௩. பராபரனிடத்தில் அன்பாய் இருக்கிறவனே * அவரால் அறிந்துகொள்ளப்படுகிறான். * கலாத். ௪: ௯.

௪. ஆனதால், விக்கிரகங்களுக்குப்படைக்கப்பட்டவைகளைப் புசிக்கிறதைக்குறித்து, நாம் அறிந்திருக்கிறதென்னவெனில், உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லை. அல்லாமலும் ஒருவரேயன்றி, வேறொரு தேவனுமில்லை.

௫. வானத்திலேயும், பூமியிலேயுந் தேவர்களென்னப்பட்டவர்களுண்டு. இப்படியநேக தேவர்களும் அநேக கர்த்தர்களும் உண்டாயிருந்தாலும்,

௬. நமக்குப்பிதாவாகிய ஒரே தேவனுண்டு. அவரிலிருந்து சகலமும் உண்டாயிருக்கின்றன. அவரிடத்தில் நாமுமிருக்கிறோம். இயேசுக்கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தாவும் நமக்குண்டு. அவராலே சகலமும் உண்டாயிருக்கின்றன. அவராலே நாமுமிருக்கிறோம்.

௭. அப்படியிருந்தும் இந்த அறிவு எல்லாரிடத்திலுமில்லை. ஆனாற் சிலர் இன்

வரைக்கும் விக்கிரகத்தையும் (ஒரு தேவ னென்று) நினைத்து, விக்கிரகத்திற்குப்ப டைக்கப்பட்டதைப்புசிக்கிருர்கள். அதிஞ லே பெலஈனமாயிருக்கிற அவர்களுடைய மனது அசுசிப்படுகின்றது.

அ. * போசனமானது நம்மைப்பராபர னுக்குகந்தவர்களாக்கமாட்டாது. என்னத் திஞலெனிற் புசித்தால் நாம் பெருகுவது மில்லை. புசியாதிருந்தால் நாம் குறைவது மில்லையே. * உரோ. யச: யஎ.

கூ. ஆகிலும் இதைக்குறித்து, * உங்களுக் குண்டாயிருக்கிற அதிகாரத்திஞலே பெல ஈனருக்கு, தவறுதல் வாராதபடிக்குப்பார் ப்பீர்களாக. * கலா. ரு: யங.

ய. எப்படியென்ருல், அறிவுள்ள உன்னை யொருவன் விக்கிரகக்கோவிலிலே போசன பந்தியிருக்கக்கண்டால், பெல ஈனஞயிருக் கிற அவனுடைய மனது விக்கிரகங்களுக் குப்படைக்கப்பட்டவைகளை, புசிக்கிறதற்கு எழுப்பப்படுமெல்லவோ?

யக. பெல ஈனஞகிய உன் சகோதரனுக் காகக் * கிறிஸ்து மரித்தாரே! அவன் உன் னுடைய அறிவிஞலே கெட்டுப்போகலா மா! * உரோ. யச: யரு.

யஉ. இப்படிச்சகோதரருக்கு விரோதமா கப்பாவஞ்செய்து, பெலவீனமான அவர்க ளுடைய மனதைக்காயப்படுத்துகிறதிஞ லே நீங்கள் கிறிஸ்துவுக்கே விரோதமாகப் பாவஞ்செய்கிறீர்கள்.

யங. ஆனபடியிஞலே * போசனம் என் சகோதரனுக்குக் கேடுவருவதற்கேதுவா ஞல், என் சகோதரனுக்குக்கேடுவராதப டிக்கு, என்றைக்கும் இறைச்சியைப்புசிக்க மாட்டேன். * உரோ. யச: உக.

கூ அதிகாரம்.

[(க) பவுல் தனக்குண்டான சுவாதீனம் இன் னதென்றும், (எ) போதகர் சுவிசேஷத் தைக்கொண்டு ஜீவனம் பண்ணவேண்டு மென்றும், (யரு) அவன் அந்த நியாயத்தை அநுசரிக்காமல், (யஅ) அவர்களுக்குத்தன் னைக்குறித்துச்செலவில்லாமலும், (உஉ) அ ற்பமானவைகளிலே தான் ஒருத்தருக்கும் விதனமுண்டாக்காமலும் இருந்தானென் றும், (உச) நம்முடைய ஜீவன் பந்தய ஓட்டம்போலிருக்கிறதென்றும் சொல்லி யது.]

நான் அப்போஸ்தலனல்லவா! நான் சுவாதீனனல்லவா? நான் நம்முடை ய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைத்தரி சிக்கவில்லையா? கர்த்தராலே நீங்கள் * என் னுடைய கிரியைக்குத் (திருட்டாந்தங்க ளாய்) இருக்கிறீர்களல்லவா? * ங: கூ, ய.

. நான் மற்ற மனிதருக்கு அப்போஸ்த லஞயிராவிட்டாலும், உங்களுக்கல்லவோ அப்போஸ்தலஞயிருக்கிறேன். கர்த்தரா லே நீங்கள் * என் அப்போஸ்தல ஊழி யத்தின் முத்திரையாய் இருக்கிறீர்களே. * உ கொரிந். ங: உ, ங.

ங. என்னைக்குறித்துத்தீர்ப்புச்சொல்லுகிற வர்களுக்கு நான் என்ன உத்தரவு கொடுக் கிறேனெனில்,

ச. (சபையின் செலவிஞலே) போசனபா னம்பண்ண எங்களுக்கு அதிகாரமில்லை யோ?

ரு. மற்ற அப்போஸ்தலரும், கர்த்தருடை ய சகோதரரும், * கேபாவுஞ் செய்கிறது போல, நாங்களும் மனைவியாகிய ஒரு கிறி ஸ்தவளைக்கூட்டிக்கொண்டு திரிகிறதற்கு, எங்களுக்கதிகாரமில்லையோ? * மத். அ: யச, யரு.

சா. அல்லது கைவேலை செய்யாதிருக்கிற தற்கு எனக்கும், பருனபாவுக்கும் மாத்தி ரம் அதிகாரமில்லையோ!

எ. எக்காலத்திலாகிலுந் தன் சொந்தப்ப ணத்தைச்செலவழித்து, எவன் தண்டிலே சேவகம்பண்ணுவான்? எவன் திராட்சத் தோட்டமுண்டாக்கி, அதின் கனிகளிற் சில புசியாமலிருப்பான்? அல்லது எவன் ஆடுக ளை மேய்த்து, அதின் பாலிலே கொஞ்சஞ் சாப்பிடாதிருப்பான்?

அ. இவைகளை மனிதர் நடக்கையின்படி மாத்திரஞ் சொல்லுகிறேனே? நியாயப்பிர மாணமும் இப்படிச்சொல்லுகிறதில்லையா!

கூ. *போரடிக்கிற மாட்டின் வாயைக் கட்டாதிருப்பாயாகவென்று மோசேயின் பிரமாணத்திலே எழுதியிருக்கிறதே பரா பரன் மாடுகளுக்காக (மாத்திரம்) விசாரிக் கிருரா? * ரு மோ. உரு: ச. க தீமோ. ரு: யஅ.

ய. அது விசேஷமாய் நமக்காகச்சொல்லி யிருக்கிறதில்லையா! உழுகிறவன் பலனில் நம்பிக்கையோடே உழவும், போரடிக்கிற வன் தான் நம்பின பலனுக்குப்பங்குள்ளவ ஞவேனென்கிற நம்பிக்கையோடே போர டிக்கவும் வேண்டியபடியால், அது நமக் காகவே எழுதியிருக்கின்றது.

யக. * நாங்கள் உங்களுக்கு ஞான நன் மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீர நன் மைகளை அறுத்தால், அது பெரிய காரிய மாயிருக்குமா! * கலாத். சா: சா.

யஉ. வேறுபேர்கள் உங்களிடத்திலிருந்த அதிகாரத்தை அநுசரித்துக்கொண்டிருக் க, அவர்களிலும் நாங்கள் அதிகமாய் அப் படிச்செய்யலாமல்லவா! அப்படியிருந்தும் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையையும் உண்டாக்காதபடிக்கு, * நா ங்கள் இந்த அதிகாரத்தை அநுபவித்துக் கொள்ளாமல் எல்லாவிதமான பாடும் படுகி றோம். * ச: யக, யஉ. உ கொரி. யக: உய.

௰௩. * கோயிலில் ஊழியஞ்செய்கிறவர்
கள் கோயிலுக்குரியதிற் புசிக்கிறார்களென்
றும், பீடத்தில் ஆராதனை செய்கிறவர்கள்
பீடத்திலுள்ளவைகளிற் பங்கு அடைகிறார்க
ளென்றும் அறியாமல் இருக்கிறீர்களா?
* ௫ மோ. ௰௮: ௧—௪.
௰௪. அதுபோல, கர்த்தரும் தமது * சுவி
சேஷத்தை யறிவிக்கிறவர்களுக்குச் சுவிசே
ஷத்தினாலே பிழைப்பு வரவேண்டுமென்று
கட்டளையிட்டார். * லூக். ௰: ௭, ௮.
௰௫. அப்படியிருந்தும் நான் இவைகளில்
ஒன்றையும் அநுசரித்துக்கொள்ளவில்லை.
இப்படி நான் மேன்மை பாராட்டுகிறதை
ஒருவன் அவத்தமாக்குகிறதிலுஞ் சாகிற
தே எனக்குப்பிரியமாயிருக்கும். ஆதலால்,
அப்படி இனிமேல் அநுசரிக்கவேண்டுமென்
று நான் இவைகளை எழுதினதுமில்லை.
௰௬. சுவிசேஷத்தை நான் பிரசங்கிக்கிற
தினாலே நான் மேன்மை பாராட்டக்கூடா
து. அது எனக்குண்டான கடமையாயி
ருக்கின்றதே. மேலுஞ் சுவிசேஷத்தை நா
ன் பிரசங்கம்பண்ணாமலிருந்தால், ஐயோ!
எனக்கு வேதனை வருமே.
௰௭. அன்றியும் நான் மனோச்சாகமாய்
அப்படிச்செய்தால், எனக்குப்பலனுண்டு.
மனோச்சாகமில்லாதவனாயிருந்தாலும், உக்
கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்
பட்டிருக்கிறது.
௰௮ ஆனதால், எனக்கு என்ன பலனுண்
டு? நான் சுவிசேஷத்தைப்பிரசங்கிக்கையில்
அதில் எனக்குண்டாயிருக்கிற அதிகாரத்
தை அநுசரியாமற் கிறிஸ்துவின் சுவிசே
ஷத்தைச்செலவில்லாமல் ஸ்தாபிப்பேன்.
அதுவே எனக்குப்பலன்.
௰௯. ஆகையால், நான் எல்லாரையும் வி
ட்டுச்சுவாதீனனாயிருந்தும், நான் அதிக
சனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்ப
டிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் ஊழி
யக்காரனாக்கினேன்.
௨௰. அந்தப்படி யூதரை ஆதாயப்படுத்
திக்கொள்ளத்தக்கதாக, * யூதருக்கு யூத
னைப்போலவும், நியாயப்பிரமாணத்திற்குக்
கீழானவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளத்
தக்கதாக நியாயப்பிரமாணத்திற்குக்கீழா
னவனைப்போலவுமானேன். * அப். ௰௬: ௩.
௨௧. நியாயப்பிரமாணமில்லாதவர்களை ஆ
தாயப்படுத்திக்கொள்ளத்தக்கதாக, அவர்
களுக்கு * நியாயப்பிரமாணமில்லாதவனைப்
போலவுமானேன். அப்படியிருந்தும் நான்
பராபரனுக்குமுன்பாக நியாயப்பிரமாண
மில்லாதவனாயிராமல், விசேஷமாய்க்கிறிஸ்
துவின் நியாயப்பிரமாணத்திற்குள்ளானவ
னாயிருக்கிறேன். * உரோ. ௨: ௰௨—௰௪.
௨௨. மேலும் பெலவீனரை ஆதாயப்படு
த்திக்கொள்ளத்தக்கதாகப் * பெலவீனருக்
குப்பெலவீனனைப்போலானேன். நான் எப்
படியுஞ் சிலரை † இரட்சிக்கும்படிக்கு எல்
லாருக்கும் எல்லாவிதமுமானேன். * ௯: ௪,
௨. † ௰: ௩௩.
௨௩. சுவிசேஷத்தின் பலனுக்கு நான் உ
டன்பங்காளனாகும்படிக்கு, சுவிசேஷத்தி
னிமித்தமே இப்படிச்செய்கிறேன்.
௨௪. ஓடுதற்கு ஏற்றசாலையில் எல்லாரும்
ஓடுவார்கள். ஆகிலும், ஒருவன்மாத்திரம்
பந்தயப்பொருளைப்பெறுவானென்று அறி
யாமல் இருக்கிறீர்களா? நீங்கள் (பந்தயப்
பொருளைப்) பிடிக்கத்தக்கதாகவே ஓடுங்
கள்.
௨௫. மேலும், போராடுகிறயாவரும் அழி
வுள்ள கிரீடத்தைப்பெறும்படிக்கு, எல்லா
இச்சைகளையும் அடக்கிக்கொள்வார்கள்.
நாம் * அழிவில்லாத கிரீடத்தைப்பெறும்
படிக்கு அப்படிச்செய்கிறோம். * ௨ திமோ.
௪: ௮. அதி. ௨: ௰.
௨௬. ஆதலால், * நான் நிச்சயமில்லாமல்
ஓடேன். நான் ஆகாசத்தையடித்துச்சிலம்
பம் பண்ணேன். * திமோ. ௨: ௫.
௨௭. ஆதலால், மற்றவர்களுக்குப்பிரசங்
கம்பண்ணுகிற நான்தானே அபாத்திரனா
ய்ப்போகாதபடிக்கு, என்சரீரத்தை ஒடுக்
கிக்கீழ்ப்படுத்துகிறேன்.

௰ அதிகாரம்.

[(௧) யூதர்கள் ஆசரித்துவந்த சடங்குகள்.
(௬) நாம் அநுபவிக்கிற சடங்குகளுக்கு
அடையாளங்களென்றும், (௰௧) அவர்கள்
பட்டபாடுகள் நமக்குத்திருஷ்டாந்தங்கள்
என்றும், (௰௪) விக்கிராகாராதனைக்கு வில
கவேண்டியதென்றும், (௨௧) நாம் கர்த்த
ருடைய பந்தியைப்பேய்களின் பந்தியாக்
கக்கூடாதென்றும், (௨௪) அற்பமானகாரி
யங்களிலும், நம்முடைய சகோதரருடைய
நன்மையை நோக்கவேண்டுமென்றுஞ்சொ
ல்லியது.]

இப்படியிருக்க, சகோதரரே! நீங்கள்
எவைகளை நினைக்கவேண்டுமென்றி
ருக்கிறேனென்றால், நம்முடைய பிதாக்கள்
எல்லாரும் * மேகத்திற்குக்கீழாய் இருந்
தார்கள். எல்லாரும் † சமுத்திரத்தின் வழி
யாய் நடந்து வந்தார்கள். * ௨ மோ.
௰௩: ௨௧, ௨௨. † ௨ மோ. ௰௪: ௨௨.
௨. எல்லாரும் மோசேயுக்குள்ளாக மே
கத்தினாலும், சமுத்திரத்தினாலும் ஞானஸ்
நானம் பண்ணப்பட்டார்கள்.
௩. * எல்லாரும் ஒரே ஞானபோசனபதா
ர்த்தத்தைப்புசித்தார்கள். * ௨ மோசே
௰௬: ௰௫.
௪. கிறிஸ்து என்னும் ஞானக்கல்மலையவர்
களோடேகூடச்சென்றதே. அந்த ஞா
னக்கல்மலையின் தண்ணீரை யெல்லாரு

குடித்தார், இப்படியே * ஞானபானம் பண்ணினார்கள். * ௨ மோ. ௰௭: ௬.

௫. அப்படியிருந்தும். அவர்களில் அதிகமான பேர்களிடத்திற் பராபரன் பிரியமாயிருக்கவில்லை.

௬. * வனாந்தரத்திலே யவர்கள் அழிக்கப்பட்டார்களே. அவர்கள் † இச்சித்தது போல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இந்தச்சங்கதிகள் நமக்குத் திருட்டாந்தங்களாய் இருக்கின்றன. * ௪ மோ. ௨௬: ௬௪, ௬௫. † ௪ மோ. ௰௧: ௪.

௭. ஆனதாற் * ஜனங்கள் புசிக்கவும், குடிக்கவும் உட்கார்ந்து விளையாட எழுந்திருந்தார்களென்றெழுதியிருக்கிறபடி அவர்களிற் சிலர் விக்கிரக ஆராதனைக்காரரானது போல, நீங்கள் அப்படிப்பட்டவர்களாகாதிருங்கள். * ௨ மோ. ௩௨: ௬.

௮. அவர்களிற் சிலர் * வேசித்தனம்பண்ணி, ஒரேநாளில் இருபத்துமூவாயிரம்பேர் விழுந்துபோனார்கள். அதுபோல நாம் வேசிமார்க்கமாய்ப் போகாதிருப்போமாக. * ௪ மோ. ௨௫: ௧—௯.

௯. அவர்களிற் சிலர் கிறிஸ்துவைப்*பரிட்சைபார்த்து, † பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள். அதுபோல நாம் கிறிஸ்துவைப் பரிட்சைபாராதிருப்போமாக. * ௨ மோ. ௰௭: ௨—௭ சங். ௭௮: ௰௮—௫௬. ௯௫: ௯. ௱௬: ௰௪. † ௪ மோ. ௨௧: ௬.

௰. அவர்களிற் சிலர் * முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள். அதுபோல நீங்கள் முறுமுறுதிருப்பீர்களாக. * ௪ மோ. ௰௬: ௪௧.

௰௧. திருட்டாந்தங்கள் உண்டாகத்தக்கதாக இவைகளெல்லாம் அவர்களுக்குச்சம்பவித்து, உலகத்தின் கடைசிக்காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி யெழுதப்பட்டிருக்கின்றன.

௰௨. ஆனபடியினாலே (தன்னை) * நிற்கிறவனென்றெண்ணுகிறவன் விழாதபடிக்குப் பார்க்கக்கடவன். * உரோ. ௰௧: ௨௰.

௰௩. மனிதருக்குரிய உபத்திரவமேயல்லாமல், வேறேயுபத்திரவம் இதுவரைக்கும் உங்களைப்பிடிக்கவில்லை. பராபரன் * உண்மையுள்ளவராய் இருக்கிறார். ஆதலால், இனிமேலும் நீங்கள் சகிக்கிறதற்குமேலான உபத்திரவத்தை அவர் உங்களுக்கு வரப்பண்ணாமல், நீங்கள் தாங்கத்தக்கதாக உபத்திரவத்தையல்லாமற் போக்கையும் உண்டாக்குவார். * ௨ தெச. ௩: ௩.

௰௪. ஆகையால், எனக்குப்பிரியமானவர்களே! விக்கிரக ஆராதனைக்குவிலகி யோடுவீர்களாக.

௰௫. உங்களைப்புத்திமான்களென்றெண்ணிப் பேசுகிறேன். ஆனதால், நான் சொல்லுகிறதை நீங்களே நிதானித்துப்பாருங்கள்.

௰௬. நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரங் கிறிஸ்துவினுடைய இரத்தந்துடனே * ஐக்கப்படுதற்கு ஏற்றதல்லவோ? நாம் பிட்கிற அப்பங் கிறிஸ்துவினுடைய சரீரத்துடனே ஐக்கப்படுதற்கு ஏற்றதல்லவா! * மத். ௨௬: ௨௬—௨௮.

௰௭. ஒரே அப்பமிருக்க, நாமெல்லாரும் அந்த ஒரே அப்பத்திற்குப்பங்காளிகளானபடியினாலே அநேகரான நாம் * ஒரேசரீரமாயிருக்கிறோம். * உரோ. ௰௨: ௫.

௰௮. புறம்பான இஸ்ரவேலரைப்பாருங்கள். பலிகளைப்புசிக்கிறவர்கள் பலிபீடத்தோடே ஐக்கமாய் இருக்கிறார்களல்லவோ!

௰௯. இதினாலே யென்ன சொல்லுகிறேன். விக்கிரகம் ஒருபொருளென்று சொல்லுகிறேனோ? அல்லது விக்கிரங்களுக்குப்படைக்கப்பட்டது ஒருபொருளென்று சொல்லுகிறேனோ?

௨௰. இல்லையே. அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளைப்பராபரனுக்கல்ல, * பேய்களுக்குப்பலியிடுகிறார்களென்றே சொல்லுகிறேன். நீங்கள் பேய்களோடே ஐக்கமாய் இருக்கவேண்டுமென்று நான் விரும்புகிறதில்லை. * ௫ மோ. ௩௨: ௰௭.

௨௧. நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும், பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக்கூடாதே. நீங்கள் கர்த்தருடைய போசனபந்திக்கும், பேய்களுடைய போசனபந்திக்கும் பங்காளிகளாய் இருக்கக்கூடாதே.

௨௨. அல்லது நாம் கர்த்தருக்குக்கோபத்தை மூட்டலாமா? அவரிலும் நாம் பெலவான்களாய் இருக்கிறோமா!

௨௩. * எல்லாப்பதார்த்தங்களையும் நான் அநுபவிக்கலாம். ஆகிலும் எல்லாம் பிரயோசனமாய் இருக்கிறதில்லை. எல்லாப்பதார்த்தங்களையும் நான் அநுபவிக்கலாம். ஆகிலும், எல்லாம் எழுப்புதற்கு ஏதுவாயிராது. * ௬: ௰௨.

௨௪. எவனுந் * தனக்காகமாத்திரம் பிரயோசனத்தைத்தேடாமல், மற்றவனுக்காகவும் அப்படித்தேடக்கடவன். *பிலி. ௨: ௪.

௨௫. * பூமியும், அதிலுள்ள நிறைவுயாவுங் கர்த்தருடையதென்பதின்படி, * சங். ௨௪: ௧.

௨௬. உங்கள் மனது அடைந்த அறிவினாலே நீங்கள் ஒன்றையும் விசாரியாமற் கடைசியிலே விற்கப்படுகிற எதையும் வாங்கிப் புசியுங்கள்.

௨௭. அல்லாமலும், அவிசுவாசிகளில் ஒருவன் உங்களைப்போசனபந்திக்கு அழைக்கும்பொழுது, நீங்கள் போக மனதுண்டானால் உங்கள் மனது அடைந்த அறிவினாலே ஒன்றையும் விசாரியாமல் உங்கள் முன்வைக்கப்பட்ட எதையும் புசியுங்கள்.

௨௮. அப்பொழுது இது விக்கிரகங்களுக்
குப்படைக்கப்பட்டதென்று ஒருவன் உங்
களுக்குச்சொன்னால், அப்படி அறிவித்தவ
னிமித்தமும், மனதறிவினிமித்தமும் புசியா
திருங்கள். பூமியும், அதிலுள்ள நிறைவு
யாவும் *கர்த்தருடையதே.

௨௯. உன்னுடைய மனதைக்குறித்தல்ல,
மற்றொருவனுடைய மனதைக்குறித்தேசொ
ல்லுகிறேன். ஆகிலும், என்னுடைய சுவா
தீனம் மற்றொருவனுடைய மனதினிமித்தந்
குற்றமாய் எண்ணப்படவேண்டுவதென்ன?

௩௰. மேலும், நான் அதைத்தோத்திரிப்
புடனே அநுபவித்தால், * தோத்திரித்து
அநுபவிக்கிறதற்காக நான் தூஷணிக்கப்
படவேண்டுவதென்ன? * ௧ தீமோ. ௪: ௪.

௩௧. அதினாலேதானே நீங்கள் * புசித்தா
லும், பானம்பண்ணினாலும், எதைச்செய்
தாலுஞ் சகலத்தையும் பராபரனுக்குப்புக
ழ்ச்சியுண்டாகச்செய்யுங்கள். * கொலோ.
௩: ௰௭.

௩௨. நான் எனக்கு (மாத்திரம்) பிரயோ
சனத்தைத்தேடாமல், அநேகரும் * இரட்
சிக்கப்படும்படிக்கு அவர்களுக்காகவும் பிர
யோசனத்தைத்தேடிக்கொண்டு, எவ்விதத்
திலும், எல்லாருக்கும் பிரியமாய்நடக்கிறது
போல, * ௯: ௨௨.

௩௩. நீங்களும், யூதருக்கும், கிரேக்கருக்
கும், பராபரனுடைய சபைக்கும் * விக்
னம் உண்டாகாதபடிக்கு, எச்சரிக்கையாய்
இருப்பீர்களாக. * உரோ. ௰௪: ௰௩.

௰௧ அதிகாரம்.

[(௧) சபைகூடியிருக்கும்போது, (௪) புரு
ஷர்கள் தங்கள் தலைகளை மூடிக்கொண்ட
தற்காகவும், (௬) ஸ்திரீகள் தங்கள் தலை
களைமூடிக்கொள்ளாததற்காகவும், (௰௭) அ
வர்களுடைய கூட்டங்கள் தீமைக்கு ஏது
வாய், (௨௧) கர்த்தருடைய இராப்போச
னத்தோடே தங்கள் விருந்துகளைச்சேர்த்
து, அதை அசுசிப்படுத்தினதற்காகவும் அ
வர்களைக்கடிந்துகொண்டு, (௨௩) இராப்
போசனவொழுங்கு இன்னதென்று கூறி
யது.]

நான் கிறிஸ்துவைப்பின் பற்றுகிறது
போல, * நீங்கள் என்னைப்பின்பற்
றுகிறவர்களாய் இருக்கக்கடவீர்கள். *
௪: ௰௬.

௨. சகோதரரே! நீங்கள் எல்லாவிதத்தி
லும் என்னை நினைத்துக்கொண்டு, நான்
உங்களுக்கு ஒப்புவித்தமுறைமைகளின்படி
யே அவைகளைக்கைக்கொண்டிருக்கிற தற்
காக உங்களைப்புகழுகிறேன்.

௩. இப்பொழுது நீங்கள் என்ன அறிய
வேண்டும் என்றிருக்கிறேனென்றால் கிறிஸ்
துப்புருஷனானவனுக்குத்தலையாய் இருக்கி
றார். * புருஷன் மனைவிக்குத்தலையாய் இருக்
கிறான். † பராபரன் கிறிஸ்துவுக்குத்தலை
யாயிருக்கிறார். * எபே. ௫: ௨௩. † ௩: ௨௩.

௪. எந்தப்புருஷனாகிலுஞ் செபம்பண்ணி
அல்லது தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபொ
ழுது தன் தலையைமூடிக்கொண்டிருந்தால்,
தன் தலையைக்கனவீனப்படுத்துவான்.

௫. ஸ்திரீயானவள் செபம்பண்ணுகிற அல்
லது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபொழுது
தலையை மூடிக்கொள்ளாமலிருந்தால், தன்
தலையைக்கனவீனப்படுத்துவாள். அவள் தலை
சிரைக்கப்பட்டதுபோலிருக்குமே.

௬. ஆனதால், ஸ்திரீயானவள் மூடிக்கொள்
ளாவிட்டால், மயிரைக்கத்தரித்துப்போடக்
கடவள். அப்படி மயிர் கத்தரிக்கப்படுகிற
து, அல்லது, சிரைக்கப்படுகிறது ஸ்திரீக்கு
வெட்கமானபடியினாலே, மூடிக்கொண்டி
ருக்கக்கடவள்.

௭. * புருஷனானவன் பராபரனுடைய சா
யலுமாய், மகிமையுமாயிருக்கிறபடியால்,
தன்தலையை மூடிக்கொள்ள வேண்டுவதில்
லை. * ௧ மோ. ௧: ௨௬, ௨௭.

௮. மேலும், புருஷன் ஸ்திரீயினாலே தோ
ன்றினவனல்ல. * ஸ்திரீயே புருஷனால்
தோன்றினவள். * ௧ மோ. ௨: ௨௨.

௯. அல்லாமலும், புருஷன் ஸ்திரீக்காகச்
சிருஷ்டிக்கப்பட்டவனல்ல, * ஸ்திரீயே புரு
ஷனுக்காகச்சிருஷ்டிக்கப்பட்டவள். * ௧
மோ. ௨: ௰௮.

௰. ஆகையால், ஸ்திரீயானவள் புருஷனு
டைய மகிமையாயிருக்கிறதுமல்லாமல், தூ
தர்களினிமித்தம் அவள் தன் தலையின்மேல்
மூடிவைக்கவேண்டும்.

௰௧. ஸ்திரீ புருஷனாலிருக்கிறதுபோலப்பு
ருஷனும் ஸ்திரீயினாலே யிருக்கிறதால்,

௰௨. கர்த்தருடைய முறைமையின்படி
ஸ்திரீயில்லாமற் புருஷனுமில்லை. புருஷ
னில்லாமல் ஸ்திரீயுமில்லை. சகலமும் பரா
பரனாலே யிருக்கின்றது.

௰௩. ஸ்திரீயானவள் பராபரனைத்தொழுது
செபம் பண்ணுகையில், தன்தலையை மூடிக்
கொள்ளாமலிருக்கிறது இலக்கணமாயிருக்
குமோ என்று உங்களுக்குள்ளே நீங்களே
யெண்ணிக்கொள்ளுங்கள்.

௰௪. அல்லது புருஷன் மயிரை நீளமாய்
வளர்த்தால், அது அவனுக்குக்கனவீனமா
யிருக்கின்றதென்றும்,

௰௫. ஸ்திரீ தனக்கு முக்காடாக மயிர்கொ
டுக்கப்பட்டிருக்கிறபடியினாலே, தன் மயி
ரை நீளமாய் வளர்த்தால், அது அவளுக்கு
மகிமையாயிருக்கிறதென்றுஞ் சுபாவமே
உங்களுக்குப்போதிக்கிறதில்லையோ?

௰௬. ஆகிலும், (இதைக்குறித்து) ஒருவன்
வக்குவாதஞ் செய்யப்பிரியனாயிருந்தால்
எங்களுக்கும், பராபரனுடைய சபைகளுக்

கும் அப்படிப்பட்ட வழக்கமில்லையென்றறியக்கடவன்.

௰௭. பின்னும் நான் அறிவிக்கிறதென்னவெனில், நீங்கள் கூடிவருதல் அதிக நன்மைக்கல்ல, அதிக தீமைக்கே ஏதுவாயிருக்கின்றது. அதைக்குறித்து நான் உங்களைப்புகழக்கூடாது.

௰௮. என்னவென்றால், முதலாவது நீங்கள் சபையில் வீட்டிலே கூடிவந்திருக்கும்பொழுது, உங்களிற் பிரிவினைகளுண்டென்று கேள்விப்படுகிறேன்.

௰௯. பாத்திரவான்கள் வெளியாகும்படிக்கு, * மார்க்கபேதகங்களும் உங்களிலுண்டாயிருக்கவேண்டியதால், நான் (கேள்விப்பட்டவைகளில்) சில நம்புகிறேன். * மத். ௰௮: ௭.

௨௰. ஆனதால், நீங்கள் ஏகமாய்க்கூடிவந்து சாப்பிடுங்காலத்தில், ஒருவன் பசியாயிருக்கவும், ஒருவன் திருத்தியடையவுந் தக்கதாக, முன்னே அவனவன் தன்தன் சொந்தப்போசனத்தைப்பண்ணுவான்.

௨௧. அப்படிச்செய்கிறது கர்த்தருடைய இராப்போசனம் பண்ணுதலல்லவே.

௨௨. அதென்ன, போசனபானம் பண்ணுதற்கு உங்களுக்கு வீடுகளில்லையா! அல்லது, பராபரனுடைய சபையின்வீட்டை அசட்டைபண்ணிப்போசனம் இல்லாதவர்களை வெட்கப்படுத்துகிறீர்களா! உங்களைக்குறித்து நான் என்னசொல்லலாம்? உங்களைப்புகழலாமா? அதைக்குறித்து நான் உங்களைப் புகழக்கூடாது.

௨௩. நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் * கர்த்தராலே அடைந்தேன். என்னவெனில், † கர்த்தராகிய இயேசு தம்மைக்காட்டிக்கொடுக்கப்பட்ட அன்றிராத்திரியிலே அப்பத்தை யெடுத்துக்கொண்டு, தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு நீங்கள்வாங்கிப் புசியுங்கள். * ௰௫: ௩. கலாத். ௧: ௰௨. † மத். ௨௬: ௨௬—௨௮. மாற். ௰௪: ௨௨—௨௪. லூக். ௨௨: ௰௯, ௨௰.

௨௪. இது உங்களுக்காகப்பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கின்றது. என்னை நினைத்துக்கொள்ளும்படிக்கு இப்படிச்செய்யுங்களென்றார்.

௨௫: அந்தப்படியே அவர் இராப்போசனம் பண்ணினபின்பு, பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு, இந்தப்பாத்திரம் என்னுடைய இரத்தத்தினாலே, புதிய உடம்படிக்கையாயிருக்கின்றது. நீங்கள் பானம்பண்ணும்பொழுதெல்லாம் என்னை நினைத்துக் கொள்ளும்படிக்கு இப்படிச்செய்யுங்கள் என்றார்.

௨௬. ஆகையால், கர்த்தர் வருமளவும் நீங்களிந்த அப்பத்தைப்புசித்து, இந்தப்பாத்திரத்திற் பானம்பண்ணும் பொழுதெல்லாம் அவருடைய மரணத்தைக்கூறுகிறீர்கள்.

௨௭. இப்படியிருக்க, எவனாகிலுங் கர்த்தருடைய அப்பத்தையாவது, பாத்திரத்தையாவது அபாத்திரமானவிதமாய்ப்போசனபானம் பண்ணினால், அவன் கர்த்தருடைய சரீரத்திற்கும், இரத்தத்திற்குங் குற்றமுள்ளவனாயிருப்பான்.

௨௮. அந்தப்படி அபாத்திரமானவிதமாய் அதைப்போசனபானம் பண்ணுகிறவன் கர்த்தருடைய சரீரத்தை விசேஷித்துக்கொள்ளாமல், தனக்கு ஆக்கினைவரும்படி போசனபானம் பண்ணுகிறபடியினாலே,

௨௯. எவனாகிலுந் * தன்னைத்தான் சோதித்தறிந்து பின்பு, இந்த அப்பத்தைப்புசித்து, இந்தப்பாத்திரத்திலே பானம்பண்ணக் கடவன். * ௨ கொரி. ௰௩: ௫. கலாத். ௬: ௪.

௩௰. அந்தக்குற்றத்தினாலேதானே உங்களில் அநேகர் பலவீனருமாய், வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். வேறநேகரும் இறந்துபோயிருக்கிறார்கள்.

௩௧. * நம்மைநாமே வகையறுத்துப்பார்த்தால், நாம் அப்படித்தண்டிக்கப்படுவதில்லை. * சங். ௩௨: ௫. ௧ யோவா. ௧: ௯.

௩௨. நாம் தண்டிக்கப்பட்டிருக்க உலகத்தோடே நித்திய ஆக்கினைக்குள்ளாக்கப்படாதபடிக்கு, கர்த்தராலே தண்டிக்கப்படுகிறோம்.

௩௩. ஆகையால், என் சகோதரரே! நீங்கள் போசனம்பண்ணக்கூடிவருகிறபொழுது, ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள்.

௩௪. ஒருவனுக்குப்பசியிருந்தால், நீங்கள் ஆக்கினைக்கேதுவாகக்கூடி வாராதபடிக்கு, அவன்வீட்டிலே சாப்பிடக்கடவன். மற்றக்காரியங்களை நான் வரும்பொழுது திட்டம்பண்ணுவேன்.

௰௨ அதிகாரம்.

[(௧) தேவ வரங்கள், (௪) பலவிதமாயிருந்தாலும், (௭) எல்லாம் பிரயோசனத்துக்கேதுவானவைகளென்றும், (௮) அதற்கு அவைகள் பலவிதமாய் அளிக்கப்படுகின்றனவென்றும், (௰௨) சுபாவசரீரத்தின் அவயவங்களெல்லாம், (௰௬) சரீரத்துக்கு அழகும், (௨௨) பிரயோசனமும், (௨௬) உதவியுமுள்ளவைகளாயிருக்கிறதுபோல, (௨௭) திருச்சபையாகிய கிறிஸ்துவின் சரீரமும் ஒழுங்குபட அதின் அவயவங்களாகி நாமும் இருக்கவேண்டியதென்றுஞ் சொல்லியது.]

மேலுஞ் சகோதரரே! ஆவியால்வருகிற வரங்களைக்குறித்து, நீங்கள் அறிவீனராயிருக்க எனக்கு மனதில்லை.

௨. (முன்னே) நீங்கள் அஞ்ஞானிகளாய் மற்றவர்களால் நடத்தப்பட்ட பிரகாரமாகவே ஊமையான விக்கிரகங்களைச்சேர்ந்

திருந்தீர்களென்று உங்களுக்குத்தெரிந்தி
ருக்கின்றது.
௩. ஆதலால், நான் உங்களுக்கு அறிவிக்கி
றதென்னவெனில், பராபரனுடைய ஆவியி
னாலே பேசுகிற எவனும், இயேசுவைச்சபிக்
கப்பட்டவனென்று சொல்லமாட்டான்.
அன்றியும், பரிசுத்த ஆவியினாலே அல்லா
மல், ஒருவனும் இயேசுவைக்கர்த்தரென்று
சொல்லமாட்டான்.
௪. * வரங்களில் வித்தியாசங்கள் உண்டு.
* உரோ. ௰௨: ௬.
௫. ஆவி ஒருவரே. ஊழியங்களிலேயும்
வித்தியாசங்களுண்டு. கர்த்தர் ஒருவரே.
௬. உள்ளான கிரியைகளிலேயும் வித்தியா
சங்களுண்டு. எல்லாவற்றையும் எல்லாருக்
குள்ளும் நடப்பிக்கிற பராபரன் ஒருவரே.
௭. ஆவியின்வரங்கள் பிரயோசனம் உண்
டாகும்படியே அவனவனுக்கு அளிக்கப்
பட்டிருக்கின்றன.
௮. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினா
லே ஞானத்தைப்போதித்தல் கொடுக்கப்
பட்டது. வேறொருவனுக்கு அந்த ஆவியி
னாலேதானே கல்வியோடே போதித்தல்
உண்டாயிற்று.
௯. வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே
தானே விசுவாசம் உண்டாயிற்று. வேறொ
ருவனுக்கு அந்த ஆவியினாலேதானே குண
மாக்கும் வரங்கள் உண்டாயின.
௰. வேறொருவனுக்குப்பலத்த அற்புதங்க
ளைச்செய்கிற பலன்களும், வேறொருவனுக்
குத்தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும், வே
றொருவனுக்கு ஆவிகளை வகையறுக்குத
லும், வேறொருவனுக்கு அந்நியபாஷைக
ளைப்பேசுதலும், வேறொருவனுக்கு அந்நிய
பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும்
அளிக்கப்பட்டிருக்கின்றன.
௰௧. இந்த வரங்களையெல்லாம் * அந்த
ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்
தத்தின்படி அவனவனுக்குத்தகுதியானவை
களைப்பகிர்ந்துகொடுக்கிறார். * எபே. ௪: ௭.
௰௨. அதெப்படியெனில், சரீரம் ஒன்றாய்
அநேகம் அவயவங்களுள்ளது. ஒரே சரீ
ரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமா
யிருந்துஞ் சரீரம் ஒன்றாயிருக்கின்றது.
அதுபோலக்கிறிஸ்துவுமிருக்கிறார்.
௰௩. நாம் யூதராயிருந்தும், கிரேக்கராயி
ருந்தும், அடிமைகளாயிருந்தும், சுவாதீன
ராயிருந்தும் எல்லாரும் ஒரே சரீரமாக
ஒரே ஆவியினாலே ஞானஸ்நானம் பண்
ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவியிற் பா
னம்பண்ணும்படி செய்யப்பட்டோம்.
௰௪. சரீரமும் ஒரே அவயவமுள்ளதாயிரா
மல், அநேக அவயவங்களுள்ளதாயிருக்கின்
றது.
௰௫. காலானது, நான் கையாயிராதபடியி
னாலே, நான் சரீரத்தின் அவயவம் அல்ல
வென்றால், அதினாலே அது சரீரத்தின் அவ
யவமல்லாமற் போகுமா?
௰௬. காதானது, நான் கண்ணாயிராதபடி
யினாலே, நான் சரீரத்தின் அவயவம் அல்ல
வென்றால், அதினாலே அது சரீரத்தின் அவ
யவமல்லாமற் போகுமா?
௰௭. சரீரமுழுவதுங் கண்ணானால், செவி
யெங்கேயிருக்கும்? அது முழுவதுஞ் செவி
யானால் மோத்தல் எங்கேயுண்டாயிருக்கும்?
௰௮. ஆனதாற் பராபரன் தமது சித்தத்தி
ன்படி அவயவங்களை ஒன்றொன்றாகச்சரீரத்
திலே வைத்தார்.
௰௯. அவையெல்லாம் ஒரே அவயவமாய்
இருந்தாற் சரீரம் எப்படியிருக்கும்?
௨௰. ஆனதால் அவயவங்கள் அநேகமாய்
இருந்துஞ் சரீரம் ஒன்றே.
௨௰௧. அன்றியுங் கண்ணானது கையுடனே
நீயெனக்குவேண்டுவதில்லையென்றும், அல்
லது தலையானது கால்களுடனே, நீங்கள்
எனக்குவேண்டுவதில்லையென்றுஞ் சொல்ல
மாட்டாது.
௨௰௨. அதைத்தவிரச்சரீர அவயவங்களிற்
பலவீனமாய்க்காணப்படுகிறவைகளே மிக
வும் வேண்டியவைகளாய் இருக்கின்றன.
௨௰௩. அல்லாமலுஞ் சரீர அவயவங்களிற்
கனவீனமாய், காணப்படுகிறவைகளுக்கே
அதிக கனத்தைக்கொடுக்கிறோம். இவ்வித
மாய் நம்மிடத்தில் அவலட்சணமானவைக
ளுக்கே அதிக இலட்சணமுண்டாய் இருக்
கின்றது.
௨௰௪. இலட்சணமானவைகளுக்கு அப்ப
டிச்செய்யவேண்டுவதில்லை. ஆனதாற் சரீ
ரத்திலே பிரிவினை உண்டாய் இராமல், அ
வயவங்கள் ஒன்றுக்கொன்று ஒரேவிதமான
கவலையாய் இருக்கும்படிக்கு,
௨௰௫. பராபரன் கனத்திற் குறைவுள்ளதற்
கு அதிக கனத்தைக்கொடுத்து, இப்படிச்
சரீரத்தை ஏற்படுத்தினார்.
௨௰௬. ஆனதினாலே ஒரு அவயவம் பாடுப
டும்பொழுது மற்ற அவயவங்கள்யாவுங் கூ
டப்பாடுபடும். ஒரு அவயவம் மகிமை அ
டையும்பொழுது மற்ற அவயவங்கள்யாவுங்
கூடச்சந்தோஷப்படும்.
௨௰௭. * நீங்களே கிறிஸ்துவின்சரீரமாயும்,
தனித்தனியான அவயவங்களாயும் இருக்கி
றீர்கள். * உரோ. ௰௨: ௫.
௨௰௮. அவர்களிற் சிலரை, * பராபரன்
சபையிலே முதலாவது அப்போஸ்தலரா
கவும், இரண்டாவது தீர்க்கதரிசிகளாக
வும், மூன்றாவது போதகராகவும், பின்பு
வல்லமைகளையும், பின்பு குணமாக்கும் வரங்
களையும், உதவிசெய்தலையும், ஆளுகைக
ளையும், அந்நியபாஷைகளையும் ஏற்படுத்தி
னார். * எபே. ௪: ௰௧.

௨௯. எல்லாரும் அப்போஸ்தலர்களாய் இருக்கிறார்களா? எல்லாருந் தீர்க்கதரிசிகளாய் இருக்கிறார்களா? எல்லாரும் போதகராய் இருக்கிறார்களா? எல்லாரும் வல்லமைகளைச்செய்கிறவர்களா?

௩௰. எல்லாருங் குணமாக்கும் வரங்களுள்ளவர்களா? எல்லாரும் அந்நியபாஷைகளைப்பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம்பண்ணுகிறார்களா?

௩௧. அப்படியிருக்க, * நீங்கள் அதிக நன்மையானவரங்களை, தேடிக்கொள்ளுங்கள். † அதற்காக மிகவும் அதிக மேன்மையான வழியையே உங்களுக்காகக்காண்பிக்கிறேன். * ௰௪: க. † ௰௩: க.

௰௩ அதிகாரம்.

[(க) மற்றெல்லாச்சிறந்தவரங்களும் அன்பில்லாவிட்டால் பயன்படாதென்று, (௪) அதைப்புகழ்ந்து, (௰௩) அது நம்பிக்கையிலும், விசுவாசத்திலுஞ் சிறந்ததென்று காட்டியது.]

நான் மனிதர் பாஷைகளையும், தூதர் பாஷைகளையும்பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தம் இடுகிற வெண்கலம்போலவும், ஓசையிடுகிற கைத்தாளத்தைப்போலவும் இருப்பேன்.

௨. * நான் தீர்க்கதரிசனங்களை அடைந்தாலும், சகல இரகசியங்களையும், சகலகல்விகளையும் அறிந்தாலும், மலைகளைப்பேர்க்கத்தக்கதாக மிகுந்த விசுவாசமுள்ளவனாய் இருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் வீணாய் இருப்பேன். * மத். ௭: ௨௨, ௨௩.

௩. மேலும் எனக்குண்டான ஆஸ்திகள் யாவையும், ஏழைகளுக்குக்கொடுத்தாலும், சுட்டெரிக்கப்படுவதற்கு என் சரீரத்தைக் கொடுத்தாலும் அன்பு எனக்கிராவிட்டால், எனக்குப்பிரயோசனம்வாராது.

௪. அன்பு, * நீடியசாந்தமும், தயவுமுள்ளது அன்புக்குப்பொறாமையில்லை. அன்பு தன்னைப்புகழாது. இறுமாப்பாய் இராது. ஆகாததைச்செய்யாது. * க பேது. ௪: ௮.

௫. தன்பொழிவைப்பாராது. உக்கிரத்தை அடையாது. பொல்லாங்கானதைச்சிந்தியாது.

௬. அநியாயத்திற் சந்தோஷப்படாமற் சத்தியத்திற் சந்தோஷப்படுகின்றது. அது * சகலத்தையும் மூடுகின்றது. * வாக். ௰: ௰௨.

௭. சகலத்தையும் விசுவாசிக்கின்றது. சகலத்தையும் நம்புகின்றது. சகலத்தையும் சகிக்கின்றது.

௮. தீர்க்கதரிசனஞ் சொல்லுதல் ஒழிந்துபோம், அந்நியபாஷைகளும் ஓய்ந்துபோம், கல்வியும் ஒழிந்துபோம், அன்பே ஒருக்காலும் ஒழியாது.

௯. அல்லாமலும், நம்முடைய அறிவு குறைவுள்ளது. நாம் தீர்க்கதரிசனஞ்சொல்லுதலுங் குறைவுள்ளது.

௰. நிறைவானது வரும்பொழுது குறைவானது ஒழிந்துபோம்.

௰௧. நான் குழந்தையாய் இருந்தபொழுது குழந்தையைப்போலப்பேசினேன், குழந்தையைப்போலச்சிந்தித்தேன். குழந்தையைப்போல் யோசித்தேன். நான் புருஷனானபொழுது குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன்.

௰௨. இப்பொழுது, * கண்ணாடியிலே நிழலாய்ப்பார்க்கிறோம். அப்பொழுது முகமுகமாகவே பார்ப்போம். இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன். அப்பொழுது நான் அறியப்பட்டபடி அறிந்துகொள்வேன். * ௨ கொரி. ௩: ௰௮. ௫: ௭.

௰௩. ஆனதால், இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிற்கின்றன. இவைகளில் அன்பே பெரிதாய் இருக்கின்றது.

௰௪ அதிகாரம்.

[(க) தீர்க்கதரிசனப்போதிப்பு, (௨, ௩, ௪) அந்நியபாஷைகளைப்பார்க்கிலும்நல்லதென்று, (௬) தேவாத்தியங்களைக்கொண்டொப்பனையிடப்பட்டும், (௰௨) தீர்க்கதரிசனமாவது, அந்நியபாஷையாவது பிரயோசனத்தைத்தருகிறதாய் இருக்கவேண்டியதென்றும், (௨௬) அவற்றின் பிரயோசனங்களின்னவையென்றும், (௨௭) அவைகள் இப்படி நடத்தப்படவேண்டுமென்றும், (௩௪) ஸ்திரீகள்சபையிற் பேசக்கூடாதென்றுஞ் சொல்லியது.]

அன்பையே அதிகமாய்த்தொடருங்கள். ஆவிக்குரியவரங்களையுந் தேடுங்கள். (அவைகளில்) தீர்க்கதரிசனங் காட்டுகிற வரத்தையே விரும்புங்கள்.

௨. என்னத்தினாலெனில், அந்நியபாஷையிற்பேசுகிறவன் மனிதருக்கல்ல, பராபரனுக்குத்தெரியப்பேசுகிறான். ஆவியினாலே அவன் இரகசியங்களைப்பேசிக்கொள்ளுகிறபடியால், ஒருவனும் அவன் பேசுகிறதை அறியமாட்டானே.

௩. தீர்க்கதரிசனங்காட்டுகிறவனே மனிதருக்கு எழுப்புதலும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கவிதமாகப்பேசுகிறான்.

௪. அந்நியபாஷையிற் பேசுகிறவன் தனக்குத்தானே எழுப்புதல் உண்டாக்குகிறான். தீர்க்கதரிசனங் காட்டுகிறவனே சபைக்கு எழுப்புதல் உண்டாக்குகிறான்.

௫. நீங்களெல்லாரும் அந்நியபாஷைகளைப் பேச விரும்புகிறேன். ஆகிலும், அந்நியபாஷைகளிற்பேசுகிறவன் சபைக்கு எழுப்புதல் உண்டாகும்படிக்கு அதின் அருத்தத்

தையுஞ் சொல்லாவிட்டால், தீர்க்கதரிசனங்காட்டுகிறவன் அவனிலும் பெரியவனாய் இருப்பதினாலே, நீங்கள் * தீர்க்கதரிசனங் காட்டுகிறவர்களாகவேண்டும் என்று அதிகமாய் விரும்புகிறேன். * ௪ மோசே ௰௧: ௨௯.

௬. அந்தப்படி சகோதரரே! நான் உங்களிடத்தில்வந்து, உங்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்தலுக்காவது, உயர்ந்த அறிவுண்டாகுதற்காவது, தீர்க்கதரிசனத்தை அறிதற்காவது, மற்றப்போதகமுண்டாகுதற்காவது ஏதுவானதைச்சொன்னாலும், அந்நியபாஷைகளிற்பேசினால் உங்களுக்கு என்னாலே எந்தப்பிரயோசனம்வரும்!

௭. சத்தமிடுகிற உயிரில்லாதவாத்தியங்களுந் தீங்குழலானாலும், சுரமண்டலமானாலும், சட்டமான தொனிகளினாலே வித்தியாசங்காட்டாவிட்டால், ஊதினது, அல்லது கொட்டினது, இன்னதென்று எப்படித்தெரியும்!

௮. அந்தப்படி எக்காளமானது சட்டமில்லாமல் தொனியிட்டால், எவன் யுத்தத்திற்கு எத்தனம்பண்ணுவான்?

௯. அதுபோல நீங்களுந் தெளிவானபேச்சை நாவினாலே வசனியாவிட்டாற் சொல்லப்பட்டதின்னதென்று எப்படித்தெரியும்? ஆகாசத்திற் சொல்லுகிறவர்களாய் இருப்பீர்களே.

௰. உலகத்திலே இத்தனைவிதமான பாஷைகள் உண்டாயிருக்கின்றன.

௰௧. அவைகளில் ஒன்றுங் கருத்தில்லாததல்ல. அது மெய்தான். ஆகிலும் நான் பாஷையின் கருத்தை அறியாமலிருந்தாற் பேசுகிறவனுக்கு அந்நியனாயிருப்பேனே. பேசுகிறவன் எனக்கும் அந்நியனாயிருப்பான்.

௰௨. ஆனதால், நீங்களும் ஆவிக்குரியவரங்களை நாடுகிறவர்களாயிருக்க, சபையாருக்கு எழுப்புதலுக்கேற்றவைகளையே, * அதிகமாய்ப்பெற்றுக்கொள்ளப்பாருங்கள். * மத். ௨௫: ௨௯.

௰௩. அந்தப்படி அந்நியபாஷையிற் பேசுகிறவன் அதின் கருத்தையுஞ் சொல்லத்தக்கதாக விண்ணப்பம்பண்ணக்கடவன்.

௰௪. என்னத்தினாலெனில், நான் அந்நியபாஷையிலேவிண்ணப்பம்பண்ணினால், என் ஆவி விண்ணப்பம்பண்ணுமே அன்றி, என்னுடையகருத்து மற்றவர்களுக்குப்பலனற்றதாயிருக்கும்.

௰௫. ஆனதால், நான் என்னசெய்யவேண்டும்? ஆவியாலேநான் விண்ணப்பம்பண்ணவேண்டும். அதின் கருத்தும்விளங்க விண்ணப்பம்பண்ணவேண்டும். * நான் ஆவியாலேபாடவேண்டும். அதின்கருத்தும் விளங்கப்பாடவேண்டும். * எபே. ௫: ௰௯.

௰௬. இல்லாவிட்டால் நீ ஆவியினாலேதோத்திரஞ்செய்யும்பொழுது, கல்லாதகூட்டந்தாரிடத்திலிருக்கிறவன் உன்பேச்சை அறியாதபடியால் உன்னுடைய தோத்திரத்திற்கு ஆமென்று எப்படிச்சொல்லுவான்?

௰௭. நீ நன்றாய்த்தோத்திரிப்பாய், மற்றவன் எழுப்பப்படமாட்டானே.

௰௮. உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப்பாஷைகளைப்பேசிக்கொண்டு, என் தேவனைத்தோத்திரிக்கிறேன்.

௰௯. அப்படியிருந்தும் நான் சபையிலே அந்நியபாஷையிற் பதினாயிரம்வார்த்தைகளைப்பேசுகிறதிலும் மற்றவர்களுக்குப்பிரயோசனமாய் உபதேசஞ்சொல்லும்படிக்கு என்கருத்து விளங்கத்தக்கதாக ஐந்துவார்த்தைகளை மாத்திரம் பேசவே அதிகமாய் விரும்புகிறேன்.

௨௰. சகோதரரே! * நீங்கள் புத்திக்குக் குழந்தைகளாயிராமல் துர்க்குணத்திற்குக் குழந்தைகளைப்போலிருங்கள். புத்தியிலே தேறினவர்களாவீர்களாக. * உரோ. ௰௬: ௰௯.

௨௧. * மறுபாஷைகளாலும், மறு உதடுகளினாலும் இந்தச்சனங்களுடனே பேசுவேன். அப்படியும் அவர்கள் எனக்குச் செவிகொடுப்பதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறாரென்று வேதத்தில் எழுதியிருக்கிறதே. * ஏசா. ௨௮: ௰௧, ௰௨.

௨௨. ஆனபடியினாலே அந்நியபாஷைகள் விசுவாசிகளுக்கல்ல, அவிசுவாசிகளுக்கடையாளமாயிருக்கின்றன. தீர்க்கதரிசனங்காட்டுதல் அவிசுவாசிகளுக்கல்ல, விசுவாசிகளுக்கடையாளமாயிருக்கின்றது.

௨௩. அப்படியிருக்கச்சபையாரெல்லாரும் ஏகமாய்க்கூடிவந்து, எல்லாரும் அந்நியபாஷைகளில் பேசிக்கொண்டால், கல்லாதவர்கள் அல்லது அவிசுவாசிகள் உள்ளே பிரவேசிக்கும்பொழுது நீங்கள் பயித்தியம்பிடித்தவர்கள் என்பார்களல்லவோ?

௨௪. எல்லாருந் தீர்க்கதரிசனங் காட்டினால், அவிசுவாசி அல்லது கல்லாதவனொருவன் உள்ளே பிரவேசிக்கும்பொழுது அவன் எல்லாராலுங் கண்டிக்கப்பட்டும், எல்லாராலும் நிதானிக்கப்பட்டுமிருப்பான்.

௨௫. * அவனுடைய இருதயத்தின் அந்தரங்கங்களும் வெளியரங்கமாம். இவ்விதமாய் அவன்முகங் கீழாகவிழுந்து, பராபரனைப்பணிந்துகொண்டு பராபரன் மெய்யாய் உங்களுக்குள்ளே இருக்கிறாரென்றறிக்கையிடுவான். * எபி. ௪: ௰௨.

௨௬. அப்படிக்கன்றி, சகோதரரே! நீங்கள் கூடியிருக்கிறபொழுது உங்களில் ஒருவன் சங்கீதம்பாடவும், ஒருவன் போதகம்

பண்ணவும், ஒருவன் அந்நியபாஷைபேசவும், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்தவும், ஒருவன் வியாக்கியானம் பண்ணவும் வேண்டுவதென்ன! அவையெல்லாம் எழுப்புதல் உண்டாகத்தக்கதாக நடக்கக்கடவது.

௨௭. அந்தப்படி ஒருவன் அந்நியபாஷையிலே பேசவேண்டுமானால், அவன் இரண்டு அல்லது மிகுதியானால் மூன்று (வாக்கியங்களை) மாத்திரம் வெவ்வேறாகப்பேசவும், ஒருவன் வியாக்கியானம் பண்ணவும்வேண்டும்.

௨௮. வியாக்கியானம்பண்ணுகிறவனில்லாவிட்டாற் சபையிலே பேசாமல் தனக்கும், பராபரனுக்குந் தெரியப்பேசக்கடவன்.

௨௯. தீர்க்கதரிசனங் காட்டுகிற இரண்டுபேர் அல்லது மூன்றுபேர் பேசலாம். மற்றவர்கள் நிதானிக்கக்கடவர்கள்.

௩௰. அப்பொழுது உட்கார்ந்திருக்கிறமற்றொருவனுக்கு ஏதாகிலும் வெளிப்படுத்தப்பட்டால் முந்தினவன் பேசாமல் இருக்கக்கடவன்.

௩௧. எல்லாருங் கற்கிறதற்கும், எல்லாரும் ஆறுதலையடைகிறதற்கும் நீங்களனைவரும் ஒருவனொருவனாகத்தீர்க்கதரிசனங் காட்டலாமே.

௩௨. தீர்க்கதரிசனங் காட்டுகிறவர்களுக்குண்டான ஆவிக்குரியவரங்கள் அதைக்காட்டுகிறவர்களுடைய அதிகாரத்திற்குள்ளேயிருக்குமே.

௩௩. பராபரனுங் கலகத்திற் பிரியமானவரல்ல, சமாதானத்திற் பிரியமானவராயிருக்கிறாரே. பரிசுத்தவான்களுடைய எல்லாச்சபைகளிலேயும் நடக்கிறதுபோல,

௩௪. * உங்கள் சபைகளிலேயும் பெண்பிள்ளைகள் பேசாமலிருக்கக்கடவர்கள். பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை. அவர்கள் † கீழ்ப்படியவேண்டும். * ௧ தீமோ. ௨: ௰௨. † ௧ மோ. ௩: ௰௬.

௩௫. அப்படி வேதமுஞ் சொல்லுகின்றது. அவர்கள் ஒருகாரியத்தைக்கற்றுக்கொள்ள விரும்பினால் வீட்டிலே தங்கள் புருஷரிடத்திலே விசாரிக்கக்கடவர்கள். ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அவலட்சணமாயிருக்கிறதே.

௩௬. அல்லது பராபரனுடைய வசனம் உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது? அல்லது அது உங்களிடத்திற்குமாத்திரமா வந்தது!

௩௭. ஒருவன் தன்னைத்தீர்க்கதரிசி அல்லது ஆவியைப்பெற்றவனென்றெண்ணினால், நானுங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளாய் இருக்கின்றனவென்றறிக்கையிடக்கடவன்.

௩௮. ஒருவன் அறியாமற்போனால், அவன் அறியாமற்போகட்டும்.

௩௯. ஆகையாற் சகோதரரே! தீர்க்கதரிசனங் காட்டுகிற வரத்தைத்தேடிக்கொள்வீர்களாக. அந்நியபாஷைகளைப்பேசுகிறதற்கும் தடைபண்ணாதிருங்கள்.

௪௰. சகலமும் நல்லொழுக்கமாயும், சட்டத்தின்படியேயும் நடக்கக்கடவது.

௰௫ அதிகாரம்.

[(௩) கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால் (௰௨) உயிர்த்தெழுதலில்லையென்றவர்களுக்கெதிரிடையாக நம்முடைய உயிர்த்தெழுதலைத்திருஷ்டாந்தப்படுத்தி, (௨௧) அதற்குமூலமும், (௩௫) வகையுஞ்சொல்லி, (௫௧) உயிரோடிருக்கிறவர்கள் அடையும் ஆறுதலைக்குறித்துஞ் சொன்னது.]

அன்றியுஞ் சகோதரரே! நானுங்களுக்குச்சுவிசேஷத்தைப்பிரசங்கித்தேனே. நீங்களும் அதையேற்றுக்கொண்டு அதிலே நிற்கிறீர்களே.

௨. அல்லாமலும், நீங்கள் வீணாய் விசுவாசியாமல், நான் உங்களுக்குப்பிரசங்கித்தவிதமாய் அதைக்கைக்கொண்டிருந்தால், இரட்சிப்பு உங்களுக்கு அதினாலே கிடைக்குமே. அந்தச்சுவிசேஷத்தை நான் உங்களுக்கு மறுபடியும் அறிவிக்கிறேன்.

௩. * நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றாற் கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நம்முடைய பாவங்களுக்காக மரித்தும், * கலா. ௧: ௰௨.

௪. வேதவாக்கியங்களின்படி அடக்கம் பண்ணப்பட்டும், மூன்றும் நாளில் எழுந்தும் இருக்கிறார்.

௫. * கேபாவுக்கும், † பின்பு பன்னிருவருக்குந் தரிசனையானார். * லூக். ௨௪: ௩௪. † யோவா. ௨௰: ௰௯—௨௯.

௬. அதின்பின்பு, * அவர் ஐந்நூறுபேருக்கதிகமான சகோதரருக்கும் ஒருமிக்கத்தரிசனையானார். அவர்களிற் சிலர் மாத்திரம் நித்திரையடைந்தார்கள். மற்றதிகமானவர்கள் இந்நாள்வரைக்குமிருக்கிறார்கள். *மத். ௨௮: ௰.

௭. பின்பு யாக்கோபுக்கும், அதின் பின்பு அப்போஸ்தலரெல்லாருக்குந் தரிசனையானார்.

௮. எல்லாருக்கும் பின்பு எனக்குந் * தரிசனையானார். நான் பூரண கர்ப்பத்திற் பிறவாமல், அதற்கு முன்பிறந்த பிள்ளையைப்போல அப்போஸ்தலனானவன். * அப். ௯: ௫. ௨௨: ௰௭. ௨ கொரி. ௰௨: ௧, ௨.

௯. நான் அப்போஸ்தலரெல்லாரிலுஞ் சிறியவனாய் இருக்கிறேன். பராபரனுடைய சபையைத் துன்பப்படுத்தினபடியினாலே நான் அப்போஸ்தலன் என்றழைக்கப்படுகிறதற்குப்பாத்திரனல்ல.

ய. * பராபரனுடைய கிருபையினாலே இருக்கிறேன். அன்றியும், அவர் என்மேல் வைத்தகிருபை வீணாயிருக்கவில்லை. மற்றெல்லாரிலும் நான் அதிகமாயுழைந்தேன், நானல்லவல்ல, என்னுடனே யிருக்கிற பராபரனுடைய கிருபையினாலே அப்படிச் செய்தேன். * ரு: ய.

யக. ஆகையால் நானாவது, அவர்களாவது இப்படியே பிரசங்கித்துவருகிறோம். நீங்களும் இப்படியே விசுவாசித்துவருகிறீர்கள்.

யஉ. அந்தப்படி கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்திருக்கிறாரென்று பிரசங்கித்திருக்க, மரித்தோர் உயிரோடெழும்புதலில்லையென்று உங்களிற் சிலர் எப்படிச்சொல்லலாம்?

யங. மரித்தோர் உயிரோடெழும்புதலில்லாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கமாட்டாரே.

யச. கிறிஸ்து எழும்பாதிருந்தால், எங்கள் பிரசங்கம் அபத்தமாய் இருக்குமே. உங்கள் விசுவாசமும் அபத்தமாய் இருக்குமே.

யரு. மரித்தோர் மெய்யாய் எழும்பாவிட்டால் பராபரன் எழுப்பாத கிறிஸ்துவைப் பராபரன் எழுப்பினாரென்று அவரைக்குறித்துச்சாட்சிசொன்னதினாலே நாங்கள் பராபரனுக்காகப்பொய்ச்சாட்சிகளாயும் இருப்போமே.

யசா. அந்தப்படிமரித்தோர் எழும்பாவிட்டாற் கிறிஸ்துவும் எழுந்திருக்கமாட்டாரே.

யஎ. அன்றியுங் கிறிஸ்து எழும்பாமலிருந்தால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்குமே. நீங்கள் எப்பொழுதும் உங்கள் பாவங்களோடே இருப்பீர்களே.

யஅ. கிறிஸ்துவைப்பற்றி நித்திரையடைந்தவர்களுங் கெட்டிருப்பார்களே.

யகூ. அந்தப்படி நாம் கிறிஸ்துவின்மேலே இம்மைக்காகமாத்திரம் நம்பிக்கையாயிருந்தால், எல்லாமனிதர்களிலும் நாம் அதிக நிர்ப்பாக்கியமுள்ளவர்களாயிருப்போமே.

உய. அப்படியல்ல, கிறிஸ்து நித்திரையடைந்தவர்களில் * முதற்பாகமாக மரித்தோரில் இருந்தெழுந்திருக்கிறார். * அப். உசா: உரு.

உக. அந்தப்படி ஒரு மனிதனால் மரணம் உண்டானபடியினாலே, ஒரு மனிதனாலும் மரணத்தினின்று உயிரோடெழும்புதலும் உண்டாயிருக்கின்றது.

உஉ. ஆதாமினாலே எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவினாலே எல்லாரும் உயிராக்கப்படுவார்கள்.

உங. அவனவன் தன் இணவரிசையிலே அப்படியாவான். முதற்பாகமானவர் கிறிஸ்து. பின்பு * அவர்வரும்பொழுது அவரைச் சேர்ந்தவர்கள் எழுந்திருப்பார்கள். * அதி. உய: சா.

உச. அதன்பின்பு முடிவிருக்கும். அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, இராச்சிய பரிபாலனத்தைப் பிதாவாகிய பராபரனுக்கு ஒப்புக்கொடுப்பார்.

உரு. இப்படியவர் * எல்லாச்சத்துருக்களையுந் தமது பாதத்திற்குக்கீழாக்கிப்போடும்வரைக்கும் அவர் ஆளுகைசெய்யவேண்டும். * சங்கீ. ாய: க.

உசா. * அவர் பரிகரிக்குங் கடைசிச்சத்துரு மரணம். * அறி. உய: யச. உக: ச.

உஎ. * எல்லாவற்றையும் அவருடைய பாதத்திற்குக்கீழ்ப்படுத்தினாரே. ஆகிலுஞ் சகலமும் அவருக்குக்கீழ்ப்படுத்தப்பட்டதென்று சொல்லும்பொழுது, சகலத்தையும் அவருக்குக்கீழ்ப்படுத்தினவர்தவிர என்பது வெளியரங்கமாயிருக்கின்றது. * சங். அ: எ, அ.

உஅ. சகலமும் அவருக்குக்கீழ்ப்பட்டிருக்கும்பொழுது, பராபரனே எல்லா இடங்களிலும், எல்லாவற்றிற்கும் மேலாயிருக்கத்தக்கவிதமாக, குமாரன் தாமும் தமக்கெல்லாவற்றையுங் கீழ்ப்படுத்தினவருக்குக்கீழ்ப்பட்டிருப்பார்.

உகூ. பின்னும் மரித்தோர் எழும்பாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்னசெய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுவார்கள்?

ஙய. நாங்களும் ஏன் எந்நேரமும் நாசமோசத்திற்கேதுவாவோம்!

ஙக. * நாடோறும் நான் மரிக்கிறேன். அதை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலே உங்களைக்குறித்து எனக்குண்டாயிருக்கிற மேன்மையின்பேரிலே நிச்சயமாய்ச்சொல்லுகிறேன். * உ கொரி. ச: ய, யக.

ஙஉ. மரித்தோர் எழும்பாவிட்டால், நான் எபேசிலே மனிதர் வழக்கமாய்த்துஷ்டமிருகங்களுடனே போராடினதினாலே எனக்கென்ன பிரயோசனம்வரும்! நாளைக்குச்சாவோம். ஆகையால், * புசிக்கவும், குடிக்கவுங் கடவோமென்று சொல்லலாமே. * ஏசா. உஉ: யங.

ஙங. வஞ்சிக்கப்படாதிருப்பீர்களாக. பொல்லாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக்கெடுக்கும்.

ஙச. நீங்கள் பின்னும் பாவஞ்செய்யாமல் நியாயமானபடி தெளிவு அடையுங்கள். (உங்களில்) சிலர் பராபரனை அறியாதிருக்கிறார்களே. உங்களுக்கு வெட்கம்வர இதைச்சொல்லுகிறேன்.

ஙரு. மரித்தோர் எப்படி எழும்புவார்கள்?

எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்களென்றுகேட்டால்,

௩௬. * ஆ, புத்தியீனனே! நீ விதைக்கிற தானியஞ் செத்தாலொழிய புதிதானபயிர் தோன்றமாட்டாதே. * யோவா. ௰௨: ௨௪.

௩௭. மேலும் நீ விதைக்கிறபொழுது, இனிமேல்விளையும் உடலை விதையாமல், கோதுமை அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறுமணியையே விதைக்கிறாய்.

௩௮. அதற்குப்பராபரன் தமது சித்தத்தின்படியே உடலைக்கொடுக்கிறார். அந்தப்படி விதைவகைகள் யாவற்றிற்கும் அதற்கதற்கேற்ற உடலுண்டு.

௩௯. எல்லாமாம்சமும் ஒரேவிதமான மாம்சமல்ல. மனிதருடைய மாம்சமும் வேறே. மிருகங்களுடைய மாம்சமும் வேறே. மச்சங்களுடையதும் வேறே. பறவைகளுடையதும் வேறே.

௪௰. பரமண்டலத்திற்குரிய தேகங்களும் உண்டு. பூமிக்குரிய தேகங்களும் உண்டு பரமண்டலத்திற்குரிய தேகங்களுடைய மகிமையும் வேறே. பூமிக்குரிய தேகங்களுடைய மகிமையும் வேறே.

௪௧. சூரியனுடைய மகிமையும் வேறே. சந்திரனுடைய மகிமையும் வேறே. நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே. அவைகளில் ஒரு நட்சத்திரத்தினுடைய மகிமை மற்றொரு நட்சத்திரத்தின் மகிமைக்கு மேற்படுகின்றதே.

௪௨. அப்படிப்போல மரித்தோர் உயிரோடெழும்புதலும் உண்டாயிருக்கும். அழிவுள்ளசரீரம் விதைக்கப்பட்டு, பின்பு அழிவில்லாமையாய் எழுந்திருக்கும்.

௪௩. கனவீனமான சரீரம் விதைக்கப்பட்டு, பின்பு * மகிமையாயெழுந்திருக்கும். பலவீனமுள்ளசரீரம் விதைக்கப்பட்டு, பின்பு பலமாயெழுந்திருக்கும். * பிலிப். ௩: ௨௰, ௨௧.

௪௪. ஜீவனுள்ள சரீரம் விதைக்கப்படும். ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும். இரத்தமாம்சமுடைய சரீரமும் உண்டு. ஆவிக்குரிய சரீரமும் உண்டு.

௪௫. ஆனதால், வேதத்திலே யெழுதியிருக்கிறபடி, * முந்தின மனிதனாகிய ஆதாம் ஜீவ ஆத்துமாவானான். பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார். * ௧ மோ. ௨: ௭.

௪௬. ஆவியானசரீரம் முந்தினதாயிராமல், இரத்த மாம்சமுடைய சரீரமே முந்தினதாயிருக்கிறது.

௪௭. பின்பு ஆவியான சரீரமுண்டாம். முந்தின மனிதன் பூமியின் மண்ணானவன். இரண்டாம் மனிதன் பரமண்டலத்துக்குரிய கர்த்தர்.

௪௮. மண்ணானவன் எப்படியோ, அப்படி மண்ணானவர்களும் இருப்பார்கள். பரமண்டலத்துக்குரியவர் எப்படியோ, அப்படிப் பரமண்டலத்திற்குரியவர்களும் இருப்பார்கள்.

௪௯. மேலும், மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, பரமண்டலத்திற்குரியவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம்.

௫௰. சகோதரரே! மாம்சமும், இரத்தமும் பராபரனுடைய இராச்சியத்தைச்சுதந்தரிக்கக்கூடாது. அழிவுள்ளது அழியாமையைச்சுதந்தரிக்கமாட்டாது. ஆனதால், இவைகளைச்சொன்னேன்.

௫௧. மேலும், நான் உங்களுக்கு இரகசியத்தை அறிவிக்கிறேன். (என்னவெனில்;) நாமெல்லாரும் * நித்திரையடைந்துபோவதில்லை. ஆகிலும், எல்லாருங் கடைசி எக்காளம் தொனிக்கும்பொழுது, ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்படுவோம். * ௧ தெச. ௪: ௰௬, ௰௭.

௫௨. * எக்காளந் தொனிக்குமே. அப்பொழுது, மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழும்புவார்கள். * மத். ௨௪: ௩௧.

௫௩. அன்றியும், அழிவுள்ளதாகிய இது அழியாமையும், சாவுக்கினமாகிய இது சாவாமையுந் தரித்துக்கொள்ள வேண்டியபடியால், நாமும் மறுரூபமாக்கப்படுவோம்.

௫௪. அந்தப்படி அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சவுக்கியமாகிய இது சாவாமையையுந் தரித்துக்கொள்ளும்பொழுது, மரணஞ் செயமாக விழுங்கப்பட்டதென்று * எழுதியிருக்கிறவார்த்தை நிறைவேறும். * ஏசா. ௨௫: ௮. ஓசெ. ௰௩: ௰௪.

௫௫. ஆ, மரணமே! உன் கூர்மையெங்கே? பாதாளமே! உன் செயமெங்கே? மரணத்தின் கூர்மை பாவம்.

௫௬. பாவத்தின்பெலன் நியாயப்பிரமாணம்.

௫௭. நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலே நமக்குச்செயங்கொடுத்திருக்கிற பராபரனுக்குத்தோத்திரமுண்டாவதாக.

௫௮. ஆகையால், எனக்குப்பிரியமான சகோதரரே! கர்த்தரைக்குறித்து உங்கள் வேலை வீணாயிராதென்றறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகிக்கொள்ளுகிறவர்களாயும் இருப்பீர்களாக.

௰௬ அதிகாரம்.

[(௧) எருசலேமிலுள்ள எளிய கிறிஸ்தவர்களுக்குத்தருமங்களைச்சேர்த்து அனுப்பவேண்டுமென்றும், (௰) தீமோத்தேயை அங்கிகாரம்பண்ண வேண்டுமென்றுஞ் சொல்லி, (௰௩) சில பட்சமுள்ள புத்திமதிகளையுமெழு

கி, (யகூ) அநேகரை வாழ்த்தி நிருபத்தை முடித்தது.]

பரிசுத்தவான்களுக்காகச் * சேர்க்கப்படுந் தருமங்களைக்குறித்து, நான் கலாத்திய தேசத்துச்சபைகளுக்குப்பண்ணின திட்டத்தின்படியே நீங்களுஞ் செய்வீர்களாக. * உரோ. யரு: உசு, உஎ.

உ. நான் வரும்பொழுதே தருமஞ்சேர்க்குதல் உண்டாயிராதபடிக்கு, உங்களில் அவனவன் * வாரத்துமுதல் நாள்கள்தோறுந் தன்தன் வாழ்வுக்குத்தக்கதாக எதையாகிலுமெடுத்துத்தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன். * அப். உய: எ.

ங. நான் வந்திருக்கும்பொழுது, உங்களுடைய உபகாரத்தை எருசலேமுக்குக்கொண்டுபோகும்படிக்கு, நீங்கள் நிருபங்களினாலே ஏற்படுத்துகிறவர்களெவர்களோ அவர்களை அனுப்புவேன்.

ச. நானும்போகத்தகுதியானால், அவர்கள் என்னுடனேகூட வரலாம்.

ரு. நான் மக்கேதோனியா நாட்டின்வழியாய்ப்போகிறேன். அதின்வழியாய்ப்போகும்பொழுது உங்களிடத்திற்குவருவேன்.

சு. ஒருவேளை நான் உங்களிடத்திற் சிலகாலந் தரித்திருப்பேன். நான் எங்கே போனாலும் நீங்களென்னை வழிவிட்டனுப்பும்படிக்கு, ஒருவேளை மாரிகாலம் முடியுமளவும் இருப்பேன்.

எ. ஆனதால் நான் இப்பொழுதுபோகிற பிரயாணத்திலே உங்களைப்பார்க்கமாட்டேன். கர்த்தர் உத்தரவுகொடுத்தால், உங்களிடத்திற் சிலகாலந் தரித்திருக்கலாமென்று நம்பியிருக்கிறேன்.

அ. இந்த எபேசு பட்டினத்திலே பெரிதும், பெலனுமான கதவு எனக்குத்திறக்கப்பட்டிருக்கிறபடியினாலும், விரோதஞ்செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறபடியினாலும்,

கூ. பெந்தெகோஸ்துப் பண்டிகைவரைக்கும் இங்கேயிருப்பேன்.

ய. தீமோத்தேயு உங்களிடத்திற்கு வரும்பொழுது, அவன் உங்களிடத்திற் பயமில்லாமல் இருக்கும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள். என்னைப்போல அவனுங் கர்த்தருடைய கிரியையை நடப்பிக்கிறானே.

யக. ஆனபடியினாலே ஒருவனும் அவனை அற்பமாய் எண்ணாதிருப்பானாக. அன்றியும் அவனும், அவனுடனேகூட இருக்கிற சகோதரரும் வருகிறதற்கு நான் காத்திருக்கிறபடியால், நீங்கள் அவனைச்சமாதானத்தோடே என்னிடத்தில் வரும்படிக்கு வழிவிட்டனுப்புங்கள்.

யஉ. சகோதரனாகிய அப்பொல்லோவும் இந்தச்சகோதரரோடுங்கூட உங்களிடத்தில் வரும்படிக்கு, அவனை மிகவும் வேண்டிக்கொண்டேன். அப்படியிருந்தும், இப்பொழுதுபோக அவனுக்கு மனதேயில்லை. அவனுக்கு நற்சமயம் உண்டாயிருக்கும்பொழுது உங்களிடத்தில்வருவான்.

யங. விழித்திருங்கள். விசுவாசத்திலே நிலைத்திருங்கள். புருஷராயிருங்கள். பெலன்கொள்ளுங்கள்.

யச. உங்கள் காரியங்களையெல்லாம் அன்போடே செய்வீர்களாக.

யரு. சகோதரரே! ஸ்தேவானுடைய குடும்பத்தார் ஆகாயதேசத்திலே முதற்பாகமானவர்களென்றும், பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்யும்படிக்கு, அவர்கள் தங்களை நியமித்தவர்களென்றும் அறிந்திருக்கிறீர்களே.

யசு. இப்படிப்பட்டவர்களுக்கும், உதவிசெய்து, பிரயாசப்படுகிற மற்ற யாவருக்கும் நீங்களுங் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.

யஎ. ஸ்தேவானும், பொருத்துநாத்தும், அகாயிக்குசும் வந்து சேர்ந்ததினாலே சந்தோஷமாயிருக்கிறேன்.

யஅ. உங்கள் ஆவிக்குச்செய்ததுபோல அவர்கள் என்னுடைய ஆவிக்கும் ஆறுதல் செய்தபடியால், நீங்கள் இல்லாததினாலுண்டான குறைவை நீக்கி நிறைவுண்டாக்கினார்கள். இப்படிப்பட்டவர்களைக்கனமாய் எண்ணிக்கொள்வீர்களாக.

யகூ. ஆசியாதேசத்திலுள்ள சபையார்கள் உங்களை வாழ்த்துதல் செய்கிறார்கள். ஆக்கிலாவும், பிரிசில்லாளுந் தங்கள் வீட்டிலே கூடிய சபையோடுங்கூட, கர்த்தரைப்பற்றிய உங்களை மிகவும் வாழ்த்துகிறார்கள்.

உய. சகோதரர் எல்லாரும் உங்களை வாழ்த்துகிறார்கள். நீங்கள் ஒருவரையொருவர் பரிசுத்தமான முத்தத்தினால் வாழ்த்துதல் செய்வீர்களாக.

உக. * பவுலாகிய நான் என் கையெழுத்தோடே வாழ்த்துதல் செய்கிறேன். * உ தெச. ங: யஎ.

உஉ. ஒருவன் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினிடத்தில் அன்புகூராமற்போனால், அவன் சபிக்கப்பட்டவனாய் இருப்பான். அவனுக்குத்தண்டிப்பாக, கர்த்தர் வருவார்.

உங. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருக்கக்கடவது.

உச. என்னுடைய அன்பு கிறிஸ்து இயேசுவைப்பற்றிக்கொள்ளுகிற உங்களெல்லாரோடுங்கூட இருக்கின்றது.—ஆமென்.

அப்போஸ்தலனாகிய பவுல்

கொரிந்தருக்கு எழுதின இரண்டாம் நிருபம்.

II. Corinthians.

க அதிகாரம்.

[(ங) அப்போஸ்தலன் தன் உபத்திரவங்களிலெல்லாம் விசேஷமாய், (அ) ஆசியாவிலே அடைந்த துன்பத்திலுண்டான ஆறுதலினாலே சபைக்கு ஆறுதல் சொல்லி, (யஉ) தான் சுவிசேஷத்தின் மாறாத சத்தியத்தை உத்தமமாய்ப் பிரசங்கித்ததற்குத் தன் மனச்சாட்சியையும், அவர்களுடைய மனச்சாட்சிகளையுஞ் சாட்சியிட்டு, (யரு) தான் கொரிந்துக்கு வராததற்கு நியாயஞ் சொன்னது.]

பராபரனுடைய சித்தத்தினாலே இயேசுக்கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பவுலும், சகோதரனாகிய தீமோத்தேயுங் கொரிந்து பட்டினத்திலுள்ள பராபரனுடைய சபைக்கும், அகாய தேசமெங்குமுள்ள எல்லாப்பரிசுத்தவான்களுக்குங்கூட எழுதுகிறதாவது;

உ. நம்முடைய பிதாவாகிய பராபரனாலும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலும் உங்களுக்குக்கிருபையும், சமாதானமும் உண்டாகக்கடவது.

ங. நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் பிதாவுமாய், பராபரனுமாய், மிகுந்த தயையுடைய பிதாவுமாய், * சகலவிதமான ஆறுதலையும் அநுக்கிரகிக்கிற தேவனுமாய் இருக்கிறவர் தோத்திரிக்கப்படக்கடவர். * உரோ. யரு: ரு.

ச. அவரே எங்களுக்கு வருஞ் சகல உபத்திரவகாலங்களிலேயும் எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர் பராபரனாலே நாங்கள் அடைகிற ஆறுதலினாலே சகலவித உபத்திரவகாலங்களிலும் அகப்படுகிறமற்றவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியாயிருக்கிறோம்.

ரு. எப்படியெனில், * கிறிஸ்துவினிமித்தம் பாடுகள் எங்கள்மேலே பெருகுகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகின்றது. * சங்கீ. ஙச: யக.

சு. ஆனதால், நாங்கள் உபத்திரவப்பட்டால், அது உங்கள் ஆறுதலுக்காகவும், இரட்சிப்புக்காகவுமிருக்கும்; நாங்கள் ஆறுதலடைந்தால், அதுவும் உங்கள் ஆறுதலுக்காகவிருக்கும். நாங்கள் பாடுபடுகிறதுபோல நீங்களும் படுகிற பாடுகளைப்பொறுமையோடே சகிக்கிறதினாலே அந்த ஆறுதல் பெலனைச்செய்கின்றது.

எ. அப்படி நீங்கள் எங்களோடேகூடப் பாடுபடுகிறதுமல்லாமல், எங்களோடேகூட ஆறுதலையும் அடைகிறீர்களென்று நாங்கள் அறிந்து, உங்களைக்குறித்து உறுதியான நம்பிக்கையுள்ளவர்களாய் இருக்கிறோம்.

அ. ஆகையால் சகோதரரே! * ஆசியாவில் எங்களுக்கு வந்த உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்கவேண்டுமென்று எங்களுக்கு மனதில்லை. என்னவெனில்; பிழைப்போமாவென்றும் நாங்கள் மிகவுஞ் சந்தேகப்படத்தக்கதாக (எங்கள்) பலத்திற்கு மிஞ்சின அதிகபாரம் எங்களுக்குண்டாயிற்று. * அப்போ. யசு: உஉ, உங.

கூ. மேலும் மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அது எங்கள்மேலேயல்ல, மரித்தோரை எழுப்புகிற பராபரன்மேலே நாங்கள் நம்பிக்கையாய் இருக்கும்படிக்கு ஏதுவாயிருந்தது.

ய. அப்படிப்பட்ட மரணத்தினின்று அவர் எங்களை இழுத்தார். இப்பொழுதும் இழுக்கிறார். பின்னும் இழுப்பாரென்று அவரை நம்பியிருக்கிறோம். * உ தீமோ. ச:யஅ.

யக. அதற்காக நீங்களும் விண்ணப்பத்தினாலே எங்களுக்குதவி செய்யும்பொழுது, அநேகர் நிமித்தம் எங்களுக்குண்டான ஈவுக்காக அநேகராலே எங்கள் நிமித்தந் தோத்திரங்களுஞ் செலுத்தப்படும்.

யஉ. அதற்கேதுவாக எங்களுடைய புகழ்ச்சி என்னவென்றால்; நாங்கள் உலகத்திலே விசேஷமாக உங்களிடத்திலே கபடமில்லாமல் திவ்விய உண்மையோடும், மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடேயல்ல, பராபரனுடைய கிருபையோடுஞ் சஞ்சரித்தோமென்று எங்கள் மனது எங்களுக்குச்சாட்சி சொல்லுகின்றது. இதுவே எங்களுடைய புகழ்ச்சி.

யங. ஆனதால், (இங்கே) நீங்கள் வாசித்தும், அறிந்தொத்துக்கொண்டும் இருக்கிற பொருள்களையேயன்றி, வேறே பொருள்களை நாங்கள் உங்களுக்கு எழுதுகிறதில்லை. முடிவுபரியந்தமும் அப்படியே அறிந்து ஒத்துக்கொள்வீர்களென்று நம்பியிருக்கிறேன்.

௰௪ கர்த்தராகிய இயேசுவினுடைய நா
ளிலே நீங்கள் எங்களுக்குப்புகழ்ச்சியாய் இ-
ருப்பதுபோல, நாங்களும் உங்களுக்குப்பு
கழ்ச்சியாய் இருக்கிறதை ஒருபாகமாய் அ
றிந்து ஒத்துக்கொண்டிருக்கிறீர்களே.
௰௫. இப்படிப்பட்ட நம்பிக்கையினாலே
நான் உங்களுக்கு மறுபடியும் உபகாரம்
உண்டாகும்படிக்கு,
௰௬. முதலாவது, உங்களிடத்தில் வரவும்,
உங்களூர்வழியாக மக்கேதோனியா நாட்
டுக்குப்போகவும், மக்கேதோனியாவைவிட்
டுத்திரும்ப உங்களிடத்தில்வரவும், உங்க
ளால் யூதேயாநாட்டுக்கு வழிவிட்டனுப்பப்
படவும் யோசனையாய் இருந்தேன்.
௰௭. இப்படி நான் வீணாகவா யோசித்
தேன்! அல்லது என்னிடத்திலே ஆம் என்ப
து ஆமென்றும்; அல்லவென்பது அல்லவெ
ன்றும் இருக்கத்தக்கவிதமாக, நான் யோ
சிக்கிறவைகளைத்தேக இச்சையின்படியா
யோசிக்கிறேன்?
௰௮. அப்படியல்ல, நாங்கள் உங்களுக்குச்
சொன்னவார்த்தை ஆம் என்றும், அல்ல
வென்றும் இருக்கவில்லை என்கிறதற்கு உண்
மையுள்ள பராபரனே சாட்சியாய் இருக்கி
றார்.
௰௯. பராபரனுடைய வாக்குத்தத்தங்க
ளெல்லாம் இயேசுக்கிறிஸ்துவினாலே ஆ
மென்றும், ஆமனென்றும் இருக்கிறபடி
யால்,
௨௰. பராபரனுடைய மகிமை பிரஸ்தா
பமாகும்படிக்கு என்னாலும், சிலுவானுவினா
லும், தீமோத்தேயுவினாலும், உங்களுக்குள்
ளே பிரசங்கிக்கப்பட்ட பராபரனுடைய
குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவும் ஆமென்
றும், அல்லவென்றுமிராமல்; ஆம் என்று
(எப்பொழுதும் ஒரேவிதமாய்) இருந்தாரே.
௨௧. எங்களையும், உங்களையுங் கிறிஸ்து
வுக்குள் ஸ்திரப்படுத்தி, நமக்கு அபிஷே
கம் பண்ணினவர் பராபரன்.
௨௨. * அவரும் நம்மை முத்திரைப்படுத்
தி, நம்முடைய இருதயங்களில் ஆவியென்
னும் அச்சாரத்தைக் கொடுத்திருக்கிறார்.
* எபே. ௧: ௰௩, ௰௪. ௪: ௩௰.
௨௩. நான் உங்களைத்தப்பவிடும்படிக்கே
இதுவரைக்குங்கொரிந்துபட்டினத்திற்குவா
ராதிருக்கிறேன். இதைக்குறித்து என் ஆத்
துமாவுகதுக்குச்சாட்சியாக, பராபரனையே அ
ழைக்கிறேன்.
௨௪. விசுவாசத்தினிமித்தம் நாங்கள் உங்
களைப்பலவந்தமாய், * ஆளுகிறவர்களாக
வல்ல, நீங்கள் இதுவரைக்கும் விசுவாசத்தி
லே நிலைநிற்கிறபடியால், உங்கள் சந்
தோஷத்திற்கு உதவிக்காரராகவே இப்ப
டிச்சொல்லுகிறேன். * ௧ பேது ௫: ௩.

௨ அதிகாரம்.

[(௧) தான் அவர்களிடத்தில் வராததற்கு
நியாயஞ்சொல்லி, (௫) புறம்பாக்கப்பட்ட
வன் உத்தம மனஸ்தாபமடைந்ததினால்
தான் அவனை மன்னித்ததுபோல, அவர்க
ளும் அவனை மன்னித்துத்தேற்றக்கட்டளை
யிட்டு, (௰௨) தான் துரோவாவிலிருந்து மக்
கேதோனியாவுக்குப்போன முகாந்தரத்
தையும், (௰௪) தன் பிரசங்கத்தினாற் பரா
பரன் எங்குமுண்டாக்கின நற்பலனையுங்
குறித்துச்சொன்னது.]

ஆனதால், துக்கத்துடனே நான் உங்
களிடத்திலே திரும்ப வாராதப
டிக்கு, எனக்குள்ளே தீர்மானஞ் செய்
தேன்.
௨. நானுங்களைத்துக்கப்படுத்தினால், என்
னாலே துக்கம் அடைந்தவனேயல்லாமல்,
எவன் என்னைச்சந்தோஷப்படுத்துவான்
௩. ஆகையால் என்னுடைய சந்தோஷம்
உங்களெல்லாருக்குஞ் சந்தோஷமாய் இ
ருக்குமென்று நான் உங்களெல்லாரையும்
நம்பிக்கொண்டு, நான் வரும்பொழுது என
க்குச்சந்தோஷமுண்டாக்க வேண்டியவர்க
ளால் நான் துக்கம் அடையாதபடிக்கு,
(முன்னே) அப்படித்தானே யுங்களுக்கெ
ழுதினேன்.
௪. அன்றியும், மிகுந்த வியாகுலமும், மன
இடுக்கமும் அடைந்தவனாய், அதிகமான
கண்ணீரோடே உங்களுக்கெழுதினேன்.
நீங்கள் துக்கப்படும்படிக்கல்ல, உங்கள்
மேலே அதிகமாயிருக்கிற என்னுடைய
அன்பை நீங்கள் அறியும்படிக்கே அப்ப
டிச்செய்தேன்.
௫. துக்கமுண்டாக்கினவன் என்னை (மாத்
திரமல்ல,) நான் அதிக பாரம் வையாதபடி
க்கு, (என்னாலே) ஒருவிதமாய் உங்களெல்
லாரையும் துக்கப்படுத்தினான்.
௬. அப்படிப்பட்டவனுக்கு அநேகரால்
உண்டான இந்தத்தண்டனைபோதும்.
௭. ஆனதால், அவன் அதிக துக்கத்தினா
லே விழுங்கப்படாதபடிக்கு, நீங்கள் அதி
கசந்தோஷமாய் அவனுக்கு மன்னித்து,
ஆறுதல் செய்யவேண்டும்.
௮. அந்தப்படி நீங்கள் உங்கள் அன்பை
அவனுக்குக்காண்பிப்பீர்களாகவென்று உங்
களை வேண்டிக்கொள்ளுகிறேன்.
௯. அதற்காகவும், நீங்கள் சகலத்திலே
யும் கீழ்ப்படிந்து இருக்கிறீர்களோவென்று
உங்கள் குணத்தை யறியவும் இப்படி எழு
தி இருந்தேன்.
௰. ஆனதால், ஆருக்கு மன்னிக்கிறீர்களோ
அவனுக்கு நானும் மன்னிக்கிறேன். மே
லும் எதை நான் (இப்பொழுது) மன்னித்
தேனோ அதை நான் உங்கள் நிமித்தம் கி

கிறிஸ்துவினுடைய சந்நிதானத்திலே மன்
னித்தேன்.
௰௧. சாத்தானுடைய யோசனைகள் எங்க
ளுக்குத்தெரியாமல் இருக்கவில்லை. ஆன
தால், நாம் அவனாலே மேற்கொள்ளப்படா
தபடிக்கு அப்படிச்செய்தேன்.
௰௨. மேலும் நான் கிறிஸ்துவின் சுவிசே
ஷத்தைப்பிரசங்கிக்கும்படிக்கு, * துரோ
வாபட்டினத்திலே வந்தபொழுது, கர்த்த
ராலே எனக்குக்கதவு திறக்கப்பட்டிருக்
கையில், * அப். ௰௬: ௮.
௰௩. நான் என் சகோதரனாகிய தீத்து
வைக்காணாததினாலே, என் ஆவிக்கு அமை
தலிருக்கவில்லை. ஆனதால் நான் அவர்க
ளாலே அனுப்பப்பட்டு, மக்கேதோனியா
நாட்டுக்குப்புறப்பட்டுப்போனேன்.
௰௪. கிறிஸ்துவினாலே எங்களை எப்பொழு
தும் வெற்றி சிறக்கப்பண்ணி, எல்லா இடங்
களிலேயும் எங்களைக்கொண்டு அவரை யறி
கிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகி
ற பராபரனுக்குத்தோத்திரமுண்டாவதாக.
௰௫. இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே
யும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும்,
நாங்கள் பராபரனுக்குக்கிறிஸ்துவின் நற்
கந்தமாய் இருக்கிறோம்.
௰௬. * கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே
மரணத்திற்கேதுவான மரண வாசனையாக
வும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே சீ
வனுக்கேதுவான சீவ வாசனையாகவுமே இ
ருக்கிறோம். இவைகளைப் (போதிக்கிறதற்கு)
† ஆர் தகுதியாய் இருக்கிறார்கள். * ௧
பேது. ௨: ௭, ௮. † ௩: ௫. லூக். ௨: ௩௪, ௩௫.
௰௭. அநேகர் செய்கிறதுபோல நாங்கள்
பராபரனுடைய வசனத்தைக்கலப்பாய்ப்
பேசாமல், துப்புரவாகவும், பராபரனாலே
பெற்றதாகவும், பராபரனுக்கு முன்பாக
வுங் கிறிஸ்துவைக்குறித்துப்பேசுகிறோம்.

௩ அதிகாரம்.

[(௧) கள்ளப்போதகர்கள் தன்மேல் வீண்
பெருமை சுமத்தாதபடிக்குக்கொரிந்தர் வி
சுவாசமும், நற்கிரியையுமே தன் ஊழியத்
துக்குத்திருஷ்டாந்தம் என்றும், (௬) பழை
ய உடம்படிக்கையின் ஊழியக்காரருக்கும்,
புது உடம்படிக்கையின் ஊழியக்காரருக்
கும் வித்தியாசத்தைக்காண்பித்து, (௰௨)
குற்றஞ்சாற்றுகிற நியாயப்பிரமாணத்தைப்
பார்க்கிலும், சீவனையும், விடுதலையையுங்
கொடுக்கிற சுவிசேஷம் மேன்மையுள்ளது
போல, தன் ஊழியம் பழைய உடம்படிக்
கையின் ஊழியத்தைப்பார்க்கிலும், மேன்
மையுள்ளதென்றும் சொன்னது.]

எங்களை நாங்களே மறுபடியும் மெய்
ச்சிக்கொள்ளத் தொடங்குகிறோமா!
அல்லது சிலருக்கு வேண்டியதாய் இருக்கி
றதுபோல, உங்களுக்கு உபசார நிருபங்க
ளை யனுப்பவும், அல்லது உங்களிடத்தில் உ
பசார நிருபங்களை வாங்கவும் எங்களுக்கு
வேண்டுமோ?
௨. நீங்களே எங்களுக்கு அப்படிப்பட்ட
நிருபமாய் இருக்கிறீர்கள். அது எங்கள்
இருதயங்களில் எழுதப்பட்டிருக்கிறது. மே
லும் அது சகல மனிதராலும், அறிந்து வா
சிக்கப்பட்டு வருகின்றது.
௩. நீங்களே எங்கள் ஊழியத்திலுண்டா
ன கிறிஸ்துவினுடைய நிருபமாக வெளிய
ரங்கமாக்கப்பட்டவர்கள் அது மையினா
லல்ல, * சீவனுள்ள பராபரனுடைய ஆவி
யினாலே கற்பலகைகளிலல்ல, மாம்சமான
இருதயங்களாகிய பலகைகளிலே எழுதப்
பட்டிருக்கின்றது. * எரே. ௩௧: ௩௩. எசே.
௩௬: ௨௬, ௨௭.
௪. இப்படிப்பட்ட நம்பிக்கையை நாங்
கள் பராபரனுக்கு முன்பாகக்கிறிஸ்துவின்
மூலமாகக்கொண்டிருக்கிறோம்.
௫. ஒன்றை யோசிக்கிறதற்கு * நாங்கள்
எங்களாலே திராணியுள்ளவர்களாகவல்ல,
எங்களுடைய திராணி பராபரனால் உண்டா
யிருக்கின்றது. * பிலிப். ௨: ௰௩.
௬. நாங்கள் புது உடம்படிக்கையின் ஊ
ழியக்காரராய் இருக்கும்படி, அவரே எங்க
ளுக்குத் திராணியைக்கொடுத்தார். அந்த
உடம்படிக்கை எழுத்திற்குரியதல்ல, ஆவிக்
குரிய உடம்படிக்கையாய் இருக்கின்றது.
எழுத்திற்குரியது கொலை செய்கின்றது. ஆ
விக்குரியது உயிர்ப்பிக்கின்றதே.
௭. கற்களில் எழுத்துக்களாற் பதிந்திருந்
த மரணத்திற்கேதுவான ஊழியத்தை மோ
சே செய்தபொழுது, * அவனுடைய மு
கத்திலே மகிமை பிரகாசம் உண்டானதால்,
இஸ்ரவேல் சந்ததியார் அவனுடைய முகத்
தை நோக்கிப்பார்க்கமாட்டாமல், இருந்
தார்களே. ஒழிந்துபோன மகிமையுடைய
அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமை
யுள்ளதாய் இருக்க, * ௨ மோ. ௩௪: ௩௰.
௮. ஆவிக்கேற்ற உடம்படிக்கையின் ஊ
ழியம் மிகவும் * அதிகமாய் மகிமையுள்ள
தாய் இருக்குமல்லவா? * உரோ ௮: ௯—௰௬.
௯. ஆக்கினைக்குத்தீர்ப்பைக்கொடுத்த ஊ
ழியம் மகிமையுள்ளதாயிருக்க, * நீதியைக்
கொடுக்கிற ஊழியம் மிகவும் அதிகமான
மகிமையாய் இருக்குமல்லவா! * உரோ.
௧: ௰௬, ௰௭.
௰. இதின் பொருட்டாக மகிமைப்பட்டி
ருந்த அந்த ஊழியம் இந்த ஊழியத்திற்
கு உண்டாயிருக்கிற அதிக மகிமைக்குமுன்
பாக மகிமைப்பட்டதல்ல.
௰௧. அன்றியும் ஒழிந்துபோனது மகிமை
கொண்டிருப்பதால், நிலை நிற்பது மிகவும்
அதிகமாய் மகிமையுள்ளதாய் இருக்குமே.

௧௨. ஆனதால் இப்படிப்பட்ட நம்பிக்கையையுடையவர்களாய் நாங்கள் மிகுந்த தைரியத்தோடே நடக்கிறோம்.

௧௩. அன்றியும் ஒழிந்து போகிறதின்முடிவை இஸ்ரவேல் சந்ததியார் நோக்கிப்பாராதபடிக்கு, மோசே தன் முகத்தின்மேல் * முக்காடு போட்டதுபோல, நாங்கள் போடுகிறதில்லை. * ௨ மோ. ௩௪:௩௩—௩௫.

௧௪. அவர்களுடைய புத்தி * கடினமாய் இருந்தது. இந்நாள் வரைக்கும் பழைய ஏற்பாட்டின் புத்தகம் வாசிக்கப்படுகையில், அந்த முக்காடு அவர்களிடத்தில் இருக்கின்றது. * ஏசா. ௬: ௰.

௧௫. அந்தப்பழைய உடம்படிக்கை கிறிஸ்துவினாலே நீக்கப்பட்டதென்று அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதில்லை. ஆனதால் மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்படும்பொழுது, இந்நாள் வரைக்கும் முக்காடு அவர்கள் இருதயத்தின்மேலே கிடக்கின்றது.

௧௬. * அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பும்பொழுது, அந்த † முக்காடு எடுக்கப்படும். * உரோ. ௧௧: ௨௩—௨௭. † ஏசா. ௨௫: ௭.

௧௭. கர்த்தரே அந்த ஆவியாயிருக்கிறார். கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையும் இருக்கின்றது. * யோ. ௪: ௨௪.

௧௮. ஆதலால் நாம் எல்லாரும் * திறந்த முகமாய், கர்த்தருடைய மகிமையைக்கண்ணாடியிலே கண்டாற்போலக்கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச்சாயலாகத் தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம். * யோவா. ௧: ௧௪.

௪ அதிகாரம்.

[(௧) தான் இளைப்படையாமல் உத்தமமும் உண்மையுமுள்ள சாக்கிரதையோடே சுவிசேஷத்தைப்பிரசங்கித்ததையும், (௭) அதினாலே தான் அடைந்த வருத்தங்களும், துன்பங்களும் பராபரனுடைய வல்லமைக்குப்புகழாயும், (௧௨) திருச்சபைக்குப்பிரயோசனமாயும், (௧௬) தனக்குத்தானே நித்திய மகிமைக்கேதுவாயும், இருந்ததென்பதையும் சொல்லியது.]

இப்படிப்பட்ட ஊழியம் எங்களுக்கு இரக்கமாய் உண்டாயிருக்கிறபடியால், நாங்கள் இளைப்படையாமல்,

௨. * அவலட்சணமான அந்தரங்கக்காரியங்களைத்தள்ளிப்போட்டு, தந்திரமாய் நடவாமலும், பராபரனுடைய வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தையே வெளிப்படுத்துகிறதினாலே பராபரனுக்கு முன்பாக எல்லா மனிதருடைய மனதுக்கும் எங்களை (நிசஸ்தரென்று) ஒப்புவிக்கிறோம். * ௧ தெச. ௨: ௩—௫.

௩. அப்படியும் நாங்கள் பிரசங்கிக்கிற சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால், தங்களைக்கெடுக்கிறவர்களுக்குள்ளே மாத்திரம் அது மறைபொருளாய் இருக்கும்.

௪. அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் * பராபரனுடைய சாயலாகிய கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி பிரகாசமாய் இராதபடிக்கு † இவ்வுலகத்தின் தலைவன் அவர்களுடைய புத்தியைக்குருடாக்கினான். * எபி. ௧: ௩. † யோவா. ௧௪: ௩௰.

௫. நாங்கள் எங்களைக்(கர்த்தரென்று) பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவையே கர்த்தரென்றும், எங்களை இயேசுவுக்காக உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்.

௬. இருளில் இருந்து * ஒளியைப்பிரகாசிக்கச்சொன்ன பராபரன் இயேசுக்கிறிஸ்துவினிடத்திலுள்ள தமது மகிமையை அறிகிற அறிவாகிய ஒளியை (உங்களுக்கு) தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார். * ௧ மோ. ௧: ௩.

௭. இப்படிப்பட்ட மகிமையான வல்லமை * எங்களால் அல்ல, பராபரனால் உண்டாயிருக்கின்றதென்று தோன்றும்படிக்கு, இந்தப்பொக்கிஷத்தை மண் பாண்டங்களிற் பெற்றிருக்கிறோம். * ௧ கொரி. ௨: ௪, ௫.

௮. நாங்கள் எப்பக்கத்திலேயும் நெருக்கப்பட்டும், ஒடுங்கிப்போகிறதில்லை. கலக்கம் அடைந்தும்திடனற்றவர்களாகிறதில்லை.

௯. தொடரப்பட்டும், கைவிடப்படுகிறதில்லை. கீழே தள்ளப்பட்டும், கெட்டுப்போகிறதில்லை.

௰. இயேசுவினுடைய சீவனும் எங்கள் சரீரத்திலே வெளியரங்கமாகும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்திற் சுமந்து திரிகிறோம். * உரோ. ௮: ௩௬. கலாத். ௬: ௧௭.

௧௧. சாவுக்கினமான எங்கள் சரீரத்திலே இயேசுவினுடைய சீவனும் வெளியரங்கமாகும்படிக்கு, உயிரோடிருக்கிற நாங்கள் எப்பொழுதும் இயேசுவின் நிமித்தமாக மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம்.

௧௨. இப்படி மரணமானது எங்களிடத்திலும், சீவனானது உங்களிடத்திலுங் கிரியை செய்கின்றது.

௧௩. * நான் விசுவாசித்திருக்கிறபடியால், பேசிக்கொள்ளுகிறேனென்று எழுதியிருக்கிறபடி, விசுவாச ஆவியை யுடையவர்களாய், * சங்கீ. ௱௧௬: ௰.

௧௪. நாங்களும் கர்த்தராகிய இயேசுவை யெழுப்பினவர் * எங்களையும் இயேசுவைக்கொண்டெழுப்பி, உங்களுடனே கூடத் தமக்குமுன்பாக நிறுத்துவாரென்று அறித்

து, விசுவாசித்துப்பேசிக்கொள்ளுகிறோம்.
* உரோ. அ: யக.

யரு. திரளான பேருடைய அநேகருடைய
தோத்திரத்தினாலே, பராபரனுடைய மகி
மை விளங்குதற்கேதுவாகப்பெருகும்படிக்
கு, இவையெல்லாம் உங்கள் (நன்மைக்காக)
நடக்கின்றன.

ய௬. ஆனபடியினாலே நாங்கள் இளைப்ப
டைகிறதில்லை. மேலும், எங்கள் புறம்பா
ன மனிதத்துவம் அழிகையிலும் உள்ளான
மனிதத்துவம் நாடோறும் புதிதாக்கப்படு
கின்றது.

யஎ. மேலும், * அதிக சீக்கிரமாய் நீங்கு
வதுமாய், இலகுவுமாயிருக்கிற நம்முடைய
உபத்திரவம் † மிகவும் மிகுதியான நித்திய
கனமகிமையை நமக்கு உண்டாக்குகின்ற
து. * சங்கீ. ௬௰: ரு † அ: யஅ.

யஅ. காணப்படுகிறவைகளையல்ல, காணப்
படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கே
அப்படி உண்டாக்குகின்றது. காணப்படு
கிறவைகள் அநித்தியமானவைகள். காணப்
படாதவைகளே நித்தியமானவைகள்.

ரு அதிகாரம்.

[(க) தான் நித்தியமகிமையின் நம்பிக்கை
யை யுடையவனாக, (௬) அந்த மகிமையை
யும், பொதுவான நியாயத்தீர்ப்பையுமடை
ய நன்மனச்சாட்சியைக்காத்துக்கொண்டு,
(யஉ) அதினால் மேன்மைபாராட்டும் பொ
ருட்டல்ல, (யச) கிறிஸ்துவினிடத்திற் சீவ
னைப்பெற்ற தான் கிறிஸ்துவின் மகிமைக்
குப்புதுச்சிருஷ்டியாய்ச்சீவனம்பண்ண வே
ண்டியதென்றும், (யஅ) எல்லாருங் கிறிஸ்
துவினால் பராபரனோடு ஒப்புரவாகும்படி
ஒப்புரவாக்கும் ஊழியத்தை அடைந்தா
னென்றுஞ் சொல்வியது.]

அதெப்படியென்றால், * பூமிக்குரிய
கூடாரம்போன்ற நம்முடையவீடு
இடிந்துபோகும்பொழுது, பரமண்டலங்க
ளிலே கையாற்செய்யப்படாமல், † தேவ
னால் உண்டாக்கப்பட்ட நித்தியமான வீ
டாகிய வாசஸ்தலம் நமக்குண்டென்று அ
றிந்திருக்கிறோம். * ச: எ. யோபு. ச:
ய௬. உ பேது. க: யந, யச. † யோவா.
யச: உ.

உ. நாம் * வீடில்லாதவர்களல்ல. * வெளி.
௩: யஅ. ய௬: யரு.

௩. * தரிக்கப்பட்டவர்களாயிருக்கப்பரம
ண்டலத்திலுள்ள நமது வாசஸ்தலத்தை
நாம் தரித்துக்கொள்ள மிகவும் விரும்புகிற
வர்களாய் இந்தவீட்டிலே † தவித்திருக்கி
றோம். * க கொரி. யரு: ருந, ருச. உரோ.
அ: உ௩.

ச. இந்தக்கூடாரத்திலிருக்கையில் நாம்
பாரஞ்சுமந்து தவிக்கிறோம். ஆனதால்,
நாங்கள் (இதைப்) போர்க்கவிரும்பாமற்சீவ
னாலே மரணம் விழுங்கப்படத்தக்கதாக,
(உடனே) அதைத்தரித்துக்கொள்ள விரும்
புகிறோம்.

ரு. இப்படியே யிருக்கும்படி பராபரனே
எங்களை எத்தனம்பண்ணி, * ஆவியென்னும்
அச்சாரத்தையும் எங்களுக்குத்தந்தார். *
க: உஉ. உரோ. அ: உ௩. எபே. க: யச.
ச: ௩௰.

௬. ஆகையினாலே நாங்கள் இந்தத்தேகத்
திலே குடியிருக்கையில் * தரிசித்து நடவா
மல், விசுவாசித்து நடக்கிறதால், * உரோ.
அ: உச, உரு.

எ. கர்த்தாவைச்சேராத வழிப்போக்கரா
யிருக்கிறோமென்றறிந்தும், (எப்பொழுது
ம்) தயிரியமாயிருக்கிறோம்.

அ. நாங்கள் தயிரியமாகவேயிருந்து இந்
தத்தேகத்தைவிட்டுப்போகவும், கர்த்தரி
டத்திற் குடியிருக்கவும் அதிகமாய் விரும்பு
கிறோம்.

௯. அதினிமித்தமே நாங்கள் (அவரிடத்
தில்) குடியிருந்தாலும், (அவரைவிட்டு) இங்
கே சஞ்சரித்தாலும் அவருக்குப்பிரியமான
வர்களாயிருக்க முக்கியமாய் நாடுகிறோம்.

ய. நாமெல்லாரும் அவனவன் தான் நடப்
பித்த நன்மைக்காகிலும், தீமைக்காகிலுந்
தக்கவைகளைச்சரீரத்திலே அடையும்படிக்
குக் * கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு
முன்பாக வெளிப்படவேண்டுமே. * மத்.
உரு: ௩க, ௩உ.

யக. ஆகையால், * கர்த்தருக்குப்பயப்ப
டத்தக்கதென்று நாங்கள் அறிந்து, மனித
ருக்குப்போதிக்கிறோம். இப்படிப்பராபர
னுக்குமுன்பாக வெளியரங்கமாயிருக்கிறோ
ம். உங்கள் மனதிலேயும் (அப்படியே)
வெளியரங்கமாயிருக்கிறோமென்று நம்புகி
றேன். * உ பேது. ௩: ய—யஉ.

யஉ. இதினாலே நாங்கள் உங்களுக்குமுன்
பாக எங்களை மறுபடியும் மெய்ச்சிக்கொள்
ளாமல், இருதயத்தாலல்ல, வெளிவேஷத்
தால் மேன்மைபாராட்டுகிறவர்களுக்கெதி
ரே நீங்கள் எங்களைக்குறித்து மேன்மைபா
ராட்டும்படிக்கு ஏதுகொடுக்கிறோம்.

ய௩. (அதிலே) நாங்கள் பித்தங்கொண்ட
வர்களென்றால், பராபரனுக்காகவும், தெ
ளிந்த புத்தியுள்ளவர்களென்றால், உங்களுக்
காகவும் அப்படியிருக்கும்.

யச. அதற்காகக்கிறிஸ்துவினுடைய அன்
பு எங்களை நெருக்கி ஏவுகின்றது. எப்படி
நிதானிக்கிறோமென்றால், * எல்லாருக்காக
வும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்
தார்கள். * க தீமோ. உ: சு.

யரு. மேலும் * பிழைத்திருக்கிறவர்கள் இ
னித்தங்களுக்கென்று பிழையாமல், தங்க
ளுக்காக மரித்தெழுந்தவருக்கென்று பிழை

க்கும்படிக்கு, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரேயென்று நிதானிக்கிறோம். * உரோ. ௰௪: ௭—௯.

௰௬. ஆகையால், இதுமுதற்கொண்டு நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்; முன்னே நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்தும், இப்பொழுதும், இனிமேலும் அவரை யப்படியாக அறியோம்.

௰௭. கிறிஸ்துவுக்குள்ளிருக்கிறவன் * புதுச்சிருஷ்டியாயிருக்கிறானே. பழையவைகள் ஒழிந்துபோயின. † சகலமும் புதிதாயிற்றே. * கலாத். ௬: ௰௫. † அபி. ௨௧: ௫.

௰௮. இவையெல்லாம் பராபரனாலே யிருக்கின்றன. அவர் இயேசுக்கிறிஸ்துவைக்கொண்டு நம்மைத்தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்குக்கொடுத்தார்.

௰௯. என்னவெனில், கிறிஸ்துவினாலே பராபரன் உலகத்தாருடைய பாவங்களை அவர்கள்மேலே சுமத்தாமல், அவர்களைத்தமக்கு ஒப்புரவாக்கிக்கொண்டு, ஒப்புரவாக்குதலாகிய உபதேசத்தை எங்களிடத்தில் ஏற்படுத்தினார்.

௨௰. ஆனபடியினாலே நாங்கள் கிறிஸ்துவுக்காகத்தானாதிபதிகளாயிருக்கிறோம். பராபரனே எங்களாலே புத்திசொல்லுகிறவராயிருக்க, நாங்கள் கிறிஸ்துவுக்காக (மனிதர்களை) நோக்கி,

௨௧. பாவத்தை அறியாதவராலே * நாம் பராபரனுக்குமுன்பாக நீதிமான்களாக்கப்படும்படிக்கு, பராபரன் † அவரை நமக்காகப்பாவமாக்கினார். ஆகையால், பராபரனோடே ஒப்புரவாகுங்களென்று வேண்டிக்கொள்ளுகிறோம். * எரேமி. ௨௩: ௬. ௧ கொரி. ௧: ௩௰. † ஏசா. ௫௩: ௪—௬.

௬ அதிகாரம்.

[(௧) தன் போதகத்தினாலும், (௩) நல் நடக்கையினாலும், (௪) சுவிசேஷத்தினிமித்தம் பொறுமையோடே சகிக்கும் எல்லாத் துன்பத்தினாலும், நிந்தையினாலும் தன்னைக் கிறிஸ்துவின் உத்தம ஊழியக்காரனென்று திருஷ்டாந்தப்படுத்தி, (௰) அதைக்குறித்துத்தாராளமாய்ப்பட்சமுள்ள தன் இருதயத்தை அவர்களுக்கு விரித்துக்காண்பித்ததுபோல, (௰௩) அவர்களும் பட்சத்தைப் பாராட்டும்படி விரும்பி, (௰௪) அவர்கள் சீவனுள்ள பராபரனுடைய தேவாலயங்களாயிருக்க அஞ்ஞானிகளையும், அவர்கள் தீட்டுகளையும் விலகியிருக்கச்சொல்லியது.]

மேலும் (எனக்குத்)* தகுதியான காலத்திலே நான் உனக்குச்செவிகொடுத்து, இரட்சணியநாளிலே உனக்கு உதவிசெய்தேனென்று கர்த்தர் சொல்லியிருக்கிறாரே பாருங்கள். இப்பொழுதே மிகவுந் தகுதியானகாலம். இப்பொழுதே இரட்சணியநாள். * ஏசா. ௪௯: ௮.

௨. ஆனதால், எங்களுடனேகூட வேலை செய்கிறவர்களே! * நீங்கள் பராபரனுடைய கிருபையை வீணாய்ப்பெறுதபடிக்குப் புத்திசொல்லுகிறேன். * ௧ கொரி. ௩: ௯.

௩. நம்முடைய ஊழியத்தைக்குற்றப்படுத்தத்தக்கதாக நாம் ஒருவருக்கும் முகாந்தரத்தைக்கொடாமல், எல்லாவிதத்திலேயும் நம்மைப்பராபரனுடைய ஊழியக்காரராக ஒப்புவிக்கக்கடவோம்.

௪. உபத்திரவங்கள், இடுக்கண்கள், நெருக்கங்கள்,

௫ * அடிகள், காவல்கள், கலகங்கள், பிரயாசங்கள், தூக்கமில்லாமை; உபவாசங்களுள்ள காலங்களில் மிகுந்த பொறுமையினாலும், கற்பினாலும், அறிவினாலும், * ௰௧: ௨௪, ௨௫

௬. நீடிய சாந்தத்தினாலும், தயவினாலும், பரிசுத்த மனதினாலும், வஞ்சகமில்லாத அன்பினாலும்,

௭. சத்தியமுள்ள வசனத்தினாலும், திவ்விய பலத்தினாலும், நீதியாகிய வலதிடதுபக்கத்தாயுதங்களினாலும்;

௮. கனத்தையும், கனஈனத்தையும், பெறுங்காலத்திலேயும், துர்க்கீர்த்தியையும், நற்கீர்த்தியையும் பெறுங் காலத்திலேயும்; * எத்தரென்னப்பட்டாலும், நிசஸ்தராகவும், * மத். ௨௭: ௬௩.

௯. அறியப்படாதவர்கள் என்னப்பட்டாலும், நன்றாய் அறியப்பட்டவர்களாகவும், மரித்தவர்களென்னப்பட்டாலும், உயிரோடிருக்கிறவர்களாகவும், தண்டிக்கப்பட்டவர்களானாலுங் கொலைசெய்யப்பட்டிராதவர்களாகவும்,

௰. துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும், எப்பொழுதுஞ் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரரென்னப்பட்டாலும், அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும், சகலத்தையுமுடையவர்களாகவும் நம்மை ஒப்புவிக்கக்கடவோம்.

௰௧. ஆ, கொரிந்தரே! எங்கள்வாய் உங்கள் பட்சமாய்த்திறக்கப்பட்டிருக்கிறது. எங்களிருதயம் விஸ்தாரமாக்கப்பட்டிருக்கின்றது.

௰௨. எங்களுள்ளம் உங்களைக்குறித்து நெருக்கப்படவில்லை. உங்கள் உள்ளமே எங்களைக்குறித்து நெருக்கப்பட்டிருக்கின்றது.

௰௩. ஆதலால், மறு ஈடாக நீங்களும் விஸ்தாரமாகுங்களென்று (என்) * பிள்ளைகளைப்போல உங்களிடத்திற் கேட்டுக்கொள்ளுகிறேன். * ௧ கொரி. ௪: ௰௪.

௰௪. ஒரே * நுகத்திலே அவிசுவாசிகளுட

னே பூட்டப்படாதிருப்பீர்களாக. என்னத்
தினாலெனில்; நீதிக்கும், அக்கிரமத்திற்கும்
என்ன சம்பந்தமிருக்கிறது? † இருளுக்
கும், ஒளிக்கும் ஐக்கமென்ன? * ௨ மோ.
௩௪: ௰௨. † எபே. ௫: ௰௧.
௰௫. கிறிஸ்துவுக்கும், பசாசுக்கும் இசை
வுண்டா? அல்லது அவிசுவாசியுடனே விசு
வாசிக்குப்பங்குண்டா?
௰௬. விக்கிரகக்கோவில்களுக்கும், பராபர
னுடைய ஆலயத்திற்குஞ்சம்பந்தமுண்டா?
* நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி,
அவர்களுக்குள்ளே நடந்துகொண்டு, அவர்
களுடைய தேவனாய் இருப்பேனென்றும்,
அவர்கள் என்னுடைய சனங்களாய் இருப்
பார்களென்றும் பராபரன் சொன்னபடி,
நீங்கள் † சீவனுள்ள பராபரனுடைய ஆல
யமாய் இருக்கிறீர்களே. * ௩ மோ. ௨௬:
௰௨. † ௧ கொரி. ௩: ௰௬.
௰௭. * ஆனபடியினாலே நீங்கள் அவர்களி
டத்திலிருந்து புறப்பட்டுப்பிரிந்துபோய்,
அசுத்தமானதைத்தொடாதிருங்கள். * ஏசா.
௫௨: ௰௧. அறிவி. ௰௮: ௪.
௰௮. அப்பொழுது நான் உங்களை யங்கிக
ரித்துக்கொண்டு, * உங்களுக்குப்பிதாவாய்
இருப்பேன். நீங்கள் எனக்குக்குமாரருமா
ய், குமாரத்திகளுமாய் இருப்பீர்களென்று,
சர்வ வல்லமையுள்ள பராபரன் சொல்லுகி
றார். * சங். ௱௩: ௰௩. எரே. ௩௧: ௯—௨௰.

௭ அதிகாரம்.

[(௧) பரிசுத்தமாய் நடக்கும்படிக்கும், (௨) தான் அவர்களுக்குப்பாராட்டின பட்சத்தை அவர்கள் தனக்குப்பாராட்டவும், (௩) தன்னுடைய முந்தின நிருபத்தில் அவர்களுக்குச்சொல்லிய புத்திகளை ஏற்றுக்கொண்டு, தெய்வேத்தினமாய்த்துக்கப்பட்டதை, தீத்துவினாற் கேள்விப்பட்டதற்காகவும். (௰௩) தான் முந்தி அவர்களைக்குறித்து, பெருமை பாராட்டினதற்கொத்ததாய், அவர்கள் தீத்துவில் அன்புகூர்ந்து அவனுக்குக்கீழ்ப்படிந்ததற்காகவும் தன் உபத்திரவங்களிலுஞ் சந்தோஷப்பட்டானென்று சொல்லியது.]

இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் ந
மக்குண்டாயிருக்க, பிரியமானவர்க
ளே! சரீரத்தையும் ஆவியையும் அசுசிப்ப
டுத்துகிற யாவற்றிற்கும் நாம் விலகி, நம்
மைச்சுத்திகரித்துக்கொண்டு, தேவபயத்
தோடே முழுவதும் பரிசுத்தவான்களாகும்
படி நடந்துகொள்ளக்கடவோம்.
௨. எங்களை யங்கிகரித்துக்கொள்ளுங்கள்.
நாங்கள் ஒருவனுக்கும் அநியாயஞ்செய்ய
வில்லை. ஒருவனையுங் கெடுக்கவில்லை.
௩. ஒருவனையும் வஞ்சிக்கவில்லை. உங்க
ளைக்குற்றவாளிகளாக்கும்பொருட்டாக இப்
படி நான் சொல்லுகிறதில்லை. முன்னே
நான் சொன்னபடி உங்களுடனேகூடச்சா
வவும், கூடப்பிழைக்கவுந் தக்கதாக, * எங்
களிருதயங்களிலிருக்கிறீர்களே. * ௬: ௰௧,
௰௨.
௪. ஆனதால், மிகுந்த தயிரியத்தோடே
உங்களுடனே பேசுகிறேன் உங்களைக்குறித்
து மிகவும் மேன்மைபாராட்டுகிறேன். ஆறு
தலால் நிறையப்பட்டிருக்கிறேன். எங்களு
க்கு வந்திருக்கிற மிகுந்த உபத்திரவத்திலே
பரிபூரண சந்தோஷப்படுகிறேன்.
௫. எப்படியென்றால், நாங்கள் மக்கெ
தோனியா நாட்டிலே வந்தபொழுது, எங்
கள் சரீரத்திற்கு அமைதலொன்றுமில்லா
மல் எப்பக்கத்திலேயும் உபத்திரவப்பட்
டோம். புறம்பே போராட்டங்களும், உள்
ளே பயங்களுமிருந்தன.
௬. ஆகிலும், * தாழ்மையானவர்களுக்கு
ஆறுதல்செய்கிற பராபரன் தீத்துவந்ததி
னாலே எங்களுக்கு ஆறுதல் செய்தார்.
* ௧: ௪, ௫.
௭. அவன் வந்ததினால்மாத்திரமல்ல. உங்
கள் வாஞ்சையையும், உங்கள் துக்கிப்பை
யும் எனக்காக உங்களுக்குள்ள பத்திவயிராக்
கியத்தையும் அவன் எங்களுக்கறிவித்தபொ
ழுது, தான் உங்களாலே ஆறுதலையடைந்
ததினாலும், அதிகமாய்ச்சந்தோஷப்பட்
டேன்.
௮. ஆனதால், நான் என் * நிருபத்தினா
லே உங்களைத்துக்கப்படுத்தியிருந்தும், மன
ஸ்தாபப்படமாட்டேன். அந்த நிருபங்
கொஞ்சப்பொழுதாகிலும் உங்களைத்துக்
கப்படுத்திற்றென்று நான் பார்த்து, மனஸ்
தாபப்பட்டிருந்தும், இப்பொழுது நீங்
கள் துக்கப்பட்டதினாலேயல்ல. * ௨: ௪.
௯. நீங்கள் மனந்திரும்புகிறதற்கேதுவாக
த்துக்கப்பட்டதினாலே சந்தோஷப்படுகி
றேன். நீங்கள் ஒன்றிலும் எங்களால் நஷ்
டப்படாதபடிக்கு, தேவேத்தினமான துக்
கம் அடைந்தீர்களே.
௰. * தேவேத்தினமான துக்கம் பின்னே
மனஸ்தாபமில்லாமல் இரட்சிப்புக்கேதுவா
ன மனந்திரும்புதலை யுண்டாக்குகின்றது.
† லவுகிக துக்கம் மரணத்தை யுண்டாக்
குகின்றது. * மத்தே. ௨௬: ௭௫. ௨ சாமு.
௰௨: ௰௩. † ௧ தீமோ. ௬: ௰.
௰௧. பாருங்கள். நீங்கள் தேவேத்தினமா
ன துக்கம் அடைந்தது உங்களிடத்தில்
எத்தனை சாக்கிரதையையும், எத்தனை நி
யாயஞ் சொல்லுதலையும், எத்தனை விசனத்
தையும், எத்தனை பயத்தையும், எத்தனை
வாஞ்சையையும், எத்தனை பத்தி வயிராக்கி
யத்தையும், எத்தனை தண்டனையையும்
உண்டாக்கிற்று! அந்தச்சங்கதியைக்குறித்

து நீங்கள் எவ்விதத்திலேயும் உங்களைச்சுத்தவான்களென்று ஒப்புவித்தீர்கள்.

௰௨. ஆகையினாலே நானுங்களுக்கு அப்படி எழுதியிருந்தும் அநியாயத்தைச்செய்தவனிமித்தமல்ல, அநியாயஞ் செய்யப்பட்டவனிமித்தமுமல்ல, பராபரனுக்குமுன்பாக உங்களைக்குறித்து, எங்களுக்குண்டாயிருக்கிற சாக்கிரதை யுங்களிடத்தில் வெளிப்படுவதினிமித்தமாகவே அப்படி எழுதியிருந்தேன்.

௰௩. ஆனதால் நீங்கள் ஆறுதலடைந்ததினாலே நாங்களும் ஆறுதலுள்ளவர்களாய் இருக்கிறோம். விசேஷமாக, தீத்துவினுடைய ஆவி யுங்கள் அனைவராலும் ஆறுதலையடைந்ததினாலே அவனுக்கு வந்த சந்தோஷத்தால் அதிகமாய்ச்சந்தோஷப்பட்டோம்.

௰௪. இப்படியிருக்க, உங்களுக்குப்புகழ்ச்சியாய் நான் அவனிடனே சொன்னதைக்குறித்து நான் வெட்கப்படமாட்டேன். நாங்கள் சகலத்தையும் உங்களுக்குச்சத்தியமாய்ச்சொன்னதுபோல, தீத்துவுடனே நான் உங்களுக்குப்புகழ்ச்சியாய்ச்சொன்னதுஞ் சத்தியமாக விளங்கிற்றே.

௰௫. மேலும் அவன் தன்னை நீங்கள் பயத்தோடும், நடுக்கத்தோடும் ஏற்றுக்கொண்டதையும், நீங்களெல்லாருங் கீழ்ப்படிந்ததையும் நினைத்துக்கொண்டு தன் மனதிலே யுங்கள்மேலே யதிக அன்புள்ளவனாகிறான்.

௰௬. ஆகையால் நான் எவ்விதத்திலேயும், உங்களைக்குறித்துத் திடனாயிருக்கலாமென்று சந்தோஷப்படுகிறேன்.

௮ அதிகாரம்.

[(௧) எருசலேமிலிருந்த எளிய சகோதரர்களுக்குத்தருமஞ்செய்யும்படி அவர்களை மக்கேதோனியருடைய திருஷ்டாந்தத்தினாலும், (௭) முன் அவர்கள்செய்த உதவியினாலும், (௯) கிறிஸ்துவினுடைய கிருபையினாலும், (௰௪) அவர்களுக்குண்டாகும் ஞான நன்மைகளினாலும் அவர்களை ஏவி, (௰௯) அவர்களுடைய தருமத்தைச்சேகரம்பண்ண, தீத்துமுதலானவர்கள் தன்னுடைய கேட்டுக்கொள்ளுதலின்படி மனராசியாய் அவர்களிடத்தில் வந்ததற்காக அவர்களை அங்கிகரிக்கும்படி ஒப்புவித்ததைச்சொல்லியது.]

பின்னுஞ் சகோதரரே! மக்கேதோனியா தேசத்துச்சபைகளுக்குப் பராபரன் அளித்த கிருபையை யுங்களுக்கறிவிக்கிறோம்.

௨. என்னவென்றால், அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில் கொடிய தரித்திரராயிருந்தும், தாங்கள் பரிபூரணமான சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரமாய்த் (தருமத்தைக்) கொடுத்தார்கள்.

௩. மேலும் அவர்கள் தங்களாலானமட்டுந் தங்கள் பலத்திற்குமேலாகவுங் கொடுக்கும்படிக்கு, தாங்களே மனதுள்ளவர்களாய் இருந்தார்கள். அதற்கு நானே சாட்சியாயிருக்கிறேன்.

௪. மேலும் * அவர்கள் தங்கள் உபகாரத்தையும், பரிசுத்தவான்களுக்குச்செய்யப்படுந் தரும ஊழியத்தின் பங்கையும், ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று எங்களை மிகவும் வேண்டிக்கொண்டு, * அப்போ. ௪: ௩௪, ௩௫.

௫. எங்கள் நம்பிக்கைக்குமேலாக, தங்களைத்தாமே முதலாவது கர்த்தருக்கும், பின்பு பராபரனுடைய சித்தத்தினாலே எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்.

௬. ஆனதால் தீத்துத்தான் முன்னே தொடங்கினபிரகாரமாக இந்தத்தருமகாரியத்தை உங்களிடத்திலே முடிக்கவும் வேண்டுமென்று அவனிடத்திற் கேட்டுக்கொண்டோம்.

௭. அல்லாமலும் நீங்கள் விசுவாசத்திலேயும், பேச்சிலேயும், அறிவிலேயும், எல்லாவிதச்சாக்கிரதையிலேயும், எங்கள்மேலுள்ள உங்கள் அன்பிலேயும் மற்றும் பலவித நன்மைகளிலேயும் பெருகியிருக்கிறதுபோல, இந்தத்தருமகாரியத்திலேயும் பெருகவேண்டுமென்று விரும்புகிறோம்.

௮. இப்படி நான் கட்டளையாகச்சொல்லாமல் மற்றவர்களுடைய சாக்கிரதையினிமித்தமும் உங்கள் அன்பின் உண்மையைச் சோதிக்கும்பொருட்டாகவும் என்னுடைய யோசனையைமாத்திரஞ் சொல்லியிருக்கிறேன்.

௯. நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் கிருபையை யறிந்திருக்கிறீர்களே. அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தமே * தரித்திரரானாரே. * சகரி. ௯: ௯. ஆக். ௯: ௫௮.

௰. மேலும், (இந்தத்தருமத்தைச்) செய்கிறதுமாத்திரமல்ல, ஒரு வருஷத்திற்குமுன்பு (அதை) ஆரம்பம்பண்ணும்படி தோன்றின விருப்பமும் உங்களுக்குப்பிரயோசனமாயிருக்கும்.

௰௧. ஆகையாற் செய்கிறதையும் இப்பொழுது நிறைவேற்றுங்கள். கொடுக்கவேண்டுமென்னும் ஆசையுண்டாயிருந்ததுபோல, உங்களுக்குண்டானவைகளில் எடுத்து * அதை நிறைவேற்றுதலும் உண்டாவதாக. * பிலிப். ௨: ௰௩.

௰௨. ஒருவனுக்கு மன ஆசையாயிருந்தால் அவன் தனக்கில்லாததின்படியல்ல, * தனக்

குள்ளதின்படி அங்கிகரிக்கப்படுவானே. * மாற். ௰௨: ௪௨, ௪௩.

௰௩. மற்றவர்களுக்குச்சந்தோஷமும், உங்களுக்கு உபத்திரவமுமுண்டாய் இருக்கும் பொருட்டாகவல்ல, சமமான நிலைமை இருக்கும்பொருட்டாகவேசொல்லுகிறேன்.

௰௪. எப்படியெனில், (மற்றொருகாலத்திலே) அவர்களுடைய பரிபூரணம் உங்கள் வறுமையை நீக்கும்படிக்கு இக்காலத்திலே உங்கள் பரிபூரணம் அவர்களுடைய வறுமையை நீக்கக்கடவது.

௰௫. இவ்விதமாய் * மிகுதியாய்ச்சேர்த்தவனுக்கு அதிகம் இருக்கவில்லையென்றும், அற்பமாய்ச்சேர்த்தவனுக்குக் குறைவிருக்கவில்லையென்றும் எழுதியிருக்கிறபடி, சமமான நிலைமை உண்டாயிருக்கும். * ௨ மோ. ௰௬: ௰௮.

௰௬. அன்றியும், உங்களுக்காக இப்படிச் சாக்கிரதையாய் இருக்கும்படிக்கு, தீத்துவினிருதயத்திலே அருள்கொடுத்த பராபரனுக்குத்தோத்திரம்.

௰௭. நான் வேண்டிக்கொண்டதை ஏற்றுக்கொண்டதுமல்லாமல், அவன் அதிக சாக்கிரதையாயிருந்து தன் சுயமனதினாலே உங்களிடத்திற்குவருகிறான்.

௰௮. அவனோடேகூட ஒரு சகோதரனையனுப்பியிருக்கிறேன். அவன் சுவிசேஷ ஊழியத்திலே யெல்லாச்சபைகளிலும் புகழ்ச்சிபெற்றிருக்கிறவன்.

௰௯. அதுமாத்திரமல்ல, கர்த்தருககே துதியுண்டாகும்படியாகவும், உங்கள் மன ஆசைவிளங்கும்படியாகவும், எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படுகிற தருமப்பணத்தை (கொண்டுபோகையில்) எங்களுக்கு வழித்துணையாயிருக்கும்படிக்கு, அவனே சபைகளால் தெரிந்து ஏற்படுத்தப்பட்டவனாகவுமிருக்கிறான்.

௨௰. எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படும் * மிகுந்த தருமப்பணத்தைக்குறித்து, ஒருவனும் எங்களைக்குற்றப்படுத்தாதபடிக்கு நாங்கள் எச்சரிக்கையாயிருந்து, * ௧ தெச. ௫: ௨௨.

௨௧. கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல, * மனிதருக்கு முன்பாகவும் நலமானவைகளை முன்யோசித்துக்கொண்டு, (இந்தச்சகோதரன் கூடவரும்படிசெய்தேன்.) * ரோ. ௰௨: ௰௭ பிலிப். ௪: ௮.

௨௨. நம்முடைய சகோதரனாகிய அவன் அநேகங் காரியங்களிற் சாக்கிரதையுள்ளவனென்றும், இப்பொழுது உங்கள்மேலுள்ள மிகுந்த நம்பிக்கையினால் மிகவும் அதிக சாக்கிரதை யுள்ளவனாய் இருக்கிறானென்றும், நாங்கள் அடிக்கடி கண்டறிந்து அவனை யிவர்களோடுங்கூட அனுப்பினோம்.

௨௩. தீத்தைக்குறித்து, (ஒருவன் விசாரித்தால்). அவன் எனக்குக்கூட்டாளியுமாய், உங்களுக்காக என் உடன்வேலையாளுமாய் இருக்கிறான் என்றறியக்கடவன். எங்கள் சகோதரரைக்குறித்து (ஒருவன் விசாரித்தால்) அவர்கள் சபைகளால் அனுப்பப்பட்டவர்களுமாய், கிறிஸ்துவுக்குப்புகழ்ச்சிவருசற்கு ஏதுவானவர்களுமாய் இருக்கிறார்கள் என்றறியக்கடவன்.

௨௪. ஆனபடியினாலே உங்கள் அன்பையும், நாங்கள் உங்களைக்குறித்துச்சொன்ன புகழ்ச்சியையும் அவர்களுக்கும், சபைகளுக்கும் முன்பாக வெளிப்படுத்துங்கள்.

௯ அதிகாரம்.

[(௧) அவர்களுடைய தருமகுணத்தைத் தான் அறிந்திருந்தாலுந் தீத்தையும், மற்றச்சகோதரர்களையும் அனுப்பினதற்கு முகாந்தரம்விளம்பி, (௯) தருமச்செயலை, (௰) நற்பலனைத்தரும் பயிர்த்தொழிலுக்கு ஒப்பாக்கி, (௰௩) அதினாற் பராபரனுக்கு ஸ்தோத்திரப்பலிகள் செலுத்தப்படுமென்று சொல்லி, அவர்கள் தயாளமான ஈகையுள்ளவர்களாய் இருக்கும்படி புத்திசொல்லியது.]

பரிசுத்தவான்களுக்குச்செய்யவேண்டிய ஊழியத்தைக்குறித்து நான் அதிகமாய் உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை.

௨. உங்கள் மனப்பூர்வத்தை யறிந்திருக்கிறேனே. அதைக்குறித்து அகாயாவிலுள்ளவர்கள் ஒருவருஷமாய்த் தருமப்பணத்தைச்சேர்க்க எத்தினமாய் இருக்கிறார்களென்று நான் மக்கெதோனியருடனே சொல்லி, உங்களைப்புகழ்ந்துமிருந்தேனே.

௩. மேலும் உங்களிலுண்டான சாக்கிரதை அநேகரை எழுப்பியுமிருந்தது. அப்படியிருந்தும் உங்களைக்குறித்து நாங்கள் சொன்ன புகழ்ச்சி, இந்தச்சங்கதியிலே வீணாய்ப்போகாமல், நான் சொன்னபடி நீங்கள் எத்தினம் பண்ணுகிறவர்களாய் இருப்பதற்கு இந்தச்சகோதரரை அனுப்பினேன்.

௪. மக்கெதோனியர் என்னுடனே கூடவரும்பொழுது, உங்களை எத்தினப்படாதவர்களாகக்கண்டால், இத்தனை நிச்சயமாய்ப்புகழ்ந்ததற்காக நீங்களென்று நான் சொல்லமாட்டாமல் நாங்களே வெட்கப்படாதபடிக்கு (எத்தினமாய் இருக்கவேண்டும்.)

௫. ஆகையால், இந்தச்சகோதரர் முன்னாக உங்களிடத்திற்குப்போகும்படிக்கும், முன்னறிவிக்கப்பட்டிருக்கிற உஙகள் தரும ஆசீர்வாதங் கட்டாயமாகவல்ல, தரும ஆசீர்வாதமாகவே யெத்தினமாய் இருக்கப் பார்க்கும் அவர்களை வேண்டிக்கொள்ள

வேண்டும் என்றெண்ணி அப்படிச்செய்தேன்.

௬. பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், * சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான். பரிபூரணமாய் விதைக்கிறவன் பரிபூரணமாய் அறுப்பான். * வாக். ௰௧: ௨௪. ௰௯: ௰௭.

௭. அவனவன் விசனமாயல்ல, கட்டாயமாயுமல்ல, தான் மனதிலே விரும்புகிறபடியே கொடுக்கக்கடவன்.

௮. * சந்தோஷமாய்க்கொடுக்கிறவனிடத்திற் பராபரன் அன்பாயிருக்கிறாரே. பராபரனும் நீங்கள் எல்லாவற்றிலேயும், எப்பொழுதும் மிகுந்த திருத்தியுடையவர்களாய்ச்சகலவித நற்கிரியைகளுக்குஞ் சம்பூரணம் உள்ளவர்களாய் இருக்கும்படிக்கு, உங்களிடத்திற் சகலவித கிருபையுஞ் சம்பூரணமாய் இருக்கச்செய்ய வல்லவராய் இருக்கிறார். * ௨ மோ. ௨௫: ௨.

௯. அவன் தெளித்தான். * ஏழைகளுக்குக்கொடுத்தான். அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்குமென்று எழுதியிருக்கிறவிதமாய் இருக்கும. * சங். ௱௰௨: ௯.

௰. அந்தப்படி விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு அப்பத்தையும் அளிக்கிறவர் உங்கள் விதையையும் அதிகமாய்ப்பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சல்களை வளரச்செய்வார்.

௰௧. அதினாலே நீங்கள் மிகுந்த உதாரமுள்ளவர்களாய் இருக்கும்படிக்கு, எவ்விதத்திலேயுஞ் சம்பூரணம் உள்ளவர்களாவீர்கள். அதினாலே நாங்களும் பராபரனுக்குத் தோத்திரஞ் செலுத்துதற்கு ஏழுப்பப்படுவோம்.

௰௨. இந்தத்தரும நடத்தையின் ஊழியம் பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்குகிறதற்கு மாத்திரமல்ல, அநேகர் பராபரனைத்தோத்திரிக்கிறதற்கும் மிகுந்த பலன் உள்ளதாயிருக்கின்றதே.

௰௩. அவர்களில் ஊழியத்தின் உத்தமத்தைக்கண்டு, நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்கீழ்ப்படிதலோடே அறிக்கைபண்ணுகிறதற்காகவும், தங்களுக்கும், மற்ற அனைவருக்கும் உதாரமாய்த்தருமத்தைச் செய்கிறதற்காகவும் பராபரனைத்துதித்து,

௰௪. உங்களுக்காக வேண்டுதல் செய்து, பராபரன் உங்களுக்கு அளித்த மிகவும் மேன்மையான கிருபையினிமித்தம் உங்கள் மேல் வாஞ்சையாயிருக்கிறார்கள்.

௰௫ பராபரன் அநுக்கிரகித்த சொல்ல * முடியாத ஈவுக்காக அவருக்குத்தோத்திரம் உண்டாவதாக. * உரோ. ௮: ௩௨.

௰ அதிகாரம்.

[(௧) தன்னை இகழ்ச்சிசெய்த கள்ள அப்போஸ்தலர்களுக்குத்தன்னுடைய * அதிகாரத்தையும், அவர்களை வெல்லுகிறதற்கு ஏதுவான தன்னிடத்திலுள்ள ஞானாயுதங்களையும் இன்னதென்றுகூறி, (௭) நிருபங்களிலே வல்லமையுள்ளவனாய் இருக்கிறதுபோலத்தான் அவர்களிடத்தில் வரும்போது வசனத்திலும் வல்லவனாய் இருப்பேனென்று சொல்லி, (௰௨) அவர்களுடைய வீணான பெருமைபாராட்டலையும், அவர்கள் மற்றவர்களுடைய பிரயாசைகளைத்தங்களுடையவைகளாக்கிக்கொள்வதையுங் கடிந்துகொண்டது.]

மேலும் உங்களுக்கு முன்பாகவிருக்கும்பொழுது தாழ்மையாயும், தூரத்திலே இருக்கும்பொழுது உங்கள் மேல் தயிரியமாயும் இருக்கிற பவுலாகிய நான் * கிறிஸ்துவின் சாந்தத்தினாலும், தயையினாலும் உங்களுக்குப்புத்தி சொல்லுகிறேன். * மத். ௰௧: ௨௯.

௨. நான் கேட்டுக்கொள்ளுகிறதென்னவெனில், நான் உங்கள் முன்பாகவிருக்கும்பொழுது, எங்களைச்சரீரத்தின்படி நடக்கிறவர்களென்று எண்ணுகிற சிலருக்கு நான் துணிவாயிருக்க நினைக்கிறதால், அந்தத் துணிவோடே நான் தயிரியம் உள்ளவனாய் இராதபடிக்குச்செய்வீர்களாக.

௩. நாங்கள் சரீரத்தோடே நடந்து திரிந்தும், சரீரத்தின்படி போராட்டம் பண்ணமாட்டோம்.

௪. எங்களுடையபோர் * ஆயுதங்கள் மாம்சத்திற்கு ஏற்ற (பலவீனமுள்ள) வைகளாய் இராமல், அரண்களை நிர்மூலமாக்குதற்குத் திவ்விய பெலனுள்ளவைகளாய் இருக்கின்றனவே. * எபே. ௬: ௰௪.

௫. அவைகளால் நாங்கள் அகந்தையான சிந்தனைகளையும், பராபரனையறிகிற அறிவுக்கு விரோதமாய் உயருகிற எல்லாவித மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்தப் புத்தியையுங் கிறிஸ்துவுக்குக்கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாய் இருந்து,

௬. நீங்கள் நிறைவாய்க்கீழ்ப்படிந்திருக்கும்பொழுது எல்லாக்கீழ்ப்படியாமைக்குந் தக்க நீதியுள்ள தண்டனையைச்செலுத்த எத்தினமாயிருக்கிறோம்.

௭. முகத்திற்கு முன்னிருக்கிறவைகளை (மாத்திரம்) பார்க்கிறீர்களா? ஒருவன் தன்னைக்கிறிஸ்துவுக்கு உரியவனென்று நம்பிக்கொண்டால், அவன்தான் கிறிஸ்துவுக்குரியவனாய் இருக்கிறதுபோல நாங்களுங் கிறிஸ்துவுக்குரியவர்களென்று தன்னாலே தானே சிந்திக்கக்கடவன்.

௮. அதுவுமல்லாமல், * உங்களை நிர்மூல

மாக்குதற்கல்ல, எழுப்புதற்குக்கர்த்தர் எங்களுக்குக்கொடுத்த அதிகாரத்தைக்குறித்து நான் இன்னுஞ் சற்றே அதிகமாய் மேன்மைபாராட்டினாலும், நான் வெட்கப்படுவதில்லை. * ௰௩: ௰.

௯. நான் நிருபங்களாலே உங்களைப்பயமுறுத்துகிறவனாய்த் தோன்றுதபடிக்குமாத்திரம் (அப்படி மேன்மை பாராட்டமாட்டேன்.)

௰. அவனுடைய நிருபங்கள் பாரமும், பெலனுமுள்ளவைகள். ஆகிலும், சரீரத்தின் தோற்றம் பலவீனமுமாய், அவனுடைய வசனம் அற்பமுமாயிருக்கிறதென்கிறார்களே.

௰௧. அப்படிச்சொல்லுகிறவன் நிருபங்களின் வசனத்தினாலே தூரத்திலிருக்கிற நாங்கள் தோன்றுகிறதெப்படியோ அப்படி முகத்திற்குமுன்பாகவும், கிரியையிலேயுந் தோன்றுவோமென்று சிந்திக்கக்கடவன்.

௰௨. ஆகிலும் தங்களைத்தாமே புகழுகிற சிலருக்கு நாங்கள் எங்களைச்சரியாக்கவும், ஒப்பிடவுந் துணியமாட்டோம். அவர்கள் தங்களாலே தங்களை அளந்துகொண்டு, தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக்கொண்டு (தங்களை) அறியாதவர்களாயிருக்கிறார்கள்.

௰௩. நாங்கள் (எங்களுக்கு) அளந்துகொடாதவைகளைக்குறித்து மேன்மை பாராட்டாமல், உங்களிடம்வரைக்கும் எட்டத்தக்கதாகப்பராபரன் எங்களுக்களந்துகொடுத்த அளவின்படியே மேன்மைபாராட்டுகிறோம்.

௰௪. கிறிஸ்துவின் சுவிசேஷத்தோடே நாங்கள் உங்களிடம்வரைக்குஞ் சென்றோமே. ஆகையால், உங்களிடத்தில்வந்தெட்டாதவர்களாய் நாங்கள் அளவுக்கு மிஞ்சிப் போகிறதில்லை.

௰௫. அளவுக்குமிஞ்சி அந்நியருடைய வேலைக்குட்பட்டு, மேன்மை பாராட்டமாட்டோம்.

௰௬. ஆகிலும் உங்கள் விசுவாசம் வளர்ந்திருக்கும்பொழுது, உங்களுக்கு அப்புறமான இடங்களிற் சுவிசேஷத்தை அறிவிக்கவும், அந்நிய எல்லைகளுக்குள்ளே செய்யப்பட்டவைகளை நாங்கள் செய்ததாக மேன்மைபாராட்டாதிருக்கவுந்தக்கதாக, எங்கள் அளவு உங்களாலே மிகவும் பெருகுமென்று நம்பிக்கையாயிருக்கிறோம்.

௰௭. * மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தாவைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன். * எரே. ௯: ௨௩. ௧ கொரி. ௧: ௩௧.

௰௮. * தன்னைத்தான் புகழுகிறவனல்ல. கர்த்தராலே புகழப்படுகிறவனெவனோ அவன் உத்தமனாயிருப்பானே. * வாக். ௨௭: ௨.

௰௧ அதிகாரம்.

[(௧) தன்னைப்பார்க்கிலுங் கள்ள அப்போஸ்தலர்களை மேன்மையாக எண்ணின கொரிந்தர்பேரிலே தனக்கிருந்த வயிராக்கியத்தினாலே தன்னைக்கட்டாயத்தினால் மேன்மைபாராட்டி, (௫) தான் பிரதான அப்போஸ்தலருக்குச்சரியானவனென்றும், (௭) கொரிந்தருக்கு இலவசமாய்ச்சுவிசேஷத்தை அறிவித்தவனென்றும், (௰௩) கள்ளப்போதகர்களைப்பார்க்கிலும் தான் லௌகீக மேன்மைகளிலும், (௨௩) கிறிஸ்துவின் ஊழியத்திலும், பலபாடுகளிலுங் குறைந்தவனல்லவென்றுஞ் சொல்லியது.]

ஆ நீங்கள் என் புத்தியீனத்துக்குச் சற்றே பொறுமையாய் இருந்தால் நலமாயிருக்கும். எனக்குப்பொறுத்துமிருக்கிறீர்களே.

௨. * நான் உங்களைக்கற்புள்ள கன்னிகாஸ்திரீயாகக்கிறிஸ்துவென்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காகத்தேவ வயிராக்கியமாய் வயிராக்கியங்கொண்டிருக்கிறேன். * ஓசே. ௨: ௰௯, ௨௰.

௩. ஆகிலும் * அந்தப்பாம்பு தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதுங் கிறிஸ்துவின்மேலுள்ள பத்தியின் உண்மையைவிட்டு விலகக்கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன். * ௧ மோ. ௩: ௪.

௪. எப்படியெனில், (உங்களிடத்தில்) வந்திருக்கிறவன் நாங்கள் பிரசங்கியாத * வேறொரு இயேசுவைப்பிரசங்கித்தானானால், அல்லது, நீங்கள்பெறாத வேறொரு ஆவியையும், நீங்கள் ஏற்றுக்கொள்ளாத வேறொரு சுவிசேஷத்தையும் (அவனாலே) பெற்றீர்களானால், அவனை நன்றாய் ஏற்பீர்கள். * கலா. ௧: ௬—௮.

௫. * மிகவும்பெரிய அந்த் அப்போஸ்தலருக்கு நான் எவ்வளவாகிலுங் குறைவுள்ளவனல்லவென்றெண்ணுகிறேன். * ௧ கொரி. ௰௫: ௰.

௬. நான் பேச்சிலே கல்லாதவனாயிருந்தாலும், அறிவிலே கல்லாதவனல்ல. எப்பொழுதும், எல்லாவிதங்களிலேயும் உங்களுக்குள்ளே (அப்படியே) வெளிப்பட்டிருக்கிறோமே.

௭. அல்லது நீங்கள் உயர்த்தப்படும்படிக்கு, நான் என்னைத்தானே தாழ்த்திப்பராபரனுடைய சுவிசேஷத்தை இலவசமாய் உங்களுக்கறிவித்ததினாலே குற்றஞ்செய்தேனா?

௮. (இல்லையே) உங்களுக்கே ஊழியஞ்செய்யும்படிக்கு, மற்றச்சபைகள்கையிலே நான் சம்பளம் பற்றிக்கொண்டேன்.

௯. நான் உங்களிடத்திலிருந்து குறைச்

சல் அநுபவித்தபொழுதும், ஒருவரையும்
நான் வருத்தப்படுத்தவில்லை. மக்கேதோ
னியாவிலிருந்துவந்த சகோதரர் என்குறை
வை நீக்கினார்களே. எவ்விதத்திலேயும் உங்
களுக்குப் பாரமாயிராதபடிக்குப் பார்த்தே
ன். இனிமேலும் அப்படியே பார்ப்பேன்.
ய. * அகாயாநாட்டின் திசைகளிலே இந்
தப்புகழ்ச்சி யென்னிடத்தினின்று நீங்குவ
தில்லையென்று, என்னிலுள்ள கிறிஸ்துவினு
டைய உண்மையைக்கொண்டு சொல்லுகி
றேன். * க கொரி. கூ: யரு.
யக. என்னத்தினாலே (அப்படிச்செய்வே
ன்!) நான் உங்களைச்சிநேகியாதபடியினா
லோ (அப்படிச்செய்வேன்!) அதினாலல்ல
வென்று பராபரனே அறிந்திருக்கிறார்.
யஉ. மேலுந்தங்களை மேன்மைபாராட்டு
கிறதினாலே யெங்களைப்போலக்காணப்பட
ச்சமயம் தேடுகிறவர்களுக்குச்சமயம் அற்
றுப்போகும் பொருட்டாக நான் இப்படிச்
செய்கிறேன். பின்னும் இப்படிச்செய்
வேன்.
யங. * அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்
போஸ்தலர். கபடமுள்ள வேலையாள்கள்.
கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் உ
ருபத்தைநயெடுத்து நடக்கிறவர்களாயிருக்கி
றார்கள். * மத். எ: யரு.
யச அது அதிசயமல்ல. சாத்தானும் ஒளி
யையுடைய தூதனைப்போன்ற உருபத்தை
யெடுப்பானே.
யரு. ஆகையால், அவனுடைய ஊழியக்
காரரும் நீதியின் ஊழியக்காரரைப்போன்
ற உருபத்தையெடுத்தால், மிகுந்த அதிசய
மாகமாட்டாது. அவர்களுடைய முடிவு
அவர்களுடைய கிரியைகளுக்குத்தக்கதாயி
ருக்கும்.
யசு. பின்னும் நான் சொல்லுகிறதென்ன
வெனில், ஒருவனும் என்னைப்புத்தியீனனெ
ன்று எண்ணுதிருப்பானாக. எண்ணினால்,
நானுஞ் சற்றே மேன்மைபாராட்டுகிறபொ
ழுது, நீங்கள் என்னைப்புத்தியீனனைப்போ
லாகிலுஞ் சகிக்கக்கடவீர்கள்.
யஎ. இப்படித்தயிரியமாய் மேன்மைபா
ராட்டுகையில், நான் சொல்லுகிறது கர்த்த
ராலானபடியே சொல்லாமற் புத்தியீனனைப்
போலச்சொல்லுகிறேன்.
யஅ. அநேகர் சரீரத்தின்படி மேன்மைபா
ராட்டிக்கொள்ளுகையில் * நானும் மேன்
மைபாராட்டுவேன். * ய: யரு.
யகூ. புத்தியுள்ள நீங்கள் புத்தியில்லாத
வர்களைச்சந்தோஷமாய்ச் சகித்திருக்கிறீர்க
ளே.
உய. ஒருவன் உங்களைச்சிறையாக்கினாலும்,
ஒருவன் உங்களைப்பட்சித்தாலும், ஒருவன்
உங்கள் ஆஸ்திகளைப்பிடித்துக்கொண்டா
லும், ஒருவன் உங்களுக்குமுன்பாகத்தன்னை
யுயர்த்தினாலும், ஒருவன் உங்களை முகத்தி
லறைந்தாலுஞ் சகித்திருக்கிறீர்களே.
உக. நாங்கள் பலவீனராக எங்களுக்குவந்
த நிந்தையைக்குறித்து (இப்படிப்) பேசு
கிறேன். ஒருவன் துணிகிறது எதுவோ,
அதிலே நானும் துணிவாயிருக்கிறேன்.
இப்படிப்புத்தியீனமாய்ப்பேசுகிறேன்.
உஉ அவர்கள் எபிரேயரானால், நானும்
எபிரேயன். அவர்கள் இஸ்ரவேலரானால்,
நானும் இஸ்ரவேலன். அவர்கள் ஆபிரகா
மின் சந்ததியானால், நானும் ஆபிரகாமின்
சந்ததியான்.
உங. அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்கார
ரானால், நான் அவர்களுக்கு மேற்பட்டவன்.
(மறுபடியும்) புத்தியீனமாய்ப்பேசுகிறேன்.
அவர்களிலும் நான் அதிக வேலைகளைச்செய்
தேன். அதிகமாய் அடிபட்டேன். அதிக
மாய்க்காவல்களில் வைக்கப்பட்டேன். அ
நேகந்தரம் மரணத்திற்கு ஏதுவாயிருந்
தேன்.
உச. * யூதர்களால் ஒன்றுகுறைய நாற்ப
தடியாக ஐந்துதரம்பட்டேன். * ரு மோ.
உரு: ங.
உரு. மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்
டேன். * ஒருதரங் கல்லெறியுண்டேன்.
மூன்றுதரம் கப்பல்சேதமானதிலிருந்தேன்.
ஒரிராப்பகல் முழுவதும் ஆழத்திலேயிருந்
தேன். * அப். யச: யகூ.
உசு. அநேகந்தரம் பிரயாணமாய்ப்போ
னேன். ஆறுகளால்வருகிற மோசங்களி
லும், கள்ளரால்வருகிற மோசங்களிலும்,
என் சொந்த தேசத்தாரால்வந்த மோசங்க
ளிலும், புறத்தேசத்தாரால்வந்த மோசங்க
ளிலும், ஊர்களில் உண்டான மோசங்களி
லும், வனாந்தரத்திலுண்டான மோசங்களி
லும், சமுத்திரத்திலுண்டான மோசங்களி
லும், கள்ளச்சகோதரரால்வந்த மோசங்க
ளிலும்,
உஎ. * வேலையிலும், வருத்தத்திலும், அ
நேகந்தரம் கண்விழிப்புகளிலும், பசியிலும்,
தாகத்திலும், அநேகந்தரம் உபவாசங்களி
லும், குளிர்ச்சியிலும், நிருவாணத்திலுமிருந்
தேன். * சு: ரு.
உஅ. புறம்பேயுண்டான இவைகளைத்தவி
ர எல்லாச்சபைகளைக்குறித்துமிருக்கிற கவ
லை யென்னை நாடோறும் நெருக்குகின்றன.
உகூ பலவீனமடைகிறவனெவனோ அவ
னுக்கு நானும் பலவீனனாயிருக்கிறதில்லை
யோ? வழுவுகிறவனெவனோ அவனுக்கு (உ
தவிசெய்ய) எரிச்சலில்லாமலிருக்கிறேனா!
ஙய. மேன்மைபாராட்ட வேண்டியதால்,
* என் பலவீனத்திற்குரியவைகளைச்சொல்லி
மேன்மைபாராட்டுவேன். * உரோ. ரு: ங.
ஙக. என்றென்றைக்குந் தோத்திரிக்கப்ப
ட்ட பராபரனும், நம்முடைய கர்த்தராகி

ய இயேசுக்கிறிஸ்துவின் பிதாவுமானவர் நான் பொய்சொல்லுகிறதில்லையென்று அறிந்திருக்கிறார்.

௩௨. தமஸ்கு நகரியிலே அரேத்தாவென்னும் இராசாவினுடைய சேனைத்தலைவன் என்னைப்பிடிக்கவேண்டுமென்று தமஸ்கருடைய பட்டினத்தின் வாசல்களிற் காவல் வைத்துக்காத்தான்.

௩௩ அப்பொழுது நான் கூடையிலேவைக்கப்பட்டுப் * பலகணியிலிருந்து மதில்வழியாய் இறக்கிவிடப்பட்டு, அவனுடைய கைகளுக்குத்தப்பிப்போனேன். * அப். ௯: ௨௪, ௨௫.

௰௨ அதிகாரம்.

[(௧) தான்கண்ட தரிசனையினாலே தன் அப்போஸ்தலப்பட்டத்தைக்குறித்து மேன்மையைப்பாராட்டாமல், (௯) தன் பலவீனங்களில் மேன்மைப்பாராட்டவிரும்பி, (௰௧) அப்படியே தன்னைக்குறித்து மேன்மைபாராட்டுதற்குக்காரணமாயிருந்த அவர்கள்பேரிலேயே குற்றஞ்சார்த்தி, (௰௪) மறுபடியும் அவர்களிடத்தில் வரும்போது பிதாவின் பட்சத்தோடேவராமல், (௨௰) அநேகங் குற்றவாளிகளையும், அநேகந் தாறுமாறுகளையுங் காண்பதினாலே மனச்சஞ்சலத்தோடே வருவானென்றுஞ் சொல்லியது.]

இப்படியிருக்க, மேன்மைபாராட்டுகிறது எனக்குத்தகாது. ஆகிலுங் கர்த்தர் கொடுத்த தரிசனைகளையும், வெளிப்படுத்துதல்களையுஞ் சொல்லிவருகிறேன்.

௨. கிறிஸ்துவைப்பற்றிய ஒரு மனிதனையறிந்திருக்கிறேன். அவன் பதினாலுவருஷத்திற்கு முன்னே மூன்றும்வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான். (அவ்வேளையிலே) அவன் சரீரத்தில் இருந்தானோ! அதற்குப் புறம்பேயிருந்தானோ? அதை அறியமாட்டேன். அது பராபரனுக்குத்தெரியும்.

௩. இப்படிப்பட்ட மனிதன் பரதீசுக்கு உயர்த்தப்பட்டு, மனிதர் பேசக்கூடாத வாக்குக்கெட்டாதவார்த்தைகளைக்கேட்டானென்று அறிந்திருக்கிறேன்.

௪. (அவ்வேளையிலே) அவன் சரீரத்தில் இருந்தானோ! அதற்குப்புறம்பேயிருந்தானோ? அதையறியமாட்டேன். பராபரனுக்கே தெரியும்.

௫. இப்படிப்பட்டவனைக்குறித்து மேன்மைபாராட்டுவேன். என்னைக்குறித்து * என்பலவீனங்களினாலேயன்றி, வேறொன்றினாலும் மேன்மைபாராட்டமாட்டேன். * ௰௧: ௩௰.

௬. சத்தியமானதை நான் பேசுகிறேன். ஆதலால், மேன்மைபாராட்ட மனதிருந்தாலும் நான் புத்தியீனனல்ல. ஒருவனும் என்னிடத்திற் காண்கிறதற்கும், அல்லது என்னாலே கேட்கிறதற்கும் மேலாக என்னை எண்ணாதபடிக்கு அனலை நிறுத்துகிறேன்.

௭. அன்றியும், அதிக மேன்மையானவைகள் எனக்கு வெளிப்படுத்தப்பட்டதினாலே நான் என்னை உயர்த்தாதபடிக்கு, * என் மாம்சதேகத்திலே ஒரு முள்ளுக்கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னை நான் உயர்த்தாதபடிக்கு, † என்னைக்குட்டுஞ் சாத்தானுடைய தூதனே இருக்கிறான். * எசேக். ௨௮: ௨௪. † யோபு. ௨: ௬.

௮. அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரங் கர்த்தாவை வேண்டிக்கொண்டேன்.

௯. அவர் என்னுடனே சொன்னது, எனது கிருபை உனக்குப்போதும். என்னுடைய வல்லமை (உன்) பலவீனத்திலே நிறைவாய்த்தோன்றுகின்றதேயென்றார். ஆகையால், கிறிஸ்துவின்வல்லமை என்மேலிறங்கியிருக்கும்படிக்கு, நான் மிகவும் அதிக விருப்பமாய் என்பலவீனங்களைக்குறித்து மேன்மைபாராட்டுவேன்.

௰. அந்தப்படி நான் பலவீனமாய் இருக்கும்பொழுது, பலனாய் இருக்கிறபடியாற் கிறிஸ்துவினிமித்தம் எனக்குவரும்பலவீனங்களிலும், நிந்தைகளிலும், வறுமைகளிலும், * துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியமாயிருக்கிறேன். * யாக். ௧: ௨, ௩.

௰௧. மேன்மைபாராட்டினதால் நான் புத்தியீனனானேன். நீங்களே யதற்கு என்னைப்பலவந்தப்படுத்தினீர்கள். நான் பிரயோசனமில்லாதவனாயிருந்தாலும் மிகவும் பிரதான அப்போஸ்தலருக்கும் நான் எவ்வளவாகிலுங் குறைந்தவனாயிராததால், உங்களாலே நான் மெய்ச்சிக்கொள்ளப்படநியாயமாயிருந்ததே.

௰௨. அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் உங்களுக்குள்ளே எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களாலும், அற்புதங்களாலும், வல்லமைகளாலும் என்னாலே நடப்பிக்கப்பட்டனவல்லவா? மற்றச்சபைகளுக்கு நீங்கள் எதிலே குறைவாயிருக்கிறீர்கள்?

௰௩. நான் உங்கள்மேலே * சுமையைவையாதிருந்ததினாலே யன்றி, வேறொன்றினாலுமில்லையே. இந்த அநியாயத்தை நீங்கள் எனக்கு மன்னிக்கவேண்டும். * ௰௧: ௯.

௰௪. இப்பொழுது உங்களிடத்திற்கு வர * மூன்றுந்தரம் எத்தினமாயிருக்கிறேன். (அப்பொழுதும்) நான் உங்களுடையதையல்ல, உங்களையே தேடுகிறபடியால், நான் உங்கள்மேற் சுமையை வைப்பதில்லை.—பெற்றாருக்குப்பிள்ளைகளல்ல. பிள்ளைகளுக்

குப்பெற்றூர்களே பொக்கிசங்களைச்சேர்த்துவைக்கவேண்டுமே. * ௰௩: ௧.

௰௫. ஆனதால், நான் உங்களுக்குக்காட்டுகிற அன்பு எவ்வளவோ அவ்வளவு குறைவாய் உங்களால் அன்புகூரப்பட்டிருந்தும், மிகவுஞ் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக்களுக்காக என்னைச்செலவுபண்ணவும், செலவுபண்ணப்படவும்விரும்புகிறேன்.

௰௬. அப்படியாகட்டும். அவன் உங்களுக்குப்பாரமாய் இருக்கவில்லை. அதுமெய்தான். ஆகிலுந் தந்திரமுள்ளவனாய் இருந்து, உங்களைக்கபடத்தினாலே பிடித்தானென்கிறூர்கள்.

௰௭. (அதெப்படி) நான் உங்களிடத்திற்கு அனுப்பினவர்களில் ஆராலே உங்களிடத்திற் பொழிவைத்தேடினேன்!

௰௮. தீத்து உங்களிடத்திற்போகவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, அவனுடனேகூட ஒரு சகோதரனை அனுப்பினேன். தீத்து உங்களிடத்தில் ஒரு பொழிவையாகிலுந் தேடினூ! நாங்கள் ஒரே ஆவியோடேயல்லவா நடந்தோம். ஒரே மார்க்கமாயல்லவோ நடந்தோம்.

௰௯. உங்களுக்கு முன்பாகக்குற்றம் அடக்கும்படி பேசுகிறூமென்று மறுபடியும் எண்ணுகிறீர்களா? பிரியமானவர்களே! பராபரனுடைய சந்நிதானத்திலே கிறிஸ்துவைப்பற்றிக்கொண்டு இவைகளையெல்லாம் உங்களை யெழுப்பும்படிக்கே பேசுகிறூம்.

௨௰. ஆகிலும் நான்வந்து உங்களை என் மனதின்படி இருக்கிறவர்களாகக்காணுமலும், உங்களுக்கு நானும் உங்கள் மனதின்படியிருக்கிறவனூகக்காணப்படாமலும் இருப்பேனூ! விரோதங்கள், வயிராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், புறங்கூறுதல், கோட்சொல்லுதல், இறுமாப்பு, கலகங்களும் உங்களுக்குள்ளே யுண்டாயிருக்குமோ?

௨௧. மறுபடியும் நான் வருகிறபொழுது, என் பராபரன் உங்களிடத்தில் என்னைத்தாழ்மைப்படுத்தும்படிக்கு, முன் பாவஞ்செய்தவர்களாகிய அநேகர் தாங்கள் நடப்பித்த அசுத்தத்தையும், வேசித்தனத்தையும், காமவிகாரத்தையும் விட்டு மனந்திருப்பாமல் இருக்கிறதைக்குறித்து, நான் துக்கப்படவேண்டியதாயிருக்குமோ? என்றிவைகளைக்குறித்துப்பயந்திருக்கிறேன்.

௰௩ அதிகாரம்.

[(௧) குணப்படாத பாவிகளுக்குத்தண்டனையைக்கொண்டும், தன் அப்போஸ்தல அதிகாரத்தைக்கொண்டும் பயமுறுத்தி, (௫) அவர்கள் தங்கள் விசுவாசத்தைக்குறித்துப்பரிசோதிக்கவும், (௭) தான்வருகிறதற்குள்ளே தங்கள் பாவங்களைவிட்டு விலகவுங் கற்பித்து, (௰) மற்றப்பொதுவான சிலபுத்திகளையுஞ் சொல்லி, அவர்களை வாழ்த்தி நிருபத்தை முடித்தது.]

இந்த மூன்றுந்தரம் நான் உங்களிடத்திற்கு வருகிறேன். சகல சங்கதிகளும் இரண்டுமூன்று சாட்சிகளுடைய வாக்கினுல் நிலைவரப்படும்.

௨. நான் மறுபடியும்வரும்பொழுது, தப்பவிடமாட்டேனென்று முன்பாவஞ்செய்தவர்களுக்கும், மற்ற எல்லாருக்கும் முன் சொன்னேனே. இப்பொழுது தூரமாய் இருந்தும், உங்களிடத்தில் இருக்கிறவனூக நான் இரண்டாந்தரமும் அப்படியே முன்னறிவித்துச்சொல்லுகிறேன்.

௩. என்னுலே கிறிஸ்துப்பேசுகிறதைக்குறித்துத் திருட்டாந்தத்தைக்காணத்தேடுகிறீர்களே. அவர் உங்களுக்குள்ளே பலவீனரல்ல, வல்லவராயிருக்கிறூர்.

௪. அல்லாமலும், அவர் பலவீனத்தாற் சிலுவையில் அறையப்பட்டிருந்தும் பராபரனுடைய வல்லமையாற் பிழைத்திருக்கிறூர். அப்படி நாங்களும் அவர் நிமித்தம் பலவீனராயிருந்தும், அவருடனே கூடப் பராபரனுடைய வல்லமையால் உங்களுக்குள்ளே சீவனைக்காண்பிப்போம்.

௫. உங்களுக்கு விசுவாசமுண்டோ! அதைக்குறித்து உங்களைச்சோதியுங்கள். உங்களைத்தாமே விசாரித்தறியுங்கள். அல்லது, நீங்கள் உதாரணம் இல்லாதவர்களாயிராவிட்டால், இயேசுக்கிறிஸ்து உங்களிடத்திலிருக்கிறூரென்று, உங்களைத்தாமே அறிகிறதில்லையா?

௬. நாங்கள் உதாரணமில்லாதவர்களல்லவென்பதை அறிவீர்களென்று நம்புகிறேன்.

௭. மேலும் நீங்கள் எவ்வளவாகிலும்பொல்லாங்கைச் செய்யாதிருக்கும்படியாகப்பராபரனை நோக்கி, விண்ணப்பம் பண்ணுகிறேன். நாங்கள் உதாரணமுள்ளவர்களென்று காணப்படும்பொருட்டல்ல, நீங்கள் நலமானதைச்செய்யும்பொருட்டே அப்படிச் செய்கிறேன். (அப்படி நீங்கள் செய்தால்) நாங்கள் உதாரணமில்லாதவர்களாயிருக்கலாம்.

௮. சத்தியத்திற்கு விரோதமாக நாங்கள் ஒன்றுஞ் செய்யக்கூடாமற் சத்தியத்திற்கு நேராகச்செய்வோமே.

௯. ஆகையால், நாங்கள் பலவீனராயிருந்தாலும், நீங்கள் பலமுள்ளவர்களானூற் சந்தோஷப்படுவோம். அந்தப்படி நீங்கள் நற்சீர்பொருந்தும்படிக்கே வேண்டுதல்பண்ணுகிறூம்.

௰. அதினுலே நான் உங்களிடத்தில் வந்திருக்கும்பொழுது, * இடிக்கிறதற்கல்ல, எழுப்பிக்கட்டுகிறதற்குக்கர்த்தர் எனக்குக்

கொடுத்த அதிகாரத்தின்படியே நான் கண்டிதம்பண்ணுகபடிக்கு, இவைகளைத் தூரமாயிருந்து எழுதுகிறேன். * ௰: ௮.

௰௧. கடைசியிலே சகோதரரே! * சந்தோஷமாயிருங்கள். நற் சீர்பொருந்துங்கள். ஆறுதலையடையுங்கள். ஏக சிந்தையாயிருங்கள். சமாதானமாயிருங்கள். அப்பொழுது அன்புக்கும், சமாதானத்திற்குங் காரணராகப் பராபரன் உங்கள் பங்கிலிருப்பார். * பிலிப். ௪: ௪.

௰௨. * ஒருவரையொருவர் பரிசுத்தமுத்தத்தினால் வாழ்த்துங்கள். * ௧ கொரி. ௰௬: ௨௰.

௰௩. பரிசுத்தவான்களெல்லாரும் உங்களுக்கு வாழ்த்துதல் செய்கிறார்கள்.

௰௪. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய கிருபையும், பராபரனுடைய அன்பும், பரிசுத்த ஆவியோடே ஐக்கமும் உங்களனைவருடனேயுமிருக்கக்கடவது.

ஆமன்.

அப்போஸ்தலனாகிய பவுல்

கலாத்தியருக்கு எழுதின நிருபம்.

GALATIANS.

---

௧ அதிகாரம்.

[(௬) கலாத்திய சபையார் தன்னையுஞ் சுவிசேஷத்தையும் இத்தனைச்சீக்கிரமாய் விட்டுவிட்டதற்கு ஆச்சரியப்பட்டு, (௮) தான் பிரசங்கித்த சுவிசேஷத்தைத்தவிர மற்ற விபரீதங்களைப் பிரசங்கிக்கிறவர்களைச் சபித்து, (௰௧) தான் சுவிசேஷத்தை மனுஷர்களாலல்ல, பராபரனாலேயே கற்றறிந்தானென்றும், (௰௪) தான் அப்போஸ்தல ஊழியத்துக்கழைக்கப்பட்டதற்கு முன் இப்படிப்பட்டவனாய் இருந்தானென்றும், (௰௫) அழைக்கப்பட்டவுடனே இவற்றைச்செய்தானென்றுங்காட்டியது.]

மனிதரினின்றுமல்ல. ஒரு மனிதனாலுமல்ல. இயேசுக்கிறிஸ்துவினாலும், அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின பிதாவாகிய பராபரனாலும் அப்போஸ்தலனாயிருக்கிற பவுலும்,

௨. என்னுடனே கூடவிருக்கிற எல்லாச் சகோதரருங் கலாத்திய நாட்டிலுள்ள சபைகளுக்கு எழுதுகிறதாவது;

௩. * இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று நம்மை நீக்கிவிடும்படிக்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து நம்முடைய பிதாவாகிய பராபரனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காக, தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தாரே. அவராலும், பிதாவாகிய பராபரனாலும், * ௧ யோவா. ௫: ௰௯.

௪. உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் உண்டாகக்கடவது.

௫. அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக.—ஆமன்.

௬. உங்களைக்கிறிஸ்துவின் கிருபைக்குள் அழைத்தவனை நீங்களிவ்வளவு சீக்கிரமாய் விட்டு வேறொரு சுவிசேஷத்திற்குத்திரும்பினதால் நான் ஆச்சரியப்படுகிறேன்.

௭. (இதுவன்றி) வேறொரு சுவிசேஷமும் இல்லையே. அப்படியிருந்துஞ் சிலர் * உங்களைக்கலக்கப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை மாறுபாடாக்க மனதாய் இருக்கிறார்கள். * அப்போ. ௰௫: ௧.

௮. நாங்கள் உங்களுக்கு அறிவித்த சுவிசேஷத்தைத்தவிர நாங்களாவது, வானந்தரத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை யுங்களுக்கறிவித்தால், * சபிக்கப்பட்டவர்களாய் இருக்கக்கடவோம். * ௧ கொரி. ௰௬: ௨௨.

௯. ஒருவன் நீங்கள் ஏற்றுக்கொண்டசுவிசேஷத்தைத்தவிர வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்கு அறிவித்தாற் சபிக்கப்பட்டவனாகவே யிருக்கக்கடவனென்று முன் சொன்னதுபோல மறுபடியுஞ் சொல்லுகிறேன்.

௰. * இப்பொழுது நான் மனிதரை நாடுகிறேனா? அல்லது பராபரனை நாடுகிறேனா! அல்லது மனிதருக்குப்பிரியமாய் இருக்கப் பார்க்கிறேனா? நான் மனிதருக்குப்பிரியமானவனானால், நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனாயிருப்பதில்லை. * ௧ தெச. ௨: ௪.

௰௧. மேலுஞ் சகோதரரே! நான் உங்களுக்கு நிச்சயிக்கிறதென்னவெனில், என்னாற் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனிதருடைய இச்சைக்கேற்றதல்ல.

௰௨. * நான் அதை ஒருமனிதனால் அடையவும், படிக்கவுமில்லையே. இயேசுக்கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார். * ௧ கொரி. ௰௧: ௨௩.

௰௩. நான் யூதமார்க்கத்திலே யிருந்தபொழுது என்னுடைய நடக்கையைக்குறித்துக்கேள்விப்பட்டிருப்பீர்கள் * பராபரனுடைய சபையை நான் மிகவுந் துன்பப்படுத்தி, அதைப்பாழாக்கி, * அப். ௮: ௩. ௯: ௧.

௰௪. என் தேசத்தாரில் என் வயதுள்ள அநேகரிலும் யூதமார்க்கத்திலே தேறினவனாய், என் பிதாக்களுடைய பாரம்பரை நியாயங்களுக்காக மிகுந்த பத்தி வயிராக்கியனாயிருந்தேன்.

௰௫. அப்படியிருக்குங்காலத்திலே என் தாயின் கருப்பமுதல் என்னைப்பிரித்தெடுத்துத் தமது கிருபையினால் அழைத்த பராபரன்.

௰௬. தம்முடைய குமாரனை நான் புறத்தேசத்தாரிடத்திற் சுவிசேஷமாய் அறிவிக்கும்பொருட்டாக * அவரை எனக்குள் வெளிப்படுத்தப்பிரசித்தமாய் இருந்தபொழுது, நான் எவ்வளவாகிலும் மாம்ச இரத்தத்தோடே யோசனை பண்ணாமலும், * மத்தே. ௰௬: ௰௭.

௰௭. எனக்குமுன்னே அப்போஸ்தலரானவர்களிடத்திலே எருசலேமுக்குத்திரும்பாமலும் அரபிதேசத்திற்குப்புறப்பட்டுப்போய், மறுபடியுந் தமஸ்கூருக்குத்திரும்பிவந்தேன்.

௰௮. அதின்பின்பு மூன்றுவருஷஞ் சென்றபொழுது, பேதுருவைப்பார்த்தறியும்படிக்கு, நான் எருசலேமுக்குப்போய் அவனிடத்திற் பதினைந்துநாளிருந்தேன்.

௰௯. கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபைத்தவிர, அப்போஸ்தலரில் வேறொருவனையும் நான்காணவில்லை.

௨௰. நான் உங்களுக்கெழுதுகிற இவைகள் பொய்யல்லவென்று பராபரனுக்கு முன்பாக உங்களுக்கு நிச்சயிக்கிறேன்.

௨௧. * பின்பு சீரியா, கிலிசியா தேசங்களுடைய புறங்களில் வந்தேன். * அப். ௰௫: ௪௧

௨௨. மேலும் யூதேயாநாட்டிலே கிறிஸ்துவைப்பற்றிய சபைகளுக்கு முகம் அறியாதவனாயிருந்தேன்.

௨௩. முன்னே நம்மைத்துன்பப்படுத்தினவன்தானே அழிக்கத்தேடின சுவிசேஷத்தை இப்பொழுது அறிவிக்கிறானென்றுமாத்திரம் அவர்கள் கேள்விப்பட்டிருந்து,

௨௪. என்னைக்குறித்து, பராபரனைத்துதித்தார்கள்.

௨ அதிகாரம்.

[(௧) நான் எருசலேமுக்கு மறுபடியும் போனகாலமும், முகாந்தரமும் இன்னதென்றும், (௫) தீர்த்தச்சுன்னத்தடைந்ததில்லையென்றும், (௰௧) நான் பேதுருவைக்கடிந்துகொண்ட நியாயம் இன்னதென்றும், (௰௪) தானும், மற்றவர்களும் யூதர்களாயிருந்தும், விசுவாசத்தினாலொழியக்கிரியைகளினால் நீதிமான்களாகக்கூடாதென்றும், (௨௰) அப்படி நீதிமான்களாகிறவர்கள் பாவத்திற் கிடங்கொடுக்கிறவர்களல்லவென்றுங் காட்டியது.]

பின்பு பதினாலுவருஷஞ் சென்றபொழுது, * நான் தீத்தைக்கூட்டிக்கொண்டு, பருனபாவுடனேகூட மறுபடியும் எருசலேமுக்குப்போனேன். * அப். ௰௫: ௨.

௨. அந்தப்பிரயாணத்தை நான் தேவ அறிவிப்பினாலே செய்து. நான் ஓடுகிறதும், அல்லது, ஓடினதும் வீணாகாதபடிக்குப்புறத்தேசத்தாரிடத்திலே நான் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தை அவர்களுக்கும், விசேஷமாகப்பெரியோர்களுக்கும் விவரித்துக்காண்பித்தேன்.

௩. அப்பொழுது என்னுடனேகூட இருந்த தீத்து, கிரேக்கனாயிருந்தும், விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளும்படிக்குக்கட்டாயம்பண்ணப்படவில்லை.

௪. இயேசுக்கிறிஸ்துவினால், நமக்குண்டான விடுதலையை வேவுபார்த்து, நம்மை நியாயப்பிரமாணத்திற்கு அடிமைகளாக்கும்பொருட்டாக, பக்கவழியாய் நுழைந்துட்புகுந்த கள்ளச்சகோதரர் நிமித்தமே அப்படியாயிற்று.

௫. சுவிசேஷத்தின்சத்தியம் உங்களிடத்திலே நிலைநிற்கும்படியாக, நாங்கள் ஒருநாழிகையாகிலும் அவர்களுக்குக்கீழ்ப்படியவில்லை.

௬. அல்லாமலும், பெரியோர்களென்றெண்ணப்பட்டவர்களாலும், (நான் ஒன்றையும் அடையவில்லை.) முன்னே அவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் எனக்குக்கவையில்லை. பராபரன் மனிதருடைய முகத்தை நோக்கிப்பார்க்கிறவரல்லவே. அந்தப்பெரியோர்கள் எனக்கு அதிகம் ஒன்றும் போதியாமல்,

௭. விருத்தசேதனமுள்ளவர்களுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி பேதுருவைப்பலப்படுத்தினவர் புறத்தேசத்தாருக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி என்னையும் பலப்படுத்தினதால்,

௮. * விருத்தசேதனமுள்ளவர்களுக்குச்சுவிசேஷத்தைப்பிரசங்கிக்கும்படி, பேதுருவுக்கு ஒப்புவிக்கப்பட்டதுபோல விருத்தசேதனமில்லாதவர்களுக்கு அப்படியே செய்யும்படி எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதென்று அவர்கள்கண்டு, * ௧ தெச. ௨: ௪.

௯. அந்தப்படி எனக்களிக்கப்பட்ட கிருபையையறிந்தபொழுது, அவர்களில் தூண்களென்றெண்ணப்பட்ட யாக்கோபும், கேபாவும், யோவானுந் தாங்கள் விருத்தசேதனமுள்ளவர்களுக்கும், நாங்கள் புறத்தேசத்தாருக்குஞ் சுவிசேஷத்தைப்பிரசங்கிக்கும்படிக்கு ஐக்கப்படுதற்கு அடையாளமாக எனக்கும், பருனபாவுக்கும் வலது கைகளைக்கொடுத்து,

௰. தரித்திரரை நினைத்துக்கொள்ளும்படிக்குமாத்திரம் புத்திசொன்னார்கள். நானும் அப்படியே செய்யச்சாக்கிரதையாயிருந்தேன்.

௰௧. மேலும் பேதுரு அந்தியோகியாவூருக்கு வந்தபொழுது, அவன் தப்பிதஞ்செய்ததினாலே, நான் முகமுகமாய் அவனோடெதிர்த்தேன்.

௰௨. எப்படியென்றால், யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்குமுன்னே அவன் புறத்தேசத்தாருடனே சாப்பிட்டான். அவர்கள்வந்தபொழுது, விருத்தசேதனமுள்ளவர்களுக்குப்பயந்து, விலகிப்பிரிந்தான்.

௰௩. மற்ற யூதரும் அப்படியே வஞ்சகம்பண்ணினார்கள். அவர்களுடைய வஞ்சகத்தினாலே பருனபாவுங்கூட இழுக்கப்பட்டான்.

௰௪. இப்படி அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்திற்குத்தக்கதாக நடவாததை நான் கண்டபொழுது, எல்லாருக்கு முன்பாக நான் பேதுருவைநோக்கிச்சொன்னதாவது; யூதனாயிருக்கிற நீர் யூதர் முறைமையாகவல்ல, புறத்தேசத்தார் முறைமையாக நடந்துகொண்டிருக்க, புறத்தேசத்தாரை யூதர் முறைமையாய் நடக்கும்படி, நீர் எப்படிக்கட்டாயம் பண்ணலாம்?

௰௫. ஒரு மனிதனும் நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற கிரியைகளினாலே, நீதிமானாக்கப்படுவதில்லையே.

௰௬. ஆகலாற் புறத்தேசத்தாரில் பிறந்த பாவிகளாயிராமல் சுபாவப்படி யூதராயிருக்கிற நாமும், * இயேசுக்கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலேயன்றி, நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியைகளால் மனிதன் நீதிமானாகிறதில்லையென்றறிந்து, நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாகும்படிக்கு, கிறிஸ்து இயேசுவின்மேல், விசுவாசிகளானோமே. * உரோ. ௩: ௨௮. ௪, ௫. பிலிப். ௩: ௯.

௰௭. அந்தப்படி கிறிஸ்துவினாலே நீதிமான்களாகப்பார்க்கையில், நாமும் பாவிகளாகக்காணப்பட்டால் கிறிஸ்துப்பாவத்திற்கூழியக்காரராவாரா? அப்படியாகவே மாட்டார்.

௰௮. நான் இடித்துப்போட்டவைகளை நானே மறுபடியுங்கட்டினால், என்னை அக்கிரமக்காரனென்று காண்பிப்பேன்.

௰௯. பராபரனுக்காகப்பிழைக்கும்படிக்கு, நியாயப்பிரமாணத்தின்வழியாய் நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே.

௨௰. கிறிஸ்துவுடனே கூடச்சிலுவையில் அறையப்பட்டேன், அப்படியிருந்தும் பிழைத்திருக்கிறேன். நான் தானேயல்ல, கிறிஸ்துவே எனக்குள்ளே பிழைத்திருக்கிறார். அந்தப்படி இப்பொழுது, என் தேகத்திலுள்ள சீவன் என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த பராபரனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைக்கின்றது.

௨௰௧. * நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வந்தால், கிறிஸ்து மரித்தது வீணாய் இருக்குமே. ஆதலால், நான் பராபரனுடைய கிரியையைத்தள்ளிவிட்டேன் என்றேன். * உரோ. ௪: ௰௪.

௩ அதிகாரம்.

[(௧) அவர்கள் விசுவாசத்தைவிட்டு நியாயப்பிரமாணத்தைப்பற்றின முகாந்தரம் ஏதென்று கேட்டு, (௯) விசுவாசிக்கிறவர்கள் நீதிமான்களாகி, (௯) ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்களென்று, (௰) பல திருஷ்டாந்தங்களினாற் காட்டியது.]

ஆ புத்தியீனமுள்ள கலாத்தியரே! நீங்கள் சத்தியத்திற்குக்கீழ்ப்படியாமற் போகத்தக்க விதமாக, யாவன் உங்களை மயக்கப்படுத்தினான். உங்களுக்குப்பிரத்தியட்சமாய் இயேசுக்கிறிஸ்து உங்களுக்காகச்சிலுவையில், அறையப்பட்டவராய்ச்குறிக்கப்பட்டிருந்தாரே.

௨. ஆவியை நீங்கள் நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியைகளினாலோ, விசுவாசப்பிரசங்கத்தினாலோ, (எதினாலே) பெற்றீர்கள். இதை மாத்திரம் உங்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

௩. ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது, மாம்சத்தினாலே முடிவுசெய்ய இத்தனை புத்தியீனராய் இருக்கிறீர்களா?

௪. இத்தனை பாடுகளை வீணாய்ப்பட்டீர்களா! ஆ, வீணாய் இருக்கமாட்டாதே?

௫. அன்றியும், உங்களுக்கு ஆவியை வரச்செய்கிறவனும், உங்களுக்குள்ளே அற்புதங்களை நடப்பிக்கிறவனுமானவன் அப்படி நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியைகளினாலோ? விசுவாசப்பிரசங்கத்தினாலோ! (எதினாலே) செய்கிறான்?

௬. அப்படி * ஆபிரகாம் பராபரனை விசுவாசித்தான். அதுவே அவனுக்கு நீதியென்று எண்ணப்பட்டது. * ௧ மோ. ௰௫: ௬.

௭. ஆகையால், விசுவாச மார்க்கத்தாரே

ஆபிரகாமின் பிள்ளைகளாய் இருக்கிறார்க
ளென்று அறிவீர்களாக.
அ. மேலும் பராபரன் விசுவாசத்தினாலே
உலகத்தாரை நீதிமான்களாக்குவாரென்று
வேதாகமம் முன்னறிந்து, * உன்னாலே
எல்லா உலகத்தாரும் ஆசீர்வதிக்கப்படு
வார்களென்று ஆபிரகாமுக்குச்சுவிசேஷ
மாய் முன்னறிவித்தது. * க மோ. ௰உ: ௩.
௯. அந்தப்படி விசுவாச மார்க்கத்தார் வி
சுவாசமுள்ள ஆபிரகாமுடனே கூட ஆசீர்
வதிக்கப்படுகிறார்கள்.
௰ நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியைக்
காரராகிய யாவரும் * நியாயப்பிரமாணப்
புத்தகத்தில் எழுதப்பட்டவைகளை யெல்
லாம் செய்யத்தக்கவிதமாக, அவைகளில் நி
லைத்திராதவனெவனோ அவன் சபிக்கப்பட்
டவனென்று எழுதியிருக்கிறபடியால், சா
பத்திற்குக்கீழாய் இருக்கிறார்கள். * ரு
மோ. உஎ: உ௬.
௰க. மேலும் நியாயப்பிரமாணத்தினாலே,
ஒருவனும் பராபரனிடத்திலே நீதிமானாகி
றதில்லையென்பது வெளியரங்கமாய் இருக்
கின்றது. எப்படியெனில், * விசுவாசத்
தால் நீதிமானானவன் பிழைப்பானென்று
சொல்லியிருக்கிறதே. * ஆப௬. உ: ச.
உரோ. க: ௰எ.
௰உ. அன்றியும், நியாயப்பிரமாணமான
து விசுவாசத்தை யேற்படுத்துகிறதில்லை.
*இவைகளைச்செய்கிறமனிதன் இவைகளாற்
பிழைப்பானென்று ஏற்படுத்துகின்றது.
* ௩ மோ. ௰அ: ரு.
௰௩. இப்படியிருக்க * மரத்திலே தூக்கப்
பட்ட யாவனும் சபிக்கப்பட்டவனென்று
எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காக †
சாபத்தையடைந்து, நியாயப்பிரமாணத்
தின் சாபத்திற்கு நம்மை விலக்கி இரட்சித்
தார். * ரு மோ. உக: உ௩. † உரோ. அ:
௩. உ கொரி. ரு: உக.
௰ச. ஆபிரகாமுக்குண்டான ஆசீர்வாதம்
கிறிஸ்து இயேசுவினாலே புறத்தேசத்தாருக்
கு வரும்படியாகவும், வாக்குத்தத்தம்பண்
ணப்பட்ட ஆவியை நாம் விசுவாசத்தினா
லே பெறும்படியாகவுமே அப்படியாயிற்று
௰ரு. சகோதரரே! மனிதர் முறைமையா
கச்சொல்லுகிறேன். மனிதர்களுக்குள்ளே
உறுதி பண்ணப்பட்ட ஓர் உடம்படிக்கை
யை ஒருவனும் தள்ளவும், அதினோடே எ
தையாகிலும் கூட்டவுமாட்டானே.
௰௬. ஆபிரகாமுக்கும், அவனுடைய சந்
ததிக்கும், வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்
டன. அப்பொழுது சந்ததிகளுக்கென்று
அநேகரைக்குறித்துச்சொல்லாமல், * உன்
சந்ததிக்கென்று ஒருவனைக்குறித்துச்சொல்
லியிருக்கிறார். அந்தச்சந்ததி கிறிஸ்துவே.
* க மோ. உஉ: ௰எ, ௰அ.
௰எ. ஆனதால் நான் சொல்லுகிறதென்ன
வெனில், கிறிஸ்துவுக்கு நேராகப்பராப
ரனால் முன் உறுதிபண்ணப்பட்ட உடம்படிக்
கையுண்டே. அப்பொழுது உண்டானவாக்
குத்தத்தத்தைத்தள்ளத்தக்கதாக, அந்த உ
டம்படிக்கையை * நானூற்றுமுப்பதுவரு
ஷத்திற்குப்பின் உண்டான நியாயப்பிரமா
ணம் நீக்கமாட்டாது. * உ மோ. ௰உ: சு௰.
௰அ. * அன்றியும், சுதந்திரமானது நியா
யப்பிரமாணத்தினாலே யுண்டானால், அவ்
வாக்குத்தத்தத்தினால் உண்டாயிராதே. ஆ
பிரகாமுக்குப்பராபரன் அதை வாக்குத்தத்
தத்தினாலே அருளிச்செய்தார். * உரோ.
ச: ௰௩, ௰ச.
௰௯. அப்படியானால், நியாயப்பிரமாணம்
என்னத்துக்கென்றால், அது வாக்குத்தத்தத்
தைப்பெற்ற சந்ததி வருமளவும் தேவதூத
ரைக்கொண்டு, * மத்தியஸ்தன்கையிற் கட்
டளையிடப்பட்டு அக்கிரமங்களின் நிமித்த
மாகக்கூட்டப்பட்டிருந்தது. * உ மோ.
உ௰: ௰அ—உக.
உ௰. மத்தியஸ்தன் ஒருவனுடையவனல்ல,
பராபரன் ஒருவரே யிருக்கிறார்.
உக. அப்படியானால் நியாயப்பிரமாணம்
பராபரனுடைய வாக்குத்தத்தங்களுக்கு வி
ரோதமாய் இருக்கிறதாவென்றால், அப்படி
யிருக்கிறதேயில்லை. எப்படியெனில், * உ
யிரைக்கொடுக்கத்தக்க நியாயப்பிரமாணம்
கொடுக்கப்பட்டிருந்ததானால், நீதியானது
மெய்யாய் நியாயப்பிரமாணத்தினால் உண்
டாகும். * உ: உக.
உஉ. அப்படியிராதபடியால், வேதாகமம்
இயேசுக்கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தி
னாலே வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நீதி
விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்ப
டிக்கு, * எல்லாரையும் ஏகமாய்ப்பாவத்
தின்கீழ் அடைத்துப்போட்டது. * உரோ.
௩: ௯.
உ௩. ஆனதால், விசுவாசம் வருதற்குமுன்
னே நாங்கள் வெளிப்படுவதாயிருந்த விசு
வாசத்திற்கேதுவாக அடைக்கப்பட்டவர்க
ளாய் நியாயப்பிரமாணத்தின்கீழக்காக்கப்
பட்டிருந்தோம்.
உச. இவ்விதமாய் நாம் விசுவாசத்தினாலே
நீதிமான்களாவதற்கு நியாயப்பிரமாணம்
நம்மைக்கிறிஸ்துவினிடத்திற்கு வழி நடத்
துகிற உபாத்தியாயிருந்ததே.
உரு. விசுவாசம் வந்தபின்பு, நாங்கள் பின்
னும் அந்த உபாத்திக்குக்கீழானவர்களல்ல.
உ௬. நீங்களெல்லாரும் * கிறிஸ்து இ
யேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே பரா
பரனுடைய பிள்ளைகளாய் இருக்கிறீர்களே.
* யோவா. க: ௰உ.
உஎ. உங்களிற் * கிறிஸ்துவுக்குள்ளாக
ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபே

ரோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத்தரித்
துக்கொண்டீர்களே. * உரோ. ௬: ௩.
௨௮. இப்படி நீங்களெல்லாரும் கிறிஸ்து
இயேசுவினாலே ஒன்ருய் இருக்கிறபடியால்,
* யூதனென்றும், கிரேக்கனென்றும், அடி
மையென்றும், சுவாதீனனென்றும், ஆணெ
ன்றும், பெண்ணென்றும் இவ்வேற்றுமை
யுங்களுக்கில்லையே. * ௧ கொரி ௰௨: ௰௩.
௨௯ மேலும் நீங்கள் கிறிஸ்துவைச்சேர்
ந்தவர்களாயிருக்க ஆபிரகாமின் சந்ததியா
ராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்திர
ராயும் இருக்கிறீர்கள்.

௪ அதிகாரம்.

[(௧) சுதந்தரவாளி சிறுபிள்ளையாயிருக்கும்
காலமட்டும் தன் காரியக்காரருக்குக்கீழ் இ
ருப்பதுபோல, கிறிஸ்து வருமட்டும் நா
மும் நியாயப்பிரமாணத்துக்குக்கீழிருந்தோ
மென்றும், (௫) கிறிஸ்து நம்மைநியாயப்பிர
மாணத்தினின்றுவிடுதலையாக்கினபடியால்,
(௭) இனி அதற்கு நாம் அடிமைகளல்ல
வென்றும், (௰௪) கலாத்தியர் தனக்குப்பா
ராட்டின பட்சத்தையும், அவர்கள்மேலுள்
ள தன்னுடைய பட்சத்தையும் இன்னதென்
றும், (௨௨) நாம் ஆபிரகாமின் சுவாதீன
மனைவியின் புத்திரர்கள் என்றுங் காட்டி
யது.]

பின்னும் நான் சொல்லுகிறதென்ன
வெனில், சுதந்திரவாளியானவன் எல்
லாவற்றிற்கும் எசமானுய் இருந்தும், அவன்
குழந்தையாய் இருக்கிறகாலமளவும் அவ
னுக்கும், அடிமையானவனுக்கும் வித்தி
யாசம் இல்லை.
௨. தகப்பன் குறித்த காலம்வரைக்கும்
அவன் உபாத்திமாருக்கும், வீட்டுவிசார
ணைக்காரருக்குங் கீழாயிருக்கிறுன்.
௩. அப்படிப்போல நாமுங் குழந்தைகளா
யிருந்தகாலத்திலே இவ்வுலகத்தின் வழிபாடு
களுக்கு * அடிமைப்பட்டவர்களாயிருந்
தோம். * ௫: ௨௫.
௪. காலம் நிறைவேறினபொழுது பரா
பரன் தம்முடைய குமாரனையனுப்ப அவர்
நியாயப்பிரமாணத்தின் கீழானவர்களாகிய
நம்மை மீட்டுக்கொண்டு புத்திரசுவிகாரம்
நமக்குண்டாகும்படி செய்யும்படிக்கு,
௫. ஸ்திரீயினிடத்திற் பிறந்து, நியாயப்
பிரமாணத்திற்குக்கீழானுர்.
௬. மேலும், நீங்கள் புத்திரராயிருக்கிற
படியினாலே, * அப்பா, பிதாவே! என்று
கூப்பிடத்தக்கதாகப்பராபரன் தம்முடை
ய குமாரனுடைய ஆவியை யுங்களிருதயங்
களில் அனுப்பினுர். * உரோ. ௮: ௰௫.
௭. ஆகையால், இனி நீ அடிமையாயிரா
மற் புத்திரனுயிருக்கிருய். மேலும் * நீ
புத்திரனுயிருக்கக்கிறிஸ்துவின் மூலமாய்ப்
பராபரனுடைய சுதந்திரனுயுமிருக்கிருய்.
* உரோ. ௮: ௰௭.
௮. நீங்கள் பராபரனை அறியாமல் இருந்
தபொழுது, சுபாவத்தின்படி தேவர்களல்
லாதவர்களுக்கு அடிமைகளாயிருந்தீர்கள்.
௯. இப்பொழுது நீங்கள் பராபரனை யறி
ந்துகொண்டபின்பு, அல்லது பராபரனாலே
அறிந்துகொள்ளப்பட்டபின்பு, எப்படி நீங்
கள் பலவீனமும், வெறுமையுமான அவ்
வழிபாடுகளுக்கு மறுபடியுந் திரும்பி, மறு
படியும் அவைகளுக்கு அடிமைப்பட்டிருக்
கவிரும்புகிறீர்கள்?
௰. * நாள்களையும், மாதங்களையும், மற்றக்
காலங்களையும், வருஷங்களையும் நோக்கிப்
பார்க்கிறீர்களே. * கொலோ. ௨: ௰௬.
௰௧. ஆ, நான் உங்களுக்காகப்பிரயாசப்
பட்டது வீணாய்ப்போகுமோவென்று உங்
களைக்குறித்துப்பயந்திருக்கிறேன்.
௰௨. சகோதரரே! நான் உங்களைப்போ
லானபடியால், நீங்களும் என்னைப்போலா
குங்களென்று உங்களைவேண்டிக்கொள்ளுகி
றேன். எனக்குநீங்கள் அநியாயமொன்றுஞ்
செய்யவில்லை.
௰௩. உங்களுக்குத்தெரிந்திருக்கிறபடி * முத
லாந்தரம் நான் உங்களுக்குச்சுவிசேஷத்
தைச்சரீரபலவீனத்தோடே யறிவித்தேன்.
* ௧ கொரி. ௨: ௩.
௰௪. அப்படியிருந்தும் எனக்குச்சோதனை
யான அந்தச்சரீர பலவீனத்தை நீங்கள்
அசட்டைபண்ணாமலும், அரோசியாமலும்
பராபரனுடைய தூதனைப்போலவும், * கி
றிஸ்து இயேசுவைப்போலவும் என்னை யே
ற்றுக்கொண்டீர்கள். * யோவா. ௰௩: ௨௰.
௰௫. அப்பொழுது எவ்வளவு பாக்கியமுள்
ளவர்களாயிருந்தீர்கள். நீங்கள் உங்கள்
கண்களைப்பிடுங்கி எனக்குக்கொடுக்கக்கூடு
மானால், அப்படியுஞ் செய்வீர்களேயென்
று உங்களுக்குச்சாட்சியாயிருக்கிறேன்.
௰௬. நான் உங்களுக்குச்சத்தியத்தைச்
சொன்னபடியினாலே உங்களுக்குச்சத்துரு
வானேனு?
௰௭. அவர்கள் உங்களுக்கு வயிராக்கியபட்
சத்தைக்காண்பிக்கிறுர்கள். ஆகிலும் நல்ல
மனதாய் அப்படிச்செய்கிறதில்லை. அல்லா
மலும், அவர்கள் தங்களுக்கு நீங்கள் வயி
ராக்கிய பட்சத்தைக்காண்பிக்கும்பொருட்
டு, (என்னிலிருந்து) உங்களை நீக்கவிரும்பு
கிறுர்கள்.
௰௮. நன்மையைக்குறித்து வயிராக்கிய
பட்சமாயிருக்கிறது நல்லதுதான். அப்
படியே நான் உங்களிடத்தில் இருக்கும்
பொழுது மாத்திரமல்ல, எப்பொழுதுஞ்
செய்யவேண்டும்.
௰௯. * ஆ, என்பிள்ளைகளே! கிறிஸ்து
உங்களிடத்தில் வடிவுகொள்ளுமளவும் உங்

களுக்காக மறுபடியுங் கருப்பவேதனைப்
படுகிறேன். * ௧ கொரி. ௪: ௰௫.
௨௰. மேலும் நான் உங்களைக்குறித்துச்
சந்தேகப்படுகிறபடியால், நான் இப்பொ
ழுதே யுங்களிடத்திலிருந்து என் பேச்சை
மாற்றிக்கொள்ள ஆசையாயிருக்கிறேன்.
௨௰௧. நியாயப்பிரமாணத்திற்குக்கீழாயிருக்
க மனதுள்ள நீங்கள் நியாயப்பிரமாணத்
தைக்கேட்கவில்லையா? இதை யெனக்குச்
சொல்லுங்கள்.
௨௰௨. எப்படி யெழுதியிருக்கிறதென்றால்,
ஆபிரகாமுக்கு இரண்டு குமாரரிருந்தார்
கள். ஒருவன் * அடிமையானவளிடத்திற்
பிறந்தவன், ஒருவன் † சுவாதீனமுள்ளவ
ளிடத்திற் பிறந்தவன். * ௧ மோ. ௰௬:
௰௫. † ௨௧: ௨, ௩.
௨௰௩. அடிமையானவளிடத்திற் பிறந்தவன்
* சரீரபலத்தினாலே பிறந்தான். சுவாதீன
முள்ளவளிடத்திற் பிறந்தவன் † வாக்குத்
தத்தத்தினாலே பிறந்தான். * ௧ மோ.
௰௬: ௧—௩. † ௧ மோ. ௰௫: ௪—௬. ௰௭:
௰௫, ௰௬. ௰௮: ௰.
௨௰௪. இவைகள் ஞான அருத்தமுள்ளவை
கள். என்னவெனில், அந்த ஸ்திரீகள்
இரண்டு ஏற்பாடுகளேயாம். ஒன்று அடி
மைத்தனத்திற்கு ஏதுவாகப்பிள்ளைபெறுகிற
சீனாபர்வதத்தின் ஏற்பாடு. அதை ஆகா
ரென்பதுகுறிக்கின்றது.
௨௰௫. ஆகாரென்பது அரபிதேசத்திலுள்ள
சீனாபர்வதத்திற்குப்பேராயிருக்கிறதே. மே
லும் அந்த ஆகாரென்பவள் இப்பொழு
திருக்கிற எருசலேமுக்குச் சரியாயிருக்கி
றாள். அது தன் பிள்ளைகளோடேகூட அடி
மைப்பட்டிருக்கின்றதே.
௨௰௬. * மேலான எருசலேமே! சுவாதீன
மான ஸ்திரீயினாலே குறிக்கப்பட்டது. அ
வள் நம்மெல்லாருக்குந் தாயானவள். *
எபிரே. ௰௨: ௨௨. அறிவி. ௩: ௰௨—௨௧.
௨: ௰.
௨௰௭. அந்தப்படியெழுதியிருக்கிறதாவது;
புருஷனை யடைந்தவளிலும் அவாந்தரமுள்
ளவளுக்கே அதிக பிள்ளைகளுண்டு. ஆகை
யாற் * பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்
திரு. கருப்பவேதனைப்படாதவளே, களிப்
பாய் எழும்பிச்சத்தமிடு என்பதே. * ஏசா.
௫௪: ௧.
௨௰௮. ஆனதாற் சகோதரரே! நாம் ஈசாக்
கைப்போல * வாக்குத்தத்தத்துப்பிள்ளைக
ளாயிருக்கிறோம். * உரோ. ௯: ௭, ௮.
௨௰௯. அல்லாமலும், அக்காலத்திலே சரீர
பலத்தினாலே பிறந்தவன் ஆவியின்படி பிறந்
தவனைத் * துன்பப்படுத்தினதுபோல இப்
பொழுதும் நடக்கின்றது. * ௧ மோசே
௨௧: ௯.
௩௰. அதைக்குறித்து வேத எழுத்து எப்
படிச்சொல்லுகிறதென்றால், அடிமையான
வளின் மகன் சுவாதீனமுள்ளவளுடைய
குமாரனோடே சுதந்திரவாளியாய் இருக்கக்
கூடாது. ஆகையால், * அடிமையான
வளையும், அவளுடைய குமாரனையும் புறம்
பே தள்ளு என்றே சொல்லுகின்றது. *
௧ மோ. ௨௧: ௰—௰௨.
௩௰௧. இப்படியிருக்கச்சகோதரரே! நாம்
அடிமையானவளுக்கல்ல, சுவாதீனமுள்ளவ
ளுக்கே பிள்ளைகளாயிருக்கிறோம்.

௫ அதிகாரம்.

[(௧) அவர்களுடைய விடுதலையைப்பற்றி
நின்று, (௩) சுன்னத்தடையவேண்டியதில்
லை என்றும், (௰௩) நியாயப்பிரமாணத்தின்
பொருளாகிய அன்பைப்பாராட்டவேண்டு
மென்றும், (௰௯) மாம்சத்தின் கிரியைகளும்,
(௨௨) ஆவியின் கனிகளும் இன்னவைக
ளென்றுங்காட்டி, (௨௫) அவர்கள் ஆவி
யினாலே நடக்கும்படி புத்தி சொல்லியது.]

ஆனபடியினாலே நீங்கள் மறுபடியும்
அடிமைத்தனத்தின் நுகத்தடிக்
குட்படாமற் * கிறிஸ்து நமக்குண்டாக்
கின சுவாதீன நிலைமையிலே நிலைகொண்
டிருப்பீர்களாக. * உரோ. ௭: ௬.
௨ பின்னுங் கேளுங்கள். பவுலென்னும்
நானே உங்களுக்குச்சொல்லுகிறதாவது;
நீங்கள் விருத்தசேதனத்தைப் பண்ணிக்
கொண்டாற் கிறிஸ்து உங்களுக்கு ஒரு பிர
யோசனமுமாகமாட்டார்.
௩. மேலும், விருத்தசேதனத்தைப்பண்
ணிக்கொள்ளுகிற எந்தமனிதனும் நியாயப்
பிரமாணமுழுவதையும் நிறைவேற்றக்கடனா
ளியாய் இருக்கிறான் என்று, மறுபடியுஞ்
சாட்சியாக அறிவிக்கிறேன்.
௪ நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்க
ளாகவிரும்புகிற நீங்கள் கிறிஸ்துவைவிட்டு
நீங்கி, அவருடைய கிருபைக்குப்புறம்பே
விழுந்தீர்கள்.
௫. நாங்கள் ஆவியைக்கொண்டு விசுவா
சத்தினாலே * நீதிவருகிறதற்கு நம்பிக்கை
யோடே காத்திருக்கிறோம். * ௨ தீமோத்.
௪: ௮.
௬. கிறிஸ்து இயேசுவினிடத்தில் * விருத்
தசேதனமும், விருத்தசேதனமில்லாமையும்
ஒன்றுக்கும் உதவாதே. அன்பினாற் கிரி
யைசெய்கிற விசுவாசமே யுதவும். * ௧
கொரி. ௭: ௰௯.
௭. நீங்கள் நன்றாய் ஓடினீர்கள். சத்திய
த்திற்குக்கீழ்ப்படியாமற் போகத்தக்கதாக
யாவன் உங்களுக்குத்தடைசெய்தான்.
௮. நீங்கள் அடைந்த இந்தப்போதனை
உங்களை யழைத்தவராலே யுண்டானதல்ல.
௯. * புளிப்புள்ள கொஞ்சமாகிய மாப்பி

சைந்த மாவையெல்லாம் உப்பப்பண்ணு
கிறது. * ௧ கொரி. ௫: ௬.
௰. நீங்கள் வேறொரு சிந்தையாயிருப்பது
மில்லையென்று நான் கர்த்தராலே உங்க
ளைக்குறித்து நம்பிக்கையானேன். உங்க
ளைக்கலக்கப்படுத்துகிறவன் எப்படிப்பட்ட
வனாய் இருந்தாலும், ஆக்கினையைச்சுமந்
துகொள்வான்.
௰௧. சகோதரரே! இதுவரைக்கும் நான்
விருத்தசேதனத்தைப் பிரசங்கிக்கிறவனாயி
ருந்தால், இதுவரைக்கும் என்னத்திற்குத்
துன்பப்படுகிறேன். * சிலுவையைப் (பிர
சங்கிக்கிறதினாலே) வருகிற இடறல் ஒழிந்
திருக்குமே. * ௧ கொரி. ௧: ௨௩.
௰௨. உங்களைக்கலகம் பண்ணுகிறவர்கள்
தறிப்புண்டுபோனால் நலமாயிருக்கும்.
௰௩. சகோதரரே! நீங்கள் சுவாதீனத்திற்
கு அழைக்கப்பட்டீர்களே, இந்தச்சுவா
தீனத்தை நீங்கள் சரீரத்திற்கு ஏற்றதாக
அநுசரியாமல் அன்பினாலே ஒருவருக்கொ
ருவர் ஊழியஞ் செய்யுங்கள்.
௰௪. பிறனிடத்தில் உன்னைப்போல அன்
பாயிருப்பாயாகவென்ற இந்த ஒரேவார்த்
தையினாலே நியாயப்பிரமாணம் முழுவதும்
நிறைவேறுகின்றதே.
௰௫. நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப்
பட்சித்துவருகிறபடியினாலே ஒருவராலொ
ருவர் அழிக்கப்படாதபடிக்குப்பாருங்கள்.
௰௬. பின்னும் நான் சொல்லுகிறதென்ன
வென்றால், * சரீரத்தினிச்சையை நிறை
வேற்றாதிருந்து ஆவியின்படி நடந்துகொள்
ளுங்கள். * உரோ. ௮: ௰௩.
௰௭. சரீரம் ஆவிக்கு விரோதமாகவும்,
ஆவிசரீரத்திற்கு விரோதமாகவும் இச்சிக்
கிறதே. நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்
கிறவைகளைச்செய்யாதபடிக்கு, இவைகள்
ஒன்றுக்கொன்று விரோதமாய் இருக்கின்
றனவே.
௰௮. * ஆவியினால் ஏவப்படுவீர்களானால்,
நீங்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழான
வர்களல்ல. * உரோ. ௮: ௧, ௨.
௰௯. சரீரத்தின் கிரியைகள் வெளியரங்க
மாயிருக்கின்றன. அவையாவன! விபசா
ரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம்,
௨௰. விக்கிரகாராதனை, பில்லிசூனியம், ப
கைகள், விரோதங்கள், வயிராக்கியங்கள்,
கோபங்கள், சண்டைகள், பேதகங்கள், அ
வமார்க்கங்கள், பொறாமைகள், கொலைகள்,
௨௰௧. வெறிகள், பெருந்தீனிகள் முதலான
வைகளே. * இப்படிப்பட்டவைகளைச்செய்
கிறவர்கள் பராபரனுடைய இராச்சியத்
தைச்சுதந்தரிப்பதில்லையென்று முன்னே
நான் சொன்னதுபோல, இப்பொழுதும்
உங்களுக்குச்சொல்லுகிறேன். * ௧ கொரி.
௬: ௯, ௰. எபே. ௫: ௫, வெளி. ௨௨: ௰௫.

௨௰௨. * ஆவியின் கனியோ அன்பு, சந்
தோஷம், சமாதானம், நீடியசாந்தம், தய
வு, நற்குணம், * எபே. ௫: ௯.
௨௰௩. உண்மை, பொறுமை, இச்சையடக்
கம் * இப்படிப்பட்டவைகளைச்செய்கிறவர்
களுக்கு, நியாயப்பிரமாணம் விரோதமாய்
இருக்கிறதில்லை. * ௧ தீமோ. ௧: ௮—௰.
௨௰௪. மேலும் * கிறிஸ்துவின் பாரிசமான
வர்கள் தங்கள் சரீரத்தை அதின் பலவித
இச்சைகளோடுங்கூடச்சிலுவையில் அறை
ந்திருக்கிறார்கள். * உரோ. ௬: ௬.
௨௰௫. நாம் ஆவியைக்கொண்டு பிழைக்கிற
படியால், ஆவியின்படி நடக்கவுங்கடவோம்.
௨௰௬. * வீண்புகழ்ச்சியை விரும்பாமலும்,
ஒருவருக்கொருவர் கோபமூட்டாமலும்,
ஒருவர்மேலொருவர் பொறாமைவையாம
லும் இருக்கக்கடவோம். * பிலிப். ௨: ௩.

௬ அதிகாரம்.

[(௧) வழுவுகிறசகோதரனைமெத்தெனவாய்
நடத்தவும், (௨) ஒருவர் மற்றொருவருடைய
பாரத்தைச்சுமக்கவும், (௬) போதகர்களைப்
பராமரிக்கவும், (௯) நன்மைசெய்வதில் இ
ளைப்படையாமலிருக்கவும், (௰௨) சுன்னத்
தைப்பிரசங்கிக்கிறவர்களுடைய நோக்கம்
இன்னதென்றும், (௰௪) தான் கிறிஸ்துவின்
சிலுவையிலேயேயொழிய மற்றொன்றிலும்,
மேன்மைபாராட்டவில்லையென்றுஞ்சொல்
லியது.]

சகோதரரே! ஒரு மனிதன் ஒரு தப்பி
தத்தில் அகப்பட்டால், * ஆவியையு
டைய நீங்களும் தாண்டிவிடப்படாதபடிக்
கு, உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்
து, அப்படிப்பட்டவனைச் சாந்தமுள்ள
மனதோடே சீர்பொருந்தப்பண்ணுங்கள்.
* சங். ௱௪௧: ௫.
௨. * ஒருவருக்குண்டான பாரத்தை யொ
ருவர் சுமந்துகொண்டு, இப்படியே கிறிஸ்
துவின் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்
றுங்கள். * உரோ. ௰௫: ௧.
௩ மேன்மையில்லாத ஒருவன் தன்னை
மேன்மையுள்ளவனென்றெண்ணினால், தன்
னைத்தானே வஞ்சிப்பானே.
௪. அவனவன் தன் தன் சுய கிரியையைச்
சோதித்துப்பார்க்கக்கடவன். அப்பொழு
து மற்றவனைப்பார்க்கையிலல்ல, தன்னை
யே பார்க்கையில், புகழ்ச்சியைப்பெறு
வான்.
௫. அவனவன் தன் தன் சுய பாரத்தைச்
சுமப்பானே.
௬. மேலும் சுவிசேஷ வசனத்தைக்குறித்
து, உபதேசம் கேட்கிறவன் உபதேசிக்கிற
வனுக்கு, சகல நன்மைகளிலும் பங்கைக்
கொடுக்கக்கடவன்.

௭. உங்களை வஞ்சியாதிருப்பீர்களாக. பராபரன் தம்மைப்பரியாசம்பண்ண ஒட்டார். ஆனதால், மனிதன் விதைக்கிறதெதுவோ அதையே அறுப்பான்.

௮. * தன் தேக இச்சைகளுக்குத்தக்கதாக விதைக்கிறவன் அந்தத்தேக இச்சைகளினால் அழிவை அறுப்பான். ஆவிக்குத்தக்கதாக விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனையறுப்பான். * உரோ. அ: ௰௩.

௯. * ஆகையால், நன்மைசெய்கிறதில் இளைப்படையாமல் இருப்போமாக. நாம் தளர்ந்துபோகாதிருந்தால், ஏற்றகாலத்திலே யறுப்போமே. * உ தெச. ௩: ௰௩.

௰. இப்படியிருக்க, நமக்குக்காலம் நேரிடுகிறபடி யாவருக்கும் விசேஷமாக விசுவாசிகளாகிய குடும்பத்தாருக்கு, நன்மைசெய்யக்கடவோம்.

௰௧. பாருங்கள் இவ்வளவு என் கையெழுத்தோடே எழுதினேன்.

௰௨. சரீரத்தின்படி நல்லவர்களாகத் தோன்ற விரும்புகிறபேர்கள் தாங்கள் கிறிஸ்துவினுடைய சிலுவையின் நிமித்தம் துன்பப்படாதபடிக்கு மாத்திரமே யுங்களை விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள, கட்டாயம்பண்ணுகிறார்கள்.

௰௩. விருத்தசேதனத்தை யடைந்திருக்கிறவர்களும், நியாயப்பிரமாணத்தைக்கைக்கொள்ளாமல் இருக்கிறார்கள். அப்படியிருந்தும், அவர்கள் உங்கள் சரீரத்தைக்குறித்து மேன்மை பாராட்டும்படிக்கு, நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளவேண்டுமென்று இருக்கிறார்கள்.

௰௪. நான் நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் சிலுவையைக்குறித்தேயல்லாமல், * வேறொன்றைக்குறித்தும், மேன்மை பாராட்டாதிருப்பேனாக. அவராலே உலகம் எனக்குச்சிலுவையில் அறையுண்டிருக்கின்றது. நானும் உலகத்திற்கு, அப்படியேயிருக்கிறேன். * ௧ கொரி. ௧: ௩௧. உ: உ.

௰௫. கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனத்தாலாவது, விருத்தசேதனம் இல்லாமையாலாவது பிரயோசனம் இல்லையே. * புதிய சிருஷ்டியாகிறதினாலே, பிரயோசனம் வரும். * உ கொரி. ௫: ௰௭.

௰௬. இந்தப்பிரமாணத்தின்படியே நடந்துவருகிறவர்கள் எவர்களோ பராபரனுடைய இஸ்ரவேலராகிய அவர்களுக்கும் சமாதானமும், இரக்கமும் உண்டாயிருக்கக்கடவது.

௰௭. கடைசியிலே கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே சுமந்துகொண்டிருக்கிறபடியால், ஒருவனும் எனக்கு அதிக வருத்தம் உண்டாக்காதிருப்பானாக.

௰௮. சகோதரரே! நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனே இருக்கக்கடவது.—ஆமன்.

அப்போஸ்தலனாகிய பவுல்

எபேசருக்கு எழுதின நிருபம்.

Ephesians.

---

௧ அதிகாரம்.

[(௧) பவுல் எபேசிலுள்ள சபையைவாழ்த்தி, (௩) அவர்களுக்காக, பராபரனை ஸ்தோத்திரித்து, (௪) பராபரன் நம்மைத்தெரிந்துகொண்டதையும், (௬) கிருபையினால் நாம்புத்திரசுவிகாரமடைந்ததையும் (௰௧) மனுஷனுடைய இரட்சிப்புக்குமூலகாரணமாயிருக்கிறதென்பதையுஞ்சொல்லி, (௰௩) இந்த இரகசியத்தின் மேன்மை எளிதாய்க்கண்டறியக்கூடாததினாலே, (௰௬) அவர்கள் அந்த அறிவுக்கு வந்தெட்டவும், (௨௰) கிறிஸ்துவுக்குள் அதைச்சுதந்தரித்துக்கொள்ளவும் வேண்டிக்கொண்டது.]

பராபரனுடைய சித்தத்தினாலே இயேசுக்கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு ஊரிலே கிறிஸ்து இயேசுவினிடத்தில் விசுவாசமும், பரிசுத்தமுமுள்ளவர்களுக்கு எழுதுகிறதாவது;

௨. * நம்முடைய பிதாவாகிய பராபரனாலும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலும் உங்களுக்குக்கிருபையும், சமாதானமும் உண்டாகக்கடவது. * கலாத். ௧: ௩.

௩. நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய பிதாவுமாய், தேவனுமாயிருக்கிறவருக்கு, * தோத்திரமுண்டாவதாக. என்னத்தினாலெனில், அவர் தமக்கு முன்

பாக நாம் பரிசுத்தராயும், பிழையில்லாத
வர்களாயும் இருப்பதற்கு, † லோகத்தோற்
றத்திற்குமுன்னே இயேசுக்கிறிஸ்துவின் மூ
லயாய் நம்மைத்தெரிந்துகொண்டபடியே,
* க பேது. க: ரு, ௪. † உ தீமோ. க: கூ.
௪. அவர் மூலமாய்ப்பரமஸ்தலங்களிலே,
பலவித திவ்விய நன்மைகளால் நம்மை யா
சீர்வதித்தார்.
ரு. அன்றியும் அவர் தமக்கு * அன்பாயி
ருக்கிறவருக்குள் நமதுமேல் வைத்தருளின
தமது கிருபையின் மகிமைக்கு, புகழ்ச்சியா
க, * மத். ரு: யஎ.
சூ. தம்முடைய தயையுள்ள சித்தத்தின்
படி இயேசுக்கிறிஸ்து மூலமாக நம்மைத்
தமக்கு, * புத்திர சுவிகாரமுள்ளவர்களாக
அன்பினாலே முன் குறித்திருக்கிறார். *
யோவா. க: யஉ.
எ. அன்றியும் அவர் மிகுந்த விவேகத்தோ
டும், புத்தியோடும் * நமக்குச்சம்பூரண
மாய்த்தெரியப்படுத்தின ஐசுவரியமான கி
ருபையின்படியே, * கொலோ. ச: யச.
அ. அந்த இயேசுக்கிறிஸ்துத்தமது திரு
இரத்தத்தைச்சிந்தினதினாலே, நமக்குப்பா
வமன்னிப்பாகிய மீட்பு உண்டாயிருக்கின்
றது.
கூ. மேலும், * காலங்கள் நிறைவேறும்
பொழுதுண்டாகும், விசாரணையிலே வா
னங்களிலும், பூமியிலுமுள்ளவைகள்யா
வும் தலையாகிய கிறிஸ்துவுக்குக்கீழாகக்
கூட்டப்படவேண்டுமென்று, * கலாத். ச:
ச, ரு.
ய. தமக்குள்ளே தீர்மானித்திருந்த சந்
தோஷமான * சித்தத்தின் இரகசியத்தை
எங்களுக்கறிவித்தார். * கொலோ. க:உரு
யக. மேலும் தமது சித்தத்தினுடைய ஆ
லோசனைக்குத்தக்கதாக, எல்லாவற்றையும்
நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படி
யே,
யஉ. நாங்கள் கிறிஸ்துவின்மேல் முன்னே
நம்பிக்கையாயிருந்தவர்களாய், அவருடை
ய மகிமைக்குப்புகழ்ச்சியாய் இருக்கும்ப
டிக்கு முன் குறிக்கப்பட்டு, அவராலே சுதந்
திரத்தையும் அடைந்தோம்.
யரு. நீங்களும் அப்படியே (சுதந்திரராகு
ம்படிக்கு,) உங்கள் இரட்சிப்புக்கேற்ற சுவி
சேஷமாகிய சத்திய வசனத்தைக்கேட்டு,
விசுவாசித்து, வாக்குத்தத்தம் பண்ணப்
பட்ட பரிசுத்த ஆவியோடே அவரால் *மு
த்திரைப்படுத்தப்பட்டீர்கள். * உ கொரி.
க: உக, உஉ.
யச. * சம்பாதிக்கப்பட்டவர்கள் அவரு
டைய மகிமைக்குப்புகழ்ச்சியாக மீட்கப்ப
டுமளவும் அந்த ஆவியானவர் நம்முடைய
சுதந்திரத்திற்கு அச்சாரமாயிருக்கிறார். * தீ
த். உ: யச. க பேது. உ: கூ.

யரு. ஆனபடியினாலே கர்த்தராகிய இயே
சுவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தையும்,
எல்லாப்பரிசுத்தவான்கள்மேலுள்ள உங்கள்
அன்பையும் நான் கேள்விப்பட்டபின்பு,
யசூ. இடைவிடாமல், * உங்களுக்காகத்
தோத்திரம்பண்ணி, என் செபங்களில் உங்
களை நினைத்து, * உரோ. க: அ, கூ.
யஎ. நம்முடைய கர்த்தராகிய இயேசுக்
கிறிஸ்துவின் தேவனுமாய், * மகிமையின்
பிதாவுமாயிருக்கிறவர் அவரை யறிந்துகொ
ள்ளுதற்கேற்ற ஞானத்தையும், தெளிவை
யும், அளிக்கிற ஆவியை யுங்களுக்குக்கொ
டுக்கவேண்டுமென்றும், * சங்கீ. ௱ச: க.
யஅ. தாம் நம்மை யழைத்ததினாலே, நாம்
நம்பத்தக்க பாக்கியம் இன்னதென்றும்,
பரிசுத்தவான்களுக்குத்தாம் கொடுக்குஞ்
சுதந்திரத்தின் மகிமையின் பெருமை இன்
னதென்றும்,
யகூ. தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்
தெழுப்பி, * எல்லாத்துரைத்தனங்களுக்
கும், அதிகாரங்களுக்கும், வல்லமையுள்ள
வர்களுக்கும், கர்த்தாக்களுக்கும் இம்மையி
லேமாத்திரமல்ல; மறுமையிலேயும் மற்
றும் பேர்கொண்டிருக்கிற யாவற்றிற்கும்
மேலுயர்ந்திருக்கத்தக்கதாக, * பிலிப். உ:
கூ, ய. கொலோ. உ: ய.
உய. அவரைப்பரமண்டலங்களிலே தம்மு
டைய வலதுபாரிசத்திலே உளுக்காரும்ப
டிசெய்து,
உக. இப்படிச் * சகலத்தையும் அவருடை
ய பாதங்களின் கீழ்ப்படுத்தி, (அவருடைய)
சபைக்காக அவரைச்சகலத்திற்குந் தலைவ
ராக ஏற்படுத்தி, * சங்கீ. அ: எ—கூ. மத்.
உஅ: யஅ.
உஉ. இப்படி அவரிடத்தில் வெளிப்படுத்
தின தமது பலத்த வல்லமையின் தத்து
வத்தின்படியே, விசுவாசிகளாகிய நம்மி
டத்திலே தாங் காண்பிக்கும் வல்லமையின்
மகா மேன்மை யின்னதென்றும், நீங்கள்
அறியும்படிக்கு, பிரகாசமுள்ள புத்தியாகி
ய கண்களைக்கொடுக்க வேண்டுமென்றுஞ்
(செபம் பண்ணுகிறேன்.)
உரு. (அவருடைய சபை) எல்லாவற்றை
யும், எல்லாவற்றுலும் நிரப்புகிறவருடைய
நிறைவான சரீரமாயிருக்கின்றது.

உ அதிகாரம்.

[(க) சுபாவத்திலே நமக்கிருக்கும் நிலைமை
யையும், (ரு) கிருபையினால் நமக்குண்டா
கும் வேற்றுமையையும் இன்னதென்றுகூ
றி, (ய) நற்கிரியைகளுக்கென்று உண்டாக்
கப்பட்டு, (யரு) கிறிஸ்துவோடு ஐக்கமா
னவர்கள். (யக) அஞ்ஞானிகளைப்போலும்,
(யஉ) அந்நியரைப்போலும் நடவாமல்,
(யகூ) பரிசுத்தவான்களைச்சேர்ந்தவர்கள்

போலும், பராபரனுடைய குடும்பத்தார் போலும் நடக்கவேண்டுமென்பது.]

அக்கிரமங்களாலும், பாவங்களாலுஞ் * செத்தவர்களாயிருந்த உங்களையும் உயிர்ப்பித்தார். *கொலோ. ௨: ௰௩.

௨. முற்காலத்திலே * இப்பிரபஞ்சத்தின் வழக்கத்தின்படியேயும் கீழ்ப்படியாமையுள்ள பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாசத்தின் அதிகாரமுள்ள பிரபுவாகிய ஆவியின்படியேயும் அவைகளில் நடந்துகொண்டீர்கள். * ௧ யோவா. ௫: ௰௯.

௩. * அவர்களோடேகூட நாங்களெல்லாரும் முற்காலத்திலே எங்கள் மாம்சதேக இச்சைகளின்படியே நடந்து, எங்கள் மாம்சதேகமும், சிந்தனைகளும் இச்சித்தவைகளைச்செய்து, மற்றவர்களைப்போலக்கோபாக்கினைக்குள்ளானவர்களாய் இருந்தோம். * உரோ. ௩: ௨௩, ௨௪.

௪. இப்படி நாம் அக்கிரமங்களினாலே செத்தவர்களாயிருக்கையில்,

௫ * இரக்கத்தில் ஐசுவரியமுள்ள பராபரன் தாம் நமதுமேல்வைத்த † மிகுந்த அன்பினாலே நம்மைக்கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார். கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். * சங்கீ. ௱௩: ௮. † யோவா. ௩: ௰௬.

௬. கிறிஸ்து இயேசுவுக்குள்ளே அவர் நமதுமேல்வைத்த தயவினாலே தம்முடைய கிருபையின் மிகுந்த ஐசுவரியத்தை வருங்காலங்களிலே திருட்டாந்தமாய்க்காண்பிப்பதற்காக,

௭. நம்மைக்கிறிஸ்து இயேசுவுடனேகூட எழுப்பி, * பரமண்டலங்களிலே யிருக்கும்படி செய்தார். * பிலிப். ௩: ௨௰.

௮. * கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். * தீத். ௩: ௪—௬.

௯. அது உங்களாலுமல்ல, கிரியைகளினாலுமல்ல, ஒருவரும் மேன்மைபாராட்டாதபடிக்கு அது பராபரனுடைய ஈவாயிருக்கின்றது.

௰ நற்கிரியைகளைச்செய்வதற்கு நாம் கிறிஸ்து இயேசுவினாலே சிருஷ்டிக்கப்பட்டு, * பராபரனுடைய செய்கையாய் இருக்கிறோமே. அவைகளை நாம் செய்து நடக்கும்படிக்கு அவர் நம்மை முன்னாக எத்தனம் பண்ணியிருக்கிறார். * சங்கீ. ௱௩௮: ௮. ௨ கொரி. ௫: ௰௭.

௰௧. ஆனபடியினாலே முன்னே சரீரத்தின்படி புறத்தேசத்தாராயிருந்து, சரீரத்திலே கையினாற் செய்யப்படுகிற விருத்தசேதனமுள்ளவர்களாலே விருத்தசேதனமில்லாதவர்களென்னப்பட்ட நீங்கள்,

௰௨. அக்காலத்திலே கிறிஸ்துவைச்சேராதவர்களுமாய், இஸ்ரவேலருடைய காணியாட்சிக்குப்புறம்பானவர்களுமாய், வாக்குத்தத்தத்தின் உடம்படிக்கைகளுக்கு அந்நியருமாய், நம்பிக்கையில்லாதவர்களுமாய், பராபரனையிழந்தவர்களுமாய் இவ்வுலகத்திலே யிருந்தீர்களென்று நினைத்துக்கொள்வீர்களாக.

௰௩. முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவைச்சேர்ந்து, கிறிஸ்துவினுடைய இரத்தத்தினாலே சமீபமானீர்கள்.

௰௪. எப்படியெனில், * அவரே நம்முடைய சமாதானத்திற்குக்காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பிரிவினையாகிய நடுச்சுவரைத்தகர்த்து, * ஏசா. ௯: ௬, ௭.

௰௫. சடங்குச்சட்டங்களைக்குறித்துண்டான கற்பனைகளாகிய நியாயப்பிரமாணமாகிய பகையை, தம்முடைய சரீரத்தினாலே நீக்கிப்போட்டு, இப்படிச்சமாதானம்பண்ணினதால், இருதிறத்தாரையுந் தமக்குள்ளாக, * ஒரே புதிய மனிதனாகச்சிருஷ்டித்து, * ௧ கொரி. ௰௨: ௰௩.

௰௬. பகைக்கேதுவானதைத்தம்மாலே அழித்ததால், சிலுவையினால் இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக, பராபரனுக்கு ஒப்புரவாக்கினார்.

௰௭. அல்லாமலும் அவர் வந்து தூரமாயிருந்த உங்களுக்குஞ் சமீபமாயிருந்த அவர்களுக்குஞ் * சமாதானத்தைச்சுவிசேஷமாக அறிவித்தார். * ஏசா. ௫௭: ௰௯.

௰௮. அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியோடே * பிதாவினிடத்திற் சேருகிற நிலைமையை அவராலே பெற்றிருக்கிறோம். * உரோ. ௫: ௨.

௰௯. ஆகையால், நீங்களினிமேல் அந்நியருமாய், குடும்பத்தைச்சேராதவர்களுமாய் இராமல், * பரிசுத்தவான்களோடேகூட்டப்பட்டவர்களுமாய், பராபரனுடைய குடும்பத்தைச்சேர்ந்தவர்களுமாய், * கலா. ௪: ௨௬—௩௧.

௨௰. அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகளென்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேற் கட்டப்பட்டவர்களுமாய் இருக்கிறீர்கள். அந்த அஸ்திபாரத்திற்கு இயேசுக்கிறிஸ்துதாமே * மூலைக்கல்லாயிருக்கிறார். * ஏசா. ௨௮: ௰௬.

௨௰௧. அவர்மேலே மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குப்பரிசுத்த ஆலயமாகப்பெருகுகின்றது.

௨௰௨. அவர்மேலே நீங்களும் ஆவியினாலே பராபரனுடைய வாசஸ்தலமாகக்கூட்டிக்கட்டப்பட்டிருக்கிறீர்கள்.

௩ அதிகாரம்.

[(௩) புறச்சாதிகளும் இரட்சிக்கப்படுவார்க
ளென்ற, (௪) பரம இரகசியம். (௫) பவு
லுக்கு வெளிப்படுத்தப்பட்டு, (௬) தனக்க
ருள் கிடைத்ததென்றுசொல்லி, (௰) அதை
யாவருக்கும அறிவிக்க, (௰௩) தான் அநுப
விக்கிற உபத்திரவங்களினிமித்தம் அவர்கள்
சோர்ந்துபோகாதிருக்கவும், (௰௯) அவர்
கள்மேல் கிறிஸ்துப்பாராட்டின மிகுந்த
அன்பை அவர்கள் அறியவும், (௰௪) பவுல்
வேண்டிக்கொண்டது.]

இது முகாந்தரமாக, பவுலென்னும்
நான் புறத்தேசத்தாராயிருக்கிற
உங்களுக்காகக்கிறிஸ்து இயேசுவினிமித்
தங் காவலில் வைக்கப்பட்டவனாயிருக்கி
றேன். * ௪: ௧.
௨. * உங்களுக்காக எனக்குக்கொடுத்தி
ருக்கிற தேவ கிருபையைக்காட்டிய உத்தி
யோகமின்னதென்று கேட்டிருப்பீர்களே.
* அப்போ. ௨௨: ௨௧.
௩. என்னவெனில், * புறத்தேசத்தார் சுவி
சேஷத்தினாலேஉடன்சுதந்திரருமாய், அவர்
களுடனேகூட ஒரே சரீரமுமாய், கிறிஸ்து
வின்மேல் அவர் பண்ணின வாக்குத்தத்தத்
திற்கு உடன்பங்காளிகளுமாய் இருக்கிறார்க
ளென்று இந்த இரகசியத்தை யவர் எனக்
கு வெளிப்படுத்தி யறிவித்தார். * ௨: ௰௩.
௪. முன்னே நான் இதைக்குறித்துச்சுருக்
கமாய் எழுதினேன்.
௫. அதை நீங்கள் வாசிக்கையிற் கிறிஸ்து
வின் இரகசியத்தைக்குறித்து எனக்குண்
டாயிருக்கிற அறிவை யறிந்துகொள்வீர்
கள்.
௬. அந்த இரகசியம் * இப்பொழுது அ
வருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும்,
தீர்க்கதரிசிகளுக்குந் தேவ ஆவியினாலே
வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது போல முன்
னிருந்த தலைமுறைகளின் மனிதர்களுக்குந்
தெரியப்படுத்தப்பட்டிருக்கவில்லை. * ௧:
௯, ௰.
௭. இந்தச்சுவிசேஷத்திற்கு நான் பராபர
னுடைய பலத்த தத்துவத்தால் எனக்க
ளிக்கப்பட்ட கைமாறில்லாத கிருபையினா
லே ஊழியக்காரனானேன்.
௮. பராபரன் நம்முடைய கர்த்தராகிய
கிறிஸ்து இயேசுவினாற் செய்துமுடித்த அ
நாதியான தீர்மானத்தின்படியே,
௯. அநேகவிதமான தமது * ஞானம் பர
மண்டலங்களிலுள்ள துரைத்தனங்களுக்கு
ம், அதிகாரங்களுக்குஞ் சபையினாலே தெ
ரியவரும் பொருட்டாக, * ௧ பேது. ௧: ௰௨.
௰. கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரி
யத்தைப்புறத்தேசத்தாரிடத்திற் சுவிசேஷ
மாய் அறிவிக்கிறதற்கும்,
௰௧. * இயேசுக்கிறிஸ்துவைக்கொண்டு,
எல்லாவற்றையுஞ் சிருஷ்டித்த பராபரனுக்
குள்ளே ஆதிகாலங்கள்முதல் மறைந்திருந்த
இரகசியத்தோடே ஐக்கப்படுதவின்னதென்
று, எல்லாருக்கும் வெளிச்சமாகக்காண்பிக்
கிறதற்குமான அந்தக்கிருபையே † எல்
லாப்பரிசுத்தவான்களிலுஞ் சிறியவனாகிய எ
னக்குக்கொடுக்கப்பட்டிருக்கின்றது. * அப்.
௨௬: ௰௮. † ௧ கொரி. ௰௫: ௯.
௰௨. அந்த இயேசுக்கிறிஸ்துவினாலே, அ
வரைப்பற்றும் விசுவாசத்தால் நமக்குத்தயி
ரியமும், * திடநம்பிக்கையோடே பராபர
னைச்சேருகிற நிலைமையும் உண்டாயிருக்கி
றது. * எபிரே. ௰: ௰௯—௨௨.
௰௩. ஆகையால், உங்கள் நிமித்தமாக நான்
அநுபவிக்கிற உபத்திரவங்களினால், * நீங்
கள் சோர்ந்துபோகாதிருக்க வேண்டிக்
கொள்ளுகிறேன். * ௧ தெச. ௩: ௩.
௰௪. அவைகள் உங்களுக்கு மகிமையாயி
ருக்கின்றனவே.
௰௫. அதற்காக நான் பரமண்டலங்களி
லும், பூமியிலுமுள்ள குடும்பத்தார் எல்லா
ருக்கும் நாமத்தைக்கொடுத்தவராகிய நம்
முடைய கர்த்தராயிருக்கிற இயேசுக்கிறிஸ்
துவினுடைய பிதாவை நோக்கி, என் முழங்
கால்களை முடக்கி,
௰௬. நீங்கள் உங்கள் உள்ளத்திலே அவரு
டைய ஆவியினாலே * வல்லமையாய்ப்பலப்
படுத்தப்படும்படியாகவும், * ௬: ௰.
௰௭. விசுவாசத்தினாலே கிறிஸ்து * உங்
கள் இருதயங்களில் வாசமாயிருக்கும்படி
யாகவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி அஸ்
திபாரப்பட்டவர்களாய், * யோ. ௰௪: ௨௩.
௰௮. சகல பரிசுத்தவான்களோடுங்கூடக்
கிறிஸ்துவினுடைய (அன்பின்) அகலமும்,
நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்
றுணர்ந்துகொண்டு,
௰௯. அறிவுக்குமேலான அவ்வன்பை அ
றிந்துகொள்ளுதற்கு வல்லவர்களாகும்படி
யாகவும் (இப்படிப்) பராபரனுடைய மிகுந்
த பரிபூரணத்தால் நிறையப்படும்படியாக
அவர் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்
தின்படியே உங்களுக்கு அநுக்கிரகம்பண்
ண வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகி
றேன்.
௨௰. நாம் வேண்டிக்கொள்ளுதற்கும், நி
னைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்
குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படி
யேசெய்ய வல்லமையுள்ள அவருக்கு,
௨௧. கிறிஸ்து இயேசுவைப்பற்றிய சபை
யினாலே, எல்லாத்தலைமுறைகளிலேயும் என்
றென்றைக்குந் * துதியுண்டாவதாக.—
ஆமென். * உரோ. ௧௬: ௨௭.

௪ அதிகாரம்.

[(௧) ஐக்கமாயிருக்கவும், (௭) திருச்சபை, (௰௩) நிலைபெற்று, (௰௬) கிறிஸ்துவுக்குள் ஓங்கவுங் கட்டளையிட்டு, (௰௧) பராபரன் மனுஷர்களுக்குப்பலஈவுகளை அளிக்கிறாரென்றுசொல்லி, (௰௮) அஞ்ஞானிகளுடைய அசுத்தங்களைவிட்டுவிலகி, (௨௪) புதியகுணத்தைத்தரித்துக்கொண்டு, (௨௫) பொய்யையும், (௨௯) கெட்ட சம்பாஷணையையும் நீக்கிவிடச்சொன்னது.]

ஆனதாற் கர்த்தர்நிமித்தங் காவலில் வைக்கப்பட்டிருக்கிற நான் உங்களுக்குச்சொல்லுகிறபுத்தியென்னவெனில்; அழைக்கப்பட்டிருக்கிற நீங்கள் அந்த * அழைப்புக்குப்பாத்திரராய், * தீத். ௨: ௰௧—௰௩.

௨. மிகுந்த * மனத்தாழ்மை, பொறுமை, நீடிய சாந்தத்தோடும் நடந்துகொண்டு, ஒருவரையொருவர் அன்பாய்த்தாங்கிக்கொண்டு, * கொலோ. ௩: ௰௨—௰௪.

௩. சமாதானக்கட்டினாலே ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்ளச்சாக்கிரதையாயிருப்பீர்களாக.

௪. உங்களுக்குண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல,

௫ * ஒரே சரீரமும், ஒரே ஆவியும், ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், * ௧ கொரி. ௰௨: ௰௩.

௬. * எல்லாருக்கும் ஒரே தேவனும், பிதாவுமுண்டு. அவர் எல்லாவற்றின்மேலும், எல்லாவற்றின்வழியாயும் உங்களெல்லாருக்குள்ளுமிருக்கிறவர். * மல்கி. ௨: ௰.

௭. இப்படியிருந்தும், கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாய், * நம்மில் அவனவனுக்குக்கிருபைகொடுத்திருக்கிறது. * உரோ. ௰௨: ௪—௬.

௮. ஆனதால், * அவர் உன்னதத்திற்கேறிச் சிறையாக்கினவைகளைச் சிறையாக்கிப்போட்டு, மனிதருக்கீவுகளைக்கொடுத்தாரென்று அவர் சொல்லியிருக்கிறார். * சங்கி. ௬௮: ௰௮.

௯. அவர் ஏறினதால், அதற்குமுன்னே மிகவுந் தாழ்ந்த பூதலங்களிலிறங்கினாரென்று விளங்குகின்றதல்லவா?

௰. * இறங்கிவந்த அவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக எல்லாவானங்களின் மேலும் ஏறினவராயுமிருக்கிறார். * பிலிப். ௨: ௮, ௯.

௰௧. மேலும், நாம் அனைவரும் பராபரனுடைய குமாரனைப்பற்றிய விசுவாசத்திலேயும், அறிவிலேயும் ஒருமையுள்ளவர்களாகிக்கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்த்தியின் அளவுக்குத்தக்கதாகத்தேறினவர்களாயிருக்கும்வரைக்கும்,

௰௨. கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையையெழுப்பிக்கட்டுதற்கேதுவான ஊழியத்தின் கிரியைக்குப்பரிசுத்தவான்கள் நிறைவாக்கப்படும் பொருட்டாக,

௰௩. * அவரே சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத்தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச்சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், உபதேசிகளாகவும் ஏற்படுத்தினார். * ௧ கொரி. ௰௨: ௨௮.

௰௪. மனிதருடைய சூதும், வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவிதக்காற்றினாலே நாம் இனி அடிக்கப்பட்டலைகிற * பிள்ளைகளாயிராமல், * ௧ கொரி. ௰௪: ௨௰.

௰௫. அன்போடே உண்மையுள்ளவர்களாயிருந்து, அவயவங்களாகிய எல்லாரையுந் * தலையாகிய கிறிஸ்துவினிடத்திலே வளர்கிறவர்களாயிருக்கும்படிக்கு (அப்படிச்செய்தார்.) * கொலோ. ௧: ௰௮.

௰௬. அவராலே சரீரமுழுவதும் உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலுந் தகுதியாய்க்கூட்டி இணைக்கப்பட்டதாயிருக்க, அவயவந்தோறும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க்கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தன்னையெழுப்பிக்கட்டுதற்கேதுவாகச்சரீரவளர்த்தியை யுண்டாக்குகிறார்.

௰௭. ஆனதாற் கர்த்தரைக்கொண்டு, நான் உங்களுக்குச்சாட்சியாகச் சொல்லுகிறதென்னவெனில், மற்றச்சனங்கள் தங்கள் வீணான மனதின்படி நடக்கிறதுபோல,

௰௮. * நீங்கள் இனிமேல் நடவாமலிருப்பீர்களாக. அவர்கள் அந்தகாரப்பட்ட புத்தியுள்ளவர்களாய்த்தங்களிலுள்ள அறியாமையினாலும், தங்கள் இருதயத்தின் கடினத்தினாலும் பராபரனுக்கேற்ற சீவனுக்கு அந்நியராயிருந்து, * ௧ பேது. ௪: ௩.

௰௯. மெய்யுணர்வில்லாதவர்களாய்ச் * சகலவித அசுத்தங்களையும் ஆசையோடே நடப்பிக்கும்படி, தங்களைக்காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். * உரோ. ௧: ௨௪—௨௬.

௨௰. நீங்கள் இப்படிக்கிறிஸ்துவைக்கற்றுக்கொள்ளவில்லை.

௨௧. * இயேசுவினிடத்திற் சத்தியமுண்டாயிருக்கிறபடியே நீங்கள் அவரிடத்திற்கேட்டறிந்து அவரால் உபதேசம் அடைந்தீர்கள். * யோவா. ௰௪: ௬.

௨௨. அந்தப்படி நீங்கள் முன்னேநடந்த பிரகாரமாக, வஞ்சனையுள்ள இச்சைகளாலே கெடுதியான * பழைய மனிதத்துவத்தைக்களைந்துபோட்டு, * உரோ. ௬: ௬.

௨௩. * உங்கள் மனதிலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, * கொலோ. ௩: ௯.

௨௪. நீதியிலும், மெய்யான பரிசுத்தத்தி
லும் பராபரனுடைய சாயலாகச்சிருஷ்டிக்
கப்பட்ட நவமான மனிதனைத்தரித்துக்
கொள்வீர்களாக.
௨௫. அன்றியும் நாம் ஒருவருக்கொருவர்
அவயவங்களாயிருக்கிறபடியினாலே, பொய்
யைக்களைந்து * அவனவன் தன்தனக்கடுத்
த பிறனுடனே மெய்யைப்பேசுங்கள். மே
லும், பாவமில்லாமற் கோபங்கொள்ளுங்
கள். * சகரி. ௮: ௰௬.
௨௬. * உங்கள் எரிச்சலின்மேலே சூரி
யன் அஸ்தமிக்க ஒட்டாமலும், † பசாசுக்
கிடங்கொடாமலுமிருங்கள். * சங்கீ. ௪:
௪. † ௧ பேது. ௫: ௮, ௯. யாக். ௪: ௭.
௨௭. திருடனானவன் இனித்திருடாமற் கு
றைச்சலுள்ளவனுக்குக்கொடுக்கத்தக்கதாக,
௨௮. * தன் கைகளினால் நல்லவேலையைச்
செய்து பிரயாசப்படக்கடவன். * ௧ தெச.
௪: ௰௧, ௰௨.
௨௯. * கெட்டவார்த்தையொன்றும் உங்
கள் வாயிலிருந்து புறப்படக்கூடாது. மற்
றவர்களை யெழுப்புதற்கேதுவான நல்லவார்
த்தையுண்டானால், அதையே கேட்கிறவர்க
ளுக்குப்பிரயோசனம் உண்டாகும்படி பே
சிக்கொள்ளுங்கள். * மத். ௰௨: ௩௬.
௩௰. அன்றியும் நீங்கள் மீட்கப்படும் நாள்
வரைக்கும் * முத்திரையாகப்பெற்ற பரா
பரனுடைய பரிசுத்த ஆவியைத்துக்கப்ப
டுத்தாதிருப்பீர்களாக. * ௧: ௰௩.
௩௧. * சகலவிதமான கசப்பும், மூர்க்க
மும், கோபமும், கூக்குரலும், தூஷணமும்,
மற்றெந்தத்துர்க்குணமும் உங்களைவிட்டு
நீங்கக்கடவது. * கொலோ. ௩: ௮.
௩௨. அதைத்தவிர நீங்கள் ஒருவருக்கொ
ருவர் தயவாயும், மன உருக்கமாயுமிருந்து,
பராபரன் கிறிஸ்துவினாலே உங்களுக்கு
மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்
னியுங்கள்.

௫ அதிகாரம்.

[(௨) ஒருவரையொருவர் சிநேகித்து, (௩)
விபசாரம், (௪) வம்பு, (௭) கெட்டவர்களின்
சகவாசமுதலியவைகளைவிலகி, (௰௫) எச்ச
ரிக்கையாய் நடந்து, (௰௮) ஆவியால் நி
ரப்பப்பட்டிருக்க வேண்டுமென்று சொல்
வி, (௨௫) பெண்சாதிகள் புருஷர்களுக்குக்
கீழ்ப்படிய வேண்டியதையும், (௨௬) கிறி
ஸ்துச்சபையில் அன்புகூர்வதுபோலப்புரு
ஷர்கள் பெண்சாதிகளில் அன்புகூரவேண்
டியதையுஞ் சொன்னது.]

இவ்விதமாய் * நீங்கள் பிரியமான
பிள்ளைகளைப்போல, பராபரனைப்
பின்பற்றுகிறவர்களாகி, * மத். ௫: ௪௮.
௨. கிறிஸ்துவானவர் நமக்காகத்தம்மைப்
பராபரனுக்கு, சுகந்தவாசனையான கா
ணிக்கையாகவும், பலியாகவும், ஒப்புக்கொ
டுத்து, நம்மிடத்தில் அன்புகூர்ந்ததுபோ
ல, நீங்களும் அன்புள்ளவர்களாய் நடந்து
கொள்ளுங்கள்.
௩. அன்றியும் பரிசுத்தவான்களுக்கேற்றப
டியே, * வேசித்தனமும், மற்றெந்த அசுத்
தமும், அல்லது பொருளாசையும் உங்க
ளுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது.
* கொலோ. ௩: ௫.
௪. வம்பும், புத்தியீனமான பேச்சும், பரி
யாசமும் அப்படியே இருக்கப்படாது. அ
வைகள் தகாதவைகள், தோத்திரஞ்செய்த
லே தகும்.
௫. * வேசித்தனக்காரன், அல்லது அசுத்
தவான், அல்லது விக்கிரக ஆராதனைக்கார
னாகிய பொருளாசைக்காரனொருவனும்
பராபரனுடைய இராச்சியமாகிய கிறிஸ்
துவின் இராச்சியத்திலே சுதந்தரத்தை அ
டைவதில்லையென்றறிந்திருக்கிறீர்களே. * ௧
கொரி. ௬: ௯, ௰.
௬. இப்படிப்பட்டவைகளுக்காகக் * கீழ்ப்
படாமையுள்ள பிள்ளைகள்மேலே பராபர
னுடைய கோபாக்கினை வருவதால், ஒருவ
னும் உங்களை வீணான வார்த்தைகளால் வஞ்
சியாதபடிக்கு எச்சரிக்கையாய் இருந்து,
* கொலோ. ௩: ௬.
௭. அவர்களுக்குப் பங்காளிகளாகாதிருப்
பீர்களாக.
௮. முற்காலத்திலே அந்தகாரமுள்ளவர்க
ளாயிருந்தீர்கள். இப்பொழுது கர்த்தரைக்
கொண்டு ஒளியுள்ளவர்களாயிருக்கிறீர்கள்.
* ஒளியின் பிள்ளைகளுக்கேற்றதாய் நடந்து
கொள்ளுங்கள். * பிலிப். ௨: ௰௬.
௯. ஒளியின் கனி சகலவித நற்குணமும்,
நீதியும், சத்தியமுமானது.
௰. கர்த்தருக்குப் பிரியமானதின்னதென்று
நீங்கள் ஆராய்ந்துபார்த்து,
௰௧. * பலனற்ற அந்தகாரக்கிரியைகளுக்
கு ஐக்கமாயிராமல், அவைகளைக்கடிந்து
கொள்வீர்களாக. * ௨ கொரி. ௬: ௰௪.
௰௨. அவர்களால் ஒளிப்பிடமாய்ச்செய்
யப்படுங் கிரியைகளைச்சொல்லுகிறதும் அ
வலட்சணமாயிருக்கிறதே.
௰௩. அவைகளெல்லாம் ஒளியினாற் கடிந்
துகொள்ளப்பட்டு வெளியரங்கமாகும். வெ
ளியரங்கமாக்குகின்றவையெல்லாம் ஒளியா
யிருக்கின்றன.
௰௪. ஆதலால் * தூங்குகிற நீ விழித்து,
மரித்தோரைவிட்டெழுந்திரு. அப்பொழுது
கிறிஸ்து உன்னைப்பிரகாசிப்பிப்பாரென்று
சொல்லியிருக்கின்றது. * ஏசா. ௬௰: ௧.
௰௫. ஆனபடியினாலே நீங்கள் ஞானமற்ற
வர்களைப்போலல்ல, ஞானமுள்ளவர்களைப்
போலவே எச்சரிக்கையாய் நடந்துகொள்
ளப்பார்த்து,

௰௬. நாள்கள் பொல்லாங்குள்ளவைகளா
யிருக்கிறபடியால், * காலத்தை வாங்கிக்
கொள்ளுங்கள். * கொலோ. ௪: ௫.
௰௭. ஆகையால் நீங்கள் மதியற்றவர்களா
காமல், கர்த்தருடைய சித்தமின்னதென்று
அறிந்திருக்கிறவர்களாகி,
௰௮. *கெட்டமார்க்கத்திற்கேதுவாய்த்தி
ராட்ச இரசத்தால் வெறிகொள்ளாமல், ஆ
வியினாலே நிறையப்பட்டு, * வாச். ௨௩:
௨௯—௩௫. ஏசா. ௫: ௰௧, ௰௨.
௰௯. * சங்கீதங்களாலும், கீர்த்தனங்களா
லும், ஞானப்பாட்டுகளாலும் ஒருவருக்
கொருவர் புத்திசொல்விக்கொண்டு, உங்கள்
இருதயத்திலே கர்த்தரைப்பாடிக்கீர்த்த
னம்பண்ணி, * கொலோ. ௩: ௰௬, ௰௭.
௨௰. நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கி
றிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும்
எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய பராபர
னைத்தோத்திரித்து,
௨௧. தேவபயத்தோடே ஒருவருக்கொரு
வர் கீழ்ப்படிந்திருங்கள்.
௨௨. * ஸ்திரீகளே, கர்த்தருக்குக்கீழ்ப்ப
டுகிறதுபோல நீங்கள் உங்கள் சுய புருஷரு
க்குக்கீழ்ப்படுங்கள். * ௧ மோ. ௩: ௰௬.
கொலோ. ௩: ௰௮.
௨௩. கிறிஸ்துத் (தமது) சபையாகிய சரீ
ரத்திற்குத்தலையாயும், இரட்சகராயுமிருக்கி
றதுபோல, * புருஷனானவனும் (தன்) மனை
விக்குத்தலையாயிருக்கிறான். * ௧ கொரிந்.
௰௧: ௩.
௨௪. ஆகையாற் சபையானது கிறிஸ்து
வுக்குக்கீழ்ப்படுகிறதுபோல மனைவிகளும்
எக்காரியத்திலேயுந் தங்கள் சொந்தப்புரு
ஷர்களுக்குக்கீழ்ப்படவேண்டும்
௨௫. புருஷர்களே! கிறிஸ்துத்தமது ச
பையில் அன்புகூர்ந்து அதற்காகத்தம்மை
த்தாமே ஒப்புக்கொடுத்ததுபோல நீங்க
ளும் * உங்கள் மனைவிகளில் அன்புகூரக்க
டவீர்கள். * கொலோ. ௩: ௰௯.
௨௬. அவர் தமது சபையை மாசுதிரைமு
தலானவைகளிலொன்றுமில்லாமற் * பரிசுத்
தமும், பிழையற்றதுமான மகிமையுள்ளதா
கத்தமக்குமுன் நிறுத்திக்கொள்ளும்பொரு
ட்டாக, * சங்கீ. ௪௫: ௰௩, ௰௪.
௨௭. அதைப்பரிசுத்தமாக்கி, திவ்விய வச
னத்தோடே கூடிய தண்ணீர் முழுக்கினாற்
* சுத்திகரிக்கும்படிக்கே அப்படிச்செய்
தார். * தீத்து. ௩: ௬, ௭.
௨௮. அதுபோல, புருஷர்களுந் தங்கள்
சொந்தச்சரீரங்களைப்போலத்தங்களுடைய
மனைவிகளில் அன்புகூரக்கடனாளிகளாயிரு
க்கிறார்கள். தன் மனைவியில் அன்புகூருகிற
வன் தன்னிலே யன்புகூருகிறான்.
௨௯. தன் சொந்த மாம்சத்தைப்பகைத்
தவனொருவனுமில்லையே. கர்த்தர் (தமது)
சபையைச்செய்கிறதுபோல அதைப்போ
ஷித்துக்காப்பாற்றுகிறான்.
௩௰. * அவர் தமதுசரீரத்திற்கு நாம் அ
வயவங்களுமாய் தமது மாம்சத்தையும்,
எலும்புகளையுஞ் சேர்ந்தவர்களுமாய் இருக்
கிறபடியால், (அப்படியே செய்கிறார்.)
* ௧ கொரி. ௰௨: ௨௭.
௩௧. * அதினாலே மனிதன் தன் தகப்பனை
யும், தாயையும்விட்டு, தன் மனைவியுடனே
யிசைந்து இருவரும் ஒரேமாம்சமாயிருப்
பார்கள். * ௧ மோ. ௨: ௨௪.
௩௨. இது மிகுந்த இரகசியப்பொருளுள்
ளது. * கிறிஸ்துவையும், சபையையுங்குறி
த்தே யிப்படிச்சொல்லுகிறேன். * ௧ கொ.
௬: ௰௭.
௩௩. அந்தப்படி நீங்களும் அவனவன் தன்
னில் அன்புகூருகிறதுபோல, தன் தன் மனை
வியினிடத்திலும் அன்பு கூரக்கடவீர்கள்.
மனைவியானவள் புருஷனுக்குப்பயந்திருக்
கக்கடவள்.

௬ அதிகாரம்.

[(௧) தாய், தகப்பன்மாருக்குப்பிள்ளைகள்
செலுத்தவேண்டிய கடமைகளையும், (௫)
பணிவிடைக்காரர் எசமான்களுக்குச்செலு
த்தவேண்டிய கடமைகளையுங் காண்பித்து,
(௰) நம்முடைய சீவகாலம் போராட்டக்
காலமென்றும், (௰௨) நாம் மாம்சத்தோடு
ம், இரத்தத்தோடுமாத்திரமல்ல, ஆத்தும
சத்துருக்களோடும் போராடுகிறோமென்
றும், (௰௩) கிறிஸ்தவன் தரித்துக்கொள்ள
வேண்டிய சர்வாயுதவர்க்கமின்னதென்றும்,
(௰௮) அதை இவ்விதமாய்க்கையாளவேண்
டுமென்றுஞ் சொல்லி, (௨௧) தீகிக்குவை
அவர்கள் தயவுக்கொப்புவித்தது.]

பிள்ளைகளே! * கர்த்தருக்குள் உங்க
ளைப்பெற்றவர்களுக்குக் கீழ்ப்படுங்
கள். அதுவே நியாயமாய் இருக்கிறது.
* கொலோ. ௩: ௨௰.
௨ * உனக்கு நன்மை யுண்டாயிருக்கும்
படிக்கும், பூமியிலே யுன் வாழ்நாள் மிகு
தியாய் இருக்கும்படிக்கும், * ௨ மோ.
௨௰: ௰௨.
௩. உன் தகப்பனையும், உன் தாயையுங்
கனம்பண்ணுவாயாகவென்பதே, வாக்குத்
தத்தமுள்ள முதலாங் கற்பனையாய் இருக்
கின்றது.
௪. * தகப்பன்மார்களே! நீங்களும் உங்
கள் பிள்ளைகளுக்கு • எரிச்சலுண்டாக்காமற்
† கர்த்தருக்கேற்ற ‡ கண்டிப்போடும்,போ
தகத்தோடும் அவர்களை வளர்க்கக்கடவீர்
கள். * கொலோ. ௩: ௨௧. † வாக். ௰௩:
௨௪. ‡ ௫ மோ. ௬: ௭.
௫. வேலைக்காரரே! நீங்கள் கிறிஸ்துவுக்
குச்செய்கிறதுபோல * மாம்சத்தின்படி

யுங்களுக்கு எசமான்களானவர்களுக்குப்ப
யமும், நடுக்கமும், கபடமில்லாமையுமுள்
ள இருதயத்தோடே கீழ்ப்படிந்திருங்கள் அடங்குவீர்க
ளாக. * கொலோ. ௩: ௨௨—௨௫. தீத்.
௨: ௯, ௰. ௧ பேது. ௨: ௰௮

௬. மனிதருக்குப்பிரியமாயிருக்க, விரும்பு
கிறவர்கள்போல (எசமான்கள்) காணும்
பொழுதுமாத்திரம் ஊழியஞ் செய்யாமல்,

௭. கிறிஸ்துவினூழியக்காரர்போல மனப்
பூர்வமாய், பராபரனுடைய சித்தத்தை நி
றைவேற்றுகிறவர்களாய் மனிதருக்கல்ல,
கர்த்தாவுக்கே ஊழியஞ்செய்கிறவர்களாய்
நல்ல மனதோடே யப்படிச்செய்து,

௮. அடிமையானவனானாலும், சுவாதீனமு
ள்ளவனானாலும் அவனவன்செய்கிற நன்மை
யின்படியே கர்த்தரிடத்திற் பலனை யடை
வானென்றறிவீர்களாக.

௯. * எசமான்களாகிய நீங்களும் அவர்க
ளுக்கப்படியே செய்து, உங்களுக்கும் பர
மண்டலங்களிலே எசமானிருக்கிறாரென்
றும், அவரிடத்திற் பட்சபாதமில்லையென்
றும் அறிந்து, மிரட்டுதலை விட்டுவிடுவீர்க
ளாக. * கொலோ. ௩: ௨௫.

௰. கடைசியிலே என் சகோதரரே, கர்த்
தரைக்கொண்டும், அவருடைய மிகுந்த
வல்லமையைக்கொண்டும் பலத்திருங்கள்.

௰௧. அல்லாமலும் இரத்தத்தோடும், மாம்
சத்தோடுமல்ல. ஆகாசமண்டலத்திலுள்ள
துரைத்தனங்களோடும், அதிகாரங்களோ
டும், * இவ்வுலகத்தினிருளை யாளுகிறவர்க
ளோடும், மற்றப்பொல்லாத ஆவிகளோடும்
நாம் போராடுகிறவர்களாயிருக்கிறபடியா
ல், * யோவா. ௰௪: ௩௰. ௨ கொரி. ௪: ௪.

௰௨. பசாசினுடைய தந்திரமான வகைப்
பாடுகளைப்பலமாய் விரோதித்து நிற்கும்ப
டிக்கு, திவ்விய சர்வாயுதவர்க்கத்தைத்தரித்
துக்கொள்ளுங்கள்.

௰௩ பொல்லாதகாலத்திலே நீங்கள் அவை
களை விரோதித்திருக்கவும், சகலத்தையுமு
டித்துவிட்ட பின்பு நிலைநிற்கவுந் திராணியி
ருக்கும்படிக்கு, திவ்விய சர்வாயுதவர்க்கத்
தை யெடுத்துக்கொள்ளுங்கள்.

௰௪. என்னவெனிற் சத்தியமென்னுங் கச்
சையை யுங்கள் * அரைகளிற்சுற்றிக்கட்டி
நீதியென்னும் மார்பின் கவசத்தை யுடுத்தி,
* ஏசா. ௰௨: ௫௫, ௩௬. ௧ பேது. ௧: ௰௩.

௰௫. *சமாதானத்தையுண்டாக்குகிற சுவி
சேஷத்தையறிவிக்க எத்தனமாயிருக்குந்தலை
(பாத இரட்சையைப்போல) உங்கள் கால்
களிலே தொடுத்து, * ஏசா. ௫௨: ௭.

௰௬. பொல்லாங்கன் எய்யும் அக்கினி
யம்புகளையெல்லாம் நீங்கள் அவித்துப்போ
டத்தக்க * விசுவாசமென்னும் கேடகத்
தைப்பிரதான முக்கியமாய், பிடித்துக்
கொண்டு நில்லுங்கள். * ௧ பேது. ௫ :௯.

௰௭. மேலும் * இரட்சணியமென்னும்
தலையைக்காக்குமுடியையும், † தேவ வசன
மாகிய ஆவியின் கட்கத்தையும் நீங்கள்
ஏற்றுக்கொண்டு, * ௧ தெசலோ. ௫: ௮.
† எபி. ௪: ௰௨.

௰௮. ஆவியிலுலே சம்பூரணமான செப
மும் விண்ணப்பமும்பண்ணி, * எப்பொழு
தும் வேண்டிக்கொண்டு இதற்காக மிகுந்
த மன உறுதியோடும், சகல பரிசுத்தவான்
களுக்காகவும், விண்ணப்பம்பண்ணுதலோ
டும், விழித்துக்கொள்வீர்களாக. * லூக்.
௰௮: ௧. ௧ தெச. ௫: ௰௭.

௰௯. நான் தயிரியமாய் என் வாயைத்தி
றந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறி
விக்கிறதற்கு வசனம் எனக்குக்கொடுக்கப்
படும்படியாயும்,

௨௰ சுவிசேஷத்திற்காகச்சங்கிலியாற்கட்
டப்பட்டு, * தானாபதியாயிருக்கிற நான்
அதைச்சொல்ல வேண்டியபடி தயிரியமா
ய்ச் சொல்லும்படியாயும், எனக்காகவும்
விண்ணப்பம் பண்ணுவீர்களாக. * ௨
கொரி. ௫: ௨௰.

௨௧. அன்றியும் எனக்குச்சம்பவித்தவைக
ளையும், என்னுடைய செய்கைகளையும் நீங்
கள் அறியும்படிக்கு அவைகளையெல்லாம்
(நமக்குப்) பிரிய சகோதரனுமாய், கர்த்த
ருக்கு உண்மையுள்ள ஊழியக்காரனுமாயி
ருக்கிற * தீகிக்கென்பவன் உங்களுக்கறிவிப்
பான். * அப். ௨௰: ௪. கொலோ. ௪: ௭.

௨௨. நீங்கள் எங்கள் செய்திகளை அறியும்
படியாயும், அவன் உங்கள் இருதயங்களுக்
கு ஆறுதல் செய்யும்படியாயுமே, அவனை
உங்களிடத்தில் அனுப்பினேன்.

௨௩. பிதாவாகிய பராபரனும், கர்த்த
ராகிய இயேசுக்கிறிஸ்துவினாலும், சமாதா
னமும் விசுவாசத்தோடே அன்பும் சகோத
ரருக்கு உண்டாகக்கடவது.

௨௪. நம்முடைய கர்த்தராகிய இயேசுக்
கிறிஸ்துவினிடத்தில், உண்மையாய் அன்பு
கூருகிற யாவரோடும் கிருபை இருப்பதாக.
ஆமென்.

அப்போஸ்தலனுகிய பவுல்

பிலிப்பியருக்கு எழுதின நிருபம்.

PHILIPPIANS.

க அதிகாரம்.

[(க) பவுல் பிலிப்பியர் தந்த விசுவாசத்தின் கனிகளுக்காகவும், தன் பாடுகளில் அவர்களும் உடந்தையாய் இருந்ததற்காகவும், பராபரனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தி, அவர்களுக்கு அன்புபாராட்டி, (கூ) அவர்கள் நாடோறும் கிருபையிலே பெருகும்படி வேண்டிக்கொண்டு, (யஉ) தனக்கு உரோமாவிலே உண்டான துன்பங்களினுற் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்துக்கு உண்டான நன்மை இதுவென்றும், (உக) நான் செத்தாலும், பிழைத்தாலும், கிறிஸ்துவின் மகிமையை வெளிப்படுத்துவேனென்றுங்காண்பித்து, (உஎ) அவர்கள் ஒருமைப்பட்டிருக்கவும், (உஅ) துன்பத்தில் உறுதியாய் நிற்கவும் புத்திசொன்னது.]

இயேசுக்கிறிஸ்துவின் ஊழியக்காரராகிய பவுலும், தீமோத்தேயும், பிலிப்புப்பட்டினத்திலே கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்களனைவருக்கும், கண்காணிகளுக்கும், ஊழியக்காரருக்கும் எழுதுகிறதாவது;

உ. நம்முடைய பிதாவாகிய பராபரனுலும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினுலும், உங்களுக்குக்கிருபையும் சமாதானமும் உண்டாகக்கடவது.

ங. சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட நான்முதலாக இதுவரைக்கும் நீங்கள் அதற்கு ஐக்கியமானவர்களானபடியால்,

ச. நான் உங்களை நினைத்து, உங்களெல்லாருக்காகவும், விண்ணப்பம் பண்ணும்பொழுதெல்லாம், என் பராபரனைத்தோத்திரிக்கிறேன்.

ரு. நான் உங்களுக்காகச்சந்தோஷத்தோடே விண்ணப்பம்பண்ணி,

சு. உங்களிடத்தில் * நற்கிரியையைத்தொடங்கினவர் இயேசுக்கிறிஸ்துவினுடைய நாள்பரியந்தம் அதை முடிய நடத்திவருவாரென்று நம்பியிருக்கிறேன். * யோவா. சு: உசு.

எ. * நான் கட்டப்பட்டுச்சுவிசேஷத்திற்காக உத்தரவுசொல்லி அதைத்திட்டப்படுத்திக்கொண்டுவருகையில், நீங்களனைவரும் உங்கள் இருதயத்திலே என்னைத்தரித்துக்கொண்டு, என்னோடேகூடக்கிருபையிற் பங்குள்ளவர்களாய் இருக்கிறபடியினுலே, உங்களெல்லாரையுங்குறித்து நான் இப்படி நினைக்கிறது நியாயமாயிருக்கின்றது. * அப். உஅ: யசு.

அ. அந்தப்படி இயேசுக்கிறிஸ்துவினுடைய உருக்கமான அன்பைப்போலுள்ள அன்பினுலே நான் உங்களெல்லார்மேலும் மிகவும் வாஞ்சையாய் இருக்கிறேனென்பதைக்குறித்து, பராபரனே எனக்குச்சாட்சியாயிருக்கிறுர்.

கூ. மேலும் வித்தியாசமானவைகளை வகையறுப்பதற்கேதுவாக நீங்கள் அறிவினுலும், சகலவித மெய்யுணர்வினுலும், அதிகமதிகமான அன்புள்ளவர்களாயும்,

ய. கிறிஸ்துவின் நாள்வரைக்கும், உண்மையும், வழுவில்லாமையும் உள்ளவர்களாயும்,

யக. பராபரனுக்குத்துதியும், புகழ்ச்சியுமுண்டாக இயேசுக்கிறிஸ்துவினுலே வருகிற நீதியாகிய கனியினுல் நிறைந்தவர்களாயும் இருக்கும்படிக்கு, செபம்பண்ணுகிறேன்.

யஉ. அன்றியும் சகோதரரே! நான் உங்களுக்கு அறிவிக்க விரும்புகிறதென்னவெனில், எனக்குச்சம்பவித்தவைகள் * சுவிசேஷம் அதிக பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிருந்தன. * லூக். உக: யங. அப்போ. யக: யசு—உக.

யங. எப்படியென்றுல், நான் கிறிஸ்துவினிமித்தம் கட்டப்பட்டிருக்கிறது, இராசஅரமனையில் எங்குமுள்ளவர்களுக்கும், மற்றயாவருக்கும் வெளியரங்கமானதுமல்லாமல்,

யச. கர்த்தரைப்பற்றிய சகோதரரில் அநேகமானவர்கள் நான் கட்டப்பட்டிருந்ததினுலே திடன்கொண்டு, (திவ்விய) வசனத்தைப்பயமில்லாமற் சொல்லும்படி அதிக துணிவுள்ளவர்களானுர்கள்.

யரு. சிலர் பொருமையினுலும், விரோதத்தினுலும், சிலர் நல்ல மனதினுலும், கிறிஸ்துவைப்பிரசங்கித்துவருகிறுர்கள்.

யசு. இவர்கள் சுவிசேஷத்திற்காக நான் நியாயம் பேசிக்கொள்ளும்படி வைக்கப்பட்டிருக்கிறதை அறிந்து, அன்பினுலேயப்படிச்செய்கிறுர்கள்.

யஎ. அவர்கள் நான் கட்டப்பட்டதினுவி

ருக்கிற உபத்திரவத்தோடே உபத்திரவத்
தைக்கூட்டலாமென்றெண்ணி, உண்மை
யில்லாமல் விரோதத்தினாலே, கிறிஸ்துவை
யறிவிக்கிறார்கள்.
௰௮. இதினால் என்னவாயிற்று, வஞ்சகத்தி
னாலாவது, உண்மையினாலாவது பிரசங்கித்
தாலும், கிறிஸ்துவே அறிவிக்கப்படுகிறார்.
அதினாலே சந்தோஷப்படுகிறேன். இன்
னும் சந்தோஷப்படுவேன்.
௰௯. நான் ஒன்றினாலும் வெட்கப்படா
மல் மிகுந்த தயிரியமாயிருந்து, எப்பொ
ழுதும்போலஇப்பொழுதும்ஜீவனாலாகிலும்,
சாவினாலாகிலும் கிறிஸ்து என் சரீரத்தி
னாலே, புகழப்படுவாரென்று நான் மிகவும்
ஆசைப்பட்டு நம்பிக்கொள்ளுகிறபடியே,
௨௰. அந்தப்பிரசங்கம் உங்கள் வேண்டுத
லினாலும், இயேசுக்கிறிஸ்துவினுடைய ஆ
வியின் உதவியினாலும் எனக்குஇரட்சிப்பாக
முடியுமென்றறிந்திருக்கிறபடியால், (அப்ப
டிச் சந்தோஷப்படுகிறேன்.)
௨௧. * கிறிஸ்து எனக்குச்ஜீவனாயிருக்கிறா
ரே, சாவும் எனக்கு ஆதாயமாயிருக்கும்.
* கலாத். ௨: ௨௰.
௨௨. ஆகிலும் தேகத்திற் பிழைக்கிறதினா
லே என் கிரியைக்குப்பலனுண்டாயிருப்ப
தால், நான் தெரிந்துகொள்ளவேண்டியது
இன்னதென்று எனக்குத்தெரியாது.
௨௩. அவ்விரண்டினாலும், நான் நெருக்கப்
படுகிறேன். * பிரிந்துபோய்க்கிறிஸ்துவி
னிடத்திலிருக்கும்படி மிகவும் விரும்புகி
றேன். அது மிகவும் அதிக நன்மையாயுமி
ருக்குமே. * ௨ கொரி. ௫: ௮. லூக். ௨௩: ௪௩.
௨௪. அப்படியிருந்தும், தேகத்தில் இங்
கே தரித்திருக்கிறது உங்களுக்காக அதிக
அவசியமாயிருக்கிறது.
௨௫. இதை நான் நிச்சயமாய் அறிந்தி
ருக்கிறபடியால், நான் மறுபடியும் உங்களி
டத்தில் வருகிறதினால், நீங்கள் என்னைக்கு
றித்துக்கிறிஸ்து இயேசுவினாலே, மேன்மை
பாராட்டிக்கொள்ளுதல் பெருகும்பொருட்
டாக,
௨௬. விசுவாசத்தில் நீங்கள் சம்பூரண
முடம், சந்தோஷமும் உள்ளவர்களாகும்ப
டிக்கு, நான் பின்னும் (உயிர்) தரித்துக்
கொண்டு, உங்களனைவரோடுங்கூட இருப்
பேனென்று அறிந்திருக்கிறேன்.
௨௭. எப்படியும் நான் வந்து உங்களைக்
கண்டாலும், உங்களுக்குத்தூரமாயிருந்தா
லும், நீங்கள் ஒரே ஆவியிலே யுறுதியாய்
நின்று, ஒரே ஆத்துமாவினாலே, சுவிசேஷத்
தின் விசுவாசத்திற்காகக்கூடப்போராட்
டம்பண்ணி, எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும்
மருளாதிருக்கிறீர்களென்று உங்களைக்குறித்
து நான்கேட்கும்படிக்கு, நீங்கள்கிறிஸ்து
வின் சுவிசேஷத்திற்குப்பாத்திரமாக மாத்தி
ரம் நடந்துகொள்ளக்கடவீர்கள்.
௨௮. அதுவே அவர்கள் கெட்டுப்போகு
றதற்கும், நீங்கள் இரட்சிக்கப்படுதற்குப்
அடையாளமாயிருக்கின்றது. அதுவும் பரா
பரனுடைய செயல்.
௨௯. அவராலே நீங்கள் கிறிஸ்துவின்பே
லே விசுவாசமாய் இருக்கிறதற்குமாத்திர
மல்ல, முன்னே * என்னிடத்தில் நீங்கள்
கண்டதுமாய், இப்பொழுது எனக்குண்
டென்று கேள்விப்படுகிறதுமாயிருக்கிறபோ
ராட்டமே யுங்களுக்கு முண்டாயிருக்கிற
தால், * அப். ௰௬: ௨௨, ௨௩.
௩௰. அவர் நிமித்தம் பாடுபடுகிறதற்குப்
அருள்பெற்றீர்களே.

௨ அதிகாரம்.

[(௧) அவர்கள் ஏகசிந்தையுள்ளவர்களும்
தாழ்மையுள்ள மனதுள்ளவர்களுமாயிருந்
து, தாழ்மைப்பட்டு மேன்மையடைந்த
கிறிஸ்துவைப்பின்பற்றவும், (௰௨) இந்தச்
சீர்கெட்டலோகத்திற் சுடர்களைப்போலப்
பிரகாசிக்கவும், (௰௬) பராபரனுக்குச்செ
லுத்தப்படும்படி ஆயத்தமாயிருக்கிற அவர்
களின் அப்போஸ்தலனாகிய தனக்கு ஆறு
தலாயிருக்கவும், இரட்சிப்பின்பாதையிலே
எச்சரிக்கையாய் நடக்கவும், புத்திசொல்
லி, (௰௯) அவர்களிடத்தில் தான் அனுப்
புகிற தீமோத்தேயுவையும், (௨௫) அனுப்
பின எப்பாப்பிரோதீத்துவையும் மெய்ச்
சிக்கொண்டது.]

ஆனதாற் கிறிஸ்துவுக்குள் யாதொரு
ஆறுதலும், அன்பினாலே சந்தோ
ஷப்படுதலும், ஆவியோடே ஐக்கமும்
உருக்கமானபட்சமும், இரக்கங்களுமுண்
டானால்,
௨. நீங்கள் ஒரேவிதமாய்ச் சிந்தனைபண்
ணிக்கொண்டு, * ஒரேவிதமான அன்புள்ள
வர்களாய், இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்
றையே சிந்தித்துக்கொண்டு இப்படி என்
சந்தோஷத்தை நிறைவேற்றுவீர்களாக.
* ௧: ௨௭.
௩. * ஒன்றையும் நீங்கள் வாதத்தினாலே
அல்லது வீண்பெருமையினாலே செய்யா
மல் மனத்தாழ்மையினாலே † ஒருவரை
யொருவர் தங்களிலும் மேன்மையானவர்க
ளென்று எண்ணிக்கொள்ளுவீர்களாக. *
கலாத். ௫: ௨௬. † உரோ. ௰௨: ௰.
௪. * அவரவர் தங்களுக்கானவைகளை மாத்
திரமல்ல, பிறருக்கானவைகளையும் நோக்கு
வீர்களாக. * ௧ கொரி. ௰: ௨௪.
௫. * கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தை
யே உங்களிலுமிருக்கக்கடவது. * மத்.
௰௧: ௨௯.
௬. அவர் * பராபரனுடைய சாயலாய்

ருந்தும், பராபரனுக்கு ஒப்பாயிருக்குதலைக் கொள்ளையிடப்பட்டவுடைமையென்றெண்ணாமல், * கொலோ. ௧: ௰௫.

௭. தம்மைத்தாமே வெறுமையாக்கி, * அடிமையின் உருவமெடுத்து † மனிதர் சாயலாகப்பிறந்ததுமல்லாமல், * ஏசா. ௪௨: ௧. † ஏசா. ௫௩: ௩.

௮. அவர் மனிதரூபமாகக் காணப்பட்டபின்பு, மரணத்திற்குத் * தம்மைத்தாழ்த்திச்சிலுவையின் மரணத்திற்கே கீழ்ப்பட்டவரானார். * எபி ௰௨: ௨.

௯. அதினாலே பராபரனும், * அவரை மிகவும் உயர்த்தி, * எபே. ௧: ௨௰—௨௨.

௰. பரமண்டலத்திலும், பூமண்டலத்திலும், கீழ்லோகத்திலுமுள்ளயாவும், * இயேசுவின் நாமத்தைத்தொழுது முழங்காற்படியிடும்படிக்கும், * ஏசா. ௪௫: ௨௩, ௨௪. அறிவி. ௫: ௮—௰௩.

௰௧. பிதாவாகிய பராபரனுக்குத்ததியுண்டாக இயேசுக்கிறிஸ்துக்கர்த்தரென்று நாவுகள்யாவும் அறிக்கையிடும்படிக்குஞ் சகல நாமங்களுக்கும் மேலான நாமத்தை அவருக்குக்கொடுத்தார்.

௰௨. ஆகையினாலே எனக்குப்பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதுங் கீழ்ப்படிகிறபடி நான் உங்களுக்குச்சமீபமாய் இருக்கிறபொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும் மிகவும் அதிகமாய்ப் * பயத்தோடும், நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பை யடையப்பிரயாசப்படுங்கள். * ௧ பேது. ௧: ௰௭.

௰௩. விருப்பத்தையும், செய்கையையும் பராபரன் உவப்பாய் உங்களுக்குள்ளே யுண்டாக்குகிறவராய் இருக்கிறாரே.

௰௪. கோணலும், வழுவுமுள்ள* சந்ததியாருக்குள்ளே நீங்கள் குற்றமும், கபடமுமில்லாதவர்களாயும், பராபரனுடைய மாசில்லாத பிள்ளைகளாயுமிருப்பதற்கு,

௰௫. சகலத்தையும் * மொறுமொறுப்பில்லாமலும், தருக்கிப்பில்லாமலுஞ் செய்வீர்களாக. * ௧ பேது. ௪: ௯, ௰.

௰௬. நான் வீணாக ஓடினதும், வீணாய்ப்பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளிலே எனக்குண்டாயிருப்பதற்கு நீங்கள் * ஜீவவசனத்தைப்பிடித்துக்கொண்டு உலகத்திலே அவர்களுக்குள்ளே † சுடர்களைப்போலப்பிரகாசியுங்கள். * ௨ தீமோத். ௧: ௰௩. † மத். ௫: ௰௪. எபேச. ௫: ௮.

௰௭. நான் உங்கள் விசுவாசமாகிய பலியின்மேலும், ஊழியத்தின்மேலும் * வார்க்கப்பட்டுப்போனாலும் மகிழ்வேன். உங்களனைவரோடுங்கூட மகிழ்ச்சியாகவேயிருப்பேன். * ௨ தீமோ. ௪: ௬.

௰௮. இந்தப்பிரகாரமாக நீங்களும் மகிழுங்கள். என்னோடேகூடவே மகிழ்ச்சியாயிருங்கள்.

௰௯. அன்றியும், நானும் உங்கள் செய்திகளையறிந்து மனதிலே சந்தோஷம் அடையும்படிக்குச் சீக்கிரமாய்த்தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பலாமென்று கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையாயிருக்கிறேன்.

௨௰. அவனையன்றி உங்கள் காரியங்களை உத்தமமாய் விசாரிக்கிறதற்குத் * தகுதியான மனதுள்ளவேறொருவனும் என்னிடத்திலில்லையே. * ௨: ௨௨.

௨௰௧. மற்றவர்களெல்லாருங் கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளையல்ல, தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள்.

௨௰௨. அவன் மாத்திரந் * தகப்பனோடே பிள்ளையிருக்கிறதுபோல என்னுடனேகூடச்சுவிசேஷத்திற்கு ஊழியஞ்செய்ததினாலே அவனுடைய உத்தமகுணத்தை அறிந்திருக்கிறீர்கள். * ௨ தீமோத். ௧: ௨.

௨௰௩. ஆகையால், என்காரியங்கள் இப்படி நடக்குமென்று நான் அறிந்தவுடனே அவனையே அனுப்ப நம்பியிருக்கிறேன்.

௨௰௪. எப்படியும் நான்தானே சீக்கிரமாய் வருவேனென்று கர்த்தராலே நினைந்திருக்கிறேன்.

௨௰௫. அன்றியும் என்சகோதரனுமாய், உடன்வேலையாளுமாய் உடன் சேவகனுமாய், * உங்கள் தானாபதியுமாய், என் குறைச்சல்களை நீக்க விசாரிக்கிறவனுமாயிருக்கிற எப்பாப்பிரோதீத்து வென்பவன், * ௪: ௰௮.

௨௰௬. உங்கள் எல்லார்மேலும் வாஞ்சையுள்ளவனாய், தான் வியாதிப்பட்டதை நீங்கள் கேள்விப்பட்டதினாலே மிகவுங் கஸ்திப்பட்டிருக்கிறபடியால், அவனையுடனே உங்களிடத்தில் அனுப்பவேண்டுமென்றெண்ணினேன்.

௨௰௭. அவன் மரணத்திற்குச்சமீபமாகவியாதிப்பட்டிருந்தான். பராபரன் அவனுக்கிரங்கினார். அதினாலே அவனுக்குமாத்திரமல்ல, துக்கத்தின்மேலே துக்கம் எனக்குண்டாகாதபடிக்கு எனக்கும் இரங்கினார்.

௨௰௮. ஆகையால், நீங்கள் அவனைமறுபடியுங் கண்டு சந்தோஷப்படும்படியாகவும், என் துக்கங் குறையும்படியாகவும் அதிசீக்கிரமாய் அவனையனுப்பினேன்.

௨௰௯. ஆனபடியினாலே கர்த்தருக்குள் அவனை மிகுந்த சந்தோஷத்தோடே யேற்றுக்கொண்டு * இப்படிப்பட்டவர்களைக்கனமாயெண்ணுவீர்களாக. * ௧ தெச. ௫: ௰௨, ௰௩.

௩௰. நீங்கள் இங்கே இல்லாததினாலே யெனக்கு இருக்கிறகுறைச்சலை நீக்கி எனக்கு ஊழியஞ்செய்யும்படிக்கு, அவன் தன்பிரா

ணையெண்ணாமற் கிறிஸ்தவின் வேலையினிமித்தம் மரணத்திற்குச்சமீபமாய் இருந்தபடியாலே அப்படிச்செய்புங்கள்.

௩ அதிகாரம்.

[(௧) சுன்னத்துள்ள கள்ளப்போதகர்களைக் குறித்து அவர்களை எச்சரித்தது. (௪) அவர்களைப்பார்க்கிலுந் தனக்கு நியாயப்பிரமாணத்தின் நீதியை நம்ப அதிகமுகாந்தரமிருந்தும், (௭) கிறிஸ்தவையும், அவரால் உண்டாகும் நீதியையும் பெற்றுக்கொள்ள அதைக்குப்பையாக எண்ணி, (௰௨) தன்குற்றங்களை யறிக்கை செய்து, (௰௩) அவர்கள் இக்காரியங்களில் தன்னைப்போலச்சிந்திக்கவும், (௰௭) தன்னைப்பின்பற்றவும், (௰௮) மாம்சசிந்தையுள்ள கிறிஸ்தவர்களைப்பின்பற்றாமல் இருக்கவும் புத்திசொல்லியது.]

மேலும் என்சகோதரரே! கர்த்தருக்குள் * சந்தோஷப்படுங்கள். நான் ஒரேவிதமானகாரியங்களை உங்களுக்கெழுதுகிறது எனக்குவருத்தமல்ல. உங்களுக்கது நிச்சயத்தை யுண்டாக்கும். * ௨: ௰௮. ௪: ௪.

௨. அந்த நாய்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். அந்தப்பொல்லாதவேலையாள்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். அந்தச்சேதக்காரரைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

௩. சரீரத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், * ஆவியினாலே பராபரனுக்கூழியஞ்செய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிற நாமே விருத்தசேதனக்காரர். * ௫மோ. ௩௰: ௬. யோவா. ௪: ௨௪. உரோ. ௨: ௨௮, ௨௯.

௪. நானுஞ் சரீரத்தின்மேலே நம்பிக்கையாய் இருக்கத்தக்கவைகளை உடையவனாயிருக்கிறேன். அல்லாமலும், வேறொருவன் சரீரத்தின்மேல் நம்பிக்கையாயிருக்க நினைத்தால், அவனிலும் நான் அதிகமாய் அப்படியிருக்கலாம்.

௫. (எப்படியெனில்,) * நான் எட்டாம் நாளிலே விருத்தசேதனம் அடைந்தவன். இஸ்ரவேலின் வம்சத்திற் பெஞ்யமீன்கோத்திரத்திற் பிறந்தவன். எபிரேயரிற் பிறந்த எபிரேயன். நியாயப்பிரமாணத்தைக்குறித்து நான் † பரிசேயன். * ௨ கொரி. ௰௧: ௨௨. † அப். ௨௬: ௫.

௬. பத்திவயிராக்கியத்தைக்குறித்து நான் (கிறிஸ்து) * சபையைத்துன்பப்படுத்தினவன். நியாயப்பிரமாணத்தினால் வருகிற நீதியைக்குறித்து நான் பிழையில்லாதவன். * அப்போ. ௨௬: ௰௧.

௭. ஆகிலும், * எனக்கு லாபமாயிருந்த இவைகளை நான் கிறிஸ்தவுக்காக நஷ்டமென்றெண்ணினேன். * மத். ௰: ௪௪.

௮. நிச்சயமாகவே என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை * அறிகிற அறிவின்மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்றெண்ணிக்கொண்டிருக்கிறேன். அவருக்காக நான் அவைகளையெல்லாம் நஷ்டமாகத்தள்ளினேன். * யோவா. ௰௭: ௩.

௯. நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், * நியாயப்பிரமாணத்தினால்வருகிற சுய நீதியையல்ல, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே வருகிறதுமாய், விசுவாசமூலமாய்ப்பராபரனால்வருகிறதுமாயிருக்கிற நீதியையுடையவனாயிருந்து, இப்படிக்கிறிஸ்துவுக்குள்ளிருக்கிறவனாய்க்காணப்படும்படிக்குஞ் சகலத்தையுங் குப்பையைப்போல எண்ணியிருக்கிறேன். * உரோ. ௩: ௨௰.

௰. இப்படி நான் அவரையும், * அவர் உயிரோடெழுப்புதலின் பலத்தையும், அவருடைய பாடுகளோடே ஐக்கத்தையும் அறிந்திருக்கிறதுமல்லாமல், * உரோ. ௬: ௪, ௫.

௰௧. எப்படியும் நானும் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத்தகுதியாகும்படிக்கு, அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்கேதுவாயிருக்கிறேன்.

௰௨. (அதை) நான் இப்பொழுதே அடைந்தவனாக அல்லது, இப்பொழுதே தேறினவனாகச்சொல்லாமற் * கிறிஸ்து இயேசுவினாலே நான் எதற்காகப்பிடிக்கப்பட்டேனோ, † அதைப்பிடித்துக்கொள்ளும்படி பின்றொடருகிறேன். * யோவா. ௰௨: ௩௨. † ௧ தீமோ. ௬: ௰௧, ௰௨.

௰௩. சகோதரரே! நான் (அதைப்) பிடித்துக்கொண்டேனென்று எண்ணுகிறதில்லை. ஒன்றுசெய்கிறேன். பின்னானவைகளை நான் மறந்து முன்னானவைகளைச்சாக்கிரதையாய் நாடி,

௰௪. கிறிஸ்து இயேசுவினாலே பராபரன் உயரத்திலிருந்து, என்னை அழைத்துவைத்த * பந்தயப்பொருளுக்காகக்குறித்திருக்கிற மார்க்கமாய்ப்பின்றொடருகிறேன். * ௧ கொரி. ௯: ௨௪.

௰௫. ஆகையால் நம்மில் தேறினவர்கள்யாவரும் இப்படியே சிந்திக்கக்கடவோம். எதையாகிலும் நீங்கள் வேறுவிதமாய்ச்சிந்திப்பீர்களானால், அதையும் பராபரன் உங்களுக்கு வெளிப்படுத்துவார்.

௰௬. எப்படியும் நாம் எதுவரையில்வந்திருந்தாலும், இந்தப்பிரமாணத்தின்படியே நடந்துகொண்டு, * ஒரேவிதமாய்ச்சிந்தனைபண்ணக்கடவோம். * ௧ பேது. ௩: ௮.

௰௭. சகோதரரே! நீங்கள் * என்னோடே கூடப்பின்பற்றுகிறவர்களாகி, நாங்களுங்க

ளுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை
நோக்குங்கள். * ௧ கொரி. ௪: ௰௬. ௰௧: ௧.
௰௮. அநேகர் கிறிஸ்துவின் சிலுவைக்குப்
பகைஞராக நடக்கிறார்கள். அவர்களைக்
குறித்து முன்னே உங்களுக்கு அநேகந்த
ரஞ் சொன்னேன். இப்பொழுது அழுத
வோடேயும் (அப்படிச்) சொல்லுகிறேன்.
௰௯. அவர்களுடையமுடிவு அழிவு. * அ
வர்களுடையதேவன் வயிறு. அவர்களுடை
ய மகிமை அவர்கள் இலச்சையிலிருக்கிற
து. பூமிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்.
* உரோ. ௰௬: ௰௮.

௨௰. நம்முடைய இருப்பிடம் * பரமண்
டலங்களிலிருக்கின்றது. † அங்கேயிருந்து
கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து இரட்சகர்
‡ வரப்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.
* எபேச. ௨: ௬. கொலோ. ௩: ௧—௪.
† அப். ௧: ௰ ‡ தீத்து. ௨: ௰௩.

௨௧. அவர் எல்லாவற்றையுந் தமக்குக்கீழ்
ப்படுத்தும்படிக்கு மிகுந்த பலமுடையவ
ராகையால், * நம்முடைய அற்பமான சரீ
ரம் மகிமையுள்ள தமது சரீரத்திற்கொப்
பாயிருக்கும்படி அதை மறுரூபப்படுத்து
வார். * ௧ கொரி. ௰௫: ௪௯—௫௩.

௪ அதிகாரம்.

[(௧) தனித்தும், (௪) பொதுவாகவுஞ் சில
புத்திகள்சொல்லி, (௰) காவலிலிருந்த தனக்
கு அவர்கள் அனுப்பின உதவிக்காகவும்,
விசேஷமாகஅவர்களிலிருந்ததேவகிருபைக்
காகவுஞ் சந்தோஷப்பட்டு, (௰௯) அவர்க
ளுக்காகச்செபம்பண்ணி அவர்களை வாழ்த்
தினது.]

ஆனபடியினாலே எனக்கு அன்பான
வர்களுமாய், என்னாலே ஆசிக்கப்
பட்டவர்களுமாய், * எனக்குச்சந்தோஷ
முங் கிரீடமுமாயிருக்கிற சகோதரரே! பிரி
யமானவர்களே! இந்தப்படியே கர்த்தரி
டத்தில் நிலைகொண்டிருப்பீர்களாக. * ௧
தெச. ௨: ௰௯, ௨௰.

௨. கர்த்தராலே ஒரேவிதமான சிந்தையா
யிருக்கும்படிக்கு ஐயோதியாளுக்கும், சிந்
திகேயாளுக்கும் புத்திசொல்லுகிறேன்.

௩. அல்லாமலும் என் உத்தமக்கூட்டாளி
யே! அவர்களுக்கு உதவியாயிருக்கும்படிக்
கு உன்னையும் வேண்டிக்கொள்ளுகிறேன்.
அவர்கள் கிலேமெஞ்சோடும், மற்ற என் உ
டன் வேலையாள்களோடுங்கூடச்சுவிசேஷத்
தைக்குறித்து என்னோடேகூடிப்போராடி
னார்களே: அவர்களுடைய நாமங்கள் * ஜீவ
புஸ்தகத்திலிருக்கின்றன. * லூக். ௰: ௨௰.
அறிவி. ௩: ௫. ௨௰: ௰௨ ௨௧: ௨௭.

௪. * கர்த்தருக்குள் எப்பொழுதுஞ் சந்
தோஷமாயிருங்கள். சந்தோஷமாயிருங்க
ளென்று மறுபடியுஞ் சொல்லுகிறேன்.
* ௩: ௧.

௫. உங்களிலுள்ள சாந்தகுணம் எல்லாச்
சனங்களுக்குந் தெரியவரக்கடவது * கர்த்
தர் சமீபமாயிருக்கிறார். * யாக். ௫: ௮, ௯.
௬. * நீங்கள் ஒன்றையுங்குறித்துக்கவலைப்
படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள்
விண்ணப்பங்களைத்தோத்திரிப்புடனே கூடி
ய செபத்தினாலும், வேண்டுதலினாலும் பரா
பரனுக்கறிவிப்பீர்களாக. * ௧ பேது. ௫: ௭.
௭. அப்பொழுது * எல்லாப்புத்திக்குமே
லான தேவசமாதானங் கிறிஸ்து இயேசுவி
னாலே உங்களிருதயங்களையும், சிந்தனைகளை
யுங் காப்பாற்றும். * யோவா. ௰௪: ௨௭.
௮. சகோதரரே! கடைசியிலே சத்திய
முள்ளவைகளெவைகளோ, இலக்கணமுள்ள
வைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவை
களோ, கற்புள்ளவைகளெவைகளோ, சிநே
கத்திற்கேதுவானவைகளெவைகளோ, நற்
கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, மற்றப்பு
ண்ணியமெதுவோ, புகழ்ச்சியுள்ள தெது
வோ அவைகளையே சிந்தித்துக்கொள்வீர்க
ளாக.

௯. நீங்கள் என்னிடத்திற்கற்றும், அடை
ந்தும், கேட்டும், கண்டுமிருக்கிறவைகளைச்
செய்யுங்கள். அப்பொழுது சமாதானம்
பொருந்திய பராபரன் உங்கள்பங்கிலே யி
ருப்பார்.

௰. என்னை விசாரிக்கும்படிக்கு நீங்கள் இக்
காலத்திலே மறுபடியும் மலர்ந்திருக்கிற
படியினாலே, கர்த்தராலே மிகவுஞ் சந்தோ
ஷப்பட்டேன். (முன்னேயும்) இப்படிச்
செய்யச்சிந்தையாயிருந்தீர்கள். சமயமாத்
திரம் உங்களுக்கு நேரிடவில்லை.

௰௧. என் குறைச்சலினாலே நான் இப்ப
டிச்சொல்லவில்லை. எந்த நிலைமையிலிருந்
தாலும் * மனச்சந்தோஷமாயிருக்கக்கற்
றுக்கொண்டேன். * ௧ தீமோ. ௬: ௬.

௰௨. தாழ்ந்திருக்கவும் எனக்குத்தெரியும்.
பெருகியிருக்கவும் எனக்குத்தெரியும். எவ்
விடத்திலேயும், எல்லாவற்றிலேயுந் திருத்தி
யாயிருக்கவும், பசியாயிருக்கவும், பரிபூர
ணப்படவும்; குறைவுபடவும் படித்தேன்.
௰௩. * என்னைப்பலப்படுத்துகிற கிறிஸ்து
வினாலே நான் எவற்றையுஞ்செய்யத்திராணி
யுண்டு. * யோவா. ௰௫: ௫.

௰௪. அப்படியிருந்தும் என் உபத்திரவத்
திலே என்னுடனே ஐக்கப்பட்ட நீங்கள்
நன்றாய்ச்செய்தீர்கள்.

௰௫. பிலிப்பியரே! உங்களுக்குத்தெரிந்தி
ருக்கிறபடி, சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே
நான் மக்கேதோனியா நாட்டுக்குப்புறப்
பட்டபொழுது; நீங்கள்மாத்திரமே அல்லா
மல், வேறொருசபையும் கொடுக்கல்வாங்க

லென்பதைக்குறித்து உதவியாய் இருக்க வில்லே.

௰௬. நான் தெசலோனிக்கையூரிலிருந்த பொழுதும், நீங்களே என் குறைச்சலை நீக்கும்படிக்கு இரண்டொருதரம் அனுப்பினீர்கள்.

௰௭. காணிக்கையை நான் விரும்பாமல் * உங்கள் கணக்குப்பெருகவேண்டுமென்று பலனைவிரும்புகிறேன். * ௨ கொரி. ௯: ௯.

௰௮. இப்பொழுது வேண்டியவையெல்லாம் எனக்கு வந்திருக்கின்றன. பரிபூரணம் உண்டாயிருக்கின்றது. உங்களால் அனுப்பப்பட்டவைகளாயும், பராபரனுக்குச்சுகந்த வாசனையாயும்; பிரியமும், சந்தோஷமுமான பலியாயுமிருக்கிறவைகளை எப்பாப்பிருதீத்துவின்கையில் வாங்கிக்கொண்டதால், நான் நிறைவாயிருக்கிறேன்.

௰௯. அன்றியும் என் தேவனனவர் தம்முடைய மகிமையுள்ள ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவுகள் யாவையுங் கிறிஸ்து இயேசுவினலே நீக்கி நிறைவை அருளிச்செய்வார்.

௨௰. நம்முடைய பராபரனும், பிதாவுமானவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாகக்கடவது.—ஆமன்.

௨௧. கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் யாவருக்கும் வாழ்த்துதல் சொல்லுங்கள். என்னுடனேயிருக்கிற சகோதரர் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிருர்கள்.

௨௨. பரிசுத்தவான்களனைவரும், விசேஷமாக இராசனுடைய அரமனையிலுள்ளவர்களும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிருர்கள்.

௨௩. நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் கிருபை உங்களனைவரோடுங்கூட விருக்கக்கடவது.—ஆமன்.

அப்போஸ்தலனகிய பவுல்

கோலோசருக்கு எழுதின நிருபம்.

COLOSSIANS.

---

௧ அதிகாரம்.

[(௧) அவர்களைவாழ்த்தி அவர்கள் விசுவாசத்துக்காகப்பராபரனை ஸ்தோத்திரித்து, (௭) எப்பாப்பிருவின் உபதேசத்தை ஸ்திரப்படுத்தி, (௯) அவர்கள் கிருபையில் வளரும்படி செபம்பண்ணி, (௰௪) மெய்யான கிறிஸ்துவின் மகிமையைக்கூறி, (௨௧) அவரை யவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி ஏவித்தன் ஊழியத்தைக்குறித்துச்சொல்லியது.]

பராபரனுடைய சித்தத்தினலே இயேசுக்கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனகிய பவுலும், சகோதரனகிய தீமோத்தேயும்,

௨. கொலோசையூரிலே கிறிஸ்துவுக்குள்ளிருக்கிற பரிசுத்தவான்களுமாய், விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரருக்கெழுதுகிறதாவது; நம்முடைய பிதாவாகிய பராபரனலும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினலும் உங்களுக்குக்கிருபையும், சமாதானமுமுண்டாகக்கடவது.

௩. நீங்கள் இயேசுக்கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறதையும் சத்திய வசனமாகிய சுவிசேஷத்தினலே முன்பு கேட்டதுமாய்,

௪. * பரமண்டலங்களில் உங்களுக்காக வைக்கப்பட்டதுமாயிருக்கிற (நித்திய சுதந்தரத்தை) நம்புகிறதினலே, சகல பரிசுத்தவான்கள்மேலும் அன்புகூருகிறதையும் நாங்கள் கேள்விப்பட்டு, * ௧ பேது. ௧: ௪, ௫.

௫. உங்களுக்காக எப்பொழுதுஞ் செபம் பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் பிதாவுமாய், தேவனுமாயிருக்கிறவரைத்தோத்திரஞ்செய்கிறோம்.

௬. இந்தச்சுவிசேஷம் உலகத்திலெங்கும் வியாபித்துப் பலனைக் கொடுக்கிறதுபோல, (அது) உங்களிடத்திலுஞ்சேர்ந்து, நீங்கள் பராபரனுடைய கிருபையை உண்மையாய்க்கேட்டறிந்துகொண்டநாள்முதல் உங்களுக்குள்ளும் பலனைக்கொடுக்கிறதாயிருக்கின்றது.

௭. அதை நீங்கள் எங்களுக்குப்பிரியமான உடன்வேலைக்காரனுமாய், உங்களுக்காகக் கிறிஸ்துவினுடைய உண்மையான ஊழியக்காரனுமாயிருக்கிற * எப்பாப்பிருவினிடத்திற் கற்றுக்கொண்டவர்களாயுமிருக்கிறீர்கள். * ௪: ௰௨. பிலே. ௨௩. வசனம்.

௮. ஆவிக்கேற்ற உங்கள் அன்பை அவன் எங்களுக்கு அறிவித்தவனுயுமிருக்கிருன்.

௯. ஆகையால் அதைக்கேள்விப்பட்டநா

ன்முதல், நாங்கள் உங்களுக்காக விண்ணப்
பம்பண்ணி, * நீங்கள் எல்லாவிதமான நற்
கிரியைகளைச்செய்கிறவர்களாயும், † பரா
பரனையறிகிற அறிவை அதிகமதிகமாய் அ
டைகிறவர்களாயும், * எபே. ௪: ௧—௩.
பிலிப். ௧: ௨௭. † எபே. ௧: ௰௭—௰௯.
௰. சந்தோஷத்தோடே பொறுமையா
யும், நீடிய சாந்தமாயும் இருப்பதற்கு, அ
வருடைய மகிமைபொருந்திய வல்லமையி
னாலே யெல்லாவிதமான பலத்தை யுடைய
வர்களாயும்,
௰௧. ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய
சுதந்தரத்திற்குப்பங்காளிகளாவதற்கு நம்
மைத்தகுதியானவர்களாக்கி, இருளினுடை
ய * அதிகாரத்தினின்று விடுதலைபண்ணித்
தமக்கு அன்பாயிருக்கிற குமாரனுடைய இ
ராச்சியத்திற்குட்படுத்திவைத்த பிதாவைத்
தோத்திரஞ் செய்கிறவர்களாயும் இருந்து,
* எபேச. ௨: ௬.
௰௨. (இப்படிக்) கர்த்தாவுக்குப்பாத்திர
மாயும், மிகுந்த பிரியமாயும் நடக்கும்ப
டிக்கு,
௰௩. எல்லா ஞானத்தோடும், பரிசுத்த ஆ
விக்கேற்ற விவேகத்தோடும் தமது திருச்
சித்தத்தையறிகிற அறிவினாலே உங்களை நி
ரப்ப வேண்டுமென்று, ஓயாமல் அவரை
நோக்கி வேண்டிக்கொள்ளுகிறோம்.
௰௪. * அவருடைய குமாரன் தம்முடைய
திரு இரத்தத்தைச்சிந்தினதினாலே நமக்குப்
பாவமன்னிப்பாகிய மீட்பு உண்டாயிருக்
கின்றது. * எபேச. ௧: ௭.
௰௫. * அவர் அதரிசனமாயிருக்கிற பரா
பரனுடைய சாயலுமாய், * எபி. ௧: ௩.
௨ கொரி. ௪: ௪.
௰௬. பரமண்டலங்களிலும், பூமியிலுமுள்
ள காணப்படுகிறவைகளும், காணப்படாத
வைகளுமாகிய யாவற்றையும், சிங்காதனங்
களிலிருக்கிறவர்களையும், கர்த்தத்துவமுடை
யவர்களையும், பிரபுக்களையும், அதிகாரிகளையு
முண்டாக்கினபடியினாலே, சிருஷ்டிகள் யா
வுக்கும் முதன்மையுமாயிருக்கிறார். * சகல
மும் அவராலும், அவருக்காகவுஞ் சிருஷ்
டிக்கப்பட்டிருக்கின்றன. * யோவா. ௧:
௩. எபி. ௧: ௨.
௰௭. * எல்லாவற்றிற்கும் முன்னமேயிருக்
கிறார். சகலவஸ்துக்களும் அவராலே நிலை
யாயிருக்கின்றன. * யோவா. ௧: ௧.
௰௮. அவர் தமது சபையாகிய சரீரத்திற்
குத்தலையாயிருக்கிறதுமல்லாமல், எல்லா
வற்றிற்கும் அவர் முந்தினவராயிருக்கும்ப
டிக்கு ஆதியும், * மரித்தோரிலிருந்தெழுந்
த முதற்பேறுமானவராயிருக்கிறார். * அப்.
௨௬: ௨௩. ௧ கொரி. ௰௫: ௨௰. அறி. ௧: ௫.
௰௯. * சகல சம்பூரணமும், அவருக்குள்
ளே வாசமாயிருக்கும்படிக்கும், * ௨: ௯.

௨௰. அவர் சிலுவைமரத்திலே சிந்தின தம்
முடைய இரத்தத்தினாலே சமாதானமுண்டு
பண்ணினபின் பூமியிலும், பரமண்டலங்க
ளிலுமுள்ள * வஸ்துக்கள் யாவையும் அவ
ராலே தம்முடனே யொப்புரவாக்கும்படிக்
கும் பிதாவானவர் பிரியமாயிருந்தார். * ௨
கொரி. ௫: ௰௯. ௧ யோவா. ௨: ௨.
௨௰௧. முன்னே நீங்கள் பொல்லாதகிரியை
களினாலே (உங்கள்) மனதிலே சத்துருக்க
ளுமாய், அந்நியருமாயிருந்தீர்கள்.
௨௰௨. இப்பொழுது உங்களைப்பரிசுத்தவா
ன்களாகவும், மாசற்றவர்களாகவும், குற்
றஞ்சாற்றப்படாதவர்களாகவுந் தமக்கு மு
ன்பாக நிறுத்தும்படிக்கு, அவர் தமது மாம்
ச தேகத்தை மரணத்திற்கொப்புக்கொடுத்
ததினாலே உங்களையும் ஒப்புரவாக்கினார்.
௨௰௩. நீங்கள் கேட்டதாயும், வானத்தின்
கீழுள்ள சகலவித சனங்களுக்கும் பிரசங்
கம் பண்ணப்பட்டதாயும், பவுலென்னும்
என்னாலே ஊழியஞ்செய்யப்படுகிறதாயுமி
ருக்கிற சுவிசேஷத்தினாலே (தெரியவந்த
இரட்சிப்பை) நீங்கள் அசைவில்லாமல் நம்
புகிறவர்களுமாய், விசுவாசத்தினாலே ஸ்திர
மும், உறுதியுமுள்ளவர்களுமாய் நிலைகொ
ண்டிருந்தீர்களானால், (உங்களை) அப்படி
யே தமக்குமுன்பாக நிறுத்துவார்.
௨௰௪. இப்பொழுது நான் உங்களுக்காகப்
படுகிற பாடுகளினாலே * சந்தோஷம் அ
டைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்
களிற் சேஷமான உபத்திரவங்களை அவரு
டைய சரீரமென்னுஞ் † சபைக்காக என்
மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன். * ௧
கொரி. ௰௨: ௰. † ௨ தீமோ. ௨: ௰.
௨௰௫. பராபரனுடைய நியமிப்பின்படியே
நான் அந்தச்சபைக்கு ஊழியக்காரனா
னேன்.
௨௰௬. * ஆதிகாலங்களுக்கும், தலைமுறை
தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்
பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்
கு வெளியாக்கப்பட்ட மறைபொருளாகிய
தேவ வசனத்தை நிறைவாய்ப்பிரசங்கம்
பண்ணும்படிக்கு, அந்த நியமிப்பு உங்க
ளுக்காக எனக்குக்கொடுக்கப்பட்டிருக்கின்
றது. * உரோ. ௰௬: ௨௫.
௨௰௭. உலகத்தாரைக்குறித்து இந்த மறை
பொருளிலுள்ள சம்பூரணமான மகிமையின்
னதென்று, அந்தப்பரிசுத்தவான்களுக்குத்
தெரியப்பண்ணச்சித்தமாயிருந்தார். மகி
மையுண்டாகுமென்கிற * நம்பிக்கைக்கேது
வான கிறிஸ்து உங்களிலிருக்கிறதே அந்தச்
சம்பூரணமான மகிமை. * ௧ தீமோ. ௧: ௧.
௨௰௮. எந்தமனிதனையும் கிறிஸ்து இயேசு
வினாலே தேறினவனாக நிறுத்தும்படிக்கு,
அவரையே நாங்கள் அறிவித்து, எந்தமனி

தனுக்கும் புத்திசொல்லிச்சகலவிதமான ஞானத்தோடும் உபதேசிக்கிறோம்.

௨௯. அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாயிருக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப்பிரயாசப்படுகிறேன்.

௨ அதிகாரம்.

[(௧) கிறிஸ்துவை உறுதியாய்ப்பற்றிக்கொள்ளவும், (௮) உலகஞானத்துக்கும், வீணு பாரம்பரைகளுக்கும் எச்சரிக்கையாயிருக்கவும், (௰௮) தெய்வதூதர் ஆராதனையையும், (௨௰) கிறிஸ்துவுக்குள் நிறைவேறிப்போன சடங்காசாரங்களையுஞ் செய்யாமலிருக்கவும் புத்திசொல்லியது.]

ஆகையால், ஞானம், அறிவு என்பவைகளாகிய பொக்கிசங்களெல்லாம் அடங்கியிருக்கிற * கிறிஸ்துவுக்கும், பிதாவாகிய பராபரனுக்குமுரிய மறைபொருளை, * யோவா. ௰௭: ௩.

௨. நீங்கள் அறிக்கையிடும்படிக்கான மிகவும் மிகுந்த நிச்சயமுள்ள விவேகத்தையடைந்து, அன்பினாலே இணைக்கப்பட்டவர்களாகி யிருக்கத்தக்கதாக,

௩. உங்களிருதயங்களும், இலாவோதிக்கையா ஊரிலுள்ளவர்களுடைய இருதயங்களும், மற்றும் என் முகத்தை மாம்சத்திற்காணாதிருக்கிற எல்லாருடைய இருதயங்களும் ஆறுதலை யடையும்படிக்கு, நான் உங்களுக்காகவும், அவர்களுக்காகவும் பண்ணுகிற மிகுந்த பிரயாசத்தை நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன்.

௪. ஒருவனும் நயவசனிப்பினாலே உங்களை வஞ்சியாதபடிக்கு இதைச்சொல்லுகிறேன்.

௫. என்னத்தினாலெனில், நான் தேகத்தின்படி தூரமாயிருந்தும் என் ஆவியின்படி உங்களுடனே கூடவிருந்து, உங்கள் ஒழுங்கையும், கிறிஸ்துவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தின் உறுதியையும் பார்த்துச்சந்தோஷப்படுகிறேன்.

௬. ஆனபடியினாலே நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை யேற்றுக்கொண்டிருக்கிறபடியால்,

௭. நீங்கள் போதனையடைந்தபடி அவருக்குள்வேரூன்றி, * அவர்மேலே கட்டப்பட்டு, விசுவாசத்தில் உறுதியைப்பெற்று, இப்படி அவருக்கேற்றபடி நடந்துகொண்டு † தோத்திரஞ்செய்து, அந்த விசுவாசத்தை அதிகமதிகமாய் அடைவீர்களாக. * எபே. ௨: ௨௨. † ௧ தெச. ௫: ௰௮.

௮. கிறிஸ்துவின்படியல்ல, * மனிதருடைய பாரம்பரை நியாயத்தின்படியேயும், உலகத்திலுள்ள † சிறுமையான வழிபாடுகளின்படியேயுமான வீணுமாய், வஞ்சனையுமாயிருக்கிற கல்வியினாலே ஒருவனும் உங்களைக் கொள்ளையிடாதபடிக்குப் பாருங்கள். * மத். ௰௫: ௩. † கலாத். ௪: ௩—௯.

௯. என்னத்தினாலெனில், * தேவத்துவத்தின் நிறைவெல்லாம் மெய்யாய்க்கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கின்றன. * கொலோ. ௧: ௰௯.

௰. மேலுஞ் சகல துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்குந் தலைவராயிருக்கிற அவருக்குள் * நீங்கள் நிறைவுள்ளவர்களாயிருக்கிறீர்கள். * ௧ கொரி. ௧: ௩௰.

௰௧. அவரோடே நீங்கள் ஞானஸ்நானத்தினாலே அடக்கம்பண்ணப்பட்டவர்களானபொழுது, அவர்பண்ணுகிற விருத்தசேதனத்தினாலே * நீங்கள் பாவங்களுள்ள மாம்சதேகத்தைக்கழற்றினபடியால், கையாற்செய்யப்பட்டிராத விருத்தசேதனத்தை அவருக்குள்ளும் பெற்றுக்கொண்டீர்கள். * ௫ மோ. ௰: ௰௬. உரோ. ௨: ௨௯.

௰௨. மேலும் பராபரன் அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின பலத்த செய்கையைவிசுவாசிக்கிறதினாலே * நீங்கள் அந்தஞானஸ்நானத்திலே அவருடனேகூட எழுந்துமிருக்கிறீர்கள். * உரோ. ௬: ௩, ௫.

௰௩. எப்படியெனில், பாவங்களாலும், உங்கள் மாம்சத்தின் நுனித்தோலென்னும், (அஞ்ஞானமார்க்கத்தாலும்) * மரித்தவர்களாயிருந்த உங்களை யவரோடே கூடவும் அவருயிர்ப்பித்துப்பாவங்களையெல்லாம் உங்களுக்கு மன்னித்து, * எபே. ௨: ௪, ௫.

௰௪. நமக்காகச் செய்யப்பட்டதுமாய், நமக்கு விரோதமுமாய் இருந்த கட்டளைகளின் கையெழுத்தைக்குலைத்து அதை நடுவில் இராதபடிக்கு, எடுத்து அதைச்சிலுவைமரத்திற்சேர்த்து ஆணியடித்துப்போட்டு,

௰௫. துரைத்தனங்களையும், அதிகாரங்களையுங் கொள்ளையிட்டு வெளியரங்கமாய்க்காண்பித்து இவ்விதமாய் அவைகளைச்செயித்துக்கெம்பீரம் அடைந்தார்.

௰௬. ஆகலால், போசனத்தையும், பானத்தையும், பண்டிகையையும், மாதப்பிறப்பையும், ஓய்வுநாள்களையுங் குறித்து எவனாலும் உங்களைக்குற்றவாளிகளாக்காதிருப்பானாக.

௰௭. அவைகள் பின்வந்தவைகளுக்கு * நிழலாயிருக்கின்றன. அவைகளின் பொருள் கிறிஸ்துவினிடத்திலே யுண்டாயிருக்கின்றது. * எபி. ௮: ௫.

௰௮. (மாயமான) தாழ்மையின்மேலும், தேவதூதருக்குச்செய்யும் ஆராதனையின்மேலும் விருப்பமுற்றிருக்கிற யாவனாலும் உங்கள் பந்தயப்பொருளை நீங்களிழந்துபோகும்படி செய்யாதிருப்பானாக. அப்படிப்பட்டவன்தான்காணாதவைகளைத் துணிவாய் நடத்துகிறவனுமாய், தன்மாம்சச்

சிந்தையினாலே வீணாய் இறுமாப்புக்கொண்டிருக்கிறவனுமாய்,

௰௯. கணுக்களாலும், கட்டுகளாலும் உதவிபெற்றிணைக்கப்பட்டசரீரமெல்லாந் தேவவளர்த்தியாக வளரச்செய்கிற தலையைப்பற்றிக்கொள்ளாதவனுமாயிருக்கிறான்.

௨௰. அப்படியிருக்கக்கையாலுகிறதினாலே அழிவுக்கேதுவான பதார்த்தங்களில் இதைச்சாப்பிடக்கூடாது.

௨௧. இதைருசிபார்க்கக்கூடாது. இதைத்தீண்டக்கூடாதென்று சொல்லிய * மனிதருடைய கற்பனைகளின்படியேயும், போதகங்களின்படியேயுஞ் சிலர் கற்பிக்கிறார்களே. * தீத். ௧: ௰௪.

௨௨. அப்படிப்பட்ட கற்பனைகள் சுயசித்த ஆராதனையினாலும், தாழ்மையினாலும், சரீரத்திற்கு வேண்டிய கனஞ் செய்யாமல் அதைவருத்தப்படுத்துகையினாலும், ஞானவேஷமுள்ளவைகளாய் இருக்கின்றது உள்ளதுதான்.

௨௩. ஆனாலும், கிறிஸ்துவுடனேகூட நீங்கள் உலகத்திலுள்ள சிறுமையானவழிபாடுகளுக்கு மரித்தவர்களானபடியால், நீங்கள் உலகத்தின்படி பிழைக்கிறவர்கள்போல அந்தக்கட்டளைகளைச் சுமந்துகொள்ளுகிறதென்ன?

௩. அதிகாரம்.

[(௧) கிறிஸ்துவை இப்படித்தேடவேண்டுமென்றும், (௫) இச்சைகளை யடக்கவும், (௰) பழைய மனிதனைக்களைந்துவிட்டுக்கிறிஸ்துவைத்தரித்துக்கொள்ளவும், (௰௨) தருமம், தாழ்மைமுதலிய கடமைகளைச் செய்யவும் புத்தி சொல்லியது.]

நீங்கள் * கிறிஸ்துவுடனேகூட எழுப்பப்பட்டிருந்தாற் கிறிஸ்துப்பராபரனுடைய வலதுபாரிசத்தில் உளுக்காந்திருக்கிற இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடிக்கொள்ளுங்கள். * உ: ௰௨.

௨. * நீங்கள் மரித்தீர்களே. அல்லாமலும், கிறிஸ்துவுடனேகூட உங்கள் சீவன் பராபரனிடத்தில் மறைந்திருக்கின்றதே. * உரோ. ௬: ௨.

௩. * ஆகையால், பூமியிலுள்ளவைகளையல்ல மேலானவைகளையே சிந்தித்துக்கொள்ளுங்கள். * மத். ௬: ௰௯—௨௧.

௪. * நமக்குச்சீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்பொழுது, அவருடனேகூட நீங்களும் † மகிமையோடே வெளிப்படுவீர்கள். * யோவா. ௰௪: ௬. † ௧ கொரி. ௰௫: ௪௩. பிலி. ௩: ௨௧.

௫. ஆகையாற் பூமியிலே * வேசித்தனமும், அசுத்தமும், விரகதாபமும், துரிச்சையும், விக்கிரக ஆராதனையான பொருளாசையுமாகிய உங்கள் அவயவங்களையழித்துப்போடுங்கள். * உரோமர் ௮: ௰௩. எபே. ௫: ௩—௫.

௬. * அவைகளினிமித்தம் பராபரனுடைய கோபங் கீழ்ப்படியாமையுள்ளபிள்ளைகள்மேல்வருமே. * எபே. ௫: ௬.

௭. முற்காலத்திலே நீங்களும் அவர்களுடனே கூடச்சீவனம்பண்ணினபொழுது அவைகளைச்செய்துகொண்டு வந்தீர்கள்.

௮. இப்பொழுது * கோபமும், மூர்க்கமும், துர்க்குணமும், தூஷணமும், நீங்கள் பேசின வம்புவார்த்தைகளுமாகிய அவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள். * எபே. ௪: ௨௬. ௩௰. ௫, ௪.

௯. பழைய மனிதனையும், அதினுடைய செய்கைகளையும் நீங்கள் கழற்றிப்போட்டு, * தன்னைச்சிருஷ்டித்தவருடைய சாயலுக்கேற்ற அறிவுண்டாகும்படிக்குப்புதிதாக்கப்பட்ட புதிய மனிதனைத்தரித்துக்கொண்டவர்களாய், * எபே. ௪: ௨௩.

௰. * ஒருவருக்கொருவர் பொய்சொல்லாதிருங்கள். * எபே. ௪: ௨௫.

௰௧. அங்கே * கிரேக்கனென்றும், யூதனென்றும், விருத்தசேதனமுள்ளவனென்றும், விருத்தசேதனமில்லாதவனென்றும், புறத்தேசத்தானென்றும், இஸ்கீத்தனென்றும், அடிமையென்றும், சுவாதீனனென்றுஞ் (சொல்லப்பட்டவேற்றுமை) இல்லை. கிறிஸ்துவே யெல்லாருக்குள்ளும், எல்லாமுமாயிருக்கிறார். * உரோ. ௰: ௰௨.

௰௨. அப்படியிருக்க நீங்கள் பராபரனாலே தெரிந்துகொள்ளப்பட்டவர்களாயும், பரிசுத்தராயும், சிநேகிக்கப்பட்டவர்களாயும் இருக்கையால், * உருக்கமான இரக்கத்தையும், தயையையும், மனத்தாழ்மையையும், பொறுமையையும், நீடிய சாந்தத்தையுந் தரித்துக்கொண்டு, * எபே. ௪: ௩௨.

௰௩. * ஒருவரையொருவர் தாங்கி, ஒருவன் மற்றொருவன்மேல் விதனமாயிருந்தாற் கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, † நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். * எபே. ௪: ௨, ௩. † மத் ௰௮: ௩௩.

௰௪. அன்றியும், அவைகளெல்லாவற்றின் மேலும் அன்பைத்தரித்துக்கொள்ளக்கடவீர்கள். அதுவே பூரணசற்குணங்களையிணைக்கிற கச்சையாயிருக்கின்றது.

௰௫. அல்லாமலும், பராபரனுடைய சமாதானம் உங்களிருதயங்களுக்குள்ளே ஆளுகைசெய்யக்கடவது. நீங்கள் ஒரே சரீரமாய் இருக்கும்படிக்கு, அந்தச்சமாதானத்திற்கு அழைக்கப்பட்டீர்களே. நன்றியறிதலுள்ளவர்களாயுமிருப்பீர்களாக.

௰௬. கிறிஸ்துவினுடைய வசனம் உங்களுக்குள்ளே பரிபூரணமாய், வாசமாயிருக்

க்கடவது. சகல ஞானத்தோடும், * சங்கீதங்களினாலும், கீர்த்தனங்களினாலும், மற்றஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப்புத்திசொல்லிக்கொண்டு பராபரனை யுங்களிருதயங்களிலே யினிதாய்ப்பாடி, * எபே. ௫: ௰௯, ௨௰.

௰௭. * நீங்கள் வசனஞ் சொன்னாலும், கிரியைசெய்தாலும், எவைசெய்தாலும் அவைகளையெல்லாங் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து அவர் முன்னிலையாய்ப்பிதாவாகிய பராபரனைத்தோத்திரியுங்கள். * ௧ கொரி. ௰: ௩௧.

௰௮. * ஸ்திரீகளே! கர்த்தருக்கேற்கும்படி உங்கள் சொந்தப்புருஷர்களுக்குக் கீழ்ப்பட்டிருங்கள். * எபே. ௫: ௨௨—௨௪. ௧ பேது. ௩: ௧, ௨.

௰௯. புருஷர்களே! உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள். அவர்களுக்குக்கசப்புக் கொடாதிருங்கள். * எபே. ௫: ௨௫—௩௩. ௧ பேது. ௩: ௭.

௨௰. * பிள்ளைகளே! உங்களைப்பெற்றவர்களுக்கு எவ்விதத்திலுங் கீழ்ப்பட்டிருங்கள் அதுவே பராபரனுக்குப் பிரியமாயிருக்கிறது. * எபே. ௬: ௧—௩.

௨௧. * பிதாக்களே! உங்கள் பிள்ளைகள் திடனற்றுப்போகாதபடி அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள். * எபே. ௬: ௪.

௨௨. * வேலைக்காரரே! சரீரத்தின்படியுங்களுக்கு எசமான்களானவர்களுக்கு நீங்கள் எவ்விதத்திலுங் கீழ்ப்படிந்து மனிதருக்குப்பிரியமாய் இருக்கவிரும்புகிறவர்கள் போல எசமான்கள் காணும்பொழுது மாத்திரம் ஊழியஞ் செய்கிறவர்களாயிராமற் பராபரனுக்குப்பயந்து கபடமில்லாத இருதயத்தோடே கீழ்ப்படியுங்கள். * எபே. ௬: ௫—௮. ௧ பேது. ௨: ௰௮.

௨௩. மேலும் நீங்கள் கர்த்தாவாயிருக்கிற கிறிஸ்துவுக்கூழியஞ் செய்கிறபடியால், சுதந்திரமென்னும் பலனைப்பெறுவோமென்றறிந்தவர்களாய்,

௨௪. எவைகளைச்செய்தாலும் அவைகளையெல்லாம் மனிதருக்காகவல்ல, கர்த்தருக்காகவே மனச்சந்தோஷமாய்ச்செய்யுங்கள்.

௨௫. * அநியாயஞ் செய்கிறவன் தான் செய்த அநியாயத்தால் வரும்பலனை யடைவான். பட்சபாதமேயில்லை. * ௧ பேது. ௧: ௰௭.

௪ அதிகாரம்.

[(௧) அவர்கள் செபம்பண்ணவும், கிறிஸ்துவின் மெய்யறிவுக்கு வந்தெட்டாதவர்களைக்குறித்து ஞானமாய் நடந்துகொள்ளவும் புத்திசொல்லி, (௰) அவர்களைவாழ்த்தினது.]

எசமான்களே! * உங்களுக்கும் பரமண்டலங்களில் எசமானிருக்கிறாரென்றறிந்தவர்களாய் நீங்கள் வேலைக்காரருக்கு நீதியுமாய், செவ்வையுமாய் இருக்கிறதைக்கொடுங்கள். * எபே. ௬: ௯.

௨. * தோத்திரத்தோடே விண்ணப்பம் பண்ணுதற்கு விழித்திருந்து, உறுதியாய் விண்ணப்பம்பண்ணுங்கள். * லூக். ௰௮: ௧.

௩. அவ்வேளையிலே கிறிஸ்துவின் மறைபொருளினிமித்தங் கட்டப்பட்டிருக்கிற நான் பேசவேண்டிய பிரகாரமாக அதை வெளிப்படுத்திப்பேசும்படிக்கு,

௪. பராபரன் இந்த வசனத்திற்கு வாசலைத்திறக்கவேண்டுமென்று, * எங்களுக்காகவும் விண்ணப்பம் பண்ணுங்கள். * எபே. ௬: ௰௯, ௨௰.

௫. * நீங்கள் காலத்தைப்பற்றிக்கொண்டு புறம்பானவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்துகொள்வீர்களாக. * எபே. ௫: ௰௫, ௰௬.

௬. நீங்கள் அவனவனுக்குத்தகுதியான உத்தரவுசொல்லும் வகையை யறியும்படிக்கு உங்கள் வசனம் எப்பொழுதும் * இனிதாயும், † உப்பால் இரசமேற்றுகிறது போலவுமிருக்கக்கடவது. * எபே. ௪: ௨௯. † மாற். ௯: ௫௰.

௭. பிரியமான சகோதரனுமாய், உண்மையுள்ள ஊழியக்காரனுமாய், என்னுடனே கூடக்கர்த்தருக்கு வேலையாளுமாயிருக்கிற தீகிக்கென்பவன் என் செய்திகளையெல்லாம் உங்களுக்கறிவிப்பான்.

௮. உங்கள் செய்திகளை யறிந்து, உங்கள் இருதயங்களுக்கு ஆறுதல் செய்யும்படிக்கு,

௯. நான் அவனையும், உங்களில் ஒருவனாகிய உண்மையுள்ள பிரிய சகோதரனான * ஒநேசிமு என்பவனையும் உங்களிடத்திற்கனுப்பியிருக்கிறேன். அவர்கள் இவ்விடத்துச்செய்திகளையெல்லாம் உங்களுக்கறிவிப்பார்கள். * பிலே. ௧: ௰௧.

௰. என்னோடேகூடக்காவலில் வைக்கப்பட்டிருக்கிறவனாகிய அரிஸ்தருக்கென்பவனும், பருனபாவுக்கினத்தானாகிய மாற்கென்பவனும் உங்களுக்கு வாழ்த்துதல் செய்கிறார்கள். இந்த மாற்கைக்குறித்துக்கட்டளைகளை யடைந்தீர்களே. அவன் உங்களிடத்தில் வரும்பொழுது, அவனை யங்கிகரித்துக்கொள்ளுங்கள்.

௰௧. இயுஸ்து என்னப்பட்ட இயேசுவும் உங்களுக்கு வாழ்த்துதல் செய்கிறான். விருத்தசேதனமுள்ளவர்களில் இவர்கள்மாத்திரம் பராபரனுடைய இராச்சியத்திலே என்னுடனேகூட ஊழியக்காரராய், எனக்கு ஆறுதல்செய்துகொண்டு வந்தார்கள்.

௰௨. உங்களில் ஒருவனாயிருக்கிற கிறிஸ்து

விணூழியக்காரனுகிய எப்பாப்பிருவென்பவ
ன்உங்களுக்கு வாழ்த்துதல்செய்கிறுன். நீங்
கள் பராபரனுடைய சித்தமானவைகளெல்
லாவற்றிலேயும் நிலைநின்று தேறினவர்களு
மாய், நிறைவுள்ளவர்களுமாய் இருக்கும்ப
டிக்கு அவன் எப்பொழுதும் உங்களுக்கா
க விண்ணப்பங்களினுற் போராடுகிறுன்.
௰௩. அப்படியே அவன் உங்களுக்காகவும்,
இலாவோதிக்கையா, இயேராப்பொலியெ
ன்னும் ஊர்களிலுள்ளவர்களுக்காகவும், மி
குந்த சாக்கிரதையுள்ளவனுய் இருக்கிறு
னென்பதற்குச் சாட்சியாயிருக்கிறேன்.
௰௪. பிரியமான வயித்தியனுகிய * லூக்
காவென்பவனும், தேமாவென்பவனும் உங்
களுக்கு வாழ்த்துதல் செய்கிறுர்கள்
* ௨ தீமோ. ௪: ௰௧.
௰௫. இலாவோதிக்கையாவிலிருக்கிறசகோ
தரர்களுக்கும், நிம்பாவென்பவனுக்கும், அ
வன் வீட்டிலேகூடுகிற சபையாருக்கும்
வாழ்த்துதலைச்சொல்லுங்கள்.
௰௬. இந்த நிருபம் உங்களிடத்தில் வாசிக்
கப்பட்டபின் இது இலாவோதிக்கையாச்
சபையிலும் வாசிக்கப்படும்படிக்கும், இலா
வோதிக்கையாவிலிருந்து வரும் நிருபத்தை
நீங்களும் வாசிக்கும்படிக்குஞ் செய்யுங்கள்.
௰௭. அருக்கிப்புவைநோக்கி, நீ கர்த்தரிடத்
திற்பெற்ற ஊழியத்தை நிறைவேற்றப்பார்
ப்பாயாகவென்று சொல்லுங்கள்.
௰௮. பவுலாகிய நான் உங்களுக்கு வாழ்த்
துதல்செய்து இதை என் கையினுலே எழு
தினேன். நான் கட்டப்பட்டிருக்கிறதை
நினைத்துக்கொள்ளுங்கள். கிருபை உங்களு
டனேயிருக்கக்கடவது.—ஆமென்.

அப்போஸ்தலனுகிய பவுல்

தெசலோனிக்கேயருக்கு எழுதின முதலாம் நிருபம்.

I. THESSALONIANS.

௧ அதிகாரம்.

[(௧) தெசலோனிக்கேயரை, பவுல் எப்போ
தும் நினைவுகூர்ந்து அவர்களுக்காகத்தோ
த்திரமும், செபமும் பண்ணினதையும், (௫)
அவர்களுடைய விசுவாசத்தின் நிச்சயத்
தையும், அவர்களுடைய குணப்படுதலின்
உத்தமத்தையுங்குறித்து, தான் அடைந்தி
ருந்த நிச்சயத்தையும் அறிவித்தது.]

பவுலும், சில்வானும், தீமோத்தேயும்,
பிதாவாகிய பராபரனுக்குள்ளும், கர்
த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்குள்ளுமிருக்
கிற தெசலோனிக்கை பூரிலுள்ள சபைக்கு
எழுதுகிறதாவது; நம்முடைய பிதாவாகிய
பராபரனுலும், கர்த்தராகிய இயேசுக்கி
றிஸ்துவினுலும் உங்களுக்குக்கிருபையும்,
சமாதானமும் உண்டாகக்கடவது.
௨. பராபரனுலே அன்புகூரப்படுகிற ச
கோதரரே! எங்கள் சுவிசேஷம் வசனத்தோ
டேமாத்திரமல்ல. வல்லமையோடும், பரி
சுத்த ஆவியோடும், மிகுந்த நிச்சயத்தோ
டும் உங்களுக்குள்ளே பிரவேசித்ததினுலே,
௩. நீங்கள் (அவராலே) தெரிந்துகொள்
ளப்பட்டவர்களென்று நாங்கள் அறிந்து,
௪. நம்முடைய பிதாவாகிய பராபரனுக்கு
முன்பாக விசுவாசத்தினுலே நீங்கள் செய்
கிற கிரியையையும், அன்பினுலே பண்ணு
கிற பிரயாசத்தையும், நம்முடைய கர்த்த
ராகிய இயேசுக்கிறிஸ்துவின்மேலுள்ள நம்
பிக்கையினுலே காண்பிக்கிறபொறுமை
யையும் நாங்கள் இடைவிடாமல் நினைத்
துக்கொண்டு,
௫. எங்கள் செபங்களிலே யுங்களைக்குறித்
துப்பேசி, உங்களெல்லாருக்காகவும் எப்
பொழுதும் பராபரனைத் தோத்திரஞ்செய்
கிறேம்.
௬. நாங்கள் உங்களுக்குள்ளே யிருந்த
பொழுது, உங்களுக்காக இப்படிப்பட்ட
வர்களாய் இருந்தோமென்று அறிந்திருக்கி
றீர்களே. அன்றியும் நீங்கள் மிகுந்த உபத்
திரவத்திலே பரிசுத்த ஆவியின் சந்தோ
ஷத்தோடே வசனத்தை யேற்றுக்கொண்
டு, எங்களையும், * கர்த்தரையும் பின்பற்றி,
* ௧ பேது. ௨: ௨௧.
௭. இப்படி மக்கேதோனியா நாட்டிலும்,
அகாயாநாட்டிலுமுள்ள விசுவாசிகள் யாவ
ருக்கும் மாதிரியை வைத்தீர்கள்.
௮. எப்படியெனில், உங்களிடத்திலிருந்து,
கர்த்தருடைய வசனம் மக்கேதோனியா,
அகாயா நாடுகளிற் பிரசித்தமானதுமல்லா
மல், நாங்கள் அதைக்குறித்து எதையாகி
லுஞ் சொல்லவேண்டியிராதபடிக்கு நீங்

கள் பராபரனைப்பற்றின விசுவாசம் எவ்விடங்களிலேயும் வெளியரங்கமாயிற்று.

௯. நாங்கள் உங்களிடத்தில் அடைந்தபிரவேசமிப்படி யிருந்ததென்றுஞ் சீவனையுடைய மெய்யான தேவனுக்குப்பணிவிடை செய்யும்படிக்கும், அவர் மரித்தோரிலிருந்தெழுப்பினவருமாய், இனிவருங் கோபாக்கினையினின்று நம்மை யிழுத்து இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசுவைப்* பரமண்டலங்களிலிருந்துவரப்பார்த்துக்கொண்டிருக்கும்படிக்கும், * பிலி. ௩: ௨௰.

௰. நீங்கள் விக்கிரகங்களை விட்டு, பராபரனிடத்திற்கு இவ்விதமாய் மனந்திருப்பினீர்களென்றும் அவர்கள் தாமே யறிவிக்கிறார்களே.

௨ அதிகாரம்.

[(௧) தெசலோனிக்கேயருக்குள் சுவிசேஷம் வந்து பிரசங்கிக்கப்பட்டவிதத்தையும், அவர்கள் அதை யேற்றுக்கொண்டவிதத்தையும், (௰௮) பரிசுத்தவானாகிய பவுல் வெகுகாலம் அவர்களிடத்திற்கு வராதிருந்ததற்கும், அவர்களை வந்து பார்க்க விருப்பமுடையவனாயிருந்ததற்கும் முகாந்தரத்தையுஞ் சொல்லியது.]

அன்றியுஞ் சகோதரரே! உங்களிடத்திலே நாங்கள் அடைந்த பிரவேசம் வீணாயிருக்கவில்லையென்று நீங்களே யறிந்திருக்கிறீர்கள்.

௨. அல்லாமலும், உங்களுக்குத்தெரிந்திருக்கிறபடி முன்னே *பிலிப்புப்பட்டினத்திலே நாங்கள் பாடுகளையும் நிந்தைகளையும் அடைந்திருந்தும், † பராபரனுடைய சுவிசேஷத்தை யதிக போராட்டத்தோடே யுங்களுக்குச்சொல்லும்படி நம்முடைய பராபரனாலே தயிரியமுள்ளவர்களாயிருந்தோம். * அப்போ. ௰௬: ௨௨—௨௪. † அப்போ. ௰௭: ௧—௩.

௩. அன்றியும் எங்கள் போதகம் வஞ்சகத்திலும், அசுத்தத்திலுமிருந்து தோன்றவில்லை. அது கபடமுள்ளதாய் இருக்கவுமில்லை.

௪. சுவிசேஷத்தை எங்களுக்கு ஒப்புவிக்கத்தக்கதாக, பராபரன் எங்களை யுத்தமரென்றெண்ணினபடியே, நாங்கள் மனிதருக்கல்ல. எங்களிருதயங்களைச்சோதித்தறிகிற பராபரனுக்கேபிரியமாய்ச்சொல்லுகிறோம்

௫. ஆனதால், உங்களுக்குத்தெரிந்திருக்கிறபடி, நாங்கள் ஒருக்காலும் இச்சகமான வசனங்களைச்சொல்லவுமில்லை. பொருளாசையை மூடிக்கொண்டு நடக்கவுமில்லை. அதற்கு, பராபரனே சாட்சியாயிருக்கிறார்.

௬. உங்களிடத்திலாவது, மற்றவர்களிடத்திலாவது, நாங்கள் மனிதர் மகிமையைத் தேடவுமில்லை. நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலராயிருக்கிறபடியால், (உங்கள் மேல்) பாரத்தை யேற்றலாமே.

௭. அப்படியிருந்துந் தாயானவள் தன் பிள்ளைகளைக்காப்பாற்றுகிறதுபோல உங்களுக்கு வெகுவுண்டாக நடந்தோம்.

௮. இப்படி நாங்கள் உங்கள்மேல் மிகவும் விருப்பமாயிருந்து, * பராபரனுடைய சுவிசேஷத்தைமாத்திரமல்ல, நீங்கள் எங்களுக்குப்பிரியமானவர்களானபடியினாலே எங்கள் சீவனையும், உங்களுக்குப்பகிர்ந்துகொடுக்க மனதாயிருந்தோம். * உரோ. ௧: ௰௧. ௰௫: ௨௯.

௯. அன்றியுஞ் சகோதரரே! *நாங்கள்பட்டபிரயாசமும், வருத்தமும் உங்களுக்கு ஞாபகமாயிருக்கும். உங்களிலொருவனுக்காகிலும் பாரமாயிராதபடிக்கு இரவும், பகலும் நாங்கள் வேலைசெய்து, பராபரனுடைய சுவிசேஷத்தை யுங்களிடத்திற் பிரசங்கித்தோமே. * ௧ கொரி. ௪: ௰௨.

௰. விசுவாசிகளாகிய உங்களுடனே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமாகவும், நீதியாகவும், பிழையில்லாமையாகவும் இருந்ததற்கு, நீங்களும் பராபரனோடேகூடச்சாட்சிகளாயிருக்கிறீர்கள்.

௰௧. மேலும் தம்முடைய இராச்சியத்திற்கும், மகிமைக்கும் உங்களை யழைத்திருக்கிற பராபரனுக்கு * நீங்கள் பாத்திரமாய் நடக்க வேண்டுமென்று, * பிலி. ௧: ௨௭.

௰௨. தகப்பன் தன் பிள்ளைகளுக்குச்செய்கிறதுபோல, நாங்கள் உங்களில் யாவருக்கும் புத்தியும், ஆறுதலும், சாட்சியும் சொன்னதை யறிந்திருக்கிறீர்கள்.

௰௩. ஆகையால் நீங்கள் பராபரனுடைய வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபொழுது, அதை மனிதர் வசனமென்றல்ல. பராபரனுடைய வசனமென்றே ஏற்றுக்கொண்டதினாலே, நாங்கள் இடைவிடாமற் பராபரனுக்குத்தோத்திரமுஞ்செலுத்துகிறோம். அது மெய்யாய் அவருடைய வசனந்தான். விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே யது பலனுஞ் செய்கின்றது.

௰௪. எப்படியெனிற் சகோதரரே, நீங்கள் யூதேயாநாட்டிலே, கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பராபரனுடைய சபைகளைப்பின் பற்றினவர்களாகி, அவர்கள் யூதராலே பாடுபட்டதுபோல, நீங்களும் உங்கள் சுயகோத்திரத்தாராலே பாடுபட்டீர்கள்.

௰௫. அந்த யூதர்கள் கர்த்தராகிய இயேசுவையுந் தங்கள் தீர்க்கதரிசிகளையும் * கொலைசெய்து, எங்களையும் துன்பப்படுத்தி இப்படிப்பராபரனுக்குப்பிரியமாய் இராதவர்களுமாய், மனிதர் யாவருக்கும் விரோதிகளுமாய் இருக்கிறார்கள். *மத். ௨௩: ௩௪-௩௭.

௰௬. அவர்கள் தங்கள் பாவங்களை எப்பொ

...தும் நிறைவாக்கத்தக்கதாக, புறத்தே
சத்தார் இரட்சிக்கப்படுதற்கு நாங்கள் அ
வர்களோடே பேசாதபடிக்கு, தடைபண்
ணுகிறார்கள். கோபாக்கினை யதிதீக்கிர
மாய் அவர்களுக்கு வருகின்றது.
௰எ. சகோதரரே! நாங்கள் இருதயத்தி
னாலல்ல, முகமுகமாய் (மாத்திரம்) கொஞ்
சக்காலம் உங்களைக்காணாமற் பிரிந்திருந்த
படியினாலே, உங்கள் முகத்தைப்பார்க்க
வேண்டுமென்று மிகுந்த ஆசையோடே அ
திகமாய்ப்பிரயத்தினம் பண்ணினோம்.
௰அ. ஆனபடியினாலே உங்களிடத்தில் வ
ருகிறதற்கு நாங்கள் இரண்டொருதரம் ம
னதாயிருந்தோம், பவுலாகிய நான் விசே
ஷமாக அப்படியிருந்தேன். சாத்தான்
மாத்திரம் எங்களுக்குத்தடைபண்ணினான்.
௰௯. நம்முடைய கர்த்தராகிய இயேசுக்
கிறிஸ்து வரும்பொழுது, அவருடைய சந்
நிதானத்திலே ஆர் * எங்களுக்கு நம்பிக்
கையும், சந்தோஷமும், புகழ்ச்சியாகிய
கிரீடமும் வருவதற்கேதுவாயிருப்பார்கள்.
நீங்களல்லவோ அப்படியிருப்பீர்கள். * உ
கொரி. க: ௰௪.
உ௰. நீங்கள் எங்களுக்கு மகிமையுமாய்,
சந்தோஷமுமாய் இருக்கிறீர்களே.

௩ அதிகாரம்.

[(க) அவர்களைப்பலப்படுத்தி, தேற்றும்படி தீமோத்தேயுவை அவர்களிடத்தில் அனுப்பினதினாலும், அவர்களுடைய நற்சீரில் தான் சந்தோஷப்பட்டதினாலும், (௰) அவர்களுக்காகச்செபம்பண்ணி அவர்களிடத்திற் சுகமாய் வந்து சேரவிரும்பினதினாலும், பவுல் தெசலோனிக்கேயர்மேல் தனக்கிருந்த பெரிய அன்பைப்பாராட்டினது.]

ஆகையால், நாங்கள் அதிகமாய்ப்
பொறுக்கமாட்டாமல், அத்தேனே
பட்டினத்திலே தனித்துவிடப்பட விரும்பி,
உ. இந்த உபத்திரவங்களினாலே ஒருவ
ரும் அசைக்கப்படாதபடிக்கு, உங்கள் விசு
வாசத்தைக்குறித்து, உங்களை ஸ்திரப்படுத்
தும்பொருட்டாக நம்முடைய சகோதர
னுமாய், பராபரனுடைய ஊழியக்காரனு
மாய்க்கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் எங்களு
டன் வேலையாளுமாயிருக்கிற தீமோத்தேயு
வை யனுப்பினோம்.
௩. நீங்களே அறிந்திருக்கிறபடி * இப்ப
டிப்பட்டதைச்சகிக்கிறதற்கு, நாம் † வைக்
கப்பட்டிருக்கிறோமே. * எபேசு. ௩: ௰௩.
† அப். ௰௪: உஉ. உ௰: உ௩. க பேது.
உ: உ௩.
௪. மேலும் நமக்கு உபத்திரவம் வருமென்
று நாங்கள் உங்களிடத்திலிருந்தபொழுது,
உங்களுக்கு முன்னறிவித்தோமே. அப்படி
யும் நடந்தது. அதை நீங்கள் அறிந்திருக்
கிறீர்கள்.
௫. ஆனபடியினாலே நான் அதிகமாய்ப்
பொறுக்கமாட்டாமல், எங்கள் வேலை வீ
ணாய்ப்போகத்தக்கதாக, சோதனைக்காரன்
உங்களைச்சோதனைக்குட்படுத்தின துண்
டோவென்று, உங்கள் விசுவாசத்தை யறி
யும்படிக்கு அவனை யனுப்பினேன்.
௬. சகோதரரே! இப்பொழுது தீமோத்
தேயு உங்களிடத்திலிருந்து எங்களிடத்தில்
வந்து, நீங்கள் விசுவாசமாயும் அன்பாயுமி
ருந்து, எப்பொழுதும் எங்களை நன்றாய்
நினைத்துக்கொண்டு,
எ. நாங்கள் உங்களைக்காண மிகுந்த ஆ
சையாயிருக்கிறதுபோல, நீங்களும் எங்க
ளைக்காண ஆசையாய் இருக்கிறீர்களென்று
எங்களுக்கு நற்செய்தியைச்சொன்னவுட
னே எங்களுடைய உபத்திரவம், இடுக்கண்
யாவற்றிலேயும் உங்கள் விசுவாசத்தினாலே
உங்களைக்குறித்து, ஆறுதலடைந்தோம்.
அ. நீங்கள் கர்த்தரிடத்தில் நிலைநிற்கிற
தால், இப்பொழுது பிழைக்கிறோம்.
௯. அல்லாமலும் நாங்கள் உங்களைக்குறித்
து நம்முடைய பராபரனுடைய சந்நிதா
னத்திலே அடைந்திருக்கிற மிகுந்த சந்
தோஷத்திற்காக, பராபரனுக்கு எந்தத்
தோத்திரஞ்செலுத்துவோம்.
௰. உங்கள் முகத்தைக்கண்டு உங்கள் விசு
வாசத்தின் குறைவுகளை நீக்கி, நிறைவுண்
டாக்கும்பொருட்டாக இரவும், பகலும்,
மிகவும் வேண்டுதல் செய்கிறோம்.
௰க. அந்தப்படியே நம்முடைய பிதாவா
கிய பராபரனும், கர்த்தராகிய இயேசுக்கி
றிஸ்துவும், எங்கள் வழியை உங்களிடத்
திற்கு (நேராக்கக்கடவர்.)
௰உ. அல்லாமலும், நாங்கள் உங்கள்மேல்
வைத்திருக்கிற அன்புக்கொப்பாய் நீங்க
ளும் ஒருவரிடத்தில் ஒருவரும், மற்றெந்த
மனிதரிடத்திலும், அதிகமாய் நிறைந்த
அன்புள்ளவர்களாகும்படி கர்த்தர் செய்து,
௰௩. இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகி
ய இயேசுக்கிறிஸ்து, தம்முடைய பரிசுத்த
வான்கள் அனைவரோடுங்கூட வரும்பொழு
து, நீங்கள் * நம்முடைய பிதாவாகிய பரா
பரனுக்கு முன்பாகப்பிழையில்லாத பரி
சுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி, உங்கள்
இருதயங்களை ஸ்திரப்படுத்தக்கடவர். *மத்.
உ௫: ௩க. யூதா. ௰௪: வச.

௪ அதிகாரம்.

[(க) பரிசுத்தமும், (௩) சன்மார்க்கமுமாய் நடக்கவும், (௯) ஒருவரையொருவர் சிநேகிக்கவும், (௰க) அமைதலாய்த்தங்கள் சொந்த அலுவல்களைச்செய்யவும், (௰௩) மரித்தவர்களுக்காக மட்டாய்த்துக்கங்

கொண்டாடவும் புத்திசொல்வி, (௰௩) உயிர்த்தெழுதலின்மேலும் கிறிஸ்து நியாயந்தீர்க்க உலகத்தில் இரண்டாம்விசை வருவதைக்குறித்தும் சில நியாயங்கள் சொல்லியது.]

மேலும் சகோதரரே! நீங்கள் இன்னவின்ன பிரகாரமாக நடக்கவும், பராபரனுக்குப்பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று எங்களால் ஏற்றுக்கொண்டபடியே * அதிகமதிகமாய்ப்பெருகும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவினாலே யுங்களைவேண்டிக்கொண்டு புத்தி சொல்லுகிறோம். * எபே. ௪: ௰௫.

௨. கர்த்தராகிய இயேசுவினால் நாங்கள் உங்களுக்குக்கொடுத்த கட்டளைகளை அறிந்திருக்கிறீர்களே.

௩. நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகிறதே பராபரனுடையசித்தமாயிருக்கின்றது. அந்தப்படி * நீங்கள் வேசிமார்க்கத்திற்கு விலகி, * ௧ கொரி. ௬: ௰௮.

௪. * பராபரனை யறியாத அஞ்ஞானிகளைப்போல, விரகதாபமாகிய இச்சைக்குள்ளாகவல்ல, * எபே. ௪: ௰௭—௰௯.

௫. பரிசுத்தத்திற்கும், கனத்திற்குமுள்ளாகவே உங்களில் அவனவன் தன் தன் சரீரபாண்டத்தைக்காத்துக்கொள்ளுதற்கு வகையை யறிந்து,

௬. இந்தச் * செய்கையினாலே தன் சகோதரனை ஒடுக்காமலும், வஞ்சியாமலும் இருக்கவேண்டும். முன்னேயும் நாங்களுங்களுக்குச்சொல்லிச்சாட்சி கொடுத்தபடி, இப்படிப்பட்ட எல்லாவற்றையுங்குறித்து, கர்த்தர் நீதியாயப்பழி வாங்குகிறவராயிருக்கிறாரே. * ௩ மோசே ௰௯: ௰௧—௰௩. மத். ௭: ௰௨. † ௨ தெச. ௧: ௮.

௭. பராபரன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கு அழைத்தாரே.

௮. ஆனதால் அசட்டைபண்ணுகிறவன் * மனிதரையல்ல, தமது பரிசுத்த ஆவியை எங்களுக்குக்கொடுத்த பராபரனையே அசட்டை பண்ணுகிறான். * லூக். ௰: ௰௬.

௯. சகோதர சிநேகத்தைக்குறித்து, நான் உங்களுக்கெழுதவேண்டுவதில்லை. நீங்கள் தாமே ஒருவரிடத்திலொருவர் அன்பாயிருக்கும்படிக்கு, பராபரனாற் போதிக்கப்பட்டவர்களாய் இருக்கிறீர்களே.

௰. அந்தப்படியேயும், நீங்கள் மக்கேதோனியா நாட்டில் எங்குமுள்ள சகோதரரெல்லாருக்கும் செய்து வருகிறீர்கள்.

௰௧. இன்னும் சகோதரரே! அதிலே நீங்கள் அதிகமாய்ப்பெருகவும், * புறம்பேயிருக்கிறவர்களுக்கு நீங்கள் யோக்கியமாய் நடந்து, * கொலோ. ௪: ௫.

௰௨. ஒரு குறைவையும் அடையாதபடிக்கு, * நாங்கள் உங்களுக்குக்கட்டளையிட்டபடி அமைதலாயிருக்க மிகுதியாய் விரும்பவும், உங்களுடைய சொந்த அலுவலைப் பார்த்துக்கொள்ளவும், உங்கள் சொந்தக் கைகளினால் வேலைசெய்யவும் வேண்டுமென்றுஉங்களுக்குப்புத்திசொல்லுகிறோம். * ௨ தெச. ௩: ௰—௰௨.

௰௩. அல்லாமலும் சகோதரரே! * நம்பிக்கையற்றவர்களைப்போல நீங்களும் துக்கப்படாதபடிக்கு, நித்திரை யடைந்தவர்களைக்குறித்து, நீங்கள் அறியாமலிருக்கிறது எனக்கு விருப்பமில்லை. * எபே. ௨: ௰௨.

௰௪. என்னத்தினாலெனில், இயேசுவானவர் மரித்துப்பின்பு எழுந்திருக்கிறாரென்று நாம் விசுவாசிக்கிறதுபோல இயேசுவைப்பற்றி நித்திரை யடைந்தவர்களையும், பராபரன் அவரோடேகூடப்புறப்படப்பண்ணுவார்.

௰௫. மேலும் கர்த்தருடைய வார்த்தையின்படி நாங்கள் உங்களுக்கு அறிவிக்கிறதென்னவென்றால், கர்த்தர் வரும்பொழுது உயிரோடே மீதியாயிருக்கும், நாம் நித்திரை அடைந்தவர்களுக்கு முந்திக்கொள்ளுவதில்லை.

௰௬. அதெப்படியெனில்; * கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதன் இடுஞ்சத்தத்தோடும், தேவ † எக்காளத்தோடும் வானத்திலிருந்திறங்கிவருவார். அப்பொழுது, கிறிஸ்துவிலிருந்து மரித்தவர்கள் முதலாவது எழும்புவார்கள். * மத். ௨௪: ௩௰, ௩௧. † ௧ கொரி. ௰௫: ௫௧, ௫௨.

௰௭. பின்பு உயிரோடே மீதியான நாமும் ஆகாயத்தில் வருகிற கர்த்தாவுக்கு நேராக அவர்களோடுங்கூட * மேகங்களிலெடுத்துக்கொண்டுபோகப்பட்டு, இப்படி யெப்பொழுதும் † கர்த்தருடனேகூடவிருப்போம். * அப். ௧: ௯. † யோவா. ௰௨: ௨௬. ௰௪: ௩. ௰௭: ௨௪.

௰௮. ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவருக்கொருவர் ஆறுதல் செய்யுங்கள்.

௫ அதிகாரம்.

[(௧) கிறிஸ்து நியாயந்தீர்க்க வருவதைக் குறித்துச்சொல்லி, பலபுத்திமதிகள் படிப்பித்து, (௨௩) திருபத்தைமுடித்தது.]

இவைகள் நடக்குங் காலங்களையும், நேரங்களையுங்குறித்துச் சகோதரரே! நான் உங்களுக்கெழுதவேண்டுவதில்லை.

௨. * இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடையநாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். * ௨ பேது. ௩: ௰.

௩. * சமாதானமும், சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்பொழுது, கர்ப்பவதியானவளுக்கு வேதனைவருகிறது

போல அழிவு சடுதியாய் அவர்கள்மேல்வ
ரும். அவர்கள் தப்பிப்போவதேயில்லை.
* மத். ௨௪: ௩௯.
௪. சகோதரரே! அந்தநாள் திருடனைப்
போல உங்களையும் பிடித்துக்கொள்ளத்தக்
கதாக•நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்க
ளல்ல.
௫. நீங்களெல்லாரும் * ஒளியின் பிள்ளைக
ளுமாய், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்க
ளே. நாம் இரவுக்கும், அந்தகாரத்திற்கு
முள்ளானவர்களல்ல. * எபே. ௫: ௮.
௬. ஆகையால் மற்றவர்களைப்போல நாம்
தூங்காமல் * விழித்துக்கொண்டு தெளிவா
யிருக்கக்கடவோம். * லூக். ௨௧: ௩௬.
௭. தூங்குகிறவர்கள் இராத்திரியில் தூங்கு
வார்களே. வெறிகொள்ளுகிறவர்கள் இராத்
திரியில் வெறிகொள்ளுவார்களே.
௮. * பகல்மனிதராகிய நாம் விசுவாசம்,
அன்பு என்னும் மார்பின் கவசத்தையும்,
இரட்சிப்பின் நம்பிக்கையென்னுந் தலைச்
சீராவையுந் தரித்துக்கொண்டு தெளிவாயி
ருக்கக்கடவோம். * உரோ. ௰௩: ௰௨—௰௪.
௯. பராபரன் நம்மைக்கோபாக்கினைக்கல்
ல, நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறி
ஸ்துமூலமாய் இரட்சிப்பை யடைந்துகொ
ள்ளுதற்கு ஏற்படுத்தினாரே.
௰. * நாம் விழித்திருப்பவர்களானாலும்,
நித்திரையடைந்தவர்களானாலுந் தம்முட
னேகூட உயிரோடிருக்கும்படிக்கு அவர்
நமக்காக மரித்தாரே. * உரோ. ௰௪:
௮, ௯.
௰௧. ஆகையால் நீங்கள் செய்துவருகிறது
போல ஒருவருக்கொருவர் ஆறுதல்சொல்
லி, ஒருவரையொருவர் ஊன்றக்கடவீர்கள்.
௰௨. அன்றியுஞ் சகோதரரே! * உங்களுக்
குள்ளே பிரயாசப்பட்டுக்கர்த்தருக்குள்ளா
க உங்களுக்கு முதலாளிகளாயிருந்து உங்க
ளுக்குப்புத்திசொல்லுகிறபேர்களை நீங்கள்
அறிந்துகொண்டு, * எபி. ௰௩: ௰௭.
௰௩. அவர்களுடைய கிரியைநிமித்தம்
அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொ
ள்ளும்படிக்கு உங்களை வேண்டிக்கொள்ளு
கிறோம். உங்களுக்குள்ளே சமாதானமா
யிருப்பீர்களாக.
௰௪. அன்றியுஞ் சகோதரரே! நாங்கள்
உங்களுக்கு எச்சரிக்கையாகச்சொல்லுகிற
தென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்
குப்புத்திசொல்லுங்கள். திடனற்றவர்களுக்
கு ஆறுதல்செய்யுங்கள். பலவீனரைத்தாங்
குங்கள். எல்லாருக்கும் நீடிய சாந்தமா
யிருங்கள்.
௰௫. * எவனும் மற்றொருவன்செய்யுந் தீ
மைக்குத்தீமையைச்செய்யாமல், எப்பொ
ழுதும் உங்களுக்குள்ளும், மற்ற யாவருக்
குள்ளும் நன்மைசெய்யப்பின்றொடரும்படி
எச்சரிக்கையாயிருப்பீர்களாக. * உரோ.
௰௨: ௰௭.
௰௬. * எப்பொழுதுஞ் சந்தோஷமாயி
ருங்கள். † இடைவிடாமற் ஜெபம்பண்
ணுங்கள். * லூக். ௬: ௨௩. † லூக். ௰௮: ௧.
௰௭. * எல்லாவற்றிலேயுந் தோத்திரஞ்
செய்யுங்கள். * எபே. ௫: ௨௰.
௰௮. அப்படிச்செய்கிறதே கிறிஸ்து இ
யேசுவுக்குள் உங்களைக்குறித்துப்பராபரனு
டைய சித்தமாயிருக்கின்றது.
௰௯. ஆவியை அடக்கிப்போடாதிருப்பீர்க
ளாக.
௨௰. தீர்க்கதரிசனங்களை அசட்டைபண்
ணாதிருங்கள்.
௨௧. * யாவற்றையும் ஆராய்ந்துபார்த்து
நலமானதைப்பிடித்துக்கொள்ளுங்கள். * ௧
யோவா. ௪: ௧.
௨௨. பொல்லாங்காய்த்தோன்றுகிற யா
வற்றையும்விட்டு விலகுவீர்களாக.
௨௩. சமாதானத்தின் பராபரனே முழுவ
தும் உங்களைப்பரிசுத்தமாக்குவாராக. இப்
படி உங்கள் முழு ஆவியும், ஆத்துமாவும்,
சரீரமும் நம்முடைய கர்த்தராகிய இயே
சுக்கிறிஸ்துவருகையிற் பிழையில்லாதவை
களாயிருக்கும்படி காக்கப்படக்கடவது.
௨௪. உங்களை அழைக்கிறவர் * உண்மை
யுள்ளவர். அவரும் அப்படியேசெய்வார்.
* ௧ கொரி. ௧: ௯.
௨௫. சகோதரரே! எங்களுக்காக விண்
ணப்பம்பண்ணுங்கள்.
௨௬. எல்லாச்சகோதரரையும் பரிசுத்த
முத்தத்தோடே வாழ்த்துதல்செய்யுங்கள்.
௨௭. இந்த நிருபத்தைப்பரிசுத்தமான ச
கோதரர் யாவரும் படித்தறியும்படி செய்
யவேண்டுமென்று கர்த்தர்மேல் ஆணையிட்டு
உங்களிடத்திற் கேட்டுக்கொள்ளுகிறேன்.
௨௮. நம்முடைய கர்த்தராகிய இயேசுக்
கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே
யிருக்கக்கடவது.—ஆமென்.

அப்போஸ்தலனாகிய பவுல்

தெசலோனிக்கேயருக்கு எழுதின இரண்டாம் நிருபம்.

II. THESSALONIANS.

---

௧ அதிகாரம்.

[(௧) அவர்களுடைய விசுவாசத்தையும்,
அன்பையும், பொறுமையையுங்குறித்துப்
பவுல் மெய்ச்சிக்கொண்டு, (௰௧) அவற்றினா
லே துன்பத்தில் அவர்கள் ஆறுதலடைய
வும், பராபரன் நீதிபரரென்றுணரவும் பல
நியாயங்களைச்சொன்னது.]

பவுலும், சில்வானும், தீமோத்தேயும்
நம்முடைய பிதாவாகிய பராபரனை
யும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவையும்
பற்றியிருக்கிற தெசலோனிக்கை ஊரிலுள்
ள சபைக்கு எழுதுகிறதாவது;

௨. * நம்முடைய பிதாவாகிய பராபரனா
லும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினா
லும் உங்களுக்குக்கிருபையும், சமாதானமு
முண்டாகக்கடவது. * ௧ கொரி. ௧: ௩.

௩. சகோதரரே! * நாங்கள் எப்பொழு
தும் உங்களுக்காகப்பராபரனைத்தோத்திரி
க்கக்கடனாளிகளாயிருக்கிறோம். உங்கள் வி
சுவாசம் மிகவும் வளருகிறபடியினாலும்,
நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் காட்
டுகிற அன்பு அதிகமாகிறபடியினாலும் நாங்
கள் அப்படியே செய்யத்தக்கது. * ௧ தெச.
௧: ௪, ௫.

௪. ஆதலால், நீங்கள் சகிக்கிற சகல துன்
பங்களிலேயும், உபத்திரவங்களிலேயும் பொ
றுமையையும், விசுவாசத்தையுங் காண்பிக்
கிறபடியினாலே உங்களைக்குறித்து நாங்க
ளே பராபரனுடைய சபைகளில் மேன்மை
பாராட்டுகிறோம்.

௫. * பராபரனுடைய இராச்சியத்தினி
மித்தம் நீங்கள் (இப்படிப்)பாடுபடுகிறவர்க
ளாயிருக்க, அவ்விராச்சியத்திற்குப்பாத்திர
ரென்றெண்ணப்படுவதற்கு ஏதுவாகப்பரா
பரன் நியாயமான தீர்ப்புச்செய்வாரென்ப
தற்கு அவைகள் அத்தாட்சியாயிருக்கின்ற
ன. * பிலிப். ௧: ௨௮.

௬. அல்லாமலும், * கர்த்தராகிய இயேசு
தமது வல்லமையுள்ள தூதரோடும், † சுவா
லையாய் எரிகிற அக்கினியோடும் வானத்திலி
ருந்து வெளிப்படும்பொழுது, * ௧ தெச.
௪: ௰௬. † ஏசா. ௬௬: ௰௫, ௰௬.

௭. உங்களை யுபத்திரவப்படுத்துகிறவர்களு
க்கு உபத்திரவத்தையும், * உபத்திரவப்படு
கிற உங்களுக்கு எங்களோடேகூட ஆறுத
லையும் பதிற்கொடுக்கிறது பராபரனுக்கு
முன்பாக நீதியாயிருக்கின்றது. * ௧ பேது.
௪: ௰௩.

௮. அப்பொழுது பராபரனை அறியாதவர்
களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயே
சுக்கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக்கீழ்ப்ப
டியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினை
யைச்செலுத்துவார்.

௯. அவர்கள் * கர்த்தருடைய சந்நிதானத்
திலிருந்தும், அவருடைய வல்லமையின்
மகிமையினின்றும் நீங்கி, நித்தியமான அழி
வாகிய தண்டனையை அடைவார்கள். *
ஏசா. ௨: ௰௯.

௰. அவருடைய மகிமை * அவருடைய
பரிசுத்தவான்களிடத்திலே விளங்கும்படி
யாயும், அவர் விசுவாசிகளெல்லாரிடத்தி
லும், ஆச்சரியப்படுத்தப்படும்படியாயும்
வரும்பொழுது (அப்படியே நடக்கும்.)
நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவா
சித்தபடியினாலே (உங்களிடத்திலும்) அப்
படியே அந்நாளிலே (ஆச்சரியப்படுத்தப்
படுவார்.) * கொலோ. ௩: ௪.

௰௧. ஆகையால், நம்முடைய தேவனு
மாய், கர்த்தருமாயிருக்கிற இயேசுக்கிறிஸ்
துவினுடைய கிருபையின்படியே, நம்மு
டைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின்
நாமம் உங்களிடத்திலும், நீங்கள் அவரி
டத்திலும் மகிமைப்படுத்தப்படும் பொருட்
டாக,

௰௨. நம்முடைய பராபரன் உங்களைத்
தமது அழைப்புக்குப்பாத்திரராகவும், (த
மது) தயையுள்ள சித்தம் முழுவதையும்,
விசுவாசத்தின் கிரியையையும் பலமாய்
(உங்களிடத்தில்) நிறைவேற்றவும் வேண்டு
மென்று, எப்பொழுதும் உங்களுக்காக
விண்ணப்பம் பண்ணுகிறோம்.

௨ அதிகாரம்.

[(௧) அவர்கள் பெற்றுக்கொண்ட சத்தியத்தை உறுதியாய்ப்பற்றியிருக்கப்போதித்து, (௩) விசுவாசத்தினின்று வழுவுதலையும், கர்த்தருடைய நாள்வருமுன் அந்தக்கிறிஸ்துவின் வெளிப்படுதலையுந் தீர்க்கதரிசனமாக அறிவித்து, (௰௫) அதின்மேல் முன்சொன்ன புத்திகளை மறுபடியுஞ் சொல்லி, அவர்களுக்காக வேண்டிக்கொண்டது.]

அன்றியும், சகோதரரே! நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து வருவதையும், நாம் அவரிடத்திற் சேர்க்கப்படுவதையுங் குறித்து நாங்கள் உங்களை வேண்டிக்கொள்ளுகிறதென்னவென்றால்,

௨. கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச்சொல்லுகிற * ஆவியினாலாவது, வாயினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாகக்காட்டுகிற நிருபத்தினாலாவது; நீங்கள் சீக்கிரமாய் உங்கள்மனதில் அசைவுபடாமலும், கலங்காமலுமிருப்பீர்களாக. * ௧ யோவா. ௪: ௧.

௩. உங்களை வஞ்சிக்கும்படிவருகிற எவனுக்கும், எவ்விதத்தினாலும் இடங்கொடாதிருங்கள். என்னத்தினாலெனில், அந்தநாள் வருதற்கு முன்னே, சுவிசேஷத்தை * விட்டுவிலகுதலுண்டாகவேண்டும். அல்லாமலும், † கேட்டின் மகனாகிய பாவமனிதனும் வெளிப்படவேண்டும். * ௧ தீமோ. ௪: ௧—௩. † யோவா. ௰௭: ௰௨.

௪. அவன் * தேவனென்னப்பட்டயாவர்க்கும், தேவ ஆராதனையடைகிறயாவர்க்கும் விரோதமாய், தன்னையுயர்த்தி இப்படிப் பராபரனுடைய ஆலயத்திலே தேவன்போல உளுக்கார்ந்து, தானே தேவனென்று தன்னைக்காண்பிப்பான். * தானியே. ௰௧: ௩௬.

௫. நான் உங்களிடத்திலிருந்தபொழுது, இவைகளை யுங்களுக்குச்சொன்னேனென்று உங்களுக்கு ஞாபகமில்லையா!

௬. அவன் தனது காலத்திலே வெளியாகும்வரைக்கும், இப்பொழுது அவனுக்குத் தடையாய் இருக்கிறதின்னதென்றும் அறிந்திருக்கிறீர்கள்.

௭. * அக்கிரமமுள்ள அந்த இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கின்றது. இக்காலத்தில் (அதற்குத்) தடையாயிருக்கிறவன் நீக்கப்படுவதுமாத்திரம்வேண்டும். * ௧ யோவா. ௨: ௰௮, ௰௯. ௪: ௩.

௮. அப்பொழுது அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான். அவனைக்கர்த்தராகிய இயேசு * தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தமது வருகையின் பிரகாசத்தினாலே நாசம்பண்ணுவார். * ஏசா. ௰௧: ௪.

௯. அவன் எப்படித்தோன்றுவானெனில், சாத்தானுடைய நடத்தையின் விதமாய்ப் * பொய்யான அற்புதங்களோடும், அடையாளங்களோடும், மிகுந்தவல்லமையோடும், * மத். ௨௪: ௨௪.

௰. அநீதியினாலுண்டாகும் எல்லாவிதவஞ்சகத்தோடுங் * கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே தோன்றுவான். இரட்சிக்கப்படும்படிக்கேதுவான சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் தரித்துக்கொள்ளாமலிருப்பதால் அப்படிநடக்கும். * ௨ கொரிந். ௨: ௰௫—௪. ௩: ௪.

௰௧. அதினாலே சத்தியத்தை நம்பாமல் அநீதியிற் பிரியமானயாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு,

௰௨. அவர்கள் பொய்யானதை நம்புதற்கேதுவாக வஞ்சகத்தை நடப்பிக்கிறதைப் பராபரன் அவர்களுக்கு அனுப்புவார்.

௰௩. கர்த்தராலே அன்புகூரப்பட்டசகோதரராகிய நீங்கள் ஆவியினாற் பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதற் பராபரன் உங்களைத்தெரிந்துகொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக்குறித்து எப்பொழுதும் பராபரனைத்தோத்திரிக்கக்கடனாளிகளாயிருக்கிறோம்.

௰௪. நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினிடத்தில் மகிமையையடையும் பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்.

௰௫. ஆனபடியினாலே சகோதரரே! நீங்கள் நிலைகொண்டு, எங்கள் வார்த்தையினாலாவது, நிருபத்தினாலாவது நாங்கள் உங்களுக்கு உபதேசித்த முறைமைகளைப்பற்றிக்கொள்வீர்களாக.

௰௬. * நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நித்திய ஆறுதலையும், நல்நம்பிக்கையையுங் கிருபையாய் நமக்குக்கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய பராபரனும், நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவும் † உங்களிருதயங்களுக்கு ஆறுதல்செய்து, * யோவா. ௰௬: ௭. ௧ தெச. ௩: ௰௩.

௰௭. எல்லாவித நல்வசனத்திலும், நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்தக்கடவர்.

௩ அதிகாரம்.

[(௧) தனக்காகச் செபம்பண்ணவேண்டுமென்றும், (௩) அவர்கள்மேல் தனக்குள்ள நம்பிக்கை இன்னதென்றுஞ் சொல்லி, (௫) அவர்களுக்காகப்பராபரனை வேண்டிக்கொண்டு, (௬) சிலபுத்திகள் சொல்லி, விசேஷமாய்ச்சோம்பலையுங் கெட்ட சகவாசத்தையும் விலக்கக்கற்பித்து, (௰௬) செபத்

தோடும், வாழ்த்தலோடும் நிருபத்தை மு
டித்தது.]

சகோதரரே! கடைசியிலே உங்களிடத்
திலே நடக்கிறதுபோலக்கர்த்தருடை
ய வசனம் ஓடி மகிமைப்படும்படிக்கும்.
௨ துர்க்குணராகிய பொல்லாதமனிதர்கை
யினின்று நாங்கள் இழுக்கப்படும்படிக்கும்
* எங்களுக்காக விண்ணப்பம் பண்ணுவீர்
களாக. விசுவாசம் எல்லாரிடத்திலுமில்
லையே. * கொலோ. ௪: ௩.
௩ கர்த்தரே * உண்மையுள்ளவர். அவர்
உங்களை ஸ்திரப்படுத்தி, பொல்லாங்கனுக்
கு விலக்கிக்காத்துக்கொள்வார். * ௧ கொரி.
௰: ௰௩.
௪. மேலும் நாங்கள் உங்களுக்குக்கட்டளை
யிட்டவைகளைச்செய்கிறீர்களென்றும், இனி
மேலுஞ் செய்வீர்களென்றும் உங்களைக்
குறித்து, கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிரு
க்கிறோம்.
௫. கர்த்தர் உங்களிருதயங்களைப்பராபர
னுடைய அன்புக்கும், கிறிஸ்துவின் பொறு
மைக்கும் நேராக நடத்தக்கடவர்.
௬. பின்னுஞ் சகோதரரே! நம்முடைய
கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்
தினாலே நாங்கள் உங்களுக்குக்கட்டளையிடு
கிறதென்னவெனில், நீங்கள் எங்களிடத்
திற்கேட்டு ஏற்றுக்கொண்ட முறைமையின்
படி நடவாமல், ஒழுங்கில்லாமையாய் நடக்
கிற எந்தச்சகோதரனையும் விட்டு * விலக
வேண்டும். * ௧ கொரி. ௫: ௰௧.
௭ எங்களை இன்னவின்னவிதமாய், * பின்
பற்றவேண்டுமென்று நீங்கள் அறிந்திருக்
கிறீர்களே. நாங்கள் உங்களுக்குள்ளே ஒ
ழுங்கில்லாமையாய் நடவாமல், * ௧ கொரி.
௪: ௰௬.
௮. ஒருவனுடைய அப்பத்தையுங் கைமா
றில்லாமற் சாப்பிடாமல் * உங்களில் ஒரு
வனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும்,
பகலும் பிரயாசத்தோடும், வருத்தத்தோ
டும் வேலைசெய்து (சாப்பிட்டோம்.) * ௧
தெச. ௨: ௯, ௰.
௯. (அப்படிப்பாரத்தைவைப்பதற்கான)
* அதிகாரம் எங்களுக்கில்லையென்றல்ல.—
நீங்கள் எங்களைப்பின்பற்றும்படிக்கான தி
ருஷ்டாந்தமாக எங்களை யுங்களுக்குக்காண்
பிக்க மனதாயிருந்தபடியினாலே அப்படிச்
செய்தோம். * மத். ௰: ௰. ௧ கொரி. ௯:
௪—௰௪.
௰. ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்
தால், அவன் சாப்பிடவுங் கூடாதென்று
நாங்களும் உங்களிடத்தில் இருந்தபொழு
து உங்களுக்குக்கட்டளையிட்டோம்.
௰௧. இப்பொழுது உங்களிற் சிலர் வேலை
யொன்றுஞ் செய்யாமல் வீணலுவலாய்
நடந்து, ஒழுங்கில்லாமையாய்த்திரிகிறார்க
ளென்று கேள்விப்படுகிறோம்.
௰௨. இப்படிப்பட்டவர்கள் * அமைதலோ
டே வேலைசெய்து தங்கள் அன்னத்தைச்
சாப்பிடவேண்டுமென்று நம்முடைய கர்த்
தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலே யவர்க
ளுக்குப்புத்தியாகக்கட்டளையிடுகிறோம். *
௧ தெச. ௪: ௰௧, ௰௨.
௰௩. சகோதரரே! நீங்கள் * நன்மைசெய்
கிறதிலே இளைப்படையாமலிருப்பீர்களாக.
* கலா. ௬: ௯.
௰௪. மேலும் ஒருவன் இந்த நிருபத்தின்
படி யெங்கள் வசனத்திற்குக்கீழ்ப்படியா
மற்போனால், அவனைக்குறித்துக்கொண்டு
அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே
கலவாதிருப்பீர்களாக.
௰௫. அப்பொழுதும் * அவனைச்சத்துரு
வைப்போல எண்ணாமல், சகோதரனென்
றெண்ணி அவனுக்குப்புத்திசொல்லுங்கள்.
* ௩ யோ. ௰௬: ௰௭.
௰௬. * சமாதானத்தின் கர்த்தர் எப்பொ
ழுதும் சகல விதத்திலும் உங்களுக்குச்
சமாதானத்தை அநுக்கிரகிக்கக்கடவர்.—
கர்த்தர் உங்களெல்லாரோடுங்கூட இருப்
பாராக. * ௨ ரோ. ௰௫: ௩௩.
௰௭. பவுலாகிய நான் * என் கையெழுத்
தோடே வாழ்த்துதலை யெழுதினேன். நிரு
பங்கள்தோறும் இதுவே அடையாளம்.
அப்படியெழுதுகிறேன். * ௧ கொரிந்.
௰௬: ௨௧.
௰௮. நம்முடைய கர்த்தராகிய இயேசுக்
கிறிஸ்துவின் கிருபை உங்களனைவரோடுங்
கூட விருக்கக்கடவது.—ஆமென்.

அப்போஸ்தலனாகிய பவுல்

தீமோத்தேயுக்கு எழுதின முதலாம் நிருபம்.

I. TIMOTHY.

க அதிகாரம்.

[(க) பவுல் மக்கெதோனியாவுக்குப்போன
போது தான் தீமோத்தேயுக்குக்கொடுத்த
கட்டளைகளை நினைப்பூட்டி, (யக) தான் அப்
போஸ்தல ஊழியத்துக்கு அழைக்கப்பட்
டதைக்குறித்தும் (உய) இமெனேயு, அலெ
க்சாந்தர் என்ற இரண்டு துரோகிகளைக்கு
றித்தும் சொல்லியது.]

நம்முடைய இரட்சகராயிருக்கிற*பரா
பரனும், நமது நம்பிக்கைக்குரிய கர்
த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுங் கொடுத்த
† கட்டளையினாலே இயேசுக்கிறிஸ்துவின்
அப்போஸ்தலனாய் இருக்கிற பவுல்,
* கொலோ. க: உஎ. † அப். கூ: யரு.
உ. விசுவாசத்தினாலே * உத்தம குமார
னாகிய † தீமோத்தேயுக்கு எழுதுகிறதாவ
து; நம்முடைய பிதாவாகிய பராபரனா
லும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து
இயேசுவினாலுங் கிருபையும், இரக்கமும்,
சமாதானமும் உண்டாகக்கடவது. * க
கொரிந். ச: யஎ. † அப். யசு: க.
ங. வேற்றுமையாய்ப்போதகம் பண்ணாத
படிக்கும், விசுவாசத்தினால் வருகிற திவ்விய
எழுப்புதலையல்ல, தருக்கங்களை யுண்டாக்
குகிற முடியாத வம்ச அட்டவணைகளையும்,
கட்டுக்கதைகளையும் பற்றிக்கொள்ளாதப
டிக்கும் நீ சிலருக்குக்கட்டளை யிடும்பொரு
ட்டாக,
ச. * நான் மக்கெதோனியாவுக்குப்போ
னபொழுது உன்னை எபேசு பட்டணத்திலி
ருக்க வேண்டிக்கொண்டதின்படி (நீ செய்
வாயாக.) * அப்போ. உய: க.
ரு. கட்டளையின் கடைசிப்பொருளென்ன
வெனில், சுத்தமான இருதயத்தினாலும், நல்
மனச்சாட்சியினாலும், வஞ்சனையில்லாத வி
சுவாசத்தினாலும் பிறக்கிற * அன்பே.
* உரோ. யங: அ—ய.
சு. சிலர் அந்தப்பொருளை விட்டு விலகி,
வீணான பேச்சைப்பேசி வருகிறார்கள்.
எ. அவர்கள் தாங்கள் சொல்லுகிறதின்ன
தென்றும், தாங்கள் திருஷ்டாந்தப்படுத்து
கிறதின்னதென்றும் அறியாதிருந்தும் நியா
ய சாஸ்திரிகளாயிருக்க விரும்புகிறார்கள்.

அ. * நியாயப்பிரமாணத்தை ஒருவன் நி
யாயப்படி அநுசரித்தால், அது (அவனுக்
கு) நன்மையாயிருக்குமென்று அறிந்திருக்
கிறோம். * உரோ. அ: யஉ, யங.
கூ. அன்றியும் எங்களுக்குத்தெரிந்திருக்கி
றபடி நியாயப்பிரமாணம் * நீதிமான்களுக்
கல்ல. அக்கிரமக்காரருக்கும், கீழ்ப்படியா
தவர்களுக்கும், தேவபத்தி யில்லாதவர்களு
க்கும், பாவிகளுக்கும் அசுத்தருக்கும், லவு
கீக நடக்கையுடையவர்களுக்கும், தாய்த
கப்பன்மாரைக் கொலை செய்கிறவர்களுக்
கும், மற்ற மனிதகூரக்கொலை செய்கிறவர்
களுக்கும், * கலா. ரு: யஅ—உங.
ய. வேசிமார்க்களுக்கும், ஆண்புணர்ச்சிக்
காரருக்கும், மனிதரைத்திருடுகிறவர்களுக்
கும், பொய்க்காரருக்கும், பொய்யாணையிடு
கிறவர்களுக்கும்,
யக. பாக்கியமுள்ள பராபரனுடைய மகி
மையான சுவிசேஷத்தின்படி யிருக்கிற ஆ
ரோக்கியமான உபதேசத்திற்கு விரோத
மாயிருக்கிற மற்றெந்தப்பொல்லாங்கைச்
செய்கிறவர்களுக்குங் கொடுக்கப்பட்டிருக்
கின்றது.
யஉ. அந்தச் சுவிசேஷம் எனக்கு ஒப்பு
விக்கப்பட்டது. என்னைப்பலப்படுத்துகிற
நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து
என்னை யுண்மையுள்ளவனென்றெண்ணி,
இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால்
அவருக்குத்தோத்திரஞ் செய்கிறேன்.
யங. * முன்னே நான் தூஷணிக்கிறவனு
மாய், துன்பப்படுத்துகிறவனுமாய், நிந்
திக்கிறவனுமாயிருந்தேன். அப்படியிருந்
தும் நான் அறியாமல் அவிசுவாசத்தினால்
அப்படிச்செய்தபடியினாலே இரக்கம்பெற்
றேன். * அப். அ: ங. கூ: க, உ.
யச. மேலும் நம்முடைய கர்த்தாவின் கிரு
பை கிறிஸ்து இயேசுவின்மேலுள்ள விசு
வாசத்தோடும், அன்போடுங்கூட எனக்கு
மிகவுஞ் சம்பூரணமாயுண்டாயிற்று.
யரு. * பாவிகளை இரட்சிக்கும்படிக்கு, கிறி
ஸ்து இயேசு உலகத்தில் வந்தாரென்கிறது
உண்மையும், எல்லா அங்கிகரிப்புக்குப்பா
த்திரமுமான வார்த்தையாயிருக்கின்றது.

பாவிகளில், நான் பிரதானமானவன். *மத். ௯: ௰௩. லூக். ௰௯: ௰.

௰௬. அப்படியிருந்தும் நித்திய ஜீவனை அடையும்படி இனிமேல் இயேசுக்கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்குத் திருஷ்டாந்தத்தைக் கொடுக்கும்பொருட்டாகப்பிரதான பாவியாகிய என்னிடத்திலே எல்லா நீடிய பொறுமையைக்காண்பிக்கும்படிக்கு இரக்கம் பெற்றேன்.

௰௭. நித்தியமும், அழிவில்லாமையும், அதரிசனமுமுள்ள இராசனுமாய், * ஒருவராகிய ஞானமுள்ள பராபரனுமாயிருக்கிற அவருக்குக்கனமும், துதியும், என்றென்றைக்கும் முண்டாயிருப்பதாக.—ஆமென். * உரோ. ௰௬: ௨௭. யூதா. ௨௫. வசனம்.

௰௮. என் குமாரனாகிய தீமோத்தேயே! உன்னைக்குறித்து முன்னுண்டான தீர்க்கதரிசனங்களின்படியே நான் இந்தக்கட்டளையை யுனக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

௰௯. அந்தப்படி நீ விசுவாசமும், நற்சாட்சியையுடைய மனதுமுள்ளவனாய் அவைகளாலே * நல்ல போராட்டம்பண்ணுவாயாக. அப்படிப்பட்ட மனதைச்சிலர் தள்ளி † விசுவாசமாகிய கப்பலைச்சேதப்படுத்தினார்கள். * ௬: ௰௨. † ௩: ௯.

௨௰. அவர்களில் இமெனேயும், அலெக்சந்தருமிருக்கிறார்கள். அவர்கள் தூஷணியாதபடிக்குக் கற்றுக்கொள்ளும்பொருட்டாய் அவர்களைச் * சாத்தானுக்கு ஒப்புக்கொடுத்தேன். * ௧ கொரி. ௫: ௫.

௨ அதிகாரம்.

[(௧) யாவருக்காகவுஞ் செபம் பண்ணவேண்டுமென்றும், அதற்கு முகாந்தரமின்னதென்றும், (௯) ஸ்திரீகள் இவ்விதமாய் உடுக்கவேண்டியதென்றும், (௰௨) அவர்கள் சபையிலே போதிக்கக்கூடாதென்றும், (௰௫) அவர்கள்மேல் பராபரனுடைய கோபாக்கினையிருந்தாலும் அவர்கள் விசுவாசத்தில் நிலைநிற்பார்களானால் பிள்ளைப்பேற்றில் இரட்சிக்கப்படுவார்களென்றுஞ் சொல்லியது.]

பின்னும் நான் பிரதானமாய்ப்புத்தி சொல்லுகிறதென்னவென்னில், எல்லா மனிதருக்காகவும் விண்ணப்பங்களையும், செபங்களையும், வேண்டுதலையும், தோத்திரங்களையும் பண்ணவேண்டும்.

௨. நாம் எல்லாப்பத்தியோடும், யோக்கியத்தோடுங் கலகமில்லாமல் அமைநதுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு, * இராசாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும். * எரே. ௨௯: ௭.

௩. நம்முடைய இரட்சகராகிய பராபரனுக்குமுன்பாக அது நன்மையாயும் பிரியமாயுமிருக்கின்றது.

௪. * எல்லா மனிதரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை யறிகிற அறிவுக்கு வரவும் அவரே சித்தமாயிருக்கிறார். * ௨ பேது. ௩: ௯. எசே. ௰௮: ௨௩.

௫. ஏனெனில், * பராபரன் ஒருவரே. பராபரனுக்கும், மனிதருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. *யோவா. ௰௭: ௩.

௬. *எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனிதனாகிய கிறிஸ்து இயேசு அவரே. (அந்த மீட்புத்) தகுதியான காலங்களிற் சாட்சி சொல்லப்பட்டுவருகின்றது. * ௧ யோவா. ௨: ௨.

௭. அதற்காக நான் புறத்தேசத்தாருக்கு விசுவாசத்தையும், சத்தியத்தையும், விளங்கப்பண்ணுகிற போதகனாகவும், பிரசங்கியாகவும், அப்போஸ்தலனாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறேன். நான் பொய் சொல்லாமல் உண்மையே சொல்லுகிறேன்.

௮. அல்லாமலும் என்னுடைய சித்தமென்னவென்றால், எல்லா இடங்களிலேயும் புருஷர்கள் கோபமும், தருக்கமுமில்லாமற் பரிசுத்தமானகைகளை யுயர்த்தி, செபம்பண்ணவேண்டும்.

௯. அந்தப்படி ஸ்திரீகளும், மயிரைப் பின்னுதலாலாவது, பொன்னாலாவது, முத்துக்களாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தாலாவது, தங்களை அலங்கரியாமல் தேவபத்தியைக்காண்பிக்கிற பெண்பிள்ளைகளுக்கேற்றபடியே,

௰. கற்புக்குரிய வஸ்திரத்தாலும், * நாணத்தாலும், தெளிவான புத்தியாலும், நற்கிரியைகளாலுந் தங்களை அலங்கரிக்கவேண்டும். * ௧ பேது. ௩: ௩, ௪.

௰௧. ஸ்திரீயானவள் அமைதலோடே படித்துக்கொண்டு, இப்படி எவ்விதத்திலுங் கீழ்ப்படிதலைக்காண்பிக்கக்கடவள்.

௰௨. * உபதேசம் பண்ணும்படியாயும், † புருஷன்மேலே அதிகாரத்தைச்செலுத்தும்படியாயும், நான் ஸ்திரீயானவளுக்கு உத்தரவு கொடுக்கிறதில்லை. * ௧ கொரிந். ௰௪: ௩௪. † ௧ மோ. ௩: ௰௬.

௰௩. அவள் அமைதலாயிருக்கவேண்டும். என்னத்தினாலெனில் முதலாவது ஆதாமும், இரண்டாவது ஏவாளும் உருவாக்கப்பட்டார்கள்.

௰௪. மேலும் ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை. ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்குட்பட்டாள்.

௰௫. அப்படியிருந்தும், அவர்கள் தெளிவான புத்தியோடே விசுவாசத்திலும், அன்பிலும், பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால், பிள்ளையைப்பெறுகிறதினால் இரட்சிக்கப்படுவார்கள்.

௩ அதிகாரம்.

[(௧) கண்காணிகளுக்கும், ஊழியக்காரர்களுக்கும் அவர்கள் பெண்சாதிகளுக்கும் இருக்கவேண்டிய இலட்சணங்களைக்காண்பித்து. (௰௪) இவைகளைக்குறித்துத் தீமோத்தேயுக்குப்பவுல் எழுதவேண்டிய முகாந்தரம் இன்னதென்று சொல்லி, (௰௫) சபையைக்குறித்தும், அதிற் போதிக்கப்பட்டு வழங்கிவருகின்ற மகிமையுள்ள சத்தியத்தைக்குறித்தும் சொல்லியது.]

கண்காணிப்பை விரும்புகிறவன், நல்ல வேலையை விரும்புகிறான். இது மெய்யான வார்த்தை.

௨. ஆகையாற் * கண்காணியானவன் குற்றமில்லாதவனுமாய், ஒரே மனைவியையுடைய புருஷனுமாய், தெளிந்த புத்தியுள்ளவனுமாய், விவேகியுமாய், நல்லொழுக்கமுள்ளவனுமாய், அந்நியரை உபசாரம் செய்கிறவனுமாய், போதிக்கிறதற்குத்தகுதியானவனுமாய் இருக்கவேண்டும். * தீத். ௧: ௬—௯. ௧ பேது. ௫: ௧—௩.

௩. அவன்திராட்ச இரசத்திற் பிரியனுமாய், அடிக்கிறவனுமாய், அவலட்சணமான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், சாந்தனுமாய், * சண்டை பண்ணாதவனுமாய், பணத்தின்மேற் பிரியமில்லாதவனுமாய், * ௨ தீமோ. ௨: ௨௪.

௪. தன் சொந்தக்குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனுமாய், தன் பிள்ளைகளை எவ்விதத்திலும் யோக்கியமாய், கீழ்ப்படியப்பண்ணிக்கொள்ளுகிறவனுமாய், இருக்கவேண்டும்,

௫. ஒருவன் தன் சொந்தக்குடும்பத்தை நடத்த அறியாதிருந்தாற் பராபரனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?

௬. மேலும் அவன் இறுமாப்படைந்து, பசாசு விழுந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதனமான கிறிஸ்தவனாயிருக்கக்கூடாது.

௭. மேலும் அவன் நிந்தனையிலும், பசாசின் கண்ணியிலும் விழாதபடிக்குப்புறம்பானவர்களால், நற்சாட்சியைப்பெற்றவனாயுமிருக்கவேண்டும்.

௮. அந்தப்படியே உதவிக்காரரும், இருநாக்குள்ளவர்களாயும், திராட்ச இரசத்திற் பிரியராயும், அவலட்சணமான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயுமிராமல்,

௯. யோக்கியருமாய், * விசுவாசத்தின் இரகசியத்தைச்சுத்தமான மனதிலே காத்துக்கொள்ளுகிறவர்களுமாய் இருக்கவேண்டும். * ௧: ௰௯.

௰. அல்லாமலும், முன்பு அவர்களும் சோதிக்கப்படவேண்டும். அப்பொழுது குற்றமில்லாதவர்களானால், அவர்கள் உதவிக்காரருடைய உத்தியோகத்தைச்செய்யலாம்?

௰௧. அப்படிப்போல அவர்களுடைய ஸ்திரீகளும் யோக்கியருமாய், * தூஷணியாதவர்களுமாய், தெளிந்த புத்தியுள்ளவர்களுமாய், எவ்விதத்திலேயும் உண்மையுள்ளவர்களுமாய் இருக்கவேண்டும். * தீத். ௨: ௩.

௰௨. மேலும் உதவிக்காரரானவர்கள் ஒவ்வொரு மனைவிக்குப்புருஷருமாய்த்(தங்கள்) பிள்ளைகளையும், சொந்தக்குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாய் இருக்கவேண்டும்.

௰௩. இப்படி உதவிக்காரருடைய உத்தியோகத்தை நன்றாய்ச்செய்கிறவர்கள் தங்களுக்கு * நல்ல பதவியையும், கிறிஸ்து இயேசுவினிடத்திலுள்ள விசுவாசத்தின்மேல் மிகுந்த தயிரியத்தையும் சம்பாதிக்கிறார்கள். * மத். ௰௩: ௰௨. ௨௫: ௨௧.

௰௪. நான் உன்னிடத்திற்குச்சீக்கிரமாய் வருவேனென்று நம்பியிருக்கிறேன்.

௰௫. நான் தாமதித்தாற் சத்தியத்தைக்காக்கிற தூணுமாய், அஸ்திபாரமுமாயிருக்கிற சீவனுள்ள பராபரனுடைய சபையாகிய தேவாலயத்திலே நடக்கவேண்டிய வகையை நீயறியும்படிக்கு, இவைகளை யுனக்கு எழுதினேன்.

௰௬. அன்றியும் * பராபரன் மாம்சமுள்ளவராக வெளிப்பட்டும், ஆவியினாலே நீதியுள்ளவரென்றும் ஏற்படுத்தப்பட்டும், தேவதூதர்களாற் காணப்பட்டும், புறத்தேசத்தாருக்குள்ளே பிரசங்கிக்கப்பட்டும், உலகத்திலே விசுவாசிக்கப்படும் † மகிமையிலே யுயர்த்தப்பட்டுமிருக்கிறாரென்றுசொல்லிய மெய்த்தேவபத்திக்குரிய இந்த இரகசியம் யாவராலும் அறிக்கையிடப்பட்டபடி, மேன்மையாயிருக்கிறது. * யோவா. ௧: ௰௪. † மாற். ௰௬: ௰௯.

௪ அதிகாரம்.

[(௧) முடிவுகாலத்தில் விசுவாசத்தில்நின்று வழுவுதலிருக்குமென்று முன்னறிவித்து, (௬) தீமோத்தேயு தன் கடமைகளைக்கிரமமாய் நிறைவேற்றும்பொருட்டு அதற்கடுத்த பல புத்திகளைச்சொல்லியது.]

ஆகிலும் தேவ ஆவியானவர் தெளிவாய்ச்சொல்லுகிறபடி * பிற்காலங்களிலே பொய்யருடைய வஞ்சகத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், தேமோன்களைக்குறித்துச்சொல்லுகிற உபதேசங்களுக்கும் செவிகொடுத்து அந்தவிசுவாசத்தைத்தள்ளி நடப்பார்கள். * ௨ தெச. ௨: ௩—௰௨. தானி. ௭: ௨௫. ௰௧: ௩௫—௩௭.

௨. அந்தப்பொய்யர் சூடுண்ட மனதுள்ளவர்களாய் விவாகம்பண்ணக்கூடாதென்றும், * போசன பதார்த்தங்களை விலக்க

வேண்டுமென்றும் கட்டளை யிடுவார்கள்.
* ௧ மோ. ௯: ௩.
௩. பராபரன் அவைகளை விசுவாசிகளா
லும், சத்தியத்தை யறிந்தவர்களாலும்,
தோத்திரத்தோடே அநுபவிக்கப்படும்ப
டிக்குப்படைத்தாரே.
௪. ஆனதாற்*பராபரன்படைத்தவையெல்
லாம் நல்லவைகளாயிருக்கின்றன. தோத்தி
ரத்தோடே அவை ஏற்றுக்கொள்ளப்படு
கையில், ஒன்றையும் தள்ளவேண்டுவதில்லை.
* ௧ மோ. ௧: ௩௧. மத். ௰௫: ௰௧. தீத். ௧: ௰௫
௫. அவை தேவவசனத்தினாலும், செபத்தி
னாலும் பரிசுத்தமாக்கப்படுகின்றனவே.
௬. இவைகளைச் சகோதரருக்குப்போதித்
தால், நீ யறிந்து பற்றிக்கொண்டிருக்கிற
நற்போதகத்திற்கும்; விசுவாசத்திற்குமுரி
யவார்த்தைகளில் * வளர்ந்தவனுகிஇயேசுக்
கிறிஸ்துவுக்கு நல்ல ஊழியக்காரனுயிருப்
பாய். * ௨ தீமோ. ௨: ௰௫.
௭. * லவுகீக நடக்கைக்குரியவைகளு
மாய்க்கிழவிகளுடைய பேச்சுமாயிருக்கிற
கட்டுக்கதைகளைமாத்திரந்தள்ளி, மெய்த்
தேவபத்தியை முயற்சிபண்ணிக்கொள்வா
யாக. * ௬: ௨௰. ௨ தீமோ. ௨: ௰௬—
௨௩. தீத். ௧: ௰௪. ௩: ௯.
௮. * சரீரத்துக்கேற்ற முயற்சி கொஞ்
சப்பிரயோசனமுள்ளதே. இந்தச்சீவனுக்
கும், இதற்குப்பின்வரும் சீவனுக்கும் வாக்
குத்தத்தமுள்ளதாகிய † தேவபத்தி எவ்வி
தத்திலும், பிரயோசனமுள்ளதாயிருக்கின்
றதே. * கோலோ. ௨: ௨௩. † ௬: ௬.
௯. இந்த வார்த்தை * உண்மையாய், மிக
வும் அங்கிகரிக்கப்படுதற்குப்பாத்திரமாயும்
இருக்கின்றது. * ௧: ௰௫.
௰. இதற்காக நாங்களும், * எல்லாமனித
ருக்கும், † விசேஷமாக விசுவாசிகளுக்கும்,
இரட்சகராகிய சீவனுள்ள பராபரன்மேல்
நம்பிக்கையை வைத்திருக்கிறபடியாற் பிர
யாசப்பட்டும், நிந்திக்கப்பட்டுமிருக்கிறோம்.
* ௨: ௩—௫. † உரோ. ௰௫: ௰௨, ௰௩.
௰௧. இவைகளை நீ கட்டளையிட்டுப்போதிப்
பாயாக.
௰௨. உன் வாலிபவயதைக்குறித்து, * எவ
னாகிலும் உன்னை யசட்டைபண்ணத்தக்
கதாக நீ செய்யாமல், வார்த்தையிலேயும்,
நடக்கையிலேயும், அன்பிலேயும், ஆவியி
லேயும், விசுவாசத்திலேயும், கற்பிலேயும்
உன்னை விசுவாசிகளுக்குச் † சட்டமாகக்
காண்பிப்பாயாக. * தீத். ௨: ௰௫. † ௧
பேது. ௫: ௩.
௰௩. நான் வருமளவும் * வாசிக்கிறதற்கும்,
புத்தி சொல்லுகிறதற்கும், போதிக்கிறதற்
கும் சாக்கிரதையாயிரு. * யோவா. ௫:௩௯.
௰௪. * மூப்பர்கள் கூட்டம் உன்மேற்
கைகளை வைத்தபொழுது, தீர்க்கதரிசனத்
தினாலே யுனக்குக்கொடுக்கப்பட்ட வரத்
திற்காக அசதியாய் இராதிருப்பாயாக.
* ௨ தீமோ. ௧: ௬.
௰௫. நீ தேறுகிறது யாவருக்கும் தோன்
றும்படிக்கு, இவைகளையே சிந்தித்துக்
கொண்டு, இவைகளிலே சாக்கிரதையாய்
இருப்பாயாக.
௰௬. உனக்காகவும், உபதேசத்திற்காக
வும், எச்சரிக்கையாயிரு. இவைகளில் நிலை
கொண்டிரு. அப்படிச்செய்தால், உன்னை
யும் உன்னிடத்திற் கேட்கிறவர்களையும் இ
ரட்சித்துக்கொள்வாய்.

௫ அதிகாரம்.

[(௧) மற்றவர்களைக்கடிந்துகொள்ளவேண்
டிய விதத்தைக்குறித்தும், (௩) கைம்பெண்
சாதிகளைக்குறித்தும், (௰௭) மூப்பர்களைக்கு
றித்தும், சில பிரமாணங்களைவகுத்து, (௨௩)
தீமோத்தேயுவின் சுகத்துக்கு முறைசொல்
லி, (௨௪) சிலருடைய பாவங்கள் அவர்க
ளைக்குற்றஞ்சுமத்த முந்திக்கொள்வதும், சி
லருடைய பாவங்கள் அவர்களைப்பின்செல்
லுகிறதுமுண்டென்று சொல்லியது.]

* மூப்பனை நீ கடினமாய்க்கடிந்து
கொள்ளாமல், தகப்பனைப்போல
வும், வாலிப வயதுள்ள ஆண்பிள்ளைகளுக்குச்
சகோதரரைப்போலவும்,* ௩மோ. ௰௯: ௩௨.
௨. பெரிய ஸ்திரீகளுக்குத் * தாய்களைப்
போலவும, வாலிப வயதுள்ள பெண்பிள்ளை
களுக்குச்சகோதரிகளைப்போலவும், மிகுந்த
கற்போடே புத்தி சொல்லுவாயாக. *
யோவா. ௰௯: ௨௬, ௨௭.
௩. மெய்யாய்க்கைம்பெண்களானவர்களைக்
கனம்பண்ணு.
௪. ஒரு கைம்பெண்ணுக்குப்பிள்ளைகள் அல்
லது பேரன், பேத்திகளிருந்தால் அவர்கள்
முதலாவது தங்கள் சொந்தக்குடும்பத்தைத்
தேவபத்தியாய் விசாரித்து, * பின்பு தங்
கள் தாய் தகப்பன்மாருக்குப்பதில் நன்மை
களைச்செய்ய வழக்கம் பண்ணக்கடவர்கள்.
அதுவே பராபரனுக்கு முன்பாக நன்மை
யாயும், பிரியமுள்ளதாயுமிருக்கின்றது. *
எபே. ௬: ௧—௩.
௫. தனித்திருக்கிற மெய்யான கைம்பெண்
பராபரனை நம்பிக்கொண்டு, * இரவும், பக
லும் வேண்டுதல்களிலும், செபங்களிலும்
தரித்திருப்பாள். * லூக். ௨: ௩௭. ௰௮: ௧.
௬. சிற்றின்பத்தோடே வாழ்கிறவள் * உ
யிரோடே செத்தவளாயிருக்கிறாள். *உரோ.
௮: ௬. அறி. ௩: ௧. மத். ௮: ௨௨.
௭ அவர்கள் குற்றஞ் சாற்றப்படாதவர்க
ளாயிருக்கும்படிக்கு, * இவைகளைக்கட்டளை
யிடுவாயாக. * ௪: ௰௧.
௮ தன்னைச்சேர்ந்தவர்களையும், விசேஷ
மாகத்தன் சமுசாரத்தையும், விசாரியாதி

ருக்கிறவனே * விசுவாசத்தை மறுதலித்த
வனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயி
ருக்கிறான். * ௨ தீமோ. ௩: ௫. தீத். ௧:௰௬.
௯. மேலும் எப்படிப்பட்ட கைம்பெண்
ணைத்தெரிந்துகொண்டு வைக்கவேண்டுமெ
ன்றால், அறுபது வருஷத்திற்குக்கிழான வய
தில்லாதவள் ஒரேபுருஷனுக்கு மனைவியா
யிருந்தவள்.
௰. பிள்ளைகளை வளர்த்தாளென்றும், அந்
நியரை யுபசாரஞ் செய்தாளென்றும், பரி
சுத்தவான்களுடைய கால்களைக்கழுவினாளெ
ன்றும், உபத்திரவப்படுகிறவர்களுக்கு உத
விசெய்தாளென்றும், சகலவிதமான நற்கிரி
யைகளையும் நடப்பித்தாளென்றும் இப்
படிப்பட்ட நற்கிரியைகளைக்குறித்து நற்
சாட்சிபெற்றிருக்கிறவள். இப்படிப்பட்ட
கைம்பெண்ணைத் தெரிந்துகொள்ளவேண்
டும்.
௰௧. வாலிப வயதுள்ள கைம்பெண்களைத்
தெரிந்துகொள்ளாதிருப்பாயாக. என்னத்
தினாலெனில், அவர்கள் கிறிஸ்துவுக்குவிரோ
தமாய், லௌகிக ஆசைகொள்ளும்பொழு
து விவாகம்பண்ணமனதாகி,
௰௨. முதலிலிருந்த உண்மையைத்தள்ளின
தால், குற்றத்தில் அகப்படுவார்கள்.
௰௩. அதுவுமல்லாமல், அவர்கள் சோம்பற்
காரிகளாகி, வீடுகள்தோறுந் * திரியவழக்
கம் பண்ணுவார்கள். சோம்பற்காரிகளா
ய் மாத்திரமல்ல. பிதற்றுகிறவர்களாயும்,
தகாதகாரியங்களைப்பேசுகிறவீண் அலுவற்
காரிகளாயுமிருப்பார்கள். * வாக்கி. ௭:
௰௯—௨௧.
௰௪. இப்படிச்சிலர் இதற்குமுன்னே சாத்
தானிடத்திற்குத்திரும்பினார்களே.
௰௫. ஆகையால், வாலிபவயதுள்ளகைம்
பெண்கள் * விவாகம் பண்ணவும், பிள்ளை
களைப்பெறவும், வீட்டைவிசாரிக்கவும், † வி
ரோதக்காரன் தூஷணிக்கிறதற்கு இடமுண்
டாக்காமலிருக்கவும் வேண்டுமென்றிருக்கி
றேன். * ௧ கொரி. ௭: ௯. † தீத். ௨: ௫—௮.
௰௬. விசுவாசியாகிய ஒருவனுக்கு அல்ல
து, ஒருத்திக்குக்கைம்பெண்ணிருந்தால் அ
வர்கள் இவர்களுக்குதவிசெய்யக்கடவர்கள்.
சபையார் மெய்யான கைம்பெண்களுக்கு
உதவியாயிருக்கும்படிக்கு, அந்தப்பாரம்
அவர்கள்மேல் வைக்கக்கூடாது.
௰௭. * போரடிக்கிற மாட்டின்வாயைக்
கட்டாதிருப்பாயாகவென்றும், † வேலை
யாள் கூலிக்குப்பாத்திரனாய் இருக்கிறானெ
ன்றும் வேதவாக்கியஞ் சொல்லுகிறபடி
யே. * ௫ மோ. ௨௫: ௪. ௧ கொரி. ௯:
௯. † லூக். ௰: ௭.
௰௮. (சபையை) நன்றாய் நடத்துகிற
* மூப்பர்களை விசேஷமாகத்திவ்வியவசனத்
தை உபதேசிக்கிறதிற் பிரயாசப்படுகிற
வர்களை இரட்டிப்பான கனத்திற்குப்பாத்
திரராக எண்ணிக்கொள்ளவேண்டும். * ௧
தெச. ௫: ௰௨, ௰௩.
௰௯. மூப்பனுக்கு விரோதமாக ஒருவன்
பிராது பண்ணவந்தால், * இரண்டு மூன்று
சாட்சிகள் கூடவிராவிட்டால், * ௫ மோ.
௰௯: ௰௫.
௨௰ நீ அதை யேற்றுக்கொள்ளக்கூடா
து. மற்றயாவருக்கும் பயமுண்டாகும்
படிக்கு, பாவஞ் செய்தவர்களையெல்லாச்
சபையாருக்கும் முன்பாகக்கடிந்துகொள்
வாயாக.
௨௧. நீ பட்சபாதத்தோடே ஒன்றுஞ்
செய்யாமல், மனதிலே தகாததீர்ப்பில்லா
மல் இவைகளைக்காத்து நடக்கும்படிக்குப்
* பராபரனுக்கும், கர்த்தராகிய இயேசுக்
கிறிஸ்துவுக்கும், தெரிந்துகொள்ளப்பட்ட
தூதருக்கும் முன்பாகக்கெட்டியாய்க்கட்
டளையிடுகிறேன். * ௨ தீமோ. ௪: ௧, ௨.
௨௨. * எவன்மேலாகிலும் உன்கைகளை
நீ சீக்கிரமாய்வைக்கக்கூடாது. மற்றவர்
கள் செய்யும் பாவங்களுக்கு ஐக்கப்படா
திருப்பாயாக. உன்னைக்கற்புள்ளவனாகக்
காத்துக்கொள்வாயாக. * ௪: ௰௪. அப்.
௬: ௬. ௰௩: ௩.
௨௩. உன் இரைக்குடலுக்காகவும், உனக்
கு அடிக்கடிவருகிற பலவீனங்களுக்காகவும்
நீ இனிமேல் தண்ணீர் பானம்பண்ணாமற்
கொஞ்சந் திராட்ச இரசத்தைப்பானம்
பண்ணு.
௨௪. சிலமனிதருடைய பாவங்கள் தீர்ப்
புச்செய்கிறதற்கு முன்னே வெளியரங்கமா
யிருக்கும். சிலருடைய (பாவங்கள்) பின்
னே விளங்கும்.
௨௫. அதுபோலச்சிலருடைய நற்கிரியை
களும் (உடனே) வெளியரங்கமாயிருக்கும்;
அப்படியிராதவைகளும் (நெடுக) மறைந்
திருக்கமாட்டாது.

௬ அதிகாரம்.

[(௧) வேலைக்காரருடைய கடமைகளைக்கு
றித்தது. (௩) நூதனயானவைகளைப்போ
திக்கிறவர்களோடே சேரக்கூடாதென்ற
து. (௬) தேவபத்தி பிரயோசனமுள்ள
தும், (௰) பண ஆசையெல்லாத்தீமைக்கும்
வேரானதுமென்றும், (௰௧) தீமோத்தேயு
இதை நீங்கி, இதை அங்கீகரிக்கவேண்டு
மென்றும், (௰௭) ஐசுவரியவான்களுக்கு
இதைக்குறித்துப்புத்தி சொல்லவேண்டுமெ
ன்றும், (௨௰) சத்திய உபதேசத்தைக்
களங்கமின்றிக்காக்கவும், அற்பமானபோ
ராட்டங்களை நீக்கவுங் கற்பித்தது.]

பராபரனுடைய நாமமும், உபதேச
முந்தூஷணிக்கப்படாதபடிக்கு அடி
மைத்தனத்திற்குட்பட்டிருக்கிற வேலைக்கா

ரர் தங்கள் * எசமான்களைச் சகலமானகனத்
திற்கும் பாத்திரரென்றெண்ணிக்கொள்ளக்
கடவர்கள். * எபே. சு: ரு—அ. கொலோ.
ங: உஉ—உரு. தீத். உ: கூ. கபே த. உ:யஅ.

உ. விசுவாசிகளாகிய நாயன்மார்களையுடை
யவர்களும் அவர்கள் சகோதரரானதினாலே
அவர்களை யசட்டைபண்ணாமல் வேலையின்
நன்மைகளைப்பெற்றுக்கொள்ளுகிற அவர்
கள் விசுவாசிகளுமாய், அன்புள்ளவர்களுமா
யிருக்கிறதினாலே அவர்களுக்கு அதிகமாய்
ஊழியஞ் செய்யக்கடவர்கள். இந்தப்படி
யே போதித்துப்புத்திசொல்லுவாயாக.

ங. நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறி
ஸ்துவின் ஆரோக்கியமான வசனங்களுக்
கும், மெய்த்தேவபத்திக்கேற்ற உபதேசத்
திற்கும் இசைவாயிராமல்,

ச. * வேறுவிதமாய்ப்போதிக்கிறவன் † இ
றுமாப்புள்ளவனுமாய், ஒன்றையும் அறி
யாதவனுமாய், தருக்கங்களும், வாக்குவா
தங்களுமாகிய நோய்கொண்டவனுமாயிரு
க்கிறான். அவைகளாலே பொறாமையும்,
சண்டையும், தூஷணங்களும், பொல்லாத
சமுசயங்களும், * க: ங. † க: எ.

ரு. கெட்டசிந்தையுள்ளவர்களாயும், சத்
தியமில்லாதவர்களாயும், மெய்த்தேவபத்தி
* லாபத்தைவருவிக்கிறதென்றெண்ணுகிற
வர்களாயுமிருக்கிற மனிதர்களாலே பிறக்
கப்படும் மாறுபாடான தருக்கங்களும் வரு
கின்றன. அவர்களுக்கு விலகுவாயாக. *
தீத். ●: யக.

சு. * போதுமென்கிற மனதுடனேகூட
† மெய்த்தேவபத்தியே மிகுந்தலாபமுள்ள
து. * வாக். யரு: யசு. எபி. யங: ரு. † ச: அ.

எ. * உலகத்திலே நாம் ஒன்றையுங்கொ
ண்டுவந்ததுமில்லை. இதினின்று நாம் ஒன்
றையுங்கொண்டுபோவதும் இல்லையென்று
வெளியரங்கமாயிருக்கின்றது. * யோபு.
க: உக. சங். சகூ: யஎ, யஅ. பிர. ரு: யச.

அ. அப்படியிருக்க * அன்னவஸ்திரம் ந
மக்குண்டாயிருக்கையில் அது போதுமென்
றெண்ணிக்கொள்ளக்கடவோம் * க மோ.
உஅ: உய. வாக். ஙய: அ, கூ.

கூ. * ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்க
ளே, சோதனையிலேயும், கண்ணியிலேயும்,
மனிதரை மிகவுங் கெடுத்தழிக்கிறதற்கேது
வாயிருக்கிற அநேக புத்தியீனமும், சேத
முமான இச்சைகளிலேயும் விழுகிறார்கள்.
* வாக். உஅ: உய. மத். யங: உஉ. லூக்.
யஉ: உய, உக.

ய. பண இச்சை தீமையாவற்றிற்கும்வே
ராயிருக்கின்றது. சிலர் அதை யிச்சித்து
விசுவாசமார்க்கத்தைவிட்டு வழுவி, அநேக
வேதனைகளாலே தங்களை உருவக்குத்தி
யிருக்கிறார்கள்.

யக. பராபரனுடைய மனிதனாகிய நீ இ
வைகளுக்கு விலகியோடி * நீதியையும்,
மெய்த்தேவபத்தியையும், விசுவாசத்தை
யும், அன்பையும், பொறுமையையும், சாந்
தத்தையந் தொடர்ந்து கொள்வாயாக,
* உ திமோ. உ: உஉ.

யஉ. * விசுவாசத்தின் நற்போராட்டம்
பண்ணு. நித்திய ஜீவனைப்பிடித்துக்கொள்.
அதற்காகவே நீ அழைக்கப்பட்டிருக்கிறது
மல்லாமல், அநேகசாட்சிகளுக்கு முன்பாக
நல்ல அறிக்கையைப்பண்ணியுமிருக்கிறாய்.
* ககொரி. கூ: உரு,உசு. உதிமோ. ச:எ,அ.

யங. நம்முடைய கர்த்தராகிய இயேசுக்
கிறிஸ்துப்பிரசன்னமாகும் வரைக்கும் * நீ
யிந்தக்கற்பனையை மாசில்லாமலும், குற்ற
மில்லாமலுங் கைக்கொள்ளும்படிக்கு, *
ரு: உக.

யச. * எல்லாவற்றையும், உயிரோடிருக்
கச்செய்கிற பராபரனுடைய சந்நிதானத்
திலேயும், † பொந்தியு பிலாத்துவின் முன்
னின்று நல்ல அறிக்கையைச்சாட்சியாகப்
பண்ணின கிறிஸ்து இயேசுவினுடைய
சந்நிதானத்திலேயும் உனக்குக்கட்டளை
யிடுகிறேன். * ரு மோ. ஙஉ: ஙகூ. க சாமு.
உ: சு. † மத். உஎ: யக. யோவா. யஅ:
ஙசு, ஙஎ.

யரு அந்தப்பிரசன்னத்தைப்பாக்கியமுள்
ள ஒருவரேயான சுயாதிபதியுமாய், * இரா
சாக்களின் இராசனுமாய், கர்த்தாக்களின்
கர்த்தாவுமாய், * ரு மோ. ய: யஎ.

யசு. ஒருவராய், சாவாமையுள்ளவருமாய்,
ஒருவராலுஞ் சேரக்கூடாத ஒளியிலே
வாசமாயிருக்கிறவருமாய், * மனிதரில் ஒரு
வராலுங் காணப்படாமலும், ஒருக்காலுங்
காணப்படக்கூடாமலும் இருக்கிறவர் தம்
முடைய காலங்களிற் காண்பிப்பார். அவ
ருக்கே கனமும், வல்லமையும் என்றென்
றைக்குமுண்டாயிருப்பதாக.—ஆமென். *
க: யஎ. யோவா. க: யஅ. உ மோ. ஙங: உய.

யஎ. அன்றியும், இவ்வுலகத்திலே ஐசுவரி
யமுள்ளவர்கள் இறுமாப்பானசிந்தையுள்ள
வர்களாயிராமலும், * நிச்சயமில்லாத ஐசு
வரியத்தின்மேல் நம்பிக்கையாயிராமலும்,
நாம் அநுபவிக்கிறதற்குச்சகலவித நன்மை
களையும் நமக்குச் † சம்பூரணமாய்க்கொ
டுக்கிற ‡ ஜீவனையுடைய பராபரன்மேலே
நம்பிக்கையாய் இருக்கும்படியாயும், *
வாக். உங: ரு. † அப்போ. யச: ய—யஎ.
யஎ: உரு. ‡ ங: யரு. ச: ய.

யஅ. * நன்மைகளைச்செய்து நற்கிரியை
களில் ஐசுவரியவான்களாகும்படியாயும், மற்
றவர்களுக்குக்கொடுக்க மனப்பூர்வமாயிருந்
து உதாரகுணமுள்ளவர்களாய், * ரு மோ.
யரு: எ—யக.

யகூ. * நித்திய ஜீவனைப்பிடித்துக்கொள்

னும்படி வருங்காலத்திற்காகத்தங்களுக்கு
நல்ல அஸ்திபாரத்தைப்பொக்கிசமாகவை
க்கும்படியாயும் அவர்களுக்குக்கட்டளையிடு
வாயாக. * மத். ௬: ௰௯, ௨௰.
௨௰. ஓய், தீமோத்தேயுவே! * உனக்கு
ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு
† லவுகீகமும், வீணுமானபேச்சுகளுக்கும்,
கல்வியென்று பொய்யாய்ச்சொல்லப்பட்
டிருக்கிற தர்க்கத்திற்கும் விலகுவாயாக.
* ௨ தீமோ. ௧: ௰௪. † ௨ தீமோ. ௨: ௰௬.
௨௧. சிலர் அதைப்பாராட்டி * விசுவாசத்
தைவிட்டு வழுவிப்போனார்கள். கிருபையுன்
னோடே யிருக்கக்கடவது.—ஆமென். * ௧:
௬—௰௯.

அப்போஸ்தலனாகிய பவுல்

தீமோத்தேயுக்கு எழுதின இரண்டாம் நிருபம்.

II. TIMOTHY.

---

௧ அதிகாரம்.

[(௧) பவுல் தன் பட்சத்தைக்காட்டித்
தீமோத்தேயுக்குள்ளும், அவன் தாய்க்குள்
ளும் அவன்பாட்டிக்குள்ளுமிருந்த உத்தம
விசுவாசத்தைப்பற்றியெழுதி, (௬) அவனுக்
குள் தங்கிய பராபரனுடைய வரத்தை மு
யற்சி செய்யவும், (௮) துன்பத்தில் உறுதி
யோடும், பொறுமையோடும் நிற்கவும், (௰௩)
தன்னிடத்தில் கற்றுக்கொண்ட உபதே
சத்தின் வாக்கையும், பொருளையுங் காக்க
வும், (௰௫) பிகெல்லு, எற்மோகெனேமுத
லியவர்கள் தன்னை விட்டுப்போனதையும்,
ஒனேசிப்போருவின் நன்மையையுங் குறித்
துச்சொல்லியது.]

* கிறிஸ்து இயேசுவினால் வருகிற சீவ
னைக்குறித்துச்சொல்லிய வாக்குத்
தத்தத்தின்படியே பராபரனுடைய சித்தத்
தினாலே இயேசுக்கிறிஸ்துவின் அப்போஸ்
தலனாகிய பவுல், * ௨: ௰.
௨. * அன்புள்ள குமாரனாகிய தீமோத்
தேயுக்கு எழுதுகிறதாவது; பிதாவாகிய
பராபரனாலும், நம்முடைய கர்த்தராகிய
கிறிஸ்து இயேசுவினாலும், கிருபையும், இ
ரக்கமும், சமாதானமும் உனக்குண்டாகக்
கடவது. * ௧ தீமோ. ௧: ௨.
௩. என் முன்னோர்கள்முதற்கொண்டு சுத்
தமான மனதோடே பராபரனுக்கு ஆராத
னை செய்கிற நான் * இரவும், பகலும் இ
டைவிடாமல் என் செபங்களில் உன்னை நி
னைத்து, * ௧ தெச. ௫:௰௭. ௧ தீமோ. ௫:௫.
௪. உன் கண்ணீரை ஞாபகம்பண்ணிச்
சந்தோஷத்தால் நிறையப்படும்படிக்குஉன்
னைக்காணவேண்டுமென்று மிகவும் விரும்பி,
௫. உன்னிலுள்ள உண்மையான விசுவா
சத்தை ஞாபகப்படுத்தி, பராபரனுக்குத்
தோத்திரஞ் செலுத்துகிறேன். அப்படிப்
பட்ட விசுவாசம் முற்காலத்தில் உன் பாட்
டியாகிய லோவிசாளுக்குள்ளும், * உன் தா
யாகிய ஐனீக்கேயாளுக்குள்ளும் வாசமாயி
ருந்தது. உனக்குள்ளும் அப்படியே வாசு
மாயிருக்கிறதென்று நிச்சயமாய் அறிந்தி
ருக்கிறேன். * அப்போ. ௰௬: ௧.
௬. இந்நிமித்தமாக நான் உன்மேல் என்
கைகளை வைத்ததினாலே * உனக்குண்டா
ன திவ்விய வரத்தை நீ தீபவளர்ச்சியைப்
போல எழுப்பும்படிக்கு உனக்கு ஞாபகப்
படுத்துகிறேன். * ௧ தீமோத். ௪: ௰௪.
௧ தெச. ௫: ௰௯.
௭. * பயமுள்ள ஆவியையல்ல. பெலனு
ம், அன்பும், சொஸ்த புத்தியுமுள்ள ஆவி
யை, பராபரன் நமக்குக்கொடுத்தாரே.
* உரோ. ௮: ௰௫.
௮. ஆகையால், * நம்முடைய கர்த்தரை
க்குறித்துச்சொல்லவேண்டிய சாட்சிக்கா
கவும், அவர் நிமித்தங்கட்டப்பட்டிருக்கிற
எனக்காகவும் நீ வெட்கப்படாமல் தேவப
லனாலே சுவிசேஷத்திற்காக (என்னோடே)
கூடத்தீமையை யநுபவித்துக்கொள்வா
யாக. * உரோ. ௧: ௰௬.
௯. அவர் * நம்முடைய கிரியைகளினிமித்
தமல்ல. தம்முடைய முதல் யோசனையினி
மித்தமும், லோகத்தோற்றத்திற்குமுன்னே
கிறிஸ்து இயேசுவின் மூலமாய் நமக்குக்
கொடுத்த கிருபையினிமித்தமும், நமக்கு
இரட்சிப்பையுண்டாக்கி, (அதினாலே) பரி
சுத்தவான்களாக நம்மை யழைத்தார்.
* தீத். ௩: ௫, ௭.
௰. நம்முடைய இரட்சகராகிய இயேசுக்
கிறிஸ்துப்பிரசன்னமானதினாலே அந்தக்கி
ருபை இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டி
ருக்கின்றது. * அவர் மரணத்தை நிவர்த்தி

செய்து, (தமது) சுவிசேஷத்தினாலே ஜீவனையும், அழியாமையையுந் தெரியப்படுத்தினார். * ஏசா. ௨௫: ௮. எபி. ௨: ௰௪, ௰௫.

௰௧. அதைப்புறத்தேசத்தாருக்கு (அறிவிக்கும்படி) பிரசங்கியாகவும், அப்போஸ்தலனாகவும், போதகனாகவும் வைக்கப்பட்டேன்.

௰௨. அதற்காக இந்தப்பாடுகளையும் அநுபவிக்கிறேன். அப்படியிருந்தும், இன்னாரை விசுவாசித்திருக்கிறேனென்று அறிந்திருக்கிறதால் நான் வெட்கப்படுகிறதில்லை. மேலும் எனக்கொப்புவிக்கப்பட்டதை அவர் அந்த நாள்வரையிற் காத்துக்கொள்ள வல்லமையுள்ளவராய் இருக்கிறாரென்று நிச்சயமாயிருக்கிறேன்.

௰௩. நீ என்னிடத்திற்கேட்டறிந்த * ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தை இயேசுக்கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தோடும், அன்போடும் பற்றிக்கொள்வாயாக. * தீத். ௨: ௧.

௰௪. உனக்கு ஒப்புவிக்கப்பட்ட நன்மையை நம்மிடத்தில் வாசமாயிருக்கிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்வாயாக. நீ அறிந்திருக்கிறபடி ஆசியா நாட்டிலுள்ள யாவரும் என்னை விட்டு விலகிப்போனார்கள்.

௰௫. அவர்களிற் புகெல்லும், எரமொகெனேயுமிருக்கிறார்கள்.

௰௬. * ஒனேசிப்போருவின் குடும்பத்திற்கு, கர்த்தர் இரக்கத்தை யளிக்கக்கடவர். என்னத்திற்காகவென்றால், அவன் அடிக்கடி என்னைச் சவுக்கியப்படுத்தினதுமல்லாமல், என் சங்கிலியைக்குறித்து வெட்கப்படாமல், * ௪: ௰௯.

௰௭. தான் உரோமையில் வந்திருந்தபொழுது, மிகவுஞ் சாக்கிரதையாய் என்னைத் தேடிக்கண்டான்.

௰௮. அந்நாளிலே அவன் கர்த்தரிடத்தில் இரக்கங்கண்டடையும்படி கர்த்தர் அவனுக்கு அநுக்கிரகஞ்செய்வாராக. மேலும் எபேசியூரிலேயும் அவன் எனக்கு மிகவும் ஊழியஞ் செய்தானென்று நீ நன்றாயறிந்திருக்கிறாய்.

௨ அதிகாரம்.

[(௧) அவன் உறுதியும், ஊக்கமுமுடையவும், சத்திய வசனத்தைச்சரியாய்ப்பகுத்தளித்து வீண் அலப்பை அடக்குதற்கு உண்மையுள்ள ஊழியக்காரனின் கடமை இன்னதென்று சொல்லி, (௰௭) இமனேயு, பிலேத்து என்பவர்களைக்குறித்தெழுதி, (௰௯) கர்த்தருடைய அஸ்திவாரம் நிலையுள்ளதென்றும், (௨௨) அவன் இதற்கு எச்சரிக்கையாயிருந்து இதைப்பின்றொடர்ந்து, கர்த்தருடைய ஊழியக்காரன் தன்னை இவ்விதமாய் நடத்தவேண்டுமென்றுங் கற்பித்தது.]

ஆனபடியினாலே என் குமாரனே! நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையினாலே பலத்துக்கொண்டு,

௨. அநேக சாட்சிகளுக்குமுன்பாக நீ என்னிடத்திற்கேட்டவைகளை மற்றவர்களுக்கு உபதேசம்பண்ணத்தகுதியான * உண்மையுள்ள மனிதருக்கு ஒப்புவிப்பாயாக. * ௧ தீமோ. ௩: ௨.

௩. அந்தப்படி நீயும் இயேசுக்கிறிஸ்துவுக்கு நற்சேவகனாய்த் * துன்பத்தைச்சகித்துக்கொள். * ௪: ௫.

௪. போர்ச்சேவகம்பண்ணுகிற எவனுந் தன்னைச்சேவகம் எழுதிக்கொண்டவனுக்குப்பிரியமாயிருக்கும்படிக்கு, இச்சீவனுக்கேற்ற (வேறு) * தொழில்களிற் சிக்கிக்கொள்ளமாட்டானே. * ௨ பேது. ௨: ௨௰.

௫. அன்றியும் போர்ச்சாலையிலே பொருவன் போராடினாலும் நியாயமானபடி போராடாவிட்டால், கிரீடத்தைத்தரிக்கமாட்டானே.

௬. (அன்றியும்,) பயிர்செய்கிறவன் பலன் அடைகிறதற்கு முன்னே பிரயாசப்படவேண்டுமே.

௭. நான்சொல்லுகிற இவைகளைச்சிந்தித்துக்கொள்வாயாக. கர்த்தர் எல்லாவற்றிலும் உனக்குப்புத்தி தரக்கடவர்.

௮. என் சுவிசேஷத்தின்படியே * தாவீதின் சந்ததியாய் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கிற இயேசுக்கிறிஸ்துவை நினைத்துக்கொள்ளக்கடவாய். * ௨ சாமு. ௭: ௰௨. மத். ௧: ௧.

௯. இந்தச்சுவிசேஷத்திற்காக நான் பாதகனைப்போலக்கட்டப்பட்டு, துன்பத்தைச் சகிக்கிறேன்.

௰. * பராபரனுடைய வசனம்மாத்திரங் கட்டப்படமாட்டாது. இதின் நிமித்தமாகத்தெரிந்துகொள்ளப்பட்டவர்களுங் கிறிஸ்து இயேசுவினால்வருகிற இரட்சிப்பையும், நித்திய மகிமையையும் அடையும்படிக்குச்சகலத்தையும் அவர்களுக்காகச்சகித்துக்கொண்டு வருகிறேன். இந்த வார்த்தை உண்மையுள்ளது. * பிலி. ௧: ௨௨—௰௬.

௰௧. எப்படியெனில், * நாம் (அவரோடே) கூட மரித்தால் (அவரோடேகூடப்பிழைத்தும்இருப்போம்.) * உரோ. ௬: ௫. ௮: ௰௭.

௰௨. நாம் (அவரோடேகூடப்) பொறுமையாய்ப்பாடுபட்டால் (அவரோடேகூட) இராசரீகம்பண்ணியுமிருப்போம். அவரை நாம் * மறுதலித்தால் நம்மை அவரும் மறுதலிப்பார். * மத். ௰: ௩௩.

௰௩. * நாம் விசுவாசியாமலிருந்தாலும்,

அவர் உண்மையுள்ளவராயிருப்பார். அவர் தம்மைத்தாமே மறுதலிக்கமாட்டார். * உரோ. ௩: ௩. ௫ மோ. ௩௨: ௪.

௰௪. இவைகளை நீ அவர்களுக்கு ஞாபகப்படுத்தி, எவ்வளவாகிலும் பிரயோசனமல்லாததுமாய், கேட்கிறவர்களைக்கவிழ்க்கிறதற்கேதுவுமாயிருக்கிற வாக்குவாதம் பண்ணுதிருக்கும்படிக்கு, கர்த்தருக்குமுன்பாக அவர்களுக்கு ஸ்திரமான சாட்சியாய் எச்சரிப்பாயாக.

௰௫. நீ வெட்கப்படாமற் சத்திய வசனத்தை நிதானமாய்ப்பகுத்துப்போதிக்கிற உத்தம ஊழியக்காரனாக உன்னை, பராபரனுக்குமுன்பாக நிறுத்தும்படி சாக்கிரதையாயிருப்பாயாக.

௰௬. * லவுகிக வீணான பேச்சுகளுக்கே தடைசெய். (அவைகளால்) அவர்கள் அதிகமாய் அவபத்தியுள்ளவர்களாகிறார்களே. * ௧ தீமோ. ௬: ௨௰.

௰௭. அவர்களுடைய பேச்சுப்பிளவையைப்போலத்தின்னும். * உமனையும், பிலேத்தும் அப்படிப்பட்டவர்கள். * ௧ தீமோ. ௧: ௨௰.

௰௮. அவர்கள் சத்தியத்தை விட்டு விலகி, உயிரோடெழுப்புதல்சம்பவித்தாயிற்றென்று போதித்துச்சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போட்டார்கள்.

௰௯. ஆகிலும் பராபரனுடைய ஸ்திரமான அஸ்திபாரம் நிலை நிற்கின்றது. * கர்த்தர் தம்முடையவர்களை யறிவிப்பாரென்றும், † கிறிஸ்துவின் நாமத்தைச்சொல்லுகிறவனெவனோ அவன் அநியாயத்தை விட்டு விலகக்கடவனென்றும், அதற்கு முத்திரையாயிருக்கிறது. * சங். ௧: ௬. யோவா. ௰: ௰௪. † ௧ யோவா. ௨: ௪, ௫.

௨௰. ஒரு பெரிய வீட்டிலே பொன் வெள்ளிப்பாத்திரங்கள் மாத்திரமல்ல. மரமும், மண்ணுமான பாத்திரங்களுமுண்டு. அவைகளிற் சில கனத்திற்கும், சில கனவீனத்திற்குமானவைகளாயிருக்கின்றன.

௨௧. ஆகையால், ஒருவன்மேற் சொல்லியவைகளைவிட்டுத்தன்னைச்சுத்திகரித்தால் அவன் கனத்திற் கேற்றதாயும், பரிசுத்தமாக்கப்பட்டதாயும், எசமானுக்கு மிகுந்த பிரயோசனமாயும், எந்த நற்கிரியைக்கும் எத்தினமாக்கப்பட்டதாயுமிருக்கிற பாத்திரமாயிருப்பான்.

௨௨. ஆதலால், வாலிபவயதுக்குரிய இச்சைகளுக்கு நீ விலகி ஓடி சுத்தமான இருதயத்தோடேகர்த்தாவைத்தொழுதுகொள்ளுகிறவர்களுடனேகூட * நீதியையும், விசுவாசத்தையும், அன்பையும், சமாதானத்தையும்பின்றொடர்ந்துகொள். * ௧ தீமோ. ௬: ௰௧.

௨௩. அன்றியும், * புத்தியீனமும், அறிவீனமுமான தருக்கங்கள், சண்டைகளைப்பிறப்பிக்கிறவைகளென்று நீ யறிந்து, அவைகளை யகற்றுவாயாக. * ௧ தீமோ. ௪: ௭. தீத். ௩: ௯.

௨௪. கர்த்தருடைய ஊழியக்காரன் * சண்டைபண்ணாமல், எல்லாருக்குஞ் சாந்தமுள்ளவனும், போதிக்கத்தகுதியானவனும், தீமையைப்பொறுமையாய்ச்சகிக்கிறவனுமிருந்து, * ௧ தீமோ. ௩: ௨, ௩.

௨௫. எதிர்ப்பேசுகிறவர்களுக்குச் சாந்தமாய்ப்புத்திசொல்லவேண்டுமே. அப்பொழுது தன்னுடைய இஷ்டப்படி செய்யப் பசாசினாற் பிடிக்கப்பட்டிருக்கிற அவர்கள் சத்தியத்தை யறிக்கையிடுகிறதற்கேற்ற மனஸ்தாப குணத்தை யடைந்து,

௨௬. அவனுடைய வலையினின்று நீங்கித் தெளிந்த புத்தியுள்ளவர்களாகும்படிக்குப் பராபரன் ஒரு வேளை அவர்களுக்கு அநுக்கிரகஞ் செய்வார்.

௩ அதிகாரம்.

[(௧) பிற்காலங்களைக்குறித்தும், (௬) சத்திய விரோதிகளைக்குறித்தும் முன்னறிவித்து, (௰) தன் மாதிரியை அவன் பின்பற்றவும், (௰௬) வேதவசனத்தைப்பற்றிக்கொள்ளவுஞ் சொல்லியது.]

மேலுங் கடைசி நாள்களிலே * கொடிய காலங்கள் வருமென்றறிவாயாக. * ௨ பேது. ௨: ௧—௩.

௨. எப்படியெனில், மனிதர்கள் தங்களை (மாத்திரம்) சிநேகிக்கிறவர்களாயும், பணத்திற் பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷணிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக்கீழ்ப்படியாதவர்களாயும், நன்றி யறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும்,

௩. சுபாவ அன்பில்லாதவர்களாயும், ஒப்புரவாக மனதில்லாதவர்களாயும், பொய்யாய்க் குற்றஞ் சாற்றுகிறவர்களாயும், இச்சையை யடக்காதவர்களாயும், குரூரராயும், நல்லோருக்குப்பகைஞராயும்,

௪. துரோகிகளாயும், துணிவுக்காரராயும், இறுமாப்புள்ளவர்களாயும், பராபரனிலுஞ் செல்வத்தை விரும்புகிறவர்களாயும், * தேவபத்தியின் ரூபத்தைத்தரித்து, * தீத்து. ௧: ௰௬.

௫. அதின்பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்.

௬. இப்படிப்பட்டவர்களுக்கு விலகுவாயாக. இப்படிப்பட்டவர்களே பாவங்களால் நிறைந்தும், பல பல இச்சைகளால் இழுக்கப்பட்டும்,

௭. எப்பொழுதும் படித்தாலும், ஒருக்காலுஞ் சத்தியத்தை யறியாமலுமிருக்கிற புத்தியீனமுள்ள பெண்பிள்ளைகளுடைய வீடுக

ளில் நுழைந்து, அவர்களைச்சிறையாக்குவார்கள்.

௮. இயன்னேயும், இயம்பிரேயும் * மோசேயுக்கு விரோதமாய் நின்றதுபோல, இவர்களுஞ் சத்தியத்திற்கு விரோதமாயிருக்கிறார்கள். அவர்கள் முழுவதுங் கெட்டபுத்தியை யுடையவர்களாயும், விசுவாசத்தைவகையறுக்கத்தகுதி யில்லாதவர்களாயுமிருக்கிறவர்கள். * ௨ மோ. ௭: ௰௧.

௯. அவர்கள் அதிசமாய்ப்பெருகுவதில்லை. அவ்விருவருடைய புத்தியீனமும் * வெளிப்பட்டதுபோல, இவர்களுடையதும் எல்லாருக்கும் வெளியரங்கமாகுமே. * ௨ மோ. ௮: ௰௮, ௰௯. ௯: ௰௧.

௰. நீயே என்னுடைய போதகத்தையும், நடக்கையையும், மன யோசனையையும், விசுவாசத்தையும், நீடிய சாந்தத்தையும், அன்பையும், பொறுமையையும்,

௰௧. * அந்தியோகூர், இக்கோனியூர், லிஸ்திராவூர் இவ்விடங்களிலே எனக்குண்டான துன்பங்களையும், பாடுகளையும் நன்றாய் அறிந்துகொண்டிருக்கிறாய். இப்படிப்பட்ட துன்பங்களைச்சகித்தேன். அவைகளெல்லாவற்றில் நின்றுங் கர்த்தரென்னை இழுத்து இரட்சித்தார். * அப். ௰௩: ௫௰. ௰௪: ௨.

௰௨. அன்றியுங் கிறிஸ்து இயேசுவைப்பற்றித்தேவபத்தியாய்ச்சீவனம்பண்ண மனதாயிருக்கிறயாவரும் * துன்பப்படுவார்கள். * அப். ௰௪: ௨௨.

௰௩. பொல்லாத மனிதரும், வஞ்சகருமானவர்கள்மாத்திரம் (மற்றவர்களை) வஞ்சித்தும், வஞ்சிக்கப்பட்டுமிருந்து மேன்மேலுங் கேடுள்ளவர்களாவார்கள்.

௰௪. நீ கற்றுக்கொண்டதெதுவோ, நீநிச்சயிக்கப்பட்டதெதுவோ அதிலே நிலை நிற்பாயாக. உனக்குப்போதகஞ் செய்தவன் இன்னானென்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல்,

௰௫. இயேசுக்கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே இரட்சிப்புக்கேற்ற ஞானத்தை யுனக்குக்கொடுக்கத்தகுதியான வேதவெழுத்துக்களை நீ சிறுவயதுமுதற்கொண்டு அறிந்தவனென்றும் அறிந்திருக்கிறாயே.

௰௬. * வேதவாக்கியங்களெல்லாந் தேவ ஆவியினாலுண்டானவைகளுமாய், பராபரனுடைய மனிதன் நிறைந்த நன்மையுள்ளவனும், எந்த நற்கிரியையுஞ் செய்ய மிகுந்த தகுதியுள்ளவனுமாகும்பொருட்டாய், * ௨ பேது. ௧: ௨௰, ௨௧.

௰௭. * உபதேசம்பண்ணுதற்கும், கடிந்துகொள்ளுதற்கும், செம்மையாக்குதற்கும், நீதிலைப்படிப்பிக்கிறதற்கும், பிரயோசனமானவைகளுமாயிருக்கின்றன. * சங். ௰௯:

௪ அதிகாரம்.

[(௧) தீமோத்தேயுவைச் சாக்கிரதையோடும், சுறுசுறுப்போடுந் தேவ ஊழியத்தைச்செய்யச்சொல்லி, (௬) தன் மரணஞ் சமீபமாயிருக்கிறபடியால், (௯) அவனைத் தன்னிடத்திற்கு வரவும், மாற்கை யழைத்துக்கொண்டு, சில வஸ்துக்களைக்கொண்டு வரவும், (௰௪) கன்னாகிய அலேக்சாந்தரைக்குறித்து எச்சரிக்கையாயிருக்கவும், (௰௬) சத்தியத்துக்காக உரோமாவிலே தான் முதல்விசை சாட்சிபகர்ந்தபோது தனக்குச்சம்பவித்ததையுஞ்சொல்லி, (௰௯) நிருபத்தை முடித்தது.]

ஆனபடியினாலே பராபரனுக்கு முன்பாகவும், தாம் பிரசன்னமாகித்தமது இராச்சியத்தின் (மகிமையை) வெளிப்படுத்துங்காலத்திலே உயிரோடிருக்கிறவர்களுக்கும், மரித்தவர்களுக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுக்குங் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்கு முன்பாகவும்,

௨. நான் உனக்குச்சாட்சியாய்க் கட்டளையிடுகிறதென்னவெனில், சாவகாசமாயிருந்தாலும், இல்லாதிருந்தாலும் அந்த வசனத்தை இடைவிடாமற் பிரசங்கம்பண்ணி, எல்லாவிதமான நீடிய சாந்தமாயும், உபதேசத்திற்கேற்ற விதமாயும், மெய்யை விளங்கச்செய்து கடிந்துகொண்டு புத்திசொல்வாயாக.

௩. என்னத்தினாலெனில், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப்பொறுக்க மனதில்லாமற் செவிக்கு இன்பமானதை விரும்பித்தங்கள் சுய இச்சைகளுக்குத்தக்கதாக,

௪. தங்களுக்குப்போதகரைக்கூட்டிவைத்துச்சத்தியத்திற்குச்செவியை விலக்கிக்கட்டுக்கதைகளைச்சாருங்காலம் வரும்.

௫. நீ மாத்திரம் எல்லாவற்றிலேயும் தெளிந்த புத்தியுள்ளவனாயிருந்து, தீமையைச்சகித்துச்சுவிசேஷகனுடைய வேலையைச் செய்து, உன் ஊழியத்தை நிறைவேற்றுவாயாக.

௬. நானே பானபலியாக வார்க்கப்படவெத்தினமாயிருக்கிறேன். நான் இதைவிட்டுப் போகிறதற்குக்காலஞ் சமீபமாயிருக்கின்றது.

௭. *நல்லபோராட்டத்தைப்பண்ணியிருக்கிறேன். ஓட்டத்தை முடித்திருக்கிறேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டிருக்கிறேன். * ௧ கொரி. ௯: ௨௫—௨௭.

௮. இதுமுதல் நீதியென்னுங்கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. * நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளில் அதை யெனக்குமாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பின யாவருக்குந் தந்தருளுவார். *௧ பேது. ௫: ௪. அறி. ௨: ௰.

௯. நீ சீக்கிரமாய் என்னிடத்தில் வரும்படி, சாக்கிரதையாயிருப்பாயாக.

௰. * தேமாவென்பவன் இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, என்னைவிட்டுத்தெசலோனிக்கேயூருக்குப்போனான். கிரேஸ்கேயென்பவன் கலாத்திநாட்டிற்கும், தீத்தென்பவன் தல்மாத்தி நாட்டிற்கும்போனார்கள் * ௧ யோவா. ௨: ௰௫.

௰௧. * லூக்காவென்பவன்மாத்திரம் என்னோடேயிருக்கிறான். † மாற்கென்பவன் என் ஊழியத்திலே எனக்குப்பிரயோசனமாயிருக்கிறபடியினாலே, அவனைக்கூட்டிக்கொண்டுவா. * கொலோ. ௪: ௰௪. † கொலோ. ௪: ௰.

௰௨. தீகிக்கென்பவனை நான் எபேசு ஊருக்கு அனுப்பினேன்.

௰௩. துரோயாப்பட்டினத்திலுள்ள கற்பென்பவனிடத்திலே நான் வைத்துவந்த மேல் அங்கியையும், புத்தகங்களையும், விசேஷமாகத்தோற்காகிதங்களையும், நீ வருகிறபொழுது எடுத்துக்கொண்டுவா!

௰௪. கன்னானாகிய அலெக்ஷந்தர் எனக்கு மிகுந்த தீமைகளைச்செய்தான். அவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாகக்கர்த்தர் அவனுக்குப்பதிற்கொடுக்கக்கடவர்.

௰௫. நம்முடைய வார்த்தைகளுக்கு அவன் மிகவும் விரோதித்தபடியால், நீயும் அவனைக்குறித்து எச்சரிக்கையாயிருப்பாயாக.

௰௬. நான் முதலிலே எனக்காக உத்தரவு சொல்லி நின்றபொழுது, ஒருவனும் என் பங்கிலிராமல் யாவரும் என்னைவிட்டார்கள். அது அவர்களுக்குக் (குற்றமாக) எண்ணப்படாதிருப்பதாக.

௰௭. (திவ்வியவசனம்) என்னாலே சம்பூரணமாய்ப்பிரசங்கிக்கப்படத்தக்கதாகவும், புறத்தேசத்தார் யாவரும் அதைக்கேட்கத்தக்கதாகவும் கர்த்தர்மாத்திரம் என் பங்கிலிருந்து என்னைப்பலப்படுத்தினார். இப்படி நான் சிங்கத்தின்வாயிலிருந்து இழுக்கப்பட்டேன்.

௰௮. மேலும் மற்றெந்தப்பொல்லாத கிரியையினின்றும், கர்த்தர் என்னையிழுத்துத் தமது பரம இராச்சியத்திற் பிரவேசிக்கப்பண்ணி இரட்சிப்பார். அவருக்கு. என்றென்றைக்குந் துதியுண்டாவதாக. ஆமென்.

௰௯. * பிரிஸ்காளுக்கும், அக்கிலாவுக்கும், ஒனேசிப்போருவின் குடும்பத்தாருக்கும் வாழ்த்துதல்செய்கிறேன். * அப். ௰௮: ௨.

௨௰. ஏரஸ்தென்பவன் கொரிந்துபட்டினத்திலே தரித்திருந்தான். திரோப்பிமுவென்பவனை மிலேத்துப்பட்டினத்திலே வியாதிப்பட்டவனாக விட்டுவந்தேன்.

௨௰௧. மாரிகாலத்திற்குமுன்னே நீ இங்கே வந்து சேரும்படி சாக்கிரதையாயிருப்பாயாக. ஐபூலுவும், புதேஞ்சும், இலீனுவும், கல்வுதியாளும், மற்றெல்லாச்சகோதரரும் உனக்கு வாழ்த்துதல்செய்கிறார்கள்.

௨௰௨. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து உன் ஆவியுடனேயிருக்கக்கடவர். கிருபை உங்களோடே இருப்பதாக.—ஆமென்.

அப்போஸ்தலனாகிய பவுல்

தீத்து என்பவனுக்கு எழுதின நிருபம்.

TITUS.

---

௧ அதிகாரம்.

[(௧) தீத்துக்கிரேத்தாவில் வைக்கப்பட்டமுகாந்தரமின்னதென்றும், (௬) தேவ ஊழியக்காரருடைய இலட்சணங்களின்னவைகளென்றும், (௰௧) துர்ப்போதகர்களுடைய வாய் அடைக்கப்படவேண்டுமென்றும், (௰௨) அவர்கள் இப்படிப்பட்டவர்களென்றுஞ் சொல்லியது.]

பொய்யுரையாத பராபரன் இவ்வுலக காலங்களுக்குமுன்னே, நித்தியசீவனைக்குறித்து * வாக்குத்தத்தம் பண்ணி, * ௧ மோ. ௩: ௰௫.

௨. * ஏற்றகாலங்களிலே நம்முடைய தேவனாகிய இரட்சகருடைய கட்டளையின்படியெனக்கொப்புவிக்கப்பட்ட பிரசங்கத்தினாலே தமது வார்த்தையை வெளிப்படுத்தினாரே.. * எபேசு. ௧: ௬, ௰.

௩. அந்த நித்திய சீவனைக்குறித்து நம்பிக்கையுண்டாக்கத்தக்கதாகத்தேவபத்திக்கேதுவான சத்தியத்தையறிகிற அறிவும், விசுவாசமுந் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு உண்டாகும்படிக்கேதுவாய், பராபரனுடைய ஊழியக்காரனுமாய், இயேசுக்கிறிஸ்துவின் அப்போஸ்தலனுமாயிருக்கிற பவுல்,

ச. பொதுவான விசுவாசத்தினாலே யெனக்கு * உத்தம குமாரனாகிய தீத்துக்கு எழுதுகிறதாவது; பிதாவாகிய பராபரனாலும், நம்முடைய இரட்சகரும், கர்த்தருமாகிய இயேசுக்கிறிஸ்துவினாலும் உனக்குக்கிருபையும், சமாதானமுமுண்டாவதாக. * க. தீமோ. க: உ.

ரு. நான் உனக்குக்கட்டளையிட்டபடி, நீ கிரேத்தைத்தீவிலே மிதவரைக்குங் குறைவாயிருக்கிறவைகளைச் செம்மைப்படுத்திப் பட்டினங்கள்தோறும் மூப்பரை யேற்படுத்தும்படிக்கு உன்னை விட்டுவந்தேனே.

சா. * குற்றமில்லாதவனுமாய், ஒரேமனைவிக்குப்புருஷனுமாய், கெட்டமார்க்கரென்னுங் குற்றமில்லாமையும், கீழ்ப்படிதலும், விசுவாசமுமுள்ள பிள்ளைகளையுடையவனுமாய் ஒருவனிருந்தால்(அவனை வைக்கலாம்.) கண்காணியானவன் † பராபரனுடைய உக்கிராணக்காரனுக்கேற்றதாகக்குற்றஞ் சாற்றப்படாதவனுமாய், * க தீமோ. ங: உ—ரு. † உ தீமோ. உ: உச.

எ. தன் இஷ்டப்படி (மாத்திரம்) செய்ய மனதில்லாதவனுமாய், கடுஞ்சினமில்லாதவனுமாய், பழ இரசத்தை மிகவும் விரும்பாதவனுமாய், அடிக்கிறவனாயிராதவனுமாய், அவலட்சணமானவிதமாய் ஆதாயத்தைத் தேடாதவனுமாய்,

அ. அந்நியருக்கு உபசாரஞ்செய்கிறவனுமாய், நல்லோர்மேற் பிரியமுள்ளவனுமாய், விவேகமும், நீதியும், பரிசுத்தமும், இச்சையடக்கமுமுள்ளவனுமாய்,

கூ. ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லி, எதிர்ப்பேசுகிறவர்களுக்கு மெய்யறிவைக்கொடுக்கத்திராணியுள்ளவனாயிருக்கும்படிக்குத்தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான உபதேசத்தை நன்றாய்ப்பற்றிக்கொள்ளுகிறவனுமாயிருக்கவேண்டுமே.

ய. என்னத்திற்காகவென்றால், * அநேகர் விசேஷமாக விருத்தசேதனத்தை யுடையவர்கள் (சத்தியத்திற்குக்) கீழ்ப்படியாதவர்களுமாய், வீணானவைகளைப்பேசுகிறவர்களுமாய், மனதை வஞ்சிக்கிறவர்களுமாயிருக்கிறார்கள். * க தீமோ. க: சா, எ.

யக. அவர்களுடையவாயை அடக்கிப்போடவேண்டுமே. அவர்கள் அவலட்சணமான ஆதாயத்திற்காகத்தகாதவைகளை உபதேசித்து முழுக்குடும்பங்களையுங் கவிழ்க்கிறார்கள்.

யஉ. அவர்களிலொருவனாகிய தீர்க்கதரிசியானவன்றானே. கிரேத்தைத்தீவார் எப்பொழுதும் பொய்யருமாய், துஷ்டமிருகங்களுமாய், சோம்பலுள்ள தேகிகளுமாயிருக்கிறார்களென்று சொன்னான்.

யங. அந்தச்சாட்சி மெய்தான், அதுமுகாந்தரமாக அவர்கள் விசுவாசத்திலே ஆரோக்கியமடையும்படிக்கும், யூதருடைய கட்டுக்கதைகளுக்கும், சத்தியத்தைவிட்டு விலகுகிற மனிதருடைய கற்பனைகளுக்குஞ் செவிகொடாதிருக்கும்படிக்கும்,

யச. நீ அவர்களைக்கண்டிப்பாய்க்கடிந்து கொள்வாயாக.

யரு. சுத்தமுள்ளவர்களுக்குச் * சகலமுஞ் சுத்தமாயிருக்கும். அழுக்கும், அவிசுவாசமுமுள்ளவர்களுக்குமாத்திரம் ஒன்றுஞ் சுத்தமாயிருக்கமாட்டாது. அவர்களுடைய புத்தியும், மனச்சாட்சியும் அழுக்காயிருக்கிறதே. * மத். யரு: யக.

யசா. அவர்கள் பராபரனை அறிகிறோமென்று சொல்லியும், தங்கள் கிரியைகளால் அதை மறுதலிக்கிறார்கள். அவர்கள் அருவருக்கப்படத்தக்கவர்களாயும், கீழ்ப்படியாதவர்களாயும், எந்த நற்கிரியையும் வகையறுக்கத்தெரியாதவர்களாயும் இருக்கிறார்களே.

உ அதிகாரம்.

[(க) நம்பவும், செய்யவும் வேண்டியவைகளைக்குறித்துத்தீத்துக்குச்சொன்னது. (கூ) வேலைக்காரரும், மற்றக்கிறிஸ்தவர்கள் யாவரும் செய்யவேண்டிய கடமைகளைக்குறித்தது.]

நீயே ஆரோக்கியமான உபதேசத்திற்கேற்றவைகளைப்பேசிக்கொள்வாயாக.

உ. முதிர்ந்தவயதுள்ள புருஷர்கள் தெளிந்த புத்தியுள்ளவர்களாயும், யோக்கியராயும், விவேகிகளாயும், விசுவாசத்திலும், அன்பிலும், பொறுமையிலும் ஆரோக்கியமுள்ளவர்களாயுமிருக்கும்படி (போதிப்பாயாக.)

ங. அப்படிப்போல, முதிர்ந்தவயதுள்ள ஸ்திரீகளும் பரிசுத்தருக்கேற்றவிதமாய் நடக்கிறவர்களாயும், பொய்யாய்க்குற்றஞ் சாற்றாதவர்களாயும், மிகுந்த திராட்ச இரசத்தைக்குடியாதவர்களாயும்,

ச. பராபரனுடைய வசனம் தூஷணிக்கப்படாதபடிக்கு வாலிபஸ்திரீகள் தங்கள் புருஷரையும், பிள்ளைகளையுஞ் சிநேகிக்கிறவர்களுமாய்,

ரு. விவேகிகளுமாய், கற்புள்ளவர்களுமாய், வீட்டில் தரித்திருக்கிறவர்களுமாய், நல்லவர்களுமாய், * தங்கள் புருஷருக்குக்கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப்புத்திசொல்லத்தக்க நற்போதகிகளாயுமிருக்கும்படிக்குப் (போதிப்பாயாக.) * எபேச. ரு: உஉ.

சா. அப்படிப்போல, வாலிப வயதுள்ள ஆண்பிள்ளைகளும் விவேகமாயிருக்கும்படி நீ புத்திசொல்லி,

எ. நற்கிரியைகளுக்கேற்ற மார்க்கத்தை நீ

தானே * எல்லாவற்றிலும் (மற்றவர்களுக்குத்) திருஷ்டாந்தப்படுத்துவாயாக. * ௧ தீமோ. ௪: ௧௨. ௧ பேது. ௫: ௩.

௮. அந்தப்படி * எதிராளியானவன் உங்களைக்குறித்துப் பொல்லாங்கைச்சொல்லுதற்கொன்றுமில்லாமல், வெட்கப்படத்தக்கவிதமாக நீ உபதேசத்திலே விகற்பமில்லாதவனுமாய், யோக்கியமுள்ளவனுமாய், குற்றம்பிடிக்கப்படக்கூடாத ஆரோக்கியமுள்ள வசனத்தைப்பேசுகிறவனுமாய் இருப்பாயாக. * ௧ பேது. ௨: ௧௨.

௯. அன்றியும், * வேலைக்காரர் நம்முடைய இரட்சகராகிய பராபரனுடைய உபதேசத்தை எல்லாவற்றிலும் அலங்கரிக்கத்தக்கவிதமாக, * எபேச. ௬: ௫—௮.

௰. தங்கள் எசமான்களுக்குக்கீழ்ப்படியவும், எதிர்ப்பேசாமல் எல்லாவற்றிலும் பிரியமாய்நடக்கவும், திருட்டுத்தனமாய் நடவாமல் சகலவிதமாயும் நல்லுண்மையைக் காண்பிக்கவும் புத்திசொல்லுவாயாக.

௰௧. என்னத்தினாலெனில், இரட்சிப்பைக்கொடுக்கிற தேவகிருபை யெல்லாவிதமான மனிதருக்கும் * பிரசன்னமாகி, * ௩: ௪. மத். ௨௮: ௰௯.

௰௨. * நாம் அவபத்தியையும், லவுகீக இச்சைகளையும்வெறுத்து நற்புத்தியும், நீதியும், மெய்த்தேவபத்தியுமுள்ளவர்களாயும், * ௧ யோவா. ௨: ௰௫—௰௭.

௰௩. நாம் நம்பிக்கொள்ளுகிறபாக்கியம் வருமென்றும், நமக்கு மகாதேவனும், இரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்துவின் மகிமை பிரசன்னமாகுமென்றுங் காத்துக்கொண்டிருக்கிறவர்களாயும், இவ்வுலகத்திலே சீவனம்பண்ணும்படி நமக்குப்போதிக்கின்றது.

௰௪. அந்த இயேசுக்கிறிஸ்து நம்மைச் சகல அக்கிரமங்களினின்றும் மீட்டுக்கொண்டு, தமக்குச்சொந்தமாயும், * நற்கிரியைகளைச்செய்ய மிகுந்த விருப்பமாயுமிருக்கிறசனங்களாகச்சுத்திகரிக்கும்படிக்கு, † நமக்காகத்தம்மையே (மரணத்திற்கு) ஒப்புக்கொடுத்தார். * மத். ௫: ௰௬. † கலா. ௧: ௩.

௰௫. இவைகளை நீ மிகுந்த அதிகாரத்தோடே போதித்து, புத்திசொல்லிக்கடிந்துகொள்வாயாக. * ஒருவனும் உன்னை அசட்டை பண்ணுதிருக்கக்கடவன். * ௧ தீமோ. ௪: ௰௨.

௩ அதிகாரம்.

[(௧) தீத்து இன்னதைப்போதிக்கவும், இன்னதைப்போதியாதிருக்கவும், (௰) கெட்ட வேதப்புரட்டரை நீக்கவும், பவுல் கற்பித்தது. (௰௨) அவன் தன்னிடத்தில் வரவேண்டியகாலத்தையும் இடத்தையுஞ்சொல்லி, நிருபத்தை முடித்தது.]

* துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்குங் கீழ்ப்படிந்து அடக்கமாயிருக்கும்படிக்கும், எல்லாவிதமான நற்கிரியைகளையுஞ்செய்ய எத்தினமாயிருக்கும்படிக்கும், * ௧ பேது. ௨: ௰௩, ௰௪.

௨. ஒருவனையுந் தூஷணியாமலும், சண்டைபண்ண விரும்பாமலும், * சாதுவான மனதுள்ளவர்களாய் எல்லா மனிதருக்கும், எல்லாவிதத்திலுஞ் சாந்தத்தைக்காண்பிக்கும்படிக்கும், அவர்களுக்கு ஞாபகப்படுத்துவாயாக. * பிலிப். ௪: ௫.

௩. என்னத்தினாலெனில், * முற்காலத்திலே நாமும் புத்தியீனருமாய், கீழ்ப்படியாதவர்களுமாய், வஞ்சிக்கப்பட்டவர்களுமாய், பலவிதமான இச்சைகளுக்கும், இன்பங்களுக்கும் அடிமைகளுமாய், துர்ப்புத்தியோடும், பொறாமையோடுஞ் சீவனம் பண்ணுகிறவர்களுமாய், அருவருக்கப்படத்தக்கவர்களுமாய், ஒருவரை யொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம். * எபே. ௨: ௨, ௩.

௪. நம்முடைய இரட்சகராகிய பராபரனுடைய தயையும், மனிதர்மேலுள்ள * அன்பும் பிரசன்னமானபொழுது, * ௨: ௰௧. ௧ யோவா. ௪: ௯.

௫. நாம் செய்த நீதிக்கேற்ற கிரியைகளினிமித்தமல்ல, * மறுபிறப்பாகிய முழுக்கினாலும், பரிசுத்த ஆவி செய்கிற புதிதாக்குதலினாலுமே † அவர் தமது சுய இரக்கத்தினாலே நம்மை இரட்சித்தார். * யோவா. ௩: ௫. † எபே. ௨: ௪—௯. ௨ தீமோ. ௧: ௯, ௰.

௬. தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய சீவனைக்குறித்து உண்டாயிருந்த நம்பிக்கையின்படி சுதந்திரராகும்படிக்கு,

௭. அவர் நம்முடைய இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலமாய், * அந்தப்பரிசுத்த ஆவியை நமக்குச்சம்பூரணமாய்க் கொடுத்தருளினார். * ஏசே. ௩௬: ௨௫. யோவே. ௨: ௨௬.

௮. இந்த வார்த்தை யுண்மையுள்ளது. பராபரனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச்செய்ய எச்சரிக்கையாயிருக்கும்படிக்கு, நீ யந்தச் (சுதந்தரரைக்) குறித்துக்கெட்டியாய்ப் போதிக்கவேண்டுமென்று விரும்புகிறேன். இவைகளே நன்மையானவைகளாயும், மனிதருக்குப்பிரயோசனமானவைகளாயுமிருக்கின்றன.

௯. * புத்தியீனமான தருக்கங்களும், வம்சவரிசைகளை ஆராய்தலும், வாக்குவாதங்களும், நியாயப்பிரமாணத்தைக்குறித்துண்டாகிற சண்டைகளும், அப்பிரயோசனமும், அபத்தமுமுள்ளவைகள். ஆகையால் அவை

களுக்கிடங்கொடாதிருப்பாயாக. * ௧ தீமோ. ௧: ௩. ௪: ௭. ௨ தீமோ. ௨; ௨௩.

௰. * சத்தியத்தைப்புரட்டுகிறவனாயிருக்கிற ஒருவனுக்கு நீ இரண்டொருதரம் புத்தி சொன்னபின்பு, (அவன் செவிகொடாவிட்டால்) அவனை விட்டு விலகுவாயாக. * மத். ௰௮: ௰௭. உரோ. ௰௬: ௰௭, ௰௮. ௨ தெச. ௩: ௬—௰௪. ௨ யோவா. ௰. வச.

௰௧. அப்படிப்பட்டவன் தாறுமாறுபட்டு, தன்னிலே ஆக்கினைத்தீர்ப்புள்ளவனாய்ப்பாவஞ்செய்கிறவனென்று அறிந்துகொள்வாயாக.

௰௨. நான் அர்த்தேமாவை அல்லது * தீகிக்குவை உன்னிடத்தில் அனுப்பும்பொழுது, நீ சாக்கிரதையாய் நிக்கோப்போலிபூருக்கு என்னிடத்தில் வருவாயாக. மாரிக்காலத்திலே அங்கே தங்க யோசனையாயிருக்கிறேன். * அப். ௨௰: ௪. எபே. ௬: ௨௧

௰௩. நியாய சாஸ்திரியாகிய சேனாவும், * அப்பொல்லோவும் பிரயாணமாய் வரும்பொழுது, அவர்களுக்குக்குறைச்சலொன்றுமிராதபடிக்கு விசாரித்துச்சாக்கிரதையாய் அவர்களை யனுப்பி விடுவாயாக. * அப். ௰௮: ௨௪.

௰௪. (கிரேத்தைத்தீவிலே) நம்மைச்சேர்ந்தவர்களுங் கனியற்றவர்களாயிராமற் குறைச்சல்களை நீக்குதற்கேற்ற நல்ல தொழில்களை நடத்திக்கொள்ளப்படிக்கக்கடவர்கள்.

௰௫. என்னோடிருக்கிற யாவரும் உனக்கு வாழ்த்துதல் செய்கிறார்கள். விசுவாசத்தைப்பற்றிக்கொண்டு நம்மைச்சிநேகிக்கிறவர்களுக்கு நான் வாழ்த்துதல்செய்கிறேன். கிருபை உங்களனைவரோடுங்கூட இருக்கக்கடவது—ஆமென்.

அப்போஸ்தலனாகிய பவுல்

பிலேமோனுக்கு எழுதின நிருபம்.

PHILEMON.

---

௧ அதிகாரம்.

[(௧) பிலேமோனுடைய விசுவாசத்தையும், அன்பையுங் குறித்துச்சந்தோஷப்பட்டு, (௯) அவன் தன் ஊழியக்காரனாகிய ஒநேசிமுவை மன்னித்து அன்பாய் ஏற்றுக்கொள்ளும்படி அவனை வேண்டிக்கொண்டது.]

கிறிஸ்து இயேசுவினிமித்தங் கட்டப்பட்டிருக்கிறவனாகிய பவுலும், சகோதரனாகிய தீமோத்தேயுவும் எங்களுக்குப்பிரியனுமாய், உடன்வேலையாளுமாயிருக்கிற பிலேமோனுக்கும், எங்களுக்குப்பிரியமான அப்பியாளுக்கும்,

௨. எங்களுடனே கூடப்போர்ச்சேவகனாகிய * அர்க்கிப்புக்கும், † உமது வீட்டிலே கூடிவருகிற சபைக்கும் எழுதுகிறதாவது; * கொலோ. ௪: ௰௭. † உரோ. ௰௬: ௫.

௩. நம்முடைய பிதாவாகிய பராபரனாலும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலும், உங்களுக்குக்கிருபையும் சமாதானமுமுண்டாகக்கடவது.

௪. கர்த்தராகிய இயேசுவின்மேலும், எல்லாப்பரிசுத்தவான்கள்மேலுமுள்ள உம்முடைய அன்பையும், உமது விசுவாசத்தையும் நான் கேள்விப்பட்டு,

௫. என் செபங்களில் உம்மை நினைத்துக்கொண்டு எப்பொழுதும் என் பராபரனுக்குத் தோத்திரஞ்செய்து,

௬. உங்களிலுள்ள சகலவித நன்மைகளையும், (மற்றவர்களும்) அறிந்துகொள்ளுகிறதினாலே உமது விசுவாசத்திற்குரிய தருமகுணங் கிறிஸ்து இயேசுவுக்காகப் * பலனைக்காண்பிக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். * தீத்து ௩: ௰௪.

௭. சகோதரனே! பரிசுத்தவான்களுடைய இருதயங்கள் உம்மாலே சவுக்கியப்பட்டதால், உம்முடைய அன்பினாலே மிகுந்த சந்தோஷமும், ஆறுதலும் அடைந்திருக்கிறோம்.

௮. ஆகையால் விருத்தாப்பியமுள்ளவனுமாய், இயேசுக்கிறிஸ்துவினிமித்தம் இப்பொழுது கட்டப்பட்டவனுமாயிருக்கிற பவுலாகிய நான்,

௯. தகுதியான காரியத்தைக்குறித்து உமக்குக்கட்டளையிடும்படிக்குக்கிறிஸ்துவினாலே மிகுந்த தயிரியமுள்ளவனாயிருந்தும், (அப்படிச்செய்யாமல்) அன்பினாலே உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்.

௰. என்னவென்றால், நான் கட்டப்பட்டிருக்கையிற் பெற்றவனையும்,

௰௧. முன்னே யுமக்குப்பிரயோசனம் இல்
லாதவனும், இப்பொழுது உமக்கும், என
க்கும் * நல்ல பிரயோசனம் உள்ளவனுயி
ருக்கிற என் மகனுகிய ஒனேசிமுக்காகவே
உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். அவனை
த்திரும்பஅனுப்பினேன். *கொலோ. ௪: ௯.
௰௨. அவனை நீர் என் உள்ளம்போல ஏற்
றுக்கொள்வீராக.
௰௩. சுவிசேஷத்தினிமித்தங் கட்டப்பட்டி
ருக்கிற எனக்கு ஊழியஞ்செய்யும்படிக்கு,
உமக்குப்பதிலாக அவனை என்னிடத்தில்
வைத்துக்கொள்ள வேண்டுமென்றிருந்தேன்.
௰௪. ஆனுலும் உம்முடைய நன்மை கட்
டாயத்தினுலல்ல, மனப்பூர்வத்தாவிருக்கத்
தக்கதாக நான் உமது சம்மதியில்லாமல்
ஒன்றுஞ்செய்ய மனதில்லை.
௰௫. இனிமேல் அவன் உமக்கு அடிமையா
னவனுகவல்ல, அடிமையானவனுக்கு மே
லாகப்பிரியமான சகோதரனுகவும், என்
றென்றைக்கும் உம்முடையவனுகவும் இருக்
கும்படிக்கு,
௰௬. அவன் கொஞ்சக்காலமாய் உம்மை
விட்டுப்பிரிக்கப்பட்டானென்று தோன்று
கின்றது. எனக்கும், அவன் பிரியமான ச
கோதரன்தான். உமக்குச்சரீரத்தின்படி
யேயும், கர்த்தர் நிமித்தமும் மிகவும் அதி
கமாய் அப்படியிருக்கிறுனல்லவா!
௰௭. ஆதலால் நீரென்னை உமக்கு ஐக்க
மானவனென்று எண்ணினுல், அவனை என்
னைப்போல ஏற்றுக்கொள்ளவேண்டும்.
௰௮. அவன் உமக்கு யாதொரு அநியா
யஞ்செய்ததும், அல்லது கடன்பட்டது
முண்டானுல், அதை யென் கணக்கிலே
யெழுதுவீராக.
௰௯. பவுலாகிய நான் என் கையெழுத்
துப்போட்டேன். நானே செலுத்தித்தீர்ப்
பேன். நீர் உம்மைத்தாமே எனக்குக்கட
னுகச்செலுத்தவேண்டுமென்று நான் உமக்
குச்சொல்லாதபடிக்கு அப்படிச்செய்கி
றேன்.
௨௰. ஆ, என் சகோதரனே! கர்த்தர் நிமி
த்தம் உம்மாலே இந்தப்பிரயோசனம் எனக்
குண்டாகக்கடவது. கர்த்தர் நிமித்தம்
என் இருதயத்தை ஆறுதல் செய்வீராக.
௨௰௧. நீர் கீழ்ப்படிவீரென்று நான் நிச்
சயமாய் அறிந்து, இப்படி யுமக்கு எழுதி
னேன். நான் கேட்டதற்கு மேலாகவுஞ்
செய்வீரென்றும் அறிந்திருக்கிறேன்.
௨௰௨. அல்லாமலும், * உங்கள் விண்ணப்
பங்களினுலே உங்களுக்குத் (திரும்பக்)
கொடுக்கப்படுவேனென்று நான் † நம்பி
யிருக்கிறபடியால், நான் இருக்கும்படிக்கு
ஓரிடத்தை யெனக்காக எத்தனம்பண்ணு
வீராக. * ௨ கொரி. ௧: ௰௧. † பிலி. ௧:
௨௫, ௨௬.
௨௰௩. கிறிஸ்து இயேசுவினிமித்தம் என்
னேடே கூடக்காவலில் வைக்கப்பட்டிருக்
கிற * எப்பாப்பிருவும், * கொலோ. ௪:
௰௨.
௨௰௪. என்னுடன் வேலையாள்களாகிய *
மாற்குவும், அரிஸ்தருக்குவும், † தேமாவும்,
லூக்காவும் உமக்கு வாழ்த்துதல் செய்கி
றுர்கள். கொலோ. ௪: ௰. † கொலோ.
௪: ௰௪.
௨௰௫. நம்முடைய் கர்த்தராகிய இயேசுக்
கிறிஸ்துவின் கிருபை யுங்கள் ஆவியுடனே
யிருக்கக்கடவது.—ஆமென்.

அப்போஸ்தலனுகிய பவுல்

எபிரேயருக்கு எழுதின நிருபம்.

HEBREWS.

---

௧ அதிகாரம்.

[(௧) இக்கடைசிநாள்களிற் பிதாவிலிருந்து
நம்மிடத்திற்கு வந்த கிறிஸ்து, (௪) தன்
மையிலும், செய்கையிலுந் தேவதூதர்க
ளைப்பார்க்கிலுஞ் சிறந்தவரென்று சொல்
லியது.]

பூர்வீகத்திலே பலகாலங்களிலும் பல
விதமாய், பராபரன் (நம்முடைய)
முன்னேர்களுடனே தீர்க்கதரிசிகளின் மூல
மாய்த்திருவுளம் பற்றினதுமன்றி,
௨. இந்தக்கடைசிக்காலத்திலே குமாரன்
மூலமாய் நம்முடனே திருவுளம்பற்றினுர்.
* அவரைச்சகலத்திற்குஞ் சுதந்தரவாளி
யாகவைத்தார். † அவராலே உலகங்களையு
முண்டாக்கினுர். * மத்தே. ௨௮: ௰௮.
† யோவா. ௧: ௩.
௩. அவர் * பராபரனுடைய மகிமையின்

பிரகாசமாயும், † அவருடைய தன்மையின் சொரூபமாயும், எல்லாவற்றையுந் தமது வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராயுமிருந்து, பின்பு தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்து, ‡ உன்னதத்திலுள்ள மகத்துவருடைய வலதுபாரிசத்திலே வீற்றிருக்கிறார். * யோவா. ௧: ௰௪. † கொலோ. ௧: ௰௫. ‡ மாற். ௰௬: ௰௯.

௪. இப்படி அவர் தேவதூதரிலும் * அதிக விசேஷமாகச் சுதந்தரித்துக்கொண்ட நாமமெவ்வளவோ அவ்வளவு அதிகமாய் அவர்களிலும், மேன்மையுள்ளவராயிருக்கிறார். * பிலிப். ௨: ௰, ௰௧.

௫. எப்படியெனில், * நீர் என்னுடைய குமாரனென்றும், இன்று நான் உம்மைச் செனிப்பித்தேனென்றும், † அவருக்குப் பிதாவாயிருப்பேன். அவர் எனக்குக்குமாரனாயிருப்பாரென்றும், பராபரன் ஒருகாலத்திலாகிலுந் தூதர்களில் ஒருவனுக்குச் சொன்னாரா! * சங். ௨: ௭. † ௨ சாமு. ௭: ௰௪.

௬. மறுபடியுந் தமது * முதற்பேறானவரை இவ்வுலகத்திற் பிரவேசிக்கச்செய்தபொழுது, † தேவதூதர்யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்களென்றார். * கொலோ. ௧: ௰௮. † சங். ௯௭: ௭.

௭. அன்றியுந் தேவதூதரைக்குறித்துச் சொல்லியிருக்கிறதாவது; * தம்முடைய தூதர்களைக்காற்றுக்களாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினிச்சுவாலைகளாகவுஞ் செய்தாரென்று சொல்லியிருக்கிறது. * சங். ௱௪: ௪.

௮. குமாரனைக்குறித்து எப்படிச்சொல்லியிருக்கிறதென்றால், * பராபரனே! உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளதாயிருக்கும், உம்முடைய இராச்சியத்திலுள்ள செங்கோல் செம்மையான செங்கோலாயிருக்கிறது. * சங். ௪௫: ௬.

௯. நீதியில் அன்புகூர்ந்து அக்கிரமத்தைப்பகைத்திருக்கிறீர். ஆதலாற் பராபரனே! உம்முடைய பராபரன் உம்முடைய தோழரிலும் உம்மை மகிழ்ச்சியென்னும் எண்ணெயினாலே அபிஷேகம்பண்ணினாரென்றும்,

௰. * கர்த்தாவே! ஆதியிலே நீர் பூமியை அஸ்திபாரப்படுத்தினீர். வானங்கள் உம்முடைய கைகளின் கிரியைகளாயிருக்கின்றன. * சங்கீ. ௱௨: ௨௫.

௰௧. அவைகள் அழிந்துபோம். நீர்மாத்திரம் நிலைநிற்பீர். அவைகளெல்லாம் வஸ்திரம்போலப்பழமையாய்ப்போம்.

௰௨. ஒருசால்வையைப்போல அவைகளைச் சுருட்டுவீர். அப்பொழுது மாறிப்போம்; நீர்மாத்திரம் (எப்பொழுதும்) ஒரேவிதமாயிருப்பீர். உம்முடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லையென்றுஞ் சொல்லியிருக்கின்றது.

௰௩. மேலும் * நான் உம்முடைய சத்துருக்களை உம்முடைய பாதப்படியாக்கிப்போடுமளவும், என் வலதுபாரிசத்தில் உனக்காருமென்று இப்படி அவர் ஒருகாலத்திலாகிலுந் தூதர்களில் ஒருவனுக்குச் சொன்னாரா? * சங்கீ. ௱௰: ௧.

௰௪. * இரட்சிப்பைச்சுதந்தரிப்பவர்களுக்கு, † ஊழியஞ் செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படுகிற பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா? * உரோ. ௮: ௰௭. † சங். ௩௪: ௭—௯௧. ௰௧: ௰௨.

௨ அதிகாரம்.

[(௧) நாம் கிறிஸ்து இயேசுவுக்குக்கீழ்ப்படியவேண்டுமென்றும், (௫) அதற்கு அவர் நம்முடைய சுபாவத்தை [(௰௪) வேண்டியபடி] ஏற்றுக்கொண்டாரென்றுங் காட்டியது.]

ஆகையால், நாம் கேட்டவிந்தவைகளைவிட்டு விலகாதபடிக்கு அதிக எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

௨ என்னத்தினாலெனில், * தேவதூதராற் சொல்லப்பட்டவசனத்திற்கு விரோதமான எந்தச்செய்கைக்கும், கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனைவரத்தக்கதாக, அவர்களுடைய வசனம் உறுதிப்பட்டிருந்ததாயிருக்க, * அப். ௭: ௫௩. கலா. ௩: ௰௯.

௩. முதலாவது, * கர்த்தராலே யறிவிக்கப்பட்டுப்பின்பு அவரிடத்திற் கேட்டவர்களால் நமக்கு உறுதியாக்கப்பட்டதுமாய், * ௰௨: ௨௫.

௪. அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், உலவிதமான பலத்த செய்கையினாலும், பரிசுத்த ஆவியைத்தம்முடைய சித்தத்தின்படி (நமக்குப்)பகிர்ந்துகொடுத்ததினாலும், பராபரன் சாட்சிகொடுக்கப்பட்டதுமாயிருக்கிற இவ்வளவுபெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையில்லாமற் போனால் (தண்டனைக்கு) * எப்படித்தப்பிப்போவோம்! * ௰: ௨௮, ௨௯.

௫. அன்றியும், இனிமேல்வரும் உலகத்தைக்குறித்துப்பேசுகிறோமே. அதையவர் தூதர்களுக்குக்கீழ்ப்படுத்தவில்லை. ஒரு இடத்திலே ஒருவன் சாட்சியாகச்சொன்னது,

௬. * மனிதனை நீர் நினைத்துக்கொள்ளுகிறதற்கும், அல்லது மனிதனுடைய புத்திரனை நீர் விசாரித்துக்கொள்ளுகிறதற்கும் அவன் எம்மாத்திரம். * சங். ௮: ௪.

௭. கொஞ்சக்காலமாய் அவனைத்தேவதூதரிலுஞ் சிறியவனாக்கினீர். பின்பு மகிமையோடும், கனத்தோடும் அவனுக்கு முடிசூட்டி, உம்முடைய கைகளின் கிரியைக

னுக்கு அதிகாரியாகவைத்துச்சகலத்தை
யும் அவனுடைய பாதங்களுக்குக்கீழ்ப்ப
டுத்தினீரென்றான்.
௮. இந்தப்படியவர் சகலத்தையும் அவ
னுக்குக்கீழ்ப்படுத்துகையில் அவனுக்குக்
கீழ்ப்பட்டிராதபடிக்குத்தாம் ஒரு பொரு
ளையும் வைத்துக்கொள்ளவில்லை. இப்பொ
ழுது சகலமும் அவனுக்குக்கீழ்ப்படக்கா
ணோம்.
௯. இயேசுவானவர் மாத்திரம் பராபரனு
டைய கிருபையினாலே * யாவருக்காகவும்
மரணத்தை யநுபவிக்கும் பொருட்டாகக்
கொஞ்சக்காலமாய்த்தேவதூதரிலுஞ் சிறி
யவராக்கப்பட்டுப்பின்பு மரணத்தைச்சகி
த்ததினாலே † மகிமையோடும், கனத்தோ
டும் முடிசூட்டப்படக்காண்கிறோம். * ௧
யோவா. ௨: ௨. † மத். ௨௮: ௰௮.
௰. மேலும் * நமக்காகச்சகலத்தையும் உ
ண்டாக்கினவர் அநேகம் பிள்ளைகளை மகி
மையிற் கொண்டுபோகையில் அவர்களுக்
கு இரட்சணியத்தை யுண்டாக்கின அதி
பதியை உபத்திரவங்களின்வழியாய்த்தேறி
னவராக்குகிறது அவருக்குத்தகுதியாயிருந்
தது. * லூக். ௨௪: ௨௬.
௰௧. எப்படியெனிற் பரிசுத்தஞ் செய்கிற
வரும், பரிசுத்தஞ் செய்யப்படுகிறவர்களு
மாகிய யாவரும் ஒருவரிலிருந்து வருகிறார்
கள். அதினாலேதானே அவர்களைச் * சகோ
தரர் என்றழைக்கவெட்கப்படாமல், *
யோவா. ௨௰: ௰௭.
௰௨. * உம்முடைய நாமத்தை யென்
சகோதரருக்கறிவித்து, சபையாருக்குள்
ளே உமக்குத்துதியாகப்பாடுவேனென்றும்,
† நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்
பேனென்றும், * சங். ௨௨: ௨௨ † ஏசா.
௮: ௰௭.
௰௩. இதோ, நானும் பராபரன் எனக்குக்
கொடுத்தபிள்ளைகளுமென்றுஞ் சொல்லியிரு
க்கிறார்.
௰௪. ஆனதாற் பிள்ளைகள் மாம்ச இரத்த
தேகமுள்ளவர்களாயிருக்க அவரும் * மர
ணத்தைவருவிக்க வல்லமையுடையவனாகிய
பசாசானவனைத் (தமது) மரணத்தினாலே
அழிக்கும்படிக்கும், * ௧ மோ. ௩: ௰௫.
௰௫. ஜீவகாலமளவும் மரணத்திற்குப்பயந்
து அடிமையாயிருந்த யாவரையும் விடுதலை
பண்ணும்படிக்கும் அவர்களைப்போல மாம்
ச இரத்ததேகமுள்ளவரானார்.
௰௬. ஆதலால் அவர் தேவதூதரின் சுபா
வத்தை யெடுத்துக்கொள்ளாமல், ஆபிரகா
மின் சந்ததியிலே (மனித சுபாவத்தை)
எடுத்திருக்கிறார்.
௰௭. அன்றியும் அவர் (தம்முடைய) சனங்
களின் பாவங்களை நிவிர்த்திசெய்வதற்கேது
வாக இரக்கமுள்ளவராயும், பராபரனுக்கு
ரியவைகளைக்குறித்து உண்மையான பிரதா
ன ஆசாரியராயுமிருக்கும்படிக்கு, எவ்வி
தத்திலும் (தம்முடைய) * சகோதரருக்
கொப்பாக வேண்டியதாயிருந்தது. * பிலி.
௨: ௭, ௮.
௰௮. ஆனதால் அவர்தாமே * சோதிக்கப்
பட்டுப்பாடு அநுபவித்ததினாலே சோதிக்
கப்படுகிறவர்களுக்குச்சகாயஞ் செய்யத்தி
ராணியுள்ளவராயிருக்கிறார். * ௪: ௰௫, ௰௬.

௩ அதிகாரம்.

[(௧) மோசேயிலுங் கிறிஸ்து அதிகமகிமை
யுள்ளவராகையால், (௭) அவரைநாம் விசு
வாசியாவிடில், கடின நெஞ்சுள்ள இஸ்ரவே
லரைப்பார்க்கிலும், அதிக ஆக்கினைக்குப்
பங்குள்ளவர்களாயிருப்போமென்று சொல்
லியது.]

இப்படியிருக்கப்பரம அழைப்பை அ
டைந்தவர்களாகிய பரிசுத்த சகோ
தரரே! நாம் அறிக்கைபண்ணுகிற * அப்
போஸ்தலருமாய், பிரதான ஆசாரியருமா
யிருக்கிற கிறிஸ்து. இயேசுவை உற்றுப்பா
ருங்கள். * யோவா. ௨௰: ௨௧.
௨. * மோசேயென்பவன் தேவ ஆலய
மெங்கும் உண்மையாயிருந்ததுபோல, அவ
ருந் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மை
யுள்ளவராயிருந்தார். * ௪ மோ. ௰௨: ௭.
௩. எந்த ஆலயமும் மனிதனாலே உண்டாக்
கப்பட்டிருக்கின்றது. பராபரன் சகலத்
தையும் உண்டாக்கினவர்.
௪. ஆகையால், ஆலயத்திலும் ஆலயத்தை
யுண்டாக்கினவருக்கு உண்டாயிருக்கிற கன
மெவ்வளவோ அவ்வளவாய் மோசேயிலும்
இயேசுவானவர் அதிக மகிமைக்குப்பாத்திர
ரா்யிருக்கிறார்.
௫. அந்தப்படி சொல்லவேண்டியிருந்தவை
களுக்குச்சாட்சியாக மோசே ஊழியக்கா
ரனாய், அவருடைய ஆலயமெங்கும் உண
மையுள்ளவனாயிருந்தான்.
௬. ஆகிலுங் கிறிஸ்துவானவர் அவருடைய
ஆலயத்திற்குமேலான குமாரனாய் (உண்
மையாய்) இருக்கிறார். (நித்தியசீவன்மே
லுள்ள) நம்பிக்கைக்கேற்ற தயிரியத்தை
யும், மேன்மைபாராட்டலையும் முடிவுபரி
யந்தம் உறுதியாய்ப்பற்றிக்கொண்டால்,
* நாமே அவருடைய ஆலயமாயிருப்போம்.
* ௧ தீமோ. ௩: ௧௫.
௭. ஆகையாற்பரிசுத்த ஆவியானவர் சொ
ல்லுகிறபடியே, * இன்று நீங்கள் அவரு
டைய சத்தத்தைக்கேட்கையில் உணர்ந்தரத்
திலே, * சங்கீ. ௯௫: ௭.
௮. * உங்கள் முன்னோர்கள் என்னைச்சோ
தித்து, எனக்குக்கோபமூட்டின நாளிலே
நடந்ததுபோல, * ௨ மோ. ௰௭: ௨—௭.
௪ மோ. ௰௪: ௧—௰.

௮. உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள். அவர்கள் நாற்பதுவருஷமாய் என்னுடைய கிரியைகளைக் கண்டிருந்தும் என்னைச்சோதித்து என்னை நிதானித்தார்கள்.

௰. ஆனதால் நான் அந்தச்சந்ததியை அரோசித்து, அவர்கள் எப்பொழுதும் வழிதப்பிநடக்கிற மனதுள்ளவர்களாய் என்னுடைய நெறிகளை அறியாதிருக்கிறார்களென்றுசொல்லி,

௰௧. * இளைப்பாறுதற்கான என்னுடைய இடத்தில் அவர்கள் பிரவேசியாமலிருக்கக்கடவர்களென்று எனது கோபத்தினால் ஆணையிட்டேனென்றார். * ௪ மோ. ௰௪: ௨௧—௨௩.

௰௨. அந்தப்படி சகோதரரே! ஜீவனையுடைய பராபரனைவிட்டு விலகுதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனிடத்திலும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருந்து,

௰௩. உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப்போகாதபடிக்கு, இன்றென்னப்படுமளவும் ஒருவருக்கொருவர் நாடோறும் புத்திசொல்லிவருவீர்களாக.

௰௪. நாம் நம்பிக்கையை அடைந்ததுமுதல், * முடிவுபரியந்தம் அதை உறுதியாய்ப்பற்றிக்கொண்டால், நாம் கிறிஸ்துவினிடத்திற் பங்குள்ளவர்களாயிருப்போமே. * அறி. ௨: ௰

௰௫. இன்றைக்கு நீங்கள் அவருடைய சத்தத்தைக்கேட்கையிற் கோபம்மூட்டுதலுள்ள நாளிலே நடந்ததுபோல உங்களிருதயங்களைக்கடினப்படுத்தாதிருங்களென்று சொல்லியிருக்கிறபடியால், அப்படியே பற்றிக்கொள்ளவேண்டும்.

௰௬. அதெப்படியெனிற் கேட்டவர்களிற் சிலர் கோபமூட்டினார்கள். அப்படிச்செய்தவர்கள் மோசேயினாலே எகிப்திலிருந்து புறப்பட்ட யாவருமல்ல. மேலும், அவர் நாற்பதுவருஷமாய் எவர்களை அரோசித்தார்?

௰௭. பாவஞ்செய்தவர்களையல்லவா? * அவர்களுடைய சரீரங்கள் வனாந்தரத்திலே விழுந்துபோயின. * ௪ மோ. ௨௬: ௬௪, ௬௫.

௰௮. பின்னும் இளைப்பாறுதற்கான என்னுடைய இடத்திலே பிரவேசியாதிருக்கக்கடவர்களென்று அவர் ஆரைக்குறித்து ஆணையிட்டார்? விசுவாசியாதவர்களைக்குறித்தல்லவா?

௰௯. ஆனதால், அவிசுவாசத்தினாலே அவர்கள் அதிற்பிரவேசிக்கக்கூடாமற்போனார்களென்று பார்க்கிறோமே.

௪ அதிகாரம்.

[(௧) விசுவாசத்தினாற் கிறிஸ்தவர்களுக்கு இளைப்பாறுதலுண்டென்றும், (௰௨) பராபரனுடைய வசனம் வல்லமையுள்ளதென்றும், (௰௪) பாவமில்லாமற் பலவீனங்களுக்குரிய தேவகுமாரனும், பிரதான ஆசாரியருமாகிய இயேசுவினால், (௰௬) நாம் கிருபாசனத்தண்டைக்குத்தயிரியத்தோடே போகக்கூடுமென்றுஞ் சொல்லியது.]

ஆனபடியினாலே இளைப்பாறுதற்கான அவருடைய இடத்திலே பிரவேசிக்கும்படிக்கேற்ற வாக்குத்தத்தம் பின்னும் நமக்குண்டாயிருக்க, நம்மிலொருவனாகிலும் (அதை யடையாதபடி) தாமதமாயிருக்கிறவனாகத்தோன்றாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்.

௨. எப்படியெனிற் சுவிசேஷம் அவர்களுக்கறிவிக்கப்பட்டதுபோல, நமக்கும் அறிவிக்கப்பட்டது. அந்த வசனத்தைக்கேட்டும் அவர்களுக்குள்ளே விசுவாசமில்லாதபடியால், அந்தக்கேள்வி அவர்களுக்குப்பிரயோசனமாயிருக்கவில்லை.

௩. விசுவாசிகளாகிய நாம் இளைப்பாறுதற்கான இடத்திற் பிரவேசிப்போம். அதற்குத்திருஷ்டாந்தமாக உலகஞ் சிருஷ்டிக்கப்பட்டபொழுது தம்முடைய கிரியைகளைச்செய்துமுடித்து இளைப்பாறினபின்பு அவர் சொன்னது; * இளைப்பாறுதற்கான என்னுடைய இடத்திலே அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று நான் ஆணையிட்டேனென்று சொன்னார். * சங்கீ. ௯௫: ௰௧.

௪. அதற்குத்திருஷ்டாந்தமாக ஓரிடத்திலே ஏழாம்நாளைக்குறித்துச்சொல்லியிருக்கிறதென்னவெனிற் * பராபரன் ஏழாம்நாளிலே தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்து, ஆசோதையாய் இருந்தாரென்று சொல்லியிருக்கிறது. * ௧ மோ. ௨; ௨.

௫. மறுபடியும் மேற்சொல்லிய இடத்திலே அவர்கள் இளைப்பாறுதற்கான என்னுடைய இடத்திற் பிரவேசியாமலிருக்கக்கடவர்களென்றுஞ் சொல்லியிருக்கிறார். * ௪ மோ. ௰௪: ௨௩.

௬. ஆகையாற் பின்னுஞ்சிலர் அதிற்பிரவேசிக்கிறதற்கேதுவுண்டாயிருந்தபடியினாலும் முதலாவது, சுவிசேஷத்தைக்கேட்டவர்களும் அவிசுவாசத்தினாலே அதிற் பிரவேசியாமற்போனபடியினாலும்,

௭. * இன்று அவருடைய சத்தத்தைக் கேட்கையில், உங்கள் இருதயங்களைக்கடினப்படுத்தாதிருங்களென்று அநேககாலத்திற்குப்பின்பு தாவீதின் புஸ்தகத்திலே சொல்லியிருக்கிறபடி, இன்றைக்கென்பதினாலே (பராபரன்) பின்னும் ஒரு நாளைக்குறித்திருக்கிறார். * சங்கீ. ௯௫: ௭, ௮.

அ. யோசுவாவென்பவன் அவர்களை இளை
ப்பாறச்செய்தானானுற் பின்பு அவர் வேறொ
ரு நாளைக்குறித்துப்பேசமாட்டாரே.
கூ. ஆனபடியால், இளைப்பாறும்படிக்கான
காலம் பின்னும் பராபரனுடைய சனங்க
ளுக்கு வருகிறதாயிருக்கின்றது.
ய. அந்தப்படி பராபரன் * தம்முடைய
கிரியைகளை முடித்து ஓய்ந்திருந்ததுபோல,
இளைப்பாறுதற்கான அவருடைய இடத்திற்
பிரவேசித்தவனுந் தன் கிரியைகளை முடித்
தோய்ந்திருப்பான். * ஆதி. ௨: ௨.
யக. ஆகையால், அந்தத்திருஷ்டாந்தத்
தின்படி ஒருவனாகிலும் அவிசுவாசத்தினா
லே விழாதபடிக்கு, நாம் மேற்சொல்லிய
இளைப்பாறுதற்கான இடத்திற் பிரவேசிக்
கச்சாக்கிரதையாயிருக்கக்கடவோம்.
யஉ. * பராபரனுடைய வார்த்தை உயிர்
ப்பிக்கிறதுமாய், பலமுள்ளதுமாய், இருபுற
முங் கருக்குள்ள எந்தக்கத்தியிலுங் கருக்
கானதுமாய், ஆத்துமாவையும், ஆவியை
யும், (சரீர) மொழிகளையும், ஊனையும் பி
ரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதுமாய்,
இருதயத்தின் சிந்தனைகளையும், யோசனைக
ளையும் வகையறுத்துத்தீர்க்கிறதுமாயிருக்கி
றதே. அவருக்குமுன்பாகத்தோன்றுதிருக்
கிற சிருஷ்டி யொன்றுமில்லை. * எரே.
உரு: உகூ.
யந. * சகலமும் அவருடைய கண்களுக்கு
முன்பாக திருவாணமாயும், வெளியரங்கமா
யும் இருக்கின்றன. அவருக்கே நாம் க
ணக்கு ஒப்புவிக்கவேண்டும். * சங். ௱௩௯:
யக, யஉ.
யச. ஆகையால், * வானங்களின்வழியாய்
ப் (பரமண்டலத்திற்குப்) போன தேவகு
மாரனாகிய இயேசுவென்னும் மகா பிரதான
ஆசாரியர் நமக்கிருக்கிறபடியினாலே, (அவ
ரை) அறிக்கையிடுகிறதில் உறுதியாயிருக்
கக்கடவோம். * அ: க, உ.
யரு. * அவர் நம்முடைய பலவீனங்களைக்
குறித்து நமக்கிரங்கத்திராணியில்லாத பிர
தான ஆசாரியரல்லவே. பாவத்தைத்தவிர
மற்றெந்தவிதத்தினாலும் நம்மைப்போலச்
சோதிக்கப்பட்டாரே. * உ: யஎ, யஅ.
பிலிப். உ: எ, அ.
யசு. ஆதலால், * நாம் இரக்கத்தைப்பெ
ற்றுக்கொள்ளும்படிக்கும், காலத்திற்குத்த
குதியான உதவியாகிய கிருபையை யடை
ந்துகொள்ளும்படிக்குந் தயிரியமாய்க்கிரு
பாசனத்தினிடத்திலே சேரக்கடவோம்.
* ய: யகூ—உஉ.

ரு அதிகாரம்.

[(க) நம்முடைய இரட்சகரின் ஆசாரிய
பட்டத்துக்குரிய அதிகாரத்தையும், மேன்
மையையுஞ் சொல்லி, (யக) அந்த அறிவுக்
கு வந்தெட்டாதிருப்பதைக்குறித்துக்கடிந்
துகொண்டது.]

அன்றியும் மனிதரில் எடுக்கப்பட்ட
பிரதான ஆசாரியன் யாவனும் பா
வங்களுக்காகக்காணிக்கைகளையும், பலிகளை
யுஞ் செலுத்தி, இப்படி மனிதருக்காகத்
தேவகாரியங்களை நடப்பிக்கும்படிக்கு வை
க்கப்படுவான்.
உ. அல்லாமலும் அவன் தானும் பலவீன
முள்ளவனானபடியினாலே, அறியாதவர்களுக்
கும், வழுவிப்போனவர்களுக்கும் மன உருக்
கமாயிருக்கத்தக்கவனாய் இருப்பான்.
ந. அந்த முகாந்தரத்தினாலே அவன் சன
ங்களுடைய பாவங்களுக்காகப்பலியிடுகிற
துபோல, * தன்னுடைய பாவங்களுக்காக
வும் பலியிடவேண்டியதாய் இருக்கிறது.
* ந மோ. கூ: எ.
ச. மேலும் ஒருவனாயினும் அந்தக்கனமா
ன உத்தியோகத்தைத்தன்னாலே யேற்றுக்
கொள்ளாமல், * ஆரோன் அழைக்கப்பட்
டதுபோல, பராபரனாலே அதற்கு அழைக்
கப்படுவான். * உ மோ. உ: க—அ.
ரு. அந்தப்படி கிறிஸ்துவும், பிரதான ஆ
சாரியராகிறதற்குத்தம்மைத்தாமே உயர்த்
தவில்லை. * நீர் என்னுடைய குமாரன்,
இன்று நான் உம்மைச்செனிப்பித்தேனென்
று, அவரோடே (சொன்னவரே அவரை உ
யர்த்தினார்.) * சங். உ: எ. மத். ந: யஎ.
சு. அப்படி வேறொரு இடத்திலேயும்,
* நீர் மெல்கிசேதேக்கின் முறைமையாய்
என்றென்றைக்கும் ஆசாரியரானவரென்று
சொல்லியிருக்கிறது. * சங். ௱ய: ச.
எ. (அன்றியும்) அவர் மனிதனாகப்பூமியி
லே சஞ்சரிக்கையில் தம்மை மரணத்தினி
ன்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோ
க்கி, பலத்த சத்தத்தோடும், அழுகையோ
டும் * விண்ணப்பம்பண்ணி, மிகவும் வேண்
டிக்கொண்டு, தமக்குண்டான பயத்தினின்
று விடுதலையாக்கப்பட்டு, * லூக். உஉ:
சஉ—சச. மத். உஎ: ச—கூ.
அ. குமாரனாயிருந்தும், தாம் பட்டபாடுக
ளாலே கீழ்ப்படிதலைக்கற்றுக்கொண்டு,
கூ. * தாம் தேறினவரானபின்பு தமக்குக்
கீழ்ப்படிகிற யாவரும் நித்தியமான இரட்
சிப்பை யடைவதற்குக்காரணராகி, * உ: ய.
ய. (இப்படிப்) பராபரனால் மெல்கிசேதேக்
கின் முறைமையின்படியான பிரதான ஆசா
ரியரென்று வாழ்த்தப்பட்டார்.
யக. இந்தச்சங்கதியைக்குறித்து நான் வி
ஸ்தாரமாய்ப்பேசலாம். நீங்கள் தாமதமா
ய் அறிகிறவர்களானபடியால் அதை விவரி
த்துக்காண்பிக்கிறது அரிதாயிருக்கின்றது.
யஉ. காலத்தைப்பார்க்கிறபொழுது போ
தகராயிருக்கவேண்டிய உங்களுக்கு, பரா

பரனுடைய வாக்கியங்களின் முதல் நியாயங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கின்றது. * உணவையல்ல; பாலைச்சாப்பிடத்தக்கவர்களானீர்களே. * ௧ கொரி. ௩: ௧, ௨.

௰௩. பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதிக்குரிய வசனத்தையறிந்துகொள்ளத்திராணியுள்ளவனல்லவே.

௰௪. கெட்டியான உணவு நிறைவாய் வளர்ந்தவர்களாயும், நன்மையையும், தீமையையும் வகையறுக்கிறதற்கு முயற்சியினாலே தகுதியாக்கப்பட்ட புத்தியுள்ளவர்களாயுமிருக்கிறவர்களுக்கே ஏற்றதாயிருக்கின்றது.

௬ அதிகாரம்.

[(௧) விசுவாசத்தைவிட்டு மருளவிழாமல், (௰௧) உறுதியாயிருந்து; (௰௨) பராபரனைச்சாக்கிரதையோடும், பொறுமையோடும் நோக்கியிருக்கக்கற்பித்து, (௰௩) பராபரன் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவாரென்று சொல்லியது.]

ஆகையால் மரணத்திற்கேதுவான கிரியைகளைவிட்டு மனந்திரும்புகிறதற்கும், பராபரனை விசுவாசிக்கிறதற்கும்,

௨. ஸ்நானங்களுக்கடுத்த உபதேசத்திற்கும், கைகளை வைக்கிறதற்கும், மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்புதற்கும், நித்தியமான நியாயத்தீர்ப்புக்குமேதுவான உபதேசங்களினாலே நாம் மறுபடியும் அஸ்திபாரம் போடாதபடிக்கு, கிறிஸ்துவுக்குரிய முதல் நியாயங்களைச்சொல்லுகிற உபதேசத்தை நாம் இப்பொழுது நிறுத்தி, உயர்ந்த உபதேசங்களைக்குறித்து, பேசிக்கொள்வோமாக.

௩. * பராபரனுக்குச்சித்தமானால், அப்படியே செய்வோம். * அப்போ. ௰௮: ௨௧. ௧ கொரிந். ௪: ௰௯.

௪. என்னத்திற்காகவெனில், ஒருகாலத்திலே பிரகாசமாக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப்பெற்றும்,

௫. பராபரனுடைய நல்வார்த்தையையும், இனிமேல்வரும் யுகத்தின் பெலன்களையும் ருசிபார்த்துமிருக்கிறவர்கள் மறுதலித்து விழுந்தபின்பு,

௬. * பராபரனுடைய குமாரனைத்தங்களுக்குள்ளே மறுபடியுஞ் சிலுவையில் அறைந்து, அபகீர்த்தி செய்தபடியால் மனந்திரும்புகறதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதிதாக்கக்கூடாத காரியமாயிருக்கின்றது. * ௰: ௨௬—௨௯.

௭. இதற்குத்திருஷ்டாந்தமாக, பூமியானது தனக்கு அடிக்கடி வருகிற மழையையுட்கொண்டு தன்னிடத்திற் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும்பொழுது பராபரனால் ஆசீர்வதிக்கப்படுகின்றது.

௮. * முட்செடிகளையும், முட்பூண்டுகளையும், முளைப்பிக்கிற நிலந் தகாததாயும், சபிக்கப்படுகிறதற்குச் † சமீபமாயுமிருக்கின்றது. கடைசியிலே அது முழுவதுங் காய்ந்துபோம். * ஏசா. ௫: ௬. † மத். ௩: ௰.

௯. பிரியமானவர்களே! நாங்களிப்படிச் சொல்லியும், இரட்சிப்புக்கேற்ற நன்மையான யோசனைகள் உங்களுக்குண்டாயிருக்கின்றனவென்றுநம்பிக்கையாயிருக்கிறோம்.

௰. * பராபரனும் உங்கள் கிரியையையும், பரிசுத்தவான்களுக்கு நீங்கள் ஊழியஞ்செய்ததினாலும், செய்துவருகிறதினாலுந் தமது நாமத்திற்காகக்காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் † மறக்கத்தக்கதாக அநியாயமுள்ளவரல்லவே. * மத். ௰: ௪௨. † மல்கி. ௩: ௰௬.

௰௧. ஆகையால், நீங்கள் தாமதமாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும், நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாய் இருக்கும்படிக்கு,

௰௨. நீங்கள் யாவரும் (எங்கள்) நம்பிக்கை பரிபூரணமுள்ளதாகும்படி முடிவுபரியந்தஞ் சாக்கிரதையையே காண்பிக்கவேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம்.

௰௩. ஆபிரகாமுக்கு, பராபரன் வாக்குத்தத்தம்பண்ணினபொழுது, ஆணையிடும்படி தம்மிலும் பெரியவரொருவருமில்லாதபடியினாலே * தமது பேரிலே ஆணையிட்டு, * ௧ மோ. ௨௰: ௨௮. சங்கி. ௱௫: ௯.

௰௪. நான் உன்னை மிகவும் ஆசீர்வதித்து, உன்னை மிகவும் பெருகப்பண்ணுவேனென்றார்.

௰௫. அவனும் அந்தப்படியே பொறுமையாய்க்காத்திருந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப்பெற்றான்.

௰௬. அதெப்படியெனில், மனிதர்கள் தங்களிலும் பெரியவன்பேரில் ஆணையிடுவார்கள். உறுதிபண்ணும்படிக்கேற்ற ஆணையே அவர்களுக்குள்ளே * சகல வியாச்சியங்களையும் நிறைவேற்றும். * ௨ மோ. ௨௨: ௰௧.

௰௭. அந்தப்படி பராபரனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைச்சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களுக்கு, தமது யோசனையின் மாறாத நிச்சயத்தைக்காண்பிக்கும்படி அதிக சித்தமுள்ளவராய் ஓராணையினாலே அவைகளை ஸ்திரப்படுத்தினார்.

௰௮. பராபரன் பொய் பேசக்கூடாததாயிருக்க, நாம் நம்பிக்கொள்ளும்படி நமக்குமுன் வைக்கப்பட்டதைப்பிடிக்கிறதற்கு ஓடிவந்த நாம் மாறாத இரண்டு பொருள்களினாலே பலத்த ஆறுதலுள்ளவர்களாகும் பொருட்டாக அப்படிச்செய்தார்.

௰௯. அந்த நம்பிக்கை நம்முடைய ஆத்துமாவுக்கு நிலையும், உறுதியுமான நங்கூரம் போலாகி, திரைச்சீலைக்குட்போகிறதாய் இருக்கின்றது.

௨௰. நமக்குமுன் ஓடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி * நித்தியமான பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத்திரைச்சீலைக்குட் பிரவேசித்திருக்கிறார். * ௫: ௬, ௰.

௭ அதிகாரம்.

[(௧) கிறிஸ்து இயேசு மெல்கிசேதேக்கின் முறைமைப்படிக்கு ஆசாரியராயிருக்கிறபடியினாலே, (௰௧) ஆரோனின் முறைமைப்படிக்குண்டாயிருக்கிற ஆசாரியர்களைப்பார்க்கிலும் மேன்மையுள்ளவரென்று சொல்லியது.]

* அந்த மெல்கிசேதேக்கென்பவன் இராசாக்களை யடித்துத்திரும்பி வந்த ஆபிரகாமுக்கு எதிர்கொண்டு, அவனை ஆசீர்வதித்து அவனாலே பத்திலொருபாகத்தைப்பெற்றுக்கொண்டவன். * ௧ மோ. ௰௪: ௰௮—௨௰.

௨. அவன் சலேமின் இராசா உன்னதமான தேவனுக்குமுன்பாக ஆசாரியனாயிருந்தவன். முதற்பேராகிய மெல்கிசேதேக்கென்பதற்கு நீதியுள்ள இராசாவென்று அருத்தமாம். பின்பு சலேமின் இராசாவென்பதற்குச்சமாதானமுள்ள இராசாவென்றருத்தமாம்.

௩. அவன் தகப்பனும் தாயும், வம்ச அட்டவணையுமில்லாதவன். அவனுடைய (உத்தியோக) நாள்களின் ஆரம்பமும் சீவனின் முடிவுஞ் சொல்லப்பட்டிராததினாலே, அவன் பராபரனுடைய குமாரனுக்கு ஒப்பாக்கப்பட்டவனாய்த்தன் முழுச்சீவகாலமுளவும் ஆசாரியனாயிருக்கிறான்.

௪. அவனுடைய மேன்மையைப்பார்ப்பீர்களாக. கோத்திரத்தலைவனாகிய ஆபிரகாமுங் கொள்ளையிடப்பட்டவைகளிற் பத்திலொருபாகத்தை யவனுக்குக்கொடுத்தானே.

௫. * லேவியின் புத்திரரில் ஆசாரியபட்டத்தையடைகிறவர்களும், ஆபிரகாமின்சந்ததியாராகவே யிருக்கிற தங்கள் சகோதரராகிய சனங்களின்கையிலே நியாயப்பிரமாணத்தின்படி பத்திலொன்றை வாங்குகிறதற்குக்கட்டளை பெற்றிருக்கிறார்கள். * ௪ மோ. ௰௮: ௨௰—௨௮.

௬. அது மெய்தான். ஆகிலும், அவர்களுடைய வம்சத்திலிராதவனாகிய (மெல்கிசேதேக்கென்பவன்) பத்திலொன்றை ஆபிரகாமின் கையிலேவாங்கி * வாக்குத்தத்தங்களைப்பெற்றவனையே ஆசீர்வதித்தான். * ௧ மோ. ௰௨: ௨, ௩.

௭. சிறியவன் பெரியவனாலே ஆசீர்வதிக்கப்படுவான்.

௮. அதற்குச்சந்தேகமில்லையே. அன்றியும், இவ்விடத்திலே மரிக்கத்தக்க மனிதர் பத்திலொன்றை வாங்குவார்கள். அவ்விடத்திலே பிழைத்திருக்கிறாரென்று சாட்சிபெற்றவன் வாங்கினான்.

௯. அன்றியும் மெல்கிசேதேக்கென்பவன் ஆபிரகாமுக்கெதிர்க்கொண்டுபோனபொழுது, லேவியானவன் தன் தகப்பனுடைய அரையிலிருந்தபடியால்,

௰. பத்திலொன்றை வாங்குகிற லேவியும் ஆபிரகாமினாலே பத்திலொன்றைக்கொடுத்தானென்று சொல்லலாம்.

௰௧. அல்லாமலும், (இஸ்ரவேல்) சனங்கள் லேவிகோத்திர ஆசாரியமுறைமைக்குள்ளாயல்லவோ நியாயப்பிரமாணத்தைப் பெற்றார்கள்! அந்த லேவிகோத்திர ஆசாரியமுறைமையினாலே * நிறைவுள்ள ஆசீர்வாதம் மெய்யாய்வந்தால் ஆரோனுடைய முறைமையின்படியல்ல, † மெல்கிசேதேக்கினுடைய முறைமையின்படியே யழைக்கப்பட்ட வேறொரு ஆசாரியன் எழும்பவேண்டுவதென்ன? * கலா. ௨: ௨௧. † சங்கீ. ௱௰: ௪.

௰௨. ஆகையால், ஆசாரியமுறைமை மாற்றப்பட்டிருக்க, நியாயப்பிரமாணமும் மாற்றப்படவேண்டியதாயிருந்தது.

௰௩. இவைகளாற் சொல்லப்பட்டிருக்கிறவர் எவரோ! அவர் வேறொருகோத்திரத்தைச்சேர்ந்தவராயிருக்கிறாரே. அந்தக்கோத்திரத்தில் ஒருவனாயினும் பலிபீடத்திலே ஆராதனைசெய்யவுமில்லையே.

௰௪. நம்முடைய கர்த்தரானவர் * யூதாவின் கோத்திரத்திற் பிறந்தாரென்பதும் நிச்சயமாயிருக்கிறதே. அந்தக்கோத்திரத்தாருக்கு மோசேயென்பவன் ஆசாரியபட்டத்தைக்குறித்து ஒன்றுஞ் சொல்லவில்லையே. * ௧ மோ. ௪௯: ௰. ஏசா. ௰௧: ௧, ௨.

௰௫. அல்லாமலும், மெல்கிசேதேக்குக்கொப்பாய் வேறொரு ஆசாரியர் எழும்புகிறாரென்பதினாலே யது மிகவும் அதிகதெளிவாயிருக்கின்றது.

௰௬. அவர் சரீரத்துக்கேற்ற கட்டளையாகிய நியாயப்பிரமாணத்தின்படியல்ல.

௰௭. மெல்கிசேதேக்கின் முறைமையாய் * நீர் என்றென்றைக்குமுள்ள ஆசாரியராயிருப்பீரென்று சொன்னசாட்சிக்குத்தக்கதாக நீங்காத சீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார். * சங். ௱௰: ௪.

௰௮. ஆகையால், முன் கொடுக்கப்பட்ட கட்டளை பலவீனமாயும், அப்பிரயோசனமாயும் இருந்தபடியால் அது நீக்கப்பட்டது.

௰௯. * நியாயப்பிரமாணம் ஒன்றையும் நிறைவாக்கவில்லை. அதிக நன்மையான நம்பிக்கைக்கேதுவானது (பின்னாலே) உண்டாக்கப்பட்டு நிறைவாக்குகிறது. அதினாலே நாம் பராபரனிடத்திற்சேருகிறோம். * அப்போ. ௰௩: ௩௯.

௨௰. அன்றியும், முந்தினவர்கள் ஆணையில்லாமல் ஆசாரியரானார்கள். பிந்தினவர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி * நீர் என்றென்றைக்குமுள்ள ஆசாரியரென்று துக்கமில்லாமல் ஆணையிட்டு, தம்முடனேசொன்ன கர்த்தராலே ஆணையோடே அப்படியானார். * சங். ௱௰: ௪.

௨௧. ஆனதால் இயேசுவானவர் ஆணையின்படியே ஆசாரியராக்கப்பட்டு,

௨௨. (அவர்களுக்கதிகமாயிருக்க) அதிக நன்மையான உடம்படிக்கைக்கேற்ற பிணையாளியானார்.

௨௩. அன்றியும், அந்த ஆசாரியர் எப்பொழுதுமிருக்கக்கூடாதபடிக்கு மரிக்கிறவர்களானபடியால், அநேகராயிருந்தார்கள்.

௨௪. அவர் என்றென்றைக்குமிருக்கிறவரானதினாலே நீங்காத ஆசாரியபட்டமுள்ளவராயிருக்கிறார்.

௨௫ அன்றியும், தம்மாலே * பராபரனைச்சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு எப்பொழுதும் உயிரோடேயிருக்கிறவரானதால், அவர்களை முற்றும் இரட்சிக்கவல்லமையுள்ளவராயுமிருக்கிறார். * ௧ யோவா. ௧: ௨.

௨௬. பரிசுத்தராயும், தீமைசெய்யாதவராயும், அசுத்தமில்லாதவராயும், பாவிகளை விட்டுப்பிரிந்தவராயும், வானங்களுக்கு மேலுயர்ந்தவராயுமிருக்கிற இப்படிப்பட்ட பிரதான ஆசாரியரே நமக்குவேண்டும்.

௨௭. அவர் முந்தின ஆசாரியர்களைப்போல முதலாவது தம்முடைய * சொந்தப்பாவங்களுக்காகவும், பின்பு சனங்களுடையபாவங்களுக்காகவும் நாடோறும் பலியிடவேண்டுவதில்லை. அவர்களுக்காக அவர் ஒரேதரந் தம்மைப்பலியிட்டாரே. * ௫: ௩.

௨௮. நியாயப்பிரமாணமானது பலவீனத்தையுடைய மனிதர்களை ஆசாரியராக ஏற்படுத்துகின்றது. நியாயப்பிரமாணத்திற்குப்பின்பு ஆணையோடேயிருந்த வசனம் என்றென்றைக்கும் பூரணராகிய குமாரனையே ஏற்படுத்துகின்றது.

௮ அதிகாரம்.

[(௧) கிறிஸ்துவின் நித்திய ஆசாரியத்துவத்தினால் லேவியருக்கடுத்த ஆரோனின் ஆசாரித்துவம் ஒழிந்ததென்றும், (௭) பிதாக்களோடே செய்ததற்காலத்துக்குரிய உடம்படிக்கை நித்தியகாலத்துக்குரிய சுவிசேஷத்தின் உடம்படிக்கையினாலே நீக்கப்பட்டதென்றுஞ் சொல்லியது.]

மேற்சொல்லியவைகளிற் பிரதானமானதென்னவெனில், * பரமண்டலங்களிலுள்ள மகத்துவ ஆசனத்தின்வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவருமாய், * ௪: ௰௪.

௨. மனிதர்களாலே யல்ல, கர்த்தராலே வைக்கப்பட்ட மெய்யான கூடாரமாகிய பரிசுத்த இடத்திலே ஆராதனைசெய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்குண்டு.

௩. ஆசாரியர்யாவருங் காணிக்கைகளையும், பலிகளையுஞ் செலுத்துதற்கு வைக்கப்பட்டிருக்கிறதால், அவரும் (பரமண்டலத்திலே) சிலவற்றைப்பலியிடவேண்டுவதாயிருந்தது.

௪. பூமியிலே அவர் இருப்பாரானால் ஆசாரியராயிருக்கமாட்டார். அங்கே நியாயப்பிரமாணத்தின்படி காணிக்கைகளைச்செலுத்துகிறவர்கள் ஆசாரியர்களாயிருக்கிறார்களே.

௫. மோசே அந்தக்கூடாரத்தையுண்டுபண்ணப்போனபொழுது, * மலையிலேயுனக்குக்காண்பிக்கப்பட்ட சாயலின்படியே நீ சகலத்தையுஞ் செய்ய எச்சரிக்கையாயிருவென்று பராபரன் அவனுக்குக்கட்டளையிட்டபடியே அந்த ஆசாரியர்கள் பரமண்டலத்திற்குரியவைகளுக்கு † அடையாளமும், நிழலாட்டமுமானவைகளுள்ள (இடத்திலே) ஆராதனைசெய்கிறார்கள். * ௨ மோ. ௨௫: ௪௰. † கொலோ. ௨: ௰௭.

௬. அவர் * அதிக மேன்மையான வாக்குத்தத்தங்களின்மேல் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற அதிகமேன்மையான உடம்படிக்கைக்கேற்ற மத்தியஸ்தராயிருக்கிறதால், அதிக விசேஷமான ஆராதனைசெய்தலைப் பெற்றுக்கொண்டிருக்கிறார். * ௨ கொரி. ௩: ௬—௯.

௭. அந்தமுதலாம் உடம்படிக்கை பிழையில்லாததாயிருந்ததானால் இரண்டாவதற்கு இடந்தேடப்படுவதில்லையே.

௮. அவர்களைக்குற்றவாளிகளென்றுசொல்லி அவர்களுடனே திருவுளம்பற்றினதாவது; * கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில், இஸ்ரவேல் குடும்பத்தாரோடும், யூதர் குடும்பத்தாரோடும் நான் புதிய உடம்படிக்கையையேற்படுத்தும்படிக்கான காலம்வருகின்றது. * எரே. ௩௧: ௩௧—௩௪.

௯. அவர்களுடைய முன்னோர்களை எகிப்துதேசத்திலிருந்து கொண்டுவரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப்பிடித்துக்கொண்டநாளிலே அவர்களுடனே பண்ணின உடம்படிக்கையைப்போல இது இ

ருப்பதில்லை. அந்த உடம்படிக்கையிலே அவர்கள் நிலைநிற்கவில்லையே. நானும் அவர்களை யரோசித்தேன்.

௰. அந்தநாள்களுக்குப்பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடேபண்ணும் உடம்படிக்கை யென்னவென்றால், என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைப்பேன். அவைகளை அவர்களுடைய இருதயங்களின்மேலேயெழுதி, அவர்களுக்குத்தேவனாயிருப்பேன். அவர்கள் எனக்குச்சனங்களாயிருப்பார்கள்.

௰௧. அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன்வரைக்கும் எல்லாரும் என்னை யறிந்துகொள்வதால், கர்த்தாவை யறிந்துகொள்ளென்று ஒருவன் தனக்கடுத்தபிறனுக்கும், வேறொருவன் தன் சகோதரனுக்கும், போதிக்கவேண்டுவதில்லை.

௰௨. நான் அவர்களுடைய அநியாயங்களை (நீக்கி) அவர்களுடைய பாவங்களையும், அக்கிரமங்களையும் இனி நினையாமல் அவர்களுக்கு இரங்குவதால், அப்படியாகுமென்று கர்த்தர் திருவுளம்பற்றுகிறாரென்பதே.

௰௩. புதிதான வுடம்படிக்கையென்று அவர் சொல்லுகையில் முதலாவதைப்பழமையாக்கினார். பழமையும், குறைவுமுள்ளதே ஒழிந்துபோகிறதற்குச்சமீபமாய் இருக்கின்றது.

௯ அதிகாரம்.

[(௧) நியாயப்பிரமாணத்தின் நிழலான முறைமைகளையும், இரத்தப்பலிகளையும் விவரித்து, (௰௧) அவைகள் கிறிஸ்துவினுடைய பொருளான இரத்தத்துக்கும், பலிக்குமுரிய மேன்மைக்கும், மகிமைக்கும் நிகரல்லவென்று சொல்லியது.]

அன்றியும், முதலாம் உடம்படிக்கை ஆராதனைக்கேற்ற நியாயங்களும், பூமிக்குரிய பரிசுத்தஸ்தலமுமுள்ளதாயிருந்தது.

௨. எப்படியெனில், பரிசுத்த ஸ்தலமென்னப்பட்ட முதற்கூடாரம் எத்தினமாக்கப்பட்டிருந்தது. அதிலே * விளக்குத்தண்டும், † பல்கையும், திவ்விய சமுகத்தப்பங்களுமிருந்தன. * ௨ மோ. ௨௫: ௩௧—௩௯. † ௨ மோ. ௨௫: ௨௩—௩௰.

௩. அல்லாமலும், இரண்டாந் திரைச்சீலைக்குப்பின்னாலே * மிகவும் பரிசுத்த ஸ்தலமென்னப்பட்ட கூடாரமிருந்தது. * ௨ மோ. ௨௬: ௩௧, ௩௩.

௪. அதிலே பொன்னாற்செய்த கலசமும், * முழுவதும் பொற்றகடுபொதியப்பட்ட உடம்படிக்கையின் பெட்டியுமிருந்தன. அந்தப்பெட்டியிலே † மன்னாவென்பதையுடைய பொற்பானையும், ‡ தளிர்கொண்ட ஆரோனுடைய கம்பும், உடம்படிக்கையின் பலகைகளுமிருந்தன. * ௨ மோ. ௨௫: ௨௯. † ௨ மோ. ௰௬: ௩௩, ௩௪. ‡ ௪ மோ. ௰௭: ௩—௮.

௫. அதற்குமேலே மகிமையுள்ள கேருபீன் வைக்கப்பட்டுக் * கிருபாசனத்திற்கு நிழலிட்டிருந்தன. இவைகளைக்குறித்து நான் இப்பொழுது விவரஞ் சொல்லக்கூடாது. * ௨ மோ. ௨௫: ௰௭—௨௨.

௬. அவைகள் இவ்விதமாய் எத்தினமாக்கப்பட்டிருந்தபின்பு, ஆசாரியரானவர்கள் ஆராதனைகளை நிறைவேற்றும்படிக்கு எக்காலத்திலேயும் முதற்கூடாரத்திலே பிரவேசிப்பார்கள்.

௭. இரண்டாங் கூடாரத்திலே பிரதான ஆசாரியன்மாத்திரம் * வருஷத்தில் ஒரேதரம் இரத்தத்தோடே பிரவேசித்து, அந்த இரத்தத்தைத்தனக்காகவும், சனங்களுடைய தப்பிதங்களுக்காகவுஞ் செலுத்துவான். * ௩ மோ. ௰௬: ௩௪.

௮. அதினாலே, முதலாங் கூடாரம் நிற்கையிற் பரிசுத்தமான இடங்களுக்குப்போகிற மார்க்கம் வெளியாக்கப்படவில்லையென்று பரிசுத்த ஆவியானவர் குறித்திருக்கிறார்.

௯. அந்தக்கூடாரம் இந்தக்காலம்வரைக்கும் உவமையாயிருந்தது. அதிலே காணிக்கைகளும், பலிகளுஞ் செலுத்தப்பட்டு வருகின்றன.

௰. அவைகள் செம்மையாக்குதலுள்ள காலமளவும் (இஸ்ரவேலருக்குக்) கட்டளையிடப்பட்ட போசனபானங்களாலும், பலஸ்நானங்களாலும், சரீரத்திற்கேற்ற (மற்றச்) சடங்குகளாலும் மாத்திரம் ஆராதனைசெய்கிறவனுடைய மனதிற்கு நிறையுண்டாக்கக்கூடாதவைகளாய் இருக்கின்றன.

௰௧. கிறிஸ்துவானவர் (உலகத்தில்) வந்து இவ்வுலகப்பொருளாயிராமலும், கையாற்செய்யப்படாமலும், * அதிக மேன்மையாயும், அதிக நிறைவாயுமிருக்கிற கூடாரத்தின்வழியாய் வருகிறவைகளாகிய நன்மைகளைக்குறித்து ஆசாரியராய்; * ௰: ௰௧—௨௧.

௰௨. வெள்ளாட்டுக்கடா, இளங்காளை, இவைகளுடைய இரத்தத்தினாலேயல்ல, தமது சொந்த இரத்தத்தினாலே நமக்காக நித்திய மீட்புண்டாக்கி, எல்லாக்காலங்களுக்காகவும் ஒரேதரம் * பரிசுத்தமான தலங்களிற் பிரவேசித்தார். * ௪: ௰௪.

௰௩. அதெப்படியெனில், * காளை, வெள்ளாட்டுக்கடா, இவைகளின் இரத்தமும், கடாரியின் சாம்பலும், † அசுசிப்பட்டவன் மேல் தெளிக்கப்பட்டு, அவனுடைய சரீர அசுசியை நீக்கத்தக்கதாக அவனைச்சுத்தமாக்கிக்கொண்டிருக்க, * ௩ மோ. ௰௬: ௰௪, ௰௫. † ௪ மோ. ௰௯: ௰௯.

௰௪. நித்திய ஆவியினாலே தம்மைப்பிழை

யில்லாத பலியாக, பராபரனுக்கு ஒப்புக்கொடுத்த * கிறிஸ்துவினுடைய திரு இரத்தம் மிகவும் அதிகமாய் மரணத்திற்கேதுவான கிரியைகளை நீக்கி, ஜீவனையுடைய பராபரனுக்கு நாம் ஊழியஞ்செய்வதற்கு நம்முடைய மனதைச்சுத்தமாக்குமல்லவா? * ௧ பேது. ௧: ௧—௰௯. ௧ யோவா. ௧: ௭. அபி. ௧: ௫.

௰௫. இதினாலே முதல் உடம்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்வதற்கேதுவாக அவர் மரித்த பின்பு, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தமான நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்ளும்படிக்கே அவர் * புதிய உடம்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார். * ௰௨: ௨௪. ௧ தீமோ. ௨: ௫.

௰௬. அதெப்படியென்றால், ஒரு உடம்படிக்கை (பலிகளுடைய மரணத்தினாலே) உறுதியாக்கப்படுமே.

௰௭. ஏற்படுத்தப்பட்ட (பலி) உயிரோடிருக்குமளவும், உடம்படிக்கை பெலனாயிருக்கமாட்டாதே. ஆகையால், ஒரு உடம்படிக்கை செய்யப்படும்பொழுது, ஏற்படுத்தப்பட்ட பலியினுடைய மரணமுந் தோற்றப்படவேண்டும்.

௰௮. அந்தப்படி முதலாம் உடம்படிக்கையும் இரத்தமில்லாமற் பிரதிஷ்டையாக்கப்படவில்லை.

௰௯. எப்படியெனில், * மோசேயென்பவன் வேதப்பிரமாணத்தின்படி சகல சனங்களுக்கும் எல்லாப்பிரமாணங்களையுஞ் சொன்னபின்பு ஆடுமாடுகளின் இரத்தத்தைத் தண்ணீரோடும், சிவப்பான பஞ்சியோடும், இசோப்பென்னுஞ் செடியோடுங்கூட்டியெடுத்து, வேதபுஸ்தகத்தின்மேலும், சனங்களெல்லார்மேலுந் தெளித்து, * ௨ மோ. ௨௪: ௩—௮.

௨௰. பராபரன் உங்களுடனே (செய்யக்) கட்டளையிட்ட உடம்படிக்கைக்கேற்ற இரத்தம் இதுவேயென்று சொன்னான்.

௨௧. இவ்விதமாய் * கூடாரத்தின்மேலும், ஆராதனைக்கேற்ற தட்டுமுட்டுகளின்மேலும் இரத்தத்தைத்தெளித்தான். * ௩ மோ. ௮: ௰௫. ௰௬: ௩௰. ௰௬: ௰௪—௨௰.

௨௨. நியாயப்பிரமாணத்தின்படி சில குறைய மற்றெல்லாப்பதார்த்தங்களும் இரத்தத்தினாலே சுத்தமாக்கப்பட்டு வருகின்றன. * இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்புமில்லை. * ௩ மோ. ௰௭: ௰௧.

௨௩. ஆனதாற் பரமண்டலங்களிலுள்ளவைகளுக்கு உவமையானவைகள் இப்படிப்பட்ட (பலிகளினாலே) சுத்தமாக்கப்படவேண்டியதாயிருக்கிறபடியாற் பரமண்டலத்திலுள்ளவைகள் தாமே அவைகளிலும் அதிக தகுதியான (பலிகளாலே) சுத்தமாக்கப்படவேண்டுமே.

௨௪. அந்தப்படி, கிறிஸ்துவானவர் * இப்பொழுது நமக்காக, பராபரனுடைய சந்நிதானத்திலே தோன்றியிருக்கும்படிக்கு மெய்யானவைகளுக்குத் திருஷ்டாந்தங்களாகிய கையாற்செய்யப்பட்ட பரிசுத்த ஸ்தலங்களிலல்ல. பரமண்டலத்திலேதானே பிரவேசித்திருக்கிறார். * ௧ யோவா. ௨: ௧.

௨௫. அந்தப்பிரதான ஆசாரியன் அந்நிய இரத்தத்தை யெடுத்து * வருஷந்தோறும் பரிசுத்த ஸ்தலங்களிலே பிரவேசித்தது போல அவர் தம்மை யடிக்கடி பலியிடும்படிக்கு (அப்படிப்பிரவேசிக்கவில்லை.) * ௨ மோ. ௩௰: ௰.

௨௬. அதற்காசவானால், அவர் உலகமுண்டானதுமுதற்கொண்டு அடிக்கடி பாடுபடவேண்டியிருக்குமே. அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக (முந்தின) யுகத்தின் முடிவிலே ஒரேதரம் வெளிப்பட்டார்.

௨௭. அன்றியும் மனிதர்கள் ஒரேதரம் மரிக்கிறதும், பின்பு நியாயத்தீர்ப்பு அடைகிறதுந் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதால்,

௨௮. அதுபோலக்கிறிஸ்துவும், * அநேகருடைய பாவங்களைச்சுமந்துகொண்டுபோகும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டுத் தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பைக்கொடுப்பதற்கு இரண்டாந்தரம் பாவப்பலியில்லாமல் தோன்றுவார். * உரோ. ௫: ௰௫—௰௮.

௰ அதிகாரம்.

[(௧) நியாயப்பிரமாணப்பலிகளினாற் பூரண நிவிர்த்தியில்லையென்றும், (௰) ஒரேவிசை செலுத்தப்பட்ட கிறிஸ்துவின் சரீரப்பலி (௰௪) பாவங்களைப்பூரணமாய் நிவாரணம்பண்ணுகிறதென்றும், ௰௯) அதின்மேலுண்டாகிய விசுவாசத்தை யுறுதியாய்ப்பொறுமையோடும், ஸ்தோத்திரத்தோடும் பற்றிக்கொள்ளவேண்டுமென்றுஞ் சொல்லியது.]

இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது * வருகிறவைகளாகிய நன்மைகளின் பொருளுள்ளதாயிராமல், அவைகளின் † நிழலைமாத்திரங் காண்பிக்கிறதாயிருக்கிறதால் வருஷந்தோறும் இடைவிடாமற் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச்செலுத்துகிறவர்களுக்கு நிறைவான (ஆசீர்வாதத்தை) ஒருக்காலுங் கொடுக்கமாட்டாது. * ௯: ௰௧. † கொ. ௨: ௰௬, ௰௭.

௨. கொடுத்ததானால், ஆராதனைசெய்தவர்கள். ஒருதரஞ் சுத்தமாக்கப்பட்டபின் இன்னும் பாவங்களுண்டென்று தங்கள் மன

திலே அதிகமாய் நினையாதிருப்பதால், அந்தப்பலிகளைச்செலுத்துகிறது நிறுத்தப்படுமல்லவா!

௩. அப்படியிராதபடியாற் பாவங்களுண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் நினைவுகூருதலுண்டாயிருக்கிறதே.

௪. அல்லாமலும் ஆடுமாடுகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே.

௫. ஆனதால் அவர் உலகத்திற்பிரவேசித்திருக்கிறபொழுது, * பலியையும் காணிக்கையையும் நீர் விரும்புகிறதில்லை. ஒரு சரீரத்தை எனக்கு எத்தனமாக்கினீர். * சங். ௪௰: ௬.

௬. தகனபலிகளும், பாவப்பலிகளும் உமக்குப்பிரியமல்லாதபொழுது,

௭. நான் சொன்னது, பராபரனே! என்னைக்குறித்து வேதபுஸ்தகத்திலே எழுதியிருக்கிறபடி உம்முடைய சித்தத்தை நிறைவேற்றுகிறதற்கு இப்பொழுது வருகிறேனென்று சொன்னேனென்றார்.

௮. நியாயப்பிரமாணத்தின்படி செலுத்தப்பட்டுவருகிற பலிகளைக்குறித்து மேற்சொல்லியபடி பலியையும், காணிக்கையையும், தகனபலிகளையும்; பாவப்பலிகளையும் விரும்பமாட்டீர். அவைகள் உமக்குப்பிரியமானவைகளல்லவென்று சொன்னபின்பு,

௯. பராபரனே! உம்முடைய சித்தத்தை நிறைவேற்றுகிறதற்கிப்பொழுது, வருகிறேனென்று சொன்னதால், இரண்டாம் (ஏற்பாட்டை) ஸ்தாபிக்கும்படிக்கு முதலானதை எடுத்துப்போட்டார்.

௰. அந்தச்சித்தத்தின்படி எல்லாக்காலங்களுக்காகவும், * ஒரேதரம் இயேசுக்கிறிஸ்துவினுடைய சரீரம் பலியிடப்பட்டதினாலே நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். * ௯: ௰௨.

௰௧. அன்றியும் எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாய்ப்பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்தி செய்யமாட்டாதஒரேவித பலிகளை அடிக்கடி செலுத்தி வருவான்.

௰௨. அவர்மாத்திரம் என்றென்றைக்கும் பாவங்களை நீக்கும்படிக்கான ஒரே பலியைச்செலுத்தி, * பராபரனுடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்து, * ௧: ௩.

௰௩. * அதுமுதல் தம்முடைய சத்துருக்கள் தம்முடைய பாதங்களின் படியாக்கப்படுமளவுங் காத்துக்கொண்டிருக்கிறார். * சங். ௱௰: ௧.

௰௪. ஆகையாற் பரிசுத்தமாக்கப்பட்டவர்களை அவர் ஒரேபலியினாலே என்றென்றைக்கும் நிறைவுள்ளவர்களாக்கினார்.

௰௫. இதைக்குறித்துப்பரிசுத்த ஆவியானவரும் நமக்குச்சாட்சி சொல்லுகிறார்.

௰௬. எப்படியெனில், * அந்த நாள்களுக்குப்பின் நான் அவர்களுடனே இந்த உடம்படிக்கை பண்ணுவேனென்று சொன்னபின்பு, கர்த்தர் திருவுளம்பற்றினது. நான் என்னுடைய பிரமாணங்களை யவர்களுடைய இருதயங்களிலே கொடுப்பேன். அவைகளை யவர்களுடைய மனதின்மேலே யெழுதுவேன். * அ: ௰. எரே. ௩௧: ௩௩, ௩௪.

௰௭. அவர்களுடைய பாவங்களையும், அக்கிரமங்களையும் நான் ஒரு காலத்திலாகிலும் நினைத்துக்கொள்வதில்லை யென்றார்.

௰௮. அந்தப்படி யவைகள் மன்னிக்கப்பட்டபடியாற் பாவப்பலி யினிச்செலுத்தப்பட வேண்டுவதில்லையே.

௰௯. ஆகையாற் சகோதரரே! பரிசுத்தமான இடங்களுக்குப்போகிற மார்க்கத்தை இயேசுவானவர் * தமது சரீரமாகிய திரைச்சீலையின்வழியாய்ப்புதிதும், ஜீவனுமான மார்க்கமாக நமக்குண்டுபண்ணிவைத்ததால், * மத். ௨௭: ௫௧.

௨௰. அந்த மார்க்கத்தில் பிரவேசிக்கிறதற்கு அவருடைய திரு இரத்தத்தினாலே நமக்கு, தயிரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்,

௨௰௧. பராபரனுடைய ஆலயத்திலே நமக்குப்பெரிய ஆசாரியருண்டாயிருக்கிற படியினாலும்,

௨௰௨. நாம் குற்றத்தைச்சாற்றுகிற மனது நீங்கத்தெளிக்கப்பெற்ற இருதயமுள்ளவர்களாய் உண்மையுள்ளஇருதயத்தோடும், விசுவாசத்தினாலாகிற நிச்சயத்தோடும் பராபரனைச்சேரக்கடவோம்.

௨௰௩. அல்லாமலும், சுத்தமான சலத்தாற் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாய், நம்முடைய் நம்பிக்கையை யறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாய் இருக்கக்கடவோம். வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே.

௨௰௪. மேலும் * அன்பு கூருதற்கும், நற்கிரியைகளைச்செய்கிறதற்கும், எழுப்புதலுண்டாயிருக்கும்படிக்கு ஒருவரையொருவர் நோக்கிப்பார்த்து, * ௰௩: ௧, ௩. ௧ தெச. ௫: ௰௧.

௨௰௫. சபை கூடிவருதலைச்சிலர் விட்டுப்போகிறதுபோல நாம் அப்படிச்செய்யாமல், * ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்: அந்தநாள் சமீபமாகிறதை நீங்கள் அறிந்திருக்கிறதால், அதிகமாய் அப்படியே செய்யவேண்டும். * கொலோ. ௩: ௰௬.

௨௰௬. * சத்தியத்தை யறிந்துகொண்டபின் நாம் மனப்பூர்வமாய்ப்பாவஞ் செய்தால், வேறொரு பாவப்பலி நமக்கு மீதியாயிருப்பதில்லை. * ௬: ௪—௮.

௨௰௭. * விரோதஞ்செய்கிறவர்களைப் பட்சிக்கும் அக்கினியுள்ள உக்கிரமும் நியாயத்தீர்ப்பும் வருமென்று பயத்தோடே காத்தி

ருக்குதலே நமக்குண்டாயிருக்கும். * ௨ தெச. ௧: ௰.

௨௮. மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளினவனெவனோ அவன் இரண்டு மூன்று பேர் சாட்சி சொன்னபின்பு இரக்கமில்லாமற் கொலைசெய்யப்பட்டானே.

௨௯. பராபரனுடைய குமாரனைக்காலினால் மிதித்துப்போட்டுத்தன்னைப்பரிசுத்தஞ்செய்த உடம்படிக்கையின் திரு இரத்தத்தை அசுத்தமென்றெண்ணிக்கிருபையின் ஆவியை அசட்டைபண்ணினவன் எவ்வளவு அதிக ஆக்கினைக்குப்பாத்திரவானாயிருப்பான்.

௩௰. நீங்களே யோசனைபண்ணுங்கள். * பழிவாங்குதல் எனக்குரியது. நானே பதிற்செய்வேனென்று சொன்ன கர்த்தரை யறிந்திருக்கிறோமே. அன்றியும † கர்த்தர் தம்முடைய சனங்களுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுப்பாரென்றுஞ் சொல்லியிருக்கிறதே. * ௫ மோ. ௩௨: ௩௫. † ௫ மோ. ௩௨: ௩௬.

௩௧. ஆ, சீவனுள்ள பராபரனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்கின்றது.

௩௨. நீங்கள் முந்தின நாள்களை ஞாபகப்படுத்துங்கள். அவைகளில் நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்தபொழுது, பாடுகளால் மிகுந்தபோராட்டத்தைச்சகித்துக்கொண்டீர்களே.

௩௩. நீங்கள் நிந்தைகளாலும் உபத்திரவங்களாலும் மற்றவர்களுக்கு வேடிக்கைக் கேதுவானவர்களாயும், அப்படியான மற்றவர்களுக்குத்தோழராயுமிருந்தீர்கள்.

௩௪. கட்டப்பட்டிருந்த என்னோடேகூட நீங்கள் பாடுபட்டீர்களே. பரமண்டலங்களில் அதிக மேன்மையும் உறுதியுமான ஆஸ்தி உங்களுக்குண்டென்று, நீங்கள் அறிந்து உங்கள் (லவுகீக) ஆஸ்திகளை (மற்றவர்கள்) கொள்ளையிட்டதற்குச்சந்தோஷமாய் இடங்கொடுத்தீர்கள்.

௩௫. ஆகையால் * மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தயிரியத்தை யெறிந்துவிடாதிருப்பீர்களாக. * மத். ௰: ௩௨.

௩௬. நீங்கள் பராபரனுடைய சித்தத்தின்படி செய்கிறவர்களாய் வாக்குத்தத்தத்தின் நன்மையைப்பெறும்படிக்குப் * பொறுமை யுங்களுக்குவேண்டும். * லூக். ௨௧: ௰௯.

௩௭. * வருகிறவர் அதிககாலந்தாமதமாயிராமற் சீக்கிரமாய் வருவாரென்றும், * ஆபகூ. ௨: ௩.

௩௮. * விசுவாசத்தினாலே நீதிமானானவன் பிழைப்பான். அவன் பின்வாங்கிப்போனால் அவன்மேல் என்னுடைய ஆத்துமா பிரியமாயிராதென்றும், (எழுதியிருக்கின்றது.) * ஆபகூ. ௨: ௪.

௩௯. நாம் கெட்டுப்போகிறதற் கேதுவாகப்பின்வாங்குகிறவர்களாயிராமல் (நமது) ஆத்துமாவைக்காக்கிறதற்கேதுவாக விசுவாசமுள்ளவர்களாயிருக்கிறோம்.

௰௧ அதிகாரம்.

[(௧) விசுவாசமின்னதென்றும், (௬) விசுவாசமில்லாமற் பராபரனுக்குப்பிரியமாயிருக்கக்கூடாதென்றும், (௭) விசுவாசத்துக்குத்திருஷ்டாந்தங்கொடுத்திருந்த பூர்வீகத்தார்களைக்குறித்துஞ்சொல்லியது.]

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளில் * உறுதியும், † காணப்படாதவைகளை வெளிப்படுத்துகிறதுமாயிருக்கின்றது. * சங். ௨௮: ௭. ௱௨௫: ௧. ௱௪௬: ௫, ௬. † ௨ கொரி. ௪: ௰௮.

௨. அதினாலே பூர்வீகத்தார் நற்சாட்சியைப்பெற்றார்கள்.

௩. * உலகம் பராபரனுடைய வார்த்தையால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய்க்காணப்படுகிறவைகள் தோற்றப்படாத பொருள்களாலுண்டாயினவென்றும், விசுவாசத்தினாலே அறிந்திருக்கிறோம். * சங். ௩௩: ௬—௯.

௪. விசுவாசத்தினாலே * ஆபேலென்பவன் காயீனுடைய பலியிலும் அதிகமான பலியைப்பராபரனுக்குச்செலுத்தினான். அதினாலே யவன் † நீதிமானென்று சாட்சிபெற்றான். அவனுடைய காணிக்கைகளைக் குறித்துப்பராபரனே சாட்சிகொடுத்தார். அவன் மரித்தும் அதினாலே இப்பொழுதும் பேசுகிறான். * ௧ மோ. ௪: ௪. † மத். ௨௩: ௩௫.

௫. விசுவாசத்தினாலே * ஏனோக்கென்பவன் மரணத்தைக்காணாதபடிக்கு, எடுத்துக்கொள்ளப்பட்டான். பராபரன் அவனையெடுத்துக்கொண்டபடியினாலே, அவன் காணப்படாமற்போனான். அவன் எடுத்துக்கொள்ளப்படுதற்குமுன்னே அவன் பராபரனுக்குப்பிரியமானவனென்று சாட்சிபெற்றுக்கொண்டிருந்தான். * ௧ மோ. ௫: ௨௪.

௬. பராபரனைச்சேருகிறவன் அவருண்டென்றும், அவர் தம்மைச்சாக்கிரதையாய்த்தேடுகிறவர்களுக்குப்பலனை யளிக்கிறவரென்றும், விசுவாசிப்பானே. ஆகையால் விசுவாசமில்லாதவன் அவருக்குப்பிரியமாயிருக்கமாட்டான்.

௭. * நோவாவென்பவனுந் தற்காலத்திலே காணாதவைகளைக்குறித்துத்தேவேத்தினமாய் எச்சரிக்கப்பட்டபொழுது, விசுவாசத்தினாலே யயந்து, தன் குடும்பத்தை யிரட்சிப்பதற்குப்பேழையை யுண்டுபண்ணி இதினாலே உலகம் ஆக்கினைக்குள்ளாயிற்றென்று தீர்ப்புக்காண்பித்து, விசுவாசத்தால் வருகிற நீதிக்குச் சுதந்தரவாளியானான். * ௧ மோ. ௬: ௮.

௮. * ஆபிரகாமும் பின்பு சுதந்தரமாகப்

பெற்றுக்கொள்ளும்படிக்கான இடத்திற்குப்புறப்பட்டுப்போக அழைக்கப்பட்டபொழுது, விசுவாசத்தினாலே கீழ்ப்படிந்து, தான் போகவேண்டிய இடமின்னதென்றறியாமற் புறப்பட்டுப்போனான். * ௧ மோ. ௰௨: ௧—௪.

௯. * தனக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட அந்நியதேசத்திலே யவன் அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும், யாக்கோபோடுங்கூட விசுவாசத்தினாலே சஞ்சரித்துக்கூடாரங்களிலே குடியிருந்தான். * அப். ௭: ௫.

௰. *பராபரனாலே உண்டாக்கப்பட்டும், அளப்பட்டுமிருக்கிற அஸ்திபாரங்களுள்ள பட்டினத்திற்குப்போகக்காத்துக்கொண்டிருந்தபடியால் அப்படியிருந்தான். * ௩: ௪. அறி. ௨௧: ௨—௰.

௰௧. சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி, விசுவாசத்தினாலே கருப்பந்தரிக்கும்படி பெலனடைந்து, வயதுசென்றவளாயிருந்தும் பிள்ளைபெற்றாள். * ௧ மோ. ௰௮: ௰—௰௨. ௨௧: ௧, ௨.

௰௨. ஆனபடியால், இந்தச்சங்கதியிற் * செத்தவனைப்போன்ற ஒருவனாலே † வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப் போலவும், எண்ணிறந்த கடற்கரைமணலைப்போலவும், மிகுந்த சனங்களுண்டானார்கள். * உரோ. ௪: ௰௯. † ௧ மோ. ௰௫: ௫.

௰௩. அவர்களெல்லாரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், *தூரத்திலே அவைகளைக்கண்டு வாழ்த்துதலோடே விரும்பிப்பூமியின்மேலேதாங்கள் †அந்நியராயும், வழிப்போக்கராயுமிருந்ததை யறிக்கைபண்ணி, விசுவாசத்தோடே இறந்துபோனார்கள். * யோவா. ௮: ௫௬. † ௧ மோ. ௨௩: ௪.

௰௪. அப்படி அறிக்கைபண்ணுகிறவர்கள் சென்மதேசத்தை நாடிப்போகிறோமென்று தெரியப்படுத்துகிறார்கள்.

௰௫. அவர்கள் தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத்திரும்பும்படி யிடமுண்டே.

௰௬. அதையல்ல, அதிலும் மேன்மையான பரமண்டலத்திலுள்ளதையே விரும்பினார்கள். ஆகையாற்பராபரனும், * அவர்களுடைய தேவனென்று அழைக்கப்படுகிறதினாலே வெட்கப்படுகிறதில்லை. அவர்களுக்கு ஒரு பட்டினத்தை எத்தினம்பண்ணினாரே. * ௨ மோ. ௩: ௬.

௰௭. மேலும், ஆபிரகாமானவன் தான் சோதிக்கப்பட்டபொழுது, விசுவாசத்தினாலே * ஈசாக்கைப்பலியாக ஒப்புக்கொடுத்தான். * ௧ மோ. ௨௨: ௨.

௰௮. * ஈசாக்கினாலே உனக்குச்சந்ததியுண்டாகுமென்று அவனோடேசொல்லப்பட்டிருந்ததே. * ௧ மோ. ௨௧: ௰௨.

௰௯. இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களைப்பெற்றவன் இவனை மரித்தோரிலிருந்தெழுந்திருக்கப்பண்ண, பராபரன் வல்லவராயிருக்கிறாரென்றெண்ணி, தனக்கு ஒரே பேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான். ஆனதால், உவமையாகும்படியே அவனைத் திரும்பப்பெற்றுக்கொண்டான்.

௨௰. * ஈசாக்கென்பவனும் பிற்காலத்திற்குரியவைகளின்மேலுள்ள விசுவாசத்தினாலே யாக்கோபையும், ஏசாவையும் ஆசீர்வதித்தான். * ௧ மோ. ௨௭: ௨௮.

௨௧. * யாக்கோபென்பவனும் மரணகாலத்தில் விசுவாசத்தினாலே யோசேப்பினுடைய குமாரர் இருவரையும் ஆசீர்வதித்துத் தன் கோலின் முனையிலே (சாய்ந்து) தொழுதுகொண்டான். * ௧ மோ. ௪௮: ௩—௯.

௨௨. யோசேப்பென்பவனும் இஸ்ரவேல் சந்ததியார் (எகிப்து தேசத்தை) விட்டுப் புறப்படுவார்களென்று * தன் சீவகாலத்தின் முடிவில் விசுவாசத்தினாலே அறிவித்துத்தன் எலும்புகளைக்குறித்துக்கட்டளை கொடுத்தான். * ௧ மோ. ௫௰: ௨௪, ௨௫.

௨௩. மோசேயென்பவன் பிறந்தபொழுது அவனுடைய தாய்தகப்பன்மாரும் * பிள்ளை அழகுள்ளதென்று கண்டு விசுவாசத்தினாலே இராசாவினுடைய கட்டளைக்குப்பயப்படாமல், அந்தப்பிள்ளையை மூன்றுமாதம் ஒளித்துவைத்தார்கள். * ௨ மோ. ௨: ௧, ௨.

௨௪. * மோசேயென்பவனும் பெரியவயதுள்ளவனானபொழுது, பார்வோனுடைய குமாரத்தி மகனென்றழைக்கப்படுகிறதை விசுவாசத்தினாலே வெறுத்து, * ௨ மோ. ௨: ௰௧—௰௫.

௨௫. * அநித்தியமான பாவ சந்தோஷங்களை அநுபவிப்பதையல்ல, பராபரனுடையசனங்களோடேகூடத்துன்பத்தை யநுபவிப்பதையே அதிகமாய்த்தெரிந்துகொண்டான். * சங்கீ. ௮௪: ௰.

௨௬. இனிமேல்வரும்பலனை அவன் நோக்கிப்பார்த்து, எகிப்திலுள்ள பொக்கிசங்களிலுங் கிறிஸ்துவினிமித்தம் வருகிற நிந்தையை அதிக ஐசுவரியமென்றெண்ணினான்.

௨௭. காணப்படாதவரைக்கண்டாற்போல உறுதியாய்ப்பற்றிக்கொண்டதால், அவன் விசுவாசத்தினாலே இராசாவினுடைய மூர்க்கத்திற்குப்பயப்படாமல் எகிப்தைவிட்டுப் போனான்.

௨௮. தலைப்பிள்ளைகளைச்சங்கரிக்கிறவன் இஸ்ரவேலரைத்தொடாதபடிக்கு, அவன் விசுவாசத்தினாலே * பஸ்காவையும், இரத்தம் பூசுதலையும் ஏற்படுத்தினான். * ௨ மோ. ௰௨: ௨௧—௨௮.

௨௯. விசுவாசத்தினாலே அவர்கள் * சிவந்த சமுத்திரத்தை உலர்ந்த தரையைப்போலக்கடந்துபோனார்கள். எகிப்தார் அப்படிச்செய்யத்தேடினபொழுது அமிழ்ந்துபோனார்கள். * ௨ மோ. ௰௪: ௰௯.

௩௰. (இஸ்ரவேலருடைய) விசுவாசத்தினாலே * எரிகோபட்டினத்தின் மதில்கள் (அவர்களால்) ஏழுநாளுக்குள்ளே சூழப்பட்டு விழுந்தன. * யோசு. ௬: ௧—௨௰.

௩௧. * வேசியாயிருந்த இராகாப்பென்பவள் விசுவாசத்தினாலே வேவுகாரரைச்சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு அவிசுவாசிகளோடே அழிக்கப்படாதிருந்தாள். * யோசு. ௬. ௨௨—௨௫.

௩௨. பின்னும் ஆரைக்குறித்துச்சொல்லலாம்? கீதேயோனையும், பாராக்கையும், சமுசோனையும், எப்பத்தாவையும், தாவீதையும், சாமுவேலையும், தீர்க்கதரிசிகளையுங்குறித்து நான் விவரஞ்சொல்ல வேண்டுமானாற் காலம்போதாது.

௩௩. அவர்களும் விசுவாசத்தினாலே இராச்சியங்களைச்செயித்துக்கொண்டு, நீதியை நடப்பித்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளைப்பெற்றுக்கொண்டு, * சிங்கங்களுடைய வாய்களையடைத்து, † அக்கினியின் பலத்தை அவித்து, * தானி. ௬: ௨௨. † தானி. ௩: ௨௩.

௩௪. கட்கங்களின் கூர்மைக்குத்தப்பிப் பலவீனத்திலே பலன்கொண்டு, யுத்தகாலத்தில் வல்லவர்களாகி அந்நியருடைய பாளயங்களைக்கவிழ்த்துப்போனார்கள்.

௩௫. (விசுவாசத்தினாலே) * ஸ்திரீகளுஞ் செத்துப்போன தங்களுக்குரியவர்களை உயிரோடெழுந்திருக்கப்பெற்றார்கள். (விசுவாசத்தினாலே) வேறுசிலர் அதிகமகிமையாய் உயிரோடே யெழும்பும்படிக்கு மீட்பை அங்கிகரியாமல் இழுப்புண்டு வாதிக்கப்பட்டார்கள். * ௨ இரா. ௪: ௩௨—௩௭.

௩௬. (விசுவாசத்தினாலே) வேறுசிலர் நிந்தைகளையும், அடிகளையும், சங்கிலிகளையும், காவலையுஞ் சகித்துக்கொண்டார்கள்.

௩௭. கல்லெறியப்பட்டார்கள். வாளால் அறுக்கப்பட்டார்கள். சோதிக்கப்பட்டார்கள். கட்கத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள். செம்மறியாட்டுத்தோல்களையும், வெள்ளாட்டுத்தோல்களையும் போர்த்துக்கொண்டு, குறைச்சலையும், உபத்திரவத்தையும், துன்பத்தையுஞ் சகித்துத்திரிந்து,

௩௮. வனாந்தரங்களிலேயும், மலைகளிலேயும், குகைகளிலேயும், பூமியின் வெடிப்புகளிலேயுஞ் சிதறிநடந்தார்கள். உலகம் அவர்களுக்கு அபாத்திரமாயிருந்தது.

௩௯. அவர்களெல்லாரும் விசுவாசத்தைக்குறித்து நற்சாட்சிபெற்றிருந்தும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள்.

௪௰. பராபரன் நம்மைக்குறித்து அதிக நன்மையானதை யேற்படுத்தினதால், அவர்கள் நம்மையன்றி நிறைவுள்ள ஆசீர்வாதத்தை அடையாதபடிக்கு (அப்படியே போனார்கள்.)

௰௨ அதிகாரம்.

[(௧) இடைவிடாத விசுவாசமும், பொறுமையும், தேவபத்தியும் உடையவர்களாயிருக்கப்புத்திசொல்லி, (௨௨) பழைய ஏற்பாட்டைப்பார்க்கிலும், புதிய ஏற்பாடு மேன்மையுள்ளதென்றுங் காட்டியது.]

ஆகையால்மேகம்போலஇத்தனைத்திரளான சாட்சிகள் நம்மைச்சூழ்ந்துகொண்டிருக்க, * நாம் பாரமான யாவற்றையும், நம்மைச்சுற்றிநிற்கிற பாவத்தையுந் தள்ளிப்போட்டு, விசுவாசத்தை ஆரம்பமாய் நடத்துகிறவராயும், முடிக்கிறவராயுமிருக்கிற இயேசுவைநோக்கி, நமக்குமுன் வைக்கப்பட்ட போராட்டச்சாலையிலே † பொறுமையோடே ஓடக்கடவோம். * உரோ. ௭: ௨௧—௨௪. † ௰: ௩௬. ௧ கொரி. ௯: ௨௪, ௨௫.

௨. அவர் தமக்குமுன்பாக வைத்திருந்த சந்தோஷத்திற்காக அவலட்சணப்படுதலையெண்ணாமற் சிலுவையில் (மரணத்தைச்) சகித்துப்பின்பு * பராபரனுடைய ஆசனத்தின் வலதுபாரிசத்திலுளுக்காந்திருக்கிறார். * அறி. ௩: ௨௧.

௩. ஆனதால் உங்கள் ஆத்துமாக்கள் இளைப்புள்ளவைகளாயிருக்கும்பொழுது, நீங்கள் தயிரியமற்றவர்களாய்ப்போகாதபடிக்குப்பாவிகளால் இப்படிப்பட்ட விரோதத்தைச்சகித்த அவரையே நன்றாய்த்தியானித்துக்கொள்வீர்களாக.

௪. அந்தப்பாவத்திற்கு விரோதமாய்ப் போராட்டஞ்செய்கிற நீங்கள் இதுவரைக்கும் * இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக எதிர்நிற்கவில்லையே. * ௧ கொரி. ௰: ௰௩.

௫. அன்றியும், * என்மகனே! கர்த்தருடைய தண்டனையை அற்பமாக எண்ணாமலும், அவராற்கடிந்துகொள்ளப்படுகையில் தயிரியமற்றவனாகாமலும் இருப்பாயாகவென்றும், * வாக். ௩: ௰௧, ௰௨.

௬. * கர்த்தராலே அன்புகூரப்பட்டவனெவனோ அவனை அவர் தண்டித்துத்தாஞ் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையானாலும் அடித்து வருவாரேயென்றும், பிள்ளைகளாகிய உங்களுக்குச்சொல்லியிருக்கிற ஆறுதலுள்ள வசனத்தை மறந்தீர்கள். * அறி. ௩: ௰.

௭. நீங்கள் (அவருடைய) தண்டிப்புக்குட்பட்டிருக்கிறபடியாற் பராபரன் உங்களைத்

(தம்முடைய)பிள்ளைகள்போல எண்ணி நட
ப்பிக்கிறரே. தகப்பனால்தண்டிக்கப்படாத
பிள்ளை யொன்றுண்டா?
௮. எல்லாப் (பிள்ளைகளும்) தண்டிக்கப்
பட்டதுபோல நீங்களுந் தண்டிக்கப்படா
விட்டாற் பிள்ளைகளாயிராமல் வேசிப்பிள்ளை
களாயிருப்பீர்களே.
௯. அன்றியும் நம்முடைய சரீரத்திற்குத்
தகப்பன்மாரானவர்கள் நம்மைத்தண்டிக்
கும்பொழுது, நாம் அவர்களுக்கு வந்தனஞ்
செய்திருக்க, ஆவிகளுக்குப்பிதாவானவருக்
கு நாம் பிழைக்கும்படி மிகவும் அதிகமாய்
க்கீழ்ப்படியவேண்டுமல்லவா!
௰. அந்தத்தகப்பன்மார்கள் தங்களுக்குத்
தோன்றினபடி கொஞ்சக்காலமாய் நம்மை
த்தண்டித்தார்கள். அவர் தம்மைப்போல
நாம் பரிசுத்தராகுதற்கேதுவான பிரயோ
சனம் வரும்பொருட்டே அப்படிச்செய்கி
றார்.
௰௧. தண்டனை யுண்டாயிருக்கும்பொழுது
அது (நமக்குச்) சந்தோஷமாகவல்ல துக்
கமாகத்தோன்றுகின்றது. பின்பு அதினா
லே முயற்சிப்பட்டவர்களுக்கு அது நீதி
யென்னும் பாக்கியபலனைக்கொடுக்கின்றது.
௰௨. ஆகையால், * தளர்ச்சியாயிருக்கிற
(உங்கள்) கைகளையும், இளைப்புள்ள (உங்
கள்) கால்களையுஞ் செம்மைப்படுத்துவீர்க
ளாக. * ஏசா. ௩௫: ௩.
௰௩. முடமுள்ள (அவயவம்) புரண்டுபோ
காமற் சொஸ்தமாகும்படிக்கு உங்கள்கால்
களுக்காகச்சரியான பாதைகளைச்செய்வீர்
களாக.
௰௪. * யாவருடனேயுஞ் சமாதானமாயி
ருக்கவும், † பரிசுத்தராயிருக்கவுஞ் சாக்கிர
தையாயிருப்பீர்களாக. பரிசுத்தமில்லாத
வன் கர்த்தரைத்தரிசிப்பதில்லையே. * உரோ.
௰௨: ௰௮. † மத். ௫: ௮.
௰௫. ஒருவரும் பராபரனுடைய கிருபை
யை யிழந்துபோகாதபடிக்கும், மற்றநேக
ரும் அசுசிப்படத்தக்கதாகக் * கசப்புள்ள
வேர் உங்களுக்குள்ளே தோன்றிக்கலக்கம்
உண்டாக்காதபடிக்கும், * ௫ மோ. ௨௯:
௰௮.
௰௬. ஒருவரும் * வேசிமார்க்கமாயும், † ஏ
சாவென்பவன்போல லவுகீக நடத்தையுள்
ளவர்களாயுமிராதபடிக்கும் எச்சரிக்கையா
யிருப்பீர்களாக. அவன் ஒரேவேளைச்சாப்
பாட்டுக்காக முதற்பேறனவனுக்குரிய சுத
ந்தரங்களை விட்டுவிட்டானே. * எபே. ௫:
௩. † ௧ மோ. ௨௫: ௨௯—௩௪.
௰௭. பின்பு, உங்களுக்குத்தெரிந்திருக்கிற
படி, அவன் (தன்தகப்பனுடைய) ஆசீர்வா
தத்தைப்பெற்றுக்கொள்ளவிரும்பியுந் தள்
ளப்பட்டான். அதைக்கண்ணீரோடே மிக
வுந்தேடியுந் (தகப்பனிடத்தில்) மாறுதலைக்
காணாமற்போனானே.
௰௮. அன்றியும், * தொடப்பட்டு அக்கி
னிபற்றியெரிகிற மலையினிடத்திலும், மந்
தாரத்தினிடத்திலும், இருளினிடத்திலும்,
* ௨ மோ. ௰௯: ௰௩—௰௯.
௰௯. பெருங்காற்றினிடத்திலும், * எக்கா
ளத்தின் முழக்கத்தினிடத்திலும், வார்த்தை
களின் தொனியினிடத்திலும், நீங்கள் வர
வேண்டியவர்களல்லவே. அந்தத்தொனி
யைக்கேட்டவர்கள் பின்னும் வசனந் தங்க
ளுக்குத்தோன்றாதபடிக்கு வேண்டிக்கொ
ண்டார்கள். * ௨ மோ. ௨௰: ௰௮, ௰௯.
௨௰. என்னத்தினாலெனில், இந்த மலையை
* ஒரு மிருகந் தொட்டால், அதின்மேலே
கல்லெறியவேண்டும். அல்லது அம்பி அம்
பினாலே யெய்து, கொலைசெய்யவேண்டு
மென்று சொல்லப்பட்ட கட்டளையை அவ
ர்கள் சகிக்கமாட்டாதிருந்தார்கள். * ௨
மோ. ௰௯: ௰௨, ௰௩.
௨௰௧. அந்தத்தரிசனை இவ்வளவு பயங்கர
மாயிருந்தது. அதினாலே மோசேயும், நா
ன் மிகவும் அதிகமாய்ப்பயப்பட்டு நடுங்கு
கிறேனென்றான்.
௨௰௨. நீங்கள் மலையாகிய சீயோனிடத்
திற்கும், சீவனுள்ள தேவனுடைய பட்டின
மாகிய * பரம எருசலேமினிடத்திற்கும்,
அநேகம் பதினாயிரமாகிய தூதர்களின் வி
சேஷமான சங்கத்தினிடத்திற்கும், * கலா.
௪: ௨௬.
௨௰௩. * பரமண்டலத்திலே பேரெழுதியி
ருக்கிற முதற்பேறானவர்களின் சபையினி
டத்திற்கும், யாவருக்குந் தேவனாகிய நி
யாயாதிபதியினிடத்திற்கும், நிறைந்த பாக்
கியமுள்ளவர்களாகிய நீதிமான்களின் ஆவி
களினிடத்திற்கும், * லூக். ௰: ௨௰.
௨௰௪. புதிதான உடம்படிக்கைக்கேற்ற
மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும்,
* ஆபேலினுடைய இரத்தங் கூப்பிட்டது
போலல்ல. அதிக நன்மையானவைகளை அ
றிவித்துத்தெளிக்கப்படுகிற இரத்தத்தினி
டத்திற்குஞ்சேருகிறவர்களாயிருக்கிறீர்கள்.
* ௧ மோ. ௪: ௰.
௨௰௫. திருவுளம்பற்றுகிறவரை நீங்கள் அச
ட்டை பண்ணாதபடிக்குப்பாருங்கள். என்
னத்தினாலெனில், பூமியிலே பேசினவனை
அசட்டைபண்ணின அவர்கள் (ஆக்கினைக்
குத்) தப்பாமலிருக்க, பரமண்டலத்திலிரு
ந்து பேசுகிறவரை நாம் விட்டு விலகினால்,
(ஆக்கினைக்குத்)* தப்பிப்போவோமா? * உ:
௪. ௨௯: ௰. ௨௮: ௨௯,
௨௰௬. அவருடைய சத்தம் முற்காலத்திலே
பூமியை அசையப்பண்ணிற்று. அன்றியும்
* இனிமேல் ஒருகாலத்திலே பூமியைமாத்
திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணு

வேனென்று இப்பொழுது வாக்குத்தத்தஞ்செய்திருக்கிறார். * ஆகா. ௨: ௭.

௨௭. இனிமேல் ஒருகாலத்திலேயென்று சொன்ன வசனம் அசைவில்லாதவைகள் நிலையாயிருக்கத்தக்கதாக (அற்பமாய்ச்) செய்யப்பட்டவைகளாகிய அசைவுள்ளவைகள் நீக்கப்படுமென்று குறிக்கின்றது.

௨௮. ஆனதால், அசைவில்லாத இராச்சியத்தை நாம் பெற்றுக்கொண்டிருக்க, * நம்முடைய பராபரன் (பொல்லாதவர்களைப்)பட்சிக்கும் அக்கினியாய் இருக்கிறபடியினாலே, * ரு மோ. ௪: ௨௪.

௨௯. * நாம் வணக்கத்தோடும், மெய்த்தேவ பத்தியோடும் பராபரனுக்குப்பிரியமாய் ஆராதனை செய்பத்தக்க கிருபையுள்ள ஈவைப்பற்றிக்கொள்ளக்கடவோம். * பிலி. ௨: ௰௨.

௰௩ அதிகாரம்.

[(௧) தயாளமும், (௪) கற்புமுடையவர்களாயிருக்கவும், (௫) பொருளாசையை நீக்கவும், (௭) தேவ ஊழியக்காரர்களைப்பராமரிக்கவும், (௯) அந்நிய உபதேசங்களுக்கு எச்சரிக்கையாய் நிற்கவும், (௰) கிறிஸ்துவை அறிக்கையிடவும், (௰௬) தருமஞ்செய்யவும், (௰௭) அதிகாரிகளுக்குக்கீழ்ப்படியவும், (௰௮) தனக்காகச்செபம்பண்ணவுஞ்சொல்லி, (௨௰) நிருபத்தை முடித்தது.]

* சகோதரசிநேகம் நிலையாயிருக்கக்கடவது. * உரோ. ௰௨: ௰.

௨. அந்நியரை யுபசாரஞ்செய்கிற குணத்தினாலே சிலர் (தங்களுக்குத்) தெரியாதபடிக்குத் * தேவதூதரை யுபசரித்தால் நீங்கள் அந்நியரை யுபசாரஞ்செய்ய மறவாதிருப்பீர்களாக. * ௧ மோ. ௰௮: ௩. ௰௯: ௧.

௩. கட்டப்பட்டிருக்கிறவர்களோடேகூடக்கட்டப்பட்டவர்கள்போல நீங்கள் அவர்களை நினைத்துக்கொள்ளுங்கள். உங்களையுஞ்சரீரத்தோடிருக்கிறவர்களென்றறிந்து பாடுபடுகிறவர்களை நினைத்துக்கொள்ளுங்கள்.

௪. விவாகம்பண்ணுதல் யாவருக்குள்ளுங்கனம்பொருந்தியதாயிருக்கக்கடவது. (சமுசாரமார்க்கத்தாருடைய) படுக்கை (விபசாரத்தினாலே) அசுசிப்படாதிருப்பதாக. * வேசிமார்க்கருக்கும், விபசாரக்காரருக்கும் பராபரன் நியாயத்தீர்ப்புக்கொடுப்பாரே. * கலா. ரு: ௰௯—௨௧. ஆறி. ௨௨: ௰ரு.

௫. * உங்களுக்குண்டானவைகள் போதுமென்கிற மனதுள்ளவர்களாய்ப்பணத்தின்மேலுள்ள ஆசையில்லாமல் நடந்துகொள்வீர்களாக. † நான் உன்னை ஒருக்காலும் விட்டுவிலகுவதுமில்லை. உன்னை ஒருக்காலுங்கைவிடுவதுமில்லையென்று அவர் அளிருச்செய்தாரே. * ௧ தீமோ. ௬: ௬—௰௩. † யோசு. ௧: ரு.

௬. * அதினாலே நான் தயிரியங்கொண்டு, கர்த்தர் எனக்குச்சகாயராயிருக்கிறார். மனிதனானவன் எனக்கென்னசெய்வானோவென்று நான் பயப்படவேண்டுவதில்லையென்று சொல்லலாமே. * சங்கீ. ௫௬: ௪.

௭. தேவவசனத்தை யுங்களுக்குப்போதித்து உங்களை நடத்திப்போனவர்களை நீங்கள் ஞாபகப்படுத்தி, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ப்பார்த்து, (அவர்களுடைய) விசுவாசத்தைப்பின்பற்றுங்கள்.

௮. * இயேசுக்கிறிஸ்துவானவர் நேற்றும், இன்றைக்கும், என்றென்றைக்கும், ஒரேவிதமாயிருக்கிறவர். * அறி. ௧: ௰௭, ௰௮.

௯. * பலவிதமாயும், அந்நியமாயுமிருக்கிற போதனைகளால் நீங்கள் சிதற அடிக்கப்படாதிருப்பீர்களாக. போசனபதார்த்தங்களாலேயல்ல, (தேவ) † கிருபையினாலே (உங்கள்) மனது உறுதியாகிறதே நன்மையாயிருக்கின்றது. போசனபதார்த்தங்களைக்குறித்து, முயற்சியாயிருக்கிறவர்கள் அதினாலே பிரயோசனம் அடையவில்லையே. * எபே. ௪: ௰௪, ௰ரு. † எபே. ௫: ௰௬—௰௬.

௰. நமக்குண்டாயிருக்கிற பலிபீடத்திலுள்ளவைகளைக்கூடாரத்தில் ஆராதனை செய்கிறவர்கள் புசிக்கிறதற்கு அதிகாரமில்லை.

௰௧. அதெப்படித்தெரியுமெனிற் * பிரதான ஆசாரியன் பாவப்பலிக்காக மிருகங்களின் இரத்தத்தைப்பரிசுத்த ஸ்தலங்களிற்கொண்டுவருகிறபொழுது, அந்த மிருகங்களுடைய உடல்கள் பாளயத்திற்குப்புறம்பே கொண்டுபோய்ச் சுட்டெரிக்கப்படுமே. * ௨ மோ. ௨௯: ௰௪.

௰௨. அந்தப்படி இயேசுவானவரும் தமது திரு இரத்தத்தினாலே சனங்களைப்பரிசுத்தஞ் செய்யும்படிக்குப்பட்டினத்துக்குப்புறம்பே பாடுபட்டார்.

௰௩. ஆனதால் நாம் அவருடனேகூட நிந்தையைச்சகிக்கிறவர்களாய் அவரோடேகூடப்பாளயத்திற்குப்புறம்பே புறப்படக்கடவோம். நிலைமையானபட்டினமிங்கே நமக்கில்லையே.

௰௪. மறுலோகத்திலுள்ளதை மிகவுந் தேடுகிறோமே.

௰௫. மேலும் * அவருடைய திருநாமத்திற்குத்துதியை அறிக்கையிடுகிற உதடுகளின் கனியாகிய தோத்திரப்பலியை நாம் அவர் மூலமாய் எப்பொழுதும் பராபரனுக்குச் செலுத்தக்கடவோம். * சங்கீ. ௫௰: ௨௫. ஓசெ. ௰௪: ௩.

௰௬. அன்றியும் * நன்மைசெய்தலையும், (எளியவர்களுக்குக்) கொடுத்தலையும் மறவாதிருப்பீர்களாக. † அப்படிப்பட்ட பலிகள் மேற் பராபரன் மிகவும் பிரியமாயிருக்கிறாரே. * கலா. ௬: ௰. † ஓசெ. ௬: ௬.

௰௭. * உங்களை நடத்துகிறவர்கள் (கர்த்

தாவுக்குக்) கணக்கு ஒப்புவிக்கிறவர்களாய்,
உங்கள் ஆத்துமாக்களுக்காக விழித்துக்
கொள்ளுகிறார்களே. ஆகையால் அவர்கள்
துக்கமாயல்ல, சந்தோஷமாய் அப்படிச்
செய்யும்படிக்கு நீங்கள் அவர்களுக்குக்கீழ்
ப்படிந்து அடங்குவீர்களாக. (அவர்கள்
துக்கமாய் அப்படிச்செய்தால்) அது உங்க
ளுக்குப்பிரயோசனமாய் இருக்கமாட்டா
தே. * க தெச. ௫: ௰௨, ௰௩.

௰௮. நாங்கள் எவ்விதத்திலும் நன்றாய்
நடக்க விரும்பிக்கொண்டு, நற்சாட்சிசொ
ல்லுகிற மனது எங்களுக்குண்டென்று நாங்
கள் நிச்சயமாயிருக்கிறபடியால், எங்களுக்
காகச்செபம் பண்ணுவீர்களாக.

௰௯. நான் அதிசீக்கிரமாய் உங்களுக்குத்
திரும்பக்கொடுக்கப்படும்படிக்கு நீங்கள்
அப்படிச்செய்யவேண்டுமென்று அதிகமா
ய்க்கேட்டுக்கொள்ளுகிறேன்.

௨௰. அன்றியும் நம்முடைய கர்த்தருமா
ய், * ஆடுகளின் பெரிய மேய்ப்பருமாய் இ
ருக்கிற இயேசுவை நித்திய உடம்படிக்கைக்
கேற்ற இரத்தத்தினாலே மரித்தோரிலிருந்
து புறப்படப்பண்ணின சமாதானத்திற்குக்
காரணராகிய பராபரன். * யோவா. ௰: ௰௧.

௨௧. தமது சித்தத்தின்படி நீங்கள் செய்
கிறதற்கேதுவாக எவ்விதமான நற்கிரியை
க்கும் உங்களைத்தகுதியானவர்களாக்கி,
இயேசுக்கிறிஸ்துவின்மூலமாய், தமது சந்
நிதானத்திலே பிரியமானதை உங்களுக்
குள்ளே நடப்பிக்கக்கடவர். அவருக்கு என்
றென்றைக்குந் துதியுண்டாவதாக. ஆமென்.

௨௨. சகோதரரே! நான் சுருக்கமாய் உ
ங்களுக்கு எழுதின இந்தப்புத்திகளை அங்கீக
ரிக்கும்படிக்கு வேண்டிக்கொள்ளுகிறேன்.

௨௩. சகோதரனாகிய தீமோத்தேயு விடுத
லையாக்கப்பட்டானென்று அறிவீர்களாக.
அவன் சீக்கிரமாய் வந்தால், அவனுடனே
கூட உங்களைக்காண்பேன்.

௨௪. உங்களை நடத்துகிறவர்களுக்கும், ம
ற்றப்பரிசுத்தவான்கள் யாவருக்கும் (என்
னாலே) வாழ்த்துதல் செய்யுங்கள்.

௨௫. இத்தாலிதேசத்தார் யாவரும் உங்
களுக்கு வாழ்த்துதல் செய்கிறார்கள். தேவ
கிருபை யுங்களெல்லாரோடுமிருக்கக்கடவது.
ஆமென்.

அப்போஸ்தலனாகிய

யாக்கோபு எழுதின பொதுவான நிருபம்.

JAMES.

க அதிகாரம்.

[(க) நாம் துன்பத்திலே சந்தோஷப்பட்டு,
(௫) பொறுமை அடைய, பராபரனை
வேண்டிக்கொள்ளவும், (௰௩) நம்முடைய
சோதனைகளினால் உண்டாகும் குறைச்சல்
களையும், பாவங்களையும் பராபரன்மேற்
சுமத்தாமல், (௰௯) திருவசனத்துக்குச்செ
விகொடுத்துச்சிந்தித்து, அதின்படியே ந
டக்கப்பிரயாசப்படவும், (௨௬) மாயக்கார
ராகாமல் தேவபத்தர்களாய் இருக்கவும் கற்
பித்தது.]

பராபரனுக்கும், கர்த்தராகிய இயே
சுக்கிறிஸ்துவுக்கும், ஊழியக்காரனா
கிய யாக்கோபு அங்கங்கே * சிதறி இருக்
கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் எழு
துகிறதாவது; * க பேது. க: க.

௨. நீங்கள்வாழ்க. என் சகோதரரே!
* உங்கள் விசுவாசத்தைப்பரிட்சைபார்த்
தால், பொறுமையை உண்டாக்குமென்று
அறிந்து இருக்கிறபடியால், * உரோ. ௫:
௩, ௪.

௩. தூண்டுகிற பல துன்பங்களில், நீங்கள்
அகப்படும்பொழுது, * அதை மிகுந்த சந்
தோஷத்திற்கு ஏதுவாக எண்ணிக்கொள்
ளுங்கள். * மத். ௫: ௰௧—௰௨.

௪. நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்க
ளாய் இராமல் நிறை உள்ளவர்களாயும்,
தெறினவர்களாயும் இருக்கத்தக்கதாக, அந்
தப்பொறுமை நிறைந்த கிரியையையே
செய்யக்கடவது.

௫. உங்களிலொருவன் * நற்புத்தியிற் கு
றைவுள்ளவனானால், யாவருக்குஞ் சம்பூரண
மாய்க்கொடுக்கிறவருமாய், ஒருவரையும்
அதட்டாதவருமாயிருக்கிற பராபரனிடத்
தில் அவன் கேட்கக்கடவன். அப்பொழுது
அவனுக்குக்கொடுக்கப்படும். * க இரா.
௩: ௯—௰௨.

௬. * அவன் எவ்வளவாகிலுஞ் சந்தேகப்
படாமல், விசுவாசத்தோடே கேட்கக்கட

வன். சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிக்கப்பட்டு அசைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருப்பானே. * மாற். ௰௧: ௨௪.

௭. அப்படிப்பட்ட மனிதன் கர்த்தரிடத்திலே எதையாகிலும் பெற்றுக்கொள்வேனென்று நினையாதிருப்பானாக.

௮. இருமனமுள்ளவன் தன் வழிகள் யாவிலேயும், நிலையற்றவனாயிருக்கிறான்.

௯. (அன்றியும்) தாழ்மைப்படுகிற சகோதரன் தான் * உயர்த்தப்படுவதைக்குறித்து மேன்மை பாராட்டக்கடவன். * ௨ கொரி. ௯: ௰.

௰. ஐசுவரியவான் தான் * புல்லின் பூவைப்போல ஒழிந்துபோவதால் தாழ்மைப்படுவதைக்குறித்து மேன்மை பாராட்டக்கடவன் * ௧ பேது. ௧: ௨௪.

௰௧. சூரியன் உதயமாகி வெயிலைக்கொடுக்கும்பொழுது, புல் உலர்ந்து, அதின் பூ உதிர்ந்து, அதின் அழகான வடிவு அழிந்துபோமே. அப்படிப்போல ஐசுவரியவானுந் தன் மார்க்கங்களிலே * யழிந்துபோவான். * சங். ௪௯: ௰௭.

௰௨. சோதனையைச்சகிக்கிற மனிதன் * பாக்கியமுள்ளவன். ஏனென்றால், அவன் உத்தமனாக்கப்பட்டபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு † வாக்குத்தத்தம்பண்ணின ஜீவ கிரீடத்தைப்பெறுவான். * ௧ பேது. ௧: ௬, ௭. † அறி. ௨: ௰.

௰௩. தூண்டிவிடப்படுகிற எவனும் பராபரனால் தூண்டிவிடப்படுகிறேனென்று சொல்லாதிருப்பானாக. பராபரன் பொல்லாங்குகளால் தூண்டிவிடப்படவும், பாவத்திற்கேதுவாக ஒருவனையுந் தூண்டிவிடவுமாட்டாரே.

௰௪. அவனவன் தன் தன் சுய இச்சையினாலே தூண்டி யிழுக்கப்பட்டுச்சோதிக்கப்படுகிறான்.

௰௫. பின்பு இச்சையானது கருப்பந்தரித்துப்பாவத்தைப்பிறப்பிக்கும். பாவம் நிறைவேறினபொழுது, அது மரணத்தை யுண்டாக்கும்.

௰௬. எனக்குப்பிரியமான சகோதரரே! வஞ்சிக்கப்படாதிருப்பீர்களாக.

௰௭. எந்த * நல்ல ஈவும், நிறைவுள்ள எந்தவரமும் உயரத்தினின்று சுடர்களின் பிதாவினாலே வருகின்றன. அவருக்கு † எவ்வளவாகிலும் மாறுதலும், வேற்றுமையின் நிழலுமில்லை. * மத். ௭: ௰௧. † ௧ யோவா. ௧: ௫. ௫ மோ. ௩௨: ௪.

௰௮. அவர் சித்தமானபடியால், தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாகும்படிக்கு, நம்மைச் * சத்தியத்தின் வசனத்தினாலே ஜெனிப்பித்தார். * ௧ பேது. ௧: ௨௩

௰௯. ஆகையால், எனக்குப்பிரியமான சகோதரரே! யாவருங் கேட்கிறதற்குத்தீவிரமாயும், * பேசுகிறதற்குத்தாமதமாயும், * வாக். ௰௭: ௨௭, ௨௮.

௨௰. பராபரனுக்கேற்ற நீதியை மனிதருடைய * கோபம் நடப்பிக்கமாட்டாதபடியினாலே, கோபிக்கிறதற்குத்தாமதமாயுமிருக்கக்கடவர்கள். * பிர. ௭: ௯.

௨௧. ஆகையால் * அழுக்கு யாவையும் மிகுதியான பொல்லாங்குகளையும், நீங்கள் தள்ளிவிட்டு நடப்பட்டதாயும், உங்கள் ஆத்துமாக்களை யிரட்சிக்கத்தக்கதாயுமிருக்கிற வசனத்தைச்சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள். * கொலோ. ௩: ௮, ௯.

௨௨. அல்லாமலும் நீங்கள் தப்பானயோசனையினாலே யுங்களை * வஞ்சியாதபடிக்கு, வசனத்தைக்கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயுமிருப்பீர்களாக. * மத். ௭: ௨௪—௨௭.

௨௩. என்னத்தினாலெனில், ஒருவன் வசனத்தைக்கேட்டும் அதின்படி செய்யாதவனானாற் கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப்பார்க்கிற மனிதனுக்கொப்பாயிருப்பான்.

௨௪. அவன் தன்னைத்தானே பார்த்தபின்பு, புறப்பட்டுப்போனவுடனே தானிருந்தவிதத்தை மறப்பான்.

௨௫. சுவாதீனத்திற்கேதுவான நிறைவுள்ள பிரமாணத்தை யுற்றுப்பார்த்து அதிலே நிலையாயிருக்கிறவனே (அதை) மறந்துபோகத்தக்கதாகக்கேட்கிறவனாயிராமல் அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயுமிருந்து தன் செய்கையிற் * பாக்கியவானாயிருப்பான். * யோவா. ௰௩: ௰௭.

௨௬. உங்களிலொருவன் * தன்னாவை யடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்துந் தன்னைத்தேவபத்தியுள்ளவனென்று நினைத்தால் அவனுடைய தேவபத்தி வீணாயிருக்கும். * சங். ௩௪: ௰௩.

௨௭. திக்கற்ற பிள்ளைகளும், கைம்பெண்களும்படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும, * உலகத்தால் அசுசிப்படாதபடிக்கு, தன்னைக்காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய பராபரனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பத்தியாயிருக்கின்றது. * ௧ யோவா. ௨: ௰௫, ௰௬.

௨ அதிகாரம்.

[(௧) ஐசுவரியவான்களைமாத்திரங்கனம்பண்ணி ஏழைகளை யிகழ்வது கிறிஸ்துமார்க்கத்துக்கொவ்வாதென்றும், (௰௩) யாவர்மேலும் அன்பையும், இரக்கத்தையும்பாராட்டவேண்டுமென்றும், (௰௪) கிரியையில்லாத விசுவாசத்திற் பெருமை பாராட்டக்கூடாதென்றும், (௰௭) அது செத்தவிசுவாசமும், (௰௯) பேய்களுடைய விசுவாசமுமாயிருக்கிறதொழிய, (௨௧) ஆபிரகாம், (௨௫) ரா

காப்என்பவர்களின் விசுவாசமாயிருக்கவில்லையென்றுஞ் சொல்லியது.]

என் சகோதரரே! மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசம் உங்களுக்குள்ளே பட்சபாதத்தோடே யிராதபடிக்குப்பாருங்கள்.

௨. அதெப்படியெனில், பொன்மோதிரத்தையும், பிரகாசமுள்ள வஸ்திரத்தையுந்தரித்திருக்கிற ஒரு மனிதனும், கந்தையான வஸ்திரத்தைத்தரித்திருக்கிற ஒரு தரித்திரனும் உங்கள் செப ஆலயத்திற் பிரவேசிக்கும்பொழுது,

௩. பிரகாசமுள்ள வஸ்திரத்தைத்தரித்தவனை வணக்கமாய் நோக்கி நீர் கனமாய் இவ்விடத்திலுளுக்காருமென்றும், தரித்திரனை நீ அங்கே நில்லு. அல்லது இங்கே என் பாதப்படியினிடத்திலே உளுக்காரு என்றும் நீங்கள் சொன்னால்,

௪. உங்களுக்குள்ளே பேதகம்பண்ணித் துர்ச்சிந்தனைகளோடே நியாயாதிபதிகளாவீர்களல்லவா?

௫. எனக்குப்பிரியமான சகோதரரே! கேளுங்கள் விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குத்தாம் வாக்குத்தத்தம்பண்ணின இராச்சியத்தைச்சுதந்தரிக்கிறவர்களாகவும், * இவ்வுலகத்தின் தரித்திரரைப்பராபரன் தெரிந்துகொள்ளவில்லையா? * ௧ கொரிந். ௧: ௨௬—௨௮.

௬. அப்படியிருந்தும், நீங்கள் தரித்திரனைக்கனஈனம் பண்ணிவருகிறீர்கள். ஐசுவரியவான்களல்லவோ உங்களை யொடுக்குகிறார்கள். அவர்களல்லவோ உங்களை நியாயாசனங்களுக்கு முன்பாக இழுக்கிறார்கள்.

௭. அவர்களல்லவோ உங்களுக்குக்கொடுக்கப்பட்ட நல்ல நாமத்தைத் தூஷணிக்கிறார்கள்.

௮. உன்மேல் அன்பாயிருக்கிறதுபோலப் * பிறனிடத்திலேயும் அன்பு கூருவாயாகவென்று வேத வாக்கியஞ்சொல்லுகிற இராசரிகமான பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மை செய்வீர்கள். பட்சபாதமாயிருப்பீர்களானாற் பாவத்தை நடப்பித்து, * மாற். ௰௨: ௩௧.

௯. அக்கிரமக்காரரென்று நியாயப்பிரமாணத்தாற் கண்டிக்கப்படுவீர்களே.

௰. எப்படியெனில், ஒருவன் * வேதநூல் முழுவதையுங் கைக்கொண்டாலும், ஒரேபிரமாணத்திற்குத்தப்பிநடந்தால் எல்லாப்பிரமாணங்களுக்கும் விரோதமாய்க்குற்றவாளியாய் இருப்பான். * ௫ மோ. ௨௭: ௨௬. மத். ௫: ௰௯,

௰௧. என்னத்தினாலென்றால், விபசாரம்பண்ணாதிருப்பாயாகவென்று சொன்னவர் கொலை செய்யாதிருப்பாயாகவென்றும் சொன்னார். ஆனதால், நீ விபசாரம்பண்ணாமல் இருந்தாலும், கொலை செய்தாயானால் வேதநூலை மீறி நடந்திருப்பாயே.

௰௨. * சுவாதீனத்திற்கு ஏதுவான வேதநூலின்படி நியாயத்தீர்ப்பு அடையப்போகிறவர்களாய்ப்பேசியும், செய்தும் இருப்பீர்களாக. * ௪: ௨௫.

௰௩. என்னத்திற்காகவென்றால், * இரக்கம் செய்யாதவனுக்கு இரக்கம் இல்லாமல் நியாயத்தீர்ப்புக்கிடைக்கும். நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும். * மத். ௰௮: ௨௮—௩௫.

௰௪. என் சகோதரரே! * ஒருவன் தனக்கு விசுவாசம் உண்டென்று சொல்லியும், கிரியைகள் இல்லாதவனானால், அவனுக்கு என்ன பிரயோசனம் வரும்? விசுவாசம் அவனை இரட்சிக்குமா? * மத். ௭: ௨௧.

௰௫. சகோதரன் அல்லது, சகோதரி வஸ்திரம் இல்லாதவர்களாயும், நாடோறும் வேண்டிய பிழைப்பில்லாதவர்களாயும், இருக்கும்பொழுது,

௰௬. உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி, நீங்கள் சமாதானத்தோடே போய்க்குளிர்காய்ந்து பசியாறுங்களென்று சொல்லி, சரீரத்திற்குவேண்டியவைகளை அவர்களுக்குக்கொடாவிட்டால் அதினால் என்ன பிரயோசனம் இருக்கும்?

௰௭. அப்படிப்போல விசுவாசமும் கிரியைகள் இல்லாதிருந்தால்,

௰௮. தனியேயிருப்பதினாலே செத்ததாய் இருக்கும். ஒருவன் வந்து உனக்கு விசுவாசமுண்டு. எனக்குக்கிரியைகளுண்டு. கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக்காண்பி. நான் என் விசுவாசத்தை என் கிரியைகளாலே காண்பிக்கிறேனென்பான்.

௰௯. பராபரன் ஒருவருண்டென்று விசுவாசிக்கிறாய். அப்படிச்செய்கிறது சரிதான். பசாசுகளும் அப்படி விசுவாசித்து நடுங்குகின்றன.

௨௰. ஆ, வீணான மனிதனே! கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்றறிய விரும்புகிறாயா?

௨௧. நம்முடைய பிதாவாகிய * ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின்மேல் ஏற்றிவைத்தபொழுது, கிரியைகளினாலேயல்லவோ நீதிமானாக்கப்பட்டான். * ௧ மோ. ௨௨: ௯—௰௨.

௨௨. அவனுடைய விசுவாசம், அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, அந்தக்கிரியைகளினாலே முடிக்கப்பட்டதையும்.

௨௩. * ஆபிரகாம் பராபரனை விசுவாசித்தான். (அது) அவனுக்கு நீதியாகவெண்

னப்பட்டதென்கிற வேதவாக்கியம் நிறைவேற்றப்பட்டதையும், † அவன் பராபரனுடைய சிநேகிதனென்னப்பட்டதையும் பார்த்திருக்கிறாயே. * ௧ மோ. ௰௫: ௬. † ஏசா. ௪௧: ௮:

௨௪. ஆனதால் ஒரு மனிதன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல. கிரியைகளினாலேயும், நீதிமானாக்கப்படுகிறானென்றறிவீர்களாக.

௨௫. அப்படிப்போல வேசியாய் இருந்த இராகாபென்பவள் * தூதர்களை யேற்றுக்கொண்டு வேறு வழியாய் அனுப்பிவிட்ட பொழுது, கிரியைகளினாலேயல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள். * யோசு. ௨: ௧.

௨௬. ஆகையால், ஆவியில்லாத சரீரம் செத்ததாய் இருக்கிறதுபோலக்கிரியைகள் இல்லாத விசுவாசமும் செத்ததாய் இருக்கின்றது.

௩ அதிகாரம்.

[(௧) நாம் மற்றவர்களைக்கடூரமாயும், அகங்காரமாயும், கடிந்துகொள்ளாமல், (௮) நன்மைக்கும், தீமைக்கும், கருவியாய் இருக்கிற நாவையடக்கவேண்டுமென்றும், (௰௩) மெய்ஞ்ஞானிகள் பகையும், போராட்டமுமில்லாமற் சாந்தமும், சமாதானமுமாய் இருக்கிறார்களென்றும் சொல்லியது.]

என் சகோதரரே! அதிக ஆக்கினையை அடைவோம் என்று நாமறிந்திருக்க (உங்களில்) அநேகர் போதகராகாதிருப்பீர்களாக.

௨. நாமெல்லாரும் அநேக விதமாய்த்தவறுகிறோம். சொல் தவறாமல் இருக்கிறவனே தேறினவனும், தன் சரீரமனைத்தையும், (ஞானக்) கவனத்தினாலே அடக்கிக்கொள்ளுகிறவனுமாயிருக்கிறான்.

௩. குதிரைகளைப்பாருங்கள். அவைகள் நமக்குக்கீழ்ப்படியும்படிக்கு, வாய்களிற் கவிஙங்களைப்போட்டு, அவைகளுடைய முழுச்சரீரத்தையும் நடத்துகிறோம்.

௪. கப்பல்களையும் பாருங்கள். அவைகள் இவ்வளவு பெரியவைகளாய்க்கடுங்காற்றுக்களால் அடிக்கப்படாமலும் அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எவ்விடமோ அவ்விடத்திற்கு மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும்.

௫. அப்படிப்போல * நாவானதும் சிறிய அவயவமாய் இருந்தும் பெருமையானவைகளைச்செய்யும் கொஞ்ச நெருப்பைப்பாருங்கள். அது எத்தனைபெரிய காட்டைக்கொளுத்துகின்றது, நாவே நெருப்பு. * சங்கீ. ௰௨: ௪, ௫. ௫௭: ௪. ௭௩: ௮, ௯.

௬. அது அநீதியினால் நிறைந்த லோகம். அந்தப்படி நாவு நம்முடைய அவயவங்களுக்குள்ளிருந்து, * முழுச்சரீரத்தையும் கறைப்படுத்துகிறதாயும், சுபாவ முறைமையைக்கொளுத்துகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயுமிருக்கின்றது. * மத்தே. ௰௫: ௰௮.

௭. எல்லாக்காட்டு மிருகங்களுக்கும், பறவைகளுக்கும், ஊர்வனவைகளுக்கும், நீரிலுள்ள செந்துக்களுக்குமுண்டாயிருக்கிற சுபாவம் கீழ்ப்படியப்பண்ணப்படும். அப்படி மனிதருடைய சுபாவத்தாற் கீழ்ப்படியப்பண்ணப்பட்டதுமுண்டு.

௮. நாவைமாத்திரம் ஒரு மனிதனுங்கீழ்ப்படுத்தமாட்டான். அது அடங்காத பொல்லாங்குள்ளதுமாய், சாவுக்கேற்ற விஷத்தால் நிறைந்ததுமாய் இருக்கிறது.

௯. பிதாவாகிய பராபரனை நாம் அதினாலே தோத்திரிக்கிறோம். பராபரனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனிதரையதினாலே சபிக்கிறோம்.

௰. ஆசீர்வதித்தலும், சபித்தலும் ஒரேவாயிலிருந்து புறப்படுகின்றன. என்சகோதரரே! இப்படியிருக்கக்கூடாது.

௰௧. நீரூற்றில் ஒரே துவாரத்திலிருந்து தித்திப்பும், கசப்புமுள்ள தண்ணீர் சுரக்குமா!

௰௨. என் சகோதரரே! அத்திமரம் ஒலிவப்பழங்களையும், அல்லது திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படிப்போல உவர்ப்பான நீரூற்றுத்தித்திப்பான சலத்தைக்கொடுக்கவுமாட்டாது.

௰௩. உங்களில் ஞானியுமாய், அறிவுள்ளவனுமாய் இருக்கிறவனெவனோ அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை * நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன். * எபே. ௫: ௮—௰௫.

௰௪. உங்களிருதயத்திலே கசப்பான வயிராக்கியத்தையும், விரோதத்தையும் வைத்துக்கொண்டால், நீங்கள் மேன்மைபாராட்டாமலும், சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய்யைச்சொல்லாமலுமிருப்பீர்களாக.

௰௫. அப்படிச்செய்கிறது உயரத்திலிருந்து வருகிற ஞானமல்ல, அது இந்தப்பூமிக்கும், மிருக சீவனுக்கும் பேய்க்குமுரித்தானது.

௰௬. வயிராக்கியமும், விரோதமும் எங்கேயோ அங்கே கலக்கமும், சகலவிதமான துர்ச்செய்கைகளுமுண்டே.

௰௭. உயரத்திலிருந்து வருகிறஞானம் முதலாவது, கற்புள்ளதுமாய், பின்பு சமாதானமும், சாந்தமும் இணக்கமுமுள்ளதுமாய், இரக்கத்தாலும், நற்கிரியைகளாலும் நிறைந்ததுமாய், பட்சபாதமில்லாததுமாய்,வஞ்சனையில்லாததுமாய் இருக்கின்றது.

௰௮. இப்படி, * சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்தோடே நீதியாகிய கனி விதைக்கப்படுகின்றது. * ஏசா. ௩௨: ௰௭, ௰௮.

௪ அதிகாரம்.

[(௧) பொருளாசை, (௪) அசுத்தம், (௫) பொறுமை, (௰௧) மற்றவர்களைக்குற்றமாய் நிருணயிக்கிற குணமுதலியவைகளை நீக்கி, (௰௩) லவுகிக அலுவல்களில் நற்பலனடைவதை நம்பாமல், இசீவன் அநித்தியமென்று உணர்ந்து, நம்மையும், நம்முடைய கவலைகளையும் பராபரனுடைய பராமரிப்புக்கு ஒப்புக்கொடுக்கச்சொல்லியது.]

உங்களுக்குள்ளே யுத்தங்களும், சண்டைகளும் எதினாலே வருகின்றன. உங்கள் அவயவங்களிற் * போர்செய்கிற செல்வத்திற்கு ஏற்ற இச்சைகளாலல்லவோ வருகின்றன. * ௧ பேது. ௨: ௰௧.

௨. நீங்கள் இச்சித்தும் உங்களுக்கு அகப்படுகிறதில்லை. நீங்கள் கொலைசெய்துந் துணிவுள்ளவர்களாயிருந்தும் (இஷ்டப்படி) அடையாமற்போகிறீர்கள். நீங்கள் சண்டையும், யுத்தமும்பண்ணியும் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதால் உங்களுக்குச் சித்திக்கிறதில்லை.

௩. உங்கள் இச்சைகளுக்கு ஏற்றதாகச் செலவழிக்கும்படிக்குத் * துர்க்குணமாய் விண்ணப்பம் பண்ணுகிறதால் நீங்கள் விண்ணப்பம் பண்ணியும் பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறீர்கள். * ஏசாயா. ௧: ௰௫. யோவா. ௯: ௩௧.

௪. ஆ. விபசாரரே! விபசாரிகளே! * உலகத்தோடே சிநேகமாயிருக்குதல் பராபரனுக்கு விரோதமான பகையாயிருக்கின்றதென்று நீங்கள் அறியவில்லையா! ஆகையால் உலகத்திற்குச்சிநேகமாயிருக்க விரும்புகிறவன் பராபரனுக்குப்பகைஞனாயிருக்கிறான். * ௧ யோவா. ௨: ௰௫, ௰௬.

௫. அல்லது வேதநூல் வீணாய்ச்சொல்லுகிறதென்றும், * நம்மிடத்தில் வாசமாய் இருக்கிற ஆவியானவர் பொறுமைக்கேதுவாக இச்சிக்கிறாரென்றுமா நினைக்கிறீர்கள். * ௪ மோ. ௰௧: ௨௯.

௬. அவர் அதிக தயவை * அநுக்கிரகஞ் செய்கிறாரே. ஆனபடியால் அகந்தையுள்ளவர்களுக்குப் † பராபரன் விரோதித்து மனத்தாழ்மை உள்ளவர்களுக்குக்கிருபையை அளிக்கிறாரென்று சொல்லுகிறார். * ௧ பேது. ௫: ௫. † வாக்கி. ௩: ௩௪.

௭. ஆகையாற் பராபரனுக்குக்கீழ்ப்படியுங்கள். * பசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது † அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். * ௧ பேது. ௫:௯. † மத். ௪: ௰௧.

௮. பராபரனைச்சேருங்கள். அப்பொழுது அவரும் உங்களைச்சேர்வார். ஆ, பாவிகளே! உங்கள் * கைகளைச்சுத்தமாக்குங்கள். இருமனமுள்ளவர்களே! உங்களிருதயங்களைப்பரிசுத்தஞ்செய்யுங்கள். * ஏசா. ௧: ௰௬.

௯. நீங்கள் * உபத்திரவப்பட்டுத்துக்கமடைந்து அழுங்கள். உங்கள் நகைப்புத்துக்கப்படுதலாகவும், உங்கள் சந்தோஷஞ் சஞ்சலமாகவும் மாறக்கடவது. * மத். ௫: ௪.

௰ * கர்த்தருக்கு முன்பாகத்தாழ்மைப்படுங்கள். அப்பொழுது உங்களை யுயர்த்துவார். * ௧ பேது. ௫: ௬.

௰௧. சகோதரரே! * ஒருவருக்கொருவர் விரோதமாய்ப்பேசாதிருப்பீர்களாக. சகோதரனுக்கு விரோதமாய்ப்பேசி, தன் சகோதரனைக்குற்றப்படுத்துகிறவன் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய்ப்பேசி நியாயப்பிரமாணத்தைக்குற்றப்படுத்துகிறான். நியாயப்பிரமாணத்தைக்குற்றப்படுத்தினால், நீ நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவனாயிராமல், அதற்கு நியாயாதிபதியாயிருப்பாய். * மத். ௭: ௧—௫.

௰௨. நியாயப்பிரமாணத்தைக்கட்டளையிடுகிறவர் ஒருவரே. அவரே இரட்சிக்கவும், அழிக்கவும் வல்லமையுள்ளவர். * மற்றொருவனைக்குற்றப்படுத்துகிற நீயாவன்? * உரோ. ௰௪: ௪.

௰௩. மேலும் * நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்னவின்னபட்டினத்திற்குப்போய் அங்கே ஒருவருஷந் தங்கி வியாபாரம்பண்ணி, ஆதாயம் பெறுவோமென்கிறவர்களே! கேளுங்கள். * வாக். ௨௭: ௧. லூக். ௰௨: ௰௯—௨௰.

௰௪. நாளைக்கு நடப்பதை யறியாமலிருக்கிறீர்களே. உங்கள் சீவன் எப்படிப்பட்டது? கொஞ்சநேரந்தோன்றிப்பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே.

௰௫. மேற்சொல்லியதற்குப்பதிலாக நீங்கள் * ஆண்டவருக்குச்சித்தமானால் நாங்களும் உயிரோடிருந்தால், இப்படிச்செய்வோமென்று சொல்லவேண்டும். * அப். ௰௮: ௨௧.

௰௬. இப்பொழுது உங்கள் வீம்பானபேச்சுகளில் மேன்மை பாராட்டுகிறீர்கள். இப்படிப்பட்ட மேன்மைபாராட்டல் யாவும் பொல்லாங்காயிருக்கின்றன.

௰௭. ஆனதால், * ஒருவன் நன்மைசெய்ய அறிந்திருந்தும் அப்படிச்செய்யாவிட்டால் அவனுக்குப்பாவம் உண்டாயிருக்கும். * லூக். ௰௨: ௪௭.

௫ அதிகாரம்.

[(௧) அக்கிரமக்காரராகிய ஐசுவரியவான்கள் பராபரனுடைய கோபாக்கினைக்கு அஞ்சவும், (௭) தீர்க்கதரிசிகளும், யோபுஞ் சகித்தபடியே நாமுந் துன்பங்களைப்பொறுமையோடே சகிக்கவும், (௰௨) சத்தியம் பண்ணாமலிருக்கவும், (௰௩) தரித்திரத்தில் வேண்டிக்கொள்ளவும், செல்வத்திற்பாடவும், (௰௬) குற்றங்களை ஒருவருக்கொருவர் அ

றிக்கைபிட்டு ஒருவருக்காகவொருவர் செப
ம்பண்ணவும், (௰௯) சத்தியத்துக்கு வில
கிப்போன சகோதரனைச்சேர்ப்படுத்தவுஞ்
சொல்லியது.]

பின்னும் * ஐசுவரியவான்களே! கே
ளுங்கள். உங்கள்மேல்வருகிற உப
த்திரவங்களினிமித்தம் அலறி அழுங்கள்.
* லூக். ௬: ௨௪, ௨௫.
௨. * உங்கள் ஐசுவரியம் அழிந்து உங்கள்
வஸ்திரங்கள் பொட்டுப்பூச்சியினால் தின்னப்
பட்டுப்போயின. * மத்தே. ௬: ௰௯.
௩. உங்கள் பொன்னையும், வெள்ளியையும்
பாசிபிடித்தது. * அவைகளிலுள்ள பாசி
உங்களுக்கு விரோதமாகச்சாட்சியாயிருந்
து அக்கினியைப்போல உங்கள் சரீரங்க
ளைத்தின்னும். கடைசி நாள்களிலே பொக்
கிசத்தைச்சேர்த்தீர்கள். * யோபு. ௰௬:௮.
௪. பாருங்கள் உங்கள் வயல்களை அறுத்த
வேலைக்காரருடைய கூலி உங்களால் அநி
யாயமாய் வைக்கப்பட்டுக்கூப்பிடுகின்றது.
அறுத்தவர்களுடைய கூக்குரலும், சேனை
களையுடைய கர்த்தாவின் செவிகளிற்பட்டது
௫. பூமியிலே * நீங்கள் செல்வத்தோடும்,
சம்பிரமத்தோடுஞ் சீவனம்பண்ணினீர்கள்.
சிதைப்பு நாளுக்காகச்செய்கிறதுபோல உ
ங்களைக்கொழுப்பாக்கினீர்கள். * லூக்.
௰௬: ௰௯.
௬. உங்களுக்கு விரோதமாய் நில்லாத நீ
திமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத்தீர்த்
துக்கொலைசெய்தீர்கள்.
௭. இப்படியிருக்கச் (சகோதரரே!) கர்த்
தர் வருமளவும் * நீடிய பொறுமையாய்
இருங்கள். பாருங்கள் பூமியின் விலையேறப்
பெற்ற கனியை யடைய வேண்டுமென்றிரு
க்கிற குடியானவன் முன்மாரியும், பின்மாரி
யும் வருமளவும் நீடிய பொறுமையாகக்கா
த்திருக்கிறான். * லூக். ௨௧: ௰௯.
௮. நீங்களும் நீடிய பொறுமையாயிருந்
து கர்த்தர் வருகை சமீபமாயிருக்கிறபடி
யால் உங்களிருதயங்களை ஸ்திரப்படுத்துவீ
ர்களாக.
௯. சகோதரரே! நீங்கள் ஆக்கினைக்குள்
ளாகத்தீர்க்கப்படாதபடிக்கு, ஒருவருக்கு
விரோதமாய் ஒருவர் பெருமூச்சுவிடாதிருங்
கள். நியாயாதிபதி கதவுக்குமுன் நிற்கி
றாரே.
௰. என்சகோதரரே! கர்த்தருடைய நாமத்
தினாலேபேசின தீர்க்கதரிசிகள் துன்பப்பட்
டு, நீடிய பொறுமையாயிருந்ததால், அவர்
களை உங்களுக்கு மார்க்கத்தைக்காண்பிக்கி
றவர்களென்று ஏற்றுக்கொள்ளுங்கள்.
௰௧. * பொறுமையாய் இருக்கிறவர்களை
நாம் பாக்கியவான்களென்கிறோமே. † யோ
பென்பவன் காண்பித்த பொறுமையைக்கு
றித்துக்கேள்விப்பட்டிருப்பீர்கள். கர்த்தர்
மிகுந்த உருக்கமும், இரக்கமுமுள்ளவராய்
இருக்கிறாரென்று கர்த்தர் செய்தமுடிவினா
லே யறிந்திருக்கிறீர்கள். * மத். ௫: ௰, ௰௧.
யோபு ௧: ௨௧.
௰௨. பின்னும் என் சகோதரரே! எல்லாவ
ற்றிலும் எதை நீங்கள் செய்யவேண்டுமெ
ன்னில், * வானத்தின்பேரிலாகிலும், பூமியின்
பேரிலாகிலும் வேறொரு ஆணையினாலாகிலு
ஞ் சத்தியம்பண்ணாதிருப்பீர்களாக. நீங்கள்
ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு
உள்ளதை யுள்ளதென்றும், இல்லதை இல்
லதென்றும் பேசக்கடவீர்கள். * மத். ௫:
௩௪—௩௭.
௰௩. உங்களில் ஒருவன் * துன்பப்பட்டாற்
செபம் பண்ணக்கடவன். † ஒருவன் மகிழ்
ச்சியாயிருந்தாற் சங்கீதங்களைப்பாடக்கட
வன். * சங். ௫௰: ௰௫ † கொலோ. ௩: ௰௬.
௰௪. உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால்
அவன் சபையின் மூப்பரை வரவழைப்பா
னாக. அவர்கள் கர்த்தருடைய நாமத்தினா
லே * அவனிடத்தில் எண்ணெயைப்பூசி, அ
வனுக்காக விண்ணப்பம் பண்ணக்கடவர்
கள். * மாற். ௬: ௰௩.
௰௫. அப்பொழுது கர்த்தர் பிணியாளியை
எழுப்புதற்கு விசுவாசமுள்ள விண்ணப்பம்
அவனை இரட்சிக்கும். அவன் பாவங்களைச்
செய்தவனானால், அவை அவனுக்கு மன்னிக்
கப்படும்.
௰௬. நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு
உங்கள் அக்கிரமங்களை * ஒருவருக்கொரு
வர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர்
விண்ணப்பம் பண்ணுங்கள். † நீதிமான் உ
ண்மையாய்ப்பண்ணுகிற விண்ணப்பம் மிக
வும் பெலனாயிருக்கின்றது. *மத். ௫: ௨௩—
௨௪. † சங். ௱௪௫: ௰௮, ௰௯.
௰௭. எலியாவென்பவன் நம்மைப்போலப்
பாடுள்ள மனிதனாயிருந்தும், மழை பெய்
யாதபடிக்கு, உறுதியாய் விண்ணப்பம்பண்
ணினான். அப்பொழுது மூன்று வருஷமும்,
ஆறுமாதமும் * பூமியின்மேல் மழை பெய்
யவில்லை. * ௧ இரா. ௰௭: ௧.
௰௮. * மறுபடியும் விண்ணப்பம் பண்ணி
னான். அப்பொழுது பூமி தன் பலனைக்கொ
டுக்கத்தக்கதாக வானம் மழையைத்தந்த
து. * ௧ இரா. ௰௮: ௪௧.
௰௯. சகோதரரே! உங்களில் ஒருவன் சத்
தியத்தைவிட்டு விலகித்தப்பிப்போகும்பொ
ழுது, மற்றொருவன் அவனைத்திருப்பினால்,
௨௰. பாவியானவன் பிரவேசிக்குந் தப்பா
ன மார்க்கத்தினின்று அவனைத்திருப்புகிறவ
ன் ஒரு ஆத்துமாவை மரணத்திற்குத்தப்பு
வித்து மிகுந்த பாவங்களை மறைப்பானென்
று அறியக்கடவன்.

அப்போஸ்தலனாகிய

பேதுரு எழுதின பொதுவான முதலாம் நிருபம்.

I. PETER.

---

௧ அதிகாரம்.

[(௧) திவ்விய ஆசீர்வாதங்களுக்காக, பராபரனை ஸ்தோத்திரித்து, (௰) கிறிஸ்துவினாலுண்டான இரட்சிப்பு நூதனமான செய்தியாயிராமற் பூர்வத்திலே தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்டதைக்காட்டி, (௰௫) பராபரனுடைய வசனத்தினால், அவர்கள் மறுபிறப்படைந்திருக்கிறபடியால், அதற்கேற்றபடி பரிசுத்தராய் நடக்கப்புத்தி சொல்லியது.]

* பிதாவாகிய பராபரன் முன்னறிந்தபடியே ஆவியானவர் பரிசுத்தமாக்குதலினாலே கீழ்ப்படிதலுக்கும், இயேசுக்கிறிஸ்துவினுடைய இரத்தந் தெளிக்கப்படுகிறதற்குந் தெரிந்துகொள்ளப்பட்டு,
* உரோ. ௮: ௨௯.

௨. பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தினியா தேசங்களிலே
* சிதறிவந்திருக்கிற அந்நிய நாட்டாருக்கு இயேசுக்கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதுகிறதாவது; கிருபையும், சமாதானமும் உங்களுக்குச்சம்பூரணமாய் உண்டாகக்கடவது. * யாக். ௧: ௧.

௩. இயேசுக்கிறிஸ்து மரித்தோரிலிருந்தெழுந்திருக்கிறதினாலே * அழிவும், அசுத்தமும், குன்றுதலுமில்லாத சுதந்தரத்திற்கேதுவாக, * ௫: ௪.

௪. உயிருள்ள நம்பிக்கை உண்டாகும்படிக்குத்தமது மிகுந்த இரக்கத்தினாலே நம்மைப்புதிதாய்ச்செனிப்பித்த நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் பிதாவாகிய பராபரனுக்குத்தோத்திரம் உண்டாவதாக.

௫. கடைசிக்காலத்திலே வெளிப்பட எத்தனமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கேதுவாக விசுவாசத்தைக்கொண்டு பராபரனுடைய பலத்தினாலே காக்கப்படுகிற உங்களுக்கு அந்தச்சுதந்திரம் பரமண்டலங்களில் வைத்திருக்கின்றது.

௬. இதற்காகத் (துன்பங்கள்) வேண்டியபடியால், இப்பொழுது கொஞ்சக்காலமாய்ப் * பலவிதமான துன்பங்களினாலே துக்கப்படுகிற நீங்கள் மிகவுஞ் சந்தோஷப்படக்கடவீர்கள். * ௨ கொரி. ௪: ௰௭.

௭. அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படுமே. அதிலும் உங்கள் விசுவாசஞ் சோதிக்கப்பட்டு அதிக விலையேறப்பெற்றதாய், இயேசுக்கிறிஸ்து வெளிப்படும்பொழுது உங்களுக்குப்புகழ்ச்சியும், கனமும், மகிமையும் உண்டாகக்காணப்படும்படிக்கு (அந்தத்துன்பங்களைச்சகிக்கிறீர்கள்.)

௮. அவரை நீங்கள் காணாமலிருந்தும், அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள். இப்பொழுது அவரைத்தரிசியாமலிருந்தும், * அவரிடத்தில் விசுவாசமாயிருந்து சொல்லமுடியாததுமாய், மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷத்தோடே களிகூர்ந்து, * யோவா. ௨௰: ௨௯.

௯. உங்கள் விசுவாசத்திற்கேற்ற பலனாகிய ஆத்தும இரட்சிப்பை அடைகிறீர்கள்.

௰. உங்களுக்குண்டான இந்தக்கிருபையைக்குறித்து முன்பேசின தீர்க்கதரிசிகள் தங்களிலுள்ள கிறிஸ்துவின்,

௰௧. ஆவியானவர் கிறிஸ்துவின் பாடுகளையும், அவைகளின் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபொழுது, எந்தக் (காலத்தை) எப்படிப்பட்ட காலத்தைக்குறித்திருக்கிறாரென்று சோதனைபண்ணி,

௰௨. இப்படியிந்த இரட்சிப்பைக்குறித்து மிகவும் ஆராய்ந்துபார்த்தார்கள். அவைகளையவர்கள் தங்களைக்குறித்தல்ல, நம்மைக்குறித்தே தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது. * வானத்திலிருந்தனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியைக்கொண்டு உங்களுக்குச்சுவிசேஷத்தைப்பிரசங்கித்து வந்தவர்களாலே அவைகள் இப்பொழுது உங்களுக்கறிவிக்கப்பட்டுவருகின்றன. அவைகளுக்குள்ளே தேவதூதரும் உற்றுப்பார்க்க ஆசையாயிருக்கிறார்கள். * அப். ௨: ௧—௪.

௰௩. ஆகையால், * நீங்கள் உங்கள் மனதின் அரைகளிற் கச்சைகட்டிக்கொண்டு, † தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, இயேசுக்கிறிஸ்து வெளிப்படும்பொழுது உங்களுக்குக்கொண்டுவரப்படுங் கிருபையின்

மேல் இடைவிடாமல் நம்பிக்கையைவைத்து, * லூக். ௰௨: ௩௫, ௩௬. † லூக். ௨௧: ௩௫.

௰௪. கீழ்ப்படிகிற பிள்ளைகளைப்போல நீங்கள் முற்காலத்திலே அறியாமையினாலே கொண்ட இச்சைகளின்படி இனி நடவாமல்,

௰௫. உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல * நீங்களுஞ் சகலவிதத்திலேயும் பரிசுத்தராய் நடப்பீர்களாக. * லூக். ௧: ௭௩—௭௫.

௰௬. நான் பரிசுத்தன். ஆகையால், நீங்களும் * பரிசுத்தராயிருங்களென்றெழுதியிருக்கிறதே. * ௩ மோ. ௰௯: ௨.

௰௭. அன்றியும் பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் பிதாவை நீங்கள் தொழுதுகொண்டிருக்கிறதால், இவ்வுலகத்திலே தங்குமளவும் * பயத்துடனே நடந்துகொள்ளுங்கள். * பிலி. ௨: ௰௨.

௰௮. அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும், பொன்னினாலுமல்ல. குற்றமும் மாசுமில்லாத ஆட்டுக்குட்டியைப்போன்ற கிறிஸ்துவின் * விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே, * அப். ௨௰: ௨௮. ௧ கொரி. ௬: ௨௰.

௰௯. உங்கள் முன்னோர்களாற் பாரம்பரையாய்ப்பெற்ற வீணான நடக்கையினின்று மீட்கப்பட்டீர்களென்றறிந்திருக்கிறீர்களே.

௨௰. அவர் * லோகத்தோற்றத்திற்குமுன்னே குறிக்கப்பட்டவராயிருந்து தமதுமூலமாய்ப்பராபரன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக்கடைசிக்காலங்களில் வெளிப்பட்டார். * ௨ தீமோ. ௧: ௯, ௰.

௨௧. உங்கள் விசுவாசமும், நம்பிக்கையும் பராபரன்மேலேயிருக்கும்படிக்கு அவரை மரித்தோரிவிருந்தெழுப்பி, அவருக்கு மகிமையைக்கொடுத்தார்.

௨௨. (ஆகையால்) நீங்கள் உண்மையான சகோதர சிநேகத்திற்கேதுவாக ஆவியினாலே சத்தியத்திற்குக்கீழ்ப்படிந்து, இப்படியுங்கள் ஆத்துமாக்களைச்சுத்தமாக்கிக்கொண்டிருக்கச்சுத்த இருதயங்களோடே ஊக்கமாய் ஒருவரிலொருவர் அன்பாயிருப்பீர்களாக.

௨௩. அழிவுள்ள வித்தினாலேயல்ல. என்றென்றைக்கும் நிற்கிற சீவனுள்ள தேவனுடைய வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே * மறுபடியுஞ் ஜென்மிக்கப்பட்டிருக்கிறீர்களே. * யோவா. ௧: ௰௩, யாக். ௧: ௰௮.

௨௪. அந்தப்படி (சொல்லியிருக்கிறதாவது;) * மாம்சதேகமெல்லாம் புல்லைப்போலவும், மனிதருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கின்றன. புல்லானது உலர்ந்துபோம். அதின் பூவும் உதிர்ந்துபோம். * சங்கீ. ௱௩: ௰௫, ௰௬. ஏசா. ௪௰: ௬—௮.

௨௫ கர்த்தருடைய வசனமே என்றென்றைக்கும் நிற்குமென்பதே உங்களுக்குச்சுவிசேஷமாயறிவிக்கப்பட்டுவருகிற வசனம் அதுவே.

௨ அதிகாரம்.

[(௧) சிநேகத்தைப்பிரிக்கிற குணத்தை அகற்றவும், (௪) அவர்கள் கட்டப்பட்டிருக்கிற அஸ்திவாரங் கிறிஸ்துவென்று அறியவும், (௰௧) மாம்ச இச்சைகளுக்கு விலகவும், (௰௩) நியாயாதிபதிகளுக்கு அடங்கவும், (௰௮) ஊழியக்காரர் எசமான்களுக்குக்கீழ்ப்படிந்து, (௨௰) கிறிஸ்துக்காட்டின மாதிரியின்படியே நன்மைசெய்வதினால் வருந்துன்பத்தைப்பொறுமையோடே சகிக்கவுஞ் சொல்லியது.]

இப்படியிருக்கக் * கர்த்தர் தயையுள்ளவரென்று நீங்கள் ருசிபார்த்தபடியாற் சகல துர்க்குணத்தையும், * சங்கீ. ௩௪: ௮.

௨. * சகல கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவிதமான பொல்லாத பேச்சுகளையுந் தள்ளிப்போட்டு, * எபே. ௪: ௩௧.

௩. நீங்கள் இரட்சிப்புக்கேதுவாக வளரும்படிக்கு, * இப்பொழுது பிறந்த குழந்தைகளைப்போலத் (தேவ) † வசனமாகிய களங்கமில்லாத பாலின்மேலே ஆசையாயிருப்பீர்களாக. * மத். ௰௮: ௩. † சங்கீ. ௱௰௯: ௱௩.

௪. * மனிதராலே தள்ளப்பட்டதாயும், பராபரனிடத்திலே தெரிந்துகொள்ளப்பட்டதாயும், விலையேறப்பெற்றதாயுமிருக்கிற சீவனுள்ள கல்லாகிய, * சங். ௱௰௮: ௨௨.

௫. அவரிடத்திற்சேர்ந்தவர்களாகிய நீங்களுஞ் சீவனுள்ள கற்களைப்போல, * ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுக்கிறிஸ்துமூலமாய்ப்பராபரனுக்குப்பிரியமான † ஆவிக்கேற்ற பலிகளைச்செலுத்தும்படி பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவுங் கட்டப்படுங்கள். * எபே. ௨: ௨௰—௨௨. † உரோ. ௰௨: ௧. எபி. ௰௩: ௰௫, ௰௬.

௬. அந்தப்படி வேதத்திலே சொல்லியிருக்கிறதாவது; * இதோ, தெரிந்துகொள்ளப்பட்டதுமாய், விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லைச்சீயோனிலே வைக்கிறேன். அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்பட்டுப்போவதில்லையென்பதே. * ஏசா. ௨௮: ௰௬.

௭. ஆகையால், விசுவாசிக்கிற உங்களுக்கு இந்தக்கன்முண்டாயிருக்கிறது. கீழ்ப்படியாமலிருக்கிறவர்களுக்கு வீட்டைக்கட்டுகிறவர்களால் தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்

வாகிய இந்தக்கல்லே * இடறுதற்கேதுவான கல்லாயும், விழுதற்கேதுவான கன்மலையாயுமிருக்கின்றது. * ஏசா. ௮: ௰௪, ௰௫. லூக். ௨: ௩௫.

௮. அவர்கள் (தேவ) வசனத்திற்குக்கீழ்ப்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள். அதற்கு நியமிக்கப்பட்டவர்களாயுமிருக்கிறார்கள்.

௯. நீங்கள் உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளிக்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத்தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், * இராசரிகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்தவான்களாயும், அவருக்குச்சொந்தமான சனமாயுமிருக்கிறீர்கள். * அறிவி. ௧: ௬. ௫: ௰.

௰. * முன்னே நீங்கள் பராபரனுடைய சனமாயிருக்கவில்லை. இப்பொழுது அவருடைய சனங்களாயிருக்கிறீர்கள். (முன்னே) நீங்கள் இரக்கம்பெறாதவர்கள். இப்பொழுது இரக்கம்பெற்றவர்களாயிருக்கிறீர்கள். * ஓசே. ௧: ௰. ௨: ௨, ௩.

௰௧. பிரியமானவர்களே! வழிப்போக்கருமாய், அந்நிய நாட்டாருமாயிருக்கிற உங்களுக்கு நான் புத்திசொல்லுகிறதென்னவெனில், ஆத்துமாவுக்கு விரோதமாய்ப்போர் செய்கிற * மாம்ச இச்சைகளுக்கு நீங்கள் இடங்கொடாமல், * உரோ. ௰௩: ௰௩. கலா. ௫: ௰௬.

௰௨. * அஞ்ஞானிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப்பேசும்பொழுது உங்கள் நற்கிரியைகளைக்கண்டு கண்காணிப்பின் நாளிலே பராபரனுடைய மகிமை விளங்கப்பண்ணும்படிக்கு நல்ல நடக்கையோடே அவர்களுக்குள்ளே நடக்கக்கடவீர்கள். * மத். ௫: ௰௬.

௰௩. அந்தப்படியே நீங்கள் கர்த்தரினிமித்தம் * மனிதருடைய கட்டளைகள் யாவற்றிற்குங் கீழ்ப்படுவீர்களாக. * உரோ. ௰௩: ௧—௭. தீத்து. ௩: ௧.

௰௪. பிரதான அதிகாரமுள்ள இராசாவுக்காவது, தீமைசெய்கிறவர்களுக்கு ஆக்கினையையும், நன்மைசெய்கிறவர்களுக்குப்புகழ்ச்சியையுங் கொடுக்கும்படி அவனால் அனுப்பப்பட்ட துரைகளுக்காவது (அப்படிச்செய்யுங்கள்.)

௰௫. * புத்தியீன மனிதருடைய அறியாமையை நீங்கள் நன்மைசெய்கிறதினாலே அடக்கிப்போடவேண்டுமென்று பராபரனுடைய சித்தமாயிருக்கிறதே. * ௰௨. வச. தீத். ௨: ௭.

௰௬. * சுவாதீனமுள்ளவர்களாயிருந்தும், உங்கள் சுவாதீனத்தைத்துர்க்குணத்திற்கு மூடியாகச்சேர்த்துக்கொள்ளாமற் பராபரனுடைய அடிமைகளாய் நடப்பீர்களாக. * யோவா. ௮: ௩௬.

௰௭. எல்லாரையுங் கனம்பண்ணுங்கள். சகோதரரிடத்தில் அன்புகூருங்கள் பராபரனுக்குப்பயந்திருங்கள். இராசாவைக்கனஞ்செய்யுங்கள்.

௰௮. வீட்டு வேலைக்காரரே! மிகுந்தபயத்துடனே எசமான்களுக்குக்கீழ்ப்படிந்திருங்கள். நல்லவர்களுக்கும், இணக்கமுள்ளவர்களுக்கு மாத்திரமல்ல, செம்மையில்லாதவர்களுக்கும் (அப்படிச்செய்யவேண்டும்.) * எபே. ௬: ௫—௮.

௰௯. என்னத்திற்காகவெனில், ஒருவன் அநியாயமாய்ப்பாடுபட்டுப்பராபரனுக்குமுன்பாக உண்மையாயிருக்கிற மனதினிமித்தந் * துக்கங்களைப்பொறுமையாய்ச்சகித்தால் அதுவே மகிமையுள்ளது. * மத். ௫: ௰.

௨௰. நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்பொழுது, அதைப்பொறுமையோடே சகித்தால், அதெப்படிப்பட்ட கீர்த்தியாயிருக்கும். நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்பொழுது அதைப்பொறுமையோடே சகித்தால், அதுவே பராபரனுக்குமுன்பாக மகிமையாயிருக்கும்.

௨௧. * இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். எப்படியெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப்பாடுபட்டு நீங்கள் தம்முடைய காலடிகளைத்தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மார்க்கத்தைக்காட்டிப்போனார். * ௧ தெச. ௩: ௩.

௨௨. * அவர் பாவஞ் செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. * ஏசா. ௫௩: ௯.

௨௩. * அவர் வையப்பட்டபொழுது பதில்வையாமலும், பாடுபட்டபொழுது பயமுறுத்தாமலும், நியாயமாய்த்தீர்ப்புக்கொடுக்கிறவருக்கதை ஒப்புவித்தார். * ஏசா. ௫௩: ௭, ௮.

௨௪. நாம் பாவங்களுக்கு விலகி நீதியுள்ளவர்களாய்ப்பிழைக்கும்படிக்கு, அவர் தமது சரீரத்திலே * நம்முடைய பாவங்களைத்தாங்கிக்கொண்டு அவைகளைச்சிலுவைமரத்திலே நிவர்த்திசெய்தார். * ஏசா. ௫௩: ௪. ௧ யோவா. ௩: ௫.

௨௫. அவர் காயப்பட்டதினாலே குணமானீர்கள். (முன்னே) * நீங்கள் வழுவிப்போன ஆடுகளைப்போலிருந்தீர்கள். இப்பொழுது உங்களாத்துமாக்களுக்கு † மேய்ப்பரும், கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள். * ஏசா. ௫௩: ௬. † யோவா. ௰: ௰௧.

௩ அதிகாரம்.

[(௧) மனைவிகளும், புருஷர்களும், ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய கடமைகளைக்

கற்பித்து, (௮) யாவரும் ஒருமையும், சிநே
கமுமுள்ளவர்களாயிருக்கவும், (௰௪) துன்ப
த்தைச்சகிக்கவும் புத்திசொல்வி, (௰௯) பூர்
வீகத்தார்மேற் கிறிஸ்துவின் புண்ணியப
லன்களின்னவென் றுங்கூறியது.]

அந்தப்படி * ஸ்திரீகளே (புருஷர்க
ளிற்) சிலர் (தேவவசனத்திற்குக்)
கீழ்ப்படியாமல் இருக்கிறபொழுது, வசன
மின்றி, * எபே. ௫: ௨௨—௨௪.
௨. உங்கள் கற்பும், வணக்கமுமுள்ள நடக்
கையை யவர்கள் பார்த்து, அப்படிப்பட்
ட நடக்கையினாலே சம்பாதித்துக்கொள்
ளப்படும்படிக்கு உங்கள் சொந்தப்புருஷர்
களுக்குக்கீழடங்குவீர்களாக.
௩. * நீங்கள் உங்கள் மயிரைப்பின்னிப்
பொன்னாபரணங்களைத்தரித்து முக்கியமா
ன வஸ்திரங்களையுடுத்தி, * ௧ தீமோ. ௨:
௯, ௰. ஏசா. ௩: ௰௬—௨௪.
௪. இவ்விதமாய்ப்புறம்பே உங்களை அலங்
கரியாமல், உள்ளாக மறைந்திருக்கிற இரு
தயமானது பராபரனுடைய திருப்பார்வை
யிலே மிகுந்த விலையேறப்பெற்றிருக்கிற
சாந்தமும் அமைதலுமான ஆவியென்னும்
அழியாமையுள்ள அலங்காரத்தை யடை
யும்படி செய்யுங்கள்.
௫. இப்படியே பூர்வீகத்திலே பராபரன்
மேல் நம்பிக்கையான பரிசுத்த ஸ்திரீகளும்
தங்களை யலங்காரஞ்செய்து, தங்களுடைய
புருஷருக்குக்கீழ்ப்படிந்தார்கள்.
௬. அந்தப்படி * சாராள் ஆபிரகாமை
எசமானென்றழைத்து அவனுக்குக்கீழ்ப்
பட்டாள். நீங்கள் நன்மைசெய்து எவ்வள
வானதுன்பத்திற்கும், பயப்படாதவர்களாய்
அவளுக்குப்பிள்ளைகளானீர்கள். * ௧ மோ.
௰௮: ௰௨.
௭. அன்றியும், * புருஷரே! உங்கள் செ
பங்களுக்குத் தடைவராதபடிக்கு, மனைவி
யானவள் பலவீன பாத்திரமாயிருக்கிறப
டியினாலே நீங்கள் அறிவின்படி அவளுட
னேகூட வாசம்பண்ண வேண்டுவதுமல்லா
மல் உங்களுடனேகூட அவளும் நித்திய
ஜீவனாகிய கிருபையைச்சுதந்தரித்துக்கொள்
ளுகிறவளானபடியினாலே அவளுக்குக்கனஞ்
செலுத்துவீர்களாக. * எபே. ௫: ௨௫.
௮. மேலும் நீங்களெல்லாரும் * ஒரும
னப்பட்டவர்களாயும், பரிதாபமுள்ளவர்க
ளாயும், சகோதர சிநேகமுள்ளவர்களாயும்,
மன உருக்கமுள்ளவர்களாயும், மனத்தாழ்
மை யுள்ளவர்களாயும், * உரோ. ௰௨:
௰௫, ௰௬.
௯. தீமைக்குத்தீமையையும், உதாசினத்
துக்கு உதாசினத்தையும் பதிற்செய்யாமல்
ஆசீர்வாதத்தையே பதிற்செய்கிறவர்களா
யுமிருப்பீர்களாக. உங்களுக்குத்தெரிந்திருக்
கிறபடி ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்
கொள்ளும்படிக்கு, நீங்கள் இப்படியே
செய்ய அழைக்கப்பட்டீர்கள். * மத். ௫:
௪௪, ௪௫.
௰. ஆனபடியினாலே, * ஜீவனைவிரும்பிச்
சவுக்கிய நாள்களைக்காண வேணுமென்றி
ருக்கிறவன் தன் நாவினாற் பொல்லாங்கை
யும், தன் உதடுகளாற் கபடத்தையும் பே
சாமலிருக்கும்படி யமைந்து, * சங்கி. ௩௪:
௰௩—௰௭.
௰௧. பொல்லாங்கைவிட்டு விலகி நன்மை
செய்து சமாதானத்தைத்தேடி அதைப்பின்
றொடரக்கடவன்.
௰௨. ஏனென்றாற் கர்த்தர் நீதிமான்கள்மே
லே கண்ணோட்டமாயிருந்து அவர்களுடை
ய விண்ணப்பத்திற்குச்செவிகொடுக்கிறார்.
௰௩. கர்த்தருடையமுகம் பொல்லாங்கைச்
செய்கிறவர்களுக்கு விரோதமாயிருக்கின்ற
து. அந்தப்படி நீங்கள் நன்மையைப் பின்
பற்றுகிறவர்களானால் உங்களுக்குப்பொல்
லாங்கைச்செய்பவன் எவன்?
௰௪. * நீதியினிமித்தமாக நீங்கள் பாட
நுபவித்தாற் பாக்கியராயிருப்பீர்கள். ஆன
தால் † அவர்களுடைய பயங்கரத்திற்கு
நீங்கள் பயப்படாமலும் கலங்காமலுமிருந்
து, * மத். ௫: ௰. † எரே. ௧: ௮.
௰௫. * கர்த்தராகிய பராபரனை உங்களிரு
தயங்களிற் பரிசுத்தமாய்வணங்கி உங்களிவி
ருக்கிற நம்பிக்கையைக்குறித்து, உங்களை
விசாரித்துக்கேட்கிற யாவருக்குஞ் சாந்தத்
தோடும், வணக்கத்தோடும் உத்தரவுசொல்
ல எப்பொழுதும் ஆயத்தமாயிருந்து,
* ஏசா. ௮: ௰௩.
௰௬. * கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல
நடக்கையைத்தூஷணிக்கிறவர்கள். உங்க
ளைப்பொல்லருங்கு செய்கிறவர்களென்று
உங்களுக்கு விரோதமாய்ச்சொல்லுகிறதினா
லே வெட்கப்படும்படிக்கு நல்மனச்சாட்சி
யைக்காத்துக்கொள்வீர்களாக. ௨: ௰௨.
௰௭. தீமைசெய்து பாடநுபவிக்கிறதிலும்,
நன்மைசெய்து பராபரனுடைய சித்தப்ப
டி பாடநுபவிக்கிறது மேன்மையாயிருக்
குமே.
௰௮. ஆகையால் நீதியுள்ளவராகிய கிறிஸ்
துவும் நம்மைப்பராபரனிடத்திற்குச்சேர்த்
துக்கொள்ளும்படிக்கு * அநீதியுள்ளவர்க
ளுடைய பாவங்களுக்காக ஒருதரம் பாடு
பட்டார். சரீரத்திலே யவர் கொலைசெய்
யப்பட்டார். ஆவியிலே அவர் பிழைப்பிக்
கப்பட்டார். * உரோ. ௫: ௬.
௰௯. அந்த ஆவியாகவே யவர் காவலிலுள்
ள ஆவிகளிடத்திற்குப்போய்ப் * பிரசங்கம்
பண்ணினார். * ௪: ௬.
௨௰. அந்த ஆவிகள் * பூர்வீகத்திலே
நோவாவென்பவன் பேழையை யெத்தின

மாக்கின நாள்களிலே பராபரன் நீடியசாந்தத்தோடே காத்திருந்தபொழுது கீழ்ப்படியாமற் போனவைகள் அந்தப்பேழையிலே எட்டுப்பேராகிய சிலர்மாத்திரம் பிரவேசித்துச் சலத்தினுலே காக்கப்பட்டார்கள். * க மோ. கூ: ரு.

உக. * அது ஞானஸ்நானத்திற்கு முன்னடையாளமாயிருந்தது. சரீர அழுக்கை நீக்குகிறதற்கல்ல, பராபரனுக்கு முன்பாக நல்மனச்சாட்சி பண்ணுகிற உடம்படிக்கையைக்குறிக்கிற ஸ்நானத்திற்கே அப்படியிருந்தது. இயேசுக்கிறிஸ்து உயிரோடெழுந்திருக்கிறதால், அந்த ஞானஸ்நானம் இப்பொழுது நம்மையும் இரட்சிக்கின்றது. * மாற். யகூ: யகூ. உரோ. கூ: ரு, ச.

உஉ. அவர் பரமண்டலத்திற்குப்போய் * பராபரனுடைய வலதுபாரிசத்திலிருக்கிறார். தேவ தூதர்களல்லாமல் அதிகாரங்களும், வல்லமைகளும் அவருக்கே கீழ்ப்பட்டிருக்கின்றன. * எபே. க: உய—உஉ.

ச அதிகாரம்.

[(க) கிறிஸ்துவினுடைய மாதிரியையும், உலகத்தின் முடிவையும் நோக்கிப்பாவத்தை விட்டோய்ந்திருக்கப் புத்தியையும், (யஉ) துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதலையுஞ் சொல்லியது.]

இப்படியிருக்க, கிறிஸ்து நமக்காகத் (தமது) சரீரத்திலே பாடுபட்டபடியால், நீங்களும் * அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாக அணிந்துகொள்ளக்கடவீர்கள். * எபி. யஉ: க—ரு.

உ. சரீரத்திற் பாடுபட்டவன் பாவங்களை விட்டோய்ந்திருப்பானே. (நீங்கள்) சரீரத்தோடேயிருக்குங் காலம்வரைக்கும் மனிதருடைய இச்சைகளின்படியல்ல, பராபரனுடைய சித்தத்தின்படியே பிழைக்கிறதற்கேதுவாக (அப்படிச்செய்யுங்கள்.)

ரு. * சென்ற வாழ்நாட்காலத்திலே நாம் அஞ்ஞானிகளுடைய இஷ்டத்தின்படி நடந்துகொண்டது போதுமே. அப்பொழுது நாம் காமவிகாரத்தையும், துரிச்சைகளையும் நடப்பித்துப்பழ இரசத்தை மிகவுங் குடித்துப்பெருந்தீனியைச்சாப்பிட்டு வெறிகொண்டு, அருவருக்கப்படத்தக்க விக்கிரக ஆராதனையைச்செய்துவந்தோம். * எபே. ச: யஎ—யகூ.

ச. (இப்பொழுது) கெட்ட நடக்கையுள்ள அந்தத்துன்மார்க்கத்திலே யவர்களோடேகூட நீங்கள் ஓடாமலிருக்கிறதினுலே அவர்கள் ஆச்சரியப்பட்டு (உங்களைத்) தூஷணிக்கிறார்கள்.

ரு. உயிரோடிருக்கிறவர்களுக்கும், மரித்தோருக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுக்க எத்தினமாயிருக்கிறவருக்கு அவர்கள் கணக்கு ஒப்புவிப்பார்கள்.

கூ. * இதற்காகவும் மரித்தோர் சரீரத்திலே மனிதராலே ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டிருந்தும் ஆவியிலே பராபரனுலே பிழைக்கும்படியாக அவர்களுக்குஞ் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. * ரு: யகூ.

எ. அன்றியும், * எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. ஆகையால், நீங்கள் † விவேகமாயிருந்து, விண்ணப்பம்பண்ணுதற்குத்தெளிவுள்ளவர்களாய் இருக்கக்கடவீர்கள். * க யோவா. உ: யஅ. † லூக். உக: ருகூ.

அ. எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவருக்கொருவர் மிகுந்த அன்புள்ளவர்களாயிருங்கள். அன்பானது * திரளான பாவங்களை மூடுமே. * வாக். ய: உ.

கூ. மொறுமொறுப்பில்லாமல் ஒருவரையொருவர் * சேர்த்துக்கொள்ளுங்கள்.— * எபி. யரு: உ.

ய. * அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் பராபரனுடைய பலவித கிருபையுள்ள ஈவுகளையுடைய நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்யுங்கள். * உரோ. யஉ: கூ.

யக. * போதிக்கிறவன் பராபரனுடைய வசனங்களின்படி போதிக்கக்கடவன். ஊழியஞ்செய்கிறவன் பராபரன் கொடுக்கிற பெலத்தாலே அப்படிச்செய்யக்கடவன். சகல விதத்திலேயும் பராபரன் இயேசுக்கிறிஸ்து மூலமாய்த்துதிக்கப்படும்படியே செய்வீர்களாக. அவருக்குத்துதியும், வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக —ஆமென். * உரோ. யஉ: எ, அ.

யஉ. பிரியமானவர்களே! * உங்களுக்குள்ளேயிருக்கிற அக்கினி உங்களைச்சோதிக்கத்தக்கதாயிருப்பதாற் புதியது உங்களுக்குச் சம்பவித்ததாக அதைக்குறித்து ஆச்சரியப்படாமல். * க: எ. ஏசா. சஅ: ய.

யரு. கிறிஸ்துவின் பாடுகளுக்கு நீங்கள் ஐக்கமானதாற் சந்தோஷப்படுங்கள். அவருடைய மகிமை வெளிப்படும்பொழுது, நீங்களுங் * களிகூர்ந்து, சந்தோஷமாயிருக்கும்படிக்கு (அப்படிச்செய்வீர்களாக.) * யாக். க: உ, ரு.

யச. * நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டாற் பாக்கியவான்கள் பராபரனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவி உங்களிடத்தில் தங்கியிருக்கிறுரே. அவர்களால் அவர் தூஷணிக்கப்படுகிறுர். உங்களாலே துதிக்கப்படுகிறுர்.— * மத். ரு: யக, யஉ.

யரு. ஆனதால் உங்களில் ஒருவனுங் கொலைபாதகனுய், அல்லது திருடனுய், அல்லது பொல்லாங்கு செய்தவனுய், அல்லது

அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாய்ப்பாடுபடாதிருப்பானாக.

௰௬. கிறிஸ்தவனாய்ப்பாடுபடுகிறவன்வெட்கமடையாமலிருந்து பராபரனை அதற்காகவே * துதிசெய்யக்கடவன். * யோவா. ௨௧: ௰௯.

௰௭. நியாயத்தீர்ப்பும் * தேவாலயத்திலே ஆரம்பமாகிறதற்குக்காலம் வந்திருக்கிறதே. முதலாவது, நம்மிடத்திலே அது ஆரம்பமானால் பராபரனுடைய சுவிசேஷத்திற்குக்கீழ்ப்படியாதவர்களுடைய முடிவு † என்னமாய் இருக்கும்? * எரே. ௨௫: ௨௯. † லூக். ௨௩: ௩௧.

௰௮ * நீதிமானே இரட்சிக்கப்படுகிறது அரிதானால், துன்மார்க்கனும், பாவியும் எங்கே நிற்பான்! * வாக்கி. ௰௧: ௩௧.

௰௯. ஆகையாற் பராபரனுடைய சித்தத்தின்படி பாடுபடுகிறவர்கள் நன்மை செய்கிறவர்களாய், தங்கள் ஆத்துமாக்களை * உண்மையுள்ள சிருஷ்டிகராகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள். * சங்கீ. ௩௧: ௫. லூக். ௨௩: ௪௬.

௫ அதிகாரம்.

[(௧) மூப்பர்கள் மந்தைகளை மேய்க்கவும், (௫) இளைஞர் கீழ்ப்படியவும், (௮) யாவரும் மனத்தெளிவும், விழிப்பும், விசுவாசத்தில் உறுதியுமாயிருக்கவும், (௯) கொடூர சத்துருவாகிய பசாசை எதிர்த்து நிற்கவுஞ் சொல்லியது.]

உங்களில் உள்ள மூப்பருக்கு உடன் மூப்பனுமாய், கிறிஸ்துவின் பாடுகளுக்குச்சாட்சிக்காரனுமாய், (இனி) வெளிப்படும் மகிமைக்குப்பங்காளியுமாயிருக்கிற நான் புத்திசொல்லுகிறது என்னவென்றால்,

௨. உங்கள் இடத்தில் உள்ள * பராபரனுடைய ஆட்டுக்கூட்டத்தை நீங்கள் மேய்த்துக்கட்டாயமாயல்ல. மனப்பூர்வமாயும், † அவலட்சணமான ஆதாயத்திற்காகவல்ல. உச்சாக மனதோடும், * அப். ௨௰: ௨௮. † ௧ தீமோ. ௩: ௩.

௩. * சுதந்தரங்களை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாகவல்ல. ஆட்டுக்கூட்டத்திற்குப் † பாதையைக்காட்டுகிறவர்களாகவும், கண்காணிப்புச்செய்வீர்களாக. * ௨ கொரி. ௧: ௨௪. † பிலி. ௩: ௰௭.

௪. (அப்படிச்செய்தால்) * பிரதான மேய்ப்பர் வெளிப்படும்பொழுது † மகிமை உள்ள வாடாத முடியைப்பெறுவீர்கள்.— * ௨: ௨௫. † ௨ தீமோ. ௪: ௮. அறிவி. ௨: ௰.

௫. அல்லாமலும், * வாலிபரே! மூப்பருக்குக்கீழ்ப்படியுங்கள். நீங்கள் எல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்வீர்களாக. † அகந்தையுள்ளவர்களுக்கு, பராபரன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கே கிருபையை அளிக்கிறார். * எபே. ௫: ௨௧. † மத் ௨௩: ௰௨.

௬. ஆகையால் ஏற்றகாலத்திலே பராபரன் உங்களை உயர்த்தும்படிக்கு * அவருடைய பலத்த கைக்குள்ளடங்குவீர்களாக.— * யாக். ௪: ௰.

௭. அவரே உங்களை விசாரித்துக்கொள்ளுகிறபடியால் * உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். * பிலி. ௪: ௬, ௭. எபி. ௰௩: ௫.

௮ * தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள். விழித்திருங்கள். என்னத்தினாலெனில், உங்கள் எதிராளியாகிய பசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனையும் விழுங்க வேண்டுமென்று வகைதேடித்திரிகிறான்.— * ௧ தெச. ௫: ௬.

௯. உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகளே நிறைவேறி வருகின்றனவென்று அறிந்து விசுவாசத்திலுறுதியாய் * அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள். * எபே. ௬: ௰—௰௬.

௰. சகலவித கிருபைக்குங் காரணருமாய், * கொஞ்சக்காலம் பாடுபடுகிற நம்மைக் கிறிஸ்து இயேசுவினாலே தமது நித்திய மகிமைக்கு அழைத்தவருமாயிருக்கிற பராபரன் தாமே உங்களை நிறைவுள்ளவர்களாக்கி, ஸ்திரப்படுத்தி, திடப்படுத்தி அஸ்திபாரப்படுத்தக்கடவர். * ௧: ௭.

௰௧. அவருக்கே துதியும், வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாய் இருக்கக்கடவது—ஆமென்.

௰௨. (உங்களுக்குப்) புத்திசொல்லும்படிக்கும், நீங்கள் (அடைந்து) நிற்கிற கிருபை பராபரனுடைய மெய்யான கிருபைதானென்று சாட்சி கொடுக்கும்படிக்கும் நான் சுருக்கமாய் உங்களுக்கு எழுதி எனக்குத் தோன்றுகிறபடி உண்மையாய் இருக்கிற சகோதரனாகிய சில்வானுவின் கையிலே (இதைக்) கொடுத்து அனுப்பினேன்.

௰௩. உங்களுடனேகூடத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிற பாபிலோனிலுள்ள சபையும், என் குமாரனாகிய மாற்கும் உங்களை வாழ்த்துகிறார்கள்.

௰௪. ஒருவரை ஒருவர் அன்பின் முத்தத்தினால் வாழ்த்துதல் செய்வீர்களாக. கிறிஸ்து இயேசுவைப்பற்றியிருக்கிற உங்களனைவருக்குஞ் சமாதானமுண்டாவதாக—ஆமென்.

அப்போஸ்தலனாகிய

பேதுரு எழுதின பொதுவான இரண்டாம் நிருபம்.

II. PETER.

௧ அதிகாரம்.

[(௧) அவர்களைத் தங்கள் புண்ணிய நடக்கைகளில் உறுதிப்படுத்தி, (௫) விசுவாசத்தினாலும், நற்கிரியைகளினாலுந் தங்கள் அழைப்பை நிச்சயிக்கச்சொல்லி, (௰௨) தன் மரணஞ் சமீபமானபடியால், இக்காரியங்களைக்குறித்து அவர்களுக்கு நினைப்பூட்டி, (௰௬) அப்போஸ்தலர்கள் கண்ட மகத்துவக்காட்சியினாலும், பிதாவானவரும், தீர்க்கதரிசிகளும் உரைத்த சாட்சியினாலும், பராபரனுடைய மெய்யான சுதனாயிருக்கிற கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தில் நிலைகொண்டிருக்கவுஞ் சொல்லியது.]

நம்முடைய பராபரனுமாய் இரட்சகருமாயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவின் நீதியில் எங்களைப்போல அருமையான விசுவாசத்தைப்பெற்றவர்களுக்கு இயேசுக்கிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனுமாகிய சீமோன், பேதுரு எழுதுகிறதாவது;

௨. பராபரனையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால், * உங்களுக்குக்கிருபையும், சமாதானமுஞ் சம்பூரணமாய் உண்டாகக்கடவது. * ௧ பேது. ௧: ௨.

௩. மகிமையாலும், புண்ணியத்தாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே சீவனுக்கும், மெய்த்தேவபத்திக்குமேற்ற யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமை * நமக்குக்கொடுத்தபடியினாலும், * ௧ பேது. ௨: ௯.

௪. நீங்கள் (தகாத) இச்சையால் உலகத்திலுள்ள கேட்டுக்குத்தப்பிக்கொண்டவர்களாய், திவ்விய குணத்திற்குப்பங்காளிகளாகத்தக்கதாக மிகவும் மேன்மையும், விலையேறப்பெற்றதுமான வாக்குத்தத்தங்கள் அவராலே நமக்கு அளிக்கப்பட்டபடியினாலும்,

௫. நீங்கள் மிகுந்த * சாக்கிரதையைக்கொண்டு, உங்கள் விசுவாசத்தோடே தயிரியத்தையும், தயிரியத்தோடே அறிவையும், * ஆக். ௰௩: ௨௪.

௬. அறிவோடே இச்சை அடக்கத்தையும், இச்சை அடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே மெய்த்தேவபத்தியையும்,

௭. மெய்த்தேவபத்தியோடே * சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையுங் கூட்டிக்கொள்வீர்களாக. * ௧ தெச. ௩: ௰௨.

௮. இவைகளுங்களுக்குண்டாயிருந்து பெருகினால், நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணராக, அல்லது * கனியற்றவர்களாக இருக்கமாட்டீர்களே. * தீத். ௩: ௰௪.

௯. அவைகளில்லாதவனெவனோ, அவன் தன் முந்தின பாவங்கள் நீக்கப்பட்டதை மறந்து குருடனாய்க்கண்மூடியிருக்கிறான்.

௰. ஆகையாற் சகோதரரே! * நீங்கள் அழைக்கப்பட்டும், தெரிந்துகொள்ளப்பட்டுமிருக்கிறதை உறுதியாக்கும்படி அதிக சாக்கிரதையாய் இருப்பீர்களாக. அப்படிச் செய்தால், நீங்கள் ஒருக்காலும் வழுவுவதில்லை. * எபி. ௩: ௰௪.

௰௧. மேலும் இப்படியே நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்துவின் நித்திய இராச்சியத்திற்றுட்பிரவேசித்தல் பரிபூரணமாய் உங்களுக்கு அளிக்கப்படும்.

௰௨. ஆனபடியால், * நீங்களிவைகளை அறிந்து இப்பொழுது உங்களுக்குண்டாயிருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும் இவைகளை எப்பொழுதும் நினைக்கும்படி செய்ய நான் அசதியாயிருக்கமாட்டேன். * உரோ. ௰௫: ௰௪—௰௬.

௰௩. அந்தப்படி * நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவும், எனக்குத்தெரிவித்தபடி நான் என் கூடாரத்தைச்சீக்கிரமாய் விட்டுப்போகவேண்டுமென்றறிந்து, * யோவா. ௨௧: ௰௮, ௰௯.

௰௪. இந்தக்கூடாரத்திலிருக்குமளவும்ஞாபகப்படுத்துதலினாலே உங்களை எழுப்புகிறது நியாயமென்றெண்ணுகிறேன்.

௰௫. ஆகையால், நான் போனதற்குப்பின்பும் நீங்கள் இவைகளை எப்பொழுதும் நினைத்துக்கொள்ள உங்களுக்கு ஏதுவுண்டாயிருக்கும்படி பிரயத்தினம்பண்ண விரும்புகிறேன்.

௰௬. என்னவெனில், நம்முடைய கர்த்தரா
கிய இயேசுக்கிறிஸ்துவின் வல்லமையையு
ம், வருகையையும் உங்களுக்கு அறிவித்த
பொழுது நாங்கள் தந்திரமாய் யோசிக்கப்
பட்ட கட்டுக்கதைகளைப்பின்பற்றவில்லை.
௰௭. இவர் எனக்கு அன்பாயிருக்கிற என்
னுடைய குமாரன், இவரிடத்திற் பிரியமா
யிருக்கிறேனென்று சொல்லுகிற சத்தம்
மகா மேன்மையான மகிமைத்தலத்திலிருந்
து வந்தபொழுது * பிதாவாகிய பராபரனாற்
கனத்தையும், மகிமையையும் அவர் பெற்ற
பொழுது, † அவருடைய மகிமையை நாங்
கள் கண்ணாரக்கண்டோம். * மத். ௩: ௰௭. ௰௭: ௧—௫. † யோவா. ௧: ௰௪

௰௮. அவரோடேகூட நாங்கள் பரிசுத்த
பர்வதத்திலிருந்தபொழுது வானத்திலிருந்
து வந்த அந்தச்சத்தத்தைக்கேட்டோம்.
௰௯. தீர்க்கதரிசனவசனமும்நமக்கு அதிக
உறுதியாயிருக்கின்றது. உங்களிருதயங்க
ளில் * வெள்ளி உதயமாகிப்பொழுது விடி
யுமளவும் நீங்கள் இருளுள்ள தலத்திற் பிர
காசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்
திற்கு எச்சரிக்கையாயிருந்தால் நன்மை
செய்வீர்கள். * சங். ௱௰௯: ௱௫. யோவா. ௫: ௩௯. உ கொரி. ௪: ௩, ௪.

௨௰. அதைக்குறித்து நீங்கள் பிரதானமா
ய் அறியவேண்டியதென்னவெனில், வேத
எழுத்திலுள்ள எந்தத்தீர்க்கதரிசனமுஞ்
சொந்தவிவரிப்பினாலேதோன்றமாட்டாது.
௨௧. தீர்க்கதரிசனமானது, பூர்வத்திலே
மனிதருடைய சித்தத்தினாலே வரவில்லையே
பராபரனுடைய பரிசுத்த மனிதர்கள் * பரி
சுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப்பேசினார்க
ளே. * உ சாமு. உ௩: உ.

உ அதிகாரம்.

[(௧) கள்ளப்போதகர்களுடைய அக்கிரமத்தையும், அதினால் அவர்களுக்கும் அவர்களைப்பின்பற்றுகிறவர்களுக்கும் உண்டாகுந் தண்டனையையுங்குறித்து முன்னறிவித்த, அப்படிப்பட்டவர்களில் நின்று, சோதோமிலிருந்து லோத்துவிடுதலையானதுபோல நல்லவர்கள் விடுதலையாவார்களென்றும். (௰) மோசம்போக்குகிற அந்த அக்கிரமக்காரராகிய தூஷணர்களை நன்றாயறிந்து அவர்களைவிட்டு விலக அவர்களிப்படிப்பட்டவர்களென்றுஞ் சொல்லியது.]

*
கள்ளத்தீர்க்கதரிசிகளுஞ் சனங்களுக்
குள்ளே யிருந்தார்கள். அதுபோ
ல உங்களுக்குள்ளுங் கள்ளப்போதகர்கள்
தோன்றுவார்கள். † அவர்கள் கேட்டுக்கே
துவான பொய் உபதேசங்களைத்தந்திரமா
ய் நுழைத்துத்தங்களைக்கொண்ட ஆண்ட
வரை மறுதலித்து, (இப்படித்) தங்களுக்
குத்தீவிரமான அழிவை வருவித்துக்கொள்
வார்கள். * எரே. உ௩: ௨௧. † அப்போ. உ௰: உ௯.

௨. அவர்களினிமித்தஞ் சத்தியமார்க்கந்
தூஷணிக்கப்படும். அவர்களுடைய கெட்
டமார்க்கங்களை அநேகர் பின்பற்றுவார்கள்.
௩. பொருளாசையுள்ளவர்களாய் அவர்
கள் தந்திரமான வார்த்தைகளால் உங்களை
வாங்கிக்கொள்ளத்தேடுவார்கள். அவர்களு
க்குப்பூர்வத்தில் (தீர்மானித்திருக்கிற) ஆக்
கினை தாமதமாயிராது. அவர்களுக்குத்தக்க
அழிவு உறங்காது.
௪. * பாவஞ்செய்த தூதர்களை, பராபரன்
தப்பவிடாமல், அந்தகாரச்சங்கிலிகளினா
லே கட்டிப்பாதாளத்திலே தள்ளி, நியாயத்
தீர்ப்புப்பரியந்தங் காக்கப்படுவதற்கு ஒப்
புக்கொடுத்திருக்க, * யோவா. அ: ௪௪.
யூதா ௬, எ, வசனம்.
௫. * பழைய உலகத்தையுந் தப்பவிடா
மல், நீதியைப்பிரசங்கித்தவனாகிய நோவா
முதலான எட்டுப்பேரைமாத்திரம் அவர் கா
ப்பாற்றி, பத்தியற்றவர்களுள்ள உலகத்
தின்மேற் சலப்பிரளயத்தை வரப்பண்ணி
யிருக்க, * ௧ மோ. எ: ௨௩, ௨௪.
௬. * சோதோங்கொமோரா என்னும் ப
ட்டினங்களையுஞ் சாம்பலாக்கிக்கவிழ்த்துப்
போட்டு, இப்படி ஆக்கினைக்குள்ளாகத்தீர்
த்துப்பிற்காலத்திலே அவபத்தியாய் நடப்
பவர்களுக்கடையாளமாக வைத்திருக்க;
(அவர்களை எப்படித்தப்பவிடுவார்?) * ௧
மோ. ௰௯: ௨௪.
எ. அக்கிரமக்காரருடைய காமவிகார நட
க்கையால் வருத்தப்பட்ட நீதிமானாகிய
லோத்தென்பவனைமாத்திரம் இரட்சித்து
விட்டார்.
அ. அந்த நீதிமான் அவர்களுக்குள்ளே
குடியிருக்கையில், நாடோறும் அவர்களு
டைய அக்கிரமக்கிரியைகளைக்கண்டு கேட்
டு, நீதியுள்ள தன்னுடைய இருதயத்திலே
அவைகளாலே *வேதனைப்பட்டான். *சங்.
௱௰௯: ௱௩௬.
௯. கர்த்தரே! தேவபத்தியுள்ளவர்களைத்
* துன்பத்தினின்று இழுத்து இரட்சி
க்கவும், அக்கிரமக்காரரை நியாயத்தீர்ப்பு
நாளிலே ஆக்கினைக்குள்ளாகும்படிக்காகவு
ம் அறிந்திருக்கிறார். * ௧ கொரிந். ௰: ௰௩.
௰. * பிரதானமாக அசுத்தத்தின் இச்சை
யோடே மாம்சத்திற்கேற்றபடி நடந்து,
துரைத்தனத்தை அசட்டை பண்ணுகிறவர்
களையே அப்படிச்செய்வார். அவர்கள் து
ணிவுக்காரர், அகங்காரிகள் மகிமையுடை
யவர்களைத்தூஷணிக்க நடுங்காதவர்கள்.
* யூதா ௮, வசனம்.
௰௧. அதிக பலத்தையும், வல்லமையையு
முடைய தேவதூதருங் கர்த்தருக்குமுன்பா

௧ அவர்களுக்கு விரோதமாய்த்தூஷணிப்
பான தீர்ப்பைச்சொல்லமாட்டார்கள்.
௰உ. * இவர்கள்மாத்திரம் பிடியுண்டழிக்
கப்படுவதற்குண்டான புத்தியற்ற மிருகஜீவ
ன்களைப்போலத்தங்களுக்குத்தெரியாதவை
களைத்தூஷணித்து, தங்கள்கேட்டினாலே மு
ழுவதும் அழிக்கப்பட்டு, * எரே. ௰உ: ௩.
௰௩. அநியாயத்திற்கேற்ற பலனை அடை
வார்கள். அவர்கள் பகற்காலத்திலே சம்பி
ரமமாயிருந்தலை இன்பமென்றெண்ணுகிற
வர்கள் மாசுகளும், அவலட்சணங்களுமான
வர்கள் விருந்தாக உங்களோடேகூடச்சா
ப்பிடுகையில் தங்கள் வஞ்சனைகளினாற் சம்
பிரமமாய் வாழ்கிறவர்கள்.
௰௪. விபசாரத்தால் நிறைந்தவைகளாயும்
பாவத்தைவிட்டோயாதவைகளாயும் இருக்
கிற கண்களுள்ளவர்கள் ஸ்திரமில்லாத ஆ
த்துமாக்களைத்தந்திரமாய்ப்பிடிக்கிறவர்கள்
பொருளாசைகளில் முயற்சியான இருதய
த்தையுடையவர்கள் சபிக்கப்பட்ட பிள்ளை
கள்.
௰௫. செம்மையான மார்க்கத்தைவிட்டுத்
தப்பி நடந்து, * பேயோருடைய குமார
னாகிய பாலாமின்வழியைப்பின்பற்றுகிறவர்
கள் அவன் அநியாயத்தின் கூலியை விரும்
பினான். * எ மோ. உஉ: ௫. அறி. உ: ௰௪.
௰௬. பின்பு தன்னுடைய அக்கிரமத்திற்
காகக்கடிந்துகொள்ளப்பட்டான். பேசா
த மிருகமே மனிதர் பாஷையைப்பேசி அந்
தத்தீர்க்கதரிசியினுடைய மதிகேட்டுக்குத்
தடைசெய்தது.
௰௭. (மேலும்) அவர்களே தண்ணீரில்லா
த கிணறுகள். அவர்களே சுழல்காற்றினால்
அடிக்கப்படுகிற மேகங்கள், என்றென்றை
க்குமுள்ள காரிருளே அவர்களுக்கு வைத்தி
ருக்கின்றது.
௰௮. வஞ்சகமாய் நடக்கிறவர்களைவிட்டுத்
தப்பினவர்களுக்கு அவர்கள் மிகவும் அகந்
தையான வீண் வார்த்தைகளைப்பேசிச்சரீர
இச்சைகளினாலும், காம விகாரங்களினாலு
ம் அவர்களைத்தந்திரமாய்ப்பிடிக்கிறார்கள்.
௰௯. தாங்களே கேட்டுக்கடிமைகளாயிரு
ந்தும், அவர்களுக்குச்சுவாதீனத்தை வாக்
குத்தத்தம் பண்ணுகிறார்கள். * எவனும்
எதினாலே செயிக்கப்பட்டிருக்கிறானோ அத
ற்கு அடிமையாக்கப்பட்டிருக்கிறானே.
* யோவா. ௮: ௩௪.
உ௰. ஆகையாற் * கர்த்தருமாய், இரட்ச
கருமாயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவை அறி
கிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களு
க்குத்தப்பினவர்கள் மறுபடியும் அவைக
ளிற் சிக்கிக்கொண்டு செயிக்கப்பட்டால்,
அவர்களுடைய முன்னிலைமையிலும் பின்னி
லைமை அதிக கேடுள்ளதாயிருக்கும். * மத்.
௰உ: ௪௫. எபி. ௰: உ௬. உ௭.

உ௧. அப்படிப்பட்டவர்கள் நீதியின்மார்க்
கத்தை * அறிந்தபின் தங்களுக்கு ஒப்பு
விக்கப்பட்ட பரிசுத்த கற்பனைகளைவிட்டு
விலகுகிறதிலும் அதை அறிந்துகொள்ளா
மலிருக்கிறதே அவர்களுக்கு நன்மையாயி
ருக்கும். * லூக். ௰உ: ௪௭.
உஉ. அப்பொழுது * நாய் தான் கக்கின
தை மறுபடியுந் தின்னுகிறதென்றும், கழு
வப்பட்ட பன்றி மறுபடியுஞ் சேற்றிலே
புரளுகிறதென்றுஞ் சொல்லுகிற மெய்யான
பழமொழியின்படி அவர்களுக்குச்சம்பவித்
தது. * வாக்கி. உ௬: ௰௧.

௩ அதிகாரம்.

[(௧) கிறிஸ்து வருகையைக்குறித்துப்பரி
யாசம்பண்ணுகிறவர்களுக்கு விரோதமாகக்
கிறிஸ்து நியாயத்தீர்ப்புக்கு வருவாரென்று
நிச்சயித்து, (௮) பத்தியுள்ளவர்கள் சீக்கி
ரமாய்க்குணப்படப்பராபரனுடைய பொ
றுமையை முன்னிட்டு எச்சரித்து, (௰) உல
கம் அழிக்கப்படும் விதத்தைக்குறித்து அறி
வித்து, அதற்குத்தகுதியான பரிசுத்தவான்
களாயிருக்கவேண்டுமென்றும் புத்திசொல்
லி, (௰௫) பவுல் தன் நிருபங்களில் எழுதின
படியே பராபரனுடைய பொறுமை அவர்
கள் இரட்சிப்புக்கேற்றதென்று சொல்லி
யது.]

பிரியமானவர்களே! இவ்விரண்டாம் நி
ருபத்தை இப்பொழுது உங்களுக்
கெழுதுகிறேன். பரிசுத்த தீர்க்கதரிசிக
ளால்,
உ. முன் சொல்லப்பட்ட வார்த்தைகளை
யும், இரட்சகராயிருக்கிற கர்த்தருடைய
அப்போஸ்தலராகிய எங்களுடைய கற்ப
னையையும் நீங்கள் நினைக்கும்படியாக இ
வைகளால் உங்கள் உண்மையான மனதிற்
கு * ஞாபகப்படுத்தி எழுப்புகிறேன். * ௧:
௰௪, ௰௫.
௩. முதலாவது, நீங்கள் அறியவேண்டிய
தென்னவெனிற் * கடைசிநாள்களிற் பரியா
சக்காரர் தோன்றுவார்கள். அவர்கள் தங்
கள் சுய இச்சைகளின்படி நடந்துகொண்
டு, * உ தீமோ. ௩: ௧.
௪. அவர் வருவாரென்றுசொல்லுகிற வாக்
குத்தத்தம் எங்கேயிருக்கிறது. பிதாக்கள்
நித்திரையடைந்தபின்பு சகலமுஞ் சிருஷ்
டிப்பின்தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்
கிறதேயென்று சொல்லுவார்கள்.
௫. பூர்வகாலத்திலே * பராபரனுடைய
வார்த்தையினாலே வானங்களும், சலத்தினா
லேயும், சலத்திற்குள்ளேயும் நிலைகொண்ட
பூமியும் இருந்தும், † அப்பொழுதிருந்த
உலகம் அதினாலே வெள்ளங்கொண்டழிந்
துபோயிற்றே. * சங். ௩௩: ௭. † ௧
மோ. ௭: ௰௭—உ௰.

௬. அதுபோல * இப்பொழுதிருக்கிற வானங்களும், பூமியும் அந்த வார்த்தையாலே அக்கினிக்கிரையாகவைக்கப்பட்டு, தேவபத்தியில்லாத மனிதர்களுக்கு நியாயத்தீர்ப்பும், கேடுமுண்டாகும்நாள்வரைக்குங் காக்கப்படுகின்றன. * ௨ தெச. ௧: ௬, ௭.

௭. இதை அந்தப்பரியாசக்காரர் அறிந்தும் நினையாமலிருக்கிறார்கள்.

௮. பிரியமானவர்களே! * நீங்கள் கர்த்தரிடத்தில் ஒருநாள் ஆயிரம் வருஷங்களைப்போலவும், ஆயிரம் வருஷங்கள் ஒருநாளைப்போலவும் இருக்கின்றதென்றிருக்கிற இந்த ஒரேகாரியத்தை மறவாதிருப்பீர்களாக. * சங். ௯௰: ௪.

௯. * தாமதித்திருக்கிறாரென்றுசிலர் எண்ணுகிற பிரகாரமாய்க்கர்த்தர் (தமது) வாக்குத்தத்தத்தைக்குறித்துத்தாமதமாய் இராமல், ஒருவருங் கெட்டுப்போகாதபடிக்கு எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, † நமதுமேல் நீடிய சாந்தமுள்ளவராயிருக்கிறார். * ஆப. ௨: ௩. † ஏசே. ௩௩: ௰௧. உரோ. ௨: ௪. ௧ திமோ. ௨: ௪.

௰. * கர்த்தருடைய நாள் இரவிலே திருடன்வருகிறவிதமாய்வரும். † அப்பொழுது வானங்கள் மடமடவென்று அகன்றுபோம். பூதங்கள் எரிந்து கரைந்துபோம். பூமியும், அதிலுள்ள கிரியைகளும் வெந்துபோம். * ௧ தெச. ௫: ௨, ௩. † மத். ௨௪: ௩௫.

௰௧. இப்படி இவையெல்லாங் கரைந்துபோகிறவைகளாயிருக்க, நீங்கள் பரிசுத்த நடக்கையிலேயும், தேவபத்தியிலேயும் எப்படிப்பட்டவர்களாயிருக்கவேண்டும்!

௰௨. வானங்கள் வெந்துகரைந்து பூதங்கள் எரிந்துருகிப்போகும். பரா்பரனுடையநாள் வருதற்கு நீங்கள் மிகுந்த ஆசையோடே காத்திருக்கிறீர்களே.

௰௩. * அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே புதியவானங்களும், புதிய பூமியுமுண்டாகுமென்று காத்திருக்கிறோம். அவைகளிலே நீதி வாசமாயிருக்கும். ஆகையால், பிரியமானவர்களே! * ஏசா. ௬௫: ௰௭. அறிவி. ௨௧: ௧.

௰௪. அவைகள் வரக்காத்திருக்கிற நீங்கள் அவரால் மாசும், குற்றமுமில்லாதவர்களாய்ச்சமாதானத்தோடே காணப்படும்படிக்குச் சாக்கிரதையாயிருந்து,

௰௫. நம்முடைய கர்த்தாவின் நீடியசாந்தம் இரட்சிப்புக்கேதுவாயிருக்கிறதென்றெண்ணிக்கொள்வீர்களாக. நயக்குப்பிரியமான சகோதரனாகிய பவுலுந் தனக்குக்கொடுக்கப்பட்ட ஞானத்தினாலே அப்படியே உங்களுக்கெழுதியிருக்கிறான்.

௰௬. எல்லா நிருபங்களிலேயும் இவைகளைக்குறித்துப்பேசியிருக்கிறான். * அவன் எழுதினவைகளிற்சில (வாக்கியங்கள்) அறிகிறதற்கு அரிதாயிருக்கின்றன. படியாதவர்களும், ஸ்திரமில்லாதவர்களும் அப்படிப்பட்டவைகளையும், மற்ற வேதவாக்கியங்களையுந் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாகப் புரட்டுகிறார்கள். * ௨ கொரி. ௪: ௩, ௪.

௰௭. ஆதலாற்பிரியமானவர்களே! நீங்கள் இவைகளை முன்னறிந்தபடியால், (மற்றவர்களோடே) கூட அந்த அக்கிரமக்காரருடைய வஞ்சகத்தினாலே இழுத்துக்கொள்ளப்படாமலும், ஸ்திரத்தைவிட்டு விழாமலுமிருக்கும்படிக்கு எச்சரிக்கையாயிருந்து,

௰௮. நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்துவின் கிருபையையும், அவரை அறிகிற அறிவையும் அதிகமதிகமாய் அடைந்துகொள்வீர்களாக. அவருக்கு இப்பொழுதும் (இனி) என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக.—ஆமென்.

அப்போஸ்தலனாகிய

யோவான் எழுதின முதலாம் நிருபம்.

I. JOHN.

---

௧ அதிகாரம்.

[(௧) நம்மைப்பராபரனோடே ஐக்கப்படுத்துகிறதால், நித்திய சீவனுக்கு வழியாயிருக்கிற கிறிஸ்துவின் தன்மையைக்குறித்து விளம்பி, (௫) அந்த ஐக்கத்தையும், விசுவாச அறிக்கையையுங்குறித்துச் சாட்சியிடவும், கிறிஸ்துவின் மரணத்தினால் நமக்குப்பாவமன்னிப்பு உண்டானதென்பதற்குச்சாட்சிகொடுக்கவும் நாம் பரிசுத்தமாய் நடக்கவேண்டுமென்று சொல்லியது.]

ஆதியில் * இருந்ததுமாய், நாங்கள் கேட்டதுமாய், எங்கள் கண்களினு

லே † கண்டதுமாய், நாங்கள் நோக்கிப் பார்த்ததுமாய், எங்கள் கைகளாலே ‡ தொட்டதுமாயிருக்கிற சீவனையுடைய வார்த்தையைக்குறித்து (உங்களுக்கறிவிக்கிறோம்.) * யோவா. ௧: ௧, ௨. † யோவா. ௧: ௰௪. ‡ லூக். ௨௪: ௩௯.

௨. அந்தச் * சீவன் வெளிப்பட்டது. பிதாவினிடத்திலிருந்ததுமாய், நமக்கு வெளிப்பட்டதுமாயிருக்கிற அந்த நித்திய சீவனையே நாங்கள்கண்டு அதைக்குறித்துச்சாட்சிகொடுத்து, அதையே உங்களுக்கறிவிக்கிறோம். * யோவா. ௧: ௪.

௩. நீங்களும் எங்களோடேகூட ஐக்கியமுள்ளவர்களாகும்படிக்கு நாங்கள் கண்டும், கேட்டுமிருந்ததை உங்களுக்கு அறிவிக்கிறோம். நாங்களே பிதாவுடனேயும், அவருடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவுடனேயும் * ஐக்கியமுள்ளவர்களாயிருக்கிறோம். * யோ. ௰௭: ௨௰—௨௩.

௪. உங்களுக்குச்சந்தோஷம் நிறைந்ததாயிருக்கும்படிக்கு இவைகளை உங்களுக்கெழுதுகிறோம்.

௫. மேலும் அவரிடத்தில் நாங்கள் கேட்டதுமாய், உங்களுக்கு அறிவிக்கிறதுமாயிருக்கிற விசேஷம் என்னவெனில், * பராபரன் எவ்வளவாகிலும் இருளில்லாமல் ஒளியாயிருக்கிறார். * சங்கீ. ௱௪: ௨.

௬. நாம் இருளிலேநடந்து அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லிக்கொண்டால், நாம் சத்தியத்தை நடப்பியாமற் பொய்பேசுகிறவர்களாயிருப்போம்.

௭. அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அல்லாமலும், * அவருடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய பாவங்களெல்லாவற்றையும் நீக்கி நம்மைச்சுத்திகரிக்கும். * எபி. ௯: ௰௪. வெளி. ௧: ௫.

௮. நமக்குப்பாவமில்லையென்றோமானால், நம்மைநாமே வஞ்சிக்கிறவர்களாவோம். சத்தியம் நமக்குள்ளேயிராது.

௯. * நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயமும், நம்மைவிட்டு நீங்க நம்மைச்சுத்திகரிப்பதற்கு உண்மையும், நீதியுமுள்ளவராயிருக்கிறார். * சங். ௩௨: ௫.

௰. நாம் பாவஞ்செய்யவில்லையென்றோமானால், நாம் அவரைப்பொய்யனாக்குகிறதாகவிருக்கும். அவருடையவார்த்தையும் நமக்குள்ளேயிராது.

௨ அதிகாரம்.

[(௧) அவர்களுடைய பலவீனத்தினாலுண்டாகும் பாவங்களைக்குறித்து ஆறுதல்சொல்லி, (௩) பராபரனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, (௯) சகோதரரைச்சிநேகித்து, (௰௫) உலகத்தை நேசியாமலிருப்பதே பராபரனை அறிகிற அறிவென்றுகாட்டி, (௰௮) எதிராளிகளுக்கு எச்சரிக்கையாயிருக்கவும், (௨௰) விசுவாச உறுதியும், பரிசுத்த நடக்கையுமுள்ள உத்தமர்கள் எதிரிகளின் மோசங்களுக்கு விலகியிருப்பார்களென்றுஞ் சொல்லியது.]

என் பிள்ளைகளே! நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு, இவைகளையுங்களுக்கெழுதுகிறேன். ஒருவன் பாவஞ்செய்தாலும் நீதியுள்ளவராயிருக்கிற இயேசுக்கிறிஸ்து என்னும் * காரியகர்த்தர் நமக்காகப்பிதாவினிடத்திலிருக்கிறார். * உரோ. ௮: ௩௪. எபி ௯: ௨௪.

௨. அவர் * நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற பலியானவராயிருக்கிறார்.—நம்முடைய பாவங்களுக்காகமாத்திரமல்ல. † சர்வலோகத்தினுடைய பாவங்களுக்காகவும் (அப்படியேயிருக்கிறார்.) * ௨ கொரி. ௫: ௨௧. † யோவா. ௧: ௨௯. ௩: ௰௬.

௩. அவருடைய கற்பனைகளை நாம்கைக்கொள்ளுகிறவர்களானால், அவரையறிந்துகொண்டிருக்கிறோமென்று அதினாலே யறிவோம்.

௪. அவருடைய கற்பனைகளைக்கைக்கொள்ளாமல், அவரையறிந்துகொண்டேனென்றுசொல்லுகிறவன் பொய்யனாயிருக்கிறான். சத்தியம் அவனுக்குள்ளேயில்லை.

௫. * அவருடைய வசனத்தைக்கைக்கொள்ளுகிறவனிடத்திலே பராபரனுடைய அன்புமெய்யாக நிறைவேறியிருக்கின்றது. நாம் அவருக்குள்ளிருக்கிறதை அதினாலே யறிந்திருக்கிறோம். * யோவா. ௰௪: ௨௧.

௬. * அவரிடத்தில் நிலைத்திருக்கிறேனென்றுசொல்லுகிறவன் அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும். * யோவான் ௰௫: ௰.

௭. பிரியமானவர்களே! நான் உங்களுக்குப்புதிய கற்பனையையல்ல. ஆதிமுதல் நீங்கள் பெற்றிருக்கிற பழமையான கற்பனையையே யெழுதுகிறேன். அந்தப்பழமையான கற்பனை நீங்கள் ஆதிமுதற்கேட்டுக்கொண்ட வசனமே.

௮. அன்றியும், நான் உங்களுக்குப்புதிய கற்பனையையுமெழுதுகிறேன். * இருள் நீங்கிப்போக, மெய்யான ஒளி இப்பொழுது பிரகாசிக்கிறபடியால், இது அவரைக்குறித்தும், உங்களைக்குறித்தும் மெய்யாயிருக்கின்றது. * உரோ. ௰௩: ௰௨.

௯. தன்சகோதரனைப்பகைத்து அந்த ஒளியிலேயிருக்கிறேனென்று சொல்லுகிறவன் இதுவரைக்குமே இருளிலிருக்கிறான்.

௰. தன்சகோதரனிடத்தில் அன்புகூருகிற

வன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான்.—
இடறல் அவனிடத்திலேயில்லை.
௰௧. தன்சகோதரனைப்பகைக்கிறவன் இரு
ளிலேயிருந்து, இருளிலே நடந்து, இரு
ளானது தன்கண்களைக்குருடாக்கினபடியா
ல், தான் நடக்கிற இடமின்னதென்று அறி
யாமலிருக்கிறான்.
௰௨. பிள்ளைகளே! அவருடைய நாமத்தி
னிமித்தம் உங்கள் * பாவங்கள் மன்னிக்
கப்படுகிறதால், உங்களுக்கெழுதுகிறேன்.
* லூக். ௨௪: ௪௭.
௰௩. பிதாக்களே! ஆதிமுதலாயிருக்கிறவ
ரை நீங்கள் அறிந்திருக்கிறதால் உங்களுக்
கெழுதுகிறேன். வாலிபரே! பொல்லாங்
கனை நீங்கள் செயித்ததால் உங்களுக்கெ
ழுதுகிறேன். குழந்தைகளே! நீங்கள் பி
தாவை அறிந்திருக்கிறதால் உங்களுக்கெழு
துகிறேன்.
௰௪. பிதாக்களே! ஆதிமுதலாயிருக்கிறவ
ரை நீங்கள் அறிந்திருக்கிறதால் உங்களுக்
கெழுதினேன். வாலிபரே! தேவவசனம்
உங்களிடத்தில் தரித்திருக்க நீங்கள் பெல
னுள்ளவர்களாய், பொல்லாங்கனைச்செயித்
ததால், உங்களுக்கெழுதினேன்.
௰௫. * உலகத்திலேயும், உலகத்திலுள்ள
வைகளிலேயும் அன்புகூராதிருப்பீர்களாக.
உலகத்தில் அன்புகூருகிறவன்பிதாவின்மேல்
அன்பில்லாதவனாயிருக்கிறான். *யாக். ௪: ௪.
௰௬. எப்படியெனில், மாம்சத்தின் இச்
சையும், கண்களுடைய இச்சையும், சீவ
னத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ள
இவையெல்லாம் பிதாவினாலுண்டாயிராமல்
உலகத்தினாலுண்டாயிருக்கின்றன.
௰௭. * உலகமும், அதின் இச்சையும் ஒ
ழிந்துபோகும். பராபரனுடைய சித்தத்
தின்படி செய்கிறவனே என்றென்றைக்கும்
நிலைநிற்பான். * ௧ கொரி. ௭: ௩௧.
௰௮. குழந்தைகளே! (இது) கடைசிநேர
மாயிருக்கின்றது. * கிறிஸ்துவின் எதிரா
ளிவருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்
டிருக்கிறபடி இப்பொழுதே கிறிஸ்துவின்
எதிராளிகள் அநேகருண்டாயிருக்கிறார்கள்.
அதினாலே இது கடைசிநேரமாயிருக்கிற
தென்றறிகிறோம். * மத். ௨௪: ௨௪.
௨ தெச. ௨: ௩, ௪.
௰௯. அவர்கள் * நம்மிடத்திலிருந்து புறப்
பட்டார்கள். ஆகிலும், அவர்கள் நம்மைச்
சேர்ந்தவர்களல்ல. நம்மைச்சேர்ந்தவர்க
ளாயிருந்தார்களானால் நம்முடனே தரித்
திருப்பார்களே. எல்லாரும் நம்மைச்சேர்
ந்தவர்களல்லவென்று வெளியாகும்படிக்கே
(புறப்பட்டார்கள்.) * அப். ௨௰: ௩௰.
௨௰. * நீங்கள் பரிசுத்தராலே அபிஷே
கத்தைப்பெற்றுச்சகலத்தையும் அறிந்திரு
க்கிறீர்கள். * யோவா. ௰௪: ௨௬. ௰௬: ௰௩.
௨௧ சத்தியத்தை நீங்கள் அறியாததாக
வல்ல. நீங்கள் அதையும், சத்தியத்தால்
ஒரு பொய்யுமுண்டாயிராதென்பதையும்
அறிந்திருக்கிறபடியால், உங்களுக்கெழுதி
னேன்.
௨௨. இயேசுவென்பவர் கிறிஸ்துவல்லவெ
ன்று மறுதலிக்கிறவனேயன்றி வேறார் பொ
ய்யன்? பிதாவையும், குமாரனையும் மறு
தலிக்கிறவனே கிறிஸ்துவுக்கெதிராளியான
வன்.
௨௩. குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவை
யுடையவனல்ல. குமாரனை யறிக்கைபண்
ணிக்கொள்ளுகிறவன் பிதாவையுமுடையவ
னாயிருக்கிறான்.
௨௪. ஆகையால், ஆதிமுதல் நீங்கள் கேள்
விப்பட்டது உங்களில் நிலைத்திருக்கக்கட
வது. ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது
உங்களில் நிலைத்திருந்தால் நீங்களுங் குமார
னிலும், பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள்.
௨௫. அவர் நமக்கு வாக்குத்தத்தம்பண்
ணினபொருள் * நித்திய சீவனே. உங்களை
வஞ்சிக்கத்தேடுகிறவர்களைக்குறித்து, இவை
களை யுங்களுக்கெழுதினேன். * யோவா.
௩: ௩௬.
௨௬. அப்படியிருந்தும் நீங்கள் அவரா
லேபெற்ற அபிஷேகம் உங்களில் நிலை
கொண்டிருக்கிறதால் ஒருவரும் உங்களுக்
குப்போதிக்கவேண்டுவதில்லை.
௨௭. அந்த அபிஷேகம் சகலகாரியங்க
ளையுங்குறித்து, * உங்களுக்குப்போதிக்கிற
தே பொய்யில்லாமற் சத்தியமாயிருக்கின்ற
து. ஆகையால், அது உங்களுக்குப்போ
தித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.
* எரே. ௩௧: ௩௪.
௨௮. இப்படியிருக்கப்பிள்ளைகளே! அவர்
வெளிப்பட்டு பிரசன்னமாய் வரும்பொழு
து நாம் அவரால் வெட்கப்படுத்தப்படா
மல் தயிரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு
* அவரில் நிலைத்திருங்கள். * யோவா.
௰௫: ௪—௭.
௨௯ அவர் நீதியுள்ளவராயிருக்கிறாரென்
பது உங்களுக்குத்தெரிந்திருக்க நீதியைச்
செய்கிறவனெவனோ அவன் அவரிற் பிறந்
தானென்றறிந்திருக்கிறீர்கள்.

௩ அதிகாரம்.

[(௧) நாம் தமக்குப்பிள்ளைகளாகும்படி
பராபரன் நம்மிடத்தில்வைத்த அன்பு இன்
னதென்றும், (௩) அதினால் நாம் அவரு
டைய கற்பனைகளைக்கைக்கொண்டு, (௰௧)
ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டுமென்
றுஞ் சொல்லியது.]

நாம் * பராபரனுடைய பிள்ளைகளெ
ன்றழைக்கப்படும்படி (செய்ததி
னாலே) பிதாவானவர் நமக்குக்காண்பித்த

யிருந்த அன்பை நோக்கிப்பாருங்கள். உலகத்தார் அவரை யறியாதபடியினாலே நம்மை யறியாமலிருக்கிறார்கள். பிரியமானவர்களே! * யோவா. ௧: ௰௨.

௨. இப்பொழுது பராபரனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். (இனிமேல்) இன்னவின்னவிதமாயிருப்போமென்று இன்னம் வெளியரங்கமாகவில்லை. (ஆகிலும்,) * அவர் வெளிப்படும்பொழுது அவரிருக்கிறதன்மையாய் நாம் † (அவரைத்தரிசிப்பதால்) அவருக்கொப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். * கொலோ. ௩: ௪. † ௫: ௮.

௩. மேலும் இப்படி அவர்மேல் நம்பிக்கையாய் இருக்கிறவனெவனோ அவன் அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோலத் தன்னையுஞ் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்.

௪. பாவஞ் செய்கிறவனெவனோ அவன் நியாயப்பிரமாணத்திற்கு விரோதஞ் செய்கிறான். பாவமானது நிபாயப்பிரமாணத்திற்கு விரோதமாயேயிருக்கின்றது.

௫. அன்றியும் நீங்கள் அறிந்துகொண்டபடி * அவர் நம்முடைய பாவங்களை நீக்கும்படிக்கு வெளிப்பட்டார். அவரிடத்திலே பாவமில்லை. * யோவா. ௧: ௨௯.

௬. அவரிடத்தில் நிலைத்திருக்கிறவனெவனோ அவன் பாவஞ்செய்கிறதில்லை. பாவஞ்செய்கிறவனெவனோ அவன் அவரைக்காணவுமில்லை. அவரையறியவுமில்லை.

௭. பிள்ளைகளே! நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருப்பீர்களாக. நீதியைச்செய்கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறதுபோல நீதியுள்ளவனாயிருக்கிறான்.

௮. பசாசானவன் ஆதிமுதற் பாவஞ்செய்கிறான். ஆகையாற் பாவஞ் செய்கிறவன் * பசாசினாலுண்டாயிருக்கிறான். அந்தப் † பசாசினுடைய கிரியைகளை யழிக்கும்படிக்கு, பராபரனுடைய குமாரன் வெளிப்பட்டார். * மத். ௰௩: ௩௮. † யோவா. ௮: ௪௪.

௯. * பராபரனிற் பிறந்தவனெவனோ அவனுக்குள்ளே அவருடையவித்துத்தரித்திருக்கிறதால் அவன் பாவஞ்செய்யான். அவன் பராபரனிடத்திலே பிறந்தபடியாற் பாவஞ் செய்யமாட்டான். * ௫: ௰௮.

௰. இதினாலே பராபரனுடைய பிள்ளைகளும், பசாசின் பிள்ளைகளும் வெளியரங்கமாகிறார்கள். நீதியைச்செய்யாமலும், தன் சகோதரனிடத்தில் அன்புகூராமலுமிருக்கிறவனெவனோ அவன் பராபரனாலுண்டானவனல்ல. என்னத்தினாலெனில்,

௰௧. * நாம் ஒருவரிலொருவர் அன்புகூர வேண்டுமென்பது நீங்கள் ஆதிமுதல் அறிவிக்கக்கேட்ட விசேஷமாயிருக்கின்றது * யோவா. ௰௩: ௩௪.

௰௨. * பொல்லாங்கனாலுண்டாயிருந்து தன் சகோதரனைக்கொலைசெய்த காயீனைப்போலிருக்கக்கூடாது. அவன் எதினிமித்தம் அவனைக்கொலைசெய்தான். தன் கிரியைகள் பொல்லாதவைகளாய், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தமே யப்படிச்செய்தான். * ௧ மோ. ௪: ௮.

௰௩. என் சகோதரரே! * உலகத்தார் உங்களைப்பகைத்தால் ஆச்சரியப்படாதிருப்பீர்களாக. * யோவா. ௰௫: ௰௮—௨௧.

௰௪. நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், * மரணத்தைவிட்டு நீங்கிச் சீவனுக்குட்பட்டிருக்கிறோமென்றறிந்திருக்கிறோம். சகோதரனிடத்தில் அன்புகூராமல் இருக்கிறவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான். * யோவா. ௫: ௨௪.

௰௫. * தன் சகோதரனைப்பகைக்கிறவன் மனிதக்கொலைபாதகனாயிருக்கிறான். மனிதக்கொலைபாதகன் எவனோ அவனுக்குள்ளே நித்திய சீவன் நிலைத்திராதென்று அறிந்திருக்கிறீர்கள். * மத். ௫: ௨௧, ௨௨.

௰௬. * அவர் தம்முடைய சீவனை நமக்காக விட்டுவிட்டதினாலே, அன்பு இன்னதென்றறிந்தோம். நாமுஞ் சகோதரருக்காக (நமது) சீவனை விட்டுவிடக்கடனாளிகளாய் இருக்கிறோம். * யோவா. ௩: ௰௬. ௰௫: ௰௩.

௰௭. ஒருவன் இவ்வுலக சீவனமுடையவனாயிருந்து, * தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள்ளே பராபரனுடைய அன்பு எப்படி நிலையாயிருக்கும்? * ௫ மோ. ௰௫: ௭.

௰௮. என் பிள்ளைகளே! வசனத்தினாலும், நாவினாலுமல்ல. * கிரியைகளினாலும், உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்— * யாக். ௨: ௰௫—௰௬.

௰௯ அதினாலே நாம் சத்தியமுள்ளவர்களென்று அறிந்து, நமது இருதயத்தை அவருக்கு முன்பாக நிச்சயப்படுத்தலாம்.

௨௰. நமது இருதயமே நம்மைக்குற்றவாளிகளாகத்தீர்க்குமானால், நம்முடைய இருதயத்திலும் பராபரன் பெரியவராயிருக்கிறாரென்றும், சகலத்தையும் அறிந்திருக்கிறாரென்றும்.(நினைப்போமாக.)

௨௧. பிரியமானவர்களே! நம்முடைய இருதயம் நம்மைக்குற்றவாளிகளென்று தீர்ப்புச்சொல்லாதிருந்தால் நாம் பராபரனிடத்தில் தயிரியங்கொள்வோம்.

௨௨. மேலும், அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினாலே; நாம் வேண்டிக்கொள்வதேதோ அதை யவராலே பெற்றுக்கொள்வோம்.

௨௩. நாம் அவருடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசு

வாசமாயிருந்து அவர் நமக்குக் கட்டளையிட்டபடி ஒருவரிலொருவர் அன்பாய் இருக்க வேண்டுமென்று இதுவே பராபரனுடைய கட்டளையாய் இருக்கின்றது.

௨௪. அவருடைய கட்டளைகளைக்கைக்கொள்ளுகிறவன் அவரிடத்தில் நிலைத்திருக்கிறான். அவரும் அவனிடத்தில் நிலைத்திருக்கிறார். அவர் நம்மிடத்தில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத்தந்த ஆவியினாலே அறிந்திருக்கிறோம்.

௪ அதிகாரம்.

[(௧) ஆவியையுடையவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற எல்லாப்போதகர்களையும் நம்பாமல், அவர்களைச்சாதாரண சத்திய விசுவாசத்தின் ஒழுங்குக்குக்காத்திருக்கிறார்களாவென்று சோதித்துப்பார்க்க எச்சரித்து, (௭) சகோதர சிநேகத்தைக்கைக்கொள்ளப்புத்திகள் சொல்லியது.]

பிரியமானவர்களே! உலகத்திலே அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றினபடியால் * நீங்கள் எந்த ஆவியையும் நம்பாமல், அந்த ஆவிகள் பராபரனாலுண்டானவைகளோவென்று சோதித்தறியுங்கள். * மத். ௭: ௰௫, ௰௬. ௨௪: ௪, ௫.

௨. பராபரனாலுண்டான ஆவியை நீங்கள் எதினாலே யறியலாமென்றால், இயேசுக்கிறிஸ்து மாம்சத்திலே வந்தாரென்று அறிக்கைபண்ணுகிற ஆவி யெதுவோ, அது பராபரனால் உண்டாயிருக்கின்றது.

௩. இயேசுக்கிறிஸ்து மாம்சத்திலே வந்தாரென்று அறிக்கைபண்ணாத ஆவியெதுவோ அது பராபரனாலுண்டாயிருக்கிறதல்ல. * அதுவே கிறிஸ்துவுக்கு எதிராளியானவனுடைய ஆவி. அது வருகிறதென்று நீங்கள் கேள்விப்பட்டீர்கள். அது இப்பொழுதே உலகத்திலிருக்கின்றது. * ௨: ௰௮—௨௨.

௪. பிள்ளைகளே! நீங்கள் பராபரனாலுண்டாயிருந்து, உலகத்தில் இருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவரானதால் அவர்களைச்செயித்தீர்கள்.

௫. அவர்கள் உலகத்தாரின் தன்மையையுடையவர்கள். ஆனபடியால் உலகத்தாரின் தன்மையாய்ப்பேசுகிறார்கள். உலகத்தாரும் அவர்களுக்குச்செவிகொடுக்கிறார்கள்.

௬. நாங்கள் பராபரனுடைய தன்மையையுடையவர்கள். * பராபரனை யறிந்துகொண்டவன் எங்களுக்குச்செவிகொடுக்கிறான். பராபரனுடைய தன்மையில்லாதவன் மாத்திரம் எங்களுக்குச்செவிகொடுக்கிறதில்லை. இதினாலே சத்திய ஆவியையும், வஞ்சக ஆவியையும் அறிந்திருக்கிறோம். * யோவா. ௮: ௪௭.

௭. பிரியமானவர்களே! அன்பு பராபரனாலுண்டாயிருக்கிறபடியால், ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம். அன்புள்ள யாவரும் பராபரனிற் பிறந்து அவரை யறிந்திருக்கிறார்கள்.

௮. பராபரன் அன்பாகவேயிருக்கிறபடியால், அன்பில்லாதவன் பராபரனை அறியான்.

௯. * பராபரனுடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினாலே பராபரன் நமதுமேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. * யோவா. ௩: ௰௬.

௰ நாம் பராபரனிடத்தில் அன்புகூர்ந்ததினாலல்ல. அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நீக்குங் கிருபையுண்டாகும்படி தம்முடைய குமாரனையனுப்பினதினாலே அன்புண்டாயிருக்கின்றது.

௰௧. பிரியமானவர்களே! * பராபரன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால், நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக்கடனாளிகளாயிருக்கிறோம். பராபரனை ஒருவரும் ஒருக்காலுங் காணவில்லை. * யோவா. ௰௫: ௰௨, ௰௩.

௰௨. நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தாற் பராபரன் நமக்குள்ளே நிலைத்திருப்பார். அவருடைய அன்பு நம்மிடத்தில் நிறைவுள்ளதாயுமிருக்கும்.

௰௩. * அவர் தம்முடைய ஆவியில் நமக்குக்கொடுத்ததினாலே நாம் அவரிலும், அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை யறிந்திருக்கிறோம். * உரோ. ௮: ௯.

௰௪. * பிதாவானவர் குமாரனை உலக இரட்சகராக அனுப்பினதை நாங்கள் பார்த்திருந்து சாட்சியிடுகிறோம். * யோவா. ௧: ௰௪.

௰௫. இயேசுவானவர் பராபரனுடைய குமாரனென்றறிக்கை பண்ணுகிறவனெவனோ, அவனிடத்திற் பராபரன் நிலைத்திருக்கிறார். பராபரனிடத்திலே அவனும் நிலைத்திருக்கிறான்.

௰௬. பராபரன் நமதுமேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். பராபரன் அன்பாகவேயிருக்கிறார். அன்பிலே நிலைத்திருக்கிறவன் பராபரனிடத்தில் நிலைத்திருக்கிறான். பராபரனும் அவனிடத்திலே நிலைத்திருக்கிறார்.

௰௭. நியாயத்தீர்ப்பின்நாளிலே நமக்குத் தயிரியமுண்டாயிருக்கத்தக்கதாக அன்பு நம்மிடத்தில் நிறைவுள்ளதாயிற்று. ஆனதால் அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இந்த உலகத்தில் இருக்கிறோமே.

௰௮. அன்பிலே பயமில்லை. நிறைந்த அன்பு பயத்தைப்புறம்பே தள்ளுகின்றது. பயமானது வேதனையுள்ளதே.

௰௯. பயப்படுகிறவன் நிறைந்த அன்புள்ளவனல்ல. * அவர் முந்தி நம்மிடத்தில் அன்

பு கூர்ந்தபடியால், நாமும் அவரிடத்தில்
அன்பு கூருகிறோம். * உரோ. ௫: ௮.
௨௰. ஒருவன் தன் சகோதரனைப்பகைத்து
நான் * பராபரனிடத்தில் அன்பு கூருகிறே
னென்று சொன்னால், அவன் பொய்ய
னாயிருப்பான். எப்படியெனில், அவன்
தான் கண்டிருக்கிற சகோதரனிடத்தில்
அன்பு கூராமலிருக்க, தான் காணாதிருக்கிற
பராபரனிடத்திலே யெப்படி அன்பாயிருப்
பான். * ௨: ௰.
௨௧. அன்றியும் பராபரனிடத்தில் அன்பு
கூருகிறவன் தன் சகோதரனிடத்திலும்
அன்புகூர வேண்டுமென்ற இந்தக்கட்டளை
யை அவராலே பெற்றிருக்கிறோம்.

௫ அதிகாரம்.

[(௧) பராபரனைச்சிநேகிக்கிறவன் பராபர
னுடைய பிள்ளைகளையுஞ் சிநேகித்து அவரு
டைய கட்டளைகளைக்கைக்கொண்டு, அந்தக்
கட்டளைகள் விசுவாசிகளுக்குப்பாரமாயிரா
மல், இலேசாய் இருக்கிறதென்று உணர்ந்
திருப்பானென்றும், (௬) தேவசுதனாகிய இ
யேசுவானவர் நம்மைஇரட்சிக்கவும், (௰௪)
நாம் நமக்கும், மற்றவர்களுக்குஞ் செய்யும்
வேண்டுதல்களைக்கேட்கவும், வல்லவரென்
றுஞ் சொல்வியது.]

இயேசுவென்பவரே கிறிஸ்துவென்று
விசுவாசிக்கிறவனெவனோ, அவன் *
பராபரனிற் பிறந்திருக்கிறான். அன்றியும்
பிறப்பித்தவரிடத்தில் அன்பு கூருகிற யாவ
ரும் அவரிற் பிறந்தவனிடத்திலும், அன்பு
கூருகிறார்கள். * யோவா. ௧; ௰௨, ௰௩.
௨. நாம் பராபரனிடத்திலே அன்புகூர்ந்
து அவருடைய கற்பனைகளைக்கைக்கொண்
டு வருகிறதினாலே, நம்மைப்பராபரனுடை
ய பிள்ளைகளிடத்தில் அன்பு கூருகிறவர்க
ளென்று, அறிந்து கொள்ளுகிறோம்.
௩. * நாம் பராபரனுடைய கற்பனைகளைக்
கைக்கொள்ளுகிறதே அவரிடத்தில் அன்பு
கூருகிறதாம். இப்படி † அவருடைய கற்
பனைகள் பாரமானவைகளுமல்ல, * யோவா.
௰௪: ௨௩, ௨௪. † மத். ௰௧: ௩௰.
௪. எப்படியெனில், பராபரனிற் பிறந்தவ
னெவனோ, அவன் * உலகத்தைச்செயிக்கி
றான். நம்முடைய விசுவாசமே உலகத்தை
ச்செயிக்கிற செயம். * ௨: ௰௩—௰௭.
௫. * இயேசுவானவர் பராபரனுடைய கு
மாரனென்று விசுவாசிக்கிறவனே யன்றி,
வேறு யாவன் உலகத்தைச்செயிக்கிறவன்?
* ௧ கொரி. ௰௫: ௫௭.
௬. இயேசுக்கிறிஸ்துவாகிய அவரே * சல
த்தினாலும், இரத்தத்தினாலுந்தோன்றி வந்
தவர். சலத்தினாலே மாத்திரமல்ல, சலத்தி
னாலும், இரத்தத்தினாலுமே (வந்தார்.) ஆவி
யானவர் சத்தியமாகையால் ஆவியானவரே
சாட்சிகொடுக்கிறவர். * யோவா. ௰௫:
௨௬, ௨௭.
௭. ஆனதாற் பரமண்டலத்திலே * பிதா,
வார்த்தை, பரிசுத்த ஆவியென்று இம்மூவ
ருஞ் சாட்சியிடுகிறார்கள். அம் † மூவரும்
ஒன்றாயிருக்கிறார்கள். * யோவா. ௧: ௧.
† யோவா. ௰: ௩௰.
௮. பூமியிலேயும் ஆவி, சலம், இரத்தமெ
ன்றிம்மூன்றுஞ் சாட்சியிடுகின்றன. அம்மூ
ன்றும் ஒன்றாகப்பொருந்துகின்றன.
௯. நாம் ஏற்றுக்கொள்ளுகிற மனிதருடை
ய சாட்சியிலும், * பராபரனுடைய சாட்
சி அதிகமாயிருக்கின்றது. பராபரன் தம
து குமாரனைக்குறித்துக்கொடுத்த சாட்சி
அதுவே. * யோவா. ௮: ௰௮.
௰. பராபரனுடைய குமாரனிடத்தில் விசு
வாசமாயிருக்கிறவன் அந்தச்சாட்சியைத்
தனக்குள்ளே கொண்டிருக்கிறான். பராபர
னை விசுவாசியாதவன் அவரைப்பொய்ய
னென்கிறவனாக விருக்கிறான். பராபரன் தம்
முடைய குமாரனைக்குறித்துக்கொடுத்த
சாட்சியை விசுவாசிக்கவில்லையே.
௰௧. அந்தச்சாட்சி என்னெனிற் பரா
பரன் நமக்கு நித்திய சீவனைக்கொடுத்திருக்
கிறார். * அந்தச்சீவன் அவருடைய குமார
னிலிருக்கிறதென்பதே. * யோவா. ௧: ௪.
௰௨. * குமாரனையுடையவன் அந்தச்சீவ
னையுடையவனாயிருக்கிறான். பராபரனுடை
ய குமாரனில்லாதவன் அந்தச்சீவனில்லாத
வனாயிருக்கிறான். * யோவா. ௩: ௩௬.
௰௩. பராபரனுடைய குமாரனுடைய நா
மத்தில் விசுவாசமாயிருக்கிற நீங்கள் நித்
திய சீவனை யுடையவர்களென்றறிந்து, பரா
பரனுடைய குமாரனுடைய நாமத்தின்
மேலே விசுவாசமாயிருக்கும்படிக்கு இவை
களை உங்களுக்கு எழுதினேன்.
௰௪. * நாம் எதையாகிலும் அவருடைய
சித்தத்தின்படியே கேட்டால் அவர் நமக்
குச்செவிகொடுப்பாரென்பதே. அவரால்
நமக்குண்டாயிருக்கிற தயிரியம். * ௩: ௨௧,
௨௨.
௰௫. அன்றியும் நாம் எதைக்கேட்டாலும்
அவர் நமக்குச்செவிகொடுப்பாரென்று நா
ம் அறிந்திருக்க, அவரிடத்தில் நாம் பண்
ணின விண்ணப்பங்களைப்பெற்றோமென்றும்
அறிந்திருக்கிறோம்.
௰௬. ஒருவன் மரணத்திற்கேதுவல்லாத
பாவத்தைத்தன் சகோதரன் செய்யக்கண்
டால், (கர்த்தாவைநோக்கிச்) செபம்பண்
ணக்கடவன். அப்பொழுது அவர் அவனுக்
கு மரணத்திற்கேதுவல்லாத பாவத்தைச்
செய்தவர்களுக்கு ஏற்ற உயிரைக்கொடுப்
பார். * மரணத்திற்கேதுவான பாவமுண்
டு அதைக்குறித்துச்செபம் பண்ணச்சொ

ல்லமாட்டேன். * மார். ௩: ௨௮, ௨௯.
எபி. ௬: ௪—௬. ௰: ௨௬—௨௯.
௰௭. அநியாயம் யாவும் பாவந்தான். மர
ணத்திற்கேதுவல்லாத பாவமுமுண்டு.
௰௮. நாம் அறிந்துகொண்டபடி பராபர
னிற் பிறந்தவனெவனோ, அவன் பாவஞ் செ
ய்யமாட்டான். பராபரனிற் பிறந்தவன்
தன்னைக்காக்கிறான். ஆகையாற் பொல்லா
ங்கன் அவனைத்தொடான்.
௰௯. மேலும் நமக்குத்தெரிந்திருக்கிறப
டி நாம் பராபரனால் உண்டாயிருக்கிறோம்.
உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள்ளே
கிடக்கின்றது.
௨௰. மேலும் நமக்குத்தெரிந்திருக்கிறபடி
நாம் மெய்யானவரை யறிந்துகொள்வதற்
கு, பராபரனுடைய குமாரன் வந்து, நமக்
குப்புத்தியைக்கொடுத்தார். அந்தப்படி நா
ம் அவருடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்
துவிலுள்ள மெய்யானவரைப்பற்றியிருக்கி
றோம். * அவரே மெய்யான தேவனுமாய்,
நித்திய சீவனுமாயிருக்கிறார். * உரோ. ௯:
௫. ௧ தீமோ. ௩: ௰௬. எபி. ௧: ௮.
௨௧. பிள்ளைகளே! நீங்கள் விக்கிரகங்களு
க்கு விலகி, உங்களைக்காத்துக்கொள்வீர்க
ளாக —ஆமென்.

அப்போஸ்தலனாகிய

யோவான் எழுதின இரண்டாம் நிருபம்.

II. JOHN.

[(௧) கனம்பொருந்திய ஒரு அம்மாளும், அவளுடைய பிள்ளைகளுங் கிறிஸ்துமார்க்கத்துக்கடுத்த அன்பிலும், விசுவாசத்திலும் நிலைநின்று, (௮) தங்கள் பலனை யிழந்துபோகாதிருக்கவும், (௰) கிறிஸ்து இயேசுவின் சத்திய உபதேசத்தைக்கொண்டுவராத கள்ளப்போதகர்களை ஏற்றுக்கொள்ளாமலிருக்கவும் அவர்களுக்குப்புத்தி சொல்லியது.]

நம்மிடத்திலே நிலைநிற்கிறதுமாய், எ
ன்றென்றைக்கும் நம்மோடிருப்பது
மாயிருக்கிற சத்தியத்தினிமித்தம் நான்மா
த்திரமல்ல, சத்தியத்தை யறிந்திருக்கிற
மற்றயாவரும் உண்மையாய்ச்சிநேகித்திரு
க்கிற,
௨. தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாளுக்
கும், அவளுடைய பிள்ளைகளுக்கும் மூப்ப
னாகிய நான் எழுதுகிறதாவது;
௩. பிதாவாகிய பராபரனாலும், பிதாவின்
குமாரனாகிய கர்த்தாவாயிருக்கிற இயேசுக்கி
றிஸ்துவினாலுங் கிருபையும், இரக்கமும்,
சமாதானமுஞ் சத்தியத்தோடும், அன்போ
டுங்கூட உங்களுக்குண்டாயிருக்கக்கட
வது.
௪. உம்முடைய பிள்ளைகளிற் சிலர் பிதாவி
னால் நாம் கற்பனையடைந்தபடி சத்தியத்தி
லே நடக்கிறவர்களென்று நான் கண்டு மிக
வுஞ் சந்தோஷப்பட்டேன்.
௫. இப்பொழுது அம்மாளே! நான் உமக்
குப்புதியகற்பனையாகவல்ல, * ஆதிமுதல்
நமக்குண்டாயிருக்கிற கற்பனையாக எழுதி
வேண்டிக்கொள்ளுகிறதென்னவெனில், † நா
ம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரவேண்
டும். * யோவா. ௰௩: ௩௪. ௰௫: ௰௨. எபே.
௫: ௨. ௧ பேது. ௪: ௮. ௧ யோவா. ௩: ௨௩.
† ௧ யோவா. ௨: ௭, ௮.
௬. * நாம் அவருடைய கற்பனைகளின்ப
டி நடக்கிறதே யன்புகூருகிறதாம். நீங்கள்
ஆதிமுதற்கேட்டிருக்கிறபடி அதிலே நடந்
துகொள்ள வேண்டுமென்பதே யந்தக்கற்ப
னையாயிருக்கின்றது. * ௧ யோவா. ௫: ௩.
௭. அநேக வஞ்சனைக்காரர் உலகத்திலே
தோன்றியிருக்கிறார்கள். இயேசுக்கிறிஸ்து
வானவர் மாம்சமானாரென்று அறிக்கை ப
ண்ணாமலிருக்கிறார்கள். இப்படிப்பட்டவ
னே வஞ்சனைக்காரனுமாய், கிறிஸ்துவுக்
கெதிராளியுமாயிருக்கிறான்.
௮. * நாம் நம்முடைய வேலைகளை யிழந்
துபோகாமல், நிறைந்த பலனைப்பெறும்ப
டிக்கு, எச்சரிக்கையாயிருங்கள். * எபி.
௪: ௧.
௯. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைநில்
லாமல், மீறிநடக்கிற எவனும் பராபரனை
யடையாதவனாயிருக்கிறான். கிறிஸ்துவின்
உபதேசத்திலே நிலைநிற்கிறவனே பிதாவை
யும், குமாரனையும் அடைந்திருக்கிறான்.
௰. * ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த
உபதேசத்தைக்கொண்டு வராமலிருந்தால்,
அவனை நீங்கள் உங்கள் வீட்டிலே சேர்த்

துக்கொள்ளவும், அவனுக்கு வாழ்த்துதல்
சொல்லவுங்கூடாது. * உரோ. யகூ: யஎ,
யஅ.
யக. அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிற
வன் அவனுடைய துர்க்கிரியைகளுக்குப்
பங்காளனாகிறனே.
யஉ. நான் பின்னும் அநேகங்காரியங்களை
யுங்களுக்கு அறிவிக்கவேண்டும். காகிதத்தி
னாலும், மையினாலும் அப்படிச்செய்ய மன
தில்லை நமக்குச்சந்தோஷம் நிறைவாயிரு
க்கும்படிக்கு உங்களிடத்தில் வந்து முகமு
கமாய்ப்பேசலாமென்று நம்பி யிருக்கி
றேன்.
யங. தெரிந்துகொள்ளப்பட்ட உம்முடை
ய சகோதரியின் பிள்ளைகள் உமக்கு வாழ்த்
துதல் செப்புகிறார்கள்.— ஆமென்.

அப்போஸ்தலனாகிய

யோவான் எழுதின மூன்றாம் நிருபம்.

III. JOHN.

[(க) காயுவைத்தன் தேவபத்திக்கும், (ரு) உத்தம போதகர்களுக்குச்செய்யும், உபசாரத்துக்கும் புகழ்ந்து, (கூ) பெருமையுள்ள தியோத்திரேப்பே என்றவனுடைய கெட்ட நடக்கையைக்குறித்து விதனப்பட்டு, (யக) அந்த நடக்கையை ஒருவரும் பின்பற்றுமவிருக்கச்சொல்லி, (யஉ) தேமேத்திரியு என்றவனுக்கு நற்சாட்சி பகர்ந்தது.]

மூப்பனாகிய நான் * உண்மையாய்
அன்புகூருகிற பிரியமான காயுவுக்
கு எழுதுகிறதாவது; பிரியமானவனே!
* உ யோவா. க. வசனம்.
உ. உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ
சகலவிதத்திலும் வாழ்ந்து சுகமாயிருக்க
வேண்டுகிறேன்.
ங. சகோதரர் வந்து, நீ சத்தியத்தில் நட
ந்துகொள்ளுகிறபடி உன்னுடைய உண்
மையைக்குறித்துச் சாட்சிகொடுத்தபொழு
து மிகவுஞ் சந்தோஷப்பட்டேன்.
ச. என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கி
றதை நான் கேள்விப்படுகிறதினால், (வருகி
ற சந்தோஷத்திற்கு) மேலான சந்தோ
ஷம் எனக்கில்லை.
ரு பிரியமானவனே! நீ சகோதரருக்கும்,
பரதேசிகளுக்குஞ் செய்கிற கிரியைகள்
யாவையும் உண்மையாய்ச்செய்கிறாய்.
கூ. அவர்கள் உன்னுடைய அன்பைக்குறி
த்துச்சபைக்குமுன்பாகச்சாட்சி சொன்னா
ர்கள். அவர்களை நீ பராபரனுக்குமுன்பா
கப்பாத்திரமானபடி வழிவிட்டனுப்பினால்
நன்மைசெய்வாய்.
எ. அவருடைய நாமத்தினிமித்தம் அவர்
கள் அஞ்ஞானிகளிடத்தில் ஒன்றும்வாங்கா
மற் புறப்பட்டார்களே.
அ. ஆகையால், நாம் சத்தியத்திற்கு உத
விசெய்கிறவர்களாயிருக்கும்படிக்கு, இப்
படிப்பட்டவர்களைச் சேர்த்துக்கொள்ளக்
கடனாளிகளாயிருக்கிறோம். நான் சபைக்கு
எழுதினேன்.
கூ. அப்படியிருந்தும், அவர்களுக்குமுத
லாளியாயிருக்க விரும்புகிற தியோத்திரே
ப்பு எங்களை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை.
ய. ஆனபடியினாலே நான் வரும்பொழுது
அவன் எங்களுக்கு விரோதமாய்ப்பொல்
லாதவார்த்தைகளைப்பேசிச்செய்து வருகிற
கிரியைகளை நினைத்துக்கொள்ளுவேன். அ
வைகளும் அவனுக்குப்போதாது. அவன்
தானே சகோதரரை ஏற்றுக்கொள்ளாதிருக்
கிறதுமல்லாமல், ஏற்றுக்கொள்ளமனதாயி
ருக்கிறவர்களையுந் தடைசெய்து சபைக்
குப்புறம்பேதள்ளுகிறான்.
யக. பிரியமானவனே! நீ பொல்லாங்கான
தையல்ல, நலமானதைப்பின்பற்றுவாயாக.
நன்மைசெய்கிறவன் பராபரனாலுண்டாயி
ருக்கிறான். * பொல்லாங்கைச்செய்கிறவன்
பராபரனைக்கண்டறியவில்லை. * க யோ.
ங: சூ.
யஉ. தேமேத்திரியுவென்பவனுக்கு எல்லா
ராலும், சத்தியத்தாலுந்தானே நற்சாட்சி
யுண்டாயிருக்கிறது நாங்களுஞ் சாட்சி
கொடுக்கிறோம். எங்கள்சாட்சி மெய்யென்
றறிந்திருக்கிறீர்கள்.
யங. நான் * அநேகங்காரியங்களை யுனக்
கெழுதவேண்டும். அவைகளைமையினாலும்,
இறகினாலும் எழுதமனதில்லை. * உ யோ
யஉ, வசனம்.

௰௪. நான் சீக்கிரமாய் உன்னைப்பார்க்க
லாமென்று நம்பியிருக்கிறேன். அப்பொ
ழுது முகமுகமாய்ப்பேசுவோம். உனக்
குச்சமாதானமுண்டாயிருக்கக்கடவது.
௰௫. (எங்களிடத்திலுள்ள) சிநேகிதர் உன்
னைவாழ்த்துதல் செய்கிறார்கள். உன்னிடத்
திலுள்ள சிநேகிதர்களைப்பேர்பேராக (என்
னாலே) வாழ்த்துதல் செய்வாயாக.

முற்றும்.

அப்போஸ்தலனாகிய

யூதா எழுதின நிருபம்.

JUDE.

[(௧) விசுவாசத்தை யுறுதியாய்க்கைக்கொ
ள்ளப்புத்திசொல்லி, (௪) அவர்களைக்கெ
டுக்கும்படி பிரவேசித்திருக்கிற கள்ளப்போ
தகர்களுடைய சாபத்தைத்தரும உபதே
சத்துக்கும், நடக்கைக்கும் உக்கிரமான
ஆக்கினைகிடைக்குமென்றும், (௨௰) உத்த
மர்களோ பரிசுத்த ஆவியின் ஏவுதலினாலும்,
பராபரனை நோக்கி வேண்டிக்கொள்ளுகிற
தினாலும் ஊக்கமடைந்து கிருபையிலே
வளர்ந்து தங்களைக்காத்துக்கொள்ளுவது
மன்றி, எத்தர்கள்வைத்த கண்ணிகளிலகப்
பட்டவர்களைக்காப்பார்களென்றுஞ் சொல்
லியது.]

இயேசுக்கிறிஸ்துவினுடைய * ஊழி
யக்காரனுமாய், யாக்கோபினுடை
ய சகோதரனுமாயிருக்கிற யூதாவென்ப
வன் பிதாவாகிய பராபரனாலே பரிசுத்த
மாக்கப்பட்டும், இயேசுக்கிறிஸ்துவினாற்
காக்கப்பட்டும், அழைக்கப்பட்டும் இருக்
கிறவர்களுக்கு எழுதுகிறதாவது; * லூக்.
௬: ௰௬.

௨. இரக்கமும், சமாதானமும், அன்பும்
உங்களுக்குச் சம்பூரணமாயுண்டாகக்கட
வது.

௩. பிரியமானவர்களே! பொதுவான இரட்
சிப்பைக்குறித்து உங்களுக்கெழுதவேண்டு
மென்று நான் மிகுந்த கருத்துள்ளவனாய்
இருக்கையில், முன்னே பரிசுத்தவான்களுக்
கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற விசுவா
சத்திற்காக நீங்கள் கெட்டியாய்ப்போ
ராட்டம்பண்ணும்படிக்கு உங்களுக்குப்புத்
தியை யெழுதுகிறது எனக்கு அவசிய
மாய்த்தோன்றிற்று.

௪. என்னத்தினாலென்னில், நம்முடைய பரா
பரனுடைய கிருபையைக் * காமவிகாரத்
திற்கேதுவாகப்புரட்டி, ஒன்றான சுயாதி
பதியான பராபரனுமாய், நம்முடைய
கர்த்தருமாயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவை
† மறுதலிக்கிற துன்மார்க்கரான சிலமனி
தர்கள் பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்
கள். அவர்கள் அடையும் ஆக்கினையைக்
குறித்துப்பூர்வீகத்திலே முன்னெழுதியிருக்
கின்றது. * கலாத். ௫: ௰௩. † ௨ பேது.
௨: ௧.

௫. அந்தப்படி நீங்கள் முன்னேயறிந்
திருந்தும், நான் உங்களுக்கு ஞாபகப்படு
த்த விரும்புகிறதென்னவெனில், கர்த்தர்
எகிப்து தேசத்திலிருந்து * சனத்தை இர
ட்சித்தபின்பு விசுவாசியாதவர்களை யழித்
தார். * ௧ கொரி. ௰: ௧—௫.

௬. அன்றியும், * தங்களுடைய ஆதிநிலை
மையைக்காவாமல் தங்களுக்கேற்ற இருப்
பிடத்தைவிட்டு விலகினதூதர்கள் பெரிய
நியாயத்தீர்ப்புநாள்வரைக்கும், நித்திய சங்
கிலிகளினாலே (கட்டப்பட்டு) அந்தகாரத்
திலிருக்கும்படி நியமித்தார். * ௨ பேது.
௨: ௪.

௭. * அப்படிப்போலச்சோதோம், கொ
மோறாபட்டினத்தார்களும், அவைகளைச்
சூழ்ந்த பட்டினத்தார்களும் இவர்களுடைய
விதமாய், வேசித்தனத்தில் அமிழ்ந்து அந்
நிய மாம்சத்தைச்சேர்ந்துபோனதினாலே
நித்திய அக்கினியை ஆக்கினையாக அடை
ந்து, திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்
கிறார்கள். * ௨ பேது. ௨: ௬.

௮. அப்படிப்போல இந்தச்சொப்பனக்
காரர் மாம்சத்தை அசுசிப்படுத்திக்கொண்
டு, கர்த்தத்துவத்தை யசட்டைபண்ணி,
மகத்துவங்களைத்தூஷணிக்கிறார்கள்.

௯. பிரதான தூதனாகிய * மிகாவேலும்
மோசேயினுடைய சரீரத்தைக்குறித்துப்
பசாசானவனுடனே தருக்கித்துப்பேசின
பொழுது, தூஷணமுள்ள தீர்ப்பை யவனுக்
குச்சொல்லத்துணியாமற் † கர்த்தருன்னை
க்கடிந்துகொள்வாராகவென்று (மாத்தி

ரஞ்) சொன்னான். * தானி. ௰: ௰௩. வெளி. ௰௨: ௭. † சகரி. ௩: ௧, ௨.

௰. * இவர்கள் தங்களுக்குத்தெரியாதவைகளைத்தூஷணிக்கிறார்கள். † புத்தியில்லாத மிருகங்களைப்போலச்சுபாவப்படி தங்களுக்குத்தெரிந்திருக்கிறவைகளாலே தங்களைக்கெடுக்கிறார்கள். * ௨ பேது. ௨: ௰௨. † உரோ. ௬: ௨௧, ௨௨.

௰௧. ஐயோ, அவர்களுக்கு வேதனையுண்டாகும். அவர்கள் * காயீனுடைய வழியில் நடந்து † பாலாம் கூலிக்காகச்செய்தவஞ்சகத்திலே விரைந்தோடிக் ‡ கோரா விரோதம்பேசினதினாலே கெட்டுப்போனார்கள். * ௧ மோ. ௪: ௮. † ௨ பேது. ௨: ௰௫. ‡ ௪ மோ. ௰௬: ௧.

௰௨. * இவர்கள் உங்கள் அன்பு விருந்துகளில் மாசுகளாயிருந்து, பயமில்லாமல் விருந்துண்டு தங்களை மேய்க்கிறார்கள். அவர்கள் † காற்றுக்களால் அடிக்கப்பட்டலைகிற நீரில்லாத மேகங்களும், உலர்ந்துகனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போனமரங்களும், * ௨ பே. ௨: ௰௩, ௰௪. † ௨ பேது. ௨: ௰௭.

௰௩. * தங்கள் சுய இலச்சைகளை நுரைபோலக்கக்குகிற உக்கிரத்தையுடைய கடலின் அலைகளும், மார்க்கந்தப்பிநடக்கிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள். என்றென்றைக்குமுள்ள காரிருளே அவர்களுக்காக வைக்கப்பட்டிருக்கின்றது. *ஏசா. ௫௭:௨௰.

௰௪. ஆதாம் முதற்கொண்டு ஏழாந்தலைமுறையிலுண்டாயிருந்த * ஏனோக்கென்பவன் இவர்களைக்குறித்தும் முன்னறிவித்தது; இதோ, கர்த்தர் எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும்படிக்கும், அவர்களில் தேவபத்தியில்லாத யாவரும் துன்மார்க்கமாய்ச்செய்த சகல துன்மார்க்ககிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய். * ௧ மோ. ௫: ௰௮—௨௪.

௰௫. தேவபத்தியில்லாத பாவிகள் பேசின கடினவார்த்தைகளெல்லாவற்றின் நிமித்தமும் அவர்களைக்கண்டிக்கும்படிக்கும், *திரளான சேனைகளாகிய தம்முடைய பரிசுத்தவான்களோடுங்கூட வருகிறாரென்று அறிவித்தான். * தானி. ௭: ௰. மத். ௨௫: ௩௧.

௰௬. இவர்கள் முறுமுறுக்கிறவர்களுமாய், முறையிட்டுத்திரிகிறவர்களுமாய், தங்கள் இச்சையின்படி நடக்கிறவர்களுமாயிருக்கிறார்கள். இவர்கள் வாயினாலே மிகவும் * இறுமாப்பானவைகளைப்பேசி, பொழிவுக்காகப்பெரியோர்களைப் புகழ்கிறார்கள். * ௨ பேது. ௨: ௰௮.

௰௭. பிரியமானவர்களே! நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் அப்போஸ்தலரால் முன்சொல்லப்பட்டவார்த்தைகளை நினைத்துக்கொள்ளுங்கள்;

௰௮. * கடைசிக்காலத்திலே தங்கள் துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர் தோன்றுவார்களென்று உங்களுக்குச்சொன்னார்களே. * ௨ தீமோத். ௩: ௧—௫.

௰௯. இவர்களே பிரிந்துபோகிறவர்களும், சென்மசுபாவத்தாரும், (தேவ) ஆவியில்லாதவர்களுமானவர்கள்.

௨௰. பிரியமானவர்களே! நீங்கள் உங்களுக்குண்டாயிருக்கிறது மிகவும் பரிசுத்தமான விசுவாசத்தின்மேலே உங்களைப்பொருந்தக்கட்டிக்கொண்டு;

௨௧. பரிசுத்த ஆவியைக்கொண்டு செபம்பண்ணி, பராபரனுடைய அன்பிலே உங்களைக்காத்துக்கொண்டு, நித்திய ஜீவனுக்கு ஏதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய இரக்கம்வரப்பார்த்திருங்கள்.

௨௨. அல்லாமலும், வகையறுக்கிறவர்களாய் நீங்கள் * சிலருக்கு இரங்கி, சிலரை அக்கினியிலிருந்து இழுத்துக்கொண்டு, பயத்தோடே இரட்சித்து, மாம்ச இச்சைகளால் அசுசிப்பட்டிருக்கிற அங்கியையும் வெறுத்துப்போடுங்கள். * கலா. ௬: ௧.

௨௩. நீங்கள் வழுவாதபடிக்கு உங்களைக்காத்துக்கொள்ளுதற்கும், மாசில்லாமல் மகிழ்ச்சியோடே உங்களைத்தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே நிறுத்துகிறதற்கும் வல்லமையுள்ளவருமாய்,

௨௪. நம்முடைய இரட்சகரான ஞானமுள்ள * ஒருவராகிய தேவனுமாயிருக்கிறவருக்கு இப்பொழுதும் இனிமேலிருக்கும் எல்லாக்காலங்களிலேயும் புகழ்ச்சியும், மகத்துவமும், வல்லமையும், அதிகாரமும் உண்டாயிருக்கக்கடவது.—ஆமென். * உரோ. ௰௬: ௨௭.

தேய்வவசன போதகராகிய

யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம்.

REVELATION.

க அதிகாரம்.

[(க) ஏழு பொன்விளக்குத்தண்டுகளுக்கு
ஒப்பனையாக்கப்பட்ட ஆசியாவிலிருந்த
ஏழு சபைகளுக்கு யோவான் அறிவிப்பை
யெழுதி, (எ) கிறிஸ்துவின் வருகையைக்
குறித்தும், (யச) அவருடைய மகிமையுள்ள
வல்லமையையும், மகத்துவத்தையுங் குறித்
துஞ் சொல்லியது.]

சீக்கிரமாய் நடக்கவேண்டியவைகளைப்
பராபரன் தம்முடைய ஊழியக்கார
ருக்குக்காண்பிக்கும்படிக்கு இயேசுக்கிறிஸ்
துவுக்குக்கொடுத்ததும், இவர் வெளிப்படுத்
தினதுமான விசேஷம். அவர் தம்முடைய
ஊழியக்காரனாகிய யோவானிடத்திற்குத்
தம்முடைய தூதனையனுப்பி, அவனாலவை
களைக்குறிப்பாகக்காட்டினார்.

உ. அவன் பராபரனுடைய வசனமும்,
இயேசுக்கிறிஸ்துச்சாட்சியிட்ட விசேஷமு
மாகிய தான்கண்ட யாவற்றையும் அறிவித்
திருக்கிறான்.

ங. காலஞ் சமீபமாயிருக்கிறது. ஆகையா
ல், * இந்தத்தீர்க்கதரிசனமான வசனங்களை
வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில்
எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிற
வர்களும் பாக்கியவான்கள். * உஉ: எ.

ச. யோவான் ஆசியாவிலுள்ள சபைகள்
* ஏழுக்கும் எழுதுகிறதாவது; † இருக்கிற
வரும், இருந்தவரும், வருகிறவருமானவரா
லும், அவருடைய ஆசனத்திற்குமுன்பாக
விருக்கிற ஏழு ஆவிகளாலும், * யக. வச.
† உரோ. ங: யச.

ரு. உண்மையுள்ள சாட்சியும், * மரித்தோ
ரிலிருந்து முதற்பிறந்தவரும், † பூமியின்
இராசாக்களுக்கதிபதியுமாகிய இயேசுக்கி
றிஸ்துவினாலும், உங்களுக்குக்கிருபையும்,
சமாதான சவுக்கியமுமுண்டாகக்கடவது.
‡ நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்
தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்
மைக்கழுவி, * ங: யச. யோவா. அ: யச.
† க் தீமோ. கூ: யங. ‡ க கொரி. யரு: உய.

சா. தம்முடைய பிதாவாகிய பராபரனுக்
கு (முன்பாக) நம்மைத்தமது * இராச்சி
யத்தாராகவும், ஆசாரியராகவுஞ் செய்திரு
க்கிற அவருக்கு மகிமையும், வல்லமையும்
என்றென்றைக்கும் உண்டாயிருக்கக்கடவ
து.—ஆமன். * க பேது. உ: கூ.

எ. அதோ * மேகங்களுடனேவருகிறார்.
கண்கள்யாவும், அவரைக்குத்தினவர்களும்
(அவரைக்காண்பார்கள்.) பூமியின் கோத்
திரத்தார்களெல்லாரும் † அவரைக்குறித்
துத்துக்கத்தோடே புலம்புவார்கள். மெய்
யாய் அப்படியிருக்கும்.—ஆமன். * மத்.
உச: ஙய. † சகரி. யஉ: ய.

அ. இருக்கிறவரும், இருந்தவரும், வருகிற
வருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர் நா
ன் * அல்பாவும், ஓமேகாவும், ஆதியும்,
அந்தமுமாயிருக்கிறேனென்று திருவுளம்
பற்றுகிறார். * ஏசா. சக: ச. சச: சா.

கூ. உங்கள் சகோதரனுமாய், இயேசுக்
கிறிஸ்துவினிமித்தம்வருகிற உபத்திரவத்திற்
கும், அவருடைய இராச்சியத்திற்கும், பொ
றுமைக்கும் உங்களுடனே பங்காளனுமாயி
ருக்கிற யோவானாகிய நான் பராபரனுடை
ய வசனத்தினிமித்தமும், இயேசுக்கிறிஸ்து
வைக்குறித்துச்சாட்சிசொன்னதின் நிமித்த
மும் பதமு என்னப்பட்ட தீவிலே இருந்
தேன்.

ய. (அங்கே) கர்த்தருடையநாளில் ஆவிக்
குள்ளானேன்.

யக. அப்பொழுது நீ காண்கிறதை ஒரு
புஸ்தகத்திலேயெழுதி, ஆசியாவிலிருக்கிற
எபேசு, சிமிருனா, பெருகமு, தியத்தைரா,
சருதை, பில்தெல்பியா, இலவோதிக்கையா
இவைகளிலுள்ள சபைகளேழுக்கும் அனுப்
பென்று எனக்குப்பின்னாலே எக்காள சத்
தம்போன்ற மிகுந்த சத்தத்தைக்கேட்
டேன்.

யஉ. அப்பொழுது என்னுடனே சத்தமிட்
டுப்பேசினவரைப்பார்க்கத்திரும்பினேன்.

யங. திரும்பினபொழுது, * ஏழு பொன்
விளக்குத்தண்டுகளையும், ஏழு விளக்குத்தண்
டுகளின் மத்தியிலே நிலயங்கியைத்தரித்து,
மார்பருகே பொற்கச்சைகட்டியிருந்த † ம
னிதகுமாரனுக்கு ஒப்பானவரையுங் கண்
டேன்.

யச. அவருடைய சிரசும் மயிரும் வெண்
மையான பஞ்சியையும், உறைந்த மழை

யையும்போல வெண்மையாயிருந்தன. * அ
வருடைய கண்கள் அக்கினிச்சுவாலையைப்
போலிருந்தன. * ௰௯: ௨.
௰௫. அவருடைய கால்கள் உலைக்களத்திற்
காய்கிற பிரகாசமுள்ள செம்பைப்போலி
ருந்தன. அவருடையசத்தம் பெருவெள்ள
இரைச்சலைப்போலிருந்தது.
௰௬. அல்லாமலும், அவர் வலதுகையிலே
ஏழுநட்சத்திரங்களை யேந்திக்கொண்டிருந்
தார். * அவர் வாயிலிருந்து இருபுறமுங்
கருக்குள்ள கட்கம் புறப்பட்டது. † அவ
ருடையமுகம் உச்சிக்காலத்திலே வல்லமை
யாய்ப்பிரகாசிக்கிற சூரியனைப்போலிருந்த
து. * ௰௯: ௰௫. ஏசா. ௪௯: ௨. எபி. ௪:
௰௨. † மத். ௰௭: ௨.
௰௭. இப்படியவரைக்கண்டபொழுது செ
த்தவனைப்போல அவருடைய பாதங்களி
டத்தில் விழுந்தேன். அப்பொழுது, அவர்
தமது வலதுகரத்தை என்மேல்வைத்து,
(என்னுடனே) சொன்னதாவது; நீ பயப்
படவேண்டுவதில்லை. நான் முந்தினவனும்;
பிந்தினவனும், உயிருள்ளவனுமானவன்.
௰௮. நான் மரித்தும் இதோ, என்றென்
றைக்கும் உயிரோடிருந்து மரணத்திற்கும்,
மரித்தோர் ஸ்தலத்திற்குமுரிய திறவுகோல்
களை யுடையவனுமாயிருக்கிறேன்.
௰௯. ஆகையால் நீ கண்டவைகளையும், இ
ருக்கிறவைகளையும், இவைகளுக்குப்பின் ந
டப்பவைகளையும் எழுது.
௨௰. என்னுடைய வலதுகரத்தில் நீ கண்
ட நட்சத்திரங்களேழின் இரகசியத்தையும்,
பொன்விளக்குத்தண்டுகளேழின் குறிப்பை
யுமேயெழுது இந்த நட்சத்திரங்களேழுஞ்
சபைகளேழினுடைய * தூதர்களாயிருக்கி
ன்றன. நீ கண்ட விளக்குத்தண்டுகளேழும்
ஏழு சபைகளாயிருக்கின்றன. * மல். ௨: ௭.

௨ அதிகாரம்.

[(௧) ஏபேசு, (௮) சிமிருனா, (௰௨) பெருக
மு, (௰௮) தியத்தைரா என்ற சபைகளின்
ஊழியக்காரர்களாகிய தூதர்களிற் புகழப்
படத்தக்கதும், இகழப்படத்தக்கதும் இன்
னவைகளென்று எழுதியனுப்பும்படி உண்
டான கட்டளையைச்சொல்லியது.]

ஏபேசுபட்டினத்திலுள்ள சபையின் தூ
தனுக்கு எழுதவேண்டியதென்னவெ
னில், * ஏழு நட்சத்திரங்களைத்தம்முடைய
வலதுகரத்தில் ஏந்திக்கொண்டு ஏழு பொன்
விளக்குத்தண்டுகளின் மத்தியிலே உலாவிக்
கொண்டிருக்கிறவர் சொல்லுகிறதாவது;
* ௧: ௰௬, ௨௰.
௨. உன் கிரியைகளையும், உன் பிரயாசத்
தையும், உன் பொறுமையையும், நீ பொல்
லாதவர்களுக்கு இடங்கொடாமலிருக்கிற
தையும், அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்
களை அப்போஸ்தலரென்று சொல்லுகிற
தை நீ சோதித்து அவர்களைப்பொய்யரென்
று கண்டறிந்ததையும்,
௩. நீ பொறுமையைக்காத்துக்கொண்டு
வருகிறதையும், எனது நாமத்தினிமித்தம்
இளைப்பையடையாமற் பிரயாசப்பட்டதை
யும் அறிந்திருக்கிறேன்.
௪. ஆனாலும் நீ ஆதியிற்காட்டின அன்பை
விட்டபடியால், உன்மேல் விதனமாயிருக்கி
றேன்.
௫. ஆகையால், நீ யிப்படிப்பட்ட நிலை
மையிலிருந்து விழுந்ததைநினைத்து, மனந்
திருப்பி, ஆதியிற்செய்த கிரியைகளைச்செய்
வாயாக. நீ மனந்திருப்பாவிட்டால், நான்
சீக்கிரமாய் உன்னிடத்தில்வந்து, உன் வி
ளக்குத்தண்டை அவ்விடத்தில்நின்று நீக்
குவேன்.
௬. * நிக்கோலாவின்மார்க்கத்தாரின் கிரி
யைகளைப்பகைக்கிறாய். இது உன்னிடத்தி
லுண்டு. அவைகளை நானும் பகைக்கிறேன்.
* ௰௫. ௨௪.
௭. ஆவியானவர் சபைகளுக்குச்சொல்லு
கிறதைக்காதுள்ளவன் கேட்கக்கடவன் —
ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்குப்
பராபரனுடைய * பரதீசின் மத்தியிலிருக்கி
ற சீவவிருட்சத்தின்கனியைப்புசிக்கக்கொ
டுப்பேனென்கிறார் என்றெழுது. * ௨௨: ௨.
௧ மோ. ௨: ௯.
௮. சிமிருனாப்பட்டினத்திலுள்ள சபையின்
தூதனுக்கு நீ எழுதவேண்டியதென்னவெ
னில், * மரித்து உயிரோடிருக்கிற முந்தின
வரும், பிந்தினவருமானவர் சொல்லுகிறதா
வது; * ௧: ௰௭, ௰௮.
௯. உன் கிரியைகளையும், உபத்திரவத்தை
யும், ஐசுவரியமுள்ள உனக்கிருக்கிற தரித்தி
ரத்தையும், தங்களை யூதரென்று சொல்லி
யும், யூதராயிராமற் சாத்தானுடைய ஆல
யமாயிருக்கிறவர்கள்செய்கிற தூஷணத்தை
யும் அறிந்திருக்கிறேன்.
௰. * உனக்குவருந் துன்பங்களைக்குறித்து
எவ்வளவாகிலும் பயப்படாதிருப்பாயாக.
கேள், நீங்கள் சோதிக்கப்படும் பொருட்
டாகப்பசாசானவன்உங்களிற்சிலரைக்காவ
லிற்போடுவான். பத்துநாள் உபத்திரவப்
படுவீர்கள். ஆகிலும் மரணபரியந்தம்உண்
மையாயிரு. அப்பொழுது, † சீவ கிரீடத்
தை உனக்குத்தருவேன். * மத். ௰: ௨௮.
† யாக். ௧: ௰௨.
௰௧. ஆவியானவர் சபைகளுக்குச்சொல்லு
கிறதை, காதுள்ளவன் கேட்கக்கடவன்.
ஜெயங்கொள்ளுகிறவன் * இரண்டாம் மர
ணத்தாற் சேதப்படுவது இல்லை என்கிறார்
என்று எழுது. * ௨௰: ௰௪. ௨௧: ௮.
௰௨. பெருகமுப்பட்டினத்திலுள்ள சபை
யின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்

னவெனில்; * இருபுறமும் கருக்குள்ள கட்கத்தை உடையவர் சொல்லுகிறதாவது; * ௧; ௰௬.

௰௩. உன் கிரியைகளையும், சாத்தானுடைய * ஆசனம் இருக்கிற இடத்தில் நீ குடி இருக்கிறதையும், சாத்தான் குடி இருக்கிற உங்கள் இடத்திலே எனக்கு உண்மையுள்ள சாட்சியாகிய அந்திப்பாவென்பவன் கொல்லப்பட்ட நாள்களிலேயும், என்னைப்பற்றும் விசுவாசத்தை மறுதலியாமல், என்னுடையநாமத்தைப்பற்றிக்கொண்டு இருக்கிறதையும் அறிந்து இருக்கிறேன். * ௰௩: ௨.

௰௪. ஆகிலுஞ் சில காரியங்களைக்குறித்து உன்மேல் விதனமாய் இருக்கிறேன். விக்கிரகங்களுக்குப்படைத்தவைகளைப் புசிப்பதற்கும், வேசித்தனம் பண்ணுவதற்குமேதுவான கேடுகளை இஸ்ரவேல் புத்திரர் முன்பாகப்போடும்படிக்குப் * பாலாக்கென்பவனுக்குப்போதனைசெய்த பாலாமுடைய போதகத்தைப்பிடித்திருக்கிறவர்கள் உன்னிடத்திலிருக்கிறார்கள். * ௪ மோ. ௨௫: ௧—௩. ௩௧: ௰௬.

௰௫. அல்லாமலும், * நிக்கோலாவின் மார்க்கத்தாருடைய போதகத்தைப்பற்றிக் கொள்ளுகிறவர்களும் உன்னிடத்திலுண்டு. * ௬. ௰௪.

௰௬. ஆகையால், நீ மனந்திரும்புவாயாக. இல்லாவிட்டால், நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, * என் வாயின் கட்கத்தால் அவர்களோடே யுத்தம்பண்ணுவேன்.— * ௰௯: ௰௫.

௰௭. ஆவியானவர் சபைகளுக்குச்சொல்லுகிறதைக்காதுள்ளவன் கேட்கக்கடவன். செயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான * மன்னாவைப்புசிக்கக்கொடுத்து, அவனுக்கு வெண்மையான கல்லையும், அந்தக் கல்லின்மேலே எழுதப்பட்டதுமாய், பெறுகிறவனேயன்றி, வேறொருவனும் அறியாததுமாயிருக்கிற புதிய நாமத்தையுங் கட்டளையிடுவேனென்கிறார் என்றெழுது. * யோவா. ௬: ௫௰, ௫௧.

௰௮. தியத்தைராப்பட்டணத்தில் உள்ள சபையின் தூதனுக்கு நீ யெழுதவேண்டியதென்னவெனில்; * அக்கினிச்சுவாலையைப் போன்ற கண்களும், உருக்கிய செம்பைப் போன்ற கால்களுமுள்ள தேவ குமாரன் சொல்லுகிறதாவது; * ௧: ௰௪, ௰௫

௰௯. உன் கிரியைகளையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும், நீ பின்பு செய்த கிரியைகள் முந்தின கிரியைகளிலும் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்.

௨௰. ஆகிலும் (ஒன்றைக்குறித்து) உன்மேல் விதனமாயிருக்கிறேன். என்னவெனில், வேசித்தனம் பண்ணும்படிக்கும், விக்கிரகங்களுக்குப்படைத்தவைகளைப் புசிக்கும்படிக்கும், தன்னைத்தீர்க்கதரிசியென்று சொல்லிக்கொள்ளுகிற * இயேசபேலென்னும் ஸ்திரீ என்னுடைய ஊழியக்காரருக்குப் போதித்து வஞ்சிக்கிறாள். அவளுக்கு நீ இடங்கொடுக்கிறாய். * ௧ இரா. ௰௬: ௩௧.

௨௧. அவள் மனந்திரும்பும்படியாய்க்காலத்தை அவளுக்குக்கொடுத்தேன். அவள் தன் வேசி மார்க்கத்தைவிட்டு மனந்திரும்ப விருப்பமில்லை.

௨௨. (ஆகையால்)கேள், அவளும், * அவளுடனேகூட விபசாரஞ் செய்தவர்களும், தங்களுடைய கிரியைகளைவிட்டு மனந்திரும்பாவிட்டால், நான் அவளை ஒரு கட்டிலின் மேலும், இவர்களை மிகுந்த உபத்திரவத்திலேயும்போட்டு, அவளுடைய பிள்ளைகளைக் கொலைசெய்வேன். * ௰௮: ௯.

௨௩. அப்பொழுது நானே * உள்ளிந்திரியங்களையும், இருதயங்களையும் ஆராய்கிறவரென்று எல்லாச்சபைகளும் அறிந்துகொள்வார்கள். அல்லாமலும், உங்களில் அவனவனுடைய கிரியைகளின்படியே யாவருக்கும் பதில்கொடுப்பேன். * சங். ௭: ௰.

௨௪. இந்தப்போதகத்தைப் பற்றிக்கொள்ளாமலும், அவர்கள் சொல்லுகிறபடி சாத்தானுடைய ஆழங்களையறிந்துகொள்ளாமலுமிருக்கிற தியத்தைராவிலுள்ள மற்றவர்களாகிய உங்களுக்கு நான் சொல்லுகிறதாவது; உங்கள்மேலே வேறொரு பாரத்தையும் போடமாட்டேன்.

௨௫. * உங்களுக்குண்டானதை நான் வருமளவும் பத்திரமாய்ப்பிடித்துக்கொள்ளுங்கள். * ௩: ௰௧.

௨௬. செயங்கொண்டு முடிவு பரியந்தம் என் கிரியைகளைக்காத்துக்கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு * என்னுடைய பிதாவினிடத்தில் நான் பெற்றதுபோல, சனக்கூட்டங்கள்மேல் அதிகாரத்தைக்கொடுப்பேன். * சங்கீ. ௨: ௮, ௯.

௨௭. அவன் இருப்புக்கோலால் அவர்களை நடத்திக்கொள்வான். அவர்கள் மட்கலங்களைப்போல நொறுக்கப்படுவார்கள்.

௨௮. அல்லாமலும், விடிவெள்ளி நட்சத்திரத்தை யவனுக்குக்கொடுப்பேன்.

௨௯. ஆவியானவர் சபைகளுக்குச்சொல்லுகிறதைக்காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது.

௩ அதிகாரம்.

[(௧) சர்தே சபையின் தூதன் கடிந்துகொள்ளப்பட்டு, (௩) குணப்படும்படி புத்திசொல்லப்பட்டு, குணப்படாமைக்குப்பயமுறுத்தப்பட்டது. (௭) பில்தெல்பியா சபையின் தூதன். (௰) தன் சுறுசுறுப்புக்காகவும்;

பொறுமைக்காகவும் மெய்ச்சிக்கொள்ளப்
பட்டது. (௰௫) இலவோதிக்கையா சபை
யின் தூதன் அனலும், குளிருமில்லாதிருந்த
தினுற் கடிந்துகொள்ளப்பட்டு, (௰௬) சுறு
சுறுப்படையும்படி ஏவப்பட்டது. (௨௰)
கிறிஸ்து வாசலண்டையில் நின்று தட்டு
கிறுரென்பது.]

சருதையூரிலுள்ள சபையின்தூதனுக்கு
நீ எழுதவேண்டியதென்னவெனில்,
பராபரனுடைய ✻ ஏழாவிகளையும், † ஏழு
நட்சத்திரங்களையுமுடையவர் சொல்லுகிற
தாவது; உன் கிரியைகளை யறிந்திருக்கிறே
ன். நீ உயிருள்ளவனென்று பேர்கொண்டி
ருந்துஞ் செத்தவனுயிருக்கிருய். ✻ ௧: ௪.
† ௧: ௰௬.
௨. உன் கிரியைகள் பராபரனுக்கு முன்
பாக நிறைந்தவைகளல்லவென்று கண்டிரு
க்கிறேன். ஆகையால், நீ விழித்துக்கொண்
டு, சாகிறதற்கேதுவான மற்றவர்களை ஸ்தி
ரப்படுத்துவாயாக.
௩. மேலும் நீ கேட்டுப்பெற்றுக்கொண்ட
வகையை நினைத்துக்கைக்கொண்டு மனந்தி
ருப்புவாயாக. ✻ நீ விழித்துக்கொள்ளாவிட்
டால், † திருடனைப்போல உன்மேல் வரு
வேன். நான் உன்மேல்வரும் நேரத்தை யறி
யாதிருப்பாய். * ௨: ௫. † மத். ௨௪: ௪௩.
௧ தெசலோ. ௫: ௨.
௪. தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தா
த சிலபேர் சருதையூரிலே உன்னுடே
யுண்டு. அவர்கள் பாத்திரவான்களானபடி
யால், என்னுடனேகூட வெண்மையான
உடைகளைத்தரித்து நடப்பார்கள்.
௫. செயங்கொள்ளுகிறவன் வெண்மையா
ன வஸ்திரங்களால் உடுத்தப்படுவான். நான்
✻ ஜீவ புஸ்தகத்தில் † அவனுடைய நாமத்
தைக்கிறுக்கிப்போடாமல், அதை என்
பிதா முன்பாகவும், அவருடைய தூதர்
முன்பாகவும் அறிக்கை பண்ணுவேன்.—
* ௨௰: ௨௨. † மத்தே. ௰: ௩௨.
௬. ஆவியானவர் சபைகளுக்குச்சொல்லு
கிறதைக்காதுள்ளவன் கேட்கக்கடவனென்
றெழுது.
௭. பில்தெல்பியாவூரிலுள்ள சபையின் தூத
னுக்கு நீ எழுதவேண்டியதென்னவெனில்,
✻ தாவீதின் திறவுகோலையுடையவருமாய்,
ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத்திறக்கிற
வருமாய், ஒருவருந் திறக்கக்கூடாத படிக்
குப்பூட்டுகிறவருமாயிருக்கிற பரிசுத்தமும்,
† சத்தியமுமுள்ளவர் சொல்லுகிறதாவது;
✻ ஏசா. ௨௨: ௨௩. † ௧: ௫ யோவா. ௰௪: ௬.
௮. உன் கிரியைகளை யறிந்திருக்கிறேன்.
* கொஞ்சப்பெலன் (மாத்திரம்) உனக்கிரு
ந்தும், நீ யென்னுடைய நாமத்தை மறுத
லியாமல், எனது வசனத்தைக்கைக்கொண்
டபடியினுலே, இதோ, உனக்கு முன்பாகத்
திறந்திருக்கிற வாசலைக்கொடுத்தேன். அ
தை யொருவனும் பூட்டமாட்டான். * லூக்.
௰௨: ௩௨. ௨ கொரி. ௪: ௭.
௯. கேள், யூதரல்லாதிருந்துந் ✻ தங்களை
யூதரென்று பொய்சொல்லுகிறவர்களாகிய
சாத்தானுடைய ஆலயத்தாரிற் (சிலரை)
உனக்குத்தருகிறேன். கேள், அவர்கள் உன்
பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து,
நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை யறிந்
துகொள்ளும்படி செய்வேன். * ௨: ௯.
௰. என்னுடைய பொறுமையைக்குறித்து
ச்சொல்லுகிற வசனத்தை நீ கைக்கொண்
டபடியினுலே நானும் பூமியின்மேற் குடி
யிருக்கிறவர்களைச்சோதிக்கும்படிக்குப் பூச்
சக்கரத்தின்மேலெங்கும் வருஞ் சோதனை
காலத்திற்குத்தப்பும்படி உன்னைக்காப்பாற்
றுவேன்.
௰௧ * சீக்கிரமாய் வருகிறேன். ஒருவனும்
உன் கிரீடத்தையெடுத்துக்கொள்ளாதபடிக்
கு உனக்குள்ளதைப்பத்திரமாய்ப் † பற்றி
க்கொள்வாயாக. * ௨௨: ௰௨ † ௨ தீமோ.
௧: ௰௩, ௰௪.
௰௨. செயங்கொள்ளுகிறவனை நான் என்
தேவனுடைய ஆலயத்திலே ஸ்தம்பமாக்கு
வேன். அதினின்று * அவன் ஒருக்காலும்
நீங்கான். மேலும், என் தேவனுடைய நா
மத்தையும், என் தேவனால் வானத்திலிருந்
திறங்குகிற † புதிய எருசலேமாகிய என்
தேவனுடைய பட்டினத்தின் நாமத்தையும்,
எனது புதிய நாமத்தையும் அவன்மேலே
எழுதுவேன். * ௨௨: ௪. † ௨௧: ௨—௰.
௰௩. ஆவியானவர் சபைகளுக்குச்சொல்லு
கிறதைக்காதுள்ளவன் கேட்கக்கடவனென்
றெழுது.
௰௪. இலவோதிக்கையாவூரிலுள்ள சபையி
ன் தூதனுக்கு நீ யெழுதவேண்டியதென்ன
வெனில், ✻ உண்மையும், சத்தியமுமான
சாட்சியுமாய், † பராபரனுடைய சிருஷ்டி
களுக்கு ஆதியுமாயிருக்கிற ஆமனென்பவர்
சொல்லுகிறதாவது; * ௧: ௫. † கொலோ.
௧: ௰௫—௰௭
௰௫. உன் கிரியைகளை யறிந்திருக்கிறேன்.
நீ குளிர்ச்சியுள்ளவனுமல்ல. அனலுள்ளவ
னுமல்ல. நீ குளிர்ச்சியையாவது, அனலை
யாவது உள்ளவனுனால் நலமாயிருக்கும்.
௰௬. இப்படி நீ குளிர்ச்சியும், அனலுமில்
லாமல் வெதுவெதுப்புள்ளவனுனபடியினு
லே உன்னை என் வாயினின்றும் வாந்திபண்
ணுவேன்.
௰௭. நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதா
பிக்கப்படத்தக்கவனும்; எளியவனும்,
குருடனும், நிருவாணியாயுமிருக்கிறதை
யறியாமல், நான் ஐசுவரியமுள்ளவனென்று
ம், அதிக திரவியத்தைச்சம்பாதித்தவனெ

ன்றும், எனக்கொன்றும் வேண்டுவதில்லை
யென்றுஞ் சொல்லுகிறாய்.
௰௮. ஆதலால், நான் உனக்கு ஆலோசனை
யாய்ச்சொல்லுகிறதாவது; நீ ஐசுவரியவா
னாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட
பொன்னையும், * உன் நிருவாணமாகிய அவ
லட்சணந் தோன்றாமலிருக்கத்தக்கதாக நீ
உடுத்திக்கொள்ளும்படிக்கு வெண்மையான
வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்
† கொள்ளவும், நீ பார்வை யடையும்படிக்
கு உன் கண்களுக்கு மாத்திரையைப்போ
டவும் வேண்டுமென்று சொல்லுகிறேன்.—
* ௰௬: ௰௫. † ஏசா. ௫௫: ௧.
௰௯. * என்னாற் சிநேகிக்கப்படுகிறவர்கள்
எவர்களோ அவர்களைக்கடிந்துகொண்டு
தண்டிக்கிறேன். ஆகையால், நீ சாக்கிரதை
யாயிருந்து மனந்திருப்பக்கடவாய். *
வாக்கி. ௩: ௰௨.
௨௰. இதோ, வாசற்படியிலே நின்றுதட்டு
கிறேன். ஒருவன் என் சத்தத்தைக்கேட்டுக்
கதவைத்திறந்தால், * அவனிடத்தில் நான்
பிரவேசித்து, அவனோடே இராப்போசனம்
பண்ணுவேன். அவனும் என்னோடே இராப்
போசனம் பண்ணுவான். * யோவா. ௰௪:
௨௧—௨௩.
௨௧. நான் செயங்கொண்டு என்பிதாவினு
டைய ஆசனத்திலே அவரோடேகூட உளு
க்காந்ததுபோல * செயங்கொள்ளுகிறவ
ன் என்னுடைய ஆசனத்திலே என்னோடே
கூட உளுக்காரும்படி அருள் செய்வேன்.
* லூக். ௨௨: ௨௮—௩௰. ௨ தீமோத்.
௨: ௰௨.
௨௨. ஆவியானவர் சபைகளுக்குச்சொல்
லுகிறதைக்காதுள்ளவன் கேட்கக்கடவன்
என்றெழுது என்றார்.

௪ அதிகாரம்.

[(௧) யோவான் கண்ட பரமண்டலத்தில்
உள்ள பராபரனுடைய ஆசனத்தையும்,
(௪) இருபத்துநாலு மூப்பர்களையும், (௬)
சர்வாங்கமுங் கண்கள் நிறைந்த நாலு சீவ
ன்களையும், (௰) மூப்பர்கள் தங்கள் கிரீடங்
களைக்கழற்றி ஆசனத்தின்மேல் உளுக்காந்
திருக்கிறவரை வணங்கினதையுங் குறித்துச்
சொல்லியது:]

இவற்றிற்குப்பின்பு அதோ, வானத்தி
லே ஒருவாசல் திறந்திருக்கக்கண்
டேன். அல்லாமலும், * முன்னே நான் கே
ட்கும்படி எக்காளம்போல என்னுடனே
பேசின சத்தம் என்னுடனே சொன்னது,
இங்கே ஏறிவா. இதற்குப்பின்பு சம்பவிக்கத்
தக்கவைகளை யுனக்குக்காண்பிப்பேனென்
றார். * ௧: ௰௧.
௨. உடனே, * ஆவிக்குள்ளானேன். அப்
பொழுது வானத்தில் ஒரு ஆசனம்வைக்கப்
பட்டிருக்கவும், அந்த ஆசனத்தின்மேல்
† ஒருவர் உளுக்காந்திருக்கவுங் கண்டேன்.
* ௪: ௰. † ஏசா. ௬: ௧. எசே. ௧: ௨௬.
௩. (அதில்) உளுக்காந்திருந்தவர் பார்வை
க்கு ரவாக்கல்லும், சிவப்புக்கல்லும்போல
த்தோன்றினர். அந்த ஆசனத்தைச்சுற்றி
த்தோன்றினர். அந்த ஆசனத்தைச்சுற்றி
ஒரு வானவில்லிருந்தது. அது பார்வைக்கு
மரகதம்போலத்தோன்றிற்று.
௪. மேலும் அந்த ஆசனத்தைச்சூழ இரு
பத்துநான்கு ஆசனங்களுமிருந்தன. அந்த
ஆசனங்களின்மேலே வெண்மையான வஸ்
திரங்களைத்தரிப்பிக்கப்பட்ட இருபத்து நா
ன்கு மூப்பர்கள் உளுக்காந்திருந்தார்கள்.
அவர்கள் தங்கள் சிரசுகளின்மேலே பொன்
கிரீடங்களையுடையவர்களாயிருந்தார்கள்.
௫. அன்றியும், அந்த ஆசனத்திலிருந்து
மின்னும் இடிமுழக்கங்களும், (மற்றச்) சத்
தங்களும் புறப்பட்டன. மேலும் பராபர
னுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு தீவெட்டி
கள் ஆசனத்திற்கு முன்பாக எரிகிறவைக
ளாயிருந்தன.
௬. மேலும் அந்த ஆசனத்திற்கு முன்பா
கப்பளிங்குக்கண்ணாடியைப்போன்ற கடலி
ருந்தது. அதுவுமல்லாமல் அந்த ஆசனத்
தின் மத்தியிலும், ஆசனத்தின் சுற்றிலும்
* நான்கு சீவன்களிருந்தன. அவைகள்
முன்புறமும், பின்புறமுங் கண்களால் நிறை
ந்தவைகளாயிருந்தன. * எசே. ௧: ௫.
௭. * முதலாஞ் சீவன் சிங்கத்திற்கொப்பா
கவும், இரண்டாஞ் சீவன் கன்றுக்குட்டிக்
கொப்பாகவும், மூன்றாஞ் சீவன் மனிதனைப்
போன்ற முகமுள்ளதாகவும், நான்காஞ்
சீவன் பறக்கிற கழுகுக்கொப்பாகவுமிருந்
தன. * எசே. ௧: ௰.
௮. * அந்த நான்கு சீவன்களிலும் ஒவ்
வொன்று அவ்வாறு சிறகுகளுள்ளவைகளு
மாய், சுற்றிலும், உள்ளேயுங் கண்களால்
நிறைந்தவைகளுமாய், † இருந்தவரும், இ
ருக்கிறவரும், வருகிறவருமாகிய சர்வவல்ல
மையுள்ள தேவனுமிருக்கிற பராபரன் பரி
சுத்தர், ‡ பரிசுத்தர், பரிசுத்தர் என்று இர
வும், பகலும் ஓய்வில்லாமற் சொல்லிக்கொ
ள்ளுகிறவைகளுமாயிருந்தன. * ஏசா. ௬:
௨. † ௧: ௮. ‡ ஏசா. ௬: ௩.
௯. மேலும், ஆசனத்தின்மேலுளுக்காந்தி
ருந்து என்றென்றைக்கும் உயிரோடிருக்கிற
வருக்கு அந்தச்சீவன்கள் துதியையும், கன
த்தையும், தோத்திரத்தையுஞ் செலுத்தும்
பொழுது,
௰. * இருபத்துநான்கு மூப்பர்களும் ஆச
னத்தின்மேல் உளுக்காந்தவருக்கு முன்பாக
(வணக்கமாய்)விழுந்து, என்றென்றைக்கும்
உயிரோடிருக்கிறவரைத்தொழுதுகொண்டு

தங்கள் கிரீடங்களை ஆசனத்தின்முன்பாக வைத்து; * ௰௯: ௪. சங்கி. ௭௨: ௰௧.

௰௧. ஆண்டவரே! தேவரீர் சகலத்தையுஞ் சிருஷ்டித்தீர். உம்முடைய சித்தத்தினாலே யவைகள் உண்டாயிருக்கிறவைகளும், சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கின்றன.— ஆகையால், மகிமையையும், கனத்தையும், வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப்பாத்திரமாயிருக்கிறீரென்று புகழ்கிறார்கள்.

௫ அதிகாரம்.

[(௧) ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டபுஸ்தகத்தைத்திறக்க அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் மாத்திரமே பாத்திரரென்றும், (௰௨) அதினால் மூப்பர்கள் அவரைப்புகழ்ந்து, (௯) இரத்தத்தினால் தங்களை மீட்டாரென்றும் அறிக்கை பண்ணினதைச்சொல்லியது.]

அன்றியும் அந்த * ஆசனத்திலே யுருக்காந்தவருடைய வலதுகையிலே உள்ளும், புறம்பும் எழுதப்பட்டும், ஏழு முத்திரைகளாலே பத்திரப்படுத்தப்பட்டுமிருந்த ஒரு புஸ்தகத்தைக்கண்டேன். * ௪:௨,௩.

௨. பலமுள்ள ஒரு தூதனையுங்கண்டேன். அவன் இந்தப்புஸ்தகத்தைத்திறக்கிறதற்கும், இதின் முத்திரைகளை யுடைக்கிறதற்கும் பாத்திரர்யாரென்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டான்.

௩. வானத்திலாவது, பூமியின்மேலாவது, பூமியின்கீழாவது ஒருவனும் அந்தப்புஸ்தகத்தைத்திறக்கவும், அதிலே நோக்கிப்பார்க்கவுங் கூடாதிருந்தது.

௪. ஒருவனும் அந்தப்புஸ்தகத்தைத்திறந்து அதில் நோக்கிப்பார்க்கிறதற்குப்பாத்திரனாகக்காணப்படாததினாலே நான் மிகவும் அழுதேன்.

௫. அப்பொழுது * மூப்பர்களில் ஒருவன் என்னைநோக்கி, நீ அழவேண்டுவதில்லை. இந்தப்புஸ்தகத்தைத்திறந்து, இதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கும்படிக்கு, தாவீதின் வேராகிய † யூதா கோத்திரத்தில் தோன்றிய சிங்கம் இதோ, செயங்கொண்டிருக்கிறதென்றான். * ௪: ௪ † ௧ மோ. ௪௯: ௯, ௰. ஏசா. ௰௧: ௧—௰.

௬. அப்பொழுது நான் பார்த்து ஆசனத்திற்கும், நான்கு சீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே ஒரு ஆட்டுக்குட்டி நிற்கக்கண்டேன். அது அடிக்கப்பட்ட வண்ணமாகவும், ஏழு கொம்புகளையும், பூமியெங்கும் அனுப்பப்பட்ட * பராபரனுடைய ஏழாவிகளாகிய ஏழு கண்களையுமுடையதாகவுமிருந்தது. * ௪: ௫.

௭. மேலும் அது வந்து ஆசனத்தின்மேலுருக்காந்தவருடைய வலது கரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கிற்று.

௮. அந்தப்புஸ்தகத்தை அது வாங்கினபொழுது, அந்த நான்கு சீவன்களும், இருபத்துநான்கு மூப்பர்களுந் தங்கள் * சுரமண்டலங்களையும், † பரிசுத்தவான்களுடைய செபங்களாகிய தூபவருக்கங்களால் நிறைந்த பொற் கலசங்களையும் பிடித்துக்கொண்டு ஆட்டுக்குட்டிக்குமுன்பாக (வணக்கமாய் விழுந்து,) * ௰௪: ௨. † ௮: ௩, ௪. சங்கி. ௱௪௧: ௨.

௯. தேவரீர் அடிக்கப்பட்டு * உம்முடைய இரத்தத்தினாலே சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், தேசத்தாரிலும், (மற்றச) சனக்கூட்டங்களிலும் எங்களைப்பராபரனுக்காக வாங்கிக்கொண்டு, * ௧ பேது. ௧: ௰௯.

௰. * எங்கள் பராபரனுக்கு (முன்பாக) எங்களை இராசாக்களும், ஆசாரியருமாக்கினீர். நாங்கள் பூமியிலே ஆளுகைசெய்வோம். ஆகையால் நீர் இந்தப்புஸ்தகத்தை வாங்கி, இதின் முத்திரைகளை யுடைக்கிறதற்குப்பாத்திரராயிருக்கிறீரென்று புதிய பாட்டைப்பாடினார்கள். * ௧: ௬.

௰௧. பின்னும் நான் பார்த்தபொழுது அந்த ஆசனத்தையும், சீவன்களையும், மூப்பர்களையுஞ் சூழ்ந்திருந்த அநேகந் தூதர்களுடைய சத்தத்தைக்கேட்டேன். * அவர்களுடைய இலக்கம் பதினாயிரத்திற்குப்பதினாயிரமும், ஆயிரத்திற்கு ஆயிரமுமாயிருந்தது. * தானி. ௭: ௰. எபி. ௰௨: ௨௨.

௰௨. அவர்களும் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பலத்தையும், கனத்தையும், மகிமையையும், தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப்பாத்திரராயிருக்கிறாரென்று மிகுந்த சத்தத்தோடே சொன்னார்கள்.

௰௩. அல்லாமலும், * வானத்திலும், பூமியிலும், பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்தின்மேலுள்ளவைகளும்; இவற்றிலுள்ளடங்கிய வஸ்துக்கள் யாவும் ஆசனத்தின்மேல் உருக்காந்திருக்கிறவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்குந் தோத்திரமும், கனமும், மகிமையும், வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாவதாகவென்று சொல்லக்கேட்டேன். * சங்கி. ௱௪௮: ௧.

௰௪. அதற்கு நான்கு சீவன்களும் ஆமென் என்று சொல்லின. மறுபடியும் அந்த இருபத்துநான்கு மூப்பர்களும் (வணக்கமாய்) விழுந்து என்றென்றைக்கும் உயிரோடிருக்கிறவரைத்தொழுதுகொண்டார்கள்.

சு அதிகாரம்.

[(க) முத்திரைகள் ஒவ்வொன்றாய்த் திறக்கப்
பட்டபோது, உலகமுடிவுமட்டுஞ் சம்ப
விக்கப்போகிற காரியங்கள் தீர்க்கதரிசன
மாய்க்குறிக்கப்பட்டது.]

பின்பு ஆட்டுக்குட்டியானவர் முத்தி
ரைகளில் ஒன்றைப்பேர்க்கக்கண்டே
ன். அல்லாமலும், நான்கு ஜீவன்களில் ஒன்
று (என்னைநோக்கி,) நீ வந்துபாரென்று
இடிமுழக்கம்போலச் சொல்லக்கேட்டேன்.
உ. அப்பொழுது நான் பார்க்கையில் வெ
ண்மையான குதிரையைக்கண்டேன். * அ
தின்மேலிருந்தவன் வில்லைப்பிடித்திருந்தான்.
அவனுக்கு ஒரு கிரீடங்கொடுக்கப்பட்டது.
அவன் ஜெயமுள்ளவனாய்ச்ஜெயிக்கும்படிக்
குப்புறப்பட்டான். * ௰கூ: ௰க—௰ரு. சங்.
சரு: ரு, கூ.
ங. பின்பு அவர் இரண்டாம் முத்திரையை
ப்பேர்த்தபொழுது, இரண்டாஞ்ஜீவனானது
நீ வந்துபாரென்று சொல்லக்கேட்டேன்.
ச உடனே அக்கினி நிறமுள்ள வேறொரு
குதிரை புறப்பட்டது. அதின்மேலிருந்த
வன் பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர்
கொலைசெய்யத்தக்கதாகச் சமாதானத்தை
ப்பூமியிலிருந்தெடுத்துப்போடுகிறதற்கு அ
திகாரமும், ஒருபெரிய கட்கமும் அவனுக்
குக்கொடுக்கப்பட்டன.
ரு. பின்பு அவர் மூன்றும் முத்திரையைப்
பேர்த்தபொழுது, மூன்றுஞ் ஜீவனானது நீ
வந்துபார் என்று சொல்லக்கேட்டேன்.
உடனே நான் பார்க்கையில், ஒரு கறுப்புக்
குதிரையைக்கண்டேன். அதின்மேலிருந்த
வன் * ஒரு தராசைத்தன்கையிற் பிடித்தி
ருந்தான். * ங மோ. உசு: உசு.
சு. அப்போது உழக்குக்கோதுமைக்கு
ஒரு தெநாரிப்பணம், மூவுழக்கு வாற்கோ
துமைக்கு ஒரு தெநாரிப்பணமென்றும்,
எண்ணெயையும், பழ இரசத்தையுஞ் சே
தப்படுத்தாதிருப்பாயாகவென்றும், நான்கு
ஜீவன்களின் மத்தியிலிருந்துண்டான சத்
தத்தைக்கேட்டேன்.
எ. பின்பு அவர் நான்காம் முத்திரையைப்
பேர்த்தபொழுது, நான்காஞ் ஜீவனானது
நீ வந்துபாரென்று சொல்லக்கேட்டேன்.
அ. உடனே நான் பார்க்கையில், மங்கின
நிறமுள்ள குதிரையைக்கண்டேன். அதின்
மேலிருந்தவனுக்கு மரணமென்றுபேர்.—
மரித்தோர்ஸ்தலம் அவனுடனேகூடச்செ
ன்றது. கட்கத்தினாலும், பஞ்சத்தினாலும்,
சாவினாலும், பூமியின் துஷ்டமிருகங்களினா
லும் பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக்கொ
லைசெய்யும்படிக்கு அதிகாரம் அவனுக்குக்
கொடுக்கப்பட்டது.
கூ. பின்பு அவர் ஐந்தாம் முத்திரையைப்
பேர்த்தபொழுது, * பராபரனுடைய வச
னத்தினிமித்தமும், தாங்கள் கொடுத்த சாட்
சியினிமித்தமுங் கொல்லப்பட்டவர்களுடை
ய ஆத்துமாக்களைப்பலிபீடத்தின்கீழே கண்
டேன். * உ௰: ச.
௰. அவர்கள் பரிசுத்தமும், சத்தியமுமுள்
ள ஆண்டவரே! எதுவரைக்குந் தேவரீர்
நியாயத்தீர்ப்புக்கொடாமலும், பூமியின்
மேற் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள்
இரத்தத்தைக்குறித்துப் பழிவாங்காமலுமி
ருப்பீரென்று மிகுந்த சத்தமிட்டுக்கூப்பிட்
டார்கள்.
௰க. அப்பொழுது அவர்களுக்கு * வெள்
ளை அங்கிகள் கொடுக்கப்பட்டதுமல்லாமல்,
அவர்கள் தங்களைப்போலக்கொலைசெய்யப்
படுபவர்களாகிய தங்களுடன் பணிவிடைக்
காரரும், தங்களுடைய சகோதரரும்வந்து
நிறையுமளவும் பின்னுங் கொஞ்சக்காலம்
இளைப்பாற வேண்டுமென்று அவர்களுக்குச்
சொல்லப்பட்டது. * ங: ரு. எ: கூ.
௰உ. பின்பு அவர் ஆறும் முத்திரையைப்
பேர்க்கக்கண்டேன். உடனே * பூமி மிக
வும் அதிர்ந்தது. † சூரியனுங் கம்பிளியைப்
போலக்கறுப்பாயிற்று. சந்திரன் முழுவ
தும் இரத்தம்போலாயிற்று. * ௰சு: ௰அ.
† அப். உ: உ௰.
௰ங. வானத்தின் நட்சத்திரங்களும் பெ
ருங்காற்றினால் அசைக்கப்பட்ட அத்திமரம்
பருவமில்லாத தன் காய்களை உதிர்க்கிறது
போலப்பூமியிலே விழுந்தன.
௰ச. வானமுஞ் சுருட்டப்பட்ட புஸ்தகம்
போலாகி விலகிப்போயிற்று. மலைகள், தீவு
கள்யாவுந் தங்கள் இடங்களைவிட்டு விலகிப்
போயின.
௰ரு. மேலும் பூமியின் இராசாக்களும், பெ
ரியோர்களும், சேனைத்தலைவர்களும், ஐசுவ
ரியவான்களும், பலவான்களும், அடிமை
கள் யாவரும், சுவாதீனர்யாவரும் * பர்வ
தங்களின் குகைகளிலும், கல்மலைகளுக்குள்
ளும் ஒளித்துக்கொண்டு பர்வதங்களையும்,
கல்மலைகளையும் நோக்கி, * ஏசா. உ: ௰கூ.
௰சு. அவருடைய கோபாக்கினை தோன்று
கிற பெரியநாள் வந்திருக்கின்றதே. நிலைநிற்
கத்திராணியுள்ளவன் யாவன்!
௰எ. ஆகையால் நீங்கள் எங்கள்மேல்விழுந்
து ஆசனத்தின்மேல் உளுக்காந்திருக்கிறவ
ருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியின்
கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்க
ளென்று கூப்பிட்டார்கள்.

எ அதிகாரம்.

[(க) ஒரு தூதன் பராபரனுடைய அடியார்
களின் நெற்றிகளில் முத்திரைபோட்டதை
யும், (ச) இஸ்ரவேல் கோத்திரங்களில் முத்
திரைபோடப்பட்டவர்களின் இலக்கத்தை